உ

ஓம்விக்கினேஸ்வராயநம:

பார்க்கவபுராணம்

என்கின்ற

விநாயகபுராணவசனகாவியம்.

சிறப்புப்பாயிரம்.

கடவுள்வாழ்த்து.

கணபதிவணக்கம்.

அகரமென வறிவாகி யுலகமெங்கு மமர்ந்தகர வுகரமக ரங்கடம்மாற், ப கருமொரு முதலாகி வேறுமாகிப் பலவேறு திருமேனி தரித்துக்கொண் டு, புகரில்பொரு ணான்கினையு மிடர்தீர்ந்தெய்தப் போற்றுநருக்கருட்கரு ணை புரிந்தல்லார்க்கு, நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டுகொள்ளு நிருமல னைக் கணபதியை நினைந்துவாழ்வாம்.............................. ....*

சித்திபுத்திகள்வணக்கம்.

கருணைமதம் பொழிமுகத்துக் கணேசரவர் தமக்கறிவுந் தொழிலுமான வருளெனுமுண் மையையெவரு மறியவவ ருமையினவ தரித்தஞான்று, மொருமுனியோம்பியதழலி னவதரித்த ஞான்றுமுட னாகித்தோன்றித், தி ருவுளத்தின் வழிநிற்குஞ் சித்திபுத்தி யெனுமிவர்தாள் சென்னிசேர்ப்பாம்

பரசிவவணக்கம்.

தேரேறி வரும்பருதி மண்டிலத்துஞ் செழுமதிமண் டிலத்துஞ்சீர்கொண் டேறி வருங்கனன்மண் டிலஞ்சத்தி மண்டிலத்து மெண்கணனு, நீரே றி வருமரியு முருத்திரனு மகேச்சுரனு நிலவச்செய்து, நாரேறி வருமவர் க முளத்தமரொண் குணத்தானை நயந்துவாழ்வாம்................. ....*

பராசத்திவணக்கம்.

சத்தியாய்விந்து வாய்மனோன்மனியாய்த் தயங்கியமகேசையா யுமையா ய், நித்திலவடந்தாழ் முகிழ்முலைத்திருவாய் நெடும்புகழ்வாணியாய் வே று, யெத்திறமிறைவ னின்றனனவனுக் கியைதரவத்திற நின்று, மெத்திய வுயிரின் மலவிருள்கெடுத்து விளங்குபூரணியையேத் தெடுப்பாம்......*

சுப்பிரமணியர்வணக்கம்.

ர்ந்துளைத்த கணையானுஞ் சோவெறிந்த திறலானு மதிக்குந்தோறுஞ், சீர் துளக்க வலைகட லுஞ் சேணிகந்த பெருவரையுந் திறத்திற்குன்றக், கரந்து

ளக்குங் குறுமுனிக்குங் கருத்தின்மயல் பூட்டியகை தவஞ்சால்வெற்பி,னு
ரந்துளைத்த சேயிலைவேல் வலனுயர்த்த விளையவனை யுளத்துள்வைப்பாம்

சண்டேசநாயனார்வணக்கம்.

மறைநெறியிற் பிறழாத வேதியரான் பால்கறந்து வவ்வுந்தீங்கு; முறைபு
ரியத் தக்கதென வடுத்தடித்துப் பாற்கலத்தை முனிந்ததாதை,பொறையு
டன்மண் ணிடைப்புரள விருதாளு மறவெறிந்த பொல்லாத்தீங்கு,மிறை
யவன்மெய்ப்பணியாக விரும்பதத்தை யடைந்தவரை யிறைஞ்சிவாழ்வாம்

நந்திதேவர்வணக்கம்.

வெள்ளிமால்வரை விமலனார் விளம்பிய வேதந்,தெள்ளுமாகம புராணங்
கள் செழுங்கலை பிறவு, முள்ளவாறுதேர்ந் துலகெலாம் வழங்குமுன் னு
ரைத்த,வள்ளலாகிய நந்தியங் குரவனை மதிப்பாம்... .... *

நால்வர்வணக்கம்.

பருவமேதுமி லார்புகும் பரமதப் பொருள்கள், கருதியோம்பவொண்
ணாதெனக் கண்ணுதற் பெருமா,னருளினாற்பல வதிசயச் செந்தமிழ்ப் பா
டிப், பொருளிதாமெனத் தெரித்தநால் வர்களையும் புகழ்வாம்............*

அருளிறைவணக்கம்.

சிறியவாடியிற் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்,கறிவுநூல்களின்
முடிவெலா மகப்படுத் தவற்றி,னெறியெலாம்விளக் கியசிவ ஞானபோ த
த்தைக், குறிசெய்திந்தமி ழாலுரை குரவனைப் பணிவாம் ....*

இந்நூல்செய்தவிபரம்.

“ தொகுத்தல்விரித்த றொகைவிரி மொழிபெயர்ப்-பெனத்தகு நூல் யாப்பீரிரண்டென்ப,, என்பதுகொண்டு,சைவசித்தாந்தவேதாந்தசமரசகுணரத்ன ஞானதிபகராயத், திருவாவடுதுறை யாதீனத்தின்கண் எழுந்ருளியிருந்த கச்சியப்பசுவாமிகள்,பால்-தயிர்-நெய்-தேன்-கன்னல்-என்னும் ஐங்கடலையுங்கடைந்து, அமுதெடுத்தளித்ததுபோல, எழுத்து-சொல்-பொருள்-யாப்பு-அணி-என்னும் ஐந்திலக்கணமாகிய கடலைக்கடைந்து,முற்காலத்தில் வடமொழியிற் சொல்லப்பட்டிருந்த விநாயகமான்மிய மென்கின்ற வமுதத்தையெடுத்து, யாவரும் இன்போடு செவிமடுத்துண்ணத்தக்கதாகத் தமிழில் மொழிபெயர்த் தருளினார். அஃது மொழிபெயர்த்து சற்றேறக்குறைய நூறுவருடமாகியும், இதுகாறும் அது பத்திய ரூபமாயிருத்தலால், நிகண்டுகற்று, இலக்கிய ஆராய்ச்சிசெய்து, இலக்கண நூல்களிலே பயின்று, அடி தொடை முதலிய சந்திகளைக் கூட்டியும் பிரித்தும் உணரவல்ல வித்துவான்களுக்கே யன்றி, ஏனையோர்க்குச் சிறிதும் பயன்படாதிருக்கின்றது. அவ்வித்துவான்களுக்கும், நோய்- கவலை- மூப்பு- முதலிய ஏதுக்களால் விவேகங்கிளராக் காலத்துப், பிரயோசனமாகாது. கற்றுவல்லோர் சிலரேனும், கற்றுவல்லோரல்லாதார்பலருக்குந்தாமே யுணர்த்தவும், அக்கற்றுவல்லோரல்லாதார் கற்றுவல்லோரை தாமேயடைந்துஉணரவும். அஃது பெருங்காவியமாயும்அரியநடையாயுமிருத்தலினால்,மிகுதியுங் காலத்தைநோக்கி மடிசெய்கின்றனர். அன்றியும்

ாவியத்தில்-வியாசமுனிவருக்குப் பிரமதேவனுணர்த்தியவாறு,பிருகுமு
னிவர் சோமகாந்தனென்னும் ஓரரையனுக்குணர்த்தியபடி,சூதபுராணிகர்
நைமிசமுனிவர்கட்குச் சொல்லுவதாக முதலிலெடுத்து,முடிவில் அதனை
ப்பத்தியோடு கேட்டமகத்துவத்தால், வியாசமுனிவர் வரம்பெற்றதை
யுஞ் சோமகாந்தராசன் முத்தியடைந்ததையுங் கூறியிருப்பதன்றி, அதற்
குட்குத்திருக்கின்ற காண்டமிரண்டனுள், உபாசனகாண்டத்திலுள்ள ப
டலங்கள் பெரும்பாலும் ஒன்றுக் கொன்று தொடர்ச்சிபெற்றுச், சொல்
வோரையுங்கேட்போரையும் பலராகவருவிக்கின்றது. இவைகளையெல்லா
ம்,புலமையின்மிக்கார் அறிந்துகொள்ளுவரேயன்றி, ஒழிந்தோர்கள்யாவரு
ம்ஆங்காங்குசொல்வோரையுங் கேட்போரையுங்காணாது மயங்குவர்.

அதனால்,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்-வழுவல காலவகையின
னே,, என்பதுகொண்டு, பத்தியரூபமாயிருக்கின்ற அக்காவியத்தை, நி
றைந்தகல்வியையுடைய வித்துவான்களும், குறைந்தகல்வியையுடையபி
றரும், எக்காலத்துந்தாமே எளிதில் ஐயந்திரிபின்றியுணர்ந்து, தன்மார்த்
தகாமமோக்ஷமாகிய நான்குபுருஷார்த்தங்களையுமடைந்து உச்சீவிக்குமா
றும், ஒருவாற்றானுந் தமக்குநிகரில்லாதவராகிய விநாயகக்கடவுள் இன்
னதன்மையர், அவரைவழிபடத்தக்கநெறிகள் இவ்வகையின, அவர்செய்
தருளியதிருவிளையாடல்கள் இத்தகைமைய, அவைகளையுணர்தலால்வரு
ம்பயன் இவ்வியல்பிற்று, என்று அறியும் ஒள்ளறிவின்றிக், கல்வியின்மை
யையே கலனாகவுடைய வெள்ளறிவினராகிய ஆடவரும்ஸ்திரீகளும்,பிற
ரைக்கொண்டேனும்வாசிப்பித்துஉணருமாறும், முற்காலத்திற் பிரமதே
வனாலும் பிருகுமுனிவராலுங் கேட்டுணர்ந்த முதலதிகாரிகள் இருவோ
ரையும், அந்தந்தபடலங்களின் முதலினுங்கடையினும்வருவிக்கின், விய
ர்த்தமாய்ப்பெருகுவதன்றி வாசிப்போருக்கு வெறுப்பினையுண்டாக்குமா
தலால்,அவர்களை இடையிற்றழுவாதொழிக்கும்வண்ணம், பன்னிரண்டுப
டலங்களாகவிருக்கின்ற அவர்கள்சரித்திரங்களை,நான்முகத்துறுப்புக்களு
ள்ஒன்றாகப்புராணமகத்துவமாக்கி,அதனைநான்குவகைச்சரிதத்தினால் மு
டித்து, அவைகளில்விரிந்துஅமைந்துகிடக்கின்றஅலங்காரமுதலியவைக
ளையெல்லாம்,அங்ஙனம் பெருகாதவண்ணந்தொகுத்துத்,தொகுத்திருக்கி
ன்ற ஏனையபடலங்களில் அவைகளைவிரித்துப், பிற்காலத்திற்சூதபுராணி
கராலுணர்த்தப்பெற்ற சவுனகாதிமுனிவர்களைமாத்திரந்தழுவி,ஓரோவிட
ங்களில்இன்றியமையாச்சிறப்பினராயுண்டாகின்ற கிளையதிகாரிகளை ஆங்
காங்குமுடிவினுங்கடையினும்வருவித்து, உபாசனகாண்டத்திலுள்ளஐம்
பத்தொன்பது படலங்களில், காவியத்தலைவர்திருவுருக்கொள்கின்ற பட
லங்களொழிந்து ஏனையபடலங்களை அவ்வவற்றின் தொடர்பின்படிபுணர்
த்தி நாற்பதுபடலங்களாக்கி, லீலாகாண்டத்திலுள்ள பன்னிரண்டுபடல
ங்களையும்அவ்வாறேயமைத்து,அவ்வவ்வமையங்களிற் சொல்லப்பட்டிரு
க்கின்ற தொகைப்பொருள்களை எல்லாம்பிரித்து,அப்பிரிக்கப்பட்ட பொ
ருள்களினுடைய பயன்களையும் அவ்வவற்றினடியிற்காட்டி, ஆங்காங்கு
தோத்திரமாகவுஞ்சாத்திரமாகவுங் கூறியிருக்கின்றசெய்யுட்களையெல்லா
ம். யாவருந்துதிக்கவுஞ் சிந்திக்கவும் உபயோகமாதற்பொருட்டு வேறுப

ஒத்தாதுவிடுத்துப், பெரும்பான்மை சந்திவிகாரங்களின்றிச், சிறுபான்மை ஆவசியகமாகிய திரிசொற்களையும் வடசொற்களையும் பிரயோகித்துக், கத்தியரூபமாக இயற்றப்பட்டது.

இந்நூலினால்வரும்பயன்.

நித்தியமாய் நிர்க்குணமாய் நின்மலமாய் நிரஞ்சனமாய் நினைவுக்கெட்டாச், சத்தியமாய்த் தற்பரமாய்த் தத்துவமாய்ச் சச்சிதா னந்தமாகி, யத்துவிதப் பொருளாகி யகண்டபரி பூரணமா யமலஞான, மெத்தியவுள் ளத்தமர்ந்த விநாயகமான் மியந்தவத்தோர் விரும்பிக்கேட்பார்... .. .. *

விருத்திரனைக் கொன்றானு நான்முகனு மதுவுயிரை வீட்டினானு, முருத்திரனும் வழிபடுமா றோங்குமொரு தனிமுதலா யுலகுக்கெல்லாங், கருத்தனுமாய் விளையாடு கணபதிமான் மியங்கணக்கில் பிறவிதோறும், பொருத்தமுறத் தவம்புரியார் விரும்பினுமற் றவர்செவியிற் புகாதோர்நாளும்.*

எவனுடைய வாணையினாற் பிரமனுக்குச் சிருட்டியுமெவ் வுயிரும்வாழ, வுவணமுயர்த் தவற்களிப்பு முருத்திரனுக் குலகமெலா மொடுக்கும்வீறும், பவனனுக்கு வீசுதலும் பாற்கரற்குச் சரித்தலும்பன் னாளும்வைகு, மவனுடைய மான்மியத்தை நாத்திகர்பா தகர்முதலோ ரறியமாட்டார். *

மறையிடத்து மரியயனிந் திரனாதி யமரர்மதி யிடத்துந்தோன்றா,துறையுமொரு பொருடன்னை வழிபடுவோர் தமக்கருளா லுருவுகொண்டு, நிறையவரங் கொடுத்தசரித் திரமனைத்தும் விளக்கிநிலை பேறுசெய்த, குறையறுமிப் புராணத்தைக் குறித்தவர்க்கு நாற்பயனுங் கூடுமன்றே.... ...*

அவையடக்கம்.

பிரணவஸ்வரூபியாகிய விநாயகக்கடவுளது மான்மியத்தை, ஆரிய பாடையினின்றுந் திராவிடபாடையின்கண் மொழிபெயர்த்திடுவான்புகுந்தபுலவர்பெருமான் கச்சியப்பஸ்வாமிகள், தம்மைவழிபடுவோர்க்கு எல்லாக்கலைஞானங்களையும் வரையாதளிக்கவல்லோரில் வள்ளற்றன்மையை யுடையாராகியிருந்தும், அக்காவியத்திற்கு அவையடக்கங் கூறுவார்,

சிற்பநூல் வழியிற்செய்த வுருவெனச் சிற்பஞ்சாராப் ... *
புற்பொரு ளுருவுமைங்கைப் புண்ணியன் புணர்ந்துநிற்பி.... *
னற்புதப் பூசைகொள்ளு மவன்புகழ் நிறைதலாலே. .... *
நற்பதம் புணர்தராவென் பாடலு நலத்ததாமே......... ... *

ஒருபொருண் முழுதுங்காணா ருபபொரு ளியல்புகூறக் ...*
கருதுவ ரல்லர்மேனாட் கண்ணுதற் பெருமான்றானு ... ...*
மருவிடை யூறுகண்டு வணங்கினா னென்றாலந்தப்...... ...*
பொருவிலி கதையான்கூறப் புகுந்தது நகையதாமே........*

என்றாராயின், அவர்மொழிபெயர்த்தருளிய அக்காவியத்தை யான் வசனமாக்கத்துணிந்தமை, அரிவருக்கமெழுத அறியாதானொருவன், அரியதிருமுறைக்குஉரைவரையக்கருதினான்போலும். ஆயினும் - ஆவின்பால்

அசுத்தமாகியமட்கலத்திற் பெய்திருக்கினும், அப்பாலின்பெருமையினையறிந்தோர், மட்கலத்தினது சிறுமையைநோக்கியொழியார்கள். அதுபோல-யான்கூறிய அவ்வசனகாவியமானது பொருட்சோர்வுமுதலியகுற்றங்களால் நிறைந்தபுன்சொல்லாலாயினும், அஃது தம்மோடொப்பாருமிக்காருமில்லாத விநாயகக்கடவுளது பெரும்புகழோடுகலந்திருத்தலின், ஐவிதவிலக்கணங்களையுணர்ந்து, சிங்காரம்- வீரியம்- பெருநகை- கருணை- இரௌத்திரம்- குற்சை- சாந்தம்- அற்புதம்- பயம்- என்கின்ற நவரசவலங்காரங்களோடுஞ் செய்யுள்புனையவல்ல கவிவாணர்களாயினோர், அக்குற்றத்தைநோக்கியொழியார்கள். குற்றத்தினையேபாராட்டுவார், ஒல்காப்பெரும்புகழ் தொல்காப்பியர்நூற்கும் ஓர்குற்றஞ் சாதிக்கத்துணிவரென்பதற்கு "உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்க், கொண்டு புகல்வதவர் குற்றமே-வண்டுமலர்ச், சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே, காக்கை விரும்புங் கனி" என்று அவரைநோக்கிப் பழையாரும் எள்ளியிருத்தலே சான்றாம்.

நைமிசாரண்ணியச்சிறப்பு

உலகங்களிற்சிறந்து கோடிசூரியோதயம்போல விளங்குஞ்சத்தியலோகத்தில், தவத்தர்-தேவர்- குமாரவருக்கங்கள்சூழப், பொற்பிரகாசமாகவிளங்குஞ் சபாமண்டபத்தின் முகப்பில், நவரத்தினமயமாயோங்கிய சிங்காதனத்தின்கண், கலைமகள்சமேதனாய்வீற்றிருக்கின்ற பிரமதேவனை, முன்னொருநாள்-இல்லறங்களை வழுவின்றியோம்பிய முனிவர்கணங்கள் வந்து சேவித்துப்போற்றி விண்ணப்பஞ்செய்தலாவது, சுவாமி-இதுபரியந்தங் கிரகஸ்தாசிரமத்தினின்றனம், இனியரியதவங்களைச்செய்து முத்தியினையடைய விருப்புற்றனமாதலால், அதற்குச்சிரேஷ்டமாகிய தலமொன்றை யநுக்கிரகஞ்செய்ய வேண்டுமெனப்போற்றப், பிரமனதற்கிரங்கியொருதருப்பையினை வட்டமாக்கி, நிலத்திலுருட்டி, மாதவரே-இதனைத்தொடர்ந்துபோவீரேல், இதுநின்றவிடம் பவித்திரமாகும், அத்தலத்தில்வதிந்து தவங்களைச் செய்யக்கடவீர்களென்று சொல்ல, அத்தவத்தர் சேவித்துவிடைபெற்று, அத்தருப்பைச் சக்கரத்தின்பின்சென்று, அதுநின்றவிடத்தினையே முக்கியமாகக்கொண்டு, அரியதவங்கள் முதலானவற்றைச் செய்திருந்தார்கள். தருப்பைநேமியாலுண்டானதால், அவ்விடம் நைமிசாரணியமென்னுங் காரணப்பெயரை வகித்திருக்கின்றது. அந்நைமிசாரணியமானது, ஒருசரீரத்தில்- உபநயனத்திற்கு முன்னும் பின்னுமான இருபிறவிகளையடைந்து, ஆகவனீயம் - தக்கணாக்கினி - காருகபத்தியம்-என்னு * முத்தீக்களைவளர்த்து, இருக்கு - தைத்திரியம்- சாமம் - அதர்வணம்-என்னு நான்குவேதங்களையோதி, சத்தம்-பரிசம்- ரூபம்-ரசம்- கந்தம்-என்னு மைம்புலன்களைவாட்டி, ஓதல்- ஓதுவித்தல்- வேட்டல்-வேட்பித்தல்- ஈதல்- ஏற்றல்- என்னு மறுதொழில்களைச்செய்து, தேவர் - மக்கள்- விலங்கு- புள்- ஊர்வன- நீர்வாழ்வன- தாவரம்- என்னு மெழுவகை

---

* ஆகவனீயம்- வேதத்தைவழங்குதல், தக்கணாக்கினி - தேவர்கட்குத் தட்சணைகொடுத்தல், காருகபத்தியம்-பூலோகத்தை இரட்சித்தலாம்

ப்பிறவிகளையோட்டி, இயமம்- நியமம்- ஆதனம்- பிராணாயாமம் - பிரத்தியாகாரம்- தாரணை- யானம்- சமாதி- என்னும் அட்டாங்கயோகங்களைப் பூண்டிருக்கின்றஅந்தணர் குழுஉக்களும், சடைமுடியணிந்து, புலித்தோலுடுத்து, இருவினைகளையு மதஞ்செய்யத்தக்க வெண்ணீறுபூசி, உருத்திராட்சகண்டிகைதரித்து, அருளோடுங்கூடி நிட்டைசெய் திருக்கின்றமுனிவர்சமூகங்களும், வசிக்குமிடமாகியிருக்கின்றது. அன்றியும்-வேதாத்தியயனஞ்செய்கின்றவர்கள், ஆகமநெறிகளையாராய்கின்றவர்கள், சாத்திரவிசாரணை செய்கின்றவர்கள், ஒருநியமங்கடைப்பிடித்து அந்நியமத்தினெறியே நிற்கின்றவர்கள்,பதினெண்புராணங்களைவாசிக்கின்றவர்கள், அவைகளைக்கேட்கின்றவர்கள், வேள்விகளைச்செய்துமுடிக்கின்றவர்களாகிய கூட்டங்களே, அவ்வனமெங்ஙணு நிறைந்திருக்கின்றன. இத்தன்மைய மேலானசிறப்புவாய்ந்த அவ்வனத்தின்பெருமையையும், அவ்வனத்தில் வசித்திருக்கின்றமுனிவர்கள் மாட்சிமையையும், அம்முனிவர்களாற்செய்துவருகின்றயாகாதிகளின்தகைமையையும், என்போலிகளால் அளவிட்டுரைக்கற்பாலதோ.அந்நைமிசாரணியத்தில்,சவுனகமுனியென்பவர்சத்திரவேள்வியென்னும் ஒருவேள்வியைச்செய்வதாயினர். அவ்வேள்வியைக்காணும்பொருட்டுத்,திருநீறுபூசியதிருமேனியையுடையவர்களாயும், மார்பில்உருத்திராட்சகண்டிகைதரித்திருப்பவர்களாயுங், கையிற்கமண்டலமேந்தினவர்களாயும், இன்னுமனந்தகோலங்களோடும்அளவற்றமுனிவர்கள்வந்துநெருங்கினார்கள்.அச்சமயத்தில்-பதினெண்புராணங்களைக்குறைவறக்கற்றவராகிக்,காலகாலராகியபரமசிவத்தின்திருவடிகளல்லது,மற்றொருகடவுளைமதியாதவராயிருக்கின்றசூதமாமுனிவரும்வந்து சேர்ந்தனர்.அம்முனிவரை,அந்நைமிசவனத்திலுள்ளமுனிவர்களும், அயலிடங்களினின்றும்வந்திருக்கின்றமுனிவர்களுங்கண்டஉடன், மேகத்தைக்கண்டமயில்போலஅளவற்றகளிப்படைந்து,உள்ளம்பூரித்துச்.சிறந்தவாதனத்திலிருக்கச்செய்து,பற்பலவுபசாரங்களோடுபூசித்து,மந்திரமலர்களாலருச்சித்துச்,சந்தனம்பூசி,அட்சதைசாத்தி, அமுதளித்து, இளைப்பாற்றி,இதனைவிண்ணப்பஞ்செய்வதாயினர். சுவாமி- பூர்வசனனங்கடோறுஞ்செய்து முற்றியபுண்ணியபலத்தினால், மகாதவசிரேஷ்டர்களெல்லாங்கண்டு கொண்டாடத்தக்க தேவரீரை, இன்றுயாங்களெல்லோரும் ஒருமிக்கக்கண்டுதரிசிக்கப்பெற்றோம். அத்தரிசனவிசேடத்தால், எம்மைத்தொன்றுதொட்டு வருத்திநின்றமாயை நீங்கிப்போயிற்று. அஃதன்றி, வேதங்களாலோதப்படுகின்ற பயன்களையெல்லாம் எளிதிலடையப்பெற்றோம். யாங்கள் நிற்கின்ற நிலைகளுங்குற்றங்களினின்று நீங்கின.எம்முடையபிதிரர்களுஞ், சீவன்முத்தரானார்கள். எம்மையீன்றோர்களும்,எம்மாற் பெறத்தக்கபயனையடைந்தார்கள். கொடியதுன்பங்களைவிளைவிக்கின்ற இச்சரீரவாதையும், இன்றொழிந்துபோயிற்று. இப்பூமியில் யாங்களடையக்கருதியபயன் யாதோ, அதனைத்தடையின்றி யடைந்தோம். எங்கட்குத்தேவரீரைப்போலப்பதினெண்புராணங்களையும் வழுவின்றிச்சாற்றவல்லவர்கள் யாவரிருக்கின்றனர். அப்பதினெண்புராணங்களை முன்னரெங்கட்குத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றீராயினும், இச்சவுனகமுனிவர்செய்துவருகின்றவேள்வி நிறைவேறுவதற்குப், பன்னிரண்டுவருடஞ்செல்லுமாதலால், அது

காறும்- மற்றொருபுராணகேள்வியாகிய வொப்பற்றவமுதத்தைத் தேவரீ ராற்புசித்து, அதனாலுண்டாகும்பயனை யடைவதேயல்லது,சிற்றறிவினை யுடைய யாங்கள்செய்யுங்கடப்பாடுவேறென்னவிருக்கின்றதென்றார்கள். இவ்வாறுமிகுந்தபத்தியோடும் பணிந்துவிண்ணப்பஞ்செய்தவர்களைச் சூதமுனிவர்நோக்கி, ஓதவசிரேஷ்டர்களே- வித்தினைவிதைக்காமல், அவ்வித்தினாலுண்டாகும்பயனையடையத்தக்கவர்கள்யாவரிருக்கின்றார்கள். அதுபோலப்- பிறப்பிறப்பில்லாத பரமசிவத்தினுடைய பெருமைகளைத் துதிசெய்யாதவர்கள், தீவினைகளினின்றுநீங்கார்கள். மேலும்-நடுவுநிலைமைதவறாத நல்லறிவினையுடையவர்களாகிக், கொடுஞ்செய்கைகளென்பனவொன்றேனுமில்லாமல்,நாளுக்குநாள்கொழுந்துவிட்டு விர்த்தியாகின்ற சிவபத்தியைச்சிந்தித்து, எக்காலத்துந்திரிபின்றிவிளங்கு மனவுறுதிபெற்றிருக்கின்றநீங்களே ஒருவிசேடத்தினைக்கேட்கப்புகின், அதனை எவ்விதத்தேனுங்குறைவில்லாமற்கூறல்வேண்டும்.அன்றியும்-நீங்கள் குலாசாரவொழுக்கங்களிற்குறைவில்லாமல், மிக்ககூர்மையான புத்தியினையுடையவர்களாகி, நல்லதவந் தானமுதலானவைகளைக்கடைப்பிடித்து, அம்பிகைபாகராகியசிவபெருமானதுபத்தியென்கின்ற மரக்கலத்திலேறியிருக்கின்றீர்களாதலால், நீங்களம்மரக்கலத்தையேதுணையாகக்கொண்டு,அப்புராணகேள்வியாகிய கடலையுங்கடக்காமற்போவீர்களா. உறவென்றும்பகையென்றும் பேதமில்லாமல், பல்லுயிர்களிடத்துங் கருணைவைத்திருக்கின்ற பரிசுத்தமானவுள்ளத்தையுடையவர்கள் ஒருகாரியத்தில் விழைவார்களாயின், அக்காரியம்-அவர்கட்கும் அவர்களையடுத்துளோர்கட்கும் பழுதின்றி விளங்கி, மேலாகியபயனையேதரும். அதுபோல- நீங்களுநல்லவிடயத்தையே மதித்துக்கேட்டீர்கள். கரும்புதின்பார்க்குக் கூலிகொடுப்பதுபோலப், புண்ணியப்பயனேபேசொல்ல விழைவுற்றிருக்கின்ற வெனக்குப்,பின்னும் அதிகவிழைவினைவிர்த்திசெய்தீர்கள். உம்முடையவிருப்பம் நிறைவேறத்தக்கதாக வொருபுராணமிருக்கின்றது. அதனைச்சொல்வதன்முன் அப்புராணம்வந்தவரலாற்றினைச்சொல்லுவோங்கேட்பீராக.

புராணவரலாறு.

பிரமம்-பதுமம்-வைணவம்-சைவம்-பாகவதம்-பௌடிகம்-நாரதீயம்-மார்க்கண்டேயம்-ஆக்கிநேயம்-பிரமகைவர்த்தம்- இலிங்கம்- வராகம்-காந்தம்- வாமனம்-கூர்மம்-மச்சியம்-காருடம்-பிரமாண்டம்- என்னும்-பதினெண்புராணங்களையும், அவைகளிற் கூறப்பட்டிருக்கின்ற நாலுலட்சங்கிரந்தங்களோடு, முன்பு யாம்சொல்லக்கேட்டிருக்கின்றீர்கள். அப்பதினெண்புராணங்களையும், முற்காலத்திற் கைலாசபதியாகிய சிவபெருமான்திருவடிகளிற்பத்திசெய்து பெற்றுக்கொண்ட நந்திதேவரானவர் சனற்குமார முனிவருக்குபதேசிக்க, அதையம்முனிவரிடத்தின் மிகுந்த அன்போடுவியாசமுனிவர்கேட்டுச்,சுலோகங்களாக்கி,இவ்வுலகெங்கணும்விளங்கிவழங்கத்தக்கதாகச்செய்தார்.அதுபோலவே-இன்னுஞ் சிலமுனிவர்கள் வேறுவேறு பரம்பரைவழியாக வுபதேசம்பெற்று, அச்சுபபுராணங்கட்கு உபபுராணங்களாகத்,தங்கடங்கள் அபிதானத்தாற்பதினெண்புராணங்கள் செய்திருக்கின்றார்கள். அவைகள்-சனற்குமாரபுராணமென்றும்-ந

ரசிங்கபுராணமென்றும்-ஆங்கிரபுராணமென்றும்- சிவதருமபுராணமென்றும்- துர்வாசபுராணமென்றும்- நாரதீயபுராணமென்றும்- கபிலபுராணமென்றும்- உசனபுராணமென்றும்- நந்திபுராணமென்றும்- வாருணபுராணமென்றும்-காளிபுராணமென்றும்-வாசிட்டலைங்கபுராணமென்றும்-மானவபுராணமென்றும்- சௌரபுராணமென்றும்- பராசரியபுராணமென்றும்- மாரீசபுராணமென்றும்- சாம்பவபுராணமென்றும் - பார்க்கவபுராணமென்றும்- வழங்குகின்றன. இவைகளெல்லாம், ஆரியத்திலிலட்சஞ்சுலோகங்களாகவிருக்கின்றன. இவ்வுபபுராணம்பதினெட்டினுள், பார்க்கவபுராணமென்பதுநாயகமாகியிருக்கும்.இப்பார்க்கவபுராணத்தில், பிரணவப்பொருளாகியும்,அப்பிரணவத்தின்றும் வேறுபட்ட பேதப்பொருளாகியும், பேதாபேதப்பொருளாகியும்,இவைகளனைத்தையுங்கடந்துநிற்கின்ற ஏகவஸ்துவாகியும் ,பிரம்மானந்தஸ்வரூபியாகியு மிராநின்ற விநாயகமூர்த்தியினது மகத்துவத்தை விளங்கக்காட்டி யிருக்கின்றமையால், விநாயகபுராணமென்றுபெரியோர்கள் வழங்குவார்கள்.இவ்விநாயகபுராணத்தை, முற்காலத்திற் பிரமதேவன்அனேகதவங்களைச்செய்து, அத்தவமுதிற்சியினாற் கைலாயத்திற்றிரிநேத்திரதாரியாகிய சிவபிரானு லுபதேசிக்கப்பெற்றுத்,தன்னை அன்போடுவழிபட்ட வியாசமுனிவருக் குபதேசித்தான். அவ்வியாசமுனிவரிடத்திற்பிருகுமுனிவர்கேட்டுத், திருப்பாற்கடலிலெழுந்ததேவாமிர்தம்போல யாருவக்கு முபயோகமாதற்பொருட்டு, உபாசனுகாண்டமென்றும்-லீலாகாண்டமென்றும்--இரண்டுகாண்டங்களாகப்பிரித்து, அவ்விரண்டையும்இருநூற்றைம்ப தத்தியாகங்களாக்கி,அவைகட்குக் கூடியதொகைபன்னீராயிரஞ்சுலோகங்களாகமுடித்து, ஒருபுராணமாக்கினார். அப்புராணம்பிருகுமுனிவராற் கூறப்பட்டமையால், அக்கருத்தாப்பெயரைக் கொண்டே பார்க்கவபுராணமென்று வழங்குகின்றது.இப்பார்க்கவபுராணத்திற்குநாயகர்கணேசமூர்த்தியாகையால்,அதனைக்காணுபத்தியமகத்துவமென்றுயாவரு மனுட்டித்துப்பெறத்தக்கபேற்றினையடைகின்றார்கள். சவுனகாதிமுனிவர்களே- பார்க்கவபுராணமென்கின்ற விநாயகபுராணம்வந்தவரலாறிது.இப்புராணத்தில், தேவர்கள்முதலிய அளவற்ற ஆன்மகோடிகள் விநாயகக்கடவுளைப்பலவாறுபூசிக்க, அப்பூசனைகட்குத்தாமுவந்து,தமதுநிறைந்தகிருபையோடுகூடிய அனந்த அற்புததரிசனங்களைக்காட்டி, அவ்வவர்களிஷ்ட காமியார்த்தங்களையநுக்கிரகித்தருளிய சரித்திரங்களனைத்தும் விளங்கக்காட்டியிருக்கின்றதாதலால்,இப்புராணத்தைமிகுந்தஅன்புடன்கேட்டபேர்களுக்குத், தருமமுதலிய நான்கு புருஷார்த்தங்களுங்கைகூடும்.முன்னொருகாலத்தில்இப்புராணிகராகியபிருகுமகாமுனிவரானவர், தம்மையடுத்தசோமகாந்தனென்னும்மஹாராஜனுக்குப், பிரமதேவன்வேதவியாசமுனிவருக்குபதேசித்த முறைமைப்படித்திருவாய்மலர்ந்தருளினர். அதனை அவ்வரசன் அன்போடுகேட்டமகத்துவத்தால், தானடைந்திருந்தசகலவினைகளுநீங்கப்பெற்றுக், கணேசமூர்த்தியினுடையசாயுச்சியபதவியையடைந்தான். அம்மகத்துவத்தைச்சொல்லுவோங்கேட்பீராக.

சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.

கணபதிதுணை.

புராணமகத்துவம்.

சோமகாந்தன் பிருகுமுனிவரையடுத்தது.

ஓசவுனகாதிமுனிவர்களே, மூவுலகத்தினுஞ் சிறந்த இப்பூவுலகத்தில், சகலசெல்வங்களையும்பெற்றோங்கி, மலர்பொதுளியதடாகங்களும்- குடிவளப்பமும்- வயற்செழுமையும்-சிறந்துவிளங்கியிருக்கின்ற சௌராஷ்டிரமென்னும் ஒருநாடுண்டு. அந்நாட்டில்-பூமிதேவிக்குத்திலதம்போல விளங்கிச், சிறந்ததபதியர்களாற்செய்யப்பட்ட பொறிகள்நிறைந்துள்ளமதில்கள்-அகழிகள்-கோபுரங்கள்- மண்டபங்கள்- உத்தியானங்கள்- சித்திரகூடங்கள்- முதலிய அளவற்றசிறப்புக்களைவாய்ந்த, தேவநகரமென்னும் ஒருபட்டணமுண்டு. அப்பட்டணத்தில்-கருணையிற்கடலை வென்றவனாகியும், அறிவிற் பிரகஸ்பதியை வென்றவனாகியும்,பொறுமையிற் பூமிதேவியைவென்றவனாகியும்,ஒளியிற்சூரியனைவென்றவனாகியும், கீர்த்தியிற்சந்திரனைவென்றவனாகியும், வீணாகானத்தில் மிதுனகின்னரத்தை வென்றவனாகியும், ஈகையில்மேகத்தை வென்றவனாகியும், அழகில் மன்மதனைவென்றவனாகியும், நிதியில்அளகேசனை வென்றவனாகியும், போகத்தில் இந்திரனை வென்றவனாகியும்,கலைக்ஞானத்தில் ஆதிசேடனைவென்றவனாகியுமிருந்து, நான்கு வேதங்களையு மாராய்ந்துணர்ந்த திறத்தினால்நடுவுநிலைமைகளை நன்றாய்த்தேர்ந்து, தத்துவஞானத்தையறிந்து, தனதுவலிமைபெற்ற புயத்திற் பூமிபாரத்தைச்சுமந்து,சகலவேந்தர்களையுந் திறைதரவென்று, தனக்குவேறொருவர்நிகரின்றி அரசாட்சி செய்துவருகின்ற, இராசாதிராசனாகிய சோமகாந்த மகாராசனென்னும் ஒரு அரசனிருந்தான். அவ்வரசனுக்குத் -தனதுபஞ்சேந்திரியம்போ லிடைவிடாது வழிபட்டுவருகின்ற, உருவவான்-வித்தியாதீசன்- கெமங்கரன்- ஞானகெம்மியன்-சுபலன்- என்கின்ற ஐந்துமந்திரிகளோடு, ஆறாயிரந் தேர்களும், பதினாயிரம்யானைகளும், இருபதினாயிரங்குதிரைகளும், கணக்கற்றபதாதிகளுமிருந்தன. அன்றியும்- அவ்வரசனுக்கு எக்காலத்தும் உயிருக்குயிராகவிருந்து, தருமாதிகளை வழுவாதுநடத்திக், கற்பிலருந்ததியை நிகர்த்து, அழகில்- இரதி- இந்திராணி- இலக்குமி- அரம்பை- திலோத்தமை- என்கின்ற மாதர்களைப்பழித்துச்,சுதன்மையென்னும் பெயரினைப்படைத்த ஓர்மனைவியிருந்தனள். அம்மனைவிவயிற்றில் பதினாயிரம் யானைக்குள்ள வலிமையுடையவனாகியும்,தன்னைப்பகைத் தெதிர்க்கின்ற மன்னர்கள்நடுங்கி நாணத்தக்கதாகக் கோபிக்கின்ற பராக்கிரமத்தினால் ராஜகண்டீரவத்திற் கொப்பானவனாகியும், ஏமகண்டனென்னும் பெயரினையுடைய ஒருகுமாரனுதித்திருந்தான். இவ்வாறு மந்திரியர் முதலிய சகலபரிசனங்களுந் தன்னைப்புடைசூழ்ந்து நிறைந்திருக்கத்தக்கதாகச், சிங்கங்களாற் சுமக்கப்பட்டிருக்கின்ற ரத்நாசனத்தின்மீதிருந்து,நீதிசாத்திரவிதிப்படி தனதுசெங்கோலைத்திசைய

னைத்திலுஞ் செலுத்தி,உறையிற்றங்கிய வாளொளியினாற் பகைவராகியஇ ருட்கூட்டங்கள் நெருங்காதவண்ணந்துரத்தி,மனங்களித்துப், புயங்கள்பூ ரித்து,அளவற்ற மகிழ்ச்சியோடும் இராச்சியபரிபாலனஞ்செய்துவருகின் றகாலத்தில், அவ்வரசனுக்கு-முற்பிறவியிற்செய்த தீவினைப்பயனாற்சரீரத் திற்றொழுநோயுண்டாகிக்,கொழுப்புங் குருதியும்வழிந்து,சீயுநோயுங்கொ ண்டு,மணிமந்திர ஔடதங்களினுந்தீராமல் மிக்கதுன்பத்தை விளைத்துக் கொண்டுவர,ஒருநாள் அவ்வியாதியின்வருத்தத்தைச் சகிக்கமாட்டாதும னத்தளர்ச்சியடைந்து,கொலுச்சபையில்வந்து, ஏவலாளர்களைக்கூவி, அ மைச்சர்களைவிரைவில்வருவிக்கக்கட்டளையிட்டான். உடனே அக்கட்டளையின்படிவந்தஅமைச்சர்கள், அரசன்சமூகத்தில்வந்துபணிந்து தத்தமிருக்கையைச்சேர்ந்திருந்தார்கள். அரசனவ்வமைச்சர்களை நோக்கி, மிகுந்தமனவருத்தத்துடன் இதனைச்சொல்லுவதாயினன். அன்பிற்சிறந்த அமைச்சர்களே, இதுகாறுமென்னைப் பகைத்தெதிர்த்த சத்துருக்களையெ ல்லாம்வென்றேன்,உலகமுழுவதுநீதிவழுவாது அரசுசெலுத்தினேன், தே வர்கட்கெல்லாந் திர்ப்தியாக அனந்தயாகங்கள் முடித்தேன், சுற்றத்தாரை யெல்லாஞ் சுகம்பெறச்செய்தேன்,இயாவர்க்கும்இளைப்பாற்றத்தக்க சோ லைகளுண்டாக்கினேன், பலதடாகங்களைத்தொடுவித்தேன், அன்னசாலைக ளேற்படுத்தினேன்,இன்னுமித்தன்மைப்பவானஅளவற்றதருமங்களைச்செ ய்தும், ஆலைவாயிற்பட்ட கரும்பைப்போல என்னை இடைவிடாது வா திக்க வந்தஇந்நோயை நீக்கிக்கொள்ளும் ஏதுவினையொரு விதத்தினுங்கா ணேன், முன்பென்சரீரமானது சந்திரனொளியைநிகர்த்துப்பிரகாசித்திரு ந்த தன்மையினா லல்லவா, சோமகாந்தனென்னும் பெயரையுடைத் தா யினேன், அத்தன்மையான சிறந்தசரீரத்தில் இத்தன்மையானகொடியவி யாதிவந்து வருத்துமாயின், அதனைவிட்டு நீங்குவதற்கான எண்ணமுறா மல், இன்னுமவ்வியாதியினால் வருகின்றதுன்பங்களை யனுபவித்துக்கொ ண்டிருக்கின்ற என்னுயிரை, இனிபலாத்காரமாயாவது விடல்வேண்டு ம், அன்றியும்-முன்பு இந்திரனுங்கண்டு நாணத்தக்கதாக இலவம்பஞ்சு- செம்பஞ்சு- வெண்பஞ்சு- மயிர்ச்சேணம்- அன்னத்தூவி-என்கின்றபஞ் சசயனத்திலிருந்து, பெண்- ஆடை- அணிகலன்- போசனம்- தாம்பூலம் பரிமளம்- பாட்டு- பூவமளி-என்கின்ற அஷ்டபோகங்களை யநுபவித்து, இப்போது தனதுகாந்தியெல்லாம் ஒருவியாதியினால் மழுங்கி யழியும்ப படியாகநேர்ந்தும், இன்னும் வாழவேண்டுமென்னும் எண்ணமுற்றிருக்கி ன்ற இவ்வுடலை வாளுக்கிரையாகச் சின்னபின்னப் படுத்துவதே உத்தம மாயிருக்கின்றது, அமைச்சர்களே - இனிப் பற்பலவிதங்களைப் பே சுவதினால் ஒருபிரயோசனத்தையுங் காணேன், யான்முன் படைந்திருந்த களிப்பும், இந்நோயினால்இப்போதடைந்திருக்கின்றவெறுப்பும், நீங்களே நன்றாயோசித்துப்பாருங்கள், இனி யிவ்வரசைவிட்டு வனத்திற்சென்று வாசஞ்செய்வதே மிக்க நலமாகவிருக்கின்றது, என்புதல்வனாகியஏமகண் டன் என்னினுஞ்சிறந்த மேம்பாட்டினையுடையவனாக விருக்கின்றானாத லால், அவனுக்குஉம்முடைய உத்தமமந்திராலோசனைப்பிரகாரம் இவ்வு லகத்தைப்பாதுகாத்து வரும்படியானமார்க்கத்தைப்போதித்து, நமது அரசுரிமையைஅவனுக்கொப்புவித்து விடுகின்றேம், அவனை யென்னினு

மதிகமாக மதித்து நடந்துகொள்ளக் கடவீர்களென்று சொன்னான். அவையனைத்தையும் அவ்வமைச்சர் முதலாயினோர்கேட்டு மிக்கமனவருத்தங்கொண்டிருக்கின்ற சமயத்தில், அவ்வரசன் தனது உள்ளத்தி லுண்டாகிய துக்கத்தினாலும், வியாதியினாலுண்டாகிய வருத்தத்தினாலுஞ், சோர்வுற்று மூர்ச்சையாயினான். உடனே அவ்வரசனைப்புடைசூழ்ந்திருந்த அமைச்சர் முதலாயினோர் திடுக்கிட்டுத், தாமு மத்துன்பத்தை யடைந்தவர்களாகிச், சிலர் தங்களுள்ளங்கரைந்து கண்ணீர் சொரிந்தார்கள். சிலர் நாசியின்மீது விரலைவைத்தார்கள். சிலர் அவ்வரசனுடலில் நெருங்கிய நோயைவைதார்கள். சிலர் தெய்வத்தை நொந்தார்கள். சிலர் வயிற்றிலறைந்துகொண்டு மெய்வருந்தினார்கள். சிலர் கைகளைநெரித்துக்கலங்கினார்கள். சிலர் கல்விகேள்வியிற்சிறந்து இவ்வுலகத்தைநீதியோடுங்காக்கவல்லவராகிய இவ்வரசருக்கும் இவ்வினைவரலாமாவென்றார்கள். சிலர் ஊழ்வினையால் வருந்துன்பத்தை யாவரொழிக்க வல்லவரென்றார்கள். இவ்வாறுயற்பலவிதங்களாகத்துக்கித்துத் துயரங்கொண்டிருப்பவர்களை அமைச்சர்கள்கையமர்த்தித், தங்களுள்ளத்தையுந்தாமேதேற்றிக்கொண்டு, அரசனருகில்வந்து, செவியிற்சுக்குவைத்தூதி, குளிர்ந்தசாந்தாற்றிமுதலியவைகளைக்கொண்டு சைத்தியோபசாரங்கள் செய்தார்கள். அதனால் அவ்வரசன் மூர்ச்சைதெளிந்து, சேஷசயனத்தினின்று மெழுந்த திருமாலைப்போல மெல்லெனவெழுந்து, பரமேஸ்வரருடைய திருவடிகளைச் சிந்தனைசெய்துகொண்டிருந்தான். அவ்வரசன் கொண்டிருக்கின்றமனோதிடத்தைமுன்னமேயறிந்திருக்கின்ற அமைச்சர்கள் மீளவும் அவனைப்பணிந்தெழுந்து, ஓ மண்டலேஸ்வரா – இதுகாறுந் தேவேந்திரனைப்போலப் பகைவர்களைவென்று, எங்களெல்லாந் தாய்தந்தையரினு மிகுந்த அன்போடு பாதுகாத்துவந்தீர், அத்தன்மையான தேவரீர்க்கு வியாதிநேரிட்ட துன்பத்தினால் இனி வனத்திற்சென்று வாசஞ்செய்ய வேண்டுமென்றால், தேவரீரைமாத்திரம் போகவிட்டு யாங்க ளெங்கள் மனையிற்சென்று வாழ்தலுந்தகுமா, அவ்வாறே யிருப்போமாயின் யாங்களும் புத்தியின் மிகுத்தவர்களாகலாமா, அப்பால் தருமமும் நீதியும் நன்றாகவுந்தழைத்திருக்குமா, ஆ அ – என்ன விசேடஞ்சொன்னீர், தேவரீர் குமாரராகிய ஏமகண்டரோவெனில், தருமமும் – அத்தருமத்திற்கேற்ற பொருளுமாகிய இரண்டையும் இடரின்றிசம்பாதித்துத், திசைகண் முழுவதுந்தமதுசெங்கோலைச்செலுத்தி, மனுநீதிவழாமல், இவ்வுலகத்திற்கெல்லாந்தாமொருவராகவேயிருந்து அரசியற்றவல்லவராவர், ஆதலால் – அவர் செய்யும் அரசாக்ஷிக்குமற்றொருவர் துணைவேண்டுமா, யாங்களுந்தேவரீரோடு வனத்திற்குவருவதாக நிச்சயித்திருக்கின்றோம், இனித் தேவரீர்குமாரரை அரசுக்குரியவராக நியமிப்பீரென்று விண்ணப்பஞ்செய்து கொண்டார்கள். இங்கிவ்வாறு நடந்தவிசேடங்களையெல்லாம் அந்தப்புரத்திலிருந்த சுதன்மையானவள் கேள்வியுற்று, மனந்தாவரிக்கமாட்டாது, சரேலென்றெழுந்து, மேகலாபரணங்களசையவும் பாதசாலங்கள் கலீரென்று சத்திக்கவும் விரைந்துவந்து, சோமகாந்தராசனை வணங்கி எதிர்நின்று, பகைத்தவேந்தர்களெல்லாங்கண்டு வணக்கங்கொள்ளத்தக்க கிருபாநோக்கத்தையுடைய எனதுபிராணநாயகா, இருதலைப்புள்ளுக்கு உயிரொன்றேபோல

இதுவரையில் தேவரீர்க்குரியவளாகி, இன்பதுன்பங்களை எல்லாம்வேறு பாடின்றி யனுபவித்துவந்தயான், இப்போது தேவரீரை மாத்திரம் வனத்திற் செல்லவிட்டு, எவ்வாறுதனித்திருந்து உயிர்தரிக்கவல்லேன், ஒருமித்தமனத்தையுடைய மங்கையராயினோர், தங்கணவர்உயிர்பெற்றிருக்கும் வரையிற் றாங்களுயிர்பெற்றிருப்பதும், அவரிறக்குங்காலத்திற்றாங்களிறத்தலுமான கற்புநிலைமையுள்ளவர்களாயின், அவர்கள் இம்மையிற் புகழடைவதன்றி, மறுமையிற் சொர்க்காதிபோகங்களையு மடைவாரென்று சான்றோர்கள்சொல்லியிருக்கின்றார்கள், அங்ஙியமப்படி யானும்உம்மோடுவனத்திற் சஞ்சரிப்பேனல்லது, ஒருகணமேனுந் தனித்திரேனென்று சொல்லிச், சூறைக்காற்றினாலடியுண்ட இளங்கொடிபோலவும், அம்புகள் தைத்துப் பதைக்கின்ற பெண்மான்போலவும், உள்ளங்கலங்கி, உணர்வழிந்து, கண்களில் நீர்த்தாரைகளைப்பெருக்கித், தன்னாற்றாங்கமாட்டாத துக்கத்தோடு முறையிட்டனள். அதை அவள்குமாரனாகிய ஏமகண்டன்கேட்டு மனம்வருந்தி, தானுமவ்வரசனெதிரில் வணங்கிநின்று, என்னருமைத்தந்தையே, சந்திராதித்தர்களைப்பிரிந்த ஆகாயம்போலவும், அக்கினியும் பசுவுமில்லாத யாகம்போலவும், புருடனையும் புத்திரனையும் பிரிந்த ஸ்ரீகள்போலவும், அமைச்சு மரசுமில்லாத நகரம்போலவும், என்னை அருமையாயீன்ற உம்மிருவரையும் பிரிந்தபின்பு, யானெவ்வாறிருந்து அரசாளவல்லேன், புத்திரர்கட்குண்டாகிய கட்டமையாதெனில், தம்மையீன்ற தாய்தந்தையர் இருக்குங்காலத்து அவர்களைத்தெய்வமாகப் பூசித்தும், இறந்தகாலத்து அவர்களுக்காகப் பிதிரர்கடன்களைச் செய்தும் இருத்தலே யல்லது, அவைகளைமறந்து, நிலைமையற்றபோகங்களை யிச்சித்து, அற்பமாகிய அரசாட்சியில் மூழ்கியிருத்தலல்லவே, ஆதலால்- யான்செல்வத்தையொருபொருளாகமதித்தவனல்லன், உம்மிருவரோடுயானும்வனத்திற்கு வரத்துணிவுற்றிருக்கின்றேனென்றனன். இவ்வாறுகுற்றமற்றஅமைச்சர்களும், உயிர்த்துணைவியாகியசுதன்மையும், புத்திரனாகியஏமகண்டனும், அவ்வவர்கள் தனித்தனியே விண்ணப்பஞ்செய்த வார்த்தைகளாகிய அமுதத்தை, அரசன்செவியாரவுண்டு, மனங்குளிர்ந்து, குமாரனாகிய ஏமகண்டனைப்பார்த்து, எனதருமைமைந்தனே - நீ சிறுபிள்ளையல்லவே, புத்தியிற்றாழ்வான வார்த்தைகளை யேன்பேசுகின்றாய், சாத்ரவிதிப்படித் தாய்தந்தைய ரிருக்கும்போது அவர்களைத் தெய்வமாகப் பூசித்து, அவர்களுக்குப் பின்பு அளவற்ற தானாதிகளைச்செய்து, பலிபிண்டமுதலியவுங்கொடுத்து, மற்றுமுள்ள கருமாதிகளை முடிக்கின்றவனே யாவரும்புகழத்தக்க புத்திரனாயினும், அத்தாய்தந்தையர் சொல்லுகின்ற வார்த்தைகளைத்தடுக்காது நடந்துகொள்வதல்லவோ அப்புத்திரனுக்குரிய முதன்மையாகியதருமம், இதனையறிந்து நடந்துகொள்பவனெவனோ, அவனே பெற்றோர்கள்களிக்கத்தக்க அருமைப்புத்திரனாவன், ஆதலால்- என்னுத்தரவின்படி அமைச்சரோடுகூடவிருந்து, அவர்கள்மந்திராலோசனைப்பிரகாரம் இராச்சியபரிபாலனஞ்செய்துவரக்கடவை, அதுவே எனக்குநீநடத்துகின்ற முதன்மையாகியதருமமென்று, இன்னும் பலவாகியதேறுதல்களைச்சொல்லி, ஏமகண்டனையழைத்துக்கொண்டு, அரமனையின் அந்தப்புரத்திற்சென்று, நவரத்தினமயமாயிருக்கின்ற ஆதனத்திலிருந்து, புத்திர

ஊத் தன்னெதிரிலிருக்கவைத்து, அறத்தினவழியாக அரசாக்ஷியினைச்செலுத்தி அகிலம்புரந்துபொருளீட்டத்தக்க மார்க்கத்தை எல்லாங்கிரமமாக உபதேசித்து, மீட்டுங்கொலுச்சபையில்வந்து, கணிதசாஸ்திரிகளைக்கூவி, நமது குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யவேண்டுமாதலால்,அதற்குரியநாளை ஆராய்ந்துரைப்பீர்களென்றனன். அதற்கவர்கள்உத்தராயண புண்ணியகாலமாகியதைமாதத்தில், பூசநட்சத்திரங்கூடிய சுபதினமேநன்முகூர்த்தமென்றார்கள். பின்னர் தனதுகுலகுருவையடைந்து, தனதெண்ணத்தை அவருக்கறிவித்து, அவர்கட்டளையிட்டவாறே எல்லாப்பொருள்களையுஞ்சேகரித்து, ஏமகண்டனுக்கும் அவன்மனைவிக்கும் அளவற்றபெருமகிழ்ச்சியோடு மகுடாபிஷேகஞ்செய்து முடித்தனன். பின்னர் ஏமகண்டன் சகலவைபவத்தோடும் உலாப்போந்து, திசையனைத்தினுந் தனது செங்கோலைச்செலுத்தி அரசியற்றிவருகின்ற நாளையில், சோமகாந்தராசன் நமது தோட்சுமையை யொழித்தோமென்னுங் களிப்படைந்தவனாகித், தனது புத்திரனாகிய ஏமகண்ட ராசனைப்பார்த்து, மைந்தனே,யான்முன்புசொல்லியிருக்கின்ற நீதியின்படி ராச்சிய பரிபாலனஞ் செய்துவருவதுஉனதுகடமை, இனிஎன்னிஷ்டப்படிவனத்திற்செல்வது எனது கடமையென்று சொல்லி, விரைவிலெழுந்து, அங்கிருக்கின்ற அமைச்சர் முதலானவர்களைப் பார்த்து, அவ்வவர்கட்குச்சொல்லவேண்டிய கட்டளைகளைச்சொல்லிப் பிரயாணங்கொண்டு போவதாயினன். அவ்வாறு பிரயாணப்பட்டுக் கடைவாயிலைநீங்குவதற்கு முன்னமே, அமைச்சர்-அந்தணர்-நட்டோர்-நாகரீகர்-முதலியகூட்டங்களோடு,சுதன்மையும்-ஏமகண்டராசனும் வெளிக்கொண்டு, மிக்கமனவருத்தத்துடனே அவனை நெருங்கினார்கள். இவ்வாறுநெருங்கிய பேர்களெல்லாந்தன்னைப்புடைசூழ்ந்துவரும்படியாக, அரசன்நான்குகூப்பிடுதூரஞ்சென்று, குளிர்ச்சியுள்ளஒருபொய்கையைக்கண்டு,அதனருகிற்றங்கித், தன்னோடுவந்திருக்கின்ற முனிவர்கள்- அந்தணர்கள் - முதலானபெரியோர்களைவணங்கி,மற்றவர்களையுங் கிருபையோடுபார்த்து,அன்பர்களே,என்னுடன்நீங்கள்யாவரும்என்வீணிலிங்கிருக்கவேண்டும், தத்தமிடங்களிற்சேர்ந்து சுகமாயிருங்களென்றுசொன்னான். அதைக்கேட்ட அமைச்சர்முதலாயினோர்மனவருத்தங்கொண்டு,விழிகளினின்று நீர்பெருகத்தக்கதாக வீழ்ந்து,தீர்க்கதெண்டன்செய்து,ஓசார்வபௌமா-தீயினிடத்தில்வெம்மைபோலவும்,நீரினிடத்திற்றண்மைபோலவும், சூரியனிடத்தி லொளிபோலவும், மலரினிடத்தின்மணம்போலவும்,உடலினிடத்தி லுயிர்போலவுமிருந்து,எங்களை யெல்லாம்பாதுகாத்தருளிய தேவரீர் கிருபாசமூகத்தை ஒருகணப்போதேனும் யாங்கள் நீங்கியிருக்கத்துணிவோமோ, அப்படிநீங்கியிருக்கினும் நிலவைவிட்டுஇருளிற் கிடப்பவர்க்கொப்பாவோமல்லவா,இனிநகரத்திற்சென்று எவ்வாறுயாங்கள்வாழ்ந்திருப்போம்,முற்சனனத்திலன்றிஇச்சனனத்திலும் அனந்தபுண்ணியங்களை நடாத்தி யிருக்கின்றீராதலால், எந்தத்தீர்த்தத்தினாலோ, எந்ததவஸ்ரேஷ்டர்களாலோ,இப்போது தேவரீருடலிற் சம்பவித்திருக்கின்ற இவ்வியாதி நீங்கப்போகின்றது. அதுகாறும் யாங்களும் வனத்திலிருந்து, பின்புதேவரீரோடுங்கூடி நகரத்திற்குவந்து சேருகின்றோமென்று சொன்னார்கள். அவையனைத்தையுஞ் சோமகாந்தராசன்கேட்டு,

அன்பர்களே- இவ்வுலகத்திற்பிறந்த பயனைவேண்டினோர், முதலில் இல்லறவொழுக்கங்களைவழுவாமற்காத்துப், பின்புதுறவறம்பூண்டுவனத்திற்செல்லவேண்டுமென்று வேதங்களிற்சொல்லியிருக்க, அதை இதுகாறுங்கருதாது மறந்திருந்ததினாலல்லவா, இப்பொல்லாங்கான பிணியெனக்குச் சம்பவித்தது, நீங்கள் இதைச்சற்றும்ஆலோசியாம லிருக்கின்றீர்கள், அன்றியும்-ஓர் ஆலமரத்திற்குப் பழுதுற்றகாலத்தில், அதனைத்தாங்க அதனடியிலிறங்கியிருக்கின்ற விழுதைப்போல, எனக்குத்துன்ப நேரிட்டகாலத்தில், என்னைப்போலென தரசுரிமையைக்காத்து வருவதற்கு என்மகனேற்பட்டிருக்கின்றான், அவனே-என்னிலுமதிகமாக வுங்களையெல்லாம்பாதுகாத்து மேலானபுகழை யடையத்தக்கவன், நீங்கள்ஒன்றுக்குமஞ்சவேண்டாம், இனியான்வனஞ்செல்வதற்குஉத்தரவுகொடுத்து, நீங்கள்யாவரும் நகரத்திற்போய்ச்சுகமாயிருங்களென்றுசொல்லினான். பின்னர்யாவரும் அரசனாணையைமறுப்பதற்கஞ்சினவர்களாகிஒன்றும் பேசாதிருந்தார்கள். இப்பால்குமாரனாகியஏமகண்டராசனானவன், தனதுதாய்தந்தையரிடத்தில்வைத்திருக்கின்றஆசைநோயானதுதன்னையலைக்க, அதனால்வருந்துகின்றமனதோடு, அருகிலிருப்பவர்கள்தனதுகண்ணீரைத்துடைக்கும்படியாகத்துக்கித்துத்தந்தையெதிரில்வந்துநின்றனன். அவனைச்சோமகாந்தராசன்பார்த்து, அப்பா- ஏன்கிலேசப்படுகின்றாய், கிரகஸ்தாசிரமத்திலிருக்கின்ற பேர்கள்வயதுமுதிர்ந்தால் வனத்திற்குச்செல்வது முறைமைதானே, அந்தமுறைமைப்படி யாமும்வனத்திற்குச் செல்லுகின்றோம், தாய்தந்தையருடைய உத்தரவைத்தடுக்காமல்நடந்துகொள்ளவேண்டுவது புத்திரர்கள் கடமையாதலால், தசரதமகாராசாவி னுத்தரவின்படி, அவர்குமாரராகிய ஸ்ரீராமமூர்த்தி வனத்திற்குச்சென்றார், அவ்வாறு உன்னையான் வனத்திற்குப்போகச் சொன்னேனோ, இல்லையே, சுகமடுத்தாலும், துன்பம் விளைந்தாலும், தாய்தந்தையர் சொல்லுகின்ற முறைமைப்படி நிற்பதல்லவாபுத்திரர்களுடையகடமை, இஃதுனக்குத் தெரியாததா, நீமதுஉத்தரவின்படி நகரத்திற்போய்ச்சேர்ந்து, சுகமாய் ராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருவென்று பலதேறுதல்களைச் சொல்லலும், ஏமகண்டராசன் தன்தந்தையின் பாதங்களிற் சாஷ்டாங்கமாகப்பணிந்து, பலஆசீர் வசனங்களைப்பெற்றுத், தன்தாயினருகில்வந்து, அவள்பாதமானது தனதுகண்ணீரினால் நனையும்படியாகவீழ்ந்து பணிந்தனன். உடனே அத்தாயானவள் மிகுந்த துக்கத்தோடு புத்திரனையெடுத்துத், தனதுகண்ணீரினால் அவன்மார்பிலணிந்திருக்கின்ற சந்தனமெல்லாங் குழையும்படி யணைத்துப், பல தேறுதல்களைச்சொல்லி, என்னருமைச்செல்வனே- எவ்வகைப்பட்டதேவர்களாயினுந் தங்களையடுத்திருக்கின்ற ஊழ்வினையை யொழிக்க வல்லவர்களோ, அவ்வூழைநினைத்துத் துக்கித்திருப்பதினா லென்னபயன், உன்மனதில்எங்களைக்குறித்து யாதொருகவலையுங் கொள்ளவேண்டாம், சகலவிக்கினங்களையுமொழித்து அவ்வவர்கட்குவேண்டியவரங்களைத்தந்து ரக்ஷிப்பவர் விநாயகக்கடவுளாதலால், நீயுன்னரமனையைச்சேர்ந்து, அவ்விநாயகமூர்த்தியை இடைவிடாமற் பூசித்து, சுவாமி- எனது தந்தையுந் தாயுஞ் சகலதுன்பங்களும் ஒழியப்பெற்று, விரைவில் இந்நகரத்தைச்சேர வேண்டுமென்று பிரார்த்தனைசெய்துகொண்டு, உனது அரசாட்சியைக்கிரம

மாகச்செலுத்திச், சிரஞ்சீவியாய், மார்க்கண்டனைப்போலத் தீர்க்காயுளு ம், புகழ்- கல்வி- வலி- வெற்றி- நன்மக்கள்- பொன்- நெல்-நல்லூழ்- நு கர்ச்சி- அறிவு- அழகு- பெருமை- இளமை- துணிவு- நோயின்மை-வா ழ்நாள்- என்கின்ற பதினறுபேறுகளையும்பெற்றுச் சுகமாயிருக்கக்கடவை யென்று பலஆசிர்வசனங்களைச்சொல்லிவிடைகொடுத்தனள். பின்னர்ஏம கண்டராசன் தனதுமனதைச் சிறிதுதேற்றிக்கொண்டவனுய், அங்கிருக்கி ன்றஅமைச்சர்முதலியயாவருந்தன்னைப்புடைசூழ்ந்துவரநகரத்தையடை ந்து, சதாகாலமுங் கணபதிபூசையைநடாத்திக்கொண்டுஇராச்சியபரிபால னஞ்செய்துவந்தான். இப்பால்- சோமகாந்தராசனுஞ் சுதன்மையும் அ வ்விடத்தினின்றுநீங்கி வனத்தைநோக்கிச்செல்லுகையில், சுபலன்- ஞா னகெம்பியன்- என்னும்இரண்டுமெந்திரிகளும்பின்துடர்ந்தார்கள். பின்னர் அவர்களையும்அழைத்துக்கொண்டு, நால்வர்களாகவழிநடந்து, வனவாசஞ் செய்து, தேன்-கிழங்கு-காய்-கனி-முதலனவைகளை இரண்டமைச்சர்களு ந்தெரிந்து சேகரித்துக்கொடுக்கத், தாங்களதைவாங்கிப் புசித்துவருங்கா லத்தில், அச்சோமகாந்தராசன் செய்திருக்கின்றதவப்பயனைது நெருங் கிவருவதினுலும், அவன்புத்திரனுகிய ஏமகண்டராசன் இடைவிடாது க ணபதிபூசைசெய்துவருகின்ற மாட்சிமையாலும், தவசிரேஷ்டராகியபிரு குமுனிவராசிரமத்தினருகில்வந்து, நடந்தவிளைப்புநீங்கும்படியாகப், பல சோலைகளி னிழலாற்சூழப்பட்டிருக்கின்ற வொருதடாகக்கரையிற் றங்கி னார்கள். அச்சோலையில்-மயில்களாடுகின்றனவும், குயில்கள்கூவுகின்றன வும், வண்டுகள்பாடுகின்றனவும், நாகணவாய்ப்பக்ஷிகளோடு கிளிகள்பல விசைகளைப்பேசி வாதாடுகின்றனவும், பூங்கொடிகளெல்லாம் பூவையர்க ளைப்போல அசைகின்றனவும், மலர்க்கொத்துகளால் நிறைந்தகிளைகளெ ல்லாஞ் சூரியமண்டலத்தையளாவி நெருங்கியிருக்கின்றனவுமான பலவி சித்திரங்களைக்கண்டு, நமது அரமனையும்இச்சோலைக்குநிகரல்லவென்றுசந் தோஷித்து, அச்சோலையில்வீசுகின்ற தென்றற்காற்றினல் இளைப்பாற்றி ச், சிறிதுநித்திரைசெய்வதாயினுன். சுதன்மையானவள் அவ்வரசனருகி ற்காவலாகவிருந்தனள். இரண்டமைச்சர்களும் புசித்தற்குவேண்டுவனவ ற்றைக்கொண்டு வருவதாகச்சென்றார்கள். அச்சமயத்தில்-- ஒருபாலியன் இராசகுமாரனைப்போல் அழகுவாய்த்தவனுகி, நீர்கொண்டுபோவதற்கு அத்தடாகத்தைநோக்கிவர, சுதன்மையானவள் அவனைப்பார்த்து ஆச் சரியங்கொண்டு, அப்பாகுழந்தாய், சிங்கம்- யானை- புலி- கரடி- முதலா னதுட்டமிருகங்கள் வாசஞ்செய்யத் தக்க இவ்வனத்தில், தேவர்களும் வருவதற்கஞ்சுவார்களே, நீசிறுபிள்ளையாயிருக்கின்றனையே, இவ்வளவுது ணிவோடும் ஒருவர்துணையுமின்றித் தனிமையாகவந்தனையே, நீயார், உன் பெயரென்ன, உன்னையீன்றதாய்தந்தையர்யார், இவ்வனத்திற்குவந்தகார ணம்யாது, அவைகளையெனக்கு முறைமையாகச்சொல்லுவா யெனக்கே ட்டனள். அதற்குஅப்பாலியன்சொல்லுவான், தாயே- யான்முனிசிரேஷ் டருக்குப்பிறந்தவன், எனதுபெயர் சிவனன், என்னையீன்றவள்புலோமை என்தந்தை பிருகுமுனிவர், யான் இங்கு சலங்கொண்டுபோவதற்கு வந் தேன், இதுதானெனதுசரித்திரமென்றுசொல்லி, அம்மா- உன்னுடைய சரித்திரம்யாது, இலக்குமியுங்கண்டுநாணத்தக்க அழகினைவாய்ந்தநீ, இவ்

வாரணியத்தில் இத்தன்மைத்தான பொல்லாப்பிணியாளனேடு வருவத
ற்குக்காரணமென்ன, அதனை எனக்குச்சொல்லவேண்டுமெனக்கேட்டன
ன். உடனே-சுதன்மையானவள் அதற்கிசைந்து, தனதுவிழிகளினின்று நீர்
பெருகிவர மனமுருகித்துக்கித்துத், தாங்களிருந்த நிலைமையையும், இப்
போதிவ்வனத்திற்குவந்திருக்கின்றதன்மையையும், மற்றுந்தமதுள்ளத்தி
லிருக்கின்றதுயரங்கள்யாவையுமொன்றேனும்விடாதுசொன்னாள். அவை
களைக்கேட்டமுனிகுமாரன்மிக்கதுயரமடைந்து, தனதுசிறந்தஷோறிவினு
ற்பலதேறுதல்களைச்சொல்லிச், சலமெடுத்துக்கொண்டுதன்னாசிரமத்தை
ச்சேர்ந்தனன். இப்பால் அம்முனிகுமாரன்நெடுநேரஞ்சென்றுவந்துசே
ர்தலும், அவனை அவன்தந்தையாகியபிருகுமுனிவர்நோக்கி, அப்பா-நீ இ
ன்றுஇவ்வளவுகாலதாமதப்பட்டுவருவதற்குக்காரணமென்ன, அன்றியும்
உன்முகாரவிந்தமானது அன்னியர் துக்கத்திற்கழுங்கிவாட்டமுற்றிருக்கி
ன்றதாதலால், நீ சென்றவிடத்தில் நடந்தகாரியங்களென்ன, அவைகளை
எனக்குவிளங்கச்சொல்லுவாயென்றுகேட்டனர். அதற்குச் சிவனனவ
ன்தனதுதந்தையைப்பணிந்தெழுந்து, அண்ணலே- யான் தடாகநோக்கிச்
செல்லுகையில், அத்தடாகக்கரையில், ஒருமரத்தினிழலில், இரதிதேவியு
ங்கண்டு வணங்கத்தக்க பேரழகுவாய்ந்த ஒருராஜஸ்ரீயானவள், தன்புரு
ஷனேடுங்கூடவிருந்தாள். அவள் என்னைப்பார்த்தஉடன் அருகிலழைத்
து, மிகுந்த அன்போடிருக்கவைத்து, அப்பா- நீ சிறுகுழந்தையாயிருக்
கின்றனையே, உன்னை இக்கொடியகாட்டிற்றனியாய்விட்டவர்கள்யார், உ
ன்பெயரென்ன, நீயிங்குவந்த வரலாறென்னென்றுகேட்டலும், அதற்கு
த்தக்கபடிவிடைகொடுத்துப், பின்னர் அவள் வரலாற்றைக்கேட்டறியலா
யினேன். அக்காரணத்தாற்காலதாமதமாயிற்று. அன்றியும்- அந்தராஜஸ்ரீ
யானவள், தன்னேடிருக்கின்றவன் தன்புருடனென்றும், அவன் சௌரா
ஷ்டிரதேயத்திற்கு அரசனென்றும், அவன் பெயர் சோமகாந்தராஜனெ
ன்றும், அவன் தனது சரீரத்திலிருக்கின்ற தொழுநோயினல் நரகவேத
னையினும்அதிகதுன்பத்தையடைந்திருக்கின்முனென்றும், அந்நோயின்கா
ரணத்தால், அவனும், அவன் மனைவியாகிய சுதன்மை என்கின்றதானும்
அரசாக்ஷிமுதலானவற்றைத் தங்கள்குமாரனுகிய ஏமகண்டராசனுக்கொ
ப்புவித்து இவ்வனத்தில்வந்து வாசஞ்செய்கின்றேமென்றும், தங்களுட
ன் இரண்டமைச்சர்கள் வந்திருக்கின்றனரென்றும், அவ்வமைச்சர்கள் க
னி - கிழங்கு - முதலானவற்றைக்கொணர்ந்து வரச்சென்றிருக்கின்றார்க
ளென்றுஞ்சொல்லி, மனங்கலங்கி, நல்லுணர்ச்சியினைப்போக்கி, விழிக
ளில் நீர்பெருக்கித், தேகமுழுவதும் வியர்த்துத், துக்கசாகரத்தின் மூழ்
கி, ஐயையோ- சட்சுவைபதார்த்தங்களோடுங் கூட்டியுண்பதற்கு மகா
யோக்கியகரமான உணவைப்பாகத்தோடுசெய்துவைத்தாலும், அதிலொ
ருபாகந்தப்பினல், மீட்டும் அதனையுண்ணச்சகியாதவர்க்குக், கனி-கிழங்கு
காய்- முதலானவற்றையுண்ணவு நேரிட்டதேயென்றும், சப்பிரகூடமஞ்
சத்தில், மல்லிகைமுல்லை யிருவாட்சி முதலான மலர்களைப்பரப்பிக், குளி
ர்ந்துபரிமளிக்கின்ற பனிநீரைத்தெளித்த சயனத்திமீது, இளந்தென்றலா
னது கவரிகளைநிகர்த்து மெல்லவீச நித்திரைசெய்கின்றகாலத்திலும், அ
ச்சயனஞ் சரீரத்தையுறுத்துமாயின், நித்திரைகொள்ளாது மற்றொருசய

ணத்திற்பள்ளிகொள்பவர்க்கு, இம்மணற்றரையிற் சயனிக்கவுநேரிட்டதே யென்றும், சந்திரபிம்பத்தினைப்போற் பிரகாசித்துக், குங்குமங் கஸ்தூரி புனுகு சவ்வாது முதலானகலவைச்சேற்றினைப்பூசிக்கொண்டு, பரிமளமி குத்தபுஷ்பமாலைகளைத்தரித்து, இந்திரனுங் கண்டேக்கங்கொள்ளத்தக்க போகங்களையனுபவித்துவந்தஇவ்வுடல்,இப்போது இவ்விதப்பொல்லாப் பெருநோயிற்பொருந்தியழியுமாறு நேரிட்டதேயென்றும்,இதுகாறும் மு னிவர்- அந்தணர்-பெரியோர்-மன்னவர்- சுற்றத்தார்- முதலானவர்களோ டு, நால்வகைச்சேனைகளும் புடைசூழத்தக்கதாய், அளவற்றசெல்வங்களை ஐம்புலாதிகளுக்கும்விருந்தூட்டி இவ்வுலகத்தை அரசாக்ஷிசெய்துவந்து, இக்காலத்தில் அவ்வரசாட்சிமுதலானசெல்வங்களைவிடுத்து,இக்காட்டில் வந்துவாசஞ்செய்யநேரிட்டதேயென்றும், இன்னுமிவ்வாறு அனந்தவித மாகச்சொல்லித்துக்கித்தனள், யானத்துக்கத்தினை யெல்லாங்கேட்டிருந்த படியால்,எனதுமுகமதனுக்கிரங்கிவாட்டங்கொள்ளும்படி நேரிட்டதென் றனன். அதைக்கேட்டபிருகுமுனிவர். மனமிரங்கி, அருள்சுரந்து, புத்திர னே-அவர்களெங்ஙனமிருக்கின்றார்கள், நீபோயிங்ஙன மழைத்துவரக்கட் வையென்றுகட்டளையிட்டனர்.உடனே-சிவனன் அதிகவேகத்துடன் அவர் களிருக்கின்றவிடத்திற்சென்று, அவர்களைக்கண்டு,என் தந்தையுங்களைக்கிரு வையோடும் அழைத்துவருவதாகச்சொன்னாராதலால்,நீங்கள்விரைவிலெ ழுந்துவரக்கடவீர்களென்று, மிகுந்தசந்தோஷத்துடன் கூவிப்பிரயாணப் படுத்தித்,தான்முன்னதாகநடந்தான். அரசன்-சுதன்மை-இரண்டுமந்திரிக ள்-ஆகியநால்வரும் அவன்பின்னதாகநடந்து,அத்தியந்த சந்தோடங்கொ ண்டு,அப்போதேவியாதிநீங்கிவிட்டதாகவெண்ணிப், பிருகுமுனிவருடை ய ஆசிரமத்திற்குவந்துசேர்ந்தார்கள்.அவ்வாசிரமத்தில்,புலியானதுதன்பா லைமான்கன்றுகளுக்கூட்டுவிப்பதும், யானையானது சிங்கத்தின்முதுகிலிரு க்கின்றமயிரைக்கோதிச் சிக்கறுப்பதும், பாம்புகளுக்குமயில்கள் இரைதே டிவந்துகொடுப்பதுமாகச், சகலசீவராசிகளும் ஒன்றுக்கொன்றுபகையில் லாமல்உறவாடிக்கொண்டிருந்தன.அன்றியும்-மழைக்காலமென்று அதிகம ழைபெய்வதும், அஃதில்லாதகாலமென்று பெய்யாமலிருப்பதுமின்றிச், சூரியனெக்காலத்தும்ஒரேவிதமாகக்கிரணம்பரப்புவதுந், தென்றற்காற்று மிதமிஞ்சிவீசாதிருப்பதும், பனி அதிகரிக்காதுசொரிவதும், வசந்தருது- கிரீஷ்மருது- வருஷருது-சரருது- இமந்தருது-சசிருது-என்கின்ற ¶ அ றுவகை இருதுக்களுங் காலவேற்றுமையில்லாமல், எக்காலத்தும் ஒரேதி ட்டமாகவிளங்குவதுமாகவிருத்தலால், சகலமானவிருக்ஷங்களுங், கொடி களும், புற்களும், எக்காலத்துந்தளிர்த்தும், பூத்துங், காய்த்தும்,பழுத்து ம், வருகின்றவளமையையுடைத்தாயிருந்தன. இத்தன்மையவான பெரு மிதங்களை அரசன்முதலிய நால்வருங்கண்டு, மிகவும்ஆச்சரியங்கொண்டு, அளவற்றமுனிபுங்கவர்கள் பிரமதேவனுக்குச் சமானமாகவெண்ணிப் பு டைசூழ்ந்திருக்கப், பிருகு மகாமுனிவர் புலித்தோலாசனத்திலெழுந்தரு

¶ இவையே, இளவேனில்- முதுவேனில்- கார்- கூதிர்- முன்பனி- பின்பனி- என்பதாகச்,சித்திரைமுதல் இரண்டிரண்டுமாதம் ஒவ்வொன் றுகிவரும்.

ளியிருப்பதைநோக்கித்,தத்தம்பெயர்களைச்சொல்லிச்,சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, இருகரங்களையுஞ்சிரமேற்கூப்பி, அனந்தமுறைதுதிசெய்துநின்றார்கள். பிருகுமுனிவர் அவ்வவர்கட்குத்தக்க ஆசீர்வசனங்கள்கூறித்,தமதுகிருபாநோக்கத்தினால் அரசனை அண்ணாந்துபார்த்தனர். உடனே, அவ்வரசன் அளவளாவிய அன்பினோடு மீளவும்பணிந்தெழுந்து, கடலுண்டுவந்து பெய்கின்றமேகம்போலக்கண்களில் நின்றும் ஆனந்த நீர்த்தாரைகளைச்சொரிந்து, சரீரமெங்கும் உரோமாஞ்சிதங்கொண்டு, நெட்டுயிர்த்து, வியர்த்து, வெங்கனற்பட்ட வெண்ணெய்போலுருகி, சுவாமி- அடியேன் பூர்வசன்மத்திற் செய்தனவெல்லாந் தீவினையேயென்றும், அத்தீவினையால் இவ்வுடலில் இத்தன்மைத்தானபொல்லாததுன்பத்தை யனுபவிக்கப்பெற்றேனென்றும், இதுகாறும் யோசித்திருந்தேன், இன்றுயோசிக்குமிடத்தில், அடியேன் செய்தவெல்லா நல்வினையேயென்றும், இந்நோயானது தேவரீருடைய திவ்வியசரணாரவிந்தங்களைச் சேவிக்குமாறு எனது பிடரியைப்பிடித்துத் தள்ளுவதற்கான ஒருமுன்னிலையென்றுந் தெரிந்துகொண்டேன், பின்னுந் - தேவரீருடைய கிருபாதரிசனத்தை இத்தினத்திற் கிடைக்கப்பெற்றேனாதலால், அடியேனுடைய இம்மை - மறுமை - உம்மை - என்னுமுச்சனனங்கட்குஞ் சுத்தபவித்திரமுண்டாயது, அடியேன் செய்த தவங்களெல்லாஞ் சித்தியாய்விட்டன, அடியேனுடைய கல்வியுங்குலமும் அடையத்தக்கபயன்களையடைந்தன, அடியேனை யீன்ற பிதிர்க்களும் நல்லபேற்றினை யடைந்தார்கள், கற்பகவிருட்சத்தை யடைந்தோர்கட்கு என்னகுறையிருக்கின்றது, அதுபோலத், தேவரீருடைய பாதாரவிந்தத்தை அடுத்தவேற்கு இனி யொருகுறையுண்டாகுமோ, இச்சனனத்தில் அடியேன்செய்த பாவங்களொன்றேனுங்காணேன், முற்சனனத்தில் ஏது பாவங்கள் விளைந்திருக்கின்றனவோ அவைகளையறிந்திலேன், மறுசனனத்திற்கும் நற்கதியடையவொட்டாது இவ்வியாதிவந்து எனதுசரீரத்திற் சம்பவித்திருக்கின்றது, இதுநீங்குமாறு அளவிறந்தஔடதங்களைப்புசித்தேன், அளவிறந்த மந்திரங்களையுருட்டித்தேன், அளவிறந்ததானங்களைச்செய்தேன், அளவிறந்ததவங்களைமுடித்தேன், இதுகாறும் இவ்வியாதியென்னைநீங்காமல், நாளுக்குநாள் அதிக உபத்திரவத்தையும் வியசனத்தையும் விர்த்திசெய்துவருகின்றது, இனி இவ்வியாதியானது தேவரீருடையகிருபையினாற்றீரவேண்டுவதேயன்றி, மற்றமணிமந்திர ஔடதாதிகளாற்றீர்வதில்லை, மேலும்-தேவரீருடையஆசிரமத்திற் பலவகைப்பட்டமிருகாதிஜெந்துக்களெல்லாம் ஒன்றுக்கொன்றுபகையின்றிஉறவுகலந்திருத்தலினால்,தேவரீரையடுத்த அடியேனையும் இனியிவ்வியாதி துன்பப்படுத்தாமல் என்னைவிட்டு நீங்குமென்பதற்குச்சந்தேகமில்லை,என்றிவ்வாறு அனந்தமுறைதுதிசெய்துநின்றனன்.

அவையனைத்தையும் பிருகுமுனிவர்கேட்டு, மீட்டும் அவ்வரசனைக்கிருபையோடும்பார்த்துச்,சற்றுநேரந்தியானத்திருந்து, தமதுஞானதிருஷ்டியினால் அவன்அவ்வியாதியையடைந்த காரணத்தைத்தெரிந்துக்கொண்டு, அரசனே-நின்மலஸ்வரூபியாகிய கடவுளனுக்கிரகத்தினால் உனதெண்ணநிறைவேறுகின்றது, இனி உனதுமனத்திலிருக்கின்றவியாகூலத்தையொழித்துவிட்டு, நீமிகவும்வழிநடந்தஇளைப்பால்வாட்டமுற்றிருக்கின்றனையா

ந்தலால், வினாவில்அதனை ஆற்றிக்கொள்ளுகவென்றுதிருவாய்மலர்ந்தனர். அவ்வாக்கினை அவரருகில்நின்ற சீடர்கள்குறிப்பால்அறிந்து, அரசன்முதலாயினோரைஉள்ளேயழைத்துக்கொண்டுசென்று, பலசுகந்தபுஷ்பங்களாலூட்டப்பட்டிருக்கின்றதைலங்களைக்கொண்டுஸ்நானஞ்செய்வித்துக், கைப்பு- தித்திப்பு- புளிப்பு- உவர்ப்பு- துவர்ப்பு- கார்ப்பு- என்னும் அறுவகைச்சுவைகளோடு, உண்டல்- தின்றல்- நக்கல்- பருகல்- என்னு நாலவகை † உண்டிகளையும் ஊட்டுதல்செய்து, அளவற்ற அன்போடும் உபசரித்தார்கள். அதனால் அவ்வரசன்முதலியநால்வரும்இளைப்பாறி, அதிகமகிழ்ச்சியுற்றிருந்தார்கள். இவ்வாறு சனனவாதையினை வேரோடுங்களையவல்ல அப்பிருகுமுனிவருடைய பேரருளைப்பெற்ற அரசனானவன், அன்றிரவெல்லாம் ஆனந்தநித்திரைசெய்து, மறுநாள் உதயகாலத்திலெழுந்திருந்து, நித்தியநியமங்களை நிறைவேற்றி, ஐம்புலன்களையு மொருவழிப்படுத்தித், தவசிரேஷ்டராகிய பிருகுமுனிவ ரருகில்வந்து, சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து, இருகரங்களையுங்குவித்து, அவரது அருணோக்கத்திற்குநேராக ஆனந்தமுறைதுதித்துநின்றனன். அத்தருணத்தில்-விநாயகக்கடவுளுடைய திருவடித்தாமரைகட்கு அன்புசெலுத்துகின்ற அப்பிருகுமுனிவரானவர், அரசனைவருத்திவாட்டுகின்ற நோயினைநீக்கி, அவனையாட்கொள்ளுமாறுலோசித்து, ஓர் சிறந்த ஆசனத்திலிருக்கச்செய்து, அவன்முற்பிறப்பிற்செய்திருக்கின்ற நல்வினை தீவினைகளையெடுத்துணர்த்தவெண்ணமுற்றவராகி, முன்னர் அவன்தீவினைகளை விளம்புவதாயினர். சோமகாந்தராசனே- நீ முற்சனனத்தில், விந்தபர்வதத்தின் சமீபத்தில், கொல்லமென்னும் பட்டணத்தில், சித்துருடனென்னும் வைசியனுக்கும், சுலோசனையென்னும் அவன்மனைவிக்கும் புத்திரனாகச்சனித்துக், காமந்தனென்னும்பெயரைவகித்து, நல்லயவ்வனகாலத்தில் குடும்பினியென்பவளை விவாகஞ்செய்து, ஏழுபிள்ளைகளையும், ஐந்துபெண்களையும்பெற்றுவாழ்ந்திருக்கின்ற நாளையில், உனது தந்தைவிருத்தாப்பியதசையையடைந்து இகலோகவாசனையை யொழித்தனன். உனதுதாயும் உடனே அநுமரணஞ்செய்தனள். அப்பால் உனக்குப் புத்தியுரைக்கத்தக்கவர்களில்லாமல், நீ வேசையர்மையலிவ்விழ்ந்து, அவர்களுக்காகப் பெரியோர்களாற்சேகரித்துவைத்த பொருள்களையெல்லாமழித்தனை. இதுதர்மமல்லவென்று மனைவியானவள் பலவாறுசொல்வதையுங்கேளாமல், ஆபரணங்கள்- வீடுகள்-நிலங்கள்-முதலானவைகளையும் அவர்கட்குவிற்றுக்கொடுத்தனை. பின்னர்கொடுத்தற்குப்பொருளில்லாமற்றரித்திரனாகிச்,சிறிதுநாள் யாசகஞ்செய்து பொருள்சம்பாதித்துக்கொடுத்தனை. சிறிதுநாள் பொய்சாட்சிகோள் அசத்தியமுதலானவைகளைக்கூறி, அவைகட்கேற்றகூலிகளை வாங்கிக்கொடுத்தனை.சிறிதுநாள்சூதாட்டினாலுங்களவாட்டினாலுஞ்சிலபொருள்களைச்சேகரித்துக்கொடுத்தனை.சிறிதுநாள் ஸ்ரீகள்கைகளிலணிகின்ற சூடகங்களையுங், கால்களிலணிகின்றபாடகங்களையுங், காதிலணிகின்றகுழைகண்முதலான ஆபரணங்களையும்வழிபறித்துக்கொடுத்தனை. பின்னும்- பர

† அவை, சோறுமுதலியஉண்டல், கறிமுதலியதின்றல், தேன்முதலியநக்கல், நீர்முதலியபருகல், எனவறிக.

ஸ்திரீகளைப் பலாத்காரமாகப் பிடித்து அவர்கள் கற்பைக் கெடுத்தனை. இத்தன்மையவான அளவற்றபொல்லாங்குகளைச்செய்து, காமாந்தகாரத்திற்சுழன்று,யாவருந் தூர்த்தனென்றுசொல்லத்தக்கவனாகித் திரிகின்ற காரணத்தால், உனதுமனைவியாகியகுடும்பினியென்பவள்,தன்னைப்பாதுகாப்பவ ரொருவருமின்றி, மனந்தளர்ந்து, பசியால்வருந்திப், பலநாள்புசிப்பின்றிப் பட்டினியிருக்கச்சகியாதவளாய்த், தனதுதாய்வீட்டைச்சேர்ந்தனள். பின்னர் நீ அந்நகரிற்றனேயிருந்து,கள்ளுண்டு,களித்தாடித், தலைகால்தெரியாமல் உனதிஷ்டப்படிக்கெல்லாம் அளவற்ற தீங்குகளைநடத்திக்கொண்டுவந்தனை. இந்நடத்தைகளனைத்தையும் அந்நகரத்தரசன் கேள்வியுற்று, உன்னை அந்நகரத்தினின்றுந் துரத்திவிடப்,பின்னர் நீ காட்டிற்சென்று, கள்ளர்களுடன்கூடிக்கொண்டு, அவ்வழியிற்போகின்றவர்களையும் வருகின்றவர்களையுங்கொலைசெய்து, கொள்ளையிட்டு, மிருகங்கள்பட்சிகள்முதலானவைகளைப் படையினாற்கொன்று, பசிதீரத்தின்று, திரிகின்ற காலத்தில், ஒருநாள்—அம்மார்க்கமாகக் கனவர்த்தனென்னுமொருபிராமணன்வர, அவனைநீபார்த்தவுடன் பொருக்கென்றெழுந்து,எதிர்சென்று மறித்துக்கொண்டு, அவன்கைகளைச்சேரப்பிடித்துக் கொல்லவெத்தனித்தனை. அப்பிராமணன் உன்னைக்காண்டலும்,எமதூதனைக்கண்டாற்போல நடுங்கிப்பயந்து, பெருமூச்சுவிட்டு, அப்பா— நான்அந்தணன்,என்னைக்கொல்லலாமா, நான்வைத்திருக்கின்றபொருள்களையெல்லாம் ஒளிக்காமற்றருகின்றேன், என்னைக்கொல்லாமல்மாத்திரம் விட்டுவிடு, முன்பொருகன்னிகையைக் கல்யாணஞ்செய்தேன், அவள்புத்திரப்பேறில்லாமல் இறந்துவிட்டாள், பிதிர்கருமங்கட்குப்பிள்ளைவேண்டுமாதலால், இப்போது இரண்டாவதுகல்யாணஞ்செய்திருக்கின்றேன்,அவ்வனிதையோ, இனனும் புத்திரர்களைப்பெறமாட்டாத பருவத்தினளா யிருக்கின்றனள், அவளுக்கென்னைவிட் ஆதரிக்கத்தக்கவர்கள் ஒருவருமில்லை, நண்பனே—எனதுபிராணனை உனதடைக்கலமாக்கினேன்,யான்தருகின்ற திரவியங்களைவாங்கிக்கொண்டு, என்னைக்கொல்லாமல் உயிர்ப்பிச்சைதந்து விடல்வேண்டுமென்று,மேலும்மேலும்பிரார்த்தித்துக்கொண்டனன். அதற்குநீகொலை— களவு— கள்— காமம்— பொய்— என்கின்றபஞ்சமா பாதகங்களிலே ஒன்றையும்விடாது செய்கின்றவனாதலால், அப்பிராமணன்சொல்லைக் கற்பாறைமீது தாக்கியகோடாலி யெனத்தள்ளிச், சற்றேனுமனதிரங்காமல், உனதிஷ்டத்தின்படிஅவனைக்கொன்றுவிட்டனை.உடனே உன்னைப்பிரமஹத்திபிடித்துக்கொண்டு, அனந்தவுபத்திரவங்களைச்செய்துவர, அதனாலொருநிமிடம் ஒருகமாகக்கழித்துப், பலதுன்பங்களையநுபவித்துவந்தனை. இத்தன்மைத்தான துனபத்தோடு வருந்தியிருக்கின்ற காலத்தில், ஒருபுண்ணியப்பலனுங்கிடைக்கப்பெற்றனை. அப்புண்ணியபலத்தாலல்லவா இச்சனனத்தில் இப்பூவுலகத்தையாள்வதான அரசுரிமையைப் பெற்றனையென்றனர். இவ்வாறு சொல்லிய பிருகுமுனிவரை, மீளவும் அவ்வரசன்பணிந்தெழுந்து, அப்புண்ணியத்தையுந்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டனன். அதற்குப் பிருகுமுனிவரிசைந்து, அரசனே—நீமுன்கூறியவண்ணம் அப்பிரமஹத்திபாவத்தினாற்பலதுன்பங்களையநுபவித்து, வனத்திற் சஞ்சரித்திருக்குங் காலையில்,உன

க்கு நடுக்கம் இரைப்பு கபங் காசமுதலான வியாதிகள்நேர்ந்து, வயதுமுதிர்ந்து,சவரட்சணைசெய்வதற்கான துணைவர்கள் ஒருவருமில்லாமல்,மிக்க துன்பத்தினையனுபவித்திருக்கின்றதருணத்தில், நீ,உன்மனைவியை நினைத்து, அவளிடத்திற்கொரு தூதுவனையனுப்பினை. அத்தூதுவன் அவ்வாறே இராக்கொண்டு சென்று,நீதனியாயிருந்துபடுகின்ற துன்பங்களனைத்தையுஞ்சொல்லினன்.அவற்றைஉன்மனைவிமுதலானமற்றையாவர்களுங் கேட்டுப்பயந்து, இக்காரணம் அரசனறிவானாயின்,நம்மைஎல்லாம்ஒருமிக்க வதைசெய்யத் துணிகுவனென்றுநடுங்கி, அத்தூதுவனைப் பார்த்து, நீ இவ்வார்த்தைகளை யெங்குஞ்வெளிவிடாமல் விரைவிற்செல்லக்கடவை,யென்று பயமுறுத்தியனுப்பினர். அதையத்தூதுவன்வந்துசொல்லக்கேட்டு,இனியாதுசெய்யக்கடவோமென்று துன்பமுற்றிருக்குங்காலையில், நீயதற்கு முற்பிறப்பிற்செய்த நல்வினைப்பயனானது உன்னை நெருங்கிவருங்காரணத்தால்,அவ்வழியிற்செல்லுகின்ற ஒருவேதியன், உனது வரலாறு இன்னதென்றறியாதவனாகி, உன்னைவந்துயாசித்தான். அவ்வேதியனுக்கு நீ ஆடையாபரணமுதலிய திரவியங்களைக்கொடுத்து, மீட்டுமவனைப்பார்த்து, இன்னும்பிராமணரையழைத்துவருவையாயின், அவ்வவர்கட்குவேண்டுமட்டுந் தானஞ்செய்கின்றேனென்றுசொல்லினை. அவ்வந்தணன் அவ்வாறேபலஆசிரமங்களிற்சென்று, ஆங்காங்கிருக்கின்ற பிராமணர்களைக்கூவி, ஆடையாபரணமுதலானதிரவியங்களை ஒருவன்தானஞ்செய்கின்றான், நீங்கள்யாவரும் விரைவில்வாருங்கள் வாருங்களென்று அழைக்க, அவ்வேதியர்கள் நீயென்றறியாது, அப்பிராமணன்வழிகாட்டியபடி உன்னிடத்திற்குவந்தார்கள். நீயவர்களைக்கண்டவுடன, மிகவும்பயபத்தியோடு வணங்கினின்றனையாயினும், அவ்வேதியர்களுன்னைப்பார்த்து, நீ இன்னானென்றறிந்துகொண்டு, மனவருத்தமுற்று நகைத்து, நீபாவியென்றறியாமல் அப்பிராமணன்சொன்ன வார்த்தையைக் கேட்டல்லவோ இங்குவருவதாயினோம், ஐயோ-பாதகங்களனைத்தையும் விடாமற்செய்த மகாபாவியாகியவுன்னை, அடுத்தவர்கள்- கண்டவர்கள்- உன்பெயரைக் கேட்டவர்கள்- உன்பெயரைச்சொன்னவர்கள்- உன்னையாசிப்பவர்கள்-முதலானயாவர்களும், தீவினைக்கட்டிலகப்பட்டுப், பின்புநரகக்குழியிலழுந்தி வருந்துவார்களே,ஆயினும்-உனக்குத்தருமஞ்செய்யக் கருத்திருக்குமாயின், இவ்வனத்தில்,நின்மலமூர்த்தியாகிய விநாயகக்கடவுளாலயமொன்று,அடிமுதல்முடிவரையிற் செடிகண்முதலானவைகளான் மூடப்பட்டுக்கிலமடைந்திருக்கின்றதால்,அவ்வாலயத்தைப்புதுக்கக்கடவையென்றுசொல்லி, அவ்வவர்களாசிரமத்திற்சென்று, உன்னைக்கண்டபாவநீங்குமாறுஸ்நானஞ்செய்து,செபதபங்கள் முதலானவற்றைநடத்திப் பரிசுத்தரானார்கள். பின்னர் உன்னைமனைவி முதலாயினோர் வெறுத்துக்கைவிட்டதையும், அப்பிராமணர்களுன்னைப் பாவியென்றுகழித்ததன்றி,நீ செய்யப்புகுந்ததருமத்தையுமேற்றுக்கொள்ளாமற்சென்றதையும்,உன்னைப் பலதுன்பங்கள்நேர்ந்துவாட்டுவதையும், உனக்குநீயே எண்ணிஎண்ணி,யேக்கமுற்றுச், சகலஆபத்துகளையும்விலக்கி இரட்சிப்பவர் விக்கினகருத்தராதலால்,அக்கடவுளுடையஆலயத்தைக்கட்டுவிப்பதைவிட மேலானதருமம் ஒன்றுமில்லையென்று நிச்சயித்து, அதுவரையிற் பலதுன்மார்க்கவிஷயத்தாற் சேகரித்து

வைத்திருந்தபொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, பழுதுபட்டிருக்கின்றவிநாயகராலயத்திற்குமிகுந்தபத்தியுடன்வந்து, அவ்வாலயத்தில்அநாதியாயெழுந்தருளியிருக்கின்ற கணேசமூர்த்தியைத்தரிசித்து, உனதுமனக்கவலைகளையெல்லாம் வாய்விட்டாற்றி, அனந்தமுறை சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து, ஆனந்தபரவசமுற்று, ஆடிப்பாடிச், சிறந்தகம்மியர்முதலாயினோரைவரவழைத்துச், சொர்னத்தாற்கர்ப்பக்கிரகஞ் செய்வித்து, அதன்முகப்பில்மாணிக்கமுதலியரத்தினங்களையிழைப்பித்து,அர்த்தமண்டபம்-மகாமண்டபம்-மடைப்பள்ளி-யாகசாலை-ஆகாயத்தையளாவத்தக்கதான மதில்முதலானவைகளை, வெள்ளிமுதலியஉலோகங்களாலும்,கருங்கல்-செங்கல்முதலியவைகளாலும், மரங்களினாலும்,தெய்வகம்மியர்களுங்கண்டு நாணத்தக்கதாகச்செய்வித்து, நாற்றிசைகளினு நான்குகோபுரங்களையெழுப்புவித்து, மாடவீதிகளேற்படுத்தி, வீடுகள்உப்பரிகைகள் முதலானவைகளை அணியணியாகக்கட்டுவித்து, ஆலயத்தினாற்றிசையினுநான்குதடாகங்களைத் தொடுவித்துப், பொன்வெள்ளிமுதலானவைகளால் ஆலயததிற்குவேண்டிய பாத்திரங்களைச்செய்வித்து, ஆதிசைவப்பிராமணர்களைக்குடியேற்றி, அவர்களைக்கொண்டுவிநாயகமூர்த்திக்கு அபிஷேகமுதலிய ஆராதனைகளைச்செய்வித்து, நாடகசாலைபுண்டாக்கி, அதிற் சகலவாத்தியங்களையு முழக்குவித்துக், கணிகைமாதர்களை நடிப்பித்து, யாழ்முதலியவைகளை வாசிப்பித்துச், சொர்னத்தாற்செய்து நவரத்தினங்களாலிழைக்கப்பட்டிருக்கின்ற, வாகனங்கள்-கொடைகள்- பல்லக்குகள்- இரதங்கள்- முதலானவைகளை வரவழைத்து, யாவருங்கண்டு அற்புதமற்புதமென்று கொண்டாடத்தக்க திருவிழாக்களு நடப்பித்தனே. இவ்வாறு அளவற்றசிறப்புடன் பூசனைகளுந்திருவிழாக்களும் இடைவிடாது நடாத்திவருகின்றநாளையில், உன்னுடைய வாழ்நாண்முடிவெய்தி இறந்துபோய்விட்டனே. பின்னர் யமதூதுவருன்னைக்கொண்டுபோய்த், தங்களரசனெதிரேவிட்டார்கள். அவ்வரசனாகிய யமதருமராசன் சித்திரகுப்தனைக்கூவி, இவன் இதுகாறுஞ்செய்திருக்கின்ற பாவபுண்ணியங்களை யெல்லாங்கிரமமாகச்சொல்லக் கடவையென்றுஆக்ஞாபிக்க,உடனே அவன் நீசெய்துவந்த துன்மார்க்கங்களையெல்லாந்தினவரலாறாகவெடுத்து, மழைபெய்ததுபோலஒன்றையும் விடாமற்சொல்லிப், பின்னுஞ்சொல்லுவான், ஓதருமபூபதி, இவன்பிறந்தநாடொடங்கி இதுகாறுஞ்செய்துவந்ததெல்லாம் பாவமென்றும், அப்பாவத்தாற் சம்பாதித்த திரவியங்களைக்கொண்டு அந்தியகாலத்தில் விநாயகக்கடவுளுடைய ஆலயத்திருப்பணிசெய்தானென்றுஞ்சொன்னான். இவையனைத்தையும் யமதருமராசன்செவியுற்றுச், சற்றுநேரமாலோசித்துப், பஞ்சுமலைகளில் ஓரழற்பொறி பட்டதுபோல, இவ னிதுகாறுஞ்செய்துவந்த தீவினைகளனைத்தும் விநாயகக்கடவுளுடைய ஆலயத்திருப்பணிசெய்த பேற்றினாலொழிந்துபோயின. ஆயினும்-இவன் பூவுலகின்கண்மீளவும் உற்பவிக்கவேண்டுமென்றுயோசித்து, ஞெரேலென்றுதிரும்பி, உனதுமுகத்தைப் பார்த்துச்சொல்லுவான், நீ அளவிறந்த பாவங்களைச்செய்து, உன்னந்தியகாலத்தில் ஓரற்பமாத்திரமொரு புண்ணியத்தைச்செய்திருக்கின்றாயாதலால், முன்னர் உனக்குப்பாவத்திற்கேற்ற பலனையனுபவிக்கவேண்டுமோ, புண்ணியத்திற்கேற்றபலனை யனுபவிக்

கவேண்டுமாவென்று கேட்டான். அதற்கு நீஇளகிநெஞ்சினல், முன்னர் புண்ணியப்பயனை யனுபவிக்கவேண்டுமென்று சொல்லினை. அவ்வாறே யமதருமராசன் சம்மதித்து, உன்னைப்போகும்படி உத்தரவுசெய்தான். ஆதலால்- நீயிப்பூவுலகத்தில் அரசனாகப்பிறந்து, நல்வினைப்பயனை முன்னரனுபவித்துப், பின்னர் இவ்வியாதியாற் றீவினைப்பயனை யனுபவிக்கின்றனை. இத்தீவினைப்பயனுமொழியுமாறு, நீ அவ்விநாயகக் கடவுளையே போற்றவேண்டுமென்றுசொல்லினர். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே, காமந்தனென்னும் பெயரைப்படைத்ததற் கேற்றபடி, காமாந்தகாரனாகித்திரிந்து, அளவற்றபாதகங்களை நாடோறுஞ்செய்துவந்து, இறச்சுங்காலத்திற்செய்த வொருபுண்ணியத்திற்கு, அப்பாதகங்கள் குறைந்து பின்னிடப்பெற்றனாயின், விநாயகக்கடவுளைச் சதாகாலமுஞ் சிந்திக்குந் தன்மையையுடையவர்கள் எவ்வளவுபேற்றைப் பெறமாட்டார்கள். இப்பால்- இவ்வளவு கருணையோடும் பிருகுமுனிவ ரருளிச்செய்த வுண்மையில், சோமகாந்தராசனுக்கு நிச்சயந்தோற்றாமற்சந்தேகங்கொண்டனன். உடனே அவன்சரீரத்திலிருந்து ஆயிரம்வலியன் பக்ஷிகளுண்டாகி, வச்சிரத்தால் வடித்துவைத்ததற் கொப்பாயிருக்கின்ற மூக்குகளினாற் குஷ்டநோய்கொண்ட சரீரத்தை யெல்லாங்குத்தித், தசைகளை யெல்லாம்பிடுங்கித்தின்றன. அதனல் அரசன்மிகவும்பயந்து, அவ்வுபத்திரவத்தைச் சகிக்கமாட்டாது வருத்தங்கொண்டு, பிருகுமுனிவருடையபாதத்தில் அடியற்றமரம்போல வீழ்ந்து, ஓமேலானதவசிரேஷ்டரே. அபயமபயம். தேவரீர் திருவடிகளையடைந்தேன், அபயமபயம். அடியேற்குத் தேவரீரையன்றி வேறுகதியில்லை, அபயமபயம். தேவரீரென்னைக்கைவிட்டாலும் உமது திருவடிகளைவிட்டுநீங்கேன், அபயமபயம். ஓமஹாதவக்குன்றமே, ஓருவிர்ந்தகிருபாசமுத்திரமே, ஓதயாநிதியே, ஓஞானசூரியரே, ஓபுண்ணியமூர்த்தியே, தேவரீரைத்தியானஞ் செய்கின்றபேர்கள் எவ்வளவுதூரத்திலிருக்கினும் அவர்களை யமனுமணுகமாட்டானே, அத்தன்மைத்தான தேவரீர் திவ்வியசமூகத்திற்கு எதிராகநிற்குமென்னை இவ்வலியன் கூட்டங்கள் சின்னபின்னப்படுத்துவதைப் பார்க்கவில்லையோ, தேவரீருடைய ஆசிரமத்தில் எக்காலமும் பறவைகளுமிருகங்களும் பகையில்லாமல்உறவுபெற்று விளையாடுகின்றனவே, தேவரீருடைய திருவடிகளைச்சேர்ந்திருக்கின்ற அடியேன்மாத்திரம் இத்துன்பத்தையடைந்திருப்பது நீதிதானோ, மகமேருவைச்சார்ந்த காகமும் பொன்னிறமாகின்றதே, அடியேன்படுகிறதுன்பத்தை நீக்கியாட்கொள்ளாதிருப்பதுந் தேவரீருடையகிருபைக்குத்தக்கதா, என்றிவ்வாறு அனந்தமுறை ஓலமிட, அவ்வரசன்தேவியாகிய சுதன்மையானவள் திடுக்கிட்டுப், பிருகுமுனிவரைச் சாஷ்டாங்கமாகப்பணிந்து, திரேகமாத்தியந்தமும் நடுக்குற்று, விழிகளினின்று நீர்த்தாரைகளைச்சொரிந்து, இரண்டுகரங்களையுமேந்தி, எங்கள் மனோரதங்களை யீடேற்றவெழுந்தருளிய ஓதயாநிதியே, அடியாட்கு மாங்கல்யபிச்சை தந்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தனள். இரண்டமைச்சர்களுங் கீழேவிழுந்துநமஸ்கரித்து, எமக்கு அன்னையும்பிதாவுமா யெழுந்தருளிய கருணாநந்தமூர்த்தியே, அரசனைவலியன் பக்ஷிகளெல்லாங்கூடி வதைக்கின்றனவே, அவைகளை விலக்கி யாட்கொள்ள வேண்டாவோவென்று அரற்றினார்கள். அருகிலிருக்கி

ன்ற மற்ற முனிவர்களும்பயந்து, ஆ அ சுவாமி, இதென்னபாவம்- இப்பட்சிகள்செய்யுங்கொடுமையைப்பார்க்கஇரண்டு கண்ணுங்கூசுகின்றதேஎன்றுமிகுந்த இரக்கத்தோடுந்துயருற்றுச்சொன்னார்கள். இவ்வாறுயாவரும்வருந்தி முறையிடப், பிருகுமுனிவர் சோமகாந்தராசனைப்பார்த்து, அரசனே- யாம்சொன்னவார்த்தைகளை உண்மையென்று நம்பாமற் போயினையாதலால், உனக்கு இத்தன்மைத்தானதுன்பங்கள் நேர்ந்தன, இனியாயினும் யாம்கூறியவார்த்தைகளிற் சந்தேகமுறாமல் நம்பக்கடவாய், அதனால் நீயும் புனிதனாகலாமென்று மிகுந்த அன்புடன் அருளிச்செய்து, வலியன்பக்ஷிகளை நோக்கிஒருஉங்காரஞ்செய்தனர். அவ்வோசையக்கேட்டலும், பக்ஷிகளெல்லாம் ஆகாயத்திற்பறந்துபோய்விட்டன. பின்னர் அரசனவன் பிருகுமுனிவரருளிச்செய்த தனதுபூர்வவினைகளையெல்லாம் உண்மையென்றுநம்பிஆனந்தங்கொண்டனன். சுதன்மைமுதலியயாவருந்தங்கள்தங்கள் துயரநீங்கிச் சந்தொஷமானார்கள். இப்பால் பிருகுமுனிவர் தமதுகமண்டலத்திற் சலத்தைநிரப்பி, விநாயகக்கடவுளை மனதிற்றியானித்து, இவ்வரசன்படுகின்ற வியாதியை விலக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்து, அவரதுமந்திரத்தைநூற்றெட்டுருசெபித்து, அக்கமண்டலசலத்தைக் கரத்தில்வார்த்துக்கொண்டு அரசன்சரீரத்திற்றூவினார். உடனேஅவ்வரசன்செய்த பூர்வசன்மபாதகங்களெல்லாம் ஒன்றாகச்சேர்ந்து வோருருவங்கொண்டுநின்றதுபோலச், சிவந்துதிரண்டுநீண்டிருக்கின்றகால்களும், நீண்டுநெருங்கிப்பரந்திருக்கின்ற மயிர்ச்சடைகளும், மேலெழும்பிவளைந்திருக்கின்றகோரைப்பற்களும், நீண்டபாதங்களும், குழிபட்டிருக்கின்றவிழிகளும், இருளைப்போன்றகறுத்தநிறமும், அகன்றவயிறும், ஏழுபனைமரங்கொண்ட உயரமும், அவ்வுயர்வுக்குத்தகக பருமனுமாக, ஒருபூதமானது அவன்சரீரத்தினின்றும் வெளிக்கொண்டு, நெறநெறென்று பற்களைக்கடித்துக் கண்கள் புருவத்தின்மேலேறநெறித்து, விழிகளிலிருந்து தீப்பொறிகளெழும்பிச் சிந்தத்தக்கதாகப் பார்த்து, தோள்களைத்தட்டிக்கொண்டு, இடிமுழக்கபோலக்குரலெடுத்துக்கூவி, அரசனே- முன்னாளையில் உன்னுடையஆயுதவல்லபங்களைக்காட்டினையே, அவ்வல்லபங்களை யிப்போதுபார்ப்போம் காட்டுவையென்று, அதிகவுக்கிரத்தோடுவாய்விட்டுத்தருக்கி யெதிர்த்துநின்றது. இவ்வாறு அப்பூதம் அரசனைத்தொடர்ந்து யெதிர்த்து நிற்பதைப் பிருகுமுனிவர்கண்டு, உங்காரஞ்செய்துபயமுறுத்தி, அரசனருகிற்செல்லவொட்டாமற்றடுத்துக்கைமர்த்தி, ஓபாரிடமே- நீயார், உன்வரலாறென்னவென்றுகேட்டனர். அதற்கதுசொல்லுவதாவது; சுவாமி- நான் இவ்வரசனைப்பிடித்திருக்கின்றபிரமஹத்தி, தேவரீர்கரங்கொண்டுதூவியசலத்தினாலே யான் அவனைவிட்டு வெளிப்பட்டுவந்தேன், எனக்குமிகப்பசியாயிருக்கின்றது, தேவரீர் கிருபையுண்டாயின், இன்னிமிடத்தில் அவ்வரசனையும் அவன்மனைவியையும் இரண்டமைச்சர்களையுந்தின்று செல்கின்றேனென்று சொல்லி, உத்தரவுதரும்படியாகப் பிரார்த்தித்துக் கொண்டது. அதற்குப் பிருகுமுனிவர்வியந்து, வலிமையிற்சிறந்தகிருத்திமமே- நீ அவசரப்படவேண்டாம், உனக்குஞ்சுகமுண்டாகுங் காரியமேசெய்கின்றோம், அதுகாறும் அம்மரத்தின் பொந்தினுட்புகுந்திருக்கக் கடவையென்று, தம்மெதிரிலோங்கித் தழைத்திருக்கின்ற ஓர் மாமரத்தைக்கரத்தாற்சுட்டினார். அவ்வாறே

அப்பூதமானது பொந்தினுள் நுழைந்துபுகுதலும், அப்பூதமும்மாமரமும் ஒன்றாகவெறிந்துசாம்பராயின. பின்னர் அப்பூதசரீரத்தினுள்ளிருந்தஆன்மா வானது மகாதிவ்யசரீரத்தோடும் ஒருதெய்வரூபமாகிப், பிருகுமுனிவருடைய சரணாரவிந்தங்களில் நமஸ்காரம்புரிந்து, ஓ கிருபாமூர்த்தியே- இப் யாவிமுற்காலத்தில் என்னை ஆயுதத்தால் மாய்த்துவிட்டான், அந்தத்துற் மரணத்தினால் ஓய்வில்லாமல் மிக்க துயரத்தைப்பெற்றிருந்தவெனக்குத், தேவரீர் தரிசனவிசேடத்தால் நற்கதிகிடைத்ததென்று சொல்லிக்கொண்டிருக்கையில், விநாயகமூர்த்தியினுடைய கட்டளையினால் ஆகாயத்தினின்றும் ஒரு தெய்வவிமானமிரங்க, உடனே-அவ்விமானத்தில் தெய்வசரீரம் பெற்றிருக்கின்ற அப்புருடனனவனேறிக்கொண்டு, ஆகாயமார்க்கமாகப் போய்விட்டான். அவ்வற்புதங்களைப் பார்த்தவர்களெல்லாம் ஆனந்தபரவசராகித், தீவினைகளையெல்லாங்கடியவல்ல பிருகுமுனிவருடைய திருவடிகளைப் பலமுறைபணிந்து துதித்திருந்தார்கள். இப்பால் பிருகுமுனிவர் சோமகாந்தராசனைப்பார்த்து, இதுகாறும் உன்னைத்தொடர்ந்திருந்த பிரமஹத்தி விலகிப்போனதைக்கண்டனை, இனி உனதுசரீரத்தைத்தொடர்ந்திருக்கின்ற தொழுநோய்நீங்குவதற்கானதிறத்தையுஞ் சொல்லுவோங் கேட்கக்கடவாயென்று திருவாய்மலர்ந்தருளுவதாயினர். அரசனே-மூன்றுநேத்திரங்களுள்ள வேழமுகப்பெருமானாகியும், என்னை முழுமையும் ஆட்கொள்ளத்தக்க இறைவனாகியுமிருக்கின்ற விநாயகக்கடவுளுடைய புராணத்தைக்கேட்பையாயின், சகலதுன்பங்களும் உன்னைவிட்டொழியும். அன்றியும்- யானப்புராணத்தைக் கேட்டிருக்கின்ற மகிமையினால், என்னையடுத்த உன்னுடையதீவினையும் விலகிப்போயது. இனி அவ்விநாயகபுராணத்தைக் கேட்டாலன்றி, இத்தொழுநோய் உன்னைவிட்டுநீங்காது. அவ்வியாதிக்கு அதைவிடமேலாகிய ஔடதமொன்றுமில்லை. மகாமகத்துவமுள்ளஇப்புராணத்தை,முற்காலத்தில் பிரமதேவன் சிவபெருமானாலுபதேசிக்கப்பெற்றுவேதவியாசமுனிவருக்கருளிச்செய்தனன். அவ்வேதவியாசர் நமக்குபதேசித்திருக்கின்றார். மேலும்-பூர்வத்திற்கைலாசபதியாகியசிவபிரானைநீக்கித் தக்கன்யாகஞ்செய்தபோது, அப்பரமசிவத்தினுடைய கோபாக்கினியினின்றுந் தோன்றியவீரபத்திரமூர்த்தியினால் அவன்யாகமழிவுற்றுச் சகலதுன்பங்களையுமடைந்தனன்.பின்னர் அவைநீங்குமாறு, அத்தக்கன்முக்கலமுனிவரையடைந்து,அவர்திருவடிகளைப்பணிந்துபத்திசெய்துவந்தனன். அதனால் அம்முக்கலமுனிவருக்குமனதிரங்கி விநாயகருடையமகத்துவங்களையுபதேசித்தனர். அவைகளை அத்தக்கன்மிக்கபத்தியுடனேகேட்டுவந்தபலத்தினாலே, சகலதுன்பங்களுநீங்கிச்,சந்திரசடாதரக்கடவுளாகிய சிவபெருமான் கிருபைக்குப்பாத்திரனாகி, அதிகமகிழ்ச்சியையடைந்திருந்தான்.ஏழுபிறவிகள்தோறுஞ்செய்துவந்தபாவங்களையெல்லாம்ஏககாலத்திலொழிப்பதும், சரீரத்திலுண்டான வியாதிகளைப்போக்கிவேண்டியவரங்களையளிப்பதும்,நாளுக்குநாள் நூதனமானஉயர்ந்த சுகங்களைத்தருவதும்,இம்மையிற்றவங்கள் முதலியவைகளைச்செய்யும்படிகூட்டுவித்து,மறுமையில்முத்தியைக்கொடுத்துரட்சிப்பதும்,அவ்விநாயகமகத்துவத்தின்கேள்வியேயன்றி,அதனின்மிக்கது வெறொன்றுமில்லை. அந்தணர்- அரசர்- வைசியர்- சூத்திரர்- என்னுநால்வகை வருணங்

சட்குக்கூறியிருக்கின்ற ¶ ஒழுககங்களிற்குழ்வில்லாதவர்களாகியும், பிரமசாரி- இல்வாழ்வோன்- வானப்பிரத்தன்- சந்நியாசி-என்னுநால்வகையாச்சிரமங்கட் கோதியிருக்கின்ற † நன்னிலைகளிற்றவறுதவர்களாகியும் உள்ளசான்றோர்களே, அவ்விநாயகமகத்துவத்தைப்பத்தியோடுகேட்பார்களன்றி, மற்றையர்கள்கேட்கமாட்டார்கள். தங்கள்பிறப்பினும்வருணத்தினுஞ் சாங்கிரராயிருக்கின்றவர்கள் என்ன வொழுக்கத்திலிருந்தாலும், அவர்கள்தாழ்ந்தவர்களேயன்றி உயர்ந்தவராகார்கள். ஆதலால்- அநேகதவங்களைச்செய்து, உயர்ந்தவருணத்திலு நல்ல ஆசிரமத்திலுமிருந்து, அவ்வவர்களுடைய தருமங்களிற் குறைவின்றிநடந்து, விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளைமிகுந்த அன்போடுதுதிசெய்யத்தக்கபேர்களுக்கே, அம்மான்மியத்தையுபதேசிக்கவேண்டுவதல்லது, மற்றையோர்க்கு உபதேசிக்கத்தக்கதன்று. நீசகலவிதத்தினும் யோக்கியனானதால், அதனை உனக்குபதேசிக்கின்றேம். நீஸ்நானஞ்செய்துவரக்கடவையென்று ஆஞ்ஞாபித்தனர். இவையனைத்தையுஞ் சோமகாந்தராசன்செவிக்கமுதமாகக்கேட்டு, ஆனந்தபரவசங்கொண்டு, உடனே பிருகுதீர்த்தத்தையடைந்து, அதைமும்முறைவலம்வந்துநமஸ்கரித்து, பின்னர் ஸ்நானஞ்செய்து, நித்தியநியமாதிகளைக்கிரமப்படிமுடித்து, விநாயகமகத்துவங்கேட்பதற்குச் சங்கற்பமோதினன். அந்நிமிடத்தில், அவ்வரசன்சரீரத்திலிருந்ததொழுநோய்மாய்ந்துவிட்டது. இவ்வாறுவியாதிமாய்ந்துபோகவும், அரசன்தனதுசரீரத்தைப்பலமுறைபார்த்துப்பார்த்துஆனந்தித்து, இரவெல்லாந்தீயசொப்பனங்கண்டவனுக்கு விழித்தபின்பு எவ்வளவு மகிழ்ச்சியுண்டாகுமோ அவ்வளவு மகிழ்ச்சியையடைந்து, பிருகு முனிவரிடத்தில்வந்து, அவரைச்சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, சுவாமி- தேவரீர் கிருபை அடியேற்குக்கிடைத்ததினலே, அடைதற்கரிய பயன்களெல்லாம் எளிதிலடையப்பெற்றேன். அன்றியும்- சுவாமிகளிடத்திற் புராணங்கேட்பதற்குச் சங்கற்பமோதியமாத்திரத்தில், அடியேனை வருத்தியிருந்த வியாதியொழிந்துபோய்வி

¶ அந்தணரொழுக்கமாவது, ஓதல்- ஓதுவித்தல்- வேட்டல்- வேட்பித்தல்- ஈதல்- ஏற்றல்- எனவாறும். அரசரொழுக்கமாவது, ஓதல் - வேட்டல்- ஈதல்- உலகோம்பல்- படைபயிற்றல்- பொருதல் - எனவாறும். வைசியரொழுக்கமாவது, ஓதல்- வேட்டல்- பொருளீட்டல்- ஈதல்- பசுக்காத்தல்- ஏருழல்-எனவாறும். சூத்திரரொழுக்கமாவது, முதன்மூவர்க்கேவல்செய்தல்- பொருளீட்டல்- உழுதல்- பசுக்காத்தல்- குயிலுவத்தொழில்செய்தல்-காருகவினைகளாக்கல்-எனவாறும். இவற்றுள் குயிலுவத்தொழில்களாவன, தோற்கருவிகளைக் கொட்டலும்- துளைக்கருவிகளையூதலுமாம். காருகவினைகளாவன, பட்டுநூலையும் பருத்திநூலையுங்கொண்டு ஆடையாக்கலும்- சுமத்தலும்- உழத்தலுமாம்.

† பிரமசாரிநிலையாவது, ஆசிரியரிடத்தோதி- விரதங்காத்து-விவாகமின்றியிருத்தல். இல்வாழ்வோன் நிலையாவது, இல்லறத்தின்வழாது இல்லாளொடுங்கூடிவாழ்தல். வானப்பிரத்த நிலையாவது, இல்லந்துறந்து இல்லாளொடாயினுந்தனித்தாயினும் வனத்திற்றவஞ்செய்தல். சந்நியாசி நிலையாவது, முற்றத்துறத்தல்.

ட்டது. இவ்வற்புதத்தினை யான் என்னென்றுசொல்லமாட்டுவேன். ஸ்ரீ ருபாமூர்த்தியே- தேவரீரையடுத்தவர்கட்குக் கிடைக்காதபொருள் சொர்க்கமத்தியபாதலமென்கின்ற மூவுலகங்களினுமில்லை.ஊரற்று,உறவற்று,மகனற்று, மனையற்று, நாட்டற்று,நகரற்று,அழகானதேகமற்று,அருமையான போகமற்று,தடாகக்கரையிற்றுன்புற்றிருந்த எளியேனை,இங்ஙனம்வருவதாகக்கிருபைசெய்து, மகாஅற்புதமானசுகத்தைக்கொடுத்தருளியதேவரீர்க்கு, யானுதவத்தக்கபொருள் என்னுயிரேயன்றி வேறொன்றுமில்லை.இனிசுவாமிகள் அருள்சுரந்து, விநாயகபுராணத்தைத் திருவாய்மலரவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதனை அன்னைக்கொப்பாகிய பிருகுமுனிவர்கேட்டு மனமிரங்கி, அவனை அருகிலழைத்துத், தமது தாமரைமலர் போன்ற திருக்கரத்தினால் அவனுடையசரீரத்தைத்தடவித், தமதுசிறந்த ஆசனத்திலொன்றை அவனுக்குக்கொடுத்து, அதில் வீற்றிருக்கச்செய்தனர். பின்னர் அப்பிருகுமுனிவருடைய திருக்கரத்தாற்சரீரத்தைத்தடவிய மகத்துவத்தினாலும், அவராதனத்திலிருந்தமாட்சிமையினாலும், அவ்வரசன்சரீரமானது முன்னிருந்தகாந்தியினுமிகுந்தகாந்தியையுடைத்தாயது அவ்வற்புதத்தைக்கண்டவர்களெல்லாம் அதிகஆச்சரியம்அடைந்தார்கள். துக்கசாகரத்தின்மூழ்கியிருந்த சுதன்மையும் அமைச்சர்களுந் தேவாமிர்தம் புசித்தவர்கட்கொப்பாக ஆனந்தித்தார்கள்.

வேதவியாசர்பிரமதேவனையடுத்தது.

ஓ சவுனகாதி முனிவர்களே, இப்பால் பிருகுமகாமுனிவர் கிருபைகூர்ந்து,அரசனே- முன்னொருகாலத்தில், சொர்க்கமத்திய பாதலங்களில் அமர்ந்தபிராணிகள் செய்தபிராரத்துவ கன்மசம்பந்தத்தினால், அளவுபடாத வேதங்களனைத்தும் ஆதியந்த பதக்கிரமங்கள் தடுமாறிச்சிந்தின. அக்காரணத்தினால், விண்ணவர்தவத்தர் மானிடர்முதலாயினோர்க்கு அறிவுவிளங்காமல், வேதவாய்மைகளின்மாறிப், பலதுஷ்கிருத்தியங்களை அனுசரித்து, அதற்கடுத்த சிலமோகன சாத்திரங்களையுண்டாக்கிக்கொண்டு, பூவுலகத்தின்கண் முக்கியமாகவழங்கிவருகின்ற தருமங்களனைத்துங்கொடியபாசபந்தவினையென்றுநீக்கிப், பாதகங்களுக்கேதுவாகிய மார்க்கங்களைக் கடைப்பிடியாக வெண்ணிச்,சகலருமவைகளைத்தொடர்ந்து செய்துவந்தனர். அதைவிண்டுவும் பிரமனுங்கண்டு, பரம்சிவகடாக்ஷமில்லாது இந்த மாறுபாடுநீங்காதென்றுநிச்சயித்து, இந்திரன்முதலானதேவர்களுடன் திருக்கைலையைச்சேர்ந்து, முதல்வாயிலிற்றமதாணையைச்செலுத்திக் கணங்கள்போற்றவீற்றிருக்கின்றநந்திதேவரைப்பணிந்து,எங்கள்வரவைச்சிவபிரானுக்கறிவிக்க வேண்டுமெனப்போற்றினர்,அதற்கவர்கிருபையுற்று,அவர்களையவ்விடத்தில் நிறுத்திக், கர்த்தன் சந்நிதானத்திற்சென்று வணங்கிச், கேசவன் முதலாயினோர்வரவைவிண்ணப்பஞ்செய்து,அநுமதிபெற்றுவந்து,நீங்கள்சபைக்குவருவதாகப் பரமசிவங்கட்டளையிட்டதென்றனர்.அவ்வாக்கியத்தைஅவர்கள்அமுதமாகக்கேட்டு, ஆனந்தபரவசராய்ச்,சிவகணங்கள் காவல்கொண்டிருக்கும்பலவாயில்களைக்கடந்து, திரிநேத்திரதாரியாகிய சிவபெருமானைத்தரிசித்தவுடன், விழிகளில் ஆனந்தவாரிபெருகத், தி

ருவடிகளிற்கற்பகமலரைச்சொரிந்து, தீர்க்கதெண்டன்சமர்ப்பித்துப், பல
முறைபோற்றிக்,கரங்களைக்கூப்பிக், கர்த்தன்கிருபாநோக்கத்தைப்பெற்று,
கட்டளையிட்டவாறே தத்தமக்குரியவிடங்களிலிருந்தனர். பின்பு சிவபிரா
னவர்களைநோக்கி, உங்கள் செய்கைகள் குறைவற நடந்துவருகின்றனவா
வென்றுவினவக், கேசவன்வந்தித்துத், தேவரீர்திருவுளப்படிக்கு அடியே
ங்கள் விருத்திகள் சிதைவின்றிமுற்றுகின்றன வாயினும், பூமியின்கணிரா
நின்ற தபோதனர்முதலாயினோர்,சிலமோகனசாத்திரங்களிற்பட்டுத்,தேவ
ரீரைப்பரமெனநினையாது, தமதுகட்டளையின்படி நடாத்திவருகின்ற என்
னையும் பிரமனையுஞ் சிலர் கர்த்தவ்வியமாகக்கருதித்தொழுகின்றனர்.சிலர்
மற்றதேவர்களுடன் தேவரீரைச்சமமாகத் துணிவுற்றிருக்கின்றனர். கால
கருமங்களைக்கடந்த ஆதிமூர்த்தியுமுண்டோவெனச்சிலரவமதிக்கின்றனர்.
கடவுள்வேறில்லை, நாங்கற்றசாத்திரவுணர்ச்சியே நித்திமெனச் சிலர்பாவி
க்கின்றனர். சிலராகமவிதிப்படி விபூதிஉருத்திராக்கங்களணிவதைமறந்து,
தங்களுக்கிஷ்டமானகுறிகளைத்தரிக்கின்றனர். சிலர்- உண்ணல்-உடுத்தல்-
புணர்தல்- களித்தலென்னும் இவைகளன்றி, வேறொருமுத்தியிருக்கின்ற
தென்பது அஞ்ஞானமெனவு நினைக்கின்றனர். இவ்வாறுபறபலவிதங்களி
ற்சகலருமுயன்று, பிறவிச்சாகரத்தைக்கடக்குமுண்மையினையறியாதுஉழ
ன்று, வேதாகமவரம்பைக்கடந்து, பவநெறிகளைமுக்கியமாகத்தொடர்ந்து,
தீவினைகளிற்படர்ந்துஅலைந்துமயங்குகின்றார்கள்.இவைகளனைத்துந்தேவ
ரீர் திருவுளத்திற்கு விளங்கியிருப்பனவாயினும், அடியேங்கள் அறிந்தவ
ற்றை விண்ணப்பஞ்செய்தனம். இதனைத்திருவுளத்திற்கொண்டு, எங்களு
க்காக இரக்கமுற்றுச், சீவராசிகள் மையலைநீக்கி, முமுட்சுக்களாய்த்தேவ
ரீர்பாதகமலங்களைக் கருதிமோட்சவீட்டினைச்சேருவதாகக் கிருபைசெய்
யவேண்டுமென்றிரந்தனர். அவைகளனைத்தையும் எமதுகர்த்தன் செவிம
டுத்து,விண்டுவே-உனதுகலைகளில் ஒன்றைக்கொண்டு, பூமியின்கணவதரி
த்துக், கிலப்பட்டிறைந்திருக்கின்ற வேதங்களைச்சேகரித்து, அவைகளை
நான்குவகைப்படுத்திக், தகுதியான இருடியர்களுக்கு அவைகளைப்போ
தித்து, அவ்விருடியர்களால் ஆன்மகோடிகளது சிற்றுணர்வைமாற்றிப் பு
னிதராக்கக்கடவை. அன்றியும்- அவைகளை யோதப்பெறாத சூத்திராதியர்
கள் எளிதில் முத்திபெறத்தக்கதாக, வேதங்கட்கு முந்திவிதிக்கப்பட்ட
தாய், ஆகமமென்று ஒருசாத்திரமிருக்கின்றது. அஃது நமதுபெருமைக
ளையேமுக்கியமாகவிளக்கும். மேலும்-வாசித்தவர்களைப் பவித்திரமாக்கவ
ல்ல பதினெண்புராணங்களுள். அவைகளை நந்திக்கருளி யிருக்கின்றன
ம். அவன் சனற்குமாரனுக்கு வரன் முறையாகப் போதித்திருக்கின்றான்.
அவனிடத்து அப்புராணங்களையுணர்ந்து, சகலருக்கும் ஓதி அறிவுவிளங்
கச்செய்யக்கடவையென்று அநுக்கிரகஞ்செய்ய, அதற்கிசைந்தவிண்டுவா
னவர்,பிரமன் முதலானவர்களுடன்கர்த்தனைவணங்கி விடைபெற்று, வை
குந்தத்திற் சென்று, சகலருககும் விடைகொடுத்தனுப்பிச், சிலகாலஞ்
சென்ற பின்பு, பூமியின்கண் தபோமகிமையையுடைய பராசமுனிவர்,
ஒருதினம் பிராதக்காலையிற் கங்கையைக்கடக்க ஓடமேறினவராய், அ
தைச் செலுத்து மச்சகந்தியினது சுந்தரத்தைக்கண்டு மோகித்து, அவ
ளைச்சம்மதப்படுத்தி யோசனைகந்தியாக்கிப்புணர, அக்காலத்தில் அவர்

அவள் கருப்பத்திற் பிரவேசித்துக், கண்ட கமண்டலத்துடன் அவதரித்
து, அவர்களிடத்திற் செலவுபெற்றுப்போய், வதரிகாச்சிரமமென்னும்வ
னம்வாசயோக்கியமென்றெண்ணி அவ்விடத்தமர்ந்தார். அக்காரணத்தி
னல் வாதராயணரென்னுந்திருநாமம்பெற்றுப், பரமசிவகடாக்ஷத்தினல்
வேதாகமங்களையொருவரிடத்தோதாதுணர்ந்து, அவ்வேதத்தை நான்கு
வகைப்படுத்தினர். அச்செய்கையினல் வேதவியாசரென்னு நாமமும்பெ
ற்றுச்,சனற்குமாரரிடத்திற்பதினெண்புராணங்களைவாசித்துணர்ந்து,பின்
னர்வேதசாஸ்த்ரங்கள் ஸ்மிருதியைப்போலப்பொருள் படத்தக்கதாய்வி
ளக்கியிருக்கின்ற அப்புராணங்களைச்,சுலோகமாகச்சொல்லுவதற்குஆரம்
பித்தனர். அப்போது-முன்னர்சிவபெருமான் சகலதேவர்களும் புடைசூ
ழ்ந்துவரத்திரிபுரசங்காரஞ்செய்யப் பிரயாணமானகாலத்தில, அவர்தம
மைப்பூசியாது பிரயாணங்கொண்டதனல்அவரதுதேரையுறிந்துபோகு
ம்படிசெய்தவிநாயகமூர்த்தியையினைக்காமலும், யாவரும்வழிபடத்தக்கக
டவுளவரோயென்றும்,ஒருவர்தம்மைக்கருதியெடுத்துச்செய்கின்றகாரியங்
களைவிக்கினமின்றி நிறைவேறுவிக்குந் தெய்வமவரோவென்றும்- அழிவி
னுங்கழிவுசெய்யுங்கர்த்தர் யானைமுகத்தையுடைய விக்கினேஸ்வரரோவெ
ன்றும், எள்ளளவுந்தம்மனதிற்றெளியாமலும் ஆரம்பித்தார். அக்காரண
த்தால், அவருக்தேசித்தகாரியத்திற்கு அவ்விக்கினகர்த்தருடையகிருபை
யில்லாமல, எண்ணியபொருள்களொன்றுந்தோன்றமல், நடக்கவேண்டி
வது இன்னதென்றுதெரியாமல், ஊமைக்கொப்பாகிமயங்கி, நமக்குச்சோ
பமுண்டாயதோ, பித்தமுயர்ந்ததோ, அல்லது மற்றெதுலாயினு மயக்
கம்வந்துசேர்ந்ததோவென்றுவகைபிரியாமல்,சத்தியலோகத்திற்சென்று,
பிரமதேவனைச்சாஷ்டாங்கமாகவணங்கிப், பலமுறைவந்தித்து நின்றனர்.
பிரமன் அவ்வேதவியாசருக்கு ஓராதனந்தந்து, நீரிங்குவந்தகாரியமென்
னென்றுவினவ, சுவாமி- பிரபஞ்சத்தின்கண் சிலர் கடவுளில்லையென்று
சொல்லுகின்ற நாஸ்திகராகியும், சிலர் வேதங்களைப்பழிக்கின்றவர்களாகி
யுமிருந்து, அவ்வவர்கட்குரிய வருணாச்சிரம தருமங்களைத்தள்ளி நிலைகு
லைந்திருப்பதினலே, அவைகளையொழித்துச்சீர்திருத்தவேண்டியது இன்
னபொருளாலென்று யோசித்து, அவ்வர்செய்யுங் காரியங்களில் இது
செய்யத்தக்கதென்றும் இது செய்யத்தகாததென்றும் அறிந்து நடந்து
கொண்டு, முத்தியினையடையுமாறு, உண்மையாய்விளங்கியிருக்கின்ற பு
ராணங்களை, உள்ளங்கைநெல்லிக்கனிபோல யாவர்க்குந்தெளிவாய்த்தெ
ரியும்வண்ணஞ் சொல்லவேண்டுமென்று ஆரம்பித்தேன். நித்தியவிதி-
நைமித்தியவிதி- யாகவிதி- திருக்கல்யாணவிதி- முதலானசகலவிதிகளும்
நிறைந்திருக்கின்ற மகாவேதசாகைகளில், மேன்மேலும் வளர்ந்தேறியிரு
க்கின்ற என்புத்தியானது மழுங்கிப், பித்தங்கொண்டவனைப்போலாயி
னேன். இதற்கென்னசெய்வேன், யாருக்கென்ன பிழைசெய்தேனே அ
தையுந்தெரிகிலேன். என்னைக்கவளீகரித்திருக்கின்ற இவ்வறியாமை யெ
ன்னைவிட்டு நீங்கத்தக்கமார்க்கந் தேவரீர்சொல்லியருளவேண்டுமென்று
விண்ணப்பஞ்செய்தனர். அவையனைத்தையும் பிரமன்கேட்டுச்,சிறிதுநே
ரத்தியானத்திருந்து, நடந்தவிசேடங்களைத் தெரிந்துகொண்டு, புன்சிரிப்
போடும்வேதவியாசரைப்பார்த்து, இதனைச் சொல்லுவதாயினன். ஆனால்

யாகியும்- அமலமாகியும்- அகண்டானந்தஸ்வரூபமாகியும்இருந்து, அழி
வினுக்கழிவுசெய்யத்தக்க விநாயகக்கடவுளது கிருபையில்லாவிடில், எவ்
வகைப்பட்ட புத்தியும் வல்லபமும் உண்டானவர்களா யிருக்கினும், அ
வர்களெடுத்திருப்பது அற்பகாரியமாயினும், இடேற்றிக்கொள்ளமாட்டா
துசோர்வுற்றுப்போவார்கள். விநாயகக்கடவுளை முதலிற்றுதிக்காமல், அள
வற்றபேர்கள் தாங்களெடுத்தகாரியங்களெல்லாங் கைகூடாமல் இகழ்வ
டைந்தார்கள். பிரணவத்தை முதலாகவுடைய வேதங்கட்கு நீர் வரம்பு
செய்தபோது, அப்பிரணவத்தைமுன்னே உச்சரிக்காமல் வேதமோதுவ
து வழக்கின்மையாதலினால், பிரணவப்பொருளாயிருக்கின்றவிநாயகர், த
ம்மைஅப்பிரணவத்தினால் நீர்தோத்திரஞ்செய்ததாகவுட்கொண்டு, இடை
யூறுகள் நேரவொட்டாது காத்திரட்சித்தார். விநாயகமூர்த்தியினுடைய
வுருவமே ஓமென்கின்றசொல்லாகவிருந்து, சகலஇடர்களையுந்தீர்க்கத்த
க்கதாகையால், ஆதியில்மகேஸ்வரர்வேதத்தைச்சொல்லுவதற்கு ஆரம்பி
த்தகாலத்தில், தாமெடுத்தகாரியமுழுவதுங் கைகூடவேண்டுமென்றே, அ
ப்பிரணவத்தை முதலில்வைத்துப் பின்பு வேதங்களையோதினார். இஃதன்
றியும்- சகலருந்தாங்கள் முயல்கின்ற எக்காரியங்கட்கும், இவ்வோங்கார
ஸ்வரூபியாயிருக்கின்ற விநாயகமூர்த்தியை முன்னதாகத்தோத்திரஞ்செ
ய்யவேண்டியநிமித்தமே, யாவையுமுணர்ந்தபெரியோர்கள், எல்லாமந்தி
ரங்கட்குந்தலைபபில்இவ்வோங்காரமந்திரத்தைவைத்திருக்கின்றார்கள். அ
வன்- அவள்- அது- என்னும்- ஆணபாலும்- பெண்பாலும்-அலிப்பாலு
மாயிருந்து, யாவையுஞ்செய்து முடிக்கின்றவரும், தம்மைத் தியானித்த
பேர்கட்கெல்லாம் அனுக்கிரகஞ்செய்கின்றவரும், அவ்வவர்கள் மனதுக்
கெட்டாத அரும்பொருளாயிருக்கின்றவரும், வேதங்களாலும் அளவிட்
டுரைக்கக்கூடாதவரும், இந்திரனும்- பிரமனாகியயானும்- விண்டுவும்- உ
ருத்திரரும்- மற்றுமுள்ளதேவர்களும்- அக்கடவுளுடைய ஆக்கினையைக்
கடக்கமாட்டாமல், அவருடைய பாததாமரையைத் தோத்திரஞ்செய்து
தொழும்படியாகத் தலைமைபெற்றதெய்வமாகியிருக்கின்றவரும், ஒன்றை
ச்செய்பவரும், ஒன்றைவிலக்குபவரும், ஒன்றைவிட்டுமற்றொன்றைமுடி
ப்பவரும், தம்மைக்கருதாதவர்களுக்கு இடர்செய்பவரும், அவ்விநாயகக்
கடவுளேயன்றிவேறில்லை. ஆதலால்- அத்தன்மையான முதற்கடவுளைநீர்
மனத்தால்நினைக்காமலும், வாயால்வாழ்த்தாமலும், ,காயத்தால்வணங்கா
மலும், நமக்கொருவர்நிகரில்லையென்கின்ற வித்தியாகர்வத்தினால், உமதுசு
யவதிகாரமாகப் புராணஞ்சொல்லுவதற்காரம்பித்தீர். ஆதலால்இவ்வளவு
துன்பங்கள்வந்துநேர்ந்தன. இனியேனும்வேழமுகத்தையுடையவிநாயக
க்கடவுளைத்தோத்திரஞ்செய்து, ஓபரமகருணாநிதியே, ஓசர்வஞ்ஞமூர்த்தி
யேஓதீனதயாளுவே, ஓபரமானந்தஸ்வரூபியே, யான்செய்தஅபசாரத்தை
ப்பொறுத்தருளவேண்டுமென்று பூசைசெய்யக்கடவீர். அவ்வாறு செய்
யாமல், உமதுசுயாபேட்சையால், ஒருபுராணத்தைச்செய்யத்தொடங்கு
வீராயின், ஆயிரங்கோடிகற்பகாலமாயினும்ஒருபாயிரமேனுஞ்சொல்லிமு
டிக்கமாட்டீர். சுமுகாயநம- ஏகதந்தாயநம- கபிலாயநம-கஜகர்ணிகாயநம-
லம்போதராயநம- விகடாயநம- விக்கினராஜாயநம- கணாதிபதையேநம-
தூமகேதுவேநம- கணாத்யக்ஷாயநம- பாலசந்திராயநம-கஜானனாயநம-வக்

கிரதுண்டாயநம- சூர்ப்பகர்ணயநம- ஹேரம்பாயநம- ஸ்கந்தபூர்வஜாயந ம-என்கிறசோடசநாமங்களைமாத்திரம்,முதலில்மேற்கூறியபிரணவத்தோ டு,வாக்கினால்வசனித்தாலும், செவியாற்கேட்டாலும், வித்தை- விவாகம்- சுபம்- சோபனம்- யாகம்- யுத்தம்- இவைமுதலானசகலகாரியங்களும் நி னைக்குமுன்னமேகைகூடும். ஆதலால்-அவ்விநாயகக்கடவுளைப்பூசனைசெ ய்து, உமதறிவைமறைத்திருக்கின்ற மயக்கத்தைத் தீர்த்துக்கொண்டு, நீ ரெடுத்தகாரியத்தை நிறைவேற்றிப் புகழையடையக்கடவீரென்றுசொன் னதாகப், பிருகுமுனிவர் சோமகாந்தராசனுக்குச்சொல்லினர்.

வேதவியாசர்வரம்பெற்றது.

ஓ சவுனகாதி முனிவர்களே, பின்னுமவ்வரசனைப்பார்த்துப் பிருகு முனிவர்சொல்லுவார். வேந்தனே- வேதவியாசர் இவ்வளவும் உள்ளதே யென்றுமனமகிழ்ந்து, மீட்டும் பிரமனைப்பணிந்தெழுந்து, சுவாமி-பிரண வஸ்வரூபியாயிருக்கின்ற அக்கணபதிமூர்த்தியைப் பூசனைசெய்யத்தக்க மு றைமை எவ்வாறென்றுகேட்டனர். அதற்குப்பிரமனிசைந்து, வியாசமு னியே, கணேசமூர்த்தி ஆகமத்தில், சத்தகோடி மகாமந்திரங்கள் சொல் லியிருக்கின்றன. அந்தச்சத்தகோடி மகாமந்திரங்களினும், சடக்கரமந்திர ஞ்சிறந்ததாகும். அச்சடக்கரமந்திரத்தினும், ஏகாட்சரமந்திரமேலானதா யிருக்கும். அவ்வேகாட்சரமந்திரத்தை,உமதுமையல்நோய்நீங்கும்படிமா கச்சொல்லுவோம், நீர் தடாகத்திற்சென்று ஸ்நானஞ்செய்துவருவீரென் றனன். அவ்வாறேஸ்நானஞ்செய்துவந்தவுடன்,பிரமனவருக்குஆகமவிதி ப்படிதீட்சைமுதலியவைகளைச்செய்து,அவ்வேகாட்சரமனுவையுபதேசி த்து, அம்மகாமந்திரத்தைத்தியானிக்கும்படியானமுறைமையையுந்தெரு ட்டிப்,பின்னுஞ்சொல்லுவான், ஓபராசரன்மைந்தனே- ஊறுபாடில்லாத உத்தமஸ்தானத்திலிருந்து, மந்திரசலத்தினாற்புரோக்ஷித்து, பூதசுத்தி மு தலானவைகளைச்செய்து, அகம்புறமாகிய விரண்டினுள்ளும் நியாசஞ்செய் து,பிராணாயாமத்திலிருந்து, இம்மந்திரத்தைத்தியானிக்கக்கடவீர். இம்ம ந்திரஞ் சித்தியாகவேண்டுமெனில், இதற்குரிய கணேசமூர்த்தியினது தி ருவுருவத்தையெல்லா மனதிற்றியானித்து, அந்தரியாக பூசைசெய்யக்க டவீர். இவ்வாறு தினந்தோறும் பூசனைசெய்து, மேற்சொன்ன மந்திரத் தை உமதுசத்திக்குத்தக்க உருச்செபித்துக்கொண்டிப்பீராயின், எங்கும் பரிபூரணமாயிருக்கின்ற விநாயகமூர்த்தியானவர் உம்மெதிரிலுருவங்கொ ண்டு, அனந்தங்கோடி சூரியருதயமானதுபோலப் பிரத்தியக்ஷமாகிச், சோதிமயமாயிருக்கின்ற தமது தரிசனத்தைக் கொடுத்தருளுவர். நீர் அ ப்போது மனவுறுதிபெற்று, மிகுந்த அன்புபொங்கச் சாஷ்டாங்க நமஸ் காரஞ்செய்து, சுவாமீ- அடியேன் மீது கிருபைபுரிந்து ரக்ஷிக்கவேண்டு மென்று பலமுறை வந்திப்பீராயின், சேய்க்குத்தாயிரங்குவதுபோல, உ மது தோத்திரங்கட்கு மனமிரங்கி, அருள்சுரந்து, நீர் கேட்டவரங்களை யெல்லாம் வரையாதுகொடுத்தருளுவர். இவ்வாறு பூசனைசெய்து இம்ம ந்திரசித்திபெற்றவர்கள், சகலவியாதிகளும் நீங்கித், தாங்கள் முயன்றகரு

மங்களெல்லாம் இடையூறின்றினைவெய்தி, அங்கைநெல்லிக்கனிபோல அளவற்றசித்திகளையடைந்து, ஆணவமல சம்பந்தத்தையொழித்து, அருள்வடிவாயிருந்து, சீவன்முத்தியென்கின்றமேலான பேற்றினையடைந்து, தேவர்களெல்லாம் புடைசூழ்ந்து வணங்கத்தக்கதான பரமானந்தசுகத்திற் கற்பகோடிகாலம் வாழ்ந்திருப்பார்கள். விநாயகக்கடவுள் பூசனைசெய்கின்றவர்களை விருப்போடு காண்கின்றவர்களும், அவர்கள் குணங்களைக்குறித்து வசனிக்கின்றவர்களும், அவ்வசனத்தை ஆவலோடுகேட்கின்றவர்களும், அவர்களுடன் அன்போடுகூடுகின்றவர்களுமாகிய யாவர்களும், இம்மைமுதலியமுப்பிறவிகளினு நற்கதியடையப்பெறுவார்கள். கடவுளில்லையென்றுசொல்லுகின்றநாத்திகர்கள்- ஒழுக்கமில்லாதவர்கள்-பரதூஷணஞ்செய்கின்றவர்கள்- சித்தசுத்தியில்லாதவர்கள்- துட்டர்கள்-சோரர்கள்- முதலானவர்களைநினைத்தவர்களுக்கும், இம்மகாமந்திரத்தையுபதேசிக்கத்தகாது.உபதேசிப்பராயின்,அவர்கள் அள்ளல்-இரௌரவம்- கும்பிபாகம்-கூடசாலம்-செந்துத்தானம்-பூதி-மாபூதி-என்கின்றசத்தநரகங்களிற்சதாகாலமுமிருந்துவருந்துவார்கள். வணக்கம்-அன்பு-அருள்-ஆசாரம்-வேதாகமநெறிகளிற்றவறுதவொழுக்கம்- நல்லோரிடத்திலிணக்கம்-மந்திரமுபாசிக்கவேண்டுமென்னும் ஆசை- இவைமுதலான நன்னடைகளுள்ள ஆத்திகர்களுக்கு உபதேசிக்கவேண்டுமாயின், கிரமப்படி தீக்ஷைசெய்து உபதேசித்தல்வேண்டும். இவ்வாறு பக்குவாபக்குவங்களையறிந்து உபதேசித்தவர்களும், உபதேசிக்கப்பெற்றவர்களும், அளவற்றகாலம் பேரின்பவீட்டைத் தமக்குக் காணியாக்ஷியாகக் கொண்டுவாழ்வார்கள். இப்பூசாவிதியை, முன்பு சந்திரசடாதரமூர்த்தியாகிய சிவபெருமான் என்மீதுகிருபைசுரந்து உபதேசித்தமுறைமைப்படியே, உமக்குபதேசஞ்செய்தோமென்றனன். இவைகளனைத்தையும் வியாசமுனிவர் செவிகுளிரக் கேட்டுச், சகலதுயரங்களையு நீக்கிப், பின்னும் பிரமதேவனைத் தோத்திரஞ்செய்து, சுவாமி - இதற்குமுன் இப்பூசனைசெய்து பேறுபெற்றவர்களுடைய சரித்திரங்களும் அடியேற் கருளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்கப்பிரமதேவன் மனதிரங்கி, வியாசமுனியே- தேவர்- தானவர்- சித்தர்- முனிவர்- நாகர்- இயக்கர்- சாரணர்- விஞ்சையர்- கின்னரர்- மனிதர்- முதலான அனந்தம்பேர்கள், விநாயகபூசைசெய்து பேறுபெற்றிருக்கின்றார்கள். அவர்களுள்யாமறிந்தமாத்திரஞ்சிலர்சரித்திரங்களைச் சொல்லுவோங்கேளுமென்று, கல்லுமிரும்புங் கசிந்துருகத்தக்கதாய், கரும்புந்தேனுங்கலந்ததுபோலக், கிருபையோடுஞ் சொல்லுவான். (பிரமன் - விண்டு - உருத்திரனாகிய தாங்கள்மூவர்களும் பரப்பிரமநிச்சயத்தை யறியவேண்டித்தவஞ்செய்ததும். பின்னர் அப்பரப்பிரமஸ்வரூபத்தைத்தரிசித்துவரம்பெற்றதும். தங்களுக்கு அப்பரப்பிரமஸ்வரூபியாகிய விநாயகமூர்த்தி விசுவரூபங்காட்டியதும். பிரமதேவனாகிய தான் பின்னர்உலகசிருட்டிசெய்ததும். கணேசமூர்த்திசித்திபுத்தியென்னு மிருவர்களைத்திருமணஞ்செய்ததும். விண்டு சட்க்ஷரமந்திரமனுட்டித்து மதுகைடபர்களை வென்றதும். புத்திரப்பேறுவேண்டி வனத்திற்சென்ற வீமராசன் விசுவாமித்திரமுனிவனையடுத்ததும். முக்கலமுனிவர்மீது படிந்துவந்த காற்றினால்தக்கன்பிணிநீங்கியதும். அத்தக்கனுக்கு முக்கலமு

னிவருபதேசித்ததும். விநாயகமூர்த்திவல்லாளன் வேதனையைவிலக்கிய
தும். அவ்வல்லாளன் முத்தியடைந்ததும். தக்கனரசாக்ஷிபெற்றதும். வி
சுவாமித்திரமுனிவர் வீமராசனுக்குபதேசித்ததும். உருக்குமாங்கதராச
ன்சாபம்பெற்றதும். நாரதமுனிவர் அவ்வுருக்குமாங்கதராசனுக்குச்சாப
த்தீர்வுகூறியதும். கௌதமமுனிவரால் இந்திரன்சாபம்பெற்றதும். கட
வுளர்குருவுக்குக்கௌதமருபதேசித்ததும். அக்கடவுளர்குருவால்இந்திர
னுபதேசம்பெற்றதும். இந்திரன்பூசித்து வரம்பெற்றதும். வீமராசனும்
அவன்குமாரனாகிய உருக்குமாங்கதராசனு முத்தியடைந்ததும். கிருச்சம
தமுனிவர் தன்றந்தையிடத்திலுபதேசம்பெற்றதும். அக்கிருச்சமதமுனி
வர்உபாசித்து வரம்பெற்றதும். திரிபுரன்பூசித்துவரம்பெற்றதும். அத்தி
ரிபுரன் மூவுலகத்தினையும் அரசாக்ஷிசெய்ததும். அவனழியும்படியாகத்
தேவர்கள்பூசித்ததும். அதனிமித்தஞ் சிவபிரான் வரம்பெற்றதும். அச்சி
வபிரான் திரிபுரதகனஞ்செய்ததும். உமையம்மை பர்வதராசனிடத்தில்
சதுர்த்திவிரதங்கேட்டதும். பின்னர் அவ்விரதத்தை யநுட்டித்ததும். க
ருத்தமராசன் பிருகுவாகியநம்மிடத்தில் அவ்விரதத்தைக்கேட்டுஉபாசித்
ததும். நளமகாராசன் கவுதமமுனிவரால் உபதேசிக்கப்பெற்றுப்பூசித்த
தும். சந்திராங்கதமகாராசனனுட்டித்து முத்தியடைந்ததும். சண்முகர்
வந்தித்துத் தாருகாசுரனைவென்றதும். மன்மதனருச்சித்து உருவம்பெற்
றதும். ஆதிசேடனாராதித்து வரம்பெற்றதும். சூரசேனமகாராசன் இந்
திரனைக்கண்டு புருசுண்டிமுனிவர் மகத்துவங்கேட்டதும். புருசுண்டிமு
னிவர்சங்கடசதுர்த்திவிரதத்தையனுட்டித்ததும். கிருதவீரியமகாராசன்
புத்திரப்பேறுவேண்டி வனத்திற்சென்று தவம்புரிந்ததும். அங்காரகன்
சங்கடசதுர்த்திவிரதமனுட்டித்ததும். சந்திரனுபாசித்துச்சாபந்தீர்ந்தது
ம். தூர்வைமகத்துவத்தால் விடை- கரம்- புலைச்சி- ஆகியவிம்மூவர்கள்
வீடுற்றதும். கணேசமூர்த்தி அனலாசுரனைவிழுங்கிய வெப்பு நீங்கும்ப
டித் தேவர்கள் தூர்வை யர்ச்சனைசெய்ததும். விநாயகமூர்த்தி தூர்வை
யாசகஞ்செய்து பலவற்புதங்களை நடாத்தியதும். வன்னிமகத்துவத்தால்
ஓரரக்கனுங் கிராதகனு முத்தியடைந்ததும். விண்டுவாமனவதாரத்தில்வ
ன்னியருச்சனைசெய்துமாவலியைவென்றதும். கீர்த்தியென்பவள் வன்னி
மகத்துவத்தால்மகப்பேறுபெற்றதும். அக்கீர்த்தியின் மகன்வன்னிமகிமை
யால்விட்டம்நீங்கியதும். சமியென்பவளும் மந்தாரனென்பவனும்வன்னியு
மந்தாரமுமாக வுற்பவித்ததும். தேவர்கட்குச்சாவித்திரியிட்ட சாபத்தை
அத்தேவர்பத்தினிகள்வன்னியருச்சனையாலகற்றியதும். கிப்பிரப்பிரசாத
மகாராசன்வன்னியையருச்சித்து வரம்பெற்றதும். கிருதவீரியமகாராசன்
சங்கடசதுர்த்தி விரதமனுட்டித்துமகப்பேறுபெற்றதும். ஓர் புலைச்சியின்
பார்வையால் இந்திரவிமானம் விண்ணிலெழுந்ததும். சூரசேனமகாராச
ன் சங்கடசதுர்த்திவிரதமநுட்டித்து முத்தியடைந்ததும். பரசிராமன் சி
வபெருமானிடத்தில் சடக்ஷரமந்திரத்தைஉபதேசம்பெற்று பூசித்ததும்.
இராவணன்உபாசித்துத்தான்செய்த அபசாரத்தை நீக்கிக்கொண்டதும்.
அகத்தியமுனிவர்வந்தித்துத் தமது கமண்டலத்திற் காவேரிதீர்த்தத்தை
யடைந்ததும். காசிபர்முதலாயினோர் சகத்திரநாமந்தா லருச்சித்துப்பல
வரங்களைப்பெற்றதும்.) ஆகிய (இச்சரித்திரங்களையெல்லாம் விவரமாகச

சொல்ல, வியாசமுனிவர் சிரவணானந்தமாகக்கேட்டு, மீளவும்பணிந்தெழுந்து, சுவாமி- இன்னுஞ் சிலசரித்திரங்களை அடியேற்குத்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தனர். அதற்குப் பிரமதேவனிசைந்து, ஓ வியாசமுனியே- பரமகருணாநிதியாகிய விநாயகமூர்த்தியானவர், அந்தந்த யுகங்கடோறும் உலகங்களில் வெவ்வேறு திருவுருவங்கொண்டு, வேதாகமநெறிகளிற் பிறழ்ந்துநடக்கின்ற துட்டர்களையெல்லாம் மறக்கருணையாற்றண்டித்தும், தமது திருவடிகளைவழிபட்ட அன்பினர்க்கு அறக்கருணையால் அநுக்கிரகித்து மிருக்கின்ற திருவிளையாடல்கள், அளவற்றனவாகும். அவைகளுள், முன்னொருகாலத்திற்சிவபெருமான் சுப்பிரமண்ணியமூர்த்திக்குச் சிலதிருவிளையாடல்களைத் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர். அவைகளையுஞ்சொல்லுவோங் கேளுமென்றுபிரமதேவன்சொல்லுவான், (வக்கிரதுண்டவிநாயகர் திருவவதாரங்கொண்டு, பிரமன்முதலிய தங்கள் மூவர்களைச்சிருட்டித்துத், தங்கட்கு முத்தொழில்களைத்தந்ததும். சிந்தாமணிவிநாயகர் திருவவதாரங்கொண்டு, கபிலமுனிவருடைய சிந்தாமணியைக்கவர்ந்த கணராசனைவென்று, அதைமீட்டுமவர்க்களித்ததும். கஜானனவிநாயகர் திருவவதாரங்கொண்டு, பிரமதேவனுகிய தன்னுடையகொட்டாவியினின்று முற்பவித்த சிந்தூரனைக்கொன்று, தேவர்களைக்காத்ததும். விக்கினராஜவிநாயகர் திருவவதாரங்கொண்டு காலரூபனென்கின்ற விக்கினனையழித்து, உலகத்தைக்காத்ததும். மயூரேசவிநாயகர் திருவவதாரங்கொண்டு, வேதசாஸ்த்ரங்களைத் தேவர்களிடத்தினின்றுங் கவர்ந்தகமலாசுரனைச்சங்கரித்து, மீட்டுமவ்வேதசாஸ்த்ரங்களையத்தேவர்கட்குத்தந்ததும். பிந்திய- மயூரேசர்திருவவதாரங்கொண்டு, தேவர்களைச்சிறையில்வைத்த சிந்தாசுரனைக்கொன்று, மற்ற அவுணர்கள் செய்யுமாயையினையொழித்ததும். பாலசந்திரவிநாயகர்திருவவதாரங்கொண்டு, அனலாசுரனைவிழுங்கித், தேவர்கள் பூசைகொண்டதும். தூமகேதுவிநாயகர் திருவவதாரங்கொண்டு, மாதவராசனுக்கும் அவன்மனைவி சுமுதைக்குந் தீங்குசெய்ததுமராசனைக்கொன்று, அவ்விருவரைப்பாதுகாத்ததும். கணேசவிநாயகர் திருவவதாரங்கொண்டு, திரிபுராதிகளை வெல்லும்படியாகச் சிவபிரானுக்குஅநுக்கிரகித்ததும். கணபதிவிநாயகர் திருவவதாரங்கொண்டு, தேவர்களைவருத்திய கஜமுகாசுரனைக்கொன்று, விண்டுவின்சாபந்தீர்த்ததும். மகோற்கடவிநாயகர் திருவவதாரங்கொண்டு, நராந்தகனையுந் தேவாந்தகனையு நாசஞ்செய்து, காசிராசனுக்கு முத்தியளித்ததும். துண்டிவிநாயகர் திருவவதாரங்கொண்டு, துராசதனைவென்று, திவோதாதன்மனதைத்திரித்து, விசுவநாதமூர்த்திக்குக் காசிநகரையளித்ததும். வல்லபைகணேசர் திருவவதாரங்கொண்டு, மரீசிரிஷி புத்திரியாகிய வல்லபையையும், விண்டுபுத்திரிகள் பன்னிருவரையுந் திருமணஞ்செய்து, அவ்விண்டுவுக்கு யோகஞானதத்துவமென்கின்றகணேசகீதையை உபதேசித்ததும்.) ஆகிய இத்திருவிளையாடல்களை விவரமாகச்சொல்லிப்பின்னுஞ்சொல்லுவான், வியாசமுனியே -வேதசாத்திரங்களாலும், மற்றெவ்வகைத்தாகிய பிரமாணங்களாலும் அறிதற்கரியகர்த்தாவாகியகணேசமூர்த்தியினுடைய இச்சரித்திரமானது, தேவர்கள்முனிவர்கள் முதலியோரால் பாராயணஞ் செய்யத்தக்கதாகியும், பாசபந்த முதலியவைகளை

விலக்கத்தக்கதாகியும் இருக்கின்றது. யாவனேனுந் தங்களிட்டசித்திபெறக் கோறுகின்றவர்கள், இவ்விதிகாசத்தை இடைவிடாது பாராயணஞ்செய்து அதனைத்தடையின்றியடையக்கடவர்களென்றனன். இவையனைத்தையும் வியாசமுனிவர் செவிக்கமுதாகப்பூரித்து,மீள்வும் பிரமதேவனைப்பணிந்தெழுந்து, சுவாமி- விண்டுவுக்கு வல்லபைகணேசர் யோகஞானதத்துவத்தை யுபதேசித்தாரென்று பொதுப்படச்சொன்னீரே, அதனைவிவரமாக அடியேற்கருள்செய்ய வேண்டுமென்றுபிரார்த்தித்தனர். அவ்வாறே அதனையுமிகவுந்தெளிவாகஉபதேசித்து,வியாசமுனிவரே- இக்கணேசகீதையை விண்டுவிநாயகமூர்த்தியால்உபதேசிக்கப்பெற்றுமரீசிமுனிவருக்குச்சொல்ல, அவர்மனுவுக்குப்போதிக்க, அம்மனுவினிடத்தி லிருந்து பலமுனிவர்கள்கேட்டு, அவ்வவர்கள்பரம்பரையினால் விளங்கவைத்தார்கள். இக்கணேசகீதையைத் துன்மார்க்கநடையினோர்கேட்பாராயின், அவர்கள்தீவினையாவுமொழிந்துபோய்ச்சன்மார்க்கநெறியினையடைவார்கள். சன்மார்க்கநடையினோர்கேட்பாராயின், கணேசமூர்த்தியினுடைய பாதாரவிந்தத்தைச்சேர்ந்து பிரமானந்தசாகரத்தின் மூழ்கியிருப்பார்கள். அன்றியும்- இனிவருகின்றகலியுகத்தில், யாவரும் வருணாச்சிரமதருமங்களிற்றப்பிய், பிறர்செய்தநன்றியைமறத்தல், எல்லாவுயிர்க்கும் இன்னாதனசெய்தல், கல்வியையும் ஒப்புரவையுங்கடத்தல், யாகம்- தவம்- தருமம்- தானம்-என்பவைகளைச்செய்யாதொழிதல்,குருதக்ஷிணையைக்கொடாதிருத்தல், ¶ முப்பாலொழுக்கங்களைமுனிதல், + இணைவிழைச்சு † வாயில்விழைச்சு- மலம்- மூத்திரம்- என்னு நால்வகை எச்சிலையுங் கருதாதிருத்தல், வணங்கப்படுந் தேவரைவழிபடுமிடத்தும் - தூய்மையின்மையுண்டாயினவிடத்தும்- மயிர்களைந்தவிடத்தும்- இணைவிழைச் சுண்டானவிடத்தும்- கீழ்மக்களுடம்பு தீண்டியவிடத்தும்- நீராடாதிருத்தல்,நிலமுதலியஐம்பூதங்களையும்- பார்ப்பார்- பசுக்கள்- திங்கள்- ஞாயிறு- என்னுமிவைகளையுந்- தம்முடம்புபோலக் கருதிப் போற்றாதிருத்தல், அரசன் - உவாத்தி- தாய்-தந்தை- மூத்தோன்- என்னும்ஐங்குரவர்களையுங்கருதிப்பேணாதிருத்தல், உண்ணும் உணவைத்தொழாதுண்ணல், விருந்தினர்-மூத்தோர்- பசுக்கள்- சிறைகள்- பிள்ளைகள்- என்றுசொல்லப்பட்ட இவர்கட்குஉணவுகொடாதிருத்தல், தம்மிற்பெரியார் தம்பந்தியிலிருந்துண்ணு மிடத்து, அப்பெரியாருண்பதற்குமுன்னே தாமுண்டு முந்துற வெழுந்திருத்தல், குரவர்கொடுப்பனவற்றை ஒருகையால்வாங்கல், அவர்க்குத் தாமொருகையாற் கொடுத்தல், எவரையுஞ்சீறுதல், அந்திப்பொழுதில் விளக்கினைத்தொழாதிருத்தல், இருதேவர்நடுவும், பார்ப்பார்பலர்நடுவும்-ஊடறுத்துச்செல்லல்,புல்- விளைநிலம்- ஆப்பி-சுடலை-வழி- தீர்த்தம்-தேவர்கோட்டம்-நீழல்- ஆனிறை நிற்குமிடம்- சாம்பல்- என்னும் இப்பத்தின்கண்ணும்,உமிநீரையும்மூத்திர 0 புரீடங்களையுஞ்சொரிதல்,பரஸ்திரீகமனம்-மதுபானம்-களவு- சூது- கொலை- என்னுமிவ்வைந்தினையுஞ்செய்யக்கரு

¶ அதாவது, அறநூல்விதி- பொருணூல்விதி- இன்பநூல்விதி- என்னும் இம்மூன்றுமாம். + இணைவிழைச்சு- புணர்ச்சி. † வாயில் விழைச்சு- எச்சில். 0 புரீடம்-மலம்.

தல்,பொய்- குறளை- பிறர்பொருளைவவ்வலெண்ணல்- காதல்-பிறர்ஆக்கத்தின்கட்பொறாமை- என்னுமிப்பெற்றியினைவிழைதல், தமக்கென்றுலையேற்றல்,தெய்வப்பொருட்டன்றித்தங்காரணத்தாற்கொன்றானையருந்தல் அட்டிலின்கண்ணெச்சில்படுத்தல், மனையுறைதெய்வங்கட்குப்பலியூட்டாதுண்ணல், தம்மனைவியர்க்குப் பூப்புநிகழ்ந்தால் மெய்யுறலாகாத நாள்மூன்றின்கண்ணும் அவரைநோக்கல், உச்சிப்பொழுது- நடுக்கங்குல்- மாலை- காலை- ஆதிரை- ஓணம்- உவா- அட்டமி- தாம்பிறந்தநாள்- எனனுமிந்நாட்களின்கண், தம்மனைவியரோடுடனுறைதல், கல்லியாணநாளின்கண்ணும்- தேவர்க்குச்சிறப்புநாளின்கண்ணும்- பிதிர்களுக்குச்சிறப்புசெய்யுநாளின்கண்ணும்- விரதநாளின்கண்ணும்- யாகஞ்செய்யுநாளின்கண்ணும்- அறஞ்செய்யாதிருத்தல், அந்நாட்களில் விருந்தினர்க்குச் சோறிடாதருந்தல், உடை- நடை- சொற்சோர்வு- வைதல்- என இந்நான்கும், தம்மாண்மைக்குங்-கல்விக்குங்-குடிப்பிறப்பிற்குந்-தக்கதகுதியின்றிச்செய்தல், பலர்நடுவணிருந்து பிறரைப்பழித்துரைத்தல்,அவரைக்காணாதவழிஇழித்துரைத்தல், பலநடுவனுறங்கல், தமக்குச்செய்யப்பொருந்தாதவற்றைப் பிறர்க்குச்செய்ய வுடம்படல், வறியாரையிகழ்ந்து முறைமைகடந்துரைத்தல், வஞ்சனையுரையும்-பயன்படாதவுரையும்- வாய்காவது வேண்டியவுரைக்குமுறைமையும்- பிறரைப்பழியுரைக்கு முரையுஞ்சொல்லல், ஒருவன் செய்கை சொன் முதலானவற்றைத் தானும் அவ்வகையிகழ்ந்து செய்துகாட்டல், பிறர்க்குவெளிப்படக் கண்ணிமித்தல், தம்மிடத்தைநோக்கிவந்தார்க்கு முறுவலொடுகூடிய வினிதுரையும் - கால்கழுவநீரும் - இருக்கமணையும்- கிடக்கப்பாயும்- உண்ணவுணவும்- கொடாதிருத்தல், தங்குடியொழுக்கத்தைநீங்கிய தொழில்களைச்செய்தல், பிறனொருந்துபோகத்தொடங்கினபோது அவனைப்பின்னேநின்றழைத்தல், அப்பொழுதுதும்மல், அவனையெங்குபோகின்றீரென்று கேட்டல், பிறரைப்பார்த்து உடம்பு நன்றாயிருக்கின்றதென்றுசொல்லல், விளக்கினைவாயாலூதியவித்தல், அருந்தலைப்படாதுகாவாதுவைதல், பழிநாணாதிருத்தல், தாங்கற்றவற்றைக்குரவர்முன்கூறல், தாய்- மகள்- உடன்பிறந்தாள்- பிறன்மனை - என்னுமிவர்களோடுதனித்துறைதல், பெரியராயுள்ளார் உவந்தனவற்றைத்தாமுவத்தல், தம்மில்லத்தின்கண்ணும்- தேவாலயத்தின்கண்ணும்- பெரியார் அவைக்கண்ணும்- கீழ்மக்களைக்கொண்டுபுகல், சிரிப்பு- கொட்டாவி- காறியுமிழ்தல்- தும்மல்- என்னுமிவைகளைத்,தம்மிற் பெரியாரிடத்துந்- தேவர்கோட்டத்தினிடத்துஞ் செய்தல், கணவனதுஉடலின்வடிவத்தையன்றி,ஏனை ஆடவரது வடிவத்தைப்பார்த்தல்,கைந்நொடித்தன்முதலியனவற்றைச் செய்து அவ்வாடவரை மயக்குதல், தங்குரவர் பெயரைச்சொல்லல், தம்மிற்பெரியாரை முறைப்பெயர்கொண்டழைத்தல், பிறர்மனையின்கட் புழைக்கடைவாயிலாற்புகல், ஒருவர்பக்கத்தில் வரிசைபடப்போதல்,ஒருவருடையதிருமேனிமிதித்தல்,முன்னர்ஆராயாதுபேசும்போதாராய்ச்சிசெய்து பேசல்,ஊரிலுள்ளோர்வெறுக்கத்தக்கவைகளைச்செய்தல்,அரசரதுபடையானையைப் பகைவர்க்குரைத்தல். தாமொருவருக்குச்செய்த நன்றியின்பயனைச் சொல்லல், தமக்கொருவரிட்ட வுணவையிகழ்ந்துரைத்தல், தாஞ்செய்த அறத்தையும் விரதத்தையுந் தாமே புகழ்தல், தமக்குக் கிடைத

தற்கரியவற்றைவிரும்பல், தம்மாலிறக்கப்பட்டனவற்றிற்குவருந்தல், புலையருக்கெச்சிலைக்கொடுத்தல, மேலானநறகருமஞ்செய்யுமிடத்துப் புலையரிடத்து நாட்கேட்டுச்செய்தல்,சான்றோர் அவைக்களத்து அங்கசேட்டை புரிதல், இருவராயிருந்துபேசுமிடத்துப் போதல், குரவர்கொடுப்பதை உட்காந்திருந்தேற்றல், தம்மிடத்தில் அடைக்கலமாகவைத்தபொருளை அபகரித்தல், முதலான அளவற்றதீமைகளைச்செய்து, வியாதி தரித்திர முதலான துன்பங்களையடைந்து வாழ்ந்திருப்பார்கள். அப்போது வேதாகமவிதிகள் மூழ்கிப்போகும். நீதிநெறிகள் தவறிப்போகும். அதனாற் றேவர்களெல்லாந் துன்பமடைந்து, அக்கலியுகமுடிவில் கணேசமூர்த்தியினுடைய திருவடிகளைத்தியானித்து, மிகுந்தபத்தியினாலுபசரித்துப், பலமுறைதோத்திரஞ்செய்வார்கள். அதற்கு விநாயகமூர்த்தி அருள்சுரந்து, தூமிரவர்ணராய், மகோற்கடவிநாயகர் திருவவதாரங்கொண்டு, இரண்டுதிருக்கரங்களுடனே ஒருதிருக்கரத்திற் றாமரைமலரும், மற்றொருதிருக்கரத்தில் வாளாயுதமுமேந்திக், கறுத்தகுதிரையின்மே லாரோகணித்து, அளவற்ற படைக்கலங்களோடு நால்வகைச்சேனைகளும் புடைசூழ்ந்துவரப், பூவுலகத்திலுள்ள மிலேச்சர்கள் முதலாயினோர்களில் ஒருவரையும்விடாமற் சங்கரிப்பார். அப்பால் தருமஸ்வரூபமானகிரேதாயுகம்வரும். இத்தன்மையராகிய விநாயகமூர்த்தி செய்தருளுந் திருவிளையாட்டுக்கு ஓ ரளவில்லை. அவைகள் நமதாயுள்வரையிற்சொன்னாலுமுடிவனவன்று. ஆதலால்-இதுகாறும் உமக்குரைத்துவந்த மான்மியங்களைக்கொண்டே திருப்தியடையக்கடவீர். அன்றியும்-இப்புராணத்திற்றானே, ஓரிடத்தில் விநாயகப்பெருமானானவர் பிரமனாகியரான எங்கண்மூவரைச்சிருட்டித்தாரென்றும், ஓரிடத்தில் உருத்திரமூர்த்தியினுடைய முகத்தினின்றும் அவர் வெளிக்கொண்டனரென்றும், ஓரிடத்தில்சிவபெருமான் அவரைப்பணிந்தனரென்றும், ஓரிடத்தில் அச்சிவபெருமானை அவர்பணிந்தனரென்றும், ஓரிடத்தில் உமாதேவியார் வயிற்றிலுற்பவித்தனரென்றும், ஓரிடத்தில் அவ்வுமாதேவியார் முகத்திற்றோன்றினரென்றும், ஓரிடத்தில் உமாதேவியார் அவரைப் பணிந்தனரென்றும், ஓரிடத்தில் அவ்வுமாதேவியை அவர்பணிந்தனரென்றும், இவ்வாறு நானாவிதங்களாகக் கூறியிருக்கினும், அவையனைத்தும் அந்தந்தயுகபேதங்களினாலும், அந்தந்ததேவர்கள் வல்லபவிசற்பத்தினாலும், அடியார்களுடைய பாரிபாகவேற்றுமையினாலும் உண்டாயினவேயன்றி, விநாயகமூர்த்திசகலதேவர்கட்கு முதன்மையாயிருக்கின்றஅவரது சுபாவவியற்கை எக்காலத்துமாறுவதில்லை. இத்தன்மையராகியவிநாயகமூர்த்தியினுடையசரித்திரத்தினியல்பையறியுமிடத்து, மத்திமகுணத்தையுடையவர்கள்இவையனைத்தும்உண்மையோ அல்லவோவென்றுமலைப்பார்கள். உத்தமகுணத்தையுடையவர்கள்உண்மையென்றேதெரிந்துகொள்ளுவார்கள். உண்மையென்றெண்ணாதவர்கள்மிகவுங்கொடிதான இருபத்தெண்கோடிநரகங்களில் வீழ்ந்துவீழ்ந்து பலமுறைவருந்துவார்கள். விநாயகக்கடவுளைத் தேவர்கள் முதலாயினோருபாசித்த சரித்திரங்களும், அக்கடவுள் பற்பல அவதாரங்களைக்கொண்டு செய்தருளிய திருவிளையாடல்களும்விவரமாகவுமக்குச்சொன்னேம்இனிநீருமவ்விநாயகமூர்த்தியைஉபாசிக்கக்கடவீரென்று, வியாசமுனிவருக்குப் பிரமதேவன் சொன்னதாகப்,

பிருகு முனிவர் சோமகாந்தராசனுக்குத் தொகையாகத் தெரிவித்துப், பின்னர் அவைகளையெல்லாம் விரிவாகவுங்கூறினர். இப்பால் பிருகுமுனிவரை அவ்வரசன் மீளவும்பணிந்தெழுந்து, ஓகிருபாமூர்த்தியே- சுவாமிகளுடைய கருணைகடாக்ஷத்தினாற் றேவர்களாலும் அறிந்துணர்தற்கரிய விநாயகமகத்துவத்தை யெளிதிற்கேட்டேன், யோகஞானதத்துவத்தையுமுணர்ந்தேன், இனி அடியேற்கென்ன குறையிருக்கின்றது, இனி அவ் வேதவியாசர் விநாயகமூர்த்தியை உபாசித்ததும், விநாயகமூர்த்தியால் அவரடைந்தபேறும், அடியேற்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்னப், பிருகுமுனிவர் அதற்கிசைந்து, அரசனே- வியாசமுனிவர்மீளவும் பிரமதேவனைத் தொழுதெழுந்து, சுவாமி- பரப்பிரம ஸ்வரூபியாகிய விநாயகமூர்த்தி மகிமையை யெல்லாம்யான்தெளிவுற்றறியுமாறு திருவாய்மலர்ந்தருளிய தேவரீர்க்கு, யானென்னகைம்மாறு செய்யத்தக்கவனென்று பலமுறைதுதிசெய்து, அவனனுக்ஞைபெற்று, விநாயகக்கடவுள் திருமந்திரத்தைச்செபித்துத்தவஞ்செய்வதாகச்சென்று, கந்தமூலபலாதிகள்சமிர்த்தியும்- சலசமிர்த்தியும்- நல்லநீழலும்- எவ்விடத்துண்டென்று தேடிச், சிறிதும் இடையூறுகளில்லாமலும், இதரசஞ்சார மில்லாமலும் இருக்கின்ற வொருவனத்திலிருந்து, கணேசமூர்த்தியினுடைய ஏகாக்ஷரமந்திரத்தைச் செபஞ்செய்துகொண்டு தவத்திலிருந்தனர். அவ்வாறுமன்னிரண்டு வருடஞ்சென்ற பின்னர்,அத்தவத்திற்குக்கணேசமூர்த்தி கிருபைசுரந்து,கோடிசூரியர்கள் ஒன்றாயுதயமானதுபோல மிகுந்தவொளியைவீசுகின்ற சிவந்ததிருமேனியும்,சிவந்தவஸ்திரமும்,சிவந்தபூமாலையும் சிவந்தஆபரணங்களும், சிவந்தசாந்துமுடையவராய், மதம்பொழிகின்ற யானைமுகத்தோடு,வியாசமுனிவருக்கெதிரே தரிசனமாயினர். வியாசமுனிவர் அத்தரிசனவீக்ஷண்ணியத்தைப் பார்க்கக்கூடாமற்பயந்து, ஏகாக்ஷரமந்திரத்தை மனதிற்றியானித்து, இரண்டுவிழிகளையுமூடிக்கொண்டனர். அதனைக்கணேசமூர்த்திகண்டு, ஓபராசரன்மைந்தனே- நீ அஞ்சவேண்டாம், உன்மனத்தில் யாவர்வேண்டுமென்று பரிபூரணமாகநினைத்தனையோ,அவரேயாம், உனக்குவேண்டியவரங்களைக்கேள் தருகின்றேமென்று திருவாய்மலர்ந்தருளினர். அதைக்கேட்ட வியாசமுனிவர்விரைவிலெழுந்து, சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து, கர்த்தருடைய திவ்வியஸ்வரூபத்தைக் கண்குளிரப்பார்த்துப், பலமுறை பிரதக்ஷணம்வந்து, இருகரங்களையுஞ் சிரமேற்குவித்து, எதிர்நின்று, வாய்குழறி, விழிகளிலானந்தவாரிபெருக்கி, உடன்முழுவதும் உரோமாஞ்சிதங்கொண்டு,உள்ளமுருகிக்,கணேசமூர்த்தியினுடையபெருமைகளைப்பாடி, அளவற்றவேதாகமங்களாற்றோத்திரஞ்செய்து,ஓகாரணகாரணமானகடவுளே- சச்சிதானந்தப்பொருளே-அகண்டபரிபூரணரே-ஆதிமத்தியாந்தரகிதரே- இத்தினந் தேவரீருடைய பாதகமலசேவைதந்தருளியதனாலே,அடியேன்சுத்தபவித்திரனாயினேன், அடியேன் தவமுஞ்சுத்தபவித்திரமாயிற்று,இத்தேசம்- இவ்வனம் இங்கிருக்குஞ்சராசரங்களெல்லாம்மகத்தானபேறுகளையடைந்தன, இனி அடியேன்குறைதீரும்படியாக,எனதறிவிற்செறிந்திருக்கின்ற மயக்கத்தை நீக்கி, அதிலுள்ள மலபாசத்தையு மொழித்துச், சுவாமிகளுடையபாதாரவிந்தத்திற்செலுத்தும்படியான பத்தியைநிரப்பி, மெய்ஞ்ஞானசுகத்தை

க்கொடுத்து, எக்காலத்தும் அ
ல்வேண்டுமென்றியும், பதினெண்புரா
றத்தக்கவல்லபத்தையும் அடியேற்கு அ
ர்த்தித்தனர். கணேசமூர்த்தி அதற்கிசைந்து ஓ
ரங்கள் முழுவதும் உனக்குண்டாகும், நீயுன்பெயரு
வுத்தமனுகி, மிக்கமேன்மைகள்பெற்று, எல்லாக்குறைவுக
யாவர்க்குங் குரவனுகி, மெய்ஞ்ஞானம்பெருகிச், சுகமாயிருப்ப
னெண்புராணங்கட்கு நீஅதிகாரியானதுபோல- உபபுராணங்களுஞ்
ல்லத்தக்கவல்லபத்தையுடையவனுவாய், முன்னர் அகங்காரத்தினுலே ந
ம்மைத்தியானித்துத்துதிசெய்யாது புராணங்களைச்சொல்லத் தொடங்கி
னையாதலால், நீயுன்னினைவினையிழந்தாய், அதனேடுவாக்கையும் இழக்க
ப்பெற்ருய்,பின்னர்நமதுமான்மியத்தைப் பத்தியோடுங்கேட்டு நம்மையு
மனுட்டித்தனையாதலால், முன்னர்விளைந்திருந்த பாவங்களனைத்தையும்
போக்கினுய், இனி உன்மனத்துள்பாமிருந்து,யாவையுஞ்சொல்லி நிறை
வேற்றுகின்றேமென்று அனுக்கிரகித்து, அம்முனிவருடைய இதயகமல
த்தில்வாசமாயினர். அப்பால் வியாசமுனிவர் மிக்கதேஜசுடையவராய்,
உலகத்தாரெல்லாங்கண்டு அதிசயிக்கும்படியாக அவ்வனத்தின்கண்ணே
யிருந்து, கணேசமூர்த்திதனக்குக்காட்சிகொடுத்தருளிய விடத்தில் ஓ ரா
லயமுண்டாக்கி, அதில்விநாயகக்கடவுளைப் பிரதிட்டைசெய்து, வேதாக
மவிதிப்படி பூசனைபுரிந்து, யாவருங்கொண்டாடத்தக்கபதினெண்புராண
ங்களையும் வழுவின்றி நிறைவேற்றினுர். என்று பிருகுமுனிவர் சோமகாந்
தராஜனுக்குச்சொல்லினர்.

சோமகாந்தன்முத்தியடைந்தது.

ஓ சவுனகாதி முனிவர்களே,பின்னும்பிருகுமுனிவர்அவ்வரசனைநோ
க்கிச்சொல்லுவார், வேந்தனே- இவ்வாறு வியாசமுனிவர் கணேசமூர்த்
தியினுடைய பெருங்கருணையைக்கொண்டுநிறைவேற்றிய பதினெண்புரா
ணங்களையுந், தாம்பிரமதேவனுல் உபதேசிக்கப்பெற்ற விநாயகமகத்துவ
த்தையும், வைசம்பாயனர் முதலாகிய எங்கட்கு உபதேசித்து, அவை
களையாவர்க்கும் வரன்முறையாகப் போதிக்கக்கட்டளையிட்டனர். யாங்க
ளும் அவ்வாறே பரிபக்குவர்களுக்குணர்த்தினம். அவற்றுள்- விநாயகம
கத்துவத்தை உனக்குப்பாங்தமாக உபதேசித்தோம். ஆதலால்- இனி நீயு
ம் அக்கணேசமூர்த்தியையனுட்டித்து, உனது இட்டகாமியார்த்தங்களை
நிறைவேற்றிக் கொள்ளுகவென்று சொல்லினர். பின்னர் அவ்வரசன் அ
வ்வாசிர்மத்திற்றுனேயிருந்து, தான்கேட்டகணேசமான்மியத்தைப்பிரதி
தினம் பாராயணஞ்செய்து, பிருகுமகாமுனிவருடைய பாதங்களைத்தின
ந்தோறும் பூசனைபுரிந்துகொண்டிருந்தனன். இவ்வாறுஒருவருடஞ்சென்
ற பின்னர், அவ்வரசன் செய்துவருகின்ற அ ட்டிப்புக்குக் கணேசமூர்
த்திகிருபைசுரந்து, தேவகணங்களைக்கூவி, ந க்கன்பனுகிய சோ
மகாந்தராசனை இங்ஙனம் அழைத்துவருவி திருவாய்மலர்ந்த
ருளினர். அவ்வாறே அத்தேவகணங்களின டதிசைகளினு நி

வீசுகின்ற ஒருதெய்வவிமான
...வருடைய ஆசிரமத்திலிறக்கினார்கள்.
...காந்தராசனைநோக்கி, அரசனே-கணேச
...க விமானமனுப்பினர், அதில்நீயாரோகணித்து,
...று, நித்தியானந்தசுகத்தில் வசித்திருவென்றுசொல்
...யவ்வரசன் செவிக்கமுதமாகக்கேட்டுப், பிருகுமுனிவரை
...தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்குவித்து, ஓ தபோதனசக்
...த்தியே- நித்த- சுத்த- நின்மல- நிராகார- நிருபத்திரவ- நிர்ச்சங்க-
நிர்விகார- நிருவிகற்ப- நிராலம்ப- அகண்டானந்தஸ்வரூபியாகிய கணே
சமூர்த்தியானவர், நாயிற்கடையாய நாயேனிடத்துவைத்த நிறைந்தகிரு
பைக்கு, அற்பனேன்செய்யத்தக்கதைம்மாறு இவ்வுலகத்திலென்னவிருக்
கின்றது, தேவரீருடைய கருணையினாலே அக்கர்த்தருடைய அனுக்கிர
கத்தை யெளிதிற்பெற்றேன், என்னிற்படர்ந்திருந்த வியாதியை முன்ன
மேதீர்த்தேன், அடியேன் தேவரீர்வசத்தனல்லாமல், இப்பிரபஞ்சத்தில்
எனக்குண்டாகிய பற்றுவேறென்னவிருக்கின்றது,சுவாமிகளுடையகட்ட
ளையாதோ,அவ்வாறேஅடிமைநடந்துகொள்ளுவனென்று பணிந்துதோத்
திரஞ்செய்து, அளவளாவிய அன்போடு ஆனந்தக்கண்ணீர்சொரிந்துநின்
றனன். அவனையத்தேவகணங்கள்நோக்கி, அரசனே- நீ கணேசபுராணங்
கேட்டமகத்துவத்தினாலே, விநாயகக்கடவுள் கிருபைசுரந்து, மகாயோகி
யர்கள்செய்யும் அநுட்டிப்பினுங்கிடைத்தற்கரிய தமது உலகத்திற்கு உ
ன்னையழைதருவதாகக் கட்டளையிட்டனர். பாக்கியமுடையவர்க்குள்
ளும்பெரும்பாக்கிய முடையவனீயே யாகுமாதலால், நீ யுனது மனைவி
யோடும் இரண்டுமந்திரிகளோடும் இவ்விமானத்தில் ஆரோகணித்துவரு
வாயென்றுசொல்லினர். அதை அரசன்கேட்டு, மீளவும் பிருகு முனிவ
ரைப்பணிந்தெழுந்து, பலமுறைதுதித்து, அம்முனிபுங்கவருடைய சீட
ர்கட்கெல்லாம் வந்தனைசெய்து, விமானத்தைத்தொழுது, அவ்விமானத
தைக்கொணர்ந்துவந்த தேவகணங்களை நமஸ்காரஞ்செய்து, தனதுபத்தி
னியோடும் இரண்டமைச்சர்களோடும் அவ்விமானத்திலேறினன். உட
னே- அவ்விமானமானது ஆகாயமார்க்கத்தி லெழுந்துசென்றது. அவ்வா
று செல்லுகையில், அவ்வரசனுடைய தேவநகரமானது சுதன்மைக்குத்
தோன்ற, அச்சுதன்மை தன்கொழுனனைநோக்கி, சுவாமி- ஏமகண்டனக
மதுவரவுக்கு எதிர்பார்த்திருப்பானாதலால், அவனைக்காணுமற் செல்வோ
மாயின்,அவன் மிக்கதுயரத்திலழுந்திவாடுவான், நாமவனைக்கண்டுகொண்
டு,பின்னர் நமதெண்ணத்தின்படிசெல்வது உத்தமமாயிருக்கின்றதென்று
சொல்லினள். அதையத்தேவகணங்கள் கேட்டு மனமிரங்கிச், சோமகா
ந்தராசனையுஞ் சுதன்மையையும்பார்த்து, ஓ சர்வஜனமனோரதராகிய ச
த்தியசிலர்களே, உங்கள்குமாரனாகிய ஏமகண்டராசன் விநாயகமூர்த்தி
யைத்தினந்தோறும் வேதாகமவிதிப்படி மிகுந்த அன்புடன் பூசைசெய்
து பரிபக்குவனாகியிருக்கி... றனாதலாலும், நீங்களும்அவனைக்காணுதுசெ
ல்லக்கருத்துரு... உங்களெண்ணப்படி இவ்விமானத்தை அ...
நகரின்புறத்து நி... ரும், நீங்கள் அவனைச்கூவி, அவன்மனதைத
திருப்திசெய்யு... சால்லி, அந்நகரத்தின் வடதிசைப்புறத்தில்

விமானத்தைச் செலுத்திக்கொண்டுபோய் நிறுத்தினார்கள். அரசன் அள
வற்ற ஆனந்தங்கொண்டு, தன்னுடன்வந்திருக்கின்ற அமைச்சர்இருவரை
யும் ஏமகண்டராசனிடத்தனுப்பினன். பின்னர் அவ்வமைச்சர்கள்சென்
று, இராசகுமாரனைக்கண்டு பணிந்துநின்றனர். அவனுந் தனது கரங்களை
க்கூப்பிப் பிரதிவந்தனஞ்செய்து, அவர்களைத் தனதருகிலிருக்கவைத்து,
இவர்கள் தனித்துவந்தமையால், நமது தாய்தந்தையர் இறந்தனரோ பி
ழைத்திருக்கின்றனரோ வென்னுங் கவலைகொண்ட மனத்தோடு, அமை
ச்சர்களே - என்னை யீன்ற அருங்குரவர்கள் எவ்வாறாகி யிருக்கின்றன
ரென்று வினாவினன். அதற்கவ்வமைச்சர்கள் முகமலர்ந்து, ஓ நரேந்திரசி
காமணியே - உமது மனத்திற் கிலேசப் படவேண்டாம், உமது தாய்தந்
தையர் இதுகாறும் வனத்திற் சுகசீவியராயிருந்து, இப்போது தேவரூபம்
பெற்றிருக்கின்றார்கள். அஃதெவ்வாறெனில், யாங்கள் இந்நகரத்தைவிட்
டுநீங்கி, மிக்கதுயரத்தோடும் வனத்திற்சென்று, அவ்விடத்திற் சின்னா
ட்களைக் கழிவுசெய்திருக்கையில், உமதுதந்தை தவசிரேஷ்டராகிய பிரு
கு முனிவராலே தொழுநோய் முழுவது நீங்கப்பெற்று, அம்மகானுபா
வரிடத்தில் விநாயகபுராணங்கேட்டனர். அதைக்கேட்ட மகத்துவத்தால்,
அவ்விநாயகமூர்த்திக்குக் கிருபைசுரந்து, சகல தேவகணங்களோடும் ஒ
ருதெய்வவிமானம் அனுப்பினர். அவ்விமானத்தில் யாங்கள் நால்வரும்
ஆரோகணித்து ஆகாயமார்க்கமாகச் செல்லுகையில், உமது குரவர் உம்
மைக்காணவேண்டு மென்கின்ற ஆவலைக்கொண்டு, அவ்விமானத்தோடும்
இந்நகரின் புறத்து வந்திருக்கின்றார்கள். ஆதலால் - நீரங்ஙன மெழுந்த
ருளி, அவர்களுடைய மனக்கவலையை யொழிக்கவேண்டு மென்று பிரார்
த்திக்க, உடனே - ஏமகண்டராசன் பெருமகிழ்ச்சிகொண்டு, வந்த மந்தி
ரிகளோடுந் தன்னிடத்திலிருந்த மந்திரிகளும் புடைசூழ வெளிக்கொண்
டனன். அந்நகரத்துள்ளவர்களும் அவனோடு புடைசூழ்ந்து, யானைக்கூ
ட்டங்கள்போல நெருங்கிவந்தனர். அதையவ்விமானத் தலைவர்கள்நோ
க்கிச், சோமகாந்தராசனைப்பார்த்து, அரசனே- உனதருமைப் புத்திரன்
வருகின்றான், நீ அவனைக்கண்டு குலாவி, சொல்லத்தக்க விடயங்களைச்
சொல்லக்கடவையென்றனர். அரசன் அவ்வுத்தரவைச் சிரசில்வகித்துத்,
தான் தனது பத்தினியோடும் அவ்விமானத்தினின்று மிறங்கினன். உட
னே- அப்புத்திரன் விரைந்துவந்து, இருவர் பாதங்களையுஞ் சாஷ்டாங்க
மாகப்பணிந்தனன். அவனைச் சோமகாந்தராசன் தழுவியெடுத்துத், த
னதுமார்பில் அணைத்துக்கொண்டு, அப்பா குழந்தாய்- சாதுசற்சனசம்
மத சத்கர்ம சத்புருஷாகார பூசுரோத்தமராகிய பிருகு மகாமுனிவரு
டைய கடாக்ஷவீக்ஷண்ணியத்தினால், யான் முன்னர் அடைந்திருந்த
தொழுநோய் முதலியதுன்பங்களை நீக்கி, இத்தன்மைத்தாகிய மேலான
பாக்கியத்தைப்பெற்றேன், உனக்குத்தரிசனந்தந்து செல்லுவோமென்
னு மாவலைக்கொண்டு, யாங்களெல்லாம் இத்திருக்கோலத்தோடும் இங்
குவந்தனம், இப்போது கணேசமூர்த்தியினுடைய உலகத்திற்குச் செ
ல்லுகின்றோம், இனியெங்களைக்குறித்து யாதொருகவலையுங் கொள்ளா
மல், நீதிசாத்திர முறைமைப்படி இராச்சிய பரிபாலனஞ்செய்து வரக்
கடவை என்றனன். அதைக்கேட்ட ஏமகண்டராசன் மிக்கதுயரங்கொ

ண்டு, எனதருமைத் தந்தையே - இதுகாறுந் தங்கள் வரவுக்கெதிர்நோ
க்கிக், கணேசமூர்த்தியை இடைவிடாது பூசித்துவந்தேன், இப்போது
என தெண்ணத்தின் படியே தாங்கள் சகல வியாதிகளையுமொழித்து இ
த்தன்மைத்தாகிய தெய்வசரீரத்துடனே வரப்பெற்றேன், இனி அரை
க்கணமேனுந் தங்களைவிட்டுப் பிரிந்திரேன், அடியேனையுந் தாங்கள்செல்
கின்றகதியிற் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மிகுந்த உருக்கத்துட
ன் விண்ணப்பஞ் செய்தனன். அதனை அவனோடு அந்நகரத்தினின்றும்
வந்த அமைச்சர் முதலாயினோர் கேட்டு, மிக்க கிலேசத்தை யடைந்து,
சோமகாந்தராசனைப் பணிந்தெழுந்து, ஓ சார்வபௌமா- யாங்களுங் க
ணேசமூர்த்தி யுலகத்திற்கு வருகின்றோம், இப்பிரபஞ்ச வாழ்க்கையால்
வருவது துக்கமேயன்றி என்னசுகமிருக்கின்றது, தேவரீர் எம்மையும் அ
ழைத்துக்கொண்டு செல்லாமல் இங்கு நிறுத்திவிட்டால், ஓ ரிமையளவு
ம் யாங்களுயிரை வைத்திரோம், துன்பத்திற் கேதுவான பிரபஞ்சவாழ
்க்கையில் எமக்கு யாதொரு பற்றுமில்லையென்று வருந்தி முறையிட்டார்
கள். இவ்வாறு புத்திரனும் அந்நகரத்துள்ளவர்களுஞ் செய்துகொண்ட
பிரார்த்தனைகளைச் சோமகாந்தராசன்கேட்டு, ஓ அன்பிற்சிறந்த நண்பர்க
ளே- உங்களையுங் கணேசலோகத்திற்கு அழைத்துக்கொண்டு செல்ல எ
னக்கோராதி பத்தியமில்லை, அவ்வவர்கள் செய்ததவப்பயன் கூட்டி மு
டிக்கின்றபோது, அக்கர்த்தாவின் கிருபையால் அந்த மேலான கதியை
யடையவேண்டுவதே யல்லாமல், அஃது நினைத்தமாத்திரத்திற் கூடுவதா
னகாரியமுமன்று, இதற்கு நம்மாற்செய்யக் கூடுமானது ஒன்று மில்லை
யென்று சொல்லினன். இவ்வாறு ஒருவர்க்கொருவர் கிலேசங்கொண்டி
ருக்கின்றகாரணத்தைத்தேவகணங்கள்பார்த்து, அரசனே- உனதுகுமார
னாகிய ஏமகண்டராசன் விநாயகமூர்த்தியைப் பூசைசெய்து மகாயோக்கி
யனாகிப் பரிபக்குவப்பட்டிருக்கின்றான், அவன் இவ்விமானத்திலேறத்தக்
கவ னென்பதற்குச் சந்தேகமில்லை, இந்நகரத்தார்களோ வெனில், தே
வதேவராகிய விநாயகக்கடவுள் மகத்துவங்களைச்சிறிதுங்கேட்டவரல்லர்,
அவைகளைக்குறைவில்லாமற்சொல்லவுங்காலமில்லை, ஆயினும்- உவ்விநா
யகமூர்த்தி மகத்துவங்களை முழுவதுங்கேட்ட மேலாகியபயனைத் தானே
கொடுக்கத்தக்கதாகியும், தீவினையனைத்து நீக்கிச் சுகத்தைத்தரவல்லதாகி
யும் ஒரு சூட்சுமமிருக்கின்றது, அஃதியாதெனில்- காசித்தலத்தில், சத்
தாவரணத்தில், ஐம்பத்தாறு விநாயகமூர்த்தங்களைப் பிரதிட்டைசெய்தி
ருக்கின்றதே, அந்தந்த மூர்த்திகளினுடைய திருநாமங்களைச் சொல்லுகி
ன்றோம், அவைகளை இந்நகரத்தார் கேட்பார்களாயின், உடனே- சுத்தப
வித்திரத்தையடைந்து, அந்தமேலான கதிக்குப் பாத்திரராவார்கள். அ
தாவது, ஓ சற்சனர்களே - முதலாவரணத்தில், துண்டி விநாயகர்- துர்
க்கை விநாயகர்- அர்க்க விநாயகர்- பிரசன்ன விநாயகர்- வீம விநாயகர்-
சந்திர விநாயகர்- என்று ஆறு மூர்த்தங்கள். இரண்டாமாவரணத்தில்,
சித்தரூப விநாயகர்- லம்போதர விநாயகர்- கூபதந்த விநாயகர்- சலாபு
க விநாயகர்- குலப்பிரிட விநாயகர்- சதுர்த்தி விநாயகர்- பஞ்சமி விநா
யகர்- முண்ட விநாயகர்- சமுசிக விநாயகர்- விடங்க விநாயகர்- நீச வி
நாயகர்- இராசபுத்திர விநாயகர்- பிரணவ விநாயகர்- உபகார விநாயக

ர்- என்று பதினுன்கு மூர்த்தங்கள். மூன்ரு மாவரணத்தில், வக்கிரது ண்ட விநாயகர்- ஏகதந்த விநாயகர்- திரிமுக விநாயகர்- பஞ்சமுக விநா யகர்- ஏரம்ப விநாயகர்- விக்கினராச விநாயகர்- வரத விநாயகர்- மோ தகப்பிரிய விநாயகர்- என்று எட்டு மூர்த்தங்கள். நான்காமாவரணத்தி ல், ஏகோமயப்பிரத விநாயகர்- சிங்கமுக விநாயகர்- கூர்மிதாக்ஷவிநாயகர் கிப்பிரப்பிரசாதவிநாயகர்- சிந்தாமணிவிநாயகர்- தந்தவக்திர விநாயகர்- அபிசண்டிவிநாயகர்- ஊர்த்துவாண்டமுண்டவிநாயகர்- என்று எட்டுமூர் த்தங்கள். ஐந்தாமாவரணத்தில், மணிகர்ன்னவிநாயகர்- ஆசாசிருட்டிவி நாயகர்- கசகர்ன்னவிநாயகர்- கண்டாவிநாயகர்- சுமங்களவிநாயகர்- மந்தி ரவிநாயகர்- என்று ஆறுமூர்த்தங்கள். ஆருமாவரணத்தில், மோதகவிநா யகர்- சுமுகவிநாயகர்- துன்முகவிநாயகா- கணபவிநாயகர்- அபரவிநாயக ர்- ஆக்கினைவிநாயகர்- துவாரவிநாயகர்- அவிமுத்தவிநாயகர்- என்று எட் டுமூர்த்தங்கள். ஏழாமாவரணத்தில்,ஆமோதவிநாயகர்- பாகீரதவிநாயக ர்-, அரிச்சந்திரவிநாயகர்- கபர்த்திவிநாயகர்- பெந்துவிநாயகர்- சனகவி நாயகர்- என்று ஆறுமூர்த்தங்கள். இவ்வாறு ஐம்பத்தாறுமூர்த்தங்களெ ன்று தேவகணங்கள்சொல்ல, இத்திருநாமங்களைக்கேட்டமாத்திரத்தில், ஏ ம்கண்டராசன் முதலிய யாவர்க்குந் தெய்வசரீரமுண்டாகிச்,சோமகாந்த ராசனுடனே விமானத்திலேறி, விநாயகலோகத்தைச்சேர்ந்து, கணேச மூர்த்தியினுடைய சாமீப பதவியைப்பெற்று வாழ்ந்திருந்தார்கள். சோ மகாந்தராசன் அகண்டாகார பரிபூரண சோதிமயமாகிய விநாயகக்கடவு ளுடைய சாரூப பதவியைப்பெற்றுப், பரமானந்தசாகரத்தின் மூழ்கியி ருந்தனன்.ஆதலால்- இந்த மேலானபுராணத்தை யாவராயினுஞ் சிரத் தையோடும் பத்தியோடுங் கேட்பாராயின், அவர்கட்குச்- சனனம்- மர ணம்- இடர்- வறுமை- வியாதி- துக்கம்- சோகம்- மோகம்- பாவம்- அரி ட்டம்- பகை- பயம்- இடையூறு- முதலியதுன்பங்களில் ஒன்றேனுநெ ருங்காது. அன்றியும்- சூரியகிரகணமுஞ் சந்திரகிரகணமுமாகின்றகாலத் தில், உருத்திரபூமியிற்சென்று,ஆயிரபாரம்பொன்னைக் கிரமப்படி சற்பா த்திரமறிந்து தானஞ்செய்தபயனும், போர்முகத்தினின்றுஞ் சயம்பெற் று வெற்றிமாலைசூடிவந்தவர்கள் பெறத்தக்கபயனு மடைவார்கள். வேள் விமுன்னிலையில் யானைமுதலிய சகலபொருள்களையுந் தக்ஷணையோடுதா னங்கொடுத்தவர்கள் அடையும்பயன், இப்புராணத்தை ஒருதரம் வாசிக் கின்றவர்கள் அடையும்பயனுக்குச் சரியாகாது. மேலும்- இப்புராணத் தைத் தன்கரத்தாலெழுதினவனும், ஒருவனுக்குத்திரவியந் தந்துஎழுது வித்தவனும், கோடிகன்னிகாதானங்களையுங் கோடிகோதானங்களையும் நல்லநியமத்தோடுசெய்தவன் அடையும்பயன்யாதோ, அதனைத்தடையி ன்றியடைவன். இப்புராணத்தை யெழுதிவைத்திருக்கின்றவீட்டில், அஷ் டஐசுவரியமும்வந்து குதிகொள்ளும். அன்றியும்- பூதங்கள்- பிரேதங்க ள்- பேய்கள்- பாலக்கிரகங்கள்- முதலானவைநெருங்காவண்ணம்,கணே சமூர்த்தியானவர் சதாகாலமுங்குடியாயிருந்து,அவ்வீட்டிலுள்ளோர்கட் கெல்லாம் எத்துன்பமும்அணுகவொட்டாமற்பாதுகாத்துவருவார்.இப்பு ராணத்தைப்பூசிக்கின்றவர்களையும், புந்தியிற் சிந்திக்கின்றவர்களையுங்கண் டு தரிசித்தபேர்கள், தங்கள்குலாசாரவொழுக்கங்களிற் றவறிய அசுத்தர்க

னாலும்,உடனே-சுத்தபவித்திரராகிநற்கதியிற்சேருவாரென்றால்,அதை நேரிற்பூசிப்பவர்முதலாயினோர் அடையும்பயனை,எவ்வளவிற்றென்றுணாக்கப்படும். அப்புண்ணியசீலர்களே, பிரமனாதிதேவர்களாலும் அகத்தியராதிமுனிவர்களாலுந் தொழற்குரியவர்கள். அவர்கட்கே, அணிமா- மகிமா- கரிமா- இலகிமா- பிராப்தி- பிராகாமியம்- ஈசத்துவம்- வசித்துவம்- என்கின்ற ‡ அட்டமாசித்திகளுங்கைகூடும். அவர்கட்கே, கற்பகவிருட்சம்- காமதேனு- சங்கநிதி- பதுமநிதி- சிந்தாமணி- முதலானவைகள் எதிர்நின்றேவல்புரியும். அவர்களே- அக்கரவிலக்கணம்- இலிகிதம்- கணிதம்- வேதம்- புராணம்- வியாகரணம்- நீதிசாத்திரம்- சோதிடசாத்திரம்- தருமசாத்திரம்- யோகசாத்திரம்- மந்திரசாத்திரம்- சகுனசாத்திரம்-சிற்பசாத்திரம்- வைத்தியசாத்திரம்- உருவசாத்திரம்- இதியாசம்- காவியம்- அலங்காரம்- மதுரபாடனம்- நாடகம்- நிருத்தம்- சத்தப்பிரமம்- வீணை வேணு- மிருதங்கம்- தாளம்- அத்திரபரீக்ஷை- கனகபரீக்ஷை- இரதபரீக்ஷை- கஜபரீக்ஷை- அசுவபரீக்ஷை- இரத்தினபரீக்ஷை- பூமிபரீக்ஷை- சங்கிராமவிலக்கணம்- மல்லயுத்தம்- ஆகருடணம்- உச்சாடனம்- வித்துவேடனம்- மதனசாஸ்திரம்- மோகனம்- வசீகரணம்- இரசவாதம்- காந்தருவவாதம்- பைபீலவாதம்- கவுத்துகவாதம்- தாதுவாதம்-காருடம்- நட்டம்- முட்டி- ஆகாயப்பிரவேசம்- ஆகாயகமனம்- பரகாயப்பிரவேசம் அதிரிசியம்- இந்திரசாலம்- மகேந்திரசாலம்- அக்கினித்தம்பம்-சலத்தம்பம்- வாயுத்தம்பம்- திட்டித்தம்பம்- வாக்குத்தம்பம்- சுக்கிலத்தம்பம்- கனனத்தம்பம்- கட்கத்தம்பம்- அவத்தைப்பிரயோகம்- என்கின்ற அறுபத்துநான்கு கலைஞானங்களினும் வல்லவராவார்கள். அவர்கள் ஒருகாலத்தில் கோபிப்பார்களாயின், சொர்க்கமுதலாகிய சகலபுவனங்களும் வெந்துநீறாய்விடும். அன்றியும்- இப்புராணத்தைக் கணபதிமூர்த்திசந்நிதியின் முன்னரிருந்து அன்புடன்கேட்பார்களாயின், அவர்கள்கொலை-களவு-கள்-குருநிந்தை-பொய்-ஆகியபஞ்சமாபாதகங்களும்,ஸ்திரீஹத்தி-கோஹத்தி சிசுஹத்தி- முதலாகிய அளவற்ற தீவினைகளு நீங்கப்பெற்று, அழகு- குணம்- ஆயுள்- குலம்- சம்பத்து- வித்தை- விவேகம்- தனம்- என்கின்ற அட்டபாக்கியங்களைம் அடைந்து, கிடைத்தற்கரிய இந்திரபதவியைப் பெற்றுவாழ்வார்கள். மேலும்- இப்புராணத்தை இம்மையிற் சூத்திரர்கே

---

‡ அணிமா, மிகவுஞ்சிறியவுயிர்தோறும் பரமகாஷ்டையாய்ச் சென்றிருத்தல். மகிமா, மிகவுமுயர்ந்த மகமேருவைப்போலாக வேண்டுமெனிலாதல். இலகிமா,மேருபாரத்தையொத்த யோகியையெடுத்தால் இலேசாயிருத்தல். கரிமா, அணுப்போலிருக்குமியோகியை யெடுத்தால் மேருபாரமாயிருத்தல். பிராப்தி, எவ்வுலகத்திலுந்தடையறச்சஞ்சரித்தல். பிராகாமியம்,பரகாயப்பிரவேசம்பண்ணுதல்,அந்தரசஞ்சாரஞ்செய்தல், இச்சித்தபோகமனுபவித்தல். மண்ணிலவிண்ணில் உள்ளபொருள்களையும் முக்காலங்களையுந் தனதுதேககாந்தியாலறிதல். ஈசத்துவம், சர்வேஸ்வரனைப்போலத் தன்னிச்சைவழியில் முத்தொழிலுஞ்செய்து சூரியன்முதலியகோள்கள்தன்னேவல்கேட்கவிளங்குதல். வசித்துவம், தேவாதிமுதலிய உயிர்களையும் எல்லாவுலகங்களையுந் தன்வசமாக்கொள்ளுதல்.

ட்டால், மறுமையில் வைசியராவார்கள். வைசியர்கேட்டால், க்ஷத்திரியராவார்கள். க்ஷத்திரியர்கேட்டால், பிராமணராவார்கள். பிராமணர்கேட்டால், தேவராவார்கள். தேவர்கேட்டால், கணேசமூர்த்தியினுடைய சாரூபத்தை யடைவார்கள். ஆசார வீனர்களாயினும் இப்புராணத்தை ஆவலோடுங்கேட்பார்களாயின், பின்னர் தமக்கொருவர் நிகரில்லாத ஆசாரபூசிதராவார்கள். கணேசமூர்த்திக்குரிய சதுர்த்தியிற்கேட்டவர்கள், இம்மையிற் சகலகாமியார்த்தங்களையும்பெற்று, மறுமையில் மோட்சார்த்தத்தை யடைவார்கள். இப்புராணத்தில் ஆங்காங் கறையப்பட்டிருக்கின்ற தோத்திரங்களெவ்வளவோ, அவ்வளவுந் தினந்தோறும் பாராயணஞ் செய்துவருகின்றவர்கள், ஆணவம்- மாயை- கன்மம்- என்கின்ற † மும்மலங்களினின்று நீங்கிக், கணேசமூர்த்தியினுடைய மெய்ஞ்ஞானசொரூபத்தை யடைவார்கள். மேலும்- இவ்வுலகத்தில் அவர்களால் வெல்லக்கூடாத காரியமென்னவிருக்கின்றது. இப்புராணத்தை ஆதிதொட்டு அந்தம் வரையில் அன்போடுபடித்து, அல்லது ஒருவர்படிக்கக்கேட்டு, தானாதிகளைச்செய்து, யாகாதிகளைமுடித்து, அப்புராணத்தையலங்கரித்து, அருக்கியம்- பாத்தியம்- ஆசமனம்- கந்தம்- புட்பம்- நைவேத்தியம்- தூபம்- தீபம்- ஆலத்தி- கண்ணாடி- குடை- சாமரம்- ஆலவட்டம்- நிருத்தம்- கீதம்- வாத்தியம்- என்கின்ற சோட்சவுபசாரங்களோடு பூப்பிரதக்ஷணமாகத் திருவிழாவை நடத்தினவர்கள், விண்டுமுதலாயினோர் வணங்கத்தக்கதாகக், கணேசமூர்த்தியினுடைய சாரூபத்தை யடைவார்கள். இப்புராணத்தைக் கன்னிகைகேட்டால், நல்லகணவனைச்சேருவள். மலடிகேட்டால், அழகியமக்களைப்பெறுவள். தரித்திரன்கேட்டால், மிக்கபாக்கியமுடையவனாவன். வித்தையில்லாதவன்கேட்டால், சிறந்தவித்துவானாவன். அன்றியும்- எவனெவன் எந்தெந்தப்பொருள்களை யடையவிச்சைகொண்டிருக்கின்றானோ, அவனவன் அந்தந்தப்பொருளையடைந்து, கணேசமூர்த்தியினுடைய கிருபையைப்பெற்று வாழ்ந்திருப்பன். இப்புராணகேள்விமகத்துவத்தாற், குறள் - கூன் - ஊமை - செவிடு - குருடு - முடம் - உறுப்புமயக்கம் - உறுப்பில் பிண்டம் - ஆகிய எண்வகையுடற் குறைகளுநீங்கும். பதினெண்புராணங்களை முழுவதுங்கேட்டபயனும், சகலதீர்த்தங்களினுஞ் சென்றாடியபயனும், இவ்வொருபுராணத்தைக் கேட்பதினாலுண்டாகும். பதினாயிரம்வருடம் அக்கினிநடுவில்ஒற்றைக்கால் அங்குட்டவிரலையூன்றித் தவஞ்செய்வதனாலடையும் பேறு, இப்புராணத்திற் பத்தத்தியாயத்தைப்பயபத்தியோடுங்கேட்பதினாலடையும். அந்தியகாலவரையில் இப்புராணத்தைக்கேட்டுப் பலதானங்களைச்செய்வராயின், மறுமையிற்சக்கரவர்த்திகளாயிருப்பதன்றிப், பிறந்தநாடொடங்கி மரணகாலம்வரையிற் காசிநகரில் வாசஞ்செய்தவர்கட்குண்டானபயனையுமடைவார்கள், இப்புராணத்தைப் படித்தல், அதன்பயனைக்கேட்டல், அதைப்பூசித்தல், த

† அவை- செம்பிற்காளிதம்போலவும், தண்டுலத்தைப்பற்றிய தவிடு- உமி - முளை - போலவும், ஆன்மாவைப்பற்றி வினைகளை யூட்டுவிக்கும். இவற்றுள், தண்டுலம்- ஆன்மா, தவிடு- ஆணவமலம், உமி- மாயாமலம், முளை - கன்மமலமாம்.

ங்கள்கையாலெழுதல், எழுதியேற்போருக்குக்கொடுத்தல், ஒருவனைப் படிப்பித்தல், ஒருவனைக்கேட்பித்தல், ஒருவனைப்பூசிப்பித்தல், ஒருவனையெழுதுவித்தல், எழுதுவித்தீவித்தல், என்கின்றபுண்ணியங்களில் ஒருபுண்ணியத்தைக்கைவிடாது காக்கின்றவனெவனோ, அவனைக்கண்டவுடன் தவிசளித்தல்- கைகழுநீர்தரல்- கால்கழுநீர்தரல் - ஆசமனநீர்தரல் - நீராட்டல்- ஆடைசாத்தல்- முப்புரிநூல்தரல்- தேய்வைபூசல்- மலர்சாத்தல் மஞ்சளரிசிதூவல்- நறும்புகைகாட்டல்- விளக்கிடல்- கருப்பூரமேற்றல்- அமுதேந்தல்- அடைக்காய்தரல்- மந்திரமலராலருச்சித்தல், என்கின்ற சோடசவுபசாரங்களில் எதைச்செய்தாலும், அவர்கள் சிவபெருமானுடைய சூலாயுதத்திற்கும், விண்டுவினுடைய சக்கராயுதத்திற்கும், இயமனுடைய பாசத்திற்கும், மற்றொருவனுடையதண்டத்திற்குமஞ்சார்கள். மேலும்-சகலபுவனகர்த்தராகிய கணேசமூர்த்திக்கொப்பான மற்றொருமூர்த்தியும், அவர்மகிமையைக் காட்டுகின்ற இப்புராணத்தைப்போல மற்றொருபுராணமும், அதை வாசித்தோர்கள் அடையும்பயனைப்போல மற்றொருபயனும், சொர்க்கமத்தியபாதலமென்கின்றதிரிலோகங்களினுமில்லை. இது சத்தியமேயென்று சகல சுருதிகளும்இதனைப் பாராயணஞ்செய்யுமானால், இதன் மகத்துவம் என்போலிகளால் அளவிட்டுரைக்கும்பான்மையை யுடையதோ. பொற்கொன்றைசூடிய சடாமகுடத்தினையுடைய கணேசமூர்த்தியின் மகத்துவத்தை யோதுகின்ற இப்புராணமானது, தர்ம்மார்த்த காமமோக்ஷமென்கின்ற நான்கு புருஷார்த்தங்களையுஞ்சேமித்துவைத்திருக்கின்ற பொக்கசமென் றெண்ணக்கடவீர்கள்.

புராணமகத்துவம்,

முற்றிற்று.

உபாசனகாண்டத்திலுள்ள படலங்களில்

தொடர்ச்சிபெற்றுவருவன,

முதலாவது- மூவர்வரம் பெறுபடலமுதல், நான்காவது- திருமணப்படலம் வரையி லொருதொடர்.......................................*

ஆறுவது- தக்கனுபாசித்த படலமுதல், பத்தாவது- உருக்குமாங்கதனுபாசித்த படலம்வரையி லொருதொடர்.....................................*

பதினோராவது- கிருச்சமதர் உபாசித்த படலமுதல், பதினான்காவது- விமலனுபாசித்த படலம்வரையிலொருதொடர்..............................*

இருபத்திரண்டாவது- புருசுண்டி யுபாசித்த படல முதல், முப்பத்தாறுவது- சூரசேனனுபாசித்த படலம்வரையிலொருதொடர்..............*

உ

கணபதிதுணை.

விநாயகபுராணவசனகாவியம்.

உபாசனுகாண்டம்.

பூமாதுதனைமணந்தபுயல்வண்ணப்பெருமாளும் புலவர்போற்று, நாமாதுதனைமணந்தநான்முகனும்போர்மாதுநயக்குமெண்டோட், கோமானுந்தானேயென்றுணர்த்துதற்கேபிரணவகுஞ்சரமாய்த்தோன்றி, மாமாவின்முகத்தானையுயிர்த்தானைநினைந்திறைஞ்சிவழுத்துவாமே.................................*

முதலாவது.

மூவர்வரம்பெறுபடலம்.

ஐம்புலாதிகளை நிக்கிரகித்து அரியதவங்களைச்செய்து சிறப்பெய்திய சவுனகாதி முனிவர்களே, விநாயக மூர்த்தியினுடைய புராணகேள்வி மகத்துவத்தால், வேதவியாச முனிவருஞ் சோமகாந்தராசனு மடைந்த பேற்றினைச்சொன்னேம். இப்பால் - அத்தன்மைத்தாகிய மேலானபுராணத்தைப், பிருகுமகாமுனிவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்ற முறைமைப்படி, மூவருபாசித்து வரம்பெற்ற வரலாற்றினைச் சொல்வோங் கேட்பீராக. பூர்வத்தில் - ஒரு பிரமப்பிரளய முண்டானபோது, பன்னிரண்டுசூரியர்களும் உதையமாய், நூறுவருடம் மழையில்லாமல் எரித்துப், பஞ்சபூத பவுதிகாத்மகமாயுள்ள சகத்துக்களையெல்லாம் பஸ்பஞ்செய்து. பூமியைத்தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆதிசேடனுடைய பணமகுடங்களைத்தகிக்க, அவனுடைய முகங்களினின்றுங் காளகூட விஷாக்கினிபிறந்து, அந்தவிஷாக்கினியுஞ் சூரியாக்கினியும் ஒன்றாகக்கூடி, ஆதிசேடன்முதற் றுவாதசாதித்தர்களையும் எரித்து நீறாக்கி, அவ்வாறுநீறாக்கிய அக்கினிகளினின்றுஞ் சத்தமேகங்கள்பிறந்து, நூறுவருடபரியந்தம் யானைத்துதிக்கைபோலநீர்த்தாரைகளைவருஷித்து, எங்கும்ஏகாரணவமாகிநிறைந்து, அவ்வருஷஜலமும் பூமிபஸ்பமும் ஒன்றாகக்கலந்து வாயுஸ்தம்பமாய்நிற்க, அதினின்றும் வடவாமுகாக்கினிபிறந்து அவ்வேகாரணவமானசலத்தையெல்லாம் கிரகித்தது. பின்னர் அவ்வடவாக்கினி பிரசண்டவாயு

ங்கள்கையாலெழுதல், எழுதியேற்போருக்குக்கொடுத்தல், ஒருவனைப் படிப்பித்தல், ஒருவனைக்கேட்பித்தல், ஒருவனைப்பூசிப்பித்தல், ஒருவனையெழுதுவித்தல், எழுதுவித்திவித்தல், என்கின்ற புண்ணியங்களில் ஒருபுண்ணியத்தைக்கைவிடாது காக்கின்றவனெவனோ, அவனைக்கண்டவுடன் தவிசளித்தல்- கைகழுநீர்தரல்- கால்கழுநீர்தரல் - ஆசமனநீர்தரல் - நீராட்டல்- ஆடைசாத்தல்- முப்புரிநூல்தரல்- தேய்வைபூசல்- மலர்சாத்தல் மஞ்சளரிசிதூவல்- நறும்புகைகாட்டல்- விளக்கிடல்- கருப்பூரமேற்றல்- அமுதேந்தல்- அடைக்காய்தரல்- மந்திரமலராலருச்சித்தல், என்கின்ற சோடசவுபசாரங்களில் எதைச்செய்தாலும், அவர்கள் சிவபெருமானுடைய சூலாயுதத்திற்கும், விண்டுவினுடைய சக்கராயுதத்திற்கும், இயமனுடைய பாசத்திற்கும், மற்றொருவனுடையதண்டத்திற்குமஞ்சார்கள். மேலும்-சகலபுவனகர்த்தராகிய கணேசமூர்த்திக்கொப்பான மற்றொருமூர்த்தியும், அவர்மகிமையைக் காட்டுகின்ற இப்புராணத்தைப்போல மற்றொருபுராணமும், அதை வாசித்தோர்கள் அடையும்பயனைப்போல மற்றொருபயனும், சொர்க்கமத்தியபாதலமென்கின்ற திரிலோகங்களினுமில்லை. இது சத்தியமேயென்று சகல சுருதிகளும்இதனைப் பாராயணஞ்செய்யுமானால், இதன் மகத்துவம் என்போலிகளால் அளவிட்டுரைக்கும்பான்மையை யுடையதோ. பொற்கொன்றைசூடிய சடாமகுடத்தினையுடைய கணேசமூர்த்தியின் மகத்துவத்தை யோதுகின்ற இப்புராணமானது, தர்ம்மார்த்த காமமோக்ஷமென்கின்ற நான்கு புருஷார்த்தங்களையுஞ்சேமித்துவைத்திருக்கின்ற பொக்கசமென் றெண்ணக்கடவீர்கள்.

புராணமகத்துவம்,

முற்றிற்று.

உபாசனகாண்டத்திலுள்ள படலங்களில்

தொடர்ச்சிபெற்றுவருவன,

முதலாவது- மூவர்வரம் பெறுபடலமுதல், நான்காவது- திருமணப்படலம் வரையி லொருதொடர்.......................................*

ஆறுவது- தக்கனுபாசித்த படலமுதல், பத்தாவது- உருக்குமாங்கதனுபாசித்த படலம்வரையி லொருதொடர்..................................*

பதினோராவது- கிருச்சமதர் உபாசித்த படலமுதல், பதினான்காவது- விமலருபாசித்த படலம்வரையிலொருதொடர்......................*

இருபத்திரண்டாவது- புருசுண்டி யுபாசித்த படல முதல், முப்பத்தாறுவது- சூரசேனனுபாசித்த படலம்வரையிலொருதொடர்..............*

உ

கணபதிதுணை.

விநாயகபுராணவசனகாவியம்.

உபாசனாகாண்டம்.

பூமாதுதனைமணந்தபுயல்வண்ணப்பெருமாளும் புலவர்போற்று, நாமாதுதனைமணந்தநான்முகனும்போர்மாதுநயக்குமெண்டோட், கோமானுந்தானேயென்றுணர்த்துதற்கேபிரணவகுஞ்சரமாய்த்தோன்றி, மாமாவின்முகத்தானையுயிர்த்தானைநினைந்திறைஞ்சிவழுத்துவாமே.................................*

முதலாவது.

மூவர்வரம்பெறுபடலம்.

ஐம்புலாதிகளை நிக்கிரகித்து அரியதவங்களைச்செய்து சிறப்பெய்திய சவுனகாதி முனிவர்களே, விநாயக மூர்த்தியினுடைய புராணகேள்வி மகத்துவத்தால், வேதவியாச முனிவருஞ் சோமகாந்தராசனு மடைந்த பேற்றினைச்சொன்னேம். இப்பால் - அத்தன்மைத்தாகிய மேலானபுராணத்தைப், பிருகுமகாமுனிவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்ற முறைமைப்படி, மூவருபாசித்து வரம்பெற்ற வரலாற்றினைச் சொல்வோங் கேட்பீராக. பூர்வத்தில் - ஒரு பிரமப்பிரளய முண்டானபோது, பன்னிரண்டுசூரியர்களும் உதையமாய், நூறுவருடம் மழையில்லாமல் எரித்துப், பஞ்சபூத பவுதிகாத்மகமாயுள்ள சகத்துக்களையெல்லாம் பஸ்பஞ்செய்து. பூமியைத்தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆதிசேடனுடைய பணாமகுடங்களைத்தகிக்க, அவனுடைய முகங்களினின்றுங் காளகூட விஷாக்கினிபிறந்து, அந்தவிஷாக்கினியுஞ் சூரியாக்கினியும் ஒன்றாகக்கூடி, ஆதிசேடன்முதற் றுவாதசாதித்தர்களையும் எரித்து நீறாக்கி, அவ்வாறுநீறாக்கிய அக்கினிகளினின்றுஞ் சத்தமேகங்கள்பிறந்து, நூறுவருடபரியந்தம் யானைத்துதிக்கைபோலநீர்த்தாரைகளைவருஷித்து, எங்கும்ஏகாரணவமாகிநிறைந்து, அவ்வருஷஜலமும் பூமிபஸ்பமும் ஒன்றாகக்கலந்து வாயுஸ்தம்பமாய் நிற்க, அதினின்றும் வடவாமுகாக்கினிபிறந்து அவ்வேகாரணவமானசலத்தையெல்லாம் கிரகித்தது. பின்னர் அவ்வடவாக்கினி பிரசண்டவாயு

விலொடுங்கி, அவ்வாயு ஆகாயத்திலொடுங்கி, ஆகாயம் ஆத்மாவிலொடுங்கி, ஆத்மாபிரமாவிலொடுங்கி, பிரமா விண்டுவிலொடுங்கி, விண்டு உருத்திரனிலொடுங்கி, உருத்திரன் மகேச்சுரனிலொடுங்கி, மகேச்சுரன் சதாசிவனி லொடுங்கி,சதாசிவன்விந்துவிலொடுங்கி,விந்து நாதத்திலொடுங்கி, நாதஞ் சத்தியிலொடுங்கி, சத்தி சிவத்திலொடுங்கி, சிவம்பரத்திலொடுங்கி,பரம்பராபரத்திலொடுங்கியது, அப்பராபரமொன்றுமே எல்லாங்கடந்த தத்துவ முடிவிலே பரப்பிரம சொரூபமாகி யிருந்தது. அப்பரப்பிரமசொரூபியாகிய பரமாத்மாவானவர்,நால்வகைத்தோற்றம்-எழுவகைப்பிறப்பு-எண்பத்து நான்கு நூறுயிரம் யோனிபேதங்களா யுள்ள † சீவாத்மாக்களெல்லாங்,கன்மங்கட்கிடானசரீரங்களையெடுத்து-ஆதிதெய்வீகம்- ஆதிபௌதீகம்- ஆதியாத்மீகம்-என்கின்ற * தாபத்திரயாக்கினிகளாற் றகிக்கப்படுந்துயரங்களை நீங்கிச், சிறிது இளைப்பாறும் படியாகத் தம்மிடத்திலொடுக்கிவைத்துக்கொண்டிருந்து. பிரளயம் நீங்கியவுடன் முன்போலவே அவைகட்குத் தனுகரண புவனபோகங்களைத் தந்து கன்மங்களைப்புசிப்பித்து; அக்கன்மவொப்பில் மலசம்பந்தமா யிராநின்ற பாசபந்தங்களைப்போக்கி முத்தியிற்சேர்க்குநிமித்தம். மீளவுஞ் -சிருட்டி-திதி- சங்காரம்- என்கின்ற முத்தொழில்களைநடப்பிப்பதற்குத்திருவுளங்கொண்டு,வக்கிரதுண்டவிநாயகர்திருவவதாரஞ்செய்து, இராசதம்- சாத்துவிகம்-தாமதம்-என்கின்ற-தமது முக்குணங்களினின்றும் - பிரமன்- விண்டு- உருத்திரன்-என்னு மூவர்களுதித்துவருமாறுஅவர்கட்கு-உருவையும்- அறிவையுமுண்டாக்கியருள,அவ்வாறவர்க ளுற்பத்தியாகிப்பின்னர் தங்களைப் படைத்தருளிய பரப்பிரமசொரூபமின்னதென் றறியவேண்டுமென்று, வெறும் வெளிகளெங்குந்தேடிக் காணுமல், தேவவருடத்தி லாயிரவருடந் தவஞ்செய்தார்கள், அத்தவத்திற்குப் பரப்பிரமசொரூபியாகிய வக்கிரதுண்டமூர்த்திக்குக் கிருபைசுரந்து, கோடிசூரியப் பிரகாசத்தினும் அதிகசோதியைவீசுகின்ற திருவுருவமும்,நவரத்ந கிரீடம்- குண்டலம்- புஜகவசம்- சரப்பளிபதக்கம்-பாதச்சிலம்பு-முதலாகிய ஆபரணங்களும்,துதிக்கையும், நீண்டுவளர்ந்திருக்கின்ற தந்தங்களும்.மதத்தைப்பொழிகின்ற யானைமுகமும், கத்தி-கேடகம்-வேல்-வில்-என்னு மாயுதங்களை

---

† நால்வகைத் தோற்றமாவன-பை-முட்டை - நிலம்-வியர்வையாம். எழுவகைப் பிறவியாவன- தேவர்- மக்கள்-விலங்கு- புள்-ஊர்வன-நீர்வாழ்வன-தாவரமாம். எண்பத்துநான்கு நூறுயிரம் யோனிபேதங்க ளாவன- தேவர்பதிநான்கு நூறுயிரம்- மக்கள்ஒன்பதுநூறுயிரம் - விலங்கு-பத்துநூறுயிரம்- புள்பத்துநூறுயிரம்- ஊர்வனபதினொருநூறுயிரம்-நீர்வாழ்வன பத்துநூறுயிரம்-தாவரம் இருபதுநூறுயிரமாம்.

* ஆதிதெய்வீகமாவது, மாதாவின்கருப்பத்தி லிருக்கும்போது உண்டாகின்ற வியசனமும்- சனனமரணத்தி லுண்டாகின்றவியசனமும்-இயமதண்டனை நரகத்திலுண்டாகின்ற வியசனமுமாம். ஆதிபௌதீகமாவது- குளிர்- வெப்பம்- மழை- காற்று- மின்னல்- இடி- சுவர்விழுதல்-கல்விழுதல்- இவைகளால் வருந்துன்பமாம். ஆதி யாத்மீகமாவது, சரீரத்

த்தரித்திருக்கின்ற நான்கு அஸ்தங்களும்,தாமரைமலர்போன்றஇரண்டுதிருவடிகளும், சந்திரஹாரத்தினையுங் கொன்றைமாலையினையுந் தரித்திருக்கின்றஅழகியமார்பும், சகலலோகங்களையும் ஓர்நொடிப்போதிற்பஸ்மீபடலமாக்கவல்ல நுதல்விழியுங்கொண்டு, அவர்களெதிரிற் பிரத்தியட்சமாக உடனே அம்மூவருக்கும் அச்சமும் அன்பு முண்டாகிச், சரீரந்தடுமாற நெக்குவிட்டு நெஞ்சமுருகிக், கரங்களைச்சிரமேற் குவித்தவண்ணஞ்சரோலென்றெழுந்து, அவர்களிச்சையிற் றோன்றியபடியெல்லாம் ஆடிப்பாடி அனந்தமுறை வலம்வந்து, பூமியில்வீழ்ந்து,சாஷ்டாங்கமாகநமஸ்கரித்து ஆனந்தபரவசங்கொண்டு,தோத்திரஞ்செய்வதானார்கள்.

நிருவிகற்பமாய்நிறைந்தவானந்தபூரணமாய்... ... ... *
நிருவிகாரமாய்நிர்க்குணமாயத்துவிதமாய் ... ...*
நிருவிசேடமாய்நிரஞ்சனமாகியொன்றாகு ... ... *
நிருமிதப்படாக்கணேசநின்னீள்கழறொழுதாம்... ... ... *

பிரமமாயொளியாய்நிராகாரமாய்ப்பெரிதாய்த் ... ... *
தரணியாதிதத்துவமெலாங்கடந்ததத்துவமாய் ... ...*
வரமெலாந்தரும்வள்ளலாயேகமாய்வதியும் ... ... *
பரமனாகியகணேசநின்பதமலர்தொழுதாம்... ... . *

என்றுநீங்குறாத்திருவுருவுடையதாயெங்கு ... ...*
மொன்றிநின்றுணர்ந்திடுமறிவானந்தவுருவாய்த் ... ... *
துன்றும்யோகினர்தியானிக்கப்படுஞ்சுகமாகிச் ... ... *
சென்றுசேர்தராக்கணேசநின்றிருவடிதொழுதாம் ... ... *

உலககாரணகாரணமாயுயிர்க்குயிரா... ... ... *
யிலகுஞானியர்தமையிழந்தெய்துநற்பேறாய்ப் ... ...*
பலவுமாய்ப்பரப்பிரமமாய்ப்பரேசமாய்ப்பரமாய்த் ... ...*
திலகமாகியகணேசநின்றிருவடிதொழுதாம்... ... ... *

சகலலோகமும்படைத்தளித்தழிக்குந்தற்பரமா ... ... *
யகிலலோகத்தும்புகலிடந்தனக்கிலாவமைவாய்ப் ... ...*
புகலுலோகங்களனைத்துக்கும்புகலிடந்தானும் ... ... *
பகவனாகியகணேசநின்பதமலர்தொழுதாம் ... ...*

உகத்துக்காதியாய்த்தேவருக்காதியாயுலவாச் ... ... *
சுகத்துக்காதியாய்ச்சுரர்களுக்கீசராய்ச்சுடரு ... ...*
மகத்துக்கீசராய்க்கணங்களுக்கீசராய்மதிப்போ ... ... *
ரகத்துக்கூடியகணேசநின்னடியிணைதொழுதாம்... ... ...*

இராசதத்தொழிலாகியசிருட்டியையியற்ற ... ... *
விராவிராசதத்துருக்கொடுபிரமனாய்மேலாய்ப்... ... ...*
பராவுவித்தைகளனைத்திற்கும்பயில்பிறப்பிடமா ... ... *
யொராதுநின்றருள்கணேசநின்றளிர்பதந்தொழுதாம் ...*

சோர்விலாதசாத்துவிதநற்றொழிலெனுந்திதிக்குச்... ... *
சார்வதானதாமதந்தனிலுருவுகொண்டரியாய்த் ... ... *
தீர்விலாப்பகையசுரரைச்செகுத்திருந்தேவர்க்... ... ...*
கார்வமேயருள்கணேசநின்னருட்பதந்தொழுதாம் ... ...*

தாமதத்தொழிலானசங்காரமாற்றுதற்குத் ... ... *
தோமகற்றுசாத்துவிதத்திற்றோன்றுருத்திரனை... ... ...*
யேமமுற்றிமையோர்முனிவோரெலாமிறைஞ்சச்... ... *
சேமவைப்பதாங்கணேசநின்சேவடிதொழுதாம் ... ...*

கிரணபந்தியாற்பயிரையுங்கிளர்சுதைப்பெருக்காற் ... *
பரவுதேவர்கட்டம்மையுமகிழ்வித்துப்பார்ப்பார்க் ... ... *
கரசனுயுலகத்துவெப்பறுத்திடுந்திங்கட்... ... ...*
சுருவமாகியகணேசநின்றுணையடிதொழுதாம் ... ...*

ஒளிப்பிழம்பதாய்மேகவாயுவினுருவாகி... ... ...*
விளிப்பில்காலங்கடெரிப்பதாய்த்தொழிலெலாம்விளைத்துக்..*
களிப்பதாய்ப்பலசத்தியதானசெங்கதிராய்த்... ... ... *
தெளிப்பநின்றருள்கணேசநின்சேவடிதொழுதாம் ... *

நிரப்பிறன்மமாய்த்துறக்கமாய்நிறைந்ததத்துவமாய்த்... ...*
தரைச்சொரூபமாய்ச்சமுத்திரமாய்த்திசைச்சுரராய்க்... ...*
கரப்பிலாவுலகனைத்துமாய்க்கலந்துநின்றருளும்... .... *
பரப்பிரமமாங்கணேசநின்பாதங்கடொழுதாம்... ... ... *

இவ்வாறு தோத்திரங்கள்செய்து ஓசகலபுவனுதாரகர்த்தனே,தேவரீருடையபாதாரவிந்தங்களைத் தரிசித்தபேர்களெல்லாஞ்சகலதுன்பங்களும்நீங்கிப் பேரின்பசுகத்தை யடையத்தக்கவர்களாவார்கள். அடியேங்களுந்தேவரீரைச் சரணகவடைந்தோம்,யாங்கள் கிருதார்த்தர்களாகும்படி காத்திரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். கேட்டீர்களோசவுனகாதிமுனிவர்களே,அவர்கள்மீது,விநாயகமூர்த்திகிருபைவைத்து,அன்பர்களே நீங்கள்செய்த தோத்திரங்கட்கு இரங்கினேம், நீங்கள்கருதியவரங்களைக் கேட்பீராக வென்றுதிருவாய்மலர்ந்தருளலும், ஓபரப்பிரமசொரூபியே தேவரீருடையதிவ்யசரணாரவிந்தங்களில் அடியேங்களுக்குத் திடமானபத்தி யுண்டாகும்படிவரங்கொடுத்து, யாங்கள் நடந்துகொள்ளவேண்டிய பணியினையும் அருள்செய்தால், அதை அடியேங்கள்நன்முடிகட்குப்பொன்முடியாகவணிந்து,நடாத்திவரக்கடவோமென்றார்கள்,அதற்கு விநாயகக்கடவுள் சந்தோஷித்து நமதுமுக்குணங்களினின்று முண்டானவர்களே, நம்மிடத்துங்கட்கு அளவற்றபத்திகள் பெருகத்தக்கதான வரத்தைத்தந்தோம், நீங்கள்நடந்து கொள்ளவேண்டிய பணியுஞ் சொல்லுகின்றோம்,அதாவதுஇராசதவடிவிற்றோன்றியபிரமனே, நீஇராசதத் தொழிலிலிருந்து சகலசீவராசிகளையுஞ் சிருட்டிசெய்யக்கடவை. தாமதவடிவிற்றோன்றிய விண்டுவே,நீ சாத்மீகத்தொழிலிலிருந்துயாவையுமிரட்சித்துவரக்கடவை.சாத்மீகவடிவிற்றோன்றிய உருத்திரனே, நீ தாமதத்தொழிலி

விருந்து யாவையுஞ்சங்காரஞ்செய்து வரக்கடவையென்றருளிச்செய்து, வேதாகமபுராணகலைகளைக்கொண்டுயாவையுஞ் சிருட்டிசெய்யத்தக்க சத்தியைப்பிரமனுக்கும்,யோகத்தினால்வேண்டிய வடிவங்களைக்கொண்டு யாவையும் இரக்ஷிக்கத்தக்கசத்தியைவிண்டுவுக்கும், ஏகாக்ஷர சடக்ஷரமந்திரங்களைக்கொண்டு எங்குந்தானாகவிருந்து யாவையுஞ் சங்காரஞ் செய்யத்தக்க சத்தியை உருத்திரருக்குங் கொடுத்தருளினார்.

கணபதிதுணை.

இரண்டாவது.

விசுவரூபங்காட்டியபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியைப் பிரமன் முதலிய மூவரும் அநுட்டித்து வரம்பெற்ற வரலாற்றினைச்சொன்னோம்,இப்பால் அம்மூவருக்குந்தமது விசுவரூபங்காட்டியருளியதிருவிளையாடலைச்சொல்லுவோங்கேட்பீராக.இவ்வாறு கணேசமூர்த்தியானவர் அம்மூவருக்கும் வரங்களையளித்தபின்னர்,பிரமதேவன் மீளவுஞ்சாஷ்டாங்கமாகச்சேவித்து,ஓதேவதேவோத்தமராகியகிருபாலுவே,உலகங்களையெல்லாம்அடியேனைச்சிருட்டிசெய்யும்படியாகத்தேவரீர்கிருபைசெய்ததால், அவைகளையிவ்வாறுசிருட்டிசெய்வதோ அதனையுங்கடாக்ஷித்தருளவேண்டுமென்றுஇரந்தனன். அதற்குக்கருணாகரமூர்த்தியாகியவக்கிரதுண்டசுவாமிகள் அவன்மீதுகடைக்கண்புரிந்து,பிரமனே-நீநமதுஉதரத்துள்ளேபுகுந்து,அங்கிருக்கின்ற சகலலோகங்களையும்பார்த்து, அவ்வாறே சிருட்டிசெய்யக்கடவையென்றுதிருவாய்மலர்ந்து,தமது துதிக்கையிலிருக்கின்ற புழையின்வழியாகஅப்பிரமனையெடுத்துவிழுங்கினர். அதைப்பார்த்துக்கொண்டிருந்த விண்டுவும் உருத்திரரும்- அவ்விநாயகக்கடவுளைத்தீர்க்கதண்டன் செய்து கைகூப்பிநிற்க,அவர்களையும்அப்புழையின்வழியாகவே யெடுத்துவிழுங்கினர். பின்னர்அம்மூவரும்அவரகட்டினுளிருந்துபார்க்குமளவில்,அதில்அளவிறந்தஅண்டங்கள்அடங்கியிருப்பக்கண்டார்கள். அவ்வண்டங்களொன்றினுள்தாங்கணுழைந்து நோக்குமிடத்தில்,அதனடுவே அந்தரலோகத்தையும்,அதற்குமேல் பூலோகம்- புவலோகம் - சுவலோகம் - சனலோகம்- தபோலோகம் - மகாலோகம் - சத்தியலோகம்- என்கின்ற ஏழுலகங்களையும். அதற்குக்கீழ், அதலம்- விதலம்- சுதலம் - தராதலம் - இரசாதலம்- மகாதலம்- பாதாளம்- என்கின்ற- ஏழுலகங்களையும். இவ்வுலகங்களுக்கெல்லாம், ஆக்கல் - காத்தல் - அழித்தல் - என்னு முத்தொழில்களைநடாத்திவருகின்ற, பிரமன்- விண்டு- உருத்திரன்- என்னு மூன்றதிகாரிகளையும். அவ்வதிகாரங்களைப் பழையகற்பங்கடோறுநடாத்திப்,பின்னர் அவைகளைவெறுத்துப்பிரமானந்தக்கடலின்மூழ்கியிருக்கின்றபழைய பிரமாதியர்களையும். பிரிதிவு-அப்பு- தேயு- வாயு- ஆகாயம்- என்கின்ற பஞ்ச

பூதங்களையும். குறிஞ்சி- பாலை- முல்லை- மருதம்- நெய்தல்- என்கின்ற § பஞ்சநிலங்களையும். பொன்- வெள்ளி- செம்பு- இரும்பு- ஈயம்- என்கின்ற பஞ்சலோகங்களையும். கோமேதகம்- நீலம்- பவளம்- புட்பராகம்- மரகதம்- மாணிக்கம்- முத்து- வைடூரியம்- வைரம்- என்கின்ற நவரத்னங்களையும். நாவல்- இறலி- குசை- கிரவுஞ்சம்- புட்கரம்- தெங்கு- கமுகு- என்கின்ற சப்ததீவுகளையும். இருக்கு- தைத்திரியம்- சாமம்- அதர்வணம்- என்கின்ற நான்குவேதங்களையும். ஆயுள்- அருத்தம்- தனுர்- காந்தருவம்- என்கின்ற நான்கு உபவேதங்களையும். மந்திரம்- வியாகரணம்- நிகண்டு- சந்தோபிசிதம்- நிருத்தம்- சோதிடம்- என்கின்றஆறுவேதாங்கங்களையும். வேதாந்தம்- வைசேடிகம்- பாட்டம்- பிரபாகரம்- பூருவமீமாஞ்சை- உத்தரமீமாஞ்சை- என்கின்ற ஆறுசாத்திரங்களையும். பிரம்ம-க்ஷத்திரிய- வைசிய- சூத்திர- என்கின்ற நான்குவருணங்களையும். பிரமசரியம்-கிரகஸ்தம்-வானப்பிரத்தம்- சன்னியாசம் என்கின்ற நான்குஆசிரமங்களையும். இந்திரன்- அக்கினி-யமன்-நிருதி-வருணன்-வாயு-குபேரன்-ஈசானன்-என்கின்ற அட்டதிசைக்காவலர்களையும். தாத்துரு-சக்கரன்-யமன்-மித்திரன்- வருணன்- அஞ்சுமான்-இரணியன்-பகவான்-திவச்சுவான்-பூடன்-சவித்திரு- துவட்டன்-என்கின்ற ‡ துவாதசாதித்தர்களையும்.மாதேவன்- அரன்- உருத்திரன்- சங்கரன்- நீலலோகிதன்- ஈசானன்- விசயன் வீமதேவன் - பவோற்பவன் - கபாலி - சௌமியன் - என்கின்ற ஏகாதச உருத்திரர்களையும். அனலன்- அனிலன்- ஆபச்சைவன்- சோமன்- தரன்- துருவன்- பிரத்தியூசன்- பிரபாசன்- என்கின்ற அட்டவசுக்களையும். பிராணன்- அபானன்- சமானன்- உதானன்- வியானன்- நாகன்- கூர்மன் - கிருதரன்- தேவதத்தன் - தனஞ்சயன் - என்கின்ற * தசமருத்துக்களையும். ஆதித்தன்- சோமன்- அங்காரகன்- புதன்- பிரகஸ்பதி- சுக்கிரன்- சனி- இராகு- கேது- என்கின்ற நவக்கிரகங்களையும். வைரவம்-வாமம்- காளாமுகம்- மாவிரதம்- பாசுபதம்- சைவம் - என்கின்ற அறுவகை உட்சமயங்களையும். உலகாயிதம்-புத்தம்-சமணம்-மீமாஞ்சை- பாஞ்சராத்திரம்- பாட்டாசாரியம்- என்கின்ற அறுவகைப்புறச்சமயங்களையும். அமரர்- சித்தர்- அசுரர்- தைத்தியர் - கருடர்- கின்னரர்- நிருதர்- கிம்புருடர்- காந்தருவர்- இயக்கர்- விஞ்சையர்- பூதர்- பைசாசர்- அந்தரர் -முனி

---

§ மலைச்சார்பு, குறிஞ்சி. நீரில்லாக்கடுநிலம், பாலை. காட்டுச்சார்பு, முல்லை. வயற்சார்பு, மருதம். கடற்சார்பு, நெய்தல்.

‡ இப்பெயர்-சித்திரைமாதம்மேடவிராசிமுதல், ஒவ்வொருமாதத்தில் ஒவ்வோரிராசியிற்புகுந்து, சூரியனுக்குமுறையே செல்லுமென்பர்.

* இதயத்தியங்கி மேல்நோக்குவது, பிராணன். உச்சர்க்கத்தலத்திடைநின்றுகீழ்நோக்குவது, அபானன். கந்தரக்குழியிற் சந்திடைநிற்பது, சமானன். நாபியினிற்பது, உதானன். சரீரமுழுதும் வியாபித் திருப்பது, வியானன். நீட்டலும் முடக்கலுங் கிளக்கலும், நாகன். உரோமம் புளகித்திமைப்பது, கூர்மன். முகத்திடைநின்று தும்மலுஞ் சினமும் வெம்மையும் விளைப்பது,கிருதரன்.ஒட்டமும்இளைப்பும்வியர்த்தலும்,தேவதத்தன்.உயிர்போகினும்போகாதுஉடலினைவீக்கித்தலைகிழித்தகல்வது,தனஞ்சயன்.

வர்- உரகர்- ஆகாயவாசிகள்- போகபூமியர்-என்கின்ற பதினெண்கணங்களையும். அவ்வவர்கட்குரிய மனை மக்கண்முதலிய சுற்றத்தினரையும். சனகராதியோகீஸ்வரர்களையும். நாரதராதிதேவ முனிவர்களையும். வசிட்டராதிபிரமரிஷிகளையும். கைலை - இமயம் - மந்தரம் - விந்தம்- நிடதம் - ஏமகூடம் - நீலம் - என்னுஞ் சத்தபர்வதங்களையும். சம்வர்த்தம்- ஆவர்த்தம் - புட்கலாவர்த்தம் - சங்காரித்தம் - துரோணம் - காளமுகி- நீலவருணம் - என்னும் † சத்தமேகங்களையும். இலவணம் - சுத்தோதகம் பால்-தயிர்- நெய்- கருப்பஞ்சாறு- தேன்- என்னுஞ்சத்தசமுத்திரங்களையும், கங்கை- யமுனை- சரஸ்வதி- நருமதை- காவேரி- குமரி - கோதாவரி-என்னுஞ் சத்தநதிகளையும், சிங்கமுதலிய மிருகவர்க்கங்களையும், கருடன்முதலியபறவைவர்க்கங்களையும்,கற்பகமுதலிய விருக்ஷவர்க்கங்களையும் காமவல்லிமுதலிய கோடிவர்க்கங்களையும், தாமரைமுதலிய புட்பவர்க்கங்களையும்,பிறவுமுள்ளசராசரபேதங்களெல்லாம் அளவற்றதாகக் கண்டார்கள்.இவ்வாறேஅந்தந்தஅண்டங்கள்தோறுஞ்சென்று அளவிறந்தயோனிகளில்அனந்தம்பேதங்களாகவிளங்கியிருக்கின்றசகலசீவராசிகளையுங்கண்டார்கள்.கடற்கரையின்கணுள்ள நுண்ணியமணல்களையெண்ணி அளவிட்டாலும்,அவ்வக்கிரதுண்டமூர்த்திவயிற்றினுளிருந்து அம்மூவர்கள்கண்டசராசரப்பிரபஞ்சங்கள் யென்போலிகளால் அளவிட்டுரைக்கற்பாலவோ இவ்வாறுஅளவற்றகாலமங்ஙனேயிருந்துசகலகாரியங்களையும்பார்த்து,மீளவும் வெளியில்வரவேண்டுமென்று யத்தனித்தார்கள். அதற்குஅவர்களாலாகாமல் அவருதரத்தி லிருந்தவண்ணமே அவர்திருவடிகளைச்சிந்தித்து வேதாகமங்களாற் பலவாறுதுதித்தார்கள். அத்துதிகளைக்கேட்டுநீக் கரத்தின் வக்கிரதுண்டசுவாமிகளுக்குக் கிருபைசுரக்குந்திருவிழிகளாலும் வெளியினுலும். விண்டுவையும் உருத்திரனையும் அருளினர்.
ல்வரவிடுத்துத் தமதுதிருவுருவை

கணபதிதுணை.

மூன்றுவது.

பிரமசிருட்டிப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியானவர் பிரமன்முதலிய மூவர்கட்குந்தமதுவிஸ்வரூபங்காட்டியருளியதிருவிளையாடலைச்சொன்னேம். இப்பால் பிரமனுலகங்களைச் சிருட்டித்த முறைமையைச் சொல்வோங் கேட்பீராக. இவ்வாறு கணேசமூர்த்தியானவர் தமதுவிஸ்வரூபத்தைக் கரந்தருளியபின்னர்,பிரமன்-உலகங்களைச்சிருட்டி செய்வதற்காரம்பித்தான். அப்போதுஇருக்குமுதலியநான்குவேதங்களாலும் அளவிட்டு

† இவைமுறையே- மணி-நீர்- பொன்-பூ-மண்-கல்-தீ-என்பனவாம்.

ணாத்தற்கரிய அவ்வக்கிரதுண்டமூர்த்தியினுடையசொரூபத்தைமனதிற்றியானித்து, சுவாமீ யானெடுத்தகாரியத்தை விக்கினமின்றி நிறைவேற்றவேண்டுமென்று பிரார்த்தித்துத்தொடங்கவேண்டுமென்பது சற்றுந்தோற்றாமல், நாமேசெய்யலாமென்னு மமதைகொண்டு செய்வதாயினன். அக்காரணத்தால் அவன்நினைத்த ரூபங்களுண்டாகாமல், ஒருதலையும்- இரண்டுமுகங்களும்- மூன்றுகண்களும்- நான்குசிகைகளும்- ஐந்துகாதுகளும்- ஆறுகால்களும்-ஏழுகைகளுமாக-உயர்ந்தசரீரங்களைக்கொண்டு-அப்பிரமன்பயந்து நடுங்கத்தக்கதான அளவற்றவிகாரவுருவங்களாயின. பின்னரிவ்வுருவங்களெல்லாம் அவனைக்கண்டு சில ஆர்ப்பரிக்கின்றனவும், சிலஇளிக்கின்றனவும், சில அடிப்பதற்கு எழுந்திருக்கின்றனவும், சில பேசுகின்றனவும், சில கண்களையுருட்டிப்பார்க்கின்றனவும், சில அலைந்துவிழத்தள்ளுகின்றனவும், சில பிடிக்கின்றனவும், சில நடிக்கின்றனவுமான பற்பலதுன்பங்களைச்செய்தன. இக்காரணத்தால் அப்பிரமனானவன்புந்திகலங்கி இவ்வாறான விக்கினங்கள்வருவதற்கென்னவேதுவினுலென்றுந்தோற்றாமல் மனத்தளர்ச்சியடைந்திருக்கையில். திரிநேத்திரங்களோடும் பிரகாசிக்கின்ற ஆனைமுகத்தினையுடையவக்கிரதுண்டமூர்த்தி,நமக்குஅங்கைநெல்லிக்கனிபோல விருந்துஆட்கொண்டருளியிருக்க,அவரைக்கருதாதுமதுசுயாதிகாரத்தால்சிருட்டிசெய்யத்தொடங்கியகாரணத்தாலல்லவா,இவ்விதவிக்கினங்கள்வரலாயிற்றென்னுமோரெண்ணம்,அக்கடவுள்அனுக்கிரகத்தாலவனுக்குண்டாகலும், இனி யவ்விக்கினகர்த்தனைப்பணியாது இவ்விடையூறுகள் நீங்காவென்றுமனந்தெளிந்து,உடனேஸ்நானஞ்செய்துத்தைமன்றதீரியர்ந்துக் கிருபாமூர்த்தியாகிய விநாயகக்கடவுள் ஸ்வரூபங்களும் ஒன்றுய்க்கலந்தியோகத்திருந்தான். அவ்வியோகத்தில்,சத்தசாகரவாவிலையில் ஓர் குழந்தைசயனி... றசலப்பிரவாகத்தில்ஓர்ஆலிலையும், அதையருகில்தான்சென்றுகையோச்சி அந்நிதது ... கிளைசெய்வதாகவும், அக்குழந்தும்,அப்போதக்குழந்தை யானைவதனத்தையுடைய விநாயகஸ்வரூபமாகித்... யுத்தெளிவித்ததாகவுதரிசனங்கொடுத்ததாகவுங்கண்டு, உடனே அக்கடவுளுடையதிருவடிகளைப்பணிந்து, தேவரீர் அடியேனைச்சிருட்டிசெய்ய ஆக்கியாபித்தவண்ணம்யான்செய்யத்தொடங்குகையில், அனேகவிடர்களுந்துன்பங்களும் உண்டாயின, இனியிடையூறின்றிச் சிருட்டிசெய்யுமாறு அனுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்ததாகவும். அதற்கவ்விநாயகமூர்த்தி ஓபிரமனே நமது கிருபையினுற் சகலமுமாகவேண்டுவதென்றெண்ணுமல் உன்னுடையநிருவாகங்கொண்டேசெய்து முடிக்கலாமென்றெண்ணியாரம்பித்தனையாதலால்இத்தனை இடையூறுகளுனக்குண்டாயின, இனியிடையூன்றின்றிச்சிருட்டிசெய்வதற்குநமது ஏகாக்ஷரமந்திரத்தைப்பத்துலக்ஷமுருச்செபித்தால் அச்செபமுடிவில்யாம்வந்து மற்றவிபரங்களையும் அனுக்கிரகிக்கின்றேமென்று திருவாய்மலர்ந்தருளி,அவ்வேகாக்ஷரமந்திரத்தைத் தனக்குபதேசித்ததாகவுங்கண்டான். பின்னர்யோகத்தைவிட்டுமனவுறுதிபெற்றுத்தாமரைமலரி லொருகாலையூன்றி அவ்வேகாக்ஷரமந்திரத்தைப் பன்னிரண்டுவருடஞ்செபஞ்செய்தான். அச்செபமுடிவில் தமக்கொருவரொப்பில்லாதவராகியும்நான்குவேதங்கட்குமெட்டாதபரிபூரணராகியும் அரைபிற்சர்ப்பக்கச்சினைவிக்கியிருக்கின்ற விநாயகமூர்த்தியானவர், ஒருகரத்தில்

மழுவாயுதமும்,ஒருகரத்திற்கமண்டலமும், மற்றவிரண்டுகரமும் அபயவரதங்களாகக்கொண்டு,அவனதிரிற் பிரத்தியக்ஷமாகித்தரிசனங் கொடுத்தருளினர். உடனேஅப்பிரமன் சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து அளவற்ற ஆனந்தத்தோடுந்தோத்திரஞ்செய்வ தாயினன்.

தோற்றுமேயுலகனைத்துந்தோற்றியளியாதளித்துப் ... ... *
பாற்றுமேபாற்றிவிடும்பண்ணவநின்பதம்போற்றி ... ... *
தேற்றுமேயுயிரனைத்துந்தேற்றிமலமாயைகன்ம ... ... *
நீற்றுமேநீற்றியருணின்மலநின்பதம்போற்றி... ... ... *

உரையானுமுணர்வானுமுடலானுமறிவரியாய்... ... ...*
வரைமார்புந்திணிதோளுந்திருமுடியுமலர்ப்பதமும் ... *
விரையார்குங்குமக்கலவைமெய்யணிந்தகோலமுமாய்க் ... *
கரையாநெஞ்சமுங்கரையக்கண்ணெதிர்நின்றனைபோற்றி. ...*

இவ்வாறுசெய்த் தோத்திரங்கட்குவிநாயகக்கடவுள்கிருபைபுரிந்து நீகருதியவரங்களைக் கேளென்று திருவாய்மலர்ந்தார், அதற்கப்பிரமதேவன் மீளவுஞ்சேவித்தெழுந்து,ஓதீனதயாளுவே தேவரீருடையபாதாரவிந்தங்களையெக்காலத்து மறவாதிருக்கத்தக்கவரமும், இவ்வுலகத்தைவிக்கினமில்லாமற் சிருட்டிசெய்யத்தக்கசத்தியும், அடியேனுக்கனுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவ்வாறே யனுக்கிரகஞ்செய்து ஓ பிரமனே நம்மிடத்திருக்கின்ற அனந்தசத்திகளில், கிரியாசத்தி - ஞானசத்தியென் றிரண்டு சத்திகளுண்டு அவர்களை நீ தியானித்து உன்சிருட்டித்தொழிலை நடத்தக்கடவையென்று கிருபைசெய்து தமதுதிருவுருவத்தைக்கரந்தருளினர். இவ்வாறவ்விநாயகக்கடவுள் கொடுத்தருளியவரங்களைப் பிரமன் சிரமேற்கொண்டு, அவ்விரண்டுசத்திகளும் வரவேண்டித்தியானித்தவுடன், அவர்கள்தங்கட்குவேறொருவர்நிகரில்லாதபேரழகைவாய்ந்து சித்திபுத்தியென்னும்பெயரோடும்அவனெதிரிற்றோன்றினர்கள். அவ்விருவர்களையும்பிரமன்றீர்க்கதண்டஞ்செய்துஎன்றவக்கொழுந்தாகிவந்தஅன்னையர்களே, அடியேனுக்குஎக்காலத்துமிடையூறுவராமற்காத்துஇரட்சிக்கவேண்டியநிமித்தம்,நீங்களிருவரும்அடியேன் அருமைப்புத்திரிகளாகவிருக்கும்படியான வரங்கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான்,அவ்வாறே அவ்விரண்டுசத்திகளுமிசைந்துவரங்கொடுத்தார்கள். பின்னவெளிதின் முத்தியடைந்தவர்கட்கொப்பாகப்பிரமன்றன்முகமலர்ந்துஆனந்தித்து, விநாயகக்கடவுள் இச்சித்திபுத்திகளோடும் வீற்றிருப்பதாகப் பாவித்துத்தியானஞ்செய்து மீளவுஞ் சிருட்டிசெய்வதற் காரம்பித்தான். அப்போது ஓரிடையூறுமில்லாமல்தன்மனதால் ஏழுபுத்திரர்களைச் சிருட்டிசெய்து அவர்களைநோக்கி நீங்கள் இவ்வுலகத்தைப்பழுதில்லாமற்படைக்கக்கடவீர்களென்று கட்டளையிட்டான். அதற்கவர்களொவ்வாமல் துறவிகளாய்ச்சென்று தவத்தினைச்செய்து முத்தியடைந்தார்கள்,மீளவும் ஏழுபுத்திரர்களைச் சிருட்டிசெய்தனுப்பினன். அவர்களும் அவ்வாறேசென்று முத்தியடைந்தார்கள், அதன்பின்னர்- சனகர்- சனந்தனர்- சனாதனர்-சனற்குமாரர்-என்கின்றநால்வரோடுநாரதனையுஞ்சிருட்டித்துப்,பிராமணர்க

ளையும் அக்கினியையுந் தனதுமுகத்திலும், க்ஷத்திரியர்களைப் புயத்திலும் வைசியர்களைத் தொடையிலும், சூத்திரர்களைப்பாதத்திலும், சந்திரனைச்சித்தத்திலும், சூரியனைவிழியிலும், இந்திரனைவதனத்திலும். பிராணன்முதலாகிய மருத்துக்களைச்செவியிலும், ஆகாயத்தைஉந்தியிலும், தேவலோகமுதலான மேலுலகங்களைமுடியிலும், பூலோகமுதலான கீழுலகங்களையடியிலும், கிழக்காதிதிசைகளைக்காதிலும்,இவ்வாறேபர்வதங்கண்முதலான சகலசராசரங்களையுஞ் சிருட்டிசெய்தான். அதுமுதல் இவ்வுலகமானது உருத்திரன் - விண்டு - பிரமன் - அக்கினி - சலம் - பூமி -ஆகாயம்-வாயு - திக்குப்பாலகர் - மனுக்கள் - முனிவர்கள் - வசுக்கள் - இயக்கர்கள்-கணங்கள்- திசைகள் - நதிகள் - சமுத்திரங்கள் - மரங்கள்- பறவைகள்-மிருகங்கள்-மற்றஉயிர்வர்க்கங்கள்-என்னும் இருபத்தொரு வகுப்புடனே பொருந்தியிருக்கின்றது.

கணபதிதுணை.

நான்காவது.

திருமணப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, கணேசமூர்த்தியினுடைய கிருபையாற் பிரமனுலகங்களைச் சிருட்டித்தவரலாற்றைச்சொன்னோம். இப்பால் அப்பிரமன்புத்திரிகளாகியசித்திபுத்திகளைக்கணேசமூர்த்தி திருமணஞ்செய்துகொண்டவைபவங்களைச்சொல்வோங்கேட்பீராக. பிரமதேவன்மேற்கூறியமுறைமைப்படிசகலவண்டங்களையும்படைத்தஉடன்ஆன்மகோடிகள் பலவுமோங்கிநிலைபெற்றுவாழ்ந்தன. பின்னர்ஒருகாரணமாகவிநாயகமூர்த்தியானவர்,கைலாயகிரியிலேசிவபெருமானுக்குப்புத்திரராகஅவதரித்திருந்தார். அக்காலத்தில்மகாதவசிரேஷ்டராகிய நாரதமுனிவர்,அங்நின்மலஸ்வரூபியாகிய கணேசமூர்த்தியின்பாதபதுமங்களைப்போற்றுதற்குக்கைலாயபர்வதத்தைநோக்கி மிக்கஆவலோடுசென்று, அப்பர்வதத்தின்கண்பொன்மயமாகவிளங்குஞ் சபாமண்டபத்தின்முகப்பில் இரத்தினமயமாயோங்கிய சிங்காதனத்தின்மீது தேவகணங்கள்புடைசூழ்ந்து போற்றுதல்செய்யவீற்றிருக்கின்ற விநாயகமூர்த்தியைக்கண்டு, அவரதுதிருவடிக் கமலங்களிற் சாஷ்டாங்கமாகப்பணிந்து, களிப்புடன்றுதித்து,வீணையிற்கட்டுண்டிருக்கின்ற நரம்புகளைத்தடவி,இசையாகிய புதியவமுதத்தைநிறைத்துச், கர்த்தன்புகழைப்பாடி, அவர்திருவருளைப்பெற்று, இதனை விண்ணப்பஞ்செய்வதாயினர். ஓசர்வபரிபூரணகருணாசாகரமூர்த்தியே,தேவரீரிடத்தில் அடியேன் தெரிந்துகொள்ளவேண்டுவதொன்றிருக்கின்றது, அதனைவிண்ணப்பஞ்செய்யச் செவிகொடுத்தருளவேண்டும், அதாவது - தாமரைமலரையாசனமாகக்கொண்ட பிரமதேவர், முன்னர்தமதுதியானசிந்தையினின்றும்உதித்தவர்களாகிய இரண்டுகன்னியரைத்,தேவரீர்க்குத்திருக்கல்யாணஞ்செய்வதான வேரெண்ணத்தையுடைத்தா யிருக்கின்றார்.அன்றியும்

அப்பிரமதேவரோஇலக்கணம் அமைந்த மைந்தர்களை † இனிமையாகப்ப டைக்குங்காலத்தில், மும்மலக்குறும்புகளை நீக்கவல்ல தேவரீர்திருவுருவங்களை யெண்ணுவார், மாட்சிமைபெற்ற மங்கையரைப்படைக்குங்காலத்தில், யாவருந்துதித்தற்குரிய அம்மாதர்கள்வடிவங்களை முற்றுங் கருதுவராயின், சுவாமிகள் வனப்பினுக்கேற்ற அவர்கள் பேரழகின்பெருமைகள் இவ்வளவினவென்று அடியேனளவிட்டுரைக்கற்பாலவோ,ஆயினும்-எனதறிவிற் புலப்பட்டவாறுஅவர்கள் பாதாதிகேசமுதலிய அவயவவிலக்கணங்களைச்சிறிதுகேட்டருளவேண்டுமென்றுபிரார்த்தித்துச்சொல்வதாவது, பருத்திடலுஞ் சுருங்குதலுமில்லாது, மிருதுவாகி, அனிச்சமலரின்மேல் வைப்பினுங்குழைந்து, வெப்பமடைந்து,கொடிரேகை-மச்சரேகை கவிகைரேகை-சங்கரேகை-சக்கரரேகை-முதலானபலரேகைகளைப்பொருந்தி,அழகியசெந்தாமரைமலரைவென்றுசிவந்திருக்கின்றஉள்ளங்கால்களையும். நீளல்-குறுகல் - நேர்தல் - முதலியகுற்றங்களின்றிச், சகலவிலக்கணங்களையும் வாய்ந்தனவாகி, மிக்கவொளிபொருந்திய பவளத்துண்டங்களைச்சிறுமையுற்றழியச்செய்துவிளங்கியிருக்கின்றபாதவிரல்களையும். செங்கழுநீர்மலரைக்கோபித்துத், தரளத்தைப்பங்கப்படுத்திச்,சந்திரனைப்பயமுறப்பணித்துச், சிறிது சிவந்த நிறமுடையனவாய், வெளுத்து,வட்டமாகிக், குற்றமறமிக்கவொளிவீசுகின்ற பாதவிரல்களினது நகக்கூட்டங்களையும். களிப்பையுற்றகூர்மமானதுதன்னுறுப்புக்களை யடக்கிக்கொள்ளவும், புலவர்கள் தங்கள்புத்தகங்களைச் சேமத்தின்மறைத்துவைக்கவுஞ்செய்து, இலக்கணவளவின்மேற்பட்டு, மிருதுவாகி, நரம்புகள்-உரோமங்கள்-இல்லாமல்,கோல்போல்வளர்தல்- மிக்குயர்தல்-கோணல்- என்கின்ற குற்றங்களகன்றுபிரகாசிக்கின்றபுறவடிகளையும். கைப்பந்துக்கொப்பாகிமிகப்பருத்திடலும்-உயர்தலும்-இல்லாது, விளங்குகின்ற குதிகால்களையும்.நரம்புதோற்றலும்-உயர்ந்திருத்தலும்-இல்லாது, அழகுபொருந்தத் தசைந்து, செம்பொனிறுக்குஞ் சிறுதராசின் றட்டையொத்து வட்டமாயிருக்கின்ற பரடுகளையும். கன்னிக்கதலியையொத்து, நரம்புமுரோமமுந்தோற்று துசிறந்திருக்கின்றதொடைகளையும். வருந்திச்செய்த அம்புபெய்தூணியையொத்து,நரம்பு முரோமமுங்கலவாது விளங்குகின்ற சணைக்கால்களையும் வற்றுதலில்லாமல், வட்டமாகியதாளத்தையொத்துத்,தசையைப்பொருந்தி, ஞெண்டினைமுழுதுஞ்சினந்து, மிக்க அழகுவாய்ந்திருக்கின்ற முழந்தாள்களையும். மெல்லியதொடையைச்சேர்ந்துதுணையாகநெருங்கி, மதம்

---

† இலக்கணமமைந்த மைந்தராவார், வயிறு- தோள்- நெற்றி- நாசி- மார்பு- கையடி- இவ்வாறும்உயர்ந்து, செல்வத்தைப்பெற்றோரும். கண்- கை- கன்னம்- மூக்கு-மார்பு - இவ்வைந்தும்-நீண்டு, நன்மையையுற்றோரும். உரோமம்-உடல்-விரற்கண்-நகம்- பல் - இவ்வைந்துஞ்சிறுத்து, ஆயுள்விருத்தியையடைந்தோரும். கோசம்-கை-நா-முதுகு-இந்நான்குங்குறுகிப், பாக்கியமுடையோரும். தலை-நெற்றி- இவ்விரண்டும் அகலமுற்று, நன்மையையுடையோரும்.உள்ளங்கால்-உள்ளங்கை-கண்கடை-உதடு-மேல்வாய்-நாவு-நகம்-இவ்வேழுஞ்சிவந்து,இன்பமுடையோரும். வயிறு-ஓசை-நாபி-இம்மூன்றும்ஆழ்ந்து, யாவர்க்குமேலாயினோரும். எனவறிக.

பொழிகின்றயானையினது பிடரியையும்-ஆமையையும்வென்று, இருபத்துநான்கு அங்குலவளவுவாய்ந்திருக்கின்ற நிதம்பத்தையும். தாமனாமலர் வாய்ந்த குளப்படிகளைமருட்டிச்,சிற்றெலியுரோமம்போன்றநெருங்கியமிருதுவானமயிர்கள் உள்ளோங்கி, நெடுமையற்று, இடப்பக்கத்திற் பள்ளமானசுழிகளில்லாது, எழில்வாய்ந்திருக்கின்றசெவ்விதாகியவயிற்றுமடிப்புக்களையும். பருத்து-உயர்ந்து - மிக்கமேன்மைபொருந்தியிருக்கின்ற சகனத்தையும். கொங்கைகளால்வருத்தமெய்தி மெலிவுற்றிருக்கின்ற மருங்குலையும். தக்கவடிவத்தோடும்அகன்று- தாழ்ந்து- வலஞ்சுழித்து- நரம்புமுரோமங்கள் நீங்கி - மிக்கவொளிபெற்றிருக்கின்ற உந்தியையும். பலவகைப்பட்டசுழிகளும்- உரோமங்களும்- நீண்டமடிப்புகளும்- இல்லாமல், மூன்றுநல்லரேகைகளைப் பொருந்திச், சிறந்தவாலிலைபோல வாய்ந்து, சொலலுக்கடங்காதவனப்பில் விளங்கியிருக்கின்ற வயிற்றினையும். நலமாகவரைந்தொழுகியகொடிபோன்ற வயிற்றுமயிரொழுங்கினையும். என்பு-நரம்பு- உரோமம்-ஆகியஇவைகள்தோற்றுமல், நடுவுமாழாமல், மிருதுவாகி,இன்புறத்தக்க தசையைப்பொருந்திப்,பதினெட்டங்குலவளவையுடையதாய்ச்சீர்கொண்டிருப்பனவாகியவிலாப்புறங்களையும்.புடைபரந்து-மேலெழுந்து-நீலமணிசேர்த்தகற்கொப்பானசிலிமுகம்வாய்ந்து- இடைதோன்றுமல்நெருங்கிப்- பெருமைபொருந்தியமார்பினிடமுழுவதுநிறைந்து-தடையில்லாமற்பருத்துப்-பூரித்துத்-தம்முளிரண்டுமொத்து-இடையினைவருத்தி-நிமிர்ந்திருக்கின்றகுசங்களையும்.பருத்தல்-நீளல்-நுதியாழ்தல்-உருநேர்தல்-நீங்குதல்-நலமறல்-ஒவ்வாதிருத்தல்-கடினமுறல்- ஆகியவிக்குற்றங்கள்பொருந்தாமல்,வன்மையாகிய சக்கரம்போலப் பிரகாசித்து,அடிகனத்துத், தனக்குத்தானே யொப்பாகியிருக்கின்ற சூசுகங்களையும்.நீளுதலும்-குறுகுதலும்-என்புதோன்றுதலும்-இல்லாத கழுத்தடியினையும். என்பு-நரம்பு-உரோமம்-ஆகியஇவைகள்தோன்றுமல்,பெருக்காமல்,அழகுநிறைந்துதிரண்டிருகின்றவேய்போற்பிரகாசிக்குந் தோள்களையும். தசைதோன்றுதனவாகியமூட்டுகளையும்.நீண்ட நரம்புகளும் உரோமங்களுந்தோன்றுது,வன்மைபொருந்திய மகரவீணையையொத்தமுன்னங்கைகளையும். வரிசையாகியபலரேகைகள் தம்முணெருங்குதலும்,மிகவுநீங்குதலும்,பரந்துதோன்றுகின்ற நரம்புகள்மிகுதலும், உரோமங்கள்பொருந்துதலும்,ஒட்டகம்-தவளை-செந்நாய்-பாம்பு-தேள்-கழுகு-பூனை-கர்த்தபம்-நரிஈட்டி-இவைகளைப்போலிருக்கின்றவெறுக்கப்பட்டரேகைகளுமில்லாமல் கவிகை-கூர்மம்-வலம்புரிச்சங்கு-மச்சம்-பதுமம்-நவக்கிரகசக்கரம்-நுகத்தடி-துலாக்கோல்-வண்டில்-இடபம்-யானை-குதிரை-தோட்டி-சாமரம்-வச்சிராயுதம்-நேமி-என்னும்இவ்வகைரேகைகளைப்பொருந்தி, வனத்திற்றிரிகின்றமுயல்வயிற்றினுமிருதுவாகிச், செவ்வாம்பல் மலரைப்போல் பிரகாசிக்கின்ற உள்ளங்கைகளையும்.சிவத்தலின்றி வளைந்திருத்தலும்- இடைவிட்டுநீங்குதலும்-நரம்புமுரோமமும்பொருந்துதலும்- நேர்ந்திருத்தலும் மிருதுவில்லாமன்மிக்கவன்மையாதலும் - இன்றி, நீலோற்பல முகையை வென்று, சிவந்தநல்லரேகைகள்வாய்ந்தகைவிரல்களையும்.பள்ளமாதலும்-வெண்மையாதலும் - குணமில்லாமல் சரசரத்திருத்தலும் - புள்ளியாகியவெண்மைதோன்றலும் - பொன்னிறமாதலும் - இல்லாது, கிளியின்வா

யிணையொத்துச், சிவந்து பிரகாசிக்கின்ற கைவிரல்களினதுநகக்கூட்டங்க ளையும். என்புதோன்றல்-நரம்புமுரோமமுமருவுதல்-தாழ்தல்-உயர்தல்-கூனியிருத்தல்-முதலியனவகன்று,மிருதுவாகியதசையினல்மறையப்பட்டு, எழுதற்கரியவனப்பின்மிகுந்திருக்கின்ற முதுகினையும்.கோணுதல்-நரம்புதோற்றல்- மயிர்கிளைத்தல்-நீளல்-வற்றல்-என்னுமிக்குற்றங்களின்றி, எழில்வாய்ந்திருக்கின்ற பிடரியினையும். குறுகலும்-நீளலும்-பருத்தலும்-உரோமங்களையுடைத்தாதலும்-நேர்ந்திருத்தலும்- மடிப்புறலும்- இல்லாமல், கமுகமரத்தினை நாணச்செய்து, 'நான்குஅங்குலத்தோடுமூன்றுரேகைகள்பொருந்தி,அழகுநிறைந்திருக்கின்ற கண்டத்தையும்.இருபகுப்பாதலும்-பள்ளமிசைதலும்-நரம்புமுரோமமுமருவுதலும்-குறுகுதலும்- நீண்டிருத்தலும்-வளைந்திருத்தலும்- வற்றியிருத்தலும்- இல்லாமல்,இருவிரலளவில் வட்டமாய்த், தசையையுடைத்தாய்எழில்கொண்டுஇன்பந்தருவனவாகிய மோவாயினையும்.சிறந்தபவளத்துண்டுபோற்றிரண்டு, இருபக்கமுங்குவிந்து, அழகியரேகையொன்றுபொருந்திப் பிரகாசிக்கின்ற கீழதரமும். அதற்குமேற்சற்றுயர்ந்து வனப்புவாய்ந்திருக்கின்றமேலதரமும். மத்தியில்ரேகையாழ்ந்திருத்தல்-வீங்கல்-மதரறக்கருகியிருத்தல்-வெளுத்திருத்தல்- மருவுறல் - தொங்கல்- உரோமமுறல்-மேலுங்கீழும் ஒவ்வாது இடைவிட்டிருத்தல்- முதலியன வகன்று,பவளத்தையொத்துச்சிறந்திருக்கின்ற வாயினையும். பரவியும்-உயர்ந்தும்-அகன்றும்-நீண்டும்-பசுமையுற்றும்-பொன்னிறமாகியுங்-கறுத்துந்-துன்புறுத்துகின்றகுற்றங்களில்லாமல், மயிலிறகினடிகளையும்-வெளுத்ததரளங்களையும்-முல்லையரும்புகளையுமொத்து, வெண்மையாகவுந் -திருத்தமாகவுமிருக்கின்ற முப்பத்திரண்டுபற்களையும். கடினமும்-வெண்ணிறமுங்-கருமையும்-நீட்சியும்- பருத்தலும்-விலகலும்-இல்லாமல், சிவந்தவண்ணமாய்-மிருதுவாயிருக்கின்ற,நாவினையும்.வெண்மையும்-கருமையும்- வன்மையும்- உயர்வும்- நீட்சியும்-பொருந்தியிருத்தலாகியகுற்றங்களின்றி,வெண்ணெயென்றுசொல்லும்படிமிருதுவெய்திச்,சாதிலிங்கத்தினுஞ்சிவந்துசெழுமைபொருந்தி யிருக்கின்றஉண்ணாவினையும்.கண்கள்இடுகாமலும்-கபோலஞ்சுழியாமலும் - பற்கடோன்றாமலும்-வரிதுநகைபுரியாமலும்- மிகுநகைசெய்யாமலும்- விளங்குகின்றமூரலையும். வளைதல்- கறுத்தல்- சிவத்தல் - நுனியினும்இடையினும் பள்ளமுறல்-இலக்கணவளவிற்குறுகுதல்-முதலானகுற்றங்களின்றித், துளைகள்சிறுத்து,இருபக்கங்களுஞ்சற்றுயர்ந்துஎள்ளின்மலரையொத்து,இரண்டு மூன்றுதரம்,அதிசயமுறமெல்லெனத்தும்மலன்றிக்,கல்லெனப்பலகாற்றும்முதலில்லாத நாசியினையும். வன்மையுறலும்-பள்ளமாதலும்- உரோமம்பொருந்துதலும்-இல்லாமல்,கண்ணுடியொன்றேயன்றிமற்றவைகட்கொப்பாகாது,வட்டமாய்த்,தசையையுடைத்தாயமைந்திருக்கின்றஅழகியகபோலங்களையும்.யானை-ஆடு-எருமைஇவைகளினுடையகண்களையொத்திருத்தலும், வட்டமாதலுங்- குற்றமுறவலஞ்சுழலுதலும்-உயர்ந்திருத்தலும்-மாறுதலையுடைத்தாதலும்- புறவின்கண்ணிறமொத்தலும் இல்லாமல்,தெளிந்த நீலமணிபோலச் சிறப்புறக்கறுத்து,'வெண்மையொளிகொண்டு,கடையிற்செவ்வரிபரந்து,நெருங்கிய கருமைவாய்ந்தமெல்லியரோமங்களைப்பொருந்தி, விளங்குகின்ற நீண்டவிழிகளையும். உரோமம்இ

டைவிட்டிருத்தலும்-பொன்னிறமெய்தலும்-பருத்தலும்- நீளலும்- இல்லாத கண்ணிமைகளையும். உரோமம்பருத்திருத்தலும்- நீண்டிருத்தலும்-பொன்னிறமுற்றிருத்தலும்-வன்மையின்றிவனப்பகன்று இடைவிட்டிருத்தலும்-இல்லாமல், ஒன்றோடொன்று நெருங்காமல்,போர்செய்யும்வில்லைப்போன்று விளங்குகின்ற புருவங்களையும். இகழத்தக்கநரம்பும்உரோமமுமுண்டாகி - மேல்வளைந்து உயர்ந்திருக்கின்றகுற்றங்களில்லாமல், வள்ளைத் தண்டினைப்போல நீட்சியுற்று,மலரிதழையொத்து, நற்சுழிகளையுடையனவாய்விளங்கியிருக்கின்ற செவிகளையும்.நரம்பு முரோமங்களுமில்லாமல், நவக்கிரக சக்கரரேகையைப்பொருந்தி, மூவிரலகலமாய், அர்த்த சந்திரவடிவங்கொண்டு பிரகாசிக்கின்ற நுதலினையும்.பூரண சந்திரனைப்பழித்துக், குளிர்ச்சிபொருந்திய ஆகாயகங்கையிற்பூத்ததாமரைமலரையொத்துச், சீமந்தரேகைகளைவாய்ந்து, நீண்டுவிளங்குகின்றமுகத்தினையும்.வீங்கலும் - நீளலும்- விரிதலுமுறாமல், இளம்பூவரும்புபோலச் சீமந்தரேகைகளைவாய்ந்து, முட்டற உயர்ந்து,வட்டமாய், அழகுநிறைந்திருக்கின்ற பிடரி- மத்தகம்-சென்னி-ஆகியமூன்றினையும்.இடையிடை, வெளிகடோற்றுதல்-மிகக்குறுகுதல்- நீளல்- நுனியிற்பிளப்புற்றிருத்தல்-சிவந்தபொன்னிறமாதல்- வன்மையணுகுதல் -வாட்டமிலதாதல்-சடைபற்றியிருத்தல்-முதலியகுற்றங்களில்லாமல்,வண்டினந்தொடர்ந்ததுபோன்றும்,கருமைகொண் டிழைத்ததுபோன்றும்,மேகங்கள் கண்படுத்திருப்பனபோன்றும், கூந்தற்பனையினைப் போன்றுமிருந்து, கண்டவர்கள்வியப்பெய்த, நீண்டு-பரிமளித்து- நெய்த்து- இருண்டு-தாழ்ந்து-பூங்கொத்துகளைப்பொருந்தி- இதனின்மிக்ககறுப்பில்லையென்றுசொல்லத்தக்கதாகவிளங்குகின்றகூந்தலினையும். உடையவர்களாயிருக்கின்றார்கள்.இஃதன்றி- புருவமத்தியிலும், நாசி நுனியிலும்,நிதம்பப்புறத்திலும், கைகளினிடத்திலும்,கழுத்தினிடத்திலும்,செவிகளிடத்திலும,கபோலத்தினிடத்திலும்,இடப்பக்கத்திலும்,கொங்கைகள் வலப்பக்கத்திலும், சிவந்தமறுவைப்பெற்றிருக்கின்றோரும்.திரண்டு அழகுபொருந்தியநெற்றியிலே வடித்தெடுத்தமுத்தலைச்சூலரேகையைப்பெற்றோரும்.கைகளிலும்,மார்பிலும்,கொப்பூழிலும்,நாசியிலும்,முதுகுவலப்புறத்திலும், அல்குலடிப்புறத்திலும், வலஞ்சுழியைப்பொருந்தியிருக்கின்றோரும்.பிடரிவலப்புறத்தில்இரண்டுவலஞ் சுழியைப்பெற்றோரும். அல்குலடிப்புறத்தில் வண்டிலைப்போலுநற்சுழிகளையுற்றோரும். பிரமதேவனல்வளர்க்கலுற்றஅவ்விரண்டுமங்கையரதுபாதபதுமங்களைமுன்னர்வணங்கியருள்பெற்றோராவர். நாசிநுனியிற்கறுத்த மறுவையுடையோரும்.புறங்காலிலும்,அல்குலந்தத்திலும், சிறுமசகங்களைப்போன்றவடுவைப்பெற்றோரும். நிதம்பந்தொடங்கியல்குல்வரையில்ஒருசுழியை நிறைந்திருக்கப்படைத்தோரும். அல்குன்முதல்வயிறளவும்ஒருசுழியைப்பொருந்தினோரும்.நிதம்பமுதல்வயிறளவும் இருசுழிகளையடைந்தோரும்-விழிகளிற்சுழிமருவினோரும்.நீண்டநெற்றியில்வலஞ்சுழியை யுடையோரும்.கூந்தலில்வலமும்இடமுமானசுழிகளைவாய்ந்தோரும்.அரையின்மத்தியிலும்,செவிகளிலும், கண்டத்திலும், குழல்வளர்ச்சியினுச்சியிலும், சுழிகளைப்பெற்றோரும்.நித்திரைபுரியுங்காலத்திற் பற்களைக்கடிக்கின்றோரும்.பறவுமித்தன்மைத்தாகிய குற்றங்களை யுடையோரெல்லாம், பிரமதேவனு

டையநற்றவப்பயனுய்த்தோன்றிச் சிறந்தஅவயவங்களைவாய்ந்திருக்கின்ற அம்மங்கையரதுவடிவங்களைக்கண் டுதரிசனஞ்செய்தோரல்லர். மனவாக்குக்காயங்கட்களவுபடாதபரிபூரணஸ்வரூபியாகியகணேசமூர்த்தியே,ஒப்பற்ற அம்மங்கையருடைய வழகின் சாயல்கள் இத்தன்மையவென்றுரைத்தேனன்றி, உள்ளவிதத்தை யாவர்சொல்லவல்லவர்களென்று நாரதமுனிவர் சொன்ன மாத்திரத்தில், கொன்றை மாலிகை யணிந்த பரமேஸ்வரர் புத்திரராகிய கணேசமூர்த்தி அங்கீகாரங்கொண்டு, அம்முனிவருக்கு அருள்வழங்கினர். அவ்வருளைப்பெற்றநாரதமுனிவர்பின்னுந்திருவடிகளில்வணங்கிவந்தித்துவிடைகொண்டு,அம்மங்கையரிடத்திற்சென்று பலமுறைதுதித்து, அவர்கள்இன்புறத்தக்கதாகவும், இவ்வையகமுய்யத்தக்கதாகவும்,இதனைச்சொல்வதாயினர். புண்ணியபூமியில்முளைத்து அறமுதலிய நாற்பொருள்களையும்பூத்துயாவர்க்கும் இம்மைமறுமைப்பயனை விளைவிக்கவல்லகொடிபோன்றுவிளங்கியஎனது அன்னைமீரே, யான்விநாயகக்கடவுளுடையதிருவடிகளையன்போடுபணிந்து, அவரதுசமூகத்தின் முன்னர்உங்கள்வனப்புகளனைத்தையுமெடுத்துரைத்தேன், அவைகளையக்கடவுள்அங்கீகரித்து, உம்மைத்திருக்கலியாணஞ் செய்துகொள்ளமதித்திருக்கின்றனர்,இதுநடந்தவிதந் தாங்களறியவேண்டியதென்ன,அக்கன்னியருமனமகிழ்ந்து, கணேசமூர்த்தியைவிவாகஞ்செய்துகொள்ள மிக்கஆவல்கொண்டிருந்தார்கள். அப்பால் அந்நாரதமுனிவர் பிரமதேவனிடத்திற் சென்று, தாம்நடத்திவந்தகாரியங்களனைத்தையுமறிவிக்க, அப்பிரமன் மனக்களிப்படைந்து, இனிநமதுபுத்திரிகட்குவிரைவில் விவாகத்தினைச்செய்து முடிக்கவேண்டுமென்று தன்னுள்ளத்தின் மதித்தெழுந்தவனாய், உடனேகைலாயவரையிற்சென்று, சோமன்-சூரியன்-அக்கினி-என்கின்ற மூன்றுவிழிகளையுடையவராகியும்,ஈசானம்-தற்புருடம்-அகோரம்-வாமம்-சத்தியோசாதம்-என்கின்ற ‡ ஐந்துமுகங்களையுடையவராகியும், மூவர்முதல்வராகியும்,வீற்றிருக்கின்றசிவபெருமானைப்பணிந்து,பலமுறைதுதித்துநின்றான். உமாபதியாகியபரமேஸ்வரர் அப்பிரமதேவனை நோக்கி,நீ இங்குவந்தகாரணமென்னென்றுவினவியருள,அதற்கப்பிரமதேவன் சொல்லுவான், எந்தையே-பிரமன்-விண்டு- உருத்திரராகியஎங்கண்மூவரையுமீன்று,ஆக்கன்முதலியமுத்தொழில்களைத்தந்து ஆட்கொண்டருளிய கணேசமூர்த்திக்கு, இலக்குமியுங்கண்டுநாணத்தக்கவனப்பினை வாய்ந்தஎனதுபுத்திரிகளைமணஞ்செய்துகொடுக்கஆவலுற்றிருக்கின்றேன், அதற்குத்-தேவரீரனுமதியைப்பெறுமாறுவந்தேனென்றான். அதனைச்சந்திரசேகரமூர்த்தியாகியசிவபெருமான்செவியுற்றுக்,கிருபையோடும்உமாபரமேஸ்வரியினுடைய திருமுகத்தைநோக்க, அவர்பிரமதேவன் முகத்தைப்பார்த்து,விநாயகமூர்த்திகருத் திருக்கலியாணஞ்செய்வதால் யாவர்க்கு நன்மையுண்டாகுமாதலின், அதனைவிரைவின்முடிக்கக்கடவையென்றருள்சுரந்தார்.இவ்வாறுதாய்தந்தைய ரிசைதலும், பிரமதேவன் மனமகிழ்ந்து விடைபெற்று

---

‡ அவற்றுள், ஈசானம்- அனைத்தும்ஆளுதல். தற்புருடம்-காத்தல். அகோரம்- அழித்தல். வாமம்- விளக்கல். சத்தியோசாதம்- தோற்றுவித்தல்.

வந்து, கருணைபொழிகின்ற யானைமுகத்தையுடைய கணேசமூர்த்தியையடைந்து, சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, ஓ சமானரகித நிகில சகத்காரணகர்த்தராகிய விநாயகமூர்த்தியே, அடியேனிவ்வுலகங்களைச் சிருட்டிக்குமாறுசுவாமிகள் முன்னர் இரண்டு சத்திகளைக்கொடுத்திருக்கின்றதே அச்சத்திகளைத் தேவரீர் திருமணஞ்செய்தருளவேண்டும், பூதபௌஷிய வர்த்தமானாத்மகமாகியகாலத்திரயத்திலும், பிருதிவியாதிபஞ்சபூதாத்மகமாகியகாரணத்திரயத்திலும், உள்ளும்புறம்பும்வியாபித்து, அந்தர்யாமியாகிய பரமாத்மா வாகியும், சர்வசாக்ஷியாகியுமிருக்கின்றசுவாமிகள் எவ்வாறுநடாத்திக்காட்டுகின்றதோ, அவ்வாறன்றி-இப்பிரபஞ்சங்களில்வேறொன்றுநடப்பதில்லாமையால், சுவாமிகள் அப்பெண்களைத் திருமணஞ்செய்துகாட்டாதவரையில்இப்பிரபஞ்சங்களிற்சுகங்காணமாட்டாது, அஃதன்றியும்- ஆண்களோடுபெண்கள்மனங்கலந்துகூடினாலல்லது, சுவாமிகளடியேற்குக்கற்பித்தருளியசிருட்டித்தொழில்பிரகாசப்படாதாதலால், சுவாமிகள் தயவுசெய்தெழுந்தருளி, அடியேனைமுற்றினுமாட்கொள்ளவேண்டுமென்றுபிரார்த்தித்தான். அதற்கு-நிலம்-நீர்-தீ-கால்-வெளி-சூரியன்-சந்திரன்--இயமானன்-என்கின்றஅஷ்டமூர்த்தவடிவாகிய விநாயகக்கடவுளிசைந்து ஓபிரமனே, நீயுரைத்தகலியாணத்திற்கு வேண்டியமுயற்சிகளை நடாத்திக்கொண்டிரு-யாம்அவ்விடத்திற்குயாவர்களோடும் இட்டமாகவருகின்றோமென்றுவிடைகொடுத்தருளப், பின்னரப்பிரமதேவன் கருணைநாயகராகியவிநாயகமூர்த்தியினது கிருபாநோக்கம்பெற்றுக்கொண்டுபோய், வைகுந்தத்தையடைந்து, திருமகள்கணவராகியதிருமாலைவணங்கித், தன்புத்திரிகளது திருக்கலியாணத்தையுரைத்து, அவ்விடத்தினின்று நீங்கித், தனதுசத்தியலோகத்தைச்சேர்ந்து, தேவதூதுவரைக்கூவி, அவர்களிடத்திற்சகலரிஷிகளும்-சகலவேந்தர்களும்-சகலதேவர்களும்-அத்தேவர்கட்கரசனாகியவிந்திரனும்-மற்றுமுள்ளயாவருந்-தங்கடங்கள்குடும்பசமேதர்களாகவிரைந்துவரவேண்டுமென்று திருமணப்பத்திரிகையைவரைந்தனுப்பிப், பின்னர் விசுவகர்மாவை யழைப்பித்து, எமதுகர்த்தராகிய கணேசமூர்த்தியினது திருக்கல்யாணமகோச்சவத்தைத்தரிசிக்கவருகின்றவிண்ணாட்டினர்- பூமண்டலவாசிகள்- பாதலத்தினர்- முதலானவர்கள் வீற்றிருப்பதற்கு, யோக்கியகரமான விடுதிகண்முதலிய வைகளையுங், கல்யாணமண்டபத்தையுஞ், சாத்திரவிதிப்படிக்குத் தீவரமாய்முடிக்கக்கடவையென்று ஆக்கியாபித்தான். அதற்கவ்விசுவகர்மா அதிகமழ்ச்சியையடைந்தவனாய், இப்பணிவிடைசெய்தற்கு யானென்னதவஞ்செய்தனனோவென்று ஆனந்தமுற்று, இங்கிமிடத்திற்றமதிட்டப்படிசெய்யக்கடவனெனவிடைபெற்றுச்சென்று, ஒருநகரமுண்டாக்கி, அதனைச்சூழப்பருத்தோங்கியிருக்கின்ற மதில்களெழுப்பி, நாற்புறங்களினும் விசித்திரமுற்று விளங்குகின்ற கோபுரங்களைத்தூக்கி, அதனுட்புறத்திற்கல்யாணமகோச்சவத்தினைத்தரிசிக்கவருபவர்கள் மனவெழுச்சியுடன் வாசஞ்செய்யத்தக்கபலமாளிகைகளும்உப்பரிகைகளுமேற்படுத்தி, விசாலமுற்றிருக்கும்வீதிகளைப்பிரித்து இடைஇடையிற் சித்திரகூடங்கள்-பளிங்குமண்டபங்கள்- சந்திரகாந்தத் திண்ணைகள்- முதலியவைகளை வரிசைவரிசையாகவகுத்துக், கல்யாணத்திற்குரியபண்டங்களை வைக்கத்தக்க பண்டாரவறைகளைமுடித்துத், தா

மனைஅல்லிமுதலிய புட்பங்கள் மலிந்திருக்கின்ற தடாகங்கள் - ஓடைகள் - கேணிகள் - முதலியவைகளைத்தக்க விடங்களிற்றொட்டு, வானையளாவத்தழைத்தோங்கிக் - குளிர்ந்த நீழலைப்பரப்பிக்- கனிவருக்கங்களைக் கொண்டிருக்குஞ்,சோலைகளுந்-தோப்புகளு-முண்டாக்கிப், பரிமளமிகுந்தபலபுட்பசாதிகள்மலிந்திருக்கின்ற நந்தனவனங்களையும்- பூங்காவுகளையுஞ்-சிருட்டித்துமுடித்தவுடன், அந்நகரத்தி னடுவில், மணச்சடங்குகள் முடித்தற்கோர்கல்யாணமண்டபத்தை விசாலமாகப்படைத்து,அதன்மத்தியில் நவரத்நமயமாகிய சிங்காதனமொன்றைப்பலவிசித்திரங்களோடமைத்து, அதைச்சூழ்வரத்திருமாலாதியதேவர்களும்-முனிவர்களுங்-களித்திருக்கத்தக்க பீடங்களை அணி அணியாகவகுத்துப்,பலநிறப்பட்டுகளாற் சோடித்திருக்கின்றவிதானங்களினுஞ்,சொர்ணமயமாய்த்தோற்றுகின்ற மண்டபத்தின்மேற்பரப்புகளினும், முத்துமாலைகள்-புட்பச்சரங்கள்-மயிற்பிஞ்சங்கள்-முதலியவைகளைத்தொங்கவிட்டு,நவரத்தினங்களிழைத்திருக்குஞ் சுவர்ப்புறங்களினும்,பருத்தோங்கிநிற்கும் பலவிதத் தூண்களினும், பொற்பாவைகள்- சித்திரப்ரதமைகள், நிலைக்கண்ணாடிகள்- முதலியவைகளைப்பதித்து, ஓமகுண்டத்தையும் விசாலமாகப்படைத்துப், பிரமதேவனைக்கண்டு அழிக்கையிட்டான். உடனேபிரமதேவன் விரைந்துவந்து, அவ்வவற்றின் சிறப்புகளைக்கண்டு,அதிக சந்தோஷங்கொண்டவனாய், மேருவுங்கண்டு நாணத்தக்க பிரகாசத்தோடு மிருக்கின்ற இந்நகரத்தினழகைக் காண்பதற்குத், தேவேந்திரனைப்போல ஆயிரங்கண்களைப் பெற்றிலேனேயென்றுஆசையோடு வருத்தமுற்றானாயின், அத்தேவதச்சனால் நிருமித்த நகரத்தின்சிறப்புகளை,என்போலிகளால் அளவிட்டுரைக்கப்படுவனவோ.பின்னர் பிரமனானவன் சிலகாரியக் காரரைத்துரத்தி, ஆகாய கங்கையைத் தருவித்து, தருப்பை- மாவிலை- சமித்து- முதலிய ஓமத்திரவியங்களைச்சேகரித்து- வாழை- கமுகு- தெங்கின்குலை- முதலியசிறப்புகளை வேண்டுமிடங்களில்அணிபெறநாட்டி, வீதிகடோறும் பனிநீரையிறைத்துப்,புழுதியையடக்கி, முற்றமெங்கணுஞ்சந்தனக்குழம்பினான்மெழுகிப், பலவிசித்திரங்களானகோலங்களையுமிடுவித்து,பாலிகை-கரக-மாதியபல மங்கலத்தினுசுகளைவருவித்து, திருவிளக்கு-பலவிளக்கு- குட்த்தீபமுதலியசோதிகளையமைத்து, இன்னும் இத்தன்மையவாகியஎல்லாச்சிறப்புகளையுஞ்சர்வசாக்கிரதையோடுநிறைவேற்றிக்கொண்டிருந்தான். அச்சமயத்தில்- தான் முன்னர்வரைந்தனுப்பியதிருமணப்பத்திரிகையைக்கொண்டுபோனதேவதூதர்கள், வாயுவேகமுமனோவேகமுந் தங்கட்குப்பிற்படத்தர்கதாகவோடி,அவ்வவர்கட்கறிவிக்க,உடனே அம்மணவோலையைவாங்கியாவருநிமிர்த்துவாசித்துச், சந்திரர்-சூரியர்-முதலியநவக்கிரகங்கள், முப்பத்துமுக்கோடிதேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், கருடர், காந்தருவர்,சித்தர், வித்தியாதரர், போகபூமியர், ஆகாயவாசிகள், பாதலவாசிகள், சேடனாதிய நாகராசாக்கள்முதல், மற்றத் தீபாந்தரங்களி லிருப்பவர்களுந், தங்கடங்கண் மனைமக்கள் சுற்றத்தினர்முதலிய கூட்டங்களோடு ஏகமாசத்திரண்டு, கடையுகத்திற் சத்தசாகரங்களுங்கரைபுரண்டு மேருவைச்சூழ்வதுபோல, தேவதேவோத்தமராகிய கணேசமூர்த்தியினுடைய திருக்கல்யாண சம்பிரமத்தைத்தரிசித்தீடேறுங் களிப்பினராய்ச்,சயவுச்சாகங்க

ளுடன் ஓமென்னுஞ்சத்தமெழ, நாற்புறங்களினுமிருந்து, தேவத்தச்சனால் நிருமாணித்திருக்கின்ற நகரமெங்கணும்வந்துநெருங்கினார்கள். பின்னர் பிரமதேவனானவன், வந்தபரிசனங்கட்கெல்லாஞ் சகலவாபரணமுணவுமுதலியவைகளை அவ்வவர்கட்குவேண்டுமட்டும்அளித்துவரும்படி, சங்கநிதி- பதுமநிதி- சிந்தாமணி- பஞ்சதாரு- காமதேனு-முதலானவைகட்காக்கியாபித்துத், தான் பின்னர்நடத்தவேண்டிய முயற்சிகளிற் பிரவேசித்தான். இப்பால்அக்காமதேனுமுதலியவைகள்பிரமனிட்டகட்டளையின்படி சகலசெல்வங்களையும் வந்தவர்கட்கெல்லாந் தந்துவர, அவைகளைஇந்திரன்முதலியதேவர்கள் பெற்றுக்கொண்டு மனக்களிப்படைந்து, வேறொருதெய்வலோகத்திலடைந்தவர்களைப்போலஅளவில்லாதஆனந்தக்கடலுண்மூழ்கினார்கள். அந்நகரத்துள்ளோர்களும் எந்தையாகியகணேசமூர்த்தியினது திருக்கல்யாணத்திற்குச் செய்துவைத்த நூதன வலங்காரங்களைக் கண்டு, முன்னர் காணக்கூடாதவுயர்ந்த பரகதியைப் பின்னரடைந்த வரையொத்துக்களிப்படைந்தார்கள். அந்நகரத்தின்கண், பன்னிரண்டுகோடிசூரியர்களுஞ் சந்திரர்களும் உடுக்கூட்டங்களும் ஒருமிக்கக்கூடியிருக்கின்றமையால், அங்கு இராப்பகலென்னுங் காலவேற்றுமைகள்இல்லாது ஒரேதன்மையாகியிருந்தது. காமதேனுகொடுக்காநின்ற வுண்டிகளையுங், கற்பகதருவளிக்கின்ற ஆபரணங்களையும், அந்நகரத்து வந்திருக்கின்ற ஆடவர்களும் மங்கையர்களும் பெற்றுக்கொள்வதனால், அவர்கள் தங்கள்பெயரின்மாத்திரம் வேறுபட்டிருந்தார்களேயன்றிஉருவத்தில்ஒருவரையொருவர்ஒத்தவராகி இருந்தார்கள். பாரிசாதம்-மந்தாரம்-கற்பகம்-தேவதாரம் சந்தானம்- என்கின்றபஞ்சதாருக்கள்நெருங்கியசோலைகளானவைதம் முட்பலவதிசயங்களையுண்டாக்கச், சிலர்அவ்வற்புதங்களைப்பார்த்து அவ்விடங்களைவிட்டுநீங்காதவர்களாயிருந்தார்கள். இளமைப்பருவத்தையுடையமங்கையரும், பெருமைபொருந்தியமைந்தர்களுந், தாங்களிச்சித்தவண்ணங் கற்பகமுதலியவைகளாற்றரப்பெற்று, மலர்பொதுளியசோலைகளிற்சென்றுவிளையாடல்செய்தார்கள். இரத்தினாபரணங்களையணிந்தகுசாரவிந்தங்களையுடையமங்கையர்கூட்டங்களிற், சிலர்அம்மனையாடுவார்களும், சிலர்பந்தாடுவார்களும், சிலர் புனல்விளையாடுவார்களும், சிலர்ஊசலாடுவார்களும், சிலர் தங்கடங்களன்பினையுவந்து தேடுவார்களும், சிலர் அவ்வன்பினைக்கலந்து களிப்படைவார்களும், சிலர்கிளிப்பிள்ளைகளினுடையமெல்லியசொற்களால் நாகணவாய்ப்புட்களினுடைய மொழிகளைக் கீழ்ப்படுத்துவார்களும், சிலர் இந்நாகணவாய்ப்புட்களினுடையசொற்களால் அக்கிளிப்பிள்ளைகளின் மொழிகளைத்தாழ்வுசெய்வார்களு மாகிச், சோலைகளெங்குமனங்களித்துலாவியிருந்தார்கள். கருப்புவில்லையேந்திய மன்மதனுங் கண்டுநாணத்தக்க வனப்பினைவாய்ந்த ஆடவர்களிற், சிலர் யானைகளோடு யானைகளையும், குதிரைகளோடு குதிரைகளையும், ஆடுகளோடு ஆடுகளையும், கவுதாரிகளோடு கவுதாரிகளையும்; காடைகளோடு,காடைகளையும், கோழிகளோடு கோழிகளையும், பொருதுவித்துச்சயங்கூறிக்களிப்படைந்தார்கள். வேதாகமமுதலியவைகளைத்துரிசறவாராய்ந்துணர்ந்து, இருவினைகளினின்றுநீங்கியமகாதவத்தையுடையவசிட்டர்முதலானரிஷிபுங்கவர்களில் சிலர் தருமவாதஞ்செய்கின்றவர்களும், சிலர் அருத்தவாதஞ் செய்கின்ற

வர்களும், சிலர் காமவாதஞ்செய்கின்றவர்களும், சிலர் மோக்ஷவாதஞ்செய்கின்றவர்களுமாகியிருந்தார்கள். சனகர்முதலியயோகிஸ்வரர்கள், பரதத்துவஸ்வரூபியாகிய சிவபெருமானது ஆகமப் பிரமாணத்தினாலுங், காட்சிப்பிரமாணத்தினாலுஞ், சிரேஷ்டமாகிய பதிபசுபாசங்களின்றன்மைகளைப் பேசிக்கொண் டிருந்தார்கள். அணிமாதியட்டமா சித்திகளினும் வல்லசித்தர்கள், தம்மை வணங்காரையெல்லாம் வணங்கு வித்துப், பலவற்புத விளையாடல்களை நடாத்திக்கொண் டிருந்தார்கள். தேவர்கள், தங்களினத்தினருடன் பற்பல தர்க்கங்களைப்பேசி அவ்வவர்கள், ஆண்மைகளை யாதரித்துக்கொண் டிருந்தார்கள். இந்நகரவாடம்பரங்கள் இவ்வாறிருக்கப்- பதுமநிதி- சங்கநிதி- கற்பகதரு- முதலியவைகளாற்றந்த ஆடையாபரணாதிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற கல்யாண மண்டபத்திற், பொன்னாற்செய்து நவரத்தினங்கள்பதித்திருக்கின்ற தூண்கடோறுநாட்டியிருக்கும்- மரகதவாழைகளுங்- கமுகமரங்களுங்- கன்னற்றண்டுகளுங்- கண்டவர்கள் அதிசயிக்கும்படிச், சொர்ணாபரணங்கள் - பட்டாடைகள்- அமுதுகள்- சிற்றுண்டிகள்- முதலானவைகளை யளவில்லாமற்கொடுத்துவந்தன. சுவர்த்தலங்களின் முறைமையாகத் தீட்டியிருக்கின்றசித்திரங்களெல்லாஞ், சொற்கமத்தியபாதலமுதற்சகலதீபாந்தரங்களிலுள்ளவேறுவேறான பொருள்களை, வந்தவர்கட்கெல்லாம்வரையாது கொடுத்துஏவல் செய்துகொண்டிருந்தன. அம்மண்டபத்தைப்புடைசூழ்ந்த சோலைகளிலமைத்திருக்கின்ற பலவிசித்திரங்களான பிரதமைகளெல்லாங், கற்பகாதிகளைப்போல அவ்வவர்க்குவேண்டுவனவற்றை ஆவல்தீரவளிப்பதன்றி, அக்கற்பகாதிகளையுங் கண்டுஆசியஞ்செய்து அளவற்ற அற்புதங்களைநடாத்திவந்தன. சாயைதோற்றுத்தன்மையராகியதேவர்கள்வடிவங்களை, அம்மண்டபத்திற்பதித்திருக்கின்றரத்தினங்கள்காட்டுவதனால், அத்தேவர்கள் அச்சாயைகளைப்பார்த்து, ஈதென்னகாரணமெனச்சந்தேகித்தார்கள். இவ்வாறு அளவற்றபெருமிதங்களோடுந்தேவதச்சனால்நிருமாணித்த அம்மண்டபத்தின்சிறப்புகள் யாவராலளவிட்டுரைக்கற்பாலன. இப்பால்நாரதமகாமுனிவர் சகலசம்பிரமங்களையுங் குறைவின்றி நிறைவேற்றியிருப்பதைப் பார்த்து மனங்களித்து, விரைந்தெழுந்து, வெள்ளியங்கிரியைச் சேர்ந்து, சிவபெருமான்சந்நிதானத்தையடைந்து, மும்முறைவலம்வந்து, சாஷ்டாங்கமாக வணங்கி, ஓதயாநிதியே-விநாயகப்பெருமான்திருக்கல்யாணமகோச்சவத்திற்குரிய சகலவலங்காரங்களுஞ்செய்து நிறைவேறின. அரசர்கள் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர்வந்துநெருங்கியிருக்கின்றனர். தேவரீர்அடியேங்கண்மீது கிருபைபுரிந்துஎழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொள்ளலுஞ், சிவபெருமான்சந்தோஷித்து, விநாயகமூர்த்தியையழைத்து, ஐயனே-பிரமனால்வளர்க்கலுற்ற சித்திபுத்திகளைத் திருமணஞ்செய்வதற்கான கோலத்தைக்கொள்ளுகவென்று திருவாய்மலர்ந்தனர். அதுகேட்ட சுத்ததத்துவமூர்த்தியாகிய விநாயகக் கடவுளானவர், தெய்வகங்கையிலாடித், தேவர்களுடைய இமையாவிழிகளை இடைவிடாது இமைக்கச்செய்யும் வனப்பினைவாய்ந்த தமதுதிருமேனியினொளியைச்சிறிதுதணியச்செய்பவர்போலப்பீதாம்பரத்தையெடுத்து அரையிற்சாத்தி, வாசனைவீசுகின்றகூட்டுவருக்கர்ச்சனத்தைமார்பிலிடத்துந்தொ

களினிட்த்தும் பூசிக்கொண்டார். சந்திரனைமுடியிலணிந்ததைத்தெரிந்து
கொண்டமற்றக்கோள்களானவை, தாமும் அம்முடிமேலேறியிருப்பதற்
கெண்ணிஅரியதவங்களைச்செய்ய,அவைகளையுந்தமதுந்ன்முடியிற்சூட்டி
க்கொண்டதற்கொப்பாக,மிக்கவொளிபொருந்தியநவமணிகளைவரிசையா
கப்பதித்த பொன்முடியினைச் சூட்டிக்கொண்டார். சடைமீதிருக்கின்றசந்
திரன்,அச்சடையை மறைத்திருக்கின்றமுடிமீதிருந்து திருமணச்சேவை
செய்யானாயின்,அவனுள்ளம் வருந்துமென் றெண்ணினவர்போல,அச்ச
ந்திரனை அப்பொன்முடியின்மீது பொருந்தவமைத்து, அவனைச் சூழ்வ
ரக்கொன்றை மாலிகையினையணிந்துகொண்டார்.பல்லாயிரங்கோடியண்
டங்களினுள்ள ஆன்மகோடிகளனைத்தையும்,அரைநொடியிற்றகித்து நீரு
க்கவல்லதமதுநுதல்விழியின்வெப்பத்தை,அக்கலியாணசபையிற்காட்டா
த வண்ணம்அதனைத்தணிவிப்பவர்போல, அதன்முன்னர் கண்டவர் விய
ப்படையத்தக்க பிரகாசத்தினையுடைய இரத்தினப்பட்டத்தை யணிந்து
கொண்டார். பொன்முடியிலணிந்த மூன்றாம்பிறையினது நிலவென்று
சொல்லும்படி, ஒப்பற்றநெற்றியில் வெண்டிரு நீற்றையணிந்து,அதனடு
வின் மிக்கவாசனைகலந்திழைத்திருக்கின்ற சிவந்ததிலகமிட்டுக்கொணடா
ர். திருக்கரத்திலிருக்கின்ற கொடியாகியமீனும்-ஆகாயத்திலிருக்கினற அ
ருந்ததியாகியமீனுந்-தமதுதிருமுகமாகிய கருணைக்கடலில் இன்புற்றிருக்
க வெண்ணிப்,பக்கங்களில்வந்துபொருந்தியிருப்பனபோல,அழகுநிறை
ந்தமணிகளாற்செய்யப்பட்டமகரகுணடலங்களைக் காதிலணிந்து கொண்
டார். மூகமாகிய பதுமநிதியைத்தாங்குகின்ற,சங்கநிதியாகியகண்டத்தில்
சிந்தாமணியைப்போலத், தரளமாலைகளையும் பொன்னாபரணங்களையும
ணிந்து,இடையில்உதரபந்தனந்தரித்து,கைகளிற்கடகங்களைப்பூணடு,விர
ல்களின்மோதிரங்களைச்சூடித், திருவடிகளிற் சிலம்புகளையார்த்து, இன்
னும் அளவற்றஆபரணங்களைச்சிறப்பெய்தவணிந்துகொணடார். இவ்வா
று விநாயகக்கடவுள் திருமணக்கோலங்கொணட சிறப்பைச்சிவபெருமா
ன்கண்களிக்கப்பார்த்து, ஈராயிரமருப்பினோடுமலைபோன்று பாரித்திருக்
கின்றஅயிராவணத்தை அவருக்குத்தந்து, தாமும் உமாபரமேஸ்வரியும்
ரிஷபவாகனத்திலெழுந்தருளினார்கள். கூரியவேலாயுதத்தையேந்திய மு
ருகக்கடவுள் மயில்வாகனத்திலேறியருளினார். துவாதசாதித்தர்-ஏகாதச
ருத்திரர்- அட்டவித்தியேஸ்வரர்- அட்டவசுக்கள்-அட்டதிக்குப்பாலகர்
முதலிய எல்லாத்தேவர்களுஞ், சர்வாலங்காரசோபிதராய் அவ்வவர்வா
கனங்களிலேறிப்புடைசூழ்ந்தார்கள்.நிகும்பன்-கும்பன்-சங்கபாலன்-கு
முதன்-பானு-தனஞ்சயன்-தசமுகன்-காலபாசன்-விசயன்- முதலிய பூத
கணத்தலைவர்களோடு, நந்திகேஸ்வரரும்மற்றுமுள்ளசணநாதர்களுஞ்நெ
ருங்கினார்கள். யாவருந்துதித்தற்குரிய முதன்மைபெற்றிருக்கின்ற பிரண
வமந்திரம்-வேதங்கள்-கலைகள்-காலங்கள்-இராசிகள்-சத்தகோடிமகாமந்
திரங்கள்-முதலியவைகளோடு-காமிகம்-யோகசம்-சிந்தியம்-காரணம்-அ
சிதம்-தீபதம்-சூட்சுமம்-சகத்திரம்- அஞ்சுமான்-சுப்பிரபேதம்-விஜயம்-
நிசுவாசம்-சுவாயம்புவம்-அனலம்-வீரம்-இரௌரவம்-மகுடம்- விமலம்
சந்திரஞானம் பிம்பம்-புரோற்கீதம்-இலலிதம்- சித்தம்- சந்தானசர்வோ
த்தமம்-பாரமேச்சுரம் கிரணம்-பேதம்-வாதுளம்-என்கின்ற இருபத்தெ

ட்டாகமங்களும் ஒவ்வொரு தேவவடிவங்களாகித் திரண்டுவந்தன. இவ்வாறுசகலசம்பிரமத்தோடு யாவரும்புடைசூழ்ந்து நெருங்கியசமையத்தில்,விநாயகமூர்த்தியானவர் ஐயிராவணத்திலாரோகணித்துப், பூதகணங்கள்புகழ்பாடிவரவும்,மாதவர் வேதமோதிவரவும், சந்திரவட்டக்குடைகள் ஆகாயவெளியை மறைக்கவும், பலவிதபட்டுக்கொடிகள் இருமருங்கினுநெருங்கவும்,சிலர்ஆலவட்டங்கள்வீசவும்,சிலர் சாமரைகளிரட்டவும், தோற்கருவி-துளைக்கருவி-நரம்புக்கருவி-கஞ்சக்கருவி-மிடற்றுக்கருவி- என்கின்ற பஞ்சவாத்தியங்கள் நாற்றிசைகளினு முழங்கவும்,இன்னும்அளவற்ற ஆடம்பரங்களோடு,பெரும்புறக்கடல்பெருகுமாறுபோல,எள்ளிட இடமில்லாமல்,ஒருவரோடொருவர்அடர்ந்து,கிரீடங்களுடன்கிரீடங்கள் புசங்களுடன்புசங்கள்ஊடுதாக்க, ஆகாயமார்க்கமாகச் செல்லுமளவில், அட்டபுயாசலங்களையுடையசிவபெருமானுமே கணேசமூர்த்தி திருமணக்கோலங்கொண்டெழுந்தருளிவருவதைப்,பிரமன்விண்டு முதலிய தேவகணங்களாதியர்கண்டு, அளவளாவிய வானந்தத்தோடும் எதிர்கொண்டு சென்று,கற்பகமலர்களைத்தூவியருச்சித்துச்,சாஷடாங்கமாகநமஸ்காரஞ் செய்து,அந்நகரத்துள்ள இராசவீதியில் வலமாகவழைத்துக் கொண்டு போய்த்,திருக்கல்யாணமண்டபத்திலெழுந்தருளச்செய்தார்கள். உடனே சரஸ்வதியானவள்சொர்ணகரகத்திற்றெய்வகங்கையை யேந்திவந்து, கணேசமூர்த்தியினுடையதிருவடிகளில்அபிஷேகிக்கப்,பிரமதேவன் மிகுந்தவணக்கத்தோடும்அத்திருவடிகளைவிளக்கி,மெல்லிய ஆடைகொண்டொற்றினன். பின்னர்சிவபிரானும்உமாதேவியும்ஆசனத்திலிருந்தனர். சுப்பிரமண்ணியர்முதலியமற்றைத்தேவர்களெல்லாம்வெவ்வேறாதனங்களில்அமைந்தனர். விநாயகக்கடவுள்அம்மண்டபத்திநடுவில்அமைத்திருக்கின்றமாணிக்கசிம்மாதனத்தில்ஆரோகணித்துத், தேவமாதர்கள்நடிக்கின்ற ஆடலினும்பாடலினுந்,தமதுதிருக்கண்ணோக்கினைச்சாத்தியிருந்தனர். அளவற்றதேவஸ்திரீகள்-வெள்ளடை-பாகு-வாழைக்கனி-தெங்கின்கனி-மற்றுமுள்ளபலாதிகள்-இரத்தினாபரணங்கள்-பூமாலைகள்-சித்திரப்பட்டுகெள்முதலானமங்கலவரிசைகளைத்,தனித்தனிப்பொற்றாம்பாளங்களில்நிரப்பித்,தங்கடங்கள்கைகளிலேந்திக்கொண்டு,சாமரை-பூரணகும்பம்-கண்ணுடி-தோட்டி-முரசு-மணிவிளக்கு-கொடி-இணைக்கயல்-என்கின்ற அட்டமங்கலத்துடன், பலவாத்தியங்களுமுழங்க, அந்நகரவீதியைவலமாகவந்து, விநாயகப்பெருமான் வீற்றிருக்கின்ற திருக்கல்யாணமண்டபத்திற் றொருகுப்பாகவைத்து வணங்கினர்கள். இப்பால் அந்தப்புரத்திலிருக்கின்றசித்திபுத்தியென்னுங் கன்னியர்களைச்,சரஸ்வதி-இந்திராணி-இலக்குமி-அதிதி அனசூயை-அருந்ததி-என்கின்றமாதர்களறுவரும், வணங்கிவாழ்த்துதல் செய்து, சிரோரத்தினங்களால் இழைத்திருக்கின்றஆதனத்திலெழுந்தருளப்பண்ணி, அங்குவந்திருக்கின்ற தேவமாதர்கட் கெல்லாம் வேறுவேறு கனிவர்க்கங்களையும் வெள்ளடை பாகுகளையுந்தங்கள் கைமிகப்பத தந்து, பின்னர் யாவரும்புடைசூழ்ந்து பற்பல ஏவல்களை இயற்றிவர, அக்கன்னியர்க்குத் திருமஞ்சன மாட்டுவதானர்கள். புனுகுசட்டம் - கோட்டம்-நாகப்பூ-முத்தக்காசு-சயிலேகம்- விலாமிச்சம்-இருவேரி - ஆரியக்கோட்டம்-மாஞ்சில்-மலையிருவேரி-பச்சிலை-கச்சோலம்- அதிமதுரம்-தக்

சோலம்-வாழைப்பூ நன்னாரிப்பூ-கண்டில்வெண்ணெய்-மகிழம்பூ- தாவரி
சி-ஏலம்-சாதிக்காய்-வெண்குங்கிலியம்-இலவங்கம்-நாகணம்-மஞ்சட்டி-
சண்பகமொக்கு-அரத்தை-சாம்பிராணி-தகரம்- கருங்குங்கிலியம்-வெட்
டிவேர்-மாலிகை-என்கின்ற முப்பத்திரண்டுபொருள்களோடு,கத்தூரி-கு
ங்குமம்-கற்பூரம்- அகில்-சந்தனம்-என்கின்றஐவகைவாசனைத்திரவியங்க
ளும்,நாவல்-கடுக்காய்-நெல்லிக்காய்-தான்றிக்காய்-ஆல்-அரசு-அத்தி-இத்
தி-கோரைக்கிழங்கு-மாந்தளிர்-என்கின்றபத்துவகைத்துவர்ப்புச்சரக்குக
ளுஞ்சேர்த்து,வெள்ளிலோத்திரப்பட்டையையும்- அரைத்தசந்தனவண்
டலையும்- கலந்து, மிக்கபக்குவத்தோடு காய்ச்சப்பட்டிருக்கின்ற பரிமள
மிகுந்ததயிலத்தை அம்மங்கையர்கூந்தலிற்றிமிர்ந்து, பின்னல்களைமெல்
லெனச்சிக்கறுத்துப், பலமாதர்கள்மங்கல வாழ்த்துகளைச்சொல்ல நலங்
கிட்டு, யானையின் பிடரியிற்கொணர்ந்துவந்த கங்காசலத்தினற்றிருமஞ்ச
னமாட்டிப், பனியைப் போன்ற மெல்லிய ஒற்றுடைகளினல் இருவர்
திருமேனிகளிலும் ஈரம்புலர்த்திப், பிறந்தபோதே பெண்ணென்று சொ
ல்லற் கோரடையாளமாக வந்த உறுப்பினுக்குப்,பலஉபசாரத்தோடுமு
ன்னதாகச்சிறப்புச்செய்வதுபோலப் பட்டாடையினைச்சாத்தி, அதன்பி
ன்னருண்டான மற்றோரடையாளமாகிய தனங்கட்குஉடனேஉபசரிக்கத்
தக்கதென்று, இயற்கையிற்குளிர்ச்சியும் வெம்மையும்பொருந்தியஅவை
கட்குச்,செயற்கையிற்றண்மையுங்கடுமையுஞ்செய்பவர்போல, மணமிகு
ந்தசந்தனச்சேற்றையருவருப்புண்டாகவப்பி, மேருமலையிற்படர்ந்தமேக
கூட்டங்கட்கொப்ப, அகிற்புகைமுதலியவாசனைப்புகைகளை யூட்டினர்க
ள். பற்பலமலர்கள்நெருங்கிப்பூத்திருக்கின்ற கானகத்தைப்போலவும், ஆ
காயமுழுவதும் உடுக்கூட்டங்கள்நிரம்பவருகின்றஇருளைநிகர்ப்பவும்,சிப்
பினல்வாரிப்பரவியிருக்கின்றகூந்தலிற்பலவிதரத்தினமாலைகளையொத்தப
ன்னிறமலர்மாலிகைகளைச்சேர்த்து,எருத்தின்முரிப்பினையொப்பக்கொண்
டையிட்டார்கள். மதம்பொழிகின்ற யானையானதுதன்மருப்பிற்றுதிக்கை
யைச் சுற்றிக்கொண்டதுபோலக், கஸ்தூரிமணங்கமழ்கின்ற உச்சிக்கொ
ண்டையில் முல்லைமாலைகளைச்சூழ வணிந்து, மேகமானது வெள்ளியநீர்
த்தாரைகளைச் சொரிவதுபோல, அவ்வுச்சிக்கொண்டையிற் பிரகாசிக்கின்
ற முத்துமாலைகளைத் தொங்கவிட்டார்கள். இந்திரன் தனதுவில்லைத் தன்
வாகனமாகிய மேகத்தில்வைத்ததுபோலக்,கரியகூந்தன் மறாங்கடைந்திரு
க்கின்ற நுதலின்மீது, அவ்விந்திரதனுசிலம்புதொடுத்ததையொப்பநுதல
ணிமாலையினையணிந்தார்கள். விநாயகப்பெருமான் திருமுடியின்மீதுவிள
ங்கியிருக்கின்ற இளந்திங்களையுங்,திருக்கரத்திலேந்தியிருக்கின்றமயிற்கொ
டியையும், அவர்காதலியராகிய சித்திபுத்திகளும் அணிந்து கொள்வது
முறைமையென்று, சந்திரப்பிறையையும்-மயிலணியையும்-முடியின்மீத
ணிந்தார்கள்.இராகுக்கோளானது இக்கூந்தல்முகிலன்று-சைவலமென்று
ம்,முகம்பூரணசந்திரனன்று-தாமரைமலரொன்றுங்கருதியகலுமாறு,மகரத்
தினதுபேழ்வாயையொக்க சிவந்தநிறத்தையுடையமணிகளையழகுண்டா
கநெற்றியிலணிந்தார்கள். நாணின்றிவளைத்து அம்புதொடுத்திருக்கின்றஅ
நங்கிய வில்போன்றநெற்றியில், அந்திரஞ்சத்திரமுதலிய எவ்வித ஆயுதங்க
ளாலும் வெல்லப்படாத விநாயகக்கடவுளுடையபிரதாபத்தைப்பொத்தி

வைத்ததுபோலச்,சிவந்ததிலதப்பொட்டினையிட்டார்கள். அமுதபானரா
கிய தேவர்கள்-விழிகளைப்பாற்கடலென்றும்,அவைபிறபடர்ந்தசெவ்வரிக
ளைப்பவளங்களென்றும், மணிகளைமாயவனென்றுங்,கொங்கைகளைமந்தர
கிரியென்றுங்கருதி, யெக்கமுறாதவண்ணம், அவ்விழியிணைகளைக் காத்தற்
கோரடையாளமாகஅஞ்சனந்தீட்டினார்கள். இம்மங்கையர்கண்கள் ஆலத்
தையும்அமுதத்தையும்அளிப்பனவன்று- சுத்ததிருப்பாற்கடலேயென்று
ம், அவைகளிற்றீட்டப்பட்டது அஞ்சனமன்று - அதனையுண்பான் வந்
தமேகமென்றுங்கருதி மயங்குதற்கேற்பனவாக,அக்கடலினிடத்துண்டா
கியசங்கநிதியாலீன்ற நீண்டதரளமணியினைநாசியின்மீதணிந்தார்கள். அ
ம்மங்கையர் முகாரவிந்தமாகிய சகோரபக்ஷியானது, நெற்றியைச் சந்தி
ரபிம்பமெனக்கருதி அமுதுண்ண வந்திருப்பதைப்போல,அம்முகாரவிந்
தத்தில் விளங்கியிருக்கின்ற கண்ணிணைகளாகிய நீலோற்பல மலர்களி
ன் அழகை,மற்றையநீலோற்பலமலர்கள் கிரிகித்துக்கொள்ளுமாறு இடந்
தேடிக்கொண்டிருக்கின்றனவென்றுசொல்லும்படி,மிக்கவொளிவிளங்கு
ஞ்செவிகளின்மேல்அன்றலர்ந்தநீலோற்பலமலர்களை யணிந்தார்கள். தா
ய்தந்தையரைப்போல அம்மங்கையர்கள்வளர்த்தஅன்னப்புட்களானவை
அவர்கட்குஇராசியஞ்சொல்லச்செவிகளினடுத்திருப்பனபோல, ஒளிமி
குந்தமணிகளைவரிசைபெறச்சேர்த்துப்பதித்தஅன்னக்கொப்புகளை யணி
ந்தார்கள். உரோகணிமாது அம்மங்கையருடையவொளிமிகுந்தவதனத்தி
னைத்,தன்காதலனாகிய சந்திரனென்றுகருதி விருப்புற்றடுத்திருப்பதுபோ
லக், குளிர்ச்சியுமழகும்வாய்ந்ததரளத்தினாற்செய்த கன்னப்பூவென்னும்
ஆபரணத்தினையணிந்தார்கள்.இம்மங்கையர்முகமானது தேனையுமிழ்கின்
றதாமரைமலர்போலமலர்ந்து, அமிர்தமொழுகுகின்றசந்திரனைப்போலக்
குளிர்ந்து,நம்மைப்போலவுங் கிரணங்களைவீசிப் பிரகாசிக்கின்றதெனக்க
ருதி,சூரியனானவன்வணங்கவந்திருப்பதுபோலப், பதுமராகத்திற்செய்த
வசியகுண்டலத்தினை யணிந்தார்கள். கன்னிக்கமுகினையொத்தகண்டத்தி
ல்,கண்டோர்களது கண்ணெச்சிலடையாதிருக்கக் காப்புச்செய்ததுபோ
லக், கிரணங்களையுடைய பலமணிகளாற்செய்த கட்டுவடத்தினை அ
க்கண்டத்தின்மீ தணிந்தார்கள். கல்யாண மகிழ்ச்சியினால் அம்மங்கைய
ர்க்குக்கொங்கைகள் பூரிப்பதனாலுந், தோள்கள் பருத்திடலாலும், இப்
பூமியின்கண் இடமில்லாமற்போமென்று கருதி, அவைகள் பருத்தலைத்
தடை செய்பவர்போல, ஒளிமிகுந்ததனங்கட்குக் கச்சினையுந், தோள்க
ட்கு வாகுவலயத்தினையுங், கைகட்குவளையினையும், விரல்கட்குமோதிர
த்தினையுமணிந்தார்கள். மிக்கமதர்ப்பினையுடைய கொங்கைகட்குப் பல
வரிசைகளையளிப்பவர்போல, அக்கொங்கைகளின் மருங்கெல்லாங் கிர
ணங்கள் வீசுகின்றமாணிக்கமாலை - பவளமாலை - முத்துமாலை - வச்சிர
மாலை - கோமேதகமாலை - முதலியவைகளோடு, அணிபெறக்கோத்த பூ
மாலைகளையு மணிந்தார்கள். கொங்கைகளினின்றும், பலமணிவடங்களா
கியநதிகள் ஒளிவிட்டு வீழ்கின்ற நிதம்பமென்னுங் கடலுக்கு நாணை
ய நிரும்பிப்பவர்போலப், பற்பலமணிகளாற்றெரிந்துகோத்த முப்பத்தி
ரண்டுகோவையாகிய மணிவடத்தினையும்,அரைப்பட்டிகை முதலான ஆ
பரணங்களையுமணிந்தார்கள்.அளவற்றநாள்தேடியுங்காண்டற்கருமையன,

வராயிருக்க திருவடிகளை, இன்றுகண்டோமென்று நான்குவேதங்களுமன
ங்களித்துவிடாமற்பற்றிக்கொண்டதுபோல, அம்மங்கையருடைய பாதப
துமங்களிற்,பாடகஞ்- சதங்கை- தண்டை- நூபுரம்- பாதசாலம்- பொன்
மோதிரம்- என்னும் ஆபரணங்களையணிந்து,செம்பஞ்சுக்குழம்புந்தீட்டி
னார்கள். அம்மங்கையர்- ஆபரணமுதலியவைகளாற் செயற்கையழகுவா
ய்ந்திருக்கும் ஏனையமாதர்கள்போலுருக்கொண்டிருப்பினும்,இயற்கையி
ற்றானே அளவற்றவனப்புகளைவாய்ந்தவர்களென்று, இதுகாறுஞ்செய்த
செயற்கையழகைமறைத்துக் காட்டுவார்கள்போல, அரைதொடுத்துத்
தோள்வரையில் மெல்லியஆடையினை யணிந்தார்கள். இவ்வாறு சித்திக்
கு, இலக்குமி- அதிதி- இந்திராணி - என்னுமூவர்களும். புத்திக்கு, அன
சூயை- அருந்ததி- இரதிதேவி- என்னுமூவர்களுமாக, மணக்கோலத்திற்
குரிய வலங்காரங்களையெல்லாஞ் சிறக்கச்செய்துமுடித்து, அவ்விடத்தி
னின்றுநீங்கிச், சிவபிரான் இடப்பாகத்தமர்ந்த பார்வதிதேவியாருடைய
கடைக்கணோக்கின்நேராகநின்று, அன்னையே-முன்னம்அடியோங்கள்செ
ய்ததவப்பயனாகத்தேவரீர் ஆக்கியாபித்த பணிவிடைகளைக்குறைவின்றிந
டாத்திவந்தனமென்றறிவித்துவணங்கி, அத்தேவியாருடைய வனுக்ஞை
பெற்றுப்,பின்னரவ்வறுவரும்அம்மங்கையரைநவரத்தினச்சிவிகைகளிலே
ற்றிப்,பலவிண்ணின்மாதர்களுந்தோழியர்களும்புடைசூழ்ந்துவரவும்,வெ
ண்பட்டுக்குடைகள்- மயிற்பிஞ்சங்கள்முதலிய வலங்காரங்களோடுபலவ
கைக்கொடிச்சின்னங்கள்விளங்கவும்,குடமுழாமுதலியபலவாச்சியங்கண்
முழங்கவுமாக, அளவற்றவைபவங்களோடு வீதியிலெழுந்தருளச்செய்த
மாத்திரத்தில்,முளைமுதலியவெல்லாம்முறைமையாகச்சேர்த்துவைத்திரு
ன்ற கல்யாணமண்டபத்தில், சனகமகாமுனிவர் ஆசிரியராகவந்து, தருப்
பை-வெண்பொரி-முதலியபலவகைப்பொருள்களையுஞ்சேகரித்து,மூகூர்
த்தவேளைபார்த்துக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் ஒருவர்க்கொருவ
ரொப்பாவதன்றி, மற்றொருவரொப்பில்லாதஅம்மணப்பெண்களிருவோ
ரும்,வீதியைவலமாகவந்து, திருக்கல்யாணமண்டபத்திலிறங்கிக், கற்பகத
ருவின்இருமருங்கினும்படர்ந்திருக்கின்றகாமவல்லிக்கொடிபோலக்,கணே
சமூர்த்தியினுடைய பக்கத்திற்கலந்திருந்தார்கள்.உடனேமண்ணில்வழுக்
கிவீழ்ந்ததேவர்கள் மீட்டும்விண்ணிற்புக்குமகிழ்வையடைந்ததுபோல,இ
துகாறுங் கணேசமூர்த்தியைநீங்கியிருந்தஅம்மங்கையர்மீட்டும்அவர்சமீ
பத்திற்கலத்தலும், முன்னர்வேறுபட்டுவிளர்த்திருந்தநிறத்தினைப்போக்கி
த் தங்கள்சுபாவவடிவத்தினையடைந்தார்கள். இப்பால்சகலகலைவல்லவரா
கிய சனகமகாமுனிவர்சங்கற்பஞ்செய்து, புண்ணியாவாசனம்புரிந்து, அ
ம்மணப்பந்தரிலுள்ளபொருள்களையெல்லாந் தூய்மையாக்கிக்,கணேசமூ
ர்த்தியை வேதாகமங்களாற்றுதித்துத்,தேன்கலந்தபாலும் பழமுமளித்து
அருக்கியம்-பாத்தியம்-ஆசமனம்-என்கின்ற மூன்றுமந்திரசலங்களையுந்த
ந்து, மணப்பெண்களுக்குக்கூறைமுதலிய வைகளையணிவித்துப்,பிரமதே
வனைக்கூவினர். உடனே அப்பிரமதேவன்விரைந்துவந்து, தம்பதிசமேத
ராயெழுந்தருளியிருக்கின்ற விநாயகக்கடவுளுடைய மணவணிக்கோலத்
தை மனங்களிக்கக்கண்டு,கரங்களைச்சிரமேற்கூப்பித், தொழுது துதித்து
த், தன்னருகினிற்கின்ற சரஸ்வதியைப்பார்க்க,அவள்பலதெய்வப் பெண்

களுடன் துரிதமாகச்சென்று, திருமஞ்சனங்-கற்பகமலர்-தூபதீபமுதலா கிய பொருள்களைப் பொற்பள்ளயங்களிலேந்தித், தன்கணவன் சமீபத்து வந்துநின்றனள். அக்காலத்திற்சனகமகாமுனிவர்பணித்தருளியபடிக்குப் பிரமனானவன் வேதாகமவிதிப்படிப் பாதபூசைசெய்ய யத்தனித்தவனாய்ப், பொற்றட்டினிடத்தில்விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளைச்சேர்த்துத், தன்தேவியானவள் தங்கக்குடத்தில்நிரப்பிவைத்திருக்கின்றகங்காசலத்தையெடுத்து மெல்லமெல்லக் கவிழ்த்துவரத் தான்சுத்திசெய்து,திருவொற்றாடையால் ஈரத்தைப்புலர்த்திச், களபகஸ்தூரிமுதலியவைகளைச் சேர்த்திருக்கின்ற சந்தனக்குழம்பையப்பிப், பஞ்சதாருக்களினதுபுதியமலர்களைக்கொண்டருச்சித்துச்,சாம்பிராணிதூபத்தைக்காட்டிச், கற்பூராஞ்சனங்கொடுத்துச், சோடசவுபசாரங்களோடும் பூசனைகளைநிறைவேற்றியவுடன்,உடல்-பொருள்-ஆவி-என்கின்றமூன்றையும்,அநாதியிற்றானே,தமக்கு அடிமையாகவுடையகடவுளுக்குப்,பரிபக்குவராயினோர்- தங்கள்போதவொழிவினிமித்த மீட்டுமவைகளைச்சமர்ப்பிக்கு ‡ முறைமைபோல,விநாயகமூர்த்தியை அநாதிதொட்டுநீங்காத அச்சத்திகளைப்,பிரமதேவனானவன்மீட்டும் பழமைபாராட்டியளிப்பவனாய்க், கணேசமூர்த்தியினுடைய திருக்கரங்களிற் றனதுபுத்திரிகளாகிய சித்திபுத்திகளின் திருக்கரங்களைச் சேர்த்து,சுவாமி- அடியேன்அருமையாக வளர்த்தெடுத்த இம்மங்கையரைத் தேவரீர் அங்கீகரித்துஎன்னை யாட்கொள்ளவேண்டுமென்று,சரஸ்வதிவிட்ட தெய்வதீர்த்தத்தால் தாராதத்தஞ்செய்து வணங்கினன். அவ்வாறே-அத்திருக்கல்யாண மகோற்சவத்தில்வந்திருந்த நவகோள்கள்முதலிய சகலவுயிர்களுந்தாமாகவிருந்தும், அக்கன்னியரையேற்றுக்கொள்ளுநிமித்தம்அவைகளினின்றும்வேறாகிவீற்றிருக்கின்றகணேசமூர்த்தியானவர் அவ்விண்ணப்பத்திற்கு அருள்சுரந்து,ஓர்தந்தைதன்கையிலிருக்கின்றவெள்ளடையைச்சிறிய மதலைகையிற்றந்து,மீட்டும் அதைத்தன்வாயாற்கிரகித்துக்கொள்ளுமாறுபோல, முன்னர்அப்பிரமன் கடைத்தேறுமாறு கடாக்ஷித்தருளிய அம்மங்கையரை, மீட்டுமவனிடத்தினின்றுந் தாம் ஏற்றுக்கொண்டனர். இப்பாற்பிரமதேவன்தன்னிட்டசித்தியைப் பெற்றுக்களித்தவனாய்ச், சிலகாரியக்காரரைத்துரத்தி, வாழைக்கனி- மாங்கனி- பலாக்கனி- முதலியகனிவர்க்கங்களையும்,மதுரமிகுந்தகருப்பஞ்சாறு- ஆவின்பால்- தேன்- கற்கண்டு- முதலியசிறந்தவஸ்துக்களையும் பொலிவாகத்தருவித்துத், தங்கப்பள்ளயங்களினுங் கிண்ணங்களினு நிரப்பிக்கொண்டுவந்து கர்த்தனே- தேவரீர்இவற்றினைப்புசித்தருளி அடியேனை ரக்ஷிக்கவேண்டுமென்றுநிவேதித்தனன்.-பின்னர் மங்கலபேரி- முரசம்-மத்தளம்- டமாருடமுழா- தக்கை- வலம்புரிச்சங்கம்- வேய்ங்குழல்- திருச்சின்னம்-பூரிஎக்காளை- துத்தாரி- சயகண்டை - முதலியபலமங்கலவாத்தியங்கள், அண்டங்களதிர்ந்து திசைகள்செவிடுபடத் தக்கதாகத் தாம்தாமென்றுமுழங்கவும், தேவர்கள்- முனிவர்கள்- கின்னரர்- கிம்புருடர்- சித்தர் - வித்தி

‡ உடல் பொருள் ஆவிமூன்றனையுஞ்சமர்ப்பித்தலாவது.உடலைத்தன்னதென்ற பிமானித்தலின்றி யிருத்தல். பொருள்களின்மேற் பற்றுதலின்றியிருத்தல்.ஆவி அருளையன்றிவேறொன்றைச்சுட்டுதலின்றியிருத்தல்.

யாதரர்- கருடர்- காந்தருவர்-முதலியசகலசனங்களும்,மனவெழுச்சியுட
ன் தங்கடங்கள் கரங்களைக்கொட்டிச்சயசயவென்றுபோற்றவும், ஏகாதச
ருத்திரர்- துவாதசாதித்தர் - அட்டதிக்குப்பாலகர்-முதலியயாவருஞ்சா
ந்தோஷசாகரத்தின்மூழ்கி, இத்தினஞ் சன்மசாபல்லியராய் முத்திக்கா
ளாயினோமென்று பலவிதங்களிற்றுதித்து மங்கலவாழ்த்து கூறவும், அத்
திரி- ஆங்கீரசர்- கௌதமர்- சமதக்கினி- பரத்துவாசர்- முதலியரிஷிபுங்
கவர்கள் வேதாகமங்களாற்றுதித்துவாழ்த்தவும்,சமுத்திரகோடமும்அஞ்
சும்படியாக ஆகாயத்தினின்று தேவதுந்துபிகள் கணகணவென்று சத்தி
க்கவுமான இவ்விதவாடம்பரங்களோடு, சனகமகாமுனிவர் ஓமகுண்டத்
தைச்சேர்ந்து,சுற்றிலும் அந்தணர்களையிருத்தி,தருப்பைகளைப்பரப்பி, அ
க்ஷதைகளையிறைத்து, மந்திரமலர்களாற்பிரணவமுதலியபிரதமதேவதை
களைவழிபட்டுப்,பூரணகும்பங்-குடவிளக்கு-முதலியவைகளை ஆங்காங்கு
விதிப்படித்தாபித்துவைத்து, முத்தீக்களையுமந்திரபூர்வகமாகவோமகுண்
டத்திலெழுப்பி, விநாயகக்கடவுளையுஞ் சித்திபுத்திகளையும்அதனருகில்எ
ழுந்தருளச்செய்து, ரிஷிபுங்கவர்களும் - அந்தணர்குழுஉக்களும்-வேதசா
கைகளைச்சொல்லிச் சமித்துகளைக் கிரமப்படி ஓமகுண்டத்திற்போட்டு
வர,ஆவினெய்யையூற்றி, இடைஇடையிற்பொரியையும்பாலையுமிறைத்து
நவக்கிரகவோமமுதலியகருமங்களைவேதாகமவிதிப்படிவிநாயகப்பெருமா
ன்முன்னிலையில்நிறைவேற்றிப், பூரணாகுதியுங் கொடுத்தவுடன்,அத்தீயி
னிடத்தெடுத்த மைக்குழம்பைமாப்பிள்ளையினுடையதிருநுதலிலிட்டு,பி
ன்னர்அவனைக்கொண்டுகலியாணப்பெண்களுக்கிடுவித்து, நாரதமுனிவர்
மும்முறைபொரியிட்,அவைகளைஓமாக்கினிக்காகுதிசெய்து, மற்றைச்ச
ங்குகளையும்வரன்முறையாகமுடித்தனர். பின்னர்கல்யாணப்பிள்ளைக்கும
காவிஷ்ணுதோழராகவிருந்து, கைலாகுகொடுத்து பீடத்திலிருந்தெழுப்ப
லும், இலக்குமிமுதலிய அறுவர்களுந்தங்கள்நாயகியராகியசித்திபுத்திகளை
த்தழுவியெடுத்து,அவர்கள்சுண்டுவிரல்களை எமதுகர்த்தராகியவிநாயகப்
பெருமானுடைய சுண்டுவிரல்களாற்பற்றச்செய்தார்கள். உடனே சகலரு
ம்புடைசூழ்ந்துபோற்றிவரும்படியாகக் கணேசமூர்த்தியானவர்அத்தீக்கு
ண்டத்தை மும்முறைவலம்வந்து,வடபாரிசத்திற்சேர்ந்து, கல்யாணப்பெ
ண்களின்றிருவடிகளைத்தமது திருக்கரத்தாற்றூக்கித்தூக்கி நிலத்திலிட்டு,
முடிவில் அம்மியின்மீதுவைத்துப், பதிவிரதாசிரோமணியாகியவசிஷ்ட
முனிவர் பத்தினியை எதிரிலழைத்து, அவள்மீதுதமது திருக்கண்சாத்தி
னர். இவ்விதமாகஅக்கினிதேவன்-தவத்தர்-தேவர்-வேதப்பிராமணர்-முத
லியசர்வத்திராள் முன்னிலையிற்சாக்ஷியாகத், திருக்கல்யாணசம்பிரமங்கள
னைத்துங் கிரமமாகமுடிந்தவுடன் விநாயகக்கடவுள் தமது தேவியரோடுந்
தாய்தந்தையர் திருவடிகளில்வணங்க,அத்தாய்தந்தையர் ஆசீர்வதித்து,ம
னப்பூரிப்படைந்து, நவரத்நமயமாயிருக்கின்ற ஆதனத்திலிருத்தித்திருமா
லைநோக்க, அத்திருமால் சிவபிரானைவணங்கித், தேவேந்திரனெடுத்து நீட்
டுகின்றதாம்பூலாதிகளை,அனந்தர்முதல் உருத்திரகணமீறுயுள்ள எல்லாத்
தேவர்கட்கும்வரன்முறையாகக் கொடுத்துவந்தனர். அவ்வாறே கற்பகவி
ருக்ஷமும், முனிவர்முதலாயுள்ளபரிசனங்கட்கு,வேண்டுவனவற்றைவனை
யாதுகொடுத்துவந்தது.இவையன்றி அவ்வவர்கள் குறித்துக்கேட்டவரங்க

ளாயுஞ் சிவபெருமான்தமது பூரணகடாக்ஷத்தால் அனுக்கிரகித்துப், பார்வதிதேவியோடுஞ் சென்றுமற்றோரிடத்திற் றனியாகவீற்றிருந்தனர். இப்பாற் சித்திபுத்திகளிருவரும், அழகிய மணிகளிழைத்த சிவிகைகளிலேறிவர, என்னையடிமையாகவுடையவிநாயகமூர்த்தியானவர் ஈராயிரமருப்பினையேந்திய அயிராவணமென்னும்பொருப்பில் ஆரோகணித்து, அடைத்தகடலையுடைத்ததுபோல அளவற்றவாத்தியங்கள்முழங்கவும், மடைதிறந்துவிடுத்தது போலமங்கலவாழ்த்துகள்சத்திக்கவும், தேவர்கள் புட்பவருட்டம் பொழியவும், சந்திரவட்டக்குடைகள் ஆகாயத்தைக் கவிக்கவும், பலவிருதுக்கொடிகள் அண்டமுகட்டை நெருங்கவும், இருமருங்கினும்வரிசைவரிசையாகக் கவரிகளிரட்டவும், ஒப்பற்றஆலவட்டங்களைநாற்புறங்களினுமசைக்கவும், கின்னரர் இசைபாடவும், அரம்பையர்நடமாடவும், மற்றும் இவைமுதலியசகலவாடம்பரங்களோடு, நந்திதேவர்தமது வெள்ளிவேத்திரத்தால்நெருங்கியிருக்கின்றசனங்களைவிலக்கிவரும்படியாகப், பையப்பைய அயிராவணத்தை நடாத்திக்கொண்டு, வீதியிற்பவனிவருகின்ற சமயத்தில், சிலமாதர்கள் நீராஞ்சனம்- பூரணகும்பம்-மணிவிளக்கு- முளைப்பாலிகை- முதலிய மங்கலப்பொருள்களை யேந்தியும், சிலமாதர்கள் கன்னற்றுண்டு கதலிக்கனி- மாங்கனி- பலாக்கனி- முதலியவர்க்கங்களைவீசியும், சிலமாதர்கள் புட்பம்- சந்தனம்- கதம்பம்- பனிநீர்- முதலிய பரிமளத்திரவியங்களைச்சொரிந்தும், சிலமாதர்கள் வச்சிரம்- வைடூரியம் - கோமேதகம்- புட்பராகம்- முதலிய ரத்தினங்களை எறிந்தும், இவ்வாறுயாவரும் மிகுந்த பத்தி விசுவாசத்துடன் பற்பலசம்பிரமங்களைச்செய்து, கரங்களைக்கூப்பித்தொழுது, வாயாரவாழ்த்தினர்களாயிருந்தார்கள். அவருட்சிலதருணமங்கையர் தேவதேவோத்தமாராகிய விநாயகக்கடவுளது அற்புதமாகியரூபலாவண்ணியங்களை நேத்திரோச்சவமாகக்கண்டு, தங்கடங்கள் சரீரமெல்லாம் பூமியிற்பொருந்தச்சேவித்தமாத்திரத்தில், வேறொருசெயல்களுமற்றவர்களாய், அளவற்ற ஆசைப்பெருக்கென்னுஞ்சமுத்திரத்தின்மூழ்கி யிருந்தார்கள். அவருள் ஒருத்தி தன்மையலேச்சற்றேதணித்தெழுந்து, இவ்வாடவனையொப்பவர்யாவரிருக்கின்றார்களென்றுதென்றற்காற்றினலைசைகின்ற இளங்கொடியைப்போலத்துவளடுமைப்ப, அதனைக்கேட்டமற்றொருத்தி, யான்தழுவ நினைத்திருக்கின்ற ஆடவர்க்கு நீ துன்பமுற நோக்கினையோவென்று கோபித்தனள். ஒருத்தி சகலஆபரணங்களும் இந்நாயகர் திருமேனியிலணிந்ததனல் அல்லவா அவைகட்கழகுண்டாயதென்று வியக்க, அதனைக்கேட்ட மற்றொருத்தி அவளையெதிர்த்துச்சீறி, நீ உயிர்வாழ்தல்விரும்புவையாயின் இந்தவொப்பற்றஅழகருடைய நினைப்பை யொழித்துவிடக்கடவை, முன்னரோ அவரிடத்து என்மனந்தூதுபோயிருக்கின்றதென்றனள். ஒருத்தி தன்முகத்தை நோக்கி நிமிர்ந்திருக்கின்ற கொங்கைகளைப்பார்த்து, ஓ தனங்களே- இச்சித்திபுத்திகள், தங்கள்முகத்தை நோக்கியிருக்கின்ற கொங்கைகளை விநாயகமூர்த்தி கைகளாற் றழுவும்படி அரியதவத்தைசெய்தார்கள், அத்தனங்களைப்போலநீங்களும்என்முகத்தைநோக்குவதி லென்னபயன், முற்பிறப்பில்யாமவனைக்கூடுமாறுநற்றவஞ்செய்திலோமேயென்று ஏக்கமுற்றுரைத்தனள். ஒருத்தி விநாயகக்கடவுண்மீது கொண்டபெருங்காதலால், தானோக்குமிடமெல்லாம் அவனைப்போல உ

ருவெளித்தோற்றமுண்டாகக்கண்டு, இவ்வயிராவணத்தில்வருகின்ற கட்டழகர் ஒருவரோபலரோ வென்று ஐயமுற்றுத், தன்கலைசோர்வதையு மறியாதவளாகி நின்றனள். இவ்வாறு ஆங்காங்கு காமுற்றுவருந்துகின்றமங்கையர்கூட்டத்துள், விநாயகமூர்த்தியைக் கைகுவித்துத்தொழுகின்றவருடைய கரங்களுங், கொழுகொம்பற்ற கொடிபோலத் தாழ்ந்துவணங்கிமீளவும் எழுதலில்லாதவர்களுடையநிதம்பங்களுமே, தத்தம்வளைகளோடுங் கலைகளோடுநிறைந்துவிளங்கியிருந்தனவன்றி, மற்றையர்கரங்களும்நிதம்பங்களும், அவ்வளைகள்சோர்ந்தனவாகவுங் கலைகள்வீழ்ந்தனவாகவுமிருந்தன. சிலமங்கையர் கைகளிலணிந்திருக்கின்ற வளைகளெல்லாம், விநாயகப்பெருமானுடைய மார்பைப்புல்லாதகைகளில் நாமிருப்பதாலென்னபயனென்று நழுவிவீழ்ந்தன. சிலநங்கையர்முடித்திருக்கின்றகூந்தல்களெல்லாம், அவர்கள் உள்ளநெகிழ்ச்சியை அக்கணேசமூர்த்திக் கறிவிப்பதுபோல அவிழ்ந்துசோர்ந்தன. சிலகோதையர்ஆனந்தக்கூத்தாடினார்கள். சிலபேதையர் நயந்தெரிந்துபாடினார்கள். சில அரிவையர்குறிஞ்சி முதலியபண்களைப்பாடினார்கள், சிலதெரிவையர்பாவனையிற்கலந்தாடினார்கள். இவ்வாறு பேதை-பெதும்பை-மங்கை-மடந்தை-அரிவை-தெரிவை-பேரிளம்பெண்-என்னும் எழுவகைப்பருவங்களைப்பெற்றிருக்கின்ற § ஸ்திரீசாதிகளெல்லாந் தெருக்களில்நிறைந்துநின்று,காதல்கொள்ளத்தக்கதாக,என்னையாட்கொள்பவராகிய விநாயகமூர்த்தி யானவர் அலங்கரித்திருக்கின்ற வீதிகளைவலமாகவந்து,மீட்டும்அரமனையிற்பிரவேசித்தனர். அத்தருணத்தில் காமதேனு-சிந்தாமணி-பஞ்சதாரு-சங்கநிதி-பதுமநிதி-என்னும்இவைகள் வேறுவேறுருவங்கொண்டு,வந்தவர்கட்கெல்லாம் பெருமைபெற்றபலதிரவியங்களை அவ்வவர்கள்வெறுக்கும்படியாகமழைபோற்சொரிந்தன. இவ்வண்ணந்திருக்கல்யாணசம்பிரமங்கண் முழுவதுநிறைவேறியபின்னர், தேவர்கள்-முனிவர்கள்-திக்குப்பாலகர்-கணநாதர்கள்- பூமண்டலவாசிகள்- பாதலவாசிகள்-முதல்மற்ற தீபாந்தரங்களிலிருந்து வந்தவர்கள்யாவருஞ், சிவபெருமான் பார்வதிதேவியாரோடும்வீற்றிருக்கின்றசபையைச்சேர்ந்து, தீர்க்கதெண்டன்செய்துவிடைபெற்றுத்,தம்பதிசமேதரா யெழுந்தருளியிருக்கின்றவிநாயகமூர்த்தியைக்கண்டு,பலமுறைதுதித்துச் சாஷடாங்கமாக நமஸ்காரஞ்செய்து அவரதுதிருவளைப்பெற்றுத் தங்கடங்கள் பதவிகளிற் சேர்ந்தனர். இப்பால்சிவபெருமான்தம்மோடுவந்தகந்தவேள்முதலிய காரணர்களெல்லாம்புடைசூழ்ந்து வரும்படியாகச்,சித்திபுத்தி மணாளராகிய கணேசமூர்த்தியையழைத்துக்கொண்டு, பார்வதிதேவியாரோடுங்கைலைக்கெழுந்தருளித்தமதுபஞ்சகிருத்தியங்களை நடாத்தியிருந்தனர். விநாயகக்கடவுளுந்தமதுஉலகத்திற்சென்று எமதன்னையராகியசித்திபுத்திகளோடுங்கலந்து சகலபோகங்களையும் அனுபவித்திருந்தனர்.

---

§ அவர்க்கு முறையே வயதெல்லையாவது- ஐந்துமுதல் யேழளவும் பேதை, எட்டுமுதற்பதினொன்றளவும் பெதும்பை, பன்னிரண்டுமுதற்பதின்மூன்றளவும்மங்கை, பதினான்குமுதற்பத்தொன்பதளவும்மடந்தை இருபதுமுதல் இருபத்தைந்தளவும் அரிவை, இருபத்தாறுமுதல்முப்பத்தொன்றளவுந் தெரிவை, முப்பத்திரண்டுமுதல்நாற்பதளவும் பேரிளம்பெண்.

கணபதிதுணை.

ஐந்தாவது.

விண்டுஉபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தி சித்திபுத்திகளைத் திருமணஞ்செய்த சிறப்புகளைச்சொன்னோம், இப்பால் அவ்விநாயக மூர்த்தியை விண்டு உபாசித்த வரலாற்றினைச்சொல்வோங்கேட்பீராக. முன்னொருகாலத்தில் மகாவிஷ்ணுவானவர் திருப்பாற்கடலிற் சேஷசயனத்தின்மீது நித்திரைசெய்துகொண்டிருக்கையில், அவர்செவிகளினின்று மிக்கவலிமைபொருந்திய மது கைட்வன் என்னும் இரண்டசுரர்கள், நெருப்பைச்சொரிகின்றவிழிகளும்,இடியையொத்துச்சத்திக்கின்றகுரல்களும்,யாவருங்கண்டஞ்சத்தக்க உருவங்களும்,பிறைபோலவளைந்திருக்கின்ற கோரைப்பற்களும், சுருட்டிவிட்டிருக்கின்றமுகமயிரும்,சிவந்திருக்கின்றமுடிமயிரும் உடையவர்களாய்த், தேவர்களெல்லாந் துன்புறும்படியாகஉற்பவித்து அம்மகாவிஷ்ணுவையு மதியாது,அரியதவங்களைச்செய்திருக்கின்ற முனிவர்கள் பெரியோர்கள் முதலானவர்களை நிந்தித்து, வேதாகமவொழுக்கங்ள் சிறிதுமின்றிப்,பூலோகத்துள்ளோரையெல்லாம்வதைசெய்து, பின்னா தெய்வலோகத்தையும் அதஞ்செய்யக்கருதிப், பிரமதேவனைப்பிடிக்கச்சென்றார்கள். அதற்கப்பிரமதேவன் அஞ்சித்,தன்னுருவத்தை அவ்வசுரர்க்குத் தோற்றவொட்டாமல் மறைத்துக்கொண்டு, கணேசமூர்த்தியைமனதிற்றியானித்து, அவர்திருவருளையே துணையாகப்பெற்று,இதனை யோசிப்பதாயினன். கறுத்தகடல்போன்ற நிறத்தினையுடைய இவ்வசுரரைமேகவண்ணராகிய மகாவிஷ்ணு அழிக்கவேண்டுவதேயன்றி, மற்றொருவரால் ஆகாதென்றுநிச்சயித்து,உடனே விரைந்துசென்று திருப்பாற்கடலையடுத்தனன். அங்கு அத்திருமாலானவர்சேஷசயனத்தின்மீதுகண்படுத்திருப்பக்கண்டு,யாவராயினும்நித்திரைசெய்யுங்காலத்தில், அந்நித்திரையைப்பங்கப்படுத்துதல்தகாதகாரியமாகவேதாகமங்கள்சொல்லுகின்றமையால்,நாமிவரையெழுப்புதல் கூடாதென்று யோசித்து,அவர்கண்படுவதற்குக்காரணமாக விருக்கின்ற நித்திராதேவியைக்கூவி, அனந்தமுறைதோத்திரஞ்செய்து, ஓ சுவாகாதேவியே உனக்கடியேன் செய்துகொள்வதான விண்ணப்பமொன்றுண்டு, அதாவது அரக்கர்அவுணர்முதலாயினோருடையமுடிகளனைத்தையும் போர்செய்துருட்டித்,தேவர்களையெல்லாங் காக்கின்றவராகியும், அன்பினர்களியைஅகற்றவல்லவராகியுமிருக்கின்றஇம்மகாவிஷ்ணுவானவர், நெடுநாள் உனது வயத்தராகித் துயிலுற்றிருக்கின்றனராதலால், அவர்விழித்தருளுமாறு அடியேன்மீதுகிருபை வைத்துநீயப்பாற்செல்லவேண்டும். ஏனெனில் மது கைடவரென்னும் இரண்டசுரர்கள்.பூர்வசன்மத்தில் அரியதவங்களைச்செய்து,என்னிடத்தினின்றுங்கெடாதவரங்களைப்பெற்று, இச்சனனத்தில் இம்மகாவிஷ்ணுவினுடைய செவிகளினுற்பவித்து, மனிதர்களையுந் தேவர்களையும் நடுங்கியொடுங்கத் தக்கதாக

வாட்டிப், பின்னர் என்னையும் பிடிக்கவந்தார்கள். அதற்கஞ்சியான்இங்கு
வரலாயினேன். அப்பொல்லாப்பாவியர் இம்மாயனாலொழியவேண்டுவ
தேயன்றி, மற்றையரால் ஒழிபவரன்று.ஆதலால் இவ்விண்டுஎழுந்தருள
வும், அவ்வசுரர்மடிந்துருளவும், நீயனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுதலும், அநித்திராதேவி விண்டுவை விட்டு நீங்கினள்.
உடனே அவரும் எழுந்தருளினர். அத்தருணத்தில் அவ்வசுரர்களாற்று
ன்பப்படுகின்ற தேவர்கண்முதலாயினோர் ஒருமிக்கத் துதித்துத், தங்களி
டும்பைகளைக்கூறி முறையிட்டார்கள். அவையனைத்தையும் விண்டுவான
வர்கேட்டுப்,பிரமனைப்பார்த்து,நீங்கள்இங்குவந்தகாரியமெற்றினுக்கென்
று வினவப்,பிரமன்சொல்லுவான். ஓ அனந்தசயனனேவஞ்சகத்திற் சிற
ந்த மது கைடவரென்னுமிரண்டசுரர்கள், தேவரீர் செவியழுக்கினின்றுந்
தோன்றி யாவரையும் அதஞ்செய்கின்றார்கள். அப்பாதகர்கட்குத் தாய்த
ந்தை தேவரீரொன்று பிறர்கள் பேசாதவண்ணம் அவர்களை மடித்து, எங்
களைக்காத்தருளவேண்டி இங்குவந்தோமென்று விண்ணப்பஞ்செய்துகொ
ண்டனன். இப்பால் அத்திருமாலானவர் விடத்திற்கொப்பாகிய அவ்வசு
ரர்கள் செய்யுமாயைகளனைத்தையுங் கேட்டுயோசித்துப்,பிரமனாதியரை
ப்பார்த்து அஞ்சவேண்டாமென்று திடஞ் சொல்லித், துண்ணென்றெழு
ந்து, பற்பல ஆயுதங்களையேந்தி, ஊழிக்காலத்திற் சலப்பிரளயத்தினால்
எழுகின்ற பேரொலியைப்போலச் சங்கநாதஞ்செய்தார். அவ்வோசை
யை மது கைடவர்கள் கேட்டு, உடனே சீறிவந்து, ஒருமலைக்கெதிரில் இ
ரண்டு மலைகள் வந்து நிற்பதுபோல ஆர்ப்பரித்து நின்று, ஓ விண்டுவே-
எங்கள் தோள்களிற் றினவெடுக்கின்றதால் விரைவில் வந்துயுத்தஞ்செய்
யக்கடவையென்றார்கள். அதற்குத் திருமாலானவர் மிகவுங்கோபங் கொ
ண்டு,ஓஅசுரர்களே-உங்கள்தோட்டினவை நாமேயடக்குகின்றோம்பயப்ப
டவேண்டாமென்றுசொன்னார்.பின்னர்இருதிறத்தாருநெருங்கிப்,பூதகண
ங்கள்வந்து குதிகொள்ளத்தக்கதாகப்பலபாணங்களைஒருவர்மேலொருவர்
பிரயோகித்தார்கள்.மீட்டுந்திரும்பி வச்சிராயுதங்களைவிட்டெறிந்தார்கள்.
இராசகண்டீரவத்தை யொப்பவார்ப்பரித்து எதிருக்கெதிர் வேலாயுதங்க
ளை எடுத்துவிடுத்தார்கள்.பூமியிற்றுகளெழும்படியாக வொருவரை யொ
ருவர் வலமிடமாகச்சுற்றி வாளாயுதங்களைக்கொண்டு வீசினார்கள்.அண்ட
ங்களெல்லாம் வாய்விட்டுவெடிக்கும்படியாகவும், பர்வதங்களனைத்து நெ
கிழ்ந்து பொடிபடும்படியாகவும்,மேகங்கள்தமது கர்ப்பங்கலங்கிவிழும்ப
டியாகவும், கடலானதுகரைபுரண்டு பெருகும்படியாகவுங் கர்ச்சித்து, எ
திருக்கெதிர் தண்டாயுதங்களைக்கொண்டு மோதினார்கள். ஒருவர்க்கொரு
வர் பாசங்களையெடுத்து வீசினார்கள். கண்களிலிருந்து வடவனலுக்கொப்
பான தீப்பொறிகள்சிதறும்படி நோக்கிக்கோபித்து, முடியை முடியினாலு
ங், தோளைத் தோளினாலும், மார்பைமார்பினாலுந்,தொடையைத்தொடை
யினாலும்,அடியைஅடியினாலும்,கையைக்கையினாலுந்தாக்கி, ஒருவர்க்கொ
ருவர்வெற்றிதோல்வியின்றிஅளவற்றமல்லயுத்தங்களைச்செய்தார்கள்.இவ்
வாறுநெடுநாள் யுத்தஞ்செய்தும்,விஷ்ணுவானவர்அவ்வசுரர்களைவெல்வ
தற்குச்சக்தியில்லாமற்றளர்ச்சியடைந்து,கந்தர்வவடிவங்கொண்டுமறைந்
து,கைலாயபர்வதத்திற்சென்றொளித்துக்கொண்டு,அவ்வரையில் ஓர்பூங்

காவனத்திலிருந்து, § சிறந்தயாழினையேந்தி-தண்டு-பத்தர்- நரம்பு-மறுக்காணி- கொழுவாணி- என்னும் உறுப்புக்களைத்திருத்திப், பண்ணல்- பரிவட்டணை- ஆராய்தல்- தைவரல்- செலவு- கையூழ்- விளையாட்டு-குறும்போக்கு-என்னும ¶ எண்வகைக்கலைத்தொழில்களைச்செய்து,வார்தல்- வடித்தல்- உந்தல்-உறழ்தல்-உருட்டல்-தெருட்டல்-எள்ளல்- பட்டடை என்னும்எண்வகை இசைக்கரணங்களைக்கொண்டு,கண்ணிமைத்தல்-கண்டந்துடித்தல்- கொடிறசைத்தல்- வாயங்காத்தல்- எயிறுகாட்டல்- வயிறுகுழியவாங்கல்- அழுமுகங்காட்டல்- தலைநடுக்கல்- முதலிய உடற்குற்றங்களும், வெடிகுரல்- கீழோசை- காகுளி- முதலியயாழ்க்குற்றங்களும், துள்ளல்- பெருமூச்சுவிடல்- முதலிய பாடற்குற்றங்களும்இல்லாது,எழுதப்பட்ட சித்திரம்போலவிருந்து,பயிரவி- தேவக்கிரியை - மேகவிரஞ்சி- குறிஞ்சி- பூபாளம்- வேளாவளி- மலகரி - பௌளி-சீராகம் - இந்தோளம்- பல்லதி- சாவேரி- படமஞ்சரி- தேசி- இலலிதை- தோடி- வசந்தம்- இராமக்கிரியை- வராளி- கைசிகம்- மாளவி- நாராயணி-குண்டக்கிரியை கூர்ச்சரி- பங்காளம்- தன்னியாசி- காம்போதி- கௌளி- நாட்டை- தேசாக்ஷரி- காந்தாரி- சாரங்கம்- என்கின்ற முப்பத்திரண்டுராகங்களால்,இசையோசை செய்யுளோசை வழுவாமல் வாசித்துக்கொண்டிருந்தார். அவ்வோசையானது சாமவேதப்பிரியராகிய சிவபெருமான் திருச்செவிகளிலேறலும்,பிருட்டதந்தன்நிகும்பனென்கின்றபூதகணத்தலைவர்களைக்கூவி, நமதுபர்வதச்சாரலில் யாழ்வாசிக்கின்றவன் திருமாலாகும்,நீங்களவனிடத்திற்சென்று இங்கனமழைத்துவரக்கடவீர்களென்றுதிருவாய்மலர்ந்தருளினர். அவ்வாறே அவர்கள்சென்று, விண்டுவைக்கண்டு, திரிபுரதகனராகிய சிவபிரான் உம்மையழைத்துவரக்கட்டளையிட்டனரென்று சொல்ல, அதனைப்பெருமகிழ்ச்சியுடன்கேட்டு முதல்வாயிலிற் றமதாணையைச்செலுத்திவீற்றிருக்கின்ற நந்திதேவரைப்பணிந்து விடைபெற்றுக், கர்த்தன்சந்நிதானத்தையடைந்து, பரமகருணாநிதியாகிய உமாபதிசமூகத்தில் நின்று,தீர்க்கதண்டன்செய்து, அவர்கடைக் கண்ணோக்கம் பெற்றவராய் ஒருபாரிசத்திலிருந்து தமதுகையிலிருக்கின்றயாழினையெடுத்து,அதிற்கட்

---

§ சிறந்தயாழென்றது-பேரியாழ்-மகரயாழ்-சகோடயாழ்-செங்கோட்டியாழென்னும் இந்நான்கிற்,பேரியாழெனப்பெறும். இவற்றுள்பேரியாழிற்கு நரம்பு இருபத்தொன்று,மகரயாழிற்கு நரம்பு பதினேழு,சகோடயாழிற்கு நரம்பு பதினாறு, செங்கோட்டியாழிற்கு நரம்பு ஏழு.

¶ பண்ணலென்பது,பாடநினைக்கப்பட்டபண்ணுக்கு இணை கிளை பகை நட்பான நரம்புகள் பெறுந்தன்மை மாத்திரைகள்அறிந்துகட்டுதல். பரிவட்டணையென்பது, அக்கட்டப்பட்ட நரம்பை அகவிரலாலும் புறவிரலாலும் அனுகரணஞ்செய்து தடவிப்பார்த்தல். ஆராய்தலென்பது, ஆரோகணஅவரோகணவகையால் இசையைத்தெரிதல். தைவரலென்பது, அநுசுருதிஏற்றுதல். செலவென்பது, ஆளத்திலேநிரம்பப்பாடுதல்.கையூழென்பது, பாடநினைக்கப்பட்டவண்ணத்திலேசந்தத்தைவிடுதல்.விளையாட்டென்பது,வண்ணத்திற்செய்யப்பட்டபாடலெல்லாம்இன்பம்பிறக்கப்பாடுதல்.குறும்போக்கென்பது,கூடகச்செலவுந்துள்ளற்செலவும்பாடுதல்

டுண்டநரம்புகளைத்தடவி, இசையாகியவமுதத்தைநிறைத்து,எல்லாஉயிர்களும் ஆனந்தவாரியிற்றிளைதது உய்யும்படியாகமீளவும்வாசிப்பதாயினர்.

பிள்ளைமதியணிந்தபெம்மான்றிருவடியை ... ... *
யுள்ளுமவர்கட்குறுதபொருளுண்டே ... ... *
மெள்ளநறுநெய்விழைந்துவிளக்குந்துங் ... ...*
கள்ளவெலியுங்கடலுலகங்காத்ததே... ... ... *

ஆத்தியணிந்தவமலன்றிருவடியை... ... ...*
ஏத்துபவர்கட்கிசையாப்பொருளுண்டே ... ... *
சாத்தியவில்வந்தனக்குத்தளர்முசுவு ... ...*
மூத்தவறிவின்முசுகுந்தனுயதே ... ...*

பேயினத்தோடாடும்பெருமான்றிருவடியைக் ... *
காயமுறத்தாழ்வோர்கள்காணுப்பொருளுண்டே ...*
வாயிழையாற்கோயில்வகுத்தசிலம்பியுமோர் ... *
தூயகுல்ச்சோழனுய்த்தொல்லுலகங்காத்ததே ... ...*

இவ்வாறு கர்த்தன்பெருமைகளைப்பாடி யாழ்வாசித்தலுஞ்,சிவபெருமான் அவ்விண்டுவைநோக்கி, நீ இங்குவந்தகாரியம்யாதென்று வினவத், திருமாலானவர் மனமகிழ்ந்துஇதனைச்சொல்லுவார். ஓ சர்வபரிபூரணராகியகர்த்தனேஅடியேன்செவிகளிநின்றும இரண்டுதானவர்களுற்பவித்துஎன்னைத்தந்தையென்றுசற்றுங்கருதாதுயுத்தஞ்செய்வதாயினர்.அவர்களோடு அளவற்றகாலம் யுத்தஞ்செய்தும், யானவர்களைவெல்லமாட்டாது இளைத்துஎன்னுருவைக்கரந்துஇங்ஙனமோடிவந்துதேவரீர்சரணரவிந்தங்களையடுத்தேன். இனியவர்களைச்சங்கரிக்கும்படியானவலியினைத்தந்துஅடியேனையாதரிக்கவேண்டுமென்றுவிண்ணப்பஞ்செய்தார்.சிவபெருமான்அவ்விண்டுவைநோக்கி,கருடகேதனனே - அவ்வவுணர்களுடனேநீயுத்தத்திற்குச்சென்றபோது,விக்கினேஸ்வரரைப் பூசனைசெய்யாமற்சென்றனையாதலால்உனக்கபசயம்வரலாயிற்று. இனியேனும்அவ்விநாயகமூர்த்தியைவழிபட்டுப், பின்னர்சத்துருக்களைச்சயித்து வெற்றியுடன் வாழக்கடவையாக.அன்றியும்அவ்விநாயகக்கடவுளையநுட்டிக்கும்படியான மந்திரங்கள்பலவாகவிருக்கின்றன, அவைகளில்உனக்கேற்றமந்திரமொன்றுண்டு, அஃதுசடக்ஷரமந்திரமாகும்,அம்மந்திரத்தை யுனக்குபதேசிக்கின்றேம், நீஸ்நானஞ்செய்துவிரைவில்வருவையென்றுகட்டளையிட்டு,அவ்வாறேஸ்நானஞ்செய்து வந்தவுடன்ஆகமவிதியோடு தீக்ஷைசெய்து,வக்கிரதுண்டமூர்த்திக்கு உவப்புண்டாக்கத்தக்க சடக்ஷரமந்திரத்தையுபதேசித்து, அதையநுட்டிக்குமுறைமையையுந் திருவாய்மலர்ந்தருளினர். அப்பால் விண்டுவானவர் அவ்வருளைச்சிரமேற்கொண்டு,சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்துவிடைபெற்றுப்,பூவுலகத்தின்கண்வந்து, ஓர்தடாகத்தில்ஸ்நானஞ்செய்து, திருவெண்ணீறுதரித்து, மந்திரசலம்புரோட்சித்துப், பூமியைச்சுத்திசெய்து, புலித்தோலாசனததின்மீதுவெள்ளைவஸ்திரமிட்டு,வடகிழக்காகிய ஈசானமுகமாயிருந்து, யானையை நிலமதிந்து செலுத்தும் ஆதோரணன்போல- இந்திரியங்களை அறிவின்வழிச்செலுத்தி,சிரசாதிபாதவனாயில்

அம் முதல் க்ஷம் ஈருயுள்ள ஐம்பத்தோரக்கரங்களைவிதிப்படிப்பகிர்நியாசஞ்செய்து, அவ்வக்கரங்களில் வம் முதலாயுள்ள நான்கக்கரங்களை மூலாதாரத்திலும், பம் முதலாயுள்ள ஆறக்கரங்களைசுவாதிட்டானத்திலும், டம் முதலாயுள்ள பத்தக்கரங்களை மணிபூரகத்திலும்,கம் முதலாயுள்ள பன்னிரண்டக்கரங்களை அநாகதத்திலும், அம் முதலாயுள்ள பதினாறுயிர் அக்கரங்களை விசுத்தியிலும், ஹ- ள- க்ஷ- வென்னும் இம்மூன்றக்கரங்களை ஆக்கினையிலுமாக, ஆறாதாரத்திலும் ‡ அந்தர்நியாசஞ்செய்து, ஆத்மசுத்தி - பூதசுத்தி - திரவியசுத்தி -மந்திரசுத்தி -இலிங்கசுத்தி - என்கின்ற பஞ்ச சுத்திகளை நடாத்தி, மூலமந்திரத்தைச் செபித்து,பிராணாயாமத்திலிருந்து, ஆவாகனம் - ஆஸ்தாபனம் - சந்நிதாபனம்- சந்நிரோதனம்- சகளீகரணம் - பரிமீகரணம் - அவகுண்டனம்- தேனு - யோனி - அமுர்தீகரணம்-என்கின்றதிக்குபந்தனதிமந்திரக்கிரியாபாவனைகளைக் கொண்டு விநாயகமூர்த்தியைக் குறைவில்லாமற்பூசித்து, சடக்ஷரமந்திரத்தை முறைமைப்படி நூறுவருடம்வரையிற் தியானித்துவந்தார். அப்பால் வக்கிரதுண்டமூர்த்திக்கு அருள்சுரந்து,அத்திருமாலுக்கெதிரிற்பிரத்தியக்ஷமாகித்தரிசனந்தந்தார். உடனேவிஷ்ணுவானவரெழுந்துதாழ்ந்து,இருகரங்களையுஞ்சிரமேற்குவித்துப், பலமுறைவேதாகமங்களாற்றுதித்துத் தொழுது நிற்க,விநாயகக்கடவுளவரைநோக்கிக்,கேசவனேநின்மலமூர்த்தியாகியசிவபெருமானவர்,நம்மைப்பூசைசெய்ய உனக்கநுக்கிரகிக்குமுன்னமேநீசுதாவிற்செய்துஅப்போர்முகத்திற் சென்றிருப்பையாயின்,இவ்வாறுசத்துருக்களாற்றோல்வியடையமாட்டாயல்லவா,ஆயினும்இப்போதுனக்கென்னவேண்டுவதுகேள் அதனைத்தருகின்றேமென்று திருவாய்மலர்ந்தருளினர். அதைக்கேட்டதிருமாலானவர் மிக்கஆனந்தக்களிப்பின்மூழ்கினவராய்,மீளவும்பணிந்தெழுந்து,கைகட்டிவாய்புதைத்து, ஓதீனதயாளுவே,சற்பகவிருட்சத்தையடைந்தோரைவறுமைவந்தணுகவல்லதோ, என்றந்தையாகியதேவரீரைஎனதிருவிழிகளுங்குளிரக்கண்டுதரிசிக்கப்பெற்றபின்பும் ஓர்குறைவுண்டாகுமோ, அடியேன்செய்துகொள்வதாகஒருவிண்ணப்பமிருக்கின்றது,அதாவதுயான்நித்திரையிலிருக்குமளவில் என்செவிகளினின்றும்இரண்டசுரர்கள்சகலபுவனங்களுங்கலங்கி நடுங்கத்தக்கதாகவுற்பவித்தனர்,அவர்களைக்கொல்லும்படியானவலியை அடியேற்குத் தந்தருளவேண்டும்,அப்பாதகர்களேயன்றிமற்றெவ்வகைப்பட்டதுட்டர்களாயினும்அவர்களெல்லாம் என்கையிலழியத்தக்கதானவரமுங்கொடுத்தருளவேண்டும், தேவரீர்திருவடிகளை யெக்காலத்துங் கைவிடாத பத்தியையளிக்கவேண்டும், அடியேன்தெரியாமையாற்செய்கின்ற குற்றங்களையெல்லாங் குணமாகக்கொண்டு பொறுத்திரட்சிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தவுடன்,அவ்வாறேவிநாயகக்கடவுளனுக்கிரகஞ்செய்து,நாரணனே- சத்துருக்களை வெல்லும்படியானவலிவும், யாவராலு மதிக்கத்தக்கபுகழும்,நினைத்தவெண்ணம்நிறைவேற்றத்தக்கசத்தியும், உனக்குக் குறைவில்லாமற்கொடுத்தோம். உன்னைமுன்னரெதிர்த்த அவ்வசுரர்கள் இப்போதுவஞ்சவடிவங்

‡ அவற்றிற்குமுறையேஇடம், குதம்- குய்யம்- நாபி- இதையம்-அடிநா- நெற்றி- என்பனவாம்.

கொண்டுமௌநற்றிருக்கின்றனராதலால்,நீநமதுசடக்ஷரமந்திரத்தைக்கியாஎஞ்செய்துகொண்டுயுத்தத்திற்குச்செல்வையாயின்,அவர்களுன்விழிக்குவெளிப்படுவரென்றுதிருவாய்மலர்ந்து,தமதுதிருவுருவத்தைக்கரந்தருளினார். இப்பால்விஷ்ணுவானவர்பேரானந்தமடைந்து,பகைவரைச் சயித்துவிட்டோமென்னுங்களிப்பினையுடையவராய்த்,தன்னையாட்கொண்டருளியபெருங்கருணையைநினைந்துநினைந்துபலவாறுவந்தித்துத், தரிசனந்தந்துஇரக்ஷித்தவிடத்தில்ஒளிவீசுகின்றபளிங்குக்கற்களினால்நான்குகோபுரவாயில்களுள்ள ஓராலயமெழுப்பி, அவ்வாலயத்திற் கண்டகியினாலாகிய விநாயகக்கட்வுளைப்பிரதிட்டைசெய்து, சந்தனம்- புட்பம்- தூபம்- தீபம்-நைவேத்தியம்- கோசலம்- கோமயம்- பால்- தயிர்- நெய்- தேன்-வாழைப்பழம்- எலுமிச்சம்பழம்- நாரத்தம்பழம்-நெல்லிப்பருப்பு-செவ்விளநீர்முதலிய திரவியங்களைச் சேகரித்துச், சிறந்தபூசனைகளைநடாத்தித், தாம்கொண்ட இட்டத்தைச் சித்தியாக்கியபடியால் அம்மூர்த்திக்குச் சித்திகணபதியென்று திருநாமமிட்டு, வந்தித்துவழிபாடுசெய்து, ஆனந்தக்கடலின்மூழ்கியிருந்தார். அதுமுதல்அத்தலமானது சித்திகேத்திரமென்றுவழங்கிவருகின்றது. பின்னர்மகாவிஷ்ணுவானவர்அச்சித்திகணபதிமூர்த்தியைமனதிற்றியானித்துக்கொண்டு, அவ்விடத்தினின்றுநீங்கி,உருவமறைத்து ஒளித்திருக்கின்றமதுகைடவர்களைக் கணேசரனுக்கிரகத்தாற் கண்டுபிடித்தனர். அவ்வசுரர்கள் இவரைப்பார்த்து, எதிரில்வந்துநின்று,உடல்குலுங்கநகைத்து, ஓ மாயனே-முன்னமொங்களை யெதிர்த்து யுத்தஞ்செய்தபோது, யாங்களொருசிறியமுத்தியையுதவப்பெற்று ஓடிப்போயினை,மீளவும் நாணமில்லாமற்றிரும்பிவந்தனை,இப்போதுபெரிய முத்தியைத் தருகின்றோம்வாங்கிக்கொள்ளென்று பரியாசஞ் செய்தார்கள். அதைக்கேட்ட விண்டுவானவர் கோபித்து, அடாமூடர்களே, பின்னேபோய் முன்னேபாய்கின்ற ஆட்டுக்கடாவைப்போலென்று சற்றுந்தெளியீர்களோ,புலிபதுங்குவதெல்லாம் பாய்ச்சலுக்கிடமென்று நம்பக்கடவீர்களெனச்சொல்லலும், அவ்வசுரர்கள் அதனைக்கேட்டு,அக்கினியைப்போலஆக்கிரமித்தெழுந்து, கோபாவேசங்கொண்டு,ஓமாயனே-நீஒருவர்துணையின்றித்தனியாயிருக்கின்றனையேயென்றும், இரண்டுபேர்கள் ஒருவனுடன் போர்செய்யத்தகாதென்னு நீதியைக்கொண்டும்,முன்னர்இலேசாய்ஓடிப்போம்படிவிடுத்தோம். மீளவும் நீயேஅகங்கரித்து எம்மோடெதிர்க்க வந்திருக்கின்றமையாலும், உன்னொருவனுக்கே எம்மிருவருக்குமுள்ள நான்குதோள்களிருக்கின்றமையாலும், யாவருந்தோடஞ்சொல்வதற்கிடமில்லை,ஆகலால்விரைவிற்சண்டைசெய்யக் கடவையென்றெதிர்த்தார்கள். விண்டுவும்அதிகவுக்கிரங்கொண்டு எதித்தார். பின்னர்இருதிறத்தாரும்ஒன்றுகக்கலந்து,ஒருவர்க்கொருவர் ஆயுதங்களைக்கொண்டுபுடைத்தார்கள்.வேலாயுதங்களைக்கொண்டெறிந்தார்கள். வாளாயுதங்களையெடுத்து வீசினார்கள்நேருக்குநேர்பாசங்களை ஏவிப்பிடித்தார்கள். அதனைஎஃகாயுதங்களாற்றறுத்தார்கள். சர்ப்பங்களைப்போன்ற அளவற்றஅம்புமாரிகளைஎதிருக்கெதிராகநின்று சொரிந்தார்கள். ஒருவரையொருவர் வளைத்துக் கீழேவிழத்தள்ளிப்புரட்டிப் பலவகைப்பட்ட மல்லயுத்தங்களைச்செய்து வீரகர்ச்சனையிட்டார்கள்.இவ்விதமாகஅளவற்றயுத்தங்களைச்செய்துவருகின்ற தரு

ணத்தில்,விஷ்ணுவானவர் அதிசகோபங்கொண்டு,நாம்இந்தஅற்பர்களோடுநீடித்துயுத்தஞ்செய்வதுவெகுநேத்திவெகுநேத்தியென்று மானம்வர்திக்கப்பட்டவராய்க்,கடலுடைந்ததுபோலத்தமதுபாஞ்சசன்னியத்தையெடுத்துமுழக்கஞ்செய்து,சார்ங்கமென்கின்றவில்லினைவளைத்து,அளவற்றதிவ்விய சரமாரிகளைத்தூவி,அப்பாதகர்விடுகின்ற பாணவருஷங்களைச்சின்னபின்னப்படுத்திச்,சிவபிரானனுக்கிரகத்தாற்பெற்றசக்கராயுதத்தையெடுத்து, விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளைத்தியானித்து, அப்பாதகர் நிற்கின்றகுறிபார்த்துப்பிரயோகித்தமாத்திரத்தில், செங்கரும்பைத்துண்டித்ததுபோலப்பலதுண்டங்களாக விழுந்திறந்தார்கள். இவ்வாறுவிண்டுவானவர்அவ்வசுரர்களாவியையுண்டகாட்சியைத்தேவர்களெல்லாங்கண்டு மனமகிழ்ச்சியடைந்து, ஆகாயத்தினின்றும் புட்பவருஷங்களைப்பொழிந்தார்கள். முன்னர் அவ்வசுரர்கட்காகப்பயந்து உருவத்தை மறைத்துக்கொண்டிருந்த பிரமதேவன், அதிகசந்தோடங் கொண்டு, விண்டுவைக்கண்டு சாஷடாங்கமாகப்பணிந்து, அவர் பெருமைகளைப் புகழ்ந்துகொண்டாடிநிற்கையில், அவ்விண்டுவானவர் பிரமனைநோக்கிச் சொல்லுவார். ஓ அரவிந்தவாசனே-யான்முன்னர் அவ்வசுரர்களோடு நெடுநாள்யுத்தஞ்செய்தும், அவர்களைவெல்லமாட்டாது பங்கப்பட்டு, எனதுருவத்தை மறைத்தோடிப்போய்,வெள்ளியங் கிரிச்சாரலையடைந்து யாழ்வாசித்தமுன்னிலையில், சிவபிரான்அனுக்கிரகத்தால் விநாயகக் கடவுளுடைய சடக்ஷர மந்திரத்தைப் பெற்றுப், பூலோகத்திற் சென்று,"சித்திக்ஷேத்திரமென்னுந் தலத்திலிருந்து, அம்மந்திரத்தை வேதாகம விதிப்படியநுட்டித்துக், கணேசமூர்த்தியினுடையதிருவருளைப்பெற்று, மீளவும்அவ்வசுரரோடெதிர்த்து வெற்றியையடைந்தேன், ஆதலால்நீயும் அத்தலத்தையடைந்துபூசிக்கக்கடவையென்னப்,பிரமதேவன் அவ்வாறேசென்று, விநாயகக்கடவுளைப்பேரன்போடு பூசித்துப், பலவரங்களைப் பெற்றனன். அவனேயன்றிச் சிவபெருமான்-உமாதேவி-சிவகணங்கள்-தேவர்கள்-முதலாயினோரும்ஒவ்வொருகாலத்திற்பூசித்துப்பலவரங்களைப்பெற்றார்கள்.

கணபதிதுணை.

ஆறாவது

தக்கன்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே,விண்டு-விநாயகமூர்த்தியையநுட்டித்து மது கைடவரைவென்ற வரலாற்றினைச்சொன்னோம், இப்பால் தக்கனுபாசித்ததிறத்தினைச் சொல்வோங்கேட்பீராக. சமுத்திரஞ்சூழ்ந்தபூமண்டலத்தில், சகலராலும் புகழத்தக்கதானவயற்செழுமையுங்குடிவளப்பமுஞ்சிறந்தோங்கிய விதற்பநாட்டில், தேவருலகையாளவியமாடமாளிகைகள்கூடகோபுரங்கள் முதலிய அலங்காரங்களோடு விளங்கிநிற்கின்ற கவுண்டின்னியமென்னும் ஓர் நகரமுண்டு. அந்நகரத்தில்- தவசீலனுகிய, வேத

வொழுக்கங்களிற் றவறாதவனாகியும், தான மாரிசொரிகின்ற கரத்தையுடையவனாகியும், வலிமிகுந்தபுயங்களையுடையவனாகியும், எக்காலத்துமாறாத தருமசிந்தையையுடையவனாகியும், சிவபெருமானுடையநுதல் விழித்தீயாலெரிந்தமன்மதனுக்குப் பதில்வந்தமன்மதனென்றுசொல்லத்தக்க பேரழகினனாகியும், ஆயிரம்பிராமணர்களும் பதின்கோடிசேனைகளும் புடைசூழ்ந்துவரும்படி, எங்கனுந் தனது பராக்கிரமத்தைச்செலுத்தியுலாவுகின்ற சூரனாகியும், தாயத்தார்களும் பலதேயங்களை யாள்கின்ற வேற்றரசர்களுங் கண்டவுடன் பயந்துவணங்கத்தக்க பாதத்தையுடையவனாகியும், தன்னைவணங்காத சத்துருக்கள்வலியை வேரோடுங்கெல்லிக் கொல்லவல்ல கோபாக்கினியையுடையவனாகியும்,வீமனென்னும்இயற்பெயரினையுடையவோரரசனிருந்தான். அவ்வரசனுக்குக்-கற்பிலருந்ததியைநிகர்த்து,இல்லற வொழுக்கங்களிற் றவறின்றிநடந்துவருகின்ற சாருகாசினி என்னும்ஓர் மனைவியிருந்தனள். அம்மனைவியோடு சகலசெல்வங்களையுமனுபவித்துக்கொண்டு, பெரியோர்சொல்கின்ற நெறிகளிற்பிழையாமல்,பெருமைபொருந்திய பூமண்டலத்தைப் புயத்திற்சுமந்து, நீதிமுறைமைப்படி அரசாக்ஷிசெய்து வருகின்றகாலத்தில், நெடுநாள் ஒருபுத்திரப்பேறில்லாமல், மிகுந்தபத்தியினாற் பலதெய்வங்களைவழிபட்டும், வேதாகமவிதியோடுபல தானங்களைச்செய்தும், அளவற்றதருமங்களை அன்போடியற்றியும்,மாசற்ற வேள்விகளை மனந்தளராமல் முடித்தும், இன்னும் இத்தன்மையவான பலநல்லொழுக்கங்களைப்பூண்டும், தனதுகவலையொழியாதவனாகி மனமெலிந்து, தன்மனைவியையழைத்து, என்மனதுக்கினியகாதலியே – புத்திரப்பேறில்லாதார் இவ்வுலகத்தையரசாளினும் இம்மை மறுமைப் பயனையடையார்களாயின், நாம்வாழ்கின்ற இல்வாழ்க்கையும் நமக்கொரு பயனைத் தரவல்லதோ,புத்திரப்பேறில்லார்க்கு நற்கதிகிடைக்கு மென்கின்ற சாத்திரங்களுமுண்டோ, ஐயோ – நமதுகட்டழகும்,நாமடைந்திருக்கின்றபெருஞ்சிறப்பும், நாம்நடத்துகின்ற இல்வாழ்க்கையும், நாமுற்பவித்தகுடிப்பிறப்பும், நாமாளுகின்ற அரசாக்ஷியும், நாம்செலுத்துகின்ற பராக்கிரமமும்,நாம்செய்திருக்கின்றநூற்பயிற்சிகளும், ஒருபுத்திரப்பேறில்லாமல் வீணிற்போகின்றதே, இனியாயினும்வனத்திற்சென்றுபெரியோர்களையடுத்துத்தவஞ்செய்வோமாயின்,பின்னர்புத்திரப்பேறுதவறாமற் கிடைக்கும், அஃதில்லாவிடினும் அப்பெரியோர்கள்அனுக்கிரகத்தாற்சொற்காதி போகங்களை அனுபவிக்கும்படியான பேறேனுங்கிடைக்கும்,இவையிரண்டினும்ஒன்றேனுங்கிடைக்காமற்போவதில்லை, இதுவேநாமினிநடந்துகொள்ளவேண்டியமுடிவென்றுசொல்லித்தீர்மானித்துச்,சுமந்து–மனோரஞ்சிதனென்கின்றதன்னிரண்டமைச்சர்களைப்பார்த்து,அன்பினரே-யான்பூர்வத்திற் செய்திருக்கின்றஊழின்பயனோ, என்மனையாள்செய்ததீவினையின்பயனோ, மற்றியாதுகொண்டோ, இதுகாறும்ஒருபுத்திரப்பேறில்லாமற் சகலவளங்களுங்குன்றியிருக்கின்றோம், இனியேனும் ஓர்புதல்வனைப்பெற்றுயாங்கள்கடைத்தேறுவதாகவனத்திற்குச்செல்வதானோம், எனக்குள்ள பூமிமுதலியபொருள்களனைத்தையும்நீங்கள்இருவருமாகப்பகுத்து, யான்வருமளவுங்காத்துவரக்கடவீர்கள், மீட்டும்வராமற்போவேனாயின்,நீங்களே சுதாவிலாண்டுகொள்ளலாமென்றுசொல்லித், தன்மனைவியுடன் எழுந்து

பிரயாணமானான். அதையவ்வமைச்சர்கள்கண்டு,கவலையுற்றுக்,கண்களில்நீர்த்தாரைகளைச்சொரிந்து,மனமெலிந்து,அரசன்சொல்லியஆணையைத்தடுக்கக்கூடாதவர்களாகியிருந்தாகள். பின்னர்அவ்வரசன் தன்மனைவியோடுவனத்திற்சென்றுவசித்திருக்குங்காலையில்,பூர்வத்திற்செய்தநல்வினைப்பயனானது அவர்களைவிசுவாமித்திரமுனிவர்ஆசிரமத்தினருகிற்கொண்டு போய்விட்டது. அவ்விடத்தில்வண்டுகள்இசைபாடிமொய்க்கின்றதாமரைமுதலியபலபுட்பங்களைவாய்ந்து,கண்டவர்உள்ளத்தைக்கவளீகரிக்கத்தக்கவனப்பினோடுமிக்ககுளிர்ச்சிபொருந்தியிருக்கின்றஒருதடாகத்தைக்கண்டார்கள். அதில அடுத்தவர்களை அன்போடுதழுவி, என்பைக்கேட்கினும் இளையாதுதந்து, பலவின்சொற்களோடு நல்லபயன்களை விளைவிக்கின்ற சான்றோரைப்போலத், தன்னையடைந்தோர்க்கு மணமுங்குளிர்ச்சியும்இளங்காற்றுந்தந்து, சகலதுன்பங்களையுமொழிக்க வல்லநிரம்பிய சலத்தைக்கண்டார்கள், சகலமுந்தெளிந்து, மனங்குளிர்ந்து, இனியவாய்மைபெற்றுநல்லபயனைவிளைத்து, அளத்தற்கரிய நன்னெறிகளையுடைய அறிஞர்களிடத்தில், யாவரும்பலவுபகாரங்களையேற்றுச் செல்வரென்னு மூதுரையின்படி, தெளிந்துங், குளிர்ந்தும், இனிமையுற்றும்,நல்லபயன்களைவிளைவித்தும், அளத்தற்கரிய ஆழத்தோடிருக்கின்ற அத்தடாகத்தில், சகலபக்ஷிகளுநீரருந்திச்செல்வதைக்கண்டார்கள். சிலமுனிவர்கள் அதிலுள்ளதாமரைகளைப்பிடுங்கி,அவைகளின்கிழங்குகளைத் தங்கள்பசிதீரஉண்டு,மற்றமலர் முதலியவைகளைக் கரையிலெறிந்துசெல்ல,நிலையற்றோரெல்லாம்உலைவுற்றோராவர் என்னும் பழமொழியின்படி,அம்மலர்கள்சூரியவெப்பத்தால் வாடியிருப்பதைக்கண்டார்கள். சேற்கூட்டங்கள்திரண்டு அதன் கரையில்வருகின்றவரையில் தாமுயிரற்றதுபோலிருந்து,பின்னர்கண்டவுடன் மூக்கினாற்கொத்தி மேலெழுகின்றகொக்குகளும், சமயம் பார்த்துநீரின்மூழ்கிமேற்கொண்டு வருகின்ற நீர்க்காக்கைகளும், பாவபுண்ணியமறியாத பாதகர்களாயினோர், தங்களுக்குக்கிடைத்தபொருளைப் பிறர்க்குதவியுண்ணாரென்னும்பழமொழியின்படி,அவைகளைத்தம்மினங்கட்குச்சிறிதும் உதவாதுண்ணுவதைக்கண்டார்கள். அன்றியும் அதிலுள்ள சிறுமீன்களையெல்லாம்பெருமீன்கள்வயிறுநிரம்பவுண்டு,நீந்தச்சத்தியின்றிக்கரையிலொதுங்க, எளியாரைவலியார்வருத்தின் வலியாரைத்தெய்வம் வருத்துமென்னும் வாக்கியத்தின்படி,அவைகளைப்பறவைகள்கொத்திமேலெழும்புவதைக்கண்டார்கள். அன்னம்-சக்கரவாகம்-குருகு-தாரா-சிச்சிலி-வானம்பாடி-நாரை-பெருநாரை- முதலான சகலபட்சிகட்கும், அடுத்தவர்களையாதரிக்கின்றபரமசிவத்தைப்போலத், தான் இடைவிடாதுஇரைகொடுத்துவரவுங்கண்டார்கள். இவ்வாறளவற்றஅற்புதங்களை அத்தடாகத்தினிடத்திற்கண்டு,அப்பாற்செல்லுகையில்,அதன்சமீபத்தில் ஓர்பொழிலைக்கண்டார்கள்.அப்பொழிலில்-பகலிற்சூரியனைக்கண்டு வாட்டமுறுகின்றகுமுதமலர்போலவும், இரவிற்சந்திரனைக்கண்டுவாட்டமுறுகின்ற தாமரைமலர்போலவும் இன்றி, யாவரிடத்தும்உறவுபகையில்லாதமுனிவர்களைப்போல, அச்சூரியசந்திரர்களுடைய உறவுபகையில்லாமல், எக்காலத்தும்ஒரேசீராய் மலர்ந்திருக்கின்ற அநிச்சமலர்களைக் கண்டார்கள். காதல் முதிர்ந்த காமுகர்களைப்போல,ஆணன்றிலும் பெண்ணன்றிலும் ஒன்றோடொ

ன்றுபிரியாது, சிறகோடுசிறகினைச் சேர்த்துக்கொண்டு, அவ்வாறே இரைகளையுந்தேடியுண்டு, பலபூங்கிளைகளிற் புணர்ந்திருப்பதைக்கண்டார்கள் கட்டவிழ்ந்தமலர்களினின்றுந் துளிக்கின்றதேனை, சாதகப்புள்ளானது மழைத்துளியெனக்கருதித் தன்வாயைத்திறந்துபருக. அதனை மற்றமலர்களின் மொய்க்கின்ற வண்டினங்கண்டு, பாரியைவிட்டுப் பரத்தையைவிழைகின்றகாமுகரைப்போல, அவைகளைவிடுத்து, அப்புள்ளினது இரண்டு கடைவாய்களினுமொழுகுகின்றதேனைச்சூழ்ந்துபருகுவதைக்கண்டார்கள். அப்பொழிலானது வெளுத்தமணன்மேட்டின்மீது வெள்ளங்கொழிக்கின்ற வண்டலைப்போலத், தேனையும் மலர்களையும் பூந்தாதுக்களையுந் தளிர்களையுஞ்சொரிவதனால், அவைகள்தாழ்ந்தபுட்பச்செடிகளையுடையநந்தனவனத்தையொத்திருப்பக்கண்டார்கள். இவ்வாறு அளவற்ற மாட்சிமைகளை அப்பொழிலினிடத்திற்கண்டு அப்பாற்செல்லுகையில், முனிபுங்கவர்கள்வசிக்கின்ற பல ஆசிரமங்களைக் கண்டார்கள். அவ்வாசிரமங்களானது-திருமால்-அயன்-தேவேந்திரன்-முதலிய தேவர்களை வசிக்கப்பெற்றிருக்கின்றமையால், மகமேருவுக்கொப்பாகி இருக்கவும், அங்குவசிக்கின்றமுனிவர்கள்அணிந்திருப்பது சடைமுடி, மரவுரி, திருநீறு, உருத்திராக்கங்களாயினும், அவைகள்இரத்தினகிரீடந்தரித்ததேவர்களவணங்கத்தக்கதாகவும், கற்பகமுங்கண்டுசூழத்தக்கதாகவும், சகலவினைகளையும் நீக்கத்தக்கதாகவும், அருட்கண்களென்று சொல்லத்தக்கதாகவுமிருப்பக்கண்டார்கள். மேலும் அம்முனிவர்கள்சதாகாலமும் வேள்வித் தீயைவளர்த்து, அதன்முன்னிலையிற் றேவர்கட்கெல்லாம் அவிர்ப்பாகந்தந்து வருவதையும் மேகமானது மாதமும்மாரிசொரிந்து இப்பூவுலகத்துள்ள உயிர்களையாதரிக்கச்செய்கின்றமுறைமையையுங்கண்டு, இதனாலல்லவா திருமாலானவர் தனதுகாக்குந்தொழிலைக்கைவிட்டவராய்ப், பகலெல்லாமிரவுபோலக் கருதித், திருப்பாற்கடலினிடைவிடாது கண்டுயில்வதாயினதொன்றும், சிவபெருமான் பலதிருவிளையாட்டுகளை நடாத்திவருவதுந், திருமால்கண்ணுறங்குவதும், பிரமன்வேதங்களையோதுவதும், இந்திரன், அவுணருயிரைத் தாக்கப்போர்க்குச் செல்வதும், சந்திராதித்தர்கள் ஆகாயமார்க்கத்திற்றிரிவதும், இம்முனிவர்கள்தருகின்ற அவிர்ப்பாகங்களைநாடோறுமேற்றுவரும் ஆதரவைக்கொண்டல்லவாவென்று அதிசயித்தார்கள். பின்னும்அம்முனிவர்கள்வசிக்குமிடங்கடோறும், ஒருபக்கம்யாகத்திற்குரியபசுக்களும், ஒருபுடைபால்கறந்துவிடுக்கின்றபசுக்களும், ஒருபால்யாகமுடித்தவுடன்தானஞ்செய்யவிட்டிருக்கின்றபசுக்களும். ஒருபுறங்கன்னியர்வதுவைக்குக் கட்டிவைத்திருக்கின்ற பசுக்களுமாகச்சூழ்ந்திப்பதைக்கண்டார்கள். அங்கிருக்கின்றதடாகங்களிலுள்ளநீலோற்பலமலருஞ் சகத்திரதளத்தோடுங்கூடிவிரிந்திருக்கின்ற தாமரைமலரும், யாம்முன்னர்காமன்கைக்குக்கணையாகவிருந்ததினால் அல்லவா அக்காமன்பரமசிவத்தினது நெற்றிக்கண்ணினலெரிந்தபோது அவனோடேயாமும் அவ்வெரிக்கிரையாயினோம், இனி அவ்வாறுசெல்லாமல் அடுத்தவர்க்கிதமேசெய்பவராகியஇம்முனிவரிடத்திலிருந்தால், நம்மைப்பரமசிவத்திற்குவப்புண்டாக அவர் திருவடிகளில்அருச்சிப்பார்களென்றடைந்துதவஞ்செய்வதுபோலிருக்கக்கண்டார்கள். அங்கிருக்கின்ற-கொடி-செடி-விருக்ஷமுதலியவைகளெல்லாம், முனிவர்களு

ச்சுக்- கிழங்கு-கனி-காய்-மது-மலர்-தளிர்-இலை-சமிதை-என்கின்றபொருள்களைநாடோறும்வழங்கி, அவர்கட்கு உவப்பைத்தருகின்றகுற்றமற்ற பெருந்தவத்தினால், அவைகள் சிறிதுமெலிவின்றிச்சதாகாலமுந் தங்கிளைகளோடு நிறைந்துதழைத்திருப்பதைக்கண்டார்கள். முன்னம் பாற்கடலிலுண்டாகிய அமுதத்தையுஞ், சந்திரனிடத்திலுண்டாகியஅமுதத்தையுஞ்,சிவபெருமானுற்புசித்திருக்கின்றதேவர்கட்கு,அம்முனிவராற்றருகின்றஅவியமுதத்தையும், அவரேகொடுப்பினல்லாமல் யாவர்கொடுப்பார்கள்,ஆனல்அவர்வடிவாயிருக்கின்றஅக்கினியானது அம்முனிவர்கள் கொடுக்கவாங்கித்,தானும்புசித்துஅத்தேவர்கட்கும்வழங்கிவருவதைக்கண்டார்கள். மேலுந்தங்களுடல் வருந்தச்செய்கின்றதவத்தினுலும்,வேள்வியினுலும்,சகலவுலகங்களு மழியாமற் காத்துவந்தஅம்முனிவர்கள்,மலபாசங்களையொழித்து முத்தியிற்சேர்ந்துவாழ்வதையன்றி,ஒன்றுக்கொன்று தொந்தப்பட்டு மயங்குகின்ற தேவர்கதியையடையச் சற்றுங்கருதாதவர்களாயிருப்பதைக் கண்டார்கள். இத்தன்மையவாகிய மேலான சிறப்புகள் வாய்ந்தமுனிவர்களையும், அம்முனிவர்கள் வசித்திருக்கின்ற ஆசிர்மங்களையும், வீமராஜனும் அவன்மனைவியாகிய சாருகாசினியுங் கண்டு, நமது அரமனையும் இவ்வாசிர்மங்கட்கு நிகரல்லவென்றுசந்தோஷித்து அப்பாற்செல்லுகையில், சகல முனிபுங்கவர்களும் புடைசூழ்ந்து வணங்கும் படியாகப், பிரமதேவனே - தடாகத்திலிருக்கின்ற புண்டரீகவாதனத்தைவிடுத்து, வனத்திலிருக்கின்ற புலியாதனத்திற்றங்கியிருப்பதுபோல, வேங்கைத்தோலாதனத்தின்மீது வீற்றிருந்து,வேதாகமப்பொருளை விரித்துரைக்கின்ற விசுவாமித்திரமுனிவரைக்கண்டு, சாஷ்டாங்கமாகவணங்கினார்கள். அவர்களையம்முனிவர்தழுவி,உங்கட்குப்புத்திரனுண்டாகக்கடவதென்றுசீர்வதித்துத், தமதுகரங்களைக்கொண்டெழுப்ப, உடனேஇருவருமெழுந்து, கைகூப்பிநின்றார்கள்.பின்னரவ்விசுவாமித்திரமுனிவர்வீமராசனைப்பார்த்து,அரசனே-நீயார்நம்மாசிர்மத்தைநோக்கிவந்தவர்கள்யாதேனும் ஓர்பயனையடையாமற்போவதில்லையாதலால்,உனதுகோரிக்கையைச்சொல்லுவையாயின், அதனைத்தடையின்றி யாந்தருவோமென்றுசொல்லலும், அதையவ்வரசன் செவிக்கமுதாகக்கொண்டு, அப்போதே புத்திரப்பேறுண்டானதுபோல முகமலர்ந்து, சுவாமீ-யான்கவுண்டின்னியதேயத்திற்கரசன், என்பெயர்வீமன், இவள்சாருகாசினியென்னும்பெயரினையுடைய எனதுமனையாள், யாங்களிருவோரும் அளவற்ற தருமாதிகளைச்செய்தும் ஒருபுத்திரப்பேறில்லாமையால் மனமெலிந்து, அவமானத்துடன்வாழ்கின்ற இல்லறத்தைத் துறந்துஇவ்வனத்திற்குவந்தோம், இதுகாறும்இயற்றிவந்த தவமுதிர்ச்சியோ, அல்லது பூர்வசன்மத்திற்செய்தநல்வினைப்பயனோ, சகலரும்போற்றத்தக்க இவ்வாசிர்மத்தில்வந்து தேவரீரைத் தரிசிக்கப்பெற்றோம். மகமேருகிரியை யடுத்தவர்களுங், கற்பகவிருக்கத்தைச் சார்ந்தவர்களும், அவ்வவர்கள்கொண்ட விழைவையடையாமற் செல்வதுமுண்டோ, ஓ கிருபாமூர்த்தியே தேவரீரைக்கண்டபோதேஇனிப்புத்திரப்பேறுண்டாகுமென்று துணிவுற்றேன், அஃதன்றித்தேவரீர்செய்தருளிய ஆசிர்வாதத்தால் இத்தினமே அப்புத்திரப்பேறடைந்தவனாயினேன், மேலானதவத்திலும், வேதசாத்திர விசாரணையிலும், சிறந்தகருணையிலும், சில

மானவிரதத்திலும், மகத்தானவேள்வியிலும், பொய்மையற்றகலைஞானங்களிலும், பெருமைபொருந்திய தருமதானத்திலும், தேவரீருக் கொப்பாகயாவரிருக்கின்றார்கள். தேவரீர்செய்தருளிய ஆசீர்வாதம் வீணிற்போகுமா, சுவாமீ-பூர்வத்திலடியேன்செய்திருக்கின்றதீவினைகள் இன்னவையென்றுணர்த்தி, மீளவும் அவைகளைத்தீர்த்து, பான்பவித்திரனாகும்படியானஉபாயமுமருளிச்செய்யவேண்டுமென்றுபிரார்த்தித்தான். உடனேவிசுவாமித்திரமுனிவர்மனதிரங்கி, அவ்வரசன்செய்திருக்கின்ற பூர்வவினைகளைத்தமதுஞானநோக்கினாலறிந்து, ஓ நராதிபனே-உனதுவம்சத்திலிருந்தமுன்னோர்கள், நித்தமும்விநாயகபூசைசெய்துமிகுந்தநன்மைகளைப்பெற்றுவாழ்ந்திருந்தார்கள், நீயுன்மனைவிமீது வைத்திருக்கின்றவிழைவினால் அப்பூசையைச்செய்யாமற்கைவிட்டாய், அதனாற்புத்திரப்பேறடையாமற்போயினை, இனியாயினும் அவ்விநாயகமூர்த்தியைநீங்களிருவோரும்பத்தியோடுபூசனைசெய்து வருவீர்களாயின், உங்களுக்குப்புத்திரசம்பத்துண்டாகுமென்றார். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே, இவ்வாறுவிசுவாமித்திரர்சொல்லிப்பின்னுஞ் சொல்லுவார், ஓ பார்த்திபனே-விநாயகமூர்த்தி உனதுகுடிக்குக் குலதெய்வமாயிருந்து, சகலதுன்பங்களையு நீக்கி ரட்சித்தருளியகதைகளையுஞ்சொல்வோங் கேட்பாயாக, பூர்வத்தில்உனதுபெரியோர்கள் கருநாடதேயத்திற்கரசராகிப், பானுவென்கின்றபட்டணத்திலிருந்து ராச்சியபாரஞ்செய்துவருங்காலத்தில், உனக்கேழாவது தலைமுறையில், வல்லவனென்னும் ஓர்அரசனிருந்தான். அவனுக்கும்அவன்மனைவியாகிய கமலையென்பவட்கும் ஒருபுதல்வன் பிறந்தான், அப்புதல்வன் பிறந்தபோதே, குருடாகியும்- செவிடாகியும்- ஊமையாகியும்- சரீரமெங்குந்தொழுநோய்கொண்டு, சீயுஞ்செந்நீருமொழுகும்படியான விரணத்துடனேயிருந்தான். இத்தன்மையவாகிய துன்பத்துடன் பிறந்தபிள்ளையைத்தாய்பார்த்து, மிகுந்ததுயரங்கொண்டு, கண்கள்நீர்சொரியப் புலம்பித், தெய்வமே-மறுதேயத்துமன்னர்கள் பழிக்கும்படியான இத்தொழுநோய்கொண்ட பிள்ளையைவருந்திப்பெற்றதைவிடப், பிள்ளையில்லாமையாயிருப்பது மிகவுநலமாச்சுதே, ஐயோ - இத்துன்பமாகிய பிள்ளையைப்பார்க்கும்படியாகப் பிரமதேவனெனக்கேன்விதித்தார், இப்பிள்ளை பிழைத்திருப்பதைவிட இறந்துபோனாலுஞ் சுகுணமாச்சுதேயென்று, பலவாறுதுயரப்பட்டிருப்பதை அரசனறிந்து, மனைவி யிடத்தில்வந்து, குமாரனைப்பார்த்துத் தானும் மிக்ககிலேசத்தையடைந்து, ஆஅ நாம்செய்த தவப்பயனன்றாயிருக்கின்றதென்றரற்றி, ஊழ்வினையால்வந்து உற்பவிக்குங்காரியத்திற்கு யாம்துன்பப்படுவதால் ஆவதென்னென்றுதன்மனதைத்தானேதேற்றித், தன்மனைவிபடுகின்ற துன்பத்தினையுமாற்றவேண்டி, அவள்சரீரத்தைத்தனதுகரத்தால்வருடிக்கொடுத்து, காதலியே நீ துயரப்படவேண்டாம், இப்பிரபஞ்சத்துள், ஓர்காலத்திற்றுன்பமநுபவிக்கின்றவர்களே மற்றொருகாலத்தில்இன்பமுமெளிதிலனுபவிக்கின்றார்கள், பொறியிழந்திருக்கின்ற விப்புதல்வனே நாளைச்சகலமாட்சிமையினுஞ் சிறந்தமன்னவனாவன், ஆதலால் மணிமந்திர ஔடதாதிகளாற்சொஸ்தப்படுத்துவோம், அவைகளாலுங் குணமாகாவிட்டால், தவதானவிரதமுதலானவைகளைச்செய்து எல்லாத்துன்பங்களையு மொழிந்துக்கொள்வோஞ், சின்னாள்மாத்தி

ரம் மனம்பொறுத்திருவென்றுசொன்னன்,அதனாலவன்மனைவியானவள்
தன்துயரத்தைத்தன்னுளடக்கக் கூடுமானவளவிலடக்கி,அப்பொறிபிழங்
கபுதல்வனைத் தனதுகண்ணீருடன் தண்ணீரும் விட்டுக் குளிப்பாட்டினு
ள். பின்னர்அரசன்தன்புத்திரனுக்குச் சாதககருமாதிகளைச்சாத்திரவிதிப்
படிச்சிறப்பாக நடப்பித்துச், சோதிடர்களைக்கூவி,அவர்கள்சொற்படியே
தக்கனென்று நாமதேயம்வைத்து, அப்புத்திரன் பிறந்தநாடொடுத்துப்ப
ன்னிரண்டுவயதுவரையிற் பிணியொழியவேண்டிச் சகலவிதத்திலஅளவ
ற்ற திரவியங்களைச்செலவுசெய்து,எண்ணிறந்தபரிகாரங்களையும்பண்ணு
வித்தனன். பின்னர்எவ்வித உபேக்ஷையாலும் பிணிநீங்காமையால், அர
சன் மனவெறுப்படைந்து, ஓர்தினம் தன்மனையாளையழைத்துப், பெண்
ணே- இதுகாறுமிப்புதல்வற்காக அளவிறந்த திரவியங்களைச் செலவுசெ
ய்தும், இரவும்பகலுமாகப் பலதவங்களைமுயன்றும், இவைகளால்நமது
சரீரம்வாடியும், பிணிநீங்குவதில்லாமையால், இனிஇவனிங்கிருக்கலாகா
து,இருக்கினும்மற்றுமுள்ளதிரவியங்கள்வீணிற்செலவழிந்துபோகும்,ஆ
தலால்சற்றுந்தாமதஞ்செய்யாமல் உன்மகனையழைத்துக்கொண்டு, இந்வி
டத்தில்வெளியிற்செல்லக்கடவையென்றுஆக்கியாபித்தான். அவ்வார்த்
தையைச்சாருகாசினிகேட்டுநடுநடுங்கிப்,பதைபதைத்துப்பயந்து, அப்பு
தல்வனைப் பெற்றகாலத்திலுண்டான துயரத்தைப்பார்க்கினும்அதிகதுய
ரங்கொண்டு, ஐயையோவென்று துக்கித்து, அரசன்மனதிற்கொதிப்புண்
டாகிஎன்மீதிற்கோபஞ்செய்தால்இனிஎன்னசெய்வேனென்றுமனநொந்
து, கொடுமையான பிணிகொண்டிருக்கின்ற மைந்தனை உடனே யழைத்
துக்கொண்டு வெளிவந்து, நல்லகாலத்திற்குப்பகையில்லை பொல்லாதகா
லத்திற்குறவில்லை யென்று பெரியோர்கள் சொல்கினருராதலால், இனி
என்செய்யப்போகின்றேமென்றுஇடுக்கணுற்றிருப்பதில்ஆகத்தக்கபயன்
யாதுமில்லையென்றுதன்னுள்ளத்தைத்தானேதேற்றிக்கொண்டு, இனிநம
க்குப்பரமசிவத்தை விடவேறொருதிக்கில்லையென்கின்றஉறுதியுடன்வழி
நடந்து, வனத்திற்சஞ்சரித்திருந்தனள். அக்காலத்திலொருநாள்கள்ளர்கள்
அவளைப்புடைசூழ்ந்து,பூண்டிருக்கின்றஆபரணங்களனைத்தையுங்கொள்
ளையிட்டுத்துரத்திவிட,அதனுன்மிகவும்வாட்டமுற்றுப்பயந்து,ஓரூரினுட்
சென்று, எக்காலத்தும்பசிதாகத்தால்வருத்தமுறாதிருந்தவள்அப்பசியா
லுந்தாகத்தாலுமிளைப்புற்று, இத்துன்பங்களிற்பட்டுவருந்துவதைவிட உ
யிர்விட்டிறக்கலாமெனறுநினைத்து,மீளவும்புத்திரனிமித்தஞ் சகலசெல்வ
ங்களையுங்கைவிட்டுவந்துஇங்குநம்முயிரைவிடுத்தால், இவனைப்பாதுகாப்
பவரின்றிஇறப்பானே யென்றுநிதானித்து,அப்புத்திரனை யோர்கோயிலு
ள்இருக்கவைத்து,அக்கோயிலுக்கடுத்தகிராமங்களிலுபாதானமெடுத்துவ
ந்து, தன்புதல்வனுக்கூட்டிப், பின்னர்தானும்புசித்து,இவ்வாறுகாலங்கழி
த்துவருகையில், தான்நாடோறும் உபாதானத்திற்குச்செல்கின்ற குண்டி
னபுரத்திற்கு, ஒருநாள் நல்வினைப்பயனனது தன்னைநெருங்கிவருந் தன்
மையளாய்த், தன்புத்திரனையு மழைத்துக்கொண்டுவீதியிற் சென்றனள்.
அப்போது,அக்குண்டினபுரத்திற்குச்சமீபமானஓர்வனத்தில்,சகலசீவரா
சிகளும் பகையின்றியுலவுகின்ற சிறந்த ஆசிரமத்தினையுடைய முக்கலமு
னிவர் எதிரேவந்தார். கணேசமூர்த்திக்கன்பராகிய அம்முக்கல முனிவர்

மீது படிந்துவந்த காற்றானது, அத்தக்கனுடைய சரீரத்திற்பட்டமாத்திரத்தில், அவனுக்குண்டாயிருந்த பிணிமுழுவதுநீங்கி, வாய்பேசிச், செவிகேட்டுக், கண்தெரிந்து,புநிதபவித்திரனுகிநடந்தனன்.பின்னர்அத்தக்கனுடைய வடிவத்தைப்பார்க்கின்றவர்கள், இவன்மன்மதனோ, முருகக்கடவுளோ, அல்லது மகாவிஷ்ணுதானோ வென்றுநினைக்கத்தக்கதான, பேரழகும் பிரகாசமும்வாய்ந்து விளங்கினன். இப்படி விளங்கியிருக்கின்ற புத்திரனைத்தாய்பார்த்து, அதிசமகிழ்ச்சிபொங்கிக்,கையிலெடுத்தணைத்துக்கொண்டு, உச்சிமோந்து, உள்ளம்பூரித்து, முத்தமிட்டு, ஆனந்தக்கண்ணீர்சொரிந்து, நமதுகாதலன்கோபித்தநன்மையாலல்லவாநாமிங்குவரப்பெற்றுப்,பெரியோர்கள்மீதிற்படிந்துவந்தகாற்றினல் நமதுபுத்திரன்பிணிநீங்கிப்பிரகாசமாயினனென்றுசந்தோஷித்து,இதற்குமுன் தன்றலைவன்மீதுவைத்திருந்தவெறுப்பைவிடுத்துவிருப்புற்றவளாயினள்.இவ்வற்புதத்தை அங்கரத்துள்ளோர்களறிந்து,இவ்விருவர்மீதுங்கிருபையுண்டாகி, நல்ல போனகமும் ஆடைகளுந்தந்துபாதுகாத்துவர, அதையவர்களேற்றுச் சீவித்திருக்குங்காலத்தில்,அரவக்கச்சினைவீக்கிஅட்டபுயாசலங்களைப்பெற்றுத் திரிநேத்திர தாரியாய் வீற்றிருக்கின்ற சிவபிரானைச், சதாகாலமும் பூசிக்கும் பேற்றினைவாய்ந்த ஓர் ஆதிசைவப்பிராமணர் தங்களெதிரில்வரக்கண்டு,அவனைத்தானுந்தனபுத்திரனுமாகச்சாஷடாங்கநமஸ்காரஞ்செய்தார்கள்.அவ்வேதியரிவர்கண்மீதுகிருபைவைத்து,இருவருக்குந்தீக்ஷைசெய்து,கணேசமூர்த்தியினுடையஅஷடாக்ஷர மந்திரத்தை யுபதேசித்து அதைச்செபிக்கின்ற முறைமையையுங்கூறினர். அவ்வாறே இருவருஞ்செபஞ்செய்து வருகையில், கணேசமூர்த்திக்குக்கிருபைசுரந்து, அவர்கள்வேண்டிய வரங்களை அநுக்கிரகிக்கும்படியாகவெழுந்தருளி, முன்னர் கமலைக்குத் தரிசனந்தந்து, அவள்கோரிய வரங்களையுமளித்துப்,பின்னர் தக்கனுக்கெதிரில்வந்து, ஒருமுழந்தாண்மீது மற்றொருதிருவடியைவைத்துக்கொண்டு, ஒருகொம்பும்-இரண்டுசெவிகளும்- மூன்றுவிழிகளும்- நான்குதோள்களுமாகப்,பொன்னுடையுடுத்திப,பலரத்னாபரணங்களைத்தரித்த திருக்கோலத்துடன் தரிசனமானர்.இவ்வாறு தரிசனந்தந்தருளிய கர்த்தனைத்தக்கனைவன்கண்டு,மனதில்அச்சமும்அன்புமுண்டாகிச்,சாஷடாங்கநமஸ்காரஞ்செய்து,பலமுறைவலம்வந்து,கரங்களைச்சிரமீதுகூப்பி இருவிழிகளினும்ஆனந்த பாஷ்பஞ்சொரிந்து,விஸ்வரூபங்கொண்டெழுந்தருளியிருக்கின்ற விநாயகமூர்த்தியைத் தோத்திரஞ்செய்வதாயினன்.

வேதகாரணமுநீவேதமோர்நான்குநீ ... ... *
பாதமோர்நான்குநீபதங்களோர்நான்குநீ ... ... *
போதமேல்மலயமார்புவனகாரணருநீ ... ...*
நாதநின்பெருமையைநவிலவல்லாரெவர் ... ... *

புராதனப்பொருளுநீபுறம்பினுமுள்ளினும் ... ...*
விராவுமெய்க்கரியுநீமிகுமுபநிடதநீ ... ... *
சராசரகுருவுநீதத்துவமுழுதுநீ ... ...*
பராபரநின்றியல்பகரவல்லாரெவர் ... ... *

மூவர்காரணருநீமூன்றுகாரணமுநீ... ... ...✻
மூவகையுலகுநீமொழியுமுச்சுடருநீ ... ... ✻
மூவகையுயிருநீமூவகையுருவுநீ ... ...✻
தேவனேயுனதருட்டெளியவல்லாரொவர்... ... ...✻

இந்திரியங்களிலிசையதிதெய்வநீ ... ... ✻
இந்திரன்முதலியவெண்டிசைத்தேவர்நீ... ... ...✻
யந்திநண்பகலுநீயறுவகையருவநீ ... ... ✻
எந்தைநின்னுருவினையியம்பவல்லாரொவர்... ... ...✻

ஏகநீயனேகநீயிருளுநீயொளியுநீ ... ... ✻
போகிநீயோகிநீபுலவரொல்லாருநீ ... ...✻
சாகரமேழுநீதடவரைக்குலமுநீ... ... ... ✻
மாகநின்னடிமலர்மருவவல்லாரொவர் ... ...✻

அறைபிரமேயநீயப்பிரமேயநீ ... ... ✻
பறையும்பாவனையுநீபாவனாதீதநீ ... ...✻
நிறைபரப்பிரமநீநிலமுதலைந்துநீ... ... ... ✻
யிறைவநின்னருளினையெய்தவல்லாரொவர் ... ... ✻

மிருதிநீபுராணநீவேறுபல்கலையுநீ ... ... ✻
வருணமோர்நான்குநீவனமுபவனமுநீ ... ...✻
தருவொடுகொடியுநீசகலசெந்துக்கணீ... ... ... ✻
யொருவநின்றன்னியலுணரவல்லாரொவர்... ... ✻

காமமாதிகளுநீகடும்பசிதாகநீ ... ... ✻
நாமநித்திரையுநீநகுவிநோதங்கணீ ... ... ✻
ஏமமார்பொறையுநீயின்பநீதுன்பநீ ... ... ✻
வாமனேநின்கழன்மதிக்கவல்லாரொவர் ... ... ✻

அருளுநீமறமுநீயன்புநீவன்புநீ ... ...✻
தெருளுநீமருளுநீசெல்வநீவறுமைநீ... ... ... ✻
வெருளுநீதேற்றநீவேறுநீயொன்றுநீ ... ... ✻
குருவநின்குணங்களைக்குறிக்கவல்லாரொவர் ... ...✻

புண்ணியத்தலங்கணீபொருவிறீர்த்தங்கணீ... ... ✻
வண்ணமூர்த்திகளுநீவரந்தரும்வள்ளனீ... ... ...✻
பண்ணியம்பலவுநீபரமதப்பொருளுநீ ... ... ✻
யண்ணலேநின்செயலறியவல்லாரொவர் ... ...✻

செய்வினைமுதலுநீசெய்ப்படுபொருளுநீ ... ... ✻
செய்வினைத்தொழிலுநீசெய்கருமப்பய ... ... ✻
னுய்வகையவரவர்க்குதவவல்லவனுநீ... ... ... ✻
மெய்வலாய்நினதியல்விளக்கவல்லாரொவர் ... ... ✻

குணமொடுகுறிபலகொள்கைகொள்ளாயெனி ... *
னணிமலர்மணமெனவாக்கையினுயிரெனப் ... ...*
பணியுயிரறிவெனப்பயிலுமத்துவிதமாங் ... ... *
கணபதிநினதியல்காணவல்லாரெவர்... ... ... *

இவ்வாறுதோத்திரங்கள்செய்து நிற்கின்றதக்கனுக்கெதிரில், யானை
முகத்தோடுங்கூடியிருந்த விநாயகமூர்த்தியானவர் அவ்வுருவத்தை மாற்
றி, முக்கலமுனிவருடைய வுருவத்தைத்தரித்துக்கொண்டு, தக்கனைப்பார்
த்து, அன்பனே-நீசெய்த தோத்திரங்கட்குமனமுவந்தோம், உனக்குவே
ண்டியவரங்களைக்கேள் தருகின்றோமென்று திருவாய்மலர்ந்தனர். தக்கன்
மீளவுஞ்சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, ஓதேவாதிதேவனே அடியேன்
மனையில் அஷ்டபாக்கியங்களுண்டாகவும், மிக்கபுகழுடனே அடியேன்வா
ழ்ந்திருக்கவும் அனுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குக்
கர்த்தன்கிருபைசுரந்து, தக்கனே முன்புநம்மால்முக்கலனென்னும்பெய
ரைப்பெற்றிருக்கின்ற ஓர்தவசிரேஷ்டனுடைய வுருவத்தையேஇப்போது
யாம் பெற்றிருக்கின்றோம், அவனே நமது பாததாமரைகட்கன்பன், அவ
னுயிரே நமதுருவமானதால், அவனுருவே நமதுருவமென்பதை யுனக்க
றிவிக்குமாறு, அவன்போலவேயிருந்துஉனக்குத்தரிசனந்தந்தோம், அவ
னுருவத்திற்படிந்துவந்தகாற்றினால் உன்னரிட்டத்தைமுன்பு நிவிர்த்திசெ
ய்வித்தோம், இனி நீ அவனைச்சரணடைவையாயின், உன்கோரிக்கையெ
ல்லாம் அவனே நிறைவேற்றிவைப்பான், பின்னர்நீதேவேந்திரனைப்போ
லச் சகலபோகங்களையும் பெற்று வாழ்ந்திருப்பாயென்று திருவாய்மலர்
ந்து, தமதுதிருவுருவத்தைக் கரந்தருளினார். சந்திரசடாதரமூர்த்தியாகிய
விநாயகக்கடவுள் இவ்வாறு கரந்தருளலும், தக்கனானவன் பசுவைப்பிரிந்
தகன்றுபோலவுந், தாயைப்பிரிந்த சேய்போலவுங், கைப்பொருளிழந்த
வறுமையாளன்போலவும், எவ்வளவேனு மனந்தாவரிக்கமாட்டாமல், த
ரையில்வீழ்ந்தெழுந்து, கர்த்தன் கரந்தருளிய திசையைநோக்கி அனந்த
முறைவணங்கிப், பலதிக்குகளனைத்துந் தேடித்திரிந்து, மீடுந்தனக்குக்
காட்சிகொடுத்தருளிய நிலத்தில்வந்து, வீழ்ந்து வீழ்ந்து, புரண்டுபுரண்
டு, அலறியலறி, சரக்கொன்றைமரத்திற் பூத்திருக்கின்ற மலர்ச்சரங்களை
நோக்கிச், சுவாமியின் திருமுடியி லணிந்திருந்த மாலையென்றெண்ணி,
அம்மரத்தைத்தழுவிமுகர்ந்து, ஓதடாகங்களே, ஓ பறவைகளே, ஓ சுபங்
களே, ஓ மாளிகைகளே, ஓ யானைகளே, ஓ கமுகமரங்களே, ஓ பனைம
ரங்களே, ஓ அன்றிலகளே, என்னை யாடகொண்டருளிய கிருபாமூர்த்
தியைக் கண்டீர்களோவென்று புலம்பி, யானைகளைப்பார்த்து, என்னை இ
ரட்சித்தருளிய தயாபரரது திருமுகத்தைப் பெற்றிருக்கின்றீர்களே யெ
ன்றுகும்பிட்டுத்,தாமரைமலர்களைப்பார்த்து, எனதாண்டவருடைய திரு
வடிக்கொப்பாக விருக்கின்றீர்களேயென்று நமஸ்காரஞ் செய்து, அழலி
ற்பட்ட மெழுகினைப்போலச்சரீரமிளகி, உருமாறி, ஆனந்தக்கூத்தாடி,அ
ற்புதங்கொண்டு, முக்கலமுனிவருடைய ஆசிரமத்தையடைந்தான். அவ்
வாசிரமத்தில், அருளென்னுங் கடலைகடைந்து, ஆனந்தவமுதுண்டு பூ
ரித்திருக்கின்ற மாதவர்கள் தம்மைப்புடைசூழ்ந்து போற்றத்தக்கதாக,

வேதாகமமுதலியசகலபொருள்களையுந்தெரிந்துணர்த்தி, சேனாதேவராகிய விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளைச்சதாகாலமுஞ்சிந்தித்திருக்கின்ற அருந்தவத்தினாலும், யோகவலியினாலும், வேண்டியவண்ணம்வேறுவேறுவடிவங்களைக்கொள்ளத்தக்க சத்தியையுடையவராய், ஞானசூரியனைப்போலவிளங்கியிருக்கின்றமுக்கலமுனிவரையும், அவர்கருணைபொழிகின்ற திரிநேத்திரங்கள்சதுர்ப்புசங்கள்முதலிய உறுப்புக்களோடு, சிற்பசாத்திரவிதிப்படி பொன்னினாலும்மணியினாலுங்கணேசமூர்த்தியினுடைய திருவுருவங்களைச்சமைத்துச், சதாகாலமுந்தரிசித்து வருகின்றபெருமையையுங்கண்டு, சாஷ்டாங்கமாகப் பணிந்து, நெடுநேரம்அவ்வண்ணமேயிருந்து, பின்னரெழுந்து, மேகத்தைப்போல ஆனந்தக்கண்ணீர்சொரிந்து, பெருமூச்செறிந்து, பரவசனாகிக், கரங்களைச்சிரமேற்கூப்பி, அளவற்றதோத்திரங்களைச்செய்துநிற்றலும், அத்தக்கனை முக்கலமுனிவர் கிருபையோடும் பார்த்து, அவன்பேரன்புக்கதிசயங்கொண்டு, அன்பனே- உன்பெயரென்ன, நீவசித்திருக்கும் ஊர்யாது, உன்மனதிற்கருதிவந்த விருப்பங்கள் எவை சொல்லென்றுதிருவாய்மலர்ந்தனர். உடனே தக்கன்தேவாமிர்தமுண்டவனையொத்துக்களித்தவனாய்க், கரங்களைக்கூப்பித்தொழுது, இதனை விண்ணபஞ்செய்வதாயினன். சுவாமீ-என்தந்தை கருநாடதேயத்திலே பாநுவென்கின்றபுரத்தில்அரசாக்ஷிசெய்கின்றவல்லாளராசன், என்தாய் கமலையென்பவள், என்பெயர்தக்கன், மேற்சொன்ன அவ்விருவருக்கும் யான்புதல்வனாய் உற்பவித்தபோதே, என்சரீரமானதுதொழுநோய்முதலியபிணிகளோடுமிருந்ததனால், அவர்கள்மனவருத்தமுற்றுப், பன்னிரண்டுவயதுவரையிற் பற்பலமுயற்சிகளைச்செய்துவந்தார்கள். பின்னர்எவ்வாற்றானும்என்பிணிநீங்காமைகண்டு, தந்தைமனவெறுப்படைந்து, தாயையும் என்னையுங்கோபித்துவிலக்க, யாங்கள் அவ்வாணையைத்தடுக்கக்கூடாமல்வெளிக்கொண்டு, இந்நகரத்தையடைந்து, உபாதானமெடுத்துசீவிக்கின்றநாளில், ஒருநாள்சுவாமிகள்திருமேனியிற்றுதைந்து வந்தகாற்றினால் என்பிணியனைத்துநீங்கப்பெற்றதுமன்றி, ஓர்மறையவருபதேசித்தமந்திரத்தையநுட்டித்து, அதன்முன்னிலையிற்கணேசமூர்த்தியினுடையதரிசனங்கண்டு, அவரிட்டருளியகட்டளையின்படித்தேவரீரைச்சரணடைந்தேன் இஃதன்றியும்-யானைமுகத்தோடென்னெதிர்வந்துகாட்சிதந்த கணேசமூர்த்தியானவர், பின்னர் அவ்வுருவத்தைமாற்றித், தேவரீர்திருவுருவத்தினைககொண்டுதரிசனந்தந்தருளியதால், சுவாமிகட்குந்தேவரீர்க்குந் திருவுருவமொன்றாகவிருக்கின்றது. தேவரீர் அநுக்கிரகத்தால்அடியேற்கு இப்பிரபஞ்சவாழ்க்கை மிகுதியுண்டாக வேண்டுமென்றுகோரியிருக்கின்றேன், அவ்வண்ணமே தேவரீர்கருணாகடாக்ஷம்வைத்து, நிரந்தரபத்தியும் அடியேற்கருளவேண்டுமென்றுபணிந்துபிரார்த்தித்தான். இவையனைத்தையுமுக்கலமுனிவர்கேட்டு, அதிசஆச்சரியங்கொண்டு, மைந்தனே-நீயேபெரியபாக்கியமுடையவன், நீயே இவ்வுடம்பின்பயனைப்பெற்றவன், நீயேநினைத்தகாரியத்தை நிறைவேற்றிக்கொள்ளத்தக்கமகாதவத்தையுடையவன், நீயே விநாயகக்கடவுளுடைய திருவடிகளில் நிரந்தரபத்தியுடையவன், நீயேமுற்றத்துறந்தவன், நீயேசீவன்முத்தன், யான்தேவவருடத்தில் ஆயிரம்வருடம் அருமையானதவங்கள்செய்தும், அவ்வாறே அளவற்றகாலந்தியா

ணத்திருந்தும், பற்பலதருமங்களில்முயன்றும், எண்ணிறந்த தானங்களை நடாத்தியும், அதுகாறும் எனக்குக் கணேசமூர்த்தியானவர் தரிசனந்தந்ததேயில்லை. பிரமன் விண்டு உருத்திரனென்கின்ற மூவருள்ளத்தினுஞ், சிருட்டி திதி சங்காரமென்கின்றமுத்தொழில்களைநடாத்தி, அம்முத்தொழில்களை அம்மூவர்முன்னிலையில் இம்மூவகையுலகத்தினு மியற்றுதல்செய்து, அம்மூவர்க்குமுதல்வனுகவிருக்கின்றஓர்முதல்வனுக்குந், தானேமுதல்வராயிருக்கின்றவர் அக்கணேசமூர்த்தி. அவரையுன்மூவகைக்கரணத்தாலு முயங்கியிருக்கின்றனேயாயின், இப்புவியிலுனக்கொப்பாகயாவரிருக்கின்ருர்கள். அந்தணர்க்கழல்வண்ணமாகவும், யோகியர்க்குமந்திரசொரூபமாகவுமிருந்து, அவ்வவர்களைத்தரிசனந்தந்து ஆட்கொள்ளத்தக்க அக்கணேசமூர்த்தியானவர்என்னெதிரிற்காட்சிதந்ததெவ்வாறே, அவ்வாறே நீயுங்கண்டதாகமொழிந்தனே, யானுனக்குதவத்தக்க கைம்மாறுஎன்னவிருக்கின்றதென்றுசொல்லி, ஆலிங்கனஞ்செய்து, தமதுகரத்தால்சரீரத்தைதவருடி, அளவளாவிய அற்புதங்கொண்டு, பற்பலசந்தோஷவார்த்தைகளாடிச், சகலபாக்கியங்களையுந்தரத்தக்க விநாயகமூர்த்தியினுடைய ஏகாட்சரமந்திரத்தையுபதேசித்து, அதைத்தியானிக்குமுறைமையையும் அருளிச்செய்தார். இப்பால் அத்தக்கனுடைய தாயாகியகமலையானவள், நெடுநேரந்தன்புத்திரனைக் காணுமற்றேடினவளாய்ப், பின்னர்ஞானசொரூபியாய்வீற்றிருக்கின்ற முக்கலமுனிவரிடத்திலிருக்கக்கண்டு, தானும் அவரைத்தீர்க்கதெண்டன்செய்து நின்றனள். அவளை யம்முனிபுங்கவர் பார்த்து, ஓ மகாவுத்தமியே-நீயும் உன்புத்திரனும், வேதங்களாலு மறியக்கூடாத குணங்குறிகடந்தகொள்கையராகிய கணேசமூர்த்தியினுடையகிருபைக்குப்பாத்திரரானீர்கள், சகலவினைகளையும் வென்றீர்கள், இன்னு நீங்கள்பெறத்தக்கதென்னவிருக்கின்றது, உன்குமாரனுக்கு அவ்விநாயகக்கடவுளுடையஏகாக்ஷரமந்திரத்தை யுபதேசித்திருக்கின்றேன், அம்மனுவைச் செபஞ்செய்துசித்திபெற்றமுடிவிலே, இவ்வுலகத்தில் அவன் சக்கிராதிபதியாயிருந்து, தேவேந்திரன்முதலாயினோர்கண்டு மதிக்கத்தக்க அரசாக்ஷியைப்பெற்று வாழ்ந்திருப்பன், இனியொன்றற்கும் அஞ்சலையென்றுசொல்லி விடைகொடுத்ததாக விசுவாமித்திரமுனிவர் வீமராசனைநோக்கிச்சொன்னுர்.

கணபதிதுணை.

ஏ ழ ா வ து.

வல்லாளன்உபாசித்தபடலம்.

ஓசவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியைத் தக்கனுபாசித்துப்பிணிநீங்கியசரித்திரத்தைசசொன்னேம், இப்பால் வல்லாள னுபாசித்ததிறத்தைச்சொல்வோம் கேட்பீராக. வீமராசன் விசுவாமிந்திர முனிவரை மீளவும் பணிந்தெழுந்து, சுவாமீ - முககலமுனிவர்மீது படிந்துவந்தகாற்றுனது தக்கன் சரீரத்திற்பட்டவுடன், அகொடிய [illegible]பாதி அவனை

விட்டுநீங்கவும், உடனேகணேசமூர்த்தி தரிசனமாகவும், பூர்வத்திலவன் என்னதவத்தினைச்செய்திருக்கின்றான்,அதனையும் அருளல்வேண்டுமென்றுபிரார்த்தித்தனன். அதற்குவிசுவாமித்திரமுனிவர்கிருபைசுரந்து,அரசனே- சகலவளமுஞ்சிறந்த சிந்துதேயத்திலே, பல்லியென்கின்றபட்டணத்திலே, வைசியகுலத்திலே, கலியாணனென்பவனுக்குஞ், சற்பிற்சிறந்த அவன் மனைவியாகியஇந்துமதி யென்பவட்கும், முன்செய்துவிட்ட தவக்குறைவை நிறைவேற்றவந்தவனென்று சொல்லும்படி ஒருபுத்திரன் அவதரித்தான். அதனாற்கலியாணன் மனமகிழ்ச்சிகொண்டு, சகலசடங்குகளையுஞ் சிறக்கச்செய்து, அநேக தானதருமங்களியற்றி, புத்திரன் பிறந்து பன்னிரண்டாநாள் வீட்டையலங்கரிக்கச்செய்து,சோதிடர்களைக்கூவி, அவர்களால் அப்புத்திரனுடைய திதிநிலை- முதலியஎல்லாநிலைகளையுநன்குணர்ந்து, அவர்கள்சொற்படியே வல்லாளனென்கின்ற நாமகரணஞ்செய்து, அன்போடுவளர்த்துவர, அவ்வல்லாளனென்னும் புத்திரன்நாளுக்குநாள் இருந்துந், தவழ்ந்தும், நடந்தும், அறிவுதெரிந்துந், தினமொருமேனிகொண்டு, வளர்பிறைபோலவளர்ந்து, விளையாடிக்கொண்டிருக்குநாளையில், தன்வீட்டைவிட்டுச் சிறுபிள்ளைகளுடன்கூடித் தோப்புகளிற்சென்றுவிளையாடிக்கொண்டிருப்பான். அவ்வாறு நாள்தோறும்விளையாடல்செய்யுங் காலத்தில், ஒருநாள் அவனுக்குப் பூர்வநல்வினைப் பயனானது நெருங்கிவரலும், அத்தோப்பிலொரு கல்லை யெடுத்து வைத்து, அக்கல்லை விநாயகமூர்த்தியாகப் பாவனைசெய்து, சலத்தால்அபிஷேகித்துப் புட்பத்தாலருச்சித்துப், பத்தியுடன்பூசித்து, மீட்டும் தன்விட்டிற்கு அச்சிறுபிள்ளைகளோடு கூடிச்செல்வான். மறுதினமும்அவ்வாறேசென்று, தான் பாவனையாலருச்சித்த அவ்விநாயகமூர்த்தியைக்கண்டுதரிசித்து, முன்னைநாளிலுமிகுந்தசிறப்புகளைநடாத்திஆராதித்துவருவான். இவ்வாறுநாளுக்குநாள்தனதுபூசனைகளைவிருத்திசெய்து விளையாடிவருங்காலத்தில், ஒருநாள் பிராதக்காலையிலெழுந்து, அச்சிறுபிள்ளைகளை யழைத்துக்கொண்டு தோப்பின்கட்சென்று,மிகுந்தவிசுவாசத்துடன் தான்பிரதிட்டைசெய்து வைத்த கணேசமூர்த்திக்குச் சிலபிள்ளைகள் உயரமாகப்பூப்பந்தரிடவும், சிலபிள்ளைகள் பலவாச்சியங்களிசைக்கவும், சிலபிள்ளைகள கனிவர்க்கங்களைச்சேகரித்துவரவும், சிலபிள்ளைகள்பூச்சரங்கள்கட்டித்தொங்கவிடவும், சிலபிள்ளைகள் திருமஞ்சனங்கொண்டுவந்துவைக்கவும், சிலபிள்ளைகள் பஞ்சகவ்வியஞ்சேர்க்கவும், சிலபிள்ளைகள் பஞ்சாமிர்தங் கூட்டவும்,சிலபிள்ளைகள்சந்தனமிழைக்கவும்,இவ்வாறுஎல்லாப்பிள்ளைகளும்ஒவ்வொருதிருப்பணிகளைநடாத்திவரக்கட்டளையிட்டு, வல்லாளன்ஸ்நானஞ்செய்து, அநுட்டானமுடித்துப், புட்பங்களால்அலங்கரித்திருக்கின்ற ஆலயத்தில் நுழைந்து,மிகுந்தபத்தியுடனேவிநாயகமூர்த்திக்கபிஷேகஞ்செய்து,பூச்சரங்களைச்சாத்திப், பற்பலநைவேத்தியவகைகளைக் குறைவில்லாமற்கொடுத்து,சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து,இருகரங்களையுஞ்சிரமேற்குவித்துப், பலமுறைவந்தனைசெய்துகொண்டிருந்தான். அக்காரணத்தால் தன்னோடுவந்த எல்லாப்பிள்ளைகட்குங்காலபோசனம் மத்தியானபோசனமில்லாமலும்,அத்தமிக்கின்றவளவாயில்தங்கள்வீட்டிற்சென்றுசேராமலுமிருந்தார்கள்.இப்பால்அப்பிள்ளைகளையீன்றோர்கள்வல்லாளன்மீது கோபங்கொண்

டு, அவன்தந்தையாகிய கலியாணனிடத்திற்சென்று, உன்பிள்ளை எங்கள்சி
றுவர்களை ஆதிகாலையில்அழைத்துக்கொண்டுபோய், இன்னும்அவர்களை
வீட்டிற்கனுப்பாமல் விளையாடிக்கொண்டிருக்கின்றான், அவனை நீதண்டி
த்தடக்காவிட்டால், யாங்களிக்கொடுமையைஅரசனுக்கறிவித்து, உன்னை
இந்நகரத்தினின்றுந் துரத்திவிடச்செய்வோம், இதனையுண்மையாகநம்பக்
கடவையென்றுசொல்லி அவன்மனதைக்கலைத்தார்கள். இவ்வாறுயாவரு
ந்தனக்கு மனவருத்தமுண்டாகும்படிக்கூச்சலிட்டுரைத்தலுங், கலியாண
னுக்கு மிகுந்தகோபமுண்டாகித் தடியையெடுத்துக்கொண்டுபோய்த், த
ன்குமாரன் விநாயகபூசைசெய்து விளையாடிக்கொண் டிருக்கின்ற தோப்
பையடைந்து, பூவாற்சமைத்துவைத்திருக்கின்ற பூப்பந்தரைப் பிரித்துத்
தள்ளி, அதிற்கணேசரை ஆவாகனஞ்செய்துவைத்திருக்கின்றமூர்த்தியை
யெடுத்தெறிந்து, வல்லாளனையும உதிரமொழுகவடித்துப், பின்னுங்கோப
ம்ஆறாமையால் அவனைமரத்துடனேசேர்த்துஇறுகக்கட்டினன். அப்போ
து அக்குற்றமற்றகுமாரன்பயந்து, தந்தையேதந்தையேயென்றுகும்பிட்டு
க், கட்டையவிழ்த்துவிடும்படியாகப்பலமுறைபிரார்த்தித்துக்கொள்ள, அ
தற்கப்பாவி சற்றுமனதிரங்காமல், உதட்டைமடித்துகடித்துக், கொடியவா
ர்த்தைகளாற்பேசி, நீ விநாயகரைக்குறைவில்லாமற்பூசைசெய்திருப்பை
யாயின், அவரேவந்து யான்கட்டியகட்டை அவிழ்த்துவிடுவார், அன்ன
பானாதிகளை உன்கையிற்றந்து, நீவேண்டியபடி அனுக்கிரகித்து, உன்னு
யிரையும் பாதுகாப்பார். நீமீட்டும்வீட்டிற்கு வராதிருந்தாற்பிழைத்தாய்,
வருவையாயின் மாண்டுபோவாயென்று பகைவரைப்போலப்பேசித், த
ன்னிருக்கையை யடைந்தனன். இப்பால் வல்லாளனுக்கு வேறொரு து
ணையில்லாமல் மிக்கதுயரத்தை யடைந்து, ஓ திருநேத்திர தாரியாயிருக்
கின்ற கணேசமூர்த்தியே, யான்படுந் துன்பங்களைத் தேவரீர்பார்க்கவில்
லையோ, முழுமையுந் தேவரீரையே நம்பியிருக்கின்ற அடியேற்கு இத்த
ன்மைத்தாகிய துன்பம்வரலாமா, விக்கினகர்த்தரென்னுந் திருநாமம்தேவ
ரீர்க்கிருப்பதற்கு இதுதகுதியா, தேவரீர்திருவடித்தாமரைகளை ஆராதிக்
கின்றவெனக்கும் இவ்விடர் நேர்ந்ததே, இஃதுன் கிருபாசமூகத்திற்குள
திர்ப்படவில்லையா வென்று முறையிட்டு, ஐயனே- யானுனக்கடிமையெ
ன்ப துண்மையாயின், யான் சமைத்துவைத்த ஆலயத்தை எவன்பிரித்
துத் தள்ளினனே, யான்பிரதிட்டைசெய்த மூர்த்தியைஎவனெடுத்தெ
றிந்தானே, எனது சரீரத்தில் உதிரமுண்டாகும்படி எவன் அடித்து இ
ம்மரத்திற்கட்டினனே, தேவரீரை எவ்வளவேனுமதியாமல் எவன் நிந்தி
த்தானே, அப்பாதகன் இந்நிமிடத்தில் குருடாகியும், ஊமையாகியும்,
செவிடாகியும், அழுகியதொழுநோய்கொண்டு, அதிற்சீயுஞ்செந்நீருமொ
ழுகத்தக்கதாய், சரீரமாத்தியந்தமும் விரணங்களுண்டாகித் துன்பப்பட்
க்கடவனென்று சபித்துத், திடசித்தங்கொண்டு, நமதுஉடன் மாத்திரமே
கயிற்றாற் கட்டுண்டதன்றி, உள்ளத்திற்கு என்னகுறையிருக்கின்றதென்
று தன்மனதினுள்ளே விநாயகக்கடவுளை யிறுகப்பிடித்துத்தியானித்து, உ
யிரைவிடுவதற்குத்துணிந்தான். உடனேவிநாயகமூர்த்திக்கு மனந்தளர்ந்
து, பிராமணச்சிறுவன்போலமாறுவடிவங்கொண்டு, அவ்வல்லாளனுக்கெ
திராகவந்தார். சூரியோதயத்திற்குமுன்னர்இருளும்பனியும் எவ்வாறுநீங்

குமோ,அவ்வாறு விநாயகமூர்த்திபிராமணச்சிறுவனுகிவராலும், அவ்வல்லாளனை இறுகக்கட்டியிருந்தகட்டும், அடிகளாலுண்டானவிரணங்களும், ஒருநொடிப்போதில்விலகிபோய்விட்டன. பின்னர்வல்லாளன்அற்புதங்கொண்டு,இவரேநம்மைஆட்கொள்ளவந்தவிநாயகப்பெருமானென்றுநிச்சயித்து,சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து,ஓசகத்ரக்ஷகனே-எளியேற்குத்தந்தைதாய் சுற்றமுதலியயாவருஞ்சுவாமிகளேயன்றி, இப்பிரபஞ்சத்தில் வேறொருவரில்லையென்பது இத்தினத்திற்கண்டுணர்ந்தேனென்றுபலவாறுதோத்திரஞ்செய்தனன். அதற்கப்பிராமணபபிள்ளைவடிவங்கொண்டுவந்தகணேசமூர்த்தியானவர்வல்லாளனைத்தழுவிக்கொண்டு,அன்பிற்சிறந்தகுழந்தாய்-நமக்கபராதஞ்செய்தபாவிகளும்,நமதுபத்தருககுஇடுக்கண்செய்தசண்டாளர்களும்,அந்நிமிடத்திற்கொடியநரகவேதனைகளிலழுந்தி, இம்மைமறுமையினும் முடிவுகாணுதபொல்லாதவியாதிகளாற்றுன்பப்படுவார்களாதலால், இப்போதுநம்மிருவரிடத்துங்குற்றஞ்செய்தகலியாணனுக்கு நீயிட்டசாபத்தின்பயனை அனுபவிக்கச்செய்தோம், நீயுன்துயரத்தைநீங்கிஉனக்குவேண்டியவரங்களைக்கேள் தருகின்றேமென்றருளிச்செய்தார்.வல்லாளன்அம்மொழியையமுதாகக்கேட்டு,ஆனந்தபரவசனுகி,அடியேற்குத்தேவரீருடையதிருவடிகளில்நீங்காதபத்தியைத்தந்து,இவ்விடத்தில் எக்காலமும் சுவாமிகள்வாசமாயிருந்து,அவ்வவர்கள்இச்சித்தவரங்களையநுக்கிரகிக்கவேண்டுமென்றுபிரார்த்திகக,அதற்குஅக்கணேசமூர்த்தியிசைந்து, மைந்தனே-உனக்கெமதுதிருவடிகளிலென்றைக்கும்அழியாதபேரன்பினைத்தந்தோம்,அன்றியும்உனதுபெயரைநமதுபெயர்க்குமுன்னர்வைத்து, வல்லாளகணபதியென்று உலகத்தாரெல்லாந்துதிசெய்யும்படியாக, அவ்வவர்களிச்சித்த வரங்களைத்தந்து,இங்ஙனேவசித்திருப்போம்,சொர்க்கமத்தியபாதலமென்கின்ற மூவுலகத்தாரும், இங்குவந்துநம்மைப்பூசனைசெய்யக்கடவர், இங்குண்டாயிருக்கின்ற நமதுசொரூபத்தை யாவர்தரிசித்தாலும், அவ்வவர்கள்பெறக்கருதிய அரியபொருள்களையெல்லாம் எளிதிலடையக்கடவர்கள், இனி தினவுச்சவம்- மாதவுச்சவம்- வருடவுச்சவமுதலானவைபவங்கள் இங்குச்சிறப்பாகநடக்கும், இதனை நீ யுண்மையாகநம்பக்கடவையென்று திருவாய்மலர்ந்து, பிராமணப்பிள்ளை வடிவங்கொண்டிருந்த கணேசமூர்த்தியானவர், சகலவுலகத்தாரும் பூசிக்கத்தக்கதாகவிக்கிரகவடிவங் கொண்டிருந்தனர். இவ்வாறுசொல்லினும் பொருளினுந்தொடர்ந்தறிதற்கரிய கணேசமூர்த்தியானவர், விக்கிரகவடிவங்கொண்டுவீற்றிருப்பதைவல்லாளன்பார்த்து, மிகுந்தபத்தியுடனேபணிந்தெழுந்துமுன்போலவேபூப்பந்தர்புதுக்கி, ஸ்நானஞ்செய்து, பூசைமுடித்தற்குவேண்டிய திரவியங்களையும்,வாசனையூட்டியதிருமஞ்சனத்தையும், பரிமளமிகுந்த புட்பவகைகளையும், இனிமையாகிய காய்கனிவர்க்கங்களையுஞ்சேகரித்து, அளவற்றவுவகையோடும் ஆராதித்துக்கொண்டிருந்தான். இங்கிவ்வாறிருக்க, இவனைமுன்னர் வருத்திச்சென்ற கலியாணன் தன்வீட்டையடைவதன்முன், இவனேடும்விளையாடிக்கொண்டிருந்தபிள்ளைகள் விரைவிலோடி,இவன்தாயாகியஇந்துமதியிடத்திற்சென்று,கலியாணன்றன்புத்திரனை யலையக்கண்டதும்,சரீரமெங்கும் உதிரப்பிரவாகமுண்டாகும்படிஎள்ளளவுமிரக்கமின்றியடித்துமரத்திற்கட்டித்தனியே விட்டுவந்ததும், விபர

மாரச்சொன்னார்கள். அதனை இந்துமதிகேட்டு,மிகுந்ததுயரப்பட்டுமனவாட்ட முற்றிருக்கையில்,வீட்டைநோக்கிவருகின்ற கலியாணனனவன், தன்குமாரனிட்டசாபத்தினாற்கண்டெரியாமலும், வாய்பேசாமலும்,செவிகேளாமலும், சரீரமெங்குந் தொழுநோய்கொண்டு, திகைதப்பி, மதிமயங்கி, நிலவரத்தோடுந்தன்வீட்டில் வந்து வீழ்ந்தான். அவனை இந்துமதிகண்டு, ஈதென்னபாவமென்றுதிடுக்கிட்டு, நடுநடுங்கி,உளம்வருந்தி,ஐயையோநமதுநாயகனுக்கிவ்விதவிடுக்கண்வந்த காரணம்யாதினாலென்றுநினைத்து, மனமுருகிக், கண்ணீர்சொரிந்து, நெருப்பின்மீது மற்றோர் நெருப்புவீழ்ந்ததுபோலவும், நோயின்மீதுவேறோர் நோயுண்டானதுபோலவுந்தன்புத்திரனாற்படுகின்றதுன்பத்தின்மீதுபுருடனாற்படுகின்ற துன்பத்தையு மேற்றவளாய், மனந்தாவரிக்கமாட்டாது, ஓதெய்வமேசிறந்தசெல்வத்தோடு நல்ல இளமைப்பருவத்தைச் சேர்ந்திருந்தகாலத்தினும்,ஒருவருக்குந்தீங்கென்பதை நினையாமல், தருமத்தையே நடாத்திவந்தஇவருக்கும் இவ்வினைவருமாயின், இதுமுற் சனனத்திற்செய்த தீவினையின்பயனோ, புத்திரனைத்துன்பப்படுத்திவந்த கொடுமையோவென்றுதுககித்து,வீட்டிலிருக்கின்ற மற்றையமாதர்களோடுங்கூடித்,தன்புத்திரனிருக்குமிடத்திற்சென்று, அவன்மிகுந்தபத்தியோடு விநாயகபூசைசெய்துகொண்டிருப்பதைக்கண்டு, சந்தோஷங்கொண்டு, இவனைமரத்திற்கட்டியிருக்கின்றதென்றுஞ்,சரீரமுழுவதும் அடிபட்டு உதிரமொழுகிக்கொண்டிருக்கின்றதென்றுங்கேள்வியானோமே, அவ்வாறொன்றினையுங் காணோமே, ஈதென்னவிந்தையென்று தன்னுடனேவந்தமாதர்களோடுஞ்சொல்ல,அவர்களும்வல்லாளனைமகிழ்ச்சியுடனேபார்த்து, இச்சிறுவன் கணேசமூர்த்தியை அன்போடும்ஆராதித்துவருகின்றமகிமையினாலே,இவன்சரீரத்திலெவ்வளவேனுந்துன்பமணுகவில்லையென்று நிச்சயித்து, அவன்தாயாகிய இந்துமதியைப்பார்த்து, விநாயகமூர்த்தியைப் பத்தியோடு பூசைசெய்பவரில் உன்மகனுக் கொப்பானவர்கள்இப்பிரபஞ்சத்திலெங்கணுமில்லை, ஆதலால் அவன்சரீரத்தில்யாதொருதுன்பமு நெருங்காமலிருக்கின்றதென்று சொன்னார்கள். அதை இந்துமதிகேட்டு, அக்குமாரனருகிற்சென்று, தனதுள்ளத்துணடான அன்பின்பெருக்கினால் குசங்களினின்றும் அமுதம்பெருகத்தக்கதாகத்தழுவி,முகத்தோடு முகத்தையணைத்து, முத்தமிட்டு,அப்பா என்னருமைச்செல்வனே-நீ இப்பிள்ளைமைப் பருவத்திற்றனேவிநாயகமூர்த்தியை யன்போடுமாராதிக்கின்றஅற்புதத்தாலே, யானும் உன்தந்தையுஞ் சன்மசாபல்லியரானோம், ஆயினும்நீ கணேசமூர்த்தியைப்பூசைசெய்யுங் காலம்போக, மற்றகாலங்களில்உலகநடைக்குரித்தாகமீளவும்வீட்டில்வந்துசேரலாகாதா,அல்லவெனில்வீட்டிற்றனே அக்கடவுளைவைத்துப்பூசிக்கலாகாதா, ஏதுமின்றிஎங்களைமுழுவது மறந்துவிட்டு,பட்டணத்திற்குவெளியிற்றனே ஒருவர் துணையின்றித் தனியேவாசமாயிருப்பது உனக்குத் தகுமா, இப்போதுன்தந்தையானவர்,நிரோதுவாய்யாவரும்அதிசயிக்கும்படி,சரீரமெங்கனும் புண்கள்கொண்டு, ஊமையாகியுங்குருடாகியுஞ் செவிடாகியுமிருந்து, மதிமயங்கித், தடுமாறி, வீட்டில்வந்து வீழ்ந்தார். அதையான்கண்டவுடன்முடிவற்றதுயரத்தை யடைந்து, உனக்குத்தெரிவிக்கலாமென்றிங்குவந்தேன். தப்புவழியிற்செல்கின்ற பிள்ளைகளைத்

தாய்தந்தையராயினோர் கோபித்தும், அடித்தும், அவர்களை நல்வழிக்குக் கொண்டுவரவேண்டுமென்றுவேதசாஸ்த்ரங்களாற் கூறப்பட்டிருக்கின்ற முறைமையின்படியல்லவா,உன்தந்தையுனைத்தண்டித்தார். அநுநீதானே.தந்தை யாதுசெய்யினும்புத்திரர்கள்பொறுக்கவேண்டுவதுசுபாவமாச்சுதே,அப்பா-இனியேனும்புத்திரர்கட்குரியதருமத்தைநன்குயோசித்து உன்கோபத்தைத்தணித்து, உன் தந்தைபடுகின்ற கொடிய வியாதிகளைப் போக்குதற்கான உபாயம், மந்திரங்களினாலோ, மருந்துக்களினாலோ,மற்றெவ்வகையாலோ, அதனை நீயேயறிந்துதீர்க்கவேண்டும். விவேகத்திற் சிறந்த பிள்ளைகளாயினோர்,தங்கள்தாய்தந்தையர்சொல்லுகின்றவார்த்தையைக்கீழ்ப்படுத்தாமல் மேன்மையாகக்கொள்வரென்று, சகல நூல்களையும்ஆராய்ந்துணர்ந்தபெரியோர்கள்சொல்லுகின்றார்கள்.ஆதலால்,எனதுதுயரந்தீரும்படியாக, யான்சொல்லுகின்ற புத்தியைக்கேளென்று பலவாறுதுக்கித்துக்கெஞ்சிநின்றனள். அவளைவல்லாளன்பார்த்து,அம்மையே - கருப்பத்திற்கருவாகிவளர்கின்ற காலத்திலும்,அதினின்றும் வெளிக்கொண்டு உருவாகிவளர்கின்றகாலத்திலும், சகலவான்ம கோடிகட்கும் உயிர்க்குயிராகி,இருவினையின்படி அவ்வவர்கட்குள்ளபுசிப்புக்களையூட்டித்,தந்தையுந்தாயுமாயிருந்து பாதுகாக்கவல்ல கர்த்தரொவரோ, அவரே இவ்வுலகத்தில் எனக்குரிய தாய்தந்தையன்றி, மற்றையநீங்களா என்பொருட்டு இரக்கங் கொண்டாளத்தக்கவர்கள். ஒருவர்க்கொருவர் இடையூறுநீக்குவதும், ஒருவர்க்கொருவர் நன்மைசெய்வதும், அக்கடவுள் கிருபையைக்கொண்டல்லாமல், தங்கள்தங்கள்வல்லபத்தாலுமாவதுண்டோ. அவ்வவர்கள் செய்தபாவபுண்ணியங்களை அவ்வவர்களேஅநுபவிக்க வேண்டுவதன்றி,மற்றையராற்போக்கவுங்காக்கவுங்கூடுமோ. புத்திரர்கள்,தங்கள்தாய்தந்தையர் அனுமதியின்றித் தனையாளும் அரசனுக்கேவல்புரிவராயின், அவர்களை அத்தாய்தந்தையர் ஒறுக்கவல்லரோ. அவ்வாறொறுத்துத் தாங்களுயிர்பெற்றுவாழினும், அரசன்பணிக்குமெலிவுசெய்தமையால்,அவனாணையிற்றப்பிப்பிழைப்பதுணடோ. சிவபெருமானே கடைக்கண்பார்வைகிடைக்கப் போகின்றதாவென்று சமயம்பார்த்திருக்கத்தக்க பேரருளையுடையவிநாயகமூர்த்தியாலயத்தைத்தள்ளி, என்னையுந்துன்பப்படுத்தி, என்சுவாமியினுடையதிருவுருவத்தையுந் தன்கையாலெடுத்தெறிந்ததினாலே,அவனுக்குநீங்காத தொழுநோய்வந்துநேர்ந்தது. இவ்வியாதியை இச்சன்மத்திலநுபவிப்பதல்லாமல், மறுசன்மத்தினுஞ் சிறிதுநாள்அநுபவித்திருப்பான்.அஃதெவ்வாறெனில்,நீமறுசன்மத்தில்வல்லவராசனுடையமனைவியாகிக்,கமலையென்னும்பெயராவதித்து,இப்போதுஉன்புருடனாகியகல்யாணன்,இவ்வியாதியோடும்உன்புத்திரனாக அவதரித்துத், தக்கனென்னும்பெயர்பெற்றுத்துன்பப்படுவான். அக்காலத்துஅவன்தந்தையாகியவல்லவராசன்மனவருத்தங்கொண்டு,பனனிரண்டுவயதுவரையில் அவ்வியாதிதீரத்தக்க பரிகாரங்கள்அளவற்றதாகச்செய்வான். அவ்வாறுசெய்தும்அதுதீராமையை நோக்கிப்,பின்னர்அவ்வரசனுக்குக்கோபமுண்டாகும். அப்போதுஉன்னையுமவனையுந்துரத்திவிடுவான். பின்னர்நீங்கள் முக்கலமுனிவராலேநன்மைபெறுவீர்கள் போவென்றுசொல்லியனுப்பிவிட்டான். இந்துமதி இவ்வார்த்தைகளைக்கேட்டு,அவன்மனோதிடங்கொண்டுபேசுவதைத்தடுக்கக்கூடாம

ல்,தன்வீட்டிற்சென்று சேர்ந்தனள்.இப்பால்வல்லாளன்மீளவுங்குறைவற்றஅன்போடு விநாயகமூர்த்தியைப்பூசைசெய்துகொண்டிருந்தான்.அவனுறுதிக்கு விநாயகக்கடவுள்சந்தோடங்கொண்டு, தேவகணங்களைக்கூவி,நமதன்பனாகியவல்லாளனை இங்ஙனமழைத்துவரக்கடவீர்களென்ன, அவ்வாறேதேவகணங்கள்விமானத்தைக்கொண்டுபோய், வல்லாளனிருக்குமிடத்தில்நிறுத்தினார்கள். அவ்விமானத்தையவன்பார்த்துக்,கணேசமூர்த்தியினுடைய திருவருட்கு யான் பாத்திரனானேனோ வெனறுதுதித்துச், சாஷ்டாங்கமாகச்சேவித்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்றான். தேவகணங்கள் அவ்வல்லாளனைப்பார்த்து,ஓசர்வவல்லமையுள்ளமகாதவசிரேஷ்டனே விநாயகக்கடவுளுடைய கட்டளையின்படிவிமானங்கொண்டுவந்தோம்,நீ இதன்மீதாரோகணிக்கவேண்டுமென்றுசொல்ல, அவ்வாறேவல்லாளன்ஆனந்தபரவசனாகியேறினான். தேவகணங்கள் ஆந்தரதுந்துபிமுழக்கினார்கள்.சித்தர்கள் சந்திரவட்டக்குடைபிடித்தார்கள். கருடர்கள்வெண்சாமரைவீசினார்கள். கின்னரர் ஆலவட்டமெடுத்தார்கள். தேவர்கள் புட்பவருடம்பொழிந்தார்கள். அரம்பையர் நாட்டியமாடினார்கள். கந்தருவர்சங்கீதம்பாடினார்கள். முனிவர்கள்இருபக்கங்களினுநெருங்கினார்கள். அந்தணர்கள்வேதாகமங்களாற் றுதித்தார்கள். இவ்வாறு வரிசைவரிசையாகப் பலபரிசனங்கள் புடைசூழ்ந்துவரச், சகல சம்பிரமத்துடன் வல்லாளன் ஆகாயமார்க்கமாகச் சென்று, விநாயகலோகத்திற்சேர்ந்து, இகலோகபரலோகவிச்சைகளைவெறுத்து, இந்திரன் முதலிய தேவர்கட்குங் கிடைத்தற்கு அருமையதாகி எக்காலத்தும் இராப்பகலென்பதின்றி ஆதியந்தமத்தியம் அளவிடப்படாதோங்கிய நிரந்தரபோகத்தைப்புசித்துப்,போதவாதனையையொழித்துக், கணேசமூர்த்தியினுடைய திவ்வியசரணாரவிந்தங்களில் இரண்டறக்கலந்துவாழ்ந்தனன். இவ்வற்புதங்களனைத்தையும் அந்நகரத்துள்ளோர்கள்கண்டு,மனங்களித்து,அங்கு மூர்த்திகரித்திருக்கின்ற விநாயகக் கடவுளுக்குச் சிறந்ததபதியர்களைக்கொண்டு ஆலயங்கட்டுவித்து,அந்தணர்களைக்கொண்டு காலங்கடவாமற் பூசனைசெய்வித்து, திருவிழாக்கண் முதலியவைகளுஞ் சிறக்கச்செய்தார்கள். விநாயகசதுர்த்திதோறுஞ் சகலசனங்களும்வந்து பூசனைசெய்து, வேண்டியவரங்களைப்பெற்றுவாழ்ந்திருந்தார்கள். வல்லாளனுக்கு எல்லாவேதனைகளுநீக்கி அத்தினமேமுத்திகொடுத்தருளிய விநாயகமூர்த்திக்குச்,சகலமானபெரியோர்களும் வல்லாள் கணேசரென்று திருநாமந்தரித்துத் துதித்தார்கள். பின்னர்தொழுநோய்கொண்டு துன்பப்படுகின்ற கல்யாணன்,அச்சனனமுழுவது மிக்கதுன்பத்தை யடைந்து,சின்னாட்சென்றபின்பு,அவன்மனைவியாகிய இந்துமதி யானவள் அவனுக்குமுன்னமே மற்றொருசனனமெடுத்துக், கமலையென்னும் பெயராவகித்து,வல்லவராசனுக்கு மனைவியாகியிருக்க,அவளிடத்தில்அன்னோயுடன் புத்திரனாயவதரித்துத், தக்கனென்னும்பெயர்பெற்றுத் துன்புற்றிருக்குங்காலையில்,தன்தாயாகியகமலை முற்சனனத்தில்மனைவியாகவிருந்து அளவற்றதருமாதிகளைச்செய்த பலத்தினாலும், அப்போது தன் குமாரனாயிருந்தவல்லாளன் விநாயகபூசைசெய்து முத்தியடைந்தமகிமையினாலும் முக்கலமுனிவர்மீதுபடிந்துவந்தகாற்றினால் அவன் தொழுநோய்முதலியனவுந்தீர்ந்து,ஒருபிராமணனால்விநாயகமூர்த்தியினுடைய அஷ்டாக்ஷரமந்

திரத்தை உபதேசம்பெற்றுச், கணேசமூர்த்தியைத்தரிசித்து, அவர் பெருங்கருணையாற் பின்னர்முக்கலமுனிவனுடைய திருவடிகளை யடைந்து, அவரால்ஏகாக்ஷரமந்திரத்தையுமுபதேசிக்கப்பெற்றுச்சுக முற்றிருந்தானென்று, விசுவாமித்திரமுனிவர் வீராமராசனுக்குத்திருவாய் மலர்ந்தருளினர்.

கணபதிதுணை.

எட்டாவது.

வீமன்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியை வல்லாள னுபாசித்துமுத்தியடைந்தவரலாற்றைச்சொன்னோம், இப்பால்வீமராச னுபாசித்ததிறத்தைச்சொல்லுவோங்கேட்பீராக. அவ்வீமராசன் விசுவாமித்திரமுனிவரைப் பணிந்தெழுந்து, சுவாமீ - தக்கன்முக்கல முனிவரால் உபதேசம்பெற்றபின்னர் எவ்வாறாயினன், அதனையுந்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, விசுவாமித்திரர் சொல்லுவார். அரசனே எல்லாப்பாக்கியங்களையுந் தரத்தக்க ஏகாக்ஷரமந்திரத்தையுபதேசித்தமுக்கல முனிவரைத், தக்கன்மிக்க அன்புடனே பூசைசெய்து, விடைபெற்றுத், தானுந்தனதுதாயும் அவ்விடத்தினின்றுநீங்கிக், கவுண்டின்னியநகரத்தின் சமீபமான ஓர் குளிர்ந்த நந்தனவனத்தின்கணுள்ள தடாகக்கரையில், திப்பியமாகியும் புராதனமாகியும் ஓர்விநாயகராலய மிருக்கக்கண்டு, அவ்வாலயத்தையடைந்து, கணேசமூர்த்தியினுடைய திருவடிகளைத் தியானித்து, முக்கலமுனிவரா லுபதேசிக்கப்பெற்ற ஏகாக்ஷர மந்திரத்தைப் பன்னிரண்டுவருடம்வரையிற் செபித்துப், பின்னர் திருமஞ்சனம் - புட்பம் - சந்தனம்-தூப்தீபநைவேத்திய முதலிய திரவியங்களைச் சேகரித்து அவ்வாலயத்திலெழுந்தருளியிருக்கின்ற விநாயகமூர்த்தியை இருபத்தொருநாள்பூசித்தான். அந்தஇருபத்தோராநாளிரவில், நாலாஞ்சாமத்தில், அத்தக்கனுடைய சொப்பனத்தில், ஒருமதயானையானது, அதன்றுதிக்கையிற் பூமாலைகொண்டுவந்து, தன்கழுத்திலிட்டு, மீளவுந்தன்னையெடுத்து அதனமுதுகில் வைத்துக்கொண்டு, ஒருபட்டணத்துட் கொண்டு போவதாகக்கண்டு, நித்திரைவிட்டுநீங்கி, மறுநாளுதயத்திற்றனது நித்தியநியமங்களை நிறைவேற்றிக்கொண்டு, தன்தாயாகிய கமலையைச்சேவித்துத், தான்கண்ட சொப்பனத்தைச்சொன்னான். அவளதைக்கேட்டுச்சந்தோஷித்து, அப்பா நமதுசிறுமையாவும்இன்றொழிந்தது, நீஇப்போதேஅவனியாளத்தக்கஅரசனாவையென்றுசொல்லி, இருவருமனமகிழ்ச்சியடைந்து, முன்போலவே விநாயகமந்திரத்தைத்தியானித்துக்கொண்டிருந்தார்கள். இவர்களிவ்வாறிருக்க, அக்கவுண்டின்னியநகரை அரசாக்ஷிசெய்து வந்தசந்திரசேனமகாராசன், அன்றையத்தினம்நிரோதுவாய் இறந்துபோயினன். உடனே அவன்ம

னைவியாகியசுலபையென்பவள்மிகுந்ததுயரங்கொண்டு,என்னுயிருக்கொப்பானவரோ, என்கண்மணிகட் கிணையா னவரோ, அரசர்க்கரசரோ, இப்பூவுலகத்தை யாள்வதைவிட்டுச் சொர்க்கவுலகத்தை யாளுநிமித்தம் என்னைக் கைவிட்டீரோ, தேவாமுதத்தினுஞ் சிறந்த என்பிராண நாயகா, இதுஉமக்குத்தருமமா, கொழுகொம்பற்ற கொடிபோலவும், குளிர்ந்தசலத்தினின்றுநீங்கிய கயல்போலவும், தைலமில்லாத தீபம்போலவும், சூரியவொளியில்லாதநாள்போலவும், என்னை முழுமையுந் துக்கசாகரத்தின்மூழ்கும்படிவிடுத்து,நீர்தெய்வமகளிரோடுஞ்சேர்ந்தீரோ,இதுநீதிதானோ,நானும்மைவேள்வித் தீயின்முன்னர்மாலையிட்ட நாள்முதல், இதுகாறும் எனக்கொரு குறைவுவராமற்காத்துவந்தஉமக்கு,யான்செய்துவந்த வழிபாடுகளில் இப்போதென்னதாழ்ச்சியினைச்செய்தேன், அப்படி ஏதேனுமுண்டாயின் அதனைவாய்விட்டுப்பேசாமல்,என்னைப்பலவிடர்கள் சூழும்படிவிடுத்தீரோ, இஃதுமக்குத்தக்கதா, ஐயையோ, இனிஎன்செய்யப்போகின்றேன் தெய்வமே என்று, தீயில்வீழ்ந்தசெந்தளிர்போலவேற்றுருவாகி விழிகளினின்றும்நீர்த்தாரைகள்பெருகத்தக்கதாய்ப்புலம்பிப்,புருடன்மேல்விழுந்து,முகத்தைமோதிக்கொண்டுந்,தலையையிடித்துக்கொண்டும், வாயிலறைந்துகொண்டுந்,தனங்கள்குழையும்படிமார்பிலடித்துக்கொண்டுங், கைகளைநெரித்துக்கொண்டும், வயிற்றைப் பிசைந்துகொண்டும், இவ்வாறுபதைபதைத்துப், பூமியில்வீழ்ந்து, புரண்டுபுரண்டு,அலறியலறி, ஓ என்புருஷசிகாமணியே, அருவமாயாவதுதோற்றி வியசனப்படவேண்டாமென்று ஓ ராறுதல்சொல்லீரோ, ஓ என்னாசைக்கணவரோ, ஓ என்பிராண வல்லபாவென்று கதறிக்கொண்டிருந்தாள். அவளோடு அமைச்சர்முதலான சகலசனங்களும் மிகுந்ததுயரத்துடன் நெடுநேரம் அழுதுகொண்டிருக்கையில், புரோகிதர்கள் அவர்களையெல்லாங்கையமர்த்தி,உங்கள் சுகத்தைக்குறித்து அழுகின்றீர்களேயன்றி, இறந்தவனடையவேண்டிய சுகத்தையாவரும் நினையாதிருக்கின்றீர்களே, ஏன் வீணிற்புலம்புகின்றீர்கள்,இனி நமதரசனுக்குச்செய்யவேண்டிய கருமாதிகளைச்செய்துமுடியுங்கள், இப்பூமியிற்பிறந்தவர்களில் யாவரிறவாதிருந்தவர்கள், அப்படி இறந்தவர்களோடுகூட இறப்பவரொருவருமில்லையே,வாழ்நாள்முடிவானால் வானுடருமிறப்பதையறியீர்களோ, இறந்தவர்களுக்குச்செய்யத்தக்ககருமங்களைச்செய்து, அவர்களைநற்கதியிற்சேர்க்கின்றவர்களே நல்ல அன்பினராவார்,அதைநடத்தாமற்பொய்ப்பொருளையிச்சித்துப் புலம்புகின்றவர்கள்மெய்ப்பொருளையறியாதவீணர்களேயாகும், விரைவில்காரியத்தைநடத்துவதைப்பாருங்கள், நீங்கள்வியசனப்படுவதினால் ஆகத்தக்கதொன்றுமில்லையென்றுசொல்லித்தேற்ற, அதனாற் சிறிதுதுயரத்தையாற்றியிருந்தார்கள். இப்பால் இறந்திருக்கின்றவரசனுக்குப்புத்திர னில்லாமையால் உன்னமைச்சர்களாகிய மனோரஞ்சனன்-சுமந்துஎன்னுமிருவருள், சுமந்தென்பவன்உங்கள்குலமாயிருத்தலினாலே,அக்கால் அவன் சந்ததியிலிருந்த ஒருவனைக்கொண்டு, சகலகருமங்களையுநடப்பித்துத் தகனஞ்செய்தார்கள் பின்னர்-சுலபைஸ்நானஞ்செய்து,வேப்பிலையருந்தி, அரமனைக்குட்சென்று, தர்ப்பணாதிகளைமுடித்துத், தினக்கிரியைகளைப் பதின்மூன்றுநாள்வரையிற்செய்து, சகலகாரியங்களையு முடித்தபின்பு, அமைச்சர்-புரோ

கிதர்- சோதிடர்-பிராமணர்-மற்றுமந்நகரத்துள்ளசாரியஸ்தர் முதலியோரை ஒற்றரைவிட்டுவரவழைத்து, நம்மைச்சத்துருக்கள் நெருங்காதவண்ணம்,இனி இப்பூமியைத்தாங்கும் புஜபல பராக்கிரமத்தையுடைய ஓரரசனை ஏற்படுத்தக்கடவீர்களென் றுக்கியாபித்தாள். அதை அவ்வமைசசர் முதலாயினோர் கேட்டு ஆலோசித்திருக்கின்ற சமையத்தில், முக்கலமுனிவர்அவ்விடத்தில்வந்து,அச்சபையிலிருக்கின்றவர்களை நோக்கிப்,பட்டத்துயானையைஅலங்கரித்து, அதன்றுதிக்கரத்திற்பூமாலைதந்து தனையவிழ்த்தனுப்புங்கள்,அஃது எவனை மாலையிட்டெடுத்துக்கொண்டுவருகின்றதோ, அவனையே இவ்வுலகாள்வதற்கான அரசாக்கிக்கொள்வோ மென்று கிருபையோடுந் திருவாய்மலர்ந்தெழுந்தருளினர். அதனைச்செவியுற்றயாவரும்வியப்படைந்து,ககனமென்கின்ற பட்டத்துயானையை அலங்கரித்து சுலபைக்கெதிராகநடத்திவந்துநிறுத்த,அவள்தன்கணவன்மார்பிற் றரித்திருந்த பொற்றாமரைமாலையையெடுத்துவந்து,அந்தயானையின்றுதிக்கரத்திற்றந்து,இவ்விராச்சியத்தையாளத்தக்க ஓரரசனைக்கொண்டுவருவையென்றுக்கியாபித்தனள். அதனை யம்மதயானைசெவியுற்று,மலைநடப்பதுபோலத்தான் முன்னதாகநடப்ப, அதன்பின்னர் அமைச்சர்முதலான சகலசனங்களும், முன்னர்தவஞ்செய்தற்குரிய தானமொன்றைக்காணுமாறுபிரமதேவனால் விட்ட தருப்பைச்சக்கரத்தின்பின்சென்ற முனிவர்கூட்டம்போலத், தம்மையாளற்குரியவோரரசனைக்காணுமாறு அதிக விரைவோடுந் தொடர்ந்துசென்றார்கள். அந்தயானையுந், தங்கள்கணவனையன்றிமற்றையவொவ்வகைப்பட்ட பேரழகுள்ளோராய் எதிர்வந்திருக்கினும், அவர்கள் மேற்சிறிதேனுங் கண்ணோக்கஞ்செலுத்தாத கற்பின் மாதர்களைப்போல, அரசாள்வதைவிழைந்து பற்பலர் தன்னெதிரில்வந்து நிற்கினும், அவர்களையெல்லாஞ்சரபத்தையொத்துச்சீறிவிலக்கிக்கொண்டுநடந்தது. அவ்வற்புதத்தையாவருங்கண்டதிசயித்து, இந்தயானைமஹாபராக்கிரமசாலியாகியமன்னவனையேதேடிக்கொண்டுவருமென்றுநிச்சயித்துச், சந்தோஷங்கொண்டு,வீதிகடோறுந்தண்ணீர்தெளித்துத்,துகளடக்கிப், பரிமளமிகுந்தபுட்பச்சரங்களாற்றோரணமுதலியவைகளைக்கட்டி அலங்கரித்தார்கள்.இப்பாலந்தயானையானது கோட்டைவாயிலினின்றுநீங்கி,வீதியெல்லாங்கடந்து, பட்டணத்துக்குவெளியிற்சென்று,வனத்திற்புகுந்து,முக்கலமுனிவருடைய ஆசிரமத்திற்குச்சமீபமாகவசித்திருக்கின்ற தக்கனருகிற்சென்று, அவன்கழுத்திற்பொற்றாமரை மாலையைத்தரித்தது. ஓவீமராசனே இத்தக்கன் தானிருந்தவிடத்தேயிருந்து இத்தன்மைத்தாகிய அரசுரிமையைப் பெற்றானாயின், மூவர்பெருமானாகியும், என்னையாட்கொண்ட முக்கட்பெருமானாகியும், திருமான்முதலியதேவர் பெருமானாகியும், ஒற்றைக்கொம்பேந்திய செல்வப்பெருமானாகியு மிருக்கின்ற விநாயகப்பெருமானைப் பூசைசெய்கின்ற அடியார்க்குக், கிடைத்தற்கரியபாக்கியங்களெவ்வுலகத்திலிருக்கின்றன. இப்பால் அத்தக்கனுக்குமாலையிட்டவுடனே,தேவர்கள் அந்தரதுந்துபிமுழக்கினார்கள். ஆகாயத்தில்புஷபவருஷம்வருஷித்தது.யானையின் பின்னர்வந்தசகலபரிசனங்களும் அவ்வவர்கண்மனத்திருந்தகவலைகளையொழித்துஆனந்தங்கொண்டார்கள்.அமைச்சர்முதலாயினோர்இராசயோக்கியமான ஆடையாபரணாதிகளை யெடுத்தணிந்தார்கள். அந்தணர்களெ

லாம் ஆசீர்வாதஞ்செய்து இருபுறத்தினுமிருந்தார்கள். சேனபதியர்- தூதர்-சாரணர்- முதலாயினோர் வீரகண்டாமணியைத் தரித்திருக்கின்ற பாதங்களில் வணங்கி ஏவலுக் கெதிர் பார்த்தார்கள். இவ்வித சம்பிரமங்களோடுந் தக்கனெழுந்து, அங்குதிருக்கோயில்கொண்டு வீற்றிருக்கின்ற கணேசமூர்த்தியைச்சாஷ்டாங்கமாகச்சேவித்து, அருகிருக்கின்ற அந்தணர்கட்கெல்லாம் பற்பலதிரவியங்களைத் தானஞ்செய்து, தன்னருமைத் தாயை நவரத்னகசிதமாயுள்ள சொர்ன்னச்சிவிகையிலேற்றித், தான்பட்டத்துயானையின்மேல் உதயகாலசூரியன்போல ஆரோகணித்து, அமைச்சர்களிருமருங்கினும் அசுவங்களிலேறிவரவும், தாசிகள்நாட்டியஞ்செய்து நடக்கவும், சமுத்திரகோட்டம்போலப்பேரிகைமுதலான வாத்தியங்கள் முழங்கவும், இன்னுமிவைமுதலான சகலஆடம்பரங்களோடு,மலையினுச்சியிலுதயமாகின்றபூரணசந்திரனைப்போல, யானைமேலோங்கியிருக்கின்ற வெண்குடைநீழலிலிருந்து, அதனைமெல்லமெல்லநடாத்திப், பட்டணத்துள்நுழைந்து,பவனிவந்து,அரமனையிற்சென்று,சொர்னத்திறைற்செய்து சிரோரத்தினங்களாலிழைத்திருக்கின்ற சிங்காதனத்தின்மீதிருந்து, மந்திரத்தலைவர்களைநோக்கிச், குளிர்ந்தசொற்களால் அருகிலழைத்து, என்னையாட்கொண்டருளிய முக்கலமுனிவரைச் சகலசிறப்போடும் இங்ஙனமழைத்து வரக்கடவீர்களென்று கட்டளையிட்டான். அவர்கள் அவ்வாறே விரைந்துசென்று, தவசிரேஷ்டராகிய முக்கலமுனிவரைத் தேரிலேற்றி, ஆடல்பாடல் வாத்தியமுதலிய பலமுழக்கங்களுடனே, அந்நகரத்துள்ள யாவரும் ஆனந்தங்கொள்ளத்தக்கதாக அரமனைக்குள்ளாக எழுந்தருளச் செய்தார்கள். உடனே தக்கனெதிர்சென்றழைத்து, அளவளாவிய அன்போடுஞ்சிறந்த ஆதனத்தின்மீதிருத்தித்,தேய்வைபூசி,அக்ஷதைசாத்தி,மந்திரமலராலருச்சித்துத்,தூபதீபனைவேத்திய முதலியசோடசவுபசாரங்களைச்செய்து, நவரத்னங்களிழைத்தபொற்றட்டில் ஆடையாபரணங்களை நிறைத்துக், கனிவர்க்கங்களைப்பரப்பி,முனிபுங்கவர்க்கெதிரில்வைத்து,சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, பலபரிசனங்கள் தன்னைப்புடைசூழ்ந்திருக்கத்தக்கதாகநின்று, முக்கலமுனிவரைப்பார்த்து, சுவாமிகளுடைய கருணைகடாக்ஷத்தினல்அடியேன் ராஜரீகத்தினைப்பெற்றேன்,அடியேற்குச்சுவாமிகளே விநாயகக்கடவுளன்றிவேறில்லை,சுவாமிகளுடையஅஸ்தத்தை அடியேன் முடிமீதுவைத்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று மிகுந்த கனிவோடு இருகரங்களையுங்கூப்பிச்சிரங்கவிழ்த்து நின்றனன். அதற்குக்கிருபாமூர்த்தியாகிய முக்கலமுனிவர் சந்தோஷித்து, அவ்வாறேதமது அஸ்தத்தை அவன் முடிமீதுவைத்து, உனது நற்குணத்திற்கு யாவரும்பகையாகமாட்டார்களென்று திருவாய்மலர்ந்து, சகலதிரவியங்களும் உன்கைவசத்தாகி, நீ அளவற்ற சந்தோஷத்தொடு வாழ்ந்திருக்கக் கடவதென்று ஆசீர்வதித்து, ஓராதனத்திலிருக்கச்செய்து,மிக்கபேருவகையோடும்இதனைப்போதிப்பதாயினர். அன்பனே-இக்கடல்சூழ்ந்தஉலகத்துள்ளமன்னுயிர்களுக்குணர்த்தியிருக்கின்றவருணச்சிரமதருமங்கள்பலவாகவிருக்கின்றன.அவைகளுள்உனக்குமுக்கியமாகஉணர்த்தவேண்டுவதாகியஅரசநீதிகளைச்சொல்வோங்கேட்பாயாக. அருணோதயமாகஐந்துநாழிகைக்குமுன்னதாகத் துயிலொழித்து, அமளியைவிட்டுநீங்கி, மற்றோரிடத்திலிருந்து,

சரீரத்தைச் சுத்திசெய்து, கொடிதாகிய வல்வினைக் கூட்டங்களைப் பொடிபடுத்தவல்ல அழகியதிருவெண்ணீறுதரித்து, குருசுவாமியையும் வழிபடு கடவுளையும் மனதிற்றியானித்து, பூமிதேவியைப் பார்த்து, என்தாயே, யானுலவுகின்ற போதெல்லாம் உனது திருமேனியி லெனது பாதம் படுகின்ற பிழைகளைப் பொறுத்தருள வேண்டுமென்று இரந்து துதிசெய்து, பின்னர் விநாயக மூர்த்தியைத் தியானித்து, அளவற்ற வேதாகமங்கட்கெல்லா முடிவாயிருக்கின்ற இறைவனே, திருமால் அயன் முதலியதேவர்களாய்ச் சகளீகரித்திருக்கின்றகணேசனே, மனோவாக்குக்காயங்கட்கெட்டாதவனே, உனதுதிருவடித்தாமரைகட்கு உதயகாலவந்தனஞ்செய்கின்றேனென்றும். அரவாபரணனே, சந்திரசேகரனே,திரிபுரதகனனே, உமாபரமேஸ்வரி மணாளனே, உனது பாதாம்புயங்கட்கு உதயகாலவந்தனஞ் செய்கின்றேனென்றும். திரிநேத்திரதாரியே,சகலதத்துவங்கட்கும் ஆதிகாரணியே, பந்தமுத்தியாகிய விரண்டினையும் விளங்கவைத்திருக்கின்ற பார்வதிதேவியே, உனதுசரணாரவிந்தங்கட்குஉதயகாலவந்தனஞ்செய்கின்றேனென்றும். இலக்குமிமணாளனே, திருப்பாற்கடலின்கண்யோகநித்திரைசெய்பவனே, தேவேந்திரனுக்குச் சகோதரனாகிய உபேந்திரனே, உனதுசரோருகத்தாள்களுக்கு உதயகாலவந்தனஞ் செய்கின்றேனென்றும். சகலகருமங்களையும்வழுவின்றிமுடிப்பதற்குக்காரணமாகியிருக்கின்றவனே, உலகவிருளினையுந் தானவர்செய்கின்ற மாயையினையும் நாசஞ்செய்யவல்லவனே, யாவருங்கண்டு தொழும்படியான சூரியபகவானே, உனதுஉபயபாதமலர்களுக்கு உதயகாலவந்தனஞ் செய்கின்றேனென்றும் இவ்வாறுகிரமமாக மற்றைத்தேவர்களையும் முனிவர்களையும் மிகுந்த அன்போடுதுதித்துப், பின்னர்நாடோறுஞ்செய்து வருகின்றநித்தியகருமங்களை விதிப்படிமுடித்து, அமைச்சர்வேதியர்முதலானவர்களோடுமிருந்து அரசாக்ஷிசெய்யுமிடத்து, நீ யறிந்துகொள்ளவேண்டிய கடமையாவது. மைந்தனே- இந்திரன்முதலிய இறைவர்பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில்வீடும், நெறியறிந்து எய்துதற் குரிய மாந்தர்க்கு, உறுதியென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள்நான்கு. அவை அறம்- பொருள்- இன்பம்- வீடு- என்பனவாம். அவற்றுள், ஒரு காலத்து ஒருபொருளால் ஐம்புலனு நுகர்தற் சிறப்புடைத்தாய இன்பத்தினையும், சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாகிய வீட்டினையுந்தருவது, அறமும் பொருளுமாகும். அவ்வறம், மனுமுதலிய நூல்களில், [கடவுள் வாழ்த்து- வான்சிறப்பு- நீத்தார்பெருமை- அறன்வலியுறுத்தல்- இல்வாழ்க்கை- வாழ்க்கைத்துணைநலம்- புதல்வரைப்பெறுதல்- அன்புடைமை- விருந்தோம்பல்- செய்ந்நன்றியறிதல்- நடுவுநிலைமை- அடக்கமுடைமை- ஒழுக்கமுடைமை- பிறனில்விழையாமை- பொறையுடைமை- அழுக்காறாமை- வெஃகாமை- புறங்கூறாமை- பயனிலசொல்லாமை- தீவினையச்சம்- ஒப்புரவறிதல்- ஈகை- புகழ்.] என்னும் இருபத்துமூன்றுவகுப்பினதாகும். பொருள், [இறைமாட்சி- கல்வி- கல்லாமை- கேள்வி-அறிவுடைமை- குற்றங்கடிதல்- பெரியாரைத்துணைக்கோடல்-சிற்றினஞ்சேராமை- தெரிந்துசெயல்வகை- வலியறிதல்- காலமறிதல்- இடனறிதல்- தெரிந்துதெளிதல்- தெரிந்துவினையாடல்- சுற்றந்தழால்- பொச்சாவாமை- செங்

கோன்மை- கொடுங்கோன்மை- வெருவந்தசெய்யாமை- கண்ணோட்டம் ஒற்றாடல்- ஊக்கமுடைமை- மடியின்மை-ஆள்வினையுடைமை-இடுக்கணழியாமை- அமைச்சு- சொல்வன்மை- வினைத்தூய்மை- வினைத்திட்பம் - வினைசெயல்வகை- தூது- மன்னரைச்சேர்ந்தொழுகல்- குறிப்பறிதல்-அவையறிதல்- அவையஞ்சாமை- நாடு- அரண்- பொருள்செயல்வகை- படைமாட்சி- படைச்செருக்கு- நட்பு- நட்பாராய்தல்- பழைமை-தீநட்பு-கூடாநட்பு- பேதைமை- புல்லறிவாண்மை- இகல்- பகைமாட்சி- பகைத்திறந்தெரிதல்- உட்பகை- பெரியாரைப் பிழையாமை- பெண்வழிச்சேறல்- வரைவின்மகளிர்- கள்ளுண்ணாமை- சூது- மருந்து- குடிமை- மானம்- பெருமை- சான்றாண்மை- பண்புடைமை-நன்றியில்செல்வம்-நாணுடைமை- குடிசெயல்வகை- உழவு-நல்குரவு-இரவு-இரவச்சம்- கயமை-} என்னும் எழுபதுவகுப்பினதாகும். இவற்றுள், (கடவுள்வாழ்த்து,— என்பது- மூவர்க்குமுதலாயுள்ள மூர்த்தியை வாழ்த்துதல்.) என்றால்- விருப்பு வெறுப்பு அகன்று, தன்வயத்தனாதல்- தூயவுடம்பினனாதல்- இயற்கை யுணர்வினனாதல்- முற்றுமுணர்தல்- இயல்பாகவே பாசங்களினீங்குதல்- பேரருளுடைமை- முடிவிலாற்ற லுடைமை- வரம்பிலின்ப முடைமை- என்னும் எண்குணத்தோடு, தனக்கொப்பற்றிருக்கின்ற கடவுள்யாதோ, அதன் திருவடிகளை வணங்கல் வேண்டும். இத்தலையாய வறத்தினால், மற்றைப்பொருளும் இன்பமும் மலைபோலவுங் கடல்போலவும் பெருகிவளரும். (வான்சிறப்பு,— என்பது - அக்கடவுளது ஆணையால் உலகமும், அதற்குறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற்கேதுவாகிய மழையினதுசிறப்பு.) என்றால்- வானம் வழங்காதாயின், அறநெறியால்வந்த பொருள்களைத்தக்கார்க்கு உவகையோடு தானங் கொடுத்தலாகிய இல்லறமும், மனம்பொறிவழிப்போகாது நிற்றற்பொருட்டுதவஞ்செய்தலாகிய துறவறமுங் கெடுமாதலால், அவ்வானம் வறுமை யெய்தாதவண்ணம், வேள்விகளையுந் தருமங்களையுஞ் செய்துவரல்வேண்டும். (நீத்தார்பெருமை,— என்பது- முற்றத் துறந்தமுனிவரதுபெருமை.) என்றால், அறமாதி நான்கு பொருள்களையுந்தெரிந்து, பஞ்சேந்திரியங்களை நிக்கிரகித்த முனிவர்கள்- வேதியர்- புலமையோர்- என்னும் இக்கூட்டத்தினரிடத்து அன்பு கூர்ந்திருத்தல்வேண்டும். இவர்கள் ஒரு காற்கோபித்து ஓரழற்பொறியுதிர்ப்பராயின், காத்தருளுகின்ற கடவுளுங்கலக்கமெய்தும். ஆதலால் அப்பெரியோர்களை ஏத்துவதேகடன், அவர்கள்பொறுப்பரென்று அவமதிக்கத்தகாது. குரவர்களையும் பெரியோர்களையும் வேதாகமங்களையும் மேலாகவெண்ணிப் பரவத்தக்கதேயன்றி, ஒளித்தேனும்ஓர் நிந்தனையைக் கருதலாகாது. (அறன் வலியுறுத்தல்,— என்பது- அம்மேலோரால் உணர்த்தப்பட்ட உறுதிப்பொருள் நான்கனுள், அறமானது பொருள் இன்பம் வீடு என்னுமூன்றனையுந்தருவதற்கேதுவாகலால்,அதனைவலியுறுத்திக்கூறுதல்.)என்றால்,செல்வப்பொருளும்,சொர்க்கலோகவின்பமும், முத்திவீடும், ஆகியமூன்றனையுந் தருவதான அறத்தினை, மனவாக்குக்காயமென்கின்ற முக்கரணத்தாலும் ஒன்றுபட்டு, நாடோறும்பரிந்துநடாத்தி வரல்வேண்டும். அதனைநேர்ந்தபோது செய்யாது, பின்னாற் செய்து மெனக்கருதி நழுவவிடலாகாது. அவ்வாறுவிடாமல் உனக்கியன்

றாட்டுஞ்செய்து வருகின்றகாலத்தினும், பிறராக்கம் பொறுமையும்,புல ன்கள் மேற்செல்லுகின்ற அவாவும், அவையேதுவாகப் பிறர்பால்வரும் வெகுளியும், அதுபற்றி வருங்கடுஞ்சொல்லும், ஆகியநான்கனையுங்கடிந் து செய்தல்வேண்டும். அறத்தாலடுக்கும் இன்பமேஇன்பமன்றி, மற்றை யின்பங்களெல்லாந் துன்பத்தினையும் பழியையுந்தோற்றுவிக்கும்,அதனை மறந்தோர்க்கு உடனே எல்லாக்கேடும்வந்து உற்பவிக்கும். (இல்வாழ்க் கை,—என்பது- இல்லறத்தோடுங்கூடிவாழ்தல்.) என்றால்-பிரமசாரி-வா னப்பிரத்தன்-சந்நியாசி ‡ பிதிரர்-குரவர்-தேவர்-விருந்து- ஒக்கல் -பெரி யோர்-மறையோர்-இறந்தோர்- ஏற்போர்- உறுப்பில்லார்-பிணியாளர்-வி ருத்தர்-பாலர்-சிசுக்கள்-மூத்தோர்-என்னுமிவர்களையோம்பி,இல்லறநெறி யை வழுவாமற்செய்தல்வேண்டும். (வாழ்க்கைத்துணைநலம்,— என்பது- அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளதுநன்மை.) என்றால், ஒ ருவன் எய்தும் பொருள்களுள், மனையறத்திற்குத்தக்க நற்குணநற்செய் கைகளை § உடையவளாயுந், தன்னைக்கொண்டவனதுவருவாய்க்குத்தக்க வாழ்க்கையையுடையவளாயுமிருக்கின்ற, இல்லாளின்மேம்பட்ட பொரு ள்கள்யாவையுள,அவளால் மேலானபிரயோசனமும்புகழும் உண்டாவத ன்றிப், பகைவரெதிரில் இடபத்தைப்போல மனக்கோட்டமின்றி நடக்க த்தக்கபெருமிதநடையும்உண்டாகும்,ஆதலால் அத்தன்மைத்தாகியமனை வியோடு உவப்புற்றுவாழ்தல்வேண்டும். (புதல்வரைப்பெறுதல்,—என்ப து-அந்தணர் முதலிய் மூவரானும் இயல்பாக இறுக்கப்படுங்கடன் மூன் றனுள், முனிவர்கடன் கேள்வியானுந், தேவர்கடன் வேள்வியானுந், தெ ன்புலத்தார்கடன் புதல்வரைப்பெறுதலானும் அல்லது, இறுக்கப்படா மையின், அக்கடன் இறுத்தற்பொருட்டு நன்மக்களைப்பெறுதல்.) என்று ல்,புதல்வ ரானவர்,பிறப்பேழின்கண்ணும் பெற்றோனுக்குத் தீவினைவள ராதுதேய்த்தற்குக் காரணமாகிய நல்வினைகளையுந், தென்புலத்தார்க்கு ரிய கடன்களைச்சாலமுடிக்கு மாண்பினையும் உடையோராதலால், குற்ற மற்றதவங்களைச் செய்தேனும் புதல்வரைப் பெறல்வேண்டும். பின்னர் அப்புதல்வரைக்கற்றோர் அவையத்தின்கண், அவரினு மிக்கிருக்குமாறு கல்வியுடையவராக்கல் வேண்டும். (அன்புடைமை,—என்பது - இல்ல றம் இனிது நடாத்தலும், பிறவுயிர்கண்மேல் அருள்பிறத்தலுமாம்.) எ ன்றால், யாக்கையகத்தின்கணின்று,இல்லறத்திற்குறுப்பாகிய அன்புடை யரல்லாதார்க்குப்,புறத்தின்கண், இடனும்பொருளும்ஏவல்செய்வாருமா ன உறுப்புக்களெல்லாம், அவ்வறஞ்செய்தற்கண் என்ன உதவியைச்செ ய்யும். ஒருவன்சோர்வுற்றகாலத்தும், அவ்வன்பின்வழுவா திருத்தல்வே ண்டும், அவ்வாறிருத்தலின்ல் நொதுமலும்பகையும் உறவாகும்,அளவிற

---

‡ பிதிரராவார்,படைப்புக்காலத்து அயனாற்படைக்கப்பட்டதோர்க ளுட்சாதி.அவர்க்கிடந்தென்றிசையாகலின்தென்புலத்தாரொன்றுகூறுவர்

§ நற்குணங்களாவன,துறந்தார்ப்பேணலும்- விருந்தயர்தலும்- வறி யார் மாட்டருளுடைமையு முதலாயின. நற்செய்கைகளாவன,வாழ்க்கை க்குவேண்டும்பொருள்கள் அறிந்துகடைப்பிடித்தலும்- அட்டிற்றொழில் வன்மையும்- ஒப்புரவுசெய்தலுமுதலாயின.

ந்தசிறப்பெய்தும், மேற்கூறியவாழ்க்கைத்துணையையும் மைந்தரையுந், தொடர்பின்வளர்த்துவரும். (விருந்தோம்பல்,—என்பது-இருவகை * விருந்தினரையும்பேணி அவர்க்குபகாரஞ்செய்தல்.) என்றால், யான்வேண்டினோர்,விருந்தினரைச்சேய்மையிற்கண்டுழிஇன்முகமும், அவர்பற்றிநண்ணியவழி இன்சொல்லும், பின்னர் உடன்பட்டவழி வஞ்சங்கலவாதநன்றாற்றலும் என, இன்றியமையாத இம்மூன்றனுள், முதற்கண் இன்முகம் வேண்டும். அஃது இல்லாவிடின், மோந்துழி யல்லது வாடாத அனிச்சம் பூவினும் விருந்தினர் மெலியராதலால், அவர் சேய்மைக்கண்ணே வாடிநீங்குவர். (செய்ந்நன்றியறிதல்,—என்பது - தனக்குப் பிறர்செய்தநன்றியை மறவாமை.) என்றால்,இவர்க்கு இதுசெய்யின் இன்னதுபயக்குமென்று ஆராய்தலில்லாமல், ஒருவனுக்கு இறுதிவந்த எல்லைக்கண்செய்த உபகாரந், தன்னைநோக்கச் சிறிதாயிருந்த தாயினும், அக்காலத்தைநோக்க அதற்கோரளவில்லை. அல்லதுபயனாலேனுங், காரணத்தாலேனும்,வருந்தும்பதத்திற்செய்த உதவியாயின், அதனை உலகத்தினும் பெரிதாக விரும்பிமதித்தல், ஏற்போரதுகடமையாம். மேலும்-தமக்கு முன்னொரு நன்மைசெய்தவர், பின் கொன்றாலொத்த இன்னாதவற்றைச்செய்தாராயினும்,அவர்முன்செய்தநன்மையைமதித்துப்,பின்செய்ததீமையைச் செய்த பொழுதேமறத்தல்வேண்டும், இல்லையாயின் அந்தணரைக்கொன்ற பிழையினும், மேலானபிழைமலைபோலப்பெருகும். (நடுவுநிலைமை,—என்பது- அறத்தின்வழுவாதுஒப்பநிற்குநிலைமை.) என்றால், பகை - நொதுமல் - நண்பு - என்னு மிம்மூன்று பகுதியினுஞ், சமனாகநின்று நோக்கு நிலைமையுடையார்க்குச்,செல்வப்பேறும் மக்கட்பேறும்உண்டாகும், இவ்விரண்டுபேறும், அம்மக்கள்வழியுள்ளார்க்கும்அழிவின்றிநிலைத்திருக்கும். அந்நிலைமையினையடையாராயின்,அஃது அவர்க்குத்தீவினையாற் கேடும், நல்வினையாற்பெருக்கமுமாக, முன்னர்அமைத்திருக்கின்றபயன்களைப் போக்கி, இடையில்வேறுவேறானபெரும்பிழைகள்வந்துபொருந்தும்.(அடக்கமுடைமை,— என்பது - முக்கரணங்களுந் தீநெறிக்கட் செல்லாது அடங்குதலுடையனாதல்.) என்றால், இல்லறத்திலிருந்து, எல்லாப்போகங்களையும் பஞ்சேந்திரியங்கட்கு விருந்தூட்டிவாழ்கின்ற காலத்தினும், மெய்- மொழி- மனம்- ஆகியமூன்றனையும், அவ்விந்திரியங்களின் வழிச் செல்லவிடாமல் அடக்கினோர், எழுவகைப்பிறவியினும்நல்லபயனையடைவர், அவர் அப்பிறவிகடோறுஞ்செய்து வருகின்றவினைகளெல்லாம்நல்வினையேயாகும், எல்லாத்துன்பங்களும் ஒழியும், தருமதேவதையும் அடுக்கும், சொர்க்கலோகத்தினையும் அடைவர். (ஒழுக்கமுடைமை,—என்பது-தத்தம்வருணத்திற்கும் நிலைமைக்கும் ஓதப்பட்டஒழுக்கத்தினை யுடையராதல்.) என்றால், தாழ்ந்தவருணத்துதித்தவராயினும் ஒழுக்கமுடையாராயின், உயர்ந்தவராவர். உயர்ந்தகுலத்திற்பிறந்தாராயினும் ஒழுக்கமில்லாராயின் இழிந்தவராவர். ஆதலால் அவ்வொழுக்கத்தினை எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாகியஉயிரினும்மேலாக எண்ணிப் பாதுகாத்தல்வேண்

* விருந்தினர்என்பது,புதியராய்வந்தவர்.அவர்பண்டறிவுண்மையிற் குறித்துவந்தாரும்,அஃதின்மையிற்குறியாதுவந்தாரும்,என இருவகையர்.

டும், அஃது தன்னையடுத்தோர்க்குத் துணையாகச்சூழ்ந்து, எல்லாச் சிறப்பினையும் இன்பத்தினையுஞ் சுரபபிக்கும், தன்னைவழுக்கி விட்டோர்க்கு இழுக்கினைத்தரும். (பிறனில்விழையாமை,—என்பது - காமமயக்கத்தாற்பிறனுடைய இல்லாளைவிரும்பாமை.) என்றால், பிறனுக்குப்பொருளாயுள்ள தன்மையையுடையாளைக் காதலித் தொழுகுகின்ற அறிவினர்களும், வரைவின்மகளிரோடும் இழிகுல மகளிரோடுங்கூடி இன்பத்தினை நுகர்வாரும், அறமும்பொருளும் இழத்தலேயன்றி, அச்சத்தாற்றாங் கருதிய இன்பத்தையும் இழக்கின்றாராதலால், பிறனில்லாளைக்காதலிக்குந்தீங்கினைக்கைவிடல்வேண்டும், இல்லாவிடின் பகை-பாவம்-அச்சம்-குடிப்பழி- என்னு நான்கு குற்றமும் ஒருக்காலு நீங்காவாம், எல்லாப்பெருமைகளுமழியும். அத்தீமையினையொழிந்தோர்கள், அறம்- பொருள்- இன்பம்-என்னுமூன்றினோடுங்கூடிவாழ்வர், ஓர்விளையாட்டால்அதனைக்கனவின்கண்கருதுவராயினும்,எல்லாத்தீங்கும் வந்தெய்தும்.(பொறையுடைமை,— என்பது- ஒருவன் தமக்குமிகைசெய்யின் அதனைத்தாமும் அவன்கட்செய்யாது பொறுத்தலையுடையராதல்.) என்றால்- ஒருவன்காரணத்தாலேனும்,மடமையாலேனுந், தாம்வெறுக்கும்படியாகச் செய்தபிழையைப்பொறுப்பதே பேரறமாகும். தமக்குத்தீங்குசெய்தவனை யொறுத்தார்க்கு உண்டாவது, கருதியதுமுடித்தேமெனத் தருக்கியிருக்கும் பொய்யின்பமாகிய அவ்வொருநாளையின்பமேயன்றி, அதனைப்பொறுத்தார்க்கு உலகமழியுமளவும் உண்டாகும் புகழு நிறைவும் அவருக்கில்லை. அறிவுடையாரும் மகிழ்ச்சிகொண்டு, பொறையுடையாரைப் பொன்போலப் பொதிந்துகொள்வர். மிகைசெய்தவனைப் பகைசெய்வதால் வருவதொன்றுமில்லையாதலால், பொறுமையை உயிர்த்துணையாக எண்ணல்வேண்டும். († அழுக்காறாமை,—என்பது- பொறாமைசெய்யாமை.) என்றால், ஒருவன்தனதுநெஞ்சத்தின்கண் அழுக்காறென்னும்பெரும்பிழையையுடையானாயின், அது அவனுக்குரியவொழுக்கநெறிகளைக்கெடுக்கும், எல்லாப்பொருள்களையும்ஒழிக்கும், இம்மைக்கட்செல்வத்தைக்கெடுப்பதன்றி, அவன்சுற்றத்தினர்க்கும்,உணப்படுவனஉடுக்கப்படுவனவின்றிக்கெடுத்து மறுமைக்கண்நரகத்திற்செலுத்திவிடும்.ஆதலால், அவ்வழுக்காறென்னும் பெரும்பகையைத்தேவர்களிடத்துஞ்செலுத்தாதிருத்தல்வேண்டும்.(வெஃகாமை,— என்பது-பிறர்க்குரியபொருளை வெளவக்கருதாமை.)என்றால், பிறர்க்குரியனகோடல் நமக்கு அறன் அன்றென்று நடுவுநிலைமையின்றி, அவர்நன்பொருளை ஒருவன்கவரக் கருத்துறுவனாயின், அக்கருத்து அப்பொழுதே அவனுக்குப்பலகுற்றங்களைக்கொடுத்து, அவன்குடியையுங்கெடச்செய்யும்,என்றும்அழியாதபெருந்துன்பத்தினைவிளைக்கும்,வசையுற்றபழிச்சொற்களையும்வளர்க்கும்,பழமையாயுள்ளநீரைப்புதியவெள்ளங்கொண்டுபோவதுபோல,அவனுக்கு முன்னுள்ளபொருள்களும் அழிந்துபோம். (புறங்கூறாமை,—என்பது- காணாதவழிப் பிறரை இகழ்ந்துரையா

---

† அழுக்காறுஎன்பதொருசொல். அச்சொல் - பின்னழுக்காற்றைச் செய்யாமையென்னும்பொருள்பட,எதிர்மறையாகாரமும்மகரவைகாரவிகுதியும்பெற்று, அழுக்காறாமையெனநின்றது.

மை.) என்றால்-ஒருவன்எந்நாளும்அறமென்பதைக்கொன்றுபாவங்களைச் செய்வானாயினுந், தம்மெதிர்நின்று மாளவுரைத்தானாயினும், அவனைக்காணாதவழிஇகழ்ந்துரைப்பதைமறந்துஞ்செய்யாதிருத்தல்வேண்டும், செய்வாராயின்,சுற்றத்தினர்பிறிவார், நட்பினர்நாடார், யாவரும் நேர்நின்றுவசைகூறுவர். (பயனிலசொல்லாமை,—என்பது- தமக்கும் பிறர்க்கும் அறம்பொருளின்பமாகிய பயன்களுள், ஒன்றுபயவாத சொற்களைச் சொல்லாமை.)என்றால்-பயனிலவாகியபொருள்களைஒருவன்விரித்துரைப்பானாயின், அஃது அறிவுடையார்க்குவெறுப்பைச்செய்வதன்றி,எல்லாராலும் இகழ்ந்துநகைக்கப்படும், வெளிற்றறிவன் என்னும்பெயரையுண்டாக்கும் விழுப்பத்தினையும் மதிப்பினையு நீக்கிவிடும், அறமுதலியநான்கு உறுதிப்பொருள்களும்பயக்காது.ஆதலால்யாவரிடத்தும்பயனிலசொல்லாமை வேண்டும். (தீவினையச்சம்,—என்பது-பாவங்களாயின செய்தற்குஅஞ்சுதல்.) என்றால், இப்பூவுலகத்தின்கண், பலபகைகட்குந்தப்பிப்பிழைத்தல் எளிதாகுந், தீவினைப்பகையானது, எக்கதியிற்செல்லினும் பின்தொடர்ந்து, நன்றென்பனவனைத்தையுங்கொன்று, அருந்துயரைப் பலவாறளிக்கும்.ஆதலால்கொடியதீவினையால்யாதொன்றுஞ் செய்யாதிருத்தல்வேண்டும். (ஒப்புரவறிதல்,— என்பது- உலகநடையினை யறிந்துசெய்தல்.) என்றால், ஒருவன்தனதுமுயற்சியாற் பெருக்கியபொருள்களை யெல்லாம், ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங்குளம் நீர்நிறைந்தாற்போலும், பயன்படுமரம் ஊர்நடுவேபழுத்தாற்போலும், யாவர்மாட்டுஞ்செலுத்தி ஒப்புரவினிற்றல்வேண்டும். அவ்வொப்புரவுசெய்தலால் அவனுக்குப் பொருட்கேடுவருமாயினும், அக்கேடுதன்னைவிற்றாயினுங்கொள்ளுந் தகுதியையுடையது. (ஈகை,— என்பது- வறியராயேற்றார்க்கு மாற்றாதுகொடுத்தல்.) என்றால், ஒருவன்தன்னிடத்தில்இரக்கவந்தானாயின், அவன்வீணிற்செல்லயான் இதுபொழுதுபொருளுடையேனல்லேன் எனக்கரப்பாற்சொல்லுஞ்சொல்லையுரையாது, அவன்இரப்பினையிரப்புதலும், யான்வறியேனென்றுசொல்லும் இளிவரவைபிறர்பாற்கூறுகவென்று இரப்பினும், அதனையவ்வாறுகூறாதுஇரக்கமோடீதலும்,இரப்பான்இலனென்றுசொல்வதன்முன்குறிப்பறிந்தீதலும், அதுபோதாமைபற்றிப்பின்னும்பிறனொருவன்பாற்சென்று அவனுரையாவகைகொடுத்தலும், எக்காலத்தும் வறியனென்னுவகைஅளவின்றியளித்தலும்,ஆகிய இவ்வைவகை ஈகையும், ஒன்றுக்கொன்றுமேலானபுகழோடுவிளங்கிநிற்கும். அன்றியும்- இவன்நலமிகுத்தசெல்வத்தைப்பெற்றுந் தரித்திரரைக்காக்குந்தன்மைஇலன்,அறமாதிபுருஷார்த்தங்களுமிலனென்று பிறர்கூறும் பழியுரைக்கஞ்சியேனும், புகழும்பிரயோசனமும் வேண்டினேன்,இரப்பானைவறியானென்றுஅவைமதிக்காது தனதுஆக்கையையு மளித்தல்வேண்டும். (புகழ்,— என்பது - இல்வாழ்க்கைமுதல் ஈகையீறாகச்சொல்லப்பட்ட இல்லறத்தின்வழுவாதார்க்குஇம்மைப்பயனாகி, இவ்வுலகத்தின்கண் இகழ்ந்து இறவாதுநிற்குங்கீர்த்தி.) என்றால், பூதவுடம்பிறக்கினும் பூதலமழியுங்காறும் புகழுடம்பிருக்கு மாதலால், அப்புகழுடம்போடு வறியார்க்குவரையாதுகொடுக்குங்கொடையால்உண்டாகின்றசெல்வத்தைப்பெற்றுவாழும் பேற்றினையுடையவரோ,வான்செல்வத்தையுந்தமக்குக்கீழாக்கு நீர்மையையுடையார். (இறையாட்சி,

—என்பது,அரசனதுநற்குண நற்செய்கைகள்.) என்றால், மேற்கூறிய அறத்தின்வழியால்,தனதுஒருகுடையின்கண்கடல்சூழ்ந்த வுலகமுழுவதும் ஆளவேண்டியஅரசன்,அமைச்சு-நாடு- அரண்- பொருள்-படை-நட்பு-என்னும் இவ்வாறங்கங்களையும்,அவன்யாக்கைக்குற்ற உறுப்புக்களையொப்பமதிக்கக்கடவன். அன்றியும்-ஓர்வினையின்கண் அஞ்சாமைநிற்றல்,அவ்வினைசெய்வோர்க்களித்தல், அவ்வினை செய்தற்கண்மனவெழுச்சியுறல், அவ்வினையினைவிரைவின்முடித்தல், ஆண்மையுறல்,கொலையாதிகளைநீக்கல்,வீரத்தின்வழுவாதமானமுடைமை-முதலியகுணங்களெல்லாம், அவ்வரசனுக்குஇயல்பாகஇருத்தல்வேண்டும்.குடிகள்தளர்வுற்றகாலத்தில்,அவர்களிடத்திலிருந்துதான்கொள்கின்றஆறிலொன்றாகியபொருளைக்கொள்ளாது விடுத்து,முறைசொல்வார்க்கும்0குறைசொல்வார்க்கும்,தடையற்றதனதுகாட்சியையளித்து,யாவரிடத்துங்குளிர்ந்தஇன்சொற்களைக்காட்டித்,தீயனகண்டால்நெருங்கி இடித்துச்சொல்லுந்துணையாந்தன்மையையுடையார்கூறும் வன்சொற்களையும்பொறுத்துத்,தனக்கோதிய + அறத்தின்கண்வழுவாதொழுகிநிற்றல்வேண்டும். மேலும் அவ்வரசன்போர்முகத்திற்பகைவரைவென்று,திறைகொண்டு,தன்னாட்டினையளித்து,மணி-பொன்-நெல்-முதலாயினபொருள்களையீட்டி,அப்பொருளைப்பகைவர்-கள்வர்-சுற்றத்தார்-வினைசெய்வார்-முதலாயினோர்கொள்ளாமற்காத்து, அறமாதி § மூன்றின்பொருட்டாகவிடுத்துத்,தனதுசெங்கோலைவளர்ப்பது மாட்சிமையாகும். (கல்வி,—என்பது-அவ்வரசன்தான்கற்றற்குரிய நூல்களைக்கற்றல்.) என்றால், அறநூலையும், நீதிநூலையுந்,தேர்-கரி-பரி-படைக்கலம்-என்னு மிவற்றினூல்களையும், ஐயந்திரிபறக்கற்று,அவைகளைக்கற்றிருக்கின்றபண்பினரோடுநாளும்அளவளாவி,அவைசொல்லுகின்றநெறிக்கண்ணேநிற்றல்வேண்டும். (கல்லாமை,— என்பது- கற்றலைச் செய்யாமை.) என்றால், உடலோடொழியுஞ் சாதியின்கண், உயர்ந்தாராயினுந், தாழ்ந்தா ராயினும், உயிரோடொழியுங்கல்வி ‡ யுயர்ச்சியாற்சிறப்பினையடையார். மற்றெவ்வ

---

0 முறைசொல்வார், வலியரான்மெலிவெய்தினோர். குறைசொல்வார், வறுமையுற்றிரந்தார் எனக்கொள்க.

+ அவ்வறமாவது, ஓதல்-வேட்டல்- ஈதல்-என்னும் பொதுத்தொழிலினும், படைக்கலம்பயிறல்- பல்லுயிரோம்பல்-பகைத்திறந்தெறுதல்-என்னுஞ்சிறப்புத்தொழிலினும், வழுவாதுநிற்றலாம்.

§ கடவுளர்- அந்தணர்- வறியோர்- என்னுமிவர்க்கும், புகழிற்குங் கொடுத்தலை, அறப்பொருட்டாகவும், யானை-குதிரை-படை-நாடு- அரண் என்னு மிவற்றிற்கும், பகையோடுகூடலிற் பிரிக்கப்படுவார்க்குங்கொடுத்தலைப், பொருட்பொருட்டாகவும், மண்டபம்-வாவி- செய்குன்று - இளமரக்கா-முதலியசெய்தற்கும், ஐம்புலன்களானுகர்வனவற்றிற்குங் கொடுத்தலை, இன்பப்பொருட்டாகவுங் கொள்க.

‡ உயிரோடொழியுங்கல்வியாவது, அறமுதலாயுள்ளஉறுதிப்பொருள்களையுணர்த்தாது, பிறபொருள்களை யுணர்த்துவதாம். உயிரோடொழியாக்கல்வியாவது, அவ்வுறுதிப்பொருள்களை யுணர்த்திப், பிறபொருள்களையொழிப்பதாம்.

கைக்கல்வியாற்சிறப்படைவாரெனில், தமக்கோரகக்கண்ணாகித், தாம்புக்கும் எக்கதியின்கண்ணுந் தொடருந்தன்மையனவாகிய கல்வியினாற் சிறப்படைவராதலால், இத்தன்மைத்தாகிய பெருங்கல்வியைக் கல்லாமையென்னுந்தொழிலினை ஒருவன்பற்றறவிடல்வேண்டும். (கேள்வி,—என்பது-கேட்கப்படு நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல்.) என்றால், கசடறக்கற்றகல்வியோடுங், குற்றமற்ற ஒழுக்கம் § உடையார்வாய்ச்சொல்லானது, ஒருவன்வறுமையாலேனும் அறிவின்மையாலேனுந் தளர்வெய்தி நெஞ்சழியுங்காலத்து, உறுதிபயத்தற்கு உற்றதுணையாயும், எக்காலத்துங் கற்றவுணர்வினைவளர்ப்பதாயும், இறுதியற்றஇன்பத்தைபிட்டுவதாயுமிருக்கின்றதால், அதனைக் கேட்டல்வேண்டும். (அறிவுடைமை,— என்பது-கல்விகேள்விகளினாய அறிவோடு உண்மையறிவுடையனாதல்.) என்றால், யாவர்க்குங்குணங்கள் ¶ மூன்றும் மாறிமாறிவருதல் உண்மையாதலின், இழிந்தவன் உயர்ந்தபொருளை யியம்பினானாயினும், உயர்ந்தவன் இழிந்தபொருளை உரைத்தானாயினும், அப்பொருளின்கணுள்ள பயனை ஆராய்ந்து, கொள்ளவேண்டுவனவற்றைக் கொண்டு, ஒழிக்கவேண்டுவனவற்றையொழித்தல்வேண்டும். பிறராற் கூறப்படுஞ்சொற்கள் வழுவுள்ளனவாயினும், இனிது விளங்காதன வாயினும், உள்ளபயனைக் கொண்டொழித்துத், தான்சொல்லுஞ் சொற்கள் அரியபொருளினவாயினுங், கேட்போர்க்கு எளிதாய்விளங்குமாறு, அவர்மனங்கொளச் சொல்லல்வேண்டும். அன்றியும் உலகத்தையெல்லாம் யான்நியமித்தலால், என்னைநியமிப்பார் இல்லையெனக்கருதித், தானினைத்த வாறே யொழுகிற்பாவமும் பழியுமாகலால், உலகம் யாதொரு வகையால் ஒழுகுகின்றதோ, அவ்வுலகத்தோடு மேவித்தானும் அவ்வாறொழுகிப், பின்னர்வரத்தக்கதாகிய அழிவினை முன்னரறிந்துகாத்துப், பழிபாவமுதலானவைகட் கஞ்சிக், குதிரையைநிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல, மனத்தைப்புலமறிந்து செலுத்துவது அறிவாதலின், அவ்வறிவால்மனத்தை அதுசென்றபுலத்தின்கட்செல்லவிடாது, அப்புலத்தினது நன்மைதீமைகளை ஆராய்ந்து, தீயதனினின்று நீக்கி, நல்ல தன்கட்செலுத்தல் வேண்டும். உலகத்துள் உயர்ந்தவராயினாரைத் தழுவிக்கொள்ளுங்காலத்து, அவரோடு - ஒருநிலைமையாயிருக்கின்ற கோட்டுப்பூவைப்போல விருப்பதன்றி, முன்னர் மலர்தலும்பின்னர்க் கூம்புதலுமான வேறுபாட்டினையுடைய கயப்பூப் போலச், செல்வமிருந்தகாலத்து மலர்தலும், வறுமையெய்திய காலத்துக்கூம்பலுமா

---

§ கல்வியுடையாரேனும் ஒழுக்கமில்லாதார் அறிவிலராகலின், அவர்வாய்ச் சொற்கேட்கப்படாதென்பது தோன்ற, ஒழுக்கமுடையார் வாய்ச்சொலலென்றார்.

¶ குணங்கள், சாத்துவீகம்- இராசதம்- தாமதம்- எனமூன்றும். அவற்றுள், ஞானம்- அருள்- தவம்- பொறை- வாய்மை-மேன்மை-மோனம்- ஐம்பொறியடக்கல்- எனவெட்டுஞ்சாத்துவீகம். மனவூக்கம்- ஞானம்- வீரம்-தவம்- தருமம்- தானம்- கல்வி- கேள்வி-எனவெட்டும்- இராசதம். பேருண்டி- நெடுந்துயில்- சோம்பு- நீதிவழு-ஒழுக்கவழு- வஞ்சம்-மறதி- பொய்- கோபம்-காமம்-கொலை-இவைகளதாமதம்.

ண, அறிவின்மையை யொழித்தல்வேண்டும். (குற்றங்கடிதல்,— என்பது- எல்லாக்குற்றங்களையும் அரசன் தன்கணிகழாமற்கடிதல்.) என்றால், அருந்தவர்- தாய்தந்தையர்- முன்னோர்- அந்தணர்- சான்றோர்- என்னுமிவர்க ளிடத்தில், வணக்கமின்மையும், செருக்கும், வேண்டும் வழிப்பொருள் கொடாமையும், வெகுளியும், காமமும், கடும்பற்றுள்ளமும், ஆகிய இக்குணங்களை யெல்லாங் கடிதல்வேண்டும். ஒருவன் தன்குற்றங்கடியாதவழிப், பிறர்குற்றங்கடிதல் பெருங்குற்றமாதலால், முன்னர்தன்குறறத்தினைக்கண்டுகடிந்து, பின்னர்பிறர்குற்றங்களைக்களைதல்வேண்டும். சிறிதேனுங் குற்றமபுரிவனாயின், அதனால் அவன்பெரியசெல்வமானது, எரிமுகத்துநின்ற வைக்குவைபோல அழிந்துவிடுவதன்றி, அதுபகைவர்க்கு இலாபத்தை யுண்டாக்கும், முனியாதவரானு முனிவிக்கும், முற்றும்பெருநோயையுழப்பிக்கும். அன்றியும் ஒருவன் தான்காதலித்த பொருள்களையனுபவிக்குங்கால், அக்காதல் பகைவரறியாதவண்ணம் அநுபவித்து, எஞ்ஞான்றுந்தன்னை நன்குமதித்துவியவாது, தனக்குநன்மைபயவாதவினைகளைமதத்தான் முடிக்காதிருக்கின் +,அவனுக்குவென்றியும்- புகழும்-விழுப்பமும்- உண்டாகும். (பெரியாரைத்துணைக்கோடல்,— என்பது- அரசன்-தீநெறிவிலக்கிநன்னெறிசெலுத்தும்பேரறிவுடையாரைத், தனக்குத்துணையாகக்கோடல்.) என்றால், அறத்தினது நுண்மையையறிந்து, நூலினியல்பும் உலகினியல்புமாகிய விரண்டனையுந்தெரிவிக்கவல்லாராகி, சீலம்- உறுதி- ஆயுள்- என்னு மிவைகளின் முதிர்ந்தோரை, அரசன்தனக்குத்துணையாகக்கொண்டு, அவரைத்தன்னினுஞ் சிறந்தாராகவெண்ணி, அவர்இயம்புநெறியே நிற்றல்வேண்டும். மழையின்மிகுதி- மழையின்மை- காற்று- தீ- பிணி- யென்னுந் தெய்வத்தால் வருந்துன்பங்களை உற்பாதங்களால்அறிந்து, கடவுளரையுந்தக்கோரையு நோக்கிச்செய்யுஞ் சாந்திகளால் நீக்கிவைப்பாரும், பகைவர்- கள்வர்- சுற்றத்தார்- வினைசெய்வார்- என்னுமக்களால்வருந்துன்பங்களைக், குணம்-இங்கிதம்- ¶ ஆகாரம்- செயல்- என்பனவற்றாலறிந்து, சாம- பேத-தான- தண்டங்களாகிய, நால்வகையுபாயத்தால் விலக்கிவைப்பாரும், அப்பெரியோராதலால், அவரதுதுணையேசிறந்ததுணையாகும்.(சிற்றினஞ்சேராமை,— என்பது-சிறியவினத்தைப்பொருந்தாமை.) என்றால்,ஒருவன்-நல்லவினைக்குநற்பயனுந்தீயவினைக்குத் தீப்பயனும் இல்லையென்கின்ற அறிவிலார்களையும்,விடர்- தூர்த்தர்- நடர்- முதலியகுழுவினரையுஞ் சேர்ந்தொழுகுவனாயின்,இ

+ அறிந்தவழி, அவைவாயிலாகப்புகுந்து வஞ்சிப்பாராகலின்,அறியாதவண்ணம் அநுபவித்தென்றும். தன்னைவியந்துழி, இடமும்- காலமும்- வலியும்- அறியப்படாமையானும், அறனும்- பொருளும்- இகழப்படுதலானும், எஞ்ஞான்றும் வியவற்கவென்றும். கருதியதுமுடித்தே விடுவலென்று அறம்பொருளின்பங்கள் பயவாவினைகளை நயப்பின், அவற்றாற்பாவமும்- பழியும்- கேடும்- வருமாகலின், அவற்றைமதத்தான்முடிக்கற்க வென்றுங்கூறினார்.

¶ இங்கிதம், குறிப்பால்நிகழும் உறுப்பின்றொழில். ஆகாரம், குறிப்பின்றிநிகழும் வேறுபாடு.

ம்மைமறுமைப்பயனோடு புகழையுமிழப்பானாதலால், எஞ்ஞான்றுஞ் சிற்றினத்தைச் சேராதிருத்தல்வேண்டும். (தெரிந்துசெயல்வகை,— என்பது- அரசன் தான்செய்யும்வினைகளை ஆராய்ந்துசெய்யுந்திறம்.) என்றால், ஓர்வினையைச்செய்யும்பொழுதே, அவ்வினைக்கு அழிக்கும் பொருளுக்குப்பின்வரும் ஆக்கம்மேலாதலும், அவ்வழிபொருளுக்குஅவ்வாக்கம் ஒத்திருத்தலும் ஆகிய இரண்டிலொன்று உறுவதாயின், அவ்வினையைத்தெரிந்தவினத்தோடும் ஆராய்ந்து, பின்னர்தானுந் தனித்தெண்ணிச் செய்தல்வேண்டும். வலியுங்- காலமும்- இடனுமறியாது, பிறர்மண் கொள்வான் சென்று, தன்மண்ணுமிழத்தல்போல, மேலெய்தக்கடவதாகியத்தினை நோக்கி, முன்னெய்திநின்ற முதலையும் இழத்தற்சேதுவாய வினையைச் செய்யாதிருத்தல்வேண்டும். அன்றியும்-பகைவர்மேற்செல்லுங்கால், வலி- காலம்- இடம்- என்னுமிவைகளால், தனக்கும்அப்பகைவர்க்கும் உள்ளநிலைமைகளும், வினைதொடங்கும்பண்பும், அதற்குவரும் இடையூறுகளும், அவற்றைவிலக்குவதும், பின்னர் வெல்லுவதும், அதனாற் பெறும்பயனும், ஆகிய இவையனைத்தையுந்தேர்ந்துணர்ந்து, ஓர்வினையைச்செய்தல்வேண்டும். தன்வினைகளுட் செய்யத்தகாதனவாகியபெரியமுயற்சியானவும், செய்தாற்பயனில்லனவும், அதுசிறிதாயினவும், ஐயமாயினவும், பின்னர் துயர்விளைப்பனவும், ஆகியஇவைகளைச்செய்தாலும்,செய்யத்தகுந்தனவாகிய அவற்றின் மறுதலையாயினவைகளைச்செய்யாதொழிந்தாலும், எல்லாப்பெருமைகளுங்கெடும். இவ்வாறுதேர்ந்து, செய்யத்தக்ககருமமுமுடிக்குமுபாயத்தையெண்ணி முயறல்வேண்டும். அவ்வுபாயம், தானம்-சாமம்-பேதம்- தண்டம்- எனநால்வகைப்படும்.அவற்றுள்,தானமாகியகொடுத்தலைப் பொருள் நசையாளன்கண்ணும், சாமமாகிய இன்சொல்லைச்செப்பமுடையான், மடியாளன், முன்னேபிறரோடுபொருதுஅயர்ந்தவன், என இவர்கண்ணும், பேதமாகியவேறுபடுத்தலைத்துணைப்படையாளன், தன்பகுதியோடு பொருந்தாதான், என இவர்கண்ணும், தண்டமாகிய ஒறுத்தலைஇம்மூவிதவுபாயத்தினும்வராதவர், கீழ்மக்கள்,என இவர்கண்ணுஞ்செய்து, வெல்லுமாற்றால் முயறல்வேண்டும். மேலும்- தான்வலியனாயுள்ளகாலத்துத், தான- சாம- பேதமாகிய- மூன்றினைமெலியாரிடத்திற் செய்தாலும், மெலியனாயுள்ளகாலத்துத்,தண்டத்தை வலியாரிடத்திற்செய்தாலும், நலிவினையுண்டாக்குமாதலால், எக்காலத்துஎவ்வெவரிடத்தில் எவ்வாறுசெய்யவேண்டுவதோ, அக்காலத்து அவ்வவரிடத்தில் அவ்வாறுசெய்தல்வேண்டும். (வலியறிதல்,— என்பது- அவ்வுபாயங்களுள்,ஒறுத்தல்குறித்த அரசன் நால்வகைவலியையும் அளந்தறிதல்.) என்றால், தான் செய்யக்கருதியவினைவலியும், அதனைச்செய்துமுடிக்குந் தன்வலியும், அதனைவிலக்கலுறும் மாற்றான்வலியும், இருவர்க்குந்துணையாவார் வலியும், ஆகியஇந்நான்குவலியினையும் அறிந்துசீர்தூக்கித், தன்வலிமிகுமாயின்அவ்வினையைச்செய்யல்வேண்டுமன்றி,இருவர்வலியுமொப்பாயிருத்தலின்கண்ணும், தன்வலிகுறைந்தவிடத்தின்கண்ணும், ஓர்வினையை எண்ணத்தகாது, அதனாற்றோல்வியும் இழுக்கும் உண்டாகும். நிறைந்தவலியினன் ஒருவனுக்கிணையாகக், குறைந்த வலியார் பலர்கூடினும். அதுஎன்னபயனைத்தரும்,ஆதலால் அத்தன்மைத்தாகியவலியினனைத்துணைகொள்

ருதலும், பலர்கூடினுமென்னும் மனவெழுச்சியாற் றம்மின்வலியாரோடு வினைசெய்யத்தொடங்குதலும், வென்றியைத் தரமாட்டாது. சயநெறியின்கண் தனக்குள்ளபொருளின் எல்லையையறிந்து, அவ்வெல்லையைநான்குகூறாக்கி, அதிலொருகூறை மேல்வரும் இடர்களைநீக்குதற்கும், இரண்டுகூறைத்தன்செலவிற்கும் வைப்பாக்கி, நின்றவொன்றனையீதல்வேண்டும். அவ்வாறீயுமிடத்து அதனிற்சுருங்கக்கூடாதாயின், சிந்துநெறிகளிற்செலவிடாமல், முதலுஞ்செலவுந் தம்முள் ஒப்பினுங்கேடில்லை. (காலமறிதல்,—என்பது- வலியான்மிகுதியுடையனைப் பகைவர்மேற்சேறலுற்ற அரசன், அச்செலவிற்கேற்ற காலமறிதல்.) என்றால், தூங்காமை- கல்வி- துணிவுடைமை- என்னு மூன்றாற்றலும், தானம்- சாமம்- பேதம்-தண்டம் என்னு நான்குபாயங்களும், நல்லஇடனும் ஆகியகருவிகளையடைந்திருந்தானாயினும், பகைவனைவெல்லுங்காலமறிந்து, அக்காலத்தை எதிர்பார்த்திருத்தல்வேண்டும், அவ்வாறிருத்தல்-பொருகின்றதகர் தன்பகைகெடப்பாய்தற்பொருட்டு,பின்னே கால்வாங்குந்தன்மைத்து. அன்றியும் பகைவர் தன்பால்மிக்க குற்றங்களைச்செய்து திரியினுந், தானவனைவெல்லத்தக்ககாலம்வருமளவுந் தன்பகையை அவர்புறத்திற்றோற்றாமல், அவனைக்கண்டவுடன் பண்போடுபசரித்துத், தனது உறவினனைப்போலப்பணிதல்வேண்டும். பின்னர் அப்பகைவனை வெல்லுங்காலம்வந்து கூடியவுடன், அது கழிவதன்முன்னர்ச்,செய்யவேண்டிய வினைகளைத் தான்கருதியவழியே தப்பாமைசெய்து முடித்தல்வேண்டும். (இடனறிதல்,—என்பது-வலியுங்காலமுமறிந்து பகைவர்மேற்செல்லும்அரசன், தான்வெல்லுதற்கேற்றநிலத்தினையறிதல்.) என்றால்,பகைவராயினோர்வாயில்களானும்-நுழைகளானும்புகலோடு,போக்கொழியும்வகை,அரணைவளைத்து,ஒன்றற்கொன்றுதுணையாகப் பலபடைகளு மெலிவற்றிருப்பதற்கு,மதில்-அகழி-முதலியவைகளைச்செய்து, அரசிருப்பிற்கேற்றநிலக்கிடக்கையும்,நீரையும்,உடையதுவே அவனைவெல்லக்கருதுவோனுக்குஇடமாகும். ஊக்கமில்லாதானாயினும், அத்தன்மைத்தாகியஇடமறிந்து வினைசெய்வானாயின், அவனைவெல்வதாக எண்ணியிருந்தபகைவர், அவ்வெண்ணத்தினையிழப்பர். ஊக்கமில்லாதபகைவனை வெல்லுவதற்கு, அவ்வூக்கமும்படைகளும்உள்ளானேனும், இடமறிந்து வினைசெய்யானாயின், அவ்விரண்டும்பயனின்றி விளங்கும். (தெரிந்துதெளிதல்,—என்பது- அரசன் தன் குழுவினரையாராய்ந்துதெளிதல்.) என்றால்,பகைவர்மேற்செல்லும்அரசன்,தன்வினைசெய்தற்பொருட்டும், அறைபோகாமற்பொருட்டும், அமைச்சர் முதலாயினோருடைய-பிறப்பு- குணம்- அறிவு-என்னுமிவைகளையுஞ், செயல்களையுங்,காட்சி- கருத்து- ஆகமம்- என்னு மளவைகளால்ஆராய்ந்து, பின்னர் அறவுபதை- பொருளுபதை- இன்பவுபதை- அச்சவுபதை-என்னுநான்கின் திறத்தால் அவர் மனவியல்பையோர்ந்து தெளிதல்வேண்டும். அஃதெவ்வாறெனில்- முதலாவது, புரோகிதனையும்அறவோனையும்விட்டு,அவரால்-இவ்வரசன் அறவோனல்லாமையின், இவனைப்போக்கி அறனும் உரிமையுமுடையா னொருவனை வைத்தற்கெண்ணினம், இது தான்யாவர்க்கும் இயைந்தது, நின்கருத்தென்னையெனச் சூழ்ந்[illegible]சொல்லுவித்தல்வேண்டும். இரண்டாவது, சேனைக்கிறை[illegible], அவ[illegible]

ம்விட்டு, அவரால்-இவ்வரசன் பொருளாசையுள்ளவனுகலின், இவனைப் போக்கி,கொடையும் உரிமையுமுடையான் ஒருவனை வைத்தற்கெண்ணி னம், இதுதான்யாவர்க்கு மியைந்தது, நின்கருத்தென்னையெனச் சூளுற வோடுசொல்லுவித்தல்வேண்டும். மூன்ருவது,தொன்றுதொட்டுஉரிமை யோடும்பயின்றவளாகிய ஓர்தவமுதாட்டியைவிட்டு, அவளால்- உரிமை யுள இன்னுள் நின்னைக்கண்டு வருத்தமுற்றுக்கூடுவிக்க வேண்டுமென்று என்னைவிடுத்தாள், அவளைக்கூடுவையாயின் நினக்குப்பேரின்பமேயன்றி ப் பெரும்பொருளுங்கைகூடுமெனச் சூளுறவோடு சொல்லுவித்தல்வே ண்டும், நான்காவது,ஒருநிமித்தத்தின்மேலிட்டு, ஓரமைச்சனுல்எனையோ ரை அவனில்லின்கண் அழைப்பித்து, இவர் அறைபோவான் எண்ணற் குக்குழீஇனுரென்று தான்காவல்செய்து, ஒருவனுல் இவ்வரசன் நம்மை க்கொல்லச்சூழ்கின்றமையால், அதனை நாம்முற்பட்ச்செய்து,நமக்கினிய அரசனெருவனைவைத்தல் யாவர்க்குமியைந்தது, நின்கருத் தென்னையெ னச் சூளுறவோடுசொல்லுவித்தல்வேண்டும். இந்நான்குஉபதைகளினுந் திரிபிலராயின், அவர்எதிர்காலத்துந்திரிபிலரென்று தெளியப்படும். மே லும் நல்லகுடியிற்பிறந்து,காமமுதலியஅறுவகைக்குற்றங்களோடு,மடி-ம றப்பு முதலியவைகளையு நீக்கி, நமக்குவடுவருங்கொல் என்றஞ்சா நிற்கு நாணுடையவனையே ஓர்ந்தறிதல்வேண்டும். கற்றற்கரிய நூல்களைக் கற்று, மேற்சொல்லிய குற்றங்களைக் களைந்தாரிடத்தும், அறிவின்மை விளங்கி நிற்குமாதலால், அதனை நுண்ணிதாக ஆராய்தல் வேண்டும். இவ்வாறு ஆராய்ந்து தெளியப்பட்டவருஞ் சுற்றமில்லாதாராயின், அவர்களிடத் து பழிப்பன ஒழிதற்கும், புகழ்வன செய்தற்கும் ஏதுவாகிய, உலக ந டையியல்பு இன்மையின், அவர்கள்பழிபாவத்திற் கஞ்சார்கள், ஆதலால் சுற்றமாயினுரைச்சூழ்தல்வேண்டும். குணங்குற்றங்களுள் ஒன்றேயுடை யார் உலகத்தின்மையின்,பின்னர் அச்சுற்றத்தினரிடத்தில்அவ்விருபகுதி களையும் ஆராய்ந்து, குற்றமின்றிக்குணமே மிக்கதாயின், அவரைவினைக் குரியவராக்கிக்கொள்ளல்வேண்டும். ஒருவனதுபெருமையுஞ் சிறுமையு ந்தப்பாமல்அறியவேண்டில், அவனவன்செய்யுங்கருமமேஉரைக்கல்லாவ தன்றிப் பிறிதோன்றின்மையால், அதனுல்அவனைத் தேர்ந்தறிதல் வேண் டும். அன்புடைமையே பற்றுக்கோடாகத் தமக்கறியவேண்டுவன அறியா தாரிடத்தில், ஓர்வினையளித்தலை யொழித்தல்வேண்டும். தன்னேடியையபு டையரல்லாதாரைப், பிறப்புமுதலியவற்ருனுஞ் செயலானும் ஆராய்ந் தறிதல்வேண்டும். அவ்வாறு ஆராய்ந்து தெளியப்பட்டபின்னர், அவரை அவர் ஆற்றலுக்கேற்றவினைகளில் விடுத்தல்வேண்டும். அவ்வாறு விடுத்த பின்னர், அவரிடத்து ஒருதீதுகாணுது அரசன்ஐயுறுவனுயின், அதனைஅ வரறிந்து, இனி இதுநில்லாதென்னுங்கருத்தால் அவ்வினையினின்று நீ ங்குவர், அதனைப் பகைவரறிந்தால் எளிதிற்பிரித்துவிடுவர்,பின்னர்தே ரான் தெளிவினைப்போலக் கேடுவருமாதலால், வினைசெய்வார் பால்தீது கண்டவழி ஐயுறல்வேண்டும். (தெரிந்துவினையாடல்,— என்பது - அத் தெளியப்பட்டாரை அரசன் அவர் செய்யவல்ல வினைகளையறிந்து அவ ற்றின்கண்ணேயாளுந்திறம்.) என்ருல், மேற்கூறிய எல்லா வகையானும் ஆராய்ந்துதன்னுல் தெளியப்பட்டவரை, முன்னர்ப்பொதுவாகியவினைபி

ல்விடுத்தல்வேண்டும். அவர் அவ்வினையின்கண் ஆவனவும் ஆகாதனவுமா ய செயல்களையாராய்ந்தறிந்து, அவற்றுள் ஆவனவற்றையேவிரும்பிநடா த்திவருவராயின், பின்னர் அவரைச் சிறந்தவினையின்கண்விடுத்தல்வேண் டும். அவ்வாறுவிடுத்தபின்னர்வேறுபடுவராயின்,மீட்டும்மேற் கூறியபொ துவினையின்கண்விடுத்து ஒழித்துவிடல்வேண்டும். அன்றியும் அரசன்மா ட்டன்பும், அவனுக்கு ஆவனவற்றையறியும் அறிவும், அவை செய்தலி ன்கண் கலக்கமின்றிஇனிது முடிக்கத்தக்கமனத்துணிவும், அவ்வினையாற் பொருள் தமதுகையுற்றவழி அதன்மேல் அவாவின்மையும், ஆகியசெய் கைகளையுடையாரே, தம்மரசனது வினையைக்குற்றமற முடிக்குங்குணத் தையுள்ளவர். இவ்வாறு செய்வாரது இலக்கணத்தைமுன்னர்ஆராய்ந்து, பின்னர்செய்யப்படும் வினையினது இயல்பையாராய்ந்து, இக்காலத்து இ வ்விலக்கணமுடையான் செய்யின், இவ்வியல்பிற்றாய வினைமுடியுமென் று அறிந்துவிடுத்தல்வேண்டும். ஒருவன் தன்னினத்தின் மிக்கவுரிமைய னாகிய சுற்றத்தினனாயினும், செய்யுமுபாயங்களையறிந்து, செயலாலும்இ டையூறுகளாலும் வருந்துன்பங்களைப்பொறுத்து,முடிவுசெய்யவல்ல அ றிவும் ஆற்றலும் இலனாயின், இவ்வினையைஇப்பொருளாலும் இத்துணை வராலும் இவன்முடிக்கவல்லனென்க்கூறுபடுத்து ஆராய்ந்து, மூன்றுந்த ன்னுளியைந்தவழி,அவ்வினையையவன்கண்ணேவிடுத்துப்,பின்னர்அதனை த் தானேசெய்து முடிக்கும் ஆற்றலுடையான் ஆக்கல்வேண்டும். ஒருவ ன் எப்பொழுதுந் தன்வினையின்கண்ணே முயற்சிதவறாது, பிறனாயு நில் லாது, கேளிர்செய்யும் உரிமையெல்லாஞ் செய்தொழுக, அது பொறா தார்கூறுஞ்சொற்களை அரசன்கேட்டு, அவனை அவமதிப்பாகக் கொண்டு பகைப்பனாயின், அவன் அவ்வினையினின்றுநீங்குவன், பின்னொருவரும் அவ்வினைக்குஉட்பட்டு முயல்வாரில்லையாம், ஆகவே தன்செல்வத்திற்கு க்கேடுறும். வினைசெய்வார் கோடாதிருப்பராயின், உலகங்கோடாதிருக்கு மாதலால், அரசன் அவர் செயலைநாடோறும் ஆராய்தல்வேண்டும். (சுற் றந்தழால்,—என்பது- அரசன் தன்கிளைஞரைத்தன்னினிங்காமல் அணை த்தல்.) என்றால், ஒருவன்செல்வந்தொலைந்து வறியனாயகாலத்தும், பிற ரைப்போலவிடாது தம்மோடு அவனிடைப்பழைமையெடுத்துப்பாராட் டுமியல்புகள் சுற்றத்தாரிடத்துளவாகலால், அவரைப்பெருங்கொடையா லும்இன்சொற்களாலும் அரசன்தழுவுவனாயின், அவனுக்குஎக்காலத்து ஞ்சோர்வுணாகாது,செல்வம்மேலுமேலும் விர்த்தியாகும், தன்னைவெல்ல நினைக்கும்பகைவர்தொழிலும் பயன் பெறாது. (பொச்சாவாமை,— என் பது- உருவுந்திருவும் ஆற்றலுமுதலியவற்றான் மகிழ்ந்து, தற்காத்தலினு ம் பகையழித்தன் முதலியகாரியங்களினுஞ் சோர்தலைச்செய்யாமை.) எ ன்றால், அரசனாயினான்,பெருமிதம்-பெருஞ்செல்வம்-பேரெழில்-பேரின் பம்- என்னுமிவைகளால்வருங்களிப்பின்மூழ்கினனாயின், உடனேபொச் சாப்புஉண்டாகும், அதனால்அவன்பகைவரைவென்றுபாதுகாக்கவல்லன ல்லாப்பொருளும் அழிவெய்தும், தூங்காமைமுதலியமூவகையாற்றலுந் தானமுதலிய நால்வகை யுபாயங்களும், ஈட்டல்முதலிய ஐவகைத்தொ ழில்களும், நட்பாக்கல் முதலிய அறுவகைக்குணங்களும், மற்றுமுள்ள யாவுங்கெடுவதன்றி, தேவர்முதலிய எழுவகைப் பிறவிகட்கும் நன்மை

யுறாது. ஆதலால் தான் செய்யக்கருதிய காரியத்தின்கண் நெகிழ்ச்சியுறாமற்சென்று முயற்சிசெய்வனாயின், அவனுக்குக் கிடைக்காதபொருள் ஒன்றுமில்லை. முற்காலத்தில் அந்நெகிழ்ச்சியினாற்கெட்டவர்களை நினைத்து, நாமும் அவ்வாறிருக்கின் நம்மைக்கேடுறுமென்று கருதி, அதனைக்கைவிடல்வேண்டும். (செங்கோன்மை,—என்பது-அரசனாற்செய்யப்படுமுறையினதுதன்மை. +)என்றால், மழைவளத்தாற்குடிகட்கு உணவுமுதலிய உளவாயினுந், தம்மையாளுமரசன், ஒழுக்கம்- வழக்கு-தண்டம்- என்னு மூவகை ‡ அறத்தின்வழி தனதுசெங்கோலைச்செலுத்திலனாயின்,அவைகளால்அக்குடிகட்குஎன்னபயன். ஆதலால்-செங்கோல்செலுத்தும்வெண்குடைவேந்தன்,தீயார்மாட்டுமூவகையொறுப்பும் உடைத்தாதல்வேண்டும்.அம்மூவகையொறுப்பு, துன்பஞ்செய்தலும்-பொருட்கோடலும்-கோறலும்-ஆம்.அவற்றுள்துன்பஞ்செய்தலாவது,குற்றஞ்செய்தவர்கள்உயிரினுஞ்சிறந்தவராயினும், அவர்பாற்கண்ணோடாது,அக்குற்றத்தையேநாடி நடுவுநிலைமையைப் பொருந்தி, அக்குற்றத்திற்குச்சொல்லியதண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து, அவ்வளவிற்றாகச்செய்வதாம். பொருள்கோடலென்பது, சுற்றத்தாராலும், பகைவராலுங், கள்வராலும், உயிர்வர்க்கங்களாலுந், தன்னாலுங், குடிகட்கு ஓரிடையூறெய்தாவண்ணங்காத்து, நீதியின்கண்வழுக்கினோர்களைப்புடைத்துப்பொருள்சம்பாதித்தலாம். கோறலென்பது,தீக்கொளுவுவார்,நஞ்சிடுவார், கருவியிற்கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில்விழைவார், என்னுமிவர்முதலாயினோரை,உழவன்களையைக்களைந்து பைங்கூழைக்காப்பதுபோலக், கொலையானொறுத்துத் தக்கோரைக்காத்தலாம்.மழைவளஞ்சுரப்பதும்,வயனிலம்விளைவதும், அறம்வளர்வதும், வேதநூல்விளங்குவதும், பொருளீட்டுவதும், சமரில்வெல்வதும், குற்றமறவாழ்வதும், அரசனாற்செலுத்தப்படுகின்ற செங்கோலினாகும். ஆதலால்- இத்தன்மைத்தாகியசெங்கோலைத் தனக்கு முட்டுவந்தவழியும் முட்டாமற்செலுத்துவனாயின், அவனை அச்செங்கோலேகாக்கும். முறைவேண்டினோர்க்கு எளியசெவ்வியையுடைய

+ அம்முறை-ஒருபாற்கோடாது செவ்வியகோல்போறலிற், செங்கோலெனப்பட்டது.

‡ ஒழுக்கம்,என்பது- அந்தணர்முதலியவருணத்தார்,தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியமுதலிய நிலைகளினின்று,அவ்வவற்றிற்கோதிய அறங்களில் வழுவாதொழுகல். வழக்கென்பது- ஒருபொருளைத் தனித்தனியே எனதெனதென்றிருப்பார், அதுகாரணமாகத் தம்முண்மாறுபட்டு அப்பொருள்மேற்சொல்வது, அது- கடன்கோடல்- உபநிதி- கூடிமேம்படல்- நல்கியதைநல்காமை- ஒப்பிப்பணிசெய்யாமை- கூலிகொடாமை -உடையனல்லான்விற்றல் - விற்றுக்கொடாமை - கொண்டுள்ளமொப்பாமை- கட்டுப்பாடுகடத்தல்- நிலவழக்கு- மாதராடவர்தருமம்- தாயபாகம் வன்செய்கை- சொற்கொடுமை- தண்டக்கொடுமை- சூது-ஒழிபு- எனப்பதினெட்டாம். தண்டமென்பது, அவ்வொழுக்கநெறியினும்- வழக்குநெறியினும்- வழீஇனாரை,அந்நெறிநிறுத்தற்பொருட்டு ஒப்பநாடி,அதற்குத்தகவொறுத்தல்.

வனாய், அவர்சொல்லியவற்றை நூலோர்பலரோடும் ஆராய்ந்து, நின்றஉண்மைக்கொப்பமுறைசெய்யானாயின், தனக்குப் பகையின்றாமேனும், பழியும்பாவமுந்தேய்த்துவிடும். (கொடுங்கோன்மை,— என்பது- அம்முறையினதுகோடுற்றதன்மை.) என்றால், அரசன் பொருளைவெஃகிக், குடிகளை அலைத்தற்றொழிலைத் தன்மேற்கொண்டு, முறையல்ல வற்றைச்செய்தொழுகுவனாயின், அந்தணர் நூல்களைமறந்துவிடுவர், அவனாட்டுப்பசுக்களும்பால்குன்றும், பருவமழையின்றாம்வகை மேகமும்பொழிதலைச்செய்யாது, முன்னீட்டியபொருளும் பின்னீட்டுதற்கேதுவாகிய குடிகளும் ஒருங்குநீங்கும், அவனாட்டின்கணுள்ள பெரும்பயனுங் குன்றும், அவன்புகழு நிலைபெறாது. (வெருவந்தசெய்யாமை — என்பது - குடிகளஞ்சுவதும், பகுதியஞ்சுவதுந், தானஞ்சுவதுமாய தொழில்களைச் செய்யாமை.) என்றால், அரசனாயினான்- கடியசொல்லுங், கண்ணோட்டமின்மையுங், குற்றத்தின்மிக்க தண்டமும், நடுவுநிலையின்மையுந், தன்னைக்காணவேண்டுவார்க்குச் செவ்வியின்மையுங், கண்டால்இன்னாமுகத்தினையுடைமையுங், காரியத்தைப்பற்றிவந்த எண்ணத்தை அமைச்சர்மேல்வைத்து அவரோடுதானும் எண்ணிச்செய்யாமையும், அப்பிழையாற்றன் காரியந் தப்பியவழிசினந்து, அவ்வமைச்சரைவெகுளுதலும், செருவருதற்கு முன்னேதனக்குப்புகலாவதோர் அரண்செய்துகொள்ளாமையும், ஆகிய இவைகளெல்லாந் தீங்காக எண்ணிவிடல்வேண்டும். (கண்ணோட்டம்,— என்பது- பட்சம்.) என்றால், அரசன்- தன்னோடுபயின்றாரைக் கண்டால் அவர்கூறின மறுக்கப்படாமையாகிய கண்ணோட்டத்தைத், தான்முயன்றுசெய்யுமுறைக்குக் கேடுநினைப்பார்மாட்டுந், தனக்கு நன்மைகெடுத்தீங்குநாட்டினார்மாட்டுங் கொள்ளாதிருத்தல்வேண்டும்.) (ஒற்றாடல் —என்பது- பகை- நொதுமல்- நட்பு- என்னுமூன்று திறத்தார்மாட்டுநிகழ்ந்தனவறிதற்கு ஒற்றரை யாளுதல்.) என்றால், அரசன் - நீதி நூலைத் தனது உளக்கண்ணாகவும், ஒற்றைவெளிக் கண்ணாகவும் * விடுத்துத், தன்காரியஞ்செய்வார்- சுற்றத்தார்-பகைவர்- என்றுசொல்லப்பட்ட அனைவரையுஞ், சொல்லாலுஞ் செயலாலும் ஆராய்தல்வேண்டும். அவ்வாறு ஆராயத்தக்க ஒற்றன்எவ்வாறிருக்க வேண்டுமெனில், ஏனையோர்கண்டால் ஐயுறாதவடிவோடுபொருந்தி, அஞ்சாதுநின்று, யாவரேனும்ஐயுற்றுப் பிடித்து என்செய்துகேட்டாலுந், தன்னைவெளிப்படுத்தாதவனாயிருத்தல்வேண்டும். அத்தன்மைத்தாகிய ஒற்றையாளுமிடத்து, ஒருவனையொருவனறியாதவண்ணம் ஆளல்வேண்டும். அங்ஙனமாண்ட ஒற்றர் மூவரை, ஒருபொருண்மேல் வேறுவேறுவிடுத்தல்வேண்டும், பின்னர் அம்மூவர்கள்வந்துசொல்லுமொழிகள்ஒன்றுக்கொன்றொத்திருக்கின், அக்கருமத்தை மெய்யென்றுதெளிதல்வேண்டும், அக்கருமத்தைப்பின்பு மறைக்கவேண்

---

* ஒற்றானது, தன்கண்செல்லமாட்டாத பரப்பெல்லாஞ் சென்றுகண்டு, ஆண்டுநிகழ்ந்தனவெல்லா முணர்த்தலானும், நூலானது அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன்னுணர்வு செல்லமாட்டாத வினைகளையெல்லாஞ்சொல்லியுணர்த்தலானும், இவ்விரண்டையுமே தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத் துணிந்துகொண்டு ஒழுகவேண்டுமென்பதாம்.

டுவனுயின், அவ்வொற்றர்கட்குச்செய்யுஞ் சிறப்பினைப்பிறரறியாமற் செய்தல்வேண்டும். (ஊக்கமுடைமை,— என்பது- மனமெலிதலின்றி வினைசெய்தற்கட்கிளர்ச்சியுடைத்தாதல்.) என்றால், ஊக்கமுடையவர்கள் கைப்பொருளையிழந்தார்களேனும், அவர்கள் அழிவில்லாத ஆக்கத்தையுடையவரேயாவர். அவ்வாக்கமிருந்தும் அசைவற்ற ஊக்கமிலராயின், ஏது மிலராவர், அவர்கள்முயல்கின்றமுயற்சியும்- பொருளும்- கொடையுஞ்- செருக்கும்-முறையைச்சேராது. (மடியின்மை,— என்பது-கருதியனசெய்யுங்காற்சோம்புதலில்லாமை.) என்றால், ஒருவனிடத்தில் மடியென்பதொன்றிருக்குமாயின், அவன்விரைந்துசெய்யுந் தொழிலைநீட்டிக்கும், ஐயம்-மறதி- துயில்- இவைகளைவிளைவிக்கும், கலதியைச்சேர்ப்பிக்கும், பகைவர்க்கு அடிமைபுகச்செய்யும், தான்பிறந்த குடியைக்கெடுக்கும், ஆதலால் அதனைவிடுக்கின், அவன்குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்தகுற்றங்கள் ஒழியும். (ஆள்வினையுடைமை,— என்பது- இடைவிடாதமெய்ம்முயற்சியுடையனுதல்.) என்றால், ஒருவன் தன் தனுவினால் விடாது செய்கின்ற முயற்சியானது, பொருளைமேலுமேலும்வளர்க்கும், சுற்றம்- நட்பு- கிளை என்னுமிவைகளைக் கெடாதவண்ணந்தாங்கும், யாவர்க்குந்தடைபடாத உபகாரத்தைச்செய்விக்கும், இலக்குமிவிலாசமுண்டாக்கும், பயனைவிலக்குவதாய ஊழ்வந்தகாலத்தும்,அப்பயனையே கெடாதவண்ணம் விர்த்தியாக்கும், பழிகளைநீக்கும். (இடுக்கணழியாமை,— என்பது-'வினையின்கண் முயல்வான், இடுக்கண்வந்துழி அதற்குமனங்கலங்காமை.) என்றால், ஒருவனுக்குத் தெய்வத்தாலேனும்- பொருளின்மையாலேனும்- மெய்வருத்தத்தாலேனும்- இடுக்கண்வருமாயின், அதற்கழிவுறாது- தேவகதி- மக்கட்கதி - விலங்கின்கதி - நரககதி - என்னு நாற்கதியினுமுள்ள உடம்புகள், இடும்பையென்னும்வாளுக்கு இலக்காவது சுபாவமென்று தெளிந்து, தன்மேல்வந்த இடும்பையை இன்பமாகக் கொள்ளல்வேண்டும். (அமைச்சு,— என்பது- அமைச்சனது தன்மை.) என்றால், 'சிறியமுயற்சியினாற்பெரியபயனைத் தருவதானவினையும், அவ்வினைசெய்யுங்கால் அதற்கு வேண்டியபொருளும், அதற்கியைந்த படையும், அதற்கேற்ற காலமும், அதுதொடுங்கும் உபாயமும், அதுசெய்யுமாறும், அதைஇடையூறுநீக்கி முடிவுபோக்குமாறும், ஆகிய இவைகளோடு, தனக்குத் துன்ப நேரிட்ட காலத்தும் வினைசெய்தற்கண்அசைவின்மையுங், குடிகளைக்காத்தலும், முயற்சியும், நீதிநூல்களைக்கற்றுச் செய்வனதவிர்வன அறிதலும், வினைவந்துழிபகைவர்க்குத் துணையாயினரை அவரிற் பிரிக்கவேண்டிற் பிரித்தலுந் தன்பாலாரை அவர்பிரியாமற் கொடை இன்சொற்களாற் பேணிக்கொள்ளுதலும், முன்னேதம்மினுந் தம்பாலாரினும் பிரிந்தாரைமீண்டும்பொருத்தவேண்டிற்பொருத்தலும், ஒருகாரியச்செய்கை பலவாற்றாற்றோன்றின் அவற்றுள் ஆவது ஆராய்ந்தறிதலும், அதுசெய்யுங்கால்வாய்க்குந்திறநாடிச்செய்தலும், சிலரைப்பிரித்தல் பொருத்தல்செயற்கண், அவர்க்குஇதுவேசெயற்பாலதென்று துணிவுபிறக்கும் வகை சொல்லுதலும், அரசனுக்கு ஆக்கமேகுறித்தனவாகுந் திறனும், அறிந்துசொல்லியாாது அறிவையும் அழித்து,அரசன்தானும் அறியானேயாயினும்,அக்குற்றம் நோக்கியொழியாது,அவனுக்குஉறுதியாயினகூறுதலும், நூனெறியான் வினை

செய்யுந்திறங்களையறிந்தவிடத்தும்,அப்பொழுது நடக்கின்ற உலகவியற்கையையறிந்து,அதனோடுபொருந்தச்செய்தலும்,தன்னரசன்சுருங்கியகாலத்தும்- பெருகியகாலத்தும்- இடைநிகராயகாலத்தும்- அவன்செய்யப்படும் அறங்களையறிந்து,தனக்கேற்ற கல்வியால் நிறைந்தமைந்த சொல்லை யுடையனாய் வினைசெய்யுந் திறங்களையறிவதும், ஆகிய இவ்வியல்புகளையுமுடையவனே அமைச்சனாவான். செய்யப்படும் வினைகளைமுன்னர் அளவுபடஎண்ணல் மாத்திரமன்றி, செய்யுங்கால் அவைகளை முடிக்கமாட்டாத அமைச்சனுந், தன்னரசனுக்கு அகிதமெண்ணும் அமைச்சனும், எழுதப்பட்டசித்திரங்களினுமாகா. (சொல்வன்மை,— என்பது- தான்கருதியவினை முடிக்குமாற்றால் அமைச்சியல்நடத்துதற் கேதுவாயசொற்களைசசொல்லவல்லனாதல்.) என்றால், தன்னிற்பிரிக்கப்பட்டவரும் பகைவருமாகிய இவர்கள்-பின்னர்கூடி வேறுபடாமலிருக்குமாறும், அப்பகைமையொழிந்து நட்பினைவிரும்புமாறும், அவருள்ளத்தைப் பிரிக்கத்தக்கசொற்களைத், தன்காரிய முடிவெய்தும் வண்ணங், குடிப்பிறப்பிலுங்- கல்வியிலும்- ஒழுக்கத்திலுஞ்- செல்வத்திலும்- உருவத்திலும்- பருவத்திலுந்- தனக்கும் அவர்க்கும் உளவாயஏற்றத்தாழ்வுகளையறிந்துசொல்லல்வேண்டும். அவ்வாறுசொல்லுமிடத்து, சுருக்கி, மெய்விளக்கி, இனிமையையும்பயனையுந்தொகுத்து,அயலார்கூறுமொழிக்குஇடையாதமொழியாக,வழுவின்றி, அவைசொல்லுமாறஞ்சுதலின்றி யுரைக்கவல்லவனே அமைச்சனாவன். அவ்வாறின்றி,மேற்கூரியசுருக்கன்முதலியகுணங்கட்கு மறுதலையாகப், பலவாயவார்த்தைகளை வீணேவிரித்துரைக்கவல்லவனுங் கற்றுவைத்தநூலைப்பிறரறியும்வண்ணம் விரித்துரைக்க மாட்டாதவனும், மெல்லியனேயாவன். (வினைத்தூய்மை,—என்பது- செய்யப்படும்வினைகள்நல்லவாதல்.) என்றால், தன்னரசனுக்கு ஆக்கத்தையுண்டாக்கவல்ல அமைச்சன், பொருளையன்றி அறமும் இன்பமும் பயவாத வினையை எஞ்ஞான்றும்புரியான், ஒருகால்மயங்கி அவற்றைச் செய்தானாயினும், அதுசெய்தற்குப்பின்னிருந்திரங்கான் †. தாய்தந்தையர்- கற்புடையமனைவியர்- இளமக்கள்- என்னுமிவர்கள் பசியால்வருந்தினும், உலகத்தின்கண் ஏனையோர்போல, அறிவுடையார் பழிக்கும்வினைகளைச்செய்யான்.(வினைத்திட்பம்,— என்பது- அத்தூயவினைமுடிப்பானுக்கு வேண்டுதாயமனத்திண்மை.) என்றால், பழுதுபடும் வினைகளைச்செய்யானும், ஊழால் உளறுவந்தடுப்பினுங்கலங்கானும், செய்யப்படும்வினையை முடிவின்கண் அன்றிஇடையில்தனதுஇங்கிதம்- வடிவு- செயல்- மொழி- என்னுமிவைகளால் வேறுபடுமாறுசெய்யானும், மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்தவினையின்கண் பின்னரசைதலின்றிமுடிக்கவினாவானுமே அமைச்சனாவன். இத்தன்மையனாகிய அமைச்சனை அவனதுவடிவின் சிறுமைநோக்கி இகழ்தலைச்செய்யாத அரசனே அரசனெனப்படும். (வினைசெயல்வகை,— என்

---

† பின்னிருந்திரங்குவனாயின், அதுதிரும்வாயி லறிந்திலனெனவுந்- திட்பமிலனெனவும்- பயனில்லன செய்கின்றானெனவுந்- தன் பழியைத் தானேதூற்றுகின்றானெனவும்- எல்லாருமிகழ்தலிற், பின்னிரங்காமை நன்றென்றார்.

பது- அத்திட்பமுடைய அமைச்சன், பகையிற்முன்வலியனுயகாலத்தும்
ஒப்பானுயகாலத்தும்- மெலியனுயகாலத்தும்- அவ்வினையைச்செய்யுந்தி
றம்.) என்றுல்,தான்வலியனுயகாலத்து, இனிஇவ்வினைதப்பாதென்னுந்து
ணிவினைப்பெறுவளவும்விசாரித்து, அங்ஙனம்விசாரித்துத்துணிவுபெற்
ற வினையின்கண் நீட்டித்தலையொழித்துத், தன்பகையோடு நேரிற்செய்
தலும். அப்பகையிற்முனொப்பானுயகாலத்து, அழிபொருளும்-ஆகுபொ
ருளும்- தன்முனையும்- மாற்முன்முனையும்- தனக்காங்காலமும்- அவற்கா
ங்காலமும்- தான்வல்லவினையும்- அவன்வல்லவினையும்- தான்வெல்லுமி
டமும்- அவன்வெல்லுமிடமும், ஆகியஇவ்வைந்தையுமாராய்ந்து, தான்
வென்றியெய்துந் திறத்திற்பிழையாமல் எண்ணியடர்த்தலும். தானுளுகி
ன்றநாடும்-அரணும்- அற்பமாகித், தன்னின்வலியனு யெதிர்ந்தவழி தன்
பகுதிநடுங்கலுக்கஞ்சி மெலியானுயகாலத்து, அந்நிலைக்குவேண்டுவதாய
சந்துகூடுமாயின், அவனைத்தாழ்ந்து அதனை ஏற்றுக்கொள்ளலும், ஆகி
யஇம்மூவகைத்தொழிலும் பண்பின்மிக்க அவ்வமைச்சர் தொழிலாகும்.
(தூது,—என்பது-சந்திவிக்கிரகங்கட்கு § வேற்று வேந்தரிடைச்செல்வா
ரதுதன்மை.) என்றுல், தூதருள்- தலை- இடை-கடை-என மூவகையாரு
ளர், அவருள் அமைச்சுபூணற்கமைந்த குடியின்கட்பிறந்து, நீதிநூலை யு
ணர்ந்த அமைச்சரிடைத் தான்அந்நூலைக்கற்றறிந்து, அவ்வமைச்சரதுகு
ணங்களையுமுடையனுய்த், தன்சுற்றத்தார்மாட்டுந் தன்னரசன் மாட்டும்
அன்புடைமையும், வேற்றசர்விரும்பும்பண்புடைமையும், அவர்மாட்டா
ராய்ந்து கூறுஞ்சொலவன்மையும், கண்டார்விரும்புந் தோற்றப்பொலிவு
ம், இயற்கையறிவும், ஆகிய இவையனைத்தையுமருவி, வேற்றரசரிடத்து
ச்செல்லுங்கால், அவரித்துத் தான்செய்யுமுறைமையறிந்து, பின்சென்ற
கருமஞ்சொல்லுதற்கேற்றஇடமறிந்து, அவர்செவ்விபார்த்து, காலத்தோ
டுபொருந்த அதைமுடிக்கத்தக்க உபாயத்தையறிந்து, சொல்லவல்லவன்
தலையாயதூதனும். பொருள்காமங்களைப்பற்றி, வேற்றரசரிடத்துவேறுப
டக்கூறுததூய்மையும், அவ்வார்த்தை தன்னுயிருக்கு இறுதி தருமாயினு
ம், அதற்கஞ்சி யொழியாமையுந், தனக்கு அவர் அமைச்சர் துணையாந்த
ன்மையும், ஆகிய இம்முன்றுடுகூடியமெய்மையுந், தனக்குவரும் ஏதத்
திற்கஞ்சி அவனுக்குத்தாழ்வான வார்த்தையை வாய்சோர்ந்துஞ் சொல்
லாததிண்மையுமுடையவன், இடையாயதூதனும். வேற்றரசனைக் குறுகி
ஓலைகொடுத்துநிற்பான், கடையாயதூதனும். (மன்னரைச்சேர்ந்தொழுக
ல்,— என்பது- அமைச்சர் அரசனைப்பொருந்தி யொழுகுமாறு.) என்று
ல், அமைச்சனுயினுன்-தன்னுற்சேரப்பட்ட அரசன்அணியப்படுவன, நு
கரப்படுவன, மேன்மைப்படுவன, முதலானவைகளைத் தான்விரும்புதலு
ம், அவனுற்பொறுத்தற்கரிய அறைபோதலும், உரிமையோடுமருவலும்
அரும்பொருள்வெளவலும், அரசன்அருகிருந்தகாலத்து அவன்காணஒ
ருவன்செவிக்கட்சொல்லுதலும், ஒருவன்முகநோக்கிநகுதலும், அரசனு
க்குயாம்பழையமெனக்கருதித் தனக்கியல்பல்லாதவற்றைச் செய்தலும்,

---

§ இவற்றுள்- பொருத்தலுக்குச் சந்தியென்றும், பிரித்தலுக்கு விக்
கிரக மென்றும்பெயர்.

அரசனை எனக்கிளையனென்றும், எனக்கின்னமுறைமையினையுடையனென்றுங் கருதி அவமதித்தலும், அரசனால்யாம் நன்குமதிக்கப்பட்டேமெனக்கருதி அவன்விரும்பாதவற்றைச்செய்தலும், ஆகிய இக்கொடுஞ்செய்கைகளைக் கூடாதிருத்தல்வேண்டும். அன்றியும்- தான் தன்னரசனுக்குக் காரியஞ்சொல்லுங்கால், அப்பொழுதுநிகழ்கின்ற அவன்குறிப்பினையறிந்து, சொல்லுதற்கேற்றகாலத்தையும்நோக்கி, அவன்மனம்விரும்பும்வகை வெறுப்பிலவுமாய்வேண்டுவனவு மாயகாரியங்களை விளம்புதல்வேண்டும். எஞ்ஞான்றும் பயனிலவாயவற்றை அவனேகேட்டாலும் விளம்பாதிருத்தல்வேண்டும். தன்னரசனுக்குப்பிறரோடு மறைநிகழ்வுழித் தான் ஓர்தற்கேற்கும்பொளாயினும், அம்மறைப்பொருளை அவன்றானேயடக்காதுசொல்லியக்காற்கேட்பதல்லாது, அவனைமுடுகிவினவுவதும், செவிகொடுத்துக் கேட்பதும், அவ்விடத்தணுகுவதும், ஒழித்தல்வேண்டும். (குறிப்பறிதல், — என்பது- அரசன் கருதியவதனை அவன்கூறாமலறிதல்.) என்றால், அரசன்தன்மனத்தின்கண் குறித்தகருமத்தைத் தன்னுடன் கூறவேண்டாவகை ஐயப்படாது, அவன்முகமானுங்கண்ணானுநோக்கி, ஒருதலையாகவுணரவல்ல தன்மையையும், முகம்விழி இரண்டினுமன்றி, தன்குறிப்புநிகழுமாறறிந்து, அதனாற்பிறர்குறிப்பறியுந் தன்மையையும் உடையானை, அரசன்தனது- கரி- பரி- பொருள்- நாடு- முதலியபுறத்துறுப்புக்களில், அவன் விழைவனவற்றைக்கொடுத்தாயினுந் தனக்குத்துணையாகக் கொள்ளல்வேண்டும்.(அவையறிதல்,—என்பது-அரசனோடிருந்தஅவையினதியல்பையறிதல்.)என்றால்,அமைச்சனாயினான்-செஞ்சொல்-இலக்கணச்சொல்- குறிப்புச்சொல்- என்னுமூவகைச்சொற்களையும், செம்பொருள்-இலக்கணப்பொருள்- குறிப்புப்பொருள்- என்னுமூவகைப்பொருள்களோடு விளங்கச்சொல்லவல்லவனாய், உயர்ந்தோர்- ஒத்தோர்- தாழ்ந்தோர்-என்னுமூவகைத்தாகிய அவைகளையுமாராய்ந்து, உயர்ந்தோரவையின்கண் ஒன்றனைமுற்பட சொல்லாமையும், ஒத்தோரவையின்கண் எவ்வழியுஞ் சொல்லுதலுந், தாழ்ந்தோரவையின்கண் ஒருவழியுஞ் சொல்லாமையும், ஆனற்குணங்களை யுடைத்தாதல்வேண்டும். (அவையஞ்சாமை,— என்பது- சொல்லுதற்குரிய அவையினையறிந்து சொல்லுங்கால் அதற்கஞ்சாமை.) என்றால், கற்றாரெல்லாரினும், இவன் நன்குகற்றானென்று உலகத்தாராற்சொல்லப்படும் அமைச்சன், பலநூல்களையுங்கற்றாரவைக்கண், தான்கற்றவற்றையஞ்சாது அவர்மனங்கொள்ளு மாற்றாற்சொல்லி, அவற்றின்மிக்கபொருள்களை, அம்மிகக் கற்றாரிடத்தறிந்துகொள்வன். நூல்களைக் கற்றுவைத்தும், அவற்றாற்பயனறிந்துவைத்தும், நல்லாரிருந்த அவைக்கண், நல்லசொற்பொருள்களைத்தன்னச்சத்தால் அவர்க்கேற்கச்சொல்லமாட்டாதான்,கற்றுங்கல்லாதபுல்லியனாவன். அவன்உயிர்வாழ்கின்றானாயினும், உலகத்தாரால் எண்ணப்படாமையின், இறந்தானேடொப்பன். (நாடு, — என்பது- அவ்வரசனாலும் அமைச்சனாலுங்கொண்டியக்கப்படுவதாய் விளங்குவது.) என்றால், கீழ்நீர்- மேனீர்- எனப்பட்ட இருவகைநீரும், மலையினின்றும் வருவதாயநீரும், நகர்களுமுடையதாய், எல்லாப்பொருள்களையும் ஒழிவறவிளைவுசெய்யும் பெருங்குடிகளும், கல்குதானுங்- காலாளும்- அரும்பொருளீட்டும் வணிகச்செல்வரும், அந்தணர்- [illegible]

றந்தோர்- கலைஞர்- என்னுமிவர்களும், பிறவுமுள்ளபலரும் வாழ்கிருக்கத்தக்கதேநாடாகும். இத்தன்மைத்தாகிய நாட்டுக்குக்குற்றமாவது, கடவுள்பற்றியும்- சாதிபற்றியும்- மாறுபட்டுக்கூடும்பலகூட்டமும், ஆறலைப்பார்- கள்வர்- குறளைகூறுவார்- முதலியமக்களோடு, பன்றி- மான்- கரடி புலி- முதலியவிலங்குகளுமானஉட்பகைகளும்,பொருளினது அளவுபார்த்து அதனைக்கெடுக்கவருங்குறும்பரும், மிக்கபெயல்- பெயலின்மை- எலி- கிளி- விட்டில்- அரசண்மை- என்னுமிவைகளுமாம். ஆதலால்- மேற்கூறியகுடிகள் முதலாயினோர்கூடவும், சங்கேதர்முதலாயினோர் ஒழியவும், அந்நாட்டை அரசன்காவல் புரிவனுயின், அது பிணியின்மை - புகழ்- செல்வம்- விளைவு- இன்பம்- முதலியவனைத்தும், எஞ்ஞான்றும் உளவாகும், பிறதேயங்களினுள்ளார் குலேந்துவரினும் அவர்களைத் தாங்கும், தங்கண்வாழ்வார் தேடிவருந்தாமல் அவர்கள்வேண்டுழியாவையுமளிக்கும். (அரண்,—என்பது-அந்நாட்டிற்குஉறுப்பா யடங்கியிருப்பது.)என்றால், நீர்க்கிடங்கு- வெள்ளிடைநிலம்- கானம்- மலை - என்னு மிவைகளைக்கொண்டு, புறத்தோர்க்கு அகழலாகாத அடிஅகலமும், எணியெய்தாதவுயர்வும், கல்- இட்டிகைகளாற்செய்தலிற்குத்தப்படாத்திண்மையும்உடையதாய்ப், பலவகைஎந்திரப்பாவைகளையும்அணிந்து, அகன்றவிடத்தையுடைத்தாய்,நல்லபடைவீரர்களோடு பலபொருள்களையுந்தமுவிக்காக்கவேண்டுமிடஞ்சிறிதாய், எத்திறத்தினும்புறத்தாற்கோடற்கரிதாய்,சுருங்கையாதிகளுமமைந்து,அகத்தார்விட்டஆயுதமுதலியபுறத்தாரின்மேல் எளிதிற்சேரலும், அவர்விட்டன அகத்தார்மேற்செல்லாமையுமானபோர்நிலைக்கெளிதாய நீர்மையையுடையதே, அரணெனப்படும். (பொருள்செயல்வகை,—என்பது- பெரும்பான்மையும், நாட்டானும்- அரணானும்- ஆக்கவுங் காக்கவும் படுவதாய,பொருளைச்செய்தலின்திறம்.) என்றால்,அரசன்-தன் குடிகண்மாட்டுச்செய்யும் அருளோடும், அவர்தன்மாட்டுச் செய்யும் அன்போடுங்கூடிவருகின்ற, ஆறிலொன்றாகியபொருளும்,வைத்தார்இறந்துபோகநெடுங்காலம் நிலத்தின்கட்கிடந்து பின்னர்கண்டெடுத்த பொருளும், உடையாரின்மையிற்றானே வந்துற்றபொருளும், கலத்தினுங் காலினும் வரும்பண்டங்கட்கு இறையாயபொருளும்,தன்பகைவரைத்திறையாகக்கொள்ளும்பொருளும்,ஆகியஇவ்வகைப்பொருள்களை ஈட்டல்வேண்டும்.இவ்வாறுஈட்டியபொருளானது,அவனுக்குஅறத்தையும்-இன்பத்தையும்-புகழையுங்கொடுக்கும், மேலும்பெரும்படையும்-நட்பும்- உண்டாகும் ஆகவேபகைவர்தருக்கொழிந்துதாமேயடங்குவர்,எல்லாவினைகளையும்அவனுக்கச்சமில்லாதபடிவல்லாளாயேவித்தானினிதிருந்துமுடிக்கும். (படைமாட்சி,—என்பது- அப்பொருளின்ல் ஆவதாய்வெல்வதாயபடையினது நன்மை.) என்றால், யானைமுதலிய நான்குறுப்பானும் நிறைந்து,போரின்கண் ஊறுபடுதற்கஞ்சாதுநின்று, பகையைவெல்வதாகிய படையேபடையாகும். அப்படை, கூலிப்படை- நாட்டுப்படை- காட்டுப்படை-துணைப்படை- கைப்படை - மூலப்படை - என அறுவகைப்படும். இவற்றுட் சிறந்தது மூலப்படையாகும், இதிற் சிறந்தவரோ வீரரெனப்படும். இத்தன்மைத்தாகிய படைவீரராயினோர், பகைவரைக்கடிதிற்கொன்று நிற்குந் தறுகண்மையும், அரசனுக்குத்தாழ்வுவராமற் காக்கும் மானமும்,

போரின்கண் அஞ்சினாை எதிர்த்துக்கொல்லும் ஆண்மையும், பகை யாற்கிழறுக்கப்படாத தேற்றமும், ஆகிய இக்குணங்களை யுடையவரோ யினும், அரசன்பொருள்கொடாமையால், வறுமையும் - சிறுமையும்- வெறுப்பும்- உளராயின், பகைவரைவெல்லார். அப்பொருளைக் கொடுத்த காலத்தும், அவர்வினைசெய்தற்கண் தமக்குத்தலைவரில்லாதவழியும், வெல்லார். (படைச்செருக்கு,—என்பது- அப்படையினதுமறமிகுதி.) என்றால், தமக்கெதிரில் வேல்வருங்காலத்தும் விழித்தகண்ணை இமையாதிருக்கின்ற வீறுப்பும், தமதுமெய்யின்கண் ஊறுபடாத நாள்களையெல்லாம் பயன்படாது கழிந்தநாளாகச்சினந்து நூழிலாட்டியர்கின்ற + ஆண்மையும், அவரைக்கொல்லேனாயின் யான் இன்னனாகுவனென்றுகூறிய ஓர் வஞ்சினத்தைத்தப்பாது முடிக்கவல்லதிறமும், தம்மிறைவன் அது வேண்டாவென்று முனியினுந் தமதுவீரமிகுதியிற்குன்றாதமறமும், தம்மையாண்ட அரசன் தனக்குச்செய்தநன்றிகளை நினைந்துகண்களில்நீர்மல்கும் வகைபோரிடை மடியப்பெறும்பெருமையும், ஆகிய இவையனைத்தும் மேற்கூறியபடையினது செருக்காகும். (நட்பு,—என்பது- அரசனுக்குவினையிடத்துதவுவது.) என்றால், கேட்டினைத்தருந்தீநெறிகளிற் செல்லுங்கால் விலக்கி, ஏனையநன்னெறிகளிற் செல்லாக்காற் செலுத்தி,தெய்வத்தாற்கேடுவந்துழி அதுவிலக்கப்படாமையின் அத்துன்பத்தை உடனனுபவித்து, ஆக்கையொன்றுமேவேறன்றி உயிர்உடனேநீங்கும் உரிமைத்தாய், உணர்ச்சியினும் ஒத்து, நூற்பொருள்கற்குந்தோறும் கற்றார்க்கின்பஞ்செய்தலைப்போலத், தம்முட்செய்தநட்பு பயிலுந்தோறும் மகிழ்ச்சியுண்டாகக் கலந்திருப்பதேநட்பென்று சொல்லப்படும். (நட்பாராய்தல்,—என்பது-மேறசொல்லிய விலக்கணத்தாரை ஆராய்ந்தறிந்தே நடக்க வேண்டுதலின், அவரை ஆராயுந்திறம்.) என்றால், ஒருவன் மற்றொருவனது மதியுடைமையையும் - குடிப்பிறப்பினையும் - குணத்தினையும - குற்றத்தினையும் - குறைவற்ற சுற்றத்தினையும் - எல்லாத் திறத்தினும் பலவாற்றானாராய்ந்து நட்பு செய்வானாயின், அந்நட்பு - பின் பாம்பொடு பழகிய காலத்தும் பிறிபடாத நிலைமைத்தாம். அவ்வாறு ஆராயாது கொள்ளும் நட்பு, புன்மையையும்- பழியையுந்தந்து, இருமைப்பயனையும்போக்கும். (பழைமை,— என்பது- நட்டாரது பழையராந்தன்மைபற்றி, அவர் பிழைத்தனபொறுத்தல்.) என்றால், கெடுங்காலத்து உரிமையோடும் உதவ வல்லவராகிய நட்பினர், தாஞ்செய்யு முதவியைக்கேளாது செய்யினும், கெடும்வகைசெய்தல், தமக்குவேண்டியனதாமேகோடல், பணிவின்மை, அச்சமின்மை, என்றிவைமுதலாயினஊழ்வகையாற்புரியினும், அவற்றை பழையதாய்வந்த நட்பென்றறிந்து, அவர்பிழையைநோக்கி விடுதல்செய்யாது விழைந்திருப்பாரை, நம்மாட்டும் இவரித்தன்மையாவரென்று யாவருந்தாமேவந்துநட்பாவர். அன்றியும்அத்திரிபின்மைநோக்கிப்பகைவரும் நட்டாராவர். (தீநட்பு,— என்பது-தீக்குணத்தாரோடு உளதாயநட்பு.) என்றால், கொடுப்பாரைக்கொள்ளாது விலையைக்கொள்ளும்பொதுமகளி

+ நூழிலாட்டென்பது, தன்மெய்புதைந்த படையைப்பறித்து மாற்றார் யிரித்தல்.

ணைப்போலவும், பிறர்கேடுநோக்காது அவர்சோர்வுநோக்குங் கள்வனைப் போலவும், நட்பளவுபாராது அதனால்வரும்பயனளவுபார்ப்போரும், எல்லாத்தீங்கினையும் பயப்பவராகியபேதையரும், அமர்வாராதபோதெல்லாந்தாங்குவதுபோன்று, அமர்வந்துழிவிட்டுநீங்குவோரும், விடமர்- தூர்த்தர்- வேழம்பர்- என்னுமிவர்களைப்போன்று, பலவகையால் நகுவித்துத்தாம்பயன் கொண்டொழிவாரும், தம்மான்முடியுங் கருமத்தை முடியாதாக்கிச்செய்யாதாரும், உளமுஞ்சொல்லு மொவ்வாது வேறுவேறுபிருப்பாரும், தனியேமனைக்கணிருந்துழிநட்பாடிப்,பலரோடுமன்றின்கணிருந்துழிப்பழிகூறுவாரும் ஆகியவிவர்கள், காதன்மிகுதியாற்பருகுவர்போன்றாராயினும், அவரைச்சிறிதாயினும் நணுகுதலைப் பரிக்கவேண்டும். (கூடாநட்பு,— என்பது- பகைமையால் அகத்தாற் கூடாதிருந்தே, தமக்குவாய்க்கும் இடம்பெறுந்துணையும் புறத்தாற்கூடி யொழுகுவார்நட்பு.) என்றால், நல்லனவாகிய பலநூல்களைக்கற்றவிடத்தும், அதனால்மனந்திருந்தி நட்பாதலில்லாது, கண்டபொழுது முகத்தாலினியவாகச்சிரித்து, எப்பொழுதும் மனத்தால் இன்னாதனசெய்யும்பகைவரது சொல்வணக்கமும் அவரதுதொழுகையும்- அவரழுதகண்ணீரும் - சொல்லானுங்கையானுங் கண்ணானுந்தேற்றிப், பின்னர்தப்பாது கொல்கின்றவன்படையாகும், ஆகலால் பகைமைதோன்றாமற், புறத்தின்கண்நட்பினைமிகச்செய்து, அகத்தின்கட்டன்னையிகழும் பகைவரைத், தானும் அந்நட்பின்கண்ணேயிருந்து, புறத்தின்கண் அவர்மகிழும்வண்ணஞ்செய்து, அகத்தின்கண் அதுசாம்வண்ணம்பொருந்தி நிற்றல்வேண்டும் §. அப்பகைவர்தனக்குநட்டாராயொழுகுங்காலம்வந்தால், தானும்அவரோடுமுகத்தால்நட்புசெய்து, அகத்தால்அதனைவிட்டுப்,பின்னதுவுந் தவிர்தல்வேண்டும். (பேதைமை,— என்பது- யாதுமறியாமை.) என்றால், பழி- பாவம்- வறுமை- என்பன வற்றிற்குநாணாமையும், செய்வன- தவிர்வன- அறியாமையும், குடிப்பிறப்பு- ஒழுக்கம்- கல்வி-முதலானவைகளைப்பேணாமையும், யாவர்மாட்டும் முறிந்தசொல்லாடுஞ்செயலுடைமையும், ஆகாதவொழுக்கத்தின்கட் காதன்மையும், கேடுபயப்பனவற்றைக்கொண்டு ஆக்கம்பயப்பனவற்றைக் கைவிடுக்குந்தன்மையும், பெரியசெல்வத்தைத் தெய்வத்தாலெய்தியவழியும் பயனெய்தாமையும், மனமொழிமெய்கள் அடங்குதற்கேதுவாய நூல்களையோதியும்- அவ்வடக்கத்தான் வரும்பயன்களையுணர்ந்தும்-அதனையறியலுறப்பிறர்க்குரைத்தும்- தானவையடங்கி யொழுகாமையும், ஆகிய இப்பெற்றிகளையுடையோனைப் பேதையென்றுசொல்லப்படும். (புல்லறிவாண்மை,— என்பது- புல்லியவறிவினையாடற்றன்மை,) என்றால், தாஞ்சிற்றறிவினராகவிருந்தே, தம்மைப்பேரறிவினராசமதிக்கும் புல்லறிவினையுடையார், தமக்குறுதியாயவற்றை அறிவுடையார்கூறினுங்கேளார், தாங்கல்லாதநூல்களையுங்கற்றாராகவுரைத்துத் தம்புன்மையை வெளிப்படுத்துவர், தங்கணிகழுங்குற்றங்களையறிந்து கடியாதுமறைத்து,அவ்வளவாற்ற

§ [illegible] கருமமென்பது நீதிநூலது துணிவென்பதற்கு அதன்மேல் வைத்துச்சொல்கின்றார்.

ம் உலகத்தினனைப்போலநடிப்பர், தமக்குநல்லுணர்ச்சியை யறிவிக்கப்புகும் ஆன்றோரை அறிவிலாராகநாட்டுவர், ஆதலால்- இத்தன்மையரோடு கண்ணுதிருத்தல்வேண்டும் (இகல்,— என்பது-இருவர் தம்முட்பொருது வலிதொலைத்தற் கேதுவாயமாறுபாடு.) என்றால், ஒருவன்தனக்கு வெறுப்பனசெய்தானாயினும், அவனோடுமாறுபடுதலைக்குறித்துத்தான் அவனுக்குஇன்னாதவற்றைச் செய்யாதிருப்பனாயின், அவனுக்குப்பகைவரும் உறவாவர், எல்லாச்செல்வமும்பலிக்கும், கொடைமுதலிய காரணங்களாற் புகழும்பெறுவன். பிறரோடுமாறுபடுதற்கண்மிகுதல் எனக்கு இனிதென்று இன்னாதனசெய்வனாயின், உடனேதமரும் ஏதிலராவர், பகைமைவளரும், வலிதொலையும், பொருட்கேடும்- உயிர்க்கேடும்- அப்பொழுதே யுண்டாகும். (பகைமாட்சி,— என்பது- அறிவின்மைமுதலிய குற்றங்களுடைமையாற் பகையைமாட்சிப்படுத்தல்.) என்றால், படைபொருள்முதலியவேற்றுமைத்துணையும், நல்லறிவுடைமை நீதிநூல்வழியொழுகல் முதலியஒற்றுமைத்துணையும், ஆகிய இருவகைத்துணையுமுள்ளவலியார்மேற்பகையாயெதிர்த்தலையொழித்தல்வேண்டும். அவ்விருவகைத்துணையினும், சுற்றம்- பொருள்- நட்பு- படை-என்னுமிவைகளினும்மெலியராயுள்ளார், அஞ்சவேண்டாதவற்றிற்கஞ்சுவோர், அறியவேண்டுமவற்றை அறியாதார், பிறரோடுபொருத்தமில்லாதார்,யாவர்மாட்டும் ஈகையில்லாதார், நலியாதவெகுளியையுடையார்,நிறையின்மையையுடையார்,மிக்கதாமதத்தையுடையார், நீதிநூலைக்கல்லாதார், தமக்குவரும்பழியை யாராயாதார் பண்பில்லாதார்,என்னுமிவர்களோடு பகையாதலையொழியாதுவிரும்பல்வேண்டும். (பகைத்திறந்தெரிதல்,—என்பது-பகையதுதிறமும்,பகையிடத்தாக்குந்திறமுமாராய்தல்.) என்றால்,தனக்குவேண்டியவழிபகையைவேறுபடுத்துநட்பாகச்செய்துகொண்டொழுகலும், வீரமேயுடையாரோடுபகைகொண்டாலும்நீதிநூலறிந்தாரோடுபகைகொள்ளாமையும்,சுற்றம்- நட்பு-படை-முதலியதுணையில்லாதவழியும் இருந்தவழியும்பலரோடுபகைகொள்ளாமையும், தனக்குதவிசெய்யுந்துணையில்லாதகாலத்துப்பகையிரண்டாயின் அதிலொன்றைவெல்லுமாறுமற்றொன்றையுறவாக்கிக்கொள்ளுதலும், ஆகியவித்திறங்களை அரசன் இயல்பாக வுடையனாதல்வேண்டும். அன்றியும்- தான்மெலியதென்று இகழ்ந்தபகையே பின்னர் வலியதாய்த்தன்னைக்களையலுறுமாதலால், அவ்வாறுகாமுன்னம் அதுமெலியதாயகாலத்தே களைதல்வேண்டும். தனக்குப்புறத்தொருவினையாற்றாழ்வுவந்துழித்தன்பகைவனைமுன் தெளிந்தானாயினும், தெளிந்திலனாயினும்,அவனைநொதுமலாக்கி, அவனோடுகூடுதலையும் - பிரிதலையும்- ஒழித்தல்வேண்டும். ¶ பின்னர் அப்பகையைக்களையவேண்டின், பொருள்- படையாதிகளைப்பெருக்கித், தான்அப்பகைக்கெதிரே பொருமாற்றினை யாராய்ந்து, தான்வலியனாயவளவிற் களைதல்வேண்டும். (உட்பகை,— என்பது- புறப்பகைக்கு இடனாக்கிக்கொடுத்து, அதுவெல்லுந்துணையும் உள்ளாய் நிற்கும்பகை.)

¶ முன்தெளிந்தானாயினும் அப்பொழுது கூடாதொழிகவென்றது உள்ளாய்நின்று கெடுத்தலைநோக்கி. தெளிந்திலனாயினும் அப்பொழுதுபிரியாதொழிகவென்றது, அவ்வழிவிற்குத்துணையாதலைநோக்கி.

என்றால், புறத்து உறவுமுறைத்தன்மையோடுங்கூடி, அமைச்சர் முதலி
ய உறுப்புகளைத் தேய்ப்பாரும், சுற்றத்தாரை உள்ளாய்நின்று வேறுபடு
த்துவாரும், தன்குடிகருத் தீங்காற்றியழிப்பாரும், உட்பகையராதலால்,
அவரையஞ்சி, அவரணையாமலும், அவர்க்குடம் படாமலும், தன்னைக்
காத்துக்கொண்டொழுகல் வேண்டும். ஒருகாற் கூடுவராயின், உடனே அ
வரைக் கடிதல் வேண்டும். (பெரியாரைப்பிழையாமை,— என்பது- பெ
ரியராயினாரை அவமதித்தொழுகாமை.) என்றால், பெருமை - அறிவு-
முயற்சி- என்னு மூவகையாற்றல்களு முடையவேந்தரையும், தவத்திற்சி
றந்த முனிவரையும் போற்றி யொழுகவல்லார்க்கு, அவரீட்டிவைத்த எ
ல்லாப் பொருள்களும் விருத்தியடையும், அவமதிப்பார்க்கு அரண்- ப
டை- பொருள்- நட்பு- என்னும் இச்சார்புகளிருந்தும், அழிந்து விடுவர்.
இப்பிழையொன்றனால், திரிபுரன்- சூரபன்மன்- முதலியஅசுரர்களும்,இ
ந்திரன்- திருமால்-முதலியதேவர்களுந் தளர்ந்தனரென்னில், இன்னுமெ
வ்வாறுரைக்கற்பாலது. (பெண்வழிச்சேறல்,—என்பது- தன்வழியொழு
கற்பாலளாய இல்லாள்வழியேதானொழுகல்.) என்றால், ஒருவன் இன்பங்
காரணமாகத் தன்மனையாளைவிழைந்து, அவள்தன்மையனா யொழுகுவா
னெனில், தனக்கின்றுணையாய அறம்பொருளையெய்தான்,செல்வமிருந்த
காலத்தும்-ஈதல்- துய்த்தல்- முதலியபயன்களைக்கொள்ளான், மறுமைப்
பயனும் அணுகான், எல்லாப்பிழையும் அவனுக்குமுன்னிற்கும், பின்ன
ர்அஃதுபெரியநாணும்-அழியாப்பழியும்- அவனுக்குண்டாக்கும். (வரை
வின்மகளிர்,—என்பது-தந்நலம்,விலைகொடுப்பார்யாவர்க்கும் விற்பதல்ல
து,அதற்குஆவார்-ஆகாதார்என்னும்வரைவில்லாதமகளிரதுஇயல்பு.)என்
றால், ஆடல்- பாடல்- அழகு- என்பனவற்றால் - ஆடவர்க்கு இச்சையை
ப்பெருக்கி, உளமொவ்வாதசொற்செயல்களாற்றம்வசமாக்கி, முற்றினும்
பொருளைப்பறித்து விடுகின்றபழிநாணாதபரத்தையர் முயக்கத்தையொழி
யாதவரை, ஆய்ந்து செய்யும் அறிவினையுடையார்தீண்டார்.(கள்ளுண்ணா
மை,—என்பது-கள்ளினையுண்ணாமையதுசிறப்பு.) என்றால், ஒருவன்கள்
ளின்மேற்காதல் செய்தொழுகுவனாயின், அது அவனது அறிவையும்-
செயலையும்- மானத்தையும்- அழிப்பதன்றி, சான்றோரால் மதிக்கப்படா
த செருக்கினைவிளைக்கும், யாதுசெய்யினும் உவக்கவல்ல ஈன்றாளும் மன
முறிவள், யாவர்க்கும் வெறுப்பையுங் கோபத்தையும்உண்டாக்கும்,பொ
ருள்படைமுதலியவற்றாற் பெரியனாயகாலத்தும், அறிவின்மையாற் பகை
வர் அஞ்சார், உள்ளூர்வாழ்பவரால் எஞ்ஞான்றும் நகுதல்செய்யப் படு
வன். (சூது,—என்பது- அக்கள்ளுண்ணல்போல, அறம்பொருளின்பங்
கட்கு இடையீடாகிய சூதினையாடல்.) என்றால், சூதினையாடுவான் தான்
வெல்லுமாற்றலுடையானாயினும், அவ்வென்றபொருள் ஒன்றுக்கும்பின்
தானெய்தியபொருள் ஆயிரமாக அழியும், அதுவன்றித்தானீட்டிய பொ
ருளுந்தன்பொருள்வருவாயுங்கெடும், அதுகண்டியாவரும் பகையாவர்,
அமைச்சர்முதலிய உறுப்புக்களும் ஒழியும், ஒளி-கல்வி-செல்வம்-உணவு
உடை- என்னுமிவைகளோடு மறுமைப்பயனுமுண்டாகாது. (மருந்து,—
என்பது- பழவினையானுங் காரணங்களானும் மக்கட்கு வாதமுதலிய பி
ணிகள்வரும்,அவற்றுள்பழவினையால்வருவன அதன்கழிவின்கணல்லது தீ

ராமையின் அவையொழித்து,ஏனைக்காரணங்களால் வருவனவற்றைத்தீர்க்கும் மருந்தின்நால்வகைத்திறம். ‡)என்றால், உணவுஞ்செயல்களும்ஒருவன்பகுதிக்கொத்த * அளவினவன்றி, அதனின்மிகுமாயினுங்குறையுமாயினும்,ஆயுள்வேதமுடையோரால், வாதநோய்-பித்தநோய்-ஐயநோய்-என்று சொலலப்பட்டமூன்றுநோயும் அவனுக்குத் துன்பஞ்செய்யு மாதலால், மனமொழிமெய்களாலாயதொழில்களைச்செய்யுங்கால்அவைகள்வருந்தாமல், முன்னுண்டது அற்றறபின்னுண்பதனை அறுமளவறிந்து, மாறுகொள்ளாத ¶ இனியஉணவை மிகப்பசித்தவிடத்துத்தன்னுள்ளம்வேண்டியவளவினனன்றிப் பிணிவாராவளவினல் உண்ணல்வேண்டும். அவ்வாறுண்ணில் பிணிகளாற்றுன்பம் விளைதலுண்டாகாது. ஒருகால் அம்முறைகள்பிறழப்பிணிநேருமாயின், ஆதுரனளவினையும், அவன்பால்நிகழ்கின்றநோயினளவினையும், தன்செயற்கேற்ற காலத்தினளவினையும் § , நூ

---

‡ மருந்தாவது- பிணியுற்றவன், அதனைத்தீர்க்குமருத்துவன், அவனுக்குக்கருவியாகியமருந்து, அதனைப்பிழையாமையியற்றுவான், என நான்குபகுதி யையுடையநான்குதிறத்ததாம்.அவற்றுள் உற்றவன்வகைநான்காவன,பொருளுடைமை-மருத்துவன்வழிநிற்றல்-நோய்நிலை யுணர்த்தல்வன்மை-மருத்துத்துன்பம்பொறுத்தல்-எனவிவை. தீர்ப்பான்வகைநான்காவன,பலநோய்காண்டற்கஞ்சாமை-ஆசிரியனை வழிபட்டோதியகல்வியுதுண்ணறிவு முடைமை-பலகாலுந்தீர்த்துவருதல்-மனமொழிமெய்கள்தூயவாதல்-எனவிவை. மருந்தின்வகைநான்காவன, பலபிணிகட்குமேற்றல்-சுவை,வீரியம்,விளைவாற்றல்களான் மேம்படுதல் - எளிதினெய்தப்படுதல்பகுதியோடுபொருந்துதல்-எனவிவை. இயற்றுவான்வகைநான்காவன,ஆதுரன்மாட்டன்புடைமை- மனமொழிமெய்க டூயவாதல்-சொல்லியனஅவ்வாறேசெய்தல்வன்மை-அறிவுடைமை-எனவிவை. இவையெல்லாங்கூடிய வழியல்லது பிணிதீராமையின் இத்தொகுதியையும் மருந்தென்றார்

* அவைகட்குஉணவொத்தலாவது-சுவை வீரியங்களானும்,அளவானும், பொருந்துதல். செயல்களொத்தலாவது- மனமொழி மெய்களாற்செய்யுந்தொழில்களை, அவைவருந்துவதற்கு முன்னேயொழிதல்.

¶ மாறுகொள்ளாமையாவது- உண்பான்பகுதியோடு மாறுகொள்ளாமையும்,காலவியல்போடு மாறுகொள்ளாமையும், சுவைவீரியங்களாற்றம்முண்மாறுகொள்ளாமையுமாம். அவயாவன-முறையே,வாதபித்தஐயங்களினுயபகுதிக்கு அடாதவற்றைச்செய்வனவாதலும், பெறும்பொழுதுசிறுபொழுதுஎன்னுங்காலவேறுபாடுகளுள்ஒன்றற்காவனபிறிதொன்றற்காகாமையும்,தேனுநெய்யுந்தம்முளொத்துநஞ்சாதல்போலவனவுமாம்.

§ ஆதுரன்அளவாவது, பகுதி- பருவம்- வேதனை- வலிகளினள்வாம். பிணியளவாவது, சாத்தியம்- அசாத்தியம்-யாப்பியம் - என்னுஞ்சாதிவேறுபாடும், தொடக்கம்- நடுவு- ஈறு- என்னும் அதன்பருவவேறுபாடும், வன்மைமென்மைகளு முதலாயினவாம். இவற்றுள்- சாத்தியம்தீர்க்கத்தக்கது. அசாத்தியம்தீர்க்கத்தகாதது.யாப்பியம்பெரும்பான்மைதீர்க்கத்தக்கதும் சிறுபான்மைதீர்க்கத்தகாதது மெனக்கொள்ளத்தக்கது. காலவளவாவது- மேற்சொல்லியனவாம்.

னெறியானும் உணர்வுமிகுதியானும்-ஆராய்ந்துசெய்யவல்ல வயித்தியன் வழிநின்று, அப்பிணியையொழிக்கவேண்டும். குடிமை,—என்பது-உயர்ந்தகுடியின்கட்பிறந்தாரது தன்மை.)என்றால், எக்காலத்துந்திரிபில்லாத குடியின்கட்பிறந்தார், கருத்துஞ்-சொல்லுஞ்-செயலுந், தம்முண்மாறாகாது ஒத்திருக்கின்றவொழுக்கம்-மெய்ம்மொழி-நாண்- எனப்பட்ட இம்மூன்றன்கண்ணுங்,கல்வியானன்றித்தாமாகவேவழுவார். அவரே தம்மைவறியாரடைந்தவழிமுகமலர்ச்சியும், உள்ளனகொடுத்தலும், இகழாமையும், இன்சொற்சொல்லுதலும், ஆகிய இந்நான்குமுடையார். அவர்கள்வறுமையுற்றவழியுந்,தம்மொழுக்கங்குன்றுந்தொழில்களைச்செய்யார். (மானம்,—என்பது- என்ஞான்றுந்தன்னிலைமையிற்றாழாமையுந்,தெய்வத்தாற்றாழ்வுவந்துழிஉயிர்வாழாமையுமாம்.)என்றால்,குடியிற்பிறந்தார்க்குநிறைந்தசெல்வமுளதாயவழியாவர்மாட்டும்பணிவுவேண்டும்,குறைந்தநல்குரவுஉளதாயவழிப்பணியாமைவேண்டும் ‡. தங்குடிப்பிறப்புத்தாழவருஞ்செய்கைகளைச் செய்யாதவழி அவைதாம் அமையாதசிறப்பினை யுடையவேயெனினுந், தமதுமானத்தைமுறுக்கவல்ல அச்செயல்களையொழித்தல்வெண்டும். தமதுவலியாகிய அம்மானம்ஊழியின்வலியால்,அழியுமெனில் தன்மயிர்த்திரளின் ஒருமயிர்நீங்கினும் உயிர்வாழாதகவரிமாவையொத்திருத்தல்வேண்டும்.(பெருமை,—என்பது-பெரியாரதுதன்மை,)என்றால்,ஒருவன்உயர்ந்தகுடியின்கட்பிறந்து, அருநூல்களையாராய்ந்து,செல்வத்திற்சிறந்தானேனும், அளவிறந்தஈகை-ஒப்புரவு-முதலியவைகளாற்பிறராற்செயற்கரியசெய்து பிறர்குற்றங்கூறாமலுந்தருக்காமலுமிருந்து,தனதுநெறியிற்பிறழாமல்,தன்னைத்தான்காத்துக்கொண்டொழுகானெனில், அவனுக்குப் பெருமையில்லையாம். (சான்றாண்மை,—என்பது - பலகுணங்களானு நிறைந்து அவற்றையாளுந்தன்மை.) என்றால், சுற்றத்தார்மேலேயன்றிப் பிறர்மேலுமுளதாயஅன்பு, யாவர்மாட்டும் ஒப்புரவுசெய்தல்,பழையார்மேற்கண்ணோடல், பழிபாவங்களினாணல், முதலியநற்குணங்களால் நிறைந்தசான்றோர்கள், தமக்கின்னாதனவற்றைச்செய்தார்க்கும் இனியவற்றையே செய்வர் ஒருகருமத்தைச்செய்துமுடிக்கப்புகின், அதற்குத்துணையாவாரைத்தாழ்ந்துகூட்டிக்கொள்ளுவர். கடலுங்கரையுணில்லாமற்காலந்திரிந்தாலுந்,தாந்திரியார். தம்மினுயர்ந்தார்மாட்டுக்கொள்ளுந் தோல்வியைஇழிந்தார்மாட்டுங்கொள்ளுவர். (பண்புடைமை,— என்பது-பெருமைசான்றாண்மைகளிற்றாம்வழுவாதுநின்றே,எல்லாரியல்புகளுமறிந்து ஒத்தொழுகல்.) என்றால், உலகத்தோடமைந்த குடியின்கண்பிறத்தலும்,பிறர்மேலன்புடையராதலும், யாவர்மாட்டும்எளியசெவ்வியராதலும், அறத்தினும் நீதியினும் வழுவாதிருத்தலும், ஆகியஇப்பண்புகள் சான்றமக்களது பண்பாகும். இதனையுடையவர் ஒருவனைவிளையாட்டின்கண்ணுமிகழார், பகையிடத்தும் அதனைப்புரியார். அத்தன்மையரது நற்குணத்தையே உலகத்தார் கொண்டாடாநிற்பர். அவர்பாலே எல்லாப் பயனுங்கோடற்கேற்ற பெருஞ்செல்வமுண்டாகும். (நன்றியில்செல்வம்,— என்பது- ஈட்டியார்க்கும் பி

‡ செல்வக்காலை அஃதுயர்ச்சிசெய்யத்தாந்தாழ்தலும், அல்லற்காலை அதுதாழ்வுசெய்யத் தாமுயர்தலும் வேண்டுமென்பதாம்.

ஙர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினியல்பு.) என்றால், தன்மனை
யகலமெல்லாம் நிறைதற்கேதுவாய பெரும்பொருளை ஈட்டிவைத்தும்
உலோபத்தால் அதனையுண்ணாதவனும், பிறர்க்கீயாதவனும், உயிரோடிரு
ந்தானாயினும் இறந்தவனோடொப்பாவன். அன்றியும் அவன்செத்தபின்பு
அதனைத்தீயார்கொண்டுபோய்ப் பயன்பெறுவரல்லது, அக்காலத்து அவ
னென்செய்யவல்லன். ஆதலால் அறனும்இன்பமுஞ்செய்துகொள்ளானு
க்குப்,பொருளினைஈட்டலுந்துன்பமேயாம். (நாணுடைமை,— என்பது-
மேற்சொல்லியசால்பு பண்புமுதலியகுணங்களானுயர்ந்தோர், தமக்கொ
வ்வாதகருமங்களில் நாணுதலுடையராந்தன்மை.) என்றால், இழிந்தகரு
மங்காரணமாக நாணுவதேளய்தற்கரிய நாணென்றுசொல்லப்படும். அஃ
தன்றி-மனமொழிமெய்கள் ஒடுக்கத்தான்வருவனவெல்லாம், அழகியநுத
லினையுடையகுலமகளிர்நாண்களாம். ஆதலால் நன்மக்களாயினோர் தமக்
கேமமாகநாணினைக்கொள்வதன்றி, அகன்றஞாலத்தைக்கொள்ளவும்விரு
ம்பார். அந்நாணென்றினால்,தமது பிறப்பு- கல்வி- குணம்- செயல்-இன்
பம்- என்பனவைகளைவளர்ப்பார். மேலும் அவர்நாண்சிதையாமற் பொ
ருட்டு உயிரைநீப்பரேயன்றி, உயிர்சிதையாமற்பொருட்டு நாணினைநீக்கா
ர். (குடிசெயல்வகை,— என்பது-ஒருவன்தான்பிறந்தகுடியைஉயரச்செ
ய்தலின்திறம்.) என்றால், தன்குடிசெய்தற்பொருட்டுத்தொடங்கியகரும
ம் முற்றுதாயின், யானெண்ணியகருமத்தைமுடித்தேவிடுவனென்னுமுய
ற்சியும், அறிவும், என்றுசொல்லப்பட்ட இரண்டினுள்ளுங்கெடாது உய
ர்ந்தவனே,தன்குடியினைஉயரச்செய்வானவன். அச்செயலைநோக்காது,கா
லத்தைநோக்கி மடியினைச்செய்துகொண்டு † மானத்தையுங் கருதுவனா
யின், அதனைக்கெடுத்தோனவன். ஆதலால் தன்குடிஒருபற்றின்றி வீழாநி
ற்குங்காலத்துப், பற்றுவனகொடுத்து அதைத்தாங்கவல்லவனே, நல்லஆ
ண்மகனாகும். (உழவு,— என்பது- சிறுபான்மைவாணிகர்க்கும், பெரும்
பான்மை வேளாளர்க்கும் உரித்தாயஉழுதற்றொழில்.) என்றால், அந்தண
ர்- அரசர்- வாணிகர்- வேளாளர்- என்னு நால்வகைவருணத்தாருள், மு
ன்னிருவரும் உழுவித்துண்ணலாகும், பின்னிருவர் உழுவித்தும்-உழுது
ம்- உண்ணலாகும். ஆதலால்யாவரும் உண்ணும்வகை உழுதலைச்செய்து
அதனாற்றாமும்உண்டுவாழ்கின்றாரோதமக்குரியராய்வாழ்கின்றவர். அவரோ
தம்மை இரப்பார்க்கு அவர்வேண்டியதொன்றனைக் கரவாது கொடுப்பவ
ர். மற்றையாரெல்லாம், தாமும்மக்கட்பிறப்பினராயிருந்தும்,பிறரைத்தொ
ழுது, அவர்சிலகொடுப்பத் தம்முயிரோம்பி, அவர்பின்செல்வதற் குரியர்
அன்றியும் உழுதலால்வரும்மெய்வருத்தநோக்கிப், பிறதொழில்களைச்செ
ய்து திரிந்துபொருளெய்தினரும், முடிவில் தம்முணவின் பொருட்டு உ
ழுவார்கட்செல்லவேண்டுதலின், எத்தொழிலினும் முதன்மைத்தாயது உ
ழவேயாம். (நல்குரவு,—என்பது- நுகரப்படுவனயாவுமில்லாமை.) என்

---

† காலத்தைநோக்கி மடிசெய்தலாவது, வெயில்- மழை- பனி- என்
பன உடைமைநோக்கிப், பின்னர்ச்செய்துமென்றொழிந்திருத்தல். மான
ங்கருதுதலாவது, இக்குடியிலுள்ளார் யாவரும்பின்பமுற, இக்காலத்துத்து
ன்பமுறுவேன்யானோவென்று உட்கொடல்.

றால்,ஒருவனுக்குவறுமைபோல இன்னாதுவறுமையேயன்றிப்,பிறிதில்லை.
அவ்வறுமையானது இரிவந்தசொற்பிறவாத குடிப்பிறந்தார் மாட்டேயு
ம், அதுபிறத்தற்கேதுவாகிய சோர்வினையுண்டாக்கும், தன்னாற் பற்றப்ப
ட்டாருடைய பழையகுடிவரவினையும்- செயலினையும்- அதற்கேற்றசொ
ல்லினையும்- ஒருங்கேகெடுக்கும், இரத்தல்முதலிய எல்லாத்துன்பங்களை
யும் + விளைவிக்கும், அதனாற்றன்னையீன்ற தாயானும் பிறனைக்கருது மா
றுபோலக்கருதிநோக்கப்படும். ஆதலால் அதுவந்துழி இறத்தலேநன்றாம்
(இரவு,—என்பது-மேற்கூறிய இறத்தலைவிலக்குவதாயமானந்திராவிரவு.)
என்றால், இவ்வுலகத்துள்இரத்தற்கேற்புடையராயசிலர்,தம்மைக்குறிப்பி
னுணர்ந்து மொழியாமுன்னங்கொடுக்கவல்ல ஈவார்மாட்டிரத்தலால், தங்
கள் ஒழுக்கமும் மானமுங்குன்றாவகைத்,தங்களுயிரைத்துறத்தலின்றிவா
ழ்ந்திருக்கின்றனர். மேலும்- ஒருவன்தானியற்றுங்கொடையின்கண் அள
விற்சிறந்தானாயினும், அவன்பாற்சென்று ஒன்றனைஇரந்துகோடலை விரு
ம்புவாரில்வழி, அவன்மாட்டு என்னபுகழுண்டாமாதலால்,ஈவாருக்குஇர
ப்பாரில்லாது புகழில்லை. (இரவச்சம்,—என்பது- மானந்தீரவருமிரவிற
கஞ்சுதல்.) என்றால், தமக்குள்ளது கரவாது, இவர்வரப்பெற்றேமென்று
உண்மகிழ்ந்துகொடுக்குங் கண்போலச் சிறந்தாரேனும்,அவர்மாட்டு ஒரு
வன் மானங்கெடத்தந்நாவினால் அறத்தைக்குறித்தேனுமிரவாது நிற்றல்,
அவ்வறத்தாற்பயனெய்தலிற் கோடிமடங்குநன்றாம். ஆதலால்- நுகரவே
ண்டுவனவின்றி நல்கூர்ந்தவழியும், பிறர்பாற்சென்றிரத்தலை யுடம்படாத
அமைதி, எல்லாவுலகும் ஒருங்கியைந்தாலுங் கொள்ளாத பெருமையு
டைத்தென்றறிந்தவர்கள், தமதுநெறியாயமுயற்சிகொடுவந்துதந்தது,செ
றிவின்றித்தெளிந்த நீர்போலும் அடுபுற்கையாயினும், அதனை அமிழ்தத்
தோடொக்கநினைத்து மனமுவப்பர். (கயமை,—என்பது- அறம்பொருளி
ரண்டனுள்ளும் இதுகாறுங்கூறப்பட்டகுணங்களுள் யாதுமிலராயகீழா
ரதுதன்மை.) என்றால், ஒருவன்தனதுசெல்வத்தாற், படுங்-துகிலுமுடு
த்தலையும், பாலோடடிசிலுண்டலையுங்கண்டு, அவற்றைப்பொறாது, அவ
ன்மாட்டுவடுவில்லையாகவும்உண்டாக்கவல்லவன்கயவனும்.அவன்அரசனா
ல் ஏதம்வருமென்றஞ்சுமச்சத்தானும், தன்னால் அவாவப்படும்பொருள்
அதனாலுண்டாகுமென்னுமாசையானுமேயன்றித், தன்னியல்பின் ஓர் ஆ
சாரம்புரியான். ஒருவனாற் றான்கேட்டமறைச்சொற்களைஇடந்தோறுந்தா
ங்கிக்கொண்டுசென்று பிறர்க்குச்சொல்லுவான். தன்னிற்சுருங்கிப் பட்டி
யாயொழுகுவானைக்கண்டானாயின், அவ்வொழுக்கத்தின்கண் அவரிற்றான்
மேம்பட்டு,அதனாற்றன்மிகுதிகாட்டி இறுமாப்பன். தானுண்டு பூசியகை
யைத் தெறித்தல் வேண்டுமென்று மெலியராயுள்ளார் இரந்தாலுந்தெ
றியான். இவ்வுலகத்துள் அவன் எற்றிற்குரியனென்னில், உணவின்மை
முதலிய எதினாலேனுந் தன்னை யொருதுன்பமுற்றக்கால், அதுவே ப

+ எல்லாத்துன்பங்களையுமென்றது- செல்வர்கடைநோக்கிச் சேற
ற்றுன்பமும், அவரைக்காண்டற்றுன்பமும், கண்டான்மறுத்துழிநிகழுந்து
ன்பமும், மறாதவழி அவர்கொடுத்தது வாங்கற்றுன்பமும், அது கொடுவ
ந்து நுகர்வனகூட்டற்றுன்பமுமுதலாயின.

ம்றுக்கோட்டாகவிளைந்து, தன்னைப்பிறர்க்குவிற்றற்குரியனேயன்றி,வேறொ
த்தொழிற்கும் உரியானல்லன். இவ்வாறு அரசநீதியை அறத் தாற்றினாற்
செய்து, அகிலத்தைக்காத்துப்பொரு ளீட்டவல்ல திறத்தினை யெல்லாம்
தக்கனுக்கு முக்கலமுனிவர் உபதேசித்தபின்னர், அத்தக்கன் அவையினை
த்தையுஞ் செவிக்கமுதாகக்கேட்டு, வாசனையூட்டிய தாம்புலாதியினை வை
த்து, சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, பிராமணர் முதலானபெரி
யோர்கட்கு அளவற்றதானங்களைநடாத்தி, ஆதுலர்க்குச்சாலை - ஓதுவா
ர்க்குணவு- அறுசமயத்தார்க்குண்டி- பசுவுக்குவாயுறை - சிறைச்சோறு-
ஐயம்- தின்பண்டநல்கல்- அறவைச்சோறு- மகப்பெறுவித்தல் - மகவுவ
ளர்த்தல்- மகப்பால்வார்த்தல்- அறவைப் பிணஞ்சுடுதல்- அறவைத்தூரி
யம்- சுண்ணம்- நோய்மருந்து- வண்ணார்- நாவிதர்- கண்ணாடி- காதோலை
கண்மருந்து- தலைக்கெண்ணெய் - பெண்போகம் - பிறர்துயர்காத்தல்- த
ண்ணீர்ப்பந்தல்- மடம்- தடம்- சோலை- ஆவுரிஞ்சுதறி- விலங்கிற்குணவு
ஏறுவிடுத்தல்- விலைகொடுத்துயிர்காத்தல்- கன்னிகாதானம்-என்கின்றமு
ப்பானிரண்டறங்களையுமியற்றி, அளவற்றதேவாலயங்கட்குத் திருப்பணி
முதலியவைகளைநடப்பித்து, உமாதேவி- சரஸ்வதி- இலக்குமி- முதலிய-
சத்தியாலயங்கட்கு,மங்கிலியம் ஆடையாபரணாதிகளை வரிசைதந்து,ஆதி
சைவப்பிராமணர்கட்கெல்லாம் ஆகமவிதிப்படிபூசனைபுரிந்து, அமைச்சர்
முதலாயினோர்க்குத்-தேர்- கரி- பரி- பதாதி- நிலம்- முதலியவைகளைவெ
குமதிசெய்து, சிவாலயங்கட்கெல்லாந் திருவிழாக்கள்நடப்பித்து, ஆகாய
முகட்டையளாவத்தக்க கோபுரங்களோடும் ஓராலயமெழுப்பி, அதிற்
கணேசமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து, முக்கலமுனிவரால் விதித்த
விதியின்படித்தினந்தோறும் பூசனைகளைநடாத்தி, வயிற்றிற்சுமக்காது பெ
ற்றதாயாகிய சுலபையின்பாதத்தையும், சுமந்துபெற்றதாயாகிய கமலையி
ன்பாதத்தையும் இடைவிடாதுபணிந்து, எத்திக்கினுஞ்சத்துருக்களில்லா
தபடி இவ்வுலகத்தையெல்லாந் தனதொருகுடைநீழலிலிருத்தி, நீதிநெறி
தவறாமல், தேவேந்திரனைப்போலச் சகலபோகங்களையு மனுபவித்து அர
சாக்ஷிசெய்து, எல்லா உயிர்களையுமாதரித்து வந்தான். அக்காலத்தில்அத்
தக்கனுடைய தந்தையாகியுங், கருநாடதேயத்திற் கரசனாகியு மிருக்கின்ற
வல்லவராசனானவன்,தனதுகுமாரன் சகலவியாதிகளுநீங்கப்பெற்று,நல்ல
கீர்த்தியோடும் விதற்பதேயத்தையாண்டுகொண் டிருக்கின்றானென்றுகே
ள்வியுற்றுத், தனது சேனைசமூகத்தோடும்அங்குவந்து,புதல்வனைக்கண்டு
அளவளாவி, மிகுந்தமகிழ்ச்சியோடுங் கலந்திருந்தான். மற்றையருஞ்சந்
தோஷமாகச்சேர்ந்து வாழ்ந்திருந்தார்கள். பின்னர்வீரசேனனென்னுமர
ரசன்சொப்பனத்தில் விநாயகக்கடவுளெழுந்தருளி, உனது குமாரத்தி
முற்சனனத்திற் செய்திருக்கின்ற பூஜாபலத்தினால், அவளைத் தக்கன்வி
வாகஞ்செய்து கொள்ளுவான், அவ்வாறே நீ நடந்துகொள்ளக் கடவை
யென்று திருவாய்மலர்ந்தருள, அவ்வரசன் கண்விழித்து ஆனந்தமடைந்
து, கணேசமூர்த்தியினுடைய உத்தரவின்படி தன்குமாரத்தியை அத்தக்
கனுக்கு விவாகஞ்செய்துக் கொடுத்தான். அதன்பின்னர் விநாயகமூர்த்தி
யினுடைய திருவருளினால் அவனுக்குப் பிரகற்பானுபிறந்தான், அவனுக்
குக் கட்கதரன் பிறந்தான், அவனுக்குச் சுபாலன்பிறந்தான், அவனுக்கு

எதாகரன் பிறந்தான், அவனுக்கு வபுத்திரத்தன்பிறந்தான், அவனுக்குச் சித்திரசேனன் பிறந்தான், அவனுக்கு வீமனாகிய நீ பிறந்தாய், தக்கன் முதலாக உன்தந்தைவரையிலிருந்த யாவர்களும், விநாயகக்கடவுளுடைய பாதாரவிந்தங்களிற் குறைவற்ற அன்போடும் பூசைசெய்து வந்தார்களாதலால், இனி நீயும் அவ்வாறே பூசைசெய்துவந்தால், உனதிட்டமெல்லாம் உடனே சித்தியாகுமென்றுசொல்லிப், பிரமனாதியராலுங் காண்டற்கரிய அவ்விநாயகமூர்த்தியைப் பூசனைசெய்யவேண்டிய விதியையுங் கேளென்று விசுவாமித்திரமுனிவர் சொல்வதாயினர். அரசனே- விநாயகமூர்த்தியினுடைய கருணையுண்டாகத் தக்க ஏகாக்ஷரமந்திரமே,பாவங்களனைத்தையும்விலக்கி, அவ்வவர்கள் கருதியவரங்களை இம்மைமிற்றானே தந்து காக்கத்தக்கது. அம்மேலான மனுவை யுனக்குபதேசிக்கின்றோம், நீஸ்நானஞ்செய்து விரைவில்வரக்கடவையென்ன, அவ்வாறேவீமராசன் ஸ்நாஞ்செய்துவர, விசுவாமித்திரமுனிவர் ஓமாதிக்கிரியைகளைச்செய்து, கணேசமூர்த்தியினுடைய ஏகாக்ஷரமந்திரத்தை யுபதேசித்து, அதை அநுட்டிக்குமுறைமையையுஞ்சொல்லி, உனதுபட்டணத்தைச்சேர்ந்து, முன்னர் தக்கனாற் பிரதிரட்டைசெய்துவைத்த விநாயகராலயத்திலிருந்து, தினந்தோறுஞ்செபஞ் செய்துவருவாயென்று மிகுந்த கருணையோடுஞ்சொல்ல, வீமராசன் அவ்விசுவாமித்திரமுனிவரிடத்தில்விடைபெற்றுக்கொண்டு, தன்மனைவியோடும் அவ்வனத்தைப்பிரிந்துநகரத்தெல்லையைச்சார்ந்தான். இப்பால்மீளவும் அரசன்வருகின்றதை அவன் அமைச்சர்களறிந்து, பட்டத்துயானையையுஞ் சொர்னச்சிவிகையினையு மலங்கரித்துச், சகலபரிசனங்களும் புடைசூழ்ந்து வரும்படி எதிர்கொண்டுசென்று, அரசனைக்கண்டு தீர்க்கதண்டன்செய்து, பிரிந்திருந்ததாய் தந்தையரைக்கண்ட இளம் பிள்ளைகள்போல அதிக மகிழ்ச்சிபொங்க விருந்தார்கள். பின்னர் அரசன் தனதுபட்டத்து யானைமீது ஆரோகணித்துத், தன்மனைவியைச் சிவிகையி லிருக்கச்செய்து, சகல வாத்தியங்களுங் கோஷிக்கும்படியாகப் பற்பலவரிசைகளோடும்பட்டணத்துள்வந்து, அரமனைக்குட் பிரவேசித்து, அந்தணர் முதலாயினோர்க்கு அளவற்றதிரவியங்களைத் தானஞ்செய்து, தன்னைத்தரிசிக்கவந்த சகலசனங்கட்குந் தனது கிருபையைவழங்கி, அமைச்சர்களைநோக்கி, நீங்கள் முன்போலவே அரசுரிமையைநடாத்தி வாருங்களென்று கட்டளையிட்டு, தக்கனாற் பிரதிட்டைசெய்திருக்கின்ற ஆலயத்திற்சென்று, அங்குமூர்த்திகரித்திருக்கின்ற விநாயகக்கடவுளைத்தியானித்து, வேதாகமவிதிப்படி பூசனைசெய்து, சகலமும் விநாயகர் ஸ்வரூபமாக மனதிலெண்ணி, விசுவாமித்திர முனிவராலுபதேசிக்கப்பெற்ற ஏகாக்ஷரமந்திரத்தை இடைவிடாமற் செபித்துவருகின்றநாளையில், விநாயகமூர்த்திக்குக்கருணைசுரந்து,வீமராசன்கண்டு தரிசிக்கும்படியாக அவனெதிரிற்பிரத்தியக்ஷமாகத்தோன்றியருளினார். உடனே-அவ்வரசன்சுவாமியைக்கண்டுசாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்துகாத்தனே- தேவரீருடையபாதாரவிந்தங்களில்இடைவிடாதபத்தியும்,ஒருசிறந்தபுத்திரனும்,முடிவில்முத்தியும் அடியேற்கருளவேண்டுமென்றுதோத்திரஞ்செய்தலும்,விநாயகமூர்த்தி வீமராசனைப்பார்த்து,அன்பனே-நீகருதியவாறேஉனக்குநம்மிடத்தன்பையும்,சொர்னரூபம் பெற்றிருக்கின்ற

புத்திரனையுந்தந்தோம்,இனிஉனதுஅந்தியகாலத்தில் முத்தியினையுங்கொடுப்
போமென்றுதிருவாய்மலர்ந்து,நீஉன்னரமனைக்குச்செல்லக்கடவையென்
றுவிடைகொடுத்துத்,தமதுதிருவுருவத்தைக் கரந்தருளினர். இப்பால் வீ
மராசன் அரமனைக்குவந்து, சிவபிரானையும் விநாயகமூர்த்தியையும்இடை
விடாமற்பூசனைபுரிந்து,அந்தணர்முதலாயினோர்க்கு அடையாபரணாதிகளை
த்தானஞ்செய்து,ஆனந்தசாகரத்தின்மூழ்கியிருந்தான். உடனேகணேசமூ
ர்த்தியினுடையபெருங்கருணையால்,அவ்வரசன்மனைவியாகியசாருகாசினி
வயிற்றிற்கருப்பமுண்டாகிச்,சொர்ணமலையேயோருருவங்கொண்டுவந்தது
போலச்,சகலரும் அற்புதங்கொள்ளத்தக்கபுத்திரன் உற்பவித்தான். அத
னால்வீமராசன் அதிகமகிழ்ச்சிகொண்டு, புத்திரனுண்டானதற்கு நடத்த
வேண்டியசடங்குகளைக்கிரமப்படி நடப்பித்து, அப்புத்திரன்உருக்குமம்
போன்ற ஒளியுள்ள சரீரத்தினனாதலால், பெரியோர்கள் வாக்கியத்தின்ப
டி உருக்குமாங்கதனென்னு நாமகரணந்தரித்து, அவனுக்குப் பிள்ளை
மைப்பருவஞ் சென்றபின்னர், அவனைக்கபிலமுனிவர் சமூகத்திற்கொ
ண்டுபோய்விட்டான். அதுமுதல் உருக்குமாங்கதனனவன் கபிலமுனிவ
ருடைய திருவடிகளுக்குப் பத்திசெய்துவந்தான். அதனால் சகலவித்தை
களும்அவனுக்குவிருத்தியாகிவரத்,தந்தைஆனந்தங்கொண்டு,விநாயகமூர்
த்தியினுடையஏகாக்ஷரமந்திரத்தை உபதேசஞ்செய்து, அதையநுட்டிக்
கு முறைமையையுஞ் சொன்னான். பின்னர் அவ்வுருக்குமாங்கதன் அ
தைச்செபஞ்செய்து, கணேசமூர்த்தியிடத்தில் தனது தந்தையினும்மிக்க
அன்புடையவனாகிச், சதாகாலமும் அவரை ஆராதித்துக் கொண்டிருந்தா
ன். அதைவீமராசன் தெரிந்து, தனது அரசுரிமையை அவன்பால் ஒப்
புவித்தற்கு எண்ணமுற்று, கொலுச்சபையில்வந்து, சிங்காதனத்திலிரு
ந்து, கணிதசாஸ்திரிகளைக்கூவி,நமதுகுமாரனுக்குப்பட்டாபிஷேகஞ்செ
ய்யத்தக்கநாளை ஆராய்ந்துரைப்பீர்களென்ன, அவர்கள் அவ்வரசகுமார
னுக்கேற்ற திதி வார நட்சத்திர யோக கரண கிரக ஓரை முதலான நிலைக
ளை நன்றாகச்சோதித்துணர்ந்து, ஓர்சுபதினத்தை நியமித்து, அதுவேநன்
முகூர்த்தமென் றறிக்கையிட்டார்கள். பின்னர் அரசன் அமைச்சர்களைநோ
க்கி, பட்டாபிஷேகத்திற்குரிய பதார்த்தங்களையெல்லாம் இமைக்குமுன்
சேகரிக்கக்கடவீர்களென்றுகட்டளையிட்டுத்,தனதுகுலகுருவையடைந்து
இருகரங்களையுங்கூப்பி, சுவாமீ- நமதுகுமாரனுக்கு மகுடாபிஷேகஞ்செ
ய்ய யத்தனித்திருக்கின்றேனாதலால், அதற்குரிய பொருள்களை அடி
யேற்கு உணர்த்தியருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான். அவ்
வாசிரியர் மனமகிழ்ந்து, அதற்குரிய எல்லாப் பொருள்களையும் ஓர்நறுக்
கோலையிற்பொறித்தளித்து, இதனையுஞ்சொல்லுவார், அரசனே- மகுடா
பிஷேகஞ் செய்யத்தக்கதானம், புண்ணியபூமி- சிவசன்னிதானம்- நதிதீ
ரம்- நந்தவனம்- தன்மனை- என்னும்- இவைகளில்ஒன்றாகியிருத்தல்வே
ண்டும். அதினுங்கீழ்த்திசை வடதிசை ஈசானத்திசைஎன்னும்இம்முத்தி
சைகளில் ஒன்றாகியிருத்தல்வேண்டும். அவ்விடத்தில்நூற்றுமுதல்ஐம்பத்
தைந்துமுழம் அகற்சியுள்ளதாய்,முப்பத்தாறுதூண்களோடுஓர்பூசாமண்
டபமும் ஓர் அலங்காரமண்டபமுஞ் சமைத்தல்வேண்டும். அன்றியும், ம
ணி- பொன்- வெள்ளி- தாமிரம்- இரும்பு- யாகத்திற்குரியமரங்கள்-

பாலுள்ளமரங்கள்- என்னுமிவைகளின் ஒன்றால், அரசுவீற்றிருத்தற்கோர்பீடமும், அபிஷேகஞ்செய்தற்கோர்பீடமும், அமைத்தல்வேண்டும். அப்பீடங்கள் ஒருமுழம்உயர்ந்து, ஒன்றரைமுழம் அகன்று, முன்னும் பின்னும் இரண்டுபடிகளைக்கொண்டு,நான்குபாதங்களோடும் இருத்தல்வேண்டும். மேற்கூறிய அலங்காரமண்டபத்தில், ஆறுமுழம் அகன்று, இரண்டுமுழம் உயர்ந்திருக்கின்ற, இரண்டுவேதிகைகள் செய்தல்வேண்டும். ஆதலால்- இந்தக்கிரமத்தின்படி,மேற்கூறியமண்டபங்களைத் தகுதியானநிலத்தினுந்திக்கினும் பொருந்தமுடிப்பித்து, இரண்டுபீடங்களையும் வேதிகைகளையும் விரைவில்நிறைவேற்றக் கடவையென்றார். இவ்வாறு ஆசிரியர்கூறிய மொழிகளை வீமராசன்கேட்டுக், கம்மியர்களைக்கூவி, அவர்கட்குநவரத்தினங்களையுஞ் சொர்னங்களையுந்தந்து, இரண்டுபீடங்கள்செய்து கொண்டுவரக் கடவீர்களென்று கட்டளையிட்டு, அவற்றைச்செயயத்தக்க முறைமையையுங்கூறிப், பின்னுஞ்சொல்லுவான், நமது நகரத்தினதுமதிலுக்குட்பட்ட நிலத்தில், கிழக்குத்திக்கில், ஐம்பத்தைந்துமுழம்எல்லையுள்ளதாய், முப்பத்தாறுதூண்களோடு ஓர்பூசாமண்டபமும், அலங்காரமண்டபமுஞ் சமைத்து, அவ்வலங்காரமண்டபத்தில், இரண்டு வேதிகைகளைச் செய்து முடிக்கக்கடவீர்களெனறு கட்டளையிட்டான். உடனே அக்கம்மியர்கள் புத்தியென்றுவிடைபெற்றுச், செம்பொன்னையுருக்கி இரண்டு பீடங்கள்வார்த்து, அவைகளில் இரத்தினங்களைப்பதித்துப், படிகளைச்சேர்த்து, வெள்ளியாற் சிம்பக்கால்களையியற்றிப், பின்னர் அரசன் கட்டளையிட்டவிடத்திற்சென்று, நிலத்தைத்தோண்டி, அதில்இடிகொள்ளாதபடி மணல்சொரிந்து, அடியில்நீலக்கற்களைப்பரப்பி, இடையிற்பவளங்களைச்சேர்த்து, அதன்மேல் மரகதரத்நங்களைப்பதித்துக்குறடுகளாக்கி, அக்குறட்டுகளின்மேல் கோமேதகத்தாலாகிய போதிகைக்கட்டைகளைத்தாங்கும்பதுமராகத்தூண்களைநிறுத்தி, புட்பராகத்தால் உத்திரமிட்டு,அதன்மேல்வச்சிரப்பலகைகளைப்பரப்பி, வைடூரியத்தினாற் கொடுங்கைகளையிருத்தி, அதிற்சந்திரகாந்தத்தினால் யாளிமுகங்கள்சமைத்து, முத்துமாலைகளைத்தொங்கவிட்டு,பளிங்குக்கற்களினாற்சுவரெழுப்பி,நாற்றிசைகளினும் நான்குவாயில்களை விடுத்து, ஆகாயத்தையளாவியிருக்கத்தக்கதான மண்டபங்களாக்கித், தூண்கடோறுங்குலைவாழைமரங்களையுங் கமுகமரங்களையும்நிறுத்தி, கன்னற்சோலைகளைநட்டு, விதானங்களைத்தூக்கி,இடைஇடையிற்றூண்டாவிளக்குகளைத் தொங்கவிட்டு,அரும்புமாலைகளையும் மலர்மாலைகளையுங் கட்டி,ஒளிமிகுந்தகண்ணாடிவகைகளைப்பூட்டி,நாரத்தைமுதலியகனிவர்க்கங்களைக்கோத்து நாட்டிப், பற்பலவிசித்திரங்களான ஓவியங்களைத்தீட்டி நவரத்நமயமாயிராநின்ற தோரணங்களைச்சூட்டி, அம்மண்டபங்களைச் சூழச் சந்திரமண்டலத்தை யளாவத்தக்கதானபந்தர்களைச்சமைத்து,இரண்டுவேதிகைகளையும் முடித்தவுடன், முன்னியற்றப்பட்டிருக்கின்ற பீடங்களைக்கொண்டு, அரசன்சமூகத்தில்வைத்து, தேவரீர் அடியேங்கட் காக்கியாபித்தவண்ணஞ், சிவபிரானுங்கண்டு களிக்கத்தக்க இரண்டு மண்டபங்களைக் குறைவறமுடித்திருக்கின்றனமென்று அறிக்கையிட்டார்கள். அதை அரசன்கேட்டு மனமகிழ்ந்து, சொர்னம்வஸ்திராபரணமுதலியதிரவியங்களை,அவர்கள்வேண்டுமட்டும் வெகுமானஞ்செய்து விடைகொடுத்தவுட

ன், அச்செய்தியை ஆசிரியர்தெரிந்து, பூசாமண்டபத்தையடைந்து. அதி
ற்பதின்மூன்று பதின்மூன்றுவீதிகளுண்டாகும்படி, குறுககினும் நெடுக்
கினும் பதினான்குநூல்களைவிடுத்து, நூற்றறுபத்தொன்பது வீடுகளாக்கி,
அவைகளினடுவேயிருக்கின்றவீட்டில், சிவபிரான்உமாதேவியோடும் எழு
ந்தருளத்தக்கதாக நான்குமுழமுள்ள ஓர் இரத்தினவேதிகையையிருத்தி,
அதைச்சூழவிருக்கின்ற எட்டுவீடுகளில- அனந்தர்- சூக்ஷ்மர்- சிவோத்த
மர்- ஏகநேத்திரர்- ஏகருத்திரர்- திரிமூர்த்தி- ஸ்ரீகண்டர்- சிகண்டி - என்
கின்ற அஷ்டவித்தியேஸ்வரர்க்கும், அதைச்சூழவிருக்கின்றபதினாறுவீடுக
ளில்- நந்தி- மாகாளர்- பிருங்கி- விநாயகர்- வ்ருஷபர்- ஸ்கந்தர்- தேவி- ச
ண்டேஸ்வரர்- இந்திரன்- அக்கினி- யமன் - நிருதி- வருணன்- வாயு- கு
பேரன்- ஈசானன்-என்கின்றசோடச தாதுக்களுக்குமாகத்தனித்தனிவே
திகைகளையமைத்து, அதையடுத்திருக்கின்றஇருபத்துநான்குவீடுகளை யா
வரும் உலாவும்படியான வீதியாகவிடுத்து, நாற்புறங்களினும் நடுவேயிரு
க்கின்ற மும்மூன்றுவீடுகளை வாயில்களாக்கி, மற்ற நூற்றெட்டுவீடுகளில்
சம்புருத்திரர்- விபூதிருத்திரர்- கணருத்திரர் - ஆத்தியாக்ஷருத்திரர்- த்ரி
யாக்ஷருத்திரர்- த்ரிதீசவந்திதருத்திரர்- சம்வீரஹரருத்திரர்-பிரபஞ்சரு
த்திரர்- விசக்ஷணருத்திரர்- அனந்தருத்திரர்- பாலருத்திரர்- வீரருத்திரர்
பாதாளருத்திரர்- வ்ருஷபத்துவசருத்திரர்- சௌந்தர்யருத்திரர்-க்ராசன
ருத்திரர்- சர்வருத்திரர்- ஸ்மசானருத்திரர் - நீலலோஹிதருத்திரர்- வை
லோகிதருத்திரர்- கபாலீசருத்திரர்- அஜருத்திரர்-ஈசானருத்திரர்- விஜை
யருத்திரர்- புத்தருத்திரர்- பவோற்பவருத்திரர்- வச்சிரதேகருத்திரர்- ப
ரமார்த்தனருத்திரர்- விபூருத்திரர் - சஹஸ்த்ரருத்திரர் - பினாகருத்திரர்-
த்ரிதசாதிபருத்திரர்- அக்கினிருத்திரர்- உதாதிசிருத்திரர்- பிங்கலருத்திர
ர்- கண்டருத்திரர்- ஆதிருத்திரர்- ஹரருத்திரர்- சுவாலருத்திரர்- தஹன
ருத்திரர்- ஹவ்வியருத்திரர்- பப்ருருத்திரர்- பஸ்மாந்தகருத்திரர்- க்ஷயா
ந்தகருத்திரர்- விதாத்ருருத்திரர்- தாத்ருருத்திரர்- கர்த்துருருத்திரர்-ஸ்ரி
தகாமருத்திரர்- சர்வவியோக்திருத்திரர்- வியோமருத்திரர்- தர்மருத்திரர்
விசாலருத்திரர்- சம்யுக்தருத்திரர்- நைரிதிருத்திரர்- வருணருத்திரர்- ஹ
தருத்திரர்- த்வரத்திருஷ்டருத்திரர்- பயானருத்திரர்- ஊர்த்வசேஷருத்தி
ரர்- விரூபாக்ஷருத்திரர்- தூம்ரருத்திரர்- லோகிதருத்திரர்- தௌஷ்ட்ரா
கருத்திரர்- பாலருத்திரர்- அதிபாலருத்திரர்- பாசஅஸ்தருத்திரர் - ஜயப
த்ராருத்திரர்- தீர்க்கபாகுருத்திரர்- த்யானாத்மகருத்திரர்- சுனமுருத்திரர்-
அப்தரவருத்திரர்- சீக்ரருத்திரர்- லயருத்திரர்- வரயோகருத்திரர்- சுக்ஷ்
மருத்திரர் - தீக்ஷண்யருத்திரர் - பயாந்தகருத்திரர் - பஞ்சசிகருத்திரர்-
கபர்த்திருத்திரர்- நிதீசருத்திரர் - ரூபவந்த்யருத்திரர் - தான்யருத்திரர்-
சௌமியருத்திரர் - சதருத்திரர் - சடாதரருத்திரர் - காமருத்திரர் - ப்ர
சாதருத்திரர் - லக்ஷ்மீசருத்திரர் - ப்ரகாசருத்திரர் - வீர்யேசருத்திரர் -
ஏக்யேசருத்திரர் - ஜேஷ்டருத்திரர் - வேதாபருத்திரர் - வித்தியாதரருத்
திரர் - பூதாவேசருத்திரர் - லோகருத்திரர் - பார்வதிருத்திரர் - பரமே
ஸ்வரருத்திரர் - உமாபதிருத்திரர் - ஈஸ்வரருத்திரர் - சதாசிவருத்திரர்-
மஹாவீரருத்திரர்- கிராதருத்திரர்- அர்த்தநாரீஸ்வரருத்திரர் - ஜலவிகரு
ணருத்திரர்- சாஸ்விதருத்திரர் - மகேஹஸ்வரருத்திரர் - மஹாருத்திரர்-

என்கின்ற அஷ்டாசத ருத்திரர்கட்கும் வெவ்வேறு வேதிகைகளிலுத்
தி, மேல்விடுக்கப்பட்ட விதிமாற்றினும் முறையேநவகுண்டங்களையு ம
மைத்தனர். அச்சமயத்தில் விமராசன் அவணையடைந்து, சுவாமி-தேவரீ
ர் முன்னர்பொறித்தருளிய பத்திரிகையின்படி எல்லாப்பொருள்களையும்
இங்ஙனம் அழைப்பித்திருக்கின்றே னென்று அறிக்கையிட, அவர் அப்
பொருள்களையெல்லாம் பார்வையிட்டு, அங்கிருக்கின்றவர்களைநோக்கிச், சி
வபிரான்கும்பத்திற்கு மூன்றிழையும், உமாதேவிகும்பத்திற்கு இரண்டி
ழையும், ஏனையோர்கும்பங்கட்கெல்லாம் ஓர்இழையுமாக நூல்சுற்றிச், ச
மிதைமுதலானவைகளைவேறுவேறு ஆராய்ந்துவைக்கக் கட்டளையிட்டுத்,
தாமுந்தருப்பைமுதலானவைகளைஆராய்ந்துப், பாலிகைகளில்மணல்சொ
ரிந்து, முளைவிதைத்து, மற்றுமுள்ள கருமங்களை முடித்துக்கொண்டிருந்
தனர். அவர்அவ்வாறிருக்க, முன்னர் அரசனாலேவப்பட்ட அமைச்சர்கள்
மற்றப்பரிசனங்களைநோக்கி, அவ்வவர்கட்குரியபணிகளைக் கட்டளையிட,
அவ்வாறே அவர்களெல்லாந் தங்கடங்கள் தொழில்களைநிறைவேற்றுவதா
னார்கள். உடனேவள்ளுவனானவன் உண்ணல் உடுத்தலாதிகளை முடித்துத்
தனது முரசினோடு யானைமீதேறி, எங்கும்நீக்கமற்றுநிறைந்திருக்கின்றதே
வதேவோத்தமர்வாழ்க, சகலவேதாகமங்களும்வாழ்க, வீமராசரும் அவர்
கிளைகளும்வாழ்க- அவரதுநீதிதவறாதசெங்கோல்வாழ்க- எல்லாவுலகங்க
ளுங் குறைவின்றிவாழ்க, இந்நகரமுழுவதுந்தழைந்தோங்கிவாழ்க, என்று
முரசறைந்து, பின்னுஞ்சொல்லுவான்- இந்நகரத்துள்ள எல்லாச்சனங்க
ட்கும் அறிவிப்பதுயாதெனில், கலைமகள்- சயமகள்-என்னு மிரண்டுமங்
கையர், முன்னமே காணியாட்சியாகக்கொண்டிருக்கின்ற உருக்கு மாங்கத
ராசருடைய புயங்களின்மீது, நிலமகள்- திருமகள்- என்னுமிவ்விருவர்க
ளையும் நாளையதினத்திற் புணர்த்தப்போகின்றனராதலால், யாவரும்நகர
த்தைஅலங்கரிக்கவேண்டியது, முன்னிலும்விசேஷமான தருமங்களையாவ
ரும்நடாத்தவேண்டியது, பொருளில்லாதவர்கட்கெல்லாம்மகாராசாவினு
டையநிதிப்பொக்கிசத்தைத்திறந்துவிட்டிருக்கின்றது, அதில்அவ்வவர்கட்
குவேண்டுமட்டுமெடுத்துக்கொண்டு நிறைவேற்றவேண்டியது, பொருளு
ள்ளவர்களாயின் அதனைத்தங்களால்வெறுக்கப்பட்ட தெய்வத்தினையொப்
பமதித்துஒழித்துவிடவேண்டியது, யாவரும் இனியபோசனாதிகளைநுகர்ந்
து, குளிர்ந்தசந்தனாதிகளைப்பூசி, ஆடையாபரணாதிகளைத்தரித்து, ஒருவரோ
டொருவர்இனிவார்த்தைகளோடு அளவளாவி, எல்லாத்தேவர்கட்கும்பூச
னைகளைச்செய்யவேண்டியது, என்றிவ்வாறுசொல்லித்தன்னிருக்கையைச்
சேர்ந்தனன். அவையனைத்தையும்அந்நகரத்தார்மிக்கஅன்போடுகேட்டு, அ
ளவற்றதருமங்கள்செய்து, நகரமுழுவதும்அலங்கரித்துத், தங்கடங்கள்கு
மாரர்கட்கேஅரசுரிமைவந்ததுபோல உள்ளமும்உடலும்பூரித்திருந்தார்க
ள். இப்பால்சேனைத்தலைவனுடையஏவலினால், யானைப்பாகர்கட்கெல்லாம்
இறைவனானஆதோரணனானவன், அரசனுடையபட்டத்துயானையைக்கு
ளிப்பாட்டித், திருமுகமெழுதி, நெற்றிப்பட்டமணிந்து, அளவற்றஒப்பனைக
ளைச்செய்துமுடித்தனன். ரதசாரதிகட்கெல்லாந்தலைவனானவலவனானவன்
அரசனுடையரதத்திற்கொடிகளையுயர்த்தி, ஆடையாபரணாதிகளையணிந்து
பலலக்ஷணங்கள்வாய்ந்த அசுவங்களைப்பூட்டி, வாளாயுதங்- கொடுமரம்-

பகழி- முதலானபலவாயுதங்களைநிரப்பினன். குதிரைப்பாகர்கட்கெல்லாம் முதன்மையானவாதுவனுனவன், எல்லாக்குற்றங்களுமகன்று, பலநற்குணங்களைவாய்ந்து, பகைவரதுஉள்ளங்களைப்பேதிக்கவல்ல அரசனதுபட்டத்துக்குதிரையைக்குளிப்பாட்டி, ஒளிமிகுந்தஆபரணங்களைப்பூட்டிக், காதடியிலிருக்கின்றகேசங்களைப்பின்னிப், பலவிதசிங்காரங்களைச்செய்து நிறைவேற்றினன். சாரணர்கொண்டு சென்றதிருமுகத்தைப்பிறதேயங்களிலுள்ள அரசர்முதலாயினோர்வாங்கிவாசித்து, அளவற்றஅலங்காரங்களோடுதங்கள்தங்கள்மனைமக்கள்சுற்றத்தினருடன்வந்துசேர்ந்தனர். தோரணங்களாற்புனைதல்செய்யப்பட்டிருக்கின்றமாடவீதிகளில், ஓர்பால்வாரணமுழக்கமும், ஓர்பால்வாம்பரிமுழக்கமும், ஓர்பால்தேரணிமுழக்கமும், ஓர்பால்சேனைகள்முழக்கமும், ஓர்பால் ஆரணமுழக்கமும், ஓர்பால்ஆடலின்முழக்கமுமாகியிருந்தன. சிலர்புனலிற்குளித்துவிளையாடுவார்களும், சிலர்பொழிலிற்சென்று விளையாடுவார்களும், சிலர் மதுவுண்டுகளிப்பார்களும், சிலர்வாதாடிக்கெலிப்பார்களும், சிலர்வீதியழகை நோக்குவார்களும், சிலர்வேறுபணிகளாக்கு வார்களுமாகியிருந்தார்கள். இவ்வாறு அந்நகரத்துள்ளோரும், பிறநகரிலிருந்துவந்திருக்கின்றவர்களும், அளவற்ற ஆனந்தத்தின்மூழ்கினவர்களாயிருக்க, முன்னர் கணிதர்களால் ஏற்படுத்தியிருக்கின்றநாள்சமீபித்தலும், ஆசிரியர்பூசாமண்டபத்திற்கெழுந்து, சந்தனம்- புஷ்பம்- அக்ஷதை- பால்- தயிர்- முதலியவைகளாற் சகலதேவர்களையும்பூசித்து, அவர்கட்குப்பலிபிண்ட முதலியவைகளையுங்கொடுத்து, யாவரும் இப்பூசாமுகத்தில் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து, முன்புபாகரால்அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற- கரி-பரி-தேர்-படைக்கலம்- என்னுமிவைகட்கு முறைமைப்படி பூசனைசெய்து, அந்தணர்- முனிவர்- இரவலர்-முதலாயினோர்க்கு அன்னமளித்து, அன்றிரவில் உருக்குமாங்கதனையழைத்து, அவன்கரத்திற்பொற்கங்கணம்புனைந்து, நூதனமாக இயற்றப்பட்டிருக்கின்ற வஸ்திராபரணங்களையணிவித்து, பூசைசெய்ய யத்தனித்தவராய், பலவகைவாத்தியங்கள்முழங்க, பாவையர்கள் நிர்த்தஞ்செய்ய, முனிவர்கள் மந்திரங்கணிக்க, அந்தணர்வேதங்களையோத, கேட்டபொருள்களைச் சிலரெடுத்துநீட்ட, இவ்விதஆடம்பரங்களோடு முன்னர் சுவர்த்தலத்திற்சிற்பர்களாற்சமைக்கப்பட்டிருக்கின்றசித்திரவுருவாகியவிநாயகமூர்த்தியைப் பத்தியோடு பூசனைசெய்து, பலவிதஉணவுகளை நிவேதித்து, பரமகருணாநிதியாகிய கணேசமூர்த்தியே, யானியற்றப்போகின்ற வினைகளை இடையூறின்றி நிறைவேற்றியருளவேண்டுமென்று பிரார்த்தித்து, முன்னர் சிவபிரானுக்கமைத்திருக்கின்ற வேதிகையின்மீது, ஆறுமரக்கால் நெல்பரப்பி, அதிற்பாதியளவு அரிசியும், அதிற் பாதியளவு எள்ளும், அதிற் காற்கூறு ஒன்றாய்க்கலந்திருக்கின்ற நவதானியங்களும்பெய்து, அதன்மீது சிவகும்பத்தைத்தாபித்து, சகலமங்கலவாத்தியங்களோடு பொற்குடங்களில் யானையின்மீது கொண்டுவந்த திவ்வியதீர்த்தங்களை ஆடையில்வடித்து, அதில்முப்பத்திரண்டுபடி மேற்படி கும்பத்திற்பூரித்து, சொர்னம்- நவரத்தினம்- கோட்டம்- கற்பூரம்- அகில்- சந்தனம்- பஞ்சகௌவியம்- வெட்டிவேர்- விரைகள்- மலர்கள்- கனிகள்- கொடிகள்- என்னும் இவைகளை உள்ளேசொரிந்து, அதன்மீது - மாவிலை- நாரிகேளம்-தருப்பைமுடி- முத

லானவைகளை வைத்து, மேற்கூறிய நெல்முதலிய அடிப்பாட்பளவிலும், நீரளவிலும், பாதிபாதியளவு அதற்கு வாமபாகத்திலிருக்கின்ற சத்திகும்பத்திற்கும், அவைகளிற்பாதியளவு மற்றகும்பங்கட்குமமைத்து, எல்லாக்கும்பங்களையும் அவ்வவ்விடங்களிற்றாபித்து, மேற்கூறிய பொன்முதலியவத்துக்களைச்சொரிந்து, மாவிலை முதலியவைகளையும்வைத்து, கும்பங்கட்கெல்லாம் இரண்டிரண்டுகலைகளை வெவ்வெறாகவுடுத்தி, வித்தியேஸ்வரர் கும்பங்களெட்டினுள், பொன்-வெள்ளி-செம்பு-இரும்பு-காரீயம்-வெள்ளீயம்-பித்தளை-வெண்கலம்-என்கின்ற இவ்வெண்வகைப்பொருள்களையும் ஒவ்வொன்றாகச்சேர்த்து, அவற்றைச்சூழவிருக்கின்ற பதினாறு கும்பங்களுள், அகில் - கந்தகம்- அரிதாரம்- மாட்சிகம் - மனசிலை- இரதம்- வெள்ளை அப்பிரகம் - மஞ்சள் அப்பிரகம் - கௌரி - காஞ்சனம் - சாதிலிங்கம் - சிந்துரம் - துத்தம்- பொன்விமலை- வெள்ளிவிமலை- காந்தம்- என்னும் இப்பதினாறுபொருள்களோடு, சோதிமரம்- சோதிக்கொடி- சோதிப்புல்- பாரசிதை- பயை- சீவை- வினச்சுரி-சழுங்கை- விசையா-சயை- சகதேவை- பூரணை-கேசை- அஷ்டை- சதாவரி- சிவபத்திரி- என்னும் இப்பதினாறையுமிட்டு, இந்திரதிசைத்துவாரத்தின் இருமருங்கினுமடுத்தபன்னிரண்டு கும்பங்களுள், பலாசு- சருங்காலி- ஆம்பிரம்-கல்லால்- கூவிளம்- வன்னி- ஆல்-வாகை- பிப்பிலம்- அத்தி-நாரத்தை- மாதளை என்னும் இப்பன்னிரண்டுபொருள்களின் பட்டைகளைச்சொரிந்து, அக்கினி திசையிலிருக்கின்ற ஒன்பதுகும்பங்களுள், ஆற்றுமண்- ஆலிலைமண்-புற்றுமண்- இபக்கோடுபட்டமண்-கடல்மண்-மடுமண்- புண்ணியத்தலத்துமண்-மலைமண்-அரசிலைமண்-என்னும்இவ்வொன்பதினையுந்தனித்தனி ஆராய்ந்துபெய்து, யமதிசைத்துவாரத்தின் இருமருங்கினுமடுத்த பன்னிரண்டுகும்பங்களுள், கழுநீர்- நீலம்- வெண்டாமரை- செந்தாமரை- மகிழ்- அலரி-பாதிரி- குரவம்- மல்லிகை- பலாசு- நந்தியாவட்டம்-சண்பகம்-என்னும் இப்பன்னிரண்டு மலர்களைவிட்டு, நிருதிதிசையிலிருக்கின்ற ஒன்பதுகும்பங்களுள், அரைத்தசந்தனம்- வெட்டிவேர்- புழுகு - குங்குமம் கத்தூரி- தக்கோலம்- அகில்- சாபத்திரி- இலவங்கம்- என்னும் இவ்வொன்பதுபொருள்களைப்பெய்து, வருணதிசைத்துவாரத்தின் இருமருங்கினுமுள்ளபன்னிரண்டுகும்பங்களுள், மூங்கிலரிசி-கோதுமையரிசி-அவையரிசி-நாயுருவியரிசி-தினையரிசி- சாமையரிசி- வாகரிசி- உளுந்து- குளநெல்- எள்- பயறு- கடுகு- என்னும் இப்பன்னிரண்டையுஞ் சுத்திசெய்திட்டு, வாயுதிசையிலிருக்கின்ற ஒன்பதுகும்பங்களுள், இலக்குமி- சங்கபுட்பி- விண்டுகாந்தி- அஞ்சினி - துளசி- சகதேவி- இந்திரவல்லி - சூரியகாந்தி- பன்மினி- என்னும் இவ்வொன்பதினையும் பெய்து, குபேரதிசைத்துவாரம் இருமருங்கினுமுள்ள பன்னிரண்டுகும்பங்களுள், பால்- தயிர் நெய்- கோசலம்- கோமயம்- இளநீர்- மாதுளங்கனிரசம்-நாரத்தங்கனிரசம்- வில்வக்கனிரசம்- மாங்கனிரசம்- தாடிமக்கனிரசம்- பலாக்கனிரசம் என்னும் இப்பன்னிரண்டையும்விடுத்து, ஈசானதிசையிலிருக்கின்ற ஒன்பதுகும்பங்களினும், எண்டிசையினும்- இடைஇடை மும்மூன்றாகவைத்திருக்கின்ற இருபத்துநான்குகும்பங்களினும் வேறுபடுவன வில்லையாதலால், அவைகளுள்முன்னர் விட்டிருக்கின்ற கந்தநீரோடுநிறுத்தி, சிவகு

ம்பம் அமைத்திருக்கின்ற நடுப்பதத்தை மகமேருவாகவும், அதோடு அதனைச்சூழ்ந்திருக்கின்ற இருபத்தைந்து பதங்களை இளாவிரதகண்டமாகவும், வீதியைவானமாகவும், மற்றப்பதவரிசைகளையெல்லாம் ஏனையபர்வதங்கள், அவற்றிற்பதங்கள், அவைகளைச்சூழ்ந்த கண்டங்களாகவுங் கொண்டு, அம்மண்டபத்தை நாவலந்தீவாகத்தியானித்து, முன்னர் மேருவாகத்தியானித்தபதத்தை, அம்மேருவின் அடிநடுமுடியாகவும், அதனருகில் இரண்டுவரிசையாகச் சூழ்ந்திருக்கின்றபதங்களை அம்மேருவின் கொடுமுடிகளாகவும்பாவித்து, சிவம் சத்தி வித்தியேஸ்வரர் தாதுக்கள் உருத்திரர் முதலியஎல்லாத்தேவர்களையும் புட்பமுதலியவைகளைகொண்டுவரிசைக்கிரமமாகப்பூசித்து,சிவத்தையும் - சத்தியையும் - ஏகாதசம் - மிருத்தியுஞ்சயம் - மூலம்- என்னும்இம்மந்திரங்களாலருச்சித்து, ஏனையோரையெல்லாம் அவ்வவர்கட்குரிய மந்திரங்களால் வழிபட்டு,உணவாதிகளையூட்டித், தூபதீபாதிகளைக்காட்டி, ஆடல் பாடலாதிகளைக்கிரமமாக நடப்பித்து, பின்னர் நவகுண்டங்களமைத்திருக்கின்றவீதிக்கெழுந்து, மதியுருவம்போன்றகுண்டத்தையடுத்து,சுத்தி முதலானவைகளைச்செய்து,அதில் அக்கினியைத்தாபித்து, பலாச்சமித்தைமுதலியஉபகரணங்களைக்கொண்டுஓமஞ்செய்யத்தொடங்கினவராய்,மற்றக்கிழக்காதிதிசைகளிலிருக்கின்ற எட்டுகுண்டங்கட்குத் தன்னையொத்தஆசிரியர்களைக்கூவி, அவர்கட்குக்காதணி முதலியவைகளைத்தந்து,மந்திராக்கினியையுமளித்துச்செலுத்தினர். அவர்களும்அக்கிழக்காதிகுண்டங்களில்தனித்தனிசென்று,அத்தி-வன்னி-ஆல்-கருங்காலி-அரசு-மாபூரம்-கல்லால்-கூவிளம்-என்னுமிவைகளின்சமித்தைகளை முறையேகொண்டு,மந்திரபூர்வகமாகஅக்கினிகளையெழுப்பி, ஓமாதிகளைநடாத்தி,ஆகுதிகொடுத்தனர்.இப்பால்முதலாசிரியரானவர்,வலஞ்சுழித்தெழுகின்றதீயினையுடையதமதுகுண்டத்தருகிலிருந்து, மூலமந்திரத்தால்நூறும், ஏனையமந்திரங்களால் பப்பத்துமாகக்கணித்து, அடிக்கடி அவிசொரிந்து,முடிவில் அனைத்தையுமெடுத்து ஆகுதிகொடுத்து, உருக்குமாங்கதனைநோக்கி,நீஅரமனையிற்சென்றுசித்தசுத்தியோடும் உறங்குவாயென்றுகட்டளையிட்டனுப்பி, விடிந்தபின்னர்நித்தியகிரியமாதிகளைமுடித்துப்,பூசாமண்டபத்திற்சென்று,இராசகுமாரனையழைப்பித்து,அவனதுநற்கனவினைக்கேட்டுமனமகிழ்ந்து,இப்பால்முடிக்கவேண்டியதீக்ஷையைக்குறித்து எல்லாக்குண்டங்கட்கும் நூறுநூறுஆகுதிகள்கொடுத்து,சகலவாத்தியங்களையுமுழக்குவித்து, அவன்செவியில் மந்திரஉபதேசஞ்செய்து,கரத்திற்புட்பங்களைதந்து,கும்பங்கட்குங்குண்டங்கட்குங்கிரமமாகஅருச்சனைபுரிவித்து,வலம்வரச்சொல்லி, சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்வித்து,அலங்காரமண்டபத்திலழைத்துக்கொண்டுசென்று, முன்னர்கம்மியர்களாலியற்றப்பட்டிருக்கின்றபீடங்கட்கும்- வேதிகைகட்கும்- மிருத்தஞ்சயமந்திரத்தால் அருச்சனைபுரிந்து,அம்மண்டபத்தில் நடுவேஓர்வேதிகையையிருத்தி, அதன்மேல்செந்நெல்முதலானவைகளைப்பரப்பி,அதன்மேல்-வெள்ளேறு-சிங்கம்-புலி-கலை-என்னும்இவற்றின்தோல்களைவிரித்து,அதன்மேல் ஓர்பீடத்தைவைத்து, அதன்மேல் சகஸ்த்ரதளத்தோடுங்கூடி விரிந்திருக்கின்ற சொர்னக்கமலத்தையிணக்கி,அதன்மேல்வத்திரம்விரித்து,வாள்-கவிகை-கொடி-முதலியசின்னங்களை இருமருங்கினும்வைத்து, மற்றொருபீடத்தை

அதற்குவலப்புறத்திலிருத்தி,அதனைமந்திரபூர்வகமாகச்சுத்திசெய்து,சில
மங்கையர்-மகுடம்- ஆரம்- வத்திரம்- முதலிய அரசவுறுப்புக்களைப்படலி
கையிலேந்திவர, அவைகளை அப்பீடத்தின்மேல்வைத்து, கும்பசலத்தினு
ற்புரோக்ஷித்து,எதிரிற்றிரையிட்டு,அத்திரைக்கப்பால் மற்றொருவேதிகை
யைவைத்து,அதன்மீது கனகமுதலியபொருள்களை நிறைத்துவைத்திருக்
கின்றசொர்ணகும்பங்களையும் சகலதானியங்களையும் அளவற்றஆபரணங்
களையும் நிரப்பி, அதர்வணம்- உருத்திரமென்றுசொல்லப்பட்டவேறுவே
றுயுள்ளபலமந்திரங்களையகற்றி,மகாரோகிணி-குபேரவிருதையம்-இரணி
யவருணம்- கூமாண்டம்- முதலியமந்திரங்களைமுன்னதாகக்கணித்து,முடி
வில்மூலமாகியமிருத்தஞ்சயமந்திரத்தையோதி, இப்பால்அபிடேகஞ்செ
ய்யவெழுந்து, உருக்குமாங்கதனைக் கீழ்த்திசைமுகமாகப்பீடத்திலிருத்தி
பலவகைவாத்தியங்கள்சத்திக்க,வேதவோசைமுழங்க, மங்கலவாழ்த்துவி
ம்ம,அவர்காட்டியகும்பங்களைச்சிலரெடுத்துநீட்ட,வீமராசனுக்கும் சாரு
காசினிக்கும்அளவற்றமகிழ்ச்சிபொங்க, சகலதேயத்து மன்னர்களுங்களி
ப்பெய்தியார்ப்பரிக்க,இவ்விதஆடம்பரங்களோடு, சகஸ்திரதாரைகள்விட்
டிருக்கின்றபொன்வட்டிலைக்கரத்திலேந்தி, எண்ணிறந்ததேவர்களையும்மு
னிவர்களையும்அவ்வவர்கட்குரிய மாதர்களையும் மனதிற்றியானித்து, அவ
ர்களே நேரில்வந்து அபிடேகஞ்செய்வதாகப்பாவித்து,எல்லாக்கும்பங்க
ளையும்மந்திரபூர்வகமாகவெடுத்து மகுடாபிஷேகஞ்செய்தனர். தேவர்கள்
முதலாயினோர்வந்துஅபிஷேகித்ததாகமனதிற்பாவித்தபடியால், திரிமூர்த்
திகள்-அச்சுவினித்தேவர்-மருத்துவர்-வசுக்கள்-உருத்திரர்-முதலியதேவ
ர்களும், உமாதேவி-திருமகள்-சரஸ்வதி-அதிதி-சுவாகாதேவி-முதலிய இ
வர்களோடு,கணமுதல்ஆண்டீறாகச்சொல்லப்பட்ட தெய்வமாதர்களும்,த
டாகம்- நதி-சமுத்திரம்-முதலியஉருவங்களாயிருக்கின்றஸ்திரீகளும்,துரு
வாசன்-புலகன்-புலத்தியன்-சாபாலி-மார்க்கண்டன்-கண்ணுவன்- கவுதம
ன்-பிருகு-பிரத்துவாசன்-கபிலன் முதலாயுள்ளமுனிவர்களும்,அருந்ததி-
முதலாயுள்ளஇருடியர்பத்தினிகளும், அவ்வரசகுமாரனுக்கு அபிடேகஞ்
செய்தவராகியிருந்தார்கள். பின்னர் உருக்குமாங்கதன் ஈரம்புலர்த்தி, இ
டையிற்சிழிபடாது இரண்டிரண்டாயிருக்கின்ற ஆடையினையுடுத்தி, மகு
டமுதலியகலன்களையணிந்து, சந்தனக்கலவைபூசி, மாலைமுதலிய வணிக
ளைத்தரித்து, சிம்மாதனத்தின்மீதாரோகணித்தனன். உடனேசிலர் ஆல
வட்டமசைத்தார்கள். சிலர்கீதங்களிசைத்தார்கள். சிலர் சந்திரவட்டக்கு
டைபித்தார்கள். சிலர்விருதுகள்படித்தார்கள். சிலர்மங்கலவாழ்த்துபேசி
னார்கள். சிலர்கவரிகளெடுத்துவீசினார்கள். அச்சமயத்தில் அங்கிருந்தவர்
கள்ஞெரேலென்றுதிரையைநீக்க,உருக்குமாங்கதனவன்தனக்கெதிரில்
வேதிகையின்மீது பரப்பியிருக்கின்றஎல்லாப்பொருள்களையுங்,கன்றோடி
ருக்கின்றபசுவினையும், வெள்ளேற்றினையும்,இரதமுதலியமங்கலவத்துக்க
ளையுங்கண்டுதரிசித்தனன். தமர்களாயினோர்பொன்னாழிமுதலிய ஆபரண
ங்களைக்கையுறைதந்தார்கள். பிறதேயத்தரசர்களெல்லாந்திறைதந்து வண
ங்கினார்கள்.இப்பால்உருக்குமாங்கதன்ஆசிரியரிடத்தில்விடைபெற்று
அவ்விடத்தினின்றுமெழுந்து, ஆதோரணன்கொண்டுவந்த ஆனையின்மீதா
ரோகணித்து,ஓர்பால்-கவிகை-கவரி-கொடிமுதலிய சின்னங்கள் நெருங்கி

வர,ஓர்பால்-குடமுழா-பேரிகைமுதலியவாத்தியங்கள்அண்டங்களதிரமு
ழங்க,ஓர்பால்பலதேயத்துமன்னவர்கள்தனித்தனிவரிசையெடுத்துவர,ஓ
ர்பால் ரத கஜ துரக பதாதிகளாகிய நால்வகைச்சேனைகளுமார்ப்பரிக்க,இ
வ்விதசம்பிரமங்களோடுதேவேந்திரனைப்போல உலாப்போந்து,தனதுஅ
ரமனைவாயிலுக்கெதிரில்இறங்கி, அங்கமைத்திருக்கின்றபொற்பலகையின்
மீதுநின்றனன்.உடனே அருகிருந்தமாதர்கள்அவன்பாதத்திற்பாலைச்சொ
ரிந்துநீராற்கழுவி,மெல்லியஆடையாற்றுடைத்து,பூரணகும்பம்-நீராஞ்ச
னம்-மணிவிளக்கு-முளைப்பாலிகை-முதலிய மங்கலப்பொருள்களைக்கரத்
திலேந்தி,நீர்த்தாரையொழுக்கி,மும்முறைவலம்வந்து,பலரத்தினங்களால்
இழைத்திருக்கின்றபாதுகையை எதிரில்வைத்தார்கள்.அதைஉருக்குமாங்
கதன்பாதத்திற்சூடிஅரமனைபுகுந்தனன். பின்புஆசிரியர் அவனைப் பூசாம
ண்டபத்திற்குஅழைத்துக்கொண்டுசென்று,முடிவிற்செய்யத்தக்கசாந்திக
ளைச்செய்து, எல்லாத்தேவர்களையும்மனதிற்றியானித்து, எதிரோபயபத்தி
யோடும்நின்று, புட்பாஞ்சலிகொண்டுதூவி,மகுடாபிஷேகஞ்செய்யவந்தி
ருந்ததேவர்கள்முதலியயாவர்க்கும் விடைகொடுத்தனர்.இப்பால்உருக்கு
மாங்கதனெழுந்து,அரமனைபுகுந்து,ஓமாதிகளைச்செய்தஅவ்வாசிரியனைப்
பூசித்து,அவரவாசிரம்பத்தக்கதாகத்தட்சணைகொடுத்து,முனிவர்கள்-அந்
தணர்-வறியோர்-முதலியயாவர்க்கும்பல தானங்களைச்செய்து, ஞாதியர்
தூரவர்-வேற்றரசர்-அமைச்சர்- பாவலர்- நாவலர்-படைவீரர்- முதலாயி
னோர்க்குத்,துகில்-பூண்-துரசம்-வேழம்-இரதம்-முதலானவைகளைமேகங்
களுங்கண்டுநாணத்தக்கதாகப்பொழிந்து, உலகமுழுவதுந் திங்கள்மும்மா
ரிபெய்து தழைக்கும்படியாகத்,தனதரசாட்சியைநடாத்திவந்தனன். பின்
னர்வீமராசன் நமதுபுயச்சுமையொழிந்ததென்றுமனமகிழ்ந்து, சதாகால
முங்கணேசமூர்த்தியைஆராதித்துக்கொண்டிருந்தான்.

கணபதிதுணை.

ஒ ன் ப தா வ து.

தேவேந்திரன்உபாசித்தபடலம்.

ஓசவுனகாதிமுனிவர்களே, கணேசமூர்த்தியை வீமராசன் அநுட்
டித்துப் புத்திரப்பேற்றினையடைந்தசரித்திரஞ்சொன்னோம்,இப்பால்தே
வேந்திரனநுட்டித்த முறைமையைச்சொல்லுவோங்கேட்பீராக. இவ்வா
று மகுடாபிஷேகஞ்செய்துகொண்ட உருக்குமாங்கதராசனனவன், தன்
தந்தையுபதேசித்த ஏகாக்ஷரமந்திரத்தை இடைவிடாது செபஞ்செய்து
வருந்தோறும், கணேசமூர்த்தியினுடையதிருவடிகளில்மிக்கபேரன்புடை
யவனாகிச், சதாகாலமும் அவனைப்பூசைசெய்துகொண்டு, சத்துருக்களை
யெல்லாஞ்சயஞ்செய்து, இலக்குமி -சரஸ்வதி- பூமிதேவி-என்னுமிவர்க
ள் களிக்கும்படியாகத் தன்னாணையைப்பலதிக்குகளினுஞ்செலுத்திப், பழ

மையாயுள்ள வேதப்பிராமணர்கள் - உயர்ந்தராசர்கள் - நீதியையுடைய அநேகதிருடர்கள் - சகலகலைக்கியானங்களிலும் வல்லவர்கள் - ஆகிய இவர்களெல்லாம் இருமருங்கிலுஞ் சூழ்ந்திருக்கப், பூமியை யாளுகின்ற சிற்றரசர்களெல்லாந் திறைகொணர்ந்துநிற்க, அதிதிகள்-முனிவர்கள்-தபோதனர்கள்-பெரியோர்கள்-முதலாயினோர் ஆசீர்வதிக்க, மந்திரியர்-புரோகிதர்-சேனாபதியர்-தூதர்-சாரணர்- முதலானதுணைவர்கள்பக்கங்களில்நெருங்க, குற்றமற்றசேனைகள்கூட்டங்கூட்டமாய், வளைதடி-வாள்-உடைவாள்- களாஞ்சிகள்- முதலியபடைகளைக்கொண்டுதலைவாயிலிலுலாவ, சிலகணிகையர்வெள்ளியசாமரைகள்வீச, சிலகணிகையர் ஆலவட்டங்களேந்த, சிலகணிகையர்ஆடல்பாடல்செய்ய, சிலகணிகையர்கட்டியங்கூற, இத்தன்மைத்தாகியவலங்காரத்தோடு சிறந்தசிங்காசனத்தில் வீற்றிருந்து, செங்கோல் முறைவழுவாமல், சகலசீவராசிகட்கும் இன்ப முண்டாகத்தக்கதாய், இராச்சிய பரிபாலனஞ்செய்து வருகின்றகாலத்தில், சில சனங்கள் அவ்வுருக்குமாங்கதராசன் சமூகத்தில்வந்து பணிந்து, ஓ சர்வசனோபகார சக்கிரேஸ்வரரே, காட்டுமிருகங்கள் கூட்டமாய்வந்து நாட்டிப்பயிர்களை வீட்டியழிக்கின்றதென்று முறையிட்டார்கள். அதை யவ்வரசன்கேட்டு மனதிரங்கி, வேட்டையாடி வருவோமென்றெழுந்து, பலபடைக்கூட்டங்களையும் வலைஞர்களையு மழைத்துக்கொண்டு, சகல பரிசனங்களோடுங் காட்டிற்சென்று, சிங்கம் - புலி - யானை - கரடி- முதலியமிருகங்களைக்கொன்று, பின்னர் தான்தனியேசென்று, தனக்கெதிர்ப்பட்டுவருகின்ற செந்நாய் - கலைமான் - புள்ளிமான் - முதலியவைகளை அதஞ்செய்துவருகையில், அதிகதாகங்கொண்டவனாகி இளைப்புற்று, ஓர்கானகத்துள் நுழைந்து, அங்கு கவிமகா முனிவர் வாசஞ்செய்கின்ற ஆசிரமத்தையடைந்து, அவ்விடத்தில் அவர்பத்தினியாகிய முகுந்தையென்பவள் உல்லாசமாய்த் தனியே உலாவல்செய்திருக்கக்கண்டு, அவளருகிற்சென்று, அன்னையே - அடியேன் தாகநீங்குமாறு நீர்தரல்வேண்டுமென்று மிகுந்த வணக்கத்தோடும் பிரார்த்தித்தான். இவ்வாறு பிரார்த்தித்த அரசனை முகுந்தைகண்டவுடன், அவன் வடிவத்தின் பேரழகினுக்காவலுற்று அதிகவிரகதாபங்கொண்டு, மிக்கவிளைப்போடு நீர்தேடிவந்த மெலிவையுங்கருதாது, தன்மனதிலுண்டான விரகத்தினை யவ்வரசனுக்கு அறிவிப்பாளாகி, இதனைச்சொல்லுவதாயினாள். ஓசர்வாலங்காரசோபிதனாகிய பகாராசனே, உன்னைப்போலழகின் மிகுத்தவர்களைத்தேவர்கூட்டத்திலுங் கண்டதில்லை. உன்திருமேனியிற்சகலலக்ஷணங்களுநிறைந்திருக்கின்றமையால், உன்னைக்கண்டபாவையர்களியாவர்மோகத்தாற்சோர்வுறார்கள். ஓர் காரிகையானவள் மற்றொருவனபுருடனைக்கண்டுஆவல்கொள்ளுவாளாயின், உடனேயவனோடுகூடினாலல்லது அவள்விரகமொழியுமோ. முன்னையாவரையும்வதைகரும்படி ஆலகாலவிடத்தைத் தன்னிடத்துண்டாக்கிய திருப்பாற்கடலானது, மீட்டுநல்லவமுதத்தையீன்று யாவரையும் பிழைப்பித்ததுபோல, உனதுபேரழகினாலுண்டாகியவிரகத்தீயானது, எனதுதங்கள்குழையும்படி உன்றோள்களைக்கூடிச்சுகித்தாலல்லதுதீர்வதில்லையென்றுசொல்லித், தன்துகில்சோரவுங், கூந்தலவிழவும், முத்தாரங்கள்பெரியவுங், கைவளைகள்நழுவவுமான அலங்கோலத்தோடு, அவ்வரசனுக்கு

திரில்நின்றாள். இவ்வாறு இலக்குமியுங்கண்டுமயங்கத்தக்க மிக்க அழகினை வாய்ந்த அம்முகுந்தையானவள் தானேவலுவிற்கூடவேண்டுமென்றிரங்கும், உருக்குமாங்கதராசன்மனங்கலங்காதவனாகி, அம்முகுந்தையைநோக்கித், தாயே-நீ அந்தணர்குலத்திற்பிறந்து ஓர்அருந்தவருக்கு வாழ்க்கைப்பட்டவள், யானோ அரசகுலத்திற்பிறந்து இவ்வுலகத்தையரசாக்ஷிசெய்திருப்பவன். அன்றியும் யான்விநாயகமூர்த்தியைத் தொழுகின்ற அன்பனும், என்மனதுஎக்காலத்தும் பரஸ்திரீகமனஞ்செய்வதில்லை. பெண்களாயினோர்தங்கடங்கள்கணவரோடுசற்றுநேரங்கூடியிருக்கினும்,அதுவேமேலானபெருஞ்சுகத்தைக்கொடுக்கும். அவ்வாறின்றி அன்னியபுருடரோடு கூடுவராயின்,அஃது உடனே அச்சத்தை யுண்டாக்குவதினால் அவர்கட்கென்னசுகமுண்டாகும். மேலும் இம்மையிற் சொல்லுக்கடங்காத துயரங்களைப்பெற்று, மறுமையில் அளவற்றநரகவேதனையிலழுந்திவருந்துவார்கள். இறந்த பின்பல்லவோ நரகவேதனைகாணப் போகின்றோமெனக் கருதுவையாயின், நீகொண்ட நெறிதப்பிய காரியத்தால் இப்போதே எங்கும் அவதூறுசொற்களுண்டாவதன்றி, உன்கணவனுக்குரியபெருமிதத்திற்குங் குறைவுவருமாதலால், இனியுன்மனதையடக்கி, உனக்குண்டாயிருக்கின்றவிரகதாபத்தையொழித்துவிடுவையென்றுபரிவாகச்சொல்லினன். அவைகளனைத்தையும் அம்முகுந்தைகேட்டு,இவ்வரசன்மனமானது எவ்வளவேனுங் கலங்குதலில்லாமற்கல்லுக்கொப்பாக விருப்பதன்றி, கண்டிப்பானசொற்களையும் பேசுகின்றானென்றுமனம்வருந்திச், சரேலென்று அவ்வரசன்கரத்தைநெருங்கிப்பிடித்து, அன்பனே-ஸ்ரீகளாயினோர்க்கு,இக்கிரேதாயுகத்திலுந்திரேதாயுகத்திலுந்தாங்களேவலுவிற்சென்றுபுருடர்களைக்கூடுவதானசுதந்தரத்தைப்பிரமதேவனளித்திருக்கின்றானாதலால் ஓர்கணவனைப்பெற்றிருக்கின்றமங்கையர், மற்றொருகணவனையுங் கூடவேண்டுமென்றுஉடன்படுவராயின், அவர்கட்கென்னபாவமிருக்கின்றது.மேற்கூறிய யுகதர்மத்திற்கு விலக்காக,நீயேவலுவிலென்னைக் கூடவருவையாயின், இவ்விதபழிபாதகங்களை நினைக்கவேண்டுவதேயன்றிக்,கிரமப்படியானையுன்னைக்கூடவேண்டுமென்றிச்சையுற்றால், அதனாலுனக்கென்ன பழிபாதகங்கள்நேரும். இனிமேலுந்தடைசொல்லி யென்னைக்கூடாமற் போவையாயின், நீறாகும்படியுன்னை எரித்துவிடுவேன்.அல்லது உன்னழகனைத்துங்குலைந்து, நகரத்தைவிட்டுக் காட்டிற்றிரியும்படிச்சபித்துவிடுவேன், இதனைத்திர்க்காலோசனைசெய்யக் கடவையென்று சொல்லி, அவ்வரசன்மேலேவிழுந்துமார்பைத்தழுவினாள்.உடனே அவ்வரசன்பயந்து,இம்மாதின்செயல்நன்றுநன்றென்றுநகைத்துச், தனதுபுயங்களால் அவளைநிலத்தில்விழவுதறி, துன்மார்க்கியே-பெருகிவருகின்றவெள்ளமும்ஓர்அணைக்கடங்கிநிற்கும், அக்கினிசர்ப்பமுதலியதீயசெந்துக்களும்ஓர்தடைக்கஞ்சியிருக்கும், அறிவில்லார்க்குண்டானகாமமானது அவ்வாறடங்காது,பள்ளங்கண்டுபாய்கின்றபுனலுக்கொப்பாமென்று சான்றோர்கள்சொல்லுவர்,அதுபோலவே நீயும்இத்துட்டநடத்தைக்கு அஞ்சாதுஉடன்பட்டனை,உன்செய்கைஇத்தன்மையதென்றுமுன்னறிந்திருப்பேனாயின்,யானிங்கொருபோதும்வரத்துணியேன்,நீமகாதவசிரேஷ்டருடைய பத்தினியென்று, என்தாகந்தணியுமாறு தண்ணீர்கேட்ட வெனக்கு,நரகத்தில்விழத்தவல்லமகாபாதகமான

காரியங்களைநடத்தினை.உன்னைஇப்போதேயெனனுவாளுக்கினாயாக்கிவிடு வேன்,ஆனால்இருடிபத்தினியென் றஞ்சிவிட்டுவிட்டேனென்று சொல்லி அவ்விடத்தைவிட்டுத்திரும்பினான். பின்னர் முகுந்தையானவள் கோபங் கொண்டு,அரசனே-என்கற்புநிலைகுலையும்படியிங்குவந்தனை, வந்தநீஎனக் கொருசுகமுங்கொடுத்தாயில்லையாதலால்,உன்சரீரத்திற்குட்டரோகமுண் டாகக்கடவதென்று சபித்தனள். அதையவ்வுருக்குமாங்கதராசன்கேட்டு, இவளிச்சித்ததுகிடையாமற்போனதாற் கோபங்கொண்டிருக்கின்றாள், இ வளிட்டசாபத்திற்குத்தீர்வுகேட்டினுஞ்சொல்லாள்,ஆயினும் நிலைகெட்ட மனத்தையுடையஅப்பாதகி முகத்தைமீளவும்பார்க்கலாகாதென்று திரும் பாமற்போய்விட்டான்.உடனேஅவளிட்ட சாபத்தினாற்சரீரமெங்கும்வெ ண்குட்டரோகமுண்டாக, அதனையவ்வரசன்கண்டு,மிகுந்ததுயரடைந்து, விநாயகமூர்த்தியைமனதில்நினைத்து,கர்த்தனே-தேவரீர்பணிவிடைகளில் அடியேன்மனதறிந்து யாதொருகுற்றமுஞ்செய்ததில்லையே,தேவரீர்பாத பதுமங்களையடைந்தஅடியார்களிடத்தில்கணப்போதேனுந்திருவருள்நீங் குவதுண்டோ,தேவரீர்கிருபையடியேனிடத்தும் உண்டாயிருக்குமாயின் இவ்விதபொல்லாத் தீங்கும் என்னைச்சேரவல்லதோ, அடியேனறியாம ற்செய்தவினைகள்யாதாயினுமிருந்தால் அவைகளைத் தேவரீர்பொறுத்தரு ளல்கடமையன்றோ,துட்டசனநிக்கிரகசிட்டசனபரிபாலகரென்றுவேதங் களெல்லாந்தேவரீரைத்துதிப்பது மெய்ம்மையல்லவோ, யான் முகுந்தை கொண்டமோகத்தை நிராகரித்துவந்ததுதருமமாயிருக்க,அப்பாதகியிட்ட கொடுஞ்சாபத்தால் அடியேற்குஇத்தன்மைத்தானவியாதியுண்டாகலாமா தேவர்களுங்கண்டு நாணத்தக்கபேரொளிவாய்ந்தஎனது சரீரமானது,பெ ற்றவளுமிகழத்தக்க வெண்குட்டநோய்கொண்டதே,இனிஇவ்வுடலை இக் காட்டிற்றானேமாய்த்துவிடுவதல்லது, இவ்வியாதியோடுமெனது நகரத்தி ற்சென்று எவ்வாறு அரசாக்ஷிசெய்யவல்லேன், ஐயோ- ஈதென்னகொடு மையென்று துயரப்பட்டு, இளைப்பாகி,அவ்வனத்திற்றானே ஓராலமரத்தி னிழலிலிருந்தான். இவ்வரசனேடுவேட்டைக்குவந்தபரிசனங்களெல்லாந் தங்களரசனைத்தேடி, எங்குங்காணாதவர்களாகி மதிமயங்கி,மீளவு நகரத் திற்போய்ச்சேர்ந்தார்கள். இப்பாலஉருக்குமாங்கதராசனடைந்தவெண்கு ட்டரோகத்தைப்பார்க்கச்சகியாதவனைப்போலச், சூரியனானவன் தன்தே ரைச்செலுத்திமேற்றிசைக்கடலில்மறைந்துபோயினான்.உடனேஅவ்வரச னை நகரத்துள்ளோர்வந்து காண்பாராயின்,மிககநாணமுற்றுவருந்துவனெ ன்றிரங்கியதுபோல,எங்கும் இருட்கூட்டங்கள்பரந்துவிட்டன. இதுகாறு ம்நம்மைஎளியோரிடத்தும் வாசஞ்செய்யாதபடி வஞ்சித்துவந்த இவ்வர சனை,இன்றுநமதுபகைதீரவெல்வோமெனக்கருதினாற்போலப்,பசி-தாகம் இளைப்பு-என்கின்றமூன்றுதுன்பங்களும் அவனைநெருங்கிவருந்தச்செய்த ன.இவ்வாறு உண்டியில்லாமலும்உறக்கமில்லாமலும், என்றுமடையாதது யரங்களையடைந்திருக்கின்றஅவ்வரசன்துன்பத்தை, இன்றுயாம்நீக்கிரக்ஷி ப்போமென்றுவந்தவன்போல, முன்னர் மேற்றிசைக்கடலில்வருந்திமறை ந்த சூரியனானவன்,மீளவுங் கீழ்த்திசைக்கடலிலுதயமாகிவந்தான்.பின்னர் அவ்வுருக்குமாங்கதராசன் காலைக்கடனைமுடித்துத், தன்னிதயாலயத்திற்க ணேசமூர்த்தியைத்தியானித்துப் பூசைசெய்துகொண்டிருந்தான். அச்சம

யத்தில், ஆகாயமார்க்கமாக நாரதமுனிவர்செல்லக்கண்டு, ஓஓசுவாமிகளே ஓஓதெய்வமுனியே, ஓஓமகதியாழ்த்தலைவரோ, ஓஓதிருமான்முதலாயினோர் துன்பத்தை நீக்குகின்றவரோ, தேவரீர்திருவடிசட்கடியேன் அடைக்கலமடைக்கலம். ஓஓகிருபாமூர்த்தியே, அடியேன்வீமராசனுடையபுத்திரன், என்பெயர்உருக்குமாங்கதன், சுவாமிகள்இங்ஙனமெழுந்தருளி, அடியேன்படுகின்றதுன்பங்களைநீக்கிரக்ஷிக்கவேண்டுமென்று, மிக்கவுருக்கத்தோடு பலமுறைதுதித்துஓலமிடலுங், தமதுஞானநோக்கினாற்சகலமுமறியவல்லநாரதமுனிவரானவர், தாம்கருதிச்செல்கின்றகாரியத்தைவிடுத்துக், கனைக்கின்றகன்றைநோக்கிக்கதறிவருகின்ற பசுவைப்போல, ஞெரேலென்றுநிலத்திலிறங்கி, அரசனெதிரில்வந்தருளினார். அவ்வரசனவரைச் சாஷ்டாங்கமாகவணங்கி, சுவாமீ- அடியேன் இக்கானகத்தைநோக்கிவேட்டையாட வந்தவிடத்தில்மிக்கதாகமுண்டாயது. அதனால்இளைப்பாகி, நீரிருக்குமிடத்தைத் தேடிச்செல்லுகையில், அங்கோராசிரமத்தில் இருடிபத்தினியாகியமுகுந்தையென்பவள்எனக்கெதிர்ப்பட, அவளை நீர்தரக்கேட்டேன். உடனேஅவள்விரகநோய்கொண்டு, என்னைவலுவிற்பற்ற, யானதற்கிணங்காமையால் என்னைச்சபித்துஇக்கொடியநோயை யானடையச்செய்தனள். இப்பாலிந்நோயோடும்எனது நகரத்திற்குச்செல்லமனமில்லாமல், உயிரைவிடவு நினைத்தேன். அரியதவங்களைச்செய்துஅடியேனைப்பெற்ற தாய்தந்தையர்நிமித்தம், எனதுயிரைக் காத்துவைத்திருக்கின்றேன். அடியேன்தினந்தோறும்ஆராதித்துவந்த கணேசமூர்த்தியினதுகிருபையினாலே இத்தருணத்தில் தேவரீரெனதுகண்ணெதிரில்வரப்பெற்றேன். அன்றியும்என்னைத்துன்பப்படுத்துகின்றஇந்நோயைச், சுவாமிகளால்நீக்கிக்கொள்ளத்தக்க பாக்கியத்தையடைந்தேனாதலால், இத்தினமேவீமராசனுக்குப்புத்திரசந்தானமுண்டானதினமாயது. இனியடியேற்குஇவ்வியாதிநீங்கும்படியானமார்க்கத்தையருளிரட்சிக்கவேண்டுமென்றுபிரார்த்தித்தலும், அவ்வரசனைநாரதமுனிவர் கிருபையோடும் பார்த்து, அன்பனே- உனதுகுடைநீழலிற்றங்கியிருக்கின்ற விதற்பதேயத்தில்யான்வரும்போது, கந்தர்ப்பமென்னுநகரத்திலோரற்புதத்தைக்கண்டேன். அஃதுயாதெனில், அந்நகரத்தில்விநாயகமூர்த்தி ஆலயமொன்றிருக்கின்றது, அவ்வாலயத்தில் மூர்த்தீகரித்திருக்கின்ற சிந்தாமணிவிநாயகரைப்பலபேர்பூசனைசெய்து, அவ்வவர்களிஷ்டகாமியார்த்தங்களைப்பெறுகின்றார்கள். அவ்வாலயத்தெதிரில் கணேசகுண்டமென்றுஒரு தீர்த்தமிருக்கின்றது. அதன்மகிமையைத்தெய்வலோகத்தாரும்அறிந்திருக்கின்றனர். அன்றியும் ஒருசூத்திரன் குட்டநோயினாற்றுன்புற்றுத் தீர்த்தயாத்திரையாகச்செல்லுகையில், அத்தடாகத்தையடைந்துஸ்நானஞ்செய்தெழுந்தான். உடனேஅவனுடையகுட்டநோய்நீங்கியதன்றிச், சகலவினைகளும்நீங்கப்பெற்று, விநாயகமூர்த்தியினுடைய சாரூபத்தையடைந்து, அவரருளாற்றேவகணங்கள்கொண்டுவந்த விமானத்திலேறிச், கணேசலோகத்திற்போய்ச்சேர்ந்தான். ஆதலால், நீயுமவ்விடத்திற்சென்று, அக்கணேசகுண்டத்தில்ஸ்நானஞ்செய்து, அங்கெழுந்தருளியிருக்கின்றவிநாயகமூர்த்தியைப்பூசித்துத், தானதருமங்களை இயற்றுவையாயின், இக்குட்டவியாதியுன்னைவிட்டொழிந்துபோகும். இவ்வியாதி அவ்விநாயகமூர்த்தியாற் றீரவேண்டுவதல்லது, இப்பிரபஞ்சத்துள்ளஔடதிகளெல்லாம்புசித்தாலும், யானை

குதிரை-தேர்-முதலியபலதானங்களைச்செய்தாலுந் தீர்வதில்லையென்றனர். இவ்வாறுநாரதமுனிவர்சொன்னதையெல்லாம் உருக்குமாங்கதராசன்செவிகுளிரக்கேட்டு, ஆனந்தங்கொண்டு, மீளவும்பணிந்தெழுந்து, சுவாமி-பெய்கின்றமழைக்குங்,காய்கின்றசுடர்க்கும், வீசுகின்றகாற்றுக்குங், கைம்மாறுசெய்யவல்லவர்கள்யாவரிருக்கின்றார்கள். அதுபோலஇப்பிரபஞ்சத்துள்ளஉயிர்களையெல்லாம் பிழைக்கும்படியெழுந்தருளியதேவரீர்க்கு,யான்செய்யத்தக்ககைம்மாறென்னவிருக்கின்றது. கதம்பவனத்திலெழுந்தருளியிருக்கின்றவிநாயகமூர்த்தியை யாவர்பிரதிட்டைசெய்துபூசித்தவர்கள் அந்தவிவரத்தையும்அடியேன் மீதுகிருபைபுரிந்து,கோபஞ்செய்யாமற்றிருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று இரத்தலும், நாரதமுனிவர்மனதிரங்கி இதனைச்சொல்லுவதாயினார். அரசனே-முன்னொருகாலத்தில்இந்திரனென்பவன் தேவர்களெல்லாந்தொழும்படியாக ரத்நசிங்காதனத்திலிருந்துஅரசுசெய்துவருகின்றசமயத்தில்,நாமங்குசென்றோம். நம்மையவ்விந்திரனெதிர்கொண்டுபணிந்து,ஓராதனத்திலிருத்திப்,பற்பலஉபசாரங்களைச்செய்து சுவாமி-தேவரீர்சகலபுவனங்களினுஞ்சஞ்சரிக்கின்றமையால், யாதாயினும்ஓரதிசயமுண்டாயின்அதனைக் கிருபைசெய்யவேண்டுமென்று கேட்டான். அதற்குயாம்சொன்னதாவது, இந்திரனே- யான்பூவுலகத்திற்குப்போயிருந்தேன், அங்குகௌதமமுனிவர்பத்தினியாகிய அகலிகையைக்கண்டேன்,அவளழகினுக்கொப்பாகஇவ்வுலகத்தில்யாவரையுங்காணேன், இலக்குமி-இந்திராணி-இரதி-அனசூயை-திதி-திலோத்தமை-அதிதி-என்கின்றஇம்மாதர்களுடையஅழகும்,அவளழகுக்குஎதிர்நிற்கமாட்டாது, திரிபுரசங்காரமூர்த்தியாகிய சிவபெருமானுடையதிவ்வியசரணாரவிந்தங்களையே இடைவிடாதுதியானிக்கின்றஎன்மனமும்,அவளைக்கண்டவுடன்விருப்பங்கொள்ளுமாயின், இப்பிரபஞ்சத்தில்அவளைக்கண்டுவிரும்பாதவர்கள் ஒருவருமிருக்கமாட்டார்களென்றுசொல்லி,அவ்விடத்தினின்றும்நீங்கினோம். பின்னரவ்விந்திரனுக்கு அகலிகையின்மீது விரகமுண்டாகி, அழலிற்பட்ட மெழுகுபோலமனமுருகி, உடனே அவள்கணவராகியகௌதம முனிவர்வடிவங்கொண்டு, அவர்அதிகாலையில்ஸ்நானஞ்செய்யச்செல்கின்றசமயம்பார்த்து, அகலிகையிடத்திற்குவந்து, என்பிராணநாயகியே,விளையாடிற்கலவிசெய்ய அமளியிடைக் கடவையென்றுசொன்னான்.அதையவ்வகலிகைகேட்டு,சுவாமி-எக்காலத்துந்தவறுதவொழுக்கத்தினையுடையமகாதவசிரேஷ்டராகியதேவரீர்,இத்தினம்இவ்வகைத்தானஅற்பகாரியத்திற்குஉடன்பட்டதென்னகாரணம். ஸ்நானஞ்செய்து,நியமநிட்டைகளைமுடித்து,முறைமைப்படி சிவபூசைசெய்யுங்காலத்தில்,மிக்கபழுதானகாமப்பொருளையிச்சிப்பதுந்தக்கதுதானோ.அப்படிதகாதகாரியத்தைத்தக்கதாக இத்தினந்தேவரீர்க்குத்தோற்றியது எந்தகாரணத்தால், அதைஅடியாட்குவிளம்பியருளவேண்டுமென்னலும், வஞ்சவடிவங்கொண்டு வந்திருக்கின்ற தேவேந்திரன்சொல்லுவான், எனதன்பிற்குரிய வனிதாரத்நமே- யான்காலையில்நீராடச்செல்லுகையில், அங்கோர்மாது வஸ்திரமில்லாமல் ஸ்நானஞ்செய்துகொண்டிருந்தனள். யானவளழகைக்கண்டவுடனே,எனது மனம்பேதித்தது. உடனே மிகுந்தவிரகதாபங்கொண்டு, செய்யவேண்டிய நியமங்களில் மனதைச்செலுத்தச் சக்தியில்லாமல் வந்துவிட்டேன். இனிஎனது

உயிர்வாழ்வதும்அரிதாகஇருக்கின்றது.விரைவில்என்னுடன்கலவிசெய்து சுகந்தருவாயாக. இதைத்தடுத்திடுவையாயின்உனதுஉயிரழியுமாறுசபித்துவிடுவேனென்றான். இவையனைத்தையு மகலிகைகேட்டு, மாறுவடிவங்கொண்டு வந்திருக்கின்ற மகாபாதகனைத் தன்கணவனென்றேநினைத்து,அக்கினிசாக்ஷியாகத் தங்கள்கரத்தைப்பற்றிய காதலன்கருத்தெவ்வாறோ, அவ்வாறேநடந்துகொள்வது பெண்களுக்குரியகடமையாதலால், அத்தருமத்தின்படி யவளிசைந்து, அமளியைச்சமீபித்தனள். இப்பால் இந்திரன் மனமகிழ்ந்து, பெண்ணரசியே- உனதுகடைக்கண் பார்வையால்என்னுயிர்பிழைத்திருக்கப் பெற்றேனென்று குலாவி, அருகிற்சென்று, சொர்ணத்தாற்செய்து நவரத்தினங்கள் பதித்திருக்கின்ற சப்பிரகூடமஞ்சத்தின் மீதேறி, பூங்கொத்தினையொத்த அம்மெல்லியலைத் தனதுசரத்தாற்பற்றிச், சமீபத்திலிருக்கவைத்து,அவள்முகாரவிந்தத்திற்புன்னகையரும்பவும்,மேகலாபரணங்கள் ப்ரகாசிக்கவும், பவளத்துண்டத்தையொத்த கனிவாயிதழ்துடிக்கவுந்,தேமல்நிரம்பிய தனங்கள்வளர்ந்தோங்கிவிம்மவும்,மேலணிந்திருக்கின்ற கச்சானதுநெகிழ்ந்துகிழியவும், இடைதுவண்டுவருந்தவுமாகப்,பலவிதசரசசல்லாபங்களைச்செய்து, தனதுகரங்களால்இரண்டுபயோதரங்களையும்வருடி, ஆடையைநெகிழ்த்தெறிந்து,பொலிவுற்றிருக்கின்றநிதம்பத்தைத்தடவிப்,பூமாலைகளணிந்திருக்கின்றகூந்தலானது அவிழ்ந்து சோரும்படியாக, லதாவேஷ்டிதம்-விருக்ஷாதிருடம்-திலதண்டுலம்-க்ஷீரநீரம்- ஊருப்பிரகூடம்- சகனோபசிலேஷம்- ஸ்தனம்- லலாடிகம்-என்கின்ற ¶ எண்வகையாலிங்கனங்களைநடாத்தி,நுதலைநீவி,முகத்தின்முத்தமிட்டு உச்சி - கொங்கைகளின்நடு - சகனம் - முதுகு - கன்னம் - பிடர் - நெற்றி - தொடை - என்னும் - இவ்வெட்டிடத்தில் - சங்கோசம்- பக்கத்தம்- பிரசுரிதகம் - முஷ்டி - கீலம் - கத்திரிகை - சந்தங்கிசம் - வித்தை - என்கின்ற ‡ எண்வகைத் தாடனங்களைச்செய்து, கண் - கபோலம் - கொங்கை - நெற்றி - கைம்மூலம் - நிதம்பம் - வாயிதழ் - உந்தி - என்கின்ற எட்டிடத்தினுஞ் சும்பனமியற்றி, அர்த்தசந்திரன் - மண்டலம் - புலிநகம் - மயூரபதம் - முயலடி - உற்பலம்- என்கின்றஅறுவகை ※ நகக்குறி

¶ இவைமுறையே- கொடிபோலச்சுற்றித்தழுவுதல்,மரத்தைப்போலேறித்தழுவுதல், எள்ளும்அரிசியும்போலக்கலந்துதழுவுதல்,பாலுநீரும்போல ஒன்றுபடத்தழுவுதல், தொடையால் நெருக்கித்தழுவுதல், குறிகள் சேரத்தழுவுதல், கொங்கையழுந்தத்தழுவுதல், நெற்றிபொருந்தத்தழுவுதல், என்க்கொள்க.

‡ இவைமுறையே- கைவிரல்குவித்துத்தட்டல், குட்டுதல், அகங்கையாற்றட்டல், பையக்குத்துதல், தர்ச்சனியாலூன்றல், தர்ச்சனியாலும்,மத்தியமத்தாலும் நெருக்கல், மேற்படிவிரல்களைமடக்கிப்பற்றுக்கொறடுபோலப் பிடித்தல், தர்ச்சனியாற்றுருவுதல், எனக்கொள்க.

※ இவைமுறையே- கழுத்தினிடத்துங் கொங்கையினிடத்தும்வளைவாகப்பதித்தல், கடிதடத்தில் எதிர்க்கெதிராகச் சேர்த்துப்பதித்தல், மேற்கூறிய மூன்றிடத்தும் நுனிவளைவாகப்பதித்தல், கொங்கையினடிப்புறத்திலொன்றும் மேற்புறத்தில் மற்றையநாலும் ரேகைபொருந்தப்பதித்த

களையிட்டு, மூஷகம் - அநுச்சூனகம் - பிரவாளமணி - பிந்து - மணிபிந்துமாலை - கோலசர்விதம் - என்கின்ற அறுவகைதந்தக் ¶ குறிகளையமைத்து, பெருவிரல்- புறந்தாள்- பரடு- முழந்தாள்- அல்குல்- நாபி- மார்பு- முலை-கைம்மூலம்-கழுத்து- கபோலம்- வாய்- கண்- நெற்றி- உச்சி- என்னும்பதினைந்திடங்களிலும்அமுதநிலையாராய்ந்து,தேகபரவசனுகிக்கிரீடிக்குமுன்னிலையில், அவ்வகலிகையுஞ் சரீரபுளகாங்கிதமுற்றவளாய், அவனிரண்டுதோள்களினுந் தனதுகொங்கைகளழுந்தத்தழுவி,மனமுருகி, இன்பவமுதத்தினைத்தருவதுபோல அடிக்கடித்தனது கொவ்வைக்கனியையொத்த செவ்விதழூறலைத்தந்து, சங்கவளையல்கள்நெரியவும், பாதசாலங்கள் கலீர்கலீரென்றுசத்திக்கவுங், கண்கள்சிவப்பேறவும், அதரம்வெளுப்புறவும், நெற்றியில் வியர்வையரும்பவுங்,கண்டத்தில்- மயில்- புறு- அன்னம்- காடை- வண்டு- குயில்- கோழி- செம்போத்து- என்கின்ற எண்விதப்புட்குரல்களையுங்காட்டிக்,கற்பகதருவைப்பின்னிக்கொண்டிருக்கின்ற காமவல்லிக்கொடிபோல, அவ்விந்திரனைச் சரீரத்தோடுசரீரமாகவணைத்துக், காமநீரூற்றெடுக்கத்தக்கதாகப் பலசுரதகலைகளைநடாத்திவந்தனள். உடனே இந்திரன் பேரானந்தக் களிப்பின்மூழ்கி,உத்தானிதம் திரியக்கு ஆசிதகம் - ஸ்திதம் - ஆனமிதம் - என்கின்ற + ஐவகைக்கரணங்களோடு,கந்துகநிலை- பன்னகநிலை - குக்குடநிலை - வெருகுநிலை - வியாக்கிரமநிலை - § முதலிய பலநிலைகளையும் புரிந்து, சிந்தையோடு சிந்தையும், ஆகதோடுஆகமும், ஆவியோடுஆவியும்,ஒன்றுபடக்கலந்து, எக்காலத்துமறியாத பெரும்போகவாரிதியின்மூழ்கித், தனதுஎண்ணத்தின்படி நிறைவேற்றினவனுய், அளவளாவிய மனக்களிப்பினேடும் அவ்வகலிகையைப்பார்த்து, கடலிற்பிறவாதுண்டானஅமுதமே, கரும்பிற்பிறவாதுதித்த சர்க்கரையே, புட்பத்திற்பிறவாதெழுந்த செந்தேனே, உனக்கும் எனக்கும் உடலமொன்றுனதன்றிஉயிருமொன்றுய்விட்டது.மகாதபோபலங்களால்உன்னைக்கிடைக்கப் பெற்றவெனக்கு, இனிமேற்பெறத்தக்கதென்னவிருக்கின்றதென்றுபுகழ்தலும்,அவ்விந்திரனேடுமுறுவலரும்பவும், விழிகள்முகுளிப்பவுந், தேகபரவசங்கொண்டு, ப்பலலீலாவிநோதங்களை நடாத்திய

ல், கொங்கைகளின் முகட்டிடத்துஐந்தும் விளங்கும்படிபதித்தல், கொங்கையின்மீதும் அல்குலினும்பின்புறத்தினும்மூங்கிலிலையைப்போலப்பதித்தல், எனக்கொள்க.

¶ இவைமுறையே- அதரத்தில் சிவப்புறப்பதித்தல்,கபோலத்தினிடத்தும் அதரத்தினிடத்தும்வடுப்படாமற்பதித்தல், கபோலத்தினிடத்து பல்லுமிதழும் பொருந்தப்பதித்தல், அதரத்தில்பல்தைக்கும்படி பதித்தல், கைம்மூலம்- நெற்றி- மார்பு- தொடை- இவ்விடங்களில் அழுந்தும்படிபதித்தல், தனங்களின்மேல் மன்மதன் வெற்றியை யெழுதிவைத்தது போல ஒழுங்காகப்பதித்தல், எனக்கொள்க.

+ இவைமுறையே- மல்லாத்தல், குறுக்குஅல்லதுஒருக்கணித்தல் உட்காத்தல்- நிற்றல், குனிதல்- எனக்கொள்க.

§ இவைமுறையே- குதிரை- பாம்பு- கோழி- பூனை- புலி- எனப்படும். இவற்றைச்சித்திரகரணமென்றுங் கூறுவர்.

விளைப்போடு, சப்பிரகூடமஞ்சத்திற் சிறிதுதலைசாய்த்திருந்த அகலிகையானவள் அவ்வசனங்களைக்கேட்டு,மின்னற்கொடிபோலநுடங்கி, இடைதளர்ந்து, மெல்லெனவெழுந்து, துகிலையுடுத்து, மஞ்சத்தினின்று மிரங்கி, மிகவுமச்சங்கொண்டு, இவனதுவடிவமாத்திரம்நம்முனிவனைப்போலிருப்பதன்றி,இவன்சரீரத்துண்டானவாசனையும்,இவன்செய்தகலவித்தொழில்களும், இவன்பேசுகின்றவார்த்தைகளும்,வேறுபட்டிருக்கின்றனவாதலால், இவன்நம்மோடுகலவிசெய்யும்பொருட்டுக்கள்ளவேடங்கொண்டுவந்ததேவேந்திரனேயென்றுநிச்சயித்துப்,புருவத்தைநெரித்துக்கோபித்து, எனது முனிபுங்கவனைப்போல மாறுவேடங்கொண்டுவந்தநீயார், உள்ளதைப்பேசாவிடிற்சபித்துவிடுவேனென்றுசொன்னாள். அதனைத்தேவேந்திரன்கேட்டு,நாமின்னவனென்று அறிவிப்போமாயின், இவள் மிகவுஞ்சந்தோஷங்கொண்டு, நமக்கிச்சையுண்டாகுங்காலத்தெல்லாந்தடையின்றிக்கூடுவளெனக்கருதிப்,பின்னர்நேர்ந்திடுந்துன்பத்தைஎண்ணாமல், மிக்கஅன்போடுதனதுநிசவடிவைக்கொண்டு, அவளெதிராகநின்று, பெண்ணரசியே- யான்உம்பருலகத்திற் கதிபதியாகியதேவேந்திரன்,யான்உனதழகின்வளமைகளைக்கேட்டு, அத்தெய்வலோக வரசினையும், இந்திராணிபோகத்தினையும்வெறுத்து, இலக்குமி சரஸ்வதிமுதலாயினோர் வனப்பினையு மதியாமல், உன்னையேயிச்சித்துவந்தேன், எனதெண்ணத்தின்படியே நீயுமிசைந்தனையாதலால், இத்தினம்யாமிருவரும் புணர்ந்து போகசாகரத்தின்மூழ்கினோம்.நம்முயிருமுடலும் இரண்டறக்கலந்துவிட்டன. இனிமேலென்னைவேறாக நினைப்பையேற்குற்றமாகும், இத்தினத்தில் பஞ்சபுட்பபாணங்களை என்மீது பிரயோகித்த மன்மதனானவன், இன்னும் பிரயோகிக்கின்றபோதெல்லாம் உனது கிருபாநோககம்பாலித்தருளி, என்னைமுற்றினும் பாதுகாக்கவேண்டுமென்றுஇரந்தான். இவையனைத்தையும் அகலிகைகேட்டுக், கோபங்கொண்டு, எனதுபிராணநாயகனைப்போலவஞ்சவடிவங்கொண்டுவந்தபாவி, சந்திரனுக்குற்றகளங்கத்தினைப்போல, என்மரபுக்குளக்காலமும்மாறாக்களங்கத்தையுண்டாக்கி,எனதுகற்பையுமழித்து,என்கணவருடைய உள்ளத்தையுங்கொதிக்கச்செய்து, என்னைப்பலவிதத்தினுங்கெடுத்தாயே,இதற்கென்னசெய்வேனென்றுசொல்லிப்பயந்துபரிதாபித்திருக்கின்றசமயத்தில்,சூரியோதயத்திற்குமுன்னதாகவெழுந்துஸ்நானஞ்செய்யப்போயிருந்த கௌதமமுனிவரானவர்,சகலநியமாதிகளையுமுடித்துக்கொண்டு, மீளவுந்தமதாசிரமத்தில்வந்து,தலைவாய்தலினின்று, மனைவியைக்கூவித், தண்ணீர்கொண்டுவருவதாகக் கட்டளையிட்டனர். உடனே அகலிகையானவள்நடுநடுங்கிப், பழையவொழுக்கங்களில்லாமலுஞ், சுசிகரமில்லாமலுந்தண்ணீர்கொண்டுவந்துகொடுத்தலுங்,கௌதமமுனிவர் அவளிருக்கும்அசுத்தகோலங்களைப்பார்த்துப்,பெண்ணே-உன்வதனம்வேறுபட்டிருக்கின்றகாரணமென்ன,இத்தினத்தில்வழக்கம்போல ஆதனமிடவில்லை விரைவிற்சலங்கொண்டுவரவில்லை, இனியவசனங்களைப்பேசவில்லை, உன்சரீரஞ்சுசியில்லை,நீமுன்னிருந்தமாதாகவுந்தோற்றவில்லை,ஆதலால்நடந்தவிசேடங்களை உண்மையாகச்சொல்லக்கடவையென்றார். அதற்கவ்வகலிகைஉள்ளங்கலங்கி, உடலம்நடுங்கித், தன்காதலனைச் சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து,நாணங்கொண்டு,தலைகுனிந்து, முகங்கோட்டி,நிலங்கீறி,ம

திம்பங்கி, உணாகுழறி, சுவாமி-தேவேந்திரன் தேவரீருடையவடிவங்கொண்டுவந்துமாறுபாடுபேசி என்னைக்கலவிசெய்யவழைத்தலும், அடியேன் சுவாமிகளேயென்றுநினைத்துக்கலந்துவிட்டேனென்றனள். இதைகௌதமமுனிவர்கேட்டலும், மகாகோபாவேசங்கொண்டு, இருபுருவங்களையுநெரித்துக், கண்கள்சிவக்கப்பார்த்து, உனக்குநமதுடலின்தன்மையும், நமதுகுறியின்பேதமும், நாமியற்றுங்கலவித்தொழிலும், இத்தன்மையதென்றுதெரியாமற்போயதா.நீசிறிதும்அச்சமின்றிப்பரபுருடனையிச்சித்துச்சுகித்தனையாதலால்,நீசிலையுருவாகக்கடவதென்றுசபித்தனர். உடனேகாட்டைப்பற்றியகனலைப்போல, அம்முனிவரிட்டசாபமேலிட்டுவருவதை அகலிகைகண்டு, கண்களில்நீர்த்தாரைகள் சிந்தும்படியாகக்கணவனைப்பார்த்து சுவாமி-யான்தெரியாமற்செய்தகுற்றத்தை,யாவரும்அறியாமுன்னமேதேவரீர்க்கறிக்கையிட்டேனாதலால், தேவரீர்கிருபைபுரிந்து, அடியேன்செய்தகுற்றமுந்,தேவரீரிட்டசாபமுந்தீரும்படியாக அநுக்கிரகிக்கவேண்டுமென்றுபிரார்த்தித்தனள்.அதற்கம்முனிவர்சிறிதுஇரங்கிப், பெண்ணே-இட்சுவாகுவம்சத்தில், மகாவிஷ்ணுவானவர் ஸ்ரீராமமூர்த்தியாக அவதரிக்கப்போகின்றார். அக்காலத்தில்அவர்பாதமானதுஉன்மீதுபடும். பட்டவுடன் உன்சாபம்நீங்கி,எதாப்ரகாரம்நம்மிடத்துவந்துவாழ்ந்திருப்பாயென்றுசாபத்தீர்வுகூறினார்.பின்னர்அகலிகைசிலையுருவாகியிருந்தனள்.இப்பாற்கௌதமமுனிவர்வந்ததுமுதல் நடந்தகாரியங்களனைத்தையும், மறைவிலிருந்துகேட்டதேவேந்திரனானவன்மனங்கலங்கி, முட்டையிற்கட்டுண்டிருக்கின்றகருவைப்போலப் போக்கிடங்காணமல், ஐயோ- கடலின்மூழ்கினாலும், மலையிலொளித்தாலுங், காமத்தீயானது உடலைப்பற்றியிருக்கின்றஉயிரைஅருந்தும்வந்து சுடுவதுபோல, நாமெங்கோடி யொளித்தாலும், இந்தமுனிபுங்கவருடைய கோபம்நீறாக்கிவிடுமே,ஆஅ- என்னகாரியத்தினைச்செய்தோம்,இனிஎன்னபழிசம்பவிக்க விருக்கின்றதோவென்றுபயந்து, ஈனவுடலங்கொண்டபூனைவடிவங்கொண்டு வெளியிற்செல்லப்புறப்படலும், மதிமயங்கிச்செல்கின்றஅப்பூனையைக் கௌதமமுனிவர்கண்டு,இவ்வுருவங்கொண்டவன்தேவேந்திரனேயென்றுநிச்சயித்து,இற்புலியே-நீயார்போகாதேயென்றுதடுத்தனர். உடனேதேவேந்திரன் தனது நிசவுருவத்தைக்காட்டி,மேலானதன்பராக்கிரமமெல்லாம்இழந்துநின்றான் அவ்வாறுநிற்பவனைக் கௌதமமுனிவர்கண்டு, அடா துர்த்தனே-உன்னைஇப்போதேநீறாக்கிவிடுவேன்,நீதேவர்கட்கெல்லாம்அரசனாகையாலேஅத்தேவர்முகத்தைப்பார்த்துஉன்னைவிட்டுவிட்டேன்,ஆயினும்ஒருபெண்குறியையிச்சித்துவந்தவுனக்கு உடன்முழுவதும்பெண்குறியாகக்கடவதென்று சபித்தனர்.உடனே-அளிந்தகனியிற்பட்டகடுங்காற்றைப்போலக், கௌதமமுனிவரிட்டசாபமானது தேவேந்திரனைநெருங்கலும்,செத்தசவத்திற்கொப்பானவனாகிக், கீழேவிழுந்து, தனக்குநேரிட்ட ஆபத்தை நினைக்குந்தோறு மனந்துவன்று,தாங்கற்கரிதுயரத்தையடைந்து,ஐயையோ- இதுவரையிற் கற்றகல்வியும், அரக்கர்குலங்களைச் சயித்தடைந்தசெல்வமும், தேவலோகத்தையாள்கின்ற அரசாட்சியும்,மற்றுமுண்டான சகலசம்பத்துகளுங்,காமமென்னுங்கடுந்தீயிற்பட்டு எரிந்துவிட்டனபோலாயதேயென்றுமனமழிந்து,உடலுருகிக்,கதறிக்கதறி,ஓவென்றழுது,தெய்வமே-பெண்களாயினோர்

தங்கட்கிருக்கின்ற வொருகுறியைமறைக்குநிமித்தம் மிசவு நீட்சியுள்ள ஆடையினையுடுத்திருந்தும்,ஓர்காலத்து ஆடவர்கூட்டத்துள் வருவதற்கிலச்சையுறுவார்களே.அத்தன்மைத்தானபெண்குறிகள் நம்முடன்முழுவதும் அளவற்றதாகநிறைந்துவிட்டனவே,அவற்றினை எல்லாம்மெவ்வாறுமறைத்துஒருவரெதிரில்உலாவப்போகின்றேமென்றுகலங்கி,அவ்விடத்தினின்றுநீங்கி, ஓர்மடுவிற்புகுந்து,அதிலிருக்கின்ற தாமரைநாளத்திலொளித்துக்கொண்டனன். உருக்குமாஙகதராசனே,இத்தேவேந்திரன்செய்தகுற்றத்தாற்றன்சரீரமுழுவதும் அளவற்றயோனிகளையடைந்திருப்பதைப்பார்க்கின்,இப்பூவுலகத்தில்அனந்தபாதகங்களைச்செய்துஒருபெண்சனனமெடுப்பதென்றும்,அளவற்றபெண்சனனமெடுப்பதுஒருபிறன்மனையையிச்சித்தபாதகத்தாலென்றும்பெரியோர்கள் சொல்லுவார்கள்.அஃதுண்மையாகவேசம்பத்தக்கதாகியிருக்கின்றது. எழில்வாய்ந்தஇந்திராணிமுதலியதேவஸ்திரீகள்அனந்தம்பெயர்கள்இருக்க,இவ்வோர்இருடிபத்தினியாலல்லவா அவ்விந்திரன்தன்மாட்சிமையனைத்துமழியப்பெற்றுஒளித்துக்கொள்வதாயினன்.பெற்றதைச்சிறிதாகவெறுத்துப், பெறாததைப்பெரிதாகவெண்ணிவிரும்புகின்றஆணவத்தின்வலியை யாவர்சொல்லவல்லவர்கள். மங்கையரைக்கூடுவதாலுண்டாகியபோகத்தையுஞ்சிலஅறிவீனர்கள்இன்பமெனச்சொல்லுகின்றார்கள். அஃதின்பமேயாயின், தேவர்கட்கெல்லாந் தலைமைபெற்றஇந்திரனுக்கும் ஒருபெண்ணிச்சையால் இத்தன்மைத்தான துன்பத்தினைக்கொடுக்குமோ. கணேசமூர்த்தியினுடைய சரணாரவிந்தங்களைத்தியானிக்கின்ற இன்பமே இன்பமல்லது, வேறொன்றையுமின்பமெனக்கருதப்படுவதோ. இந்திரன்செயலிவ்வாறிருக்கத்,தேவர்களெல்லாம்வழக்கப்படி யவ்விந்திரனைத்தொழுவதற்கு அவன் கொலுச்சபையிற் சென்றார்கள். அங்குஅத்தேவர்கள் அவனைக்காணாதவர்களாகி, அந்தப்புரத்தில்இந்திராணியோடு மிருக்கின்றவனாகவேண்டுமென்று யோசித்து, நெடுநேரங்காத்திருந்தார்கள். பின்னும் அவன்வாராமையால், அவ்விந்திராணியைநேரிற்சென்றுகண்டு, அவனங்கில்லையென்பதைஅவளாலறிந்துகொண்டுமிகவும்அச்சமுற்றுப்,பூவுலகத்திற்சென்று,கடல்-மலை-காடு-நாடு-முதலியபலவிடங்களினுந் தேடிக்காணாமல், சத்தியலோகமுதலியபலலோகங்களையடைந்து,ஆங்காங்குஅளவற்றவிடங்களிற்றேடியுங்காணாதவர்களாகி,மிகுந்ததுயரங்கொண்டிருக்கின்றகாலத்தில்,ஒருநாள் அவர்களெல்லாம்பொன்னுலகத்திற்சென்று, அங்குவீற்றிருக்கின்ற பிரகஸ்பதி தேவரையழைத்துக்கொண்டு,நம்மிடத்துவந்து, நமக்குச்சாஷ்டாங்கமாகநமஸ்காரஞ்செய்துசுவாமி-தேவேந்திரனைஎவ்வுலகத்திலுஞ்சென்றுதேடினோம்,அவனெங்குஎவ்வாறாயினனோஅதனையறிகின்றிலேம்,அவன்வரலாற்றைச்சர்வஞ்ஞமூர்த்தியாகிய தேவரீரோதிருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தலும், யாமத்தேவேந்திரன்படுகின்ற துன்பங்களனைத்தையும் விவரமாகச்சொன்னோம்.அவைகளையத்தேவர்கள்கேட்டவுடன் மனவருத்தங்கொண்டு,ஓஓ-இனிஅவ்வரசாட்சியையாவரோற்றுக்கொண்டுஇந்திராணியைக்காக்கவல்லவர்கள். யாவரும்வழிபடத்தக்க கீர்த்தியினைப்பெற்ற இந்திரனுக்கு இதுதக்கதட்டத்தைதானோ. இதற்கினியென்னசெய்வோமென்றுகிலேசித்து,யாவர்சாபங்கொடுத்தவரோ அவரே அச்சாபத்தைக்கிருபைசுரந்து நீ

ர்க்கவேண்டுவதல்லது மற்றையர் ஏதேதுசெய்யினுந்தீர்தலரிதாகும். அக்கௌதமமுனிவரோ, தம்முடையபத்தினியையுஞ்சிலையுருவாகச்சபித்தனர். பின்னர் அவள் பட்டதுன்பத்திற்கிரங்கிச்சாபத்தீர்வுங்கூறியருளினார். இந்திரனைமாத்திரம் இன்னுஞ்சாபத்தோடுவதையவிட்டிருக்கின்றனராதலால் யாமனைவரும் அவராசிரமத்தையடைந்து, அந்தமுனிபுங்கவரைக்கண்டு, மிக்கவந்தனைகள்செய்து இரந்துபிரார்த்திப்போம்வாருங்களென்று நம்மையுமழைத்தார்கள். யாமும்பிரகஸ்பதிதேவரும் அவர்களோடுசென்றோம். பின்னரத்தேவர்கள்கௌதமமுனிவரைக்கண்டு, அவர்பாதாரவிந்தங்களைவேதாகமவிதிப்படிபூசனைபுரிந்து, புஷ்பங்களாலருச்சித்து, சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து, எதிர்நின்று, உள்ளமுமுடலும்உருகும்படியாக ஓவென்றலறிஓலமிட்டு, அளவற்றதோத்திரங்களைச்செய்வதானார்கள். ஓசர்வஞ்ஞமூர்த்தியே, மேருஇமயமுதலான அஷ்டகுலாசலங்களுடையகனங்களை யளவிட்டாலும், கடற்கரையிலுள்ள நுண்ணியமணலையளவிட்டாலும், ஆகாயத்திலிருக்கின்ற உடுக்கூட்டங்களையளவிட்டாலும், வானிலிருந் தொழுகுகின்ற வருஷதாரைகளையளவிட்டாலும், சுத்தசாட்குண்ணியசொரூபியாகிய தேவரீர்பெருமையினையாவரால் அளவிடக்கூடும். அகத்தியமுனிவர்சமுத்திரத்தையுண்டருளினார், விசுவாமித்திரமுனிவர் வெவ்வேறுலகங்களைச்சிருட்டித்தருளினார், சிவனமுனிவர் இந்திரனைவச்சிராயுதத்தோடசைவற்றிருக்கத் தம்பித்தருளினார், வாலகில்லியர் வேறோரிந்திரனைபபடைத்தருளினர், இத்தன்மைத்தாகிய அளவற்றவல்லபங்களைத்தவமுதிர்ச்சியினாற்பெறத்தக்கமுனிபுங்கவர்களாகியஉங்களைத்தரிசித்தாலும், பரிசித்தாலும், உங்களோடுவசனித்தாலும், சகலதீவினைகளுமொழியுமென்பதற்குளென்னசந்தேகமிருக்கின்றது. சுவாமி-பிறருக்குபகாரஞ்செய்கின்றதே தேவரீர்க்குச்சுபாவகுணமாகவிருக்கின்றதாதலால், தேவரீரையடுத்தவர்கள்யாவராயினும் அவர்களைததடையின்றிப்பாதுகாப்பீரெனக்கருதி, எங்களரசன்பொருட்டுத் தேவரீர்திருவடிகளில் அடைக்கலம்புகுந்தோம், அடியேஙகட்குத் தேவரீரையன்றிவேறொருகதியில்லையென்று, அம்முனிவருக்கு இரக்கமுண்டாகத்தக்க இன்சொற்களாலிரந்து துதித்தார்கள். இவ்வாறுவிண்ணப்பஞ்செய்துகொண்ட தேவர்களைக் கௌதமமுனிவர்பார்த்து, ஞானநோக்கினாற்சகல காரியங்களையும் அறியவல்லதேவசமூகங்களே, நீங்கள்மிக்கமனவாட்டத்துடனே இங்குவந்தகாரணமென்ன, உங்கட்குநம்மாலாகத்தகக காரியங்கள் ஏதேனுமுண்டாயிருக்குமாயிற் சொல்லுஙகளென்று கிருபைசெய்தலும், தேவர்களெல்லா மனக்களிப்படைந்து நம்முடைய துயரங் கண்முழுவதுநீங்கப்பெற்றோமென்றுஆனந்தித்து ஓசர்வவல்லமையுள்ளபுண்ணியமூர்த்தியே, பூரணசந்திரனைக்கண்டகடல்போலத், தேவரீர்திருமுகவிலாசத்தைக்கண்டுகளிப்புற்ற அடியேங்கட்கு இனியொருகுறைவுண்டாமோ. முன்னொருபோது மகாதேவர்மன்மதனை யெரிததவாறுபோலத், தேவரீர்க்குத்தீங்கினைச்செய்ததேவேந்திரனையமனுக்கிரையாகும்படிசாம்பராக்காதுவிட்டது, அடியேஙகள்பொருட்டல்லவா. ஆதலால்சுவாமிகளெவ்வாறு நினைததோ, அவ்வாறேஅடியேங்கண்மீது கிருபைவைத்து, இந்திரன்தேவலோகத்திலிருந்து, அவுணர்குறும்பினையடக்கி அரசாளும்படியாக, அவன் ஏற்றிருக்கின்ற சாபத்தை நீக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

அவையனைத்தையுங்கௌதமமுனிவர்கேட்டு, ஓவிபுதர்களே- அறிவில்லா தவன்-வஞ்சகன்-துட்டன்-ஆசாரவீனன்-தன்னுயிரைப்போலமன்னுயிர்க ளையுநினைத்தாதரிக்காதவன்-கொடியநெஞ்சையுடையவன்-இவர்முதலான மகாபாவிகளைவர்க்கால்வசனித்தலுமாகாது, மனத்தால்நினைத்தலுங்கூடா து. ஆயினும்- ஒருபாதகன்மீது பலபேர்கள்கூடித் தயவுவைத்தாராயின், அவன்உடனேபுநித்தனுகுவன். அதுபோல-நீங்களெல்லோரும் பெரும்பா தகனுகிய தேவேந்திரன்மீது கிருபைவைத்திருப்பதினுலே, அவனும் இ னிப்புனிதனேயாகுவனென்றுசொல்லிப், பிரகஸ்பதிதேவனைப்பார்த்து, ஓதெய்வமந்திரியே-சிருட்டிமுதலியமுத்தொழில்களையும்,பிரமன்முதலிய முத்தேவர்களாயிருந்து நடாத்துகின்ற விநாயகமூர்த்தியினுடைய சட்க்ஷ ரமந்திரத்தை, உமதுவல்வினைகளைவாட்டுமாறு உபதேசிக்கின்றேம்,நீர்அ ம்மனுவைத் தேவேந்திரனுக்கு உபதேசஞ்செய்யும், அதனுல் அவன்சரீ ரதிலுண்டாயிருக்கின்ற பெண்குறிகள்மாறிக் கண்களாகும், பின்னும்அ வன்செய்திருக்கின்ற பாதகங்கள் அனைத்து நீங்குமென்று, அச்சடக்ஷர மந்திரத்தைத்தீக்ஷை முறையோடும் உபதேசித்து, அதை யநுட்டிக்குமு றைமையையு மருளிச்செய்தார். பின்னர் பிரகஸ்பதி தேவரானந்தங்கொ ண்டு, கௌதமுனிவரைமற்றையதேவர்களோடுஞ்சாஷ்டாங்கமாகப்பணி ந்துவிடைபெற்று,அவ்விடத்தினின்றுநீங்கினுர்.வாராய்உருக்குமாங்கதரா சனே-தன்னைவிஞழந்தோர்க்கெல்லாம் பலவரங்களைத்தந்து பாதுகாக்கவ ல்ல தேவேந்திரன்செய்த ஒருதீமையை, இவ்வாறளவற்றதேவர்களொரு மித்துப்பலமுயற்சிகளைக்கொண்டு வாட்டுவார்களாயின், இப்பூவுலகத்துள் ளவர்களால் நாடோறுமிடைவிடாது செய்துவருகின்றபாவங்கள், எழுவ கைப்பிறவிகளினும்விடாதுவருத்துமேயன்றிஎவ்வாறுநீங்கப்போகின்றது இப்பால் கௌதமமுனிவருடைய அருள்பெற்ற பிரகஸ்பதிதேவரும்மற் றைத்தேவர்களும், முன்னர்யான் அறிவித்திருக்கின்ற வண்ணமே தேவே ந்திரன் ஒளித்திருக்கின்றவிடத்தைக் காணுங்கருத்துடையவர்களாய், மக மேருச்சாரலையடுத்த மடுக்கரையிற்சென்று, ஓஒ- சதக்கிருதுவே- ஓஒ-உ ம்பர்வேந்தரே- ஓஒ- இந்திராணிதலைவரே - ஓஒ - தைத்தியகுலகாலரே- ஓஒ- மருதகிலத்தலைவரே- வெளியில்வாரும் வெளியில்வாரும், உம்மைச் சபித்த முனிபுங்கவரிடத்து, யாங்கள் அனைவருஞ்சென்று பணிந்து, உ மக்கவர் கருணையைப்பெற்றுவந்தோம். நாரதமகாமுனிவரும் எம்மோடு வந்திருக்கின்றனர். அவ்வவர்கள் செய்தகுற்றங்களைஉள்ளத்திலொளிக்கா மல் வெளியிட்டால், அவைகளால்வருகின்றதுன்பங்களைப்பெரியோர்கள் விலக்கிவைப்பார்கள். அவைகளைவெளிவிடாமன்மறைத்தால்,மாறுததுன் பத்தினையடைவார்கள். ஓமேகவாகனரே, இங்குவந்திருப்பவருள்நாரதமு னிவர்மகாபெரியவர், நீர்செய்தகுற்றத்தையவரிடத்தில்விண்ணப்பஞ்செ ய்வீராயின், அதுதீரத்தக்கமார்க்கத்தை அவரேசொல்லுவார். முன்னர்சி வபிரானுடைய திருக்கல்யாணமகோச்சவத்தில், உமாதேவியினுடையகா ற்பெருவிரன்மீதிச்சைவைத்து, பாவத்தையும்நாணத்தையும் பரித்துழன் றபிரமனுனவன், மீட்டுமவைகள்நீங்குமாறு அச்சிவபிரானுடையதிருவரு ளையேபெற்று நீக்கிக்கொண்டது உமக்குத்தெரியாததா, ஆதலால்-நீர்உம து மனக்கவலையைவிட்டு வெளியில்வருவீரென்று கூவினுர்கள். இனவய

ணத்தையுந்தேவேந்திரன்கேட்டுத், தாமரைநாளத்தினின்றும்வெளிப்பட்டான். உடனே தேவர்கள்அவன்சரீரத்திலிருக்கின்றபெண்குறிகளைப்பார்த்துச், சிலர் இவைகளையாம்பார்ப்பது மகாபாவமென்று நினைத்துக்கண்களைமூடிக்கொண்டார்கள். சிலர் தலைகளைக்கவிழ்த்துக் கொண்டார்கள். சிலர் நாசியைப்பிடித்துக்கொண்டார்கள். பின்னர் தேவேந்திரனனவன்தான் செய்தகுற்றங்களையெல்லாம் வெளிவிட்டுப், பிரகஸ்பதிதேவராற் சடக்ஷரமந்திரத்தை முறைமையோடும்உபதேசிக்கப்பெற்றுச், சந்திரனைக்கண்ட செவ்வாம்பல மலரைப்போல முகமலர்ந்து ஆனந்தமாயினன். அச்சடக்ஷரமந்திரந் தன்செவியிலேறியவுடன், முன்னர் கௌதமமுனியிட்ட சாபமானது உடனே எவ்வாறுபற்றிக்கொண்டதோ, அவ்வாறேமகாதீவரத்தோடும் அப்பெண்குறிகளெல்லாங் கண்களாய்விட்டன. யாமும்மற்றமுனீஸ்வரர்களும்பலஆசீர்வசனங்களைச்சொன்னோம்.தேவர்கள்புட்பவருடம்பொழிந்தார்கள். அரம்பையர் நிருத்தஞ்செய்தார்கள். கின்னரர்கீதம்பாடினார்கள். ஆகாயத்தில் அந்தரதுந்துபிமுழங்கியது. இப்பால் அவ்விந்திரனை மற்றைத்தேவர்களெல்லாந் தீர்க்கதண்டன்செய்து, இதுகாறும் உம்மைப்பிறிந்திருந்ததினாற், சந்திரனில்லாத இரவுபோலவுந்-தாயில்லாதசேய்போலவுமானோமென்று துதித்தார்கள். பின்னர்தேவேந்திரன் மிக்கமனக்களிப்போடு வந்திருக்கின்ற முனிவர்களையெல்லாம்பார்த்து, ஓதவசிரோஷ்டர்களே- உங்கள் மகத்துவங்களைச் சுத்தபவுத்திரர்கள் அறியவேண்டுவதல்லதுமற்றென்போலிகளால் அறியப்படுவனவோ, அளவற்றதேவர்களொன்றாய்க்கூடினாலும்உங்களில்ஒருவருக்கொப்பாவர்களோ,சகலபெருமைகளும்வாய்ந்திருக்கின்றமானுக்கள் நீங்களேயென்றுதுதித்து,சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து, பின்புதேவர்களைப்பார்த்து, அன்பிற்சிறந்த மித்திரர்களே- மகாமகத்துவமுள்ள கௌதமமுனியிட்ட சாபம்என்னை விட்டு நீங்கும்படியாக ஏதேதுமுயற்சிசெய்தீர்களோ ஒன்றுந்தேர்ந்திலேன். முன்னர் எனக்கியல்பாகவிருந்த இரண்டுகண்களும் இருளடையும்படியாக, மிக்கவொளிபொருந்திய ஆயிரங்கண்களைத்தந்தீர்கள். உங்களாற்சகலநன்மைகளையும் பெற்றேன். நீங்களென்பொருட்டாகச்செய்தவுதவிக்குயான் செய்யத்தக்க கைம்மாறென்னவிருக்கின்றது. இனிவிநாயகமூர்த்தியை யநுட்டித்து, அவர்கிருபைபெற்று உய்யுமாறு ஓர்திவ்விய க்ஷேத்திரத்திலிருந்து, சிறந்த தவங்களைச்செய்து, பின்னர் எதாப்பிரகாரம் எனது சொர்க்கலோகத்தை யடைந்து அரசாக்ஷீசெய்வதேயன்றி யானிப்போது வருவதில்லை. நீங்கள்யாவரும் அங்குசென்று வாசஞ்செய்திருங்கள். சிலர் மாத்திரங் கற்பகவிருக்ஷத்தினிடத்திருந்து, நமது தவத்திற்கு வேண்டிய திரவியங்களைக்கொண்டுவந்து கொடுக்கக்கடவீர்களென்று கட்டளையிட்டு யாவர்க்கும் விடைகொடுத்தனன். அவ்வாறே யாவருஞ்சென்ற பின்னர் தேவேந்திரன் கதம்பவனத்திற்சென்று, அங்கோர் தடாகக் கரையிலிருந்து, அதிற்றேவர்களாற் கொணர்ந்து தருகின்ற ஆகாயகங்கையைக்கலந்து, அதன்கரையின்மீதுமிக்கவொளி பொருந்திய பளிங்குக் கற்களினால் ஓ ராலய மெழுப்பி, அவ்வாலயத்தில் வேதாகம விதிப்படி விநாயகமூர்த்தியைப்பிரதிட்டைசெய்து, சகலபதார்த்தங்களுடன் பிரதிதினம்பூசனை புரிந்து, ஐம்புலாதிகளையும் அடக்கி, ஓராதனத்திலிருந்து, இருவிழிகளை

யும் நாசிநுனியில் நிறுத்திக், கணேசமூர்த்தியினுடைய திருவடிகளைச்சிந்தித்துப், பத்தியோடு சடக்ஷரமந்திரத்தைத்தியானித்துச், சுத்தப்பவித்திரமானஉள்ளத்தையுடையவனாய், ஆகாரமில்லாமல், ஆயிரவருடந்தவஞ்செய்தான். இவ்வாறு செய்துவருகின்றதவத்திற்குவிநாயகமூர்த்தி அருள்சுரந்து,வெள்ளியதிருமேனியுந்,திசைமுழுவதும்விழுங்கத்தக்கபிரகாசமும்,யானைவதனமும்,உருத்திராக்கமாலிகையேந்தியிருக்கின்றதுதிக்கரமும், நான்கு புயங்களுந், தண்டை- சதங்கை- சிலம்பு- முதலியவை யணிந்திருக்கின்ற இரண்டுபாதபதுமங்களும், அரைஞாணும், புயகவசமும், மார்பின்முப்புரிநூலும், முத்துமாலை- இரத்தினமாலை- குண்டலம்- கிரீடம்- முதலான அளவற்ற அலங்காரத்துடன் சிங்கவாகனமூர்ந்து, தேவேந்திரனெதிற் பிரத்தியக்ஷமாயினார். உடனே இந்திரனானவன் அன்பு மச்சமுங்கொண்டு, இருகரங்களையுஞ் சிரமேற்குவித்துத்,துண்ணென்றுஆசனம்விட்டெழுந்து, இரண்டுகால்- இரண்டுகை- இரண்டுதோள்-நெற்றி- மார்பு- என்கின்ற- அட்டாங்கங்களும் பூமியிற்பொருந்தவீழ்ந்து, மீட்டுமெழுந்து, சரீரமுழுவதும் புளகாங்கிதங்கொண்டு, கூத்தாடி ,வலம்வந்து, ஆனந்தக்கண்ணீர்சொரிந்து துதிப்பதாயினான்.

அறிவாய்விளங்குமொளியாகியெங்கு ... ... *
மசைவற்றுநின்றநிறைவாய்க்... ... ... *
குறியாதியின்பமுதலீறிலாத ... ... *
குறைவற்றவின்பமயமாய்ச்... ... ... *
செறிவானநீரினிழல்போலநின்ற ... ... *
திறலோயையானும்வளைவேன் ... ... *
வெறுஞானமானதிருமேனிகொண்டென் ... *
விழிகாணமுன்னர்வரலால் ... ... *

இருண்மூழ்குகண்ணின்மலகேவலத்தி ... ... *
னிதமின்றிநின்றவுயிர்கட் ... ... *
குருவாதிமூன்றுமுனமுய்த்தவற்றி ... ... *
னுளதாம்விகாரவகையா ... ... *
லிருவேறுகன்மமிசைவித்தருத்து... ... ... *
மிறையோயையானுமொழிவேன் ... ... *
வெருண்மாயைநீத்ததிருமேனிகொண்டென் ... *
விழிகாணமுன்னர்வரலால் ... ... *

வாதங்கடந்துபலமாயைகன்ம ... ... *
வகையுங்கடந்தவைசெயு ... ... *
மேதங்கடந்துபொருளொன்றுமின்றி... ... *
யெழுகின்றமம்மருயிரின் ... ... *
போதங்கடந்துதுரியங்கடந்த ... ... *
பொருளோயையானுமுணர்வேன் ... ... *
வேதங்கடந்ததிருமேனிகொண்டென் ... ... *
விழிகாணமுன்னர்வரலால். ... ... *

இவ்வாறு தோத்திரங்களைச்செய்து மனமுருகி நிற்கின்ற தேவேந்திரனை விநாயகக்கடவுள் கிருபையோடுபார்த்து, ஓ சுராதிபனே- நீஇங்கிருந்து செய்தஜெபதபமுதலான வைகட்குயாஞ்சந்தோஷித்தோம், உனக்கு வேண்டிய வரங்களைக்கேளென்று திருவாய்மலர்ந்தருளலும், தேவேந்திரனவன் ஆனந்த பரவசங் கொண்டு, ஓ சகல புவனாதார கர்த்தனே- உயர்ந்த ஞான யோகத்தை யனுட்டிக்கத்தக்க பரிபக்குவ ரெவர்களோ, அவர்கள் இதயத்திலொன்று பட்டிருப்பது தேவரீருடைய பாதபங்கயம் அதனை அடியேற்கருளாது, வேள்விப்பயனாகிய சுவர்க்கலோகவரசாட்சியையருள்செய்தீர். அந்தச்சுவர்க்கலோக வரசாக்ஷியையும் ஓரிடையூறில்லாமல் சகலபோகங்களோடும் புகழ்பெற்றாள்வதற்கு, முன்னொருகாலத்திற் பிரமதேவர் சட்க்ஷர மந்திரத்தை யுபதேசித்து, அதையனுட்டிக்குமுறைமையையுங்கூறி, இதைமறைப்பையாயின் உனதுசுவர்க்கலோகவரசாட்சி நிலைபெற்றிராதென்று வற்புறுத்திக்கூறினார். பின்னரதனை மறந்து அளவற்றபிழைகளைச் செய்தகாரணத்தால், மிக்கதுன்பங்களையெல்லா மநுபவித்தேன். மீளவுமதைப் பிரகஸ்பதி தேவராலும் உபதேசிக்கப்பெற்று, அத்துன்பங்க ளனைத்தினும்நீங்கி ஆயிரங்கண்களை யுடையவனாயினேன். அன்றியும்- அம்மந்திரத்தை இடைவிடா தநுட்டித்த பேற்றினால், மனவாக்குக்காயமென்னு முக்கரணத்தாலும் அறிதற்கரியதேவரீரை, அடியேன் முன்பு பிரத்தியக்ஷமாகவரப்பெற்றேன். இனிமுடியாதகாரியம் அடியேற்கென்னவிருக்கின்றது. தேவரீர் திருவடிகளுக் கன்பியற்றாதிருப்பதே, சகலகாரியங்கட்கும்இடையூறுவருதற்குக்காரணமாதலால், தேவரீர் திருவடிகளில் அடியேற்குமாறாதபத்தியையருளல்வேண்டும். இத்தலத்தில் அடியேன் பூசித்ததேவரீர் திருவுருவத்திற்குச் சிந்தாமணி விநாயகரென்றும், இத்தலத்திற்குச் சிந்தாமணிநகரமென்றும், இத்தடாகத்திற்குச்சிந்தாமணிதீர்த்தமென்றுந், திருநாமமிருக்கவேண்டும். மேலும் இவ்வூரைக்கதம்பநகரமென்றுங் கூறல்வேண்டும். இக்கதம்பநகரத்தில் வசிக்கின்றயாவருஞ் சிந்தாமணிதீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்து, தேவரீர்திருவுருவ மாகிய சிந்தாமணிவிநாயகரைத் தரிசிப்பார்களாயின், அவர்கட்குக்கிடைத்தற்கரியநான்குபுருஷார்த்தங்களுங் கிடைத்தல்வேண்டுமென்று பிரார்த்திக்கக்,கணேசமூர்த்தியவ்வாறே அநுக்கிரகஞ்செய்து, தமதுதிருவுருவத்தைக் கரந்தருளினார். தேவேந்திரனுந்தன்மனக்குறைவுகளற்றுச், சிந்தாமணிவிநாயகரைமீளவும்பூசித்துச் சட்க்ஷரமந்திரத்தை யநுட்டித்து விடைபெற்றுத், தனதுசொர்க்கலோகத்திற்சென்று, ஓரிடையூறுமின்றிஅரசாக்ஷியை நடாத்திவந்தனன். நீயும்அவ்விநாயகமூர்த்தியைச்சரணடைந்துபூசிப்பையாயின், இப்பிணியொன்றுமேநீங்குவதன்றிப், பலவரங்களையும்பெறுவாய்போவென்று நாரதமுனிவர் உருக்குமாங்கதராசனுக்குச்சொன்னார்.

கணபதிதுணை.

பத்தராவதி.

உருக்குமாங்கதன் உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியைத் தேவேந்திரன் பூசித்துப்பலவரங்களைப்பெற்ற சரித்திரத்தைச்சொன்னோம், இப்பால்உருக்குமாங்கதராசன் அனுட்டித்ததிறத்தைச்சொல்லுவோங் கேட்பீராக. இவ்வாறு நாரதமுனிவர்சொல்லி அங்கிருந்து நீங்குவதற்குமுன்னமே, முன்னர்உருக்குமாங்கதராசனைக்காணுமல் நகரத்திற்குச்சென்ற பரிசனங்களெல்லாம், மலை - காடு - முதலியவிடங்கள்தோறுந் தேடிககாணாதவர்களாகி, அவன் நாரதமுனிவரோடுஞ் சம்பாஷித்திருந்த வனத்திற்கு வந்து, தங்களரசன் குட்டநோயுடனிருக்கக்கண்டு, மனமெலிந்து, ஓசார்வபௌமா- மாஞேடுவேட்டையாடிச் சென்றவுமக்கு, இந்நோய்வந்த காரணமென்னவென்றுகேட்டார்கள். அவர்கட்கு அவ்வரசன்நடந்த சாரியங்களனைத்தையும் விவரமாகசசொல்லி,அவ்விடத்தினின்றுநீங்கிக்,கதம்பநகரஞ் சேர்ந்து, சிந்தாமணிவிநாயகரைத்தரிசித்துச்,சகலவினைகளையுமொழிக்கத்தக்க சிந்தாமணிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தான். உடனே அவன் சரீரத்தைப்பற்றிய குட்டநோய்நீங்கி, முன்னரிருந்த உருக்குமரூபம் உண்டாயது. பின்னரவ்வரசன் அளவற்றஆனந்தங்கொண்டு, மீளவுஞ் சிந்தாமணிவிநாயகரையடைந்து பூசித்து, அந்தணர்களைக்கூவி,அளவற்றதிரவியங்களைத்தானஞ்செய்துகொண்டிருக்கையில்,சிலதேவகணங்கள் அந்தரமார்க்கமாக வொருதெய்வ விமானங்கொண்டுவந்து, அவ்வரசனுக்கெதிரில் நிறுத்தி, ஓபுண்ணியசீலனே, நீ இக்கணேசகுண்டமாகிய சிந்தாமணி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, சிந்தாமணி விநாயகரைப் பூசனைசெய்தபேற்றினால், உனக்குண்டாகிய மேன்மையை யாவராலுரைக்கப்படும். நீஇவ்விமானத்தின்மீதாரோகணித்து, எம்மோடுங்கணேசலோகத்திற்குவருவையென்ன. அதையவ்வரசன்கேட்டு, அத்தேவகணத்தலைவரைச் சாஷடாங்கமாகவணங்கிச், சின்மயசிற்குண அகண்டாகார சச்சிதானந்தராகியுந், தம்மையடைந்தோர்களைத் தன்மயமாக்குகின்ற முதல்வராகியுங், காரணுதீதராகியுமிருக்கின்ற விநாயகக்கடவுளுடைய பெருங்கருணைக்கு, யானெவ்வளவுபாத்திரன். யானென்ன தவங்களைச் செய்தேன், என்மனமெவ்வளவு பக்குவமாயிற்று. என்பிறவி எவ்வளவுயோக்கியம். என்பத்தியெவ்வளவு. அச்சோ, யான்முன்பு செய்திருக்கின்ற தபோபலத்தினாலும், இத்திவ்விய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்த மகிமையினாலும்,அடியேன் உம்முடையதரிசனத்தையெளிதிற்கிடைக்கப்பெற்றேன். ஆயினும் வீமராசனுஞ் சாருகாசினியும்அளவற்றதவங்களைச்செய்து என்னையீன்றார்களாதலால், அவர்களைவிடுத்துயான்மாத்திரமெவ்வாறுவருவதென்றுசொன்னான். அவையனைத்தையுந் தேவகணத்தலைவர்கேட்டு, மிக்கசந்தோஷங்கொண்டு, ஓசுசனபரிபாலகனே - நீ யுனது தாய்தந்தையரைநினைத்து, இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தர்ப்பணம் புரிவையாயின், அவர்களுநமமுடன் வருவார்களென்றுசொல்ல, அதையுருக்குமாங்கதராசன்கேட்டு, மனக்களிப்படைந்து, ஓர்தருப்பையைமுடிந்து, அம்முடிந்ததருப்பையைத் தாய்தந்தைமுதலாயினோரை நினைத்து ஸ்நானஞ்செய்வித்துத், தானுமாடிக், சுவாமீ தேறிவந்து, தனக்கு வழிகாட்டியாட்

கொண்டருளிய நாரதமுனிவரைப்பணிந்து, தன்னேயைப் போக்கியருளிய அத்தீர்த்தையுந்துதித்து, நின்மலசொரூபத்தை யடைந்தான். அவ்வரசனுடனிருந்த மற்றையர்களும் ஸ்நானஞ்செய்து, தெய்வரூபம்பெற்றார்கள். அரசன்மீளவுஞ் சிந்தாமணிவிநாயகனைப்பூசித்துத், தன்சேனைகளோடும் விமானத்திலேறித், தனதுகவுண்டின்னிய நகரிற்சென்று, தான் ஸ்நானஞ்செய்த பலனைத் தாய்தந்தை முதலாயினோர்க்குத் தத்தஞ் செய்தான். மற்றசேனைகளும் அவ்வாறேதங்கட்ங்கள் சுற்றத்தினர்கட்குத் தத்தஞ்செய்தார்கள். விநாயகமூர்த்தியினுடைய திருவருளால், உடனே அவர்கட்குவெவ்வேறு விமானங்கள்வந்தன. பின்னர் வீமராசன்முதலாயினோர் அவ்விமானங்களைப்பணிந்து அவைகளிலேறிக்கொண்டு, உருக்குமாங்கதராசனோடும் விநாயகலோகத்திற் போய்ச்சேர்ந்தார்கள்.

கணபதிதுணை.

பதினோராவது.

கிருச்சமதர் உபாசித்தபடலம்.

ஓசவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியை உருக்குமாங்கத ராசன்பூசித்து முத்தியடைந்த திறத்தினைச்சொன்னோம், இப்பால்கிருச்சமத முனிவர் உபாசித்தவரலாற்றினைச்சொல்லுவோங்கேட்பீராக. முன்னர்முகுந்தையிட்ட சாபத்தோடுஉருக்குமாங்கதராசன் அவ்விடம்விட்டு நீங்கிய பின்னர், அம்முகுந்தைக்கு விரகதாபமேலிட்டு, அவ்வரசனையேநினைந்துநினைந்து, அனலிற்பட்டமெழுகையொத்தவளாகி, உள்ளங்கனைந்து உடலநெகிழ்ந்து, காமாக்கினியைச் சகிக்கமாட்டாது, நந்தனவனங்களிற்சென்றுஉலாவுவாள்.குளிர்ந்ததடாகங்கள்எங்கிருக்கின்றனவென்றுதேடுவாள். ஒன்றோடொன்று கலவிசெய்கின்ற மான்கூட்டங்களைக் கண்டுவாடுவாள். வேய்ங்குழலோசையைக்கேட்டுஊடுவாள், மந்தமாருதம்வீச நடுங்கி, ஓதென்றலே-நீ தீயோடுகலந்துவந்தகாரணமென்னென்றுகோபிப்பாள். பசுவின்கழுத்திலசைகின்றமணியோசையைக்கேட்டு, ஐயோ என்னுயிர்சிந்துகின்றதே, ஈதென்னகாலன்வருகின்ற ஓசைதானோவென்று கலங்குவாள். கடலோசையைக்கேட்டு, ஓ பயோததியே - பிறர்க்குத் தீமைசெய்கின்ற சிறியார்களைப்போல, என்னைவருத்துகின்ற ஆயக்குழலோசையோடு நீயுமெனக்குப் பெருந்துன்பத்தை மூட்டுகின்றனையே, இஃதுனக்கு முறைமைதானோ, உன்றுண்மையையழிக்கவல்லகுறுமுனிவர் குன்றிலிருப்பதை யறிந்திலையோவென்று குழறுவாள். ஓர் வட்டமாகிய பலகையின்மீது உருக்குமாங்கதராசன் உருவத்தையெல்லாம் வரைந்து, தன்கரங்களைக் கொண்டணைவாள். இரண்டுதனங்களையு மதன்மீது பொருதகிமுயங்குவாள். முகத்தோடுமுகத்தைவைத்து முத்தமிடுவாள்.

மீளவும்வருந்திமாலையைப்போலத்துவளுவாள். இனியென்னசெய்வேனென்றுமெலிந்து பெருமூச்சுவிடுவாள். பூஞ்சோலையிலுள்ளதளிர்களெல்லாந் தன்சரீரவெம்மையாற்றீய்ந்து மேல்விழுவதினால், அவைகள்பட்ட விடமெங்குங் கொப்புள்கொண்டு; தன்னிருவிழிகளினு நீரைச்சொரிவாள். சரீரவெம்மையைச் சகிக்கமாட்டாது விழுந்ததுபோல மேகலையொதுங்கும்படியாக வீழ்வாள். இவ்வித அலங்கோலத்துடன் முகுந்தையானவள் தன்னாலுஞ் சொல்லுதற்கரிய பெருந்துன்பத்தின் மூழ்கி, வலிகுறைந்து, அறிவழிந்து, நிலத்தின்முடியைச்சாய்த்துச், சோர்வுற்றுத், தன்வசமற்றவளாகி யிருந்தனள். இவையனைத்தையுந் தேவேந்திரன் அறிந்து, தானவளைச்சேரவெண்ணினவனாகி, அடியிற்பாதகாப்பும், கணைக்காலில்வீரவண்டையமும், விரலிற்கவசமும், கரத்தில் நாணேற்றியிருககின்றவில்லும், மார்பில்மலர்மாலையும்,தோளில் அம்புபெய்தூணியு முடையவனாய்ப், பொற்சரடாற் கட்டப்பட்டிருக்கின்ற மயிர்முடியோடு, மன்மதசரங்களான் மருண்டிருக்கின்ற முகுந்தையினது கொங்கையி லணியப்பட்டகச்சும், அவளது நெஞ்சமுங் கழலும்படியாக, உருக்குமாங்கதராசனேயென்று சொல்லும்படி, அவன் சரீரத்துள்ள கோலத்தை யெல்லாங்கொண்டு, பொருக்கென்றெழுந்து அவளருகிற்சென்றான். அவனைக் கண்டவுடனே முகுந்தையானவள் மனமகிழ்ந்து, முன்னர் தடுத்துச் சென்ற உருக்குமாங்கதனே மீட்டும் வந்தா னென்று கருதித், தானும் பொருக்கென்றெழுந்தாள். உடனேவஞ்ச வடிவினனாகிய தேவேந்திரன் மனங்களித்து, அவளோடு நயவார்த்தைகளைப்பேசித், தனது மார்பிலணிந்திருக்கின்ற சந்தனமெல்லாம் அவளிரண்டு தனங்களாற் கலையும்படியாகத் தழுவி, அடிக்கடி யவளது செவ்விதழூறலையுண்டு பலவிதசுரதகலைகளை நடாத்திவருகின்ற சமயத்தில், முகுந்தையென்பவள் தன்னறிவுமயங்கி, அவன்மார்பிற் றனதுகொங்கைச்சுவடு பொருந்தும்படியாகவணைத்து, தேகபரவசங்கொண்டு, காமவாரியைக் கரைகாண மாட்டாதவளாய், யானுனக்கு என்ன கைம்மாறு செய்ய வல்லே னென்று பலமுறை யவனைப்புகழ்ந்து, சரசசல்லாபமாய்க் கலந்தனள். தேவேந்திரன் அவளன்பிற்கு மனப்பூரிப்படைந்து, நகக்குறி- பற்குறி- தாடனம்- சும்பனம்- முதலியபலலீலைகளைமாறிமாறிநடாத்தி, அவள்மிடற்றினெண்வகைப்புட் குரலோசைகளையுமுண்டாக்கி; மன்மதன்பொழிகின்ற பாணவருஷங்களைமடக்கி, அவன் கருப்புவில்லையு மொடித்து, இன்னுமவளோடுபோர்செய்யாதவண்ணம் அவனைத்துரத்திவிட்டான். பின்னர் முகுந்தையானவள் தனதெண்ணத்தின்படி நிறைவேறியகலவிக்கு மனமகிழ்ந்து, கணவராகிய கவிமுனிவருக்குப் பழையபடி ஏவல் செய்யச்சென்றனள். இந்திரனுந்தனதுபொய்வேடத்தைப்போக்கிச் சுவர்க்கலோகத்தைச்சேர்ந்தனன். உடனே முகுந்தைவயிற்றிற் கருவுண்டாகிப், பத்தாந்திங்களிற் கருங்கடலுச்சியிலுதயமாகின்ற சூரியனைப்போல, அண்டங்களெல்லாம் நடுங்கும்படியான பேரொலியோடும் ஒருபுத்திரன்பிறந்தனன். அப்புத்திரனைக் கவிமுனிவர்கண்டு, மனமகிழ்ச்சியடைந்து, இந்திரனுக்குப்பிறந்த புத்திரனென்றறியாமல், தமதுகரத்திலேந்தித், தேவர்கட்கெல்லாம் அவிற்பாகமுதலியவைகளைக்கொடுத்துச், சாதககருமாதிகளையு

ஞ்சிறப்பெய்தநடாத்தினர். இப்பால்அப்புதல்வனுக்குத்தயிலாதிகளைத்தி மிர்ந்து, பரிமளமிகுந்த கத்தூரிமஞ்சண்முதலிய வைகளாற் புனலாட்டி, அகிற்சந்தனப் புகையினையூட்டி, இரத்தினாபரணங்களைப்பூட்டி, நுதலிற் றிலதந்தீட்டி, தீட்டிவிட்டி, முலைப்பாலூட்டிப்,பெண்கள்கிரீட்டியானமு குந்தையான்வள் சகலசெல்வத்துடன் போற்றிவருகின்றநாளையில், கவி முனிவர் அப்புதல்வன் பிறந்த பன்னிரண்டாம் நாள்; கிருச்சமதனென்னு நாமகரணந்தரித்து; ஆறுவதுவயதில் உபநயனச்சடங்கினைமுடித்து, வே தாகமாதிகளையுங்கற்பித்தனர். அவ்வாறேகிருச்சமதர் சகல வித்தைகளை யுந்தந்தைபாற்றெளிந்து,ஒருகாற்சொன்னவுடன்ஒருங்குணருமூத்தியின ராகி; வினையென்னும்விருக்கத்தை வேருடன்கெல்லவல்லவெற்றிப்படை க்கொப்பாகியிருந்தனர். பின்னர் கவிமுனிவரானவர், அப்புதல்வன் ஒழு க்கமுதலிய நன்னெறிகளிற் பிறழாதிருக்கின்ற பெற்றியினைக்கண்டு, மிக்க மனமகிழ்ச்சி யடைந்து, கணாநாந்துவாவென்னு மந்திரத்தை யுபதேசித் துக், குழந்தாய்- இம்மனுவையநுட்டிப்போடு செபித்துவருவையாயின் உனக்குக் கணேசமூர்த்தியினுடைய திருவருளுண்டாகுமென்று சொன் னார். கிருச்சமதருமனமகிழ்ந்து; பிரதிதினம்நித்தியநியமாதிகளைமுடித்து விநாயகக்கடவுளை மனதிற்றியானித்து, அம்மந்திரத்தை யன்போடுசெபி த்து, சாபாநுக்கிரகசாமர்த்தியராகிச்; சகப்பிரசித்தியாய் விளங்கியிருக்கி ன்றநாளையில்.மகதநாட்டில்,சகலருக்குந்தாய்க்கொப்பானவஞ்சியுங், கொ டையிற் கொண்டலைவென்றவனாகியுமிருக்கின்ற சூரனென்னும் பெயரி னையுடைய ஓர் அரசனிருந்தான். அவ்வரச னானவன், தனக்கு உடலு மூயிரும்போலிருந்து வழிபடத்தக்க அம்பிகையென்னு மனைவியோடும் பிரகற்பதிதேவனுஞ் சுக்கிரபகவானுங்கண்டுநாணத்தக்கபுத்தியினையுடை ய அமைச்சர்களோடிருந்து, அரசாக்ஷிசெய்துவருங்காலத்தில், அவ்வ ரசனுடையபிதாவுக்குச் சிரார்த்ததினம்வர, அதைக்குறித்து வசிஷ்டர்- அத்திரி- முதலான முனிவர்களை வரவழைத்தான். அம்முனிவர்க ளோ டு கிருச்சமதமுனிவருஞ்சென்றார். பின்னர் அம்முனிவர் கூட்டத்துள் அத்திரிமுனிவருக்குங் கிருச்சமதமுனிவருக்கும் கலைக்கியானப்பிரசங்க ங்களில் ஒருவர்க்கொருவர் வாதுநேரிட்டுப், போர்செய்வதானார்கள். அ வருள்கிருச்சமதமுனிவரை அத்திரிமுனிவர் வெல்லமாட்டாதிளைத்துக், கொல்லத்தக்ககோபத்தோடு நெருப்பெழுந்து பறக்கும்படியாகக் கண்க ளைநெரித்துக், கிருச்சமதமுனிவரைப்பார்த்து, நீமகாயோக்கியனைப்போ ற்பேசுகிறாய், உன்பிறப்பையும் பெருமையையும் நெருப்பிற் கொண்டு போய்ச்சுடு, எங்களைப்போல நீயுமோர் முனிபுத்திரனாகி வாதாடவந்தா ய், நீ உருக்குமாங்கதராசனுக்குப் பிறந்தகதை யொருவருக்குந் தெரியா ததோ, நீ இச்சபையிலிருக்கத்தகாது, உனக்கு எங்களோடுகூட சரியா னமரியாதையு நடக்கக்கூடாது, இங்கிமிடத்தெழுந்து வெளியிற்செல்லக் கடவையென்று கையால்மறித்துமறித்துச் சொல்லுகின்றதைக, கிருச்ச மத முனிவர்கேட்டு, மிகுந்தகோபங்கொண்டு, கண்சிவந்து, இதழ்துடி த்துப், புருவநெரித்து, அங்கிருப்பேரெல்லாம் அஞ்சிநடுங்கும்படியாக த்,திரிலோகத்தையு மெரிப்பவர்போலக் கொதித்தெழுந்து,வசிட்டர்முத லான முனிவர்கூட்டங்களுக்கெதிராகநின்று, என்னோடுசரியாகப் பிரசங்

கித்து வெல்வதற்குச்சத்தியற்றஅவமானத்தால், என்னைஉருக்குமாங்கதராசன்புத்திரனென்றுஅவமதிப்பாகப்பேசினீர்கள், யான்தவசிரேஷ்டராகிய கவிமுனிவருடைய புத்திரனேயானால், இச்சபையிற்கூடியிருக்கின்ற உங்களையெல்லாம் இமைப்பொழுதிற்சாம்பராக்கித், தேவர்களெல்லாங் கொண்டாடத்தக்க புகழையடையக் கடவேனென்றுசொல்லி, அவ்விடத்தினின்றுந் துணுக்கென்றகன்று, அதிகவேகத்துடன்சென்று, தணியாதகோபத்தோடு தன்தாயாகிய முகுந்தையையடைந்து, ஓதூர்த்தாய்- என்முன்னர்வா, என் தந்தையார், நடந்தகாரியத்தை யெனக்குள்ளபடி சொல்லக் கடவையென்றார். உடனே முகுந்தையானவள் நடுநடுங்கி, மகனே - யானுன்னிட்டப்படி நடந்த உண்மையைச் சொல்லுகின்றேன் நீ அவசரப்படாமற்கேள், ஓர்நாள்-உருக்குமாங்கதராசன்மிருகவேட்டையாடிவருகையில், மிக்கதாகத்தோடும் இங்குவந்தென்னைத் தண்ணீர் கேட்டான்,இவ்வுலகமெங்கணுங்காணற்கரியஅவன்பேரழகையான்கண்டவுடன்,எனதுமனமுருகியது. பெண்பிள்ளைகட்குவிரகமுண்டானபோதுதங்களிச்சையின்வண்ண நடந்துகொள்ளும்படி சாஸ்த்ரங்களில்விதித்திருக்கின்றமையால்,அவனுடன்கூடியுன்னைப்பெற்றேன்.இதுவேநடந்தஉண்மையென்றுசொல்லலும், தவத்தின்மலைக் கொப்பானவராகிய கிருச்சமதமுனிவர், முன்னரடைந்தகோபாக்கினியின்மீது, மற்றொருகோபாக்கினியைச்சொரிந்ததுபோல மனம்வெந்து, நீவனத்திற் பறவைகளுண்ணுத இலந்தைமரமாகக் கடவதென்றுசபித்தனர். பின்னரொடுங்கிநின்ற முகுந்தையானவள் தன்னைச்சபித்த புத்திரனைப்பார்த்து, நீ சகலசாஸ்த்ரங்களினும் வல்லவனாகியிருந்தும், பெற்றதாயென்று சற்றுங்கருதாமல் என்னை நடுங்கச்செய்தாய், ஆதலால்- இனி உனது மனமு நடுங்கும்படியாகக் கொடிய குணத்தோடும் ஓர் புத்திரன் உனக்குண்டாகக் கடவதென்று சபித்து, உடனே காட்டிலந்தைமரமாயினள். இப்பால் கிருச்சமதமுனிவர் தாம் இராசபுத்திரனென்பதைக்குறிதது மனம்வெட்கி, இவ்வித அவமானத்துடன் உயிரைவைத்திருப்பதைவிட இச்சரீரத்தை யொடுக்கி மாய்வதே நன்மையென்றெண்ணமுற்றிருக்கையில், அவர் மனங்குளிரும்படியாக(நீ தேவேந்திரனுடையபுத்திரன்) என்று ஒரு அசரீரி வாக்கு ஆகாயத்திலுண்டாயது. அவ்வாக்கினைக் கிருச்சமதமுனிவர் கேட்டுத், தமது சிந்தையைச் சிறிதுதேற்றிக்கொண்டு, முன்னர் நம்மையவமானஞ்செய்த முனிவராதியர் இப்போது நம்மைவணங்கத்தக்க வரங்களைப்பெற்று வருவோமென்றெண்ணமுற்று, அவ்வனத்தைவிட்டுநீங்கி மற்றொருவனத்தையடைந்து, அதில்மல்லிகை முல்லை இருவாட்சி மாதவி முதலிய பலபுட்பக்கொடிகளாற் பந்தலிடப்பட்டிருக்கின்றபொழிலையும், தாமரை அல்லி நீலோற்பலமுதலிய பலபுட்பவருக்கங்களணிந்த தடாகங்களையுங்கண்டு, வேதவோசைகளோடு பலவேள்விகளை நடாத்துகின்ற முனிவர்கூட்டங்களையும்,கிரீடாதிபதிகளாகியதேவர்சமூகங்களையுமடைந்து, தீர்க்கதெண்டன்செய்தனர். அவர்கள் இக்கிருச்சமதமுனிவருடைய நல்வரவையேற்று, இங்ஙனமிருமென்று கட்டளையிட, அதற்கவர் மனமகிழ்ந்து, அவ்வனத்தில் ஓர் பக்கத்திலிருந்து, வலத்தாட்பெருவிரலை நிலத்திலூன்றி, ஐம்புலன்களையுமடக்கி, கணேசமூர்த்தியினுடைய திரு

வுருவத்தைமனதிற்றியானித்து, தமதுதந்தை யுபதேசித்த மந்திரத்தைச்செபித்து, தேவவருடத்தில் ஆயிரம்வருடத்திற்கொருகால் கண்களைவிழித்து, மீளவு மூடிக்கொள்ளுவார். இவ்வாறு பதினையாயிரவருடம் வரையிற்றவஞ்செய்தலும், அந்ததபாக்கினியானது திரிலோகத்தினுஞ்சென்று சகலரையுந்தீய்த்துவருத்தியது. பின்னர்மனவாக்குக்காயங்களாலெட்டுதற்கரிய பேரொளியாகியும், பரிபூரணமாகியும், யானெனதென்னும் போதத்தையொழித்த மெய்ஞ்ஞானியருள்ளத்தில் எக்காலத்தும் பிரியாவிடையாயிருக்கின்ற விநாயகமூர்த்தியானவர், கோடி சூரியோதயத்திற்கொப்பானகாந்தியையுடையதிருமேனியுந்,தாமரைப்பூமாலிகையைத்தரித்திருக்கின்றமார்பும், பரிமளமிகுந்தகுங்குமங் கற்பூரமுதலியவைகளைச்சேர்த்துப் பனிநீர்விட்டரைத்த சந்தனம்பூசியிருக்கின்ற பத்துபுயங்களும், இடைவிடாது அசைகின்றசெவிகளும், மதம்பொழிகின்ற யானைவதனமும், இளம்பிறையையொத்த ஒற்றைக்கோடும்விளங்க, இருமருங்கினுஞ் சித்திபுத்திகள்வாசஞ்செய்யுந் திருக்கோலத்தோடு, வெள்ளைநிறமுள்ள சிங்கவாகனமூர்ந்து, சந்திரனொளியெல்லாஞ் சூரியனொளியில் மாய்வதுபோலக், கிருச்சமதருடைய தவாக்கினியொளியெல்லாந் தமதுதிருமேனியொளியின்மழுங்கும்படியாக, அவரெதிரிற் பிரத்தியட்சமாயினர். உடனே கிருச்சமதமுனிவர்மருண்டு, சுவாமியினுடைய பேரொளியாற்றிருமேனியெழில்தோற்றமற்கண்கூசி,மதிமயங்கி,நமதுதவத்திற்கு ஈதேதோ ஒருவிக்கினம்வந்ததென்றெண்ணி,விநாயகமூர்த்தியை மனதிற்றியானித்து, சுவாமி-இவ்விக்கினத்தைவிலக்கி அடியேன்றவமீடேறும்படியநுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார். முகக்கண்கூசும்படி யெழுந்தருளிய கணேசமூர்த்தியானவர் அதற்குக்கருணைகூர்ந்து,ஞானமென்னும் அகக்கண்ணையளித்தருளினர்.பின்னர்கவலையுற்றிருந்தகிருச்சமதமுனிவர் மனமகிழ்ந்து,மிக்கபயபத்தியோடெழுந்து, சுவாமியைக்கண்குளிரப்பார்த்து, சாஷ்டாங்கமாகவணங்கி, விநாயகக்கடவுளே நம்மீது கிருபைசுரந்து, வேதங்களுங்காணுதற்கரியதமதுதிருமேனியோடெழுந்தருளினரென்றுதேர்ந்து, உள்ளமுருகி, ஆனந்தக்கண்ணீர்சொரிந்துதுதிப்பதாயினர்.

நித்தியமாய்நின்மலமாய்நிற்குணமாய்நீடொளியாய்த் *
தத்துவமாய்த்தத்துவத்துக்கப்பாலாயப்பாலு ... *
மத்துவிதமானவரும்பொருளேநீயடியேன் ... ... *
சித்தமுவப்பத்திருக்காட்சிதந்தனையே. ... ... *

தண்ணார்மதியந்தயங்குஞ்சடாதாரி ... ... *
யுண்ணாரமுதேயுலவாச்சுகக்கடலே... ... ... *
விண்ணோரறியாதவித்தகாநீயடியேன் ... ... *
கண்ணாரக்காணுமாகாட்சிகொடுத்தனையே. ... ... *

ஆக்காமேயாக்கியளியாதளித்தெவையும் ... ... *
போக்காமேபோக்கிமலம்பொன்றுவித்துமொன்றுனுந் *
தாக்காதுநின்றதனிமுதலேநீயடியேன் ... ... *
வாக்காரக்கூறுமாவுந்தெதிரேநின்றனையே. ... ... *

இவ்வாறுதோத்திரஞ்செய்த கிருச்சமதமுனிவர்மீது கணேசமூர்த்தி கிருபாநோக்கம்பாலித்து, சிரகம்பிதஞ்செய்து, அன்பனே- உன்தவத்தைமெச்சினேம், உனக்குவேண்டிய வரங்களைக்கேள் தருகின்றேமென்று திருவாய்மலர்ந்தனர். உடனே-கிருச்சமதமுனிவர் இருங்கரங்களையுங்கூப்பி, சுவாமி-யாவர்க்குங்காண்டல்கருதல் உரைத்தல் என்னு மிம்மூன்றினும் அரிதாகியிருக்கின்றதேவரீரை,அடியேன்காணவுங்கருதவுந்துதிக்கவும்எளிதிற்கிடைக்கப்பெற்றேன். இன்னுமிதைவிடவேண்டத்தக்கதென்னவிருக்கின்றது. ஆயினும்- சுவாமிகளே அடியேனைக் கேட்டுக்கொள்ளுமாறு அருளிச்செய்ததால், இனி அடியேன் வேண்டத்தக்கதியாதெனில், எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதங்களாயுள்ள பிறவிகளுள், மாநிடப்பிறவியரிது. அம்மாநிடத்துள், நால்வகைவருணங்களிலிசைந்திடுவதரிது. அந்நால்வகைவருணங்களுள், அந்தணராயுதித்தல் அரிது. அவ்வந்தணருள், அறிவுடையவராகியிருத்தலரிது. அவ்வறிவுடையோரில், சித்தசுத்திபெற்றிருத்தலரிது. அச்சித்தசுத்தியுடையோரில், பொன்-மண் - பெண் - என்கின்ற மூவாசைகளையு மொழித்து சிவஞானசித்தியைப் பெற்றிருப்பதரிது. அத்தன்மைத்தான சிவஞானசித்தியானது தேவரீர் திருவடிகளிற் செய்கின்ற நிரந்தரபத்தியால் வரவேண்டுவதல்லது, வேள்வி தவந் தானமாதிய எவ்வகைத்திறத்தினாலும், மற்றெவ்வகை முயற்சியாலும் வருவதன்று. ஆதலால்-தேவரீர்திருவடிகளில் அடியேற்கு மாறாதபத்தியையருளல்வேண்டும். இத்தலத்தில்எக்காலத்துந்தேவரீரெழுந்தருளியிருந்து, தேவர்கள்முதலிய யாவர்கட்கும் அவ்வவர்கள்கருதிய வரங்களை யளித்தருளவேண்டும். இவ்வனத்திற்குப் புட்பகவனமென்றும், இந்நகரத்திற்குப் புட்பகநகரமென்றும் பெயருண்டாகவேண்டும். இவைகளன்றியும் அடியேனைத்தேவர்கள்-முனிவர்கள்- சித்தர்கள்- சாத்தியர்கள் - அசுரர்கள் - முதலான யாவர்களும் வழிபட்டு, அடியேனுணையைக் கடவாமல் நடந்துகொள்ளும்படியான வரமுங் கொடுத்தருள வேண்டுமென்றார். அதற்குக்கணேசமூர்த்தி கருணைபுரிந்து, அன்பனே- இந்நகரமானது இக்கிரேதாயுகத்திற் புட்பகநகரமென்றும், திரேதாயுகத்தில் மணிபூரகநகரமென்றும், துவாபரயுகத்தில் பானகநகரமென்றும், கலியுகத்தில் பத்திரீகநகரமென்றும், பெயர்பெற்றிருக்கும். நீகருதியமற்றவரங்களு முனக்களித்தோம். இனி நமதனுக்கிரகத்தால், தனக்கொருவர்நிகரில்லாத பராக்கிரமசாலியாகியும், சிவபிரான்தவிர மற்றையாவராலுமழியாத வரத்தையுடையவனாகியும், நமது திருவடிகட் கன்பனாகியு மிராநின்ற, ஒரு புத்திரனுனக்குண்டாவான். உனக்கு மூவுலகத்தாரும் புகழத்தக்க கீர்த்தியுண்டாகும். இன்னுமுனக்கு வேண்டுங் காரியங்கள் கைகூடவெனில், நம்மைமுன்னதாகப் பூசித்து அவைகளைப் பெறக்கடவையாக. ஓர்காரியத்தைச் சித்திபெறக் கருதுகின்றவர்கள், முதலில் நம்மைக்கருதிப் பூசிப்பார்களாயின், உடனே அவர்கள் தீவினைகளினின்று நீங்கி, அதனை யெளிதில் அடைவார்கள். நம்மைத் தொழாத பேர்கட்கு, எல்லாவிடையூறுகளும் பொல்லாவினைகளுமுண்டாகுமென்றருளிச்செய்து, தமது திருவுருவைக் கரந்தருளினார். இப்பால் கிருச்சமதமுனிவர் அவ்விடத்தி லோராலயஞ் சமைத்து, அதில் விநாயகமூர்த்தியைப் பிரதிட்டை

செய்து, அம்மூர்த்திக்கு வரதகணபதியென்னுந் திருநாமந்தரித்து, ஓர்தீர்த்தமுண்டாக்கி, அத்தீர்த்தத்தால் அவ்வரதகணபதிக்குத் திருமஞ்சனமாட்டிச், சதாகாலமும்பூசனைசெய்து கொண்டிருந்தார். கணேசமூர்த்திக்கு அபிஷேகித்ததினால், அத்தீர்த்திற்குக் கணேசதீர்த்தமென்னும் பெயருண்டாயது. அந்நகரங்கணேசமூர்த்தியினுடைய கிருபையால்விளங்கியதாற், கணேசநகரமென்றும், யாவர்க்கும்பலசித்திகளைத்தருவதால், சித்திநகரமென்றும் பெயர்பெற்றது. இஃதன்றியும் அளவற்றசித்தர்கள்-முனிவர்கள்தேவர்கள்முதலாயினோர்அச்சித்திநகரத்தையடைந்து, அங்கெழுந்தருளியிருக்கின்ற சித்திவிநாயகரைத்தரிசித்து, அவ்வவர்கள் இஷ்டகாமியார்த்தங்களைப் பெற்றிருக்கின்றார்கள்.

கணபதிதுணை.

பன்னிரண்டாவது.

திரிபுரன் உபாசித்தபடலம்.

ஓசவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியைக்கிருச்சமதமுனிவருபாசித்துப் பலவரங்களைப்பெற்ற பேற்றினைச்சொன்னோம், இப்பால் திரிபுரனுபாசித்த திறத்தினைச் சொல்லுவோங் கேட்பீராக. கணேசமூர்த்திகொடுத்தருளியவரத்தினாற், கிருச்சமதமுனிவர் சகலமுனிவர்களுந் தேவர்களுந் தம்மைத்தொழுதெழுந்து ஏவல்செய்யத்தக்க மாட்சிமையோடுயாகாதிகட்கெல்லாம்உபாத்தியாயராகித், தினந்தோறும்வரதகணபதியைப்பூசனைசெய்து, தமதுதந்தையாலுபதேசிக்கப்பெற்றமந்திரத்தைஇடைவிடாதுசெபித்துப், பஞ்சேந்திரியங்களையுமடக்கித் தவஞ்செய்து வருகின்றநாளையில், ஒருநாள் நெடுநேரம் யோகத்திலிருந்து, கண்களைவிழித்துப்பார்த்தனர். அந்தவேகமுள்ளபார்வையினின்றுஞ், சொர்க்கமத்தியபாதலமுதலிய சகலலோகங்களு நடுங்கும்படியாகப், பிரளயகாலத்தி லுண்டாகின்ற இடியைப்போல வார்ப்பரித்து, மகாபராக்கிரமத்தோடு, முன்னர் விநாயகமூர்த்தி தந்தருளியிருக்கின்ற வரத்தின்படி, பலியென்னும் பெயரினையுடைய ஓரவுணனுதித்தனன். அவன் சிவந்தநிறமும், மிகுந்த அழகும், ஒளிவீசுகின்ற கிரீடமும், நவரத்நகுண்டலமும், புயகவசமும், ஆரைநாணும், இன்னு மிவைமுதலியஅளவற்ற அலங்காரங்களோடு, சூரியகாந்தியு மழுங்கத்தக்க பிரகாசத்தினை யுடையவனு யிருப்பதைத், தவசிரேஷ்டராகிய கிருச்சமதமுனிவர்கண்டு, நடுநடுங்கிப்பயந்து, இவன் யாவனென்றுமயங்கி, மீளவுங் கணேசமூர்த்தியினுடைய பெருங்கருணையால் நமக்குப் புதல்வனாக வந்தவனென்றுதெளிந்து, அவனைப்பார்த்து, அப்பா- நீயார் எங்கிருந்துவந்தனையென்றுவினாவினார். அதற்கு அப்பலியென்பவன்சொல்லுவான், அண்ணலே-தாங்களென்னை இன்னவனெ

ன்றறியாதிருப்பதுமிகவும் ஆச்சரியமாகவிருக்கின்றது, தேவரீர் விழித்தருளியபார்வையின்மகிமையாலல்லவா யானுண்டாயினேன்,யான்தேவரீர் புத்திரன்,எனக்குத்தாய்தந்தைமுதலியயாவருந்தேவரீரேயாகும், என்னைச்சிலநாள்வரையிற்றேவரீர் பாதுகாத்துவிடல்வேண்டும்,பின்னர்இம்மூவுலகங்களையும்வென்றுசயங்கொள்ளுவேன், அப்போதெனதுபராக்கிரமங்களையெல்லாந் தேவரீரே அறியப்போகின்றீரென்றுசொன்னான். அவையனைத்தையுங்கிருச்சமதமுனிவர்கேட்டு,நடுக்கமுற்று, இதனைவெளிவிடலாகாதென்று தம்முள்மறைத்துக்கொண்டு, அவனைப்பார்த்துச் சொல்லுவார். மைந்தனே-ஆதிமத்தியாந்தரகிதமாகியும், அகண்டாகார வஸ்துவாகியுமிருந்து,எங்குந் தானாகவிளங்குகின்ற சோதிஸ்வருபராகிய விநாயகமூர்த்தியினுடைய மந்திரத்தை யுனக்குபதேசிக்கின்றேம், அந்தப்புராதனமந்திரத்தைச் செபித்துவருவையாயின், உனக்குச் சகலசித்திகளுங்கைகூடுமென்றுசொல்லிக், கணானந்துவாவென்னு மந்திரத்தை ஆகமவிதிப்படி உபதேசித்து, அதை யநுட்டிக்குமுறைமையையுஞ்சொன்னார். இப்பால் பலியென்பவன் பேருவகையில் மூழ்கினவனாய்க், கிருசசமத முனிவருடையதிருவடிகளைப்பணிந்து,துதிசெய்து, அவ்வனத்திற்றானே மற்றொருசாகையிலிருந்து, அவரைப்போலவேதானுமொருகாலைநிலத்திலூன்றிப், பஞ்சேந்திரியங்களையு மொருவழிப்படுத்தி, சுழிமுனை-இடை-பிங்கலை-காந்தாரி-அத்தி- சிங்குவை-அலம்புடை- புருடன்- குரு- சங்கினி † என்னுந் தசநாடிகட்கும் உற்பத்திஸ்தானமாகிய மூலாதாரத்தினின்றுந், தேகமத்தியமாகிய இதயகமலத்தில், பிரிதிவிதத்துவமுதல் நாததத்துவமீறாக ஓராதனங் கற்பித்து, அவ்வாதனத்தில்சோதிமயமான கணேசசொரூபத்தைப் பிரதிட்டைசெய்து, அந்தசொரூபத்தில் விநாயகமூர்த்தியை ஆவாகனஞ்செய்து, அம்மூர்த்திக்கு அருளென்னுந் திருமஞ்சனத்தையாட்டிச், சாந்தமென்னுஞ் சந்தனத்தைச்சாத்தி, ஞானம்- மோனம்- தானம்- தவம்- தருமம்- மனவூக்கம்- கல்வி- கேள்வி- என்கின்ற அட்டபுட்பங்களைக்கொண் டருச்சித்து, அன்னமயம்- பிராணமயம்- மனோமயம்- விஞ்ஞானமயம்- ஆனந்தமயம் ¶ என்கின்ற பஞ்சவிதான்னங்களை நிவேதித்து, அகங்காரமென்கின்ற தூபங்கொடுத்து, அபிமானமென்கின்ற தீபங்காட்டி, சிற்சத்தி-பராசத்தி-இச்சாசத்தி- ஞானசத்தி-கிரியாசத்தி-என்கின்ற ⁕ பஞ்சநீராஞ்சனங்களைச்சுத்தி,தன் தந்தையாலு

---

† அவையாவன, சுழிமுனை-ஆதாரமாயினுமூடுருவிநிற்பது. இடை-பிங்கலை-இரண்டுங் கத்திரிகைக் கால்போற் பின்னிநிற்பன. காந்தாரி-நாபியிற்றோன்றிச் சத்தமெழுக்கு மேழு நாடியாய்க் கண்டத்துறுவது. அத்தி சிங்குவை-இரண்டும் பத்துநாடியுற்றுக் கண்ணினிற்பன. அலம்புடை-புருடன்-இரண்டுஞ் செவியினூற்றிருபது நரம்புற்றிருப்பன. குரு- நாபியுறைந்து குய்யம்பற்றிநிற்பது. சங்கினி - உபத்தத்தைப்பற்றியிருப்பது.

¶ அவையாவன, உடல் அன்னமயம்.கருமேந்திரியமும்பிராணனும் பிராணமயம்.கருமேந்திரியமும்மனமும்மனோமயம், ஞானேந்திரியமும்புத்தியும்விஞ்ஞானமயம்.அவித்தையானந்தமயம். இவையேபஞ்சகோசம்.

⁕ அவையாவன, உயிர்க்கொளியாகநிற்பது சிற்சத்தி. பிராணன்மு

பதேசிக்கப்பெற்ற கணேசமந்திரத்தைச்செபித்துத், தியானத்திலிருந்து, ஆகாரநித்திரை முதலானவைகளை நீக்துப், பதினையாயிரவருடந் தவஞ்செய்தான். அவன் செய்கின்ற கொடிய தபாக்கினியானது, எங்கும் பரந்து சுடுவதினாற், றேவர்களெல்லா நடுங்கிவருந்தினார்கள். உடனே அத்தவத்திற்கு விநாயகமூர்த்தி கிருபைசுரந்து, கோடிசூரியப்பிரகாசம்போல அவனெதிரிற் பிரத்தியக்ஷமாயினார். பலியென்பவனச்சோதிக்குச் சற்றுமஞ்சாமல், கண்களைவிழித்துப்பார்த்து, ஒருகரத்திற் றாமரைமலரும் ஒருகரத்திற் கழுமுள்ளும், ஒருகரத்திற்கணிச்சிப்படையும், ஒருகரத்தில் மோதகமுந் தாங்கிய வலங்காரத்தோடு, மற்ற அவயவங்களையு மனங்குளிரத்தரிசித்து, அடியற்றமரம்போல நிலத்தில் வீழ்ந்து, சாஷ்டாங்கமாகவணங்கி, அனந்தமுறைதோத்திரஞ்செய்து, ஓ சர்ப்பாபரணந்தரித்த கணேசமூர்த்தியே, இமைப்போதிற் சகலவண்டங்களையுமெரித்து நீறுக்கவல்ல கடவுளே, அடியேனிடத்திற் கோபமில்லாமற் றேவரீர் பெருங்கருணைவைத்தாளவேண்டும், அடியேன் பிழைசெய்தாலும் அதனைத் தேவரீர் மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். கணேசமூர்த்தி அதனைக்கேட்டுக் கிருபைசுரந்து, ஓ பலியே- பிரமனாதி முனிவர்களாலும் இருக்காதி வேதங்களாலும் அளந்தறிதற்கரிய நாம், உன்மீதுவைத்த பேரன்பினால், நீசெய்த பெருந்தவத்திற் கட்டுண்டு, இங்ஙனம் வந்து, உனக்குத் தரிசனந் தந்தோம். இனியுனக்கு வேண்டியவரங்களைக் கேள் தருகின்றோமென்று திருவாய் மலர்ந்தருளலும், பலியென்பவன் மனமகிழ்ந்து, ஓ சர்வபரிபூரண சொரூபியே, ஓ மெய்ஞ்ஞானப்பேரொளியே சோமன் சூரியன் அக்கினி என்கின்ற இம்மூவரும் இவ்வுலகத்துள்ள இருளைநீக்குவது, அருளைப்பொழிகின்ற தேவரீர் திருமேனியின் பிரகாசரேணுவினாலல்லவா. எல்லாவண்டங்களும் யாதொரு குறைவுபாடின்றி நடந்துவருவது, தேவரீர் திருவடிகளி னசைவினாலல்லவா. சகலமுந் தேவரீர் சொரூபமாக வேதமுதலிய அளவற்ற சாத்ரங்களு முறையிடுகின்றன. தேவரீர்தெரிசனமடியேற்குக்கிடைத்தபோதே எல்லாவரங்களுங்குறைவில்லாமற்கிடைத்தன, தேவரீர்திருக்காட்சியால்அடியேன்எக்காலத்தினுமழியாத பெரும்பேறுடையவனாயினேன். அடியேனையீன்றதந்தையும் பெரும்பேறுடையவராயினார். யாங்களியற்றியதவமும்பயன்பெற்றது. ஏதுமறியாதசிறியேன்தேவரீருடைய பெருமைகளையெவ்வளவினவென்றுணர்க்கமாட்டுவேன். சுவாமி- தேவரீரடியேற்குவரந்தருவதுமெய்யேயானால், மூவுலகங்களு மடியேன்வசமாகவேண்டும். இந்திரன்முதலியதேவர்களெல்லாங் கைகட்டி, வாய்புதைத்து, அடியேன் வாய்தலிற் காத்திருந்து, யானிடுகின்ற ஏவல்களைத் தட்டாமல் நடத்திவருவதான அரசாக்ஷிவேண்டும். எந்தப்பொருளை எந்தெந்தவேளையில் நினைத்தாலும், அந்தப்பொருள்கள் அந்தந்தவேளையில் அடியேற்கு எளிதிற் கிடைக்கவேண்டும். தேவ்ரீர் திருவடிகளில் அடியேற்கு மாறாத பத்திவேண்டும்

தலிய வாயுவாகநிற்பது பராசத்தி. பஞ்சபூதமாகநிற்பது இச்சாசத்தி. ஐம்பொறி யுணர்ச்சியாகநிற்பது ஞானசத்தி. மற்றைவினைத்துணையாக நிற்பது கிரியாசத்தி.

ான் சரீரவந்தத்தில் அடியேற்கு முத்தியுண்டாகவேண்டுமென்றுபிரார்
த்தித்தான். இவையனைத்தையுங் கணேசமூர்த்திகேட்டுச், சிறியவனே-
ீ கருதிய வரங்களனைத்தையுங் கொடுத்தோம். மூவுலகத்தாரு முன்
னேவல்புரிந்து சேவிப்பார்கள். இவைகளன்றியும், கரும்பொன், வெ
ண்பொன், பசும்பொன், என்கின்ற மூன்றுலோகத்தாலாகிய மூவிதக்
கோட்டைகளை உனக்களித்தோம். அவைகட்குப்பெயர் திரிபுரமென்று
சொல்லப்படும். உன்னை யுலகத்தாரெல்லாந் திரிபுரனென் றழைக்கக்கட
வர். காமதகனராகிய கங்காசடாதரமூர்த்தியின் கணையாலன்றி, மற்
றையாவராலும் உனககு முடிவில்லை. நீ நினைத்தவிடத்தி லுனக்கு முன்
னதாகவே அத்திரிபுரங்கள்கூட நடக்கும். பின்னர் சகலமுஞ் சிவபெரு
மான் விடுகின்ற கணையாலழிந்துவிடும். உடனே உனக்கு முத்தியுண்டா
குமென்று திருவாய்மலர்ந்து, தமது திருவுருவைக் கரந்தருளினார். இவ்
வாறு விநாயகக்கடவுள் அவனுக்குக் கொடுத்தருளிய வரங்களையெல்லாந்
தேவர்கள்கேட்டு நடுநடுங்கித், துக்கசாகரத்தின் மூழ்கினார்கள். இப்பாற்
பலியென்பவன் தன் றந்தையாகிய கிருசசமதமுனிவரைக்கண்டு பணிந்
து, தான் பெற்றுவந்த வரங்களனைத்தையுஞ்சொல்லி, மூவுலகத்தினுஞ்
சென்று போர்செய்வதான எண்ணத்தோடு, அப்புட்பகவனத்தில் வாச
ஞ்செய்திருந்தான். கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே, பின்னர்
அப்பலியென்பவன், புட்பகவனத்திலிருக்கின்ற கணேசபுரத்தில், யாவ
ரும் அதிசயிக்கத்தக்கதாகக், கண்டகச்சிலைகளினால் ஓராலயஞ்சமைத்து
அவ்வாலயத்தை யலங்கரித்துத், தானெவ்வாறு கணேசமூர்த்தியைத் தரி
சித்தானோ, அவ்வாறே அக்கண்டகச்சிலையினால் ஒரு திருவுருவங்கண்டு,
அத்திருவுருவத்தை அவ்வாலயத்திற் பிரதிட்டைசெய்து, தினந்தோறு
மாராதித்துககொண்டிருந்தான். இவ்வாறு சிலநாள் கழிந்தபின்னர், பூ
லோகத்துள்ள வரசர்களையெல்லாம் வெல்வதற்கு வெளிக்கொண்டு செ
ன்று, அளவற்ற யுத்தங்களை நடத்திச், சகல வேந்தர்களையும் வென்று,
அவர்கட் கெல்லாந் தன்னைக் கீழ்ப்பணிந்து ஏவல்செய்து வரும்படியா
க் கட்டளையிட்டுத, தன்னை வணங்காரையெல்லாம் விண்குடியேற்றிப்
பாதலலோகத்திற் சென்று, அங்கரசாள்கின்ற நாகேந்திரன் முதலான
சகல வீரர்களையுஞ் செயித்து, அவ்விடத்துள்ள மாணிக்கமுதலிய செல்
வங்களையெலலாங் கைக்கொண்டு, மீட்டும் பூலோகத்திற்கு வந்தான்.—
உடனே அந்தந்த தீபாந்தரங்களிலுள்ள அவுணர்களெல்லாம் வந்து தீர்
கதண்டன் செய்து துதிக்க, அவர்கட்கெல்லாங் கிருபைபுரிந்து, அவ்
வவர்கட்கு வேண்டிய செல்வங்களையுங் கொடுத்துப், பின்னர் அவர்க
ளோடு பூலோகததினின்றும் பாதலலோகத்தினின்றும் வந்திருக்கின்ற
சேனைகளையு மழைத்துக்கொண்டு, செயபேரிகை முழக்குவித்து, வேல்-
மழு-வாள்-கேடயமுதலான அளவற்ற ஆயுதங்களைச் சேகரஞ் செய்து,
அவுணசேனைகளெல்லாம் அமாவாசை யிருளைப்போலத்தன்னைப்புடை
சூழ்ந்துவர, ஒரேலென்று சொர்க்கலோகத்திற் சென்று, கற்பகசசோ
லையிற்புகுந்து, அங்கிருக்கின்ற தேவர்களையெல்லா மொடுக்கி, அச்சோ
லையினையுநாசஞ்செய்தான். இப்பால் இவன்வரவைத்தேவதூதர்களறிந்து
இந்திரனுக்கறிக்கையிட்டார்கள். உடனே அப்பலியென்பவனுந் தனது

வரவை இந்திரனுக்கறிவிக்குமாறு தூதர்களையனுப்ப, அவர்க ளவ்வாறே சென்று, இந்திரனைக்கண்டு, ஓ சுராதிபரே - எங்களரசராகிய பலியெ ன்பவர் இங்குவந்திருக்கின்றனர். நீரவரிடத்திற்கு விரைந்துவந்து, அவ ரைப் பத்தியோடும் பணிதல்செய்யககடவீர். அப்படி வராதிருப்பீரா யின், உம்மை இப்பொன்னுலக வரசாக்ஷியினின்றுநீக்கி, யமலோகத்திற் சேர்ப்பதாக யோசித்திருக்கின்றார். உமக்கவரோடியுத்தஞ்செய்ய வலியி ருக்குமாயின், இங்கிமிடத்திலுமக்குள்ள சேனைக்ளோடு வெளிக்கொண் டுவாரும். இல்லாவிட்டால் யாங்கள் முற்கூறியபடி அவரிடத்தில் வந்து சரணடையும். இதற்கென்ன வுத்தரவு சொல்கின்றீரென்று கேட்டார்க ள். இதனைக்கேட்டலும், தேவேந்திரன் அதிககோபாவேசங்கொண்டு, த னது கரத்தைத் தூணிற்றாக்கி, நீங்கள் சொன்னவார்த்தை நன்றாயிருக்கி ன்றதென்று நகைத்துத், தாமரைமலர்பூத்த காடுபோலக் கண்களிலெல் லாஞ் சிவப்புற்று, இனிமுடிவெய்துங் காரணம்றியாதவனாகி, இதோவந் து யுத்தஞ்செய்து யாவரையும் அதாஅதப்படுத்துகிறேனென்றெழுந்து வந்தவர்கட்கு விடைகொடுத்தனுபபித், தனதுசேனைகளெல்லாம்யுத்தத் திற்கு ஆயத்தமாகிவர நகரமுழுவது முரசறைவித்தான். முன்னர் பலி விடுத்த தூதர்கள் மீட்டுந் திரும்பிவந்து, தங்களரசனைப்பணிந்து, ஓ சக் கிரேஸ்வரா, யாங்கள் தேவேந்திரனிடத்திற்சென்று அவன்கருத்தையா ராயுமளவில், அவன் யுத்தத்திற்கே எதிர்பார்த்திருக்கின்றனனென்னலு ம், அழலில் நெய்சொரிந்ததுபோலப் பலியானவன் கோபங்கொண்டு, இந்திரன் வரவை எதிர்பார்த்திருந்தனன். இப்பால் தேவேந்திரனானவ ன், முடி- குடை- கவரி- தோட்டி- முரசு- சக்கரம்- யானை- கொடி மதிள்- தோரணம்- நீர்க்குடம்- பூமாலை- சங்கு- கடல்- மகரம்- ஆமை இணைக்கயல்-சிங்கம்- தீபம்- இடபம்- ஆசனம்- என்கின்றஇருபத்தொரு சின்னங்களோடு, பதாதி-சேனாமுகம்-குமுதம்-கணகம்-வாகினி-பிரளயம் சமுத்திரம்-சங்கம்-அனிகம்-அக்குரோணி ‡ என்கின்றபதின்வகைச்சே னைத்தொகைகளுங் கிரமப்படிவிளங்க, மந்திரியர்-கருமாதிக்காரர்-சுற்றத் தார்-கடைக்காப்பாளர்-நகரமாக்கள்-படைத்தலைவர்-இவுளிமறவர்-யானை வீரர்-என்கின்ற எண்வகைத்துணைவர்களும், அவ்வவர்களாயுதங்களோடு புடைசூழ்ந்துவரச், சத்தசாகரங்களு முடைந்து பெருகியதுபோன்றபே ரொலியோடு, அரமனைவாய்தலைவிட்டு நீங்கித், தனது ஐராவணத்திலா ரோகணித்து, ஒளிவீசுகின்ற வச்சிராயுதத்தைத்தாங்கி, அளவற்றதேவர் கூட்டங்களாசிகூறிவரவும், செயபேரிகைமுதலியவாத்தியங்கள் முழங்க வுமாகப், பகைவனாகியபலியென்பவனைத் தேடிச்சென்றனன். பலியான வன் தேவேந்திரன் வரவைப்பார்த்து, அவனையோர்திரணமாகமதித்துத்

---

‡ அவையாவன, யானை-க-தேர்-க-குதிரை-ந-காலாள்-ரு-இவை கூடியதுபதாதி-பதாதிமும்மடிகொண்டது சேனாமுகம். சேனாமுகமும்ம டிகொண்டது குமுதம். குமுதமும்மடிக்கொண்டது கணகம். கணகமும் மடிகொண்டது வாகினி. வாகினிமும்மடிகொண்டது பிரளயம். பிரளய மும்மடிகொண்டது சமுத்திரம். சமுத்திரமும்மடிகொண்டது சங்கம். ச ங்கமும்மடிகொண்டது அனிகம். அனிகமும்மடிகொண்டது அக்குரோணி.

தானுந் தன்சேனைகளோடுஅவனெதிரிற்சென்ருன். பின்னர் புண்ணியமும்பாவமும் ஒன்ருய்க் கலந்ததுபோலத், தேவசேனைகளோடு அவுணசேனைகளொன்ருய்க்கலந்து போர்செய்யும்போது, அவுணசேனைகட்குச் சிறிதுவலிகுன்றியது. அதனைப் பலியென்பவன்பார்த்துப், புண்ணில்வேல்பாய்ந்ததுபோலப்பொங்கி, மனம்பொருதவனுகி, விழிகளில் அனற்பொறிகளெழும்பத்தக்கதாகக் கொதித்துப், புகையுண்டாகும்படி பெருமூச்செறிந்து, திசைகளெல்லாமதிரநகைத்துப், புருவம் நெற்றியிலேறக் கோபித்து, வடவாமுகாக்கினியைப்போலச்சீறிக், குதிரைமீதேறித், தேவர்களுடையபடைக்கூட்டங்களிற்புகுந்து யாவரையுஞ் சின்னபின்னமாகவாட்டுவதாயினன். உடனே-தேவர்சேனைகளெல்லாந்திகைத்துப்,பலகாயங்களோடுவருந்தி மனந்தாபரிக்கமாட்டாது, நாற்றிசைகளினு மோடிப்பதுங்கினர்கள். சிலர் ஆயுதத்தோடு கையறுபட்டவர்களும், சிலர்மாலையோடு மார்பு பிளக்கப்பட்டவர்களும், சிலர் கழலோடு கால்முறியப்பட்டவர்களும், சிலர் மகுடத்தோடு சிரமுருளப்பட்டவர்களும், சிலர் குடரோடு ஈரல் சரியப்பட்டவர்களும், சிலர் வலியோடு வாகழியப்பட்டவர்களுமானர்கள். இவ்வாறு தேவசேனைகளெல்லாம் அவுணராசனல் மடிந்துபோவதை இந்திரன்பார்த்து மனம்பொருமல், அழற்பொறிபறக்கும்படியாகவிழித்து,ஆலகாலவிடத்தைப்போலச்சீறி, மதம்பொழிகின்ற தனது அயிராவணத்தைச் சண்டமாருதத்தினும் அதிகவேகமாகச்செலுத்தி, அவுணசேனைகளை யெல்லாங் கண்டதுண்டமாக வெட்டி எறிவதாயினன். அதனைப்பலியென்பவன்கண்டு, அண்டகடாகங்களெல்லாம் நடுங்கும்படியாக நெறநெறென்று பற்களைக்கடித்து, விடநாகத்தினைப்போற்சீறி, வீராவேசங்கொண்டு, கரத்திலிருக்கின்றவில்லைவளைத்துக்குணத்தொனிசெய்து, குறூரமாகிய பாணவருஷங்களைப்பொழிந்து, தோமரம்- குந்தம்- நேமி- பாசம்- வாள்- முசலம்- தண்டம் - முதலான ஆயுதங்களை நேருக்கு நேராகவிடுத்து, ஆகாயத்திலிருக்கின்ற உடுக்கூட்டங்களெல்லாமுதிரும்படியாகச்சத்தித்துத், தேவசேனைகளையெல்லாம் அதா அதப்படுத்திக்கொண்டிருக்கின்றசமயத்தில், இந்திரனனவன் தனது அயிராவணத்தை அதிகவேகத்துடன் நடத்திவந்து, அதன் மத்தகத்தைப்பலியென்பவன் ஏறிநடத்துகின்ற குதிரையின் முன்னங்காலானது மடிந்தொடியும்படியாகத் தாக்கினன். உடனே பலியானவன் தன்வாளாயுதத்தைவீசி, இந்திரனை யவ்வயிராவணத்தினின்றுங் கீழேவிழும்படியாகத் தள்ளித், தன்குதிரையைத்தாழ்த்தி, அவன் வச்சிராயுதத்தைக் கைக்கொண்டு, அதனல் அயிராவதத்தினுடைய மத்தகத்தில்மோதி, அதன்வீரத்தையெல்லாங் குன்றச்செய்தனன். பின்னர் தேவேந்திரனிமைக்கு முன்னமெழுந்து நெடுமூச்செறிந்து, மிகுந்தகோபாவேசத்துடன் அப்பலியின்மேற்பாய்ந்து, அவன் தலை பிளவுபடும்படியாகத் தன்கையால் பலங்கொண்டமட்டும் மோதுதலும், பலியானவன் மூர்ச்சையாகிவீழ்ந்து, மீளவுந்தெளிந்தெழுந்து, இந்திரனுடையமார்பிற்பாய்ந்துமோதினன். உடனே இந்திரனுமூர்ச்சித்தவனுகிச்,சிறிதுதெளிவுற்றெழுந்து, பலியைப்பார்த்து நீ உன்னுயுதங்களைவிடுத்து என்னேடுமல்லயுத்தஞ்செய்து பிழைக்கவல்லையோவென்றுசொல்ல,அதற்குஅவ்வவுணராசன்சொல்லுவான், ஓஇந்தி

ரனே-விட்டிற்பூச்சியினுடையசிறகின்காற்றினலேயா வடவாமுகாக்கினிய வியும், மதயானையைப்போன்ற வெனக்குநீ தோற்றனை, ஆபினும்-அஞ்ச வேண்டாம், உனதுபெருமைகெடாது இன்னுஞ்சிறிதுகாலம்வாழவேண் டுவையாயின்,உனக்குப்பூலோகவரசாக்ஷியைத்தந்தேன், அங்ஙனஞ்சென் று, உன்னகங்காரத்தை யெல்லாமொடுக்கி, உன்கிளைஞர்களோடிருந்து வாழக்கடவையென்றனன். அதனை இந்திரன்கேட்டுச், சீரங்குலுங்கநகை த்து, ஓ பலியே- இன்னும்யுத்தஞ்செய்ய அழைக்கின்றேனென்றுபயந்த நீ, இவ்வார்த்தையைப்பேசித் தப்பித்துக்கொள்கின்றாய், இங்கிமிடத்தி லுன் சரீரத்தைச் சின்ன பின்னமாக்கிப் பருந்துகட்கிரையாக்குகின்றே னென்று, தன்புஜங்களைத்தட்டினன். அதனைக்கேட்டபலியானவன் அதிக உருத்திராகாரங்கொண்டு, தன்குதிரையைவிட்டிறங்கி, உதிரவெள்ளம் ஓ டும்படியாக அவ்விந்திரனேடுஅளவற்றமல்லயுத்தங்களைச்செய்து, இமை ப்போதில் அவன்கால்களைப்பிடித்து, ஆகாயத்திற்றூக்கிக்,கிறுகிறென்றுசு ழற்றிவீசினன். அவ்வேகத்தோடுஇந்திரனனவன்மெலிந்து, இமயவரைச் சாரலில்விழ்ந்துமூர்ச்சித்து, உயிர்போனவனையொப்பக்கிடந்தனன். இ க்காரணத்தை இந்திராணிகேள்வியுற்று, நிலத்தில்வீழ்ந்து புரண்டு, அ ம்மவோ- அம்மவோ- வென்றழுது சோர்வுற்று, மற்றைத்தேவர்களோ டுங்கூடித், தன்காதலன்மூர்ச்சையாய்வீழ்ந்துகிடக்கின்ற பர்வதச்சாரலை யடைந்து, பற்பலசைத்தியோபசாரங்களால் அவன் மூர்ச்சையைத்தெ ளிவித்து, சஞ்சிதம் - பிராரத்துவம் - ஆகாமியம் ‡ என்னுமிம்மூன்றினு ல் வருகின்ற காரியங்களை யார்தடுக்கவல்லவரொன்று பலதேறுதல்களைச் சொல்லி, அவ்விமோத்கிரியினுடையகுகைகளிலே அத்தேவேந்திரனே டு தானும் ஒளித்துக்கொண்டிருந்தாள். இப்பால்பலியென்பவன யுத்தக ளத்தைவிடுத்து, இந்திரனுடைய அயிராவணத்திலேறிச், செயபேரிகை முழக்குவித்து, அவனரமனையிற்சென்று, மிகுந்தஆனந்தத்தோடு சிங்கா தனத்திலிருந்து, சுவர்க்கலோகத்திலிருக்கின்ற குடிகளெல்லாந் தனதா ணைக்கடங்கி நடந்துகொள்ளக்கடவதென்று எங்குமுரசறைவித்து, அர ம்பைமாதரை நாட்டியஞ்செய்வித்து, கின்னரர்களைவீணைவாசிப்பித்துச், சகலபோகங்களையுந் தனதுபஞ்சேந்திரியங்கட்குவிருந்தூட்டி அரசாக்ஷி செய்துகொண்டிருந்தான். இவ்வாறுசின்னாள்கழிந்தபின்னர், அப்பலியா னவன்பிரமன்வாழ்கின்றசத்தியலோகத்திற்செல்ல,பிரமன் அவன்வரவை யறிந்துபயந்து, அவ்வுலகத்தைவிடுத்து வைகுந்தத்திற்சென்றான். அவ் வைகுந்தத்தில் வாழ்கின்றவிண்டுவும், அவ்வவுணன்கொடுமைகளைக்கேட் டு நடுநடுங்கி, அப்பிரமனைத் தன்னுடனழைத்துக்கொண்டு, இந்திரன்மு தலாயினே ரொளித்திருக்கின்ற இமோற்பர்வதச் சாரலையடைந்தார். பி ன்னர் சத்தியலோகத்திற்சென்றபலியானவன், அங்குபிரமனில்லாததை க்கண்டு, அவ்வுலகத்தைத் தன்வசமாக்கி, அவ்விடத்தினின்றுநீங்கி, வை குந்தத்திற்சென்று, அங்குவிண்டுவில்லாததைக்கண்டு, அதனையுந்தன்வ

---

‡ அவையாவன - முன்செனனத்திலனுபவித்து மிகுந்த வினைக்கு றைசஞ்சிதம். அதனை இந்தசெனனத்திலனுபவிப்பதுபிராரத்துவம். இந் தசெனனத்திலேறுகின்றவினைகள் ஆகாமியம்.

யப்படுத்தி, மீளவும்பூவுலகத்திற்குவந்து, தனக்குஅளவற்றவரங்களைத்தந்தருளிய விநாயகமூர்த்தியைப்பூசித்து, சுவாமி- முன்னரடியேற்குத்தேவரீர்வரமாகத்தந்த மூன்றுகோட்டைகளாகிய திரிபுரங்களை, இப்போதநுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். உடனே கரும்பொன்-வெண்பொன்- பசும்பொன்- என்னும் இம்மூன்றினாலாகிய திரிபுரங்கள், ஒவ்வொன்று நூறுயோசனை யுயரமும் நூறுயோசனைவிசாலமுமாக, அளவற்றசெல்வங்களோடு, ஆகாயத்திலுண்டாயின. அத்திரிபுரங்களில்,கற்பகவிருக்ஷம்- காமதேனு- சங்கநிதி- பதுமநிதி- முதலாகியபொருள்களோடு,அளவற்ற அற்புதசம்பத்துகளுநிரம்பியிருந்தன. சொர்க்கம்- சத்தியம் வைகுந்தம்- என்னும் இம்மூன்றுலகங்கள் அப்பலியின்வசமாயினபோதே, அவைகட்குத்தாழ்ந்த மற்றலோகங்களெல்லாம் அவன்வசமாய்விட்டன. அப்பலியானவன் சிவபெருமானால் முத்தியடையுங் காலத்தன்றி, மற்றெக்காலத்தினு மழிவின்மையாயிருக்கின்ற மூன்றெயில்களும், அவன்செல்லுமிடங்கடோறுஞ் செல்லுதலால், நடைசெய்யும்படியான சீவதேகங்கட்கொப்பாகியிருந்தன. அத்திரிபுரங்களானது யாவரும் விரும்பியபோகங்களைவரையாது கொடுத்துவருவதினாற், காமதேனு- கற்பகம்- சிந்தாமணியென்னும் இம்மூன்றுநிதிகளையொத்திருந்தன. இப்பாற் பலியென்பவன் திரிபுரனென்னு நாமம்பெற்றவனாய், அளவற்றஆனந்தத்தில் மூழ்கித், தானடைந்த அத்திரிபுரங்களில் இரும்பாலாகியபுரத்திற்குச்சுக்கிலமென்றும், வெள்ளியாலாகியபுரத்திற்குச்சுபிலமென்றும், பொன்னாலாகியபுரத்திற்குச்சுவிர்த்தியென்றும் நாமங்களிட்டுச்,சுகிலம்பாதலலோகமாகவும், சுபிலம்மத்தியலோகமாகவும், சுவிர்த்தி சொர்க்கலோகமாகவும் ஏற்படுத்தி, விநாயகக்கடவுளை அன்புடன்றியானித்துத், தன்மனத்தால் மூன்றுபுத்திரர்களையுண்டாக்கி, அம்மூவருக்குவச்சிரதமிஷ்டிரன்- வீமகாயன்- காளகூடன்- என்று நாமகரணந்தரித்து, சுகிலமென்னு மிரும்புக்கோட்டையை வச்சிரதமிஷ்டிரனென்பவனுக்கும், சுபிலமென்னும் வெள்ளிக்கோட்டையை வீமகாயனென்பவனுக்கும், சுவிர்த்தி யென்னும் பொன்கோட்டையை காளகூடனென்பவனுக்குங்கொடுத்து, இம்மூவர்கட்குந்தானதிகாரியாயிருந்து, தன்னாணையின்படி யவர்களைநடாத்திவந்தான். மேற்கூறியமுப்புரங்களானது, ஆயிரம்வருடத்திற் கொருகால் அவ்விடம்விட்டு மற்றோரிடத்திற் பெயர்வதும், தமக்குள்ளிருந்து அரசுசெய்கின்றவர்கள் ஏதேதுவேண்டினும் அவைகளையெல்லாந் தடையில்லாமற்கொடுத்துவருவதும், அவர்களெவ்வெவ்விடங்களிற் செல்ல நினைக்கினும் அவ்வவ்விடங்களிற்சென்றிரங்குவதுந், தம்மடியிலகப்பட்ட உலகங்களையெல்லாமழித்து வெற்றிகொள்வதுமாகியிருந்தன. இப்பால் திரிபுரன் வங்காளமென்னு நகரைச்சேர்ந்து, தன்மனத்தால் மீளவும் இரண்டுபுத்திரர்களையுண்டாக்கி, அவர்கட்குச்சண்டனென்றும் பிரசண்டனென்று நாமகரணந்தரித்து, சண்டனென்பவனைச் சத்தியலோகத்தையும்,பிரசண்டனென்பவனைவைகுந்தத்தையும் அரசாக்ஷிசெய்யவிடுத்துப், பின்னர் ஒருமனைவியைக்கூடி, அவளால்மதனென்னும் பெயரினை யுடைய ஒருபுத்திரனைப்பெற்றுச்,சகலலோகங்களினுந்தனதாணையைச்செலுத்தி, அளவற்றபோகபாக்கியங்களை யநுபவித்துத், தனதுகீர்த்தியானது அ

ட்டதிசைகளினும் பரவத்தக்கதாக நல்லநீதியைச்செலுத்தி, இடைவிடா மல் விநாயகபூசையுஞ் சிவபூசையுஞ் செய்துகொண்டு, அநேககாலம் அ ரசாக்ஷிசெய்துவந்தான்.

கணபதிதுணை.

பதின்மூன்றுவது.

தேவர்கள்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியைத்திரிபுரன்பூசித்து வரங்களைபெற்ற வரலாற்றினைச்சொன்னோம், இப்பால் அத்திரிபுரனழி யுமாறு, தேவர்களெல்லாம் பூசித்துவரம்பெற்ற சரித்திரத்தைச்சொல்லு வோங்கேட்பீராக. இவ்வாறு திரிபுரனனவன் சகலலோகங்களினுந் தன தாணையைச்செலுத்தி அரசுசெய்துவருகின்றகாலத்தில், இமயகிரியின்கு கைகளிலொளித்து, வேறொரு புகலிடமில்லாமல் துயரமுற்றிருக்கின்ற தேவர்களிடத்தில், ஒருநாள் நாரதமகாமுனிவர்சென்றார். அவரைத்தே வர்களெல்லாங்கண்டு சேவித்துப்போற்றி விண்ணப்பஞ் செய்தலாவது, சுவாமி- கொடியவனுகிய திரிபுரன் சகலவெற்றிகளையுமடைந்து, மூவுல கங்களையுந்தன்வசமாக்கிக்கொண்டான். அவனுல்யாங்களனைவரும்அலைப் புண்டு,மனநொந்து,நாளுக்குநாள்மெலிவினையடைந்தோம்.அவன்யாவரா ல்வரம்பெற்றனன்,இப்பால்அவன்யாவரால்அழிவான்.இனி அடியேங்கள் செய்யவேண்டியகடப்பாடியாது, அதனைத்தேவரீர்கிருபைபுரிந்துதிருவா ய்மலர்ந்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தார்கள். அதற்குச்சகலகாரியங் களையுந் தமது ஞானநோக்கினல்அறியத்தக்கநாரதமகாமுனிவர்சொல்லு வார்,ஓ தேவர்களே--அத்திரிபுரன்விநாயகக்கடவுளைப்பூசனைசெய்து, அவ ரால்அளவற்றவரங்களைப்பெற்றுசகலமகிமைகளையும்அடைந்திருக்கிறன் அவனும்,அவனரசுசெய்கின்றதிரிபுரங்களும், சிவபெருமானுடையபாண த்தாலழியவேண்டும். அப்படியவரால் அழிவதற்கும் விநாயகக் கடவுளு டைய அநுக்கிரகம்வேண்டும். ஆதலால்- நீங்கள்யாவரும் விநாயகக் கட வுளைப்பூசைசெய்யக் கடவீர்களென்றுசொல்ல, அதற்கு அத்தேவர்கள் மனமகிழ்ந்து, மீளவும்பணிந்தெழுந்து, சுவாமி- கணேசமூர்த்தியை யா ராதிக்கத்தக்க முறைமைஇவ்வாறென்று அடியேங்களறிந்திலேம், அதனை யுந் தேவரீரே யநுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். நாரத முனிவர் அதனைக்கேட்டுக்கிருபைசுரந்து, நீங்கள் கருதியவண்ணமேசெ ய்கின்றேம்,யாவரும்ஸ்நானஞ்செய்து, அநுட்டானமுதலியவைகளைமுடி த்துவரக்கடவீர்களென்று கட்டளையிட்டார். அவ்வாறே அவ்வவர்கள்மு டித்துக்கொண்டு வந்தபின்னர், விநாயகக்கடவுளுடைய ஏகாக்ஷர மந்திர த்தையுபதேசித்து, அதையநுட்டிக்கு முறையையுஞ்சொல்லி, அவர்க ளைவிட்டுப்பிரிந்தனர். இப்பால் தேவர்களனைவரும் ஒருதாளை நிலத்திலு

ன்றி, விநாயகமூர்த்தியினுடைய திருவுருவத்தை மனதிற்றியானித்து, ஏகாக்ஷரமந்திரத்தைச்செபித்து, அளவற்ற நாள் தவஞ்செய்துகொண் டிருக்கையில், ஒருநாள்தம்மையடைந்த அன்பினரை அவரினுஞ்சிறந்த அன்போடு ஆதரிக்கின்றவராயும், யான்செய்யுங் குற்றங்களையெல்லாங் குணமாகக்கொண்டு காப்பவராயும், வன்மையான நெஞ்சினர் முன்பு ஒருகாலத்தும்வாழாத உத்தமராகியுமிராநின்ற கணேசமூர்த்தியானவர், கிருபைசுரந்து, சொர்னகிரீடமும், அதில் மூன்றுமபிறையும், நவரத்ந குண்டலமும்- புயகவசமும்- அரைநாணும்- மருப்பிற்சுற்றியிருக்கின்றதுதிக்கரமும், பாசம்- அங்குசம்- மழு- தாமரைப்பூவென்னு மிவைகளைத் தரித்திருக்கின்ற நான்குதிருக்கரமும், அளவற்றபேரொளியோடு நிறைந்த திருமேனியுமானகோலத்துடன், அவர்களெதிரிற்பிரத்தியக்ஷமாயினர். உடனே அத்தேவர்களெல்லாம் எதிரிற்காக்ஷிதந்தருளியசுவாமிகளைக்கண்டு, சூரியனைஎதிர்வரககணட தாமரைமலர்போல முகமலர்ந்து, அன்பும்அச்சமுங்கொண்டு, சாஷ்டாங்கமாகச்சேவித்தெழுந்து, இருகரங்களையுஞ்சிரமேற்கூப்பி, விழிகளிலானந்த நீர்த்தாரைகளைச்சொரிந்து, தோத்திரஞ் செய்வதானர்கள்.

தத்துவாதீதபோற்றிதத்துவப்பொருளேபோற்றி ... ...*
தத்துவமுதலேபோற்றிதத்துவசொரூபபோற்றி ... ... *
தத்துவத்தியன்றதாத்துவிதங்களுமானாய்போற்றி ... ...*
தத்துவவறிவுக்கெட்டாத்தயங்குபேரறிவேபோற்றி ... *

உடலினுக்குயிரேபோலவுயிர்க்குயிரானாய்போற்றி ....*
யுடலுயிர்க்கறிவுநல்கியுடலினைக்கழிப்பாய்போற்றி ... *
யுடலுயிரெனப்பினீங்காவொற்றுமைப்பொருளேபோற்றி *
யுடனுறையுயிர்கருமெட்டாவொளிர்பெருஞ்சோதிபோற்றி.*

விரவுதத்துவத்தினீங்கிமேலெனநின்றவாவி ... ...*
வரமுறவுருவுகொண்டுவந்தருள்குரவபோற்றி .... *
பரவுமைந்தொழிலைநீக்கியுயிரினைப்பணிப்பாய்போற்றி ...*
துரியத்தினுயிராவாங்குஞ் சுடர்ப்பெருங்கடலேபோற்றி...*

பத்தர்கள்வழங்கநின்றபலவுங்கைக்கொள்வாய்போறி ... *
புத்திகள்போகத்தார்க்குப்புணர்த்தருள்போகிபோற்றி ....*
முத்தியையோகத்தார்க்குமுடித்தருள்யோகிபோற்றி ... *
யெத்தொழிலவர்க்குமந்தப்பயனருளிறைவபோற்றி... ...*

வேண்டியவடியார்க்கெல்லாம்விக்கினங்கெடுப்பாய்போற்றி *
வேண்டியவந்தனைசெயார்க்குவிக்கினங்கொடுப்பாய்போற்றி *
வேண்டுவார்வேண்டிற்றெல்லாம்விளைத்தருள்விமலபோற்றி *
மாண்டதுட்டர்களைக்கொல்லுமறமிகுமள்ளபோற்றி ... *

இவ்வாறுசெய்த தோத்திரங்கட்கெல்லாம், விநாயகமூர்த்தி செவிகொடுத்தருளி, அத்தேவர்களைக்கிருபையோடுபார்த்து, நீங்கள் கருதியவ

ரங்களைக்கேளுங்களென்று திருவாய்மலர்ந்தருளலும், தேவர்கள் மீட்டும் பணிந்தெழுந்து,ஓசகலபுவனுதாரஸ்வரூபியே, அடியேங்கள்படுகின்ற துயரங்களனைத்துந் தேவரீர்க்குத்தெரியாதனவல்லவே, திரிபுரனுக்குத்தேவரீர்கொடுத்தருளியவரத்தால்,திரிலோகங்களையுந்தன்வயப்படுத்தி,எங்களையெல்லாம்பலதுன்பங்களில்மூழ்கச்செய்தனன், ஆதலால் அத்திரிபுரனையழித்து,அடியேங்களையெல்லாங்காத்துரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குக்கணேசமூர்த்தி கிருபைசுரந்து, அமரர்களே- உங்கள்சிறுமைகளையுந், திரிபுரன்பெருமைகளையும் அழிப்பதற்கு, ஓருபாயஞ்செய்கின்றோம், அதுகாறும்நீங்களனைவரும்விரைந்துசென்று,சிவபெருமானையடையக்கடவீர்களென்று திருவாய்மலர்ந்து,அத்தேவர்கட்கெல்லாம்விடைகொடுத்துப், பின்னர் பிராமணவடிவங்கொண்டு, தமது தேவியோடும்பலமுனிபுங்கவர்கள்புடைசூழ்ந்துவரும்படியாகத்,திரிபுரன்வாழ்கின்றவங்காளமென்னு நகரத்தினையடைந்து, அவனரமனையிற்சென்றார். திரிபுரன் அவ்வேதியரைக்கண்டவுடனே, சிம்மாதனத்தைவிட்டிறங்கி, எதிர்சென்று, சாஷ்டாங்கமாகச்சேவித்து, மிக்க அன்புடனழைத்துக்கொண்டுவந்து, ஓர்சிறந்த ஆதனத்திலிருக்கச்செய்து,சுவாமி-தேவரீர்யார், அடிமையால் தேவரீர்க்காகவேண்டியகாரியம்யாது,அதனைத்திருவாய் மலர்ந்தருளல்வேண்டும், திரிலோகங்களும் எனதாணையிற் கட்டுண்டிருக்கின்றமையால், எனக்கெய்தாத காரியம்ஒன்றுமில்லை, தேவரீக்குயாதுவேண்டினும் இங்ஙிமிடத்திற்றருவேனென்றுசொன்னான். அதற்கு அந்தணராகிவந்த கணேசமூர்த்திசொல்லுவார், திரிபுரனே-நம்மையாவருங் கலாதரனென்றுசொல்லுவார்கள். யாமோவிண்டுலோகமுதலிய சகலலோகங்களின் அலங்காரங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு திரிகின்ற சித்தராகும். நீ தியாகம்- புகழ்- செல்வம்- அழகு- ஆயுதவல்லபம்- பராக்கிரமம்- தேசுமுதலிய சிறப்புக்களினுலும், விநாயகக்கடவுளைத் தினந்தோறும்ஆராதித்துவருகின்றபத்தியினுலும், சத்துருக்களாயினோர்கண்டு நடுங்கி வணக்கங்கொள்ளதக்க வீரத்தன்மையை யுடையவனுதலால், உன்னைக்காணவேண்டி இங்ஙனமெழுந்தருளினேம். நீமூவருலகங்களை யளிக்கினும் வேண்டேம். உனதரசாட்சியையளிக்கினும் வேண்டேம். நீ ஒருவர் கருதிவந்தபொருளைக் கரவாதளிக்குங் கடப்பாட்டினையுடையவனுயின், கைலாயத்திலொரு விநாயகமூர்த்தியிருக்கின்றது. அம்மூர்த்திக்குரிய திருநாமஞ் சிந்தாமணி விநாயகரென்பர்.அவ்விநாயகரை உமாபரமேஸ்வரிமணுளராகிய சிவபெருமானுனவர் நாடோறும் ஆகமவிதிப்படி யாராதித்துவருகின்றனர். அத்தன்மைத்தான மேலான மூர்த்தியை நமக்கெவ்விதத்தேனும் வருவித்துத்தரல்வேண்டுமென்றார். அதற்குத்திரிபுரன்,மனமகிழ்ந்து, ஓ வேதபாரகரே- தேவரீர்இச்சித்தமூர்த்தி கைலாசபதியிடத்திலிருப்பதாக மனந்தளரவேண்டாம். அக்கைலாசபதியே விண்டுமுதலியசகலதேவர்களுந் தம்மைப்புடைசூழ்ந்து வரும்படியாக, அம்மூர்த்தியை இங்ஙிமிடத்திற்கொண்டுவந்து தேவரீர்முன்பு வைக்கும்படி செய்கின்றேன். அடியேன் பராக்கிரமத்தைத்தேவரீர் பார்த்தருளுமென்றுசொல்லி, ஆடையாபரணமுதலான திரவியங்களைக்கொடுத்து, சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, சுவாமி- அசசிந்தாமணி விநாயகமூர்த்தியை யா

னழைப்பித்துத் தருகிறபரியந்தம், தேவரீ ரிங்ஙனமிருந்து வசித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். இவையனைத்தையுங்கணேசமூர்த்திகே ட்டருளிப்புன்னகைகொண்டு, திரிபுரனே- நீ அம்மூர்த்தியைவரவழைக்கி ன்றபரியந்தம், இந்நகரத்தின்சமீபத்தில்வாசஞ்செய்திருக்கின்றோம். நீ ய கற்குரிய முயற்சிகளைவிரைவில் நடத்தக்கடவையென்று திருவாய்மலர்ந் துஆசீர்வாதஞ்செய்து எழுந்தருளினா. இப்பால் திரிபுரனனவன் ஒற்றர் களைவரவழைத்து, நீங்கள் கைலாயத்திற்சென்று, பரமசிவனைப் பணிந் து, எங்களரசனாகியதிரிபுரன் தேவரீர் பூசிக்கின்றசிந்தாமணிவிநாயகரை வாங்கிவருவதாகக் கட்டளையிட்டான். ஆதலால் அதனையெம்மிடத்திற்ற ரல்வேண்டும். தராமற்றடைசெய்வீராயின், அவனே நேரில்வந்து பலாத் காரமாய் வாங்கிக்கொண்டு போவான். அக்காலத்தில் நீர்துயரப்பட வே ண்டுவதாகநேருமென்றுகண்டிப்பாகச்சொல்லி, அம்மூர்த்தியைவிரைவில் வாங்கிவரக்கடவீர்களென்றுகட்டளையிட்டான். அவ்வொற்றர்களும் அவ் வாறேசென்றார்கள்.

கணபதிதுணை.

பதினான்காவது.

விமலர் உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே, திரிபுரனை யழிக்குமாறு தேவர்கள் க ணேசமூர்த்தியைப் பூசித்துவரம்பெற்ற வரலாற்றினைச்சொன்னோம், இ ப்பால் அத்திரிபுரனழிவின் பொருட்டுச் சிவபெருமானுபாசித்த திறத்தி னைச்சொல்லுவோங்கேட்பீராக. முன்னர்விநாயகமூர்த்தியால் வரம்பெற் றகன்ற தேவர்களெல்லாம், பின்னர் சிவபெருமானுடைய திருவருளைப் பெறவேண்டினவர்களாய், யாம் அவரைச்சரணடைந்தவுடன் நம்மீதிரக்க முண்டாக்கத்தக்க எது எதனாலென்றாலோசித்துச், சூரியசந்திரர்களைத்தி கிரிகளாகவும், இருதுக்களைஉட்பரப்புகளாகவும், சமயங்களை உள்ளிட மாகவும், பிரகிருதியாகின்ற மாயையை முகப்பாகவும், விநாடிமுதலியகா லங்களைமச்சாகவும், பூவுலகத்தைத்தட்டாகவும், சொர்க்கலோகத்தைஆத னமாகவும், கலைகளைமுளைகளாகவும், மந்திரகிரியைமேல்வட்டமாகவும், இம யகிரியைக் கொடிஞ்சியாகவும், உதயகிரியைக்கூம்புகளாகவும், மற்றப்பர்வ தங்களையெல்லாந் தூண்களாகவும், தத்துவங்களைக்குடமாகவும், மேகங்க ளைச்சுற்றுமரங்களாகவும், கன்மேந்திரியஞானேந்திரியங்களை ஆபரணங்க ளாகவும், அண்டங்களைமாலைகளாகவும், புராணசாத்திரங்களை மணிவடங் களாகவும், நட்சத்திரங்களைவிதானங்களாகவும், சமுத்திரங்களையலங்காரவ ஸ்திரங்களாகவும், மருத்துவர்களைப்படிகளாகவும், கங்கைமுதலியதெய்வக

திகளைச்சாமரைகளாகவும், மற்றையநதிகளையெல்லாம்பதாகைகளாகவும்,
திதிவாரமுதலியநாள்களைநடக்கின்றவேகமாகவுஞ்சோடித்து, சந்திரசடா
தரமூர்த்தியாகியசிவபெருமானுள்ளங்களிக்கத்தக்க ஓரிரதத்தையுண்டாக்
கி,அந்தரதத்திற்குவேதங்களைக்குதிரைகளாக்கி, வசுக்களை யக்குதிரைகட்
கு வடிகயிறுகளாகத்தொடுத்து, கன்மகாண்டம் ஞானகாண்டமென்னும்
இரண்டுவேதமார்க்கங்களையும்நுகத்தடியாகப்பூட்டி,உபநிடதங்களையெல்
லாங் குதிரைகட்கு ஆபரணமாகத்தரித்து, பிரணவமென்னுஞ் சவுக்கை
க்கொண்டு பிரமனைச்சாரத்தியஞ் செய்வித்து, மகமேருவை வில்லாகவு
ம், வாசுகியைநாணாகவும், விண்டுவைப்பாணமாகவும்,யமனை அலகாகவும்,
வாயுவைஇறகாகவும், வடவாமுகாக்கினியைக்கூராகவும்புரிந்து, முன்னர்,
தாங்கள்செய்திருக்கின்ற ரதத்தோடுஇவ்வில்முதலிய வாயுதங்களைக்கொ
ண்டு, கைலாயபர்வதத்தைச்சேர்ந்து, ரதத்தைவெளியில்நிறுத்தித,தாங்க
ளனைவருஞ் சிவபிரான் சன்னிதானத்திற்சென்று, அவர்திருவடிகளிற் ப
லபுட்பங்களாலருச்சித்து, சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, பலமுறை
துதித்து, இதனைவிண்ணப்பஞ் செய்வதாயினார்கள். ஆணவமலத்திற்கட்
டுண்டிருந்த சகல ஆன்மகோடிகட்குந் தநுகரணபுவன போகங்களைத்தந்
து முடிவில் முத்தியிற்சேர்க்கவல்ல தயாபரமூர்த்தியே, திரிபுர னென்ப
வனால் யாங்களெல்லோருமிக்க துன்பத்தினை யநுபவிக்கின்றோம், சுவா
மிகளவனையழிக்கவேண்டிய நிமித்தமெழுந்தருளுவதற்கு ஓரிரதஞ்செய்
துகொண்டுவந்தோம். அதன்மீதுசுவாமிகள் கிருபாநோக்கஞ் சாதித்தரு
ளவேண்டுமென்று பிரார்த்தித்தலும்,அதற்குச்சிவபெருமான் செவிகொ
டுத்துப், பார்வதி தேவியாரோடு மெழுந்தருளிக், கோபுர வாயிலுக்கு
வெளியில்வந்து, அந்தரதத்தைத்தமது கண்களிக்கநோக்கி, அதிகசந்தோ
ஷங்கொண்டு, அத்தேவர்களைப்பார்த்து, இனி யுங்கள் துயரத்தினைநீக்கி
ஆனந்தமுற்றிருங்கள், உங்கட்குத் தீமைவிளைவிக்கின்ற திரிபுரனை அ
க்கணப்போதிலெரித்து, யாவர்க்குஞ்சுகத்தினைத் தருவோமென்றுதிருவா
ய்மலர்ந்து, மீளவுங்கோயிலுட் புகுந்தருளினர். அச்சமயத்தில்- முன்ன
ர் திரிபுரனேவிய தூதர்கள்வந்து தீர்க்கதண்டன்செய்து, அவன்சொ
ல்ல வாக்கியாபித்தவண்ணஞ் சொன்னார்கள். அவையனைத்தையுஞ் சிவ
பெருமான்கேட்டுப், புன்னகைகொண்டு,உங்களரசனை யுத்தத்திற்குவரச்
சொல்லுங்களென்று விடைகொடுத்தனுப்பிப், பின்னர் தனித்திருந்து
திரிபுரனைநாசஞ்செய்யு முபாயத்தினைக்கருதி, விழிகளை மூடிக்கொண்டு
விநாயகமூர்த்தியை மனதிற்றியானித்து, ஏகாக்ஷர மந்திரத்தைச்செபித்
துத்தவத்திலிருந்து, இதனைத்துதிப்பதாயினர். சர்வேஸ்வரராகியும்,சகல
முமறியவல்லதத்துவராகியும், மகாதவத்தினையுடையதேவர்கட் கெல்லா
ம் அநுக்கிரகஞ்செய்யவல்ல இறைவராகியும், எக்காலத்தும் அநாதியா
கியுமிருக்கின்ற கணேசமூர்த்தியே, உம்மைநம்பியிருக்கின்றவெனக்கு உ
மது சுயரூபத்தைக்காட்டியருளல்வேண்டும்.விண்டுமுதலிய தேவர்களெ
ல்லாந் திரிபுரனுக்குப் பயந்து, இதுவரையிற் பலதுன்பங்களோடு ம
மேருச்சாரலிலுள்ள பலகுகைகளி லொளித்துக்கொண்டிருந்தார்கள். அ
டைந்தோரை யாதரிக்கவல்ல ஐங்கரக்கடவுளே, உமதுதிருவருளால் ச
லத்தையு மளிக்கத்தக்கவராகிய அத்தேவர்களெல்லாந் தங்கடங்கள் ப

விக்ளையடையுமாறு, யான்திரிபுரங்களை யழிக்கத்தக்க உபாயத்தினை யருளவேண்டும். பஞ்சபூதங்களு முமதாணையால் அசைகின்றன, சகலலோகங்களும் உம்மிடத்தில் அடங்கியிருக்கின்றன, மேலும்இவ்வுலகத்தார் தங்கள்தங்கள்மனமாதிகளாற் செய்கின்றயெல்லாக்காரியங்கட்கும் உட்சாக்ஷியாயிருந்து பிரகாசிக்கின்ற கர்த்தர் நீரேயாதலால், மாயையென்னும் படலத்தால் மறைப்புண்டு, சமுசாரமென்னுங் காட்டிற்சிக்கியிருக்கின்ற வான்மாக்களெல்லாஞ், சரீரங்கள்தோறு மிகுந்த தவங்கள்செய்து, பரிசுத்தஞானத்தா லும்மைத்தியானித்து ஆனந்தமடைகின்றார்கள். மகாதவங்களைச்செய்து யோகத்திலிருப்பவர்களுடைய வுள்ளத்திற் பிரகாசிக்கின்றசோதியும், அகப்பற்றுபுறப்பற்றென்னு மிரண்டினையும்விலக்கி, உம்மைச்சதாகாலமுந் தியானித்துத் தரிசனஞ்செய்யவல்ல ஞானிகட்கு எங்கும் பரிபூரணமாகியிருக்கின்றபேரொளியும்நீரேயன்றி, மற்றையாவரிருக்கின்றார்களென்றுதுதித்துப்பிரார்த்தித்தனர். உடனே- விநாயகமூர்த்திக்குக்கிருபைசுரந்து, அச்சிவபிரான்முகத்தினின்று, ஐந்துமுகங்களும் பத்துகரங்களு முடையவராகி, முத்துமாலைகளும் ரத்னாபரணங்களுந் தரித்ததிருமேனியோடுதோன்றி, எதிராகநின்றனர். உடனே- சிவபிரான் அவரைப்பார்த்து மனங்களித்து, ஐயனே - நீரெங்ஙனமிருந்தெழுந்தருளினீர், உமதுதிருநாமம்யாது, அதனைத்திருவாய் மலரவேண்டுமென்று கேட்டருளினர். அதற்கவ்விநாயகர் கிருபைசுரந்து, ஓ நீலகண்ட மூர்த்தியே- இரவும்பகலு முக்குணங்களோடும் விளையாடுகின்ற என்னை, நீரன்புடன்கருதி அளவற்றநாள்தவஞ்செய்தீராதலால், மூவுலகத்துள்ள வுயிர்களையெல்லாங் காத்தற்பொருட்டு உமதுமுகாரவிந்தத்தினின்றுந் தோன்றிவந்தனம். நமது நாமங்கணேசராகும். உமக்கு வேண்டிய வரங்களைக்கேட்பீ ராயின், அவைகளை இங்கிமிடத்திற்றருகின்றேமென்று திருவாய்மலர்ந்தருளினர். பின்னர் சிவபெருமான் மனக்களிப்படைந்து, ஓகணேசமூர்த்தியே, தேவர்களெல்லாந் திரிபுரனுடைய ஆக்கினைகட்கஞ்சி வருந்துகின்றார்களாதலால், அவர்கள்வருத்தங்களை நீக்குமாறு யான் அத்திரிபுரனைச்சங்கரிக்கவேண்டும், அதற்கேற்ற சத்தியெனக்குண்டாகும்படி, நான்குவேதங்கட்கு முதன்மையாயிருக்கின்ற உமதுமந்திரத்தைப் பீஜாக்ஷரத்துடனே உபதேசித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அதற்குக்கணேசமூர்த்தியானவர் கிருபைசுரந்து, தமதுமந்திரத்தையும் அதன்பீசாக்ஷரத்தையும் விவரமாக உபதேசித்து, ஓ காலகாலரே நீர் அத்திரிபுரனையழிக்கும்படியாகக் கணைவிடுகின்றபோது, யானுரைத்தமந்திரத்தை நூறுரு செபிக்கவேண்டும். மீளவும் அக்கணையை ஆக்கிரஷிக்கும்போது, மூனறுருசெபிக்கவேண்டுமென் றுதிருவாய்மலர்ந்தனர். இவையனைத்தையுஞ்சிவபெருமான்செவிகுளிரக்கேட்டு, ஆனந்தமாகிப்பலவாறு துதித்து, ஓ கிருபாமூர்த்தியே - நீர் இம்மகாமந்திரத்தையுடையவ ராதலால், சகலதேவகணங்கட்கும் முதல்வராயினீர். உமக்குக்கணேசமூர்த்தியென்னுந் திருநாமமுண்டாயது. யாவரும் வேதாகம புராணசாத்ரங்களையோதுதற்காரம்பிக்கின்றபோது, முதலி லும்மைத்துதிசெய்யக்கடவர்கள். வைதிகநெறி சைவநெறி யென்னும் இவைகளிலுள்ளோர்களும், உம்மையேமுதலில் அநுட்டிக்கக்கடவர்கள். விண்டுமுதல் மனிதரீறுகவுள்ள சகல

சிவர்களும், உம்மையேமுதலில் அநுட்டித்து, வசியமுதலிய சகலகாரியங்களையும் அடையக்கடவர்கள். உம்மைக்கருதாது ஆரம்பிக்கின்றகாரியமற்பமாயினும், அஃதுசற்றுங் கைகூடாமற்போகக்கடவது. சைவர்களாயினும் வைணவர்களாயினும் உம்மைப்பணியார்களாயின்,அவர்கள்மகாபாவிகளாகக்கடவதென்றுசொல்லி, அங்குவந்திருக்கின்றதேவர்களையழைப்பித்து, ஓவிண்ணுலகவாசிகளே- பாவனைகட்கெட்டாதபரிபூரணராகிய கணேசமூர்த்தியானவர், நமதுபாவனைக்கருள்சுரந்து இதோ எழுந்தருளியிருக்கின்றனர். அவரைநீங்களனைவரும்பூசித்துப்,பரிமளமிகுந்தபுட்பமாலைகளைச்சாத்தி, சகஸ்திரநாமங்களாலருச்சிப்பீர்களாயின்,உங்கள்துயரங்களையெல்லாம்ஒருநொடிப்போதிற்பொடிபடுத்திரக்ஷிப்பாரென்றுதிருவாய்மலர்ந்தனர். அதைவிண்டுமுதலிய சகலதேவர்களுஞ் செவிக்கமுதாகக்கேட்டு, அவ்வாறே கணேசமூர்த்தியை யாகமவிதிப்படிபூசித்து, சகஸ்திரநாமங்களாலருச்சித்தார்கள். அவர்கட்குவிநாயகக்கடவுளநுக்கிரகஞ்செய்து தமதுதிருவுருவத்தைக் கரந்தருளினர். இப்பால்சிவபெருமானிடத்தில்விடைபெற்றகன்றதூதர்கள், திரிபுரனிடத்திற்சென்று, தீர்க்கதெண்டன்செய்து, ஓ ராசராசேஸ்வரா- தேவரீரிட்டகட்டளையினபடி யாங்கள் கைலாசபதியினிடத்திற்சென்று சிந்தாமணிவிநாயகரைக்கேட்டோம், அதற்கவர்சிம்புள்போலக்கோபித்துத்,தேவரீரையுத்தத்திற்குவரச்சொல்லிவிடைகொடுத்தனரென்றார்கள். அதனைத்திரிபுரன்கேட்டு நகைசெய்து, தன்றவப்பயனுக்கு முடிவெய்துங்கால நேரிட்டவனாகிச், சிவபிரானோடியுத்தஞ்செய்யக்கருதி, சண்டன் பிரசண்டன் முதலிய அவுண வீரர்களையுந்திரிபுராதிகளையும் வருவதாக உத்தரவுசெய்தான். அவ்வாறே அவர்கள் வருதலும், நீங்களனைவரும் விரைவில்யுத்தத்திற்கு ஆயத்தமாயிருங்களென்றுசொல்லி, அவ்வவர்கட்குச்செய்யத்தக்க சிறப்புகளையுநடாத்தினன். இவ்வாறுதிரிபுரன் படையெடுப்பதைச் சிவபெருமான் கேள்வியுற்று, நந்திதேவரையழைத்து, நமதுசேனைகளையெல்லாம் விரைவில்வரவழைக்கக்கடவையென்று கட்டளையிட்டனர். அவ்வாறே நந்திதேவரெங்கு முரசறைவிக்க, அதனைச் சகலசேனைகளுங்கேட்டு, சர்வாயுதபாணிகளாய்வந்து, செயவுச்சாகத்துடன் கோபுரவாயிலுக்கெதிரே நின்றார்கள். திரிபுரனுந்தன்னவுணசேனைகளோடு வந்துசேர்ந்தனன். பின்னர் நந்திதேவர்சிவபிரானிடத்திற்சென்றுவணங்கி, சுவாமி- சகலசேனைகளுந் தங்கடங்கள்படைகளோடு கோபுரவாயிலுக்கெதிரில்வந்திருக்கின்றார்கள் பிரமதேவனுந் தேரைநடத்திக்கொண்டுவந்திருக்கின்றானென்று விண்ணப்பஞ்செய்தலும்,சிவபிரான்தேவர்கள்துயரத்தைநீக்கி யாட்கொள்ளுங்கருத்தினராய்த்,தமதுதேவியாரோடு ஞெரேலென்றெழுந்து, திருவடித்தாமரைகளிற்பாதுகைகளைச்சூட்டிச், சகலகணங்களுஞ் சயசயவென்றுபோற்றிவரக்கோபுரவாயிலுக்கு வெளியில்வந்து, தேவர்கள் அலங்கரித்திருக்கின்ற ரதத்திலாரோகணித்தருளினர். உடனே- வெற்றிச்சங்கமுழங்கின தேவர்களெல்லாந் தேருருவாகிவந்தமாட்சிமைக்கொப்பச், சோடசகலைகளோடுநிறைந்தசந்திரனைமேலே முடித்ததுபோலச்,சிலகணங்கள்கிரணக்கற்றைகளைவீசுகின்றவெள்ளைக்குடைபிடித்தார்கள். இதுகாறுங்கலைமான் பின்னர் கிடந்தலைந்திருந்தநாம், இப்போது சிவபெருமானெதிரிலிருக்கப்

பெற்றேமேயென்கின்ற களிப்பினேடு மெழுந்தாடுவதைப்போலச், சிலகணங்கள் வெண்சாமரைகளைவீசினர்கள். நமதுகர்த்தர் சத்தசாகரங்கட்கும் ஒப்புசொல்லக்கூடாத பெருங்கருணையையுடையவராதலால், ஒருவேளை திரிபுரன்மீதிரங்கிக்கொல்லாமல் விட்டுவிடுவரென்றுகருதிக், கோபத்தீயைச்சிறுகச்சிறுக மூட்டுவிப்பவர்போலச், சிலகணங்கள் சாந்தாற்றிகளை யெடுத்தசைத்தார்கள். சிவபெருமானுடையதேரில் அலங்காரவஸ்திரங்களாகக் கட்டியிருக்கின்ற சமுத்திரங்களினின்றும் அலைகளெழுந்து வீசுகின்றதைப்போலச், சிலகணங்கள் வெள்ளைப்பாவாடைகளை வீசினர்கள். திரிபுரனைநாசஞ்செய்யுமாறு நமதுசிவபிரானெழுந்தருளியதால் இனி நமதுபாதலலோகத்தைத் தடையின்றி யடையலாமென்னுங்களிப்பினேடு நாகராசர்களெழுந்தாடுவதைப்போலச், சிலகணங்கள்ஆலவட்டங்களையசைத்தார்கள். சிவபிரானுடைய ஓரேகணையால் திரிபுரங்களுநமழியப்போகின்றமையால், நாமிப்போதே அவைகளினெழிலைக் காணுவோமென்று மேலெழுந்ததுபோலச, சிலகணங்கள் இடபமுத்திரையிட்ட பலவெற்றிக்கொடிகளை ஆகாயமளாவ வெடுத்தார்கள். சிலகணங்கள் படகம்- ஆகுளி- சல்லரி- பணை- கிணை- குடமுழா- குடப்பறை- கரடிகை- முரசம்- துடி- தடாரி- தண்ணுமை- துந்துமி- தக்கை- மோநதை- தொண்டகம்- இடக்கை- தகுணிதம்- பம்பை- தூரியம்- பாண்டில்- படலிகை- பணிலம்- யாழ்- வங்கியம்- காகளம்-பீலி-முதலிய அளவற்ற வாத்தியங்களைமுழக்கினர்கள், சிலகணங்கள் கழுக்கடை- முசுண்டி- சக்கரம்- பிண்டிபாலம்- கம்பம்- கொடுவாள்- முசலம்- கப்பணம்- வேல் மழு- வச்சிரம்- கேடகம்- வாள்- வில்- அம்பு- கலப்பை- ஈர்வாள்- கணை- குளிர்- சலாகை- பாசம்- அங்குசம்- சூலம்- குந்தம்- சுரிகை- புள்ளம்- ஈட்டி- தண்டம்- முதலாகிய அளவற்ற ஆயுதங்களைத்தாங்கி ஆரவாரித்தார்கள். எழுபத்தெண்ணுயிரங்கோடிபூதவெள்ளங்கள் புடைசூழம்படி இலக்கவீரர் விநாயகக்கடவுளை மனதிற்றியானித்துத்தமதுரதத்தின்மீதேறினர். எண்ணுயிரங்கோடி பூதவெள்ளங்கள்புடைசூழம்படி, வீரபத்திரக்கடவுளானவர் மற்றொரு ரதத்திலேறினர். நாலாயிரங்கோடி தேவசாரதவெள்ளங்கள்புடைசூழும்படி, பன்னிருபுயாசலங்களையுடைய சண்முகக்கடவுளானவர் மயில்வாகனத்திலேறினர். முப்பத்து முக்கோடி தேவர்களோடு அளவற்றவிஞ்சையர் முதலாயினேர்கள் புடைசூழும்படி தேவேந்திரன் வெள்ளையானையின் மீதேறினன். கண்டன்- நந்தி- மாகாளன்- குண்டோதரன்- கோகர்னன்- கெஜகர்னன்- முதலிய அளவற்ற சேனைத்தலைவர்கள்,தங்கள்தங்களுடைய பூதவெள்ளங்களோடுஞ்சென்று சிவபெருமானுடையதேரைப்புடைசூழ்ந்தார்கள். உடனே- தூளிபடலங்களாகாயவெளியைமறைக்கும்படியெழுந்தன. அவையெப்படிக்கிருந்ததென்றல், சிவபெருமானுடைய தேருருளைகளும் புநிதசீலர்களாகியபூதகணங்களுடைய பாதங்களும் பூமியின்மீது சார்ந்தபுண்ணியபலத்தால், அப்பூமியானது அணுவடிவங்களாகச்சென்று சொர்க்கமேறுவதுபோலவும், சகலதேவர்களும் இரதமாகத்திரண்டு நம்மிடத்துவந்தனராதலால், நாமும் அவரிடத்திற் செல்லலாமெனக்கருதி ஆவலோடெழுவதுபோலவுமிருந்தன. மேலும் இத்தன்மைத்தாகிய அளவற்றசேனைகளெல்லாஞ்

சத்தசாகரங்களையொத்தும், இச்சேனைகள்செய்கின்ற வாச்சியமுழக்க மெல்லாம், அக்கடல்களிலுண்டாகின்ற ஓசையையொத்தும், இச்சேனைகளில்விளங்குகின்றகொடைகளும் பீலிக்குஞ்சங்களும், அக்கடல்களிலுண்டாகின்ற நுரையும்பாசடையுமொத்தும், இச்சேனைகளேந்தியிருக்கின்றவாளாயுதங்களும் வேலாயுதங்களும், அக்கடல்களில்மேய்கின்ற மீன்களையொத்தும், இச்சேனைகள்பிடித்திருக்கின்ற கேடகங்களெல்லாம், அக்கடல்களிலுலாவுகின்ற ஆமைகளையொத்தும், இச்சேனைகளினடுவே விளங்குகின்ற பதாகைகளெல்லாம், அக்கடல்களிலெழுகின்ற அலைகளையொத்தும், இச்சேனைகளாலெழுகின்ற தூளிபடலங்களெல்லாம், அக்கடல்களையுண்ணவந்தமேகங்களையொத்தும், தேவர்கள்சொரிகின்றபுட்பவருஷங்களெல்லாம்,அம்மேகங்கள்சொரிகின்றசலவருஷங்களையொத்துமிருந்தன. அன்றியும்-சிவபெருமானாரோகணித்திருக்கின்றரதமானது, கடலிற்செல்கின்றமரக்கலத்தைப்போலவும், அந்தரதத்தின்கொடிஞ்சிகளிலுயர்த்தியிருக்கின்றகொடிகளிலுள்ளஇடபமுத்திரைகளெல்லாம், அம்மரக்கலத்தையோட்டுகின்ற மாலுமிகளைப்போலவும், பக்கங்களிற்புடைசூழ்ந்திருக்கின்ற சிறுரதங்களெல்லாம், அம்மரக்கலத்தை நெருங்கியிருக்கின்ற தெப்பங்களைப்போலவுமிருந்தன. இவ்வாறு சகலசேனைகளும்புடைசூழ்ந்து நெருங்கியபின்னர்,பிரமதேவனானவன்அத்தேரிற்கட்டியிருக்கின்ற வேதப்பரிகளைத்தூண்டி, இமயமலையானது மற்றமலைகளெல்லாந் தன்னைப்புடைசூழவெழுந்து செல்வதுபோல, மற்றவீரர்களுடையபரிகளும் ரதங்களும்பின்னிடத்தக்கதாக மனோவேகத்தினும் அதிகவேகமாகச்செலுத்தித், திரிபுரனுடையசேனைகட்கெதிரேகொண்டுவந்துநிறுத்தினன். திரிபுரன் அசசேனைகளி னாடம்பரங்களைக்கண்டு, சற்றுநடுங்காதவனாகி, மேகத்தைப்போலக்கர்ச்சித்துத், தனது அவுணசேனைகளையெல்லாமழைத்துக்கொண்டு, குமாரர்கட்குந்திரிபுராதிகட்குந் தங்கள்தங்கள்படைகளோடு தனித்தனியே யுத்தஞ்செய்யக்கட்டளையிட்டுத், தானுந்தேரிலேறி, அதனைவாயுவேகத்தினும் விரைவாகநடத்திச், சிவபிரானுடையரதத்திற்கெதிராகக்கொண்டுவந்துநிறுத்தினன். அதைக்கர்த்தன்பார்த்து, தம்மிடத்திலிருக்கின்ற சுத்தவீரர்களுடைய கர்வத்தை யழிக்குநிமித்தமோ, மற்றையாதுகாரணமோ, ஓர் நிமைப்போதிற் றிரிபுரன்முதலிய சகலரையுநீறுக்கத்தக்கதெய்வப்படைகள் தம்மிடத்திலிருந்தும், அவனோடுயுத்தஞ்செய்யுங்கருத்தினராய்க், கணேசமூர்த்தியைமனதிற்றியானித்து, மேருவில்லைத் தமது திருக்கரத்திற்பிடித்தருளினார். அவுணர்பெருமானாகியதிரிபுரனும் அக்கணேசமூர்த்தியைத்தியானித்துத்தனதுவில்லைக்கையிலேந்தினன். பின்னரிருவருந் தும்பைமாலைசூடிக்கொண்டு, விற்களில்நாணேற்றி, உடல்குழையவளைத்து, விரலாற்றெறித்துத்தொனிசெய்தார்கள். அப்படிதொனிசெய்தமாத்திரத்தில், அஷ்டகுலாசலங்களுநடுங்கின. சத்தசாகரங்களுந்தளும்பின. பூமிகளெல்லாம் பிளந்தன. அண்டங்களெல்லாங் கிழிந்தன. விருக்ஷங்களெல்லாம் விழுந்தன. பறவைகளெல்லா மடிந்தன. கர்ப்பங்களெல்லாங்கலங்கின. உடுக்களெல்லா முதிர்ந்தன. அஷ்டதிசைகளுமதிர்ந்தன. தெய்வலோகமனைத்துந்திடுக்குற்றன. நாகலோகமனைத்துநடுக்குற்றன. இவ்வாறு மாறிமாறி நாணைத்தெறித்துத்தொனிசெய்து,இருவ

கைகலுமோயாமல்அளவற்றஅம்புமாரிகளை ஒருவர்மீதொருவர்சொரிந்தார்கள். சுப்பிரமணியரோடுபிரசண்டனெதிர்த்தான்.நந்திதேவரோடுசண்டனெதிர்த்தான். இந்திரனோடு திரிபுரன்மந்திரியெதிர்த்தான். சயந்தனோடு மதனென்பவனெதிர்த்தான். புட்பதந்தனோடு காலகூடனென்பவன், தனதுபொன்கோட்டையைச் செலுத்திக்கொண்டு வந்தெதிர்த்தான். வீரபத்திரருடனே வச்சிரதமிஷ்டிரனென்பவன்,தனது இருப்புக்கோட்டையைச்செலுத்திக்கொண்டு வந்தெதிர்த்தான். இலக்கருடனே வீமகாயனென்பவன், தனதுவெள்ளிக்கோட்டையைச் செலுத்திக்கொண்டுவந்து எதிர்த்தான். புருசுண்டியுடனே மற்றவீரர்களெல்லா மெதிர்த்தார்கள். கண்டன் முதலிய படைத்தலைவர்களோடு திரிபுரன்படைத்தலைவர்க ளெதிர்த்தார்கள். இவ்வாறுஒருவரோடொருவர் கைகலந்துபோர்செய்யுஞ் சமயத்தில், பூதவீரர்களெல்லாம் அவுணவீரர்களோடெதிர்த்து வாள்களைவீசுவார்களும், கணைகளைவிடுவார்களும், வேலாயுதங்களை யெறிவார்களும், யானைக்கூட்டங்களையெல்லாம் அவைகளைநடத்துகின்ற பாகரோடுவிழும்படியாக வெதிர்ப்பார்களும், இரதங்களையெல்லாமுறிப்பார்களும், குதிரைகளையெல்லா மடிப்பார்களும், பதாதிகளையெல்லாங் கண்டதுண்டமாகச் சிதைப்பார்களும் ஆகியிருந்தார்கள். அவுணவீரர்களும் அப்பூதவீரர்கள்செய்யும் போரினைபார்த்து, விழிகளில் தீப்பொறிகள்சிதறத்தக்கதாகக்கோபித்து, அளவற்ற தேர்ப்பாகர்களையுஞ் சின்னபின்னமாக்கிச், செயவுச்சாகத்துடன் ஆர்ப்பரித்துக்கொடிதூக்குவார்களும், பலபாணவருஷங்களைப்பிரயோகித்து அவ்வவர்கள் விற்களைஒடித்துத் தள்ளுவார்களும், தங்களைத்தாங்கள்புகழ்ந்து வெஞ்சினத்தோடு பேசுவார்களுமாகியிருந்தார்கள். இவ்வண்ணமாக இருதிறப்படைகளும் ஒருவரோ டொருவர்கலந்து போர்புரியுங்காலையில், சிலர்தாளறுந்தவரானார்கள். சிலர் இடையொடித்தவரானார்கள். சிலர்குடல்சரிந்தவரானார்கள். சிலர்தலைகிழிந்தவரானார்கள். சிலர்வலியற்றவரானார்கள். சிலர்நகையற்றவரானார்கள். சிலர்கைகுறைந்தவரானார்கள். சிலர்தோள்முறிந்தவரானார்கள். சிலர்முடிவிழுந்தவரானார்கள். சிலர் மொழியிறந்தவரானார்கள். சிலருக்கு நிணங்கள் சொரிந்தன. சிலருக்குத்தசைகள்சரிந்தன. சிலருக்குமூளைகளுதிர்ந்தன. சிலருக்குக்கண்டமொடிந்தன. சிலருக்குச்செவிகளறுந்தன. சிலருக்குவிழிகள்பிதுங்கின. சிலருக்கு ஈரலொதுங்கின. சிலருக்கு வீரமொழிந்தன. அளவற்றகவந்தங்களாடல்செய்தன. அளவற்றபேய்கள் பாடல்செய்தன. அளவற்றபருந்துகள்கூட்டங்கூடின. அளவற்ற நாய்நரிகள்ஓட்டஞ்செய்தன. இவ்வாறு எங்கும் உதிரவெள்ளத்தோடு நிறைந்திருக்கின்ற யுத்தகளமானது எவ்வாறிருந்ததெனில், பூமிதேவியானவள் அளவற்ற பிணங்களையேந்திக்கொண்டு நிருத்தமாடுவதைப்போலிருந்தது. இவ்வண்ணம்பூதப்படைகள் அவுணப்படைகளையெல்லாம் அதாஅதப்படுத்தியிருக்கையில், தாருகன்- சிங்கமுகன்- சூரபன்மனென்னு மூவருமே ஒருருவாகத்தடித்துவந்தவனைப்போன்ற மகாபராக்கிரமசாலியாகிய பிரசண்டனுனவன், தன்படைவீரர்களையெல்லாங் கூட்டிக்கொண்டு, சுப்பிரமணியக்கடவுளை யெதிர்க்க, உடனே- சுப்பிரமணியக் கடவுளானவர், தமது மயில்வாகனத்தைவட்டமாயோட்டி, வில்லில்நாணேற்றிவளைத்துக், கடை-

யுகத்திற்பெய்கின்ற மேகம்போல அளவற்ற பாணவருஷங்களைப்பொழி ந்து, அரைக்கணப்போதில் அப்பாதகனுடைய சேனைகளையெல்லா மடி த்து, அவன்விடுகின்ற கணைகளையெல்லாம் நிலத்துக்கிரையாக்கி, அவன் வில்முதலிய படைகளையுந்தேரையுந் தூள்பொடியாகச்செய்து, தேவர் களெல்லாநடுங்கச்செய்கின்ற அவன்மாயைகளனைத்தையு நாசஞ்செய்து தமதுஐந்துபாணங்களால் அவனுயிரைநாசமாக்கினர். பிரளயகாலத்திலு ண்டாகின்ற பிரசண்டமாருதத்திற்கொப்பான சண்டனென்பவனை நந்தி தேவரெதிர்த்து, அவன் படைகளையெல்லாங் கண்டதுண்டமாக்கி, ஓர் நொடிபபோதில் அவன்செய்கின்ற போரையெல்லாங் குன்றச்செய்து தமது மூன்றுபாணங்களைவிட்டு அவனுயிரைக்கொன்றூர். பறவையைப் போலத் தனது பொன்கோட்டையோடுமெழுந்து ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோர்செய்கின்றகாலகூடனைப் புட்பதந்தரெதிர்த்து, அவன் விடு கின்ற பாணங்களையெல்லாம் விலக்கித், தமது தேரையும் அந்தர மார்க் கமாகச்செலுத்தி, ஐந்துபாணத்தால அவனுயிரைப் பொடிபடுத்தினர். வெள்ளிக்கோட்டையோடு விரைந்துவந்து போர்செய்கின்ற வீமகாயனை இலகுகரென்பவரெதிர்த்து, அவனோடும் அளவற்ற யுத்தங்களைச்செய்து, அவன்படைகளையெல்லாம் அதப்படுத்திப், பின்னர் அவனுடலிலிருந்து உதிரவெள்ளம்பெருகும்படியாகத் தமது நாலுபாணங்களைவிட்டு நாசமா க்கினர். இரும்புக்கோட்டையைச்செலுத்திப் போர்செய்யவந்த வச்சிர தமிட்டிரனை வீரபத்திரக் கடவுளெதிர்த்து, இனி நமது யுத்தமில்லையெ ன்று அவுண சேனைகளெல்லாங் கலங்கும்படியாகத் தமதுதேரை அவ னுக்கு நேராகச்செலுத்தி, நாலுபாணங்களைவிடுத்து அவனுயிரைப்பான ஞ்செய்தனர். இந்திரனனவன் திரிபுரன்மந்திரியோடெதிர்த்து, அளவற்ற போர்களைச்செய்து, அவன்படைகளையெல்லாங்கொன்று, தனதுவச்சிரா யுதத்தால் அவன்சிரத்தையற்றுத்தெறிந்து வெற்றிமாலைசூடிக்கொண்டனன். சயந்தனனவன் மதனென்பவனையெதிர்த்து, அவன்விடுகின்ற படைகளை யெல்லாமுறித்துச்,சேனைகளனைத்தையுஞ்சின்னபின்னப்படுத்தித்,தனது வாளினலவன் சிரமுருளும்படிவெட்டினன்.புருசுண்டியென்பவர்மற்றை யவீரர்களையும்,கண்டன்முதலியசேனைத்தலைவர்கள் திரிபுரன்சேனைத்தலை வர்களையுமெதிர்த்துப்போர்செய்து, அவர்சரீரங்களையெல்லாங்கழுகுபரு நதுமுதலானவைகட்கு விருந்துட்டினர்கள. இப்பால் மகமேருவைவில் லாகவுடையஎமதுகர்த்தரானவர், திரிபுரனேந்தியிருக்கின்றவில்லைத்துண் டதுண்டமாக்கி, அவனைப்புடைசூழ்ந்திருந்த அவுணவீரர்களையெல்லாம் அரைக்கணத்தில்நாசஞ்செய்தனர்.உடனே- திரிபுரன்மற்றொருவில்லையெ டுத்துவளைத்து,அண்டகடாகங்களுமதிரும்படியாகச்சத்தித்துத்,திருமாலை இடபமாகவூர்ந்தருளிய சிவபெருமானுடையரதத்தின்மீது, ஒரு நொடிப் போதில்நூறு ஆயிரம் பதினயிரம் கோடியென்னுங்கணக்கினுமளவுபடா த அளவற்றபாணங்களைப்பொழிந்தனன். அவைகளையெல்லாமெமதுகட வுளானவர் இமைப்போதில் விலக்கித், தமது மேருவில்லிலளவற்றகணை களைத்தொடுத்து, அப்பாதகனுடைய கிரீடம்- கவசம்- வில்- தூணி- தே ர்- உதவித்தேர்- முதலான எல்லாச்செருக்கையுந் தூள்பொடியாக்கித்து ம்சப்படுத்தினர். பின்னர் திரிபுரனனவன் வேனிற்காலத்து ஒதிய மரம்

போல, ஆயுதமுதலான சகலவாதரவுகளுமற்று, மிக்கநாணத்தோடு நின்றுன். இப்படிநிற்கின்றவனை என்னையடிமையாகவுடைய சிவபெருமான் பார்த்து, திரிபுரனே- இன்னும்எம்மோடுசெய்பத்தக்க யுத்தங்கள்யாதேனுமிருக்குமாயின், அதனை அப்பாற்சென்றுயோசித்து விரைவில்வந்து செய்யக்கடவையென்றுதிருவாய்மலர்ந்தனர். அச்சமயத்தில்திரிபுரனைவன் தனது மைந்தர்முதலிய அளவற்றசேனைகள்மடிந்தார்களென்று கேள்விப்பட்டு, ஊழிக்காலத்திலுண்டாகின்ற வடவானலத்தைப்போலக் கோதித்துப், பெருமூச்செறிந்து,தனது கிலேசங்களையெல்லாம்போக்கி, வீராவேசங்கொண்டு, முப்புரங்களையும்வருவதாகநினைத்தனன். அப்படி நினைக்குமுன்னமே அவைகள்விரைந்துவர, அம்மூன்றினு மூன்றுபேர்களாக வடிவெடுத்துப்புகுந்து, சிவபெருமானுக் கெதிராகச் செலுத்திக்கொண்டுபோவான். மீட்டும் அவைகளோடெழுந்து ஆகாயத்திற் பறப்பான். அங்கிருந்து சமுத்திரங்களிற் குதிப்பான், அவிடம்விட்டு அட்டதிசைகள்தோறும் பாய்வான். அவைகளினின்று பூமியிற் பாய்வான். பூமியிலிருந்து பாதலத்திற் பாய்வான். மீள்வு மெழுந்துவந்து மாற்றாருடைய மனத்திலுங் கண்ணிலும் பாய்வான். இவ்வாறு எங்கும் பாய்ந்து பாய்ந்து வருகின்ற கொடுமையினலே, பதினுலுலோகங்களும் பயந்தன. அண்டகடாகங்களெல்லா நடுங்கியதுகள். தேவர்களெல்லாங் கலங்கினார்கள். சொர்க்கலோக நாகலோகமுதலிய அளவற்ற லோகங்களெல்லாமதிர்ந்தன. சிவபெருமானுந்தமது தேரைநடாத்திக்கொண்டு, அவன்பாய்கின்ற விடங்கள்தோறுந் தாமும்பாய்ந்து, அவன்செய்கின்றமாயைகளையெல்லாமாய்த்து,அளவற்றநாள்யுத்தஞ்செய்துகொண்டிருந்தனர். இவ்வண்ணம்நெடுநாள்வரையிலெமது கர்த்தன்போர்புரிந்திருப்பதைத்தேவர்களெல்லாம் பார்த்து, மனந்துவண்டு, யாவருமொன்றுகக்கூடி, ஐயோ - நமது சிவபெருமான் தம்மைவணங்கிப் பிரார்த்தித்தவர்கட்கு இமைப்போதிற்றமது திருமேனியைக்கேட்கினுங் கொடுத்தருளுகின்றவராதலால், ஒருவேளை இத்திரிபுரன்பணிந்து இன்னும் பலவரங்களைக்கேட்பானுயின், அவைகளைக்கொடுத்தாலுங் கொடுப்பாரோவென்றுபயந்து, யாவருங்கர்த்தனிடத்தில்வந்து, சாஷ்டாங்கமாகச்சேவித்து, ஓ தீனதயாளுவே, நொடிக்குமுன்னே சகலலோகங்களையு நீறுசெய்யத்தக்கசுவாமிகள், இத்திரிபுரனுடனே நெடுநாள்தமதருமைத் திருக்கரத்திலாயுதங்களைச்சுமந்து யுத்தஞ்செய்யத் திருவுளங்கொண்டிருப்பதைப்பார்க்கின், ஈதொருதிருவிளையாட்டேயன்றிவேறில்லை, சுவாமிகள்திருமேனியை யிடைவிடாதுதரிசிப்பதனுலே அவனுமகாதவத்தினையுடையவனுயினுன்,சுவாமிகளவனேடுநீடித்து யுத்தஞ்செய்வதைப்பார்த்து யாங்கள் சகித்திரோம், சுவாமிகளடியேங்கண்மீது கிருபைவைத்து, விரைவில் அவனைச் சங்கரித்து, யாங்களெல்லாங்கண்டு தரிசிக்கும்படியாகத் தமது திருமேனியில்வாளைமாலைதரித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். இடப்பாகத்தமர்ந்திருக்கின்ற உமாதேவியாரும் அவ்வாறேவிண்ணப்பஞ் செய்துகொண்டனர். அதற்குச்சிவபிரான் ஈஸ்வரியைப்பார்த்து, பெண்ணே முன்னொருகாலத்தில் நீகாணும்படியாகக் காளியோடு வாதுக்காடினது போல, இத்திரிபுரனுடைய பராக்கிரமத்தினைநீகாணும்பொருட்டு இது

சாறுமவனோடு யுத்தஞ்செய்தனம். இனி அவனையும் அவன் திரிபுரங்களையும் யாமழிக்கின்றதைப் பார்க்கக்கடவையென்று திருவாய்மலர்ந்து, கணேசமந்திரத்தை உச்சரித்து, தமதுதிருக்கரத்தில் முத்தலைச்சூலத்தையெடுத்தனர். உடனே-யாவருந் திரிபுரமும் பலியும்வெந்து நீறானதைக்கண்டார்களேயன்றி, அச்சூலமிவ்வாறு சென்றதென்று ஒருவருங்கண்டதில்லை. இப்பால் சிவபிரான்செய்தயுத்தவலங்காரத்தை, அந்தரவாசிகளாயிருந்து தரிசித்தமுனிவர்கண்முதலாயினோர் அளவற்ற களிப்படைந்து இத்திரிபுரன் தேவர்களைவென்று வெற்றிகொள்ளவல்ல பராக்கிரமசாலியேயாயினும், தன்னின்மிக்காரோடு மெதிர்க்கச்செல்வது முறைமைதானே, ஆயினும்யோகியர்க்கு யோகியாகியும், போகியர்க்குப்போகியாகியுமிருந்து, சகலசீவராசிகளையு நடிப்பிக்கவல்ல ஏகநாயகனாகிய நமது சிவபெருமானே இத்தன்மைத்தான போரினைச்செய்து காட்டாராயின், போர்முகத்தினின்று, யூகமாதிகளைக்கிரமப்படிவகுத்து, விதியோடுயுத்தஞ்செய்வதற்குயாவர்க்கும் விளங்காதாகையால், அவற்றினைநமதுகர்த்தனல்விளக்கிக்காட்டுமாறு, இத்திரிபுரனொரு முன்னிலையாக விருந்தனனென்றுதுதித்தார்கள். சிவகணங்களெல்லாமாரவாரித்துச் சந்தோஷித்தார்கள். தேவர்கள்புஷபவருஷஞ்சொரிந்தார்கள். பிரமன்விண்டு முதலாயினோர் நமது துன்பமின்று நீங்கியதென்று ஆனந்தசாகரத்தின்மூழ்கினார்கள். சிவபெருமான் விட்டசூலமானது மீட்டுந்திரும்புவதன்முன்னர், திரிபுரன்கர்த்தன் திருவடிகளில்வந்து அயிக்கியமாயினன். அன்றுமுதல் எமதுகர்த்தனைத் திரிபுராரியென்னு நாமத்தால் யாவருந்துதிப்பதாயினர்கள். அமர்க்களத்தில்மடிந்த பூதங்கணங்கள்மீது. சிவபிரான்கடைக்கண் பார்வைசெய்தலும், அவைகளனைத்துமெழுந்துவந்து கர்த்தன்திருவடிகளில்சாஷடாங்கமாகச்சேவித்தன. பின்னர் கர்த்தன் மீட்டுங் கைலாயவரையைச்சேர்ந்து, தம்மைத்தொழுகின்ற அடியவர்கட்கெல்லாந்திருவருள்சுரந்துகொண்டிருந்தனர். திரிபுரனைத்தகனஞ்செய்ததினத்தில், விண்டுமுதலியதேவர்களெல்லாஞ்சிவபெருமானுக்குத்திருவிழாநடத்தித்தங்கள் தங்கள்பதவிகளைச்சேர்ந்தார்கள். திரிபுரன்முத்தியடைந்ததுபுரட்டாசிமாதம்பூரணையாதலால், அத்தினத்தையாவரும்பாகுளியென்றுவழங்குகின்றார்கள். வருடந்தோறுமத்தினத்தில் யாவரேனுஞ்சிவபிரானுக்குத்திருவிழாச்செய்தாலும், அவ்வவர்கள் சத்திக்கேற்றவண்ணம் அருச்சனைமுதலானவைகளைநடாத்தினலும், நெய்யாலாயினுந்தயிலத்தாலாயினுந் திருவிளக்கேற்றிவைத்தாலும், அவர்களைஎக்காலத்தினுந்தீவினையணுகாது. இவ்வாறு ஒரு சிவபுண்ணியமேனுஞ்செய்யாராயின், திரிபுரனுற்றேவர்களெவ்வளவுதுன்பமடைந்தார்களோ அவ்வளவுதுன்பத்தையடைவார்கள். இதனைசத்தியமாகஎண்ணக்கடவீர்கள். அன்றியும் அத்தினத்திற்பிராதக் காலையிலெழுந்து, நித்தியநியமங்களைமுடித்துச், சிவபெருமானையன்போடுபூசிப்பார்களாயின், அவர்கட்குமுற்பிறவியிற்செய்த பாவங்களெல்லாமொழியும் உச்சிகாலத்திலாராதிப்பார்களாயின், அம்முற்பிறவியினோடுஇம்மையிற் செய்தபாவங்களெல்லாமொழியும். மாலைக்காலத்தில்வந்திப்பார்களாயின் எழுபிறவிகள்தோறுஞ் செய்துமுற்றிய பாவங்களெல்லாமொழிவதன்றி, அவ்வவர்களிச்சித்த சகலபொருள்களும்வந்து கைகூடும்.

கணபதிதுணை.

பதினைந்தாவது.

உமையம்மையுபாசித்தபடலம்.

ஓசவுனகாதிமுனிவர்களே, சிவபெருமான் விநாயகமூர்த்தியை வந்தித்துத்திரிபுரதகனஞ்செய்தவரலாற்றினைச்சொன்னோம், இப்பால் உமையம்மையுபாசித்ததிறத்தினைச்சொல்லுவோங்கேட்பீராக. முன்னொருகாலத்தில் பிரமன்குமாரர்களில் ஒருவனாகிய தக்கனென்பவன், அரிய தவங்களைச்செய்து, சகலலோகநாயகியாகிய உமாதேவி தனக்குப்புத்திரியாகிவரவும், தேவர்கண்முதலாயினோர் தனதாணையைக்கடவாமல் நடந்துகொள்ளவும், இன்னுமிவைமுதலிய அளவற்றவரங்களைப்பெற்று, சகலசெல்வங்களையும் அநுபவித்து மிகவும் பிரசித்தனாகி வாழ்கின்றநாளையில், உமாதேவி தனக்குப்புத்திரியாகிவர, அவ்வம்மனைச் சிவபிரானுக்குத் திருக்கல்யாணஞ்செய்துகொடுத்துப், பின்னமொருநாள்கைலாயத்திற்சென்று கர்த்தன்சந்நிதானத்தை யடைந்தபோது, மருமகனாகியசிவபெருமான்தன்னைக்கண்டவுடனெழுந்து மரியாதைசெய்யவில்லையென்னுங்கோபத்தோடு, அவ்விடத்தினின்றுநீங்கித், தன்னரமனையைச்சேர்ந்து, கர்த்தனைநிந்தித்து, அவரினுந்தானுயர் வடையவேண்டுமென்னுங்கருத்தினோடு, விஷ்ணுவாதி சகலதேவர்களையும்வரவழைத்து, அவர்கள்முன்னிலையில் ஒருயாகத்தை நடத்துவதானான். அதனை யெனதன்னையாகிய பார்வதியார் கேட்டுச், சிவபெருமானிடத்தில் விடைபெற்றுச்சென்று, தமதுகுரவர்களாகிய தக்கனையும் வேதவல்லியையுங்கண்டுவந்திக்க, அதற்கவர்கள் சற்றும் போற்றுதல்செய்யாதுநிந்தனைசெய்தார்கள். உடனேஉமாதேவிக்குஅதிககோபமுண்டாகி, இந்தயாகசாலை பேய்விளையாடுஞ்சுடலையாகக் கடவதென்றுசபித்து, மீட்டுங்கைலாயவரையைச்சேர்ந்து, தக்கன் செய்துவருங்கொடுமையிவ்வாறென்று சிவபிரானுக்கறிவித்தலும், அவருக்குக்கோபமுண்டாகி, அக்கோபாக்கினியினின்றும் வீரபத்திரக்கடவுள்தோன்ற, அவரைக்கர்த்தன்பார்த்தருளி, நீரிந்நிமிடத்திற்சென்று தக்கன்மகத்தை யழித்து வருவீரென்றுகட்டளையிட, அவர் அவ்வாறேசென்று, அங்கு வந்திருக்கின்ற சகலரையுநாசஞ்செய்து, மீட்டுந்திரும்பிய மாத்திரத்தில், சிவபிரானுக்குக்கிருபைசுரந்து, யாகத்திலிறந்தவர்களையெல்லாம்பிழைப்பித்து இனிதுஷ்கிருத்தியங்கட் குடன்படாதீர்களென்றுகட்டளையிட்டு, அவ்வவர்கள்பதவிகளிற் செல்லவிடைகொடுத்துப், பின்னர்தக்கனருகில்வந்து, அவன்தம்மைநிந்தைசெய்தவனாதலால் அதற்கோர்அபராதஅடையாளமாக ஆட்டுத்தலையை யவனுடலிற்பொருத்தி யெழுந்திருக்கும்படிச்செய்தார். இப்பால் பார்வதிதேவியார் அவையனைத்தையும்பார்த்துச், சிறிதுகோபந்தணிந்து, நமதுநாயகனை நிந்தித்த தக்கனுக்குநாம்புத்திரியானோமென்று உலகம்பழிக்குமாதலால், அப்பாதகனால் வளர்க்கலுற்ற சரீரத்தைவைக்கலாகாதென்று மனவருத்தமுற்று, தமதுயோகாக்கினியினாற் றேகத்தைவி

டுத்து, பர்வதராசனுடையதபோபலத்தினாலும், மேனகைசெய்ததருமவி
ருத்தியினாலும், அவர்கட்குக்குமாரியாகத் திருவவதாரஞ்செய்து, நாளுக்
குநாள் வளர்பிறைபோலவளர்ந்து, பந்து- கழங்கு- ஊஞ்சல்-முதலிய தி
ருவிளையாடல்களைச்செய்து, பற்பலவேதாகமசாத்ரங்களைப் பயின்று வ
ருங்காலத்தில், சிவபெருமான் கங்கையைக்கல்யாணஞ்செய்து கொள்வ
தன்முன்னர், தம்மைச்செய்துகொள்ளவேண்டுமென்னுங் கருத்தினோடு,
தந்தையாகிய பர்வதராசனையடைந்து, தமதெண்ணத்தையறிவித்து, இது
நிறைவேறத்தக்க ஓர்விரதத்தையுணர்த்தவேண்டுமென்றுவினவ, அதனை
யம்மலையரசன் கேட்டலுமனமகிழ்ந்து, அதற்குத்தக்கபடி ஓர்விரதத்தை
யாராய்ந்துணர்ந்து,இதனைச்சொல்லுவதாயினன். தாயே-மிக்கசிறப்பையு
டையதும், விரைவில் நற்பயன்களையளிப்பதும், இந்திரன் சாபத்தைநீக்கி
யதும், பிரமனாதியர்க்குச் சிருட்டியாதிதொழில்களைத்தந்ததும், சகலவிட
ர்களையுநீக்கத்தக்கதும்,சகலதுன்பங்களையும் போக்கத்தக்கதும்,சகலபகை
களையுமொழிக்கத்தக்கதும், சகலபொருள்களையு மளிக்கத்தக்கதும், இன்
னுமிவைமுதலானஅளவற்றமகிமைகளையுடைய ஒருவிரதமிருக்கின்றது.
அவ்விரதம்-தேவதேவோத்தமராகியும், மூவர்முதல்வராகியும்,முத்தொ
ழிற்காரணராகியு மிருக்கின்ற யானைமுகக்கடவுளுடைய சதுர்த்தி விரத
மாகும். இத்தன்மைத்தாகிய மேலானவிரதத்தையநுட்டிப்பீராயின், நீர்
கருதியவண்ணம் உடனே சித்திக்குமாதலால், அதனையநுட்டிக்கு முறை
மையையுஞ்சொல்லுவேன்கேட்பீராக.ஆவணிமாதம்பூர்வபக்ஷத்தில்வரு
கின்ற சதுர்த்திதினத்தில்,அவ்விரதத்தை யாரம்பிக்கவேண்டும்.அவ்வண்
ணமாரம்பிப்பவர்கள், அத்தினம் ஆதிகாலையிலெழுந்து ஸ்நானஞ்செய்
து, நித்தியவநுட்டானங்களை நிறைவேற்றி, அபிடேகத்திற்குரியதிரவிய
ங்களையும், அருச்சித்தற்கேற்ற மலர்களையும், நிவேதனத்திற்குத்தக்கப
தார்த்தங்களையும், தூபதீபங்கட்குவேண்டும்பொருள்களையுஞ்சேகரித்து
ஓர்பூசாமண்டபத்தை யழகுபொருந்தச்சமைத்து, பரிசுத்தமானவிடத்தி
ல் மிருத்திகையெடுத்துவந்து, அதில்-வேர்கள்- செல்லுமுதலிய செந்து
க்கள்-கல்லுகள்-என்னுமிக்குற்றங்களில்லாமல்சோதித்து, அதனைப்பிசை
ந்து, சிற்பசாத்தரத்திற் கூறியிருக்கின்ற முறைமைப்படி விநாயகமூர்த்தி
யினுடையதிருவுருவஞ்சமைக்கவேண்டும்.இதுவன்றிப்,பொன்னினாலொ
ருதிருவுருவமுஞ்சமைக்கவேண்டும். செய்யச்சத்தியில்லாதவர்களாயின்
ஒருபலம்- அரைப்பலம்- காற்பலம்- என்னுமிவ்வித அளவிலேனுஞ் ச
மைத்தல்வேண்டும், பின்னர் ஆசிரியருத்தரவின்படி சுத்தகங்கையில் ஸ்
நானஞ்செய்து,திருவெண்ணீறணிந்து,சிரம்- கண்டம்- மார்பு- கரம்- செ
வி- யென்னுமிவ்விடங்களில் உருத்திராக்ஷகண்டிகைதரித்து, மேற்சொ
ன்னபூசாமண்டபத்திற்குவந்து, தண்டுலம்பரப்பி, அதன்மேல்இழைசுற்
றி நீர்நிரப்பியிருக்கின்ற பொற்கும்பத்தைவைத்து, முன்னர்சமைத்திரு
க்கின்றபார்த்திபமூர்த்தியையும் பொன்மூர்த்தியையும் அதனருகிலெழு
ந்தருளச்செய்து, ஆகமவிதிப்படிபூசித்து, ஒன்று- இரண்டு- நான்கு-ஐ
து- ஆறு- எட்டு- பத்து- பன்னிரண்டு- இருபத்தெட்டென்னு மெழுத்
துக்களுள்ள மந்திரங்களுள், ஒருமந்திரத்தைச்செபிக்கவேண்டும். இவற்
றுள்- ஒன்று- இரண்டு- நான்கு- என்னுமெழுத்துக்களுள்ள மந்திரங்

ளை, இலக்ஷஉருசெபிக்கவேண்டும். அதற்குககூடாமையாயின், அவ்வெ ண்ணிற்பாதியுருவேனுஞ் செபிக்கவேண்டும். ஐந்து- ஆறு- எட்டு- பத் து- பன்னிரண்டு-என்னுமெழுத்துக்களுள்ள மந்திரங்களை,நூறாயிரமுரு செபிக்கவேண்டும்.அதற்குக்கூடாமையாயின், பதினாயிரமுருவேனுஞ்செ பிக்கவேண்டும்.இருபத்தெட்டெழுத்துள்ளமந்திரத்தைக், குறைவில்லாம ற்பதினாயிரம உருசெபிக்கவேண்டும். இவ்வாறுசெபிக்குங்காலையில், பத் துக் கொருகால் தருப்பணஞ் செய்யவேண்டும். பத்து தருப்பணத்திற் கொருகால், ஒரு ஓமஞ்செய்யவேண்டும். பத்து ஓமத்திற்கொருகால், அ றுசுவைபதார்த்தங்களோடு அன்னதானஞ்செய்யவேண்டும். இந்தக்கிரம மாகப்பூசைசெய்து நிறைவேறுங்காலத்தில், பொன்பூமிமுதலான வைக ளைத்தானஞ்செய்யவேண்டும். அடுத்தமாதஞ்சுக்கிலபக்ஷ சதுர்த்திவனை யில், நாள்தோறுமேற்சொல்லிய முறைமைப்படிபூசைசெய்து, மிருத்தி கையினுல்செய்யப்பட்ட விநாயகமூர்த்தியை நிருத்தகீதவாத்தியங்களோ டுமெழுந்தருளச்செய்து, மடுவிலாவது தடாகத்திலாவது நதியிலாவது வைத்துவிடவேண்டும். இவ்வாறு பூசைசெய்கின்ற முப்பதுநாளும், ஆ காரநித்திரையில்லாமல், சத்தாதிவிஷயங்களை நிக்கிரகித்து, முப்பத்தோ ராநாள் விருந்து- ஒக்கல்- அதிதிகள்-பரதேசிகள்- முதலானவர்களோடு போசனஞ்செய்யவேண்டும். முப்பதுநாளும் ஆகாரமின்றியிருக்கச் சத்தி யில்லாதவர்கள், இவ்விரதத்தையாரம்பிக்கு முதல் நாளிலாவது அவ்வா றிருந்து, மறுநாள்தொட்டு அவிசு- பழம்- பால்- இவைகளிலொன்றைப் புசித்துக்கொண்டு விரதமநுட்டிக்கவேண்டும். முப்பதுநாள் அநுட்டிக்க மாட்டாதவர்கள், ஆரம்பித்தஒருநாள்மாத்திரமாவது ஆகாரமுதலியவை களைநிக்கிரகித்து, மேற்சொன்னமுறைமைப்படி யநுட்டிக்கவேண்டும்.தா னஞ்செய்யுமுறைமையில், அவ்வவர்கள் செல்வத்திற்குத்தக்கப்படிசெய்ய வேண்டும். எவ்விதத்தேனும் இருபத்தொருபேருக்கு அன்னதானஞ்செ ய்துவரல்வேண்டும். அன்றியும் ஒருருவத்திற்பூசிப்பவர்கள், தனதான்னி யபுத்திரசம்பத்துண்டாகி, அநேகபந்துவர்க்கங்களோடும் வாழ்ந்திருப்பா ர்கள். இரண்டுருவங்களிற்பூசிப்பவர்கள், தங்கள்கருத்தின்படி அளவற்ற காரியங்களெல்லாஞ் சித்தியாகப்பெறுவர்கள். மூன்றுருவங்களிற்பூசிப்ப வர்கள், நவரத்நங்களை மலைபோலக் குவிந்திருக்கப் பெறுவர்கள். நா ன்குருவங்களிற் பூசிப்பவர்கள், தருமமுதலிய நான்கு புருஷார்த்தங்க ளுங்கிடைக்கப்பெறுவர்கள். ஐந்துருவங்களிற்பூசிப்பவர்கள்,சார்வபௌ மராகவாழ்வர்கள். ஆறுருவங்களிற்பூசிப்பவர்கள், சிருட்டியாதிமுத்தொ ழில்கட்குந் தலைவராவர்கள். ஏழு- எட்டு- ஒன்பது- என்னுமிவ்வுருவங் களிற்பூசிப்பவர்கள், சர்வஞ்ஞத்துவ முடையவராவர்கள், பத்துவடிவங் களிற்பூசிப்பவர்கள், நிகழ்காலம்- இறந்தகாலம்- எதிர்காலம்- என்னுந்தி ரிகாலஞானத்தையுடையவராவர்கள். இந்தப் பத்துருவங்களிற்செய்யும் பூசாபலத்தினுல், சனகராதிமுனிவர்களும், விண்டுவாதிதேவர்களும், அ ளவற்ற அதிகாரங்களைப்பெற்றார்கள். பதினேருருவங்களிற் பூசிப்பவர்க ள், ஏகாதசருத்திரர்கட்கு மதிகாரியாவர்கள். பன்னிரண்டுருவங்களிற்பூ சிப்பவர்கள், சகலதுன்பங்களுந் தொலையப்பெறுவர்கள். பன்னிரண்டு முதல் நூற்றெட்டுருவங்கள்வரையிற்பூசிப்பவர்கள், ஒன்றுக்கொன்றுமே

லான பயன்களையெல்லாங் கிடைக்கப்பெறுவர்கள். ஆயிர வுருவங்களிற் பூசிப்பவர்கள், இம்மையில் மலவிருளினின்று நீங்கி மெய்ஞ்ஞான சுகத்தைப்பெற்றுவாழ்வதன்றி, மறுமையில் மோக்ஷசாம்பிராச்சியத்தை யடைந்து, தங்களேழ்தலைமுறைகளிலுள்ளவர்களையு முத்தியிற்சேர்ப்பார்கள். மேலும் ஏழுமூர்த்திகளை மூன்றுநாள்பூசைசெய்தால், சகலபிணிகளும்இடர்களுந்தொலையும்.ஒன்பதுநாள்பூசைசெய்தால்அனந்தசித்திகளுமுண்டாகும்.ஐந்துவருடம்வரையிற்பூசித்தால், எல்லாப்பாதகங்களுந்தீரும்,இடைவிடாது அந்தியகாலம்வரையிற் பூசித்தால், விநாயகமூர்த்தியினுடைய சாயுச்சியபதவியையடைவார்கள். இவ்வாறு அவ்வவர்கள் சத்திக்கேற்றபடி எத்தனைமூர்த்திகளிற் பூசித்தாலும், அப்பூசனையில்மூலமந்திர,ம் ஏகாக்ஷரமந்திரம் சடக்ஷரமந்திரம் என்னும் இம்மூன்றிலொன்றைச் செபித்து, முடிவில்தருப்பணாதிகளைமுடித்துத், தம்பதிபூசையுஞ்செய்ய வேண்டுமென்று சொல்ல. அவையனைத்தையும் பார்வதிதேவியார் கேட்டு மனமகிழ்ந்து, இவ்விரதத்தை முன்னர்யாவரநுட்டித்திருக்கின்றார்களென்றுகேட்கப்,பர்வதராசன்சொல்லுவான். தாயே- முன்னொருநாள் சகலதேவர்களும்புடைசூழ்ந்துவணங்கத்தக்கதாகச்சிவபெருமான் கைலாயத்திலெழுந்தருளியிருக்கின்றபோது, சுப்பிரமணியக்கடவுள் அச்சந்நிதானத்திற்குவந்து, கர்த்தனைப்பலமுறைவந்தித்து விண்ணப்பஞ் செய்ததாவது,சுவாமி- அளவற்றவிரதங்களுள் மேலானவிரதமாகவும், விரைவில்சகலபயன்களையு மளிக்கவல்லதாகவும், மிகவுஞ்செவ்வையானதாகவுமிருக்கின்ற ஓர்விரதத்தை அடியேற்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்ன அதற்குக்கர்த்தன்கிருபைசுரந்து, மைந்தனே- சகலவிரதங்கட்குமேலானது விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்திவிரதமாகும், அதுவே நினைத்தகாரியங்களைவிரைவில்முடிக்கத்தக்கது, அதுவேயாதினும் செவ்வையாயிருப்பதென்றுசொல்லலும், அதனைச்சண்முகக்கடவுள்கேட்டு, சுவாமி- ஒன்றிருக்கமற்றொன்றைத் தேவரீர்திருவாய்மலர்ந்தருளியது, அடியேன்சிறுபிள்ளையென்று நினைத்தோ, அல்லது அதுவேசத்தியந்தானோ, ஆதிமத்தியாந்தரகிதமாயிருக்கின்றதேவரீர்விரதங்கள்அளவற்றதாகவிருக்கின்றன, அவற்றுளொன்றனை யநுக்கிரகஞ்செய்யாமல், விநாயகமூர்த்தியினுடைய விரதத்தையேமேலானதாகத் தெரிவித்தீர், அவ்விநாயகமூர்த்திஅடியேனுக்கு மூத்தவராயினும், தேவரீர்க்கவர் புத்திரரல்லவோ, சகலபுவனாதாரசொரூபியாகிய தேவரீரினும் அவர்மேலானவராயிருக்கின்,சுவாமிகளநுக்கிரகித்தவாறு அவர்விரதமும் மேலானதாகவேயிருக்கும், ஆதலால் அடியேன்மனத்திற்கொண்ட சந்தேகத்தைநிவிர்த்திசெய்தருளுமென்று பணிந்து பிரார்த்தித்துக்கொண்டார். அதற்குச்சிவபெருமான் சந்தோஷித்து, குழந்தாய் - யாம்சொன்னது சத்தியமேயாகும், அஃதெவ்வாறெனில், ஒன்றாகியும் - பலவாகியும் - அருவாகியும் - உருவாகியும் எல்லாவுலகத்திலும் நீக்கமற்று நிறைந்திருக்கின்ற சுயஞ் சோதிஸ்வரூபமே,யாமெல்லாம்உய்யும்படியாகவும், சகலபுவனங்களுந் தமது சரணபங்கயங்களைத்தொழுது முத்தியடையும்படியாகவும், பிரணவத்தினின்றுஞ்சகளீகரித்து, கணபதியென்னுந் திருநாமத்தைவகித்திருக்கின்றது.மேலும் அக்கணபதிமூர்த்தியே, முன்னர்யாம்திரிபுரத்தை யெரிக்கத்தக்கமங்

திரத்தையெமக்குபதேசித்தவர். அவரேசிருட்டி திதிசங்காரமென்கின்ற முத்தொழில்களைப், பிரமன்விண்டுஉருத்திரனுகியஎங்கண்மூவருக்கும்அருளிச்செய்தவர். இவ்வுலகத்தில் துஷ்டசனநிக்கிரகஞ்சிஷ்டசனபரிபாலனஞ் செய்யும்பொருட்டு, அனந்தமுறைவேறுவேறு திருவவதாரங்களைக்கொண்டிருக்கின்றனர். மற்றோரவதாரத்தில் நமக்கும்புத்திரராக அவதரித்திருக்கின்றனர். யாங்களிருவரும் உடலுமுயிரும்போலமருவியிருத்தலினால், சகலவேதாகமபுராணங்கள் எங்களிருவோரையும் ஒன்றாகச்சொல்லுமேயன்றி, வேறுபடுத்தாது. எங்களைத்தியானிக்கின்ற பெரியோர்களும், அவ்வாறேதியானிப்பார்கள். ஆதலால்- அவ்விநாயகமூர்த்தியேமேலானமூர்த்தி. அவரதுசதுர்த்திவிரதமேமேலானவிரதம். அவ்விரதத்தைஅநுட்டிப்பவர்கள் யாவரேயாயினும், அவர்கட்கு-மாயாசம்பிரதம்-தத்துவசம்பிரதம்- யோகினிசாலம்- மாலினிவித்தை- மகாசம்மோகனம்- மனோபேதம்- தந்திரபேதம்- குய்யதந்திரம்- கலாவாதம்- கலாசாரம்- குண்டிகாமதம- அஞ்சனவித்தை- பாதுகை- பானபாத்திரம்- பரகாயப்பிரவேசம்- இரசவாதம்- பைபீலவாதம்- சங்கிராமவிலக்கணம்- ¶ முதலிய எல்லாவித்தைகளுங் கைகூடிவரும். அச்சதுர்த்தி விரதமன்றி சங்கட சதுர்த்தியென்று மற்றொரு விரதமுண்டு. அஃதெல்லா நன்மைகளையும் எளிதிற்றரவல்லதாகும். மைந்தனே - விநாயகக்கடவுளுடையமகத்துவம் இத்தன்மைத்தாகும். மேலும் - அவருடைய சிறந்தவிரதங்களையனுட்டிப்பதினாலும், அவருடைய ஏகாக்ஷரமுதலிய மந்திரங்களைச்செபிப்பதினாலும், அவருடையதிருவவதாரமூர்த்திகளைப் பூசிப்பதினாலும், அவரதுதிருவுருவங்களை மனதிற்றியானிப்பதினாலும், அவர்திருவடிகளைத்துதிசெய்வதினாலும், அளவற்றபேர்கள் இருவினைகளினின்றுநீங்கி,மும்மலங்களையு மொழித்து, நான்குபயன்களையுமடைந்திருக்கின்றார்கள். என்று சிவபெருமான் சுப்பிரமணியருக்குபதேசித்ததாக,உமாதேவிக்குப்பர்வதராசன்சொன்னான்.இப்பால்உமாபரமேஸ்வரியார்அவையனைத்தை

¶ இவற்றுள்- மாயாசம்பிரதம், ஓரிடத்தில் ஊர்போல வனம்போலமலைபோல நதிபோலத்தோற்றுவித்தல். தத்துவசம்பிரதம், ஒருபூதத்தில் ஒருபூதந்தோற்றுவித்தல். யோகினிசாலம், மயானத்தில் உபாசித்து யோகினிகளைக்காண்பித்தல். மாலினிவித்தை, சமுத்திரங்கடக்கச்செய்தல். மகாசம்மோகனம், விழித்திருக்கின்றவர்களை மெய்மறந்து நித்திரைகொள்ளச்செய்தல். மனோபேதம், மனத்தைப் பேதிக்கச்செய்தல். தந்திரபேதம், ஓரிடத்தும் வெளிப்படாதமந்திரத்தை வெளிப்படச்செய்தல். குய்யதந்திரம், வெளிப்பட்டதைமறைப்பித்தல். கலாவாதம், மன்மதவித்தை. கலாசாரம், வருணத்தை அதிகரிக்கப்படுத்துதல். குண்டிகாமதம், குளிகையினாலே இளமை அடைதல். அஞ்சனவித்தை,மறைபட்டபொருளைக்காண்பித்தல். பாதுகை,செருப்பைத்தொட்டுநினைக்கில் நினைத்தஇடத்தில்விடுத்தல். பானபாத்திரம்,ஒருகரகத்தில் நினைத்தபானமெல்லாந்தருதல், பரகாயப்பிரவேசம்,பிராணனில்லாதஉடம்பிலேபுகுதல். இரசவாதம், உலோகத்தைப்பேதிக்கச்செய்தல். பைபீலவாதம்,எறும்புகளின்பேச்சறிதல். சங்கிராமவிலக்கணம். போர்வித்தை எனவறிக.

யுஞ்செவிகுளிரக்கேட்டுத், தந்தையாகிய பர்வதராசனைப்பார்த்து, யானி வ்விரதத்தை அநுட்டிக்குமாறுவேண்டிய திரவியங்களையெல்லாஞ் சேகரிக்கவேண்டுமென்றுதிருவாய்மலர்ந்தருள, அதனைப்பர்வதராசன்கேட்டு மனமகிழ்ந்து, ஏவலாளர்களைக்கூவி, அவ்வவர்கட்குவேறுவேறுபணிகளையிட்டனன். உடனே அப்பணிகளைச்சிரமேற்கொண்டு, சிலர்தெய்வலோகத்திற்சென்றுகற்பகமலர்களும்பலவிதத்தளிர்களும்உண்டிகளுங்கொண்டுவந்தார்கள். சிலர்பற்பலதீபங்களிற்சென்று ஆங்காங்கிருக்கின்ற அளவற்ற அற்புதப்பொருள்களைக்கொண்டுவந்தார்கள். சிலர்பூவுலகத்திற்சென்று அனந்தபுதுமையான வஸ்துக்களைக்கொண்டுவந்தார்கள். சிலர் பாதலத்திற்சென்று அங்கிருக்கின்ற மாணிக்கமுதலிய திரவியங்களைக்கொண்டுவந்தார்கள். சிலர் உவர்க்கடல்நீரொன்றுதவிர, மற்றஎல்லாக்கடல்நீரோடு, சக்கரவாளகிரிக்கு அப்பாலிருக்கின்ற பெரும்புறக்கடல் நீரையும்மகாபரிசுத்தத்தோடுகொண்டுவந்தார்கள். சிலர்கங்கைகாவிரிமுதலிய அளவற்றதீர்த்தங்களை மங்கலவாத்தியங்களோடுங் கொண்டுவந்தார்கள். சிலர்பரிமளம்வீசுகின்ற மலர்மொக்குகளும், இளந்தளிர்களும், அறுகுகளும், வன்னிமுதலிபத்திரங்களுங்கொண்டுவந்து ஆராய்ந்துவைத்தார்கள், சிலர்கோத்தமாலை கொத்துமாலை- தொடுத்தமாலை - சுருக்குமாலை- கட்டுமாலை- அரும்புமாலை- முதலாகியமாலைகளைச்செய்து, பூக்குடலைகளில்நிரப்பினார்கள். சிலர் சொர்னத்தினால் ஓர்மண்டபஞ்சமைத்து, அதில்நவரத்நங்களையிழைத்து, பற்பலமணிமாலைகளாலும் மலர்மாலைகளாலும் அலங்கரித்தார்கள். சிலர் தூண்கள்தோறும் வாழை கமுகு கன்னல் இவைகளைநாட்டி, அவைகளினுச்சியில் தாழை நாரத்தை தாதுமாதளை யென்னு மிவற்றின் குலைகளோடு, பற்பலபழவருக்கங்களையு மாலையாகக்கோத்துத் தொங்கவிட்டார்கள் சிலர்விதானங்களை உயரத்தூக்கி, அழகியதூண்கடோறு நவரத்நங்கள் நிறைந்திருப்பனபோலப் பற்பலகொடிகளைக்கட்டினார்கள். சிலர் அக்கினிதேவனுக்குறைவிடமாகிய ஓமகுண்டத்தை யமைத்தார்கள். சிலர் புழுகு சந்தனம்பனிநீராதிகளைக்கலந்துமெழுகிப், பரிமளப்புகைகளை யூட்டினார்கள். சிலர் சுவர்கள்தோறும் எண்ணிறந்தசித்திரங்களையெழுதினார்கள். சிலர் சாந்துகொண்டுமெழுகியிருக்கின்ற நிலத்தின்மீது, கடுகு நெல் புட்பம்அறுகுமுதலியவைகளைநிரப்பினார்கள், சிலர்முத்து நீலம் பச்சை பொன்முதலியவைகளைப் பொடிசெய்தெடுத்துக்கோலங்களிட்டார்கள். சிலர்சொர்னாதி பாத்திரங்களைச்சுத்திசெய்து, பரிசுத்தப்படுத்தி யிருக்கின்ற இடங்கள்தோறும் விதிப்படிவைத்தார்கள். இவ்வாறுயாவர்களும்பணிசெய்திருக்கச், சகலபுவனேஸ்வரியாகிய பார்வதியார்தெய்வகங்கையிலாடிப், பூஜாமண்டபத்தில்வந்து, திருவெண்ணீறு உருத்திராக்கமுதலியவைகளையணிந்து, சிரசாதிபாதம்வரையில் நியாசஞ்செய்து, ஆசமனம்புரிந்து, பிராணாயாமத்திலிருந்து, பூதசுத்திமுதலானவைகளைநடாத்தி, (ஏவங்குணவிசேஷணவிசிஷ்டாயாம், சுபதிதௌ, அஸ்மாகம்ஸ குடும்பானாம், க்ஷேமஸ்தைர்ய விஜயாயுராரோக்யைஸ்வர்யாணாமுத்தரோத்தராபிவ்ருத்யர்த்தம், தர்மார்த்தகாமமோக்ஷசதுர்விதபலபுருஷார்த்தஸித்யர்த்தம், ஸ்ரீசித்திவிநாயகதேவதாமுத்திஸ்ய, ஸ்ரீசித்திவிநாயகப்ரீத்யர்த்தம். கல்பேர்க்தப்ரகாரேண த்யானவாஹனாதிஷோடசோபசாரபூஜாங்கரிஷ்யே)

என்று சங்கற்பங்கூறி, சந்தனமரத்தாலாகிய ஓர்வேதிகையையமைத்து, அதன்மீது தண்டுலம்பரப்பி, அதன்மீது சொர்ன்னவஸ்திரமொன்றை விரித்து, அதன்மீது இழை சுற்றி நீர் நிரப்பியிருக்கின்ற பொற்கும்பத்தை ஸ்தாபித்து, அதில் அத்தித்தளிர்- ஆலந்தளிர்- அரசந்தளிர்- மாந்தளிர்- நாவற்றளிர்- என்னும் ஐவகைத்தளிர்களோடு, சுகந்தி- பொன்- மரகதம்- மாணிக்கம்- முத்து- என்னும் பஞ்சரத்நங்களையும்பெய்து, அதற்குச்சந்தனம்- புஷ்பம்- அக்ஷதை- முதலானவைகளைத்தரித்து, (கலசஸ்யமுகேவிஷ்ணு ꞉கண்டேருத்ரஸமாஸ்ரதः - மூலேதத்ரஸ்திதோப்ரம்ஹ- மத்யேமாத்ர கணாஸ்ம்ருதா꞉, குக்ஷௌதுசாகராஸர்வே -ஸப்தத்வீபாவசுந்தரா - ருக்வேதோதயஜுர்வேத- சாமவேத அதர்வண, அங்கைஸ்சஸஹிதாசர்வே- கலசாம்புஸமாஸ்ரித꞉- ஆயேந்துகணேசபூஜார்த்தம் - துரிதக்ஷயகாரக꞉, கங்கேசயமுனேசைவ- கோதாவரீஸரஸ்வதி- நர்மதேஸிந்துகாவேரி- ஜலேஸ்மின்ஸன்னிதிங்குரு,) என்றுகும்பபூஜைசெய்து, அக்கும்பத்திற்கு மேற்றிசையில்யந்திரமிட்டு, அதன்மீது தெய்வகம்மியர்களால் சொர்னத்திலும் பிருதிவியிலும்செய்துவைத்திருக்கின்ற இரண்டுமூர்த்திகளில் சொர்ன்னமூர்த்தியை யெழுந்தருளச்செய்து, நவரத்னங்களாலாகிய மற்றொருவேதிகையின்மீது பிருதிவிமூர்த்தியை யெழுந்தருளச்செய்து, சங்குமுதலியபூஜாகருவிகளைச்சுத்திசெய்து, கங்கைமுதலிய தீர்த்தங்களை வைத்திருக்கின்றபாத்திரங்களில்- குங்குமம்- பச்சைகற்பூரம்- புட்பம்- அறுகு- முதலியவைகளோடு, பற்பல பரிமளத்திரவியங்களையும்பெய்து, மணிவட்டகைகளைப்பரப்பி, அவைகளில்- ஜலம்- அரிசி- பால்- தருப்பைநுனி- மலர்- வெண்கடுகு- நெல்- எள்- முதலிய திரவியங்களைவிதிப்படியமைத்து, அருக்கியம்- பாத்தியம்- ஆசமனம்- என்னும் மூவகைநீர்களையும் மந்திரபூர்வகமாக உண்டாக்கி, கரத்திற் புஷ்பமும் அக்ஷதையுங்கொண்டு, (த்யாயேத்கஜானனம்தேவம்-தப்தகாஞ்சனஸந்நிபம்- சதுர்ப்புஜம்மஹாகாயம்- ஸர்வாபரணபூஷிதம், தண்டாக்ஷமாலாபரசு- பூர்ணமோதகதாரிணம் - பாசாங்குசதரம்தேவம்- த்யாயேத்ஸித்திவிநாயகம், ஸ்ரீசித்தி விநாயகாயநம - தியானம் ஸமர்ப்பயாமி,) என்றுசிந்தித்து, (விநாயகநமஸ்தேஸ்து- கௌரீமலஸமுத்பவ- இமாம்க்ருதாம்மயாம்பூஜாம்- க்ருஹாணகணநாயக, ஸ்ரீகணநாயகாயநம꞉- ஆவாஹனம்ஸமர்ப்பயாமி,) என்றுஸ்தாபனஞ்செய்து, (மௌக்திகை꞉ புஷ்யராகஸ்ச- நாநாரத்நவிராஜிதம் - திவ்யஸிம்ஹாசனம்சாரு - ப்ரீத்யர்த்தம்ப்ரதிக்ருய்ஹதாம், ஸ்ரீவிநாயகாயநம- ஆஸனம்ஸமர்ப்பயாமி,) என்று பீடமிட்டு, (அர்க்யம்க்ருஹாணதேவேச- கணாதிபகஜானன- கந்ததூர்வாக்ஷதைர்யுக்தம்- கங்காஜலமிதம்சுபம், ஸ்ரீகஜானனாயநம- அர்க்யம்ஸமர்ப்பயாமி, கௌரிபுத்ரநமஸ்தேஸ்து- சங்கரப்ரியநந்தன- பக்த்யாபாத்யம்மயாதத்தம் - க்ருஹாணசுரஸத்தம,ஸ்ரீகௌரீபுத்ராயநம - பாத்யம்ஸமர்ப்பயாமி- அநாதநாதசர்வேச கீர்வாணசுரபூஜித-நிர்மலம்கந்தஸம்யுக்தம் க்ருஹாணாசமனம்விபோ,ஸ்ரீஸர்வேசாயநம- ஆசமனீயம்ஸமர்ப்பயாமி) என்று அருக்கியம்பாத்தியம்ஆசமனங்கொடுத்து (ததிக்ஷீரஸமாயுக்தம்-மத்வாஜ்யேனஸமன்விதம்-மதுபர்க்கம்க்ருஹாணேதம்- கஜவக்த்ரநமோஸ்துதே,ஸ்ரீகஜவக்த்ராயநம-மதுபர்க்கநைவேத்யம்ஸமர்ப்பயாமி,)என்றுதே

ன்கலந்தபால்பழமுதலியவைகளைக்கொடுத்து,(ஸ்நானம்பஞ்சாம்ருதேர்தி வ்யஃ-குருஷ்வசுரஸத்தம-பக்த்யாதுப்யம்மயாதத்தம்- விக்னராஜநமோஸ் துதே,ஸ்ரீவிக்னராஜாயநம-பஞ்சாம்ருதஸ்நானம்ஸமர்ப்பயாமி,கங்காதிஸ ர்வதீர்த்தேஸ்து- ஆனீத்யைர்நிர்மலைஸ்சுபைஃ- வாஹிதைருதகைர்தேவ- ஸ்னபயாமிகஜானன, ஸ்ரீகஜானனயநம- சுத்தோதகஸ்நானம்ஸமர்ப்பயா மி,) என்று ஐயமுதத்தையும்- கங்கைமுதலிய திவ்வியதீர்த்தங்களையும்ஸ் நானஞ்செய்வித்து, (ரக்தவஸ்த்ரம்த்வயம்தேவ - கௌரீபவபவப்ரபோ க்ருஹாணேதம்மயாதத்தம்- விக்னராஜநமோஸ்துதே, ஸ்ரீவிக்னராஜாயந ம- வஸ்திரயுக்மமஸமர்ப்பயாமி,) என்று இரண்டுபீதாம்பரங்களையுடுத்தி (உபவீதம்ப்ரம்மசூத்ரம்- ப்ரம்ஹணநிர்மிதம்புரா- நாகயக்ஞோபவீதே தம்- க்ருஹாணகணநாயக, ஸ்ரீகணநாயகாயநம- யக்ஞோபவீதம்ஸமர்ப் பயாமி,) என்றுபூணனூல்தரித்து, (சந்தனைகருகற்பூர- ம்ருகநாபிஸமன்வி தம்- கந்தம்தாஸ்யாமி விக்னேச-ஸர்வாபீஷ்டப்ரதாயக, ஸ்ரீவிக்னேசாய நம- கந்தாந்தாரையாமி,)என்று திருமேனிமுழுவதுஞ்சந்தனத்தையப்பி (அக்ஷதான்தவளாம்சுப்ரான்- ஹரித்ராமிஸ்ரிதானபி- மயாஸமர்ப்பிதா ன்தேவ- க்ருஹாணத்விரதானன, ஸ்ரீஸர்வாபீஷ்டப்ரதாயகாயநம- அ க்ஷதாம்ஸமர்ப்பயாமி) என்று மஞ்சளரிசி- பொற்சுண்ணம்- பூந்தாது- முதலியவைகளை அதன்மீதட்டி, (சுகந்தீனிசுபுஷ்பாணி- ஜாஜீகுந்தமுகா னிச- ஏகவிம்சதிபுஷ்பாணி- க்ருஹாணத்வம்விநாயக, ஸ்ரீவிநாயகாயநம- புஷபாணிபூஜையாமி,) என்று மலர்களைச்சாத்தி,

ஓம் கணேசாயநம ... ...*	பாதௌபூஜையாமி... ... ...*
ஓம் விக்கினராஜாயநம... ... *	ஜானுநீபூசையாமி... ... ... *
ஓம் ஆகுவாஹனயநம ... ...*	ஊரும்பூஜையாமி ... ... *
ஓம் ஏரம்பாயநம... ... ... *	கடிம்பூஜையாமி... ... ...*
ஓம் தேவதேவாயநம... ... ...*	நாபிம்பூஜையாமி... ... ... *
ஓம் லம்போதராயநம... ... ...*	உதரம்பூஜையாமி... ... ... *
ஓம் கணநாயகாயநம ... ... *	ஹிர்தயம்பூஜையாமி... ... ...*
ஓம் ஸ்துலகண்டாயநம ... ...*	கண்டம்பூஜையாமி ... ... *
ஓம் ஸ்கந்தாக்ரஜாயநம... ... *	ஸ்கந்தௌபூஜையாமி ....*
ஓம் சதுர்ப்புஜாயநம .. ..*	புஜௌபூஜையாமி ... ...*
ஓம் பரசுஹஸ்தாயநம... ... *	ஹஸ்தான்பூஜையாமி... ... *
ஓம் கஜவக்திராயநம... ... ... *	வக்த்ரம்பூஜையாமி... ... ... *
ஓம் விக்னஹந்திரேநம ... ... *	நேத்திரேபூஜையாமி... ... ...*
ஓம் சூர்ப்பகர்ணயநம... ... ...*	கர்ணௌபூஜையாமி ... ...*
ஓம் ஏகதந்தாயநம... ... ...*	தந்தம்பூஜையாமி... .... *
ஓம் குமாரகுருவேநம... ... *	சிரம்பூஜையாமி... ... ,... *
ஓம் சர்வேஸ்வராயநம... ... *	சர்வாங்காநிபூஜையாமி... ... *

என்று பாதம்- முழந்தாள்- தொடை- நிதம்பம்- நாபி- வயிறு- இதைய ம்- கண்டம்- கழுத்தடி- தோள்- உள்ளங்கை- நாசி- கண்- காது- தந்தம் சிரம்-சர்வாங்கம்- என்னுமிப்பதினுறிடங்களினும் அங்கபூஜைசெய்து,

ஓம் சுமுகாயநம... ... . * மாசிபத்ரம்பூஜையாமி... ... *
ஓம் கணாதிபதயேநம ... ... * பிர்ங்கராஜபத்ரம்பூஜையாமி ... *
ஓம் உமாபுத்ராயநம... ... * வில்வபத்ரம்பூஜையாமி ... ...*
ஓம் கஜானனாயநம ... ... * தூர்வபத்ரம்பூஜையாமி... ... *
ஓம் லம்போதராயநம... .... * பதரீபத்ரம்பூஜையாமி ... ... *
ஓம் ஹரசூனவேநம ... ... * துத்தூரபத்ரம்பூஜையாமி ... ...*
ஓம் கஜகர்ணாயநம... ... ... * துளசிபத்ரம்பூஜையாமி ... ...*
ஓம் குகாக்கிரசாயநம ... ...* கரமஞ்சரிபத்ரம்பூஜையாமி.....*
ஓம் ஏகதந்தாயநம ... ...* புரஹூதிபத்ரம்பூஜையாமி... ...*
ஓம் கஜவக்திராயநம... ... ..* சமிபத்ரம்பூஜையாமி ... ... *
ஓம் சுராக்ரகண்யாயநம... ... * தேவதாரபத்ரம்பூஜையாமி... *
ஓம் பாலசந்ராயநம ... ...* மருவபத்ரம்பூஜையாமி... ... *
ஓம் விகடாயநம... ... ... * கரவீரபத்ரம்பூஜையாமி ... .*
ஓம் விநாயகாயநம... ... ... * துருமோற்பலபத்ரம்பூஜையாமி *
ஓம் கபிலாயநம... ... ... * அர்க்கபத்திரம்பூஜையாமி... ,...*
ஓம் பின்னதந்தாயநம ... ...* அர்ச்சுனபத்ரம்பூஜையாமி... ..*
ஓம் பத்னிஹீனாயநம... ... * விஷ்ணுகிராந்திபத்ரம்பூஜையாமி*
ஓம் வடவேநம ... ... * தாடிமபத்ரம்பூஜையாமி ... ...*
ஓம் சூர்ப்பகர்ணாயநம ... ... * ஜாஜீபத்ரம்பூஜையாமி ... ... *
ஓம் மூஷிகவாஹனாயநம ... * கண்டலேபத்ரம்பூஜையாமி... ...*
ஓம் சர்வசித்திப்ரதாயகாயநம ...* ஏகவிம்சதிபத்ராணிபூஜையாமி.. *

என்று மாசிப்பத்திரம்- கரசராங்கனி- வில்வம்- அறுகு- இலந்தை- ஊமத்தை- துளசி- நாயுருவி- சிறுவழுதி- வன்னி- மந்தாரை - மருவு- அலரி- கோங்கு- வெள்ளெருக்கு- மருதம்-விஷ்ணுகிராந்தி- மாதுளை- சாதிமல்லி- தாழை-என்னுமிவ்விருபத்தொருபத்திரங்களால் அருச்சித்து,

ஓம் விநாயகாயநம... ... ... *
ஓம் விக்னராஜாயநம ... ... *
ஓம் கணநாதாயநம... ... .*
ஓம் கஜானனாயநம ... ... *
ஓம் மஹோதராயநம ... ...*
ஓம் மஹாதேவாயநம... ... *
ஓம் ஸ்னித்காஞ்சனஸமத்யுயேந
ஓம் ஏகதம்ஷ்டோத்கடாயநம ...*
ஓம் தேவாயநம ... ... *
ஓம் கஜவக்த்ராயநம... ... ...*
ஓம் மஹாபலாயநம ... ... *
ஓம் நாகயக்ஞோபவீதினேநம ...*
ஓம் நாகாபரணபூஷிதர்யநம.... *
ஓம் ஸர்வார்த்தஸம்பதாதாராயநம
ஓம் கணாத்யக்ஷாயநம ... ...*
ஓம் வரப்ரதாயநம ... ... *
ஓம் ருத்ரஸ்யதன்யாயநம... ...*
ஓம் உதாராயநம... ... ... *
ஓம் நாயகாயநம ... ...*
ஓம் ப்ரமதாதிபாயநம... .. *
ஓம் பத்மராகத்வதயேநம... ...*
ஓம் ஸோமாயநம... ... ... *
ஓம் ரக்தமால்யானுலேபனாயநம *
ஓம் அபலாயநம... ... ... *
ஓம் பாலரூபிணேநம ... ...*
ஓம் சுமுகாயநம... ... ... *
ஓம் சுரப்ரயாயநம... ... ...*
ஓம் ப்ரபவேநம... ... ... *
ஓம் புண்யாயநம ... ...*
ஓம் பூர்ணாயநம ... ... *
ஓம் பூர்ணோதராயநம ... ...*
ஓம் புண்யகீர்த்தயேநம... ... *

ஓம் புராதனாயநம ... ... *
ஓம் பர்த்ரேநம ... ... *
ஓம் சிவாயநம... ... ...*
ஓம் சாந்தாயநம... ... ... *
ஓம் ஜகன்னாதாயநம... ... ...*
ஓம் சாஸ்வதாயநம ... ... *
ஓம் ஸ்வேதபரிதானாயநம ... *
ஓம் த்ரயக்ஷாயநம ... ... *
ஓம் கனகசுப்ரபாயநம ... ...*
ஓம் சிவஸாம்பாயநம ... ... *
ஓம் மஹாதேஜஸேநம ... ...*
ஓம் மஹாபலபராக்ரமாயநம ...*
ஓம் ஸர்வக்ஞாயநம ... ... *
ஓம் க்ஞானஸம்பன்னாயநம ... *
ஓம் ஸர்வாபரணபூஷிதாயநம ... *
ஓம் பாபாபனோதனாயநம... ...*
ஓம் சண்டவிக்ரமாயநம ... *
ஓம் அலக்ஷ்மீமலநாசனாயநம... *
ஓம் குமாராயநம ... ... *
ஓம் காரணாயநம ... ... *
ஓம் காரிதாயநம ... ... *
ஓம் ஸர்வசித்திப்ரதாயகாயநம... *
ஓம் விபவேநம ... ... *
ஓம் ஈசாயநம ... ... *
ஓம் ஈசபுத்ராயநம ... ...*
ஓம் ஈஸ்பிதார்த்தப்ரதாயகாயநம *
ஓம் ஸ்ரீதாயநம ... ... *
ஓம் சுபாயநம ... ... *
ஓம் ஏகதந்தாயநம ... ... *
ஓம் ஏகவீராயநம ... ... *
ஓம் அநேகதாயநம ... ... *
ஓம் ஏகஸ்மைநம ... ...*
ஓம் ஏகப்ரதேநம ... ... *
ஓம் விஸ்வப்ரதேநம... ... ... *
ஓம் விஸ்வபூஜேநம ... ... *
ஓம் விஸ்வஸ்மைநம ... ... *
ஓம் விஸ்வக்ஞாயநம ... ... *
ஓம் ஸர்வபாவனாயநம ... ... *

ஓம் பாக்யதாயநம... ... ... *
ஓம் பவதாயநம ... ... *
ஓம் பாகினேநம ... ... *
ஓம் போகதாயநம ... ... *
ஓம் போகபாவனாயநம... ... *
ஓம் கவயேநம ... ... *
ஓம் கார்யாயநம ... ... *
ஓம் கனீனாயநம ... ... *
ஓம் கர்த்ரேயநம ... ...*
ஓம் க்ரதவேநம ... ... *
ஓம் க்ருதினேநம ... ...*
ஓம் க்ருத்யவிதேநம ... ... *
ஓம் அத்யுக்ராயநம ... ...*
ஓம் காந்ததர்சினேநம ... ... *
ஓம் க்ருதாந்தகாயநம ... ... *
ஓம் ஸ்துத்யாயநம ... ...*
ஓம் ஸ்தோத்ரேநம... ... ... *
ஓம் ஸ்தோகாயநம... ... ... *
ஓம் ஸ்தோத்ராயநம ... ... *
ஓம் த்ரயீமயாயநம ... ...*
ஓம் வேதாயநம ... ... *
ஓம் வேதாந்தக்ருதேநம ... ...*
ஓம் வேத்யாயநம ... ... *
ஓம் விதுஷாம்புத்திதாயநம ... *
ஓம் புதாயநம... ... ...*
ஓம் ஓங்காராயநம ... ... *
ஓம் ப்ரம்ஹவிதேநம ... ... *
ஓம் ப்ராம்ஹணாயநம ... ... *
ஓம் ப்ரம்ஹணேநம ... ... *
ஓம் ப்ரம்ஹபராயநம ... ... *
ஓம் பராயநம... ... ...*
ஓம் ஸர்வக்ஞாயநம... ... ...*
ஓம் ஸக்ததயேநம ... ...*
ஓம் ஸர்வலோகவேத்யாயநம . . *
ஓம் ஸர்வதாயநம ... ...*
ஓம் சுபகாயநம ... ... *
ஓம் அவ்யயாயநம ... ...*
ஓம் சித்திவிநாயகாயநம ... ...*

என்று அஷ்டோத்தரசததிவ்ய நாமபூஜைசெய்து, (தசாங்கம்குங்குளம் தூப- முத்தமம்கணநாயக - க்ருஹாணகணராஜேந்ர - விக்னஹாரின்ன மோஸ்துதே, ஸ்ரீகணநாயகாயநம- தூபமாக்ராபயாமி,ஸர்வக்ஞசர்வலோகேச- ஸர்வபூதஹிதோரதஃ- க்ருஹாணமங்களம்தீபம்- ருத்ரப்ரியநமோ

ஸ்துதே, ஸ்ரீசர்வக்ஞாயநம- தீபம்தர்சயாமி,நைவேத்யம்ஷட்ரஸோபே தம்-பலலட்டுஸம்யுதம்-மோதகம்பரமான்யம்ச-நமஸ்தேவிக்னநாசனு,ஸ்ரீ விக்னநாசனுயநம- நைவேத்யம்ஸமர்ப்பயாமி, தாம்பூலமுத்தமந்தேவ - க்ருஹாணசுரபூஜித - கற்பூரசூர்ணஸம்யுக்தம் - மயாதத்தமிதம்விபோ ஸ்ரீருத்ரப்ரயாயநம- தாம்பூலம்ஸமர்ப்பயாமி, ஸதாந்தனதவிக்னேச- புஷ்டலானிதனுநிச- பூம்யாம்ஸ்திதானிபகவன்- ஸ்வீகுருஷ்வவிநாயக,ஸ்ரீ விக்னேசாயநம-ஸ்வர்ணபுஷபம்ஸமர்ப்பயாமி,) என்று தூபங்கொடுத்து, தீபங்காட்டி, நைவேத்யஞ்செய்து, தாம்பூலமும் ஸ்வர்ணபுஷ்பமுங் கொடுத்து, (விக்னராஜநமஸ்துப்யம்- பாபக்ஞானப்ரணுசன புனரர்க்யம்ப்ரதாஸ்யாமி - க்ருஹாணசுரசத்தம, ஸ்ரீவிக்னராஜாயநம-புனரர்க்யம் ஸமர்ப்பயாமி) என்று அர்க்யங்கொடுத்து,

ஓம் கணுதிபாயநம ... ...*	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் உமாபுத்ராயநம... ....*	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் அகநாசாயநம ... ...*	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் விநாயகாயநம ... ...*	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் ஈஸ்வரபுத்ராயநம... ... *	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் விக்னராஜாயநம ... ... *	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் ஏகதந்தாயநம ... ...*	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் இபவக்திராயநம ... ... *	தூர்வாயுக்மம்ஸ்மர்ப்பயாமி......*
ஓம் ஆகுவாஹனுயநம... ... *	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் குமாரகுருவேநம... ... *	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் சுமுகாயநம... ... ... *	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் சுராக்கிரகண்யாயநம ... *	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் ஸ்தூலகண்டாயநம ... ...*	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் குகாக்ரசாயநம ... ... *	தூர்வாயுக்மம்ஸ்மர்ப்பயாமி......*
ஓம் லம்போதராயநம ... ... *	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் பின்னதந்தாயநம ... ...*	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் விசாலாக்ஷினேநம... ... *	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் காமரூபியேநம... ... ...*	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் பாலசந்ராயநம - ... ...*	தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் சர்வசித்திப்ரதாயகாயநம... *	ஏகவிம் சதிதூர்வாயுச்மம்சமர்ப்பய

என்று சந்தனத்திற்றேய்த்த இரண்டிரண்டு அறுகினல் இந்த இருபத்தொருதிருநாமங்களையுஞ்சொல்லி அருச்சித்து, (நமஸ்தேதேவதேவேச- நமஸ்தேகணநாயக- நீராஞ்சனம்ப்ரயஸ்சாமி-ப்ரஸன்னேபவமேப்ரபோ ஸ்ரீதேவதேவாயநம- நீராஞ்சனம் ஸமர்ப்பயாமி,) என்று ஆலத்திசுத்தி (ஆகுவாஹனதேவேச-விஸ்வவ்யாபின்கஜானன- ப்ரதக்ஷிணம்கரோமித்வாம்- மமத்வம்ஸன்னிதிம்குரு, ஸ்ரீஆகுவாஹனுயநம- ப்ரதக்ஷணம்ஸமர்ப்பயாமி,) என்றுவலம்வந்து, (நமஸ்தேகஜவக்த்ராய- நமஸ்தேகணநாயக- நமஸ்தேதேவதேவேச- கௌரீபுத்ரநமோஸ்துதே, ஸ்ரீகௌரிபுத்ராயநம- நமஸ்காரம்ஸமர்ப்பயாமி,) என்று தீர்க்கதண்டன்செய்து, (தேவதானவகோடீர- மணிரஞ்சிதபாதக-க்ஷமன்வதேவதேவேச-புத்ராக்னீ

ர்த்திஞ்சதேஹிமே, ஸ்ரீகஜவக்த்ராயநம-ப்ரார்த்தனம்ஸமர்ப்பயாமி,)என்று பிரார்த்தித்து, (க்ருதவர்த்திஸஹஸ்ரேஸ்ச - கர்ப்பூரசகலேஸ்ததா-நீராஞ்சனம்மயாதத்தம்- க்ருஹாணவரதோபவ, ஸ்ரீகணபதிபாயநம-நீராஞ்சனம் ஸமர்ப்பயாமி,) என்று ஆலத்திசுத்தி, (தேவதேவகணத்யக்ஷ-சுராசுரவரார்ச்சிதா- அவிக்னம்குருமேதேவ - ஸர்வகார்யேஸ்துஸர்வதா, விநாயகநமஸ்தேஸ்து- ஸததம்மோதுகப்ரய - அவிக்னம்குருமே தேவ- ஸர்வகார்யேஸ்துஸர்வதா,)என்று க்ஷமாபணஞ்செய்து, ஏவங்குணவிசேஷணவிசிஷ்டாயாம்சுபதிதௌ.ஸ்ரீசித்தி விநாயகமூர்த்திஸய,ஸ்ரீசித்திவிநாயகப்ரீத்யர்த்தம். ஸ்ரீசித்திவிநாயகபூஜாஞ்சோபாயனதானங் கரிஷ்யே,) என்றுசங்கற்பங்கூறி- சந்தனபுஷ்பாக்ஷதைகளைக் கொண்டு ப்ராம்மணபூஜைசெய்து, (கணேசஃபரதிக்ருண்ஹாதி- கணேசோவைததானிச- கணேசஸ்தாரகோபாப்யாம்-கணேசாயநமோநம) என்றுவாயனதானஞ்செய்து, இவ்வாறு எல்லாப்பூசனைகளையுங் குறைவறநடாத்திய பின்னர் ஒருபக்கத்திலிருந்து, விதிப்படிநியாசஞ்செய்து,தியானுதிகளைமுடித்துக்கொண்டு, ஓர்மாதமளவும் ஊணுறக்கங்களைநீத்து, அநுட்டிப்பினீற்றிநாளில் முன்போலவே எல்லாப்பூசனைகளையுநிறைவேற்றித், தருப்பண ஓமாதிகளைக்கிரமப்படிநடாத்தி, சிலசேடியர்கள்முத்துமாலைகளால் அலங்கரித்திருக்கின்ற பந்தலின்கீழ், கவரிகொடைமுதலியசின்னங்கள்விளங்கப், பலவிதவாத்தியவொலியோடு- நெய்ப்பொங்கல்- சுத்தப்பொங்கல்- தயிர்ச்சோறு- பாற்சோறு- மிளகோரை- கடுகோரை- இலவங்கோரை- எள்ளோரை- சர்க்கரைப்பொங்கல்- முதலாகிய சித்திரான்னங்களும், உளுந்து- சீரகம்- பெருங்காயமுதலிய வைகளைக்கூட்டிப் பாகப்படுத்தியிருக்கின்ற பூசுணிக்காய்க்குழம்பும், மற்றைய காய்-கனி- பூ-தண்டு- இலை- கிழங்கு- இவைகளினுல் வெவ்வேறுகச்செய்திருக்கின்ற குழம்புகளும், பலவிதப்பொரிக்கறிகளும், பலவிதத்துவட்டுக்கறிகளும், பலவிதஊறுகாய்களும், பலவிதத்துவையல்களும், பலவிதவறையல்களும், பருப்பு பிட்டு மாவு பொரி முதலாகியபண்டங்களும், பலவிதச்சுண்டல்களும்,வெல்லப்பச்சரிசியும், வறுத்தபருப்பும், சர்க்கரை- பயறு- எள்ளு- தேங்காய்முதலியவைகளோடு, ஏலமுதலியவாசனை வஸ்துக்களையுங்கலந்து செய்திருக்கின்ற உண்டைகளும், வெவ்வேறுமோதகங்களும், அடை-முறுக்கு- பணியாரம்- அப்பம்- தேன்குழல்- பிட்டு- வடை- இலட்டுகம்-தோசை- முதலியசிற்றுண்டிகளும், மற்றவுணவுகளும், வெள்ளரிக்காய் முதலிய காய்வருக்கங்களும், தெங்கின்கனி, விளாங்கனி, நாவற்கனி, பலாக்கனி, மாங்கனி, வாழைக்கனி- முதலிய கனிவர்க்கங்களும், தேன் -நெய்- பால்- தயிர்- மோர்- நீர்மோர்- முதலிய அமுதங்களும்- இளநீர்-வெந்நீர்- தண்ணீர்- சர்க்கரைநீர்- கரும்புநீர்- பழநீர்- முதலிய நீர்த்தினுசுகளும், ஆகிய இவைகளையெல்லாம் வேறுவேறு தட்டுகள் தாம்பாளங்கள் கிண்ணங்கள் கரகங்கள் முதலியபலவகைப் பாத்திரங்களில் அமைத்துக்கொண்டுவர, அவைகளையெல்லாம்மந்திரபூர்வகமாகநிவேதனஞ்செய்து,நீர்விளாவி,பாத்தியநீராதிகளையுந்தந்து, வாசனைத்திரவியங்கள்சேர்ந்த பாகடைநுகர்வித்து, அகில்- சந்தனம்- கருங்காலி- வில்வம்-அரிச்சுனம்- என்கின்ற பஞ்சதூபங்களைக்கொடுத்து, நட்சத்ரதீபம்-ரததீபம்-கு

ட்டீபமுதலிய பலதீபங்களைக்காட்டி, கண்ணாடி- குடை- சாமரை- கொடி- ஆலவட்டம்- விசிரி- முதலியசின்னங்களை வழங்கி, சணுநந்துவாவொன் னுமனுவைச்சொல்லி, மந்திரபுட்பஞ்சாத்தி, சீயசாதமந்திரத்தாலசற்பூரநீராஞ்சனஞ்சுழற்றி, வலம்வந்து, திருவடிகளில்வணங்கி, அன்னதானம்- வஸ்திரதானம்- கன்னிகாதானம்- கோதானம்- பூதானம்- இரணியதானம் உபயமுகிதானம்- மகிஷதானம்- அஸ்வதானம்- சுவேதாஸ்வதானம்- உரலதானம்- சாளாமுகிதானம்- மகமேருதானம்- கற்பகவிருட்சதானம்- வித்தியாதானம்- மகாதானம்- என்கின்றசோடசதானங்களைவழங்கி, கணேசமூர்த்தியைத்தமது இதயகமலத்திலிருத்தி, பொன்னாற்செய்த மூர்த்தியையுங் கும்பத்தையும் பலதிரவியங்களோடு புரோகிதருக்களித்து, பிருதிவிமூர்த்தியைப் பலமங்கல வாத்தியங்களோடுமெழுந்தருளச்செய்து, நதியிற்சலவாசமாகவைத்து, மீட்டுந் தமது அரமனையைச்சேர்ந்து, சுற்றத்தினரோடு விருந்துபோசனஞ்செய்து, விநாயகமூர்த்தியினுடைய பேரருளைக்கொண்டு, சிவபெருமான் கங்கைக்குமுன்னர் தம்மைவிவாகஞ்செய்துகொள்ளப்பெற்று, தமதுமனக்கவலைகளை யொழித்திருந்தனர். குறைவற்றகிருபாநிதியாகிய விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்தி விரதமகத்துவத்தைத்தெருட்டும் இசசரித்திரத்தைச், சாவருங்கேட்டு மனமகிழும்படி பிரசிங்கித்த புண்ணியசீலர்களும், இச்சரித்திரமுழுவதும் ஆராய்ந்து ஆனந்தபரவசத்தராய்க் களித்தகுணசம்பன்னரும், இதனைவழுவின்றிவாசித்து இதன்பயன்களைத்தெரிந்து மனப்பூரிப்புடனிருக்கின்ற மேன்மக்களும், இப்பூவுலகின்கணிருக்கின்றபரியந்தம், இலக்குமியையொத்தவனப்பும், அருந்ததியையிகரத்தகற்பும், பூமிதேவியை எதிர்த்தபொறுமையும் வாய்ந்தகன்னிகையை மணந்தின்புற்று, நன்னெறிகளையநுசரித்து வரும்புதல்வர்களைப்பயந்து, தனதான்யமுதலிய செல்வங்களை யடைந்து, அந்தியகாலத்தில்மோக்ஷசாம்பிராச்சியமுங்கிடைக்கப்பெற்று, நீடூழிகாலம் விநாயகமூர்த்தியினுடையதிருவடிநீழலிற்குடிகொண்டிருப்பார்கள்.

கணபதிதுணை.

பதினாறாவது.

கர்த்தமன்உபாசித்தபடலம்.

ஓசவுனகாதி முனிவர்களே, உமையம்மை விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்திவிரதத்தை யநுட்டித்துச், சிவபிரானைத் திருமணஞ்செய்தருளியமுறைமையைச்சொன்னோம், இப்பால்கர்த்தமராசன் அநுட்டித்தகிறத்தைச்சொல்லுவோங்கேட்பீராக. இப்பூவுலகமுழுவதும் ஓரேகொடைநீழலிலிருத்தித், தனதுஆக்கியா சக்கரத்தைத்திசையெங்கணுமுருட்டிச், சகலசத்துருக்களையெல்லாஞ் செயிக்கத்தக்க புஜபலபராக்கிரமத்தோடு, சகலவொராசிகளுக்கும் ஒருதுன்பநேராதவண்ணம் அரசாக்ஷியை நடாத்திவருகின்ற, கர்த்தமனென்னும் ஓரரசனிருந்தான். அவ்வரசனிடத்தில் ஓ

ருநாள் பிருகுமகாமுனிவரெழுந்தருளிவர, அவ்வரசன் பெருமகிழ்ச்சியோடெதிர்கொண்டுவரவழைத்து, ஆதனத்திலிருத்தி, அன்புடன் பூசித்துக், கையுறைதந்து, விசிறிகொண்டு வெயர்வையைமாற்றிக், குளிர்ந்தவுபசாரவார்த்தைகளைப்பேசி இளைப்பாற்றிப், பின்னர் மிக்கமுகமலர்ச்சியோடுமிதனைப்பேசுவதாயினன். எல்லாத்தேவர்களும் ஏவலுக்கெதிர்பார்த்திருக்கத்தக்கமகாபெருமையினையுடையவோ தவசிரேஷ்டரோ, அடியேன்யாதொருவருத்தமுமின்றி,இவ்வுலகமுழுமையுமெனதொருகுடையில் நிறுத்திப், பகைவர்களையெல்லாம் பகுதிதரவென்று, அளவற்றசெல்வத்தை அநுபவிக்கின்றேனாதலால், இத்தன்மைத்தாகியசெல்வம் அடியேற்குண்டானது எந்தஏதுவினாலோ, அதனைத்தெரியச்சொல்லவேண்டுமென்றுவிண்ணப்பஞ்செய்துகொண்டான். அதனை அத்தவராசசிகாமணியாகியபிருகுமுனிவர்கேட்டு, அரசனே- நீமுற்சனனத்திலும, வைசியகுலத்திலேயே அவதரித்திருந்தனை. ஆயினும- அக்காலத்து நீ அதிகசெல்வத்தையுடையவனாயிராததால், உனது குலகருமங்களைக்கைவிட்டனை. அதனால் உனதுசுற்றத்தாரெல்லாமுன்னைவெறுத்துப்பலவாறுதூஷித்தார்கள். அத்தூடணவார்த்தைகளை நீகேட்டமாத்திரத்தில், உனக்கு இருசெவிகளுந்தைத்துக், கொடியகாட்டிலேனுஞ்சென்றுஉயிரைநீக்கிக்கொள்ளுவோமென்றெண்ணிமனம்வெறுத்து, வீட்டைத்துறந்து காட்டிற்செல்கின்றபோது,அங்கோராசிரமத்தினைக்கண்டனை. அவ்வாசிரமத்தில், வேதாகமபுராணங்களைவாசிக்கின்றவர்களும்,அவைகளைக்கேட்கின்றவர்களும், பலதவமாதிகளைச்செய்துமுடிக்கின்றவர்களுமான அளவற்றமுனிபுங்கவர்கள்புடைசூழச், சவுபரிமகாமுனிவரெழுந்தருளியிருப்பதைக்கண்டு, அவரருகிற்சென்று, சாஷடாங்கமாகப் பணிந்தெழுந்துநின்றனை. பின்னர் அம்முனிவர் உன்வதனத்தைநோக்கி, நீமிக்கமனவருத்தத்துடன் இங்குவந்தகாரியமென்னவென்றுவினவ, அதற்குநீசொன்னதாவது, சுவாமி- அடியேற்குவறுமைநேர்ந்தகாரணத்தால்சுற்றத்தினரெல்லாம்வெறுக்க, அதற்குமனஞ்சகியாதவனாகி, நமதுஉயிரைக்காட்டிற்சென்று கைவிடுவதேஉத்தமமென்றெண்ணி வெளிக்கொண்டுவந்தேன், அவ்வாறுவந்த என்னை, முற்பிறவியிற்செய்திருக்கின்ற எனதுதவப்பயனானது, தேவரீருடையதிவ்வியசமூகத்திற்கொண்டுவந்துவிட்டது, இனி அடியேற்கென்னகுறையிருக்கின்றதென்றுசொல்லும், அவையனைத்தையுஞ் சவுபரிமுனிவர்கேட்டு, மிகவுமிரக்கமுற்று, உனக்குதீக்ஷைசெய்து, விநாயகக்கடவுளுடைய மந்திரத்தையுபதேசித்து, அதை யநுட்டிக்குமுறைமையையுஞ்சொன்னார். அதை நீயவ்வாறேஅநுட்டித்துவருங்காலத்தில், விநாயகசதுர்த்திவந்தது. அத்தினத்தில், அச்சதுர்த்திவிரதத்தை உன்னுடன்கூடவிருந்து ஆகமவிதிப்படி முடிப்பித்தார். பின்னர் அவ்விரதமநுட்டித்தமகிமையினாலே, விநாயகக்கடவுளுக்குக்கிருபைசுரந்து, உனதுவீடுமுழுவதும் பொன்மணிமுதலான சகலபொருள்களும், அளவற்றசெல்வங்களுங்குபேரனுடைய அளகாபுரியைப்போல நிறைந்திருக்கும்படியாகச்செயதார். அதனைத்தவசிரேஷ்டராகிய சவுபரிமுனிவர்தெரிந்துகொண்டு, உனக்கறிவித்து, நீவீட்டிற்குச்செல்லும்படியாகக்கட்டளையிட்டனர். உடனே அவருடைய திருவடிகளை வணங்கி வந்தித்து விடைபெற்றுக்கொண்டு, உனதுநகரத்திற்சேர்ந்து,அ

ளவற்றபாக்கியங்களோடு நிறைந்திருக்கின்றவீட்டினையடைந்து, முன்னர் வெறுத்தசுற்றத்தினரெல்லாம் எதிர்கொள்ளப்பெருமகிழ்ச்சியையுடையவனாகி, அளவளாவிய போகங்களையநுபவித்திருந்தனை. இச்சனனத்திலும், அவ்வாறேயநுபவிக்கின்றாய். இத்தனைஐசுவரியமும், நினக்குமுன்னமே சகலசித்திகளையுமளிக்கத்தக்க சதுர்த்திவிரதத்தின் மகிமையாதலால் அதனைஎக்காலத்துங்கைவிடாது அநுட்டித்துவரக் கடவையென்று திருவாய்மலர்ந்துவிடைபெற்றுத், தமதுஆசிரமத்தையடைந்தனர். பின்னர்கர்த்தமராசன் அளவற்றஆனந்தத்தில்மூழ்கி, வருடந்தோறும் அவ்விநாயகசதுர்த்திவிரதத்தை இடைவிடாதநுட்டித்துக், தனதுபுத்திரன்புயத்திற்பூபாரத்தைச்சுமத்திக், கணேசமூர்த்தியினுடைய கருணையால் பேரின்பமுத்தியையடைந்தான்.

கணபதிதுணை.

பதினேழாவது.

நளன்உபாசித்தபலடம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகக்கடவுளுடைய சதுர்த்திவிரதத்தைக்கர்த்தமராசனநுட்டித்து, உம்மையிற்செல்வத்தையும்மறுமையில் முத்தியையுமடைந்தபேற்றினைச்சொன்னோம், இப்பால்நளராசனநுட்டித்ததிறத்தைச்சொல்லுவோங்கேட்பீராக. வண்டினங்கள்இசைபாடி மொய்க்கின்றபூஞ்சோலைகள்சூழ்ந்தநிடதநாட்டில், நவரத்னச்சொர்ன்னமயமாயிருக்கின்றமாடமாளிகைகள் நிறைந்தவிந்தநகரமென்னும்ஒருபட்டணமுண்டு. அப்பட்டணத்தில், தன்னைக்கண்ட மாதர்களையெல்லாம் உடனே மன்மதபாணங்கட்கிரையாக்கத்தக்க பேரழகுடையவனாகியும், இரந்தோர்க்கு இலையாதளிக்கின்ற வள்ளலாகியும், அளகேசனைமருட்டும்படியான ஐசுவரியத்தையுடையவனாகியும், எதிர்த்துவருகின்றசத்துருக்களுக்கு இடியேறொத்தவனாகியும், தருமசாத்திரங்களில்ஆங்கீரசமுனிக்கொப்பானவனாகியும், நளனென்னுமியற்பெயரையுடைய ஓரரசனிருந்தான். அவ்வரசன்-பதுமவத்தனென்கின்ற அமைச்சனோடு, திசையனைத்தினுந் தனது செங்கோலைச்செலுத்திச், சகலவுயிர்களையும்பாதுகாத்துத், தமயந்தியென்னுமனைவியுடன்வாழ்ந்திருக்கின்றநாளையில், அவனிடத்தில், வச்சிராயுதத்தையேந்தியஇந்திரனுக்கு, இமைப்போதில்ஆயிரங்கண்களைத்தந்தகவுதமமுனிவரெழுந்தருளினர். அம்முனிவரை அவ்வரசனெதிர்கொண்டழைத்துவந்து, ஓராதனத்திலிருத்திப், பலவிதஉபசாரங்களுடன்பூசித்துச், சாஷ்டாங்கவந்தனஞ்செய்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்று, சுவாமி-அடியேனுய்யுமாறு ஓர்விரதத்தைத் தேவரீர்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தலும், அம்முனிவர்கிருபைசுரந்து இதனைச்சொல்லுவதாயினர். அரசனே-நீமுற்சனனத்தில், கற்றவர்களாற்புகழத்தக்க கவுடதேசத்திற்கரசனாகிப், பலவின்பங்களையுங் குறைவின்றியநுபவித்து அரசியற்றிவ

ருங்காலத்தில், சத்துருக்களையெல்லாஞ்செயித்து,அவர்கள் தேசங்களைக் கைவசமாக்கிக்கொள்ளுநிமித்தம், சகலசேனைகளோடும்வெளிக்கொண்டு செல்கின்றபோது,ஓர்வனத்தின் வழியாகச்செல்ல,அவ்வழியில் ஓராசிரம த்தைக்கண்டு, அங்கெழுந்தருளியிருக்கின்ற கவுசிகமுனிவரையடைந்து, தேவர்களெல்லாம்வணங்கத்தக்க அவரதுதிருவடிகளைப் பணிந்தெழுந்து, பலவாறுதுதித்துநின்றனை. அம்முனிவர் கன்றைக்கண்ட பசுவைப்போல உன்மீதுகிருபாநோக்கஞ்செய்து, தமது ஞானதிருஷ்டியினால் உனதுவரா வையறிந்துகொண்டு, வினைவில்முத்தியளிக்கவல்ல விநாயகக்கடவுளுடை ய சதுர்த்திவிரதத்தைஉனக்குபதேசித்து,அதைஆகமவிதிப்படிஅநுட்டிப் பித்தார். பின்னரம்முனிவரிடத்தில்விடைபெற்று, உனதுநகரத்தையடை ந்து, சத்துருக்களையெல்லாம் வென்று, சகலதேசங்களையுங் கைவசமாக் கி, அளவற்றசிறப்போடும் வாழ்ந்திருந்தனை. அந்தப் புண்ணியபலத்தினா ல் இச்சனனத்திலும் அளவற்றபோகங்களையநுபவிக்கின்றாய். ஆதலால்– பொற்கொன்றைசூடிய விநாயகக்கடவுளுடைய சதுர்த்திவிரதமே எல்லா விரதத்தினுமேலான விரதமாகும், அவ்விரதத்தையே சதாகாலமுமநுட் டித்துவருவையென்றுசொல்லித்,தெய்வலோகத்திற்கொப்பானதமதாசிர மத்துக்கெழுந்தருளினார். பின்னர் நளமகாராசன்வருடந்தோறும் அவ்வி ரதத்தையநுட்டித்து, மெய்ஞ்ஞானசுகத்தையடைந்து, பரமானந்த வெ ள்ளத்தில்மூழ்கினான்.

கணபதிதுணை.

பதினெட்டாவது.

சந்திராங்கதனுபாசித்தபடலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே,விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்திவி ரதத்தை நளராசனநுட்டித்துச்,சகலவேந்தர்கட்குஞ் சக்கிரேஸ்வரனான திறத்தைச்சொன்னோம், இப்பால் சந்திராங்கதராசன் அநுட்டித்த திறத் தினைச்சொல்லுவோங்கேட்பீராக. சகலவளப்பமும்பொருந்திய மாளவ தேசத்தில், எல்லாநகரத்தினுஞ்சிறந்த கன்னநகரத்தில், சத்துருக்களைநா சஞ்செயயத்தக்க வேலாயுதத்தைத்தாங்கி, சகலவுயிர்கட்கும் இதஞ்செ ய்துவருகின்ற சந்திராங்கதனென்னும் ஓரரசனிருந்தான். அவ்வரசனான வன், இந்துமதியென்கின்ற தனதுமனைவியோடு,அளவற்றபோகபாக்கிய ங்களைக்குறைவின்றி யநுபவித்துவருகின்ற நாளையில், ஒருநாள் அவ்வரச னை மந்திரித்தலைவர்கள்வணங்கி, ஓ மண்டலேஸ்வரா– காட்டில்மிருகங்க ள் மிகுத்திருக்கின்றதால், வேட்டையாடுவதற் கெழுந்தருளவேண்டுமெ ன்றுவிண்ணப்பஞ்செய்துகொண்டார்கள்.வேந்தர்க்குவேட்டையாட விதி த்திருக்கின்றவேதமுறைமைப்படி, தானதற்கிசைந்தெழுந்து, மள்ளர்கள் முதலானசேனைகளோடு மலைச்சாரல்களிலுள்ள வனங்களிற்புகுந்து, பு

லி- மான்- காட்டெருமை- கரடி- பன்றி- காட்டானை- முட்பன்றி-முதலான மிருகங்களையெல்லாம், கொலைமுகத்திற்சோராநின்ற யமனைப்போலச்சாடிக்கொண்டிருக்கின்றசமயத்தில், சிலஇராக்கதர்கள்வந்து அவனோடெதிர்க்க, அவர்களுடைய தாள்களையுந் தோள்களையுங் கண்டதுண்டமாகச்சேதித்து, நிலத்திலுதிரவெள்ளமோடும்படியாகச்செய்தான். இவ்வாறு அரசன் அரக்கராவியை யுண்டசெய்தியை ஓரரக்கிகேள்விப்பட்டு,தானுமவனையெதிர்த்துப்போர்செய்து, அவன்கரத்தைப்பற்றுமாறுநெருங்கிவருதலும், அரசன்வலியிழந்து, அவ்வனத்திலிருக்கின்ற ஓர்மடுவிற்பாய்ந்தான். அம்மடுவில் ஸ்நானஞ்செய்ய வந்திருந்த நாகலோகஸ்திரீகள், அவ்வரசனைக்கண்டவுடன், இன்று நமக்குப்பெருஞ்செல்வம் வந்ததென்று மனங்களித்து, அவனையழைத்துக்கொண்டு தங்களுலகத்தைச் சேர்ந்து, ஆடையாபரணமுதலான வைகளைக்கொடுத்து, இனிய அமுதங்களையூட்டித்,தம்மைப்புணர்ந்து இன்புற்றிருக்குமாறு அவனை வேண்டினார்கள். அதற்கவன்சம்மதியாது,நான்ஏமகந்தராசனுடையபுத்திரன்,எனதுசுயஸ்திரீயையன்றி மற்றபரஸ்திரீகளை யான்கவனிக்கின்றதில்லையென்று மறுத்துவிட்டான். இவ்வாறு அரசன் மறுத்துரைத்தும், அந்நாகலோகஸ்திரீகள் அவன்மீதுவைத்தஆசையை வெறுக்காதவர்களாய், அவனைஎவ்விதத்தேனுந் தங்கள்வசமாக்கத்தக்க இனிமைகளைப் பலவாறுகாட்டிச்,சற்றுங்கோபியாமல், அவ்விடத்திற்றானேநிறுத்தி, அளவற்றவுபசாரங்களைச்செய்துகொண்டிருந்தார்கள். இப்பால் அவ்வரசனோடு வேட்டைக்குவந்தபரிசனங்களெல்லாந், தங்கள்நாயகனை எங்குந்தேடிக்காணாமல், மடுவில்வீழ்ந்திறந்தானென்றுநிச்சயித்து, அவன்மனைவியாகிய இந்துமதிக்குச்சொல்ல, அவளதனைக்கேட்டலும், விடந்தலைக்கேறினவளைப்போலமிகுந்ததுயரமுற்று,மார்பிலணிந்திருக்கின்ற முத்தாரங்களெல்லாஞ் சிதறும்படியாகச்சோர்ந்துவீழ்ந்து,வேறொருதேறுதல்காணாமல், கரையில்லாத துக்கக்கடலில்மூழ்கி, மாங்கல்லியவிச்சின்னஞ்செய்து, செய்யத்தக்க கருமாதிகளையுஞ்செய்துமுடித்து,மிக்க கவலையுற்றிருக்கின்றநாளையில்,பன்னிரண்டுவருடஞ்சென்றபின்பு, திரிலோகசஞ்சாரியாகிய நாரதமுனிவரங்கெழுந்தருள, அவரை அவ்விந்துமதிகண்டு, சாஷ்டாங்க வந்தனஞ்செய்து எதிர்நின்றனள். நாரதமுனிவர் அவளைப்பார்த்து, ஓ வனிதரத்னமே- உன்னைவருத்துகின்ற மனக்கிலேசத்தையொழித்துவிடு. மன்மதனை வெல்லத்தக்கபேரழகினைவாய்ந்த உன்கணவன்நாகலோகத்திலிருக்கின்றான், அவனவ்விடத்தையகன்றுவிரைவில் இங்ஙனம்வருவதற்கு ஓருபாயமுண்டு. அஃது சந்திரசடாதரமூர்த்தியாகிய விநாயகக்கடவுளின் சதுர்த்திவிரதமேயாம். அவ்விரதத்தை யன்போடுநடாத்தக் கடவையென்றுசொல்லி, அதனையநுட்டிக்கு முறைமையையுந்தெரிவித்து, ஏகாக்ஷர மந்திரத்தையுபதேசஞ்செய்து எழுந்தருளினர். அத்தினமேதன் துணைவன்புயங்களைச்சேரப்பெற்றவள்போலமனங்களித்து, ஆனந்தமாகி, சதுர்த்திவரவை எதிர்நோக்கியிருந்தனள். பின்னர் அதுவந்தவுடன், அவ்விரதத்தைஆகமவிதிப்படி அநுட்டித்தாள். உடனே கணேசமூர்த்திக்குக்கிருபையுண்டாக,அக்கிருபையினால் நாகலோகஸ்திரீகளுக்கு மனமிரங்கிக், கற்பின்மகளிரையொத்துச்சற்றேனுமனங்கலையாதிருந்த சந்திராங்கதராசனைக் குதிரையின்மீதேற்றி

ஆபரணமுதலிய அளவற்றதிரவியங்களைத்தந்து, முன்னர் தாங்கள்கண்டெ ழைத்துவந்த மடுக்கரையிற்கொண்டுவந்துவிடுத்து, தாங்கள் அவன் மீது வைத்திருந்தபலநாள் இச்சைகளையும் ஒருநாளிலொழித்து, மீட்டுந்தங்க ளுலகத்திற்சென்றார்கள். இப்பால் அரசன்குதிரைமீதேறிவருகின்றசேதி யைநகரத்தாரறிந்து அமைச்சர்களுக்கறிவிக்க, அவ்வமைச்சர்கள்பொரு க்கென்றெழுந்து, எதிர்கொண்டோடி, தங்களரசனைக்கண்டு,முத்தியின் பத்தையடைந்தவர்களைப்போல ஆனந்தமாகி, அலங்காரஞ்செய்தபட்ட த்துயானையைக்கொண்டுவந்து நிறுத்தினார்கள். பின்னர் அசரனனவன் மேகவாகனனாகிய தேவேந்திரனைப்போல அளவற்ற மகிழ்ச்சி யடைந்து அந்தயானைமீதாரோகணித்து, நகரத்தை வலமாகவந்து, தனதுஅரண்ம னையைச்சேர்ந்து,நவரத்னமயமாயிராநின்ற ஸிம்மாதனத்தில்வீற்றிருந்து,பு ரோகிதர்முதலிய பெரியோர்களைக்கூவி, தலைவனைப்பிரிந்தஸ்திரீகளும் ஸ் திரீகளைப்பிரிந்ததலைவனும் பின்னரொன்று படுங்காலத்தில் நடத்தவேண் டியவிதிகளென்னென்றுவினவ, அவ்வேதியர் வேதாகமங்களையாராய்ந்து ணர்ந்து அறிவிக்க, அவ்வாறேசகலசடங்குகளையுநிறைவேற்றி, ஆடையா பரணாதிகளைத்தானஞ்செய்து, தன்மனைவியோடும் இன்புற்று வாழ்ந்திரு ந்தான். பின்னர் இந்துமதியானவள்மணவறையிற் றன்புருடனோடுகலந்தி ருக்கின்றசமயத்தில், முன்னர்தன்னிடத்தில் நாரதமுனிவரெழுந்தருளி அரசன்க்ஷேமத்தையறிவித்ததும், அவனைமீட்டுமடையுமாறு கணேசமூ ர்த்தியினுடைய சதுர்த்திவிரதத்தையுபதேசித்ததும், அவ்வாறே அவ்வி ரதத்தைத்தானனுட்டித்ததும் விவரமாகச்சொல்ல, அவைகளனைத்தை யுஞ்சந்திராங்கதராசன்கேட்டு, மிக்கமனக்களிப்படைந்து, விநாயகமூர்த் தியைப்பலவாறுதுதித்து, அவரது சதுர்த்திவிரதத்தைத்தன்மனைவியோடு ம் இடைவிடாது அநுட்டித்து, அந்தத்தில்பேரின்பவீடடைந்து, ஆனந் தசாகரத்தில்மூழ்கினன்.

கணபதிதுணை,

பத்தொன்பதாவது,

சண்முகர்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே, விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்தி விரதத்தால்,சந்திராங்கதராசன் தானிழந்தநகரத்தினைமீட்டுமடையப்பெ ற்று, முடிவில் முத்தியடைந்த வரலாற்றினைச்சொன்னோம், இப்பால்சண் முகதேவர் அநுட்டித்ததிறத்தினைச் சொல்லுவோம் கேட்பீராக. முன் னொருகாலத்தில், உமாபரமேஸ்வரிமணாளராகிய சிவபெருமானிடத்தில் நூற்றெட்டுயுகம்வரையில் அரசாளுந்திறத்தைப் பெற்றதாருகாசுரனென் னும் ஓர் அசுரனிருந்தான். அவ்வசுரனனவன், தேவேந்திரன் ஆயிரத்தெ ட்டண்டங்களையும் ஆண்டுவருவதைநோக்கி,மனஞ்சகியாது,அவைகளனை த்தையுந்தன்னொருகுடைநீழலின்கீழிருத்தித்,தேவர்களையெல்லாம்வெளி

விட்டாமற்சிறையில்வைத்துத் துன்பப்படுத்தினன். அச்சிறையிலகப்படாத இந்திரன்- பிரமன்- விண்டு- முதலியசிலதேவர்கள்மாத்திரம், அப்பாதகனவிழிக்குத்தப்பி, மகமேரு கிரியைச் சார்ந்து மெலிவெய்தி, யானையுரிபோர்த்தருளிய சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்திருந்தார்கள். அப்போது அககடவுளுடையகிருபையினால்,(ஓ விண்டுவாதியரோ- நீங்கள்தேவர்கட்குவந்த இடுக்கண்களைநீக்கக்கருதுவீராயின், சிவபெருமான் சுப்பிரமணியதேவரைத் தருவதான ஏதுக்கள்யாதோ, அதனையறிந்துவினையில் முயலக்கடவீர்கள்.)என்று ஆகாயத்தில் ஒருதெய்வவாக்குண்டாயது. அத்திருவாக்கையவர்கள் செவிகுளிரக்கேட்டு, ஆனந்தங்கொண்டு, வெள்ளியங்கிரியையடைந்து, சிவபெருமானைத்தரிசிக்கச்செல்லுகையில், சிவபெருமான் சந்நிதானத்திலிராததைநோக்கி, மிக்கஏக்கங்கொண்டு துன்புற்றுவாடினார்கள். அச்சமயத்தில்-அவர்கள் மனத்தளர்ச்சிநீங்குமாறு பார்ப்பதிதேவியாரெதிரேவர, உடனே அத்தேவர்களெல்லாம் ஆனந்தக்களிப்படைந்து, சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து, ஓசகலபுவனேஸ்வரியே, ஓதத்துவகாரணியே, ஓ சதுர்வேதநாயகியே, அவுணபாதகனாகிய தாருகனெனவன் தேவர்களையெல்லாம்பிடித்து, அணுவளவேனும் அப்பால் அகலக்கூடாதசிறையில்வைத்து வருத்துகின்றனன், அடியேங்கள்மாத்திரம் அக்கொடியவன்விழிகளில் அகப்படாதவண்ணம் இப்பூலோகத்திலொளித்துக்காலங்கழிக்கின்றோம், தாயே- யாங்கள்படுகின்றதுன்பங்களைநீக்கி விண்குடியேற்றுவித்தல் உமதுகடமையாகும், தளர்வுற்றபிள்ளைகட்குத்தாயையன்றிவேறென்ன கதியிருக்கின்றது,என்று பலமுறை பிரார்த்தித்தார்கள். இவையனைத்தையும் உமாதேவிகேட்டுக் கிருபைசுரந்து, தேவர்களே- இக்கையிலாய பர்வதத்தைச்சூழ்ந்த நான்குபர்வதத்தில, மதகிரியினிடத்தில மகாவிஷ்ணுவுக்கும், புட்பகிரியினிடத்தில பிரமனுக்கும், சந்தானகிரியினிடத்தில் தேவர்களுக்கும், முற்காலத்திற்சிவபெருமான்யோகத்திலிருந்து தத்துவஞானத்தையுபதேசஞ்செய்தருளியதுபோலவே, இக்காலத்தில்கொளகிரியிலெழுந்தருளி, முனிவர்களுக்கு உபதேசித்திருக்கின்றனர். ஆதலால்- நீங்களனைவரும் அவ்விடத்திற்சென்று, உங்கள்அவலைகளையொழிக்கக்கடவீர்களென்று திருவாய்மலர்ந்துசெல்லலும், அவ்வாறேவிண்டுவாதிதேவர்கள் அக்கோளகிரியருகிற்சென்று, சிவபெருமான்யோகத்தைநீங்குமாறுஆலோசனைசெய்து,மன்மதனையழைத்து, இதனைச்சொல்லுவதானார்கள். அனங்கனே- உனதுபெருமைகளைப் பேசுவதற்கு யாவராலாகும். கரும்புவில்லைக்கொண்டு,திரிலோகங்களையும்வென்று,உனதுகீர்த்தியைஎங்குநாட்டியிருக்கின்றனை. ஆதலால்- எங்களுக்குநேர்ந்தமனவருத்தங்களைப்போக்குவதுஉனக்குப்பெரிதல்ல, யாங்கள்தாருகாசுரனால்மிகவுங்கலக்கப்படுகின்றனம். அதைநீக்கும்பொருட்டுநீதயைசெய்து இக்கோளகிரியிலமோனத்திலிருக்கின்ற பரமசிவத்தின்மீது உன்பாணங்களைச்செலுத்தி,விரகமுண்டாக்கி, அவர்உமாதேவியோடுங்கூடச்செய்வையாயின், யாங்களனைவருஞ்சிலகாலஞ்சவுக்கியத்திலிருப்போமென்றுசொல்லலும்,இவையனைத்தையுமன்மதன்கேட்டு நடுநடுங்கி, ஒருகாலத்திலுஞ்சீரவறியாதபாதகங்களுக்கேதுவாகியவார்த்தைகளைக்கேட்கவுமாசசுதே,ஈதென்னஅநியாயமென்றுகிலேசித்து, அத்தேவர்களாணையைக் கடக்கக்கூ

டாமல்.தன்படைவீடாகிய-வசனம்-சூதம்-அசோகு-முல்லை-நீலம்-என்கின்ற பஞ்சபுட்பச்சோலையிற்புகுந்து, உன்மத்தம்-மதனம்-சமமோகம்-சந்தாபம்-வசீகரணம்-என்கின்ற ‡ பஞ்சபாணங்களையும்அம்புபெய்குதையினிரப்பி,முதுகிலிறுக்கி,ரீங்காரத்தொனிகளைவிளைக்கும்வண்டுகளைநாரியாகவுடைய கருப்புவில்லைச்சேவித்தெடுத்து,புசத்தில்மாட்டிக்கொண்டு,தங்கத்தகட்டினைப்போலப் பிரகாசிக்கின்றதாழம்பூவாகியவாளினைஇடையிற்செருகி,மகுளம்பூமாலையைத்தரித்து,கிரீடம்குண்டலம்வாகுவலயம்மதாணிப்பதக்கமுதலான ஆபரணங்களையணிந்து, கிளிப்பரிபூண்டதென்றற்றேரின்மீதாரோகணித்து; சமுத்திரமாகிய செயபேரிகைமுழங்கவும்,குயில்முழக்கமாகிய காளமூதமும், கமுகம்பாளைகளாகிய வெண்சாமரைகள் வீசவும், சங்குலாகியயானைக்கூட்டங்கள்நெருங்கவும், மங்கையராகியசேனைகள்புடைசூழவும், மீனகேதனம் படபடென்றசையவும்,வெண்மதியாகியகுடையினைநிழற்றவும், இவ்விதஆடம்பரங்களுடன் கோளகிரியை யடைந்து, புலியினையெழுப்பச்செல்லு மானைப்போல சிவபெருமானெதிரிற்சென்று, இடதுகரத்தில்வில்லையெடுத்து; நாணேறிட்டு,பஞ்சபுட்பபாணங்களையும் அதிற்பூட்டி, கர்த்தன்இதயகமலத்திற்குநேராகக்குறிபார்த்துப்பிரயோகித்தான். அவைகள் அதிவேகமாகச்சென்று,சிவபெருமான் திருமேனியிற்றாக்கியமாத்திரத்தில்; தமது அனல்விழியினைச்சிறிதுதிறந்து மன்மதனைப்பார்த்தனர்.உடனே அவ்விழியினின்றும்பெருகிய சுவாலையால், மன்மதனுடலங்கரிந்து எரிந்துசாம்பராயிற்று. இவ்வற்புதத்தை உமாதேவிநோக்கிக, கர்த்தனருகில்வந்து சாஷடாங்கவந்தனஞ்செய்து, அவர் கோபந்தணியும்படியாகக்குளிர்ந்தவசனங்களைக்கொண்டு,சுவாமி- சற்றேனுமிரக்கமில்லாத தாருகனென்பவன்,யமனுங்கண்டு அஞ்சத்தக்கதாகவியற்றுங்கொடுமைக்குத்தேவர்களெல்லாமஞ்சி,தங்கடங்கள்பதவிகளைத் துறந்து,இதுகாறும்மேருவரைச்சாரலிலொளித்திருந்து,இப்போதுசகலசீவராசிகளுடைய அகங்காரங்களையழிக்கவல்லதேவரீர்திவ்வியசரணாரவிந்தங்களையேதஞ்சமாக இங்குவந்தடைந்திருக்கின்றனர். அவர்கள்- சுவாமிகளுடையஞானத்தைப்பெற்றதமடமைத்தன்மையினால்,தேவரீரையுந்தங்களைப்போலக்கருதி,பஞ்சபுட்பபாணங்களைப் பிரயோகிக்கும்படியாக மன்மதனையேவினார்கள்.அவனுந்தேவரீர் நுதல்விழிக்கு இரையாயினான். இனித் தேவரீர் அத்தணலைத்தணித்து, இங்ஙனஞ்சரண்புகுந்திருக்கின்றதேவர்கட்குத்திருவருள்பாலிக்கவேண்டுமென்றுபிரார்த்திக்கக்,கர்த்தன்கருணைகூர்ந்து,தமதுநுதற்கட்டையைத்தணிவித்து,யோகத்தையொழித்துக்,கோளகிரியை யகன்று, கைலாயவரையைச்சேர்ந்து, உமாதேவியோடும் அந்தப்புறத்திற்சென்று,தேவவருடத்தில் அறுபதினாயிரவருடங்கலவியிலிருந்தனர். இப்பால் விண்டுவாதிதேவர்கள் மனம்வருந்தி சிவபெருமான் எக்கால

---

‡ அவைசெய்யுமவத்தை, சுப்பிரயோகம்- விப்பிரயோகம் - சோகம்- மோகம்- மரணம். அவையாவன, சுப்பிரயோகம்- சொல்லுநினைவும். விப்பிரயோகம்- வெய்துயிர்த்திரங்கல். சோகம்- வெதுப்புக் துய்ப்பனதெவிட்டலும். மோகம்- அழுங்கலும் மொழிபலபிதற்றலும். மரணம்-அயர்ப்பும் மயக்கமும்.

த்து சுப்பிரமண்ணியக்கடவுளைத்தந்து, நமது துன்பங்களை யொழித்தரு
ளுவரோவென்றுகலங்கி, மீட்டும் அக்கினிதேவனை யேவினார்கள். அவன்
துறவியைப்போலவேடங்கொண்டு, கைலாயவரையிற்சென்று,கர்த்தனெ
ழுந்தருளியிருக்கின்ற சந்நிதானத்தின்புறம்பினின்று, சகலசீவராசிகளையு
ம்படைத்தளித்தழிக்கவல்ல சகதீஸ்வரியே, அடியேற்குப்பிசசை தந்தரு
ளவேண்டுமென்று மூன்றுதரங்கூவினான். அதனை எனது அப்பனும்அன்
னையுமாகியஇருவருங்கேட்டு,வந்தவன் அக்கினிதேவனென் றறிந்து கொ
ண்டு. கலவியைவிட்டுநீங்கினார்கள். உடனேஉமாதேவி சிவபிரானைப் பார்
த்து, சுவாமி-தேவர்கள் துன்பத்தினின்றுநீங்குமாறுகிருபைபுரியவேண்
டுமென்று பிரார்த்தித்தலும், கர்த்தன்தமதுவீரியத்தைப்பரமேஸ்வரி கர
த்திற்பெய்ய, அதனை எனதன்னை கையேற்று, அக்கினிதேவனருகில்வந்து
உங்கட்குக்கிடைத்தபாக்கியமிதுவாகும்,இதனை உனதுவயிற்றிற்பூரிக்கக்க
டவை,சிறிதேனுநிலத்திற்சிந்துமாயின்திரிபுவனங்களையும்பொடியாக்கிவி
டுமென்று திருவாய்மலர்ந்து அவன்கரத்திற்கொடுக்க, அவனும் அவ்வா
றேசாக்கிறதையோடும் வாங்கிப்புசித்துவிட்டனன். இப்பால் ஒப்பற்றபர
மேஸ்வரருடைய வீரியமானது அக்கினிதேவனுடைய வயிற்றிற்றங்கிய
மாத்திரத்தில், பொல்லாத வெப்பமுண்டாக, அவ்வெப்பத்தை அவனு
ற்றமாட்டாது, இமோத்கிரிச்சாரலுக்கோடி, அங்கிருக்கின்றகங்கையாற்றி
ல், சரவணங்களால்வளர்ந்து மூடப்பட்டிருக்கின்ற ஒருபொய்கையில்,அ
வ்வீரியத்தைவிடுத்தனன், பின்னரவ்வீரியமானதுகுழந்தையாக,அதற்கு
ட்சத்ரஸ்திரீகள் பால்கொடுத்து வளர்த்துவந்தனர். இவ்வாறு கர்த்தன்
வீரியமானது சரவணப்பொய்கையில் குழந்தையாகிவளர்ந்து வருவதை
மகாவிஷ்ணுகண்டு, கைலாயவரையிற்சென்று, சிவபெருமான் சந்நிதான
த்தை யடைந்து, சாஷ்டாங்கமாகநமஸ்காரஞ்செய்து, சுவாமி-தேவரீர்கி
ருபைசுரந்தருளிய குமாரதேவர் சரவணப்பொய்கையி லெழுந்தருளியி
ருக்கக்கண்டேனென்று சொல்லலும், அதனைக்கேட்டபார்வதியார், கர்த்
தன்திருவடிகளைப்பணிந்துவிடைபெற்று,விண்டுபிரமன்இந்திரன்முதலிய
தேவர்கள் அதிதீவரமாகவந்து பாரிசாதபுட்பங்களைவாரிவாரியிறைத்துச்
செபங்களைக்கொண்டாடிக்கொண்டு பின்பற்றிவரவும்.செயபேரிவெற்றிமுர
சு முதலியமங்கலவாத்தியங்களைப்பூதவீரர்கள்அதிகவோசையெழமுழக்கி
க்கொண்டுபோகவும்,இவ்விதஆடம்பரங்களோடுஅச்சரவணப்பொய்கைக்
குச்சென்று,குமாரதேவரைத்தமதுகரங்களாற்றழுவியெடுத்துவந்து,கொ
ங்கைகளிற்சுரந்தபாலையூட்டிச், சிவபெருமானது திருக்கரத்திற்கொடுக்க,
உடனே சிவபெருமான் மனங்களித்து, வெட்சிப்பூ நிறத்தையொத்தசி
வந்ததிருமேனியையுடைய அக்குமாரதேவரை அன்போடுவாங்கி, உச்சி
மோந்து, உள்ளம்பூரித்து, அளவளாவிய அன்போடும் ஆதரித்துவந்தன
ர். இப்பால் பாலசுப்பிரமணியமூர்த்தியானவர்,தந்தையாகியசிவபெருமா
னல், கார்த்திகைத்திங்களி லுற்பவித்ததினால்கார்த்திகேயனென்றும்,நக்ஷ
த்ரஸ்திரீகள் பால்தந்துவளர்த்ததினால் அறுமீன்காதலனென்றும், விசாக
நக்ஷத்திரத்திற்பிறந்தமையால் விசாகனென்றும், அக்கினிதேவனுதரத்தி
ற்றங்கியிருந்தமையால் பாவகியென்றும், சங்கரியினதுகரத்தினும் அக்கி
னிதேவன்வயிற்றினுங் கங்கையினுந்தங்கியிருந்ததன்றி அக்கங்கையை யு

றிஞ்சிமீளவும் விட்டமையால் கந்தனென்றும்,அறுமுகத்தையுடையவரா
தலால் சண்முகனென்றும், சகலருக்கும்சுவாமியாயிருக்கின்றதனக்குநா
தராயிருக்கின்றமையால்சாமிநாதனென்றும்,தேவர்களுடையஇட்டத்தை
நிறைவேற்றுதற்குச் சேனுதிபதியாயிருத்தலினுற் றேவசேனுபதியென்று
ம்,மாசேனனென்றும், ஞானசத்தியாகியவேலாயுதத்தைத் தாங்கியிருக்கி
ன்றமையால் ஞானசத்திதரனென்றும்,அசுரர்குலத்தைவேரோடுங்களைய
வல்லவராதலால் அசுரர்குலகாலனென்றும்,மயிலைவாகனமாகவூர்ந்துநட
த்துகின்றவராதலால் மயூரேசனென்றும், சேவலங்கொடியையுடைத்தா
னவராதலால் சேவற்கொடியோனென்றும், சகலஆன்மாக்களின்உள்ளத்
தினும்மலைமுழைகளினும்வாசஞ்செய்கின்றதால்குகனென்றும்,முருகனெ
ன்றும்,சேயென்றும்,தமக்கு ஒப்பற்ற அருமைப்புத்திரராதலாற்குமரனெ
ன்றும்,நாமகரணஞ்செய்யப்பெற்றுத்,திரிலோகங்களும் உய்யும்படித்திரு
விளையாடல்செய்திருந்தனர்.இக்காரணத்தைநெடுமான்முதலியதேவர்கள
றிந்து,விரைவில்சண்முகக்கடவுளையடைந்து, தங்கள்மகுடங்களெல்லாம்
அவரதுதிருவடிகளிற்பொருந்தும்படியாகப்பணிந்தெழுந்து,ஐயனே-அவு
ணபாதகனுகியதாருகனுடையவலிமையையும்,அடியேங்களடைந்திருக்கி
ன்றஎளிமையையுநீக்கி, வையகமுழுவதும் உய்யும்படியாகக்கிருபைபுரிய
வேண்டுமென்றுஇரந்துபிரார்த்தித்து,அபிஷேகமுதலியஆராதனைகளைநட
த்திஞர்கள். இவ்வாறுபிரார்த்தித்த விண்டுவாதிதேவர்களை, எமது சண்மு
கப்பெருமானுேக்கி, இனியகிருபாவசனங்களால் அவ்வவர்கட்குத்தக்கஆ
தரவுகளைச்சொல்லிப்,பலதிருவிளையாடல்களைச்செய்துவருங்காலத்தில்,கி
ருஷ்ணுநதிக்குவடபாரிசத்திலிருக்கின்ற ஓர்வனத்திற்சென்று,கணேசமூர்
த்தியைமனதிற்றியானித்து,அவரதுசடக்ஷரமந்திரத்தைச்செபஞ்செய்து
கொண்டிருந்தார். அவ்வாறு சிலநாள்கழிந்தபின்னர், அண்ணலாராகிய வி
நாயகமூர்த்திக்கு அருள்சுரந்து, அவரெதிரிற்பிரத்தியக்ஷமாகிப், பலவர
ங்களோடு தாமேறிநடாத்துகின்ற மயில்வாகனத்தையுந்தந்து, உனக்குமயூ
யிற்றுவசனென்னும் பெயருண்டாகவென்று திருவாய்மலர்ந்து,தமதுதே
வகணங்களோடு மாகாயவெளியிற்கரந்தருளினர். பின்னர் முருகக்கடவு
ளானவர் தமக்கெதிரிற்றரிசனந்தந்தவிடத்தில் விநாயகமூர்த்தியினுடைய
திருவுருவத்தைப்பிரதிட்டைசெய்து, இலக்ஷம் அறுகுகளையும் புட்பங்க
ளையுங்கொண்டருச்சித்து, மோதகமுதலியவை நிவேதனஞ்செய்து, சகல
விலக்கணங்களோடுங் காட்சிதந்தருளியதால் அவ்விநாயகமூர்த்திக்குஇல
க்கவிநாயகரென்று திருநாமந்தரித்து, மீட்டுங்கைலாயவரையைச்சேர்ந்து
தமதுதந்தையாகிய சிவபெருமானைப்பணிந்து, அவர் பேரருளைப்பெற்று
வேலாயுதமுதலிய சகலவாயுதங்களையுமேந்தி, தேவர்களெல்லாம் புடை
சூழும்படியாக மயில்வாகனத்தின்மீதாரோகணித்து, எதிர்த்துவந்த தாரு
காசுரனுடைய ஆவியைஎளிதிலுண்டு, சகலலோகங்கட்கும் ஓரிடையூறு
நெருங்காதவண்ணம் பாதுகாத்தருளினர்.சண்முகதேவரால் பிரதிட்டை
செய்த இலக்கவிநாயகரை ஆராதிக்கின்றவர்களுக்குச், சகலவிடர்களுந்து
ன்பங்களும் பகைகளுநீங்கி,அவ்வவர்களிட்டசித்திகளெல்லாம் ஒன்று இ
லக்ஷமாகிவளரும். இலக்க விநாயகரெழுந்தருளிய அந்தத்தலமானது, ம
யூரேசமென்கின்ற பெயரினுல்வழங்கிவருகின்றது.

கணபதிதுணை.

இருபதாவது.

மன்மதன்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே,விநாயகமூர்த்தியைச்சண்முகக்கடவுளுபாசித்துத், தாருகாசுரனைவென்றதிறத்தினைச்சொன்னோம், இப்பால்மன்மதனுபாசித்தவரலாற்றினைச்சொல்லுவோங்கேட்பீராக,பார்ப்பதிபாகராகியசிவபெருமானதுநெற்றிவிழியினால்முன்னர்மன்மதன்நீறாகிவிடவும்,இரதிதேவியானவள்உடலினின்றுநீங்கிய உயிர்போன்றவளாய்ப்பதைபதைத்துத்,தேகமாத்தியந்தமும்வெயர்த்துப்,பூமியில்வீழ்ந்து,புரண்டுபுரண்டு அலறியலறி,தாமரைவாசியாகிய மகாலக்ஷ்மியினது மனதுக்கினியமகனே அடியாள்பிராணனுக்குப்பிராணனைப்போன்றகணவனே, பசியகரும்பினை வில்லாகக்கொண்டு திரிலோகங்களையும்வென்று செயங்கொண்டதீரனே, என்று அளவற்ற துக்கசாகரத்துண்மூழ்கித், தனக்குப்புகலிடம் பிறிதின்றி,வரத்திற்சிறந்த வள்ளலாராகிய கைலாசபதியைச்சரணாகவடைந்து,பலமுறை சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, விழிகளில் நீர்த்தாரைகளைச்சொரிந்து, உடலையொடுக்கியொருபுறமாகநின்று, ஓதீனசரண்ணியரோ-ஓ சர்வபரிபூரணரோ,ஓஉமைபங்காளரோ- ஓ காளகண்டமூர்த்தியே- ஓ பக்தவச்சலரோ - எனது காதலர்பிரமன் முதலாயினோர் செய்த வஞ்சகபோதனைக்குள்ளாகி, சற்றுந்தீர்க்காலோசனைசெய்யாமல், இவிடம்வந்து தகாதகாரியத்தினைமுடித்தகாரணத்தினால்,தேவரீருடையநுதல்விழிக்கனலுக்கிரையாகிமாண்டனர்.இக்கருமம்அவர்சுதந்தரபுத்தியினால் நேர்ந்ததன்று.ஆகலால்- அவர்செய்தஅபராதத்தினைப்பொறுத்தருளி,பழையபடியேவுயிர்தந்தெழுப்பி,மற்றையமாதர்களெல்லாஞ்சுமங்கலிகளாயிருக்க,யான்மாத்திரங்கைமையடையாதவண்ணம் அடியாட்குமாங்கல்லியபிச்சை தந்தருளவேண்டுமென்றுகையேந்திநின்றனள்.உடனே-பூமியைத்தேராகவூர்ந்து திரிபுரங்களையெரித்தருளியதேவதேவோத்தமருக்குக்கிருபைசுரந்து,ஓசிறுமியே-நம்மாலிறந்த மன்மதனானவன்,உனக்குமாத்திரம் எக்காலத்தும் உருவமாகத்தோற்றியிருப்பன், மற்றையர்க்கெல்லாம் அருவமாகியிருப்பன்.நீஒன்றுக்கும்அஞ்சலையென்றுதிருவாய்மலர்ந்து,அம்மன்மதனுயிர்பெற்றெழுந்துவருமாறுதமதுதிருவுள்ளத்தில்நினைத்தனர். உடனே அவனெழுந்து,கர்த்தன்திருவடிகளில்வீழ்ந்து,சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, அளவளாவியபேரன்பினோடும் ஆனந்தக்கண்ணீர்சொரிந்து, உள்ளநெகிழ்ந்து, உரோமாஞ்சிதமுற்று, தோத்திரஞ்செய்வதாயினன்.

ஆறாடியவேணியனேசரணம்... ... ...*
அரவாடியவாபரணாசரணம் ... ... *
ஏறாடியவார்கொடியாய்சரணம் ... ... *
எரியாடியபாணியினாய்சரணம் ... ... *
கூறாடியமாதுடையாய்சரணம் ... ... *
குழையாடியபூங்கழலாய்சரணம் ... ... *

நீறுடியமேனியனேசரணம்... ... ... *
நிகராருமிலாதவனேசரணம்... ... ... *

கன்றுல்விளவீழ்கணையாய்சரணங்... ... ...*
கதழ்வாசுகிநாரியிஞய்சரணங் ... ... *
குன்றுகியவார்சிலேயாய்சரணங் ... ... *
குளாமாமறைவாசியிஞய்சரணம... ... ...*
ஒன்றூர்புரநீறுசெய்தாய்சரணம் .. .. ,... *
உற்றூர்தமைவீறுசெய்தாய்சரணம் ... ...*
நின்றுடுபொன்மன்றுடையாய்சரணம்... ... ... *
நிகராருமிலாதவனேசரணம் ... ... *

வடிவார்தலேமாலேயனேசரணம்... ... ... *
வாஞடர்களென்பணியாய்சரணங் ... ... *
கடியேனவெண்கோடுடையாய்சரணங் ... ... *
கடலாமையிஞேடுடையாய்சரணங் ... ... *
துடிமீன்விழியாழிஞய்சரணஞ்... ... ... *
சுடர்கேசரியீருரியாய்சரணம் ... ... *
நெடியோன்விழிசேரடியாய்சரண ... ... *
நிகாராருமிலாதவனேசரணம்... ... ... *

இவ்வாறு தோத்திரஞ்செய்து சொல்லுவான்,சுவாமி-தேவரீர் உலகமாதாவாகிய விமலேயைச்சேரும்வண்ணம், தேவர்களெல்லாம்என்னைத் தூண்டிப், புட்பபாணங்களேப் பிரயோகிக்கும்படியாக வாக்கியாபித்தனர் அவ்வாறே அவர்கள் ஆணையைத்தடுப்பதற்கு அஞ்சினவஞய், தேவரீர் திருப்பாசமூகத்தின் முன்னர், இத்தன்மைத்தான பொல்லாத தீங்கினைச்செய்வதற்கு உடன்படலாயினேன். இவ்வபராதத்தைத்தேவரீர்பொறுத்தருளி, பழையபடி கருப்புவில்லிஞல் சகலரையும் வெல்லும்படியான அதிகாரத்தை எனக்குதவி ரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்ளலும், சிவபெருமான் அவனேப்பார்த்து, அனங்கனே- சகல தேவர்கட்குந்தலேவராகியும், ஐந்து திருக்கரங்களேயுடையவராகியு மிருக்கின்றகணேசமூர்த்தியானவர், உனக்கவ்வதிகாரத்தைக் கொடுத்தருளுவர். நீஅக்கடவுளே வந்திக்கக்கடவையென்று திருவாய்மலர்ந்து,ஏகாக்ஷரமனுவை அவனுக்குபதேசித்து, அதையநுட்டிக்குமுறைமையையுங் கிருபைபுரிந்து விடைகொடுத்தனர். பின்னர் மன்மதன் பேரானந்தக்கடலின் மூழ்கிச்,கர்த்தன்திருவடிகளிற்பணிந்தெழுந்து விடைபெற்று,இரதிதேவியோடுஞ்சென்று, முன்னர்சண்முகப்பெருமான் அநுட்டித்த மயூரமென்னுந் தலத்தையடைந்து, அத்தலத்தில் ஆயிரம்வருடமிருந்து, கணேசமூர்த்தியினுடைய பாதபதுமங்களேப் பேரன்பிஞேடுந்தியானித்து, ஏகாக்ஷரமந்திரத்தை இடைவிடாது செபஞ்செய்துவந்தான். இவ்வாறு மன்மதன்செய்துவருகின்ற அநுட்டிப்பினுக்கு விநாயகமூர்த்தி கிருபைசுரந்து, அவனெதிரிற்பிரத்தியக்ஷமாகி, அங்கசனே- உனதன்புக்கு வியந்தோம், நீவிழைந்தவையெல்லாங்கேள் தருகின்றேம் என்று திருவாய்

மலர்தலும், சர்வசங்காரகாலத்தில் அண்டகடாகங்களையெல்லாம் ஆகாரமாகக்கொள்கின்ற சிவபெருமானுடைய நுதல்விழிக்குத்,தனதுடலையுமுணவாகக்கொடுத்து இளைப்பாற்றிய மன்மதனானவன், அளவற்றமகிழ்ச்சியையடைந்து, சாஷடாங்கமாகப் பணிந்தெழுந்து, பலமுறைதோத்திரஞ்செய்து, ஓ தேவர்கணாயகமே- அரசர்களும்படையெடுத்தற்கஞ்சும்படியானஸ்திரீகள்மீது, யான்படையெடுத்துவென்று, உடனே இன்பந்தருவதான எனததிகாரத்தை முன்போலச்செலுத்தவும், நல்லஉருவத்தையடையவும், தேவரீர்கிருபையையடியேற்குப் பாலித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தனன். அதற்குவிநாயகக்கடவுள்மனதிரங்கி, அன்பனே- இனிநெடுமால் கண்ணனாக அவதாரஞ்செய்யப்போகின்றனன் அக்காலத்து நீஅவன்மகவாகுவை, உடனே உனக்குநல்ல உருவமுமுண்டாகுமென்று திருவாய்மலர்ந்து, தமதுதிருவுருவைக்கரந்தருளினார். பின்னர் அம்மன்மதன்தனக்குக்காட்சிதந்தருளியவிடத்தில் ஓ ராலயஞ்சமைத்து, அதிற்கணேசமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து, அம்மூர்த்திக்குமகோற்கடவிநாயகரென்றுதிருநாமமிட்டு,காலையினும் மாலையினுந் திருமஞ்சனத்தாலாட்டிப், பரிமளமிகுந்தபுட்பவகைகளாலருச்சித்து, தினைமாவு அப்பவருக்கமுதலிய நைவேத்தியங்கள்செய்து, அளவற்றபேரானந்தத்தில்மூழ்கியிருந்தான். இவ்வாறு இடைவிடாது பூசித்துவருகின்றநாளையில், மகோற்கடவிநாயகருடைய பெருங்கருணையினால், முன்போலவே தனது கருப்புவில்லையும் பஞ்சபாணங்களையும்பெற்று, சத்தலோகங் களினுந்தனது ஆக்கியாசக்கரத்தைபுருட்டி, இரதிதேவியோடுங்கூடிவாழ்ந்திருந்தான். இப்பால் விண்டுவானவர் கண்ணராகத் திருவவதாரஞ்செய்ய, அவருக்கு அம்மன்மதனானவன் புதல்வனாகப்பிறந்து, பிரத்திம்னனென்கின்றபெயரைவகித்து, நல்லவுருவத்தைத்தாங்கிச், சகலசாத்திரங்களையும் ஆராய்ந்துணர்ந்து, மகாபராக்கிரமத்தோடு யாவரும்புகழும்படியாக வாழ்ந்திருந்தான். அக்காலையில், வலிவிற்சிறந்த சம்பனென்கின்ற ஓர்தானவன், இவ்வுலகத்தில்மன்மதனோடு இரதிதேவியில்லாதிருப்பதைக்கண்டு, தெய்வலோகத்திற்சென்று, அவளைநடுங்கும்படியாகக் கைக்கொண்டு ஆகாயமார்க்கமாகச்சென்றான். அவ்வாறுசெல்லுகையில், அப்பாதகனுடைய கரத்தினின்றும் இரதிதேவியானவள் நழுகிக்கடலில்விழ, அக்கடலில் ஓர் பெரியமச்சமானது அவளைவிழுங்கியது. பின்னர் தான்கடலினிறங்கித்,தன்திறத்திலானமட்டும் அதனைக்கலக்கிச்சோதித்து, எவ்விடத்துங்காணாதவனாகித் தன்பதியைச்சேர்ந்தனன். சிலநாள்கழித்தபின்னர், இரதிதேவியைக்கருவாகக்கொண்டிருக்கின்ற மீனானதுவலையிலகப்பட்டது. அம்மீனைச் செம்படவன் சம்பாசுரனுக்கு முன்னர்கொண்டுவந்து வைத்தான். அதனையத்தானவன் பிளக்குமளவில், அதன்கருப்பத்தில் ஓர் பெண்ணிருப்பக்கண்டு, மிக்கசந்தோஷங்கொண்டு, தனக்கவளைப் புத்திரியாகவளர்த்துவந்தனன். இவ்வாறு அத்தானவனிடத்தில் இரதிதேவிவளர்கின்றவரலாற்றினை யெல்லாம், நாரதமகாமுனிவரறிந்து, கண்ணன் புதல்வனாகிய பிரத்திம்னனிடத்தில்வந்துசொல்ல,அதனை அவன்கேட்டுத்,தன்தேவியைக் கொண்டுவரவேண்டுமென்னுங்களிப்போடு சம்பாசுரனிடத்திற்சென்று, அவனைப்போர்செய்யக்கூவி, அளவற்றநாள் அவனோடுயு

த்தஞ்செய்துகொண்டிருந்தனன். பின்னர் அவன்தாயாகிய உருக்குமணி
யானவள், இதுகாறும் நமதுபுத்திரன் வரவில்லையே, ஈதென்ன காரண
மென்று மனங்கலங்கி, மிகுந்தஅன்போடு விநாயகசதுர்த்திவிரதத்தைய
நுட்டித்துவந்தனள். அவ்வாறுஅநுட்டித்துவந்த ஆறுநாள், பிரத்திம்ன
னானவன்சம்பாசுரனுடைய உயிரைக்குடித்து, தன்றேவியைக் கரதலாம
லகம்போலக்கைக்கொண்டு, அவ்விடத்தினின்றுநீங்கித் தன்பதியைச்சே
ர்ந்தனன். உடனே அவன்தாயாகிய உருக்குமணியானவள் தன்மகன்வர
வைநோக்கிப்,பெருமகிழ்ச்சியையடைந்து, தனதுவிழைவைநிறைவேறச்
செய்தசதுர்த்திவிரதத்தை முற்றினுஞ்செய்துமுடித்து,சொர்ன்னதானம்
வஸ்திரதானமுதலாகிய அளவற்ற தானங்களைவழங்கினாள். இப்பால் ம
ன்மதனானவன் இரதிதேவியோடுங்கூடி வாழ்வுற்றிருக்குநாளையில், அநு
ருத்தனென்கின்ற ஒருபுதல்வனைப்பெற்றான். அவ்வநுருத்தன்காளைப்பரு
வத்தையுற்றகாலையில், சகலதேயத்தரசர்களுந் தன்னைப்பணியும்படி அக்
கினிமதிலைக்கொண்டு அரசியற்றுகின்ற வாணனென்னும் ஓர் அசுரனிரு
ந்தான். அவ்வசுரன் - அன்பினாற்பெற்றெடுத்த உஷையென்னும் பெய
ரினையுடைய ஒரு வனிதையானவள், ஒருநாள் அநுருத்தனுடைய பேர
ழகைத்தன்கனவிற்கண்டு, அதனைத்தனது தோழியாகிய சித்திரரேகைக்
குச்சொல்ல, அவள்உடனே இரக்கங்கொண்டுசென்று, அநுருத்தன்நித்
திரைசெய்கின்ற சமயத்தைநோக்கி, அந்நித்திரையோடுமவனைக்கொண்டு
வந்து தனதுநாயகியிடத்திற்சேர்த்தனள். அவளவனைக்கண்டவுடனே அ
திகமகிழ்ச்சிபொங்கித்,துயிலைக்கலைத்துத்,தனதெண்ணப்படிஅவனைச்சம்
மதப்படுத்தி, இரகசியமாகத் தன்னிருப்பிடத்தில்வைத்துக்கொண்டு கல
விசெய்துவந்தாள். இவ்வாறுசின்னாள்கழிந்தபின்னர், அவ்வுஷை யென்
பவள் வயிற்றிற்கருப்பமுண்டாக, அச்செய்தியைவாணனறிந்து, அநுரு
த்தனைப்பிடித்து, அகலக்கூடாத அருஞ்சிறையில்வைத்தனன்.பின்னர்அ
வ்வநுருத்தனுடைய தந்தையாகிய பிரத்திம்னன் தன் புதல்வனைக்காணா
மல், எங்குந்தேடித்தேடி, அளவற்றதுக்கசாகரத்தின்மூழ்கிவருந்தினான்
அதனை அவன்தாயாகிய உருக்குமணிதேவிகண்டு, என்னருமைப்புத்தி
ரனே-நீ முன்னர் சம்பாசுரனோடு யுத்தஞ்செய்யச்சென்றபோது, நெடு
நாள்வராமற்றாழ்ந்ததி னிமித்தம், யான்மிக்கவருத்தத்தையடைந்து, நீவி
ரைவில்வந்துசேருமாறு கணேசமூர்த்தியினுடைய சதுர்த்தி விரதத்தை
யநுட்டித்தேன். அநுட்டித்த ஆறுநாள் உன்னைவரப்பெற்றேன். ஆதலா
ல்- நீயும் அம்மேலானவிரதத்தை நோற்பையாயின், நின்மகன் எவ்வளவு
தூரதேயத்திலிருக்கினும் விரைவில்வந்துசேருவனென்றுசொன்னாள். உ
டனே பிரத்திம்னன் அதிகமகிழ்ச்சியை யடைந்து, அவ்விரதத்தை ஆக
மவிதிப்படி மிக்கபத்தியோடநுட்டித்துவந்தனன். இவ்வாறநுட்டித்து வ
ருகின்ற விரதநாண்முடியுமுன்னம், இவன்றந்தையாகிய கிருஷ்ணனிடத்
தில் நாரதமுனிவர் எழுந்தருளி, அநுருத்தன் செய்தியைத்தெரிவிக்க, உ
டனே அவருக்குக்கோபமுண்டாகி, அவ்விடத்தினின்றுநீங்கி,வாணனிட
த்திற்சென்று, அவனோடு அளவற்றநாள் யுத்தங்களைச்செய்து வென்று,
அவன் பெண்ணையுந் தனதுபௌத்திரனையு மழைத்துக்கொண்டு, எதாப்
பிரகாரந்தன்பதியைச்சேர்ந்து வாழ்த்திருந்தனன்.

கணபதிதுணை.

இருபத்தொன்றாவது.

ஆதிசேடனுபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்திவி
ரதத்தை மன்மதனநுட்டித்து உருவம்பெற்றவரலாற்றினைச்சொன்னோம்
இப்பால் ஆதிசேடனுபாசித்ததிறத்தினைச்சொல்லுவோம்கேட்பீராக. மு
ன்னொருகாலத்தில்-பிரமனாதியதேவர்களாலும் இருக்காதி வேதங்களாலு
மறிதற்கரிய சாம்பவமூர்த்தியானவர்,வெள்ளியங்கிரியில், நவரத்னமயமா
யிராநின்ற சிம்மாதனத்தின்மேல், உமாபரமேஸ்வரி சமேதராய் வீற்றிரு
க்கின்றநாளையில், அளவற்றதேவர்களும் முனீஸ்வரர்களும்வந்துசாஷ்டா
ங்கநமஸ்காரஞ்செய்து, பலவரங்களைப்பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்க
ள். அத்தருணத்தில்- சிவபெருமான்சடாமகுடத்திலிருக்கின்ற ஆதிசேட
னானவன், நாம் இத்தனைபேரும் வணங்கும்படியாக சுவாமியினது திருமு
டியிலிருக்கின்றோமல்லவாவென்று கர்வங்கொண்டனன். அக்கர்வத்தை
க்கர்த்தனறிந்து, தமதுகரத்தாற்றண்ணென்றிழுத்து நிலத்தின்மீது மோ
தினார். உடனே ஆதிசேடன்வெள்ளியங்கிரியில்வீழ்ந்தனன். அவன்சிரமா
னது ஆயிரம்பிளவாகப்பிளந்து போயிற்று. அவனுக்கு உலகத்தைத்தாங்
குகின்றவலியும், அளவற்றதவங்களாற்கிடைத்த மகத்துவங்களு மிழந்து
போனபின்னர், ஆதிசேடன்மிக்க துன்பமுற்று, நம்மைமுன்போலவே சி
வபிரான் சார்பிலிருக்கச்செய்யும் உபாயம் யாதென்றுகருதி, ஒன்றுந்
தோற்றாது, சுவாசமற்று, உயிருண்டோவில்லையோவென்று சொல்லத்
தக்கதாக இறந்தவனைப்போலக்கிடந்தான். அத்தருணத்தில்- கைலாசபதி
யைத்தரிசிக்கவந்த நாரதமுனிவர் அவனைப்பார்த்து, ஆ-அ- ஈதென்னபா
வம், உனக்கடுத்ததுன்பம் யாதென்றுகேட்டார். அதற்கு அற்பவுயிரோடு
நிம்வீழ்ந்துகிடக்கின்ற ஆதிசேடன்நாணமுற்று, ஒன்றும்பேசாமலிருந்தன
ன். நாரதமுனிவர் மீளவுமவனைப்பார்த்து, ஆதிசேடனே- நீ கர்வங்கொ
ண்டபடியினாலே சிவபிரான்சார்பையற்று, இத்தன்மைத்தான துன்பத்தி
ல் வாடுகின்றாய். இப்பிழைநீங்குமாறு ஒருபாயஞ்சொல்லுகின்றேன், அ
தனை அன்புடன் கேட்பாயாக. தம்மைவேண்டினர்க்கு வேண்டியவண்ண
ம் பலபேறுகளைத்தந்து ரக்ஷிக்கும்படியான விநாயகக்கடவுளுடைய சட
க்ஷரமந்திரத்தையநுட்டிக்கக் கடவையென்றுசொல்லி, அம்மந்திரத்தை
அவனுக்குபதேசித்தனர். உடனே அதனைஉபதேசிக்கப்பெற்றமாட்சிமை
பால்,ஆதிசேடனுக்குத்தேகதிடமுண்டாகி,அவ்விடத்துநின்றுநீங்கிப்,பிர
வாளநகரத்தைச்சேர்ந்து, மிக்கபத்தியோடுஞ்சடக்ஷரமந்திரத்தைச்செபி
த்து, சதுர்த்திவிரதத்தையநுட்டித்தனன். அவ்வநுட்டிப்புக்குவிநாயகக்க
டவுள்மனதிரங்கி,ஆனைமுகத்தையுடையவராய்ப், பத்துதிருக்கரங்கிளினு
ம பத்துஆயுதங்களையேந்திக்கொண்டு, சித்திபுத்திசமேதராக சிங்கவாகன
மூர்ந்து,அவனெதிரின்பிரத்தியக்ஷமாயினார்.உடனே ஆதிசேடன் சாஷ்டா

ங்கமாகப்பணிந்தெழுந்து, அளவற்றதோத்திரங்களைச்செய்து நின்றான். அத்தோத்திரங்கட்குக் கர்த்தன்மனதிரங்கி, அன்பனே-ஆயிரம்பிளவாகப் பிளந்திருக்கின்ற உனதுஒருசிரமானது அவ்வாறே ஆயிரஞ்சிரங்களாகியிருக்கக்கடவது, நீ அவ்வாயிரஞ்சிரங்களோடு முன்போலவேபூமியைத்தாங்கியிருக்கக்கடவை, அன்றியும்ஐந்துசிரங்களோடு, எந்தையாகியும் எம்பெருமானுகியுமிராநின்ற சிவபெருமானுடையசடாபாரத்தில் அமர்ந்திருக்கக்கடவை, இப்போதிருக்கின்றஇவ்வுருவத்தோடு நமக்குஉதரபந்தனமாகக்கடவையென்றுதிருவாய்மலர்ந்து, அண்டகோடிகளையுந்தாண்டி அப்பாற்சென்ற பேருருவத்தோடுவிசுவரூபங்கொண்டு,அவ்வாதிசேடனையெடுத்து வயிற்றிற்சுற்றிக்கொண்டனர். உடனே தேவர்களெல்லாம் புட்பவருஷம்பெய்தார்கள். பின்னர் ஆதிசேடனானவன் தனதுஒரு அமிசத்தில் உதரபந்தனமாகவிருந்து, மற்றஅம்சங்களோடு, தனக்கு நற்கதி கிடைக்கச்செய்த அந்தப்பிரவாளநகரத்தில்சாத்திரவிதிப்படி ஓராலயஞ்சமைத்து அதில்விநாயகமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து, அளவற்ற திரவியங்களைக்கொண்டபிஷேகித்து, பரிமளமிகுந்த பலபுட்பங்களாலருச்சனை செய்து ஆராதித்துக்கொண்டிருந்தான். உடனே கணேசமூர்த்திதந்தருளிய வரத்தினல், சிவபெருமானுடையசடாபாரத்தில் வசிக்கப்பெற்றும், இவ்வுலகமுழுவதுந்தாங்கப்பெற்றும், அளவற்றகளிப்பிலாழ்ந்திருந்தனன்.

கணபதிதுணை.

இருபத்திரண்டாவது.

புருசுண்டியுபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, ஆதிசேடன்விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்திவிரதத்தை யநுட்டித்துத்,தனக்குநேர்ந்தவிபத்தைநீக்கிக்கொண்டபேற்றினைச்சொன்னேம்,இப்பாலபுருசுண்டியுபாசித்ததிறத்தினைச்சொல்லுவோங் கேட்பீராக. அழகுபொருந்தியசோலைகள்சூழ்ந்த மத்தியதேயத்தில்,மகநட்சத்திரத்தில்சனிவாரத்ததிபதிகூடி எல்லாத்திரவியங்களையும் பொன்றச்செய்யுங்காலத்தினும், சென்றோர்கள்இரவாவண்ணம்வேண்டியவளங்களை யளிக்கவல்ல சகத்திரபுரியென்னும்பட்டணமுண்டு அப்பட்டணத்தில், தூங்காமை முதலியமூவகையாற்றல்களையும், ஓதல்முதலிய அறுவகைக்குணங்களையும், மனேதிட்முதலிய மூவகைச் சித்திகளையும், பதிஞானமுதலிய மூவகைஞானங்களையும், சரிதைமுதலிய நால்வகையுபாயங்களையும், தருமமுதலிய நால்வகைப்பொருள்களையும், எக்காலத்தினு நீங்காது, பகைவரைவெல்லத்தக்க வேலாயுதத்தையேந்திப், பொதுநீக்கி, உலகமுழுவதுங்காத்து, அந்தணர் தேவர் முதலியோரை ஆதரித்து காமனையொத்தகட்டழகினைவாய்ந்து, சுற்றத்தினர்முதலியோரை இன்னல்நெருங்காவண்ணஞ்சூழ்ந்து, தவந்தூய்மைமுதலிய விரதங்களை வாய்ந்

து, விண்ணாட்டினும் மண்ணாட்டினுந் தனக்கொருவர் நிகரில்லாதபெரு ங்கீர்த்தியைப்பெற்று; கற்பிற்சிறந்த புண்ணிய சீலையென்னு மனைவியை ப்பொருந்தி, குளிர்ச்சிபொருந்தியசெங்கோலினால் திசையனைத்தினுந் த னது ஆக்கியாசக்கரத்தினையுருட்டி அர்சாக்ஷிசெய்கின்ற, சூரசேனமகாரா சனென்னும் ஓரரசனிருந்தான். அவ்வரசன், ஒருநாள்-மந்திரியர்-புரோ கிதர்- சேனாபதியர்- ஒற்றர்- சாரணர்- என்கின்ற ஐவகைத் துணைவர்களு ம்; மற்றுமுள்ளபரிசனங்களும் புடைசூழும்படியாகச், சிங்காதனத்தின்மீ து கொலுவீற்றிருந்து, குறைசொல்வார்க்கும் முறைசொல்வார்க்கும் அ வ்வவர்கள் கருத்தின்வண்ணங்கிருபைசெய்துகொண்டிருக்கின்ற சமயத் தில், அளவற்றசூரியர்கள்அவனியிலிறங்கினாற்போல,ஒருவிமானமானது அந்தரமார்க்கமாய்வந்து; தனதுகதியிற்றப்பி நிலத்திலவந்திறங்கியது. அ தனை அவ்வரசன்கண்டு, உடனே ஒற்றர்களைக்கூவி, ஏதோவொருதெய்வ விமானம்பூமியிலிறங்கியது, நீங்கள்விரைவிலோடி, அஃது வந்தவரலாற் றைத்தெரிந்துகொண்டு வரக்கடவீர்களென்றுஏவிப்,பின்னர்தானும் அதி சவிரைவோடுமெழுந்து; அமைச்சர்முதலாயினோர் புடைசூழும்படியாக வெளிக்கொண்டு, தனது ஆட்டக்குதிரைமீதாரோகணித்து, அதனைவிரை வில்நடத்தி, அவ்விமானத்தின்அருகிலிறங்கி, சில்தூரம்முன்னதாக நடந்து சென்று, அதன்மத்தியில் தேவேந்திரன்வீற்றிருப்பக்கண்டு, மிகுந்தபேரா னந்தத்தோடு அவனைவணங்கி,இதனைச்சொல்லுவதாயினன். ஓ சுரலோகசக்கி ரேஸ்வரா- வேள்வியினாலும்-வீரத்தினாலும்-தவத்தினாலும்-தானத்தினாலு ம்-வாள்வித்தைமுதலிய திறங்களினாலும்-ஒப்பாருமிக்காருமில்லாத தேவ ரீரையான்பூர்வத்திற்செய்த நல்வினைப்பேற்றினாற் காணலாயினேன், அடி யேனுடையகல்வியுங் கேள்வியும் பெறத்தக்கபயன்களை யடைந்தன, தே வரீர்பொன்னுலகத்தை நீங்கி, இம்மண்ணுலகத்தில் வந்தவறலாற்றைத்தி ருவாய்மலரவேண்டுமென்றுபிரார்த்திக்க,அதற்குத்தேவேந்திரனிசைந்து தன்வரவைஅவ்வரசனுக்குத்தெரிவிப்பவனாகி,ஓ நரேந்திரனே-யான்சகல தேவர்களும் புடைசூழும்படியாகச் சிம்மாதனத்திலிருந்து அரசியற்றிவ ருகின்ற தருணத்தில்,யாழ்வல்லவராகிய நாரதமகாமுனிவர்வந்து,பூலோ கத்தில், ஒருவர் விநாயகமூர்த்தியினுடைய அநுக்கிரகத்தைப்பெற்று,தெ ய்வத்தன்மையுண்டாகி,அந்தச்சரீரத்திற்றனேகணேசமூர்த்தியினுடைய சாரூபத்தைப்பெற்று, சகலருந்தொழும்படியாக வீற்றிருக்கின்றார். அவர் பெயரைப் புருசுண்டியென்று சொல்லுவார்கள். அவரையாமுங்கண்டுத ரிசித்து வந்தோமென்றுசொன்னார். அதனை யான்கேட்டமாத்திரத்தில், அம்மகத்துவைக்காணவேண்டுமென்கின்றஆசையானது எனதுபிடரியை ப்பிடித்துத்தள்ள, உடனே அவ்விடத்தினின்று நீங்கி, இம்மண்ணுலகத் திலிழிந்து, அவரெழுந்தருளியிருக்கின்ற விடத்திற்சென்று, அவரது பா தபதுமங்களைச்சேவித்து விடைபெற்று, மீட்டுஞ்சொர்க்கலோகத்திற்சே ரவெண்ணி, ஆகாயமார்க்கமாகச்சென்று, இவ்விடத்திற்கு நேராக்வரும் போது, இந்நகரத்தில் மிகவுங்குட்டநோய்கொண்ட பெரும்பாவியாகிய ஒருவைசியகுமாரனுடைய பார்வையால், இவ்விமானமானது கதிதப்பிப் பூமியிலிறங்கியது. இனி இந்நகரத்திற்றனே ஒருவன் சங்கட்ட சதுர்த்தி விரதமநுட்டிக்கின்றான். அவனாலே இவ்விமானம் பூமியைவிட்டெழும்

பி ஆகாயத்திற்செல்லுமென்றுசொன்னான். இவையனைத்தையுஞ் சூரசேனமகாராசன்கேட்டு, ஓ தானவர்குலகாலனே- தேவரீருஞ்சென்று பணியத்தக்க அப்புருசுண்டியென்பவர் என்னகுலத்தார், அவர்செய்ததவங்கள் யாவை,அவைகளையும் எனக்குணர்த்தியருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குத்தேவேந்திரன்சொல்லுவான், அரசனே- தண்டகவனத்திலே, இலக்குமிவிலாசமபொருந்திய பழமையானநந்துரமென்னும் ஒருநகரமிருக்கின்றது. அந்நகரத்தின்சமீபத்தில், ஒருவேடச்சேரியுண்டு. அச்சேரியில்- ஆலகாலவிடத்திற்கொப்பான கொடுஞ்செய்கைகளையுடைய விப்பிரதனென்னும் ஒருவேடனிருந்தான். அவ்வேடன்- எக்காலத்தினும் எவ்விடங்களினுஞ்சென்று, வழிப்போக்கர்களையெல்லாம் ஒருவரையுந்தப்பவிடாமல் மறித்துப்பொருள்பறிக்கப்பட்டவன். அவனவ்வாறிருக்கின்றகாலத்தில்,ஒருநாள் அவன்சஞ்சரிக்கின்றமார்க்கமாக ஓரந்தணனொருவன்விரைந்துசெல்ல, அவனையவ்வேடன்கண்டு, நமக்குஇத்தினம்மிக்கலாபமுண்டாயதென்றுமனங்களித்து, அதிகவேகத்துடனோடி, அவ்வந்தணனைபபின்றொடர்ந்தான்.உடனே-அவ்வந்தணன்அவனைக்கண்டு,இன்றுநமக்கிறுதிகாலம் வந்துவிட்டதென்று பயந்துஓட,அவ்வேடனும் அவன்பின்னதாகநெடுந்தூரவளையிலோடி, தன்னைப்பிடிக்கக்கூடாமல்மனம்வருந்தி, மீட்டுந்திரும்பி வருகையில், அவ்வனத்தின்கண்விநாயகமூர்த்தியினுடைய கோயிலுந்தீர்த்தமும் எதிரே தோற்றக்கண்டு,அவ்விடத்திலடுத்துதன்னிளைப்பாறும்படியத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, தாகந்தணியுமாறு ஜலபானமுஞ்செய்து, அதன்கரையில்இருக்கின்ற ஓர் மரத்தினிழலிற்றங்கி, இரையிழந்தேங்குற்ற வேங்கைபோல மனக்குறைகொண்டிருந்தான். இவ்வாறிருக்கையில்- தவசிரேஷ்டராகிய முக்கலமுனிவர்அவ்வழியாகச்செல்ல, அவரைக்கண்டவுடனே வேடனவன் விரைந்தெழுந்து,வாளையுருவிக்கொண்டோடி, அம்மகாநு பாவருடைய உயிரைவாங்கும்படியாகஓங்கினான்.உடனேமுக்கலமுனிவர்திரும்பி,அவனைத்தமதுவிழிகளினாற்றுப்பார்க்க, அப்பார்வையின் மகிமையால்- அவ்வேடனுடையவாளும்,அவன்அறியாமையும்,அதுகாறும்அவன் செய்துவந்த மலைபோன்றபாதகங்களும், அவனைவிட்டுநீங்கி,மெய்யறிவுதித்தது.உடனேஅவன்முக்கலமுனிவரைப்பார்த்து, அடியேன்செய்துகொள்ளும் விண்ணப்பத்திற்குச்செவிகொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து, இதனைச் சொல்லுவதாயினன். சுவாமி-இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தபலத்தினாலும்,தேவரீருடையதரிசனவிசேடத்தாலும், அடியேன்செய்தபாதகங்களனைத்துமிறந்தன. நற்கதியையடையவேண்டுமென்னுநல்லறிவும்உதித்தது. மேலும் பெரியோர்கள் துட்டர்களை விசுவாசிக்கின்றதில்லையாயினும், அவர்களதுகிருபாநோக்கத்தால் அத்துட்டர்கள் பயன்பெறுமற்போகின்றதில்லை. இனி சுவாமிகள் அடியேன்மீது கடாக்ஷம்வைத்து, எவ்விதத்தேனுங்கைவிடாது காத்தருளவேண்டும். அடியேற் கிவ்வுலகவாழ்வில் யாதொருப்பயனுமில்லையென்று அனந்தமுறைதுதித்து, மனமுருகி, அவர்திருவடிகளிற்றனதுசென்னியைப்பொருந்தவைத்து, இரண்டு கரங்களாலும் அத்திருவடிகளை உடும்புபோல விடாமற்பற்றி, மீட்டுமெழாதபடி அவ்வாறே கிடக்கிற்கிடந்தனன். பின்னர் முக்கலமுனிவர் அவ்விப்பிரதனுடைய

ர்பையறிந்து, துட்டர்களாயினுஞ் சரணடைவராயின், அவர்களைக்கைவி
டுதல் தருமமல்லவாதலால், மிகஉள்ளன்போடு நம்மைசசரணடைந்த
இவனுக்கு, எவ்விதத்தேனும் ஓர் நன்மையைச் செய்யவேண்டுமென்று
ஆலோசித்து, இவன் வேடனாகையால்- விதியுளியுபதேசித்தல் கூடாதென்
று, கணேசமூர்த்தியினது திருநாமத்தைமாத்திரம் உபதேசிக்கத்தக்கதெ
ன்றெண்ணி, நீ விரைவில் ஸ்நானஞ்செய்துவருவையென்று அவனுக்கு
ஆக்கியாபித்தார். அவ்வார்த்தையை விப்பிரதன் செவிக்கமுதாகக்கேட்டு
உடனேஸ்நானஞ்செய்துவந்தான். பின்னர் முக்கலமுனிவர் அவன்சிரத்
தின்மீதுதமதுதிருக்கரத்தைவைத்து,ஓம்கணேசாயநமவென்னு மந்திரத்
தையவன்செவியிலுபதேசித்து, அவனெதிரில் ஒருலர்ந்ததடியை நட்டு,
அன்பனே- இத்தடிக்குத்தினந்தோறுங்காலந்தவறாமல்நீர்விட்டுக்கொண்
டு,அதுதளிர்க்கின்றபரியந்தம்அதன்சமீபத்திற்றனேயிருந்து,விநாயகமூர்
த்தியினுடையதிருவடிகளைமனதிற்றியானித்து,யானுபதேசித்தமகாமந்தி
ரத்தைச்செபித்துவருவையாயின்,உனக்குசகலசித்திகளுங்கைகூடும், நா
முஞ்சின்னாளில்இங்குவருவோமென்றுசொல்லித், தமது ஆசிரமத்திற்கு
எழுந்தருளினர். பின்னர்விப்பிரதன் அளவற்றமகிழ்ச்சிகொண்டு,முக்கல
முனிவருபதேசித்தவண்ணம் அத்தடிக்கு முக்காலத்துநீர்பெய்து,அதன
ருகிலிருந்து,விநாயகமூர்த்தியைமனதிற்றியானித்து,தானுபதேசம்பெற்ற
மந்திரத்தைச்செபித்துவந்தான். இவ்வாறு ஆயிரவருடபரியந்தம்இடை
விடாது செபித்துவருகையில்,அத்தண்டானது தளிர்த்துப்பூத்தது.அச்ச
மயத்தில்முக்கலமுனிவரும்அங்கெழுந்தருளி, விப்பிரதனுடையமனவுறு
தியைக்கண்டு, மிகுந்தசந்தோஷங்கொண்டு,முற்றத்துறந்தமுனிவர்கட்கு
ம் இவ்வுறுதிவருவது அரிதென்றுநினைத்து, பலமுறைவியந்து, பொருக்
கென்று தமதுகமண்டலத்துள்ளநீரைமந்திரித்து,விப்பிரதன்மீதுதூவின
ர். உடனே கல்லெறியக்கண்டபறவைக்கூட்டங்கள் மரத்தைவிட்டெழும்
புமாறுபோல, அவன்பலபிறவிகள்தோறுஞ்செய்துவந்த பாதகங்களெல்
லாம்பறந்தோடிவிட்டன.மொண்டுவார்த்தசலத்தினற்றளிர்த்துப்பூத்திரு
க்கின்றதண்டினைப்போல, முக்கலமுனிவர்தூவிய மந்திரசலத்தினல் அவ
ன் புருவமத்தியிற்றுதிக்கையுண்டாகி,விநாயகமூர்த்தியினுடையதிருவுரு
வத்தையடைந்தனன். பின்னர்முக்கலமுனிவரானவர்அந்தச்சற்சீடனைத்
தழுவிக்கொண்டு,கணேசமூர்த்தியினுடைய ஏகாக்ஷரமந்திரத்தையுபதே
சித்து,என்னருமைமைந்தனே-நீஇப்போதடைந்திருக்கின்றவுருவத்தோ
டுஒருகற்பகாலவரையில் வாழக்கடவாய், நீபெய்துவந்தசலத்தினற்றளிர்
த்துப்பூத்திருக்கின்றஇம்மரமானதுசற்பகவிருக்ஷமாகக்கடவதென்றுசொ
ல்லி,அவ்விடத்தினின்றுமெழுந்தருளினர்.உடனேஅம்மரமுங்கற்பகவிரு
க்ஷமாகி,அவ்வவர்கள் வேண்டுவனவற்றையெல்லாம் வரையாது கொடுத்
துவந்தது.பின்னர் விப்பிரதன்அன்பேஒருருவமாகிக், கணேசமூர்த்தியி
னுடையதிருவடிகளைத்தியானித்து, தனதுபுருவத்தினடுவிற்சுண்டந்தாங்
கியிருக்குந்தன்மையால்,யாவரும்புருசுண்டியெனும்பெயரினல்அழைக்க
ப்பெற்று, முக்கலமுனிவருபதேசித்த ஏகாக்ஷரமந்திரத்தை முன்போல
வேஆயிரவருடம்வரையிற்செபித்துக்கொண்டுவர,அதற்குக்கணேசமூர்த்
திகிருபைகூர்ந்து,அப்புருசுண்டிக்கெதிராக.அகாயமார்க்கமாய்த்தரிசனந்த

ந்தருளினர். உடனே அத்தரிசனத்தைப் புருசுண்டிமுனிவர்கண்டு, ஆடிப்பாடி, ஆனந்தபரவசங்கொண்டு,கரங்களைச்சிரமேற்கூப்பி, ஓ விண்டுபிரமனாதியரால் அறிதற்கரியகர்த்தனே நமஸ்காரம்,தேவர்களெல்லாந்தொழும்படியாக முதன்மைபெற்றிருக்கின்ற கடவுளே நமஸ்காரம், மகாவீரத்தன்மையையுடைய அங்குசபாசங்களையேந்துங் கரத்தினைப்படைத்த கணேசமூர்த்தியே நமஸ்காரம்,பொய்யர்க்குப்பொய்யராகியும்மெய்யர்க்குமெய்யராகியும்விளங்குந்தீனதயாபரமூர்த்தியே நமஸ்காரம், ஞானசத்தியுங்கிரியாசத்தியுமாயிருக்கின்ற சித்திபுத்திகள்மணாளனே நமஸ்காரம்,என்று அனந்தமுறைதோத்திரஞ்செய்தலும்,அத்தோத்திரங்கட்கு விநாயகமூர்த்தி சந்தோஷங்கொண்டு,அன்பனே - நீகருதியவரங்களைக்கேள் தருகின்றோமென்று திருவாய்மலர்ந்தனர்.புருசுண்டியானவர்மீளவும்பணிந்தெழுந்து, கர்த்தனே-அடியேன்தேவரீருடையகிருபையினால் தேவர்களாலுமடைதற் கருமையனவாகியசெல்வத்தையும்பேரின்பத்தையும் எளிதிற்பெற்றேன்,அன்றியுந்தேவரீருடையதிருவுருவத்தையுமடைந்தேன்,இனி அடியேன்பெறத்தக்கபேறுதேவரீர்திருவடிகளையடைவதேயன்றி, அதைவிடவிரும்பத்தக்கது வேறென்னவிருக்கின்றது,சுவாமி-அத்திருவடிப்பேற்றையே அடியேற்கருளவேண்டுமென்றுபிரார்த்தித்துக்கொண்டனர்.அதற்குவிநாயகக்கடவுள் மனதிரங்கி, அவனருகிலெழுந்தருளி,அன்பனே-நீகருதியதிருவடிப்பேற்றினையடையவதற்கு வேதாகம புராணங்களில் நான்குபாயங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வுபாயங்கள் - சரிதை - கிரியை- யோகம் - ஞானம் - என்று சொல்லப்படும். அவற்றுள் சரிதையாவது பிராதக்காலையிற் றேவாலயங்களிற் சென்று, பயபத்தியுடனே திருவலகிடுதல், திருமெழுகிடுதல், திருவிளக்கிடுதல், நந்தனவனம் வைத்தல், பூமாலைதொடுத்துச் சாத்தல், பூசனைபுரிதல், பெரியோர்களைக் கண்டால் கடவுளுககுவழிபடுதல்போல அவர்கட்கு வழிபட்டுவந்தித்தல், தேவாலயம்-சத்திரம்-சாவடி-முதலியவைகளை நூதனமாகச்செய்வித்தல், இவைகள் ஜீரணித்திருக்கின் பழுதுபார்த்தல், தினந்தோறுங் கங்கைமுதலாகிய புண்ணியதீர்த்தங்களில்ஸ்நானஞ்செய்தல், ஆலயங்களில்அங்கப்பிரதக்ஷணஞ் செய்தல், அடியளந்து நடத்தல், நூற்றெட்டு ஆயிரத்தெட்டு என்னுந்தொகைப்படி பிரதக்ஷணஞ் செய்தல், தருமத்தின்வழிநின்று பொருள்சம்பாதித்தல், பிரம்சாரி- வானப்பிரத்தன்- சன்னியாசி-யென்னும் இம்மூவருக்கும் பசி பிணி முதலிய இடையூறுகளுறுதவண்ணந் தக்கமுயற்சி செய்தல்,பிதிர்தேவதைகளுக்கு யாகாதிகருமங்கள் நீர்க்கடன்முதலியவற்றால் திருப்த்திசெய்வித்தல், வந்தவிருந்தினரைப் பாதுகாத்து இனிவரும்விருந்தினருக் கெதிர்பார்த்தல், உறவினர்கள் வுள்ளமகிழ வேண்டியவற்றையுதவல், தானுந்தன்மனைவியும் ஒருவழிப்பட்டு நடுவுநிலைமையை யநுசரித்திருத்தல், அன்புடைமை- அடக்கமுடைமை - ஒழுக்கமுடைமை- பொறையுடைமை- யென்னு நன்னெறிகளையுற்றிருத்தல் பிறர்பொருள்கவர்தல்- புறங்கூறுதல்- பயனிலாவற்றையநுசரித்தல் - என்னுந்தீநெறிகளைவிலக்குதல் முதலியனவாம். இவற்றையநுட்டித்தவர்கள் சாலோகபதவியை யடைவார்கள், அதாவது நமதுலோகத்தில் வந்திருப்பதாம். கிரியையாவது-சந்தனம்-புட்பம்- தூபம்-தீபம்- நைவேத்திய

ம்- கோசலம்-கோமயம்-பால்- தயிர்-நெய்-தேன்-வாழைக்கனி-மாங்கனி-பலாக்கனி- நாரத்தங்கனி- இளநீர்- பனிநீர்-சந்தனம்-முதலியபூசாதிரவியங்களைக்கொண்டு, வேதாகமவிதிப்படிதிருமஞ்சனாதிகளைச்செய்தல், மெய்-வாய்-கண்-மூக்கு-செவி-என்னுமிவற்றின்வழியாகிய-சத்த-பரிச-ரூப-ரச-கந்தமென்கின்றஐந்தாசைகளையும்நாளுக்குநாள் அடக்கல்,விரதம்-தேவதாபூசை-மந்திரம்-எந்திரம்-செபம்-யாகம்-என்னுமிவைகளையநுசரித்தல், ஓருயிர்க்குமிடையூறுவராமற்காத்தல்,தவங்களினிற்றல்,மனதையடக்கி அறிவோடுகலந்து தற்பதத்தையுணருகின்றவனாயில் ஆசிரியன்கட்டளையையுஞ்சாத்திரவிதியையுங்கடைப்பிடித்திருத்தல்,கோபமாதிகளை நீக்கல் முதலியனவாம். இவற்றையநுட்டித்தவர்கள் சாமீபபதவியைப்பெறுவார்கள், அதாவது நமது சமீபத்திலிருப்பதாம். யோகமாவது-இயமம்-நியமம்- ஆதனம்- பிராணாயாமம்- பிரத்தியாகாரம்- தாரணை- தியானம்-சமாதி-எனஎண்வகைப்படும். இவற்றுள் இயமமென்பது, கொல்லாமை மெய்ம்மைகூறல்- கள்ளாமை- பிறர்பொருளிச்சியாமை- இந்திரியமடக்கல் முதலியனவாம். நியமமென்பது, தவம்-தூய்மை- தத்துவநூலோர்தல்-மனமுவந்திருத்தல்-தெய்வம்வழிபடல்முதலியனவாம். ஆதனமென்பது,சுவத்திகம்-கோமுகம்-பதுமம்-வீரம்-கேசரி- மயூரம்-பத்திரம்-முத்தம்-சுகம்- எனஒன்பதுவகைப்படும். இவற்றுள் - தொடைக்கு முழங்காற்கு நடுவே இரண்டுள்ளங்காலையுஞ் செலுத்தி யிறுமாந்திருத்தலைச்- சுவத்திகமென்றும், சகனப்பக்கத்தில் இருகாற்பரட்டையு மாறவைத்து அவ்விருகாற் பெருவிரலைக் கைப்பிடித்திருத்தலைக் - கோமுகமென்றும், இருதொடைமேலும் இரண்டுள்ளங்காலையுமாறித்தோன்றவைத்தலைப் - பதுமமென்றும், வலத்தொடையில் இடக்காற்பரட்டைச்சேர்த்தி இறுமாப்புற்றிருத்தலை- வீரமென்றும், பீசத்தின்கீழ்ச்சீவனியிடத்துப் பரட்டை வைத்து இடமுழங்கையை முழந்தாளில்வைத்து அங்குலிவிரித்து நாசியைப்பார்த்திருத்தலைக்- கேசரியென்றும், பீசத்தின்கீழ்ச்சீவனியிடத்து இருகாற்பரட்டையும்வைத்து அவ்விருபதத்தையும் இருகையாலிறுகப்பிடித்து அசையாதிருத்தலைப்- பத்திரமென்றும்,இடக்காற்பரட்டாற்சீவனியையமுத்தி வலக்காற்பரடு அப்பரட்டின்கீழுந்தவிருத்தலை- முத்தமென்றும், முழங்கையிரண்டு முந்திப்புறத்திலழுந்தப் புவியிற்கையூன்றிக்காலீட்டித்தலைநிமிர்ந்திருத்தலை - மயூரமென்றும், சுகமுந்திடமும் எவ்வாறிருக்கினெய்துமோ அவ்வாறிருத்தலைச்- சுகமென்றுங்கூறப்படும். பிராணாயாமமென்பது, பிராணவாயுவை இரேசகபூரககும்பகஞ்செய்தலாம். பிரத்தியாகாரமென்பது, உபாதியை நீக்கி யுண்ணோக்கலாம். தாரணையென்பது,கண்டம்-இதையம்-நெற்றி-கபாலம்-நாபி-இவற்றிலொன்றிற் சந்ததஞ்சிந்தை வைத்திருத்தலாம்.தியானமென்பது,ஐம்புலமடக்கிச்சிவயோகஞ்சேர்தலாம். சமாதியென்பது, இந்திரியமுதலியதத்துவசேட்டைகட்கேதுவாயாக்கையுணின்று அவற்றோடுகூடினும் அவற்றிற்பற்றின்றியிருக்கும்ஆன்மாவாகியதன்னைத்தான்காண்டலாம். இவற்றையனுட்டித்தவர்கள்சாரூபபதவியைப்பெறுவார்கள், அதாவது நம்மைப்போன்று உருவம்பெற்றுவாழ்தலாம்.ஞானமாவது,ஞானசாரியருடையதீக்ஷாக்கிரமத்தினால்,வஸ்துத்திரயம்-தத்துவத்திரயம்-தசகாரியம்- என்னும்மூன்றுஞானங்

களையுமறிந்து, அஞ்ஞானத்தினின்றுநீங்குதலாம். இவற்றுள்வஸ்துத்திரயமாவன, பதி-பசு-பாசம்-என்பன. இவற்றுள் பதியாவது- ஆதியந்தமில்லாததும், உருவருவில்லாததும், குணங்குறியில்லாததும், எங்குநிறைந்துள்ள பரிபூரணமானதும், தனக்குமேலொருகடவுளில்லாததும், மனோவாக்குக்கெட்டாததும், விருப்புவெறுப்பில்லாததும், உயிர்க்குயிராயிருப்பதும், இவைமுதலான அளவிறந்த தன்மையையுடைய நிட்களப்பொருளாயிருப்பதாம். பசுவாவது-அளவிடற்கரியதும்,நித்தியத்துவமுள்ளதும், மலவிருளிலழுந்தியிருப்பதும்,நமதுதிருவருளால்இருவினைக்கீடானசரீரமெடுத்துப்பலவாகிய புவனபோகங்களைஅனுபவித்துஇதனாற்புண்ணியபாவங்களைச்செய்து பிறப்பிறப்புள்ளதும், புண்ணியமேலீட்டால் இருவினையொப்பு மலபரிபாகமுண்டாகுங்காலத்தில் குருவருளால் நம்மைச்சேர்வதுமாம். பாசமாவது - ஏகத்துவமும் நித்தியத்துவமும் அளவிறந்தவல்லமையுள்ளதும், செம்பிற்களிம்புபோலச் சீவனைப்பற்றி அறிவுமுழுவதையு மறைப்பதும், புண்ணியமேலீட்டால் பக்குவப்படுவதும், இரவினிருளிலும் அதிகவிருளாவதுமாயிருப்பதாம். இனித்தத்துவத்திரயமாவன, ஆத்மதத்துவம்- வித்தியாதத்துவம்- சிவதத்துவம்- என்பன. இவற்றுள் ஆத்மதத்துவம், பிரிதிவு- அப்பு- தேயு- வாயு- ஆகாயம்- என்கின்ற ஐந்துபூதங்களும், சோத்திரம்- தொக்கு- சட்சு- சிங்குவை- ஆக்கிராணம்- என்கின்ற ஐந்துஞானேந்திரியங்களும், சத்தம்- பரிசம்- ரூபம்- ரசம்- கந்தம்- என்கின்ற ஐந்துதன்மாத்திரைகளும், வாக்கு- பாதம்- பாணி- பாயுரு- உபத்தம்- என்கின்ற ஐந்துகன்மேந்திரியங்களும்,மனம்- புத்தி- சித்தம்- அகங்காரம்- என்கின்றநான்கு அந்தக்கரணங்களும், ஆகிய இவ்விருபத்துநான்குமாம். வித்தியாதத்துவமாவது- காலம்- நியதி- கலை- வித்தை- இராகம்- புருடன்- மாயை- என்கின்றஇவ்வேழுமாம். சிவதத்துவமாவது- சுத்தவித்தை- ஈச்சுரம்- சாதாக்கியம்- சத்தி- சிவம்- என்கின்றஇவ்வைந்துமாம். இவற்றிற்பூதமுதலாயஆத்மதத்துவங்களுள்-பிரிதிவு-உரத்துத்தரிக்கும், அப்பு-குளிர்ந்துபதஞ்செய்யும், தேயு-சுட்டொன்றுவிக்கும்,வாயு-சலித்தெவையுந்திரட்டும், ஆகாயம்-நிரந்தரமா யிடங்கொடுக்கும்,சோத்திரம்-சத்தத்தையறியும்,தொக்கு-பரிசத்தையறியும்,சட்சு-ரூபத்தையறியும்,சிங்குவை-ரசத்தையறியும்,ஆக்கிராணம்-கந்தத்தையறியும்,வாக்கு-வசனிக்கும், பாதம்-கமனம் பண்ணும், பாணி-இடுதலும் எற்றுதலுஞ்செய்யும், பாயுரு-மலவிசற்கத்தைவிடும், உபத்தம்-ஆனந்தத்தைவிடும்,மனம்-பற்றும்,புத்தி-நிச்சயிக்கும், சித்தம்-சிந்திக்கும், அகங்காரம்-கொண்டெழும்பும்எனவறிக. காலமுதலிய வித்தியாதத்துவங்களுள், காலம்-நிகழ்காலம்-இறந்தகாலம்-எதிர்காலம்- எனமுக்காலங்களைக்கற்பிக்கும், நியதி-கன்மத்தைநிச்சயித்துஅநேகசாதிநாமத்துவங்களையுண்டாக்கும்,கலை- ஆணவத்தைச்சிறிதேநீக்கி அந்தந்தசாதிகளுக்கேற்ற கருமங்களைப்பற்றுவிக்கும்,வித்தை-அறிவையெழுப்பிக் கிரியையோடுஞானத்தைஓர்விக்கும், இராகம்-பெற்றதைச்சிறிதாக்கிப்பெறுமதில்இச்சையுண்டாக்கும், புருடன்-பஞ்சேந்திரியங்களின் வழியாகவிடயத்திலேயழுத்துவிக்கும்,மாயை, தமம்-மாயை-மோகம்-அவித்தை- அனிர்தம்-என ஐவகையாயிருந்து மயக்கும், இவற்றுள்தமம்-சிவசைதன்னியத்தை மறைக்கும்,மாயை-சகத்

ரூபமான அன்னிநாத்தோற்றத்திற்குக்காரணமாகியிருக்கும், மோகம்-விப
ரீதஞானம்உண்டாக்கும், அவித்தை-உணர்வழிக்கும், அநிர்தம்- சகத்துரூ
பத்துக்கன்னியமாகும் எனவறிக. சுத்தவித்தைமுதலிய சிவதத்துவங்க
ளுள், சுத்தவித்தை-ஞானமேறிக்கிரியைகுறைந்திருக்கும், ஈச்சுரம்-ஞா
னங்குறைந்து கிரியையேறியிருக்கும், சாதாக்கியம்-ஞானமுங்கிரியையு
ம் ஒத்திருக்கும்-சத்திகிரியையா யிருக்கும், சிவம்-ஞானமாயிருக்கும் எ
னவறிக. இவற்றுள் சிவம்-சிவனுக்கிடம், நாதமென்றும்பெயர். சத்தி-கா
ருண்ணியத்திற்கிடம், விந்துவென்றும்பெயர். சாதாக்கியம்- அநுக்கிரக
த்துக்கிடம், சதாசிவமென்றும்பெயர். ஈச்சுரம்- திரோபவத்துக்துக்கிட
ம், மகேஸ்வரனென்றும்பெயர். சுத்தவித்தை- சங்காரத்துக்கிடம், உரு
த்திரனென்றும்பெயர். இனித்தசகாரியமாவன, தத்துவரூபம் - தத்து
வதரிசனம்- தத்துவசுத்தி- ஆத்மரூபம்- ஆத்மதரிசனம்- ஆத்மசுத்தி- சி
வரூபம்- சிவதரிசனம்- சிவயோகம்- சிவபோகம்- என்பனவாம். இவற்று
ள், தத்துவரூபமாவது- அவற்றின் குணங்களைக்காண்கை, தத்துவதரிச
னமாவது- அவைதன்னிடத்திலேநின்று சீவித்தமுறையைக்காண்கை, த
த்துவசுத்தியாவது- அவைதனக்குவேறென்றறிந்து நீங்குகை, ஆத்மரூப
மாவது- ஆத்மஞானமென்னும் அறிவேவடிவெனவறிகை, ஆத்மதரிசன
மாவது- தத்துவங்கையறிந்து நீங்கி யிவற்றிநின்று நீங்கினவறிவுதானெ
னவறிகை, ஆத்மசுத்தியாவது-பந்தமுத்தியிரண்டிலும்சிவனுபகரிக்கின்றா
னென்று தன்னுடையசுதந்தர ஆனியையறிகை, சிவரூபமாவது- தத்து
வமுப்பத்தாறிற்கும் அப்பாலாய் வாக்குமனாதீதகோசரமாய் ஞானமே
வடிவாயிருப்பதெனவறிகை, சிவதரிசனமாவது - தத்துவமுப்பத்தாறை
யுமறிவித்து தரிசிப்பித்துநீங்கி இவற்றினின்று நீங்கிநிற்கும் ஆத்மாவை
யுந்தரிசிப்பித்து நிற்கின்றஞானமெனவறிகை, சிவயோகமாவது - இந்த
ஞானந்தன்னைவிட்டு நீங்காதென்றறிந்து தான் அதுவாய்நிற்கை, சிவபோ
கமாவது- தான் அந்தநேயத்திலே நின்றழுந்திச்சிவத்தைப்பெறுகைஎன
வறிக. இந்தமேலாகிய ஞானத்தை யநுட்டித்தவர்கள் சாயுச்சியபதவி
யையடைவார்கள். அதாவது நம்மோடு இரண்டறக் கலந்திருப்பதாம்.
அன்பனே - மேற்கூறிய சரிதாதி நான்குபாயங்களையுங் கடைப்பிடித்து,
மனதில் ஆசிரியருடைய உருவத்தைப்போலத் தியானஞ்செய்து சோட
சஉபசாரங்களையுநடத்துவதாகிய-குருபாவனையையும், ஆலயங்களில் பூசி
த்துவரும் படிவங்களைப்போல மனதிற்றியானித்து அபிடேகமுதலியவை
களைநடத்துவதாகிய -சொரூப பாவனையையும், ஆசிரியர் சொல்லிய கு
றியைப்பார்த்து மனதைப் பஞ்சேந்திரியவழியிற் செலுத்தாம லிருத்த
லாகிய-பூரணபாவனையையும், ஒன்றையுஞ் சுற்றிப்பாராமல் மனதைத்த
ற்போதத்தில்சோப்பதாகிய- அதீதபாவனையையும் அநுசரித்திருப்பதே,
நமது திருவடிகளை யடையத்தக்க உபாயமென்று, சகலவேதாகமங்களி
'னுட்பொருள்களை யெல்லாம் அங்கைநெல்லிக்கனிபோலத் தெரிவித்து
த், தமதுபரிபூரணகடாக்ஷமும்பாலித்தெழுந்தருளினர். பின்னர்புருசுண
டி அவையனைத்தையும் அன்போடுகேட்டமகத்துவத்தால், இப்போது சீ
வன்முத்தராகியிருக்கின்றனனென்றுசொல்ல, மீட்டுஞ் சூரசேனமகாராச
ன்தேவேந்திரனைப்பணிந்தெழுந்து, இவ்விடத்தில்சங்கடசதுர்த்திவிரதத்

தையநுட்டிக்கின்ற ஒருவனால், இவ்விமானம்மீட்டும் எழும்பி தேவலோகஞ்செல்லுமென்று தேவரீர் சொன்னபடியால், அவ்விரதத்தின் மகிமையையும் அடியேற்குத்தெருட்டவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குத்தேவேந்திரன்சொல்லுவான், அரசனே - இப்புருசுண்டியென்பவர் இத்தன்மைத்தான்மகத்துவத்தோடிருக்கின்ற காலத்தில், பாவஞ்செய்தோரையெல்லாம் பலவகைநரகங்களிற்செலுத்தி வதைசெய்யவும், புண்ணியஞ்செய்தோரையெல்லாம் போகபூமிகளில் விட்டுஉபசரிக்கவுஞ்செய்து, தனது நடுவுநிலைமைதவறாதுநீதிசெலுத்திவருகின்றயமதருமராசனுலகத்திற்கு, ஒருநாள் நாரதமகாமுனிவர்செல்ல, அவரைக்கண்டஉடன் யமதருமராசன் விரைந்தெழுந்து, எதிர்கொண்டுவந்து, சோடசவுபசாரங்களோடும்பூசித்து, சுவாமி-தேவரீர் இங்கெழுந்தருளியகாரியத்தைஅடியேற்குணர்த்தியருளவேண்டுமென்றுபிரார்த்தித்தான். அதற்கந்நாரதமுனிவர், உனதுஉலகத்தின்வளங்களைக்காணவேண்டி இங்குவந்தனமென்று சொல்லலும், அவ்வெமதருமராசன் மகாபாக்கியமென்று ஆனந்தித்து, அம்முனிவரையழைத்துக்கொண்டு, அந்நகரத்தில் நவரத்நச்சொர்ன்னமயமாயிராநின்ற அளவற்ற விநோதங்களைக்காட்டி, நரக பூமியிலழைத்துக்கொண்டு சென்று, அங்கு அளவற்றபேர்கள் இருபத்தெண்கோடி நகரங்களிலும் விழ்ந்து வருந்துவதைக்காண்பித்தனன். அவையனைத்தையும் நாரதமுனிவர்கண்டு அப்பாற் செல்லுகையில், கும்பி பாகமென்னும் ஓர்நரகத்துள், தேவர்களும்புகழ்ந்துவணங்கத்தக்க தவசிரேஷ்டராகிய புருசுண்டியினுடைய சுற்றத்தினரெல்லாங் கிடந்துவருந்துகின்றதைப்பார்த்து, பரமசிவத்தினது திருவடிகளைமனதிற்றியானித்து, யமதருமராசனிடத்தில் விடைபெற்று, அவ்விடத்தினினின்றுநீங்கி, மிகுந்தகிருபையோடும் ஒரேலென்று புருசுண்டியிடத்திற்குவந்து, ஓ சர்வசித்திப்பிரதாபரே- நீர் விநாயகக்கடவுளுடையபெருங்கருணையினாலே அவர் சாரூபத்தைப்பெற்றிங்ஙனமிருக்க, உம்முடைய சுற்றத்தின ரெல்லாம் யமலோகத்திற்கும்பிபாகமென்னும் நரகத்தில் வீழ்ந்து வருந்துகின்றார்களாதலால், அவர்களைநற்கதியிற்சேர்ப்பிக்கவேண்டியமுயற்சிகளை நடத்தக்கடவீரென்றுசொல்லி, ஆகாயமார்க்கமாகச்சென்றனர். அப்பால்புருசுண்டியென்பவர் மனம்வருந்தி, இதுகாறும் இக்காரணத்தை யாமறியோமே, இதற்கினி என்செய்யத்தக்கதென்றுயோசித்து, சிறிதுநேரத்தியானத்திருந்து, தமது மனத்துள் ஒரு நிச்சயத்தையுணர்ந்து, சகலபொருள்களையுஞ்சேகரித்து, நரகத்தில்வீழ்ந்து வருந்துகின்ற சுற்றத்தினரைக்குறித்து வேதாகமவிதிப்படி சங்கட்டசதுர்த்திவிரதத்தை யநுட்டித்து, அவ்விரதப்பலனை- முன்னர்தம்மையாட்கொண்டு பதிபசுபாசவிளக்கத்தினையுபதேசித்தருளிய கணேசமூர்த்தியினுடைய திருக்கரத்தில்தத்தஞ்செய்தனர். இவ்வாறுதத்தஞ்செய்வதன்முன்னமே, கும்பிபாகமென்னு நரகத்தில்வீழ்ந்துவருந்தியிருந்தவர்களெல்லாம் விமானங்களிலேறித், தெய்வலோகம் போய்ச்சேர்ந்தார்கள். ஆதலால்- ஒருகினத்திற்செய்தஅவ்விரதத்தின்பயன் இத்தன்மையதாயின், எக்காலத்தும் அதனையநுட்டித்துவருமவர்களுடையும் பயன் யாவராலளவிட்டுரைக்கற்பாலதென்று, தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச்சொன்னான்.

கணபதி துணை.

இருபத்துமூன்றாவது.

அங்காரகன்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே, விநாயகக்கடவுளுடைய சங்கட்டசதுர்த்திவிரதத்தைப் புருசுண்டிமுனிவர் அநுட்டித்து, தம்மினத்தினரையெல்லாம் விண்குடியேற்றுவித்தவிவரத்தினைச்சொன்னோம், இப்பால் அங்காரகனுபாசித்த திறத்தினைச்சொல்லுவோங்கேட்பீராக. மீட்டுந்தேவேந்திரன் சூரசேனமகாராசனை நோக்கிச் சொல்லுவான், அரசனே-உலகமுழுவதுந் தொழுதேத்தும் படியாகக், காலந்தவறாமல் நீரைச்சுரந்தளிக்கின்றகாவிரிந்திக்கு ஒருதுறைவிடமாகியசைவளைச்சாரலில், சகலவளங்களு நிறைந்த ஓர் பட்டணத்தில், எல்லாவேந்தர்கட்கும் இராசகண்டீரவத்திற் கொப்பானவனாய், வையமுழுவதும் வணங்கும்படி அரசாக்ஷிசெய்துவந்த, கிருதவீரியனென்னும் இயற்பெயரையுடைய ஓரரசனிருந்தான். அவன் சுகந்தையென்கின்ற தனதுமனைவியோடும்வாழ்வுற்றிருக்குநாளையில், தன்னைநற்கதியிற்சேர்ப்பிக்கவல்ல புத்திரப்பேறின்றி மனவருத்தமுற்று, தானுந்தன்மனைவியுமாக வனத்திற்சென்று,காற்றையுஞ்சருகையும்புசித்து, உடல்வருந்தத்தவஞ்செய்து கொண்டிருந்தான். அதை நாரதமுனிவர் அறிந்து, பிதிரருலகத்திற்சென்று, அக்கிருதவீரிய மகாராசனுடைய தந்தையைக்கண்டு, பிதிர்தேவனே- வேதவொழுக்கங்களில் நின்று, தனதுசெவ்வியகோலைத்திசையனைத்தினுஞ்செலுத்தி, நீதியோடும் அரசாக்ஷிசெய்துவருகின்றஉனதுகுமாரனாகிய கிருதவீரியமகாராசனானவன்,இதுகாறும் ஓர்புத்திரப்பேறில்லாத துக்கத்தினால்,தன்னகரத்தைவிடுத்து, வனத்திற்சென்று, உடல்- உயிர்- உள்ளம்- என்னுமிவைகள்வருந்தும்படியாக,அரியதவத்தினைச்செய்கின்றான். அவன் மனைவியும் அவ்வாறேயிருக்கின்றனள். இனியவர்கட்குப்புத்திரனுதித்தாலன்றிஉயிர்வைத்திருக்கமாட்டார்கள். பின்னர் உன்துவமிசமும்விருத்தியில்லாமற்போய்விடும். ஆதலால் - உனதுபுத்திரனுக்கு மக்கட்பேறுண்டாகத்தக்க முயற்சியைவிரைவில் நடாத்தக்கடவையென்று சொல்லித், தமதிருக்கையையடைந்தனர். இப்பால் அவையனைத்தையும்பிதிர்தேவன் கேட்டமாத்திரத்தில் மனம்வருந்தி, அங்கிடத்திற் சத்தியலோகத்திற்சென்று,பிரமதேவனைக்கண்டு சாஷ்டாங்கமாகவணங்கி,சுவாமி- மறத்தாறுகடந்தீட்டியபொருள்களை அறத்தாற்றிற்செலவுசெய்து, எல்லாப்புகழையும்எளிதிற்சம்பாதிக்கவல்ல எனது செல்வக்குமாரனுக்கு, இதுகாறும் ஒரு புத்திரப்பேறில்லாதகாரணம் யாதினாலோ, அதனை அடியேற்குவிளம்பி யருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டான். அதற்குப்பிரமதேவன்சொல்லுவான்,ஓ பிதிர்தேவனே-உன்மைந்தனாகியகிருதவீரியன், முற்சனனத்திலும்,இப்போதுவசித்திருக்கின்றவூரில்அரசவமிசத்திற்றானேபிறந்து,சாமனென்னும் இயற்பெயரையவகித்துக், கணேசனென்னும்புத்திரனோடுவா

ழ்ந்திருக்குங்காலத்தில், ஓர்கால்பெருங்கலியென்னுங்கருங்குலப் பாம்பி ன் வெவ்வாய்ப்பட்டு வெதும்புவானுகி, நிகரற்றதுன்பத்தைநெடுநாளனு பவித்து, இரண்டுதினம் மூன்றுதினமாகப்பட்டினிகளிருந்து, இடையிற் கிடைத்ததைப்புசித்துக்கொண்டு தனது வாழ்நாளைக்கழித்து வருகையில், ஓர் நாள் ஏதுங்கிடையாதவனுய்வருந்திப், பசியின்கொடுமையை யாற்ற மாட்டாது, விதிதப்பிவழிபறித்துண்ணநினைத்து, நெருங்கிய கானகத்திற் புகுந்து, அதில்பன்னிரண்டுபிராமணர்கள் வழிச்செல்வதைநோக்கி,அவ ர்களெதிரில் யமனையொப்பச்சென்று, இருப்புத்தடிகொண்டுமோதி, உயி யிரைவிசும்பிலேற்றி, உடல்களைமலைக்குகைகளிற்போட்டு, அவர்கள் வை த்திருந்த வஸ்திராபரணமுதலிய பொருள்களைக்கவர்ந்துகொண்டு, இராக் காலத்தில்வீட்டிடைச்சென்று, தாளிட்டிருந்தகதவத்தைப் பலமுறைதட் டித்,தன்குமாரனைக்கணேசா கணேசா கணேசாவென்றுமூன்றுதரங்கூவி ஞன். அதற்கு அக்கணேசன் அன்றுமுழுவதும் அன்னபானங் கிடையா மல்,மிக்கசோர்வினையடைந்து, உயிரிழந்து தனியாய்வீழ்ந்து கிடந்தமை யால், தனக்குக்கதவந்திறப்பார் ஒருவருமின்றி, மற்ருெருவழியாகச் செ ன்று, வீடேறிக்குதித்து, தன்புதல்வன் இறந்துகிடக்கின்றமையைப் பார் ர்த்து, மிக்கதுயரங்கொண்டு, தனக்கிருந்தபசியின்கொடுமையினுலும்,புத் திரனிறந்தானென்னுந் துக்கத்திலுலும்,பிரமஹத்திசூழ்ந்துகொண்டதனு லும்,அன்றிரவெல்லாம் உறங்காதிருந்ததன்மையிலுலும், மறுநாளுதயத் தில் காலனுணையாற்காயத்தைவிட்டனன்.அத்தினம் சங்கட்டசதுர்த்தியா க விருந்ததன்றி, அதற்குமுன்னுள் தன்புதல்வனுகியகணேசன்அன்னபா னுதிகளின்றி யிறந்தமையால், உடனே தெய்வவிமானம்வர, அதில் அக்க ணேசனென்பவன்ஏறி விநாயகலோகத்திற்போய்ச் சேர்ந்தான். மேற்கூ றியசாம்பனேவெனில், அத்தினந் தன்புதலவனைக்கணேசாவென்றுமூன் றுதரங்கூவியநன்மையால், இச்சனனத்தில் உனக்குப்புதல்வனு யவதரித் து,காமனுங்கண்டு நாணத்தக்ககட்டழகினையுடையவனுகி,உலகமெல்லாம் வணங்கத்தக்க அரசுரிமையையடைந்தனன். ஆயினும் அந்தணரைக்கொ ன்றபிரமஹத்திபாவத்திலுல்,இதுகாறும்புத்திரப்பேறில்லாதவனுயினன். ஆதலால்-உன்குமாரனுகியகிருதவீரியனுக்குப் புத்திரப்பேறுண்டாகவே ண்டுமென்றுகருத்திருக்குமாயின்,மேற்சொன்னகொலைபாதகச்சேடமொ ழியுமாறு, யானைமுகக்கடவுளாகிய கணேசமூர்த்தியினது சங்கட்ட சதுர் த்திவிரதத்தையநுட்டிக்கவேண்டும்.அவ்விரதத்தையநுட்டிக்குமுறைமை யைச்சொல்லுவோங்கேட்பாயாக. மாசிமாதத்தில், அமரபக்ஷத்தில்,செவ் வாய்க்கிழமைகூடியசதுர்த்தியில்,அவ்விரதத்தைத்துவக்கி,அன்று உதயத் திலெழுந்து, ஸ்நானமுதலியகடன்களைமுடித்து,திருவெண்ணீறணிந்து,உ ருத்திராக்கம்பூண்டு, சுத்தபூமியிலிருந்து, சிரசாதிபாதம்வரையில்விதிப்ப டி நியாசஞ்செய்து, காமாக்கினியாதிகளைத்தணித்து, கணேசமூர்த்தியினு டைய பாதபதுமங்களைமனதிலிருத்தி, ஏகாக்கரமந்திரம் சடக்கரமந்திரம் திருநாமமந்திரம் என்னும் இம்மூன்றினையுந்தியானித்து, அன்னபானுதிக ளைநீத்து,சந்திரோதயமானவுடனே விநாயகமூர்த்தியை எழுந்தருளச்செ ய்து, சகலபூசாதிரவியங்களோடும் பூசனைமுடித்து, சந்திரனுக்கும் அருச் சனையாதிகளைநடத்தி, வேதியர்களை வரவழைத்து, அவர்கட்கு அறுசுவை

யோடுங்கூடியஉண்டியைப் அன்போடளித்து,அன்றிரவுமுழுவதும்நித்திரை யின்றியிருந்து,விநாயகப்பெருமானுடையதிவ்வியசரித்திரங்களைக்கேட்டு க்கொண்டிருப்பதுவிதியாகும். பெறுதற்கரிய இவ்விரதத்தைச் சதுர்த்தி தோறும் ஒருவருடம்வரையிற்செய்கின்றவர்களுக்குப், புத்திரப்பேறுமுத லானபாக்கியங்களுண்டாகும். மேலும்அத்தினம்வன்னிவிருக்கத்தடியிலி ருந்துஅநுட்டிப்பார்களாயின்,கூன்குருடு முதலியஎச்சங்களொழியப்பெ ற்று,எல்லாப்பொருள்களையும்வேண்டுமட்டும்பெறுவார்கள். ஆதலால்-இ த்தன்மைத்தாகியமேலானவிரதமே நீகருதியகோரலைமுடிக்கததக்கதென் று பிரமதேவன்சொல்ல, அவையனைத்தையும் பிதிர்தேவன்அமுதாகக்கே ட்டு,மனமகிழ்ச்சிகொண்டு, மீட்டுந்தொழுதெழுந்து, சுவாமி - விநாயகப் பெருமானுக்குசெவ்வாய்க்கிழமையில்வருகின்றசதுர்த்திமுக்கியமாயிருக் கின்றகாரணம்யாதுகொண்டோ, அதனையும்அடியெற்குத்தெரிவித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டனன். அதற்குப்பிரமதே வன்சொல்லுவான்-முன்னொருகாலத்தில்,நிருமதைநதிதீரத்தில், அவையி ற்சர்ப்பக்கச்சினைவீக்கிய விநாயகக்கடவுளுக்கு அன்பராகிய பரத்துவாச ரென்னும்ஒருமுனிபுங்கவரிருந்தார். அவர்ஒருநாள் - அந்நிருமதையில்ஸ நானஞ்செய்யப் புக்கியபோது, யாவருந்தெய்வரம்பையோ வென்றெண் ணத்தக்கவனப்பினைவாய்ந்தஒரு ஸ்திரீயானவள், சிலகூட்டத்துடன்அந்ந தியில்ஸ்நானஞ்செய்யவந்து,அதன்கரையின்கணின்றனள். அவளை அப்பர த்துவாசமுனிவர் பார்த்தமாத்திரத்தில், அவர்நெஞ்சமானது கூற்றமோ கொடும்பகழியோவென்றுசொல்லத்தக்கஅவளதுகண்வலையிற்சிக்கிஅலம ற,அதையம்முனிவர்சிறிதுமாற்றுவதாயினர்.அவ்வாறுமாற்றுவதற்குமுன் னமேஅவருடையவீரியம்வெளிப்பட்டுப்பூமியில்வீழ்ந்தது அதற்கம்முனி வர்மனங்குன்றிப்,பின்னரொருவாறுதேறித்,தமதிருக்கையைச் சேர்ந்துத வஞ்செய்துகொண்டிருந்தனர்.இப்பால் அவ்வீரியமானது விழுந்தவிடத்தி ற்றானேஓரிளமகவாகியிருக்க, அதைப்பூமிதேவியெடுத்து,நமக்குநற்பேறு கிடைத்ததென்று அன்போடுவளர்த்துவந்தனள்.பின்னர் அக்குழந்தையா னது தனது மேனிசெவ்வானம்போலச் சிவந்து அழல்போலஒளிவிட்டி ருந்தமையால்அங்காரகனென்றும், வீரியமாய்பூமியில்வீழ்ந்து பிள்ளையா னதால்பூமகனென்றும்பெயராவகித்துத்,தெருக்களில்விளையாடிக்கொண் டிருக்குங்காலத்தில், ஓர்நாள் தனதன்னையாகிய பூமிதேவியிடத்தில்வந்து சாஷ்டாங்கமாகவணங்கியெழுந்து, அம்மா - அடியேனைப்பெற்று வளர்த் ததாய்நீயாயினை,என்தந்தையாவரோ அறிகின்றிலேன், அதனை இப்போ து எனக்குத்தெரிவித்தருள வேண்டுமென்று வினவ,அதற்கப்பூமிதேவி இசைந்து, உனதுதந்தைபரத்துவாசமுனிவரென்று அறிவித்து, உடனே அப்பிள்ளையை யழைத்துக்கொண்டு, அம்முனிவரது ஆசிரமத்திற்சென் று, அவர் திருவடிகளில் வணங்கி, சுவாமி - இச்சிறுவன் தேவரீர்வீரியத் தினின்றும் உதித்தவன்,இனித்தேவரீரே அவனைக்கைக்கொள்ளவேண்டு மென்று சொல்லி, அவனையவரிடத்தில் விடுத்துச் சென்றனள்.அதற்கம் முனிவர் மனமகிழ்ந்து, தமது இரண்டுகரங்களாலும் அக்குழந்தையைத் தழுவியெடுத்து,உச்சிமோந்து, உபநயனாதிகளைச்செய்து,வேதமோதுவித் து,கலையாதிகளையுங்கற்பித்து, கணேசமூர்த்தியினுடைய திருமந்திரத்தை

உபதேசித்து, அதனைத் தியானிக்குமுறைமையினையுந்தெருட்டி, நீதக்கவிடத்திற்சென்றுதவஞ்செய்துகொண்டிருக்கக் கடவையென்றேவினர். உடனேஅங்காரகன் அவ்வாசிரமத்தினின்றுநீங்கி, மற்றொருவனத்தின்கட்சென்று, ஒப்புயர்வற்றமகாகணபதியினுடைய திருவடித்துணைகளையேசார்வாகப்பற்றி, நாடோறும் அவர்மந்திரத்தைக்கணித்து, ஆயிரவருடம்வரையிற்றவஞ்செய்துகொண்டிருந்தனன். பின்னர்அத்தவத்திற்கு விநாயக மூர்த்தி அருள்சுரந்து, மதம்பொழிகின்ற யானைவதனமும், அருட் பார்வையும், துதிக்கரமும், பத்துபுயங்களும், ஒளிவீசுகின்றதிருமேனியும் உடையவராய், அவனெதிரிற்பிரத்தியக்ஷமாக, உடனேஅங்காரகன்விரைந்தெழுந்து, சாஷ்டாங்கமாகநமஸ்காரஞ்செய்து, ஆனந்தக்கூத்தாடி, வேதாகமங்களாற்றுதித்து, கரைந்துகரைந்து, கண்ணீர்பெருக்கி, உடன்முழுவதும்புளகாங்கிதங்கொண்டுநின்றனன். அதற்குக்கங்கையுங் கொன்றையும் அணிந்த சடாபாரத்தினையுடைய கணேசமூர்த்தியானவர் சந்தோஷித்து, அன்பனே-நீ செய்தவத்திற்குமெச்சினோம், உனக்குவேண்டியவரங்களைக் கேட்பாயாகவென்று திருவாய்மலர்ந்தனர். அங்காரகன்மீட்டுந் தொழுதெழுந்து, அரியதவத்தர்கட்கானந்த வீடளிக்குங்கர்த்தனே- தேவரீர் திருவடிகளில் இடைவிடாதபத்தியும், தேவர்களோடுகூடி அமுதுண்ணத்தக்கஉறவும், கோள்களோடு ஒன்றாகவதியும்பேறும் அடியேற்குக்கிருபைசெய்வதன்றி, யான்தேவரீர் தரிசனங்கிடைக்கப்பெற்ற இத்தினஞ்சதுர்த்தியாதலால், இச்சதுர்த்தி திதியில், எனதுவாரமாகிய அங்காரகவாரஞ்சேர்ந்து வருகின்ற தினத்தில், சுவாமிகளைத்தொழுகின்றபேர்களுக்கு வினைப்பற்றுகளை யொழித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அவ்வாறே கணேசமூர்த்தியநுக்கிரகஞ்செய்து, அன்பனே-யாம் சகலமங்களத்தோடும்உனக்குக்காட்சிதந்தமையால், அதைத்தெரிசித்தவுனக்கு மங்களனென்று பெயருண்டாகக்கட்வது, நீஇன்னுஞ் சிலநாள்வரையில் இவ்விடத்திலிருந்துநம்மைப்பூசித்துவரக்கடவையென்று திருவாய்மலர்ந்து, தமதுதிருவுருவைக்கரந்தருளினார். பின்னரவ்வங்காரகன் அவ்விடத்திற்றானேயிருந்து, பசும்பொன்னால் ஓராலயஞ்சமைத்து, அதிற்றனக்குக்காட்சிகொடுத்தருளிய கணேசமூர்த்தியினது திருவுருவத்தைத்தாபித்துப் பூசனைசெய்துவந்தனன். இவ்வாறுசிலகாலம்பூசித்துக்கொண்டிருக்கையில், விநாயகப்பெருமானுடைய பேரருளால் ஓர்தெய்வவிமானம்வர, அதில்அவ்வங்காரகனஆரோகணித்துத், தேவலோகத்தைச்சேர்ந்து, தேவர்களோடுங்கூடியமுதுண்டு, நவக்கிரகங்களில் ஒருவனாய்க்கலந்தனன். ஆதலால்- அவ்வங்காரகனதுதினத்தில்வந்த சதுர்த்தியானது, ஏனையசதுர்த்திகளைவிட விநாயகமூர்த்திக்குமிக்கசந்தோஷத்தையளிப்பதாயிருப்பதன்றி, அநுட்டித்தவர்கட்கு எல்லாச்சங்கட்ங்களையும் போக்கத்தக்கதாயுமிருக்கின்றமையால், அதைச் சங்கடசதுர்த்தியென்றுசொல்லப்படும். அவ்வங்காரகனாற் பிரதிட்டைசெய்தவிநாயகமூர்த்தியானவர், நினைத்தவரங்களை நிகரின்றியளிப்பவராதலால், எல்லாத்தேவர்களும் அவரைப்பூசித்து, சிந்தாமணிவிநாயகரென்று திருநாமஞ்சாத்தினார்கள். மேலும்அவ்வங்காரகன்அம்மூர்த்தியை அவந்திமாநகரத்திற்கு மேற்புரத்திற் பிரதிட்டைசெய்து பூசித்ததால், அத்தலத்திற்குக் காமதமென்று வேறொருபெயர்வழங்குகின்றது. அவ்விடத்தில்யோகிகள்

சித்தர்கள் முதலாயினோரும்வந்து வணங்குகின்றார்கள். என்று பிரமதேவன் பிதிர்தேவனுக்குச்சொன்னதாகத், தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச்சொன்னான்.

கணபதிதுணை.

இருபத்துநான்காவது.

சந்திரன்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே,விநாயகமூர்த்தியை அங்காரகனநுட்டித்ததையும்,சதுர்த்தி அங்காரகசதுர்த்தியானவரலாற்றினையுஞ்சொன்னோம்,இப்பால் சந்திரனுபாசித்ததிறத்தினைச்சொல்லுவோம்கேட்பீராக.மீட்டுங் தேவேந்திரன் சூரசேன மஹாராசனுக்குச சொல்லுவான், அரசனே- கிருதவீரியமகாராசனுடைய பிதிர்தேவன் பின்னும் பிரமதேவனைப்பணிந்தெழுந்து, சுவாமி- மேற்கூறிய அங்காரக சதுர்த்தியைச், சந்திரவுதயத்திற் பூசிக்கச்சொன்ன வரலாற்றையுந் திருவாய்மலரந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொள்ள, அதற்குப்பிரமதேவன்சொன்னதாவது. ஓ பிதிர்தேவனே- முன்னொருகாலத்தில், அண்டர்நாயகராகிய சிவபிரானைத்தெரிசிக்குமாறு, யான்கைலாயகிரிக்குச்சென்றேன். அப்போது சிவபெருமான், விநாயகமூர்த்தியோடுஞ் சுப்பிரமணியக்கடவுளோடுங் திருவோலக்கத்தி லெழுந்தருளியிருந்தனர். அச்சமயத்தில்- நாரதமுனிவர்வந்து, தமதுகையுறையாகக்கொண்டுவந்தவொர் கனியைக்கர்த்தனெதிரில்வைத்து, திருவடிகளிற் சாஷ்டாங்கமாகத்தொழுதெழுந்து, தமது யாழினைமீட்டி, தேனுண்டு பெய்யுமேகம்போல இசையாகிய அமுதத்தைப்பொழிவதாயினர். அவ்விசையமுதத்தைச் சிவபெருமான்செவிமடுத்து, அம்முனிவருள்ளத்தை மகிழ்ச்சிபெறச்செய்து,.அவர்கையுறையாகத்தந்த கனியையெடுத்து, எனதுமுகத்தைநோக்கிப், பிரமனே- நம்மிருபக்கலும் விநாயகமூர்த்தியுஞ் சுப்பிரமணியனு மிருக்கின்றதால், இவர்கட்குள் இக்கனியை யாவர்க்குத் தரத்தக்கதென்று வினவியருள, அதற்கு- முருகக்கடவுள் இளையவராதலால்,அவருக்கே கொடுக்கத்தக்கதென்று சொன்னேன். அவ்வாறே யதனை அவர்க்களித்தனர்.அதைக்கணேசமூர்த்தியறிந்து, விழிகளிற்றீப்பொறிகள் சிதறும்படியாகக் கோபித்து என்னை நோக்கலும், முன்னஞ்சிவபிரானால் எனதுசிரமறுபட்டபோது கொண்டபயத்திலும் அதிக பயத்தையடைந்து, என்னுடனிருந்த கணங்களோடும் அவர்சமூகத்திற்சென்று, திருவடிகளிற்றீர்க்கதெண்டன்செய்து,பலமுறைவேதாகமங்களாற்றுதித்து,சுவாமி-அடியேன்செய்தகுற்றத்தைமன்னித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து கொண்டேன் அதற்கு அக்கணேசமூர்த்திமனதிரங்கி,யான் கேட்டுக்கொண்டவாறே கிருபைபுரியுஞ்சமயத்தில், அதைப் பார்த்துக்கொண்டிருந்த சந்திரன் தன்

னுள்ளத்தின்கண் அவமதிப்பு கொண்டவனுய்,சிறிது பல்லைக்காட்டி நகைத்தனன். அதைக்கணேசமூர்த்திநோக்கி, மிக்ககோபங்கொண்டு,பெரியோர்க ளிருக்கின்ற சபையில் சிறிதேனுமடக்கமில்லாமல் நகைத்தனையாதலால், இனி நீ உலகத்தில் பிரகாசமின்றி மறைந்துபோகக்கடவது, உன்னுருவத்தைக் கண்டவர்களு ம்இடருழக்கக்கடவ்ரென்று சபித்தனர். இச்சாபங்களைப் பெற்றவுடனே சந்திரன் ஆகாயமார்க்கமாய்த் திரிதலற்றுத்,தன்னேளியும்மறைபட்டவனுய், மிக்கமனவருத்தத்தோடு தனதிருக்கையிற்றுனேயிருந்துவிட்டனன். பிதிர்தேவனே- ஏளனமான நகையெவரிடத்திற்செய்தாலும்,அதனுற் பின்னர் துன்பம்வருமென்று பெரியோர்கள் கூறியிருக்க, அப்பெரியோர்களிடத்தில் அதனைச்செய்துயாவர் பிழைக்கவல்லவர்கள். அவ்வறியாமையால் தெள்ளியதிங்களுந் தீதுற்றதல்லவா. இவ்வாறு சந்திரஷ் ஒளிமழுங்கிமறைந்துபோகலும், தேவர்கட்கு அமுதபானங்கிடையாமல் வருந்தி,அவர்கள் இந்திரனிடத்திற்சென்றுமுறையிட,அவ்விந்திரன் அதிகதுயரங்கொண்டு,இவ்விபத்தைக்கணேசமூர்த்தியே தீர்க்கத்தக்கதென்று நிச்சயித்து, எல்லாத் தேவர்களோடும் அவர்சமூகத்திற்சென்று, அவரது பாதபதுமங்களைத் தொழுதெழுந்து, ஓ தீனசரண்ணியமூர்த்தியே- விண்ணுலகத்தார்க்கு அமுதஞ்சுரத்தலும், மண்ணுலகத்தார்க்குப் பயிரைவளர்த்தலுஞ்,சந்திரனுக்குரிய கடமையானது தேவரீரதுகட்டளையேயன்றி வேறன்று. அச்சந்திரன் இப்போதில்லாமையால், இவ்விரண்டுலகமு மாழ்கியிருக்கின்றன. சிறியோர் செய்தபிழையைப் பெரியோர் பொறுப்பது கடனுதலால், அறிவீனனுகியசந்திரன் செய்தகுற்றத்தைத்தேவரீரோபொறுத்தருளாவிட்டால், மற்றையாவரிடத்திலப்பொறுமைநிற்கமாட்டும். ஆக்கவும் அழிக்கவும் வல்லஒபரம்பொருளே-மிக்கதுயரத்தில் மூழ்கியிருக்கின்ற சந்திரன் சாபத்தைத் தேவரீர்கிருபைசுரந்து நிவிர்த்திசெய்தருளவேண்டுமென்றுபலமுறைதுதித்து இரந்தனன். இவ்வாறு மனத்துயர்கொண்ட எல்லாத்தேவர்களோடுந் தேவேந்திரன்செய்துகொண்ட விண்ணப்பத்திற்கு விநாயகக்கடவுள் செவிகொடுத்து, இந்திரனே- நெருப்புசுடாமற்குளிர்ந்தாலும், இருள்சூரியனைவிழுங்கப்பட்டாலும், பூமிக்குப் பொறுமையற்றுலும், நமதுவாக்கியம் எக்காலத்து மாறுந்திறமன்று. நம்மைநன்மையோடுவந்து நயந்துபோற்றினபேர்க்கு, இன்மையென்னுந் துன்பமெய்துதலுமில்லை. இதுவேநமது தன்மையென்றறியக்கடவை. ஒருசந்திரனுக்களித்த சாபத்தினிமித்தம் நீங்கள்யாவரும் பரிந்துகேட்டுக்கொள்வதால், அவனைச் சிறுமைசெய்கின்றசாபத்தை நிவிர்த்திசெய்கின்றேம். அஃதெவ்வாறெனில் – ஆவணிமாதம் பூர்வபட்சத்தில் வருகின்ற சதுர்த்தியில் மாத்திரம், அவனையாவரும்பார்க்காதிருக்கக்கடவர்கள். மறந்தேனும் பார்ப்பார்களாயின், அவர்கள் பலவகைப்பாதகங்கட்கும் பாத்திரர்களாகி, இடும்பைக்கடலினின்றுமெழுந்திரார்கள். மற்றைய நாள்களிலெல்லாம்முன்போலவே அவனுருவினையாவரும் ஆகாயத்தின்கண் காணலாம். இதனையறிந்து நடந்துகொள்ளக் கடவீர்களென்று திருவாய்மலர்ந்தருளினர். அத்திருவாக்கினைக் கேட்டலுங், தேவர்களெல்லாம் உய்ந்தோம்உயந்தோமென்றுதுள்ளி ஆனந்தக்கூத்தாடினுர்கள். இப்பால் இந்திரன் அவ்விடத்திஞின்

றும் விடைபெற்றுச், சந்திரனிடத்திற் சென்று, விநாயகக்கடவுளநுக்கிரகித்த முறைமையைக்கூறி, அக்கடவுளது ஏகாக்ஷர மந்திரத்தை உபதேசித்து, ஓகுமுத நண்பனே - நீ உன்மனதிற் கணேசமூர்த்தியை யிருத்தி, அவர் மனுவாகிய இவ்வேகாக்ஷர மந்திரத்தை இடை விடாது தியானித்து, அவர்பெருங்கருணையைப் பெற்றுகொள்ளக் கடவையென்றுசொல்லி, எல்லாத்தேவர்களோடுந்தனதுசொர்க்கலோகத்திற்குப்போய்விட்டான். பின்னர் சந்திரன் அவ்விடத்தினின்றுநீங்கி, கங்காநதியின் தக்ஷணதீரத்திற்சென்று, சர்வசித்திகளையுங் கொடுக்குந் தன்மையாற் சர்வசித்திநகரமென்றுசொல்லத்தக்க ஓரிடத்திலிருந்து,மனோதிடங்கொண்டு, ஏகாக்ஷரமந்திரத்தைஇருபத்திரண்டு வருடங்கணித்தான். அதற்குக்கணேசமூர்த்தி மனதிரங்கி, ஒற்றைக்கோட்டினையுடைய யானைமுகத்தோடும் அவனுக்கெதிரிற்பிரத்தியக்ஷமாயினர். உடனேசந்திரன்விரைந்தெழுந்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, விழிகளில் ஆனந்தநீர்த்தாரைகளைச் சொரிந்து, சுவாமி- அறிவிலியாகிய அடியேன் அறியாமற்செய்தபிழையைமுழுவதும்பொறுத்து,என்னைக்குழுமி யரிக்கின்றகொடுந்துன்பநோயைவிழச்செய்து,தேவரீரதுமெய்யருளைத்தந்துரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான்.அதற்கு விநாயகக்கடவுள் கிருபைசுரந்து சந்திரனே-உனக்குவேண்டியவரமெல்லாம் முன்னமே கொடுத்திருக்கின்றோம், இன்னுமோர்வரமுந்தருவோங் கொள்ளக்கடவாயாக, அஃதாவது சங்கடங்களை நீக்கிக்கொள்ளவேண்டினோர், அங்காரகசதுர்த்தி தோறும் நீஉதயமாகின்றசமயத்தில் நம்மைப்பூசைசெய்து, உன்னையும்அருச்சித்துதுதிசெய்யக்கடவர். உன்னையாவருந் தொழும்படியாக, உனதுகலைகளுள் ஓர்கலைமாத்திரம் நமதுமுடியின்மீதிருக்கக்கடவது. என்றிவ்வாறுஅருள்சுரந்து,அவனைஆகாயத்திற்செல்லவிடைகொடுத்து, தமதுதிருவுருவைக்கரந்தருளினர். இப்பால்சந்திரன் தனதுபகிர்முகத்துள்ள மலினமெல்லாம் ஒழிந்தமையால்,,அகமுகத்துள்ள இருளுங்கடந்தவனாய், உடனே எண்ணற்ற கிரணங்களைக்கொண்டு, முன்னிருந்ததிலும் அதிகப்பிரகாசத்தினையடைந்து, அழகுபொருந்தியவோர் கோயிலைச்சமைத்து, அதில்ஐங்கரக்கடவுளாகியகணேசமூர்த்தியைப்பிரதிட்டைசெய்து, பாலசந்திரவிநாயகரென்று திருநாமங்கூறி,சிறந்தபூசனைகளையியற்றி,பழையபடிஆகாயமார்க்கத்திற்சென்றனன். பின்னர்கணேசமூர்த்தியினுடைய திருமுடிக்கு ஓரணியாகவிருக்கப்பெற்ற சந்திரனுற்ருபித்திருக்கும் அப்பாலசந்திரமூர்த்தியை, அன்றுதொட்டு தேவர்முனிவர்முதலாயினோர்வந்து பூசைசெய்கின்றனர். மேலும் பூசிக்கின்றோர்கள் உடனே சகல சித்திகளும் பெறுந்தன்மையினால், அத்தலம் சகலசித்தித்தலமென்னும் பெயரையடைந்து, எல்லாத்தலங்கட்குந் தலைமைபெற்றிருக்கின்றது. ஆதலால் - சங்கடசதுர்த்திதினத்திலே, சந்திரோதயகாலத்தை முக்கியமாகச்சொல்லப்பட்டது. மேலும் விநாயகமூர்த்திக்குசசெய்த அபராதத்தினால், பலவகைப்பட்ட இடர்களுள் சந்திரனே மூழ்கிவருந்தினனாயின், அவரது மேன்மையை என் போலிகளால்எவ்வாறறிந்து சொல்லக்கூடும். சுகம்பெறவேண்டினோர்கள், கணேசமூர்த்தியினிடத்தில் மறந்தேனும் -வாய்சோர்ந்தேனும்-மெய்வழுக்கியேனும் - தருமத்திற் கடாதனவற்றைச் செய்வாராயின், மிக்கதுன்ப

ங்களையநுபவித்துநரகத்தில் அழுந்திவருந்துவார்கள். ஈதல்லாமல்- விநாயகமூர்த்தியைக்குறைவில்லாமற்பூசிக்கின்றபேர்கள், அவசியம் அறுகுகொண்டருச்சிக்கவேண்டும். என்று பிரமதேவன் பிதிரதேவனுக்குச் சொன்னதாகத், தேவேந்திரன் சூரசேனமகாராசனுககுச்சொன்னான்.

கணபதிதுணை.

இருபத்தைந்தாவது.

தூர்வைமகத்துவப்படலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே, சந்திரன் விநாயகமூர்த்தியினுடைய திருமுடிக்கு ஓ ரணியாகியவரலாற்றையும், அங்காரகசதுர்த்தியிற்சந்திரனைப் பூசிக்கவேண்டிய காரணத்தையுஞ் சொன்னோம், இப்பால் தூர்வைமகத்துவத்தைச் சொல்லுவோங்கேட்பீராக. தேவேந்திரன் மீட்டுஞ் சூரசேனமகாராசனை நோக்கிச் சொல்லுவான், அரசனே - பிதிர்தேவன் பின்னும் பிரமதேவனை வணங்கி, சுவாமி- பரிமளமிகுந்த புட்பங்கள் பலவாகவிருக்க, அவைகளைப்பார்க்கினும் தாழ்ந்த அறுகுக்கு அவ்வளவு விசேடம் வந்தகாரணம் என்னென்று வினவினன். அதற்குப் பிரமன் சொன்னதாவது - ஓ பிதிர்தேவனே - அழகுவாய்ந்த அவந்தியென்கின்றபட்டணத்தில், சுலபனென்னு மியற்பெயரையுடைய ஓ ரரசனிருந்தான். அவனுக்குச்சுபத்திரையென்னும் ஓர் மனைவியிருந்தனள். அவ்வரசன் அவளோடுகூடி நீதிவழுவாது அரசியற்றிவருகின்றநாளையில், ஒருநாள் வறுமைக்கடலுண்மூழ்கி வருந்துகின்றவனுகியும், கங்காசடாதர மூர்த்தியாகிய சிவபெருமானது பாதபதுமங்களிற்சிறந்தபத்தியுடையவனுகியும், நீரினெலித்துகறைபோக்குவதற்கும் வலியில்லாதகார்ச்சீரையையுடையவனுகியும், கரத்திற் கரகமுங் கோலுங் கொண்டு மனைகடோறும்பிச்சையேற்பவனுகியுமிராநின்ற, மதுசூதனனென்னும் ஓர்வேதியன் அவனிடத்துவந்துயாசித்தான். அப்போது அவ்வரசன் ஏற்றூர்க்குமாற்றுது கொடுக்குந்தன்மையினனுயினும், பழைய ஊழின்வலியால் அவனைக்கண்டு நகைத்தனன். அதைஅவ்வேதியன்கண்டு மனம்வருந்தி, கண்களிலனற்பொறி சிதறும்படியாகத், தானும் ஊழ்வசததனுய்க்கோபித்து, அரசனே-நீ சிறிதேனுங் கல்வித்துறைகண்டவனல்லே, கனவினையொத்தநின்செல்வச்செருக்காலன்றோ என்னைநோக்கிநகைத்தனை, அஃது என்னுள்ளத்தையும்உன்குலத்தையுஞ் சுட்டுவிட்டது, பசுவின்பின்புறமோந்து பல்லைக்காட்டுமிடபத்தைப்போல என்னைக்கண்டு பல்லைக்காட்டினையாதலால், நீ ஏரிற்பூட்டும் எருதின்வடிவாகிப், புல்லேயுணவாய்ப்புசிக்கக்கடவையென்றுசபித்தனன். அச்சாபத்தை அவ்வரசனது மனைவியாகிய சுபத்திரைகேட்டு மிக்கதுன்பமடைந்து, ஓவேதியனே-உனதுமெய்ம்முழுவதும் புண்ணியநீ

ற்றைப்பொலிவுறப்பூசினையாயினும்,அதற்கேற்ற இரக்கத்தினையுன்னிடத் திற்காண்கிலேன்.யாவரேனுந்தெரிந்துந்தெரியாமலும்ஓர்குற்றமிழைத்தா களாயின்,விவேகிகள் அதனைப்பொறுப்பார்களேயன்றிக்கோபியார்கள்.நீ சிறிதேனுந்தாரதம்மியம்பாராமல், உலகத்தையாளும் இராசனென்றும் யோசியாமல், அறிவற்றகழுதையைப்போலச் சபித்தனையாதலால்,நீகழு தையாகி,ஆடையொலிக்கும் வண்ணான்கையிற்சிக்கி,முதுகுநெளியவத்தி ர மூட்டைகளைச்சுமந்துவருந்தக்கடவையென்றுசபித்தனள். அதைவேதி யன்கேட்டுமனங்கலங்கி, பெண்ணே-குற்றம் உங்கண்மீதிருக்க,அதைக்கு றையிரந்துநிவிர்த்திசெய்துகொள்ளஎண்ணமுறாது,நீசஸ்திரீகள்போல எ னக்குமறுசாபமிட்டனையாதலால், நீபுலைச்சியாகி,உண்ணப்படுவனவும்உ டுக்கப்படுவனவுமின்றித் துன்பமுறக்கடவையென்றுசபித்தனன். ஓபிதிர் தேவனே-பாவங்களென்றுசொல்லப்பட்ட எல்லாக்கொடிகளும்படர்வத ற்குக்கொழுகொம்பாயிருப்பதுவெகுளியாகும்,அவ்வெகுளிஒருவனிடத் திருக்குமாயின், அவனுக்குச்சங்கடமும் வறுமையும் இல்லாமற்போவது ண்டோ.இப்பால்அம்மூவருந் தங்களுக்குத்தாங்களேமுடித்துக்கொண்ட சாபங்கள்மேலிடலும்,சுலபமகாராசன் இடபமாகி,அந்நகரத்திலிருக்கின்ற ஒருழவனிடத்திற்சென்று துன்பமுற்றிருந்தனன். மதுசூதனனென்னும் வேதியன்கழுதையாகி,வண்ணான்கரத்திற்சிக்கி வருத்தமுற்றிருந்தனன்.சு பத்திரையென்பவள் புலைச்சியாகி, அந்நகரத்தின்புறம்பிலிருக்கும் புலைச் சேரியிற்சென்று, வறுமையினால் அடக்கக்கூடாதபசியையுடையவளாகி, யாவரேனும் இடித்தளிக்கும் பிச்சையையேற்றுண்டிருந்தனள். இவ்வாறு நெடுநாள்செல்ல,ஒருநாள்-எருதானதுஉழவனுடையஏறிற்பிணிப்புண்டு, அவனதுகொல்லையைவளைந்துவளைந்து உழுதுகொண்டிருந்தது. கழுதை யானது தன்முதுகெலும்புநோக மூட்டையைச்சுமந்துகொண்டுபோய்,வ ண்ணான்துறையிற்போட்டுவிட்டுப்புல்லைமேய்ந்துகொண்டிருந்தது.புலைச் சியானவள்குளிர்காயவேண்டி, மரப்பட்டைகளையும் புற்களையுஞ் சேதிக் கச்சென்றனள். இவ்வாறு மூன்றும் ஓரிடத்திற்சேர்ந்தபோது,மேகமான து ஆகாயத்தில் இருளைப்பரப்பி, மின்னலைவீசி, வில்லைவளைத்து,இடியிடி த்து,மழையைச்சொரிய,அதனால்உழவன் எருதினதுபூட்டைத்தறித்துவி ட்டுச்செல்ல, அஃது அவ்விடத்தினின்றுந்தப்பியோடி,அங்கிருக்கின்றவி நாயகமூர்த்திஆலயத்திற்புகுந்தது. அக்கோயிலின்மருங்குமேய்ந்திருந்தக ழுதையும்அவ்வாறேசென்றது.புலைச்சியானவள்தான்சேதித்தபுற்களைக்க ட்டியெடுத்துக்கொண்டுஅக்கோயிலின்வெளிப்பிரகாரத்திலொதுங்கினள் உடனேஇராக்கால நெருங்கலும், அக்கழுதையும்எருதும்பையப்பையச சென்று,புலைச்சிசுமந்திருக்கின்றபுல்லைப்பிடுங்கிக்கறித்துவாயிற்குதட்டிக் கொண்டிருந்தன. அதைஅவள்கண்டு, அப்புற்சுமையை நிலத்திலிட்டுக், கோலையெடுத்துக் கழுதையைமொத்தினள்.அதுதனதுகாலால்எருதை உ தைத்தது.அவ்வெருதுதனதுகொம்பினால்அக்கழுதையைமுட்டியது. இப் படி.மூன்றும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று பிணங்கிப்பேரொலிசெய்து கொண்டிருக்க,அவ்வொலியை,அத்தினம் விநாயகசதுர்த்தியாயிருந்தமை யால் அவ்விநாயகமூர்த்திக்குச் சந்தியாகாலபூசையை நிறைவேற்றி அவ ரது மந்திரத்தைச்செபித்துக்கொண்டிருந்த முனிவர்கள்கேட்டு, உடனே

தடி ஏந்திவந்து அவைகளை அடித்துத்துரத்தினார்கள். அதற்கு அவைகள ஞ்சிக், குளிர்ந்த வாடைக்காற்றினாலும் இடிமின்னலோடுகூடிய பெரும ழையினாலும்வெளிக்கோண்டுபோவதற் கிடமில்லாமல், அவ்வாலயத்தை ப் பலமுறைசுற்றிவர, அம்முனிவர்கள் அவைகளை மேலுமேலுந் துரத்தி ப்புறம்பிலோட்டிவிட்டனர். அவைகளவ்வாலயத்தைச் சுற்றிச்சுற்றி ஓடு கையில், மிருகங்கள் வாயிற்குதட்டிகொண்டிருந்த புல்லும் புலைச்சிகை யிற்கொண்டிருந்த புல்லும் சந்நிதிக்குமுன்பாகவிழ, அவைகளில்மூன்று புல்லைமாத்திரங் காற்றானது எழுப்ப, அவைகள்கணேசமூர்த்தியினுடை ய திருமேனியைச்சார்ந்தன. அஃதெவ்வாறெனில்- புலைச்சிகையினின் றும் வீழ்ந்த புல்லானது முடியின்மீதும், எருதின்வாயினின்றும்வீழ்ந்த து துதிக்கைமீதும், கழுதைவாயினின்றும்வீழ்ந்தது திருவடியின்மீதுஞ் சார்ந்தன. இவ்வாறு அப்புற்களானவை கணேசமூர்த்தியினுடைய திரு மேனியிற்றலைமயக்குற்றிருக்கின்ற காரணத்தினால், ஆலயத்திற்கு விழு ப்புவந்து விட்டதென்று முனிவர்களெல்லாம் ஸ்நானஞ்செய்துவந்து ஆலயமுழுவதுஞ் சுத்திசெய்து, கும்பமாதிகளைவைத்து, திருமஞ்சன தூபதீபமுதலிய எல்லாப்பொருள்களையுஞ் சேகரித்து, முதிர்ந்தமெய்ய ன்பினோடும் பூசித்துத், தங்கடங்கள் கவலைகளையொழித்துக்கொண்டனர் இப்பால்- அம்முனிவர்களால் அடித்துத் துறத்தப்பட்ட எருதுமுதலிய மூன்றும், அடியுண்டவருத்தத்தினாலும், காற்றுமழையினாலும், உணவி லாக்குறைவினாலும், எங்கும்போக்கிடங்காணாம லுயிர்பிரிந்திறந்தன. பி ன்னர் அம்மூன்றின்பாலவாய்வந்துவீழ்ந்தபுற்கள் தமக்கருச்சனைசெய் தாகவும், அவைகள் அடியுண்ணமாட்டாது ஆலயத்தைச் சுற்றிச்சுற்றி ந்தது வலம்வந்ததாகவும், முனிவர்கள்விழுப்புநேர்ந்த தெனக்கருதி இய ற்றிய அபிடேகம் அவைகள்செய்த அபிடேகமாகவுங்கொண்டு, கணே மூர்த்திகிருபைகூர்ந்து, அவைகளையழைத்துவருமாறு தேவகணங்களை ஏவ, அத்தேவகணங்கள் உடனே ஒருவிமானத்தைக்கொண்டுவந்து, அ ம்மூன்றுக்குந் தேவவுருவந்தந்து, அரம்பையர் புடைசூழ்ந்து ஆட்ல்ப டல் செய்யும்படியாக அவ்விமானத்தின் மீதாரோகணிக்கச்செய்தன என்று பிதிர்தேவனுக்குப் பிரமதேவன் சொன்னதாகத், தேவேந்திர சூரசேனமகாராசனுக்குச்சொன்னான்.

கணபதிதுணை.

இருபத்தாறுவது.

தூர்வையருச்சனைப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே,விடைகரம்புலைச்சியாகிய மூவனாயும் டுபுகச்செய்த தூர்வைமகத்துவத்தைச்சொன்னோம், இப்பால் அத்தூ வையருச்சனையைச் சொல்லுவோங்கேட்பீராக.பின்னுந்தேவேந்திரன் ரசேன மகாராசனைநோக்கிசசொல்லுவான், அரசனே- பிரமனைப் பித

தேவன்மீட்டும்பணிந்தெழுந்து, சுவாமி-புலைச்சிமுதலிய மூவருந்தெய்வ சரீரம்பெற்று விமானத்திலேறியபின்பு, அங்குநடந்தகாரணமென்னென் றுவினவ, அதற்குப்பிரமன் சொன்னதாவது.பிதிர்தேவனே- அவ்வாறம் மூவரும்விமானத்திலேறலும், அங்கிருந்ததவசிரேஷ்டர்களெல்லாம் அதி சயமுற்று, அவ்விமானங்கொணர்ந்துவந்த தேவகணங்களைவணங்கித் துதிசெய்து, விதியென்பதைச்சிறிதேனு மறியாதஇவர்கள்,எந்தகாரணத்தால் இவ்விமானத்திலேறத்தக்கவர்களானார்களென்றுகேட்க,அதற்கக்கணங்கள்சற்றுநின்று,ஓ தவசிரேஷ்டர்களே-இவர்கள்கணேசமூர்த்தியை அறுகினலேபூசனைசெய்து, அவர்களுடையபாபசரீரங்களைவிட்டுதெய்வசரீரங்கொண்டு இவ்விமானமேறப்பெற்றார்களென்றுகூற, அதையம்முனிவர்கள்கேட்டு, கணநாதர்களே- இழிந்தசென்மத்தையுடையவர்கட்கு,உயர்ந்தலோகத்திற் சேரத்தக்கபுண்ணியத்தை ஓ ரறுகுகொடுத்ததாயின், அவ்வறுகைக்கொண்டு விநாயகக்கடவுளையருச்சிக்கு மேன்மையை அடியேங்கட்குச்சொல்லியருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்கள். அதற்கத் தேவகணங்களிசைந்து, ஓ முனிவர்களே - நிறைந்தசோலைகளாற் சூழப்பட்டிருக்கின்ற தாபரமென்கின்றநகரத்திலே,தென்றிசையிலே, ஓர் பனந்தோப்பிலுள்ள ஓடைக்கரையைத் தமக்காசிரமமாகவுடையகவுண்டின்னியனென்னும் ஒருமுனிவரிருந்தார். அவர்-தமது இல்லறப்பணிகட்கு இடையூறெய்தாவகைநடத்திவருபவளாகிய ஆசிரியையென்னும் பத்தினியோடுதவஞ்செய்து வருகின்றநாளையில், ஆதியந்தமில்லாதவராகியும், மனவாக்குக்காயங்கட்கெட்டாதவராகியுமிராநின்ற விநாயகமூர்த்தியை, அவ்வாசிரமத்தில் ஆகமவிதியோடும் பிரதிட்டைசெய்து, சத்தசாகரங்களையும் இணையிடக்கூடாததமதுநிறைந்தபத்தியினால், பிரதிதினம்பதினாயிரம் அறுகுகொண்டுவந்து, அவைகளைக்குற்றமறவாராய்ந்து அருச்சனைசெய்துவருவார். இவ்வாறு நடாத்திவருகின்ற நாளையில், ஒருநாள் அவர்பத்தினியாகிய ஆசிரியையென்பவள், தவசிரேஷ்டராகிய அக்கவுண்டின்னிய முனிவரைப்பணிந்து, சுவாமி- பரிமளமிகுந்த புட்பங்கள்பலவகையிருக்க, அவைகளைப்பறித்து அருச்சனைசெய்யாது, பிரதிதினம் அளவற்ற அறுகுகளைக்கொண்டுவந்து அருச்சிக்கின்றீரே,அஃதென்னகாரணத்தினால், அதனையடியாட்குத் தெரித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டனள். அதற்கம்முனிவர் சந்தோஷித்துப், பெண்ணே-அவ்வறுகின்பெருமை மகாரகசியமுள்ளது, ஆயினும் நீ மிக்கபத்தியோடுங்கேட்கின்றமையால் அதனைச்சொல்லுவோங்கேட்பாயாக. முன்னொருகாலத்தில்,ஒருவிசேடத்தினத்தில், விண்ணவர்- கின்னரர்- கருடர்-விஞ்சையர்-சாரணர் - முனிவரர் - முதலிய யாவரும்பணிந்து புடைசூழ்ந்திருக்கத் தக்கதாக, யமதருமராசனெனவன் தனது கொலுச்சபையிலிருக்கின்ற நவரத்தினசிம்மாதனத்தின்கண்மிக்கவலங்காரத்தோடுவீற்றிருக்கின்றபோது அரம்பாஸ்திரீகள் தங்களுள்ளங்கண்ணின் வழிநடப்பதும், அக்கண்கைபின்வழிசெல்வதுமான அபிநயத்தைக்கொண்டு நாட்டியஞ்செய்தார்கள். அப்போது அவ்வரம்பாஸ்திரிகளுள், மிக்க அழகினைவாய்ந்த திலோத்தமையென்பவளது மேல்வத்திரம் நழுவிப்போக, அவள்மிகவும் நாணமுற்றுத்,தலைகுனிந்து,அருகிலிருப்பவர்க ளறியாதவண்ணம் அவ்விடத்

தைவிட்டுஅப்பாற்சென்றனள். யமதருமராசன் அவளது தனங்களிரண்டையும் நன்றாய்கண்டதனால்,உடனே அவன்மனதுகாமத்தாலுருகி,விரகமென்கின்ற அனலாற்கொளுத்தப்பட்டு, அக்கொலுச்சபையினின்று நீங்கி அந்தப்புரத்திற்குச் செல்வதாயினன். அவ்வாறு செல்வதன்முன், அவன்வீரியமானது வெளிக்கொண்டு நிலத்தில்வீழ, அதினின்றும்-கொதித்தெழுகின்ற வடவனலத்திற்கொப்பான கொடுமையோடு, கலப்பையைப்போன்ற வெளுத்தகோரைப்பற்களும், நீண்டுமுறுக்கிச் சிவந்திருக்கின்ற முகமயிர்களும், பெருகியோங்கிய அழற்கொழுந்தினையொத்து நிமிர்ந்திருக்கின்ற புறமயிர்களும், சிவந்தகண்களும், தேவர்களுநங் கண்டஞ்சத்தக்க அவயவங்களுமுடையவனாய், ஒப்பற்றபெருவலியினையுடைய அனலாசுரனென்னும் ஓரவுணன் உதித்தெழுந்தனன். உடனே அங்கிருந்தவர்களெல்லாம் அவனைக்கண்டுபயந்து அப்பால் ஓடிப்போயினர். இப்பால்-திரிலோகமுந் துயருறும்படியாக, முன்னர் திருப்பாற்கடலின்கணுதித்த ஆலகாலத்தையொத்த அப்புதல்வனது கொடியவுருவத்தை,தனது காமந்தணியுமாறு அந்தப்புரத்திற்சென்ற யமதருமராசன்கண்டுபயந்து,அவ்விடத்தில் அவன் நுழையாதவண்ணங் கதவைத்தாளிட்டுக்கொண்டனன். அவற்றை அவ்வனலாசுரனறிந்து, யமதருமராசனைத்தந்தையென்கின்ற மதிப்போடுவிட்டுநீங்கிப், பூவுலகத்திலுண்டான சகலசீவராசிகளையும் புசித்து, இனி இந்திரன்முதலிய எல்லாத்தேவர்களையும் புசித்து விடுவோமென்றுகருதி விண்ணுலகத்திற்கெழுந்தனன். அதை அவ்விந்திரன் முதலியோரறிந்துபயந்து, இலக்குமியை மார்பினிடமாகவுடைய மகாவிஷ்ணுவைச்சரணடைந்து, தங்களிடும்பையைக்கூறி முறையிட்டார்கள். அவையனைத்தையும் மகாவிஷ்ணுகேட்டு, அப்பாதகனுடையபராக்கிரமத்தையும்யோசித்து, இவன் விநாயகமூர்த்தியினுடைய திருக்கரத்தாலழியத்தக்கவனேயன்றி மற்றையரால் அழிபவனன்றென்றுதெளிந்து, எல்லாத்தேவர்களையும் அழைத்துக்கொண்டு, ஒரு பாரிசத்திற்கூட்டமாகவிருந்து, விநாயகமூர்த்தியினுடைய திருவுருவை மனதிற்றியானித்து, வேதாகமங்களாற் பலமுறைதோத்திரஞ்செய்து, தங்கள்தங்கள் குறையினைச்சொல்லி முறையிட்டார்கள். அதற்கு ஆன்றோர்களறிவுக்கும் அகப்படாதவராகிய விநாயகமூர்த்தியானவர் மனதிரங்கி, மான்றோல்முடிந்தபூணூல் மார்பின்கண்பிரகாசிக்கும்படியாகப், பிராமணர்குலத்திற்பிறந்த பிரமசாரியைப்போல வடிவெடுத்து, அத்தேவர்கள் முன்னதாகச்சென்றனர்.உடனே எடுத்ததேகத்தாலடையத்தக்க பயனை எளிதிலடைந்தவர்களையொத்துக்களித்து,இவரே ஓங்காரத்தினின்றுமெழுந்தருளிய விநாயகமூர்த்தியென்றுநிச்சயித்து,விண்டுமுதலிய எல்லாத்தேவர்களுஞ்சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, ஓ தீனதயாளுவே- அடியேங்கள் படுகின்றதுன்பப்பாட்டினையொழித்து அனலாசுரனை யழித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். அதற்கப்பிரமசாரியாய்வந்த விநாயகமூர்த்தியானவரிசைந்து அருள்வழங்கினர். அச்சமயத்தில், சொர்க்கலோகத்திற்சென்ற அனலாசுரன் அங்குதேவர்களைக்காணாதவனாய்,பற்பலவிடங்கடோறுந்தேடிப், பின்னர் அவர்கள்ஒன்றாகக்கூடியிருக்குமிடத்தினைக்கண்டுபிடித்துஎதிர்நோக்கிச்சென்றனன்.அப்பாதகன்வரவைப்பார்த்

தமுனிவர்களெல்லாம்உடனேஓட்டமெடுத்தார்கள்.தேவர்களெல்லாம்நடு நடுங்கி,உமாபரமேஸ்வரியார் புத்திரராகியும் மூவர்முதல்வராகியும்வீற்றி ருக்கின்ற கணேசமூர்த்திக்குப் பின்பக்கத்திலடுத்து, உயிரற்றஉடல்போ ல விருந்தார்கள். இவ்வாறு அசுரன்வருவதையும்,அவனுக்கஞ்சித்தேவர் கள்படுங்கலக்கத்தினையும் விநாயகப்பெருமான்கண்டு, அவர்கள்உய்ந்தோ ம் உய்ந்தோமென்று களிப்படையும்படியாக அஞ்சவேண்டாமென்று அ பையஸ்தந்தந்து, தமது நிசவுருவங்கொண்டு, அனலாசுரனருகிற்சென் று, அகத்தியமுனிவர் ஆழியுண்டதுபோன்றும், சிவபிரான் விடத்தையு ண்டதுபோன்றும், அவனைத்தமதுகரதலத்திலடங்கும்படியாகவெடுத்து அசுரனே- நீ இவ்வுலகத்தை மிகவும்வருத்தினை, இதுவன்றி இன்னும் ப ழமையான அளவற்றவுலகங்கள்நமதகட்டினுளிருக்கின்றன,அவைகளையு ம்ஒருகைபார்க்கக்கடவையென்றுஒருகவளமாய்விழுங்கிவிட்டனர்.அவ்வ ற்புதத்தைக்கண்டவர்களெல்லாம்அதிசயமடைந்தார்கள். இப்பால்கணே சமூர்த்தியினுடைய உதரத்தில் அனலாசுரனடங்கலும்,சகலசராசரங்களி னுடைய உதரங்களிளெல்லாம் அனல்பற்றிக்கொண்டதுபோலவெப்பமு ண்டாயது. தேவர்கட்கும் அவ்வாறே ஆயது.பின்னர்யாவரும்மிக்கதுயர த்தையடைந்து,விநாயகப்பெருமான் வயிறுகுளிர்ந்தால் யாவர்வயிறுங்கு ளிருமென்றுநிச்சயித்து, இந்திரனுடைய ஏவலினல்சந்திரனனவன்சுவா மியினது திருமுடியின்மீதிருந்து, தனது அமுததாரைகளைமுற்றுஞ்சொரி ந்துகொண்டிருந்தனன்.அதனுலும்அவ்வெப்புநீங்காமல்,பின்னர்பிரமதே வனுடைய அன்புகூர்ந்த விண்ணப்பத்தினுல் சித்திபுத்திகள்சுவாமியினரு கிலிருந்து,தமதுகுளிர்ந்த அவயவங்களை அவர்திருமேனியில் ஒற்றிக்கொ ண்டிருந்தனர்.அதனுலும் அவ்வெப்புநீங்காமல், மகாவிஷ்ணுவானவர் அ ளவற்றதாமரைமலர்களைக்கொண்டுவந்து சுவாமிகளெதிரில்நீட்ட, அவை களைத்தாமேவாங்கிவாங்கி ஒற்றிக்கொண்டனர். அதனுலும் அவ்வெப்பு நீங்காமல், வருணன்சீதளநீரைக்கொணர்ந்து அபிஷேகித்தனன்.அதனு லும்அவ்வெப்புநீங்காமல்,சிவபிரான் மிக்க உரிமையோடுந் தமதுதிருமே னியில்லணிந்திருக்கின்ற ஆதிசேடனைக்கொண்டுவந்துதரித்தனர்.இவ்வாறு அவ்வவர்கள்ஒவ்வொருவிதத்தாற்குளிர்செய்தும் அவ்வெப்பு நீங்காதிரு க்கப், பின்னர் எண்பத்தெண்ணுயிரமுனிவர்கள்வந்து,அவ்வவர்கள் வெ வ்வேறு இருபத்தொன்றுஅறுகுகளைக்கொண்டு, சுவாமியினுடைய சிரசு முதல்பாதமளவுஞ் சொரிந்தார்கள். உடனே அனல்வெப்பம் நீங்கியது. விநாயகப்பெருமானுடைய திருமேனியில் வெப்பம் நீங்கினபோதே, வி ண்டுமுதலியோரடைந்திருந்த வெப்பங்களும் நீங்கின. பின்னர் யாவரு ம்வேதாகமங்களால் ஆயிரமாயிரமாகத்துதித்துஆனந்தக்கூத்தாடினர்கள் தேவர்களெல்லாம் புட்பவருடஞ்சொரிந்தார்கள். சொர்க்கமத்தியபாதல மென்னுமூவுலகங்களுந்தழைத்துமகிழ்ச்சியையடைந்தன. இப்பால் வி நாயகமூர்த்திஅம்முனிவர்களைப்பார்த்து,அன்பர்களே-நமதுதிருமேனியி லிருந்தவெப்பமானது,தேவர்களெல்லாஞ்செய்தஉபசாரங்களால்நீங்காம ல்நீங்களருச்சித்த அறுகினுல்அவ்வெப்பஞ்சிறிதுமின்றி நீங்கியபடியால், எமக்குப்பற்பலஉபசாரங்கள்செய்து அறுகு ஒன்றுமாத்திரமில்லாவிட் டால், அப்பூசனைக்குயாம்பயனைத் தருவதில்லை. உபசாரம் ஒன்றுமின்றி

அறுகு ஒன்றுமாத்திரமிருக்குமாயின், அப்பூசனைக்கு அதிசீக்கிரத்திற்ப யனைத்தருவோம். அவ்வறுகைமிகுதியாகச்சேகரித்துப்பூசைசெய்யக் கூடாதவர்கள்,இருபத்தோராறுகாயினுங்கொண்டு அருச்சித்தல் வேண்டும், அதற்குஞ்சத்தியில்லாதவர்கள்,ஓராறுகாயினுங்கொண்டுபூசித்தல்வேண்டு மென்று திருவாய்மலர்ந்து, அவ்வவர்கள்விழைந்தவரங்களைத்தந்து, தமது திருவுருவத்தைக்கரந்தருளினர். பின்னர் தேவர்களெல்லாம் அவ்விடத்தில் ஓராலயஞ்சமைத்து, அதிற்கணேசமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து,பால் தயிர் தேன் முதலிய திரவியங்களைக்கொண்டுபூசித்து, சிறந்த அறுகினலருச்சனைசெய்து, காலனதுவீரியத்தாலுண்டான அனலாசுரனை விழுங்கியகாரணத்தால், காலானலப் பிரசமரென்றும், பாலவயதுடன் வந்து, அகினியும்ஆலமுமஞ்சத்தக்க அனலுருவோடுங்கூடிய அசுரனை விழுங்கி, எல்லாவுயிர்கட்குஞ் சந்திரனைப்போலக்குளிர்ச்சிதந்தமையால் பாலசந்திரரென்றுந் திருநாமமிட்டு, தங்கடங்கள் பதவிகளைச்சேர்ந்தார்கள். அன்றுமுதல் விநாயகமூர்த்தியினது பூசனைக்குரிய அனந்தம்வத்துக்களில், அறுகுசிறந்ததாயது.என்று கவுண்டின்னியமுனிவர்தனதுபத்தினிக்குரைத்ததாக, தேவகணங்கள் முனிவர்கட்குச் சொன்னபடி, பிதிர்தேவனுக்குப் பிரமதேவன்சொன்னன், அதனைத்தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச்சொல்லினன்.

கணபதிதுணை.

இருபத்தேழாவது.

தூர்வையாசகப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தி அனலாசுரனைவிழுங்கித்தேவர்களைக்காத்ததும், அவனைவிழுங்கியவெப்ப நீங்குமாறுமுனிவர்கள்தூர்வையருச்சனை புரிந்ததுஞ்சொன்னேம், இப்பால்அவ்விநாயகமூர்த்திதூர்வையாசகஞ்செய்தவரலாற்றினைச்சொல்லுவோங் கேட்பீராக. பின்னுந் தேவேந்திரன் சூரசேனமகாராசனைநோக்கி, அரசனே - தேவகணங்கள்முனிவர்களுக்கு மற்றொருகதையுஞ்சொன்னதாகப்,பிதிர்தேவனுக்குப்பிரமன்சொன்னதாவது. முனிவர்களே—அருட்செல்வத்தினராகிய துறவறத்தோர்களையும்,பொருட்செல்வத்தினராகியஇல்லறத்தோர்களையும் வசிக்கப்பெற்று, அளவற்றவளமையோடுமிருக்கின்ற மிதுலாபுரியென்கின்றபட்டணத்தில், அன்பு- கலையுணர்ச்சி- ஈகை- வலி-வெற்றி - ஒழுக்கம்- இல்லறநடை-முதலிய எல்லாநன்மைகளையுந் தனக்கேவலாகக்கொண்ட, சனகமகாராசனென்னும் ஓரரசனிருந்தான். அவ்வரசன்திசையனைத்தினுந்தனது செங்கோலைச்செலுத்தி அரசியற்றிவருகின்ற நாளையில், தமக்கொருவர் ஒப்பில்லாதவராகியும், எல்லாவுலகத்தினுஞ் சஞ்சரிப்பவராகியும், சடாமகுடத்தைத் தரித்தவராகியும், மகதியாழ்த்தலைவராகியுமிராநின்றநாரதமகாமுனிவர், ஒருநாளவனிடத்திற்குவந்தனர்.அக்காலத்து

அவன்பரதத்துவவுண்மையையறியாதவனாய்,தனதுபுலன்சென்றவழியே மனஞ்செலுத்தி,இருவினைகளையும்விடாமற்புசித்துத்,தானேபரத்துவமென்றுநிச்சயங்கொண்டிருக்கின்றமதியின்மையினால்,அந்நாரதமுனிவருக்கு வழிபாடுசெய்யாதவனாகியிருந்தனன். அதைஅம்முனிவர்கண்டுஅவனறிவின்மையைத் தமதுமனதில்மறைத்துக்கொண்டு,அரசனே-பகவானுடைய கிருபையினாலேசகலபாக்கியங்களும்பெற்றனை அப்பாக்கியங்களைவறியாரிடத்திற்செலுத்திவாழ்கின்றனை, எல்லா நன்னடைகளையுங்கடைப்பிடித்தனை,ஆகலால்-இன்னம்அச்செல்வத்தைஉனக்குவேண்டுமட்டும்அப்பகவானளித்தருளக்கடவரென்றுஆசீர்வதித்தனர். அதைஅச்சனகராசன்கேட்டு, முனிவரோ- வேறே பகவானிருக்கின்றனனென்றும், அவர்வேண்டியபாக்கியங்களையளிப்பனென்றும் பேதப்படுத்திச்சொல்லுவது,அறிவில்லாதவர்களுடையதன்மையேயன்றி,அபேதிகளாயிருக்கின்றவர்களுடைய தன்மையவ்வாறன்று. யாவையுங்கொடுக்கின்றபகவானும், அவைகளைஏற்றுக்கொள்கின்றயாசகனும், யாவையும் அநுபவிக்கின்றபோகியும்,அவைகளைக்குற்றமாகவெறுக்கின்றயோகியும்,நானேயன்றி வேறில்லையென்றுஅவமதித்துரைத்தனன். அதையம்முனிவர்மறுத்து, அறிவற்றசனகராசனே- பகவான்வேறில்லையென்று பேதைமையாற்பேசினை, அப்பகவானுண்டென்பதை நீ நாணங்கொள்ளும்படி உன்னெதிரிற்றானே காட்டுகின்றேம், அப்போதேனும் அறிந்துகொள்ளக்கடவையென்றுரைத்து, அவ்விடத்தினின்றுநீங்கிக்,கவுண்டின்னிய முனிவரிடத்திற் சென்றனர். அக்கவுண்டின்னியமுனிவர் நாரதமுனிவரையெதிர்கொண்டுசென்று,தீர்க்கதண்டன்செய்து அழைத்துவந்து,ஓராதனத்திலிருக்கவைத்துப்,பலஉபசாரங்களோடு பூசனைசெய்து,அளவளாவியசந்தோஷத்துடன் இனியவார்த்தையாடி இளைப்பாற்றினர்,பின்பு நாரதமுனிவரெழுந்து, அக்கவுண்டின்னியமுனிவர் பூசிக்கின்றவிநாயகமூர்த்தி சன்னிதானத்திற்சென்று, சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, கரத்தில்யாழினையேந்தி, நரம்புகளைத்தடவி, பற்பலவிசைகளோடும் அவர்பேரருளைப்பாடித்துதித்து, சுவாமி-தேவரீர்கிருபையால், சனகராசனுக்குப் பூலோகவரசாக்ஷியும் போக்கற்கரியசெல்வமும் உண்டாயிருக்கின்றன.அவைகள்தேவரீர்கிருபையாற்கிடைத்தனவென்று சற்றுங்கருதிலன். தேவரீரைப் பரத்துவமென்றும் எண்ணிலன். முத்தியிற்காமுற்றவனைப்போல விருக்கின்றான். பெரியோர்களைக்கண்டால் வந்தனைவழிபாடுகள்செய்யாது,தானேபரத்துவமாகமதித்துஅகங்கரித்திருக்கின்றான். அவைகளைத்தேவரீர்திருமுன்பு விண்ணப்பஞ்செய்துகொள்ளுமாறு,அடியேன் இங்ஙனம்வந்தனனென்றுசொல்லி,மீட்டுஞ்சாஷ்டாங்கமாகச்சேவித்துஆகாயமார்க்கமாகச்சென்றனர். பின்னர் விநாயகக்கடவுள் அச்சனகராசனது மையலைநீக்கி ஆட்கொள்ளுமாறு திருவுளங்கொண்டு, தொழுநோய்கொண்ட சரீரத்துடன் ஓரந்தணராகவெளிக்கொண்டு, அவ்வரசனுடைய அரமனைவாயிலுக்கெதிரிற்சென்று, அங்குகாவல்கொண்டிருக்கும் ஏவலாளரைப்பார்த்து,யாம்வந்திருக்கின்றசெய்தியை அரசனுக்கறிவிப்பீர்களென்று திருவாய்மலர்ந்தனர். அவர்கள் அவ்வாறே சென்றுசேவித்து, ஓ சார்வபௌமா - தேவரீர் அரமனைவாயிலைநோக்கி நேற்றையவனாயில் வந்தவர்க்குள்,தரித்திரத்தால் வருத்தமுறுகின்றபேர்களை

யொருவரையுங்கண்டதில்லை. இத்தினமே ஒருவரைக்கண்டோம். அவர் மகாயோக்கியமுள்ள அந்தணராயும்,தொழுநோய்கொண்ட சரீரத்துடன் மிக்கதுன்பத்தையும் பசியையும் உடைத்தானவராயுமிருக்கின்றாரென்று சொல்ல,அதைஅரசன்கேட்டு,அவ்வேதியரை இங்ஙனங்கொண்டுவரக்கட்வியென்றுகட்டளையிட்டான்.அவ்வாறே அககாவலாளர்அவரைஅழைத்துக்கொண்டுசென்று அரசனெதிரில்விடுத்தார்கள். யாவரும் அருவருப்புகொள்ளத்தக்க சரீரத்தோடிருக்கின்றஅந்தணரை அரசன்பார்த்து,உமக்குயாதுவேண்டி வந்தீரென்றுவினவ,அதற்கவ்விநாயகமூர்த்தியாகியவேதியர்சொல்லுவார்,அரசனே- முன்னர் எனதுபசிநோய்நீங்குமாறு அமுதூட்டல்வேண்டுமென்றனர்.உடனே அரசன்தனதுகுமாரனையழைத்து, இவ்வேதியரதுபசிதணியும்படியாக அறுசுவைபதார்த்தங்களோடும்போசனஞ்செய்விக்கக்கடவையென்று கட்டளையிட்டனன்.அப்புதல்வனதற்கிசைந்து,அந்தணரையுள்ளேயழைத்துக்கொண்டுசென்று,வாசனையூட்டியசலத்தினால் அவரதுதிருவடிகளைவிளக்கி,ஓ ராதனத்தி லெழுந்தருளச்செய்து,சாஷ்டாங்கமாகவணங்கிக்,குருத்தாகிநீண்டிருக்கின்றஇரண்டுதலைவாழையிலைகளையொன்றாகச்சேர்த்து,அவைகளில் அன்னங்கறிமுதலானஎல்லாவுணவுகளையுங்குறைவறநிறப்பி, சுவாமி- இனித்தேவரீரமுதெடுத்தருளவேண்டுமென்றுஇரந்து,அருகில்விசிறியைக்கொண்டு மெல்லமெல்லவிசிறிஉபசரித்தனன்.பின்னர்அவ்வேதியர்எல்லாவுண்டிகளையுநீர்விளாறு,அவைகளைத் தமதுதிருக்கரத்தாற்றொட்டருளியமாத்திரத்தில்,அருகிருந்தவர்கள்அவ்விலைகளிலிட்டபதார்த்தங்களில் ஒன்றேனுங்கண்டிலராகி ஆச்சரியமடைந்தார்கள்.அரசகுமாரன்உடனேசமையற்காரரைக்கூவி,நீங்கள்சமைத்திருக்கின்ற எல்லாவுண்டிகளையுங்கொண்டுவந்திடுவீர்களென்ன, அவ்வாறே அவர்கள் அளவற்றபொற்பள்ளயங்களிற்பாகமுழுவதுநிறைவேற்றியிருக்கின்றபற்பலவுணவுகளைக்கொண்டுவந்து படைத்தனர். படைக்குந்தோறும்அவர்கள்நாணும்படிஉடனுக்குடனே வேதியரும்உண்டருளினர் அதைச்சமையற்காரர்கள்நோக்கிக், குறுநகைகொண்டு, மீளவுஞ்சென்று, பாகமானதும் ஆகாததுமாய் மட்கலத்தோடுவைத்திருக்கின்ற உண்டிகளையெல்லாங் கொண்டுவந்துபடைத்தார்கள். அவைகளையும்அவ்வாறேஉண்டருளினர். பின்னரவர்கள் அரசகுமாரனைநோக்கி,யாங்கள்சமைத்துவைத்திருந்த எல்லாஉணவுகளையும் இவ்வொருவருக்கேபடைத்துஆய்விட்டன. இன்னும் அரைக்கணப்போது பொறுத்திருந்தால்,அளவற்றவுண்டிகளைச்சமைத்துக்கொண்டுவருகின்றோமென்றுசொன்னார்கள். அதை அந்தணராய்வந்த எமதுகர்த்தன் செவியுற்றுத், தமதுதிருமுடியைத்துளக்கி, இனிவெந்தபின்பு என்பசியைவிலக்கும்போது விலக்குங்கள்,இப்போதுவேகாதிருக்கின்றவைகள் யாதாயினும் அவைகளைக்கொண்டுவந்து விரைவிற்படையுங்களென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கவ்வரசகுமாரனதிசயித்து,இவர்க்கு அப்பண்டங்களை அடிக்கடிஎடுத்துவந்துபடைப்பது அரிதென்றுநினைத்து, அந்தந்தப்பதார்த்தங்களை யடைத்திருக்கின்ற எல்லாக்களஞ்சியங்களையுந்திறந்து, சுவாமீ- இவைகளிற்புகுந்துஉமக்குவேண்டுவனபுசித் தருளுவீரென்று சொன்னான். அவ்வாறேஅவைகளனைத்திலும்வடவானலத்தைப்போலப்புகுந்து யாவையும்புசித்தருளினர். இவ்வற்புதத்

னைச்சனகராசன் கேள்வியுற்று, ஞெரேலென்றெழுந்துவந்து, கர்த்தன் திருவிளையாட்டல்களைப்பார்த்து, இஃதுகனவேயன்றி நனவாகக்காணப்படவில்லை, அஃதில்லாவிடின் ஓர் மாயையென் றெண்ணத்தக்கதே யன்றி மற்றொன்றல்லவென்றுமதித்து,அந்தநகரத்திலுள்ளனவும், அந்நகரத்தைப்புடைசூழ்ந்த நாடுகளிலுள்ளனவுமானபதார்த்தங்களையெல்லாம்,மனோவேகமாய்ச்சென்று கொணடுவருவதாகத் தூதர்களுக்காக்கியாபித்தனன் அத்தூதர்கள் அக்கட்டளையைஆங்காங்கிருக்கின்ற எல்லாச்சனங்களுக்குமறிவிக்க, அவ்வவர்கள்வெந்ததும்வேகாததுமாயுள்ள அளவற்ற பதார்த்தங்களைக்கொண்டுவந்து மலைபோலக்குவித்தார்கள். உடனே-சர்வசங்காரகாலத்தில் சகலலோகங்களையும் அவ்வுலகங்களிலுள்ள எல்லாப்பொருள்களையும்எண்ணிறந்தசீவராசிகளையும் இமைப்போதிற்றமது உதரத்துள்ளொளிக்கச்செய்யவல்ல வேதியரானவர், அப்பதார்த்தங்களையெல்லாம் அரசன்காணும்படியாக முன்போலவே உண்டருளினர். இவ்வாறுயாவையும்உண்டருளிய அதிசயத்தைக் கண்டவர்களெல்லாம்பயந்து, இன்னும் இக்குட்டவேதியன்பசிதீராமையால்,இனிநம்மையுமெடுத்துவிழுங்கிவிடுவனென்றுநாற்றிசைகளினும் ஓடிப்போனார்கள். அமைச்சர்களெல்லா நடுநடுங்கி, இம்மறையவன்தேவனோ-அசுரனோ-அரக்கனோ-பூதனோ-மற்றெவ்வகைத்தானவனோ அறிகிலேம்,இவன் மனிதனாயின் இவ்வாறுண்ணத்தக்கவனன்றென்று சந்தேகித்தனர்.அரசனும் அதிகஅச்சங்கொண்டு, வடவாமுகாக்கினியே ஓர் வடிவங்கொண்டுவந்ததோ,அல்லதுசிவபெருமானுடையநுதல்விழித்தீயோவென்று மனங்கலங்கினவனாய், நமதுநகரத்தினையுநாடுகளையும்,யானையுண்டவிளாங்கனிபோலவும்,உயிர்நீங்கியஉடல்போலவுஞ்செய்து,எல்லாப்பொருள்களையும்இவரொதிரிற்கொண்டுவந்துபடைத்தும்,இன்னும்இவர்பசிக்கு இறுதிகண்டதில்லையாதலால்,இவர்க்கு அமுதளிப்பவர்மனிதருக்குளில்லை, யோசிக்குமிடத்தில்தேவர்கூட்டத்திலுமிரார்கள்,இனியாம்செய்யத்தக்கதுஒன்றையுங்காணேம், இவரைநல்லவார்த்தையால்வெளிப்படுத்துவ தெவ்வுபாயத்தினாலென்றுயோசித்து,விநாயகமூர்த்திசமீபத்தில்வந்து சுவாமி-தேவரீர் அந்தணராதலாலும், இவவுலகில்தரித்திரத்தால் மிகவும்வருத்தமுற்றிருக்கின்றீராதலாலும்,உமக்குஉணவுதருவதாகஒப்புக்கொண்டனன், அவ்வாறே எங்குமுள்ள பதார்த்தங்களைஎல்லாம் வரவழைத்துத் தந்தும்,உமதுபசிநோய் பூர்த்தியாய்த் தணிந்ததில்லை, இனி அந்தக்குறையையும் நீக்கத்தக்கவர்களிடத்தி லெழுந்தருளலாமென்றுசொல்ல,அதனை எமதாண்டவராகிய விநாயகப்பெருமான்கேட்டு, ஆ, அ அரசனே- உன்செயல் மிகநன்று மிகநன்று, இந்நாட்டிலுள்ளோர்களெல்லாம்உன்னைவரையாதுகொடுக்கும் வள்ளலென்றுசொல்வதை உண்மையென்றுமதித்து, எனது கள்ளப்பசியைக்களையுமாறல்லவா வந்தேன், அப்படிவந்த யெனக்கு அப்பசியை அழலில் அவிசொரிந்து அதிகரிக்கச்செய்ததுபோல, அற்பபோசனந்தந்து அதிகரிக்கச்செய்தாய், பின்னும் உமதுபசிக்கு எல்லாப் பதார்த்தங்களையு மளித்துவிட்டேன், இன்னுஞ்சிறிதுண்டாயின் அதனைத்தீர்க்கத்தக்கவர்களிடத்திற்செல்லுவீரென்றுசொல்லி எனக்குவழிகாட்டுகின்றனே, உனதுவாய்மையுங்கீர்த்தியுங் கிருபையும் பெருமையும் மிக்க அழகாயிருக்கின்றது, பிரமம்

நாமேயன்றிவேறொருபிரமமில்லையென்றும், கொடுக்கின்றதும் ஏற்கின்றதும் உனதுவயத்ததென்றுங்கருதி நிச்சயங்கொண்டிருக்கின்ற உனக்கு, எனது பசியைநீக்கவல்லப மில்லாதிருக்குமா, இன்னுஞ்சிருட்டிசெய்து கொடுத்தற்குப்பான்மாறிமறைவாய்ப்பேசினைபோலிருக்கின்றது, எல்லையற்றபதார்த்தங்களை இமைக்குமுன் ஆக்கவும் அழிக்கவும்வல்ல ஒன்றானபிரமம்நீயேயாகில், உன்னையாசித்துவந்த என்பசியை நீக்காமல் இல்லைபோமென்றுரைப்பையோ, ஈவதற்கிடமின்றி யல்லற்படுகின்ற நீயோபிரமமாவாய், அன்றியும்அப்பிரமம்ஓர்சுகத்தைவிழைந்தும், அதுகிடைக்கவேண்டுமென்றுயத்தனஞ்செய்தும், இடையில் வருகின்றதுன்பங்கட்கு ஏங்கியுமிருக்குமோ, சனகனே-உனதுபிரமத்துவத்தை நெருப்பிற்போடென்றுசொல்லிக்கோபித்துச், சரோலென்று அவிடத்தினின்றுநீங்கி அரமனைவாயிலைக்கடந்தனர். அவ்வாறுசெல்கின்ற அந்தணரைச்சனகராசன்பார்த்து இவர்கூறியதெல்லாம் மேலானவார்த்தைகளா யிருப்பதுமன்றி, இவர்செய்தசெய்கைகளுந் திவ்வியமாகவேயிருந்தன, அம்மா- இவரை இன்னரென்றுஅறிவது மகாதுல்லபமென்று நினைத்து, தான்கொண்டிருந்த கொள்கைக்குப் பழுதுநேர்ந்ததென்று நாணி வருத்தமுற்றிருந்தனன். இப்பால் வீதியிற்சென்ற பிராமணராகிய விநாயகக்கடவுளானவர், அந்நகரத்தின்கண், வேதவொழுக்கங்களிற்றவறாதவனாய்த், திரிசிரனென்னும் பெயரைவகித்துச், கற்பிற்சிறந்தவிரோசனையென்னும் பத்தினியோடு வாழ்ந்திருக்கின்ற ஓர் ஏழைப்பிராமணன் வீட்டினுட்பிரவேசித்தனர். அக்காலத்தில்-விரோசனையென்பவள் ஏவல்செய்யக்கணேசமூர்த்தியைப்பூசித்துக்கொண்டிருந்த அத்திரிசிரன், சுவாமியைக்கண்டவுடன்விரைந்தெழுந்து, எதிர்கொண்டு, சாஷ்டாங்கமாகப்பணிந்து, இருகரங்களையுஞ்சிரமேற்கூப்பி நின்றனன். அவன்மீதுகர்த்தன் கிருபாநோக்கம்பாலித்து, அன்பனே-செல்வத்திற்சிறந்தசனகராசன் அரமனைக்குசசென்றோம், அவன் நமது பசிநோயைச்சிறிதாற்றினன், மற்றதையுந்தணித்துக்கொண்டுபோமாறு உன்னிடத்திற்குவந்தோமென்று புன்னகையோடுந்திருவாய்மலர்ந்தருளினர். அதைஅவன்பத்தினியாகியவிரோசனையென்பவள்கேட்டுத், தீர்க்கதண்டஞ்செய்து, சுவாமி- தடாகநீர் முழுவதும் அருந்தித் தணியாதிருக்கின்ற கொடுந்தாகம், அதினின்றுங்கொணர்ந்துவந்த குடிநீரால் தணியப்போகின்றதா, நேற்றைய வரையில் யாசகத்தாற்கிடைத்ததைப் புசித்திருந்தோம், இத்தினம் அதுவுமின்றியிருக்கின்றோம், கணேசமூர்த்தியைப்பூசித்து மிகுந்த ஓரறுகுமாத்திரமன்றி வேறொன்றுமில்லையென்றனள். இவ்வாறு தாங்க ளடைந்திருக்கின்ற வறுமைப்பாட்டினை விரோசனையுரைத்தலும், வேதியராய்வந்த விநாயகமூர்த்திமனதிரங்கிப், பெண்கள்நாயகமே-குற்றமுற்ற மனத்தையுடைய செல்வர்கள் கோடிதனத்தையளித்தாலும் யாம் விரும்பேம், ஏதுமற்ற எளியோர்க ளளிப்பது எள்ளளவாயினும் அன்போடளிப்பராயின் அதுவே நமக்கு மேலானதாகும், அவ்வாறு ஈவோருக்குப்புண்ணியமும் ஏற்போருக்குப்புகழும் உண்டாகும், நீங்கள்யோக்கியமில்லாதபுல்லை எவ்வாறளிப்பதென்றுயோசிக்கவேண்டாம், அதுவேயெனக்கு மகாபாக்கியமாகும், ஆதலால்- விரைவிற்சென்று அதனை அன்புடன்கொண்டுவந்தளிப்பீர்களென்றுதிருவாய்மலர்ந்தனர். அவ்வாறே

விரோசனை அவ்வறுகை எடுத்துவந்துநீட்ட, அதனைத் தமதுகரத்தினால் வாங்கி வாய்மடுத்து மென்றுதின்று ஏப்பமிட்டனர். அங்ஙிமிடத்தில்- கணேசமூர்த்தியினுடைய திருவருளினால் அவர்களுடைய பழையகூரை வீடானது தங்கமயமானமாளிகையாய்விட்டது. அதற்குள்ளே அன்ன முதலிய எல்லாவுண்டிகளும்,பொன் வெள்ளி நெல் முதலான அளவற்ற பாக்கியங்களும், ஆண்டிமை பெண்ணடிமைகளும்,எங்கும் நிறைந்திருந்தன. அவைகளைக்கண்ட திரிசிரனும்விரோசனையுந்திகைத்து,மீட்டுந்தெளிவுற்றுத்,தங்களையடைந்திருந்தவறுமைக்கு விடைகொடுத்தனுப்பினார்கள். மிதுலாபுரியினும் அதைச்சேர்ந்த நாடுகளினுமிருந்து அவ்வவர்கள் முன்னர் கொண்டுவந் திழந்த பண்டங்களெல்லாம், பின்னு நூறுமடங்கு அதிகமாயுண்டாயின. அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாம் அதிசய மடைந்தார்கள். இப்பால் திரிசிரனும் விரோசனையும் வறுமையாற்றளர்ச்சி யடைந்தா ராயினும், அன்பிற்றளர்ச்சி யடைதலில்லாத சத்திய சீலர்களாதலால், அவர்கள் முழுவதுங் கடைத்தேறுமாறு, தொழுநோய்கொண்டு அறுகிரந்துநின்ற அந்தணரானவர், அவ்வுருவைக் கரந்து தமதுதெய்வரூபத்தைக்கொண்டு, அறுகையுஞ்சந்திரனையுந்தரித்திருக்கின்ற சடாமகுடமும், மழுப்படை- தாமரைமலர்- படிகமாலை-ஒற்றைக்கோடு- என்னுமிவைகளைத்தாங்கிய நான்குதிருக்கரங்களும், முப்புரிநூலணிந்தமார்பும்,வேதத்தைஇடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கின்ற சிலம்பணிந்த திருவடிகளும், மணிமுடி-குண்டலம்- புயகவசமுதலிய ஆபரணங்களுந்தோன்றும்படியாக, அவர்கள்எதிரேபிரத்தியக்ஷமாகிநின்றனர். உடனேஅவ்விருவர்களுந்திகைத்து,அன்பும் அச்சமுங்கொண்டு,புட்பங்களாலருச்சனைசெய்து,திருவடிகளில் சாஷ்டாங்கமாகவணங்கி,அளவிறந்த தோத்திரங்கள்செய்து,ஆனந்தக்கூத்தாடி,எண்ணற்றபிறவிகடோறுஞ்செய்துமுற்றியதவத்தினுங்கிடைத்தற்கரிய ஓகிருபாமூர்த்தியே-தேவரீர்திருவடிகளைஎளிதிற்பெற்றனமாதலால்,இனிஅடியேங்கள்இப்பிரபஞ்சவாழ்க்கையைவேண்டுகிலம், தேவரீர் திருவடிநீழலிலிருக்கத்தக்கபேற்றினையளித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டார்கள். அதற்குவிநாயகக்கடவுள் அருள்சுரந்து, அன்பர்களே-உமக்கு அந்தியகாலத்தில் அவ்வாறே அளிப்போமென்று திருவாய்மலர்ந்தனர். இவ்வாறு அப்பத்தர்களுடையவறுமையைநீக்கிப் பெரும்பாக்கியத்தினையளித்துத் தமதுதிருவருளையுங் கடாக்ஷித்துக்கொண்டிருக்கின்ற சமயத்தில், சனகராச னைவன்- தனது அரமனையிலுந்,தனதாணையிலடங்கியிருக்கின்ற நாடுநகரமுதலாயுள்ள எல்லாவிடங்களினும், அளவற்றசெல்வங்கள் அமைந் திருப்பதை நோக்கி ஆச்சரியமடைந்து,நம்மையாசித்துவந்த அந்தணன் ஈச்சுரனேயாகுமென்றுநிச்சயித்து, உடனேவிரைந்தெழுந்து, திரிசிரனுடையமனைக்குட்சென்று,இருக்குமுதலாயுள்ள சதுர்வேதங்களாலுமறியப்படாத சுமுகராகியும், அன்பர்களுள்ளமே ஆலயமாகவீற்றிருக்கும் பெருமானாகியுமிராநின்ற விநாயகமூர்த்தியைஎதிர்கொண்டு,சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, விழிகளில் ஊற்றெடுத்ததுபோல ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து, நெக்குவிட்டு,நெஞ்சமுருகிக்,கரங்களைச்சிரமேற்கூப்பி, அறிவினைப்போன்று மறைத்துக்கொண்டிருந்த அறியாமையால்அகம்பிரமமென்றுநினைத்து

மிகவுங்கர்வப்பட்டு சன்மசாகரத்தின்மூழ்கிப்போம்படியிருந்த அடியேனை அவ்வாறுமூழ்கிப்போகவொட்டாமல் கடைத்தேறுமார்க்கம் இஃதென்று காட்டியாட்கொண்டருளிய ஓநின்மலமூர்த்தியே, தேவரீருடைய கிருபைக்குச்சாஷ்டாங்கநமஸ்காரம், சிவபிரானுக்குத்திரிபுரதகனஞ்செய்யுமாறுகடாக்ஷித்தருளியஓதேவதேவோத்தமனே, தேவரீர் திருவடித்தாமரைகட்குச் சாஷ்டாங்கநமஸ்காரம், நாரதமுனிவர்கூறிய நன்மார்க்கங்களைச்சிறிதுமுணராதிருந்த சிறியேனைக் கரைசேர்க்குவண்ணமெழுந்தருளிய ஓபரஞ்சோதியே, தேவரீருடைய பெருங்கருணைக்குச் சாஷ்டாங்கநமஸ்காரம், அடியேன்மாத்திரமன்றி அடியேன்சுற்றத்தார்களும் அடியேனாளுகின்றநாடுநகரங்களும் அவைகளிலுள்ளபதார்த்தங்களும் சுவாமிகளது பாதாரவிந்தங்களிற் சேரும்படியாகத்திருவுளங்கொண்டெழுந்தருளியஓநின்மலமூர்த்தியே, தேவரீருடையகிருபைக்குச்சாஷ்டாங்கநமஸ்காரம், என்றிவ்வாறு அனந்தமுறைதோத்திரஞ்செய்து, கர்த்தனே-பிரமனாலும்விண்டுவினாலுந்தேடிக்காணக்கூடாதசிவபெருமானுடையதிருவடிகளை, முன்னொருகாலத்தில் யமதருமராசன் எதிர்த்துப்பெற்றதுபோல, அடியேன்பரப்பிரமத்தைமாறுபாடாகநினைத்துத் தேவரீருடையதிருவடிகளைப்பெற்றேன், இனித்தேவரீருடையநின்மலஞானத்தை அடியேன்தெளியும்படியாக அநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குக்கர்த்தன்கிருபைகூர்ந்து, அச்சனகராசனுடையசித்தபரிபாகத்தையறிந்து, மீட்டுமவன்சனனமெடுக்காதமார்க்கத்தினுக்குரிய ஆகமமுறைமைப்படி தீக்ஷைசெய்து, தயிருளெழுந்தவெண்ணைபோலத்தக்கமுறையாலுபதேசிப்பதாயினர் அரசனே-பதி-பசு-பாசம்-எனமூன்றுபொருள்களுண்டு. அவற்றுள்- ஏகமாகியநம்மைப்பதியென்றும், அனேகமாகிய ஆன்மாவைப்பசுவென்றும், ஆணவம்-கன்மம்-அசுத்தமாயை-சுத்தமாயை- என்னுமிந் நான்கினையும் பாசமென்றுங்கூறப்படும். இவைகட்குஇயல்பாயுள்ளகுணங்கள்பலவுள. அவை-ஏகமாகியபதிக்கு ஒருவருமறிவிக்காமலறிகின்றகுணமும், ஆன்மாவுக்குஅறிவிக்குங்குணமு முதலாயின. அனேகமாகியபசுவுக்குஅறிவித்தாலறிகின்றகுணமும், பிறருக்கு அறிவிக்கமாட்டாதகுணமு முதலாயின. இருளாகிய ஆணவமலத்திற்கு ஆன்மாவேண்டுங்காரியத்தைமறைக்கின்ற குணமும், வேண்டாக்காரியத்தில் விருப்பங்கொடுக்கின்ற குணமு முதலாயின. புண்ணியபாவமாகிய கன்மமலத்திற்கும், அசுத்தாசுத்தமாகியமாயாமலத்திற்கும், ஆன்மாஆணவத்தைப் பொருந்தினால் ஆணவத்திலழுத்துவிக்கின்றகுணமும், பதியைப்பொருந்தினால் பதியிலழுத்துவிக்கின்ற குணமு முதலாயின. இவ்வாறுபொருளும்வியாபகம்- வியாத்தி-வியாப்பியம்- எனமூவகையாயிருக்கும். இவற்றுள்வியாபகமாவது நிறைந்திருத்தல். வியாத்தியாவதுசமநிறைவாயிருத்தல். வியாப்பியமாவது அடங்கியிருத்தலாம். அஃதெவ்வாறெனில், சமுத்திரம் வியாபகம், அதுபோலுநாம். அச்சமுத்திரத்தில் தண்ணீர்வியாத்தி, அதுபோலு நம்மிடத்தில்ஆன்மா. அத்தண்ணீரில் உப்புவியாப்பியம், அதுபோலும் ஆன்மாவிடத்தில்மலமுதலியவைகள் இப்படி இவ்வாறுபொருளும் ஒன்றிலொன்றுகலந்து அடங்கியிருப்பதாயினும், அவைகள் அநாதிநித்தியமாகியிருத்தலன்றி, எங்கும் வியாபகமாயுமிருக்கின்றன, ஆனால்பதிதான் அநாதிநித்தியம், மற்றையபசு முதலியவைகள்

ாவ்வாறு ஆறுநிநித்தியமாமெனில், சூரியனுள்ளபோதே கண்ணும், அக்கண்ணைமறைத்தஇருளும்.அநாதிநித்தியமேயாம். ஆனால்அவைகள்எங்கும்வியாபகமாயுமிருக்கின்றவென்றனதெவ்வாறெனில், எண்ணிறந்தகண்களுக்கு ஓராதித்தனிருந்துஅறிவித்தல்போல, எல்லாப்புவனங்களினுமிருக்கின்ற எண்ணிறந்தஆன்மாக்களுக்குநாம்ஒருவனிருந்து அறிவித்தலானும்,கண்ணனதுசூரியமண்டலமுதலிய எல்லா மண்டலங்களினும் போக்குவரத்தில்லாமல்சகலகாரியங்களையுமறிவதுபோல,ஆன்மாவானது சகலபுவனங்களினும்போக்குவரத்தில்லாமல் எல்லாக்காரியங்களையுமறிதலானும்,இருளொன்று எண்ணிறந்த கண்களையு மறைத்தல்போல, ஆணவமலமொன்றுஎண்ணிறந்த ஆன்மாக்களையுமறைத்தலானும், பலதானியங்கள் அந்தந்தஊரிலிருக்கின்றோர்களுக்கு அங்கங்கேபுசிப்பாயிருத்தல்போலப், பலகன்மங்கள் அந்தந்தபுவனங்களிலிருக்கின்ற ஆன்மாக்களுக்கு அங்கங்கேபுசிப்பாயிருத்தலானும்,குயவனனவன் பலபாண்டங்களை அந்தந்தஊரிலிருக்கின்றோர்களுக்கு அங்கங்கே படைப்பதுபோல,அசுத்தாசுத்தமாகியமாயையானது பலதனுகரணாதிகளை அந்தந்த புவனங்களிலிருக்கின்ற ஆன்மாக்களுக்குஅங்கங்கேபடைத்தலானும்,அவ்வாறுபொருள்களும்வியாபகமென்றேசொல்லப்பட்டன.இப்படிவியாபகமாயிருக்கின்றஆறுபொருள்களும் ஒன்றுக்கொன்று எவ்வாறுசம்பந்தப்பட்டனவெனில், அநாதியிலே ஆன்மாக்கள் ஆணவமலத்திற்கிடந்தார்கள், அவ்வாணவமலம் ஆன்மாக்களுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக்கொடுத்தது.இந்தச்செய்தியைநாமறிந்து, இரக்கத்தினாலே அவ்வான்மாக்களது விருப்பத்திற்கேற்ற மாயாகருவிகளைக்கொடுத்து,அவைகளினிடமாகக்கன்மங்களைப்புசிப்பிப்போம்.அநாதியிலே பிரபஞ்சமுண்டாகின்ற முறைமைஇவ்வாறாகும். ஆனால் அநாதியில் ஆன்மாக்கள் ஆணவமலத்திற்கிடந்தனரொன்றால்,அவர்கட்கவ்வாணவமலத்தைநாம்கூட்டிவைத்ததோ அது தானே வந்து பொருந்திற்றோவெனில்,நாம்நின்மலனாகியசர்வாநுக்கிரகனாதலாலே, நாம்கூட்டிவைத்ததன்று,ஆணவமலஞ்சடமாதலால், தானேவந்து பொருந்தமாட்டாது, ஆதலால்-ஆன்மாக்களே ஆணவமலத்தைப் பிடித்தனரொன்றறிக. ஆனால் ஆன்மாக்களுக்கு ஆணவமலம் இயற்கையோ செயற்கையோ வெனில், இயற்கையானால் பாலுக்குவெண்மையுங் கரிக்குக்கருமையும்ஒருக்காலும் விட்டுநீங்காததுபோல, ஆன்மாக்களுக்கு ஆணவமலம் ஒருக்காலும் விட்டு நீங்காது,செயற்கையானால் வெள்ளைவத்திரத்தில் அழுக்கேறுவதுபோல முத்தியிலும்வந்து பொருந்தும், ஆதலால் இரண்டுமன்று, நெல்லுக்குமியும் செம்புக்குக்களிம்பும் கடல்நீருக்கு உப்பும்போல, ஆன்மாக்களுக்கு ஆணவமலம் அநாதிசெயற்கையென்றும் அநாதிசையோகமென்றுஞ்சொல்லப்படும். ஆனால் ஆன்மாக்கள் சுதந்தரவீனர்களாயிருத்தலால், நமக்குண்டாகியசெய்தி அவர்கட்குண்டோவெனில், வேதாகமங்களிலே விதிவிலக்கும்,அவர்கட்கு நரகமோக்கமுமுண்டாயிருத்தலினாலே,செய்தியுண்டு. ஆனால் ஆன்மாக்களுக்குக் கன்மத்திலுண்டாகிய விருப்பம் நாம் கொடுத்தவிருப்பமோ ஆன்மாக்களுக்குண்டாகிய விருப்பமோவெனில், நாம்கொடுத்தவிருப்பமானால், ஏன்பாவத்தைச்செய்தீரொன்று நரகத்திலிட்டுத்தண்டிக்கவேண்டுவதில்லை, ஆன்மாக்களுக்குண்டாகியவிருப்பமானா

ல், புண்ணியங்களிருக்கப் பாவங்களைச்செய்யார்கள், ஆதலால்-ஆணவமலமேஆன்மாக்களுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக்கொடுத்தது, விருப்பத்தைக்கொடுத்தஅவ்வாணவமலமும் ஆன்மாக்களுக்குக்கன்மத்தை யறிந்தெடுத்துக்கொடுக்கமாட்டாது,விரும்பியஆன்மாக்களுங்கன்மத்தை யறிந்தெடுத்துக்கொண்டுபுசிக்கமாட்டார்கள், விரும்பப்பட்டகன்மமும் ஆன்மாக்களையறிந்துவந்து பொருந்தமாட்டாது, இந்தச்செய்தியை நாமறிந்து, இரக்கத்தினாலே அவ்வான்மாக்கள்கன்மத்துக்கேற்றதனுவைக்கொடுத்து, அத்தனுவினிடமாகஅக்கன்மத்தைக்கூட்டிப் புசிப்பிப்போம். அஃதெவ்வாறெனில - குழந்தைக்குப்பாலின்கணுண்டாகிய விருப்பந்தாய்கொடுத்த விருப்பமோ குழந்தைக்குண்டாகிய விருப்பமோ வெனில், தாய்கொடுத்த விருப்பமானால் அவள் கொடுக்கின்ற போதெல்லாம் பாலையருந்தல் வேண்டும், குழந்தைக்குண்டாகிய விருப்பமானால் மாந்தங்கொண்டவேளையினும் மாறாதருந்தல்வேண்டும், இவ்விரண்டுமின்மையால், பசியேகுழந்தைக்குப் பாலின்கண்விருப்பத்தைக்கொடுத்தது, விருப்பத்தைக்கொடுத்த பசியும்பாலையறிந்தெடுத்துக்கொடுக்கமாட்டாது, விரும்பிய குழந்தையும் பாலையறிந்தெடுத்துக் குடிக்கமாட்டாது, விரும்பப்பட்டபாலுங் குழந்தைவாயில்வந்து புகுதமாட்டாது, இந்தச்செய்தியைத் தாயானவள்அறிந்து, இரக்கத்தினாலே பாலையெடுத்துப்,பாலடையில்விட்டுக்,குழந்தைவாயிலேவைத்துப்புகட்டுவள்.இவற்றுள்குழந்தையைப்போலும் ஆன்மா, பசியைப்போலும் ஆணவமலம்,பாலைப்போலுங் கன்மமலம், தாயைப்போலு நாம்,பாலடையைப்போலுந்தனு எனவறிக.அன்றியும்-குருடனுக்குக்கோலின்கணுண்டாகியஇச்சைகோல்கொடுத்திருக்கின்றவனிச்சையோ குருடனுக்குண்டாகியவிச்சையோவெனில், கோல்கொடுத்திருக்கின்றவனிச்சையானால் அவன்கொடுக்கின்ற நேரமெல்லாங்கோலைப்பிடித்தல்வேண்டும், குருடனுக்குண்டாகியஇச்சையானால் எப்போதுங்கோலைப்பிடித்துக்கொண்டேயிருத்தல்வேண்டும்,இரண்டுமின்மையால்,குருடேகுருடனுக்குக்கோலின்கண் இச்சையைக்கொடுத்தது, இச்சையைக்கொடுத்த குருடுங்கோலையறிந்தெடுத்துக்கொடுக்கமாட்டாது, இச்சித்தகுருடனுங்கோலையறிந்தெடுத்துக் கொள்ளமாட்டான், இச்சிக்கப்பட்டகோலுங்குருடன் கையில்வந்துபொருந்தமாட்டாது, இந்தச்செய்தியை அவனுக்குரிமையாயுள்ளவனறிந்து, இரக்கத்தினாலேகோலையெடுத்து, அவன்கையிற்றந்து, அவன்நினைத்தவிடத்திற்கொண்டுபோய்விடுவன். இவற்றுள் குருடனைப்போலும் ஆன்மா,குருடைப்போலும் ஆணவமலம்,கோலைப்போலும் சரீரம், கோல்கொடுத்திருக்கின்றவனைப்போலு நாம், இடத்தைப்போலும் புவனம் எனவறிக. ஆனால் ஆணவமலஞ் சடமாயிருத்தலால் அதற்குச்செய்தியுண்டோ வெனில், விஷம்- பாஷாணம்- தீ- நீர்- காற்று-முதலியசெடங்கட்குச் செய்தியுண்டானற்போல, அதற்குஞ்செய்தியுண்டு. ஆனால் நாம் ஆன்மாக்களுக்குத் தனுக்களைப் படைக்குமிடத்து, நமது நினைவின்படி படைப்போமோ ஆன்மாக்கள் நினைவின்படி படைப்போமோவெனில், ஒரே வடிவன்றிப் பலவடிவங்களாகப் படைத்தலால், ஆன்மாக்களது நினைவின்படியே படைப்போம். அஃதெவ்வாறெனில்- குலாலன் பாண்டங்களை வினையுமிடத்துத் தனது நினைவின்

டிவனேவரனே பிறர்நினைவின்படி வனேவானேவெனின், தனது நினைவி
படிவனேவானுயின் ஒரேவடிவாகவனேதல்வேண்டும், அவ்வாறின்றிப்ப
வடிவங்களாய்வனேதலால், பிறர்நினைவின்படியேவனேவான். இவற்றுள்
நலாலனேப்போலு நாம்,மண்ணைப்போலும்மாயை, பாண்டத்தைப்போ
லுந்தனு, பிறனைப்போலும் ஆன்மாக்களெனவறிக. ஆனல் ஆன்மாககள்
ங்கும்வியாபகராயிருக்கஎவ்வாறுசரீரத்தைப் பற்றுவரெனில், படிகமலே
ானது எந்தப்புறத்தில் வன்னத்தைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்வ
துபோல,எல்லாப்புவனங்களினும்வியாபகராயிருக்கின்ற ஆன்மாககள் நா
எந்தப் புவனத்திலே சரீரத்தைக் கொடுத்தாலும்பற்றிக்கொள்ளுவர்.
அஃதெவ்வாறெனில், படிகமலே யொன்று - படிகமலேக் கொளியொன்
- படிகவொளிக்குப்பற்றுங்குணமொன்று- படிகஒளிக்குப்பற்றுந்தொ
ழிலொன்று - வன்னமொன்று - வன்னத்தைப்பற்றி விக்கின்றவனென்
- ஆக ஆறு. இவற்றுள் படிகமலேயைப்போலும் ஆன்மா, படிகமலே
கொளிபோலும் ஆன்மபோதம், படிகஒளிக்குப்பற்றுங்குணம்போலும்
ஆன்மபோதத்திற்கு அறியுங்குணம், படிகவொளிக்குப் பற்றுந்தொழிலே
போலும் ஆன்மபோதத்திற்கு அறியுந்தொழில், வன்னத்தைப்போலும்
மாயாகருவி, வன்னத்தைப்பற்றிவிக்கின்றவனேப்போலு நாம், எனவறிக.
ஆனல் ஆன்மாக்களுக்கு அறியுங்குணமிருத்தலினுலே, அவர்களே மலம்
எவ்வாறுமறைக்குமெனில், சந்திராதித்தர்களே இராகுகேதுக்கள் மறைப்
பதுபோலும், நெருப்பைநீர்மறைப்பதுபோலும், ஆகாயத்தை மலேமறை
ப்பதுபோலும், ஆன்மாக்களே ஆணவவிருள் மறைக்கும். இம்மறைப்புத்
தான் ஆன்மாக்களுக்குவருவான் ஏனெனில், அவர்கள் கன்மத்தால்வந்த
து. ஆனல் ஆன்மாககள் அவயவமின்றி நிரவயவராயிருக்க,அக்கன்மந்தா
ன் எவ்வாறுவந்ததெனில், நாம் நிரவயவனென்பதைமறந்து அவயவர் நா
மென்னுங் கருத்தால் அக்கன்மம்வந்தது. அக்கன்மத்தால்மாயையுண்டா
பது.அம்மாயையால் தனு கரண புவன போகங்கள் உண்டாயின.ஆனல்
நாம் ஆனமாக்களுககு அக்கன்மங்களேப்புசிப்பிக்குமிடத்து எவ்வண்ண
மாயிருந்துபுசிப்பிப்போமெனில்,இச்சாஞானக்கிரியாசொருபனுயிருந்து
புசிப்பிப்போம். அஃதெவ்வாறெனில் - ஆன்மாக்களே முத்தியிற் சேர்க்க
வேண்டுமென்பதேஇச்சை, ஆன்மாக்களிச்சித்தகன்மங்களேயறிவதேஞா
னம், ஆன்மாக்களுக்கு அக்கன்மங்களேயூட்டியுறக்கித்தொலேப்பித்தலேகி
ரியையெனவறிக. ஆனல் ஆன்மாக்கள் அக்கன்மங்களேப்புசிக்குமிடத்துஎவ்
வாறிருந்து புசிப்பரெனில், இச்சாஞானக்கிரியாசொரூபராயிருந்து புசிப்
பர். அஃதெவ்வாறெனில்- பண்டபதார்த்தங்களிற்சென்றுபற்றுதலேஇச்
சை. அவைகளேப்பகுத்தாராய்தலேஞானம்,சர்வத்தையுந்தனதென்றழுந்
துதலே கிரியையெனவறிக.ஆனல் ஆன்மாக்களுடையகன்மமெத்தனேவகை
யாயிருக்குமெனில்,தூலகன்மம்-சூக்ஷ்மகன்மம்-அதிசூக்ஷ்மகன்மம்-என
மூவகையாயிருக்கும்.இவற்றுள் வினைகளுக்கெல்லாந்தூலகன்மமென்றும்
இவ்வினைகளுக்குப் பின்பலனுகவருகின்ற புண்ணியபாவங்கட்கெல்லாஞ்
சூக்ஷ்மகன்மமென்றும்,இப்புண்ணியபாவங்களுக்குப்பின்பலனுகவருகின்
ற இன்பதுன்பங்களுககு அதிசூக்ஷ்மகன்மமென்று பெயர். இம்மூன்றும்,
ஆகாமியம்-சஞ்சிதம்-பிராரத்துவம்-எனமூவகையாயிருக்கின்றன. அவை

யெவ்வாறெனில் - இருவினைகள் ஆகாமியமாகவும், இருவினைப்பலனு கிய புண்ணியபாவங்கள் சஞ்சிதமாகவும், புண்ணியபாவங்கட்குப் ப லனாகவருகின்ற இன்பதுன்பங்கள் பிராரத்துவமாகவு மிருக்கின்றன. இ வற்றுள்பயிரிடுவதுபோலும்இருவினைகள், அப்பயிராலுண்டானபலனைக் களஞ்சியத்திற்கட்டிவைப்பதுபோலும்புண்ணியபாவங்கள், அக்கட்டிவை த்ததிற்சிறுகச்சிறுக வெடுத்துண்பதுபோலும்இன்பதுன்பங்களையநுபவி த்தல்எனவறிக. ஆனால்இக்கனமங்கள் ஆன்மாக்கள்நினைத்தவண்ணம்பலன் பட்டுவருவதுண்டோவெனில், ஒருவன்முன்னேபனையுண்டாக்கிப், பின னர்கத்திரிநட்டு, அதன்பின்னர்கீரைபயிரிட்டால், இவற்றுள்பின்னாற்பயிரி ட்டகீரை பதினைந்துநாளுக்குள் புசிப்பாம், கத்திரிஇரண்டுமாதத்திற்கு ள்ளேபலனாகிவரும், பனை பதினைந்துவருடத்திற்குப்பின்பக்குவப்பட்டுவ ரும். அதுபோல-ஆன்மாக்கள்முன்புஆர்ச்சித்தகன்மம்முன்னே பலன்பட் டுவராமல்வெகுஜனனத்திற்குப்பின்வருதலும், பின்பார்ச்சித்தகன்மம் உ டனேபலன்பட்டுவருதலுமாம். ஆனால் இக்கன்மம் ஆன்மாக்களுக்குப்புசி ப்பாகவருங்காலத்து எவ்வாறுவருமெனில், ஆதிதெய்வீகம்- ஆதிபௌ திகம்- ஆதியாத்மீகம்- எனமூவித தாபத்திரயங்களால்வரும். இவற்றுள் தெய்வத்தால்வருகின்ற இன்பதுன்பங்கட்குத் தெய்விகமென்றும், பூதத் தால்வருகின்ற இன்பதுன்பங்கட்குப் பௌதிகமென்றும், ஆன்மாக்களா ல் வருகிறஇன்பதுன்பங்கட்கு ஆத்மீகமென்றும்பெயர். ஆனால் மேற்கூ றியகன்மங்கள் எவ்வாறொழியுமெனில், ஒருவன்பயிரிட்டு ஆயிரங்கோட் டைநெல்லுகண்டபின்பு, களஞ்சியத்திலேஐந்நூறுகோட்டைநெல்லைக்கட் டி, முந்நூறுகோட்டைநெல்லை உணவுக்காகவைத்து, இருநூறுகோட்டை நெல்லைவயலில் விதைத்திருக்க, இவற்றுள்- களஞ்சியத்திற்கட்டியநெல்தீப் பட்டுவெந்தது. உண்ணவைத்தநெல் உண்டுசெலவழிந்தது, விதைத்தநெ ல்மழையின்றிக்காய்ந்தது. இதுபோல- ஆன்மாக்களுக்குப் பக்குவம்வந்த காலத்திலே, சஞ்சிதகன்மமானதுஞானாசாரியருடையதிருவருள்நோக்கா ல்வெந்துபோய்விடும். பிராரத்துவகன்மமானதுஎடுத்தசரீரத்திற்குப்பொ சித்துத்தொலையும். ஆகாமியகன்மமானது நமது நின்மலஞானத்தால் மே லைக்குவராமல் நீங்கிப்போய்விடும். இவ்வாறே- சஞ்சிதம்-பிராரத்துவம்- ஆகாமியம்- என்னுமூவகைக்கன்மங்களு மொழியுமுறைமை யெனவறிக. ஆனால் இவ்விதகன்மங்களைஆன்மாக்களதுவிருப்பத்திற்கேற்றபடிபுசிப்பி க்கின்றவன்நாமாயிருக்க, ஆன்மாக்களுக்குமுதன்மைஎவ்வாறுகற்பிக்கப்ப டுமெனில், ஆன்மாக்களுக்குக்கன்மத்தின்கண் விருப்பமிருக்க நாம்சொர் க்கத்திற்குவாவென்றழைத்தால்வருவாரல்லர், ஆதலால்அவ்வான்மாக்கள் பெத்தகாலத்தில்ஆணவமலத்திலழுந்திக்கிடக்கும்போதுதாஞ்சற்றுந்தோ ன்றாமல் அதன்மயமாயிருப்பதுபோல, முத்திகாலத்தில் நம்மிடத்திலழு ந்தி நமதுமயமாய்க்கிடக்கையால், பெத்தத்தில் ஆன்மாக்களும், முத்தியி ல்நாமு முதன்மையெனவறிக. ஆனால் பெத்தான்மாக்களிடத்திலும் முத் தான்மாக்களிடத்திலும் நாமெவ்வாறிருப்போமெனில், பெத்தான்மாக்க ளிடத்தில் பாலுக்குள்நெய்போலவும், முத்தான்மாக்களிடத்தில் தயிருள் வெண்ணெய்போலவும் இருப்போம். ஆனால் ஆன்மாக்கள் எக்காலத்திலு ந் தனித்திருக்கின்றதில்லையோவெனில், கண்ணானது ஒருக்கால் ஒளியோ

ும் ஒருக்கால் இருளோடுங்கூடி யிருப்பதன்றி, எக்காலத்தினுந் தனித்தி ாததுபோல, ஆன்மாக்களெல்லாம் ஒருக்கால் மலத்திலேயும்ஒருக்கால்ந மிடத்திலேயுங் கூடியிருப்பதன்றி, எக்காலத்தினுந் தனித்திரார்கள். ஆ றல் ஒளியுமிருளும் ஓரிடத்திற்கூடியிராததுபோல, அவ்வான்மாக்களிட த்தில் ஆணவமலமும் யாமுங்கூடி யிருத்தல் கூடாதேயெனில், ஒருமரத் தில் அடிதொடுத்து நுனிபரியந்தம்இரதமும் அக்கினியுங்கூடி யிருத்தல் போல,யாமும் அவ்வான்மாக்களைக்கூடியிருப்போம். ஆனல்அவ்வான்மா க்கள் நரகத்திற்கிடந்து துன்பங்களை யநுபவிக்குமிடத்து, அவர்களைவிட்டு நீங்காத நமக்குமத்துன்பமுண்டோவெனில், ஆதித்தனொளிபடிகவொளி யிற்கலந்துநின்றுவர்னங்களைப்பற்றுவித்துந்தான் பற்றுதவாறுபோலவும், ஒருவனனுபவிக்கின்ற துன்பம் அவன் வயிற்றிற்கிடக்குங் கிருமிகட்கில் லாததுபோலவும், நமக்கொருக்காலுமில்லை. ஆனல் ஆன்மாக்கள் எக்கா லத்தினும் ஒன்ருேடு கலந்திருத்தலால், அவர்கட்கவத்தை ஏதேனுமுண் டோவெனில்,கேவலம்-சகலம்-சுத்தம்-எனமூன்றவத்தையுண்டு. இம்மூ ன்றும்,காரணம்-காரியம்-என இருவகைப்படும். இவற்றுள் காரணகேவ லமாவது, அநாதியிலே ஆன்மாககள் அறிவுகெடாமல் ஆணவமலத்தில் அழுந்திக்கிடத்தல், அஃதெவ்வாறெனில்-கண்ணனது இராக்காலத் திரு ளிலே ஒளிகெடாமல் விழித்திருத்தல்போலும். காரிய கேவலமாவது நெற்றி- கண்டம்- இதயம்- நாபி- மூலம் - என்னுமிவ்வைந் திடத்தினும், சாக்கிரம்- சொப்பனம்- சுழுத்தி- துரியம்- துரியாதீதம்- என்னுங்கீழால த்தை ஐந்தையுமடைதல். காரணசகலமாவது, அநாதிகேவலத்திலேயழுந் திக்கிடந்த ஆன்மாக்கள்,மாயாகருவிகளினலே அக்கேவலநீங்கிச் சுகதுக்க ங்களையறிதல். அஃதெவ்வாறெனில்- இராக்காலத்திருளிலே யழுந்திக்கிட ந்த கண்ணனது விளக்கினலே இருணீங்கிப் பதார்த்தங்களைக் காண்டல் போலும். காரியசகலமாவது, இலாடத்தானத்திற்ருனே துரியாதீதமுதல் சாக்கிரமீருயுள்ள மத்தியாலவத்தை ஐந்தையுமடைதல். காரணசுத்தமா வது, அநாதிகேவலத்தினும் சகலத்தினும் அழுந்திக்கிடந்த ஆன்மாக்கள், அருட்டெரிசனத்தினல் அவைகளைவிட்டு நீங்கிப் பிரமானந்தத்தை யநு பவித்தல். அஃதெவ்வாறெனில்- இராக்காலத்திருளோடும் விளக்கோடுங் கூடி யிருந்தகண்ணனது,ஆதித்தனுதயஞ் செய்தவிடத்து அவைகளை வி ட்டுநீங்கி அவ்வாதித்தனைக் கண்டுகொண் டிருத்தல்போலும். காரிய சுத்த மாவது, நின்மலசாக்கிரமுதல் நின்மலதுரியாதீத மீருயுள்ள மேலாலவத் தை ஐந்தையுமடைதல் எனவறிக. ஆனல் யாம்செய்கின்றபஞ்சகிருத்திய ங்கள் இவ்வான்மாக்களுக்கோ சரீரங்களுக்கோவெனில், ஆன்மாக்கள் நித் தியராதலால்- சிருட்டி- திதி- சங்காரம்-கூடாது, சரீரஞ்சடமாதலால் திரோபவமும்அநுக்கிரகமுங்கூடாது,இனிஅச்சரீரங்கள்முத்தொழிற்படுமி டத்து,அதில் ஆன்மாக்கள் அழுந்துவதினலும், ஆன்மாக்களினுடையஇர ண்டுதொழில் சரீரங்கட்கில்லாமையினலும், பஞ்சகிருத்தியமும் ஆன்மா க்களுக்கேயாம். ஆனல் நாம் பஞ்சகிருத்தியத்தை ஆன்மாக்களிடத்தில் ந டத்துவ தெவ்வாறெனில், அவர்கட்கு மாயாகருவிகளைப் படைத்து அறி வையுண்டாக்குவதேசிருட்டி, அவர்கட்குமாயாகருவிகளைநிறுத்திஅறிவை நிலைபெறச்செயவதே திதி, அவர்கட்குமாயாகருவிகளையொடுக்கி அறிவை

ப்போக்குவதே சங்காரம், அவர்களுடைய அறியுந்தொழில்களை அருளைக்கொண்டு மலசத்திகளால் மறைப்பித்து அவ்வவர்கள் கன்மங்களைத்தக்கபடி நிறுத்தலே திரோபவம், அவர்களுக்கு இன்பதுன்பங்களைப் புசிப்பித்துப்புண்ணியபாவங்களாகிய வினைகளையறுத்தலே அநுக்கிரகம்எனவறிக. ஆனால் ஆன்மாக்கள் அப்பஞ்சகிருத்தியப்படுதலெவ்வாறெனில், அவர்கள் அறியுந்தொழிலேசிருட்டி, அவர்கள் அறியுந்தொழிலில் நிலைநிற்றலேதிதி, அவர்கள் அறியுந்தொழில் நீங்கலே சங்காரம், அவர்கட்கு அறியுந்தொழில் நீக்குமிடத்துள்ள அறியாமையே திரோபவம், அவர்கள் இன்பதுன்பங்களைப்புசித்துப் புண்ணியபாவங்களைக்கழித்தலே அநுக்கிரகம் என்வறிக. ஆனால் நமது பஞ்சகிருத்தியமும், அவற்றிலான்மாக்கள் படுதலும் இவ்வாறாயிருக்க, அவர்கள் பிறந்தார் - இறந்தார் - நகரமுற்றார் - மோக்கமடைந்தார் - என்று வேதாகமங்களிற்கூறுகின்றதெவ்வாற்றாலெனில், ஆன்மாக்கள் மாயாகருவிகளைப்பற்றி யறிந்திருத்தலே பிறப்பு, அம்மாயாகருவிகளைநீங்கி அறியாதிருத்தலே இறப்பு, ஆயாசமுற்றிருத்தலே நரகம், அநாயாசமுற்றிருத்தலே மோக்கம் என்வறிக. ஆனால் ஆன்மாக்கள் மோக்கமடையுமிடத்துக்கெட்டுக் கூடுவரோ கெடாது கூடுவரோவெனில், கெட்டால் கூடத்தக்கதேயில்லை, கெடாதிருந்தாற் கூடவேமாட்டார்கள், ஆதலால்-ஆன்மாகெடாமல், விடயத்திற்செல்லும் அவ்வான்மபோதம்நிகழ்ச்சிகெட்டுக்கூடுமென்றறிக. ஆனால்அவ்வான்மாக்கள் அனந்தராயிருப்பதனால் அவர்களுக்குள் பேதமுண்டோவெனில், விஞ்ஞானகலர்- பிரளயாகலர்- சகலர்- எனமூன்றுபேதங்களாயிருக்கின்றன. இவற்றுள் ஆணவமலம் ஒன்றுடன்கூடியிருக்கின்ற ஆன்மாக்களு விஞ்ஞானகலரொன்றும், ஆணவமலம் கன்மமலம் என்னுமிவ்விரண்டோடுகூடியிருக்கின்றஆன்மாக்களுக்குப் பிரளயாகலரொன்றும், ஆணவமலம் கன்மமலம் மாயாமலம் என்னும் இம்மூன்றோடுகூடியிருக்கின்ற ஆன்மாக்களுக்குச் சகலரொன்றுஞ்சொல்லப்படும். இம்மூவகை யான்மாக்களையு நாமாட்கொள்வதெவ்வாறெனில், விஞ்ஞானகலருக்கு ஒளியுருவாயும், பிரளயாகலருக்குத்தேவவுருவாயும், சகலருக்கு மனிதவுருவாயுமிருந்து ஆட்கொள்வோம். ஆனால் ஆன்மாக்களுக்கு மலப்பிணியினால்சரீரங்கள்உண்டாயின, நின்மலனாகிய நமக்குண்டாவதற்குக் காரணமென்னவெனில், பிள்ளைக்குப்பித்தமுண்டானால் அப்பித்தத்தைத்தீர்க்க வேண்டுமென்று பிதாவுக்குஆசைப்பிணியுண்டானாற்போல, ஆன்மாக்களுக்குள்ள மலப்பிணியை நீக்கவேண்டி நமக்கு ஆசைப்பிணியுண்டாயது, அதனால் சரீரங்கள்வுண்டாயின. ஆனால் அவ்வான்மாக்களுக்கு மலப்பிணியை எவ்வாறுநீக்குவோமெனில், அவர்கட்குஇருவினையொப்புவந்தகாலத்து, வண்ணான்வத்திரத்திலுள்ள அழுக்கை உழமண்ணைக்கொண்டுநீக்குவதுபோல, மாயாகருவிகளைக்கொண்டு நீக்குவோம். ஆனால்இருவினையொப்பாவதியாதெனில்,ஒருவன் தான் + விரும்பப்பட்டபதார்த்தங்களையும் வெறுக்கப்பட்ட பதார்த்தங்களையுஞ் ச

+ விரும்பப்பட்ட பதார்த்தங்கள்- பொன்- வெள்ளி- முதலாயின வெறுக்கப்பட்ட பதார்த்தங்கள்- தரித்திரம்- வியாதி- முதலாயின. விரும்பும் வெறுப்பு மற்றபதார்த்தங்கள்- திரணம்- பதர்- முதலாயின.

ண்டால், விருப்பும்வெறுப்புமற்ற பதார்த்தங்களைக் கண்டாற்போல, நல்வினைப்பயனுந்தீவினைப்பயனும்வந்தால், அவ்விரண்டினிடத்தும் விருப்புவெறுப்பின்றி நிற்றல். அஃதெவ்வாறெனில்-ஒருவன்வைப்பாட்டியிடத்திற் சிறிதுநாளும், மனையாட்டியிடத்திற்சிறிதுநாளுமாகக் காலங்கழித்து வருகையில், இல்லறநூல் கேட்டவிடத்து, வைப்பாட்டியைவிடுத்து மனையாட்டியோடுவாழ்வதே சரியென்றும், துறவறநூல்கேட்டவிடத்து, அம்மனையாட்டியும் பாசபந்தத்திற்கேதுவாகலான் அவளைவிடுத்துத் துறவுபூண்பதேசரியென்றுங் கண்டு, பின்னர் அவ்விருவரிடத்தும் விருப்புவெறுப்பற்றதுபோல, ஒருவன்பாவமும் புண்ணியமுஞ் செய்துவருகையில், அறநூல்கேட்டவிடத்துப், பாவத்தைநீக்கிப்புண்ணியஞ்செய்வதேசரியென்றும், ஞானநூல்கேட்டவிடத்து, அப்புண்ணியமுஞ் சனனமரணத்திற்கேதுவாகலால் அதனைவிடுத்து ஞானத்தையடைவதே சரியென்றுங்கண்டு, பின்னர் இரண்டினிடத்தும்விருப்புவெறுப்பின்றிநிற்றலே இருவினையொப்பென்றறிக. இவ்வாறு இருவினையொப்பின்கணுண்டாகின்றமலநிவர்த்திக்குக்காரணம்யாதெனில், அநாதிதொடுத்துமோக்ஷபரியந்தம்ஆன்மாக்களாலுண்டாகின்றசிவபுண்ணியங்களாம்-அவைகள் அபுத்திபூர்வசிவபுண்ணியம்-புத்திபூர்வசிவபுண்ணியம்- உபாயசரிதை-உபாயகிரியை-உபாயயோகம்-உபாயஞானம்-உண்மைச்சரிதை-உண்மைக்கிரியை-உண்மையோகம் உண்மைஞானம்-எனப்பத்துவிதமாயிருக்கின்றன. இவற்றுள்முந்தினவொன்பதும்மலநிலே, அவைகள்ஆன்மாக்களால்செய்யப்படுவன. பிந்தினவொன்று அருணிலே, அஃது தத்துவரூபம்- தத்துவதரிசனம்- தத்துவசுத்தி- ஆத்மரூபம்- ஆத்மதரிசனம்- ஆத்மசுத்தி- சிவரூபம்- சிவதரிசனம்- சிவயோகம்- சிவபோகம்-எனப் பத்துவிதமாயிருக்கும். இந்தப்பத்தையும் பரிபக்குவனானவனுக்குநாம்ஞானசாரியராகஎழுந்தருளி, சுத்தாவத்தையின்காரியமாகிய நின்மலசாக்கிரமுதலாயுள்ளஐந்தவத்தைகளிலடக்கி, அந்தஉண்மைஞானத்தையறிவிப்போம். இவ்வாறு அளவற்ற காலம்ஆணவமலத்தினால் மறைபட்டிருந்த ஆன்மாக்களை முத்தியில்விடவேண்டுமென்று, கடல்போன்ற பெருங்கருணையினாலே திருமேனிகொண்டு, அவர்களை அவ்வாணவவிருளினின்றுமெடுத்து, விஞ்ஞானகலர்முதலிய மூன்றுவகையாகத்தொகுத்துத், தனுமுதலிய மாயாகருவிகளைக்கொடுத்து, அவைகளினிடமாக நல்வினைதீவினையென்னுமிருவகைவினைகளையூட்டி, அவ்விருவினையொப்பில் மலபரிபாகமுண்டாக்கி முத்தியிற்சேர்ப்பவனாகியசர்வஞ்ஞன்நாமாயிருக்க, அறிவித்தாலன்றிச்சுதாவில்ஒன்றையுமறிவதற்கில்லாதகிஞ்சிஞ்ஞனாகிய நீயோபிரமமாவாய். பிரமம் நீயேயென்பையாகில், சந்திரசூரியர்- நக்ஷத்திரங்கள்- மேகங்கள்- சமுத்திரங்கள்- மலைகள் -காடுகள்- சராசரங்கள்- பஞ்சபூதங்கள்- முதலானயாவையும் உன்னாலென் உண்டாக்கக்கூடாது, உனக்குப் புலன்களேதுக்கு, சாக்கிராதி அவத்தைகளேன், நீ விரும்பியவண்ணம்வினைப்போகங்கள்சித்தியாதகாரணமென்ன, உனக்கு நினைப்புமறப்புகள்எங்ஙனமிருந்துதித்தன, ஓ சனகனே - (அவனன்றி ஓரணுவுமசையாது) என்று உலகத்தார் சொல்லுகின்ற பழமொழியையேனுங்கேட்டதில்லையோ. மேலுஞ் - சந்திரசூரியர் முதலிய கிரகங்கள் நத்தமுறைப்படி ஆகாயத்திற் சுழன்று உலாவுதலினாலும், மேகமானது

சமுத்திரநீரையுண்டு பூமியிற்பொழிதலினாலும், அக்கினியுங்காற்றும் அளவுமீறியுண்டாகாமையினாலும், கார்முதலிய அறுவகைக்காலங்கள்முறை தவறாமல்வருகையினாலும், பாம்புமுதலிய துஷட்டசெந்துக்கள் மந்திரத்தினால்வசமாதலினாலும், எல்லாஉயிர்களும் பரம்பரைமாறாமல் வருதலினாலும், சுக்கிலமும் சுரோணிதமுங்கூடி ஒருவருஞ்செய்யாமல் சிசுவாய்ப்பிறத்தலினாலும், ஆனைமுதலியசகலசெந்துக்களும் ஆணும் பெண்ணுங்கூடினால் அந்தந்தரூபமேகொண்டு உற்பத்தியாவதினாலும், சிலவுயிர்கள் ஆணும் பெண்ணுங்கூடாமலே உண்டாகையினாலும், வித்தின் வருக்கப்படி விருக்ஷமுதலியவைகள் முளைப்பதினாலும், ஆன்மாக்களெல்லாம் ஒருபடித்தாயிராமல், சிலர் இந்திரியபங்கமுடையவர்களாயும், சிலர் அவயவபங்கமுடையவர்களாயும், சிலர்சுகமுற்றவர்களாயும், சிலர்துக்கமுற்றவர்களாயும், சிலர் செல்வமடைந்தவர்களாயும், சிலர் வறுமையடைந்தவர்களாயும், சிலர்அறிவுள்ளவர்களாயும், சிலர்அறிவில்லாதவர்களாயும், சிலர் புண்ணியஞ்செய்தவர்களாயும், சிலர் பாவஞ்செய்தவர்களாயுமிருத்தலினாலும், ஒன்பதுவழியுடன் பின்னுமொருவழியுண்டாக்கிக்கொண்டு உடலில் உயிர்வாசஞ்செய்யக்கூடாமையினாலும், ஒருறுப்புநீங்கினால் அதனை உடனே உயிர்கள்உண்டாக்கிக்கொள்ளமாட்டாமையினாலும், ஆண்குழவி வேண்டுநர்க்குப் பெண்குழவிபிறத்தலினாலும், பெண்குழவிவேண்டுநர்க்கு ஆண்குழவிபிறத்தலினாலும், இவ்விரண்டிலொன்று வேண்டுநர்க்கு அலிக்குழவிபிறத்தலினாலும், எதையும்வேண்டாதவர்க்கு எண்ணற்றகுழவிகளுண்டாதலினாலும், பசிக்குப்பாலையூட்டக்குழவிபிறத்தலினாலும், ஒருவனையொருவன் வெட்டும்போது மற்றொருவன்வந்துவிடுவித்தலினாலும் சிலர்மாற்றார்க்குப்பயந்துமறைந்திருத்தலினாலும், சிலர் அம்மாற்றார்கரத்திலகப்பட்டுமயங்குதலினாலும், நித்தியமாயிருக்கவேண்டுகின்றசங்கமங்களெல்லாம்விரைவில்இறத்தலினாலும், அதைவேண்டத்தகாவிவேகமில்லாததாபரங்களெல்லாம் அழிவில்லாமல்நீடித்திருத்தலினாலும், உயிர்கள்தமதுமுற்சனனத்தையும் வருஞ்சனனத்தையும் அறிந்துகொள்ளக்கூடாமையினாலும், இவைகட்கெல்லாந்தற்சுதந்தரமாக யாமொருகடவுளிருக்கின்றோமென்று உறுதியாயறிந்துக்கொள்ளக்கடவை. அந்நாமேதான், எவ்வளவேனுந்தற்சுதந்தரமில்லாமல், அளவற்றபேதமாயுள்ள ஆன்மாக்கள்செய்தநல்வினைதீவினைகட்கிடாகக், கம்மாளன் ஆபரணங்களையுண்டாக்குவதும், குயவன்கடங்களையுண்டாக்குவதுமாகியகாரணத்தைப்போல, நிமித்தகாரணமாயிருந்து, தனுவாதிகளைக்கொடுத்து, அம்முறையேரக்ஷித்துச்சங்கரிப்பதுமன்றி, அவ்வான்மாக்களுக்குப்பக்குவம் வந்தகாலத்தில் அநுக்கிரகமுஞ்செய்வோம். ஆதலால்– இனியேனும்யாமுபதேசித்தசித்தாந்தத்தைக்கருதி, வேறுபாடற்று, ஏகமாகியும்அபாவமாகியுமிருந்து, முன்னர்ஆணவமலத்தில்எவ்வாறுசார்ந்துநின்றனையோ, அவ்வாறுநம்மிடத்திற்சார்ந்து, துவிதபாவனையற்றுச்சுகமாயிருக்கக்கடவையென்று திருவாய்மலர்ந்து, தமதுதிருவுருவைக்கரந்தருளினார். இப்பால்சனகராஜன் அவையனைத்தையுந் தெளிவுபெறக்கேட்டுச், சிந்தித்து, நிருத்தியாசனஞ்செய்து, நிட்டைகூடி, இவ்வாழ்வு நாரதமுனிவரால்வந்ததல்லவாவென்றுநினைந்து நினைந்து, உருகி உருகி, யாவருமெய்ஞ்ஞானியென்றுசொல்லும்படியாக உலகத்தைக்காத்து

சீவன்முத்தனுகியிருந்தனன். அருந்தவர்களே- ஓரறுகினல்திரிசிரனென்னும் அந்தணனுடைய வறுமை யெல்லா நாசமாகிப், பெறுதற்கரிய பெருஞ்செல்வம் அவனுக்குண்டானதன்றி, அளவற்ற அற்புதங்களும் விளங்கினவென்ருல், அதை எண்ணளவிற்கொண்டுவந்து ஆகமமுறைமைப்படி யருச்சிப்போர்களடையும் பயன், எம்போலிகளா லளவிட்டுரைக்கற்பாலதோ, என்றுதேவகணங்கள் முனிவர்கணங்களுக்குச்சொன்னதாகப், பிதிர்தேவனுக்குப் பிரமதேவன்சொல்லியபடி, தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச்சொன்னுன்.

சணபதிதுணை.

இருபத்தெட்டாவது.

தூர்வைதுலையேற்றுபடலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே, விநாயகமூர்த்தி தூர்வையாசகஞ்செய்து, திரிசிரனென்னும்அந்தணனுக்கு அளவற்றசெல்வங்களையளித்துச், சூரசேனராசனுக்குப்பரத்துவநிச்சயத்தை யுணர்த்தியருளியதிருவிளையாடலைச்சொன்னேம், இப்பால் அத்தூர்வையைத்துலையேற்றிய வரலாற்றைச்சொல்லுவோங்கேட்பீராக. பின்னுந்தேவேந்திரன் சூரசேனமகாராசனை நோக்கி, அரசனே- தேவகணங்கள் முனிவர்கணங்கட்கு வேருெருகதையுஞ்சொன்னதாகப், பிரமதேவன் பிதிர்தேவனுக்குச் சொல்லுவதாவது. முற்கூறியகவுண்டின்னிய முனிவர், ஐங்கரக்கடவுளாகிய கணேசமூர்த்தியை அநுதினமும் அன்போடு பூசித்துவருகின்ற நாளையில், ஓர்நாள்- அவர்பத்தினியாகிய ஆசிரியையென்பவள், மிக்கமனமகிழ்ச்சியோடுதனதுகணவரைநோக்கி ஒருகதை அடியாட்குவிளம்பல்வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டனள். அதற்கம்முனிபுங்கவர் சந்தோஷங்கொண்டு முன்னர் விநாயகமூர்த்திமிதுலைநகரிலிருக்கின்ற திரிசிரனிடத்திற்றூர்வைவிருந்துகொண்டு, அவனுக்கு அளவற்றபாக்கியங்களை யளித்தருளியகதையைச்சொல்ல, அதனையவ்வாசிரியைகேட்டு, சுவாமி- அம்மிதுலாபுரி யங்கணனைப்பார்க்கினும் யாமத்தூர்வையை வெகுவாய்க்கொண்டுவந்து கணேசமூர்த்திக்கு அருச்சிக்கின்றேம், அவர் நமக்கு மாத்திரம்பாக்கியங்கொடாமலிருப்பதற்குக் காரணமென்னவென்று கேட்டனள். நினைத்தமாத்திரத்தில் எல்லாச்செல்வங்களையும் ஏவலாகக்கொள்ளத் தக்க கவுண்டின்னியமுனிவர் அதற்குப்புன்னகைகொண்டு, இப்பிரபஞ்சத்துள்ளோர்களும் அத்தூர்வையின் மகிமையையுணர்ந்துசுத்தபவித்திர ராகும்படித்தமதுமனத்தின்கணினைத்தவராய்ப், பெண்ணே- நாமொரறுகுதருகின்றேம், அதனைநீயெடுத்துக்கொண்டு, தேவேந்திரனிடஞ்சென்று, அதனிடையெவ்வளவோ, அவ்வளவு பொன்தரக்கேட்டு வாங்கிவரக்கடவையென்றுசொல்லித், தாமருச்சித்த அறுகுகளி லொன்றையெடுத்துக்கொடுத்தனர். அதற்கவ்வாசிரியைஇசைந்துவாங்கி, உடனே சொர்க்கலோகத்திற்குச்சென்

து,இந்திரனைக்கண்டு,தனதுகாதலராக்கியாபித்ததை அவனுக்குத்தெரிவித்தனள். அதை இந்திரன்கேட்டவுடன்மிகவுமற்புதங்கொண்டு, அவ்விருடிபத்தினியைச் சாஷ்டாங்கமாகவணங்கிப் பூசித்துத், தாயே-நீர் இதனைக்குபேரனிடத்திற்கொண்டுபோவீராயின், உமக்குவேண்டியபொன்னைப்பெற்றுக்கொள்ளலாமென்றுசொல்லிச்,சிலதூதுவரைத்துணையாகக்கூட்டியனுப்பினன். அவ்வாறே ஆசிரியைகுபேரனிடத்திற்செல்ல, அவன்கண்டவுடன்இருடிபத்தினியென்றறிந்துகொண்டு, அனந்தமுறைதீர்க்கதண்டன் செய்துபூசித்தனன். உடனேகூடவந்ததூதர்கள் அக்குபேரனைப்பார்த்து, இந்த அம்மாள் கரத்திற்சொணர்ந்து வந்திருக்கின்ற ஓரறுகம்புல்லினிடைக்குச் சரியான பொன்னைக் கொடுப்பிக்குமாறு, இந்திரனெங்கட்காக்கியாபித்தனனென்றறிவிக்க, அதனைக்குபேரன்கேட்டு, இதற்காகவா நம்மிடத்திற்குவந்ததென்று குறுநகைசெய்து, அளவற்ற சொர்ணங்களை மலைபோலக்குவித்து, அன்னையே - உமக்குவேண்டிய பொன்னை இவைகளிற் கொண்டுபோகலாமென்று சொன்னான். அதை ஆசிரியைகேட்டுத், தன்னெதிரில் மலைபோலக் குவித்திருக்கின்ற பொற் குவையல்களைப்பார்த்து, ஐயா - எனதுகாதலர் இவ்வறுகினிடைக்குச் சரியானபொன்னையே வாங்கிக்கொண்டு வருமாறுஉத்தரவுசெய்தனராதலால், இவ்வறுகை ஓர்துலையின்கணிட்டு,அதற்கிணையானபொன்னைத்தூக்கித்தரல்வேண்டுமென்றனள். அதற்குக்குபேரனிசைந்து, உடனே துலாவையெடுத்து மேலேதூக்கினன். அதில் ஆசிரியைத் தனது அறுகம்புல்லை ஓர் தட்டில்வைத்தனள். குபேரனுடைய ஏவலாளர்கள் ஓரிம்மியளவு பொன்னைக்கொண்டுவந்து மற்றோர்தட்டிலிட்டனர். இப்பால் அறுகிட்ட தட்டானது நிலத்தினும், பொன்னிட்டதட்டானது ஆகாயத்தினுமாகநிற்க,அவ்வற்புதத்தைஅளகேசன்கண்டு, தனதுஏவாலாளர்களை நோக்கி, இவ்வறுகு மகாதைவீகமுள்ளதாயிருக்கின்றது. இஃது நமதுபொக்கிசத்திலிருக்கின்ற பொன்னையுமேயன்றி, நம்மையுங் கொள்ளும்போற்றோன்றுகின்றது. ஆதலால்- எவ்வளவுபொன்னைக்கொண்டேனும் இரண்டுதட்டுகளையுஞ்சமன்செய்யுங்களென்று கட்டளையிட்டனன். அதைக்கேட்டஏவலாளர்கள் மீட்டும் ஓர் தொடியளவுபொன்கொண்டுவந்து வைத்தார்கள். அதற்குஞ் சமனாகாமையால், பின்னர் ஓர்தூக்களவுபொன் கொண்டுவந்துவைத்தார்கள். அதற்குஞ்சமனாகாமையால், அதோடு ஓர் துலாப் பொன்கொண்டுவந்து வைத்தார்கள். இவ்வாறு அளவற்றபொன்னை வரிசை வரிசையாகக்கொண்டுவந்து மாறாமல்வைத்திருந்தார்களேயன்றி,அறுகின் தட்டானது சிறிதேனுநிலத்தினின்று மேலெழும்பக் கண்டவரல்லர். மற்றொருதட்டு மாத்திரம்பொன்னைக்கொண்டுவந்து இடுந்தோறும்இடங்கொடுத்துக்கொண்டுவளர்ந்துவந்தது. இப்பால் அவர்கள்குபேரனுடையஅரமனையிலடங்கியிருக்கின்றஅவன்சொந்த நிதிகளையெல்லாங்கொண்டுவந்துநிரப்பினார்கள்.அதனாலும்அத்தட்டுகள்ஒன்றுக்கொன்றுசமனாகாமலேயிருந்தமையால்,அதைக்குபேரன்கேட்டு ஆச்சரியமடைந்து,உடனேதனது நகரத்திலுள்ளபொருள்களையெல்லாம்வரவழைத்துக்குவித்தனன்,அதனாலும்அத்தட்டுநிலத்திலிறங்கக்கண்டிலனாகிப்,பின்னர்தனதுமனைவியோடும்வந்து துலாவைவணங்கிநின்றனன். அப்போதும்அவைகள்சமனாகாமையால்,அவ்வ

புதத்தைத்தேவேந்திரன் கேள்வியுற்றுத்,தனதுநிதிகளையுந்தனதுநகரத்
துள்ள நிதிகளையுங்கொண்டுசென்று, அத்தட்டின்கணிரப்பித்தானுமேறி
னன்.அதற்கும்அஃது சிறிதுமிரங்காதிருந்தமையால், பின்னரத்தேவேந்
திரன்மும்மூர்த்திகளும்வருமாறு தன்மனதிலவர்களைததியானித்தான்.அ
வ்வாறே அம்மூவர்களுந் தங்கடங்கள் பரிசனங்களோடும்வந்துஏறினர்க
ள்.அப்போதும்அவ்வறுகின்தட்டுமுன்னிருந்தவண்ணமே சற்றுமசையா
திருந்தது. ஓமுனிவர்களே-அற்பவரத்தினையுடையபலபேர்கள், தங்கட்க
ள் அளவற்ற செல்வத்தோடுவந்துகூடினாலும், பெருந்தவத்தினையுடை
யோரது ஓர் சிறியபொருளுக்கொப்பாவரோ. இப்பால் இந்திரன் முதலி
ய சகலதேவர்களும், இவ்வறுகு விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளில்
அருச்சனைசெய்து மேன்மைபெற்றிருக்கின்றதெனத் தெரிந்துகொண்டு,
யாவரும்அத்தட்டினைவிட்டிறங்கி,முப்பத்துமுக்கோடி தேவர்களும்புடை
சூழ்ந்துவரும்படியாக அவ்வவர்களுடைய வாகனங்களிலேறி, ஆகாயவெ
ளியெங்குநிரம்பவெழுந்து,பூவுலகின்கண்வசிக்கின்றகவுண்டின்னியமுனி
வர்காணும்படிவந்திறங்கினார்கள். இவ்வாறுஎல்லார்த்தேவர்களுந்திரண்டு
வந்ததைக் கவுண்டின்னியமுனிவர்கண்டு,திடுக்கிட்டெழுந்து,சாஷ்டாங்க
மாகவணங்கி,இருகரங்களையுஞ்சிரமேற்குவித்து,ஆடிப்பாடி,ஆனந்தக்கண்
ணீர்சொரிந்து, பலமுறைவலம்வந்து, அடியேனியற்றிய தவத்தின்பயன்
களை இன்றல்லவோ எனதுகையிற்கிடைக்கப் பெற்றேனென்று அளவற்ற
வேதாகமங்களினாற்றுதிசெய்து, ஓசர்வஞ்ஞமூர்த்திகளே- அடியனேனி
டத்திற் குற்றங்கள் நேர்ந்தனவாயினும், அவைகளைத் தேவரீர்களது நி
றைந்தகிருபையினாற் பொறுத்தருளல்வேண்டும். தொண்டர்க்குத் தொ
ண்டனாகிய சிறியேன், இதுகாறும் அறுகின் பெருமையைக் கண்டவன
ல்லன். இப்போது சுவாமிகளெல்லாம் ஆகாயவெளியினின்றும் வரக்க
ண்டமாத்திரத்தில், அதனதுமகிமை இவ்வகைத்தென அறிந்துகொண்
டேனென்று சொல்லினர். அதனைச் சந்திரசடாதரமூர்த்தியாகிய சிவபி
ரான்செவியுற்று, அன்பனே - அறுகின் பெருமை இம்மாத்திரமே யன்
று, அதையாவராலும்அளவிட்டுரைத்தலுமரிது, அத்தன்மைத்தாகிய அ
றுகினைத்தரித்திருக்கின்றவிநாயகமூர்த்திக்குப்பத்திசெய்பவருக்குள்,உன்
னையொப்பவரொவ்வுலகங்களினுமில்லையென்று திருவாய்மலர்ந்து, அனந்
தவரங்களையுமளித்துச்சென்றனர். மற்றைத்தேவர்களும் அவ்வாறே,அம்
முனிபுங்கவரைப்புகழ்ந்து,வெவ்வேறுவரங்களைக்கொடுத்து அவ்வவர்கள்
பதவிகளையடைந்தனர். இப்பால் சிவபிரானதுகட்டளையின்படி, காமதே
னு கற்பகவிருக்ஷமுதலியவைகள்வந்து அம்முனிபுங்கவர்க்கு ஏவல்செய்
திருந்தன. இவையனைத்தையும் அவர்பத்தினியாகிய ஆசிரியைகண்டு, அ
வரைதீர்க்கதெண்டன்செய்து, சுவாமி- கணேசமூர்த்திமகிமையையும்,அ
வரது அறுகின்பெருமையையும், அவரைஇடைவிடாது ஆராதித்துவரு
ந்தேவரீருடைய வாய்மையையும், இப்போதறிந்துகொண்டன னென்று
துதித்து, அன்றுமுதல்தானும் அவ்வறுகினாற் கணேசமூர்த்தியையருச்சி
த்து, இகபரசாம்பிராச்சியத்திற்குரித்தானவளாகி வாழ்ந்திருந்தனள். ஆ
கலால்-அறுகம்புல்லின்துபெருமையை அவ்விநாயகமூர்த்தியேயன்றி,இ
வ்வுலகத்தின்கண்யாவரால் கணிக்கக்கூடும். நீங்களும் அவ்வறுகைக்கொ

ண்டுவிநாயகக்கடவுளை யருச்சியுங்களென்றுசொல்லித், தேவகணங்கள் விமானத்தைச்செலுத்திக்கொண்டு கணேசலோகத்திற் போய்ச்சேர்ந்தார்கள். அவ்விமானத்திலேறிச்சென்ற விடைகரம்புலைச்சியாகியமூவரும் சனவாதனையையொழித்து, விநாயகமூர்த்தியினுடைய பெருங்கருணையால் அளவற்றநாள் சொர்க்காதி போகங்களை யநுபவித்து, முடிவில் அவரது திருவடிகளிற்கலந்தார்கள். இப்பால் தேவகணங்களால் அவ்வறுகின் பெருமையைக்கேட்ட முனிவர்களெல்லாம், முருந்தோடுமூன்றிதழ்விட்டிருக்கின்ற அறுகுகளைக்கொண்டு விநாயகமூர்த்தியை யருச்சித்தார்கள். உடனேகணேசமூர்த்தியினுடைய கிருபையால் அவ்வவர்கட்கு வேறுவேறு தெய்வவிமானங்கள்வர, அவைகளிலவர்கள் ஆரோகணித்து விநாயகருலகத்திற்சேர்ந்தார்கள். அதனை அந்நகரத்துள்ளோர்களறிந்து, அவ்வாறே அத்தூர்வையைக்கொண்டு இடைவிடாமலருச்சித்து, சொர்க்கலோகத்தையடைந்து அளவற்றபோகங்களை யநுபவித்தார்கள். ஆதலால்– உன்புத்திரனாகிய கிருதவீரியனையும் அவ்வறுகைக்கொண்டு சங்கட்டசதுர்த்திவிரதத்தைநிறைவேற்றச்செய்யென்று, பிரமதேவன் பிதிர்தேவனுக்குச்சொல்லியதாகத், தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச்சொன்னான்.

கணபதிதுணை.

இருபத்தொன்பதாவது.

வன்னிமகத்துவப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, கவுண்டின்னியமுனிவர் விநாயகமூர்த்தியினுடைய தூர்வையைத்துலையின்கணேற்றி, அதன்மகத்துவத்தைத் திரிலோகங்களினும் விளங்கச்செய்தவரலாற்றினைச்சொன்னோம், இப்பால்வன்னிமகத்துவத்தைச் சொல்லுவோங்கேட்பீராக, பின்னுந்தேவேந்திரன் சூரசேனமகாராசனைநோக்கிச் சொல்லுவான். அரசனே – பிதிர்தேவன் மீளவும் பிரமதேவனைத்தொழுதெழுந்து, சுவாமி– ஓரறுகேனுங்கிடையாவிடின், அக்காலத்து விநாயகக்கடவுளை எவ்வாறுபூசிக்கவேண்டியதென்றுவினவ, அதற்குப்பிரமதேவன் மனமகிழ்ந்து, விநாயகமூர்த்திக்குப் பல பூசாதிரவியங்களிருந்தகாலத்தும், அறுகைப்போல இன்றியமையாச்சிறப்பினதாக இருப்பதுவன்னிப்பத்திரமும்மந்தாரமலருமாகும். இவற்றுள் வன்னியையன்றிப் பூசனைசெய்தோர்க்கு அக்கணேசமூர்த்தி இரங்கி வரங்கொடுப்பதில்லை. எந்தத்திரவியங்களில்லாவிடினும் வன்னி யொன்றாலவரைப்பூசனைசெய்தால், எத்தன்மைத்தாகிய பயனையும் எளிதிற்கொடுப்பர். அறுகுஇல்லாமற் செய்கின்றபூசைக்கு வன்னியொன்று கூடியிருந்தால் எல்லாப்பயனும் உண்டாகும். அவ்வன்னிக்குரிய பயனை யளிக்கும்பொருள் வேறொன்றுமில்லை. அதனைக்கொண்டு பூசித்தவர்கள் அடைந்தபேற்றினையுஞ் சொல்லுவோங்கேட்பாயாக. எல்லாவுயிர்களுந் துன்பம

வாழ்கின்றவிதற்பதேயத்தில், சகலசெல்வங்களுநிறைந்து, அஷ்டதிசைக
ளினும்புகழ்பெற்று விளங்கியிருக்கின்றஆதாமென்பதோர்நகரமுண்டு. அ
ந்நகரத்தில், வீமனென்னும்பெயரினையுடைய ஓர்வேடன்,தீமையேயன்றி
நன்மையென்பதைச்சிறிதும் அறியாதவனாகி, எந்நாளும் வழிப்போக்கர்க
ளையெல்லாமடக்கிப்பொருள்பறித்தும்,மிருகங்களையலறக்கொன்றுஅவை
களைவிலைகதுமாறியும் வாழ்ந்துவருகின்றநாளையில், அந்நகரத்திலுள்ளோ
ர்கள் அங்கிருக்கின்ற ஓர்தேவாலயத்தில் திருவிழாவைச்செய்ய, அதனைக்
காணுமாறு அயலூரின்கணிருக்கின்ற சிலவேதியர்கள்வந்துதரிசித்து,மீட்
டுந் தமதுபதியினைநோக்கிச்சென்றனர்.அவர்களையவ்வேடன்வழிமடக்கிக்
கொன்று,அவர்கள்வைத்திருந்தபொருள்களனைத்தையுங்கொள்ளையிட்
டுத்திரும்பினன். உடனே-அவ்வந்தணரைக்கொன்றபிரமஹத்திஅவனைப்
பிடித்ததுபோலக்,கொலையிற்றன்னினுஞ்சிறந்தவனாகியும், வலியில்மதயா
னையையொத்தவனாகியும், நிறத்திற்பொன்மைகலந்தசிவப்பினனாகியுமிரா
நின்ற ஓரரக்கனானவன், மானைத்தொடர்ந்து செல்லும்வேங்கையைப்போல
அவ்வீமனைப்பின்றொடர்ந்து துரத்தினன். அதற்கவ்வேடன்அஞ்சி ஓட்
டங்கொண்டு, ஓர்வன்னிவிருக்கத்தைக்கண்டு அதிலேறினன். அவனேறிய
விசையினால், அவ்விருக்கத்தினின்றும் ஓரிலையானது அதனிலெழுந்தரு
ளியிருக்கின்றவிநாயகமூர்த்தியினது திருவடிகளில்விழுந்தது.உடனே அர
க்கனும் அவனைப்பின்றொடர்ந்தேறினன்.அதனால் மற்றோரிலை அவரதுதி
ருமுடியில்வீழ்ந்தது. இவவாறு ஏறியஇருவரும் ஒருவரையொருவர்கைக
ளாலிறுக்கப்பிணித்துக்கொண்டு, நிலத்தில்வீழ்ந்து, தங்கள்பாவதேகத்
தினின்றுநீங்கித் தெய்வவுருவம்பெற்றுக்,கணேசமூர்த்தியினுடைய திரு
வருளினாற்பொன்விமானம்வர, அதிலவ்விருவர்களும் ஆரோகணித்து,வி
நாயகலோகத்திற்போய்ச்சேர்ந்தார்கள். பிதிர்தேவனே- இவர்கள் பூர்வத்
திற்செய்த வினையையுஞ் சொல்லுவோங்கேட்பாயாக. மேற்கூறிய வித
ற்பதேயத்தில் அரசாக்ஷிசெய்துகொண்டிருந்த புண்ணியகீர்த்தியென்னு
மியற்பெயரையுடையஓரரசன்,வேதாகமங்களில்வல்லவனாகியும்,தணணி
யகொடையையுடையவனாகியும், அளவற்றயாகங்களைமுடித்தவனாகியும்,
சத்துருக்களைநாசஞ்செய்துநாட்டியவெற்றிக்கொடியை யுடையவனாகியு
மிருந்தனன். அவன் தன்மனைவியாகிய மதனாவதியென்பவளோடு மன்ம
தனும்ரதியும்போலமருவிச் சந்தோஷசாகரத்தின்மூழ்கிவாழ்கின்ற நாளை
யில், தனதுவாழ்நாள்முடிவெய்தினவனாகி. இகலோகவரசாக்ஷியை யொ
ழித்தனன். உடனே அவன்மனைவியும் அநுமரணஞ்செய்தனள். இப்பால்
அவர்களுக்கு நற்கதியைச்சேர்ப்பிக்கவல்ல புத்திரப்பேறில்லாமையால்,
அவர்கட்காற்றவேண்டிய கருமங்களையெல்லாம் அமைச்சர்கள் நிறைவே
ற்றி, ஒருமாதஞ் சென்றபின்னர், இந்நகரத்தை யாளத்தக்கவர்கள் யாவ
ரென்று தமக்குள் ஆராய்ந்து, இறந்துபோனபுண்ணியகீர்த்தியென்னுமர
சனுக்கு ஞாதியாகிய துத்திரிடராசனுடைய குமாரனாகி, மிக்கவலி
மையுற்றிருந்த சாம்பனென்பவனை யோசித்து, அவனே பகைவரைக்க
ளையவல்ல பராக்கிரமசாலியென நிச்சயித்து, அவன் பிறப்பைச் சிறிது
முணராது,விதிப்படி மகுடாபிஷேகமுதலியவைகளைச்செய்து, சிம்மாசன
த்திலேற்றுவித்து, மதித்தற்கரிய சிறப்புக்களனைத்தையு நிறைவேற்றித்

தங்கட்கு அரசாக்கிக்கொண்டார்கள். பின்னர் அச்சாம்பனுனவன் நாடுந
கரங்களிலுள்ள எல்லாச்சனங்களுந் தன்னருகில்நின்றேவல்செய்யக், கு
பேரனைப்போல் அளவற்றசெல்வத்தோடு வாழ்ந்துவருகின்ற நாளையில்,
அவன்தனதுசெங்கோல் நிலைமையிற்றவறிப், பிரதிதினங்கள்ளையருந்துவ
தும், உயிர்க்கொலைசெய்து உண்பதும், பரஸ்திரீகளைப்புணர்வதும், பிறர்
பொருளைக்கவர்வதுமாகி, உலகத்தையெல்லாங் கனல்பற்றிய காட்டைப்
போலச்செய்து. தனதுநெறிதப்பியநடைக்கு ஒத்துவராதமந்திரிகளைச் சி
றையில்வைத்து, ஒத்துவருகின்றதுற்புத்தியென்னும் பெயரினை யுடைய
ஒருவனை மந்திரியாக்கி, அவனிட்டபடி நடவாதவர்களைச் சுதாவில்
தண்டிக்குமாறு அவனுக் கதிகாரமுமீய்ந்து, தான் சதாகாலமும் ஸ்திரீ
போகத்தில் அழுந்திக்கிடந்தனன். இவ்வாறு மதிமிகுந்த மந்திரிகள்
சிறைக்கண்ணிருக்கத், தான் எக்காலத்தும் பரஸ்திரீபோகத்திலிருக்கத்,
துற்புத்தியென்பவன் தனதுபெயரினுக்கேற்க நடத்தும்பாவச்செய்கைக
ளால் உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் மனவாட்டமுறச்செய்துவந்த
னனென்று பிரமதேவன்சொல்லலும், பிதிர்தேவன் அவனைப்பணிந்தெ
ழுந்து, சுவாமி- தேவரீர்முன்னர் சாம்பனுடையபிறப்பையோசியாது அ
ரசாக்கிக்கொண்டார்களென்று திருவாய்மலர்ந்தருளியதால், அவன்பிறப்
புஎவ்வகைத்தோ அதனையுங் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தி
த்தனன். அதற்குப்பிரமதேவனிசைந்து, அன்பனே- அச்சாம்பனுடைய
தந்தையாகியதுத்தரிடனென்பவன், தனக்குநெடுநாள் ஒருபுத்திரப்பேறி
ன்மையால்வருத்தமுற்று, அளவிறந்ததவங்களையுந்தானங்களையுநிறைவே
ற்றிவந்தனன். ஆயினும்- அவன்இராக்கதர்களோடுகூடிவெவ்வியதொழில்க
ளையெல்லாநடாத்திவந்தமையால், தான்விழைந்தபயனையடையாமற்போ
யினன். பின்னர் அவன்மனைவியானவள் சோரஞ்சென்று, ஓர்வலைஞனுக்
கவனைப்பெற்றனள். இவ்வாறு வலைஞனதுவீரியத்தினின்றும்உற்வித்தகு
ற்றத்தினால், அச்சாம்பனுனவன்அரசகுலமாகவிருந்தும், நல்லகலைஞர்களை
யும்ஒழுக்கத்தினரையுங்காய்ந்து, துன்மார்க்கநடையிற்செல்லுவதாயினன்
இதுதான் அவன்பிறப்பின் பேதமென்றறியக்கடவை. இப்பால் மேற்கூறி
யவண்ணம் அச்சாம்பன் தனதுமறத்தாற்றினாற்சகலவுயிர்களுமனங்கலங்
கச்செய்கின்றகாலத்தில், ஒருநாள் அவன் மந்திரியோடுங்கூடி வேட்டை
யாடித்திரும்பி வரும்போது, என்னையடிமையாகவுடைய விநாயகக்கடவு
ளாலயமொன்று, வானத்தையளாவிய ஸ்தூபியோடு அருகில்பலமறுகள்
சூழப்பெற்று அளவற்றவளப்பங்களைப்பொருந்தி அழகுற்றிருப்பக்கண்
டனன். அவ்வாலயத்தி லெழுந்தருளியிருக்கின்ற கணேசமூர்த்தியோவெ
னில், முன்னோர்காலத்தில் வசிட்டமுனிவரால் மிக்கபத்தியோடு பிரதிட்
டைசெய்ததாகும். பின்னோர்காலத்தில் அம்மூர்த்தியைத்தசரதராசன் வ
ந்தித்துப், பத்தெழுத்துள்ள மந்திரத்தைக்கணித்துப் புத்திரப்பேற்றினை
யடைந்தனன். மேலும் அவ்விநாயகமூர்த்தியானவர், தம்மைவிண்ணுலகர்
மண்ணுலகர் முதலியயாவர்களும் இடைவிடாதுபூசிக்க, அவ்வவர்கட்கு
வேண்டியபடி வரங்களையளித்துவருகின்றமையால், அவருக்கு யாவரும்
வரதகணபதியென்னுந் திருநாமஞ் சாற்றித்துதிப்பர். இத்தன்மைத்தாகி
ய கணேசமூர்த்தியினது திருக்கோயிலைக்கண்ட சாம்பனுனவன், தன்

னமைச்சர்முதலிய பரிசனங்களோடும் அதற்குள்ளேநுழைந்து;அங்குத
ரிசனஞ்செய்யவந்திருந்த அளவற்றசனங்களுள், சிலர்பொங்கலிடவும்,சி
லர் தேங்காயுடைக்கவும்,சிலர் எண்ணெய்முதலியதிரவியங்களைக்கொண்
டபிஷேகிக்கவும், சிலர் வேதாகம மாதிகளாற்றுதிசெய்யவும், சிலர் ஆன
ந்தக்கூத்தாடவும், சிலர் அற்புதமென்று பாடவுங்கண்டு, தானுந் தனது
மந்திரியுங் காட்டிற்பறித்து மள்ளர்கள் தலையிற் கொணர்ந்துவந்த தேன்
காய்கனி முதலியவருக்கங்களை ஓர் விளையாட்டிடைற் கணேசமூர்த்திக்கெ
திரேவைத்து, சுவாமி - யாங்களு முனக்கடிமையென்றுசொல்லிக், கோ
யிலைப் பிரதக்ஷணஞ்செய்து போயினர். இப்பால் முன்போலவே தாங்
ள் மலைபோலவுங் கட்ல்போலவும் புவிபோலவும் நெடுநாள் அளவற்ற
பெரும் பாதகங்களைச்செய்து வருகின்றநாளையில, இவர்கட்கு இறுதிநா
ள் சம்பவிக்க, உடனேயமதுதர்கள்வந்துநெருங்கிச், சிலர் இருவர்கரங்க
ளைப் பின்புறமாகப்பிடித்துக்கட்டியும்,சிலர் நீண்டமுறுக்கூசிகளைக் கொ
ண்டு, செவி- அண்ணம்- நா- மூன்கை- ஆண்குறி- அகங்கை- உதடு- மு
தலியவிடங்களிற் குத்திச்சங்கிலிகளில் மாட்டியிழுத்தும், சிலர்நீண்டக
தாயுதங்களைக்கொண்டு மாறி மாறிப்புடைத்தும் வழிநடக்கச் செய்தார்க
ள். இவ்வாறு அவர்களைக் கொடுமையென்று சொல்லும்படியான நடத்
தைகளுள் ஒன்றினுள்ளுந் தப்பவிடாது எல்லாத் துன்பங்களையுஞ் செ
ய்து கொண்டுசெல்ல, ஆயுதம் - அக்கினி - கல் - முதலியவைகளைச்
சொரிகின்றமழையினுலும், யாளி- புலி - கரி - முதலிய மிருகசாலங்கள்
செய்கின்ற ஹிம்சையினு லும், முட்களைப்பரப்பியிருக்கின்றவழிதோறும்
அடிக்கடி அடிபெயர்த்து நடத்தலினாலும், ஹர ஹர அவர்கள்பட்ட
பாடுகள் யாவரால்வாய்விட்டுரைக்கற் பாலன. பின்னர் அந்த யமதுதர்க
ள் தமது அரசனுடைய சந்நிதானத்தில் அவர்களைக்கொண்டுபோய்விட,
அவர்கள் அந்த யமதருமராசனைப் பார்த்தவளவில், புலியைக்கண்டமான்
போலவும், கருடனைக்கண்ட பாம்புபோலவும், சிம்மத்தைக்கண்டயானை
போலவும் பதை பதைத்துச்சோர்ந்துவிழ்ந்தனர். இப்பால்யமதருமராச
ன் சித்திரகுப்தனைக்கூவி, இவர்கள் இதுகாறுஞ் செய்த புண்ணியபாவங்
களைத்தெரிந்துசொல்லக்கடவையென்று கட்டளையிட,அவ்வாறே அவன்
ஓர்கணப்போதில் அவைகளைத்தெரிந்துகொண்டு,ஓகருமமூர்த்தியே-இவ
ர்கள் சீவித்திருந்த நாண்முழுவதும்பாவங்களையே செய்துவந்தனர். ஓர்தி
னம் விளையாட்டால் கணேசமூர்த்திக்குச் சிறிது வந்தனைசெய்திருக்கின்
றார்களென்றுசொல்லினன். அதனை யமதருமராசன்கேட்டு, அவர்கள்
செய்த அச்சிறு புண்ணியமானது பயனுக்கு முன்வராமையும், பெரும்
பாவங்களெல்லா முற்றிமுன்வந்திருக்கின்றமையையுஞ்சிர்தூக்கிக்கண்டு,
உடனே கண்களில் அனற்பொறிபறக்கும் படியான கோபத்தோடு, இடி
யைப்போன்ற தனது பெருங்குரலினுற் கிங்கரர்களைக்கூவி,இவர்களைஎல்
லா நரகங்களினும்போட்டு வதைசெய்யக் கடவீர்களென்று ஆக்கியாபித்
தனன். அதனைத்தறுகண்ணர்களாகிய அக்கிங்கரர்கள்கேட்டு, வடவாமுகா
க்கினியு மஞ்சத்தக்ககோபத்தோடு கையைப்பிறைபோலவிரித்து, அவ்வி
ருவரையும் பிடரைப்பிடித்து நிலத்தில்விழத்தள்ளிக், கரங்கொண்ட மட்
டுமோதிக், காலாலுதைத்து, உலகத்தோரா முறைமையோடுஙாவாது அ

லயச்செய்த மகாபாவிகாள், யாங்கள்செய்கின்ற முறைமையிற்படக்கடவீர்களென்றுசொல்லிச், சிலர் கூரியவேலாயுதங்களைப் பரப்பியிருக்கின்ற நிலத்தின்மீது மல்லாக்கத்தள்ளி, முட்களையுடைய தண்டாயுதத்தினுல் உடலானது பள்ளமாகும்படியெறிவார்கள். சிலர் இரண்டு உள்ளங்கால்களினும் ஊசிகளைக் கடாவுவார்கள். சிலர் வெளுத்தபொறியைப்போலத்துள்ளிவிழும்படியாகச் சுடுநிலத்திலிடுவார்கள். சிலர் நாறு மொத்துவதுபோல உதிரம்- மூளை- தசை- முதலியவைகள் சிதறும்படியாகத் தூணில்மொத்துவார்கள். சிலர் பருந்து- கழுகு- காக்கை- நரி- நாய்- முதலியவைகள் தங்கள் பசிகெடக்கூறிட்டுப் புசிக்கும்படியாக அவைகட்கு முன் அகப்படுத்துவார்கள். சிலர் உச்சியிலிருந்து மலவாயில்வரையில் ஊடுருவும்படியாக வச்சிரத்தினுற்செய்த முள்மூளைகளைச் சொருவுவார்கள். சிலர் விடந்தங்கிய பற்களையுடைய சர்ப்பத்தின்வாயிற் கொடுப்பார்கள். சிலர் தசைகளைத்துண்டந்துண்டமாகவரிந்து புசிக்கச்செய்வார்கள். சிலர் நுங்கை நோண்டுவதுபோலக் கண்களைத் தோண்டுவார்கள். சிலர் கைகள் துள்ளி விழும்படியாக ஆயுதங்களைக்கொண்டுதறிப்பார்கள். சிலர் வில்லுகளில் அழலுக்கொப்பான அம்புகளையேத்தி உடலிற்றைக்கும்படிவிடுவார்கள். சிலர் முடக்கிரும்புகளை மேல்வாய்களில் ஊடுருவக்குத்தி உயர்விற்றூக்கிச் சுற்றிலு நெருப்பைமூட்டித் துன்பப்படுத்துவார்கள். சிலர் மதம்பொழிகின்ற யானையினதுகால்களில் முடிகள் பிடறவிடுவார்கள். சிலர் உதிரமொழுகுகின்ற இரும்புலக்கைகளைக்கொண்டு மோதுவார்கள். சிலர் கிருமிகள் கிண்டும்படியாக அவைகள்நிரம்பிய கிடங்குகளி லிடுவார்கள். சிலர் சீயுஞ்செந்நீருங் குழம்பியிருக்கின்றகிணற்றுகளில் எறிவார்கள். சிலர் உடலமானதுஇரண்டுபிளவாகும்படி இரண்டுபக்கத்தினும இரண்டுபேரிருந்து ஈர்வாளைக்கொண்டு அரிவார்கள். சிலர் உருக்கப்பட்டிருக்கின்ற செம்பை ஒன்பதுதுவாரங்களினும் ஒழுக்குவார்கள். சிலர் கரும்பைப்போலத் தூக்கிநெருங்கிய ஆலையிற் சொருகுவார்கள். சிலர் முறுக்கியிருக்கின்ற செக்குகளில் வைத்தாட்டுவார்கள். சிலர் உடலிற் செதிலெழும்படி வாச்சியைக்கொண்டுசேதித்து நெருப்பிலிட்டுக் கோபிப்பார்கள். சிலர் உடலையும் ஈயத்தையும் ஒன்றாக அகலிற்சேர்த்து நெருப்பின்மீதுவைத்து உருக்குவார்கள. சிலர் அகலில் மணலிட்டுக்கூடேபோட்டு வறுப்பார்கள். சிலர் கொதிக்கின்றநெய்யில் முழுகும்படியாகவிடுத்து அனலைமூட்டுவார்கள். சிலர் ஊசிகளையெடுத்து ஆண்குறிகளிலும் நகக்கண்களினுஞ்சொருகுவார்கள். சிலர் அழலிற்காய்ச்சப்பட்டிருக்கின்ற இரும்புகளை உள்ளங்கையில் வைப்பார்கள். சிலர் உருகியிருக்கின்ற செம்பொன்னையள்ளி உடன்முழுவதும்பூசுவார்கள். இவ்வாறு யமகிங்கரர்களெல்லாம் அவர்களை ஒவ்வொருநரகங்களில் ஆயிரவருடம் பதினாயிரவருடம் நூறாயிரவருடமென்கிற கணக்கின்படிபோட்டுவதைசெய்ய, அவ்விருவரும் பூனைவாய்ப்பட்ட புறாவுங்கிளியும்போலவும், பாம்பின்வாய்ப்பட்ட தேரையுந் தவளையும்போலவும் வருத்தமெய்தி, எல்லாநரகவேதனைகளையுமநுபவித்துவருகின்றநாளையில், அவர்கள்செய்தகொடும்பாதகங்களெல்லாங்குறைந்துபோயின். இப்பால் நின்றசேடத்தினை உலகத்திற்சனனமெடுத்து அநுபவிக்கும்படியாக, அவ்விருவருங் காகமுங் கூகையுமாகவும், ஓந்தியு

ம் வல்லூறுமாகவும், நாகமுந் தேளுமாகவும், நாயும் பூனையுமாகவும், சரியும் பன்றியுமாகவும், நரியும் செந்நாயுமாகவும், குதிரையுங்கழுதையுமாகவும், ஒட்டகமும் யானையுமாகவும், மச்சமும் முதலையுமாகவும், புலியும் மானுமாகவும், எருதும் எருமையுமாகவுஞ், சன்மித்தனர். இவ்வாறு இழிந்தயோனிகளிலெல்லாம் பலமுறைபிறந்து, பின்னர் அரக்கனுகவுங் கிராதனுகவும் உற்பவித்து, வன்னிமரத்திலேறிப் பாவங்களை யொழித்தனர். ஆதியிலே இவ்வேடன் சாம்பனென்னு மரசனுயிருந்தபோது, தானுந் தனதுமந்திரியும் ஓர்விளையாட்டாக வரதகணபதிக்கெதிராகக்காய்கனிமுதலியவைகளை,வைத்து, நாங்களும் உனக்கடிமையென்றுசொல்லிக் கோயிலைப்பிரதக்ஷணஞ்செய்து சென்ற புண்ணியத்தால், பிறவிகள்தோறும் பெரியதீவினைகளைச் செய்திருந்தும், இச்சனனத்தில் அவர்கள் வன்னிவிருக்ஷத்திலேறவும், அதனிலையுதிர்ந்துஅதற்கடியில்வாமனராற்பூசை செய்யப்பட்டிருக்கின்ற வாமனகணேசர்பேரில்விழவும், அதைஅவர்கள் அப்புத்தி பூர்வகமாய்ச்செய்த பூசனையென்று கணேசர் ஒப்புக்கொண்டு மோக்ஷசாம்பிராச்சியத்தைக் கொடுத்தருளவுமாயது, என்று பிரமதேவர்பிதிர்தேவனுக்குச் சொன்னதாகத், தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச்சொன்னுன்.

கணபதிதுணை.

முப்பதாவது.

வன்னிவிநாயகர்வரலாற்றுப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, வன்னிமகத்துவத்தால் ஓ ரரக்கனுங்கிராதகனு முத்தியடைந்தவரலாற்றினைச்சொன்னேம், இப்பால் அவ்வன்னிநீழலில்வீற்றிருக்கின்ற விநாயகர்வரலாற்றினைச்சொல்லுவோங்கேட்பீராக. மீட்டுந்தேவேந்திரன் சூரசேனமகாராசனை நோக்கிச்சொல்லுவான் அரசனே- பிதிர்தேவன் பிரமதேவனைத்தொழுதெழுந்து,சுவாமி - வாமனர் என்பவர்யார், அவர்வன்னிமரத்தடியிலேவிநாயகமூர்த்தியைப்பூசை செய்தகாரணமென்ன, அதனையும்அடியேற்குச்சொல்லியருளல்வேண்டுமென்றுபிரார்த்திக்கப், பிரமதேவன்சொல்லுவான். பிதிர்தேவனே-வாசியோகமுடையோர்க்குவரம்பில் ஆனந்தத்தையளிக்கவல்லதேசிகனுயும் தேவதேவனுகியும், திசம்பரனுகியுமிருக்கின்றசிவபெருமானதுபஞ்சாக்ஷரத்தைச்சதாகாலமுந்தியானித்துத், திருவெண்ணீறுபூசி, உருத்திராக்ஷகண்டிகைபுனைந்து, அரியதவங்களைச்செய்கின்றகாசிபமுனிவரானவர், அதிதி- திதி- என்னுந் தமது இரண்டுபத்தினியரோடுங் கூடிவாழ்கின்றநாளையில், அதிதியென்கின்றபத்தினியானவள், தனதுபுத்திரர்களாகிய இந்திரன்முதலிய தேவர்கட்குஉதவியாக, இலக்குமிமணுளராகிய விண்டுதனக்குப் புத்திரனுகி வரவேண்டுமென்னும் அவாவினுல் பெரிய தவங்களைச்

செய்துகொண்டிருந்தனள். அதனையவட்கு மாற்றாளாகிய திதியென்பவளறிந்து, தேவர்களினுஞ்சிறந்த மேன்மையையும், திரிலோகத்தினையுங்காக்கவல்லதிறத்தினையுமுடைய புத்திரர்களைப்பெறவேண்டியோசித்து, அந்திவேளையிற்றனது கணவராகியகாசிபரைத்தொழுதெழுந்து, சுவாமி- யாதுகாரணத்தினாலோ காமநோயானது என்மனத்தைச்சுடுகின்றதால், தேவரீரடியாளைக்கூடிச் சுகந்தராவிடின் இனி எனதுயிர்வாழ்வதும் அரிதாயிருக்கின்றது, இந்நிமிடத்தில் அதற்கொருதடைசொல்லாமற் கூடியருளல்வேண்டுமென்றுபிரார்த்தித்தனள். அதற்கம்முனிவரிசைந்து, விறகின்கணுண்டானதீ அவ்விறகினையே சுட்டெரிப்பதுபோல, அவளகத்தின்கணுண்டாகிய விரகநோய் பின்னரவளையே வருத்துகின்றதைநோக்கிக்கூடினர். உடனே -, விண்ணுலகமுதலிய யாவுநடுங்கும்படியாகவும், தானவர்குலங்கள்தழைத்தோங்கவும், இரண்ணியகசிபன் இரண்ணியாக்கதனென்னும் இரண்டசுரர்கள் உற்பவித்தனர். அவருள் இரண்ணியகசிபனென்பவன், சிவபிரானைநோக்கி அரியதவங்களைச்செய்து, அத்திரம்- சத்திரம்- உள்- புறம்- பூமி- ஆகாயம்- இரா-பகல்- உயர்திணை-அஃறிணை- யென்னும் இந்த இரண்டுபகுதிகளினுந் தனக்குமரணமுண்டாகாதிருக்கவுந், தனது உதிரம்பூமியில்வீழ்ந்தால் அதில்நின்று தன்னைப்போல உருவுண்டாகவும் வரம்பெற்று, வேதவொழுக்கத்தினைக்கடந்து, திரிலோகங்களையும்ஆண்டு,குறைவற்றிருக்கின்ற செல்வமென்னுங்குன்றிலேறித், தனக்கெவ்விதத்தினும் மரணமில்லையென்கின்ற உறுதியோடு இறுமாப்புற்றிருக்கின்ற நாளையில், மகாவிஷ்ணுவானவர் - அவ்விரண்ணியகசிபனைக்கொல்வதற்கான ஓருபாயத்தினையாம் தேடவேண்டுமென்று மனத்தின்கணினைத்தவரராய், ஒருநாள் - பூமியின்கணெழுந்தருளி, ஓர்வன்னிவிருக்கத்தடியில் விநாயகமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து, ஆகமவிதிப்படி பூசனைபுரிந்து, ஓராதனத்திலிருந்து, ஐம்புலாதிகளையுமடக்கிச், சடக்கரமந்திரத்தைச்செபித்துவந்தனர். இவ்வாறுதவஞ்செய்துவருகின்றநாளையில், ஐங்கரக்கடவுளாகியகணேசமூர்த்திக்குக் கிருபைசுரந்து, அவரெதிரிற்பிரத்தியக்ஷமாயினார். உடனே - மகாவிஷ்ணுவானவர் தொழுதெழுந்து, அனந்தமுறைதோத்திரஞ்செய்து, சுவாமி- எல்லாவுலகங்களையும் அறத்தாறுகடந்து அரசாக்ஷிசெய்துவருகின்ற இரணியகசிபனுடைய வுயிரைவாட்டுமாறு அடியேற்கு வரந்தரவேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்குவிநாயகக்கடவுளிசைந்து, விண்டுவே- உயர்திணையும் அஃறிணையுமல்லாத உருவத்தினைக்கொண்டு, உள்ளும்புறம்பு மல்லாதவாய்தலிலிருந்து பகலுமிரவுமல்லாத மாலைப்போதில், விண்ணுமண்ணு மல்லாதமடியிலவனைவைத்து, அத்திரசத்திரமல்லாத நகத்தினாலேகீறிப்பிளந்து, அவனுதிரம்பூமியில்விழாதபடிவாயால்உறிஞ்சக்கடவையென்று திருவாய்மலர்ந்து அதற்கேற்றவலியுங்கிருபைசெய்து, தமது திருவுருவைக் கரந்தருளினார் இப்பால் மகாவிஷ்ணு நரசிம்மஅவதாரங்கொண்டு, அவ்வுபாயத்தின்படி இரணியகசிபனைக்கொன்றார். அவனுக்குப் பின்னர் அந்த அரசாக்ஷியை இரணியாக்கதன் ஆண்டுவந்தான். அவனையும் விநாயகமூர்த்தியினுடைய பெருங்கருணையால் மகாவிஷ்ணு வராக அவதாரமெடுத்து ஒழித்தருளினர். ஓ பிதிர்தேவனே - அண்டர்பெருமானாகிய கணேசமூர்த்தியானவர்

வுவ்விட்த்திலெழுந்தருளி, விண்டுவுக்குவேண்டிய வரங்களையளித்தமை
பால், விண்டுவிநாயகரென்னுந் திருநாமத்தினைக்கொண்டனர். பின்னொரு
காலத்தில் விண்டுவாமனவதாரங்கொண்டு, அந்தவிநாயகமூர்த்தியை வந்
தித்துவரம்பெற்றிருக்கின்றனர். அதனால் வாமனகணேசரென்னும்மற்றொ
ருபெயர்விளங்கிநின்றது. அதன்வரலாற்றையுஞ்சொல்லுவோங் கேட்பா
யாக. முன்னர்விண்டுவினுடையவராகஅவதாரத்தினாற்கொலைபட்ட இரணி
யாக்கனுடைய புத்திரனாகிய விரோசனனென்பவன், சூரியனைக்குறித்து
அளவற்றநாள்தவஞ்செய்துகொண்டிருக்க, அதற்குச்சூரியன்மனதிரங்கி
அவனெதிரில்வந்து, ஓர்சொர்னக்கிரீடத்தையவன்கையிற்கொடுத்து, இக்
கிரீடத்தை உனது முடியிற் சூடிக்கொண்டிருப்பையாயின், மூன்றுலக
மும் உனதாக்கினைக்குள்ளாகும், உனக்கு ஓராபத்தும்வருவதில்லை, இக்கி
ரீடத்தினைத்தரியாமல் உனதுசிரத்தின்பேரில் மற்றொருவர் கரம்படுமாயி
ன், உடனே- உனதுசிரம்நூறுபிளவுகளாய்ப்பிளக்கப்பட்டு, உயிரும்ஒழி
ந்துபோகும், ஆதலால்- இதைமறவாமல் சாக்கிரதையா யிருக்கக்கடவை
யென்றுசொல்லிச், சூரியன்தனது கதியைநோக்கிச்சென்றனன். இப்பால்
விரோசனன் அப்பொன்முடியைச்சூடித், திரிலோகங்களுந்தனதேவல்கே
ட்க அரசாக்ஷிசெய்து, மாவலியென்னும் ஓர்புதல்வனைப்பெற்றுவாழ்ந்துவ
ருகின்றநாளையில், இந்திரன்முதலியதேவர்கள் வைகுந்தத்திற்குச்சென்று
மகாவிஷ்ணுவைத்தொழுதெழுந்து, சுவாமி- மூவுலகங்களினும் அவுண
னாக்கினையதிகரித்திருப்பதால், அதனைப்போக்கியருளவேண்டுமென்றுபி
ரார்த்தித்தார்கள். அதற்குக்காயாம்பூநிறத்தினையுடைய மகாவிஷ்ணுவான
வரிசைந்து, ஸ்திரீகளும் அன்புகொண்டிச்சிக்கத்தக்க அழகினோடுமோகி
னியவதாரங்கொண்டு விரோசனனெதிரிற்சென்றனர். உடனே அம்மோ
கினியினுடையபார்வையாலும், புயத்திற்சுமந்திருக்கின்ற புட்பவில்லினா
லும், மிருதுவாகியவசனத்தினாலும், குழலசைத்தன்முதலிய தொழில்க
ளினாலுந், தன்மனதிற் பெண்ணென்றேநினைத்து, மோகக்கடலின்மூழ்கி
னவனாகிப் பின்சென்றனன். அதற்குப் பெண்வடிவங்கொண்டுவந்த வி
ண்டுவானவர், அரசனே - நீ கலவித்தொழிலிற் கைகண்டவனென்றுகே
ள்வியுற்று, உன்னைக் கூடவேண்டுமென்னு மிச்சையால் இங்ஙனம் வந்
தனன், ஆனால் எனது நீர்மையோவெனில், தயிலமாடாதவர்களது தோ
ளை எஞ்ஞான்றும் சார்வதில்லை, இப்போது தயிலமாடுவையாயின் என்
கொங்கைகள் நினதங்கையவாகும், ஆதலால்- விரைவில்தயிலத்தை வரு
விப்பாயெனில், யானே அதனைத்தேய்க்கின்றேனென்று திருவாய்மலர்ந்
தனர். இவையனைத்தையும் விரோசனன்கேட்டுத், தானடைந்திருக்கின்ற
மோகத்தினால் முன்புசூரியன்சொல்லிய சொற்களையுமறந்து, விரைவிற்ற
யிலங்கொண்டுவருமாறு ஏவலாளர்களுக்காக்கியாபித்துத், தயிலம்வந்தவு
டன்தனதுகிரீடத்தைவாங்கி நிலத்தில்வைத்தனன். பின்னர் விண்டுவான
வர்நமக்கு நல்லசமயம்வாய்த்ததென்று சந்தோஷித்து, அவனுக்கெதிரில்
நின்று, ஒருகையாலவன்சிரத்தைப்பிடித்து, மற்றொருகையாற்றயிலத்தை
யள்ளிவிட்டுத்தேய்த்தனர். இவ்வாறு அவன்சிரத்திற் றமதுகரத்தைவை
த்தமாத்திரத்தில், சுண்ணாம்புக்கல்லின்மேல் சலத்தை விடுத்தாற்போல,
அவன்சிரமானது நூறுபிளவுகளாய்ப்பிளந்து இறந்துபோயினன். பின்ன

ர்தேவர்களெல்லாம்வீறுகொண்டு தம்மைப்போற்றும்படியாக, விண்டுவானவர் வைகுந்தத்தையடைந்தனர். இப்பால் மேற்கூறியவிரோசனனுடைய அரசாட்சியனைத்தையும், அவன்புத்திரனாகிய மாவலியென்பவன்கையேற்றுப், பிரமகபாலமேந்தி அனலாடும்பெருமானாகிய சிவபெருமானது திருவடிகளைஇரவும்பகலும்விட்டும்பிறியாதசிந்தையோடு,தனது நேமியை நீதிமுறைப்படி உலகமெங்கணுஞ் செலுத்திவாழ்ந்து வருகின்றநாளையில், ஒருநாள்- தனதுகுருவாகிய சுக்கிரனைவரவழைத்து, அவனுக்கு வந்தனைமுதலிய வழிபாடுகளைநடத்திப், பின்னர் ஓராதனத்தின்கணிருக்க வைத்துப்,பலவுபசாரங்களுடன்பூசனைகளும்புரிந்து,சுவாமி- எனக்குஞாதியாகிய தேவேந்திரன்மாத்திரஞ் சொர்க்கலோகத்திற்கரசனாகி, அளவற்றபோகங்களை ஆவல்தீரவநுபவித்திருக்க, அவைகள் எனக்கில்லாமற்போனதற்குக்காரணமென்ன, அதனையடியேற்குத் திருவாய்மலரவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டனன். அதற்குச்சுக்கிரன்சொல்லுவான், அரசனே- தருமஞ்செய்தபேர்கள் போகத்தையநுபவிப்பது இயற்கையாகும், அப்படிதருமஞ்செய்யாது தனதுவல்லமையினாலும் பிறவிமேம்பாட்டாலும் அடைகின்ற போகமெல்லாஞ் செயற்கையவாகும், அவைகள்நீடித்துநிற்கமாட்டா,சுரலோகசக்கிரேச்சுரனாகியஇந்திரனேவெனில், நூறுமகங்கள்செய்து சகலபோகங்களையுந்தடையின்றி யநுபவிக்கின்றான், அவனைப்போலநூறுமகங்கள்சரியாகச்செய்யாது அளவற்றபேர்கள் அவனோடுவந்தெதிர்த்து மாய்ந்துவிட்டனர், உனக்கப்போகங்களையநுபவிக்கக்கருத்திருக்குமாயின், விரைவிலவனைப்போலநூறுமகத்தையுமுடிக்கக்கடவையென்றனன். இவ்வாறு சுக்கிரன்கூறியஉண்மைகளைமாவலி கேட்டுமனமகிழ்ந்து, உடனேவசிட்டர்முதலிய பெரியோர்களைவரவழைத்து, தொண்ணூற்றொன்பது அஸ்வமேதயாகங்களைச்செய்துமுடித்து, இப்பால் நூறாவதுயாகத்தையு முடிப்பதற்குயத்தனங்கொண்டிருக்கின்ற நாளையில், அதைத்தேவேந்திரனறிந்து, ஐயோ- இனியென்செய்குவோம் நமது அரசையும் அளவற்றபோகங்களையும் இன்றொழிந்தனமே, நாம் எவ்வாறுமாவலியைவாட்டவல்லோம், ஆயினும் முன்னர் நமதுபாக்கியங்களைக்கவர்ந்தபதகர்களையெல்லாம் இமைப்போதிற்கண்டதுண்டமாக்கியருளியகமலக்கண்ணரிருக்கின்றா ரல்லவாவென்றுதேறி, விரைவிற்சர்ப்பசயனத்திற்பள்ளிகொண்டிருக்கின்ற விண்டுவைக்கண்டு, அவரது திருவடித்தாமரைகளைப்பலமுறைவணங்கி, அளவற்றஸ்தோத்திரங்கள்செய்து, அண்ணலே- இதுகாறும் என்னையெதிர்த்துவந்த தானவர்களையெல்லாம் மண்ணுக்கிரையாக்கி, அடியேனைவிண்ணுக்கரசாக்கிவைத்ததுதேவரீர்பெருங்கருணையலலவோ, இப்போதும் ஓரவுணனாகிய மாவலியென்பவன் எனதுபதவியையிச்சித்து மகஞ்செய்துவருகின்றனன், அவனுயிரையுந்தேவரீர்குடித்தருளி, யான்விண்ணுலகத்திலிருக்குமாறு அருள்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குவிண்டுவானவர் புன்னகைகொண்டு இந்திரனே-நீகூறியது நன்றாயிருக்கின்றதுநன்றாயிருக்கின்றது, பலமுறை பொல்லாங்குகள்செய்தும், வேதவொழுக்கங்களிற்றவறியும், முனிவர்களையுந்தேவர்களையுந் துன்பப்படுத்தியு மிருந்தபேர்களையெல்லாம், இதுகாறுஞ்சங்கரித்து, உனதுபதவிக்குயாதொரு தீங்குநேரவொட்டாமற் காப்

ராற்றிவந்தனம், இப்போது நீகூறியமாவலியோவெனில்,வேதாகமமுறைப்படியாகஞ்செய்துவருகின்றான், நீதிதவறாமல் அரசியற்றிவருகின்றான், தனக்கெக்காலத்தும் அழிவுநேராதவண்ணஞ் சிவபெருமானிடத்திற்றீர்க்காயுளடைந்திருக்கின்றான், மேலும் எல்லாவிதத்துங் குற்றமற்றகுணத்தை யுடைத்தாயிருக்கின்றான், இத்தன்மையவான மேம்பாட்டினையுடைய அவனை நாம் எவ்வாறு சங்கரிக்கக்கூடும், ஆயினும் - நீ நம்மிடத்துவந்து பிரார்த்தித்தனை யாதலால், உனது பதவிக்குக்குறைவுவாராமற் காப்பாற்றுவோம், இனியுனதுமனக்கவலையை யொழித்திருவென்றுதிருவாய்மலர்ந்து, இந்திரனுக்குவிடைகொடுத்தனுப்பிப், பின்னர்தமதுமனத்தின்கண் இதனையோசிப்பதாயினர். இப்பவும்- மாவலியானவன் நீதி நெறியினும்வேதவொழுக்கத்தினுந் தவறாதுயாகஞ்செய்துவருகின்றானாதலால் அந்தயாகத்தையழிப்பதற்கு அவன் ஞாதியாய்ப்போனால் வெற்றிபெற்றுவரலாமேயன்றி, மற்றசதுர்விதவுபாயத்தினாலும் ஏனையவெவ்வேறு ஏதுவினாலுங்கூடாது, இனியாம் இதனையேசெய்யத்தக்கதென்றுயோசித்து, முன்னர் தம்மைப் புத்திரனாகிவருவதற்கு எண்ணங்கொண்டு அரியதவத்தினைச்செய்திருந்த அதிதிக்குப்பயனளிப்பவர்போல, அவள்கருப்பத்தில் வாமனராய்த்தங்கி,நான்குதிருக்கரங்களுங் காயாம்பூநிறத்தினையுமுடையவராய், யாவரும் இலக்குமிமணாளர் இவரோயென்றுசொல்லும்படியாக அவதாரஞ்செய்தனர். இப்பால் தந்தையாகிய காசிபர் அளவற்றமகிழ்ச்சியையடைந்து, தமது புதல்வருக்குச் சாதககன்மாதிகளைச்செய்து, மூன்றாமாண்டிற்சவளச்சடங்கினைநடத்தி, ஐந்தாமாண்டில் உபநயனகல்யாணத்தைமுடித்து, வேதாத்தியயனமுஞ்செய்வித்தனர். பின்பு வாமனரானவர்சகலவேதாகமபுராணங்களினுஞ் சாமர்த்தியராகித், தமதுதந்தையாகிய காசிபரிடத்துவந்து, மிக்கபேரன்பினோடும் அவரைப்பணிந்தெழுந்து, அய்யனே- இந்திரபோகத்தையடையுமாறு மாவலிமகஞ்செய்துவருகின்றமையால்; அவனைவென்று இந்திரனுக்குச்சுகத்தை மருவிக்கும்வகையாதினாலென்றுவினாவினார்.அதற்குக்காசிபர் தமதுபுத்திரனைநோக்கிச், குழந்தாய்- நீ கூறியதுவிநாயகக்கடவுளுடைய திருவருளில்லாமல் முடிவதன்று, அவ்வருளைப்பெறுவதற்கு அவரது சடக்கரமநுவைச்செபிக்கவேண்டுமென்றுசொல்லி, வேதாகமவிதிப்படி தீக்ஷைசெய்து, அந்தச்சடக்கரத்தையு முபதேசித்தனர். இப்பால்வாமனர் அவ்விடத்தினின்று நீங்கி விதர்ப்பதேயத்தையடைந்து, ஆதேயநகரத்தில், தென்புறத்தில், வன்னிவிருக்கத்தினீழலில் வீற்றிருக்கின்ற, என்னையடிமையாகவுடைய விண்டுவிநாயகமூர்த்தியினதுதிருவடித்துணைகளைத்தொழுது,தினந்தோறும் பூசனைசெய்து,ஒருவருடபரியந்தஞ்சடக்கரமந்திரத்தையநுட்டித்துவந்தனர். அவ்வநுட்டிப்பிற்கு அடியவருள்ளத்தில் ஒளிக்கொளியாக விருக்கின்றசோதிஸ்வரூபராகிய விநாயகமூர்த்திகிருபைசுரந்து, நீலவெற்பின் மீது மாணிக்கக்குன்றிருந்தாற்போல, மயில்வாகனத்தின்மீது பத்துதிருக்கரங்களோடும் யானைமுகத்தோடுந்தோன்றி, அளவற்ற தேவகணங்கள் புடைசூழும்படியாக அவரெதிரிற் பிரத்தியக்ஷமாயினர். உடனே- தம்மைப்பிழைப்பிக்கவல்ல தயாபரமூர்த்தியினுடைய உருவத்தைக்கண்டலும், வாமனர் தமது தீமையனைத்துங் கீழேவிழுந்தனபோல நிலத்தில்

வீழ்ந்துபணிந்து, நன்மையனைத்துமேலேயெழுந்தன்போல மீளவுமெழுந்து ஆனந்தக்கூத்தாடி, அளவற்ற வேதாகமங்களினாற்றுதிசெய்து, கொழுந்துவிட்டெழுந்த அன்பினால் சிரத்திற் சூட்டிக்கொண்டு, கர்த்தன் சந்நிதானத்திற்கெதிராகக் கைகூப்பி மெய்கோட்டி நின்றனர். அதற்கு விநாயகமூர்த்தி மனதிரங்கி வாமனனே- நீ ஒருவருட்டபரியந்தம் ஆகாரமுதலியவைகளைநீத்து மிக்கஉள்ளன்பினோடும் நம்மையநுட்டித்தனையாதலால், உனக்குவேண்டியவரங்களைக்கேளென்றுதிருவாய்மலர்ந்தனர். உடனேவாமனர்பணிந்தெழுந்து சுவாமி- எளியேற்குத்தேவரீரதுதிவ்வியசரணாரவிந்தங்களில் இடைவிடாதபத்தியும், தேவேந்திரனுக்கு அழிவில்லாத அரசும், தேவரீர்க்கு அடியேனுடைய நாமமும், அடியேனினைத்தவெல்லாம் எளிதிற்கைகூடிவருந்திறமும், அறிந்துமறியாமல் ஏதேனும்பிழைசெய்வேனாயின் அதனை யானடிமையென்னுஞ் சுதந்தரத்தாற்றேவரீர் திருவுள்ளத்திற் பொறுக்கும் பொறுப்புங் கிருபைசெய்யவேண்டுமென்றுபிரார்தித்தனர். அதற்குத்தேவதேவராகிய கணேசமூர்த்தி அவ்வாறே அநுக்கிரகஞ்செய்து, தமதுதிருவுருவைக்கரந்தருளினர். பின்னர் மீளவும் வாமனர் அவ்வன்னிவிநாயகமூர்த்தியையருச்சனைசெய்து, அவ்விடத்தினின்றுநீங்கித், தமதுதந்தையினிருப்பிடஞ்சேர்ந்து, அவரிடத்திற்றாம்பெற்றுவந்தவரங்களனைத்தையுங்கூறி, முன்போலவேமிக்கமனக்களிப்போடு சடக்கரமந்திரத்தைப்பிரதிதினஞ்ஜெபஞ்செய்துவந்தனர். இப்பால் மாவலியானவன் மற்றொருவேள்வியுஞ்செய்துவருகையில், வாமனர் அவனிடத்திற்குச்செல்ல, அவனவரைஎதிர்கொண்டழைத்துவந்து, தீர்க்கதண்டன்செய்து, ஓமகாதவசிரேஷ்டரே- தேவரீர்யாவர், தாமரைமலரையொத்த தமதுதிருவடிவருந்தும்படி இவ்விடத்திற்குவந்தகாரியமென்ன, அதனையடியேற்குத் திருவாய்மலரவேண்டுமென்று கேட்டுக்கொண்டனன். அதற்குவாமனர் மாவலியினுடையஅன்பைநோக்கி, அரசனே யான்காசிபமுனிவருடையபுத்திரன், நீசிறந்தவேள்வியைச்செய்துவருகின்றனையாதலால், இச்சமயத்தில் யானிருந்துதவஞ்செய்தற்கு மூன்றடிநிலந்தானஞ்செய்யுமாறுகேழ்க்க வேண்டிநின்னிடத்திற்கு வந்தனன், அவ்வாறேயளிப்பது நினதுகடமையாகுமென்றனர். அதனைக்கேட்டமாவலி பெருமகிழ்ச்சிகொண்டு, அவ்வாறேஉமக்குக்கொடுத்தோமென்றுசொல்ல, அவனாசிரியனாகியசுக்கிரன் அதனைத்தடுத்து, அரசனே-நின்பாற் றானம் வேண்டிவந்தவன் தவசியல்லன், மாலேஇம்மாயவுருவங்கொண்டு உன்பால் இவ்வுலகமனைத்துங் கைக்கொள்ளவந்தானென்றனன். அதனைமாவலி மறுத்து, கொடுப்பதனால் வருங்கேடானது கொடாமையால் வருஞ்செல்வத்தினுமேலானதென்றுகூறித், தாராபாத்திரத்தையெடுத்து தத்தஞ்செய்யச்சென்றனன். அத்தருணத்தில், சுக்கிரனானவன் ஓர் சூக்குமவடிவங்கொண்டு, அத்தாராபாத்திரத்தினின்றுஞ் சலம்வரவொட்டாமல்அதன்மூக்கின்வழியையடைத்துக்கொண்டனன். அவ்வஞ்சத்தைவாமனரறிந்துகொண்டு, கொடுப்பதைத்தடைசெய்தலால் வரும்பயன் இத்தானென்றுசொல்லும்படி ஓர்தருப்பையை யுள்ளேவிட்டுக்குத்தினர். அதனால் அச்சுக்கிரன் தனதுவிழிகளிலொன்றை இழக்கப்பெற்று அதினின்றும் அப்பாற்செல்ல, உடனே- வாமனர் மாவலிவிட்டதத்தநீரைக்கையேற்று

க்கொண்டவராய், கொடைசெய்தலாலுண்டாகும் பயன்இவ்வளவிற்றெ ன்றுசொல்லும்படி, அண்டகடாகங்களினும் ஊடுருவ ஓர்விசுவரூபங் கொண்டு, தமதுதிருவடிகளினால் மூவுலகத்தினையும் ஈரடியாகவளந்து மூன்றுமடிக்கு அம்மாவலிசென்னியிற் றமதுபாதத்தைவைத்து, அவனை ப்பாதலலோகத்திற்செல்லும்படியழுத்தித், தமதுமனத்திறகொண்டவஞ் சகத்தை நிறைவேற்றிக்கொண்டு, இந்திரனுக்குச்சொர்க்கலோக அரசா க்ஷியை நிலைபெறச்செய்தனர். இப்பால் மாவலியானவன் முன்பூசிவபிரா னைவழிபட்டிருந்த மகத்துவத்தினால், தனதாக்கினையைச் சகலோகங்களி னும் அப்பாதலலோகத்தினின்றுஞ்செலுத்தி, மநுநீதிமுறைமைப்படி அ ரசாக்ஷிசெய்து, தேவேந்திரனைப்போல அளவற்றபோகபாக்கியங்களை ய நுபவித்துவந்தனன். இம்மாவலி பரமசிவகடாக்ஷத்தைப்பூரணமாகப்பெற் றிருந்தும், தனது உலகங்களையெல்லாங் கணேசமூர்த்திக் கன்பராகியவா மனருக்குத்தத்தஞ்செய்து, தான்அவரிட்ட சிறைக்கணிருக்கப் பெற்றன னாதலால்,வன்னிவிநாயகர்- விண்டுவிநாயகர்- வாமனவிநாயகர்- என்னும் இம்மூன்றுதிருநாமங்களையாவரேனு நினைத்தாலும், துதித்தாலும், பூசித் தாலும், அவர்கட்குத் தேவேந்திரனைப்போல அளவற்ற செல்வத்திலிரு க்கும்படி வரங்கொடுத்து,எல்லாவிடர்களையும் இமைப்போதிற் கெடுத்த ருளுவர்.என்றுபிரமன் பிதிர்தேவனுக்குச்சொன்னதாகத், தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச்சொன்னான்.

கணபதிதுணை.

முப்பத்தோராவது.

வன்னியால்விடநீங்குபடலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே,விநாயகமூர்த்தி வன்னிவிருக்கத்தினடி யில்வீற்றிருக்கின்றவரலாற்றினையும், அவ்வன்னிவிநாயகருக்கு விண்டுவி நாகரென்றும் வாமனவிநாயகரென்றுந் திருநாமமுண்டானதையுஞ்சொன் னோம்,இப்பால் அவ்வன்னியால்விடநீங்கியவற்புதத்தைச்சொல்லுவோங் கேட்பீராக. தேவேந்திரன்பின்னுஞ் சூரசேனமகாராஜனை நோக்கி, அரச னே-பிரமதேவன் பிதிர்தேவனுக்குமற்றொருகதையுஞ் சொல்வதாயினன். அதாவது-முன்னொருகாலத்தில்,சகலதேவர்களுங் கொண்டாடத்தக்ககை லையங்கிரியில்,நவரத்நமயமாயிருக்கின்றதிருவோலக்கமண்டபத்தில்,திரிசூ லபாணியராகியுங் கங்காசடாதர மூர்த்தியாகியு மிராநின்ற சிவபெருமானா னவர் கொலுவீற்றிருக்கின்ற போது, பர்வதராஜன் புத்திரியாகிய உமா தேவியார்அவரைத்தீக்கதண்டன்செய்து,சுவாமி-கணேசமூர்த்திக்குஎல் லாப்பத்திரங்களினும் வன்னிப்பத்திரத்தில் அதிகவிழைவுண்டாகி யிருப் பதற்குக்காரணம்யாதோ, அதனையடியாட்குத் தேவரீர் திருவாய்மலர்ந்த ருளவேண்டுமென்றுவிண்ணப்பஞ்செய்துகொண்டனர். அதற்குப்பரமன்

திருமைசுரந்து, பெண்ணே- விண்ணுலகத்தினருமதிக்கத்தக்கமண்ணுலக த்தில்,எண்ணற்றதருமங்களையுந் தானங்களையுமிடைவிடாதியற்றி,வறியார் களுக்கெல்லாம் வரையாதுகொடுத்துப், பகையாயினரையும் பணிப்பிக்க வல்ல பராக்கிரமத்தோடு, சகலநற்குணங்களினுஞ் சிறந்தவனாகிய பிரிய விரதனென்னும் ஓர் அரசனிருந்தான். அவனுக்கு இரண்டுமனைவியரிரு ந்தனர்.அவருள்-முன்னர் விவாகஞ்செய்யப்பட்டவளைக்கீர்த்தியென்றும், பின்னர்விவாகஞ்செய்யப்பட்டவளைப்பிரபையென்றுஞ்சொல்லுவார்கள். மேற்கூறிய பிரியவிரதனென்னும் அரசன், இளையாளாகிய பிரபையென் பவளிடத்திற்பிரியம்வைத்து, அவளிடத்திற்றானே கலவி இன்பங்களை யனுபவித்து, அவளுக்கே எல்லாச்சிறப்புகளையுங்கொடுத்துவந்தனன்.அவ னவ்வாறிருந்தபோதினும், மூத்தாளாகிய கீர்த்தியென்பவள்சிறிதேனும் மனவருத்தங்கொள்ளாது, கற்பையே கலனாகமதித்துத், தனதுசணவனு க்குரியபணிகளில் தினையளவுங் குறைவில்லாதபடி நடாத்திவந்தனள். இப்பால் பிரியவிரதன் இளையாளைநாளுக்குநாள் நூதனவிழைவோடும் பு ணர்ந்துவருநாளையில், அவள்கருப்பத்திற் கருவுண்டாகிப், பத்தாந்திங்க ளில் ஓராண்பிள்ளையைப்பயந்தனள். பின்னர் அப்பிள்ளைபதுமநாபனெ ன்னும் பெயரைவகித்துப் பருவமுற்றகாலத்தில், பாஞ்சாலனென்கின்ற ஓரரசன், இலக்குமிபோன்ற தனதுகுமாரத்தியைச் சகலவிதசிறப்போ டும் அவனுக்குவிவாகஞ்செய்து கொடுத்தனன். இத்தன்மைத்தான பெ ருமிதத்தினல், இளையாள் தனது மூத்தாளைக் கிருமியினுங் கீழ்ப்பட்ட வளாகமதித்தொழுக, ஓர்நாள் கற்புக்கயிற்றாற்கட்டுண்ட கீர்த்தியானவ ள் தனது காதலனுக்குப்பணிசெய்யவேண்டினவளாய், அவன் இளையா ளோடுங்கூடி யிருக்குமிடத்திற்சென்றனள்.அதைஇளையாள்நோக்கி, ஞெ ரேலென்றெழுந்து, இங்கேன்வந்தனையென்று அவளை எட்டியுதைத்தன ள். அதனை அவ்வரசன்கண்டுங் காணுதவனைப்போலவிருந்தனன். பின் னர் இளையாள் தன்னைக்காலாலுதைத்ததையும்,அவளிடத்துவைத்தமோ கத்தினல்தனதுகாதலன் என்னகாரணமென்றுவிசாரியாதுசத்துருவைப் போலவிருந்ததையும், கீர்த்தியென்பவள் நினைந்து நினைந்து,மனநொந்து அவ்விடத்தினின்றுநீங்கி, இனிச்சரீரத்தை வாட்டியேனும், விடத்தையு ண்டேனும்,வரையுருண்டேனும், குளத்தில்வீழ்ந்தேனும் உயிரைத்தொ லைத்து, நமதுடலையொழித்துக் கொள்வோமென்றுயோசித்து, நினைக்குந் தோறும் உள்ளத்தினின்று மெழுகின்றவெப்பமானது சற்று நீங்காமை யால் மனம்புழுங்கி, கண்களில்நீர்த்தாரைகளைச்சொரிந்து, சந்திரபிம்பம் போன்ற தனதுமுகாரவிந்தத்தினுடைய ஒளியெல்லாம்மழுங்கும்படியா ன கவலையோடு வெளிப்படுவதாயினள். அத்தருணத்தில்- அவளது நற் றவப்பயனென்றுசொல்லும்படி மிக்கதெய்வத்தன்மையையுடைய ஓர் பு ரோகிதன்யாசிக்கவந்து, அப்போது அவள்கொண்ட மனக்கவலைகளை மு கக்குறிப்பினலறிந்து, பின்னர் அவளால்யாவையுந்தெரிந்துகொண்டு, அ ம்மணி- உனதுமனக்குறையை இன்றுடனொழித்துவிடு, உனக்கு எல்லா நன்மைகளுங்கிடைக்குமாறு எனதையனாகிய கணேசமூர்த்தியை வினை வில்மெய்ப்பத்தியோடும் பூசனைசெய்யக்கடவை, அதனல்-நின்பதியாகி யபிரியவிரதன் நினதுமாற்றாள்வசம் எவ்வாறிருக்கின்றானோ, அவ்வாறே

ன்வசமாகுவனென்றுசொல்லி, அவளையருச்சிக்கு முறைமையையும் போதித்துச்சென்றனன். இப்பால் கீர்த்தியானவள் மனக்கவலைகளையொழித்து, விதிப்படிஸ்நானஞ்செய்து, தனதுபூசனைக்குவேண்டிய திரவியங்களைக்கொண்டுவருமாறு பாங்கியருக்குக்கட்டளையிட்டு, அவ்வாறேஅவர்கள் கொணர்ந்துவந்த திருமஞ்சனமுதலிய திரவியங்களைக்கொண்டு, முன்னர் பிரமனுதியர்களாற் பூசிக்கப்பெற்று மந்தாரவிருக்கநீழலில் வீற்றிருக்கின்ற விநாயகமூர்த்தியைப் பிரதிதினம் அறுகைக்கொண்டுபூசித்துவருகையில், ஓர்நாள்-அவ்வறுகு எங்கணுமகப்படாமற்போக,அதனாற்பாங்கியர் இதற்கென்னசெய்வோமென்றுதிகைத்து,தமக்கெதிரிலஓர்வன்னிவிருக்கமிருப்பக்கண்டு, காலதாமசமாகாதபடி அதனிலையைப்பறித்துக்கொண்டுபோய், கீர்த்தியினிடத்திற்சென்று, எமதிறைவியே- இத்தினம் எங்கும் அறுகு அகப்படவில்லை, அதற்குப்பதிலாக வனனிப்பத்திரங் கொண்டுவந்தோம், அஃது அருச்சனைக்கு உதவும் உதவாதென்பதையறிந்திலேம், ஆயினும் அதனைக்கொண்டே இத்தினத்தில் பூசனைசெய்து நிறைவேற்றவேண்டுமென்றுசொல்லினர். அதனைக்கீர்த்திகேட்டலும் மனம்வருந்தி, அறுகைக்கொண்டருச்சிக்குமுறைமை இன்றொழிந்ததேயென்றுதுயருற்று, அவ்வன்னிப்பத்திரத்தைக்கொண்டே அத்தினங் கணேசமூர்த்திக்கு அருச்சனைபுரிந்தனள். இவ்வாறு பூசனைநிறைவேறியும், அறுகாலருச்சனைசெய்யாத குறைநீங்குமாறு உணவினையொழித்திருந்தனள். அன்றையவிடியற்காலத்தில், அவள்கனவின்கண் ஒற்றைக்கோட்டினையுடைய யானைமுகக்கடவுளெழுந்தருளி, தமதுபொன்போன்ற சடாம்குடத்தில் அவளருச்சித்தவன்னிப்பத்திரங்களெல்லாந் தோன்றும்படி எதிர்நின்று, பெண்ணே- நீ வன்னியாற்செய்த அருச்சனையைநாமேற்றுக்கொண்டனம், அஃதுநமதுசடைமீதிருக்கின்றதுபார், இனி அறுகு அகப்படாமையினாலுனக்குண்டான மனக்கவலையை யொழித்துவிடு, நாம் உனதுபரிசுத்தமானபூசனைக்கு உவந்துவந்தோம்,உனக்குவேண்டியவரங்களைக்கேள் தருகின்றேமென்று திருவாய்மலர்ந்தருள, கற்பிற்சிறந்த கீர்த்தியானவள் அவரைக்கண்டவுடன் நாணமுற்று, வாய்திறவாது, தீர்க்கதெண்டன்செய்தெழுந்து,ஒருதூணின்பக்கமாக ஒதுங்கிநின்றனள்.அவளொழுக்கத்தினை விநாயகமூர்த்திகண்டு, அவள்கொண்ட எண்ணங்களெல்லாநிறைவேறுமாறு தாமேவரங்கொடுப்பதற்கிசைந்து, பெண்ணே- நினதுநாயகன் இந்நாண்முதல்நின்னிடத்தில்மிகுந்தஅன்புவைத்திருப்பன்,உனதுமாற்றாட்கு நோய்கள்வந்து நோகச்செய்யும், ஓர் வருடத்திற்குள்ளாக நின்வயிற்றிற்புத்திரனுண்டாவன், அவனுக்குக் கிப்பிரப்பிரசாதனென்று பெயரிடக்கடவை, உனதுமாற்றாள் அவனுக்குநான்காம்வயதில் போசனத்தில் விடங்கலந்திடுவள், அதனாலவன்மூர்ச்சையடைந்து உடனேகிருச்சமதருடைய சேவையினால் அதனையொழிகுவன்,என்று இவ்வாறுதிருவாய்மலர்ந்து, தமது மெய்யடியாருடைய மனக்கோயிலிற்சென்று வாசமாயினர். உடனே கீர்த்தியானவள் கண்விழித்து, தனதுகனவின்கண் விளைந்தவைகளை நன்றாய்க்கவனித்து, எல்லாக்கவலைகளையு மொழித்து, மனமகிழ்ச்சிகொண்டு,பொழுதுவிடிந்தவுடன்காலைக்கடன்களை முடித்துப் பாங்கியர் அன்போடுகொணர்ந்துவந்த சந்தனம்புட்பமாதிகளால் விநா

யகமூர்த்தியைப்பூசித்து, சிவம்- சத்தி- விண்டு- கதிர்- கணேசர்- என்று வேதங்களாற்சொல்லப்பட்டிருக்கின்ற கடவுள்யாதோ, அதுவே நமதுகனவின்கணெழுந்தருளிய தென்றுமதித்து, ஓ சர்வபுவனுதாரஸ்வரூபியாகிய விநாயகமூர்த்தியே- அளவிடற்கரிய அகிலங்களுந் தேவரீரோ, அதன்காரணங்களுந்தேவரீரோ, சகலதத்துவங்களுந்தேவரீரோ, அடியாளேயாட்கொள்ளவந்தசுவாமியுந் தேவரீரோ,எனக்குத்தாய்தந்தைமுதலிய யாவருந்தேவரீரோ, என்று மிக்கஉள்ளன்பினேடும் அனந்தமுறைதோத்திரஞ்செய்து, யதாப்பிரகாரந் தனதிருக்கையைச்சேர்ந்து வாழ்வுற்றிருக்குநாளையில், கணேசமூர்த்தியினுடைய திருவருளினல் அவள்மாற்ருளாகிய பிரபையென்பவட்கு வெப்பநோயுண்டாகி, அதன்மூலமாய் அளவற்ற வியாதிகள்வந்து உபத்திரவஞ்செய்ய, அதனலவள் தனதழகனைத்துமிழந்தவளாயினள். இடைவிடாதுகணேசமூர்த்தியைப்பூசனைசெய்யுமகிமையால், கிர்த்தியென்பவள்மிக்க பேரழகினையுடையவளாயினள். பின்னர் பிரியவிரதன் இளையாளிடத்தில் வெறுப்புற்று, இலக்குமியையொத்தமூத்தாளிடத்தில்விருப்புற்றிருக்க, உடனே அவள் வயிற்றிற்கருவுண்டாகி அதுமுதல் ஓராண்டினுள்புத்திரனுற்பவித்தனன். அதனல்பிரியவிரதனுங் கீர்த்தியும்பெருமகிழ்ச்சியையடைந்து,வேதபாரகராகியபிராமணர்களைக்கூவி, அவர்கட்கு ஆடையாபரணமுதலிய திரவியங்களைத்தானங்கொடுத்து,அப்புதல்வனுக்குக்கிப்பிரப்பிரசாதனென்றுநாமகரணஞ்செய்தனர் அவனும்நாளுக்குநாள்சந்திரனைப்போலத்தின மொருமேனியாகவளர்ந்துவந்தனன்.இவனிவ்வாறு வளர்ந்துவருஞ்சிர்த்தியைப்பிரபையென்பவள்கண்டு, மிகுந்தபொருமைகொண்டு, இவன்சீவித்திருக்கின் நமதுகுமாரனுக்குப்பட்டமில்லாமற்போமே யென்னுநினைப்போடு, அவனுக்குநான்காதுவயதாகுங்காலத்தில் போசனத்தில் விடங்கலந்துகொடுத்தனள். உடனேவிடமானதுதலைக்கேறலும், அவ்விளமைப்புத்திரன் அதனைச்சகிக்கமாட்டாதவனுய்ப்பூமியில்வீழ்ந்து சோபமாயினன். அதனை அவன்றந்தையாகிய பிரியவிரதன்கண்டு, நடுநடுங்கி, மணிமந்திரஅவுடதாதிகளாற் பலவித பரிகாரங்களைச்செய்துவந்தும், அதுதீராமையை அவன்தாயாகிய சீர்த்தியென்பவள்கண்டு, முன்னர்தனக்கு விநாயகமூர்த்தி கட்டளையிட்டிருப்பதை நினைத்து, நெஞ்சமே-நமதருச்சனையைஅன்போடுமேற்றருளிய விநாயகமூர்த்தியிருக்கின்றனர், அவர்திருவாய்மலர்ந்த கிருச்சமத முனிவருமிருக்கின்ருர், நீயேன் வீணிற்கவலையுற்றழிகின்றனையென்று, தனது மனதைத்தானே தேற்றிக், கீழே சோபித்துவீழ்ந்திருக்கின்ற மைந்தனையெடுத்துக்கொண்டு, கிருச்சமதமுனிவருடைய ஆசிரமத்தைநோக்கிச்செல்வதாயினள். அவ்வாறு செல்கின்றபோது, சோபத்தோடு மிருந்தமைந்தன்சிறிதும்உயிரின்றி நடுவழியில்இறந்துபோயிருக்கின்றமையைக்கண்டு மார்பு- நாசி- கை- கால்- முதலியவிடங்களில்தனதுகரத்தைவைத்து,முத்தினைப்போன்ற அவன்பற்கள்கரிந்துகிடக்கின்றமையையும்,கண்கள்பஞ்சிட்டிருக்கின்றமையையும் பார்த்து,ஒன்னார்நகையையும்உற்றார்நகையையும்ஒழிவித்தமகனே, அடாஎனதுகண்மணியே,இளமைபொருந்திய ஆண்சிங்கத்தையொத்த குமாரனே,நின்னல்மும்மைப்பயனும்பெறலாமென்றெண்ணியிருந்தஎன்னை ஆருத்துயரிலழுந்தவிட்டிறந்தனையே, மாற்ருந்தாயே

..ற்றுமென்கிற வாக்கியத்தைத்தெளியவைத்தனையே, அடாஎனதுதபோ
..லத்தினால்வந்த அருமருந்தே, என்னையும் எனது நெஞ்சத்தையும் நிலை
..லையச்செய்து நீற்றுகின்றனையே, உன்னைஎவ்வாறு யான் கொண்டுபோ
.. இனிநீற்றவல்லேன், ஐயோ- உன்னை விடமிட்டுக்கொனறபாதகிநீ இற
..கக்கண்டு ஆனந்தங்கண்ணீர்விடவொட்டாமலா நீஇக்காட்டின் கண்வந்
.. மடிந்துபோயினை, அடாஎனது அருமைச்செல்வனே- என் றிவ்வாறு
..யுக்காட்டிலுள்ள மிருகங்கள்பறவைகள் விருக்ஷங்கள் முதலானவைகளு
.. கண்ணீர்விட்டிறங்கும்படியாகப் பிரலாபித்தனள். அதற்கு எனதன்னை
..கொப்பானவராகிய கணேசமூர்த்திக்குத் திருவுளமிரங்கியதுபோல, அ
..வையனைத்தையுங் கிருச்சமதமுனிவர் தமதுஞானநோக்கினு லறிந்துகொ
..ண்டு,மனதிரங்கிப்,பொள்ளென்றுதமதாசிரமத்தைவிட்டெழுந்து, அவள்
..ருந்துகின்ற விடத்தையடைந்து, இறந்தமைந்தனை மடியின் மீதுவைத்
.. எதிரில்வருவோருந் தெரியாமல் மதிமயங்கியழுதுகொண்டிருக்கின்ற
..ர்த்தியைக் கூவினர். உடனே தனது புதல்வனைப் பூமியில்வளர்த்தி,மிக்
..ருக்கத்தினோடும் அம்முனிபுங்கவருடைய திருவடிகளைப்பணிந்தனள்.க
..தற்கம்முனிவர் கிருபைகூர்ந்து, அம்மணி-நீயார், நீவிம்மிவிம்மியழுது
..காண்டிருக்கின்ற காரணமென்ன அதனைச்சொல்லென்றுவினவலும், கி
..த்தியானவள் சிறிதுமனந்தேறி, சுவாமி- அடியாள் பிரியவிரதனென்னு
..ரசன்மனைவி, இப்புத்திரனே அடியாட்கு அறியதவப் பேற்றினு லுண்
..டானவன், இவன் எனது மாற்றாளூட்டியவிடத்தினால் உணர் வழிந்தன
..ன், அடியாட்கு விநாயகமூர்த்தி புத்திரவரந்தந்தபோதே இவன்நான்காம்
..யதில் விட்மூட்டப்படுவனென்றும், அது கிருச்சமத முனிவராற் றீரு
..மென்றுந் திருவாய்மலர்ந்திருக்கின்றனர், அத்திருவருளைத் தலைமேற்கொ
..ண்டு, உணர்வழிந்திருக்கின்ற மைந்தனோடுந் தேவரீர் ஆசிரமத்தைநோ
..கி இவ்வனத்தைவழிக்கொண்டுவரும்போது,நடுவழியில் உயிருமிழந்தன
..ன். அதைக்காண்டலும், எனதுமனமானது கவலைக்கடலி னின்றுங் கரை
..யேறமாட்டாமையால், எமதாண்டவராகிய கணேசமூர்த்தியினுடைய தி
..ருவாக்கினையுமறந்து பிரலாபிப்பதாயினன், தேவர்களெல்லாமதிக்கத்தக்
.. பெருங்கீர்த்தியினைவாய்ந்த தேவரீரோ அடியாட்கிரங்கி வந்தமையால்,
..ஞ்சுண்டு நமன்கைவிலகப்பட்ட எனதுகுமாரனையெழுப்பி, எளியேனை
..யும் ஆட்கொண்டருளவேண்டுமென்றுபிரார்த்தித்து, மீட்டுந்தீர்க்கதெண்
..டன்செய்தனள். அதற்கு அக்கிருச்சமதமுனிவர் மனதிரங்கி, நீ இனி ஒ
..ன்றற்கும்அஞ்சலைஎன்றுஅபயஸ்தந்தந்து, இலக்குமியொத்தவளே-முன்
..னாள்வன்னிப்பத்திரத்தால்கணேசமூர்த்தியைப் பூசைசெய் திருக்கின்றனை
..யாதலால், அப்பூசையின்பயனைஉனதுபுத்திரன்கையிற்றத்தஞ்செய்யக் க
..டவையென்றனர். அதற்குக்கீர்த்திஇதுவோஎனக்கரிதென்றுசந்தோஷித்
..து, அவ்வாறேதான்செய்தபூசையின்பயனைஅவன்கரத்தில்தத்தஞ்செய்த
..னள்,உடனே அச்சிறுவன் உறங்கிவிழித்தவன்போலவெழுந்து, கிருச்சம
..தமுனிவருடையதிருவடிகளைச் சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, அவர்
..பேரருளைப் பூரணமாகப்பெற்று வாழ்ந்திருந்தனன். என்று சிவபிரான்உ
..மையவட்குச் சொன்னதாகப், பிதிர்தேவனுக்கு பிரமதேவன்சொல்லிய
..படி,தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச்சொன்னான்.

கணபதிதுணை.

முப்பத்திரண்டாவது.

வன்னிமந்தாரஉற்பத்திபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, கீர்த்தியென்பவள் விநாயகமூர்த்திக்கு வன்னிப் பத்திரத்தாலருச்சனை செய்ததும், அவ்வருச்சனைப்பயனால் விடமுண்டிறந்துபோன அவள்புதல்வனாகிய விப்பிரப்பிரசாத னுயிர்த்தெழுந்ததுஞ்சொன்னோம், இப்பால் அவ்வன்னியு மந்தாரமும் உற்பவித்த வரலாற்றினைச் சொல்லுவோம் கேட்பீராக. தேவேந்திரன்பின்னுஞ் சூரசேனமகாராசனைநோக்கி, அரசனே - சிவபிரான் உமையவட்கு மற்றொருகதையுஞ்சொன்னதாகப், பிதிர்தேவனுக்கு பிரமன் சொன்னதாவது, முற்கூறிய கீர்த்தியென்பவள் மீட்டுங் கிருச்சமதமுனிவரைப் பணிந்தெழுந்து, சுவாமி- வன்னிப்பத்திரத்தினுடைய மகத்துவந்தெரியாமலேயொருநாளதனைக்கொண்டு விநாயகமூர்த்தியையருச்சித்தேன், அதனால் விடமுண்டிறந்த எனதுமைந்தனெழுந்தானாயின், அதனதுபெருமையை யடியாட்கு விளம்பியருளவேண்டுமென்றுபிரார்த்தித்தனள். அதற்கம் முனிபுங்கவரிசைந்து, மலையிற்சிறந்தமாதவத்தோர்க்கும் எட்டுதற்கரியகணேசமூர்த்தியினுடைய திருவடிகளுக்கன்புவைத்திருக்கின்ற அரிவையே-யாவரேனும் ஒருக்கால்வன்னியென்று வாக்கினாற்கூறுவாராயின், அவ்வாக்கினால் அனந்தம்பிறவிகள்தோறுஞ் செய்துமுற்றிய அவர்கள் தீவினைகளெல்லாம் அழலிற்பட்டபஞ்சுபோலாகும்.அதனைநினைப்பாராயின்,மனத்தாற் செய்த பாவங்களெல்லா நிவிர்த்தியாகும். அதனை வலம்வந்தாலும், நேரிற் சென்றுதரிசித்தாலும், கைகளைக்கூப்பித் தொழுதாலும், காயத்தாற்செய்தபாவங்களெல்லாம் பாறிவிடும். பஞ்சாக்கினிமத்தியினின்று தவஞ்செய்வதனாலுண்டாகின்றபேறும், ஆடையாபரணாதிகளைத் தானஞ்செய்வதனால் அடைகின்றபேறும், விரதம் யாகம் முதலானவைகளைச் செய்வதனால் வருகின்றபேறும்,ஒருவன்னிப்பத்திரத்தாற்செய்தஅருச்சனையாலுண்டாகும் பயனுக்கொவ்வாது . அன்றியும்- இம்மையில் அளவற்ற போகங்களையோர்கணப்போதிலூட்டுவிக்கும். மறுமையில் விண்முதலாயினோருடைய பதவிகளிற் சேர்ப்பிக்கும். ஆணவ முதலிய மும்மலங்களையும் போக்கி மெய்ஞ்ஞானபோகத்தையளித்து, கணேசமூர்த்தியினுடைய உலகத்தில் மேவச்செய்யும். ஒருகோடிகற்பகாலவரையிற் சொன்னாலு முடிவுறாதசிறப்பினைவாய்ந்த அவ்வன்னி மான்மியத்தைத், தேவேந்திரனுக்கு நா தமுனிவர் உபதேசித்திருக்கின்றனர். அதனை உனக்குச் சொல்லுவோங் கேட்பாயாக. முன்னொருகாலத்தில், நந்திகோத்திர னென்னும் ஒ முனிபுங்கவரிருந்தார். அவருக்கு வேதமாதிகளையோதி யுணர்ந்தவராகியும், எல்லாமேன்மைகளு மியல்பாயுள்ளவராகியுமிராநின்ற, அவுரவனென்னும் ஒருபுத்திரரிருந்தனர். இவருக்கு சுமேதையென்னும் பெயரினையுடைய ஒருமனைவியிருந்தனள். அவுரவமுனிவருஞ்சுமேதையுஞ் சுகித்து வாழ்வுற்றிருக்குநாளையில், இவர்கட்குச் சமியென்னும்பெயரினையுடை

ஓர் பெண்குழந்தையுண்டாகி, அதற்குமணப்பருவமுண்டாகலும், தாய்தந்தையர் அப்பெண்ணிற்கேற்ற புருடனைநாடிக்கொண்டிருந்தனர். அக்காலத்தில்-தவுமியமுனிவர்புத்திரனாகியும், மகாதவசிரேஷடர்களுக்குள் மடங்கலேறொத்தவனாகியும், சவுனகமுனிவனையடுத்து அவரேவல் செய்துகொண்டு தவம்புரிபவனாகியும், மந்தாரனென்னும் இயற்பெயரையுடைய ஓர்முனிபுத்திரனிருந்தான். அவனைமேற்கூறிய அவுரவமுனிவரும் அவர்பத்தினியுங்கண்டு,இவனேநமது தவச்செல்விக்கேற்ற மணாளனென்று தீர்மானித்துப், பிரமம்-பிரசாபத்தியம்-ஆரிடம்-தெய்வம்- காந்தருவம்- அசுரம்-இராக்கதம்-பைசாசம்-என்னும் ¶ எண்வகைமணத்தினுஞ்சிறந்ததன்மமணத்தினால் அவனுக்குவிதிப்படிவிவாகஞ்செய்துகொடுத்தார்கள். பின்னர் அம்மந்தாரனென்பவன் அப்பெண்ணைத்தாய்வீட்டிற்றானே யிருத்தித், தான்முன்போலவே சவுனகமுனிவனையடைந்து,அவரேவல்செய்துகொண்டுதவத்திலிருந்தனன். இவ்வாறு சின்னாளாகலும்,மந்தாரன்அம்முனிவரிடத்தில் விடைபெற்று அவுரவராசிரமத்தையடைய, அப்போதுசமியெனபவள்புட்பவதியாகியிருந்தமையால்,உடனேஅவ்விருவருக்குஞ்சாந்திமுகூர்த்தஞ்செய்தார்கள். பின்னர் மந்தாரன்மனைவியை யழைத்துக்கொண்டு, தனதுதந்தையாதியர் வாழ்கின்ற ஆசிரமத்தையடையுமாறுவனத்திற்செல்லுகையில், கணேசமூர்த்தியினுடைய சாரூபத்தைப்பெற்றிருக்கின்ற புருசுண்டி முனிவரெதிரேவந்தனர். அப்போது, இரண்டுபேருந்தமது தொலையாத்தொல்வினை தொடருங்காலநேரிட்டவர்களாய், அவரது துதிக்கரத்தையுந் தொந்தியையும்பார்த்துநகைத்தனர். அதனை அப்புருசுண்டிமுனிவர்கண்டு,அறிவீனர்களே-என்னைப்பார்த்து எளனமாய்நகைத்தீராதலால், நீங்கள் இவ்வுலகத்திலே ஓருயிருக்கும் உதவியற்ற மரங்களாகக்கடவீர்களென்று சபித்தனர். அதைக்கேட்டசமியும் மந்தாரனு நடுக்குற்று, உடனே- அவரது பாதபதுமங்களில் சாஷடாங்கமாகவிழுந்து -சுவாமி - அடியேங்கள் சுத்தசாட்குண்ணிய மூர்த்தியாகியதேவரீர் மகத்துவம்தெரியாமல் அறிவின்மையாற்செய்த பிழையினைப்பொறுத்தருளி, அடியேங்கள் அசசாபத்தினின்றுநீங்கிக் கிருதார்த்தர்க ளாகும்படி தேவரீர் கிருபைசெய்யவேண்டுமென்று பலமுறைஇரந்துதுதிசெய்தார்கள். அதற்கு அப்புருசுண்டி சிறிதிரங்கி, நீங்கள் எனது துதிக்கரத்தையுந் தொந்தியையும்பார்த்து மெய்குலுங்க நகைத்தீராதலால்,இத்துதிக்கரத்தையுந்

¶ இவற்றுள்- பிரமசாரிக்குக் கன்னியைத்தீ முன்னர்க்கொடுப்பது பிமமணம். தலைமகனினத்தார் வேண்டத்தலைமகளினத்தாருட்பட்டு அவளைத்தீமுன்னர்க்கொடுப்பது, பிரசாபத்தியமணம். ஒன்றிரண்டுபசுவும் எருதும்வாங்கிக்கொண்டு கன்னியைத்தீ முன்னர்க்கொடுப்பது, ஆரிடமணம். வேள்வியால்வந்த கன்னியைத்தீமுன்னர்க்கொடுப்பது, தெய்வமணம் கொடுப்பாருங்கேட்பாருமின்றிஇருவருந்தனியிடத்தெதிர்ப்பட்டுத்தாமே கூடுவது, காந்தருவமணம். பெண்ணுக்குப் பொன்சூட்டிச் சுற்றத்தாருக்குப் பொன்வேண்டுவன கொடுத்துக்கொள்வது, அசுரமணம். பெண்ணும் பெண்ணினத்தாரும் உடம்படாமல் வலிதிற்கொள்வது,இராக்கதமணம். துயின்றாளைச்சென்றுகூடுவது, பைசாசமணம்.

தொந்தியையுமுடைய விநாயகப்பெருமான் உம்மிடத்தில் எழுந்தருளு வர், அப்போது நீங்கள் சிறப்பெய்தி, இம்மரவுருவம்நீங்காமலே அவரு க்குரிமையாவீர்கள், அதுமுதல்உலகமுள்ளளவும் உங்களையாவரும்பணி ந்துபோற்றுவார்கள், முடிவில் அந்தமில்லாதமுத்தியையும்பெறுவீர்கள், ஆதலால்- நீங்களிவ்வனத்திற்றானே வசித்திருங்களென்றுசொல்லித் தம தாசிரமத்திற்குச்சென்றனர். இப்பால் மந்தாரனென்பவன் மந்தாரமரமா கவும், சமியென்பவள் வன்னிமரமாகவுமிருக்கச், சிலநாள் சென்றபின்பு, சவுனகமுனிவர் மந்தாரனை நினைத்துக்கொண்டு, மனைவியை யழைத்து வருகின்றேனென்று சென்றவன் இதுகாறும் வரக்காணோமே, அவனைப் போலகுணத்தில் விசேடப்பட்டவர்களும், நமதுபணிவிடைகளிற் பெரி யவுரிமைவைத்திருப்பவர்களும் ஒருவருமில்லையே, யாதோவோரிடையூ றின்றி இத்தனைநாள்நம்மைவிட்டிரானேயென்று மனம்வருந்தி, எல்லாவ ற்றையுந் தூதராலறிந்துகொள்வோமென்றுநினைத்து அவர்களைவிடுத்தனர் அவர்களும் அவ்வாறே மனோவேகத்தினும் விரைவாகச்சென்று, அவுரவ ராசிரமத்தினையடைந்து, அவரதுதிருவடிகளைப்பணிந்தெழுந்து, சுவாமி- இங்குவந்ததமதுமருகராகிய மந்தாரமுனிவர்எங்குஎவ்வாறுசென்றனரெ ன்றுவினவ, அதற்கு அவர்தமதுமனைவியையழைத்துக்கொண்டுஅப்போ தேபோய்விட்டாரே, இற்றை நாள்வரையில் அவிடத்திற்கு வரவில்லையா, இன்னு நன்றாய்த்தேடிப்பாருங்களென்று, தமதுபெண்ணின்மீதுவைத் திருக்கின்ற பெருங்காதலால் தாமுஞ்சிலதூதுவரைக்கூவி ஏவினர். அவர் களும்வனங்களெங்குந்தேடிச் சென்றுங் காணாதவர்களாயினர். அதனைம ற்றையதூதர்கள் அறிந்துகொண்டு,உடனே அவ்விடத்தினின்றுநீங்கிச்,ச வுனகமுனிவரையடுத்து, யாவையுமவருக்கறிவித்தார்கள். அதனால் காரு ண்ணியமூர்த்தியாகிய அம்முனிவர்மனம்வருந்தி, சிறிதுநேரம் யோகத்தி லிருந்து,அவர்கள் புருசுண்டிமுனிவரையவமதித்ததும், அவர்சாபத்தால் அவர்கள்மரங்களானதும், பின்பு அம்முனிவர் அவர்கள்செய்த வந்தனை வழிபாட்டிற்கிரங்கி, உங்கட்குயானைமுகக்கடவுள் பிரத்தியக்ஷமாகுங்கா லத்தில் எல்லாநன்மைகளுமுண்டாகுமென்று திருவாய்மலர்ந்ததுந் தெ ரிந்துகொண்டனர். அவுரவமுனிவரும் அவ்வாறே யறிந்துகொண்டனர். மந்தாரனுடையதந்தையாகிய தவுமியமுனிவரும் அவ்வாறேயறிந்துகொ ண்டு,தமதுபுதல்வனுக்குநேர்ந்தவருத்தத்தைச்சகிக்கமாட்டாதுஇறந்தன ர்.இப்பால்சவுனகமுனிவர்தமதுஅடியவனாகியமந்தாரனைக்குறித்தும், அ வுரவமுனிவர் தமதுகுமாரத்தியாகிய சமியைக்குறித்தும், கணேசமூர்த் தியைமனதிற்றியானித்து,சடக்கரமந்திரத்தைச் செபித்துக்கொண்டு,பன் னிரண்டுவருடம்வரையிற்றவத்திலிருந்தார்கள்.பின்னர்கணேசமூர்த்திக்கு மனதிரங்கி,யானைமுகமும்பத்துக்கைகளும் விளங்கும்படிசிங்கவாகனமூர் ந்து, சவுனகமுனிவருக்கெதிரில்பிரத்தியக்ஷமாயினர். உடனே-சவுனகமு னிவரெழுந்து,கர்த்தன்திருவடித்தாமரைகளிற்சாஷ்டாங்கமாகப்பணிந்து. அனந்தமுறைதோத்திரஞ்செய்தனர். அதற்குக்கணேசமூர்த்திகிருபைசுர ந்து, அம்முனிவரது நெகிழ்ந்தவுள்ளத்தையும் நீர்பெருகிவருகின்றகண்க ளையும்பார்த்துசந்தோஷித்து,அன்பனே- உனக்குவேண்டியவரங்களைக்கே ள் தருகின்றோமென்று திருவாய்மலர்தலும், முனிபுங்கவர் மீட்டுந்தொழு

தெழுந்து,ஐயனே- ஒழுக்கத்திற்சிறந்தமந்தாரனென்பவனும்,அவன்பத்தினியாகியசமியென்பவளும், புருசுண்டிமுனிவருடையசாபத்தினுற்றங்கள்பெயராற்றுனேமரங்களாகியிருக்கின்றனர்.அவர்கள்அவிவேகத்தாற்செய்த பிழையினைப்பொறுத்தருளி, அம்மரவுருவினின்று மீட்டும் மானிடவுருவில்வருமாறு தேவரீர்கிருபை புரியவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டனர். அதற்குவிநாயகமூர்த்தி புன்னகைகொண்டு, தவசீலனே - நமதுசாபநம்மாற்றீரினும், நமது பத்தர்களிட்டசாப நம்மாற்றீர்வதரிது. மேலும்-அஃதுதவத்திற்சிறந்த புருசுண்டியிட்டசாபமாதலால், அதைஎல்லாத்தேவர்களும் ஒருமிக்கக்கூடிவிலக்கினும் விலகாது.ஆயினும்-நீ நம்மிடத்தில் அன்புசெலுத்தினமையால், அவர்கள் அம்மரமாகவேயிருந்து எல்லாச்சிறப்புகளையு மெய்துமாறும், யாவரும்வணங்குமாறும், யாம் அவர்கள் நீழலில்வசித்திருக்கின்றேம். தருமமுதலியநான்குபுருஷார்த்தங்களை யடையவேண்டினரும், தீவினைவயத்தால்வருகின்ற இடையூறுமுதலியதுன்பங்களை நீக்கிக்கொள்ளவேண்டினரும்,அம்மரங்களினது நீழலில்வந்துநம்மைவழிபடக்கடவர்கள். பத்தியில்லாதவர்களாயினும், பாக்கியமில்லாதவர்களாயினும், உத்தமகுலத்திலுதிக்காதவர்களாயினும், ஊக்கமுதலியகுணமில்லாதவர்களாயினும், அவ்வன்னி விருக்கத்தினுடையபத்திரத்தினுலும், மந்தாரவிருக்கத்தினுடைய புட்பத்தினுலும், நம்மையருச்சிப்பார்களாயின், அவர்கள்வேண்டியவரங்களில் ஒன்றொழியாமற்றருவோம். இதனைநீ அறிந்துகொள்ளக்கடவையென்று திருவாய்மலர்ந்து, ஒருகொம்பும் இரண்டுசெவியும் மூன்றுகண்ணும் நான்குபுயமு முடையவராய், அம்மரங்களினிழலிலெழுந்தருளினர். அதுமுதல் சவுனகர்முதலிய எல்லாமுனிவர்களும் அவ்விருக்கங்களையடுத்து, அவைகளின் பத்திரத்தினுலும் புட்பத்தினுலும் விநாயகமூர்த்தியையருச்சித்துவந்தனர். இப்பால் சமியென்பவள் தாயாகிய சுமேதையானவள், வன்னிவிருக்கத்திலெழுந்தருளிய கணேசமூர்த்தியைப்பூசித்து, ஆணவப்பகையையடியோடுகளைந்து, அவரதுலோகத்திற்சேர்ந்து வாழ்வுற்றிருந்தனள். அவள்தந்தையாகிய அவுரவமுனிவரானவர்,அவள்மீது அதிகவிழைவுள்ளவராதலால், உடனே- தமதுயோகத்தினுல் பிராணவாயுவைக்கும்பித்து, சூக்ஷமசரீரத்தால் அவ்வன்னியின் கருப்பத்திற்புகுந்து, விண்ணுலகத்தார்க்கெல்லாம் அவிவாங்கியளிக்குந்தொழிலில் அகலாதிருந்தனர். அதுமுதல் அவளைச்சமிகருப்பமென்று சான்றேர்களழைத்துவந்தனர். ஆதலால் விநாயகமூர்த்திக்குரிய அறுகு- மந்தாரை- வன்னி- என்னும் இவற்றின் பெருமைகள் என்போலிகளால் அளவிட்டுரைக்கற்பாலனவன்று. அறுகில்லாக்குறையை மந்தாரமலர்நிரப்புவதாலும், அறுகும்மந்தாரமும் இல்லாக்குறையைவன்னிப்பத்திரம் நிரப்புவதாலும், யாகாக்கினியானதுஎப்போதும் இவ்வன்னியில் வாசமாயிருத்தலாலும்,உலகின்கணுள்ளஎல்லாப்பத்திரங்களினும் வன்னிப்பத்திரம்விசேடமாயது. அன்றியும்-அதனைச்சிவபிரானும் ஓர்கூறுகத்தமதுசடாமகுடத்தில் அணிந்திருக்கின்றனர். என்று கீர்த்திக்குக்கிருச்சமதமுனிவர்சொன்னதாகச், சிவபிரான் உமையவட்குக்கூறியபடி, பிரமதேவன் பிதிர்தேவனுக்குச்சொல்லினன். அதை இந்திரன் சூரசேனமஹாராஜனுக்குச்சொன்னுன்.

கணபதிதுணை.

முப்பத்துமூன்றாவது.

வன்னியருச்சனைப்படலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே, விநாயகமூர்த்திக்குரியவன்னியும் மந்தாரமும் உற்பவித்தவரலாற்றினைச்சொன்னோம், இப்பால் அவ்வன்னியருச்சனையைச் சொல்லுவோங்கேட்பீராக. தேவேந்திரன் பின்னுஞ் சூரசேனமகாராசனைநோக்கி, அரசனே- கிருச்சமதமுனிவர் கீர்த்தியென்பவட்கு மற்றொருகதையுஞ்சொன்னதாகச், சிவபிரான் உமையவட்குத்திருவாய் மலர்ந்தருளியபடி, பிதிர்தேவனுக்குப் பிரமதேவன் சொல்லுவதாவது. முன்னொருகாலத்தில், பிரமனானவன் தனது பத்தினிமார்களிரண்டுபேருள்,சாவித்திரியைவீட்டிலிருத்திக்,காயத்திரியையழைத்துக்கொண்டு, சையவரைச்சாரலையடுத்து, அட்டபுயாசலங்களைவீசி ஆனந்தநிருத்தஞ்செய்கின்றசதாசிவமூர்த்தியைப்பாவித்து, தேவர்களெல்லாம்புடைசூழும்படியாக ஓர் சிறந்தவேள்வியைச்செய்வதாயினன்.அப்போது- பிள்ளைமதியையும் வெள்ளை யறுகையும் புனைந்தசடாமகுடத்தினையுடைய கணேசமூர்த்தியை வழிபடாமல் வேள்வியைச்செய்ய யத்தனித்தகுறைவால், சாவித்திரியானவள் தன்னைமாத்திரம் வீட்டிலிருத்திக் காயத்திரியோடுசென்று வேள்வியைச்செய்து வருவதைக்கேட்டு மனமழுங்கிக், சொல்வதற்கரிய வெகுளியோடும் யாகசாலையையடுத்துத்திருமால்,இந்திரன் முதலிய தேவர்களைக்கண்டு, எனது நாயகன் என்னையன்றிசெய்துவருகின்ற யாகத்திற்கு நீங்கள் யாவரும் உடம்பட்டிருந்தீர்கள், ஆதலால்- இங்கிமிடத்தில் நீங்கள் வெவ்வேறே சலவுருவாகக் கடவதென்று சபித்தனள்.உடனே அவளதுகோபசாப்த்தினால், திருமான்முதலிய யாவரும் வெவ்வேறே சலவடிவாகிச்,சுழிசுழித்து, அளவற்ற அலைகளைப்பரப்பி, யாகசாலைமுழுவதும் வெள்ளமாகிப்பரந்து, அங்குவைத்திருந்தஎல்லாப்பொருள்களையுந் தழுவியொழுகிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறுயாகத்திற்குவந்த திருமான்முதலியதலைவர்களெல்லாஞ் சலவடிவாய்ப்போனதை அவ்வவர்கள் மனைவியர்கேட்டும்மனங் கலங்கி,இலக்குமிமுதலியஎல்லாமாதர்களுஞ்சையவரைச்சாரலையடுத்து, பிரமனைக்கண்டு, ஆ- அ- நீர்செய்யுங்காரிய மிகநன்று மிகநன்று, நீர்யாகத்திற்குத் தீயைவளர்ப்பவர் போல உமதுபத்தினிக்குக் கோபத்தீயையுண்டாக்கி, எங்கள்தலைவர்கட்கெல்லாந் தண்ணீர்வடிவைக்கொடுத்து, எமது வயிற்றினுந் தீயைவளர்த்திக்கொதிக்கவிட்டீர், இனி அவர்கள் தண்ணீர்வடிவம் மாறுவதற்கு யாதுசொல்லுகின்றீரென்றார்கள். அதற்குப்பிரமன் ஒன்றுந்தோன்றாதவனாகி, அவர்கட்கு இனியவார்த்தைகளைக்கூறி, நீங்கள் சிறிது நேரமாத்திரம்பொறுத்திருங்கள், விரைவில் அதுமாறவேண்டிய முயற்சிகளைச்செய்து உங்கள் வருத்தத்தையெல்லாம் ஒழித்துவிடுகின்றேமென்று திடஞ்சொல்லி, உமாபரமேஸ்பரிமணாளராகிய சிவபிரானைமனதிலிருத்தி, அரியதவத்திலி

ருந்தனன். அத்தவத்திற்குச்சதுர்வேதங்களாலுங்காண்டற்கருமையராகி
ய சிவபெருமான்கிருபைசுரந்து, அவனெவ்வாறு தம்மைப்பாவித்தானே
அவ்வாறே அவனெதிரிற் பார்ப்பதிசமேதராயெழுந்தருளி, இடபவாகன
ருடராய்க் காக்ஷிகொடுத்தனர். உடனேபிரமனெழுந்து, யமனுயிரைவாட்
டிய அவரதுபாதபத்மங்களைப் பணிந்தெழுந்து, கற்பகமலராதிகளாலருச்
சனைசெய்து, சுவாமி- தேவர்கள் முதலியோரடைந்திருக்கின்ற தண்ணீர்
வடிவைமாற்றி யருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்குக்கர்த்தன் பு
ன்னகைகொண்டு, பிரமனே- கணேசமூர்த்தியினுடைய கோபந்தணியும்
படி அவரைப்பூசனைசெய்யக்கடவை, நீயாகஞ்செய்ய ஆரம்பித்தபோது
முதலில் அவரைப்பூசனைசெய்திருப்பையாயின், இவ்விதசாபம் யாவர்க்
குநேருறாது, உனது வேள்வியும் ஓரிடையூறுறாது, அவரைச்சிறிதும் ம
னத்தின்கணினைத்தனையில்லை, ஆதலால்- இவ்விதஆபத்துகள் வந்துநேர்
ந்தனவென்று திருவாய்மலர்ந்து, தமது திருவுருவைக் கரந்தருளினார். இ
ப்பால் பிரமன்கர்த்தனெழுந்தருளியதிசையைப்பலமுறைவணங்கித், தன
துமனக்கோட்டத்தினையொழித்துத், திருமான்முதலாயினோருடையபத்தி
னிகளைக்கூவி, உங்கள் தலைவர்கட்குண்டாகிய சாபம் ஒழியுங்கால நேரி
ட்டது, நீங்கள்யாவரும்விரைந்து கணேசமூர்த்தியை உள்ளன்போடும்பூ
சனைசெய்யக் கடவீர்களென்றுசெப்பினன். அதனைக்கேட்ட மாதர்களெ
ல்லாம் உய்ந்தோம் உய்ந்தோமென்று மகிழ்ச்சியுற்று, கருணை தேயத்தி
லே, மந்தாரமரத்தினீழலிலே, முன்னொருகாலத்தில் அரக்கர்குறும்பினை
யடக்குமாறு மகாவிஷ்ணுவினாற் றுபித்துப் பூசிக்கப்பெற்றிருக்கின்ற வக்
கிரதுண்டவிநாயகரையடுத்து, சிலபேர் பால்தயிர் முதலியவைகளைக்கொ
ண்டு அபிஷேகித்தார்கள். சிலபேர் பரிமளமிகுந்த புட்பங்களைக்கொண்
டு அருச்சித்தார்கள். சிலபேர் ஏகாக்ஷரமுதலியமந்திரங்களைச் செபித்தா
ர்கள். சிலபேர் வேதாகமமாதிகளாற்றுதித்தார்கள். சிலபேர் அட்டாங்க ப
ஞ்சாங்கத்துடன் பணிந்தார்கள். சிலபேர் ஆனந்தபரவசங்கொண்டுநடித்
தார்கள். இவ்வாறு யாவரும் ஒவ்வொருசெயல்களைக்கொண்டு, மந்தாரநீ
ழலில் வீற்றிருக்கின்ற கணேசமூர்த்திக்கு நெடுநாள்வரையில் அன்புசெ
ய்துவந்தும், தங்களெண்ண நிறைவேறாதவர்களாய்ப், பின்னர்யாவரும்ஒ
ருமிக்கக்கூடி, இதுகாறுங்கணேசமூர்த்தி நம்பாலெழுந்தருளவில்லையாத
லால், நாம் செய்துவருகின்றதவங்களில்யாதேனுங்குறை நேர்ந்ததோவெ
ன்றுமனங்கலங்கியிருக்கின்றசமயத்தில், (விநாயகமூர்த்தியை வன்னிப்ப
த்திரத்தால்பூசிக்கக்கடவீர்கள்.) என்றுஒருவாக்குஆகாயத்தின்கணுண்டா
யது. அதனை அம்மாதர்கள்கேட்டு, அவ்வாறே சிலநாள்வரையில் அருச்
சனைசெய்தார்கள். அதற்கு எமது ஆணவக்குறும்பைநீக்கி ஆட்கொள்ள
வல்ல விநாயகமூர்த்திக்குக் கிருபைசுரந்து, மூஷிகவாகனத்தின்மீது அவர்
களெதிரிற் பிரத்தியக்ஷமாயினர். உடனே யாவரும் ஆனந்தசாகரத்தி
ன்மூழ்கி, அனந்தமுறை சாஷ்டாங்கவந்தனஞ்செய்து துதித்தார்கள். பி
ன்னர் விநாயகக்கடவுள் அம்மாதர்கட்கெல்லாங் கிருபைசெய்து, அவர்க
ள் தலைவர்கட்கெல்லாஞ் சலவுருவினைமாற்றி, அவ்வவர்களுள்ளமே ஆல
யமாகக்கொண்டு வீற்றிருந்தனர். இப்பால் தேவர்களெல்லாம் மற்றொரு
மந்தார மரநீழலில் விநாயகமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து, குளிர்ச்சி

பொருந்திய வன்னிப்பத்திரத்தால் அருச்சனைபுரிந்து, அனந்தமுறைவே தாகமங்களாற்றுதிசெய்து, அம்மூர்த்திக்கு ஏரம்பவிநாயகனென்று திருநாமஞ்சாத்தித், தங்கடங்கள் பதிகளைச்சேர்ந்து வாழ்ந்திருந்தனர். தேவேந்திரன் தனதுசோலையிலிருக்கின்ற மந்தாரமரத்தடியில் விநாயகமூர்த்தியை ஸ்தாபித்துப் பூசித்தனன். ஏனையோருந்தங்கடங்கள் மனையில் மந்தாரவிருக்ஷத்தை உண்டாக்கி, அதனடியிற்கணேசமூர்த்தியைப் பிரதிட்டைசெய்துபூசித்தார்கள். பிரமதேவனுமிவ்வாறே மந்தாரநீழலில் கணேசமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து, பன்னிரண்டுவருடம் வரையில் வன்னிப்பத்திரத்தா லருச்சித்து, அவர்பெருங்கருணையால் சாவித்திரியினுடைய மனக்குறையைநீக்கிப், பின்னரவளையுங் கூடவைத்துக் கொண்டு முன்தொடங்கியயாகத்தை மீட்டுந் தொடங்கி நிறைவேற்றிச், சகலசந்தோஷத்துடன் தனது சத்தியலோகம்போய்ச் சேர்ந்தனன். வன்னிப்பத்திரத்தினுடையமகிமை இவ்வாறுகும்.இன்னு மதன்பெருமையைப்பெரியோர்கள் சொல்லப்புகின் மேலுமேலும்வளரும்.புலையர்களாயினுங் காலையிலெழுந்து அவ்வன்னிவிருக்கத்தைத் தரிசிப்பார்களாயின், உடனே-சகலபாதகங்களுமொழிந்து, பிராம்மணகுலத்திற் பிறப்பார்கள். அவ்வாறு பிராமணர் தரிசிப்பார்களாயின், வேதாந்தரகசியங்க ளனைத்தையு முணர்ந்து மெய்ஞ்ஞானியாவார்கள். க்ஷத்திரியர்தரிசித்தால், இவ்வுலகமெல்லாந்தமது ஆக்கியாசக்கரத்துளடக்குவார்கள். வைசியர்தரிசித்தால், நிறைந்தசெல்வத்தைப்பெறுவார்கள். சூத்திரர்தரிசித்தால், மேலானகதியையடைவார்கள். ஆதலால்- கணேசமூர்த்தியை அவ்வன்னிப் பத்திரத்தால் இன்னும் அருச்சிப்பையெனில், உனது இட்ட காமியார்த்தங்கள் உடனே சித்தியாகும். என்று கீர்த்தியென்பவட்குக் கிருச்சமதமுனிவர் சொன்னதாகச், சிவபிரான் உமையவட்குச்சொல்லியபடி, பிரமதேவன் பிதிர்தேவனுக்குச்சொல்லினன். அதைத்தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச்சொன்னுன்.

கணபதிதுணை.

முப்பத்துநான்காவது.

கிப்பிரப்பிரசாதன்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, தேவர்பத்தினிகள்வன்னிப்பத்திரத்தால் விநாயகமூர்த்தியையருச்சித்துத்,தங்கள் தலைவர்களடைந்த சாபத்தைநிவிர்த்திசெய்துகொண்ட வரலாற்றினைச்சொன்னேம், இப்பால் கீர்த்தியின்புத்திரனுகிய கிப்பிரப்பிரசாத னுபாசித்ததிறத்தினைச் சொல்லுவோங்கேட்பீராக. தேவேந்திரன் பின்னுஞ் சூரசேனமகாராசனை நோக்கி, அரசனே- சிவபிரானை உமையவள் மீளவுந்தொழுதெழுந்து, சுவாமி-தேவரீரதுகிருபையினுல் வன்னிப்பத்திரத்தினுடைய மேன்மையையும், அ

து விநாயகமூர்த்திக்கு உவப்பாகியிருக்கின்றமையையுந் தெரிந்துகொண்டேன், இப்பால் அக்கீர்த்தியும் அவள்புத்திரனுகிய கிப்பிரப் பிரசாதனும் எவ்வாருயினதென்றுகேட்க, அதற்குச்சிவபிரான் விடைகொடுத்தாகப்,பிரமதேவன் பிதிர்தேவனுக்குச்சொல்லுவதாவது.ஓமலையனையன் புத்திரியே-கீர்த்தியென்பவள்கிருச்சமதமுனிவரை மீளவுந்தொழுதெழுது, சுவாமி- அடியாள்புதல்வனுகிய இக் கிப்பிரப்பிரசாதனுக்குஎக்காலத்தும் ஓரிடையூறு நெருங்காமல், எல்லாவுலகமும் இவனுக் கேவல்செய்யும்படியாக, கணேசமூர்த்தியினுடைய திருமந்திரங்களில்,'செபித்தற்கெளிதாகியும், விரைவிற்பயனைத் தருவதாகியு மிராநின்ற ஓர்மந்திரத்தை,இவனுக்குபதேசித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டனள். அதற்கு அக்கிருச்சமதமுனிவரிசைந்து, அவனைக்குளித்துவருமாறு கட்டளையிட்டு, அவ்வாறு செய்துவந்தவுடன் விநாயகமூர்த்தியினுடைய நாலெழுத்துள்ள மந்திரத்தையுபதேசித்து, அதனையநுட்டிக்குமுறைமையினையுந்தெருட்டி, இம்மந்திரத்தைக் காசித்தலத்திலெழுந்தருளியிருக்கின்ற துண்டிவிநாயகர் சந்நிதியிற்சென்று செபிக்கக் கடவையென்று சொல்லினர். அதனைக்கீர்த்திகேட்டு, சுவாமி- தேவரீர் உபதேசித்தருளிய மந்திரத்தைக்காசித்தலத்திற்சென்று துண்டிவிநாயகர்சந்நிதியிற்செபிக்கவேண்டுமென்றுதிருவாய்மலர்ந்தபடியால், இவ்வுலகின்கணுள்ளஎல்லாத்தலங்களினுங்காசித்தலம் அவ்வளவுவிசேடப்பட்டதென்ன,அதனையும் அடியாட்குத் தெரிவித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்கு ஐம்பஞ்சேந்திரியங்களையு நிக்கிரகித்த கிருச்சமதமுனிவர் சொல்லுவார், ஓபெண்கள்சிகாமணியே- நால்வகைத்தோற்றம் எழுவகைப்பிறப்பு எண்பத்துநான்குநூறுயிரம் யோனிபேதங்களினும்,ஒருவன்மானிடயோனியிற்பிறத்தலரிது.அம்மானிடயோனியிற் பிறக்கினும், அந்தணர்முதலியநால்வகைவருணத்துள்பிறத்தலரிது.அந்நால்வகைவருணத்திற் பிறக்கினும்,அறிவுடையோராயிருத்தலரிது. அறிவுடையோராயிருக்கினும், பாசபந்தங்களினீங்கிப் பிரமஞானத்தையறிந்து எமதாண்டவருடைய திருவடிகளைச்சேர்தலரிது. இவ்வாறு எமதாண்டவருடைய திருவடிகளைச் சேரத்தகவர்களும், மேற்கூறிய யோனிபேதங்களிற் பிறப்பவர்களும், வியாதியடைந்து வருத்தமுறுகின்றபேர்களும், துற்புத்தியினுற் றுன்மார்க்கநடையிற் செல்லுகின்றவர்களும், அவயவ பங்கமுற்றவர்களும், மற்றயாவர்களும், எளிதில்முத்தியடையுமாறு, மான்மழு சதுர்ப்புஜ காளகண்ட திரிசூல பாலநேத்திராவதாரியாயெழுந்தருளியிருக்கின்றசிவபிரானைவர்,தாமே இவ்வுலகமெங்கணும் அனந்தமூர்த்திகளாகவும் அனந்ததலங்களாகவும் அனந்ததீர்த்தங்களாகவும் வதிந்திருக்கின்றனர். இவ்வாறு அனந்தமாயிருக்கின்ற மூவகையுள்ளு முண்டாகின்றபயனை, ஒன்றனந்தமாகத்தருவதற்கு, ஓர்மூர்த்தியும் - ஓர்தலமும் - ஓர் தீர்த்தமு மாகவிருக்கின்றனர். அவை விசுவநாதரென்கிற மூர்த்தியும், அவிமுத்தமென்கின்ற தலமும், மணிகர்ணிகைஎன்கின்றதீர்த்தமுமாம். அந்த அவிமுத்தமென்கின்ற காசித்தலத்திலெழுந்தருளிய விசுவநாதமூர்த்தியை, ஒருகற்பத்தில் பிரமன்முதலிய மூவரும்வழிபட்டு, சிருட்டிமுதலியதொழில்களைப்பெற்றதன்றி, மேலானவரங்களையும்பெற்றிருக்கின்றார்கள். இந்திரன்முதலிய

திசைக்காவலரும், மற்றைய தேவர்- அரக்கர்-தானவர்-உரகர்- முதலியயர்வரும், ஒவ்வொருகாலங்களிற்பூசித்துத்,தங்கடங்கள்பதவிகளை நிலைபெறச்செய்துகொண்டார்கள். முன்னொருகாலத்தில்,விண்டுவானவர் அத்தலத்திற்பூசைசெய்துகொண்டிருக்கின்றபோது,விசுவநாதமூர்த்திக்கு அபிஷேகிப்பதற்காகப்,பாதலலோகவரையில்ஆழமுண்டாகும்படி ஓர்தடாகத்தைத்தொட்டு, அத்தடாகநீரைக்கொண்டு விசுவநாதமூர்த்திக்கபிஷேகித்து, அதன்கரையிற்றனே ஓரிடத்திலிருந்து அரியதவஞ்செய்து கொண்டிருந்தனர். அதற்குவிசுவநாதமூர்த்தி கிருபைசுரந்து, உமையவள் சமேதராய் இடபவாகனத்தின்மீதெழுந்தருளி, அவரெதிரில் ஆகாயமார்க்கமாகப்பிரத்தியக்ஷமாயினர். உடனே- திருமாலானவர்விரைந்தெழுந்து, அவரதுதிருவடிகளில் அனந்தமுறைசாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, சோனமழைபெய்ததுபோல அளவற்றவேதாகமங்களாற்துதித்துநின்றனர். அவரன்புக்கு விசுவநாதமூர்த்திவியந்து, தமது திருமுடியைச் சிறிது துளக்க உடனே - அவரது செவியிலணிந்திருந்த உரககுண்டலத்தி னின்றும், ஒருமணியானதுசிதறி, அத்தடாகத்தில்விழுந்தழுந்தியது. அதுமுதல் அத்தீர்த்தத்திற்கு மணிகற்னிகையென்னும் பெயருண்டாயது. பின்னொருகாலத்தில், பகீரதன் ஆகாயகங்கையைக்கொண்டுவந்து அதில்விடுத்தனன்.அதனால்பகீரதியென்கின்றபெயரும்அதற்குவழங்குகின்றது.ஆதலால்- அத்தீர்த்தத்தில் வசித்திருக்கின்றஜீவசெந்துக்களும், அதிற்படர்ந்துவளர்கின்றகொடிகள் மரங்கள்முதலியவைகளும், அதில்வீழ்ந்த எலும்பினையுடைய சீவராசிகளும், அதின்சலமானது மேலேதெறிக்கப்பட்டமற்றெல்லாவுயிர்களும் முத்தியடையும். எங்கும்பரிபூரணமாய்நிறைந்திருக்கின்ற சிவபெருமான் அத்தலத்தில் எக்காலத்து நீங்காது வீற்றிருக்கின்றமையால், அங்குசதாகாலமுந்தேவர்கள் முனிவர்கண்முதலாயினோர் வசித்திருக்கின்றனர். மேலும் விசுவநாதருக்கிணையானமூர்த்தியும், மணிகற்னிகைக்கிணையானதீர்த்தமும், காசிநகருக்கிணையானதலமும், மூவுலகங்களினுமில்லை. அக்காசிவிசுவநாதர்சன்னிதியிலெழுந்தருளியிருக்கின்ற துண்டிவிநாயகமூர்த்தியை, அளவற்றதேவர்கள் வன்னி- அறுகு- மந்தாரை- இவைகளினாற்பூசித்துப்,பெறுதற்கரியமேலானவரங்களைப்பெற்றிருக்கின்றார்கள். கற்பிற்சிறந்தகீர்த்தியே-முன்னொருகாலத்தில்இவ்விதிகாசத்தைச்சுப்பிரமணியக்கடவுள் அகத்தியமுனிவருக்குபதேசித்தனர். பின்னொருகாலத்தில் மகாவிஷ்ணுகாசிபமுனிவருக்குபதேசித்தனர். நீ மிகவுஞ்சித்தசுத்தியுடையவளாதலால், உனக்கும்அதனைஉபதேசித்தோம். இனி நீயும்உன்புதல்வனுங் காசித்தலத்திற்குச்சென்று, அங்கெழுந்தருளியிருக்கின்ற துண்டிவிநாயகருடைய திருவடிகளையடைந்து, வன்னிப்பத்திரம் மந்தாரைமலர் அறுகம்புல் இவைகளைக்கொண்டு அருச்சித்து, யாம்கூறியநாலெழுத்துள்ள மந்திரத்தைச்செபித்து, நீங்கள்கருதியவரங்களைப் பெறக்கடவீர்களென்றுவிடைகொடுத்துத், தமதாசிரமத்தைநோக்கியெழுந்தருளினர். இப்பால் கீர்த்தியென்பவளும் அவள்புதல்வனும்பெருமகிழ்ச்சிகொண்டு, உடனே- இருவருங்காசித்தலத்தையடைந்து,மணிகற்னிகையில் ஸ்நானஞ்செய்து, துண்டிவிநாயகருடைய திருவடிகளைப்பணிந்து, அத்தினமுழுவதும் ஆகாரநித்திரையைநீத்து, மாசிமாதஅபரபக்ஷ சதுர்த்தசிவருகி

றவனையில் அத்தலத்திற்றனேவசித்திருந்து,பின்னர் அதுவருதலும்,அ
றுகாலையில் நித்தியநியமாதிகளைமுடித்து, நாலெழுத்துள்ளமந்திரத்தை
ன்னிமரத்தடியிலிருந்துசெபித்துச்,சந்திரோதயமானவுடன் சகலதிரவி
ங்களோடும் விநாயகமூர்த்தியைவழிபட்டு,அறுகு-வன்னி-மந்தாரம்-இ
வைகளினலருச்சனைபுரிந்து, அவரது திருவுருவங்களை மனதில்தியானஞ்
சய்துகொண்டிருந்தனர். அதற்கு விநாயகமூர்த்திகிருபைகூர்ந்து, ஐந்து
கங்களும்பத்துகரங்களுமுடையவராய்,சிங்கவாகனமூர்ந்து அவர்களெ
திற்பிரத்தியக்ஷமாயினர். உடனே-கீர்த்தியானவள் தனதுமைந்தனோடும்
ணிந்தெழுந்து,ஓதேவதேவோத்தமராகிய துண்டிவிநாயகமூர்த்தியே, பி
ரமனாதியமூவருக்குமுத்தொழிலளித்தவரே, ஆதிமத்தியாந்தரகிதமாயிரா
ன்றகடவுளே,தேவரீரதுபெருங்காட்சியால்அடியேங்கள்மேலாகிய தவ
த்தினையுடையவர்களாயினேம், யாங்கள்பலபிறவிகடோறுஞ்செய்துவந்த
வங்களனைத்துமபாறின, எல்லாப்பயன்களையுமெளிதிற்பெற்றனம்,தே
ரீருடையபேரருளால் நிலைபெற்றிருக்கவுமித்த எனதுமைந்தனுயிரிழந்
க்கு, எனதுமாற்றாளூட்டியவிடத்தைத்தேவரீர்பெருங்கருணையாலகிரு
சமதமுனிவர்தீர்த்துமீட்டும்உயிரையளித்தனர்.இனிஇப்புத்திரன்எக்கா
த்தும் ஓர் இடையூறில் வருந்தாமல், தீர்க்காயுள் கல்வி செல்வமுதலா
வைகளைப்பெற்று, யாவருக்குந் தலைமையாயிருக்கத்தக்க மேன்மையு
, பகையாயினரும் ஏவல் செய்யத்தக்க பரிசும், அளவற்ற போகங்க
ளைப்பொருந்திவாழும்படியான வரமுந் தேவரீர்கடாக்ஷித்தருள வேண்டு
மென்றுபிரார்த்தித்தனள். அதற்கு விநாயகப்பெருமான் கிருபைகூர்ந்து,
வள்கருதிய எல்லாவரங்களையுந்தந்து, அன்பிற்சிறந்த அரிவையே-உன
புதல்வனாகிய இவன், இவ்வுலகத்தில் ஆயிரம்வருடம்வரையி லுயிர்பெ
றிருந்து, ஆயிரமகங்கள்செய்து, அந்தியகாலத்தில்தத்துவஞானத்தையு
ணர்ந்து நம்மைச்சேருவனென்றுதிருவாய்மலர்ந்து, அப்புதல்வன்கரத்தி
மூவுலகத்தாருமஞ்சத்தக்க வச்சிராயுதத்தினையளித்து, அவனுக்குப்பார்
பாணியென்னும் ஓர்நாமமுந்தந்து, யதாப்பிரகாரந் துண்டிவிநாயகமூர்
தியிற்கலந்தருளினர். இப்பால் கீர்த்தியும் அவள் புத்திரனும் மறுநாள்
லையிலெழுந்து, கங்கையில்ஸ்நானஞ்செய்து, துண்டி விநாயகமூர்த்தி
யப்பேரன்பினேடும் பூசித்து விடைபெற்று, அக்காசித்தலத்தைவிட்டு
பிரிவதற்கு மனமில்லாமற் பிரிந்துவழிக்கொண்டு, அனேக அடவிகளை
கடந்து, தனது நாயகன் அரசாக்ஷிசெய்கின்ற கன்னபுரிக்குச் சமீபமா
னர். அதைஅவ்வரசனறிந்து, உடனேஅவர்களை யழைத்துவருமாறுமந்
திரிகளைஏவினன். அவர்களும் இப்பூதலஞ்செய்தபாக்கியமேவந்ததென்று
ணங்களித்துப், புஷ்பங்களாலும் மணிகளாலும் வீதிகளெல்லாம் அலங்
ரித்து, எண்ணற்றவரிசைகளோடும் எதிர்கொண்டுசெல்லக், கீர்த்திசிவி
கையின்மீதும் கிப்பிரப்பிரசாதன் யானையின்மீதும் ஆரோகணித்து, வீ
திகள்யாவுங்கடந்து, தமது அரமனையிற்பிரவேசித்து, இராஜசிங்காசனஸ்
தனுடைய பாதங்களிற் பணிந்தெழுந்தனர். உடனே- அவ்வரசன் ஆன
ந்தவாரிதியின்மூழ்கினவனாய், தனதிரண்டு கரங்களாலும் புத்திரனைத்த
ழுவியெடுத்து, அவனைத்தன்மடிமீதிருத்தி, அவர்கள் வெளியிற்சென்றது
முதல் நடந்தசெய்திகளையெல்லாங் கீர்த்தியாற்சொல்லக் கேட்டு, அ

ம்மூவரும் அளவளாவிய அன்பினோடும் ஆனந்தசாகரத்திற் றிளைத்துவா
ழ்ந்துவந்தனர். அந்நாளையில், பிரியவிரதனெனவன் தனது குமாரனாகி
பரசுபாணிக்குப் பட்டாபிஷேகஞ்செய்து,தனதரசுரிமையை அவன்றோ
ளிலிறக்கி, மிக்கசித்தசுத்தியோடும் வனத்திற்சென்று தவஞ்செய்து கொ
ண்டிருந்தனன். பின்னர் அவன்புதல்வன் ஒளிவீசுகின்றமணியினால் விநா
யகமூர்த்தியினுடைய் திருவுருவஞ்சமைத்து, அதைத்தனது கண்டத்தி
ணிந்துகொண்டு,சகஸ்திரயாகங்களைக் குறைவில்லாமல்முடித்து,சகஸ்தி
வருடபரியந்தந் தனதரசாட்சியைத்திசையனைத்தினுஞ்செலுத்தி,அந்தி
காலத்தில்ஏரம்பருடையதிருபாகடாக்ஷத்தினாற்றெய்வவிமானம்வர, அதி
ல் ஆரோகணித்து, விநாயகலோகத்திற் சென்று, அனந்தகற்பகாலம்
ளையில் அங்ஙனேயிருந்து, எல்லாப்போகங்களையும் இடையூறின்றியனு
பவித்து, முடிவில் பேரின்ப முத்தியினையு மடைந்தனன். பெண்ணே
விநாயகமூர்த்திக்கு வன்னிப் பத்திரத்தில் விழைவுண்டான காரணத்தை
யும், அவ்வன்னி வரம்பெற்றிருக்கின்றமையையுஞ் சொன்னோம். அவ்
விநாயகமூர்த்தியையும் நம்மையும் வேறாக நினையற்க. அவ்வன்னிப்பத்
திரம் அவருக்கிஷ்டமாகியதால், யாமும் அதனை அணிந்துகொண்டனம்
அப்பத்திரத்தால் எம்மைப் பிராமணர்க ளருச்சிப்பார்களாயின், சாயு
ச்சியபதவியை யடைவார்கள். க்ஷத்திரிய ரருச்சித்தால், சாரூப பதவி
யை யடைவார்கள். வைசிய ரருச்சித்தால், சாமீப பதவியை யடைவா
ர்கள். சூத்திர ரருச்சித்தால், சாலோக பதவியை யடைவார்கள். என்று
சிவபெருமான் உமாதேவிக்குத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றமை
யால், அறுகு கிடையாவிடின், வன்னிப் பத்திரத்தினாலாவது மந்தார
மலரினாலாவது விநாயகமூர்த்தியை யருச்சிக்கவேண்டும். என்று பிரம
தேவன் பிதிர்தேவனுக்குச்சொன்னதாகத்,தேவேந்திரன் சூரசேனமகா
ராசனுக்குச்சொன்னான்.

கணபதிதுணை.

முப்பத்தைந்தாவது.

கிருதவீரியன்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே, கிப்பிரப்பிரசாதன் விநாயகமூர்த்தி
யை வன்னி மந்தாரை அறுகு இவைகளாலருச்சித்து, அளவற்ற வரங்
களைப்பெற்ற வரலாற்றினைச்சொன்னோம், இப்பால் கிருதவீரியன் உபா
சித்த திறத்தினைச்சொல்லுவோங்கேட்பீராக. ,தேவேந்திரன் பின்னுஞ்
சூரசேனமகாராசனை நோக்கிச்சொல்லுவான், அரசனே- பிரமதேவனா
சங்கட்டசதுர்த்தி விரதத்தின்பெருமைகளையெல்லாந் தெளிவுபெறக்கே
ட்ட பிதிர்தேவன், மீளவும் அவனைப்பணிந்தெழுந்து, சுவாமி- அவ்விர
தத்தைமுடித்தபின்பு நடத்தவேண்டிய முறைமையாதோ, அதனையுந்தெ

ீர் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்றுபிரார்த்தித்தனன். அதற்குப் ரமனிசைந்து, அன்பனே - அவ்விரதத்தினைத் தொடங்கியதிங்களிலா து, ஐந்தாந்திங்களிலாவது, ஏழாந் திங்களிலாவது வருகின்றசதுர்த்தி ல், மேற்கூறியபடி ஓர் கலசம் ஸ்தாபித்து, அதன்மீது ஓர் தட்டையிரு தி, அதன்மீது வஸ்திரத்தைவிரித்து, அதன்மீது யந்திரம்வைத்து, அ ன்மீது சித்திபுத்திசமேதராயிருக்கின்ற கணேசமூர்த்தியைப் பொன்னி ற்செய்தமைத்து, வேதாகமமுறைப்படிபூசித்து, பதினாயிரம்- ஐயாயி ம்- ஓராயிரம்- நூற்றெட்டு- என்னுந் தொகையில் தனக்கியன்றமட்டும் குதிகொடுத்து, குறுணி எள்ளைத்தானஞ் செய்தல்வேண்டும். பொரு ளுடையோனாயின் கோதானமுதலிய வைகளையுஞ் செய்தல் வேண்டும். ந்தணர் இருபத்தொருபேருக்கு அன்னதானஞ்செய்து, விநாயகமூர் த்தியை மனதிற்றியானித்து,அவர்களருந்திமிகுந்த சேடத்தைத் தானருந் ல்வேண்டும். பின்னர் அவ்வியந்திரத்தையும் உருவத்தையும் ஆசிரியரு குத்தானஞ்செய்தல்வேண்டும். இந்தக்கிரமத்தின்படிசெய்தால், அவ்வி தபலன் ஈடேறிவரும். இவ்விரதத்தை உமாதேவியார் ஆறுமாத மநுட் த்துச், சிவபிரானுடைய இடப்பாகத்தை யடைந்தனர். தமையந்தியெ பவள் நாலுமாதமநுட்டித்து, வனத்திற்சஞ்சரித்திருந்த தன்கணவனா ய நளராசன்மீட்டுந் தன்னிடத்து வரப்பெற்றனள். அகத்தியமுனிவர் ன்றுமாதமநுட்டித்துக், கடல்நீரையெல்லாந்தமது கரதிலடக்கியுண் னர். கிருஷ்ணமூர்த்தி ஒரோநாளநுட்டித்து, வாணாசுரன் ஆவியையுண் வெற்றிகொண்டனர். இதுவன்றி- இவ்விரதத்தையானும் விண்டுவும் ந்திரன்முதலிய எல்லாத்தேவர்களும் இடையூறுற்றகாலத்திலெல்லா அனந்தமுறையநுட்டித்து, வேண்டியநலங்களைப்பெற்றனம். கொன் றைப்பூமாலையைத்தரித்த யானைமுகக்கடவுள் விரதத்தினைப்போலமேலா யபயனைத்தரும் விரதம் ஒன்றுமில்லை. இதனைநன்றாய்கவனிக்கக்கடவை யென்றுபிரமன்சொல்ல, பிகிர்தேவன் பேரானந்தங்கொண்டு, அடியே வம் அடியேனுடையவம்சமும் ஈடேறினேமென்று பலமுறைதுதித்து, ட்டுந்தொழுதெழுந்து விடைபெற்று,தனக்குப்பிரமதேவனுரைத்த சங் ட்டசதுர்த்திவிரதமுதலான சகலமகத்துவங்களையும் ஓர்புத்தகத்திலெ ழுதி, யானைகள்திரியும்படியான காட்டில் மனமென்கின்றயானையையடக் த்தவஞ்செய்திருக்கின்றதனது புதல்வனாகியகிருதவீரியனுடையகனவி ற்சென்று, அந்தப்புத்தகத்தை அவன்கையிற்றந்து, மைந்தனே- இப்புத் கத்தில் விநாயகமூர்த்தியினுடைய மேலானவிரதமெழுதியிருக்கின்றது, அதனை அந்தணர்களால்வாசிப்பித்தறிந்து, அவ்வாறேவிரதமநுட்டித்துப் பயாயின,உனக்குப்புத்திரசம்பத்துண்டாகு மென்றுசொல்லித் தனது லோகம்போய்ச்சேர்ந்தனன்.உடனே-கிருதவீரியன்விழித்து,கனவிற்கண் தந்தையை நனவிற்காணுதவனாய்வருந்தித், தனதுகையிலமர்ந்திருக்கின் புத்தகத்தைக்கண்டு, அத்தியந்தசந்தோஷங்கொண்டு, அதுகாறுந்தான் கொண்டிருந்தமனக்கவலையையும், சந்தானத்திற்குத் தடையாயிருந்தபாவ ங்களையும்,சத்துருக்களாலுண்டானபழியையும், சரீரத்தாலடைந்திருந்த வருத்தத்தையுமொழித்தவனாய்,உடனேதனதுசமீபத்திற்றவஞ்செய்திருந் தமனைவியைக்கூவி, அவளுடன்தான்கண்ட கனவினைக்கூறிப், பின்னர் அ

வனைக்கைவிட்டு நகரத்தினையடைந்து, தனதுமந்திரிமுதலாயினோருக்கு
ம் அதனைத்தெரிவித்துப் பிராமணர்களைக்கூவித், தெய்விகமுள்ள அப்புத
தகத்தை அவர்கள்கையிற்றந்து வாசிக்கச்சொல்லினன். அதையர்கள்கை
யேற்றுச், சோடசவுபசாரங்களோடும் பூசித்து, அதன்காப்பையவிழ்த்து
வாசித்து. ஓ பூலோகசக்கிரேஸ்வரா- இது விநாயகமூர்த்தியினுடையவி
ரதத்தைப் பிரமதேவன்சொல்ல எழுதியதாயிருக்கின்றது. யாங்கள் இது
காறும் எவ்விடத்திலும் இவ்விரதத்தினைக்கேட்டதில்லை, இப்போது உம
துதயோமகிமையால்யாங்களுமறியலாயினோம், என்றுதங்கடங்கள்உள்ள
ன்பினோடும் அவனைக்கொண்டாடி, அப்புத்தகத்தை அவன்கையிற்றந்து
விடைகொண்டனர். இப்பால் கிருதவீரியன் மாசிமாதஅபரபட்சஅங்கா
ரகசதுர்த்திவந்தவுடன், அன்றுதயத்திலெழுந்து, ஸ்நானாதிகடன்களைமு
டித்துத், திருவெண்ணீறணிந்து, உருத்திராக்கமாலைபூண்டு, சங்கட்டசது
ர்த்திவிரதத்தை ஆரம்பித்து, சிரசாதிபாதம்வரையில் விதிப்படி நியாசஞ்
செய்து, காமாக்கினியாதிகளைத்தணித்துக், கணேசமூர்த்தியினுடையதிரு
வடிகளைமனதிலிருத்தி, ஏகாக்கரம் சடக்கரமுதலிய மந்திரங்களைச்செபித்
துக்கொண்டு, ஏழாந்திங்களில் தனது குலகுருவாகிய அத்திரிமகாமுனி
வரைவரவழைத்து, அபிடேகத்திற்குரிய திரவியங்களையும்- அருச்சித்த
ற்கேற்றமலர்களையும்- நிவேதனத்திற்குத்தக்க பதார்த்தங்களையும்- தூப
தீபங்கட்குவேண்டியபொருள்களையுஞ்சேகரித்துப், பூசாமண்டபத்திற்கு
வந்து, ஆசமனம் பிராணாயாம முதலியகிரியைகளைமுடித்து, (ஏவங்குண
விசேஷண விசிஷ்டாயாம், சுபதிதௌ, அஸ்மாகம்ஸ குடும்பானாம்,
க்ஷேமஸ்தைர்ய விஜயாயுராரோக்யைஸ்வர்யாதீநா முத்தரோத்தராபிவ்ரு
த்யர்த்தம், தர்மார்த்தகாமமோக்ஷ சதுர்வித பலபுருஷார்த்தஸித்யர்த்த
ம், ஸமஸ்தஸங்கட பரிஹாரார்த்தம், ஸ்ரீஸங்கடஹரண கணபதிமுத்தி
ஸ்ய, ஸ்ரீஸங்கடஹரண கணபதிப்ரீத்யார்த்தம், கல்போக்தப்ரகாரேண,
ஸங்கடஹரண சதுர்த்திவ்ரதங்கரிஷ்யே.) என்று சங்கற்பங்கூறி, நவ
ரத்னமயமாயிராநின்ற ஓர்வேதிகையையமைத்து, அதன்மீது தண்டுலம்
பரப்பி, அதன்மீது இழை சுற்றி நீர் நிரப்பியிருக்கின்ற பொற்கும்பத்
தை ஸ்தாபித்து, அதற்குச் சந்தனம் - புஷ்பம் - அக்ஷதை - முதலா
னவைகளையணிந்து, (கலசஸ்யமுகேவிஷ்ணுஃ - கண்டேருத்ரஸ் ஸமாஸ்
ரிதஃ-மூலேதத்ரஸ்திதோப்ரம்ஹா-மத்யேமாத்ருகணாஃஸ்மூர்தாஃ- குக்ஷௌ
துஸாகராஸ்ஸர்வே - கலசாம்பு ஸமாஸ்ரிதஃ - ஆயாந்துகணேசபூஜார்த்த
ம்- துரிதக்ஷயகாரகாஃ- கங்கேசயமுனேசைவ- கோதாவரிஸரஸ்வதி, நர்ம
தேசிந்துகாவேரி-ஜலேஸ்மின்ஸன்னிதிங்குரு) என்று கலசபூசைசெய்து
அதன்மீது ஓர்தட்டையமைத்து, அதன்மீதுவஸ்திரம்விரித்து, அதன்மீ
துயந்திரம்வைத்து, அதன்மீது சித்திபுத்தி சமேதராயிருக்கின்ற விநாயக
மூர்த்தியை எழுந்தருளச்செய்து, அபிடேகதிரவிய முதலியவைகளை மந்
திரபூர்வகமாகச்சுத்திசெய்து,

ஓம் பூர்வத்வாரேத்வாரஸ்ரீயைநம.	ஓம் தேஹளியைநம... ...
ஓம் தக்ஷணத்வாரேத்வாரஸ்ரீயைந	ஓம் த்வாரசோபாயைநம... ...
ஓம் பசசிமத்வாரேத்வார ஸ்ரீயைந	ஓம்பீடமத்யேவாஸ்துபுருஷாயந
ஓம் உத்தரத்வாரேத்வார ஸ்ரீயைந	ஓம் மஹாமண்டூகாயநம... ...

ஓம் காலாக்னிருத்ராயநம... ..... *
ஓம் கூர்மாயநம .. .. *
ஓம் வராஹாயநம ... ... *
ஓம் அனந்தாயநம... ... ... *
ஓம் ப்ருத்திவ்யேநம... .... *
ஓம் அங்குசாயநம ... ...*
ஓம் ஸப்தத்வீபேப்யோநம... ...*
ஓம் ஸப்தஸமுத்ரேப்யோநம... *
ஓம் கந்தாயநம... ... .*
ஓம் நாளாயநம ... ... *
ஓம் பத்ரேப்யோநம .. ... *
ஓம் கேஸரேப்யோநம ... ...*
ஓம் கர்ணிகாயைநம ... ... *
ஓம் ரத்நஸிம்ஹாசநாயநம ... ...*
ஓம் இட்சுசமுத்ராயநம... .... *
ஓம் ஸ்வர்ணத்வீபாயநம ... .*
ஓம் ரத்நமண்டபாயநம... ... *
ஓம் கல்பவ்ருக்ஷாயநம ... ...*
ஓம் காமதேனவேநம... ... *
ஓம் க்ஞாநாயநம ... ...*
ஓம் வைராக்யாயநம ... ... *
ஓம் ஐஸ்வர்யாயநம... ... ...*
ஓம் தர்மாயநம... ... ...*
ஓம் அக்ஞாநாயநம ... . *
ஓம் அவைராக்யாயநம.......... ...*
ஓம் அநைஸ்வர்யாயநம... .... *
ஓம் அதர்மாயநம... ... ,... *
ஓம் தீப்தாயநம ... ... *
ஓம் மத்யேசங்ரோமாஸஹித ஸங்க
,, டஹரணகணபதயேநம... ...*

ஓம் ரஜஸேநம... ... ... *
ஓம் தமஸேநம ... ... *
ஓம் அக்கினிமண்டலாயநம .. ....*
ஓம் அக்னிமண்டலாதிபதயேநம *
ஓம் வஹ்ன்யேநம... ... ... *
ஓம் ஆர்க்கமண்டலாயநம ... *
ஓம் அர்க்கமண்டலாதிபதயேஸூர்யா
,, யநம ... ... *
ஓம் ஸோமமண்டலாயநம... ....*
ஓம் ஸோமமண்டலாதிபதயே சந்ர
,, மஸேநம... ... ... *
ஓம் க்ரஹமண்டலேப்யோநம....*
ஓம் க்ரஹமண்டலாதிபதிப்யஆதித்
,, யாதிநவக்ரஹேப்யோநம......*
ஓம் தன்மத்யேத்ருவமண்டலாயநம
ஓம் த்ருவமண்டலாதிபதயேத்ருவா
,, யநம... ... ...*
ஓம் மாயாதத்வாயநம... ... *
ஓம் ஆத்மதத்வாயநம... ... *
ஓம் வித்யாதத்வாயநம ... ...*
ஓம் சிவதத்வாயநம ... ... *
ஓம் ஆத்மனேநம ... ... *
ஓம் அந்தராத்மனேநம ... ...*
ஓம் ஜீவாத்மனேநம ... ... *
ஓம் பரமாத்மனேநம... ... *
ஓம் மத்யேருத்ராயநம... .. *
ஓம் பகவத்தைநம... ... .*
ஓம் தேஜோவத்தைநம ... ... *
ஓம் மத்யேவிக்னநாசினேநம ... *
ஓம் ஸர்வஸங்கடநிவாரிணேநம. *

என்று த்வாரபீடபூஜைசெய்து, கரத்திற்புஷ்பமும் அக்ஷதையுங் கொண்டு (லம்போதரம் சதுர்ப்பாகும் - த்ரிணேத்ரம்ரக்தவர்ணகம் - ஸர்வாபரண சோபாட்யம் - ப்ரசன்னாஸ்யம் விசிந்தயே. ஸ்ரீலம்போதராயநம, த்யானம்ஸமர்ப்பயாமி.) என்றுசிந்தனை செய்து (ஆகச்சவிக்னராஜேந்ர-ப்ரஸன்னோ த்ரஸ்திரோபவ- ஆராதயாமிபக்த்யாஹம்- பவந்தம்ஸர்வஸித்தயே. ஸ்ரீவிக்னநாசினேநம, ஆவாஹனம்ஸமர்ப்பயாமி.) என்றுஸ்தாபனஞ்செய்து (அபீஸ்த்தார்த்தசித்யர்த்தம் - பூஜிதேயஸ்சுராரபி- ஸர்வவிக்னச்சிதேதஸ்மை-கணாதிபதயேநம. ஸ்ரீவக்ரதுண்டாயநம, ஆஸனம்ஸமர்ப்பயாமி.) என்றுபீடமிட்டு (கணாதிபநமஸ்தேஸ்து - ஸர்வஸித்திப்ரதோபவ- பாத்யங்க்ருஹாணதேவேச - சுராசுரசுபூஜித. ஸ்ரீகணாதிபாயநம, பாத்யம் ஸமர்ப்பயாமி. ரக்தகந்தாக்ஷதோபேதம் - ரக்தபுஷ்போப சோபிதம் - அர்க்யங்க்ருஹாணபகவன் - மயாதத்தம்ஹிபக்திதம். ஸ்ரீசந்ரார்த்ததாரி

ணேநம, அர்க்யம்ஸமர்ப்பயாமி. சுராசுரஸமாராத்ய - ஸர்வசித்திப்ரதாயக - மயாதத்தம் சுரஸ்ரேஷ்ட - க்ருஹாணசமனீயகம். ஸ்ரீவிஸ்வப்ரயாயநம, ஆசமனம் ஸமர்ப்பயாமி.) என்று பாத்யம் - அர்க்யம் - ஆசமனம்-கொடுத்து, (சுதயந்திர்வ்யமாத்ராணி- கங்காதோயைகணுதிப - அதஸ்நாநுயதத்தோயம்- ஸ்வீகுருஷ்வமயார்ப்பிதம். ஸ்ரீஸர்வஸித்திப்ரதாயகாயநம. ரஜோபகர்ஷணஸ்நானம் ஸமர்ப்பயாமி.)என்று திருமஞ்சனமாட்டி(ஸமஸ்தேகணநாதாய- நமோமூஷகவாஹன - உமாசுதநமஸ்துப்யம் - மதுபர்க்கம்க்ருஹாணபோ. ஸ்ரீப்ரம்மசாரிணேநம, மதுபர்க்கநைவேத்யம் ஸமர்ப்பயாமி.) என்று தேன்கலந்த பால் பழ முதலியவைகளை நிவேதனஞ்செய்து, (ததிக்ஷீராஜ்யமதுபி- சர்க்கராஸஹிதைசுபை-பஞ்சாம்ருதை ஸ்நானபயாம்- கணுத்யக்ஷஸமோஸ்துதே, பஞ்சாம்ருதஸ்நானம்ஸமர்ப்பயாமி. ஸவ்ரபேயம்மஹாதிவ்யம்-பவித்ரம்புஷ்டிவர்த்தனம்- ஸ்நாநாயதேமயாதத்தம் - க்ய ஹீஷ்வசுரஸத்தமம், க்ஷீரஸ்நானம் ஸமர்ப்பயாமி. மஹஸ்வாதுசமாயுக்தம்-ப்ரஸித்தம்பரமாற்புதம்-ஸ்நாநாயதேமயாதத்தம்-ததீதம்ப்ரதிக்ருய்ஹதாம்,ததிஸ்நானம்ஸமர்ப்பயாமி.தேவர்ஷிணும்ப்ரயம்புண்யம் - பவித்ரம் புஷ்டிவர்த்தனம் - ஸ்நாநாயதேமயாதத்தம்- க்ருஹாணுஜ்யம் நமோஸ்துதே, க்ருதஸ்நானம்ஸமர்ப்பயாமி. அனேகவ்ருக்ஷநிசய- குசுமோத்பூதமற்புதம்- ஸ்நாநாயதே மயாதத்தம்- கணேசப்ரதிக்ருய்ஹதாம்,மதுஸ்நானம் ஸமர்ப்பயாமி. இட்சுகண்டஸமுத்பூதா- பராஸ்வாத்யதராசுபா, சர்கரேயம்மயாதத்தா - ஸ்நாநார்த்தம்ப்ரதிக்ருய்ஹதாம்,சர்கராஸ்நானம் ஸ்மர்ப்பயாமி.கங்காயாஸ்ஸலிலம்சுத்தம் சுவர்ணகலசேஸ்திதம்- சுவாஸிதம்பரிமள்யேஃ- ஸ்நாபயாமி கணேஸ்வர, சுத்தோதகஸ்நானம் ஸமர்ப்பயாமி.) என்று- பஞ்சாமிர்தம்- பால்- தயிர்- நெய்- தேன்- சர்க்கரை- சுத்தோதகம்- என்னுமிவைகளை அபிஷேகித்து, (ரக்தவஸ்த்ரம் த்வயம்திவ்யம் - ஸர்வலோகப்ரஸாதனம் - மயாதத்தம்கணுத்யக்ஷ - க்ருஹ்ணதாமகிலப்ரதர், வஸ்த்ரம்ஸமர்ப்பயாமி. குங்குமாக்தம்மயாதத்தம்-க்ருய்ஹதாமுபவீதகம்-உத்தரீயேணஸம்யுக்தம்-சுபதம் கணநாயகா, யக்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி. கோடிசூர்யப்ரகாநீச-ரக்தவர்ணசதுர்ப்புஜ-மயாஸமர்ப்பிதானீஹா-பூஷணுனிக்ருஹணபோ,ஸர்வாபரணுனி ஸமர்ப்பயாமி. சந்தனகருகர்ப்பூர-குங்குமாதிஸமவ்யதம்-கந்தம்க்ருஹாணதேவேச - ஸர்வசித்திப்ரதாயக, கந்தம்ஸமர்ப்பயாமி. அக்ஷதாம்சச்சுரஸ்ரேஷ்ட- குங்குமாகருஸம்யுதாம்- க்ருஹாணவிக்னராஜேந்த்ர- மயாதத்தா ஹிபக்திதம். அக்ஷதாம் ஸமர்ப்பயாமி. ரக்தபுஷ்பாக்ஷவிக்னேச - சைகவிம்சதிசங்க்யயா-க்ருஹாண சுமுகோபூத்வா-மயாதத்தான்யுமாசுதா, புஷ்பாணிபூஜையாமி. சுகந்திநிசமால்யாணி - க்ருஹாணகணநாயக - விநாயகநமஸ்துப்யம் - சிவசூனோநமமோஸ்துதே, மால்யானிஸமர்ப்பயாமி.) என்று - வஸ்திரம் - யக்ஞோபவீதம் - சர்வாபரணம் - கந்தம் - அக்ஷதை - புஷ்பம் - மால்யம் - இவைகளைத்தரித்து.

ஓம் கஜானனுயநம... ... ... ✻ தூர்வாயுக்மம்பூஜையாமி... ...✻
ஓம் விக்னராஜாயநம... .... ✻ தூர்வாயுக்மம்பூஜையாமி ... ✻
ஓம் லம்போதராயநம ... ... ✻ தூர்வாயுகமம்பூஜையாமி... ...✻
ஓம் சிவாத்மஜாயநம.... ... ✻ தூர்வாயுக்மம்பூஜையாமி ... ✻

ஓம் வக்ரதுண்டாயநம...... ... * துர்வாயுக்மம்பூஜையாமி... ...*
ஓம் சூர்ப்பகர்ணயநம... ...... * துர்வாயுக்மம்பூஜையாமி ,... *
ஓம் குஜபாயநம... ....* துர்வாயுக்மம்பூஜையாமி... ...*
ஓம் கணேசாயநம... ....* துர்வாயுக்மம்பூஜையாமி ... *
ஓம் விக்னநாசினேநம... ... ,...* துர்வாயுக்மம்பூஜையாமி... ...*
ஓம் விகடாயநம... ... ...* துர்வாயுக்மம்பூஜையாமி ... *
ஓம் வாமதேவாயநம... ... ... * துர்வாயுக்மம்பூஜையாமி... ...*
ஓம் ஸர்வதேவாயநம... ... ...* துர்வாயுக்மம்பூஜையாமி ... *
ஓம் ஸர்வாத்திநாசினேநம... ...* துர்வாயுக்மம்பூஜையாமி... ...*
ஓம் விக்னஹர்த்ரேநம...... ...* துர்வாயுக்மம்பூஜையாமி ... *
ஓம் தூம்ராயநம... ....* துர்வாயுக்மம்பூஜையாமி... ...*
ஓம் உமாபுத்ராயநம...... ... * துர்வாயுக்மம்பூஜையாமி ... *
ஓம் க்ருஷ்ணபிங்களாயநம ... * துர்வாயுக்மம்பூஜையாமி... ...*
ஓம் பாலசந்ராயநம... ... ...* துர்வாயுக்மம்பூஜையாமி ... *
ஓம் சந்த்ரார்த்ததாரிணேநம ......* துர்வாயுக்மம்பூஜையாமி... ...*
ஓம் கணதிபாயநம...... ... ...* துர்வாயுக்மம்பூஜையாமி ... *
ஓம் சங்கரகௌரீசூனவேநம ... * துர்வாயுக்மம்பூஜையாமி... ...*

என்றுஇரண்டிரண்டாகஇருபத்தோரறுகையெடுத்து அருச்சனைசெய்து,

ஓம் ஸங்கடநாசனயநம... ......* பாதௌபூஜையாமி... ... ...*
ஓம் ஸ்தூலஜங்காயநம... ...... * ஜங்கேபூஜையாமி... ... . *
ஓம் ஆகுவாஹனயநம ... .* ஊருபூஜையாமி... ... . *
ஓம் ஹேரம்பாயநம... ... ... * கடிம்பூஜையாமி ... ...*
ஓம் லம்போதராயநம... ... ...* உதரம்பூஜையாமி ... ...*
ஓம் ஸ்கந்தாக்ரஜாயநம ...... * ஸ்கந்தௌபூஜையாமி ... ... *
ஓம் பாசஹஸ்தாயநம... ......* ஹஸ்தான்பூஜையாமி ... ... *
ஓம் ஸ்தூலகண்டாயநம...... ...* கண்டம்பூஜையாமி... ... ...*
ஓம் ஸர்வேஸ்வராயநம... .... * சிரம்பூஜையாமி... ... ... *
ஓம் ஸங்கடநாசினேநம... ....* சர்வாங்காநிபூஜையாமி.... ... *

என்று பாதம்- கணைக்கால்- தொடை- நிதம்பம்- வயிறு-கழுத்தடி- கரம்- கண்டம்-சிரம்-சர்வாங்கம்-என்னும்பத்திடங்களினும்அங்கபூஜைசெய்து,

ஓம் கணதிபாயநம... ... ...* ஓம் தூமகேதவேநம... .... *
ஓம் உமாபுத்ராயநம... ....* ஓம் பாலசந்ராயநம. ... ... *
ஓம் அகநாசனயநம ... ... * ஓம் ஈசபுத்ராயநம ... ... *
ஓம் ஹேரம்பாயநம... ... ...* ஓம் இபவக்த்ராயநம ... ... *
ஓம் லம்போதராயநம... .... * ஓம் குமாரகுரவேநம... ... *
ஓம் கஜவக்த்ராயநம... ... ... * ஓம் மூஷகவாஹனயநம... .... *
ஓம் ஏகதந்தாயநம ... ...* ஓம் சங்கடநாசனயநம ... ...*

என்று ப்ரதமாவரணபூஜைசெய்து,

ஓம் விக்னகணபதயேநம... ... * ஓம் ஏகதந்தகணபதயேநம... ...*
ஓம் விநாயககணபதயேநம ... * ஓம் சூரகணபதயேநம... ... *
ஓம் தீரகணபதயேநம ....* ஓம் சூர்ப்பகர்ன்னகணபதயேநம *

ஓம் வரதகணபதயேநம ... .*
ஓம் இந்ரகணபதயேநம... ... *
ஓம் லம்போதரகணபதயேநம ...*
ஓம் க்ஷிப்ரப்ரசாதகணபதயேநம *
ஓம் சித்திகணபதயேநம... ... *
....

என்றுத்விதியாவரணபூஜைசெய்து,

ஓம் ரமாயைநம... ... . *
ஓம் ரமேசாயநம ... ... *
ஓம் உமாயைநம... ... ... *
ஓம் வ்ருஷாங்காயநம... ... ...*
ஓம் ரத்யைநம... ... ...*
ஓம் புஷபபாணயநம ... ... *
ஓம் மஹையநம... ... ... *
ஓம் வராஹாயநம ... ...*
ஓம் ஸதாசிவாயநம... ... ...*
....

என்றுத்ருதியாவரணபூஜைசெய்து,

ஓம் ஆதித்யாயநம... .... *
ஓம் ஸோமாயநம ... ...*
ஓம் அங்காரகாயநம ... ... *
ஓம் புதாயநம... ... ... *
ஓம் ப்ரஹஸ்பதயேநம... ... *
ஓம் சுக்ராயநம... ... ... *
ஓம் சனேஸ்வராயநம ... ...*
ஓம் ராகுக்ரஹாயநம ... ... *
ஓம் கேதுக்ரஹாயநம ... ... *
....

என்று சதுர்த்தாவரண பூஜைசெய்து,

ஓம் த்ரத்யைநம... ... ... *
ஓம் சமர்த்யைநம... ... *
ஓம் காந்த்யைநம... ... ... *
ஓம் மதத்ரவாயைநம... ... *
ஓம் சுதாதாராயைநம ... ... *
ஓம் த்ராவிண்யைநம... ... *
ஓம் வசுமத்யைநம ... ...*
....

என்றுபஞ்சமாவரணபூஜைசெய்து,

ஓம் இந்ராயநம... ... ... *
ஓம் அக்னயேநம... ... ... *
ஓம் யமாயநம... ... ...*
ஓம் நிருதயேநம... ... ... *
ஓம் வருணாயநம ... ...*
ஓம் வாயவேநம... ... . *
ஓம் குபேராயநம... ... ... *
ஓம் ஈசானயநம,... ... ... *

என்றுஷஷ்டாவரணபூஜைசெய்து,

ஓம் கணாதிபாயநம ... ... *
ஓம் சுமுகாயநம ... ...*
ஓம் உமாபுத்ராயநம ... ... *
ஓம் கஜவக்த்ராயநம... ... ...*
ஓம் லம்போதராய ... ... *
ஓம் ஹரசூனவேநம ... ...*
ஓம் குஹாக்ரஜாயநம.... ... *
ஓம் கஜகர்ணகாயநம ... ...*
ஓம் ஏகதந்தாயநம ... ... *
ஓம் இபவக்த்ராயநம ... ... *
ஓம் மூஷகவாஹனாயநம ... *
ஓம் விநாயகாயநம... ... ... *
ஓம் கபிலாயநம... ... ... *
ஓம் பின்னதந்தாயநம ... ...*
மாலதீபத்ரம்ஸமர்ப்பயாமி ..*
ப்ருங்கராஜபத்ரம்ஸமர்ப்பயாமி *
பில்வபத்ரம்ஸமர்ப்பயாமி ... *
தூர்வாபத்ரம்ஸமர்ப்பயாமி ....*
பதரீபத்ரம்ஸமர்ப்பயாமி ... *
துத்தூரபத்ரம்ஸமர்ப்பயாமி ... *
துளசீபத்ரம்ஸமர்ப்பயாமி ... *
அபாமார்க்கபத்ரம்ஸமர்ப்பயாமி.*
ப்ருஹதீபத்ரம்ஸமர்ப்பயாமி ...*
சமீபத்ரம்ஸமர்ப்பயாமி ... *
கரவீரபத்ரம்ஸமர்ப்பயாமி ... *
வேணுபத்ரம்ஸமர்ப்பயாமி.... *
அர்க்கபத்ரம்ஸமர்ப்பயாமி ... *
அர்ச்சுனபத்ரம்ஸமர்ப்பயாமி ...*

ஓம் பத்னிஹீனயநம ... ... *	விஷ்ணுக்ராந்தபத்ரம்ஸமர்ப்பயாமி
ஓம் விஷ்ணவேநம... ... ...*	தாடிமபத்ரம்ஸமர்ப்பயாமி ... *
ஓம் பாலசந்ராயநம.... ....*	தேவதாரபத்ரம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் ஹேறம்பாயநம ... ...*	மருகபத்ரம்ஸமர்ப்பயாமி... ...*
ஓம் சுராக்ரகண்யாயநம ... ...*	ஜாஜீபத்ரம்ஸமர்ப்பயாமி ... *
ஓம் சித்திவினயகாயநம... .... *	சிந்துவாரபத்ரம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் சங்கடநாசினேநம ... ...*	ஏகவிம்சதிபத்ராணிஸமர்ப்பயாமி*

என்று- சிறுசண்பகம்- கரசராங்கணி- வில்வம்- அறுகு- இலந்தை - ஊமத்தை- துளசி- நாயுருவி- சிறுவழுதி- வன்னி- அலரி- மூங்கில் - வெள்ளெருக்கு-மருதம்-விஷ்ணுக்ராந்தி-மாதுளை-மந்தாரை-மருவு-சாதிமல்லி வெண்ணொச்சி- என்னுமிவற்றின் பத்திரங்களைக்கொண்டு அருச்சித்து,

ஓம் சுமுகாயநம ... ... *	ஜாதிபுஷ்பம்ஸமர்ப்பயாமி... ...*
ஓம் ஏகதந்தாயநம ... ...*	சாவந்திகாபுஷ்பம்ஸமர்ப்பாமி ...*
ஓம் கபிலாயநம... ... ...*	மல்லிகாபுஷ்பம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் கஜகர்ணகாயநம ... ... *	சம்பகபுஷ்பம்ஸமர்ப்பயாமி......*
ஓம் லம்போதராயநம ... ...*	கல்லாரபுஷ்பம்ஸமர்ப்பயாமி.... *
ஓம் விகடாயநம... ... ... *	கேதகீபுஷ்பம்ஸமர்ப்பயாமி.......*
ஓம் விக்னநாசினேநம ... ... *	வகுளபுஷ்பம்ஸமர்ப்பயாமி......*
ஓம் விநாயகாயநம ... ...*	சதபத்ரபுஷ்பம்ஸமர்ப்பயாமி... *
ஓம் தூமகேதவேநம ... ... *	புந்நாகபுஷ்பம்ஸமர்ப்பயாமி......*
ஓம் கணாத்யக்ஷாயநம .... *	துத்தூரபுஷ்பம்ஸமர்ப்பயாமி ... *
ஓம் பாலசந்ராயநம ... ...*	மாலதீபுஷ்பம்ஸமர்ப்பயாமி.......*
ஓம் பத்னிஹீனயநம ... .*	விஷ்ணுக்ராந்தபுஷ்பம் ஸமர்ப்பயா
ஓம் உமாபுத்ராயநம ... ... *	கிரிகர்ணிகாபுஷ்பம் ஸமர்ப்பயாமி.*
ஓம் கஜானனாயநம... ... ... *	நாகபுஷ்பம்ஸமர்ப்பயாமி ... *
ஓம் ஈசபுத்ராயநம ... ...*	மந்தாரபுஷ்பம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் சர்வசித்திப்பிரதாயகாயநம. *	கோவிதாரபுஷ்பம்ஸமர்ப்பயாமி *
ஓம் மூஷகவாஹனாயநம... ... *	துருமோற்பலபுஷ்பம் ஸமர்ப்பயா
ஓம் குமாரகுரவேநம .... *	ரக்தபுஷ்பம்ஸமர்ப்பயாமி ... *
ஓம் தீர்க்கதுண்டாயநம ... .*	அர்க்கபுஷ்பம்ஸமர்ப்பயாமி ... *
ஓம் இபவக்த்ராயநம... ... ... *	முனிபுஷ்பம்ஸமர்ப்பயாமி ... *
ஓம் ஸங்கடநாசினேநம ... ... *	ஏகவிம்சதிபுஷ்பாணிஸமர்ப்பயாமி

என்று-சிறுசண்பகம்- சாமந்தி- மல்லிகை- சம்பங்கி- செங்குவளை- தாழை- மகிளம்- தாமரை- புன்னை-ஊமத்தை-முல்லை- விஷ்ணுக்ராந்தி-வெள்ளைக்காக்கணம்- நாகை-மந்தாரை- குரா- கோங்கு- செம்பிரத்தம்-வெள்ளெருக்கு- அகத்தி-என்னுமிவற்றின்புஷ்பங்களைக்கொண்டு அருச்சித்து,

ஓம் சுமுகாயநம... ... ... *	ஓம் விகடாயநம ... ... *
ஓம் ஏகதந்தாயநம... ... ... *	ஓம் விக்னராஜாயநம.... ... ...*
ஓம் கபிலாயநம .. .. *	ஓம் கணாதிபாயநம... ... ... *
ஓம் கஜகர்ணகாயநம ... .. *	ஓம் தூமகேதவேநம... ....*
ஓம் லம்போதராயநம ... ...*	ஓம் கணாத்யக்ஷாயநம ... ... *

ஓம் பாலசந்த்ராயநம... ... * ஓம் கஜானநாயநம ... ... *

என்று த்வாதசநாமபூஜைசெய்து,

ஓம் விநாயகாயநம ... ... * ஓம் சோமசூர்யாக்னி லோசநாய *
ஓம் விக்னராஜாயநம ... ... * ஓம் பாசாங்குசதராயநம... ... *
ஓம் கௌரிபுத்ராயநம ... ... * ஓம் சண்டாயநம... ... ... *
ஓம் கணேஸ்வராயநம... ... * ஓம் குணாதீதாயநம... ... ... *
ஓம் ஸ்கந்தாக்ரஜாயநம ... ... * ஓம் நிரஞ்சநாயநம ... ... *
ஓம் அவ்யயாயநம ... ... * ஓம் அகல்மஷாயநம ... ... *
ஓம் பூதாயநம... ... ... * ஓம் ஸ்வயம்சித்தாயநம. ... *
ஓம் தக்ஷாயநம ... ... * ஓம் சித்தார்ச்சிதபதாயநம... ... *
ஓம் அத்யக்ஷாயநம... ... ... * ஓம் அவ்யயாயநம ... ... *
ஓம் த்விஜப்ரியாயநம ... ... * ஓம் பீஜபூரபலாஸக்தாயநம ... *
ஓம் அக்னிகர்ப்பச்சிதேநம... ... * ஓம் வரதாயநம... ... ... *
ஓம் இந்த்ரஸ்ரீப்ரதாயநம... ... * ஓம் சாஸ்வதாயநம ... ... *
ஓம் வாணீப்ரதாயநம... ... * ஓம் க்ருதிநேநம... ... ... *
ஓம் ஸர்வசித்திப்ரதாயநம ... * ஓம் புராயநம ... ... *
ஓம் ஸர்வதனயாயநம ... ... * ஓம் வீதபயாயநம... ... ... *
ஓம் ஸர்வரீப்ரியாயநம... ... * ஓம் கதினேநம... ... ... *
ஓம் ஸர்வாத்மகாயநம... ... * ஓம் சக்ரிணேநம... ... ... *
ஓம் ஸ்ருஷ்டிகர்த்ரேநம... ... * ஓம் இக்ஷுசாபத்ருதேநம... ... *
ஓம் தேவாயநம ... ... * ஓம் அஜாயநம ... ... *
ஓம் அநேகார்ச்சிதாயநம... ... * ஓம் உத்பலகராயநம ... ... *
ஓம் சிவாயநம... ... ... * ஓம் ஸ்ரீதாயநம ... ...
ஓம் சுத்தாயநம ... ... * ஓம் ஸ்ரீபதயேநம ... ...
ஓம் புத்திப்ரியாயநம... ... ... * ஓம் ஸ்துதிஹர்ஷிதாயநம... ...
ஓம் சாந்தாயநம... ... ... * ஓம் குலாத்ரிபேத்ரேநம ... ...
ஓம் ப்ரம்மசாரிணேநம ... ... * ஓம் ஜடிலாயநம ... ...
ஓம் கஜாநநாயநம ... ... * ஓம் சந்த்ரசூடாயநம ... ...
ஓம் த்வைமாத்ரேயாயநம ... * ஓம் காந்தாயநம... ... ...
ஓம் முனிஸ்துத்யாயநம ... ... * ஓம் பாபஹாரிணேநம. ... ...
ஓம் பக்தவிக்னவிநாசாயநம ... * ஓம் ஸமாஹிதாயநம... ...
ஓம் ஏகதந்தாயநம ... ... * ஓம் ஆஸ்ரிதாயநம... ... ...
ஓம் சதுர்ப்பாஹவேநம... ... * ஓம் ஸ்ரீகராயநம... ... ...
ஓம் சதுராயநம... ... ... * ஓம் ஸௌம்யாயநம... ... ...
ஓம் சக்திஸம்யுதாயநம... ... * ஓம் பக்தகாம்க்ஷிதாயநம... ...
ஓம் லம்போதராயநம. ... ... * ஓம் ஔஷதிபதயேநம ... ...
ஓம் சூர்ப்பகர்ணாயநம ... ... * ஓம் அம்ருதாயநம ... ...
ஓம் ஹரயேநம... ... ... * ஓம் கைவல்யாயநம ... ...
ஓம் ப்ரம்மவித்தமாயநம ... * ஓம் சச்சிதானந்தவிக்ரஹாயநம.
ஓம் காலாயநம... ... ... * ஓம் ஞானினேநம ... ...
ஓம் க்ரஹபதயேநம ... ... * ஓம் தயாயுதாயநம ... ...
ஓம் காமினேநம ... ... * ஓம் தாந்தாயநம ... ...

ஓம் ப்ரம்மத்வேஷவிவர்ஜிதாயநம. ... *
ஓம் ப்ரம்மத்தைதத்யபயத்ராயநம *
ஓம் அமரேஸ்வராயநம... ... ...*
ஓம் நாகயக்ஞோபவீதனேநம... *
ஓம் ஸ்ரீகண்டாயநம... .. ...*
ஓம் விதயேநம ... ...*
ஓம் ஸமார்ச்சிதாயநம...... ... *
ஓம் ஸ்தூலகண்டாயநம ... ...*
ஓம் ஸ்வயங்கர்த்தேநம ... *
ஓம் சாமகோஷப்ரியாயநம ... *
ஓம் பரஸ்மைநம... ... ...*
ஓம் ஸ்தூலதுண்டாயநம ... ...*
ஓம் அக்ரண்யைநம ... ... *
ஓம் தீராயநம... ... ...*
ஓம் வாகீசாயநம ... ...*

ஓம் சித்திதாயகாயநம... ... *
ஓம் தூர்வாபில்வப்ரியாயநம ... *
ஓம் வியக்தமூர்த்தயேநம ... ...*
ஓம் அமூர்த்திமதேநம.... ...*
ஓம் பாரவதத்துய ஸ்தங்ககேலனே
,, ஸ்துகமானஸாயநம ... ...*
ஓம் சங்கரோஸ்தங்ககேலனே ஸ்து
,, கமானஸாயநம, ... *
ஓம் ஸம்ஸ்தஜகதாதாயநம... ...*
ஓம் ஹர்ஷாயநம ... ...*
ஓம் மூஷகவாஹனாயநம ... ...*
ஓம் ஹருஷ்டாயநம ... . *
ஓம் துஷ்டாயநம ... ...*
ஓம் ப்ரஸன்னாத்மநேநம ... *
ஓம் சர்வசித்திப்ரதாயகாயநம... *

என்று அஷ்டோத்தரசதநாமபூஜைசெய்து (வனஸ்பத்துயத்பவைர்தூபம்- தசாங்காகருஸம்யுதம்- க்ருஹாணமங்களம்திவ்யம்- மயாதத்தம் விநாயக. ஸ்ரீஉமாசுதாயநம, தூபம்ஸமர்ப்பயாமி. க்ருதாக்தவர்த்திஸம்யுக்தம் தீபம்ஸர்வப்ரகாசகம்- க்ருஹாணேதம்மயாதத்தம்- தேவே ஜாதே ஜகத்பதே. ஸ்ரீருத்ரப்ரியாயநம, தீபம்ஸமர்ப்பயாமி. அன்னைஸ்சதுர்விதைஸ்வாது- ரஸைஷட்பிஸமன்விதம்- பக்ஷ்யபாகிவேதிதம்தேவா- நைவேத்யம்ப்ரதிக்ருய்ஹதாம். போஜ்யான்னாநாவிதைர்யுக்தான் மோதகான் க்ருதபாசிதான்- க்ருஹாணவிக்னராஜேந்த்ர- ஸர்வகார்யார்த்த ஸித்தயே. ஸ்ரீவிக்னநாசினேநம, நைவேத்யம்ஸமர்ப்பயாமி. பலானிமாவிராம் பாணி- ஸ்தாபிதாநிதவாக்ரத- தேனமேஸபலாவாப்தி- பவேஜன்மனிஜன்மணி. ஸ்ரீஸங்கடநாசினேநம, பூர்ணபலஸமர்ப்பணம் ஸமர்ப்பயாமி. பூகிபலஸமாயுக்தம்- நாகவல்லிதளைர்யுதம்- கற்பூரசூர்ணஸம்யுக்தம்- தாம்பூலம்ப்ரதிக்ருய்ஹதாம். ஸ்ரீசித்திவிநாயகாயநம, தாம்பூலம்ஸமர்ப்பயாமி பூஜாபலச ம்ருத்யர்த்தம்- ஸ்வர்ணபுஷ்பம் மயோர்பிதம்- ஸ்தாபிதம் தேனமேப்ரீத்யை- பூர்ணாச்ஸந்துமனோரதான். ஸ்ரீவிக்னேசாயநம, ஸ்வர்ணபுஷ்பம்ஸமர்ப்பயாமி.) என்று- தூபம்- தீபம்-நைவேத்யம்- பூர்ணபலஸமர்ப்பிதம்- தாம்பூலம்-ஸ்வர்ணபுஷ்பம்-என்னுமிவைகளைச்செய்து.

ஓம் கணாதிபாயநம... ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி.... *
ஓம் உமாபுத்ராயநம ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி. ...*
ஓம் அகநாசினேநம ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி... *
ஓம் ஏகதந்தாயநம... ... ...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி. ...*
ஓம் இபவக்த்ராயநம.... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி ... *
ஓம் மூஷகவாஹனாயநம... ...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் விநாயகாயநம ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி.... *
ஓம் ஈசபுத்ராயநம ... ...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் ஸர்வசித்திப்ரதாயகாயநம ...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி.... *

ஓம் குமாரகுரவேநம... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் ஸர்வஸங்கடநாசனாயநம ...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி... *

என்று இப்பதினொருநாமங்களாற் றூர்வையர்ச்சனைசெய்து, (கணாதிப நமஸ்தேஸ்து- உமாபுத்ராசஜாநந- ஏசதந்தேபவக்ரேதி- ததாமூஷகவாஹன, விநாயகேஸபுத்ரேதி- ஸர்வஸித்திப்ரதாயக- குமாரகுரவேநுப்ய ம- ஸர்வஸங்கடநாசன, இத்யேகாதசதூர்வாயுக்மபூஜாம் ஸமர்ப்பயாமி.

என்றுதியானஞ்செய்து,

ஓம் கணேசாயநம ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் வக்ரதுண்டாயநம ... ...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி... *
ஓம் உமாபுத்ராயநம ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் விக்னராஜாயநம... .... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி... *
ஓம் காமதாயநம ... ...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் விக்னேஸ்வராயநம ... .. * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி... *
ஓம் ஜீமூதாயநம... ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் சக்திஸம்யுக்தாயநம ... ...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி... *
ஓம் கௌரிமலஸமுத்பவாயநம...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் ஏகித்யேயாயநம ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி... *
ஓம் சுத்தகுணாயநம ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி ...*
ஓம் மஹாகாயாயநம ... ...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி... *
ஓம் ஸித்திதாயநம...... ......* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி... *
ஓம் மஹோதராயநம... .....* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி.....*
ஓம் கஜவக்த்ராயநம... ... ...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் பீமாயநம... ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் பரசுதாரிணேநம ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் கரிகும்பாயநம ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் விஸ்வமூர்த்தயேநம ... ... * தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் ஸித்திகணேசாயநம ... ...* தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*
ஓம் உக்ரதேஜஸே லம்போதராயந தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி......*

என்றுமீட்டும் இவ்விருபத்தொருநாமங்களாற்றூர்வையருச்சனைசெய்து, (கணேசோவக்ரதுண்டஸ்ச- உமாபுத்ரஸ்த்தைவச- விக்னராஜஃகாமதஸ்ச விக்னேஸ்வரயிதீஸ்முர்தஃ, ஜீமூதஸ்சக்திஸம்யுக்தோ- கௌரீமலஸமுத்பவஃ- ஏகித்யேயஸ்சுத்தகுணோ- மஹாகாயயிதீஸ்முர்தஃ, ததஸ்ஸஸித்திதஃப்ரோக்தோ- மஹோதரயிதீஸ்முர்தஃ- கஜவக்த்ரஸ்சபீமஸ்ச- ததஃபரசுதார்யபி, கரிகும்போவிஸ்வமூர்த்தி- உக்ரதேஜாஸ்ததைவச- லம்போதரஸ்ததஸ்ஸித்தி- கணேசச்சைகவிம்சதிஃ. இத்யேகவிம்சதி தூர்வாயுக்மபூஜாம்ஸமர்ப்பயாமி.) என்று தியானஞ்செய்து, (நாமானிரமணீயானி- ஜபேதபிஸ்சபூஜயேத்- கணேசாத்தஸ்யவஸ்யந்தி- சங்கடானிமஹாந்த்யபி, மஹாஸங்கடதத்கோஹம்- கணேசசரணம்கதம்- தஸ்மான்மனோரதம்பூர்ணம்- குருவிஸ்வேஸ்வரப்ரயா, ததஸ்வர்ணமயம்புஷ்பம்- விகணேசாயநிவதயேத், ஸ்ரீகணேசாயநம- நைவேத்யம்ஸமர்ப்பயாமி. கணாதிபநமஸ்தேஸ்து- சத்யஞ்ஞானப்ரகாசக- நீராஞ்சனம்ப்ரதா

ஸ்யாமி- தேஜோராஜேநமோஸ்துதே. ஸ்ரீராஜகிபாயநம, உத்தரநீராஞ்சனம்ஸமர்ப்பயாமி. யானிகானிசபாபாணி- ஜன்மாந்தரக்ருதானிச- தானிதானிவினஸ்யந்தி- ப்ரதக்ஷிணபதேபதே, பாபோஹம்பாபகர்மாஹம்- பாபாத்மாபாபஸம்பவ:- த்ராஹிமாங்க்ருபயாதேவ- சரணாகதவத்ஸல, அன்யதாசரணம்நாஸ்தி- த்வமேவசரணம்மம- தஸ்மாத்காருண்யபாவேன- ரக்ஷரக்ஷகணாதிப. ஸ்ரீகணாத்யக்ஷாயநம, ப்ரதக்ஷிணம்ஸமர்ப்பயாமி. நமோஸ்துதேவதேவேச- பக்தானுமபயப்ரத- விக்னானாம்நாசகர்த்ரேதே- ஹராத்மஜநமோநம. ஸ்ரீவிக்னநாசினேநம, நமஸ்காரம்ஸமர்ப்பயாமி. வக்ரதுண்டமஹாகாய- ஸூர்யகோடிஸமப்ரப- அவிக்னம்குருமேதேவ- ஸர்வகார்யேஷுஸர்வதா. ஸ்ரீவக்ரதுண்டாயநம, ப்ரார்த்தனம்ஸமர்ப்பயாமி.) என்று நைவேத்யம்- உத்தரநீராஞ்சனம்- ப்ரதக்ஷிணம்- நமஸ்காரம்- ப்ரார்த்தனம்- இவைகளைச்செய்து (கணேஸ்வரநமஸ்துப்யம்- ஸர்வசித்திப்ரதாயக- சங்கஷ்டம்ஹரமேதேவ- க்ருஹாணார்க்யம்நமோஸ்துதே. ஸ்ரீகணேசாயநம, இதமர்க்யம்ஸமர்ப்பயாமி. க்ருஷ்ணபக்ஷசதுர்த்யாந்து- பூஜிதோஸிவிதூதயே- க்ஷிப்ரப்ரசாதமைதேஹி க்ருஹாணார்க்யம்நமோஸ்துதே. ஸ்ரீவிக்னநாசினேநம, இதமர்க்யம்ஸமர்ப்பயாமி. திதீனாமுத்தமேதேவி- கணேசப்ரியவல்லபே, ஸங்கஷ்டம்ஹரமேதேவி- க்ரஹாணார்க்யம்நமோஸ்துதே. ஸ்ரீசதுர்த்திதேவ்யைநம, இதமர்க்யம்ஸமர்ப்பயாமி.) என்று அர்க்கியங்கொடுத்து, (க்ஷீரோதார்ணவசம்பூத- லக்ஷ்மிபந்தோநிசாகர- க்ருஹாணார்க்யம்மயாதத்தம்- ரோஹிண்யாஸஹதஸ்ஸசின். ரோஹிணீசஹிதசந்த்ராயநம, இதமர்க்யம்ஸமர்ப்பயாமி. போமாயத்விஜவர்யாய- தேவராஜாயசிவினே- ரோஹிணீசஹீதாயாபி- க்ருஹாணார்க்யம்நமோஸ்துதே. ரோஹிணீசஹிதசந்த்ராயநம, இதமர்க்யம்ஸமர்ப்பயாமி. ககநாம்கணஸம்தீப- க்ஷீராப்திமதனோத்பவ - பாபாவஸிததிகந்தாய- ஸோமராஜநமோஸ்துதே. ஸ்ரீசந்த்ராயநம, நமஸ்காரம்ஸமர்ப்பயாமி.) என்றுசந்த்ரபூஜைசெய்து, (மோதகாம்ஸ்தபலாம்ஸ்சாபி- தட்சிணாபிஸ் ஸமன்விதான்- க்ருஹாணத்வம்த்விஜஸ்ரேஷ்ட- வ்ரதஸ்யபரிபூர்த்தயே. ஸ்ரீசற்குரவேநம, உபாயதானம்ஸமர்ப்பயாமி. ப்ரதிமாங்குரவேதத்யா- தாசார்யயஸதட்சிணம்- வஸ்த்ரம்கும்பஸமாயுக்தா- மாதௌமந்ரமிமம்படேத், கணேஸ்வரப்ரஸாதேன-மமஸந்துமனோரதா: துப்யம்ஸம்ப்ரததேதேவ- ப்ரதிமாம்துகஜானன, இஷ்டகாமார்த்தஸித்யர்த்தம்- புத்ரபௌத்ரப்ரவர்த்தன- கணராஜதேவேச- விக்னராஜவிநாயக, தவமூர்த்திப்ரதானேன ப்ரசன்னோபவசர்வதா. ஸ்ரீசற்குரவேநம, கலசப்ரதிமாதானம்ஸமர்ப்பயாமி.) என்று ஆசிரியபூஜைசெய்து, அவருக்குத்தக்கபடிதானங்கொடுத்துப், பூஜைசெய்த கலசமுதலியவைகளையும் அவருக்களித்து, வேதப்பிராமணர்கட்குப் பதினாயிரம் பசுக்களையும் அவைக்கேற்ற பொருள்களையுந் தானஞ்செய்து, யதாபிரகாரந் தனது அரமனையைச்சேர்ந்து அரசாக்ஷி செய்திருக்கின்ற நாளையில், தனது மனைவியாகியசுகந்தையென்பவள் கருப்பமுற்றுப், பத்தாந்திங்களில் ஒரு புத்திரனைப்பெற்றனள். அப்புத்திரனுக்குக் காலுங்கையுமில்லாமல், ஏனைய அவயவங்களெல்லாம் மிக்க அழகுவாய்ந்திருப்பக் கண்டு, தந்தைமனங்கலங்கி, ஐயோ - எமதுபங்கிமறுஜ இப்பங்கமான பிள்ளை

வரவேண்டுமென்று துக்கித்திருந்தனள். அதை அரசன் கேள்வியுற்றுத் தானும் அப்புதல்வனைவந்துபார்த்து, அதிகதுயரங்கொண்டு, தன்மனைவியைத்தானே தேற்றிப், பெண்ணே - இப்புத்திரன் விநாயகப்பெருமானுடைய விரதபலத்தினாலுண்டானவனாதலால், இவனுக்குண்டாகிய வுடற்குறையை அவ்விநாயகப்பெருமானே விலக்கியருளுவர், நீயொன்றற்கும் அஞ்சலையென்று தனதுமனைவிக்குந் தேறுதல்சொல்லிப், பின்னர் அக்குழந்தைக்குச்சாதககன்மாதிகளைச்செய்து, வேதப்பிராமணர்கட்கெல்லாம் இரத்தினங்களையும் பொன்னையும் மழைபோலச்சொரிந்து, கார்த்தவீரியனென்னு நாமகரணஞ்சாற்றினன். இப்பால் கார்த்தவீரியனுக்குப்பன்னிரண்டுவருடமானபோது, தேத்தாத்திரியமுனிவர்தற்செயலாய் கிருதவீரியனிடத்தில்வர், அவரையவ்வரசன் எதிர்கொண்டுபணிந்து, ஓராதனத்திலிருத்தி, சுவாமி- அடியேன்பலநாள் அரியதவங்களைச்செய்து ஓர்புதல்வனைப்பெற்றேன், அவனோ-பகைவர்களெல்லாங்கண்டுநகைக்கும்படியாகக், காலுங்கையுமில்லாதவனாய்த்தோன்றினன், யானியற்றிய தவங்களில் குற்றம்யாதாயினுமுண்டோ அறிந்திலேன், வெகுநாள் புத்திரனில்லாமல் வருந்தினேன், பின்னர் ஓர்புத்திரனைப்பயந்தும் என்மனக்கிலேசந்தீர்ந்தேனல்லேன், என்னசெய்குவேன், அடியேன்மீது தேவரீர்கிருபைவைத்து, அப்புதல்வனுக்குமுடம் நீங்குமுபாயமொன்றையநுக்கிரகித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குத்தேத்தாத்திரியமுனிவர்மனதிரங்கி, அரசனே- யாமுனதுபுதல்வனைக்காணவேண்டியே யிங்குவந்தோம், ஆதலால்- அவனையிவணிற்கொண்டு வரக்கடவையென்றுசொல்ல, அவ்வாறே அப்புதல்வனைக்கொண்டுவந்து எதிரில்விட, அவனை அம்முனிபுங்கவர்பார்த்தருளி, அரசனே- நீ இப்புதல்வனைக்குறித்து யாதொரு துயரமுங்கொள்ளவேண்டுவதில்லை, இவன் இவ்வுலகத்திற்கெல்லாஞ் சக்கிரேஸ்வரனாயிருப்பனென்றுசொல்லி, அப்புதல்வனுக்குத்தீக்ஷைசெய்து, விநாயகமூர்த்தியினுடைய ஏகாக்ஷரமந்திரத்தையுபதேசித்துப்போயினர். பின்னர் கார்த்தவீரியன் தன்தந்தையாகியகிருதவீரியனைப்பார்த்து, பிதாவே-யான்தேத்தாத்திரியமுனிவருபதேசித்த மந்திரத்தையநுட்டித்து வரம்பெறுதற்கு, என்னைவனத்திற்கொண்டுபோய் விடவேணுமென்று கேட்டனன். அவ்வாறே அரசன்சகலபரிசனங்களையுங்கூட்டி, அநுப்பத்தக்கவரிசையோடும் அவனைவனத்திலனுப்பினன். இப்பால் அப்புத்திரன் வனத்திலிருந்து, அன்னபானாதிகளை நீத்துக், கணேசமூர்த்தியைக் கருத்திலிருத்தி, ஐம்பொறிகளையுநிக்கிரகித்து, ஒப்பற்ற ஏகாக்ஷரமந்திரத்தை இடைவிடாது தியானித்துவந்தனன். இவ்வாறுபன்னிரண்டு வருடஞ்சென்றபின்பு, அவன் செய்துவருகின்ற தவத்திற்கு விநாயகமூர்த்திகிருபைசுரந்து, அவ்விடத்திலுள்ள ஓர்தடாகத்தினிடமாக அளவற்ற தேவர்களோடுந்தோன்றி பிரத்தியக்ஷமாயினர். உடனே- தானெழுந்து வணங்கக்கூடாமையால், தனது மனத்தாலனந்தமுறைவணங்கினன். அதற்கு விநாயகப்பெருமான் சந்தோஷித்து, அன்பனே- நீ கருதியவரங்களைக்கேளென்று திருவாய்மலர்தலும், சுவாமி- முடவனாகிய எனதுமுகத்தைநோக்கி முற்றினுங் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். உடனே- விநாயகமூர்த்தி அவனுக்கு இரங்க

கொல்களையும் ஆயிரங்கைகளையுந்தந்து, அதற்கேற்ற வலிமையுங்கொடுத்துக்கரந்தருளினர். பின்னர் அவ்விநாயகமூர்த்தியுடன் வந்திருந்தபிரமன்முதலிய எல்லாத்தேவர்களும் அக்கார்த்தவீரியனைப்பார்த்து, ஓவிரதசீலனே-நீ ஒருகற்பகாலம்வரையில் ஆயுள்பெற்றிருந்து யாவர்க்கும் இதமேசெய்து, எதிர்த்துவருகின்ற சத்துருக்களையெல்லாம் ஐந்நூறுபாணங்களினால்ஜெயித்து வாழ்ந்திருக்கக்கடவையென்று அநுக்கிரகித்தார்கள். இப்பால் தனக்குக்கணேசமூர்த்தி வரங்கொடுத்தலும் முன்னமே, இரண்டுகால்களும் ஆயிரங்கைகளுமுண்டாகக்கண்டு, சர்த்தனுடையகிருபையை நினைந்து நினைந்து, மனமுருகி, ஆனந்தக்கண்ணீர்சொரிந்து, முடிவற்றஅன்பினால் அவர்கரந்தருளிய திசையைப்பலமுறைவணங்கி, சிற்பசாத்திரவிதிப்படி பொன்னினாலும் மணியினாலும் ஓராலயஞ்சமைத்து, சந்திரசடாதரமூர்த்தியாகிய விநாயகப்பெருமான் தனக்குப் பவளவொளியோடுமெழுந்தருளிக் காட்சிகொடுத்தமையால், பவளத்தினால் ஓர்மூர்த்தியைச்செய்து, அம்மூர்த்தியை அவ்வாலயத்திற்றாபித்துப்பூசித்துவந்தனன். அம்மூர்த்திபவளத்தினாற்செய்திருக்கின்றமையால், அதற்குப்பிரவாளவிநாயகனென்றும், அவ்வனத்திற்குப் பிரவாளவனமென்றும் பெயர்வழங்குகின்றது. அப்பிரவாளவிநாயகருடைய பெருமைகளை முழுவதும் யாவராற்பேசக்கூடும். பின்னொருகாலத்தில், ஆதிசேடன் பூபாரம்பொறுக்கும்படி அவ்வனத்தின்கண்வந்து, அங்கெழுந்தருளியிருக்கின்ற பிரவாளமூர்த்தியைப்பணிந்து வந்தித்தனன். அதற்கவர்கிருபைசுரந்து, அவன்பூபாரம்பொறுக்கும்படி வரங்கொடுத்தருளினர். பின்னர் ஆதிசேடன் அவ்வனத்தின்கண் ஓர் நகரமுண்டாக்கி, அதற்குத்தரணிதர நகரமென்று திருநாமமிட்டுத், தன்னையாட்கொண்டபிரவாளவிநாயகமூர்த்திக்குத் தரணிதரவிநாயகனென்று மற்றொருதிருநாமமுஞ்சாத்தினன். இராவணனும் அம்மூர்த்தியைப்பூசித்து இலங்காதிபத்தியம் பெற்றனன். பஞ்சபாண்டவர்களும் அவரையேபூசித்துத், துரியோதனாதிகளைச்செயித்து அரசாட்சிபெற்றனர். அரசனே- இத்தன்மைத்தான சிறப்பினைவாய்ந்த சங்கட்டசதுர்த்திவிரதஞ்செய்தபலனிலே, ஒருநாள் விரதபலனை யாராகிலும் நமதுகையில்தத்தஞ்செய்தால், இவ்விமானம் விண்ணிலெழும்பும். என்றுதேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச்சொல்லினன்.

கணபதிதுணை.

முப்பத்தாறாவது.

சூரசேனன்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே, கிருதவீரியமகாராசன்விநாயகமூர்த்தியினுடைய சங்கட்டசதுர்த்திவிரதத்தையனுட்டித்துக், கார்த்தவீரியனைப்பெற்ற காரணத்தைச்சொன்னோம், இப்பால் சூரசேனமகாராசனுபாசி

த்தகிறத்தினைச் சொல்லுவோங்கேட்பீராக, அச்சூரசேன மகாராசன் தேவேந்திரனைப்பணிந்தெழுந்து, ஓ சுரலோகசக்கிரேஸ்வரரே- அங்காரகசதுர்த்திவிரதத்தின் மகிமையையும், அறுகு வன்னி மந்தாரை இவைகளின் பெருமையினையும், அடியேற்கு அங்கைநெல்லிக்கனிபோல அறிவித்தீர், அதனையெல்லாம் ஐயமில்லாமல் அறிந்துகொண்டேன், இத்தன்மைத்தானமேலாகியவிரதத்தை இம்மூவுலகின்கண் ஒருவருஞ்சொல்ல யான்கேட்டதில்லை, தேவரீர் அடியேன்மீதுகிருபைசுரந்து திருவாய்மலர்ந்தருளினீர், அதற்கடியேன்புரியுங் கைம்மாறென்னவிருக்கின்றது, என்றுபலமுறை உபசரித்து, எவ்வாறேனும் அங்காரகசதுர்த்தியையநுட்டிக்கின்ற ஓர்விரதியைக்கண்டுபிடித்து, இவ்விமானத்தை விண்ணிலெழுப்ப வேண்டுமென்று உத்தேசித்து, அவ்விரதியைக் கண்டுபிடிக்குமாறு நாற்றிசைகளினுந்தூதுவரையேவினன். அத்தூதுவரும் அவ்வாறேசென்று, வீடுகள் தோறும் விசாரித்துக்கொண்டு வருகின்றபோது, மற்றொருவிமானம் ஆகாயத்தின்கணின்று பூமியிலிறங்கக்கண்டு, அதன்வரவை யறிவோமென்று அருகிற்சென்றனர். பின்னர் அவ்விமானத்துளிருந்த தேவகணங்கள், அந்நகரத்திலிருந்த ஓர்புலைச்சிக்குத்தெய்வசரீரங்கொடுத்து, அவளை ஆடல்பாடல் முதலியசிறப்புக்களோடு அவ்விமானத்திலேற்றக்கண்டு, இதென்ன அற்புதமென்று ஆச்சரியங்கொண்டவர்களாய், உடனே அவர்களைப்பணிந்தெழுந்து, ஓகணநாதர்களே- இவள் இப்பிறவியிற் புலைச்சியாயிருந்தனள், எவ்வளவேனுந் தருமமென்பதைச் செய்தறியாள், முற்பிறவியில் யாதேனுஞ்செய்திருக்கின்றனளோ அதனையறிந்திலேம், அரிய தவத்தர்கட்குங் கிடைத்தற்கருமையதாகிய இத்தெய்வவிமானத்தை இவளுக்குத்தந்தீர்களாதலால், இவளது புண்ணியபலனை இன்னதென்று அடியேங்கட்குத் தெரிவித்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தார்கள். அதற்கத்தேவகணங்களிசைந்து சொல்லுவார், வங்காளதேயத்தில் அரசாட்சி செய்துவந்த சாரங்கதரனென்னும் ஓரரசனிருந்தான். அவனுக்குச்சுந்தரியென்கின்ற ஒருபுதல்வியிருந்தனள், அவள் சித்திரனென்னும் அரசகுமாரனுக்கு மனையாட்டியாயினள். ஆயினும்- அவளது இசைக்கியானத்தினாலும், வெருண்டபார்வையினாலும், உருவலக்ஷணத்தினாலும், தேவர்களாயினும் முனிவர்களாயினும் அவளுக்கெதிர்ப்படுவார்களாயின், உடனே மயங்காமற்செல்கின்றதில்லை. இவளுங்கற்பென்பதைக் கனவின்கண்ணுமறியாளாகி, இல்லறவொழுக்கத்தைநீக்கித், தன்னை விழைந்தோரையெல்லாந் தானும்விழைந்து, வருணாச்சிரம முதலியவைகளைத்துறந்து கலந்திருந்தனள். அதை அக்கினிசாட்சியாய் விவாகஞ்செய்த அவள்கணவன் அறிந்து, அறிவற்றவளே- எனது குலத்தைக்கெடுப்பதற்கா எனக்கு வந்துநேர்ந்தனை, இனி இல்லைவிடுத்து வெளியிற்செல்லுவையெனில், உன்தசையையுனக்கேயிரையாக்குவனென்று கோபித்து, அவளைக்காவலில் வைத்தனன். அவ்வாறேசிலநாள் அடங்கியிருப்பவள்போலிருந்து, மனதிற் கபடங்கொண்டு, தனதுகணவன்நித்திரைசெய்யுஞ்சமயத்தில்வாளைக்கொண்டு அவனுயிரைமாய்த்துப், பரபுருடனிடத்திற்போய்ச்சுகித்திருந்தனள் அதைக்காவலாளர்களறிந்து, சித்திரராசனைக்கொலைசெய்தவள் இவளேயென்றுதீர்மானித்து, அவள்கைகளைக்கட்டிப் பிடித்துக்கொண்டுசென்று,

அரசனுத்தரவின்படி யவளைச்சேதித்தனர். உடனே அவளையமதூதர்கொண்டுபோய், அளவற்றகாலங் கொடியநரகங்களிற்செலுத்திவதைசெய்து, பின்னர்இன்னகரத்திலுள்ள சேரியிலேபுலைச்சியாய்ப் பிறக்கும்படி விடுத்தார்கள். இவள் முன்செனனமுழுவதும் பாவமேசெய்தன ளல்லாமல்,ஓர்தினையளவும் புண்ணியஞ்செய்ததில்லை. இச்சனனத்தில் இதுகாறும் ஒருபுண்ணியமுஞ்செய்தறியாள். இவள் இத்தன்மைத்தானமகாபாதகியாயிருந்தபோதினும், இன்றுதயகாலத்திற்கள்ளருந்திப்,பகலெல்லாம்அதிகவெறியினாற்றலையெடுக்கமாட்டாதுகிடந்து, பொழுதுபோனபின்புசிறிதுவெறிநீங்கிப்பசியதிகரிக்க,அதனால்இரைதேடிஓர்வீட்டினருகிற்சென்றனள். அவ்வாறுசெல்லுகையில், இத்தினம் விநாயகசதுர்த்தியாதலால்,அச்சதுர்த்திவிரதத்தையவ்வீட்டிலுள்ளோர்கள் அநுட்டித்துக்,கணேசமூர்த்திக்குநிவேதித்தபதார்த்தங்களிற்றுங்கள்புசித்து மிகுந்தசேடத்தைத்தெருவிற்கொண்டுவந்து வீசினார்கள். உடனேஇப்புலைச்சியானவள்அதனையெடுத்துத்,தனதுபசிதீரப்புசித்தனள்.மேலுமவ்வீட்டிலுள்ளோர்கள் கணபதி கணபதியென்று துதிசெய்தார்கள். அதனைக்கேட்டதானுங் கணபதி கணபதி கணபதிஎன்றுமுக்காற்கூறினள்.இவள்சங்கட்டசதுர்த்தியிற்றமதுதிருநாமத்தைச்சொன்னாளென்று விநாயகமூர்த்திக்குக்கிருபைசுரந்து,இவளை அன்புடன்கொண்டுவருமாறுஎங்களுக்காக்கியாபித்தனர். அவ்வாறேயாங்கள்வந்து,இவளுக்குத்தெய்வசரீரந்தந்துவிமானத்திலேற்றினோம்,இதுதான்புலைச்சியைவிடுபுகச்செய்தகாரணமென்று தேவகணங்கள்கூற,அதைக்கேட்டதூதர்கள்மீட்டும்அவர்களைத்தொழுதெழுந்து,ஓகணத்தலைவர்களேஇந்திரன்ஆகாயத்திற்செல்கின்றபோது,ஓர்நோயாளியினுடையபார்வையால்அவனுடையவிமானங்கதிதப்பி இப்பட்டணத்திலிறங்கியது,அஃதுமீட்டும்ஆகாயத்திலெழும்படியாகநீங்கள்காட்சிகொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குத்தேவகணங்களிசையாமல், எமதுகர்த்தாவினதுகட்டளையாதோ-அதனையாங்கள்செய்து வருவதேயன்றி, எங்கள்சுதாவில் மற்றொருகாரியமுஞ் செய்யோமென்றுசொல்லித், திடீலென்றெழுந்து ஆகாயமார்க்கமாக விமானத்தைச் செலுத்திக்கொண்டுபோனார்கள்.இப்பால் - சிறகுற்றெழுந்தமலைபோலஆகாயவீதியைக்கிழித்துச்செல்கின்ற அவ்விமானத்தில், புலைச்சரீரமொழிந்துதெய்வசரீரம்பெற்றிருக்கின்றவளதுபார்வையானது இந்திரனுடைய விமானத்தின்மீதுபட, உடனே ஆண்டவனுடையதிருக்கண்ணோக்கத்தால் ஆணவமலத்தினின்றுமெழுந்தவர்கள்போல,அவ்விமானமும் எழும்பி ஆகாயமார்க்கத்திற்சென்றது. பின்னர் அத்தூதர்கள் தங்களரசனிடத்திற் சென்று பணிந்தெழுந்து, ஆகாயத்திலிருந்து மற்றொருவிமானம் வந்ததையும், அதுமீட்டுந்தனதுகதியிற்சென்றதையும், அதனால் இந்திரவிமானம்விண்ணிலெழுந்ததையும் விவரமாகச்சொல்ல, அவையனைத்தையும்அரசன்கேட்டு,அவ்விரண்டு விமானத்தையுஞ் சாஷ்டாங்கமாகத்தொழுதெழுந்து,பிறவித்தரித்திரனுக்குப்பெரும்பாக்கியங்கிடைத்ததுபோல ஆனந்தமுற்றுத்தனது அரண்மனையிற் சென்று, வசிட்டமுனிவரை வரவழைத்து, மாசிமாத அமரபக்ஷத்தில் வருகின்ற அங்காரக சதுர்த்தசியில் கணேசமூர்த்தியை மனதிற்றியானித்து,வேதாகமமுறைமைப்படி விரத மநுட்டித்து,

மாதமாதம் வருகின்ற சதுர்த்தசிதோறும் இடைவிடாது பூசித்துவாழ்
கின்ற நாளையில், விநாயகமூர்த்தியினுடைய பெருங்கருணையால் தேவ
கணங்கள் ஓர் விமானத்தைக் கொண்டுவந்து அவ்வரசனெதிரி லிறங்கி
னார்கள். உடனே அரசன் ஆனந்தங்கொண்டு, ஞானரேலென்று அவ்வி
மானத்தருகில்வந்து, மும்முறைவலஞ்செய்து, சாஷ்டாங்கமாகப் பணி
ந்து நின்றனன். அவனைத்தேவகணங்கள் நோக்கி, அரசனே - உன்னை ய
ழைத்துவருமாறு கணேசமூர்த்தி எங்கட்காக்கியாபித்திருக்கின்றாராதலா
ல், விரைவில் இவ்விமானத்திலெழவேண்டுமென்று சொன்னார்கள். அத
னை யரசன்செவிக்கமுதாகக்கேட்டு, ஓ கணநாதர்களே- இவ்வூரி லுள்ளோ
ர் ஒருகணப்போதும் நம்மைவிட்டுப்பிரிந்திருக்கமாட்டார்களாதலால், அ
வர்களையும் என்னோடு அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று இரங்
தனன். அதற்கு உனதிட்டப்படியே செய்யலாமென்று விடைகொடுத்த
னர். உடனே அந்நகரிலுள்ளவர்களெல்லாம் அவ்விமானத்தின்கணேறின
ர். சூரசேனமகாராசன் தனதுசுற்றத்தினர் முதலிய சகலபரிசனங்களோ
டுமேறினன். முன்னர் நகரத்தாரேறியபோது, தொழுநோய்கொண்டிருக்
கின்ற ஓர்வணிகனுமேறினன். அவ்வணிகன்மகாபாவியாதலால், அவ்விமா
னம் பூமியைவிட்டெழாமல், முன்னர் இந்திரவிமானம் எவ்வாறழுந்தியி
ருந்ததோ அவ்வாறிருந்தது. அதன்காரணத்தைக்கணநாதர்களுணர்ந்து, அ
ரசனே- இவ்விமானத்திலேறியிருக்கின்ற சனங்களிற்குட்டநோய்கொண்
ட ஒருவணிகன் இருக்கின்றான், அதனால் இவ்விமானஞ்சற்றும் எழவில்
லை, அவ்வணிகன் முற்பிறவியிற்பெரும்பாதகஞ்செய்தவனாதலால், இப்பி
றவியில்இக்குட்டநோய்க்குஇரையாயிருக்கின்றனன், அவனது வரலாற்றி
னையுஞ் சொல்லுவோங்கேட்பாயாக. கவுடதேயத்திலே, தவசீலனென்றொ
ரு வேதியரிருந்தார். அவருக்குச்சானகியென்னு மனைவியிருந்தனள். இவ்
விருவருஞ் சுகித்துவாழ்கின்றநாளையில், இவர்கட்கு ஓர்புத்திரனுண்டாயி
னன். அப்புத்திரனுக்குச் சாதகம்பார்த்துப், புதனென்னுநாமமிட்டனர்.
அவனும் அப்பெயருக்கேற்றபடிவிறிவளர்ந்து, வேதங்களையோதிக், கலைக
ளையாராய்ந்து, அறிஞர்களெல்லாம்புகழத்தக்கமேதையாயினன். இப்பால்
அவன்மணப்பருவ முற்றகாலையில், அவன்தாய்தந்தையர் தங்கள் வருண
த்திற்கேற்ற குலங்கோத்திரமுதலானவைகளை விசாரித்துக், கை - கால்- உ
தடு- நா- தோள்- தனம்-முதலியஎல்லாஅவயவங்களினுந், தெய்வமாதர்களை
யும் ஒப்பிடக்கூடாத வனப்பினைவாய்ந்த சாவித்திரியென்பவளை விவாக
ஞ்செய்துவைத்தார்கள். அவளோடு அப்புதனென்பவன் கூடிவாழ்கின்ற
நாளையில், ஊழ்வினைவயத்தனாய்ப், பரத்தையிடஞ்சென்று பரிவுற்றிருந்து
கள்வெறிகொண்டவன்போல மதிமயங்கி, அவர்களிடத்திற்றானே புசித்த
லையுஞ்செய்திருந்தனன். அவனிவ்வாறிருக்க, அவன் தாய்தந்தையரவனை
க்காணாதுவருந்தி, வெளியிற்சென்று தேடுவதற்குந்தமதுவிருத்தாப்பியத
சையினால் கூடாதவர்களாகி, ஆகாரநித்திரையின்றி, மிகவும்ஏக்கமுற்றிரு
ந்து, சின்னாள்சென்றபின்பு இன்னு நமதுபுதல்வன் வரக்காணேமே-என்
கு எவ்வாறாயினனோவென்று திகைத்து, ஓர்நாள் அவன்தந்தையாகிய த
வசீலர் தடியூன்றிக்கொண்டு, மெல்லமெல்லவீதியின்வழியாய்நடந்துதே
டிக்கொண்டுசெல்லுகையில், எதிரில் வீமனென்பவன் வரக்கண்டு, அவ

னைத்தமது குமாரனைக்குறித்துவிசாரித்தனர். அவன் உமதுகுமாரன்வேசையராசையில் மூழ்கியிருக்கின்றனனென்றுசொல்ல, அது கேட்டவுடனே மனமழுங்கிப், பின்னும் புத்திரசோபம்விடாமையால் அவ்வேசையினிடத்திற்குத் தள்ளாடிச்சென்று, அவள்வீட்டின்தலைவாய்தலில்நின்று, தனது புதல்வனைக்கூவி, மைந்தனே- பொய்யை மெய்யாகக்கொண்டிருக்கின்ற வேசையர்மையலில்விழலாமா, நின்னைப்போன்ற அறிவினர்களும்இவ்வுலகின்கணுண்டா, நல்லொழுக்கங்களையெல்லாங்கைவிட்டனை நான்மறையோதுதலுந்தவிர்த்தனை, அழகுவாய்ந்த குலஸ்திரீயைமறந்தனை, நமதுவருணாச்சிரமத்திற்கேற்றஎல்லாச்சன்மார்க்கங்களையுமொழிந்தனை, ஆயினும்- உன்னை அருமையாயீன்றெடுத்தஎங்களையும்விட்டிருக்கலாமோ, அப்பா- உனது மனம் மரமோ, கல்லோ, இரும்போ, பேதைமக்கையுடைய ஸ்திரீகளும் வயதின்மூத்தவர்களை விட்டுப்பிரிதல் தருமமல்லவென்று அவர்கள் சமீபத்திற்றானேகாத்திருப்பார்கள், சகலநூல்களையும் உணர்ந்த நீ இவ்விருத்தாப்பியகாலத்தில் எங்களைவிட்டிருப்பது தருமமா, இனியேனும் வீட்டில் வந்திருவென்று இவ்வாறு அனந்தமுறையிருத்த பரிவோடுங் கேட்டுக்கொண்டனர். அதற்கப்பாதகன் கோதித்தெழுந்து, எனக்குப் புத்திகூறவா இங்குவந்தனை யென்றுகோபித்துத், தனது உரங்கொண்டமட்டும் அவர் தாடையிலறைந்தனன். உடனே அவர் சுபாவத்திற்றானே விருத்தாப்பியதசையை யுண்டாயிருந்ததன்றிப், புத்திரசோபத்தினாலுங் கிரமமான புசிப்பில்லாமையினாலும் வாடியிருந்தமையால், அவனறைந்ததைத் தாளமாட்டாது ஒரு சார்புமின்றி இறந்தனர். பின்னர் அக்கொடும்பாவி இதுதானுனக்குச் சரியான தண்டனையென்றுகூறி, யாவர்க்குந் தெரியாதபடி நிலத்தைக்கீறி அவரை அடக்கஞ் செய்தனன். இப்பால் அப்பாவி அவரது பொருளையெல்லாங் கொண்டுவந்து வேசைக்களிப்போமென்றுநினைத்துத், தனது வீட்டிற்குச்செல்ல, அவன்தாயானவள் அவனைக்கண்டு, நல்லவரவென்றுதழுவிக்கொண்டு, அப்பா-நீ இதுகாறும் எங்குபோயிருந்தனை, போகின்றபோதுஇங்கே போகின்றேனென்று சொல்லிவிட்டுப்போனால் உனதுவாய்முத்தஞ் சிதறுமோ, உன்தந்தை உன்னைக்காணாது, ஆகாரநித்திரையற்று, இரவும்பகலும் ஏக்கங்கொண்டு, தனது தள்ளாமையோடும் உன்னைத் தேடிக்கொண்டுசென்றாரே, அவரெங்குற்றாரோ தெரியவில்லையே, நீயவரைவிரைவிற்கண்டுபிடித்து அழைத்துவாவென்றுசொல்லினள். அதனை அப்பாதகன்கேட்டு, ஆ அ-நன்றாயிருக்கின்றது நன்றாயிருக்கின்றது, போனவனையழைத்துக்கொண்டு வருவதற்கா யானிங்குவந்தனனென்றுகோபித்து, நமனைப்போல ஒருதடிகொண்டுமொத்தினன். அதனால்அவளுயிரிழந்துவிழ, அவ்விடத்திற்றானே ஓர் குப்பையைக்கீறி அவளைப்புதைத்துவிட்டனன். அதனையவன்மனைவிகண்டு, ஆ அ என்னகாரியஞ்செய்தனை என்னகாரியஞ்செய்தனையென்று கிலேசித்து, ஐயோ- ஈன்றவர்களையுங்கொல்வாருண்டோ, பழிபாவமென்றும்பார்த்திலையே, பரத்தையரின்பமே பெரிதாகப்பாவித்தனையே, இதனை அரசனறிந்தால் இப்போதேகழுத்தரியுந்தண்டனை செய்வானே, நீ அத்தண்டனையிற்பட்டு இறப்பையாயின் அப்பரத்தையின்பத்தைத்தான் எவ்வாறு அநுபவிக்கவல்லை, யாவரும் அஞ்சத்த

க்ககொடுங்காரியத்தையல்லவோ செய்தனை,ஐயையோ-இதற்கென்னசெய்வேன்,இதற்கென்னசெய்வேன் என்றுதுக்கித்துப்,பின்னும்அவனைநோக்கிச்சொல்லுவாள்,இனிநீ கடைத்தேறிச்சுகத்தையநுபவிக்கும்படியான மார்க்கத்தினைச்சொல்லுகின்றேன், அதை இனிமேலாயினுங்கேள்,உனக்கு வேசையர்மீதிருந்த ஆசையினாலே வீட்டிலுள்ள பாக்கியங்களையெல்லாமழித்தனை, வயதுமுதிர்ந்த தாய்தந்தையரையுமிழந்தனை, இருக்கிறவீடு இன்றைக்கோ நாளைக்கோ நம்மைவிட்டு ஒழியப்போகின்றது,இனிமேல் நாம் காட்டிற்போய்ப் பிழைக்கநேருமோ அல்லது நாட்டிற்போயிரக்கநேருமோ, இவையனைத்தையும் நீ எள்ளளவும்யோசித்தனையில்லை, இவன்வேசையராசைகொண்டவனென்று அரசனறிவானாயின் உடனேதண்டனைவிதிப்பன், பின்னரத்தண்டனையைநீக்கிக்கொள்ளுமாறு பொருப்பினையொத்த பொருளிருந்தாலும் அவையனைத்தும் பொய்யையுடையவர்புகழ்போன்று நாசமாகும்,இவ்வாறுதிரவியங்களழிந்தபின்பு அவவேசை அவனைநாயினுங்கடையாகநினைத்துத்,தனதுகுற்றேவலுக்காளாக்கி ஹேப்பளன்றி, முன்போல இன்பந்தருவளோ, வேசையரின்பமநுபவித்தலினால் சிலநாளைக்குள் உடலையும் உயிரையும் வாடடும்படியான கோரநோய்வந்துசேரும், விவேகிகள் வெறுக்கத்தக்க குற்றங்களெல்லாம் இப்போது வந்ததுபோலவரும், அகத்தன்பில்லாதவர்களைக்கூடும் பின்போல் வர்க்கு அன்னந்தான்கிடைக்குமோ, இளமையினாலும், அழகினாலும்,கற்பினாலும், கலப்பானஉள்ளத்தினாலும், எனக்கொப்பான ஸ்திரீகளுமுண்டோ, நீதளர்வுறாதவண்ணம் அளவற்றபோகங்களை அப்பரத்தையர்போலவுனக்களிப்பேன், நீ என்னிடத்திற்றானே சதாகாலமும் இன்புற்றிருக்கலாம் மேலும் கூடுவதற்குவிலக்காகச்சொல்லியிருக்கின்றஆனிமுதலியநான்கு திங்களினும்,அட்டமிமுதலியபஞ்சபருவங்களினும்,திங்கடோறுந்தீண்டுதற்குக் கூடாத மூன்றுநாள்களினும், மற்றெந்தக்காலங்களினும், நீபுணர வேண்டுமென்றிச்சைகொள்ளில் உனதிச்சையின்வண்ணம் யானிசைவேனேயன்றி அதைமறுக்கவல்லனோ,நீஎன்னிடத்திலெவ்வாறிருக்கினும்பழிபாவங்களில்லை,அதனாற்றருமமுங்கீர்த்தியுமுண்டாகும்,மற்றொருவர்தலைவாயிலைமிதிக்கின்எல்லாப்பழிபாவங்களும்உடனேயுண்டு,ஆதலால்இவையனைத்தையுந்தீர்க்காலோசனைசெய்து,இனியேனுங் கடைத்தேறு மார்க்கத்தைக்கடைப்பிடியாகக்கொள்ளுவையென்றுசொல்லலும்,அதுகாறும்அப்பாதகன்உள்ளே அடங்காதகோபத்தீயையடக்கிவைத்துக்கொண்டு,மேலுக்கு உடன்பட்டுச்சேழுப்பவன்போலவிருந்து,பின்புகமனைப்போலவெழுந்து, மெல்லமெல்ல எனக்காபுத்திசொல்லவந்தனையென்று பூமியில்விழும்படி அவளைத்தள்ளி உதைத்துக்கொன்றனன்.பின்னர் அப்பாதகன் இக்காரணத்தை அரசனறியின் வருத்துவனென்றுபயந்து,வீட்டிலுள்ளஆபரணமுதலியஎல்லாப்பொருள்களையுமெடுத்துக்கொண்டு,அன்றிரவிற்றானே அந்நகரத்தைவிட்டுநீங்கிப்,பரத்தையையழைத்துக்கொண்டு,முனிவர்கள் வாசஞ்செய்கின்ற ஓர்வனத்தைநோக்கிச்சென்றனன். அவ்வனத்தில் தாலவனமுனிவர் வசிக்கின்றஆசிரமத்தின்வழியாகச்சென்று, அம்முனிவர் ஸ்நானஞ்செய்யச்சென்றசமயத்தில் உள்ளேநுழைந்து,அவர்பத்தினியாகியகலசைபயென்பவளைக்கைப்பிடித்தனன்.உடனே அவள் அதிககோபங்கொ

ண்டு, அவன்கையையுதறியெறிந்து, விழிகளில் தீப்பொறியெழும்படியாகச்சீறி, அடா தூர்த்தனே,- எனதுபெயரில்மாத்திரம் சுலபையே யன்றிஉனக்குயான்சுலபையா, உனதுகாளைப்பருவத்தினாலும், காயதிடத்தினாலும், வேளையொத்தபேரழகினாலு மல்லவா, மாதரின்பத்தைமறத்தாறாமலநுபவிக்கின்றனை, இனி யவ்வின்பத்தைமறந்தும் அநுபவிக்காதவண்ணம், வளைநாறுகின்றகுட்டநோயுனக்குண்டாகக்கடவதென்றுசபித்தனள். அவ்வாறுசபித்தலும், அவன் அங்குவைத்த அடிவாங்குதற்குமுன்னமே அழகுவாய்ந்தமேனியெல்லாங் கரிகரித்துக், கைகண்முழுவதும் ரணமாகிச்சீயுஞ்செந்நீரும்பெருகி, முகம்வேறுபட்டுப், பார்த்தவர்கள் பயமுறும்படியான விகாரரூபத்துடனே அவ்வாசிரமத்தினின்றும்வெளிப்பட்டுப், பரத்தையிடத்தில்வந்தனன். அவள் அவனைக்காண்டலும் அருவருப்புற்றவளாகி யொழிந்தனள். பின்னர் அப்பாதகன் பாதுகாப்பவரில்லாமல், அக்காட்டிற்றனே அலைந்துதிரிந்துஇறந்தனன். உடனே அவனை யமதூதர் கட்டியழைத்துக்கொண்டு சென்று, தங்களரசனெதிரிலேவிட, அவன் "இப்பாதகன் குற்ற நீங்குமளவும் கொடியநரகங்களிற்போட்டு வதைசெய்யக்கடவீர்களென்று ஆக்கியாபித்தனன். அக்கட்டளையின்படி அத்தூதர்கள் அவனைப்படுத்தியபாட்டை ஹரஹர-யாவர்சொல்லவல்லவர்கள். பின்னர் அவனைஎல்லாநரகங்களினுந் தப்பவிடாமல் வதைசெய்து பூமியிற்பிறக்கும்படிவிடுத்தார்கள். அதனால்-அவனனுபவித்து மிகுந்தபாபச்சேடத்தினாலும், சுலபையிட்டசாபவெச்சத்தினாலும், இப்பிறவியினுங்குட்டநோயினையுற்பவித்தனன். அரசனே-பாவங்களென்பனவற்றிற் பயமில்லாது! செல்பவனாகிய அவ்வணிகனைப், பிறன்கடைநிற்பாளைப்பேணுதொழிப்பதுபோலொழித்துவருவையெனில், இவ்விமானம் விண்ணிலெழும்புமென்று தேவகணங்கள்கூற. சூரசேனமஹாராசன் ஈதனைத்தும் உண்மையே யென்றுநிச்சயித்து, மீட்டும் அவர்களைப் பணிந்தெழுந்து, என்னையாட்கொள்ளவந்த மகாநுபாவர்களே-அவ்வணிகன்வரலாறிவ்வாறாயினும், அவனுக்குக்குட்டநோயுண்டாவதற் கேதுவாயிருந்த பாவங்களைத்தீர்த்துச், சுத்தபவித்திரனாக்கி, எம்மோடு அவனையுங்கூட வழைத்துக்கொண்டு போகும்படியான உபாயத்தையேதேட வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்கத்தேவகணங்களிசைந்து, அக்குட்டவணிகனை அருகிலழைத்து அவன்மீதுதமதுகிருபாநோக்கத்தைப்பரப்பி, அவனது பாவங்களனைத்தும்பாறும்படியாகக் கணபதியென்னுந்திருமந்திரத்தைமூன்றுதரம் அவன் செவியில் உபதேசித்தனர். உடனே அவன்குட்டசரீரத்தினின்றுமகன்று தெய்வசரீரம்பெற்றுச், சுத்தபவித்திரனாயினன். பலர்நடுவில்வீழ்ந்தபாம்புஞ்சாகாதென்கின்ற மூதுரையின்படி, பலபேருடன்கூடியேறிய பாதகன்மீட்டும் பூமியிற்பிறந்து வருந்தாமல் நற்கதியையடைந்தனன். பின்னர்சூரசேன மகாராசன்தனதுநகரத்தினர் முதலாயினோர் புடைசூழும்படி விமானத்தோடுமெழுந்து, ஆகாயவெளியெல்லாங்கடந்து, விநாயகலோகம்போய்ச்சேர்ந்து, அனந்தகாலம் அளவற்றபோகபாக்கியங்களை யநுபவித்து, முடிவில் சகலதத்துவகாரணராகிய கணேசமூர்த்தியினுடைய திவ்விய சரணாரவிந்த நீழலையடைந்து, அரிபிரமேந்திராதிகளாலுமளவிடக்கூடாத பேரின்பசாகரத்தில் மூழ்கியிருந்தனன்.

கணபதிதுணை.

முப்பத்தேழாவது.

பரசுராமன்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியினுடைய சங்கடசதுர்த்திவிரதத்தைச் சூரசேனமகாராசனநுட்டித்துத்,தன்னினத்தினருடன் முத்தியடைந்தவரலாற்றினைச்சொன்னோம், இப்பால் பரசுராமன்உபாசித்த திறத்தினைச்சொல்லுவோம் கேட்பீராக, முன்னர்பவழவனத்தில்பவழத்தினால் ஓர்விநாயகமூர்த்தியைப் பிரதிட்டைசெய்துபூசித்துவந்த கார்த்தவீரியனென்பவன், பின்னர்தனது தந்தையாகிய கிருதவீரியனிடத்தில் வந்து பணிந்தனன். அதற்குக்கிருதவீரியன்களிப்பெய்தி, பலஆசீர்வசனங்களைக்கூறித்,தனதுகுமாரன் விநாயகமூர்த்தியினுடைய பெருங்கருணையால் இரண்டுகால்களையும்ஆயிரங்கைகளையும்ஐந்நூறுபாணங்களையும்பெற்றுவந்தமையை நினைந்துநினைந்து, மனமகிழ்ந்து, தனதரசுரிமையையவன்பாலொப்பிவித்து,விநாயகமூர்த்தியினுடையதிருவருளையேதுணையாகக்கொண்டு,அவரதுதிருவடித்தாமரைகளைச் சதாகாலமும்இடைவிடாது தியானித்துவந்தனன். அதற்குத்தம்மைச்சரணடைந்தோர்கள்ஆண்பாலராயினும் பெண்பாலராயினும் அவர்கட்கு இமைக்கு முன்னெண்ணற்றவரங்களை யளிக்கத்தக்க விநாயகப்பெருமான் கிருபைசுரந்து,அவனைத்தம்மிடத்திலழைத்துவருமாறு தேவகணங்களையேவ, அவர்கள் ஆகாயமார்க்கமாக ஓர்தெய்வவிமானங்கொண்டுவர,உடனேகிருதவீரியன் தன் மனைவியாகிய சுகந்தையென்பவளோடும்மற்றைப்பரிசனங்களோடுந் தெய்வரூபம்பெற்று,அவ்விமானத்திலேறி, அகண்டபரிபூரணசச்சிதானந்த ஸ்வரூபியாகிய கணேசலோகம்போய்ச்சேர்ந்து, மனவாக்குக்காயங்கட்கு மெட்டுதற்கரிய பேரின்பசாகரத்தின்மூழ்கினன். இப்பால்-கார்த்தவீரியன் அரசர்களெல்லாங்கொண்டாடத்தக்க பராக்கிரமத்தோடு, உலகமுழுவதையுந்தனதுஆக்கியாசக்கரத்துளடக்கி,அடங்காரையெல்லாம் ஐந்நூறுபாணங்களால்விசும்பேற்றி,இந்திரனுங்கண்டுநடுங்கும்படியாகவும்,கவிவாணர்களெல்லாம் புகழும்படியாகவும்,அளவற்றபோகங்களோடும் அரசாட்சிசெய்து,தேவர்களெல்லாம் ஏவல்கேட்கும்படிவாழ்ந்திருந்தனன். அவனிவ்வாறிருக்குநாளையில், பொழில்களாலும்பொய்கைகளாலுஞ் சூழப்பட்டிருக்கின்றசையவரைச்சாரலில், ஐம்பொறிகளையும் நிக்கிரகித்து அரியதவங்களைச் செய்துகொண்டிருந்த சமதக்கினியென்னும் ஒரு முனிபுங்கவரிருந்தனர். அவருக்குக்கற்பில் தன்னோடொப்பாருமிக்காருமில்லாத பெருமையினைவாய்ந்த ரேணுகையென்னும் ஓர்மனைவியிருந்தனள். இவர்கட்குமகாவிஷ்ணுவே முன்னொருகாலத்தில் பிருகுமுனிவர்கொடுத்த சாபத்தினால் பிள்ளையாகப்பிறந்து, இராமனென்னும் பெயரைவகித்துத்,தனதுதாய்தந்தையரிடத்தில் இவனின்மிக்காரொருவருமில்லையென்று சொல்லும்படி மெய்யன்பு வைத்துச், சகல முனிவர்களுங் கொண்டாடத்தக்கதாக அவர்

கட்குப் பணிசெய்து வாழ்கின்ற நாளையில், அவன் ஓர்நாள் நைமிசாரண்ணியத்திற்குச் சென்று,அவ்விடத்திலுள்ள அருந்தவர்களோடுஞ் சின்னாள் வசித்திருந்தனன். அக்காலத்தில் - கார்த்தவீரியனெனவன் பலபடைகளோடும் பரிசனங்களோடு மெழுந்து, காட்டிற்சென்று வேட்டையாடுவான் கருதி, சையவனச்சாரலை யடுத்தவனங்களிற் சென்று, அவ்விடங்களிலுள்ள துட்டமிருகங்களை யெல்லாங் கொலைசெய்து, மீட்டுந் திரும்பி வருகையில், தனக்கெதிராக வோர் தபோவனந் தோற்றக்கண்டு, அவ்வனம்யாவரையுடையதென்று விசாரித்துப், பின்னர் சமதக்கினி முனிவருடைய ஆசிரமமென்றுதெரிந்துகொண்டு, ஆயுதபாணிகளோடிருக்கின்றதனதுசேனைகளையெல்லாம்அவ்விடத்திற்றானேநிறுத்தித்,தனதுமந்திரியர் நால்வரோடும்அவ்வாசிரமத்தில்நுழைந்து,சமதக்கினி முனிவரைச் சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து,சுவாமி-தேவரீரை இங்குபரமசிவத்தைப்போலக்கண்டு தரிசிக்கப்பெற்றபேற்றினால், அடியேன் சுத்தபவித்திரனாயினேன், எல்லாநன்மைகளும்அடியேற்குண்டாயினவென்றுதுதித்தனன்.உடனே அம்முனிவர் அவனுக்காதனங்கொடுத்து, அரசனே-நீயார்,இவ்விடத்திற்குவந்தகாரணம்யாதென்றுவினவ,சுவாமி- அடியேன்கார்த்தவீரியன், யான்வனத்தில் மிருகவேட்டையாடிவரும்போது,முன்செய்ததபோபலத்தினால் எனக்கெதிரே தேவரீர் ஆசிரமந் தோற்றக்கண்டதனால்,இங்குவந்துதேவரீர்சினேகமுங்கிடைக்கப்பெற்றேன்,இனி இதைவிடமேலானபாக்கியம்யாதென்றனன். அதற்குமுனிபுங்கவர் மனமகிழ்ந்து, அரசனே- இதுகாறும் நினதுபுகழுடம்பைப் பலகால்கேள்வியுற் றிருந்தனன், இப்போது நினது பூதவுடம்பையுங்காணப்பெற்றேன், நின்வரவினால்எனதுமனமானது மதுபானஞ்செய்தவனையொத்துமகிழ்ச்சியடைந்திருக்கின்றது, சூரியன் உச்சியில்வந்தனன், நீயும் வேட்டையாடி மிகவும் இளைப்புற்றிருக்கின்றமையால், இவ்விடத்திற்றானே அமுதுகொண்டு, சாவகாசமாய் நகரத்திற்குச்செல்லலாமென்று சொல்லினர். அதைக் கார்த்தவீரியன்கேட்டு, சுவாமி- தேவரீரையொத்தவர்களிடத்தில் தண்ணீரேனும் அருந்திச்செல்லுவதுமஹாதபோபலனாகும்,யானே ஒருவனாய்வந்தவனல்லன், என்னுடனே அளவற்றபேர்வந்திருக்கின்றனர், எனதுநகரமும்இதற்குச்சேய்ந்தூரமன்று, ஆதலால்- சுவாமிகள்கிருபையோடும் விடைகொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குப்பொன்னுலகத்தையும்இம்மண்ணுலகத்தில்வரவழைக்கத்தக்க வல்லபத்தையுடையஅம்முனிபுங்கவர் புன்னகைகொண்டு, அரசனே- நினதுசேனைகட்காக யாதொரு சிந்தனையுஞ்செய்யவேண்டுவதில்லை, உன்னோடுவந்தவர்கள் எத்தனைபேராயினும் அவர்கட்கெல்லாம் அமுதுபடைப்போம்,இதனருகிற்கான்யாறென்று ஓர்நதியிருக்கின்றது,நீங்கள்யாவரும் அந்நதிக்கரையைச் சேர்ந்து, சிறிதுநேரம் இளைப்பாறிக்கொண் டிருக்கலாமென்று சொல்லி விடைகொடுத்தனுப்பி,தமதுபத்தினியாகியரேணுகையைக்கூவி, இத்தினம்அரசன்விருந்துண்ண வருகின்றானென்று அறிவித்துக்,காமதேனுவைத்தியானித்தனர்.உடனே அக்காமதேனுவும்வந்தது. அதனைச்சமதக்கினிமுனிவரும்ரேணுகையும்பணிந்துபூசைசெய்து, அதன்பால்தங்கள்விழைவைவிண்ணப்பஞ்செய்துகொள்ள, அஃதுஉடனே அவ்விடத்தில்விண்ணுலகமு

ங்கண்டுகாணத்தக்கவொருநகரமுண்டாக்கி, அதில்நவரத்தினமயமாயிராநின்றமாடமாளிகைகள் கூடகோபுரங்கள்முதலானசிறப்புக்களைநிருமித்து, அறுசுவைகளோடுங்கூடிய நால்வகையுண்டிகளையும், தாசர்தாசியர்களையும், அவைகடோறும் அளவற்ற பொற்பாத்திரங்களையும் அமைத்து, அம்முனிபுங்கவருக்கறிவித்தது. அவையனைத்தையும் அவர்கண்டுசந்தோஷித்து, அரசனையழைத்து வருமாறு ஏவலாளர்களுக்காக்கியாபிக்க, அவர்கள் அவ்வாறேசென்று அரசனையழைத்தனர். உடனே அரசன்தனது பரிசனங்களோடு மெழுந்துவருகையில், நூதனமாக ஓர்நகரத்தைக்கண்டு, ஈதென்ன அற்புதமென்று ஆச்சரியங்கொண்டு, அந்நகரத்து வீதியின்வழியாக நடந்து, அவ்வீதிகளிலெல்லாம் ஓர்பால்பஞ்சகருவிகள் முழக்கமும், ஓர்பால் பரதநாட்டியமுழக்கமும், ஓர்பால்சங்கீதப்பிரசங்கமுழக்கமும், ஓர்பால் சத்தசுரங்களின் முழக்கமுமாகவிருக்கக்கண்டு, முனிவர் ஆசிரமத்தினருகில்வந்து, அவ்வாசிரமத்தில் இதுகாறும் தான்எவ்விடத்திலுங்கண்டிராத அளவற்ற விசித்திரங்களோடு, நாவிற்சலமூறும்படி உண்டாகின்றஅறுசுவை பதார்த்தங்களினுடைய பரிமளங்கள் நாற்றிசைகளினும் வீசக்கண்டு, ஈதென்ன விபரீதமென்று மதிமயங்கி, அவையனைத்தையுந் தன்னாற்கண்டறியக் கூடாதவனாகி உள்ளேநுழைந்து, சமதக்கினி முனிவருடைய திருவடிகளிற் சாஷ்டாங்கமாக வணங்கி, அவரது உத்தரவின்படி தனது பரிசனங்களோடு விருந்து போசனஞ்செய்து, கையலம்பி, உண்டவிளைப்பாறிய பின்னர் மீட்டுஞ் சமதக்கினி முனிவரையடைந்து, சுவாமி - நான் முன்னர் வந்தபோது இவ்வாசிரமங்காடாக விருந்ததே, மீட்டும் யான் ஆற்றிற்சென்று திரும்பி வருவதற்கு முன் அளவற்றமாட்சிமையோடு நகரமாயிற்றே, அன்றியுந் தேடக்கிடையாத திரவியங்களெல்லாம் எங்குநிறைந்திருக்கின்றனவே, ஒருவனுக்கொருத்திநின்று உபசரிப்பதுபோல அவ்வவர்களுக்கு அவ்வவரிச்சைப்படி அமுதூட்டத்தக்கபரிசாரகர் அளவற்றபேர்களிருக்கின்றார்களே, இவையனைத்தும் ஓர்நிமைப்போதில் எவ்வாறுண்டாயினவோ, மாயாவிசித்திரமோ, அல்லதுதேவரீருடைய தவமகிமையோ, இவ்வற்புதத்தை யடியேற்குணர்த்தியருளவேண்டுமென்று கேட்டுக்கொண்டனன். அதற்கம்முனிபுங்கவர் புன்னகைசெய்து, அரசனே- இவையனைத்தும் மாயாவிசித்திரமென் றெண்ணாற்க, நமது தவமகிமையினால் இவ்வளவுங் காமதேனுவைக்கொண்டு நடத்தியிருக்கின்றன மென்றறியக்கடவை யென்றனர். அதனையரசன்கேட்டலும், நெட்டுயிர்ப்பெறிந்து, மனதிற்பொறாமைகொண்டு, எவ்விதத்திலேனும் அக்காமதேனுவை நாம்கைக்கொள்ளவேண்டுமென்று நினைத்தவனாய், உடனேமுனிவரைப்பார்த்து, பசிக்குக் காய்கனி முதலியவைகளையருந்திச்சரீரத்தையொடுக்கி வனத்திற்றவஞ்செய்து கொண்டிருக்கின்றதேவரீர்க்கு, அக்காமதேனுவினால் யாதொருபயனுமில்லை, எல்லாவுலகங்கட்கும் ஏகசக்கிரேஸ்வரனாயிருக்கின்ற எனக்கு அக்காமதேனுவைக்கொடுத்திராகில், அஃது அநேககாரியங்கட்குபயோகமாகும், மேலும் அஃது என்னிடத்திலிருப்பது நியாயமாகவுமிருக்கின்றது, ஆதலால்-எனக்குநீர்அதனைத் தயவுசெய்துகொடுத் தருளல்வேண்டும், கொடாவிட்டால் பின்னர்பலாத்காரமாய்க் கொண்டுபோவேனென்றுசொன்னான். அதைக்கேட்ட

முனிபுங்கவர் மிகுந்தகோபத்தோடும்பெருமூச்செறிந்து, அரசனே -பிச்சைக்குவந்தவன் பெண்டுபிடித்ததுபோல நீ நினைத்தகாரியம் மிகநன்று மிகநன்று, ஆ அ- எல்லாவுலகத்தையும் ஏகசக்கரத்திளுலாளுகின்ற மன்னவர்களுக்குணர்த்தியநீதிநூல்களில், அன்னியருடையபொருளையபகரிக்குமாறு கூறியிருக்கின்றனவோ, நின்னைக்கல்வியிற் சிறந்தவனென்றும், மநுநீதிதவறாதவனென்றும், ஒழுக்கமுதலிய நன்னடைகளையுடையவனென்றுங் கருதியிருந்தனன். நீஇராப்போதிலுற்ற நீழலைப்போல அற்பகுணத்தையுடையவனுயினை, ஆயினும்-எனதுவசமாயிருக்கின்றஅக்காமதேனுவை நினதுவசமாக்கிக்கொள்ள நெறியுண்டாயிருக்குமாயின், அதைக்குறித்தென்னைக்கேட்பதென்ன, தாமதமில்லாமல் நின்வசமாக்கிக் கொள்ளலாமென்று சொல்லினர். அதை அவ்வஞ்சநினைவைக்கொண்ட அரசன் கேட்டு, உடனேதனது பரிசனங்கட்குக் கண்சைகைகாட்டினுன். அதை அப்பரிசனங்கள்கண்டு, காமதேனுவினருகிற்சென்றூர்கள். அதனுல் அரசன் சமதக்கினிமுனிவருக்குப் பகையாயினுனென்று காமதேனு வறிந்துகொண்டு, மிகுந்தகோபத்தினுல் நெட்டுயிர்ப்பெறிந்தது. அந்தஉயிர்ப்பினுல் அருகில்வந்த எல்லாச்சனங்களுஞ்சுருண்டு, மாய்ந்துபோயினர். அதைக்கண்ட கார்த்தவீரியன்மிகுந்தகோபாவேசங்கொண்டு மீளவுநால்வகைச்சேனைகளைவரவழைத்து அதன்பேரிலேவினன். அவைகளைக்காமதேனு கண்டுதனதுமயிர்சிலிர்க்க, உடனே ஒவ்வொருமயிரிலிநின்றும்அளவற்றவீரர்கள் சர்வாயுதபாணியராயுதித்தனர். ரத கச துரக பதாதிகளு முண்டாயின. பின்னர் இரண்டுசேனைகளுங் கலந்துபோர்செய்துவருகையில் காமதேனுவின்சேனைகள் அரசனுடைய சேனைகளையெல்லாங் கொன்று, எங்கும் உதிரவெள்ளம்ஓடும்படியாகச்செய்தன. அதில் எஞ்சிநின்ற சேனைகள் மீட்டுமெதிர்ப்பதற்கஞ்சியோட, அதனைஅரசன்கண்டு, நமக்குத் தோல்விவரலாகுமாவென்று அச்சேனைகட்குக்கையமர்த்தி, ஊழிக்காலத்திலுண்டாகின்ற பேரொலியைப்போலச் சங்கநாதஞ்செய்தான். அதனுல் மலைகள்சமுத்திரங்கள்முதலாயினவைகளெல்லாங்கலங்கிச், சகமெல்லாந் தாழியிட்டதயிர்போலத் தளர்ந்தன. இவ்வாறு சகமெல்லாந் தளர்ந்துங், காமதேனுவினுடைய சேனைகள் சிறிதுந்தளராதிருக்கின்றதைஅரசன்பார்த்து, நமதுவெற்றி நன்றுயிருக்கின்றதென்று நகைத்து, மிகுந்த கோபாவேசங்கொண்டு, கரத்தில்விலலையெடுத்து, ஒவ்வொரு எல்லைக்கு ஐந்நூறு ஐந்நூறுபாணங்களைப் பிரயோகித்தான். அப்பாணங்கள் ஊழிக்காலத்திலுண்டாகின்ற மேகங்களையெல்லாங் கலங்கச்செய்ய வல்லவைகளாயிருந்தும், அவைகளை அக்காமதேனுவின் சேனைகள்ஒதுக்கி, அரசன்மீது அளவற்றபாணவருஷங்களைப் பொழிந்தார்கள். இவ்வாறு தனதுபடைகளை நாசஞ்செய்ததன்றித், தன்மீதும் அளவற்றபாணங்களை ஏவியதனுல், கார்த்தவீரியனுக்குப்பலங்குன்றி, இனி எந்தவிதத்திலும் அம்முனிவரைக்கொல்லவேண்டுமென்று தன்மனதில்வயிரங்கொண்டு ஓடிப்போயினன் அக்காமதேனுவும் அரசன் இனித்திரும்பானென்று நிச்சயித்துக்கொண்டு, சமதக்கினிமுனிவரிடத்தில் விடைபெற்றுத், தனது சேனைகளோடுஞ் சொர்க்கலோகம்போய்ச்சேர்ந்தது. பின்னர் சமதக்கினிமுனிவர் முன்போலவே பஞ்சாக்ஷரத்தைச் செபஞ்செயதுகொண்டு தவத்திலிருந்தனர். இ

வ்வாறுசிலநாள்செல்ல, ஓர்நாள்கார்த்தவீரியனெனவன், அம்முனிபுங்கவர் தவத்திலிருக்கின்றசமயத்தில் அவரருகிற்சென்று, ஓர்வாளியினல் அவருயிரைமாய்த்துவிட்டனன். அதையம்முனிவர் பத்தினியாகிய ரேணுகை கண்டு, அடாதுரோகி- உண்டவீட்டிற்கு இரண்டகஞ்செய்வோருள் உனக்கொப்பர்னபாவி எவ்விடத்தேனுமுண்டோ, உனதுகுலமெல்லாம் நாசமாகும்படியான வகையைத்தேடிக்கொண்டனையே. இந்த அநியாயமெங்கும் தஅரசர்கட்கேனுமடுக்குமோ. தவஞ்செய்வோரைக்கொல்வதோ தரணிவேந்தர்களுடையமுறைமைஎன்றுசொல்ல, அவள்மீதும் இருபத்தோரம்புகளைஎவினன். பின்னர் அவள் அவைகளைச்சகிக்கமாட்டாது, கண்களில் நீர்த்தாரைபெருகும்படியாகச் சோர்ந்து, பூமியில்வீழ்ந்து, தனதுகாதலனைத்தியானஞ்செய்துகொண்டு, நைமிசவனத்திற்குச்சென்றதனதுபுத்திரனாகிய ராமன்வருமளவும்உயிர்வைத்திருந்தனள். அவனுந்தற்செயலா அவ்விடத்தைவிட்டுநீங்கித்தனதுஆசிரமத்திற்குவந்தனன். அப்போது அவ்வாசிரமமானது அன்னபானமில்லாத ஊரைப்போலவும்- மகமேருவில்லாதவுலகம்போலவும், இந்திரனில்லாத வசந்தமண்டபத்தைப் போலவுமிருந்ததனறி, வேதகோஷமில்லாமலும், வேள்விப்புகை எழாமலும், தனது தந்தையைச்சதாகாலமும் தொழுதுசெல்கின்ற சீடர்கூட்ட நெருங்காமலும், புல்லெலன்றிருக்கக்கண்டு, என்ன துன்பங்கள் நேர்ந்தனவோவென்கின்றமனவருத்தத்தோடு உள்ளே நுழைந்து, தந்தைவாளியால உயிர்நீங்கியிருப்பதையும், தனதுதாய் அம்புகள் பாயப்பட்டுச்சோர்ந்து வீழ்ந்திருப்பதையுங்கண்டு, இவர்களை இவ்வாறுக்கினர் யாவரொன்று நினைந்து நினைந்து, அழுதழுது, புழுதிகள் உடலெங்கு மூடும்படியாகப் பூமியில் விழுந்து புரண்டு, மூர்ச்சையாகி, எழுதப்பட்டசித்திரம்போலச்சிறிதுநேரமசைவற்றிருந்து, பின்னர்தெளிந்தெழுந்து, அவர்கள் திருவடிகளைப் பலமுறைதொழுது, துக்கசாகரத்துண்மூழ்கி, ஐயோ-இந்திரன்முதலாயினோரும் இறைஞ்சிவழிபடத்தக்க உங்கள்தவமகிமையுங், கற்பின்பெருமையும், இவ்வாறு உங்களுயிர்பிரியுமாறு எங்ஙனமொளித்தனவோவென்று அலறிச், சிறிதுஉயிர்தாங்கிக் கண்களில்நீரைக்கவிழ்த்துக்கொண் டிருக்கின்றதாயினருகில்வந்து, அவள்சிரத்தைத் தனதுதுடையின்மீதுவைத்து, என்னையருமையாயீன்றெடுத்தஅன்னையே-உங்கட்குயாதுகாரணத்தால் இவ்வாபத்துநேர்ந்ததோ அதனைஎனக்குச்சொல்லவேண்டுமென்றுபுலம்பித், தனதுகையினற்றடவ, அதை அழகில் இலக்குமியைவென்றவளாகியரேணுகைகேட்டுச், சிறிதுதெளிவுற்று, மைந்தனே-இவ்வுலகத்திற்கரசனாகிய கார்த்தவீரியன்வேட்டையாடிவருகையில், நமதாசிரமத்தைநோக்கிவர, அவனுக்குககாமதேனுவினல்சகலசிறப்போடும்யாங்கள்விருந்தூட்டப், பின்னரவன் அக்காமதேனுவைக் கைக்கொள்ளுமாறு அதனேடியுத்தஞ் செய்து தோல்வியுற்றனன, அதனல் எங்களை எவ்விதத்தேனுங்கொல்லவேண்டுமென்கின்ற வெஞ்சினத்தால் சமயம்பார்த்துக்கொன்றுவிட்டுச் சென்றனன். இக்காரணத்தை யுனக்கறிவிக்கு நிமித்தமே இதுகாறு மெனதுயிரைத்தாங்கியிருந்தனன், அப்பாதகன் எனதுடலில் இருபத்தோரம்புகளை யெய்தானதலால், அவன்வம்சத்தில் முடிசூடுமன்னர்களை ஏழேழ்தலைமுறைவரையிற்சாடி, அவர்சரீரங்களைச் சத்தபூமிகளினும்புரளும்படிவீ

அந்தணர்குலத்தைத் தெய்வகுலமென்றுசொல்லுமாறு விருத்திசெய்யக்கடவை, எங்கட்குநிறைவேற்ற வேண்டிய கிரியைகளைத்தேத்தாத்திரியமுனிவராற்செய்து நிறைவேற்றக்கடவை, யானுன்னைக்காண்டலும்புகழுதுண்டவ[illegible]பாவினேன், இனியெனதுகாதலர்மாட்டுச்செல்லுகின்றேனென்று விடைகொடுத்து உயிர்பிரிந்தனள். இவ்வாறுரேணுகை உள்ளமுடைந்து கூறியவசனங்கள் இராமன்செவியிலேறலும், துள்ளியெழுந்த தழற்கொழுந்துக்கொப்பாகிய கோபமானதுதலைக்கேறி, வெருத்தவிழிகள் சிவக்கும்படியாகச்சினந்து, எல்லாவுலகத்தையும் எடுத்துவிழுங்கிவிடுவான்போலத்துள்ளி, அரசன் அந்தணரைக்கொன்றுமென்றுசொல்லுஞ் சிறுமைமாறவும், அந்தணரேதவத்திற் சிறந்தவரென்றுசொல்லும்பெருமைமீறவும், இனிநமது தாய்தந்தையரை யமனைப்போலிருந்துகொன்ற மகாபாதகனுடைய குலமாத்திரமேயன்றி, அரசர்களென்றுசொல்லப்படுகின்ற எல்லாக்குலங்களையும் வேருடன்கெல்லிக் கொல்லுவேனென்றுசபதங்கொண்டு, அடுத்தவனத்தில் அரியதவஞ்செய்துகொண்டிருக்கின்றதேத்தாத்திரியமுனிவரையடைந்து,நடந்த காரியங்களனைத்தையும் அவருக்கறிவித்துப்,பின்னர் அவரைத்தமதாசிரமத்திலழைத்துவந்து, அவரால் தனதுதாய்தந்தையர்க்குநிறைவேற்றவேண்டிய நித்தியக்கிரியைகளைப் பிரதிதினம் வேதாகமமுறைமைப்படி நிறைவேற்றி வருகையில், ஐந்தாநாளிரவில்,தான்நித்திரைசெய்யுங்காலத்தில்,தன்மீதோர் புலிவந்துபாயசொப்பனங்கண்டு, வாய்குழறித், தேகநடுக்குற்று, அம்மா- அம்மா-என்றுகூவி விழித்துக்கொண்டனன். அக்கூக்குரலை அவன்தாயாகிய ரேணுகைகேட்டுத்,தன்னை இடையிலழைத்தகாரணத்தால்,இருண்டு சுருண்டு நெய்ததொழுகித் தொடையலணிந்திருக்கின்ற கூந்தலும், ஒள்ளியநுதலும், சுடர்விட்டெறிக்குங் குழல்களையணிந்தசெவியும், வேலைநிகர்த்தவிழியும், குமிழம்புட்பத்தினையொத்த நாசியும், பவழம்போன்றவாயுந் தோன்றும்படியாக, அவனெதிரிற்றனது முகத்தைமாத்திரம் ஆகாயவெளியிற்காட்டியிருந்தனள். அதனைத்தேத்தாத்திரியமுனிவருங்கண்டு- அன்பிற்சிறந்தஇராமனே-உனது தாயைப்பதின்மூன்றுந்தினத்திலழையாது மத்தியிலழைத்தனையாதலால்,தனதுமுகத்தைமாத்திரம் ஆகாயவெளியிற்காட்டினள், ஆயினுங்குற்றமில்லை, இனி நடத்தவேண்டியகருமங்களையுஞ் சிறப்பெய்தநடாத்துவையாயின் மற்ற அவயவங்களுஞ் சரியாகி, இப்பூவுலகில் மதசம்பந்தப்பட்ட எல்லாமனிதர்களுந்தொழற்குரியதேவதையாகி வாழ்குவளென்றுகூற, அவ்வாறேஇராமன்மற்றைய நாட்களின் கிரியைகளைக் குறைவில்லாமற்செய்து முடித்தனன்.பின்னர்தனதுதந்தையாகிய சமதக்கினிமுனிவர் பிரமனுலகம்போய்ச்சேர்ந்தனர். இரேணுகையானவள் தனதுவடிவமுழுவதுமடைந்து, உலகமெல்லாம்வணங்கும்படியாகத் தெய்வத்தன்மையையடைந்தனள். தேத்தாத்திரியர் தமதாசிரமத்திற்கெழுந்தருளினர். இப்பால்அரசகுலங்களை அடியுடன்களையச் சபதங்கொண்டிருக்கின்ற இராமன் ஒருநாள்தனதுஅன்னையைவருமாறுதியானிக்க, அவ்வாறே அவள்வந்து,மைந்தனே-நீ நினைத்தகாரியமறிந்துகொண்டனன், அதனைமுடிக்கும் வகையினைச்சொல்லக்கேள். நீ இந்தநிமிடத்தில் கைலாயவரையடுத்து, அரவையுஞ் சந்திரனையுமிலைந்த சடாமகு

டத்தினையுடைய சிவபெருமானைப்பணிந்து, அவர்பேரருளைப்பெற்று,உன்னிட்டத்தை இடரின்றி நிறைவேற்றக்கடவையென்று சொல்லியகன்றனள்.அச்சொல்லை இராமன் சிரமேற்கொண்டு, உடனே கைலாயவரையிற்சென்று, சிவபெருமானுடைய திருவடிகளைப் பலமுறைபணிந்து துதிசெய்ய,அதற்குக்கர்த்தன்கிருபைசுரந்து, அவன்மீதுதமதுகடைக்கண்சார்த்திச்,சடக்கரமந்திரத்தைஆகமமுறைமைப்படிஅவனுக்குபதேசித்து,இராமா - தத்துவகாரணமாகியும் - தத்துவசொரூபமாகியும் - தத்துவமுதலாகியும் - தத்துவ முடிவாகியும் - இருந்து, பிரமமுதலிய எங்கள் மூவருக்கு முத்தொழிலளித்தவர் விநாயகப் பெருமானாகும், அவரை நின்மனதிற் றியானித்து, அவருக்குரிய இம்மகாமந்திரத்தை இடைவிடாதுசெபித்து வருவையெனில், நீகருதிவந்தகோரல் விரைவில்நிறைவேறு மென்று திருவாய்மலர்ந்தனர். அதனை இராமன் செவிக்கமுதாகக்கேட்டு, மீட்டுந்தொழுதெழுந்து விடைபெற்று, இம்மையிற்றானே எல்லா நன்மைகளையுந் தரத்தக்க மயூரேசமென்கின்ற தலத்தையடைந்து, விநாயகமூர்த்தியினுடைய திருவடித்தாமரைகளைப் பூசனைசெய்து மிக்கபேரன்பினோடு சடக்கரமந்திரத்தை முறைமைப்படி தியானித்து ஐம்புலாதிகளையும்அடக்கி அரியதவஞ்செய்து கொண்டிருந்தனன்.அத்தவத்திற்கு விநாயகக்கடவுள் கிருபைசுரந்து,பரசு-தாமரைமலர்- ஒற்றைக்கோடு- மோதகம்- என்னுமிவைகளையேந்திய நான்கு திருக்கரங்களோடு பூமாலையினையேந்திய துதிக்கரமும்விளங்க அவனெதிரிற்பிரத்தியக்ஷமாயினார். உடனே தேவர்களெல்லாஞ் சயசயவென்றுபோற்றி புட்பவருடம்பொழிந்தார்கள். பின்னர் இராமன் சுவாமியைக்கண்டவுடன் திடுக்கிட்டெழுந்து, விழிகளில் ஆனந்தபாஷ்பமுண்டாக, அன்பு அகத்தையுருக்க, உரைகள்தடுமாற்றங் கொள்ள, உடலெங்கும் உரோமஞ்சிதம்பூப்ப, ஆன்மாக்களை ஆணவவிருளி னின்றுமெடுத்து ஆட்கொள்ளவல்ல அவரதுதிருவடித்தாமரைகளைவணங்கி, அனந்தமுறைவலம்வந்து,தேன்மாரி பெய்தாலன்ன அளவற்றவேதாகமங்களினாற் றுதிசெய்துநின்றனன். அதற்குவிநாயகக்கடவுள் சந்தோஷித்து, அன்பனே- உனக்குவேண்டியவரங்களைக்கேளென்று திருவாய்மலர்ந்தருள, இராமன்மீட்டுந் தொழுதெழுந்து, சுவாமி-எனது குரவர்களைக்கொன்ற கார்த்தவீரியனுடைய குலமேயன்றி, அரசர்குலமென்று சொல்லப்படுகின்றயாவரையுங்களைந்துவெற்றிகொள்ளுமாறு அடியேற்குக் கிருபைபுரியவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டனன்.அவ்வாறே கணேசமூர்த்தி திருவருள்பாலித்து, மாருதவலியும் மழுவாயுதமுந்தந்து, என்றுஞ் சிரஞ்சீவியாயிருக்கும்படி வரங்கொடுத்து, அவனுக்குப்பரசுராமனென்னுந் திருநாமமுமளித்து, உன்னடியராயிருக்கின்றபேர்கள் மிக்கபிழைகள்செய்தாலும் அவைகளைப் பொறுத்து ஆட்கொள்ளுகவென்று திருவாய்மலர்ந்துகரந்தருளினார். இப்பால் பரசுராமன் கார்த்தவீரியன்முதலாயுள்ள அரசர்குலங்களை யெல்லாம் அதஞ்செய்து,அவர்களாண்டுகொண்டிருந்தஉலகங்களை அந்தணர்கட்களித்துத்,தான்கொண்டிருந்தசபதத்தைநிறைவேற்றிச், சொல்லுதற்கரியபெருந்தவங்களைச்செய்துகொண்டு, இன்றுஞ்சிரஞ்சீவியாக உலகத்தின்கண்வசித்திருக்கின்றனன்.

கணபதிதுணை.

முப்பத்தெட்டாவது.

இராவணன்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, சமதக்கினிமுனிவர் புத்திரனாகியபரசுராமன் விநாயகமூர்த்தியை யநுட்டித்து, முடிவற்றவரங்களைப்பெற்ற முறைமையைச்சொனனோம், இப்பால் இராவணன் உபாசித்ததிறத்தினைச் சொல்லுவோங்கேட்பீராக, முன்னொருகாலத்தில் - இலங்கைக்கரசனாகிய இராவணனெனவன், ஆகாயமுகட்டையளாவிய வெள்ளியங்கிரியை யடுத்து, அதனிலோர்சாரிருந்து, அரியதவத்தினைச் செய்துகொண் டிருக்க, கொன்றையும் அறுகையும் புனைந்த சடாமகுடத்தினையுடைய சிவபெருமான் அதற்குக்கிருபைசுரந்து, அவனெதிரிற் பிரத்தியக்ஷமாயினார். உடனே இராவணன் விரைந்தெழுந்து, ஆடிப்பாடி, அனந்தமுறை வலம்வந்து, சயசயவென்று வேதாகமங்களாற் றுதிசெய்து, விழிகளில் ஊற்றெடுத்ததுபோல ஆனந்தஅருவிசொரிந்து, உடலெங்கும் புளகாங்கிதமுற்று, நெக்குவிட்டு, நெஞ்சமுருகிக், கரங்களைச்சிரமீதுகூப்பிநின்றனன். அதனைக்கர்த்தர்கண்டு, உனக்குவேண்டுவனகேள் தருகின்றோமென்று திருவாய்மலர்தலும், இராவணன்மீட்டுந் தொழுதெழுந்து, சுவாமி- சொர்க்கமுதலிய எல்லாவுலகங்களு மழியுங்காலத்தினும், இலங்காபுரிமாத்திரம் அழியாது நிலைபெற்றிருக்கவரந்தரவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குக்கர்த்தன் அவ்வாறேகிருபைசுரந்து, ஓர்சிவலிங்கத்தை யவன்கரத்திற்றந்து, இராவணனே-இவ்விலிங்கத்தை உனது இலங்கைப்பதியிற்பிரதிட்டைசெய்து பத்தியோடுபூசித்து வரக்கடவை, அன்றியும் அதனையப்பதிக்குக் கொண்டு செல்கின்றபோது, சித்தசுத்தியோடு, வாகனத்தின்மீதேறாது செல்லல்வேண்டும், அவ்வாறுசெல்லும்போது, வழியிற்பூமியின்கண் வைப்பையெனில், மீட்டும் உன்கையில் அகப்படாதமுந்தும், இதனைநன்றாய்க்கவனிக்கக்கடவையென்று திருவாய்மலர்ந்து கரந்தருளினார். பின்னர் இராவணன் பெருமகிழ்ச்சிகொண்டு, சிவபிரானளித்தருளிய சிவலிங்கத்தைப்பயபத்தியோடுங்கரத்திலேந்தி, அளவற்றகாடுகளையும்மலைகளையுங் கடந்து, கடல்மத்தியிலிருக்கின்றதனதுலங்காபுரியைநோக்கிச்செல்லுகையில், இக்காரணத்தைத் தேவேந்திரனறிந்து, ஐயோ- இராவணன் அச்சிவலிங்கத்தை இலங்கையில்வைத்துப் பூசிப்பானாயின், எக்காலத்தினும்அவன் அழியானே, இனி இதற்கென்செய்யவல்லோமென்று பயந்து, முப்பத்துமுக்கோடி தேவர்களுந் தன்னைப்புடைசூழும்படியாகக் கயிலைபங்கிரியையடைந்து, அங்கெழுந்தருளியிருக்கின்றவிநாயகப்பெருமானுடைய திருவடிகளைப்பணிந்தெழுந்து, தெய்வகங்கையாலவருக்கபிடேகமாட்டிக் கற்பகமலர்களைக்கொண்டருச்சித்து, அமுதத்தைநிவேதனஞ்செய்து, சோடசவுபசாரங்களோடும் பூசித்தனன். அதற்குவிநாயகப்பெருமான்கிருபைசுரந்து. இந்திரனே- நீயாதுவேண்டிவந்தனை யென்றுவினவ, இந்திரன்மீ

ட்டுந்தொழுதெழுந்து,சுவாமி- இராவணன்சிவபெருமானிடத்தி லிருந்தும்ஓரிலிங்கம்பெற்று,அதனைத்தனது இலங்கைநகரில்வைத்துப்பூசிக்கச்செல்கின்றனன்,அவ்வாறேவைத்துப்பூசிப்பானாயின், அவனுக்கு எக்காலத்து மரணமில்லையாம்,ஆகவே-தேவர்குலங்களைவிருத்தியெய்தவொட்டாதுநாசமாக்குவான்,ஆதலால்-அவன் அப்பதியைச்சேருமுன்னமேஓரிடையூறவனுக்குண்டாக்கி, யாங்களோர்துன்பமடையாதவண்ணந்தேவரீர்காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குக்கணேசமூர்த்தியிசைந்து,உடனேவருணனைக்கூவி,நீ இராவணன்வயிற்றில்நீர்சுரப்பிக்கக்கடவையென்றுஏவினர்.அவனும்அவ்வாறே அவன்வயிற்றில்நீர்சுரப்பிக்கச்,கணேசமூர்த்தியானவர் ஓர்பிராமணப்பிள்ளைவடிவங்கொண்டு, தமதுதிருவடிகளைநிலமகள்சூடும்படியாகநடந்து, இராவணனெதிரில்வந்தனர்.அச்சமயத்தில் இராவணன்சலோபாதையைச்சகிக்கமாட்டாது,சிவபிரானருளியகடப்பாட்டையெண்ணி யெண்ணித்,தன்னெதிரில்வருகின்றபிராமணப்பிள்ளையைநோக்கிப், பின்னாகுங்காரியத்தையறியாதவனாய், அப்பிள்ளையோடு இனியவார்த்தைகளாடி, அப்பா - எனக்குச்சலோபாதைமேலிட்டிருக்கின்றது, ஊரோநெடுந்தூரத்திலிருக்கின்றது, எதிரில்யாவரையுங்காணேன், ஆதலால்-நீஎன்மீதுகிருபைசெய்து, யான்ஜலஸ்பரிசஞ்செய்துவருமளவும் இச்சிவலிங்கத்தை உனதுகரத்திற்றாங்கியிருக்கவேண்டுமென்றுபிரார்த்தித்தனன். அதற்கு அந்தணச்சிறுவனையொத்தெழுந்தருளியகணேசமூர்த்திசொல்லுவார், ஐயா-யானோபிள்ளைமைப்பருவமுடையேன்,எனக்கோ இச்சிவலிங்கத்தைத் தாங்கத்தக்கவலியில்லை, நீயோ அதனை என்னிடத்திற் பலாத்காரமாய்த் தருகின்றனை, இவ்விதவாபத்துவேளையில் அதனைத்தாங்கவேண்டுவதே ஒருவனுக்குத் தகைமையாயினும், யான்மிகவும்பாலியனாயிருத்தலால்,உன்னைமுக்காற்கூப்பிடுவேன், அதற்குள்ளேவந்து அதனைப்பெற்றுக் கொள்ளல்வேண்டும், பெறுமற்போவையெனில் உடனே நிலத்தில்வைத்து விடுவேனென்றுதிருவாய்மலர்ந்தனர். அவையனைத்தையும் இராவணன்கேட்டு, அப்படியே ஆகவென்று அவர்கரத்தில் அச்சிவலிங்கத்தைக்கொடுத்து ஜலஸ்பரிசத்திற்குச்செல்ல, அவன் வருதற்குமுன்னம் மூன்றுதரங்கூவி அதனைநிலத்தில்வைத்து விட்டனர். பின்னர்இராவணன்விரைவிலோடிவந்து,தனதுமலைபோன்றஇருபதுகரங்களினாலும் அதனைக்கெல்லியெடுக்க, அஃதுமுன்னொருகாலத்தில்திருமால்வராகரூபமாய்ச்சென்று தேடியுங்காண்டற்கருமையானவாயிருந்த சிவபெருமானுடைய திருவடிகளைப்போல் ஊடுருவி, கற்பின்மகளிருள்ளத்தைப்போல அவன்கரங்களிற் சிக்காதிருந்தது. அதனைக் கெல்லுந்தோறும் அவன்கரங்கள் வாடும்படி நிலமும் நயப்பெய்தாதிருந்தது. அதனால் இராவணன் மனவருத்தமுற்று, மீட்டுந் தனதுகரங்களை வலியுடன் பாய்ச்சியிழுக்க,அப்போதச்சிவலிங்கம் பசுவின் காதுபோற்குழைந்துபிரகாசித்தது அக்காரணத்தால் விண்ணுலகர் மண்ணுலகர் முதலியயாவரும் அப்பதியைக்கோகர்ணமென்று சொல்லுவார்கள்.பின்னர் இராவணன் தன்னாற்கூடியவளவில் முயன்றும்,அச்சிவலிங்கந்தன்கரத்திற் சிக்காதிருந்தமையால், அம்மம்ம- இஃது மகாபலமுள்ளதென்று வியந்தனன். அதனாலச்சிவலிங்கம் மாபலலிங்கமென்னும் பெயர்பெற்றது. இப்பால்- இராவண

ன் அச்சிவலிங்கத்தை நிலத்தில்வைத்த பிராமணப்பிள்ளையின்மீதுசோப ங்கொண்டு, தனதுகையால் அவர் சிரத்திலோங்கிக் குட்டினன். உடனே கணேசமூர்த்தி அப்பிராமணப்பிள்ளைவடிவத்தைமாற்றித், தமதுநிசரூபத் தைக்கொண்டு, அவ்விராவணனைத் துதிக்கரத்திலெடுத்து, அவன் சிரமா னது அண்டமுகட்டில் முட்டும்படி மேலேயெறிந்தும், மீட்டுந்தமது திரு வடிகளால் அவன்பாதாளலோகத்தி லழுந்தும்படி நிலத்தில்விழத்தள்ளி யும், இவ்வாறுபந்தாடுவதுபோல அவன்சரீரத்துள்ள என்புகளெல்லா ம் நெக்குவிடும்படி ஆடினார். அதனை இராவணன் சகிக்கமாட்டாது கூக் குரலிட்டுப், பொய்தவிர்ந்த அடியவர்கள்செய்யும்புன்மையினைப்பொறுப் பவனே அபயம், கைதவமுடையோர்கள் செய்யுங் கடப்பாடுகளையெல்லா ம் வெறுப்பவனே அபயம், வேண்டிவந்தித்தோர்கட்கு விக்கினங் கெடுப் பவனே அபயம், வேண்டிவந்தியாதவர்கட்கு விக்கினங் கொடுப்பவனே அபயம். என்றிவ்வாறு அனந்தமுறைஓலமிட்டுச், சுவாமி-அடியேன்செய் த பிழைகளைமன்னித்துக் காத்தருளவேண்டும், அடியேன்மீது சுவாமிக ள் கிருபாநோக்கஞ்செலுத்தி யாளாவிட்டால் இனியான்நாசமடைவேன் அப்படியாகாமுன்னம்அடியேற்குஉயிர்ப்பிச்சைதந்தருளவேண்டும், என் று துதிசெய்தனன். அதற்குவிநாயகக்கடவுள் மனமிரங்கி, அவன் இறவாது பிழைத்திருக்கும்வண்ணந் தமது கடைக்கண்பார்வையினை அவன் மீது செலுத்திநிலத்தில்விட்டனர். பின்னர் இராவணன்பரிமளமிகுந்தபுட்பங் களால் அவர்திருவடிகளையருச்சித்து, அனந்தமுறைவேதாகமங்களாற்று திசெய்துபூசித்தனன். அதற்குக்கணேசமூர்த்திகிருபைசுரந்து, இராவண னே-உனதுகையால் நமதுமுடியில்எவவாறுமுன்னங்குட்டினையோ, அவ வாறு உன்முடியில்குட்டிக்கொள்ளுகவென்றுகட்டளையிட, உடனேதனது முடியில் உதிரமொழுகும்படியாகக் குட்டிக்கொண்டனன். அதனைக்கணே சமூர்த்திகண்டு, யாவரேனும் இவ்வாறுநம்மைக்கண்டவுடன் குட்டிக்கொள் வார்களாயின், அவர்கட்கு எலலாத்துன்பங்களையு மொழித்தருளுவோமெ ன்றுதிருவாய்மலர்ந்து, அவனுக்குவேண்டியபலவரங்களைத்தந்து, தமதுதி ருவுருவைக் கரந்தருளினர். பின்னர் இராவணன் அவ்வரங்களைச் சிரமே ற்கொண்டு, தனதுஇலங்கைப்பதியையடைந்துஇன்புற்றிருந்தனன்.

கணபதிதுணை.

முப்பத்தொன்பதாவது.

அகத்தியர்உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, இராவணன் விநாயகமூர்த்தியையநுட் டித்து வரம்பெற்ற வரலாற்றினைச்சொன்னேம், இப்பால அகத்தியமுனி வர் வந்தித்ததிறத்தினைச் சொல்லுவோங்கேட்பீராக. முன்னங்கைலாசப

தியாகிய சிவபெருமானிடத்தில் அளவற்றவரங்களைப்பெற்று ஆயிரத்தெட்டண்டங்களையு மாண்டுவந்த சூரபன்மனால், தேவேந்திரனானவன், தனதுபத்தினியாகிய இந்திராணியோடும் விண்ணுலகத்தைவிடுத்து, இம்மண்ணுலகத்தில் அளவற்ற மகிமையுற்றிருக்கின்ற சீர்காளிப்பதியையடைந்து, சிவபெருமானையருச்சித்தற்கோர் நந்தனவனம்வைத்து, அதில் நின்றும் பிரதிதினம் பத்திரபுட்பங்களைக்கொய்து அருச்சித்து வாழ்ந்திருக்கின்றநாளையில், அச்சூரபன்மனுடைய ஆக்ஞையினால் மேகங்கள் சிறிதும் மழைபெய்யாமல்மாற,அதனால்அந்த நந்தனவனமானதுவாடி யுத்தகளம் போலாயது. பின்னர் இந்திரன் அதனைக்காணுந்தோறும் வருந்தி,இதற்கினி என்செய்பவல்லோமென்று ஏங்கித்துயருற்றிருக்கின்றசமயத்தில், சிவபிரானுடைய கிருபையினால் ஒருவாக்கானது (நதிவந்து நினதுநந்தனவனத்திற்பாயும்அஞ்சாதுபூசைசெய்) என்றுஆகாயத்தின்கணுண்டாயது அதனை இந்திரன்கேட்டுமனமகிழ்வுற்றிருக்கின்றபோது,அவனிடத்துநாரதமுனிவர் தற்செயலாய்வர, அவரைஇந்திரன் பணிந்தெழுந்து, சுவாமி-சூரபன்மன்செய்யுங் கொடுமைக்கஞ்சி மிகவுமனக்கவலையோடு மிப்பதியில் வந்தொளித்திருக்கின்றயான்,அக்கவலை தீரும்வண்ணம் சிவபிரானுடைய திருவடிகளையருச்சிப்பதற்கு ஓர்நந்தனவனம்வைத்தேன்,அஃதுமழையில்லாமல்வாடிப்போனதன்றி, அதிலுள்ள மலர் தளிர் அரும்பு முதலானவைகள் கணவனைநீங்கிய கற்பின்மகளிரைப்போலாயின. ஆதலால்-இனி அதற்குச் சலம்பாயத்தக்க உபாயத்தினையுணர்த்தி யருளவேண்டுமென்று பிரார்த்திக்க,நாரதமுனிவர்மனதிரங்கி, இந்திரனே - கைலாயவரையிலிருந்த காவேரிநதியை,முன்னர் சிவபிரான் அகத்தியமுனிவருக்களித்திருக்கின்றனர், அதனையம்முனிவர் தமதுகமண்டலத்தி லடைத்துச்சையவரைச்சாரலில் வந்திருக்கின்றனர்,அந்நதிபெருகிவருமாயின்,உனது நந்தனவனம்பிழைக்கும், அதுபாயும்படிசெய்யவல்லவர் விநாயகமூர்த்தியொருவரேயன்றி வேறொருவரில்லை,ஒன்றைஆக்கவும்- ஒன்றைப்பழிக்கவும்-ஒன்றைவிட்டொன்றை யுயர்த்தவுஞ் செய்யவல்லவர் அவரேயாகும் ஆதலால்-விரைவில் அவருடையதிருவடிகளை வழிபடக் கடவையென்று சொல்லிச்சென்றனர். இப்பால்-இந்திரனானவன் தாயினுஞ்சிறந்த தயாநிதியாகியவிநாயகமூர்த்தியைப்பூசித்து,அவரதுதிருவடித்தாமரைகளை அனந்தமுறைவேதாகமங்களாற்றுதிசெய்துநிற்க,அதற்குக்கணேசமூர்த்திகிருபைசுரந்து, ஓவலாரியே- நீ யாதுவேண்டிவந்தனையென்றுதிருவாய்மலர்ந்தனர். இந்திரன்மீட்டுந்தொழுதெழுந்து, சுவாமி- அடியேன்சிவபிரானைப்பூசிக்குமாறுநந்தனவனம்வைத்தேன், அஃதுமழையில்லாமல் வாடுகின்றது, அகத்தியமுனிவர்சையவரைச்சாரலில் வந்திருக்கின்றனர், அவர் தமதுகமண்டலத்தி லடைத்துவைத்திருக்கின்றகாவேரிநதியை உலகமெல்லாம் போற்றும்படியாக இங்குபெருகிவரச்செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன. அதற்குக்கணேசமூர்த்திஅவ்வாறே செய்வோமென்று திருவாய்மலர்ந்து, அவனுக்கு விடைகொடுத்து, உடனேகாகவடிவங்கொண்டு, சையவரைச்சாரலையடைந்து, அகத்தியமுனிவருடையகமண்டலத்தின்மீதேறியுட்கார்ந்தனர்.அதை அம்முனிவர்கண்டு, இனிவரும்விளைவை யோசியாது,தமதுகையாலோட்ட, உடனே அக்கமண்டல நீரைக் கவித்து,

புக்காவடிவத்தினின்றும்மாறிப்பிராமணப்பிள்ளை வடிவங்கொண்டுநின்ற
னர். அவ்வாறுநிற்பவரை அகத்தியமுனிவர்பார்த்து, இவன்முன்னஞ்சாகவ
டவோடுநமதுகரகநீரைக்கவிழ்த்து, இப்போதுபிராமணப்பிள்ளைவடிவாகி
நிற்கின்றனதலால், இவன் அநுமானேபிறனேவென்றுசங்கேகித்து, இவ
னதிறத்தைமுழுவது மறிவோமென்றெண்ணி, அவரைக்குட்டுமாறுதமது
விரல்களைமடித்து ஓங்கிக்கொண்டு அவரருகிற்சென்றனர், அதற்கு விநா
யகமூர்த்தி பயந்தவர்போலேவோட, மீட்டும் அவரைப் பிடிப்பதற்கு அ
கத்தியர் பின்பற்றியோடினர். இப்பால் விநாயகமூர்த்தி அம்முனிவருக்கு
அகப்படுவார்போலக் கிட்டியும், பின்னர் அகப்படாமல் அளவற்ற தூ
ரத்திலே யெட்டியும், இவ்வாறு அம்முனிவர் தம்மைத்தொடர்ந்து வ
ருந்தோறும் விட்டுவிட்டகன்று, உலகமெல்லாந் திரிந்து ஓட்டங் காட்
ட, அதனல் அகத்திய முனிவர் தமதுள்ளமுங் கால்களுந் தளர்வெய்
தினர். அதனைக்கணேசமூர்த்தியறிந்து, பிராமணப்பிள்ளை வடிவத்தைமா
ற்றி யானைமுகத்தோடும் அவரெதிரிற் பிரத்தியக்ஷமாகிநின்றனர். அவ
ரைக்கண்டவுடன் அகத்தியமுனிவர் திகைத்து, அன்பும் அச்சமுங் கொ
ண்டு, சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, முன்னங்குட்டுதற்கு ஓங்கிய க
ரத்தினல் தமதுசிரத்தில் உதிரங்குழம்பும்படியாகக் குட்டிக் கொண்டன
ர். அவ்வன்புக்கு விநாயகமூர்த்திகிருபைசுரந்து, ஓதமிழ்முனியே- நீசெ
ய்யுஞ்செய்கைக்கு மெச்சினேம், இனியதனைநிறுத்தி, உனக்குவேண்டிய
வரங்களைக்கேளென்று திருவாய்மலர்ந்தனர். அகத்தியமுனிவர் மீட்டுந்
தொழுதெழுந்து, சுவாமி-சகளமாகியும், நிட்களமாகியும், சிருட்டிதிதிசங்
காரமென்னு முத்தொழிலினை நடாத்த மும்மூர்த்திகளாகியும், அம்மும்
மூர்த்திகட்கு மூலகாரணராகியுமிருக்கின்ற தேவரீர் திருவிளையாடல்கள்
என்னலறியப்படுவனவோ, சிவபெருமானற்பெற்றுகமண்டலத்தி லடை
த்துவைத்திருந்த காவிரிநீரைச், சிறிதுமில்லாதபடி தேவரீர்கவிழ்த்துவிட்
டது யாதுகாரணங்கொண்டோ அறிகிலேன், அடியேன்சிவபிரானுத்தரவி
ன்படி இப்போதுபொதியமலைக்குச்செல்லுகின்றேன், அங்கு அவரை யபி
டேகிக்குமாறு அக்காவிரிநதியைக்கடாக்ஷித்தருளவேண்டுமென்றுபிரார்த்
தித்தனர். அதறகுவிநாயகமூர்த்திமனதிரங்கி, ஓதுறுமுனியே- இந்திரன்சி
வபிரானுக்கு அருச்சனைசெய்யுமாறு ஓர்நந்தனவனம்வைத்தனன். அஃது
மழையின்றி வாடுவதால், அதனைக்காப்பாற்றவேண்டி நினதுகமண்டலநீ
ரைக்கவிழ்த்தனம், இனிஉனதுகமண்டலத்தையு நிரப்பித் தருகின்றே
மென்று திருவாய்மலர்ந்து, மிக்கவிரைவோடுசென்று பாய்கின்ற அக்
காவிரியின்சலத்தைத் தமதுகரத்தினலள்ளி, அக்கமண்டலத்தில்வழியும்ப
டியாக விடுத்துக்கொடுத்து, பின்னும் அளவற்றவரங்களையுந்தந்து கரந்த
ருளினர். இப்பால் அகத்தியர்கணேசமூர்த்தி யளித்தருளியதீர்த்தத்தை
க்கையேற்றுப்பொதியமலைக்கெழுந்தருளினர். விநாயகமூர்த்தியினுடைய
பெருங்கருணையால் அக்காவேரிநதியானது தேவேந்திரனுடைய நந்தன
வனத்திற்பாய்ந்து கடலிற்போய்ச்சேர்ந்தது. இவ்வாறு விநாயகப்பெருமா
னேவலாலுண்டான அக்காவிரிநதியானது இற்றைவரையில் அந்தந்தகா
லந்தோறும் முறைவழாது உண்டாகிவருமாயின், அவரதுசரணாரவிந்தங்
களையடுத்த அடியார்களுக்கு எக்காலத்தும் அவர்திருவருள்குறையுமோ.

கணபதிதுணை.

நாற்பதாவது.

காசிபர்முதலாயினோர் உபாசித்தபடலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, அகத்தியமுனிவர் விநாயக மூர்த்தியை வந்தித்து, அளவற்றவரங்களைப்பெற்ற வரலாற்றினைச்சொன்னோம். இப்பால் காசிபர்முதலாயினோர் உபாசித்ததிறத்தினைச் சொல்லுவோங்கேட்பீராக, முன்னொருபிரளயமுடிவில், பிரமனானவன் தன்மனத்தால் எழு புதல்வரை யுண்டாக்கினான். அவருள்காசிபர் அறிவும்மேன்மையுமுள்ளவராகியிருந்தனர். அதனாலவருக்குப்பிரமன் ஏகாக்ஷரமந்திரத்தைஉபதேசஞ்செய்து, அதனைச்செபிக்கு முறைமையினையுந்தெருட்டி, மைந்தனே- நீ ஐம்பொறிகளையுமடக்கிக், கணேசமூர்த்தியினுடையதிருவடிகளில்மனதைநிறுத்தி, நாம்உபதேசித்த அவரதுஏகாக்ஷரமந்திரத்தைச்செபித்துத் தவஞ்செய்து, அவர்திருவருளால் சகலவான்மாக்களையுஞ் சிருட்டிசெய்யக்கடவையென்றனுப்பினன். அவ்வாறேகாசிபர்சென்று, தேவவருடம்ஆயிரவருடம்வரையிற் றவஞ்செய்துகொண்டிருந்தனர். அதற்குக்கணேசமூர்த்தி கிருபைசுரந்து, அங்குசம்- பாசம்- தாமரைமலர் - ஒற்றைக்கோடு என்னு மிவைகளைத்தாங்கியிருக்கின்ற நான்குதிருக்கரங்களோடு, மார்பில் முத்தாரமும், மதம்பொழிகின்றதுதிக்கரமும், முடியிலஇரத்நகிரீடமும், அதன்மீது மூன்றாம்பிறையும், செவியிற்குழைகளும் விளங்க, மூஷிகவாகனமூர்ந்து, அளவற்றசூரியர்களை அழியச்செய்யவல்ல பிரகாசத்தோடு அவரெதிரிற் பிரத்தியக்ஷமாயினர். உடனே காசிபர்விரைந்தெழுந்து, அனந்தமுறைவலம்வந்து, மிக்கவுள்ளன்பினோடுந் துதிசெய்து, விழிகளில் ஊற்றெடுத்ததுபோல நீர்த்தாரைகளைச்சொரிந்து, அளவளாவிய அற்புதத்தோடும் ஆனந்தக்கூத்தாடி, இருகரங்களையுஞ்சிரமேற்கூப்பி நின்றனர். அதனைவிநாயகமூர்த்திகண்டு, காசிபனே- உனக்குவேண்டிய வரங்களைக்கேள் தருகின்றோமென்று திருவாய்மலர்ந்தருள, சுவாமி- உலகத்தில் அடியேன் உயிர்த்தொகைகளைச்சிருட்டி செய்யுமாறு வரங்கொடுத்து, தேவரீர் கசியபந்தனென்னும்பெயரோடெனக்குப் புத்திரராகிவரவேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்கவ்வாறே கிருபைசுரந்து, தமது அடியவருள்ளக் கோயிலையடைந்தனர். இப்பால் காசிபர் தமதுஆசிரமத்திற்குச் சென்று, தமதுபத்தினியர்பதினால்வரோடுங்கூடிச் சுகித்திருக்குங்காலையில், அவர்கள்கருப்பத்தினின்றுதேவர்முதலிய அளவற்றசராசரங்கள்உண்டாயின. அவர்கட்குக்காசிபர் விநாயகமூர்த்தியினுடையதிருமந்திரங்களைச்சோதித்தெடுத்து, ஒன்று- நான்கு- ஐந்து-எட்டு-பன்னிரண்டு- பதினாறு-பத்தொன்பது- என்னு மெழுத்துக்களையுள்ள மந்திரங்களை முறைமைப்படி உபதேசித்தனர். பின்னர் அவர்கள்யாவரும் ஒவ்வொருமந்திரங்களைக் கடைப்பிடித்து, விநாயகமூர்த்தியை வேறுவேறாகத்தங்களுள்ளத்திற்றியானஞ் செய்து, தேவவருடத்தில் ஆயிரவருடந்தவஞ்செய்தனர். அதற்குக்கணே

மூர்த்திகிருபைசுரந்து, அவர்கள் தம்மை எவ்வாறு தியானித் தார்களோ அவ்வாறே சிலர்முன் சிங்கவாகனத்தின் மீதும், சிலர்முன் மயில்வாகனத்தின்மீதும், சிலர்முன் பெருச்சாளிவாகனத்தின்மீதும், சிலர்முன் மான்வாகனத்தின்மீதும், சிலர்முன் சூரியப்பிரகாசம்போலவும், சிலர்முன் சந்திரப்பிரகாசம்போலவும், சிலர்முன்பவளநிறம்போலவும், சிலர்முன்மேகநிறம்போலவும், சிலர்முன் இரண்டுகைகளோடும், சிலர்முன் நான்குகைகளோடும், சிலர்முன் ஆறுகைகளோடும், சிலர்முன் எட்டுகைகளோடும், சிலர்முன் பத்துகைகளோடும், சிலர்முன் பன்னிரண்டு கைகளோடும், சிலர்முன் பதினெட்டுகைகளோடும், சிலர்முன் ஆயிரங்கைகளோடும், சிலர் முன் வாலப்பருவமுற்றும், சிலர்முன் தருணப்பருவமுற்றும், சிலர்முன் குமாரப்பருவமுற்றும், சிலர் முன் விருத்தப்பருவமுற்றும், இவ்வாறு பற்பலவிதமாக உருவங்கொண்டு, யாவருக்கும் பிரத்தியக்ஷமாயினர். உடனே அவர்கள் திடுக்கிட்டெழுந்து, சிலர் ஏகாங்கமாகவும், சிலர் திரியாங்கமாகவும், சிலர் பஞ்சாங்கமாகவும், சிலர் அட்டாங்கமாகவும், விழுந்து நமஸ்கரித்து, சூரியனைக்கண்ட கமலம்போல யாவரும் முகமலர்ந்து, விழிகளில் நீர்த்தாரைகளைப்பெருக்கி, ஆனந்தபரவசங்கொண்டு துதிசெய்வதாயினர்,

பந்தமகற்றுமனந்தகுணப்பரப்புமெவன்பாலுதிக்குமோ ... ...*
வெந்தவுலகுமெவனிடத்திலீண்டியிருந்துசரக்குமோ ... .. *
சந்தமறையாகமங்கலைகளனைத்துமெவன்பாற்றகவருமோ ... ...*
வந்தவிறையாங்கணபதியையன்புகூரத்தொழுகின்றோம்... .... *

உலகமுழுதுநீக்கமறவொன்றாய்நிற்கும்பொருளெவனவ் ... ...*
வுலகிற்பிறங்கும்விகாரங்களுருதமேலாமொளியாவ ... ...*
னுலகம்புரியும்வினைப்பயனையூட்டுங்களைகணெவனந்த ... ... *
வுலகமுதலைக்கணபதியையுவந்துசரணமடைகின்றோம் ... . *

இடர்கண்முழுதுமெவனருளாலெரிவீழ்பஞ்சியெனமாயுந் ... ...*
தொடருமுயிர்களெவனருளாற்சுரர்வாழ்பதியுமுறச்செய்யுங் ... *
கடவுண்முதலோர்க்கூறின்றிகருமமெவனான்முடிவுறுமத்... ... ...*
தடவுமருப்புக்கணபதிபொற்சரணஞ்சரணமடைகின்றோம்... ... ..*

*
மூர்த்தியாகித்தலமாகிமுந்நீர்கங்கைமுதலான... ... ...
தீர்த்தமாகியறிந்தறியாத்திறத்தினுமுயிர்க்குநல... ... ... *
மார்த்திநாளுமறியாமையகற்றியறிவிப்பானெவனப் ... ...*
போர்த்தகருணைக்கணபதியைப்புகழ்ந்துசரணமடைகின்றோம் ... *

செய்யும்வினையின்முதல்யாவன்செய்யப்படுமப்பொருள்யாவ ...*
னையமின்றியுளதாகுமந்தக்கருமப்பயன்யாவ... ... ... *
னுய்யும்வினையின்பயன்விளைவினூட்டிவிடுப்பானெவனந்தப் ... *
பொய்யிலிறையைக்கணபதியைப்புகழ்ந்துசரணமடைகின்றோம்... *

வேதமளந்துமறிவரியவிகிர்தன்யாவன்விழுத்தகைய... ... ...*
வேதமுடிவிடைநவிலும்விமலன்யாவன்விளங்குபர ... ...*

நாதமுடிவில்வீற்றிருக்குநாதனெவனெண்குணனெவனப் ... *
போதமுதலேக்கணபதியைப்புகழ்ந்துசரணமடைகின்றாம்... ....*

மண்ணினோரைங்குணமாகிவதிவானெவனீரிடைநான்காய் ... *
நண்ணியமர்வானெவன்றீயின்மூன்றாய்நவில்வானெவன்வளியி ... *
னெண்ணுமிரண்டுகுணமாகியியைவானெவன்வானிடையொன்றா *
மண்ணலெவனக்கணபதியையன்பிற்சரணமடைகின்றாம் ... ...*

பாசவறிவிற்பசுவறிவிற்பற்றற்கரியபரன்யாவன் ... ... *
பாசவறிவும்பசுவறிவும்பயிலப்பணிக்குமரன்யாவன் ... ...*
பாசவறிவும்பசுவறிவும்பாற்றிமேலாமறிவான... ... .*
தேசனெவனக்கணபதியைத்திகழச்சரணமடைகின்றாம் ... .. *

இவ்வாறு தோத்திரஞ்செய்து,சுவாமி- அடியேங்கள் குலம்- பிறப்பு- உயிர்- குணம்- தருமம்- தவம்- தானம்- விரதம்- கலை- முதலானயாவும் பங்கமுறாதவண்ணம் பரிசுத்தமாயின. இனி அடியேங்கள்கிருதார்த்தர்களாகும்படி கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கு விநாயகமூர்த்தி சந்தோஷித்து, அவ்வவர்கட்கு அளவற்றவரங்களைத் தந்து, அன்பர்களே- நீங்கள்செய்த தோத்திரங்களையாவரேனும் மூன்றுதினம் மூன்றுசந்திகளினுந் துதிசெய்வார்களாயின், அவர்கட்குச்சகலகருமங்களுஞ் சித்தியாகும். எட்டுதினந்துதிசெய்தால், சிந்தைமகிழச்சுகமெய்துவர். சதுர்த்திவிரதத்தில் எட்டுதரந்துதிசெய்தால், அட்டமாசித்திகளுங்கைகூடும். இரண்டுமாதம் நித்தியப்படி ஒருதரந்துதிசெய்தால்,இராசவசியமுண்டாகும். அவ்வாறு இருபத்தொருமுறைதுதிசெய்தால்,தனந்தானியமுதலியஅஷ்ட ஐசுவரியமு முண்டாகும். என்று திருவாய்மலர்ந்து தமதுதிருவுருவைக் கரந்தருளினார். இப்பால் தேவர்கள்முதலியயாவரும் மிக்கவுள்ளன்பினோடும் வெவ்வேறே ஆலயங்கள்சமைத்து, அவைகளில் தாம் விநாயகமூர்த்தியை எவ்வாறு தரிசித்தார்களோ, அவ்வாறே திருவுருவங்கண்டு பிரதிட்டைசெய்து, வேதாகமமுறைப்படி பூசித்துத்,தேவர்கள்சுமுகனென்றும், முனிவர்கள் ஏகதந்தனென்றும், கந்திருவருங் கிம்புருடரும் கபிலனென்றும், சாரணருஞ் சித்தரும் கெஜகர்னனென்றும், மனிதர்கள் இலம்போதரனென்றும், மிருகங்கள் விகடனென்றும், பக்ஷிகளும் மரங்களும் விக்கினராசனென்றும், சுக்கிரன்முதலிய நவக்கிரகங்கள் கணநாயகனென்றும், அட்டதிக்குப்பாலகர் தூமகேதுவென்றும், நதிகளுந்தீர்த்தங்களும் கணாத்தியக்ஷனென்றும், பயிர்முதல் கிருமிகீடங்கள்யாவும்பாலசந்திரனென்றும், மற்றஜீவஜெந்துக்களெல்லாம் கஜானனனென்றும் பெயரிட்டு, அளவற்றதோத்திரங்கள்செய்து பணிந்து, மிக்கமகிழ்ச்சியோடும் அவ்வவர்கள் பதவிகளிற் சென்றுவாழ்ந்திருந்தார்கள்.இந்த பன்னிரண்டு நாமமும், முன்னர் ஆழியைக்கடைந்து அமுதெடுத்ததுபோலச், சகத்திரநாமங்களினின்றும் அவர்கள் ஆராய்ந்தெடுத்ததாகும். அந்தசகத்திரநாமங்களைத் தோத்திரஞ்செய்வதனா லுண்டாகும்பயனை, இப்பன்னிரண்டு நாமங்களேதரவல்லதாயின், இவைகளின்பெருமையை விவரித்துச்சொல்லவேண்டுமோ. இப்பன்னிரண்டுநாமங்களால் யாவரும்விநாயகமூர்த்தி

யைப்பூசித்து அருச்சிப்பார்கள். மேலும்-இவைகள்எல்லாப்பயனையுமள ரிதிற்றரத்தக்கதாதலால்,சைவர்களேயன்றி,ஏனைய சவுரவர் சாத்தர் வை ணவர்முதலிய சகலமதத்தர்களும் ஓதிப் பயன்பெறுவார்கள். விநாயக ரைப் பூசனைசெய்யாதவர்கள் யாவருமில்லை. மேலும் - அத்திருநாம ங்களைப் பிரதிதினம் விடியற்காலத்திற்சொன்ன பேர்கள், கோடியாகம்- கோடிதவம்- கோடிதருமம்- கோடிதீர்த்தம்- கோடிஸ்தலம்- கோடிமூர் த்தி- கோடிதுலாபாரதானம்- கோடிகன்னிகாதானம்- கோடிகஜதானம்- கோடிகிருச்சிரதானம்- என்னு மிவைகளால் வரும்பயன்கள்யாவோ, அ வைக்குக்கோடிபங்கு அதிகமான பயன்களைப் பெறுவார்கள். அன்றியும்- ஓங்கார ஸ்வரூபியாயிருக்கின்ற கணேசமூர்த்திக்குரிய அநாதிபாதத்துவ நாமம் இருபத்துநான்குள, அவைகளைமேற்கூறிய சகத்திரநாமங்களோடு ஞ் சொல்லுவோங்கேட்பீராக.

அஸ்யஸ்ரீ- மஹாகணபதி சஹஸ்ரநாமஸ்த்தோத்ரமந்ரஸ்ய- க ணேசமுனிருஷய:- மஹாகணபதிதேவத:- அநுஷ்டிப்சந்த:-ஊ ம்படுபீஜம்- துண்டம்சக்தி: - ஸ்வாஹாகீலகம் - சகலஸங்கடநிவா ரணார்த்தே- மம- மஹாகணபதிப்ரஸாத ஸித்யர்த்தே ஜபவினி யோக:. பவஸஞ்சிதபாபௌக- வித்வம்ஸனவிசக்ஷணம்- விக்னாந் தகாரபாஸ்வந்தம்- விக்னராஜமஹாம்பஜே, ஏகதந்தம் சூர்ப்பகர்ன ம்- கஜவக்த்ரம்சதுர்ப்புஜம்- பாசாங்குசதரம் தேவம் - த்யாயேத் ஸித்திவிநாயகம், உத்தமங்கணநாதஸ்ய- வ்ரதம்ஸம் பக்தரம் சுபம் பக்தாபீஷ்டப்ரதந்தஸ்மா- த்யாயேத்தம் விக்னநாயகம்.

ஓம் கணேசாயநம ... ...*
ஓம் கணக்ரீடாயநம... ... ...*
ஓம் கணநாதாயநம... ... ...*
ஓம் கணதிபாயநம ... ... *
ஓம் ஏகதம்ஷ்ட்ராயநம ... ... *
ஓம் வக்ரதுண்டாயநம, ... *
ஓம் கஜவக்த்ராயநம ... ...*
ஓம் மஹோதராயநம ... ... *
ஓம் லம்போதராயநம ... ... *
ஓம் தூம்ரவர்ணாயநம ... ... *
ஓம் விகடாயநம ... ... *
ஓம் விக்னநாதாயநம... .... *
ஓம் சுமுகாயநம ... ... *
ஓம் துர்முகாயநம ... ...*
ஓம் புத்தாயநம ... ... *
ஓம் விக்னராஜாயநம ... ...*
ஓம் கஜானனாயநம... ... ... *
ஓம் பீமாயநம ... ... *
ஓம் ப்ரமோதாயநம ... ... *
ஓம் ஆமோதாயநம... ... ... *
ஓம் சுரானந்தாயநம... ... ...*
ஓம் மதோத்கடாயநம .. ... *
ஓம் ஹேரம்பாயநம ... ... *
ஓம் சம்புவேநம ... .*
ஓம் சம்பராயநம... ... ... *
ஓம் லம்பகர்ணாயநம ... ...*
ஓம் மஹாபலாயநம ... .*
ஓம் நந்தனாயநம.... ... *
ஓம் அலம்படாயநம ... ...*
ஓம் தனஞ்சயாயநம ... ...*
ஓம் மேகநாதாயநம... ... ... *
ஓம் அகநாசனாயநம... ... ...*
ஓம் விநாயகாயநம... ... . *
ஓம் விரூபாக்ஷாயநம ... ... *
ஓம் வீராயநம ... ...*
ஓம் சூராயநம ... ... *
ஓம் கணாத்தியக்ஷாயநம ... ...*
ஓம் வரப்ரதாயநம ... ...*
ஓம் சித்திபுத்திப்ரப்ரசாதனாயநம
ஓம் மஹாகணபதயேநம ... ... *

ஓம் ருத்ரப்ரயாயநம ... ...*
ஓம் பீமாயநம ... ...*
ஓம் உமாபுத்ராயநம ... ... *
ஓம் ஈசானபுத்ராயநம ... ... *
ஓம் குமாரகுருவேநம... ... *
ஓம் மூஷகவாஹனாயநம... ... *
ஓம் சித்திப்ரயாயநம ... ... *
ஓம் சித்திபதயேநம ... ...*
ஓம் சித்தாயநம ... ... *
ஓம் சித்திவிநாயகாயநம ... ...*
ஓம் சாகலாயநம .. .. *
ஓம் சிம்மவாஹனாயநம ... ...*
ஓம் மோஹினிப்ரயாயநம ... *
ஓம் அவிக்னத்வகராயநம... ...*
ஓம் ஜயாயநம... ... ...*
ஓம் துர்ஜயாயநம ... ... *
ஓம் அதுர்ஜயாயநம , ...*
ஓம் கண்டகிராஜபுத்ராயநம... *
ஓம் விஸ்வகர்த்தாயநம ... ... *
ஓம் விஸ்வவந்தியாயநம ... *
ஓம் விஸ்வமுகாயநம,... ... ...*
ஓம் கவிருஷபாயநம.... ... ...*
ஓம் கவியேநம ... ... *
ஓம் துனிக்ரிணியேநம ... ...*
ஓம் பிரம்மண்யாயநம.... ... *
ஓம் பிரம்மணஸ்பதயேநம... ...*
ஓம் கூஷ்மாண்டஸ்யாமஸம்பூதாய
ஓம் நிதிபதயேநம... ... ...*
ஓம் பூபதயேநம ... ...*
ஓம் புவனபதயேநம .... *
ஓம் பூதபதயேநம ... ...*
ஓம் அவவ்யாயநம ... ...*
ஓம் அமிதாயநம ... ... *
ஓம் சம்மிதாயநம ... ... *
ஓம் பூஷதந்தபிதேநம ... ... *
ஓம் நிதிப்ரயாயநம .. .. *
ஓம் பதிப்ரயாயநம... ... ... *
ஓம் பாதகத்தியாஜிககூதிதயேநம. *
ஓம் ஜேஷ்டராஜாயநம... ... *
ஓம் ஹிரண்யபுராந்தஸ்தாயநம.. *
ஓம் ப்ரசமாயநம... ... ... *
ஓம் கராஹதத்வம்ஸசிந்துவேநம *

ஓம் சித்ராங்காயநம... ... ...*
ஓம் உமாங்ககேளீகுதுகினேநம...*
ஓம் சுமதாகுலபாலகாயநம......*
ஓம் நாதபின்னமஹாம்பராயநம *
ஓம் துற்சொற்பனநாசனாயநம... *
ஓம் நாதப்ரதிஷ்டிதாயநம ... ...*
ஓம் சத்தியோஜாதாயநம.... ...*
ஓம் வரதாயநம ... ... *
ஓம் குண்டலிநேநம... ... ...*
ஓம் விப்ராஜநூபுராயநம. ... *
ஓம் ஹாரிண்யேநம... ... .. *
ஓம் கிரீடினேநம... ... ... *
ஓம் குணினேநம ... ...*
ஓம் ஸவர்னமுஞ்சிமேகலினேநம *
ஓம் பீதாம்பராயநம... ... ...*
ஓம் கண்டதராயநம ... ... *
ஓம் வைமுக்யஹத்தைத்ய ஸ்ரீயே
ஓம் கஜகர்ணாயநம ... ... *
ஓம் விஜயாயநம... ... ...*
ஓம் விற்புஜாயநம... ..., ... *
ஓம் ஸ்வரூபாயநம ... ...*
ஓம் சூர்யமண்டலமத்யகாயநம.. *
ஓம் சமனாயநம ... ... *
ஓம் சுரபீதிஹிர்தேநம ... ...*
ஓம் வனமாலிமதாபக்னேநம ... *
ஓம் பத்ரேநம... ... ...*
ஓம் பாலசந்ராயநம ... ... *
ஓம் கண்டவைசாகஸமஸ்திதாயநம
ஓம் புருஷாயநம ... ... *
ஓம் சலீலாயநம... ... ...*
ஓம் கணாதிராஜாயநம ... ...*
ஓம் ஸ்வர்னநேத்ராதிஷாயாயநம *
ஓம் தீபகாயநம ... ... *
ஓம் யோகாதிபாயநம ... ... *
ஓம் வாககோசராயநம ... ...*
ஓம் நீராஞ்சனாயநம ... ... *
ஓம் ஸ்திரர்யநம ... ...*
ஓம் சுகரன்னாயநம ... ... *
ஓம் சுபானனாயநம ... ...*
ஓம் உமாங்கமலஜாயநம... ... *
ஓம் ஸர்வாத்மனேநம ... ...*
ஓம் தேவதாதாயநம... ... ...*

ஓம் தௌரிதேஜோபுவேநம... ...*
ஓம் ஸர்வதேவாத்மனேநம... ...*
ஓம் கௌரிசுகாவஹாயநம... ...*
ஓம் தர்மாயநம... ... ...*
ஓம் தேவதேவேஸ்வராயநம ... *
ஓம் சிவாக்ரோசஹாரிணேநம ...*
ஓம் விபசித்தேநம ... ...*
ஓம் மிர்த்துஞ்சயாயநம.... ... *
ஓம் தாமஹஸ்த்ராயநம ... ...*
ஓம் மஹாநாதாயநம... ... ...*
ஓம் தைத்யவிமர்த்தனாயநம... ...*
ஓம் ப்ரம்மமூர்த்தயேநம ... ...*
ஓம் ஜகஜ்ஜென்மனேநம ... *
ஓம் கருச்ருத்னேநம ... ... *
ஓம் ப்ராணாயநம ... ... *
ஓம் கிரீந்ராயநம... ... .*
ஓம் சம்புகேரபகாஸ்யபயப்ரதாயந
ஓம் காதாயநம் ... ...*
ஓம் தர்மிஷ்டாயநம ... ... *
ஓம் மிருகபதித்துவஜாயநம. ...*
ஓம் ஹேமாயநம ... ...*
ஓம் சம்புவக்திரோற்பவாயநம ...*
ஓம் மர்த்யகாயாயநம ... ... *
ஓம் இச்சாசக்திபவாயநம, ... *
ஓம் வராஹவதனாயநம ... ... *
ஓம் வாணிநாவாயநம ... ...*
ஓம் சம்புதேஜஸேநம ... ... *
ஓம் வ்யாக்ராஜிநாம்பராயநம ... *
ஓம் சமப்ரதாயநம ... ...*
ஓம் ஸ்பர்த்தநிற்பராயநம ... *
ஓம் காசிபாயநம ... ...*
ஓம் ப்ரம்மாண்ட கும்பசித்தோமா
,, பாலாயநம ... ... *
ஓம் பலிநேநம ... ... *
ஓம் க்ரகட்சர்த்தசநாயநம.... ...*
ஓம் கணகாயநம ... ... *
ஓம் சேதனாயநம ... ...*
ஓம் கிரிவருஷ்மனேநம ... ...*
ஓம் மந்தராயநம... ... ... *
ஓம் லயோன்மேஷநிமேஷாக்னியர்
,, க்கசோமத்ருகேநம... ... *
ஓம் வன்னிதாமாயநம ... ...*

ஓம் ப்ரம்மவித்யாமதோதகாயநம*
ஓம் ஸர்பாங்குளிகாயநம... ...*
ஓம் ப்ரதாபினேநம,... ... ...*
ஓம் சக்திசிரோருஹாயநம... ...*
ஓம் ஸ்ருஷ்டிலிங்காயநம........*
ஓம் ஹிருதயாநலநிச்சலாயநம...*
ஓம் ப்ரம்மநீசாயநம... ... ...*
ஓம் ஹிருதயபற்மகற்னிகாசாலாய
ஓம் தாற்மிகாயநம ... .*
ஓம் ப்ரதமாயநம... ... ... *
ஓம் குலாசலாஞ்ச சோமாற்ககண்
டாயநம... ... ... *
ஓம் பீனவக்ஷனேநம ... ...*
ஓம் வாசவநாசிகாயநம ... ... *
ஓம் கூடாயநம ... ... *
ஓம் யஸஸ்விநேநம... ....*
ஓம் ப்ருமத்யஸம்ஸ்திதாயநம ...*
ஓம் பீனஸ்கந்தாயநம ... ... *
ஓம் பூஷிதாசனாயநம் ... ... *
ஓம் வியத்கேளீசரோவராயநம...*
ஓம் ப்ருத்விகட்யேநம.... ... *
ஓம் தாரகாரகாயநம ... ...*
ஓம் ப்ரஜாவாரிநிவாரிதாயநம... *
ஓம் கல்பத்ருமவனாஸ்ரயாயநம.. *
ஓம் நதீனதபுஜாயநம... ... ...*
ஓம் யந்ரேநம... ... ... *
ஓம் துங்கசவ்யதந்தாயநம ... ...*
ஓம் லிபிபத்மாஸனாயநம... ...*
ஓம் ரத்நமண்டபமத்யஸ்தாயநம *
ஓம் தீவ்ராயநம... ... ...*
ஓம் ரத்னசிங்காசனாஸ்ரயாயநம. *
ஓம் தாராயநம ... ... *
ஓம் சற்பகோடீரகடாயநம......*
ஓம் போகதாயநம ... ...*
ஓம் சிந்தாமணிநிதிபதயேநம ... *
ஓம் ருத்ரசிரோதராயநம ... ...*
ஓம் சற்பஹாராயநம ... ... *
ஓம் சற்பதத்யானநிகளாயநம... *
ஓம் சர்வலக்ஷணலக்ஷிதாயநம... *
ஓம் கம்புகண்டாயநம ... ... *
ஓம் சற்பக்ஷாவேயபாசுராயநம....*
ஓம் ஸ்வேதாயநம ... ... *

ஓம் சர்வாவயவசம்பூர்ணாயநம... *
ஓம் த்ரிதால்யாயநம ... ...*
ஓம் சற்பயக்ஞோபவீதவதேநம *
ஓம் கடிசூத்ராயநம... ... ... *
ஓம் சர்வாபரணபூஷணாட்டியாயந,
ஓம் மஞ்சரீயேநம ... ...*
ஓம் சர்வமங்களமாங்கல்யாயநம *
ஓம் லம்போஷ்ட்லாயநம ... *
ஓம் ஜகாமஹாயணிபீடாயநம ..*
ஓம் லம்பநாசிகாயநம... ... *
ஓம் சர்வகாரணகாரணாயநம ...*
ஓம் மஹாநுஜாயநம ... ... *
ஓம் சர்வசோபாசமன்விதாயநம *
ஓம் ப்ரஹத்புஜாயநம ... ...*
ஓம் சர்வசத்யம்புஜாசனாயநம... *
ஓம் சதாதராயநம ... ... *
ஓம் சார்ங்கிணேநம... ... ...*
ஓம் உன்னதப்ரமதாயநம ... *
ஓம் பீஜபூரிணேநம ... ... *
ஓம் சர்வதேவகராயநம ... ...*
ஓம் சிரோத்ருதபதாயநம ... *
ஓம் சுதந்தவேநம ... ...*
ஓம் சமோதகாயநம ... ... *
ஓம் நந்தாநந்திதபீடஸ்ரீயேநம...*
ஓம் ஸ்வேதாம்பரத்ராயநம ... *
ஓம் அக்னிவாமரதாயநம... ...*
ஓம் ஜ்வாலினிமௌலிலாளி தாயந
ஓம் விஸ்வப்ருதேநம ... ... *
ஓம் ஸ்வேதமால்யாவிபூஷணாயநம.
ஓம் நிரங்குசாயநம ... ... *
ஓம் சூர்ப்பகர்ணாயநம ... ...*
ஓம் ஹஸ்தநேத்ராயநம ... *
ஓம் பாசினேநம ... ...*
ஓம் ஸ்வேதாதபத்ருசிராய நம *
ஓம் சித்தேசாயநம ... ... *
ஓம் சுக்லாங்காயநம... ... ...*
ஓம் ஸ்தம்பஹா காரகும்பாக்ராயந
ஓம் ஸ்வேதசாமரவிஜிதாயநம ...*
ஓம் த்ரிதோத்பலாயநம ... *
ஓம் சூதகலிகாத்ருதேநம... ..*
ஓம் நிபீடமஸ்தகாயநம ... *
ஓம் சூலினேநம ... ...*

ஓம் பூஸ்வதந்தப்ருதுவேநம... *
ஓம் லோகசுபதாயநம ... ...*
ஓம் ரத்னமௌலினேநம ... *
ஓம் தந்துவர்த்தனாயநம ... ...*
ஓம் சிகினேநம ... ... *
ஓம் இட்சுசாபதராயநம ... *
ஓம் கல்பவல்லிதராயநம ... ...*
ஓம் தீவ்ரசன்யநாயநம... ... *
ஓம் நிம்மசரணாயநம ... ... *
ஓம் ஜ்வாலாமாலினேநம ... *
ஓம் பூரணரத்னபிவருஷகாயநம *
ஓம் வசினேநம ... ... *
ஓம் ஏககராயநம... ... ... *
ஓம் க்ஞானமுத்ராயாயநம ... *
ஓம் விதிகாவாலினேநம ... *
ஓம் மஹீவராஹவாமாங்காயநம *
ஓம் ஸ்வர்னகண்டினேநம ... *
ஓம் வசுதாராமதாயநம ... ...*
ஓம் ப்ரசுபாங்கதாயநம... ... *
ஓம் கம்புகந்தராயநம ... ... *
ஓம் சக்ரபாணியேநம ... ...*
ஓம் ரமாரமேசபூர்வாங்காயநம...*
ஓம் சரோஜத்ருஜேநம ... ...*
ஓம் ரதிகந்தர்ப்பபச்சிமாயநம... *
ஓம் தக்ஷணோமா மஹேஸ்வராயந
ஓம் வித்ராதகவேநம ... ... *
ஓம் சமர்த்திதமஹாவ்ரதயேநம *
ஓம் பூர்ணபாத்ரிணேநம ... *
ஓம் அக்ஷமலாதராயநம... ... *
ஓம் குடாரவதேநம ... ... *
ஓம் பூஷாஸ்தாயநம ... ... *
ஓம ஆமோதாமோதசனாயநம *
ஓம் கதலிகாஸ்ரியாயநம ... *
ஓம் விக்னமத்யாஸ்ருதபாதாயநம*
ஓம் வருணப்ரயாயநம ... ...*
ஓம் விலாவினீக்ருதோல்லாசாயந
ஓம் சுமங்களாயநம ... ... *
ஓம் தத்தசௌமுக்யசுமுகாயநம *
ஓம் ப்ரவர்த்தனாயநம ... ...*
ஓம் காஸ்தாம்ரபலாயநம ... *
ஓம் மஹாசங்கநிதிப்ரபுவேநம...*
ஓம் நித்யாயநம ... ...*

ஓம் சோசித்கேசஹிருதாஸ்ர யாய
ஓம் க்ருதசௌமுகதுற்முகாயநம *
ஓம் சௌண்டினேநம ... ... *
ஓம் மதனுவத்யாஸ்ரிதாங்ரயேநம *
ஓம் ஈசானமூர்த்தாயநம ... *
ஓம் வஜ்ராதியஸ்த்ரபரிவாராயநம *
ஓம் பதயேநம ... ... *
ஓம் நித்யவதம்ஸிதாயநம... ... *
ஓம் க்ஞானினேநம ... ... *
ஓம் இச்சாதாரஷேவிதாயநம .. *
ஓம் யக்ஞக்ரயாதாராயநம ... *
ஓம் லளிதாயநம ... ... *
ஓம் காமாயநம ... ... *
ஓம் பரிஜயாயநம ... ... *
ஓம் விஜயாவஹாயநம... ... *
ஓம் அஜயாயநம ... . *
ஓம் விஜயாயநம ... ... *
ஓம் காந்தயேநம ... ... *
ஓம் ஜயாயநம ... ... *
ஓம் அஜயாற்சிதபதாம்புஜாயநம *
ஓம் காமினிபாலகாயநம ... *
ஓம் தைத்யேந்ரசிகியேநம ... *
ஓம் கணசண்டஸமாஸ்ரியாயநம *
ஓம் பவனதர்சனுயநம ... ... *
ஓம் காமினிகேளிலாஸிதாயநம ... *
ஓம் லஸிதாஸ்ரயாயநம... ... *
ஓம் கௌரிநந்தனுயநம ... ... *
ஓம் ப்ரஹத்பத்மநிதிப்ரபுவேநம *
ஓம் வாமாரமாஜ்யேஷ்டா மனோர
,, மாயநம ... ... *
ஓம் வீதசோகாயநம ... ... *
ஓம் வாசஸ்திதாயநம... ... *
ஓம் வாகீஸ்வராயநம ... ... *
ஓம் ஸ்ரீனிகேதனுயநம ... *
ஓம் ஸர்வஸத்குருஸம் ஸேவ்யாயந
ஓம் கணநாயகாயநம ... ... *
ஓம் ஸவுந்தர்யமண்டிதாயநம ... *
ஓம் ஜராவதாதிஸர்வவாரணுயநம *
ஓம் அனந்தானந்தசுகதாயநம ... *
ஓம் சாரஸ்வத்யாஸ்ரயாயநம... *
ஓம் நளினிகாமுகாயநம ... ... *
ஓம் ஸர்வநாளிகஸம்ஸித்தயேநம *

ஓம் குருகுத்பபதாயநம ... *
ஓம் ஸதோகித்ரமதத்ரவாயநம... *
ஓம் அஸ்த்ரேசஸர்வப்ருதேநம *
ஓம் அனபாயாயநம ... ... *
ஓம் உம்பீஜோத்துங்கசக்திமதேந *
ஓம் ஹாரமுத்ரிதபதாம்புஜாயநம *
ஓம் நாதாயநம ... ... *
ஓம் விக்னஹிர்தேநம ... ... *
ஓம் திவ்யாஸ்த்ராயநம... ... *
ஓம் நமத்வசுமதீமௌளினேநம *
ஓம் கணேசாயநம ... ... *
ஓம் திவ்யாயநம ... ... *
ஓம் பரதாயநம... ... ... *
ஓம் மதகூர்நிதலோசனுயநம ... *
ஓம் அசுமங்களாயநம... ... *
ஓம் சுபகாஸம்ஸ்ரிதாயநம ... *
ஓம் சுப்ரமோதப்ரமோதனுயநம *
ஓம் த்ராவிணீசக்தி ஸம்வரதாயநம
ஓம் ப்ரத்யுக்ரபாவனுயநம ... *
ஓம் திகம்பராயநம ... ... *
ஓம் விஸ்வாதிபீஜஸ்சகத சுவாகாச
,, க்திசுகீலகாயநம ... ... *
ஓம் உச்சிஷ்டோஸ்சிஷ்டகணகா
,, யநம ... ... *
ஓம் அமூர்தசந்ரமௌல்யாயநம. *
ஓம் அனுவிலாயநம ... ... *
ஓம் அச்சுதாயநம ... ... *
ஓம் அப்ரதற்கியாயநம... ... *
ஓம் அமுக்தவக்ஷராயநம... ... *
ஓம் அக்ஷயாயநம ... ... *
ஓம் அமூர்தாந்திக்ருதாவர்சாயநம *
ஓம் அஜாப்யாயநம ... ... *
ஓம் அகோராயநம ... ... *
ஓம் அநாமயோமயாயநம ... *
ஓம் அநார்த்யாயநம... ... ... *
ஓம் அநாகாராயநம ... ... *
ஓம் அமிதமானஸாயநம ... ... *
ஓம் அனந்தத்ருஷ்டியேநம ... *
ஓம் அத்விதாயநம ... ... *
ஓம் அமேயசித்தியேநம ... *
ஓம் அவ்யக்ராயநம... ... ... *
ஓம் அமேயாயநம... ... ... *

ஓம் அமிதபானுயநம ... ... *
ஓம் அவிதூமாக்னிபலக்னுயநம *
ஓம் அவ்யக்தலக்ஷணுயநம ... *
ஓம் அன்னப்ராசித்தயேநம ... *
ஓம் ஆதாராதேயவற்சிதாயநம ...*
ஓம் அஜராப்யாயநம .... *
ஓம் ஆகுமஹாரதாயநம... ...*
ஓம் இடாயாமாயநம ... ... *
ஓம் இடாதாமாயநம ... . *
ஓம் ஆதாரபீடாயநம ... ... *
ஓம் இந்துமண்டலமத்யகாயநம *
ஓம் அப்ரதிஹதாயநம... ... *
ஓம் இந்தீவரதளஸ்யாமாயநம *
ஓம் ஆதாராயநம ... ...*
ஓம் இகமுத்ராவிவர்ஜிதாயநம *
ஓம் அப்ரமேயாயநம ... ... *
ஓம் இந்திரகோபஸமானுயநம ...*
ஓம் ஆசாரபூரகாயநம ... ... *
ஓம் இட்சுசாகரமத்யஸ்தாயநம *
ஓம் ஆகுகேதனுயநம ... ... *
ஓம் இந்துச்சாயை நிபத்வைதியேந
ஓம் இட்சுபாணவிலாலசனுயநம *
ஓம் உடுபமௌளினேநம ... *
ஓம் ஈஷணத்ரையகல்பாந்தாயநம*
ஓம் உத்துங்காயநம ... ... *
ஓம் இட்சுசாபாதிரேகஸ்ரீயேநம *
ஓம் உக்ராயநம ... ... *
ஓம் இந்ரநீலநிபத்விதியேநம... *
ஓம் உபேந்ராயநம ... ... *
ஓம் இக்ஷ்வாகுவிக்னவித்வம்சினே
ஓம் இச்பிதார்த்தப்ரதாயகாயநம *
ஓம் ஊர்ச்சுஸ்வதேநம ... ...*
ஓம் இட்சுசாரப்ரியாயநம ... *
ஓம் உன்னதானுயநம ... ...*
ஓம் இந்திராஸ்ரியாயநம .. *
ஓம் உத்தாரசப்ரபுவேநம... ...*
ஓம் ஈசானுயநம... ... ... *
ஓம் உதாரஸ்ரிதசாக்ரண்யேநம *
ஓம் ருக்யசுர்ஸ்யாமநயனுயநம ...*
ஓம் ஊஷ்ணமலதாயநம ... *
ஓம் ஈசானப்ரயாயநம ... ...*
ஓம் உஹாமோஹவிவர்ஜிதாயநம..

ஓம் ருத்திபுத்திசமர்யகாயநம ...*
ஓம் ஓஷதிபதயேநம ... ... *
ஓம் ஈசான்யுமௌளியேநம ...*
ஓம் லுப்தசத்திசுரத்விஷேநம *
ஓம் ருசார்ச்சிதைசசுலபாயநம...*
ஓம் ஓஜத்யானுயநம ... ... *
ஓம் ஈசான்யவராயநம ... ...*
ஓம் ருணத்ரையவிமோசகாயநம *
ஓம் ஏகபாக்ருதாமநாயநம ... *
ஓம் ஓங்காராயநம ... ... *
ஓம் ஐஸ்வர்யநிதயேநம... ... *
ஓம் லுப்தவிக்னசுபக்தாயநம .. *
ஓம் ஔதார்யநிதயேநம ... *
ஓம் ஔதத்யதைர்யாயநம ... *
ஓம் ஐஸ்வர்யாயநம ... ... *
ஓம் லூதாவிஸ்போடநாசனுயநம.*
ஓம் ஔன்னத்யநிஷிபதயேநம...*
ஓம் ஓங்காரவாச்யாயநம .. *
ஓம் ஐமிகாமூஷ்மிகாப்ரியாயநம *
ஓம் அங்குசாயநம ... ... *
ஓம் அங்குசாசுரநாகாயநம ... *
ஓம் லுப்தஸ்ரீலுப்தாயநம ... *
ஓம் ஐராவதசமோனமேஷாயநம.*
ஓம் ஐராவதநிபானனுயநம ... *
ஓம் ஏகாரபீடமத்யாயநம ... *
ஓம் எசிதாகிலதைத்யஸ்ரீயேநம *
ஓம் எசிதாகிலசம்ஸ்திதாயநம ...*
ஓம் அங்குசாசுரஸம்திதாயநம *
ஓம் அஸ்ஸமஸ்தவிஸற்கபதயநி கீர்
,, த்திதாயநம ... ... *
ஓம் கர்மகற்தாயநம ... *
ஓம் கமண்டலதராயநம ... *
ஓம் கல்பாயநம ... ... *
ஓம் கபர்த்திநேநம ... ... *
ஓம் களபானனுயநம ... ... *
ஓம் காருண்யதேஹாயநம ... *
ஓம் சர்மசாக்ஷியேநம ... ...*
ஓம் கபிலாயநம... ... *
ஓம் கதகாயநம ... ...*
ஓம் கூஷீமாண்டகணநாயகாயநம.*
ஓம் கடிசூத்ரப்ருதேநம ... *
ஓம் கர்மகர்மபல்ப்ரதாயநம ... *

ஓம் கட்வாங்காயநம ... ... *
ஓம் கல்வாடஸ்ருங்கநிலயாயநம *
ஓம் கண்டப்ரயாயநம ... ...*
ஓம் சர்வாயநம ... ... *
ஓம் கதாங்கஸ்தாயநம ... ...*
ஓம் கனிர்மலாயநம ... ... *
ஓம் கருணாஸ்ரியாயநம ... ...*
ஓம் கதம்பகோலாகுலதாயநம...*
ஓம் கட்கினேநம... ... ... *
ஓம் கலாநிதயேநம... ... ...*
ஓம் கத்யபத்யாயநம ... ... *
ஓம் சுதார்ணவாயநம ... ...*
ஓம் குருசம்யாயநம ... ... *
ஓம் கணாட்யாயநம... ... ...*
ஓம் கிர்வாணபூர்வகாயநம ... *
ஓம் குப்யாயநம ... ...*
ஓம் கிதாயநம ... ... *
ஓம் கத்யாயநம ... ... *
ஓம் குய்யாகமநிரூபிதாயநம... *
ஓம் கண்டாயநம ... ...*
ஓம் சஹனனந்தாயநம... ... *
ஓம் குரோத்குருவேநம .... *
ஓம் குடாசயாயநம... ... ...*
ஓம் கர்ஜனேநம ... ...*
ஓம் குய்யசாரதாயநம .... *
ஓம் குடாத்பிஸ்தாயநம... ... *
ஓம் கடகும்பாயநம ... . *
ஓம் ஙகாராகாரசுண்டப்ருதேநம *
ஓம் கற்கரிகாமாலினேநம ... *
ஓம் ஙங்காராயநம ... ... *
ஓம் கடோதராயநம ... ...*
ஓம் காணநாதப்ரியாயநம ... *
ஓம் ஙகாரவாச்சியாயநம... ...*
ஓம் சணடாயநம... ... ... *
ஓம் சந்தோதுல்லக்ஷியாயநம ...*
ஓம் சந்தாயநம ... ...*
ஓம் ஜலத் கண்டோல்லாசத் தாரி
,, ணேநம ... ... *
ஓம் ஜகதீசாயநம ... ...*
ஓம் சண்டேஸ்வராயநம ... *
ஓம் சர்வணாலாலஸாயநம ...*
ஓம் சந்தோமயாயநம... ... *

ஓம் சராசரபித்ரேநம ... ...*
ஓம் சிந்தாமணியேநம... ... *
ஓம் ஜகத்யோனயேநம ... *
ஓம் சண்டசண்டாயநம... ... *
ஓம் சந்ரவிக்ரஹாயநம ... *
ஓம் ஜகத்சாக்ஷிணேநம ... ...*
ஓம் ஜங்காரிப்ரமராகுலாயநம *
ஓம் ஜனப்ரபுவேநம ... ...*
ஓம் சண்டேசவிக்ரமாயநம.... *
ஓம் ஜிம்ஹாசித்தயேநம ...*
ஓம் ஜகன்மயாயநம ... . *
ஓம் ஜப்யாயநம ... ... *
ஓம் ஜபபராயநம ... ... *
ஓம் ஜபாயநம... ... ... *
ஓம் டங்காரவாச்யாயநம ... *
ஓம் டிண்டிவிநாயகாயநம ... *
ஓம் ணகாரவாச்யாயநம ... ...*
ஓம் வாணிசகாயநம ... ... *
ஓம் டங்காராயநம ... ... *
ஓம் விஞானப்ரமோதகாயநம *
ஓம் டிண்டிமுண்டாயநம ... *
ஓம் டக்காநிநாதமுதிதகாயநம *
ஓம் டங்காராகுல நூபுரபதாயநம.
ஓம் டைகாயநம ... ... *
ஓம் டாமராயநம ... ... *
ஓம் டாகினீசாயநம... ... ... *
ஓம் டம்பாயநம ... ... *
ஓம் டங்காரபல்லவாங்கஸ்தஸர்வம
,, ங்ரசுஸித்திதாயநம ... *
ஓம் டிண்டிமப்ரியாயநம .. *
ஓம் தாரகாந்தரஸம்ஸ்தாநாயநம *
ஓம் தண்டப்ரதேநம ... ...*
ஓம் தத்வாநும் ப்ரக்ரதயேநம *
ஓம் தத்வாயநம ... ...*
ஓம் ஸ்தாணவேநம .. ... *
ஓம் தாரகாந்தாயநம ... ...*
ஓம் ஸ்தாணுப்ரயாயநம ... *
ஓம் தாத்ரேநம ... ...*
ஓம் தக்ஷயக்ஞரப்சமனாயநம *
ஓம் தனபந்தவேநம ... ...*
ஓம் தாரகாயநம... ... ... *
ஓம் தானந்தமோதயாயநம ...*

ஓம் தயாவதேநம் ... ...*
ஓம் தைத்யவாரணதாரணாயநம *
ஓம் திவ்யவிபவாயநம ... ...*
ஓம் ஸ்தாவர்ஜங்கமாயநம ... *
ஓம் தண்டதாயகாயநம ... ...*
ஓம் தனதாயநம... ... ... *
ஓம் தந்தப்ரபின்னேபமுகாயநம *
ஓம் தான்யபதயேநம ... ...*
ஓம் த்யானினேநம ... ... *
ஓம் தத்வபதநிரூபிதாயநம ...*
ஓம் தாதாயநம ... ... *
ஓம் தம்ஷ்ட்ராலக்னத் விபகடாயந
ஓம் த்யர்யாயநம ... ... *
ஓம் த்யானபராயணாயநம ... *
ஓம் தரணீதராயநம ... ... *
ஓம் நர்தப்ரயாயநம... ... ...*
ஓம் த்யாதப்ரம்ஹாண்டமேகலாய
ஓம் நங்யாயநம... ... ... *
ஓம் நர்தாயநம ... ... *
ஓம் த்யானகாலஸ்வரூபாயநம... *
ஓம் நிர்மலாயநம... ... ... *
ஓம் நிஷ்களாயநம ... ...*
ஓம் தேவாரிதமநாயநம ... *
ஓம் நாதமத்யப்ரதிஷ்டிதாயநம...*
ஓம் த்யானைகப்ரகடாயநம... ... *
ஓம் நித்யாநித்யாயநம ... ... *
ஓம் த்யானப்ருதேநம ... ...*
ஓம் நிராமயாயநம... ... ... *
ஓம் தமநித்யாயநம... ... ...*
ஓம் பரம்வ்யோம்மனேநம ... *
ஓம் பத்மப்ரஸன்னவதனாயநம...*
ஓம் பராநந்தாயநம... ... ... *
ஓம் ப்ரமாணப்ரத்யாதீதாயநம ...*
ஓம் பரமாத்மனேநம ... ... *
ஓம் ப்ரணதாக்ஞானநாசனாயநம *
ஓம் பராபராயநம . . .. *
ஓம் ப்ரணதார்த்திநிவாரணாயநம *
ஓம் ப்ரம்ஹணேநம ... ... *
ஓம் பரம்பதாயநம ... ...*
ஓம் புராணபுருஷோத்தமாயநம *
ஓம் பற்காயநம ... . *
ஓம் பசுபாசவிமோசனாயநம ...*

ஓம் பணிபதிகுண்டலினேநம... *
ஓம் பரந்தாம்னேநம ... ... *
ஓம் பசுபதயேநம ... ... *
ஓம் பூரணானந்தாயநம ....*
ஓம் பாணார்ச்சிதாங்ரியுகளாயநம *
ஓம் பணிப்ரயாயநம ... ... *
ஓம் ப்ரம்ஹார்ச்சிதபதாயநம ...*
ஓம் பணிஹஸ்தாயநம... ... *
ஓம் பவ்யாயநம ... ...*
ஓம் பிதாயநம ... ... *
ஓம் பாலகேளிகுதூஹாலினேநம*
ஓம் பயாபஹாயநம ... ... *
ஓம் ப்ரம்ஹபராயநம ....*
ஓம் ப்ரூஜெபமத்தலக்ஷ்மீகாயநம *
ஓம் ப்ரம்ஹவித்ப்ரயாயநம ... *
ஓம் பகவத்பக்திசுலபாயநம... *
ஓம் ப்ரம்ஹண்யாயநம ... ...*
ஓம் பூதாலயாயநம ... ... *
ஓம் போகதாத்ரேநம... ... *
ஓம் ப்ரஹஸ்பதயேநம ... ...*
ஓம் பூநிவறத்தனாயநம... ... *
ஓம் பத்ராயநம ... ...*
ஓம் ப்ரம்ஹசாரிணேநம ... *
ஓம் ப்ரூமத்யகோசராயநம ...*
ஓம் ப்ரஹத்தராயநம ... ... *
ஓம் பூதிதாயநம ... ... *
ஓம் போதமூர்த்தயேநம... ...*
ஓம் மஹாபலாயநம ... ... *
ஓம் யக்ஞாயநம ... ...*
ஓம் யக்ஞபதயேநம ... ... *
ஓம் யக்ஞகோத்ப்ரேநம ... ... *
ஓம் மந்ராயநம ... ... *
ஓம் மேகலாதீஸ்வராயநம... ...*
ஓம் யாஜகாயநம ... ... *
ஓம் மஹாவீர்யாயநம ... ...*
ஓம் மதிரோக்ஷணாயநம... ... *
ஓம் மந்தகதிமதேநம ... ...*
ஓம் மதமத்தாயநம ... ... *
ஓம் யக்ஞபலப்ரதாயநம ... ...*
ஓம் யஸஸ்கராயநம ... ... *
ஓம் மஹாப்ராணாயநம ... ...*
ஓம் யோககம்பாயநம... ... *

ஓம் ரஸ்யாயநம ... ... *
ஓம் மந்ரபதயேநம ... ...*
ஓம் யாஜகப்ரியாயநம... ... *
ஓம் ரஸப்ரியாயநம... ... ...*
ஓம் மஹானனாயநம ... ... *
ஓம் ராவணார்ச்சிதாயநம... ...*
ஓம் ரஞ்சகாயநம ... ... *
ஓம் மந்த்ரிணேநம ... ... *
ஓம் மதோன்மதாயநம ... *
ஓம் ராஜ்யசுகப்ரதாயநம ... *
ஓம் லக்ஷணஸம்பூரிதாயநம ...*
ஓம் வரேண்யாயநம ... ... *
ஓம் வச்யாயநம ... ...*
ஓம் ராஜ்யரக்ஷாகராயநம ... *
ஓம் ரத்னகற்பாயநம ... ...*
ஓம் லக்ஷ்மிணேநம... ... ... *
ஓம் ரம்யாயநம... ... ... *
ஓம் வன்னிவதநாயநம ... ...*
ஓம் வஜ்ரிணேநம... ... ... *
ஓம் லட்டுகாப்ரியாயநம ... *
ஓம் வேதாந்தகோசராயநம ...*
ஓம் லக்ஷபதயேநம ... ... *
ஓம் விஸ்வதோமுகாயநம... ...*
ஓம் விஸ்வசக்ஷுஷேநம ... *
ஓம் லாபக்ருஷ்ணபவிஸ்ருதாயநம
ஓம் விபவேநம ... ... *
ஓம் விதாத்ரேநம ... ... *
ஓம் லக்ஷ்யாயநம... ... ...*
ஓம் லாஸ்யப்ரியாயநம ... *
ஓம் வஜ்ரநேத்ரேநம ... ...*
ஓம் லக்ஷஸ்தாயநம ... ... *
ஓம் லர்ஸ்யபராயநம ... ...*
ஓம் வாமதேவாயநம ... ... *
ஓம் சக்திகணேஸ்வராயநம ..*
ஓம் வஜ்ரநிவாரணாயநம ... *
ஓம் ஸம்ஸாரவைத்யாயநம ...*
ஓம் விசர்க்தேநம... ... ... *
ஓம் விஸ்வேஸ்வராயநம ... *
ஓம் ஸத்யஸங்கல்பாயநம ... *
ஓம் ஸிந்தூரிதமஹாகும்பாயநம*
ஓம் சம்புசக்திகணேஸ்வராயநம *
ஓம் விஸ்வாதாராயநம ... ...*

ஓம் சுகிணேநம ... ... *
ஓம் ஹஸ்திகுலதீசாயநம ... *
ஓம் விவஸ்வதார்காயநம ... ...*
ஓம் ஹவனாயநம... ... ... *
ஓம் ஸதஸத்விக்திகாரணாயநம ...*
ஓம் ஆர்த்ததாயநம ... ... *
ஓம் ஷடாதாராயநம ... ...*
ஓம் ஸ்வஸம்வேத்யாயநம ... *
ஓம் ஹம்ஸாயநம ... .*
ஓம் ஹதப்ரியாயநம .. ... *
ஓம் ஹவ்யகவ்யபுஜேநம ... ...*
ஓம் ஹவ்யாயநம... ... ... *
ஓம் ஸர்வபேஷஜபேஷஜாயநம...*
ஓம் ஸ்வதந்ராயநம ... ... *
ஓம் ஷட்ருதுகுசுமஸ்ராகிணேநம*
ஓம் ஸ்வலக்ஷணாயநம ... ...*
ஓம் ஸர்வக்ஞாயநம ... ... *
ஓம் ஸ்ருஷ்டிஸ்த்திதிலயசரீடாயநம
ஓம் ஷடக்ஷராயநம ... ... *
ஓம் ஹர்ல்லேகாமந்ரமத்யகாயநம*
ஓம் ஸர்வஸக்திப்ருதேநம ... *
ஓம் சுரபஞ்சனபேதனாயநம ...*
ஓம் சமப்ராஹாயநம... ... *
ஓம் க்ஷமாபரபராயணாயநம ...*
ஓம் ஸர்வரஹஸ்யகராயநம ... *
ஓம் க்ஷேத்ரபர்த்ரேநம ... *
ஓம் ஸமுத்ரமதநாயநம... ... *
ஓம் க்ஷிப்ரக்ஷேமகராயநம... *
ஓம் புக்திமுக்திபலப்ரதாயநம ...*
ஓம் க்ஷேத்ராதிபாயநம ... *
ஓம் புட்பகவிமானிமதத்வம்ஸினே
ஓம் விபவதாயநம ... ... *
ஓம் புத்ரபௌத்ரதாயநம ... *
ஓம் ஸ்ரீசோசஹாரிணேநம ... *
ஓம் க்ஷோணிசுரத்ரமாயநம ...*
ஓம் துஃகக்னேநம... ... ... *
ஓம் ஸௌபாக்யவர்த்தனாயநம...*
ஓம் க்ஷேமானந்தாயநம ... *
ஓம் அபிரூப்யகராயநம... ... *
ஓம் ஸாமமானரதாயநம ... ...*
ஓம் ஸ்ரீப்ரதாயநம ... ... *
ஓம் ஹர்ஷாயநம ... ...*

ஓம் வித்யாப்ரதாயநம... ... *
ஓம் தர்மப்ரதாயநம ... ... *
ஓம் வீரவீராயநம ... ... *
ஓம் விஜயப்ரதாயநம ... ... *
ஓம் கர்ப்பதோஷக்னேநம ... *
ஓம் பந்தமோக்ஷதாயநம ... *
ஓம் தௌர்ப்பாக்யநாசனாயநம... *
ஓம் பராபிசாரசமனாயநம ... *
ஓம் சசினேநம ... ... *
ஓம் ரவயேநம ... ... *
ஓம் கவயேநம... ... ... *
ஓம் ஜீவாயநம ... ... *
ஓம் புதாயநம... ... ... *
ஓம் பௌமாயநம ... ... *
ஓம் மந்தாயநம ... ... *
ஓம் ராஹவேநம ... ... *
ஓம் துஷ்டசித்தப்ரசாதனாயநம *
ஓம் முக்யாயநம ... ... *
ஓம் மந்த்ரதந்த்ரப்ரதிவாதி முகஸ்தம்
,, பாயநம... ... ... *
ஓம் வர்ஷாயநம ... ... *
ஓம் மஹாலயாயநம ... ... *
ஓம் கல்பாயநம ... ... *
ஓம் யுகாயநம ... ... *
ஓம் அயனாயநம ... ... *
ஓம் மாஸாயநம... ... ... *
ஓம் சங்யாயநம ... ... *
ஓம் திவாயநம ... ... *
ஓம் நக்தாயநம ... ... *
ஓம் அஹர்நிசாயநம ... ... *
ஓம் பக்ஷாயநம... ... ... *
ஓம் ராசயேநம ... ... *
ஓம் தாராயநம ... ... *
ஓம் வாராயநம ... ... *
ஓம் திதயேநம ... ... *
ஓம் யோகாயநம... ... ... *
ஓம் கரணாயநம ... ... *
ஓம் லக்னாயநம ... ... *
ஓம் ஹோராயநம ... ... *
ஓம் அம்சகாயநம ... ... *
ஓம் பாதாயநம ... ... *
ஓம் முகூர்த்தாயநம ... ... *

ஓம் களாயநம... ... ... *
ஓம் காஷ்டாயநம... ... ... *
ஓம் தத்பரக்ஷணாயநம ... ... *
ஓம் களஸருதயேநம... ... ... *
ஓம் நிமேஷாயநம ... ... *
ஓம் மேரவேநம... ... ... *
ஓம் த்ருவாயநம... ... ... *
ஓம் சப்தருஷயேநம ... ... *
ஓம் காலசக்ராயநம... ... ... *
ஓம் விஸ்வஸ்தாவரஜங்கமாயநம *
ஓம் ஸ்ருஷ்டயேநம... ... ... *
ஓம் ஸ்திதயேநம... ... ... *
ஓம் சங்காரயேநம ... ... *
ஓம் புவேநம... ... ... *
ஓம் அக்னியேநம ... ... *
ஓம் மருதேநம ... ... *
ஓம் வியோம்னேநம ... ... *
ஓம் காலாயநம... ... ... *
ஓம் அஹங்கருதயேநம... ... *
ஓம் ப்ரக்ரதயேநம ... ... *
ஓம் பும்ஸேநம... ... ... *
ஓம் ப்ரம்வாணேநம... ... ... *
ஓம் விஸ்ணவேநம ... ... *
ஓம் ருத்ராயநம ... ... *
ஓம் சிவாயநம... ... ... *
ஓம் ஈசாயநம... ... ... *
ஓம் சக்தயேநம ... ... *
ஓம் நாதவேநம ... ... *
ஓம் விந்தவேநம... ... ... *
ஓம் ஸதாசிவாயநம... ... ... *
ஓம் த்ரிதசாயநம... ... ... *
ஓம் பித்ருப்யோநம ... ... *
ஓம் ஸித்தேப்யோநம ... ... *
ஓம் யக்ஷாயநம ... ... *
ஓம் ரக்ஷஸேநம ... ... *
ஓம் கின்னராயநம ... ... *
ஓம் ஸாத்யாயநம ... ... *
ஓம் வித்யாதராயநம ... ... *
ஓம் பூதாயநம... ... ... *
ஓம் மநுஷ்யாயநம ... ... *
ஓம் பசுப்யோநம... ... ... *
ஓம் ககாயநம... ... ... *

ஓம் ஸமுத்ராயநம ... ...*
ஓம் சைலாயநம ... ...*
ஓம் ஸரித்ப்யோநம... ... ... *
ஓம் பவோத்பவாயநம ... ... *
ஓம் பூதபவ்யாயநம... ... ...*
ஓம் பாதஞ்சலாயநம... ... ...*
ஓம் சாங்க்யாயநம ... ... *
ஓம் யோகாயநம ... ... *
ஓம் புராணாயநம ... ... *
ஓம் ஸ்ருதயேநம... ... ... *
ஓம் ஸ்மிர்தயேநம ... ...*
ஓம் வேதாங்கேப்யோநம... ...*
ஓம் ஸதாசாராயநம... ... ...*
ஓம் மீமாம்ஸாயநம ... ... *
ஓம் ந்யாயவிஸ்தாராயநம... ... *
ஓம் ஆயுர்வேதாயநம ... ... *
ஓம் தனுர்வேதாயநம ... ... *
ஓம் கந்தர்வாயநம... ... ... *
ஓம் காவ்யாயநம ... ...*
ஓம் நாடகாயநம... ... ... *
ஓம் வைகானஸாயநம ... ...*
ஓம் பாகவதாயநம ... ... *
ஓம் மானுஷாயநம ... ...*
ஓம் பாஞ்சராத்ராயநம ... *
ஓம் ஆர்ஹதஸம்ஹிதாயநம ...*
ஓம் சைனாயநம ... ... *
ஓம் பால்வைரவாயநம ... ...*
ஓம் காளாமுகாயநம ... ... *
ஓம் சாக்தாயநம ... ...*
ஓம் சௌராயநம... ... ... *
ஓம் சைவாயநம ... ...*
ஓம் பாசுபதாயநம... ... ... *
ஓம் பௌத்தாயநம ... ... *
ஓம் வைநாயகாயநம ... ...*
ஓம் ஸதஸத்வ்யக்தாயநம ... *
ஓம் அவ்யக்தாயநம... ... ...*
ஓம் ஸசேதனாயநம ... ... *
ஓம் அசேதனாயநம... ... ...*
ஓம் பந்தாயநம ... ... *
ஓம் மோக்ஷாயநம ... ... *
ஓம் போகாயநம ... ...*
ஓம் யோகாயநம... ... ... *

ஓம் சத்யாயநம ... ...*
ஓம் அணவேநம... ... ... *
ஓம் மஹதேநம ... ...*
ஓம் ஸ்வஸ்தயேநம ... ... *
ஓம் உம்படேநம ... ...*
ஓம் ஸ்வதாயநம... ... ... *
ஓம் ஸ்வாஹாயநம... ... ...*
ஓம் ஸ்ரவ்ஷடேநம ... ... *
ஓம் வஷடேநம ... ... *
ஓம் வவ்ஷடேநம ... ...*
ஓம் நமோநம ... ... *
ஓம் க்ஞானாயநம ... ...*
ஓம் விக்ஞானாயநம ... ... *
ஓம் ஏகாயநம ... ...*
ஓம் போதனாபோதனாயநம ... *
ஓம் ஆனந்தாயநம ... ...*
ஓம் ஏகாக்ஷரமந்ராதாராயநம... *
ஓம் ஏகவீராயநம ... ...*
ஓம் ஏகாக்ஷரபாராயணாயநம... *
ஓம் ஏககந்தயேநம ... ...*
ஓம் ஏகானேகஸ்வரூபத்ருகேநம *
ஓம் த்விரூபாயநம ... ... *
ஓம் த்விமுகக்ஷேபாயநம ...*
ஓம் த்விரதாயநம ... ... *
ஓம் த்விவரக்ஷகாயநம ... ... *
ஓம் த்வைமாதுராயநம ... *
ஓம் த்விவதனாயநம... ... ...*
ஓம் த்வயாதிகாயநம ... ... *
ஓம் த்வந்த்வஹீனாயநம ... ...*
ஓம் த்ரிதாமாத்ரிகராயநம ... *
ஓம் த்ரிகுணாத்மனேநம ... ...*
ஓம் த்ரிலோகாதிசக்திசாயநம... *
ஓம் த்ரேதாயநம... ... ... *
ஓம் த்ரிலோசனாயநம ... ...*
ஓம் த்ரிவர்க்கபலதாயகாயநம... *
ஓம் சதுர்விதவசோவ்ரத்திபரிவர்த்
„ திப்ரவ்ரதகாயநம ... ...*
ஓம் சதுராத்மனேநம ... ...*
ஓம் சதுர்ப்பாஹவேநம... ... *
ஓம் சதுர்த்தந்தாயநம... ... *
ஓம் சதுர்வர்ணாமயோபாயர்யநம.*
ஓம் சதுர்த்திதிதிஸம்பவாயநம... *

ஓம் சதுர்வர்ணாஸ்யமாஸ்ரயாயநம.
ஓம் சதுர்முகாயநம ... ... *
ஓம் சதுர்த்திபூஜனப்ரீதாயநம....*
ஓம் சதுர்ப்பாதநிரூபாயநம ... *
ஓம் சதுர்வித்யவியமோக்ஷ வரப்ர
,, தாயகாயநம ... ...*
ஓம் பஞ்சகராயநம .... *
ஓம் பஞ்சாக்ஷராத்மாயநம... *
ஓம் பஞ்சதாலாயநம ... ... *
ஓம் பஞ்சவர்ணாயநம... ... *
ஓம் பஞ்சப்ராணகமாத்ராயநம...*
ஓம் பஞ்சபாணாயநம ... ... *
ஓம் பஞ்சபாணநிவாரிதாயநம....*
ஓம் பஞ்சக்ருத்யாயநம ..... *
ஓம் பஞ்சாக்ஷரபராயணாயநம....*
ஓம் பஞ்சசிவாத்மகாயநம ... *
ஓம் பஞ்சபத்மமய ஸ் தூர்த்தயேந
ஓம் பஞ்சபக்ஷப்ரியாயநம ... *
ஓம் பஞ்சாஸ்யாயநம... ... *
ஓம் பஞ்சாதாராயநம ... .*
ஓம் ஷடங்கத்வாந்தவித்வம்ஸினே
ஓம் ஷடங்குளமஹா ஹ்ர்தயாயந
ஓம் ஷட்கோணபீடாயநம ... *
ஓம் ஷட்குணாயநம ... ... *
ஓம் ஷட்வைரிவர்க்கவித்வமஸினே
ஓம் ஷட்கர்மிணேநம ... ... *
ஓம் ஷட்சக்ரபரிவாரிதாயநம ..*
ஓம் ஷட்க்ராந்திபேதகாயநம ... *
ஓம் ஷண்முகப்ராதாயநம ... *
ஓம் ஷடூர்மிபயநாசனாயநம... ...*
ஓம் ஷட்கர்மதுற்காயநம... ...*
ஓம் ஷடரஸாஸ்ரயாயநம... ...*
ஓம் ஷட்சக்ரதாம்னேநம... ...*
ஓம் ஸத்குணாயநம ... ... *
ஓம் ஷண்முகாயநம... ... ...*
ஓம் ஸப்தபாதாளசரணாயநம ... *
ஓம் ஸப்தத்வீபோருமண்டலாயநம
ஓம் ஸ்ப்தரிஷிகணவந்திதாயநம ..*
ஓம் ஸப்தஹேதவேநம ... ...*
ஓம் ஸப்தஸ்கந்திவரப்ரதாயநம .. *
ஓம் ஸப்தஸ்வராஸ்ரயாயநம .. *
ஓம் ஸப்தாப்திகேளிகாஸாராயநம*

ஓம் ஸப்தகிரியாயநம ... ... *
ஓம் ஸப்தசந்தோகிதயேநம ... *
ஓம் ஸப்தஸ்வர்லோகமகுடாயநம*
ஓம் ஸப்தசந்தாமோதமதாயநம *
ஓம் ஸப்தசுராயநம ... ... *
ஓம் ஸப்தமாத்ருநிஷேவிதாயநம *
ஓம் ஸப்தசந்தோமுகப்ரபவேநம *
ஓம் ஸ்ப்தாங்கராஜ்யசுகதாயநம *
ஓம் அஷ்டைஸ்வர்ய விவர்த்திதாய
ஓம் அஷ்டசக்திஸமான ஸ்ரீயேநம
ஓம் அஷ்டாங்கயோகபலப்ரதேநம
ஓம் அஷ்டமூர்த்தித்வயமூர்த்தயே
ஓம் அஷ்டபத்ராம புஜாஸ்ரயாய
ஓம் அஷ்டப்ரகுர்திகாரணாயநம *
ஓம் நரநாராயணஸ்துத்யாயநம...*
ஓம் நவநாதமஹாநாதாயநம... *
ஓம் நவநாதஸமூர்த்யாயினேநம *
ஓம் நவநாதவிபூஷிதாயநம... ...*
ஓம் நவரத்னவிசித்ராங்காயநம...*
ஓம் நவத்வாரநிஷேவிதாயநம ...*
ஓம் நவசக்திசிவோத்ருதாயநம *
ஓம் நவத்வாரபுராவர்த்தாயநம.. *
ஓம் நவநித்யானுஸாஷிதாய... *
ஓம் நவதுர்க்காநிஷேவிதாயநம...*
ஓம் தசாஸ்யபாத்யேய விக்ரஹாய
ஓம் தசப்ராணாயநம ... . *
ஓம் தசாக்ஷரமஹாமந்ராயநம ...*
ஓம் தசாத்மகாயநம ... ... *
ஓம் தசாத்யாயாயநம ... ...*
ஓம் தசதிக்பதிவந்திதாயநம.... *
ஓம் தசபுஜாயநம ... ...*
ஓம் தசேந்ரயநியாமகாயநம... *
ஓம் ஏகாதசாதிபிருத்ரேஸ்த்துதாய
ஓம் ஏகாதசாக்ஷராயநம ... *
ஓம் த்வாதசோத்தண்டதோர்த் த
,, ண்டாயநம ... ...*
ஓம் த்வாதசாந்தநிகேதனாயநம *
ஓம் த்வாதசாதித்யதெஸ்சாயநம*
ஓம் த்வாதசத்வாத சாஷ்டாநிதோ
,, த்தண்டாஸ்த்ரநிகேதனாயநம*
ஓம் த்ரயோதசாபிதாபின்னவிஸ்வ
,, தைவாதிதைவதாயநம ...*

ஓம் சதுர்த்தசேந்ரவரதாயநம...*
ஓம் சதுர்த்தசசதுத்பவேநம... *
ஓம் சதுர்த்தசஜகத்பதயேநம *
ஓம் சதுர்த்தசமனுத்துத்யாயநம *
ஓம் சதுர்த்தெசேந்ராயநம ... *
ஓம் சதுர்த்தசாகடிம்வ்யாட்யாயந
ஓம் ஸாமபஞ்சதசீபஞ்சதசசிதாம்
,, சுநிர்மலாயநம ... ...*
ஓம் ஷோட்சேந்துகளாத்மகாயந*
ஓம் ஷோடசேந்துகளாவாசாயந*
ஓம் ஷோட்சாதாரநிலயாயநம...*
ஓம் ஷோடசஸ்வரமாத்ருகாயநம*
ஓம் களாஸப்தசீஸப்ததசஸப்த த
,, சாக்ஷராயநம ... ... *
ஓம் அஷ்டாதசௌஷ திஸ்ருஷ்ட
,, யேநம ... ...*
ஓம் அஷ்டாதசாதிபதயேநம ....*
ஓம் அஷ்டாதசபுராணக்ருதயேநம
ஓம் அஷ்டாதசவிஜாதிக்ருதேநம *
ஓம் அஷ்டாதசலிபிக்ருதேநம ...*
ஓம் அஷ்டாதசவிதஸ்மிர்தயேநம*
ஓம் ஏகவிம்ஸத்பும்ஸேநம .. ...*
ஓம் ஏகவிம்ஸத்யங்குளிபல்லவாய
ஓம் சதுர்விம்சதிதத்வாத்மனே நம
ஓம் பஞ்சவிம்சாக்யபுருஷாயநம *
ஓம் ஸப்தவிம்சதியோகாயநம ...*
ஓம் ஸப்தவிம்சதிதாரொயாயநம *
ஓம் த்வாத்ரிம்ஸத்பைரவாதீசாயந
ஓம் சதுர்ஸ்திம்சன்மஹாஹிர்தேந
ஓம் சதுர்த்திம்ஸதத்வஸம்பூதயேந
ஓம் அஷ்டத்ரிம்சத்கலாதன்வேநம
ஓம் நவவேகோனபஞ்சாசன்மருத்
,, வர்கநிர்களாயநம ... ... *
ஓம் பஞ்சாசதக்ஷரஸ்ரோணிபஞ்சா
,, சதுருத்ரவந்தித சச்சிதானந்தா
,, யநம... ... ...*
ஓம் பஞ்சாசத்விஷ்ணுசக்தீசாயந.
ஓம் பஞ்சாசன்மாத்ரகாலயாயநம*
ஓம் த்விபஞ்சாசத்விபஸ்ரேணித்ரி
,, ஸம்த்யாக்ஷரஸம்ஸ்ரயாயநம *
ஓம் சதுஷ்ஷஷ்டி மஹாசித்தயோ
,, கினீப்ருந்தவந்திதாயநம ...*

ஓம் சதுஷ்ஷஷ்டியர்த்த நிர்நீதசது
,, ஷ்ஷஷ்டிகளாநிதயேநம ... *
ஓம் அஷ்டஷஷ்டிமஹா தீர்த்த
,, க்ஷேத்ரபயிரவேசாயநம ...*
ஓம் சதுர்நவதிமந்ராத்மனேநம *
ஓம் ஷண்ணவத்யதிகப்ரபவேநம *
ஓம் சதானந்தாயநம ... ... *
ஓம் சதத்ருதயேநம ... ...*
ஓம் சத்தாரவராயுதாயநம ... *
ஓம் சதபத்ராயதேக்ஷணாயநம...*
ஓம் சதானீகாயநம ... ... *
ஓம் சதமகாயநம ... ...*
ஓம் ஸஹஸ்த்ரபத்ரநிலயாயநம *
ஓம் ஸஹஸ்த்ரபணிபூஷணாயநம *
ஓம் ஸஹஸ்த்ரசீர்ஷா புருஷாயநம
ஓம் ஸஹஸ்த்ரபதேநம ... ...*
ஓம் ஸஹஸ்த்ராக்ஷாயநம .... *
ஓம் ஸஹஸ்த்ரநாமஸம்ஸ்துத்யாய
ஓம் ஸஹஸ்த்ராக்ஷபுருக்ஷதமலாய
,, க்னேநம ... ... *
ஓம் தசசகஸ்த்ரபணிப்ருத்பணரா
,, ஜக்ருதாசனப்ரயவாசனாயநம *
ஓம் அஷ்டாசீதிஸஹஸ்த்ராத்ய ம
,, ஹாரிஷியேநம ... ... *
ஓம் கணஸ்தோத்ரபரிதாயநம ...*
ஓம் லக்ஷாதாரப்ரயாயநம ... *
ஓம் லக்ஷாதாரமனோமயாயநம...*
ஓம் சதுர்லக்ஷஜபப்ரீதாயநம... *
ஓம் சதுர்லக்ஷப்ரகாசகாயநம ...*
ஓம் சதுரசீதிலக்ஷாணாஞ்ஜீவானாம்
,, தேஹஸம்ஸ்திதாயநம ... *
ஓம் கோடிசூர்யப்ரதிகாசாயநம *
ஓம் கோடிசீதாம்சுநிர்மலாயநம. *
ஓம் சிவோத்பவாத் யஷ்டகோடி
,, வைநாயகர்த்துரந்தா மஹா
,, தேவாயநம ... ... *
ஓம் ஸப்தகோடிமஹாமந்ர மந்ரிதா
,, வயவத்ருதிமனதீதாயநம ...*
ஓம் த்ரியஸ்த்ரிம்சத்கோடி சுரஸ்ரோ
,, ணிப்ரணதபதாம்புய வாஸ்ரோ
,, ஷ்டாயநம ... ... *
ஓம் அனந்தசக்திசிவத்யானாயநம.

ஓம் அனந்ததேவதாசேவ்யாயநம* ஓம் அனந்தஸௌக்யதாயநம... *
ஓம் அனந்தஸ்ரீ அனந்தாயநம ...* ஓம் அனந்தவானந்தமயாயநம....*
ஓம் அனந்தமுனிஸம்ஸ்கிதாயநம* ஓம் அனந்தவானந்தபராயநம ...*
ஓம் அனந்தமுனிஸம்ஸ்துதாயநம. ஓம் அனந்தவானந்தவராயநம... *
ஓம் அனந்தநாமார்த்தகாயநம ...* ஓம் அனந்தவானந்தசுகாயநம ...*

இந்த ஆயிரத்து இருபத்து நான்கு திருநாமங்களை யாவரோனும் ஆசாரநியதிநியமத்தோடுவிடியற்காலையில்துதிசெய்வார்களாயின், அவர்கள இம்மைமறுமைப்பயன்களை அங்கை நெல்லிக்கனிபோல வடைவார்கள். அன்றியும், ஆயுள்-ஆரோக்கியம்-ஐசுவரியம்- தைரியம்- சௌரியம்- கீர்த்தி-மேன்மை- தெளிவு-காந்தி- சௌபாக்கியம்- தாட்சணியம்- தயை-பொறுமை-சத்தி-நீதி-பிரமதேயசு- உதாரம்-காம்பீர்யம்- குலம்- சீலம்-சபாபாண்டிதம்-சபாபூஜிதம்-தவுத்தியம்-வீரியம்- ஞானம்- விஞ்ஞானம் முதலானவைகளோடு, தருமமுதலிய நான்குபுருஷார்த்தங்களையும் அத்தினமே அடைவார்கள். இராஜர்-அவர்பத்தினியர்-அவர்புதல்வர்- அவர்மந்திரியர்முதலாயினோர் வசியமாவர். இடாகினி-சாகினி-பூதம்-வேதாளமுதலிய துட்டகிரகங்களெல்லாந்தொலையும். பகை-தீக்கனு-கலகம்-துற்கருமம்-கொலையாதிபாதகம்-இடர்-வறுமை- முதலியயாவும் எரிவீழ்பஞ்சுபோல மாய்ந்துபோம். உலகாகூஷி-அட்டமாசித்தி-திரிகாலக்ஞானம்- வாய்மை-ஒழுக்கம்-கொடை-கல்வி-முதலானவைகள் எக்காலத்துங் கூடிநிற்கும். குட்டம்-அவிசூசிகம்-சகந்தரம்-பிரமேயம்-கயம்-குன்மம்- விக்கல்-மட்டிகம்-அச்சரம்- சுாசம்- சுவாசம்- ஆசனக்கடுப்பு- மகோதரம்- சூலை-அவமிசுரமூலம்-பித்தம்-கண்டமாலை-இட்சம்-கபம்- சோகை- அவிரோசகம்-வாதஜன்னி- விஷம்- முதலான எல்லாநோய்களுந்தீரும். மேலும் சூத்திரர்-பெண்டீர்-பதிதர்-இவர்கள் உச்சரிப்பார்களாயின், உடனே பரிசுத்தராகி மிகுந்தசுகத்தைப்பெறுவார்கள். இஷடகாமியார்த்தத்தை வேண்டியபேர்கள் உச்சரித்தால், இம்மையிற் சகல அரிட்டங்களுந்தீர்ந்து மறுமையில் சூரியலோகமுதலான சகலலோகங்களினுடைய போகபாக்கியங்களை அனுபவித்து, மேலான சிவலோகத்தையடைந்து, நந்திகேச்சுரர்முதலான கணத்தலைவர்கள் ஆச்சரியங்கொள்ளும்படி, சிவபிரானும் உமாதேவியாருந் தம்மைத் தமது புத்திரனைப்போலப் பாதுகாக்கநெடுநாள் அவ்விடத்திற்றனே வாழ்ந்திருந்து, பின்னர் விநாயகமூர்த்தியினுடைய பெருங்கருணையால் மீட்டும் பூவுலகத்தில் வந்து, சகல போகபாகியங்களையுங் குறைவின்றியநுபவித்து, அளவற்ற திருப்பணிகளைச செய்து, ஞானசூரியராகிச், சிவத்தில் ஐயிக்யமாவார்கள். கருமபோகத்தை வெறுத்தவர்களுச்சரித்தால், பாசபந்தங்களினின்றுநீங்கிப்,பரமானந்தசாகரத்தின் மூழ்குவார்கள். விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்தசிதினத்திலே அவரைப்பூசனைசெய்து உச்தரித்தால், மேற்கூறிய மேலான பயன்களில் நூறுமடங்கு அதிகமான பயன்களைப்பெறுவார்கள். அன்றியும் அவற்றைத்தாமே உச்சரித்தல், ஒருவனை உசசரிப்பித்தல், கேட்டல்-கேட்பித்தல்-எழுதல்-எழுதுவித்தல்-அருச்சித்தல்-அருச்சிப்பித்தல்-செபித்தல்-செபிப்பித்தல்-முதலிய இவைகளில் ஒன்றினைச்செய்தாலும்

லைகளைச்செய்கின்றபேர்களை அவ்வுச்சரித்தன்முதலியவைகளாற் பா ராட்டினாலும், மேற்கூறிய மேலானபயனை எளிதி லடைவார்கள். தினந் தோறு மூன்றுகாலங்களினு முச்சரிக்கமாட்டாதான், ஒருகாலேனும்உச் சரித்தல்வேண்டும். அவ்வாறு நித்தம் ஒருகாலேனும் உச்சரிக்கமாட்டா தான், சதுர்த்தசிதிதிதோறுமாயினும் உச்சரித்தல்வேண்டும். அதற்குஞ் சத்தியில்லாதவன், பிறனொருவனுக்குப்பொருள்கொடுத்தேனும் உச்சரி ப்பித்தல்வேண்டும். பொருளுமில்லாதவனாயின், அவனுக்குஅச்சகத்திர நாமங்களினு மேலானதாய் இருபத்தொருதிருநாமங்களுண்டு. அவைக ள்- கணபதி- ஏரம்பன்- மோகன்- தரணிதரன்- கலாதரன்- கசியபந்தன ன்- மஹாகணபதி- கிப்பிரப்பிரசாதனன்- ஆசாரபூரகன்- வரதன்- ஜய ன்- அமுதமந்திரன்- இலக்ககணபதி- வாச்சிகதன்- பீஜவிநாயகன்- மங் கலவிநாயகன்- உடுண்டிவிநாயகன்- பிரியகணபதி- சித்திவிநாயகன்- சிந் தாமணிவிநாயகன் - மஹோற்கடன். என்னுமிவைகளாகும். ஆதலால் அவர்கள் இவைகளையேனும்- முன்னர் தேவர்முதலியோரால் வெவ்வே றேயெடுத்து கூறப்பட்டிருக்கின்ற பன்னிரண்டு மகாமந்திரங்களையேனு ம் உச்சரித்தல்வேண்டும்- இவற்றுளொன்றைத் தினந்தோறும் முச்சரித் தோர்களுக்குச், சகத்திரநாமங்களை யுச்சரித்தபயன்களுண்டாகும். அவ் விரண்டையும் அவ்வாறு உச்சரித்தோர்களுக்கு, அப்பயன்கள் எண்மட ங்கு அதிகமாகிவளரும். பிணிமுதலியவேதுக்களால் அவ்வாறு உச்சரி க்கமாட்டாதவர்கள், அம்முப்பத்துமூன்றுமந்திரங்களில் ஒருமந்திரத்தை யேனும் உச்சரித்தல்வேண்டும். விரதநியமத்தோடு மேற்கூறிய சகத்திர நாமங்களை விநாயகசதுர்த்தியிற்றொடங்கி நான்குமாதவரையில் உச்சரித் தோர்களுக்குச், சென்றசநநங்கள் இருபத்தொன்றினும், இந்தசநநத்தினு ம், மேல்வருஞ் சநநத்தினும், தாங்கள் பற்றற்குரிய எல்லாப்பாவங்களை யும் விநாயகமூர்த்திவிலக்கி, நினைத்த நன்மைகளனைத்தையும் நினைத்த வண்ணமளித்து, மறுமையிற் சிவலோகத்தில் கணத்தலைமை பூண்டிருக்க த்தக்க பதவியைக்கொடுத்தருளுவர்.

தேவர்தொழுதெழுங்கருணைச்செல்வனேபோற்றி ... ...*
சிறந்தொளிருமங்களசொரூபனேபோற்றி... ... ... *
யோவறுசித்திகளனைத்துமுதவுவோய்போற்றி... ... ...*
யொலிகெழுகிண்கிணிபாதசாலநூபுரங்கண் ... ... *
மேவியொளிர்சரணனேபோற்றிமததாரை ... ...*
விரவியதிண்கபோலனேபோற்றிநினதருளின ... ... *
பாவமொடுபலபிணியின்பம்புவறுமைகளும் ... ... *
பலவரனவிடர்களையும்பாற்றுகவின்புறவே ... ...*

உபாசனகாண்டம்

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

விநாயகபுராண வசனகாவியம்.

இலீலாகாண்டம்.

சீர்பூத்த கோகனக மலரயன்மா லாதியவைர் தேவாய்மிக்க, வேர்பூத்த சிருட்டிமுதற் றொழிலதற்குக் காரணமா யிலங்கா நின்ற, பேர்பூத்த மறைமுடியி னொளிர்குடிலை தனிலுதித்த பெருமானாகும், கார்பூத்த மதக்களிற்று முகக்கடவு ளடிக்கமலங் கருத்துள்வைப்பாம்...... ....*

முதலாவது

வக்கிரதுண்டர் திருவவதாரப்படலம்.

ஓ சவுனகாதி முனிவர்களே, பிரமன் - விண்டு - உருத்திரனென்னு நாமங்களைப்பெற்ற திரிமூர்த்திஸ்வரூபமாகவிளங்கிப் பஞ்சபூதபௌதிகாத்மகமாயுள்ள சராசரப்பிரபஞ்சங்களைப்படைத்தும், அவைகட்கு யாதொரு குறைவுபாடுகளுமின்றி ரக்ஷித்தும், அவையனைத்தும் பிரளயமுடிவில் அல்லலற்றுச் சுகத்திலிருப்பதாகச் சங்கரித்தும், வேதாகமங்கள் தேடிக்காண்பரிய அநாதிவத்துவாகநின்றும், சகலஆன்மாக்களிடத்துங் காரணபூதமாகப் பொருந்திநடிப்பித்தும், இவ்வாறு எண்ணிறந்த மாட்சிமைகளோடு எனதுள்ளமே கோயிலாகக்கொண்டுவீற்றிருக்கின்ற பிரணவஸ்வரூபியாகிய கணேசமூர்த்தியைத், தேவர்முதலிய ஆன்மகோடிகள்யாவும்பூசித்து அவரது திருவருளைக் குறைவறப்பெற்ற உபாசனாகாதைகளைப் பிருகுமுனிவர் திருவாய் மலர்ந்தருளியவாறு இதுகாறுஞ் சொல்லிவந்தனம், இப்பால் அவ்வாறே அக்கணேசமூர்த்தியினுடைய லீலாகாதைகளைச்சொல்லுமிடத்து, முன்னொரு பிரளயமுடிவில் அவர் வக்கிரதுண்டாவதாரங்கொண்டு, பிரமனாதியமூவர்களைப்படைத்து, அவர்கட்குச் சிருட்டியாதிமுத்தொழில்களைக் கற்பித்தருளிய திருவிளையாடலை உபாசனாகாதையிற் சொல்லியிருக்கின்றனம், இனிச்சிந்தாமணிவிநாயகர் திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோங் கேட்பீராக.

கணபதிதுணை.

இரண்டாவது,

சிந்தாமணிவிநாயகர் திருவவதாரப்படலம்

ஓ சவுனகாதி முனிவர்களே, முன்னொருகாலத்தில், தருமமுதலிய நால்வகைப்பொருள்களு நிறைந்ததமிழவளநாட்டில், உலகமுழுவதினுந் தனதரசாக்ஷியைச்செலுத்திவந்த அபிசித்தென்னும் பெயரினையுடைய ஓரரசனிருந்தான். அவன் தனது மனைவியாகிய குணவதியென்பவளோடு அளவளாவிவாழ்வுற்றிருக்கின்ற நாளையில், தனக்குநெடுநாள் ஒருபுத்திரப்பேறில்லாமல் மனவருத்தங்கொண்டு, அரசுரிமையனைத்தையும் அமைச்சர்வசம் ஒப்புவித்துத், தனதுமனைவியோடும்வனத்தைநோக்கிச்சென்றனன். அப்போது அவ்வனத்தினுள் ஓராசிரமந்தோற்றக்கண்டு, அதனுள்ளேநுழைந்து, உலகமுழுவதுஞ்செய்தமாதவங்களெல்லாம் ஓர்வடிவங்கொண்டிருந்தாற்போல விபூதியும் உருத்திராக்கமாலிகையுமணிந்து வெழுந்தருளியிருக்கின்ற வைசம்பாயன முனிவரைக்கண்டு, அடியற்றமரம்போல நிலத்தில்வீழ்ந்து பணிந்து, மீட்டுமெழாமலிருந்தனன். அவ்வாறிருப்பவனை அம்முனிவர்கிருபையோடும்பார்த்தருளி, அரசனே எழுந்திரு, நீயார், நீ இவ்விடத்திற்கு வந்தகாரணம் யாதென்று வினவினர். அதற்கு அவ்வரசன் ஒன்றும் பேசாமலும் எழாமலு மிருந்தனன். அதனை அம்முனிபுங்கவர்கண்டு, தமது தியானநோக்கத்தினாலே அவ்வரசனுடையகருத்தையறிந்து, உனக்குமஹாபராக்கிரமசாலியாகிய புத்திரனுண்டாகக்கடவதென்று ஆசிர்வதித்தனர். அதனைக்கேட்டவுடன் தரித்திரனுக்குத் தனங்கிடைத்ததுபோல அரசன் பெருமகிழ்ச்சிகொண்டெழுந்து, இருகரங்களையுங்கூப்பி, முனிபுங்கவருக்கெதிராகநின்று, சுவாமி- அடியேன், கற்குந்தோறுங் கரும்பெனருசிக்கவல்ல தமிழ்வளநாட்டரசன், எனது பெயரை அபிசித்தனெனச்சொல்லுவார்கள். யான் நெடுநாள் ஒருபுத்திரப்பேறில்லாமையால் மனம்வருந்தித் தேவரீருடைய திவ்வியசரணாரவிந்தங்களை யடுத்தேன், கடவுளர் வாக்குபொய்த்தாலுங் கனவினுந் தவத்தர்வாக்குப் பொய்க்காதாதலால், தேவரீர் அடியேனுக்குப் புத்திரனுண்டாகக்கடவதென்று ஆசீர்வதித்தபடி அடியேற்குச் சித்திக்குமார்க்கத்தினையும் அநுக்கிரகித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்கு வைசம்பாயன முனிவர்மனதிரங்கிப், பரமசிவத்தினுடைய பஞ்சாக்கரத்தை அவனுக்குபதேசித்து, அரசனே- சமுத்திரநதிசங்கமத்திற்கு மேற்புறத்தில் ஒருவனமுந் தடாகமு மிருக்கின்றன, அங்கு நீசென்று, உனதுபத்தினியைப் பணிசெய்யக்கட்டளையிட்டு, நீ நான்குமாதவரையில் இம்மந்திரத்தைச்செபஞ்செய்து, முடிவில் அதற்கேற்ற தருப்பணாதிகளை நிறைவேற்றி, யதாப்பிரகாரம் உனது ராச்சியத்திற்குச் செல்லுவையெனில், சிறிதுகாலைக்குள் பரமசிவகடாக்ஷத்தினு

லே உனக்கு நல்லபுத்திரனுண்டாகுவனென்று திருவாயமலர்ந்து, அவ்வனைத் தவத்திற்குச்செல்லுமாறு விடைகொடுத்தனர். அவையனைத்தையும் அரசன்செவிக்கமுதாகப்பூரித்து, மீட்டுமவரைப் பணிந்தெழுந்து விடைபெற்று, தனது மனைவியாகிய குணவதியுடனே வழிக்கொண்டு, முனிபுங்கவர்கூறியருளிய வனத்தின்கணுள்ள தடாகக்கரையை யடைந்தனன். அங்கு அதற்கு முன்னமே சரஸ்வதி ஏவல்செய்யப் பிரமதேவன் தவத்திலிருப்பதைக்கண்டு, அவர்களை அனந்தமுறைபணிந்தெழுந்து, மறுநாண்முதல் தனதுபத்தினியைப்பணிசெய்துவரக்கட்டளையிட்டுத், தவநியமத்துடனே தானொருபக்கத்திலிருந்து, அரியபஞ்சாக்கரமந்திரத்தைச் செபஞ்செய்துவந்தனன். குணவதியும் சரஸ்வதியும் பணிசெய்யும் வேளைபோக மற்றவேளையில் இருவரும் ஒன்றாகக்கூடிச்சென்று, காய்கனிமுதலியவருக்கங்களைச் சேகரித்துவந்து, தங்கடங்கணாயகர்க்குக் கொடுத்துவந்தனர். இவ்வாறிருக்குநாளையில், ஒருநாள் சரஸ்வதி காமலாகிரிகொண்டு, முறுவலரும்பவும், தனங்களவிம்மவும், கூந்தல்சோரவும், மேகலைநெகிழவுமாக, ஞரோலென்றுதனதுகாதலன்மடியிற்சென்றுவைகினள். உடனே பிரமன் தவத்தினின்று நீங்கித், தனதுபுந்தியை யெல்லாம் மன்மதசரங்கட்கிரையாக்கி, உடன் முழுவதும் மயிர்க்குச்செறியும்படியாகக் காமலாகிரியைத்தலைக்கொண்டு, தனது மடித்தலத்திருப்பவள் இன்னாளென்று தெரிந்துகொள்ளாமல்மயங்கி, இவள உரோகணியோ- இந்திராணியோ- இரதியோ- மோகினியோ- இலக்குமியோ- திலோத்தமையோ- அரம்பையோ- ஊர்வசியோ- அல்லது மகாவிஷ்ணுவினுடைய மாய்கைதானோ வென்றையுற்று, அவளது முகத்தையும் ஏனைய அவயவங்களையும் நன்றாகப்பார்த்துப், பின்னர் இவள் நமது காதலியேயென்று தெளிவுற்று, உடனே அவளது செவ்விதழூறலைப்பருகுமாறு தனது நான்குவாய்களும் யான் முன்னம் யான் முன்னமென்று ஆர்வமோடெழுந்து சத்திக்கவும், அவளது கொங்கை - நுதல் - கூந்தல் - அல்குல் - முதலிய தானங்களைத்தடவுமாறு தனது எழுகைகள் எழாநிற்கவும், மற்றொருகையால் அவளைத்தழுவுமாறு தனது அரையிலுடுத்தியிருக்கின்ற கலையைநெகிழ்த்தெறிந்தனன். அதனைச்சரச்சுவதிநோக்கித், தவஞ்செய்வோரைக் கலைத்துக்கூடுவது மகாபாதகமென்று சரேலென்று அவன்மடியினின்றும் அப்பாலகன்று, முன்னர் தனது மனத்தின்கணுண்டான காமலாகிரியைத் தணித்துக்கொண்டு, சுவாமி - அவசரப்படவேண்டாம், அரையில் வத்திரமுடுத்தி மனதைக்காத்தருளவேண்டுமென்று சொல்லினள். அதற்குப்பிரமன், பெண்ணே - நீகூறியபடி பின்னருடுத்திக்கொள்ளுவேன், இப்போது எனதுயிர்நீங்குவதன்முன் எனக்குச் சுகந்தரவேண்டுமென்று கேட்டனன். அதற்குச்சரச்சுவதி சொல்லுவாள், சுவாமி- நாம் இங்குவந்திருப்பது பழையபாவவசத்தினாலல்லாமல்வேறில்லை, அப்பாவங்கடொலையுமாறு தவஞ்செய்வதைவிட்டு இத்தன்மைத்தாகிய அற்பகாரியத்துக்குடம்படுவீராயின், தேவரீருடையகல்வியும் - அறிவும் - உறுதியும் - என்னாகாநிற்கும், நீர்செய்துவந்த தவந்தான் எவ்வாறுசித்திக்கும், அத்தவசித்தி வேண்டாமெனினும் அத்தவத்தினுட்பட்டகாலகாலராகிய சிவபெருமான் எவ்விதத்தினுஞ்

சபித்துவிடுவர், ஆதலால் தேவரீர்செய்துவந்ததவமானது நிறைவேறும் வரையில் நீர் எனக்குத்தந்தையும் நானுமக்குப்புத்திரியுமாகுமென்றிவ்வாறு சபதங்கூறி, அனந்த இனியவார்த்தைகளினாற் பலவாறு அவன் மனதைத்தேற்றினள். அவ்வாறுதேற்றியும் பிரமன் மனந்தேறாமல், விடந்தலைக்கேறினவன்போலக் காமவிகாரந் தலைக்கொண்டு, வலுவிற்புணருமாறு அவளைவலித்தனன். உடனே- சரஸ்வதி அவனிடத்தினின்றுந் தப்பியோடி, மற்றொருபக்கத்திற்றேவர்களோடுங் கூடித்தவஞ்செய் திருக்கின்ற இந்திரனிடத்திற்சென்று நின்றனள். பிரமனும் அவளைப் பின்றொடர்ந்து சென்றனன். இவ்விருவரையும் இந்திரன்பார்த்து, ஏதோவோரதிசயமிருக்கின்றதெனவெண்ணி, பிரமனுக்குஉபராதனந்தந்து, பாதபூசைமுதலியவைகளையுநடத்தி, ஒருபாரிசமாகநின்று மிக்க நாணத்துடனேகூடியிருக்கின்ற சரஸ்வதிமுகத்தையும், ஒளிமழுங்கி யிருக்கின்ற பிரமன் முகத்தையும்பார்த்து, நீங்களிருவரும் இங்ஙனம் வருவதற்கான காரணமென்னென்று கேட்டனன். அதற்கவர்கள் ஒன்றுஞ் சொல்லாமலிருந்தனர். பின்னரங்கிருந்த தேவர்கள் (ஆகாரமுதலிய வைகளைநீத்து அளவற்றநாள் அரியதவத்திலிருக்கின்ற யோகியராயினும், காமக்கடலை நீந்துவது மகாகடினம்.) என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டனர். அதனைக்கேட்டபிரமன் உடனே அதிகவேகத்தோடும் எழுந்தனன். அப்போது அவன்வீரியமானது வெளிப்பட்டது. பின்னர் பிரமன் முன்னர் தவஞ்செய்துகொண்டிருந்த தடாகத்தையடைந்து ஸ்நானஞ்செய்து, சுத்தபவித்திரனாகி, யதாப்பிரகாரந் தனதிருப்பிடத்தைநோக்கிச் சென்றனன். இப்பால்பௌரணைவர, அத்தினத்தில் அப்பிரமனோடு தவஞ்செய்துகொண்டிருந்த அபிசித்துமகாராசனும் அவன்பத்தினிகுணவதியும் சமுத்திரஸ்நானஞ்செய்து மீண்டுவருகையில், குணவதிக்குத் தாகமேலிட்டு, வினாவிற்றடாகத்தினையடைந்து தண்ணீரருந்தினள். அத்தண்ணீரோடு பிரமதேவனுடைய வீரியமானது அவளது கருப்பத்திற்சென்று கருவாயிற்று. பின்னர் அரசன் வைசம்பாயன முனிவர் செபஞ்செய்யுமாறு அநுக்கிரகித்தருளிய நான்குதிங்களுமானவுடன், வேதாகமமுறைமைப்படிகருப்பணூதிகளைமுடித்துத், தனதுமனைவியோடு முன்போல நகரத்தைச்சேர்ந்து, தேவர்கடனுகிகளைப் பேரன்பினோடு நிறைவேற்றிவந்தனன். பத்தாந்திங்களில் குணவதி ஒருபுத்திரனைப்பயந்தனள். அப்புத்திரனுக்கு அரசன் சாதகசன்மாதிகளைக் கிரமப்படிமுடித்துச், சூதகநீங்கியவுடன் சோதிடர்முதலாயினோரை வரவழைத்து, நமது புத்திரனுக்கு என்னென்று நாமகரணஞ்செய்யவேண்டியதென வினவினன். அதற்கு அவர்கள் அப்புத்திரனுடைய திதியாதி நிலைகளையாராய்ந்து, இவன் தேவர்களாலும் பூசிதஞ்செய்யத்தக்கவனென்று தமக்குட்டீர்மானித்துச், கணனென்று நாமகரணம்வைக்கச்சொல்லினர். அரசன் அவ்வாறே அவனுக்கு நாமகரணஞ்செய்தனன். இப்பால் கணனெனப்பவன் நாளுக்குநாள் வீறிவளர்ந்து, நீண்டவுருவும் - மேகநிறமும் - பருத்தவிழியும் - அகன்றமார்புமுடையவனாகி, இவன்வேறொருபர்வதராசனென்று சொல்லும்படியாக வீதியில் விளையாடிக்கொண்டிருக்கின்ற பருவத்திற்றானே, அரைக்கணத்தில் அளவற்றயோசனைதூரஞ்சென்று திரும்புவானாகி, ஒரு

நாள்சந்திரன் கீழ்த்திசையினின்றும் உதயமாகி ஆகாயமார்க்கமாக வரக் கண்டவன், விரைவிலெழுந்து, அவன்கரங்களைச்சேரப்பிடித்துப், பின்னர் தொழுதுவணங்கி அவன் நல்லவார்த்தைகள்பேசிக்கெஞ்ச விடுத்திட்டனன். மற்றொருநாள் ஒரு யானையானது மும்மதங்களையுஞ்சலசலவென்றுபொழிந்து மிகுந்தகோபத்தோடுங்கட்டுத்தறியைமுறித்துப் பாகர்களையெல்லாம் அடர்த்துத் துதிக்கை கொம்பு வால் இவைகளினாற் படைவீரர்களையெல்லாங்கொன்று அந்நகரத்தினது வாயிலையடைத்துக்கொண்டிருக்க, அந்நகரத்தார்மிக்கக்லேசத்தையடைந்து, இந்தமதயானைமுன்னொருகாலத்தில் சர்வசங்காரமூர்த்தியாகிய சிவபெருமான் உரித்தருளியமதயானையோ, அல்லது ஆலவாயழியுமாறு அமணர்களா லேவப்பட்ட மதயானையோ வென்றுகலங்கி ஆரவாரிக்க, அதைஅக்கணனென்பவன்கேட்டு, அந்தயானையருகிற்சென்று, அதன்கதுப்பில்வீரிடும்படியாகப்புடைத்து மத்தகத்தைக்கிழித்தனன். உடனே அதினுடையகதுப்பினும் மத்தகத்தினும் உதிரப்பிரவாகமுண்டாகி, அப்பிரவாகமும் மதநீரும் ஒன்றுபட்டு நீலகிரியின்மீது இந்திரவில்லிருந்ததுபோலவிளங்க அந்தயானை இறந்துவிழுந்தது. இவ்வாறு அளவற்ற அற்புதமானவிளையாட்டுகளை நடாத்திவருகின்ற அக்கணனென்பவன், வயதிற்சிறியவனாயினும்வலியில் எவ்வாறு பெரியவனாயினனோ அவ்வாறே, தருமம் - தானம் - ஒழுக்கம் - ஆசாரம் - விருந்தோம்பல் - சிவபூசை - சிவஞானம் - சீலம் - முதலாகிய நற்குணங்களினும் பெரியவனாகி, ஒருநாள் தனது தந்தையைப்பணிந்து விடைபெற்று வனத்திற்சென்று, ஓர்தடாகக்கரையிலிருந்து நித்தலும் விபூதி உருத்திராக்க முதலியவைகளையணிந்து, தாமரைமலரினாலும் உன்மத்தமலரினாலும் சிவபிரானைவழிபட்டுக், கந்தமூலபலாதிகளாநிவேதித்து, அவரதுபஞ்சாக்கரத்தைச் செபித்துக்கொண்டு ஆயிரவருடம்வரையிற் றவத்திலிருந்து, பின்னர் ஒற்றைக்காலில்நின்று ஜலபானத்தோடு முப்பது வருடம் வரையினும், வாயுபக்ஷணத்தோடு பத்துவருடம் வரையினும், நிராகாரத்தோடு பத்துவருடம் வரையினும் உக்கிரமாகியதவத்தைச்செய்தனன். அவன் தவஞ்செய்கின்ற விடத்தில் தென்றற்காற்றேயன்றி ஏனையகாற்றுகள் வீசினவில்லை. சூரியன் வேகமாய்க்காய்ந்ததில்லை. மழைஅதிகமாய்ப்பெய்ந்ததில்லை. மிருகங்களும் பறவைகளும் ஒன்றுக்கொன்று பகையாயினதில்லை. அவன்செய்துவருகின்றஉக்கிரதவத்தினின்றும் அனலுண்டாகி, அவ்வனல் தெய்வலோகமெங்கும் பரந்துதகித்தது. அதைத்தேவர்கள்சகிக்கமாட்டாது, இவன்சுவர்க்காதிபோகங்களில்யாதுவேண்டித் தவஞ்செய்கின்றனனென்றுபயந்து, யாவரும் ஒன்றாகச்சேர்ந்து, ஆகாயமார்க்கமாய்க் கயிலாயபர்வதத்தையடைந்து, சிவபெருமானைப்பணிந்தெழுந்து, அளவற்றவேதாகமங்களினாற்றுதிசெய்து, சுவாமி- ஒருவன் வனத்தில் விபூதி உருத்திராக்கமுதலியவைகளையணிந்தகோலத்தோடு கையிற்செபமாலையேந்தி, ஒற்றைக்காலில்நின்று, பஞ்சாக்ஷரத்தினால் தேவரீரைத்தியானஞ்செய்துகொண்டு, உக்கிரமாகியதவத்திலிருக்கின்றனன், அவனிடத்தினின்றும் ஓர்தவாக்கினிபிறந்து, சொர்க்கலோகமெங்கும்பரவி எம்மையெல்லாம் வெதுப்புகின்றது, அதனால் யாங்களனைவரும் தேவரீர் சரணாரவிந்தங்களை யடுத்தனம், இனி அடி

யோர்கட்கு யாதொருதுன்பமு நேரவொட்டாமற் காப்பாத்தி யருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச்சிவபெருமான் கிருபைசுரந்து, அவர்கட்கு அஞ்சவேண்டாமென்று அபையாஸ்தந்தந்து, இடபவாசனத்தின்மீது பார்வதிதேவியாரோடு மெழுந்தருளி, ஐம்பொறிகளையு நிக்கிரகித்து அரிய தவத்தினைச்செய்து கொண்டிருக்கின்ற கணனுக்கெதிரில்பிரத்தியக்ஷமாயினார். உடனே - கணனெனவன் மேகத்தைக்கண்டமயில்போலவெழுந்து, தனதுவருத்தமெல்லாம் வீழும்படியாகக் கர்த்தனுடைய திருவடிகளிற்பலமுறைவீழ்ந்து நமஸ்கரித்து, கைகொட்டி, ஆனந்தக்கூத்தாடி, மும்முறைவலம்வந்து, கண்கள்நீரைக்கவிழ்ப்ப, உரைதடுமாற்றங்கொள்ள, உடலெங்கும் உரோமாஞ்சிதம்பூப்ப, அகத்துள் அன்புபொங்க, மிக்கவணக்கத்தோடும் எதிர்நின்று, ஓபரம்பொருளே - இராசதம் - சாத்மீகம் - தாமதமென்கிற முக்குணங்களினின்று சகலசீவராசிகளையும் படைத்துங்காத்துந் துடைத்துமிராநின்ற கர்த்தர் தேவரீரேயாதலால், இங்கு அடியேனுய்யுமாறு திருவருள்சுரக்கவேண்டுமென்று துதிசெய்தனன். அதற்குச்சிவபிரான் கிருபைசுரந்து, அன்பனே - நீகருதியவரங்களைக்கேள் தருகிறோமென்று திருவாய்மலர்ந்தனர். உடனே - கணனெனவன் மீட்டுந்தொழுதெழுந்து, இருகரங்களையுஞ்சிரமேற்கூப்பி, சுவாமி - தேவரீருடைய திவ்வியசரணாரவிந்தங்களில் எக்காலத்து மாறாதபத்தியும், மேலானபாக்கியமும் அடியேற்கருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அவ்வாறே சிவபிரான் தமது திருவடிகளில்பத்தியும், மூவுலகத்தையும் ஆளத்தக்க அரசாக்ஷியும், பிரமேந்திராதி தேவர்களாலும் அழிவுறாத ஆயுளும், பின்னும் அளவற்றவரங்களையும் அவனுக்குத்தந்து, தமதுதிருக்கைலைக்கெழுந்தருளினர். கணனெனவன் தனது நகரத்தையடைந்து, தன்னையீன்ற தாய்தந்தையருடைய பாதங்களைப்பணிந்தெழுந்து, தனக்குப்பரமசிவங்கொடுத்தருளிய வரங்களனைத்தையும் அவர்களிடத்திற்கூறிச்சந்தோஷமுற்றிருந்தனன். பின்னர் அவன்தந்தையாகிய அபிசித்துமகாராசன் அவனுக்கு விவாகஞ்செய்து, சிலநாள்சென்றபின்பு அவனுக்குப் பட்டாபிஷேகநடத்தித், தனதரசுரிமையையும் அவன்பாலொப்புவித்துத், தான் தனதுமனைவியோடு பிரதிதினம் சிவபெருமானைப்பூசித்து அரியதவத்தினால் ஆனந்தக்களிப்பில் மூழ்கியிருந்தனன். இப்பால் கணராசன் தனதுதந்தைகொடுத்த வுலகத்தைத்தன்வசமாக்கி, அன்னியதேசங்களையுங் கைக்கொள்ளவேண்டுமென்றுகருதி, விசுவசித்து - பிரமதன் - கிரந்தன் - விதந்து - என்கின்ற நான்குமந்திரிகளையும், தனதுபுத்திரர்களாகிய சூலபாணி - சுலபன் - என்கின்றஇருவர்களையும்சர்வாயுதபாணியராய் அளவற்றசேனைகளோடுவரக்கட்டளையிட்டு,நாற்புறத்தும் நூற்றைம்பது நூற்றைம்பதுயோசனைதூரம் பரவியிருக்கின்ற சதுரங்கசேனைகளோடு யமனும் அஞ்சிக்கண்புதைக்கும்படியாகத் தான்புறப்பட்டு, எதிர்த்துவந்தவர்களையெல்லாஞ் சங்கரித்துப்,பணிந்துவந்தவர்களிடத்திற்பகுதிவாங்கிப், பூவுலகத்திலுள்ள சகலராச்சியங்களையுந் தன்வயப்படுத்தி, உடனே சொர்க்கலோகத்திற்சென்று, கற்பகவனத்திலிருக்கின்ற தேவேந்திரனுடைய உச்சைசிரவமென்கின்றகுதிரையைப்பிடித்து அதன்மீது தான் ஆரோகணித்தனன்.

அதனைத் தேவேந்திரன் றனது தூதர்களாலறிந்து, மிகுந்த கோபாவேசத்துடனெழுந்து, வச்சிராயுதத்தைத்தாங்கி, வெள்ளையானையின் மீதாரோகணித்து, நீண்ட துவசங்களாடும்படியான தனது அரண்மனைவாயிலினின்றும் வெளிப்பட்டனன். உடனே எல்லாத்தேவர்களுஞ் சர்வாயுதபாணியராய் நெருங்கினார்கள். நாற்புறங்களினும் இரணபேரிகைகள் முழங்கின. ஆகாயவெளியெங்கும் வெற்றித்துவஜங்கள்தூர்த்தன. வீரர்கள்கரங்களிலெல்லாம் எஃகாயுதங்கள் பிரகாசித்தன. பீலிக்குஞ்சங்களும் வெண்பட்டுக்குடைகளும் எங்குநிறைந்தன. இவ்விதவாடம்பரங்களுடன்தேவசேனைகளெல்லாஞ் சத்தசாகரங்களைப்போலவார்ப்பரித்துவரத், தேவேந்திரன்தனதுநகரத்தைக்கடந்துவந்து, மிக்கபராக்கிரமத்தோடு கரத்தில்வில்லேந்தித் தனதுகுதிரைமீதாரோகணித்திருக்கின்ற கணராஜனையும் அவன்சேனைகளையுங்கண்டனன். அப்போது இவ்வீரனோடுயுத்தஞ் செய்துவெற்றிபெறுவதுமிகவுங்கடினமாதலால், இவனைஇனியவார்த்தைகளாற் சம்மதப்படுத்துவதேசரியானதென்றுதனக்குள் ஆலோசித்தவனாய், ஓ குணவதிகுமாரனே-ஓ குணக்குன்றமே-கணனென்னும்பெயருக்கேற்ப நன்குமதிக்கப்படுங்காட்சியோய், எனதுகுதிரையைவிட்டுவிடும், என்றுகேட்டனன். அதற்குக் கணராசன்நகைசெய்து, இந்திரனே - உனது ஐராவதமுதலியனவும் எனதுவசமாகத் தக்கனவேயென்றுசொல்ல, அதனைக்கேட்டலும் இந்திரன்கோபங்கொண்டு, தனதுசேனையைத்தூண்டியுத்தஞ்செய்வதற்காரம்பித்தனன். அதனைக்கணராஜனால் வெறுத்துத் தள்ளப்பட்டிருந்தசேனாதிபதிக்குள் ஒருவீரன்கண்டு, தேவசேனைகளோடு மெதிர்த்துநாசஞ்செய்து, யாவரும்பின்னிட்டோடும்படியாக முடுக்கினன். இவ்வாறு ஒரே சேனாதிபதிக்கு அளவற்ற விம்மிதங்களோடும் வந்த தேவசேனைகளெல்லாம் பின்னிட்டோடலும், இந்திரன் மிகவுமானமுங்கோபமுங்கொண்டு, தனது ஐராவதத்தைக் கணராசனருகிற்செலுத்திக், குலிசாயுதத்தால் அவன்மார்பிற்றாக்கினன். உடனே கணசாசன் மூர்ச்சையாகி, மீட்டுக்தெளிந்தெழுந்து, குதிரையைஇந்திரனருகிற்றூண்டித், தனதுவாளினால் அவன் குலிசப்படையைக் கீழேவிழத்தள்ளினன். அதனால்இந்திரன்இளைப்புற்றிருக்கின்றமையைஅவனதுஐராவதங்கண்டு, மிகுந்தசீற்றத்தோடும்போர்செய்ய, அதனையுங் கணராஜன் அடித்து ஒர் நொடிப்போதில் நிலத்தில்விழத்தள்ளினன். இப்பால் இந்திரனுங் கணராஜனுங்கைகலந்து மல்லயுத்தஞ்செய்வதானார்கள். அப்போது கணராஜனனவன் பலபேய்க்கூட்டங்கள் தனது வெற்றியைக்கூறித் துணங்கையாடும்படியாக, இல்லிப்பானையின் முகந்தனைப்போல இந்திரனுடையமுடியில் உதிரவெள்ளம் பெருகும்படிக்குட்டினான். அதனால் அவ்விந்திரன் சோபித்துவிழ்ந்து, பின்னர்தெளிந்தெழுந்து, மானமானது உள்ளத்தில் வாதிக்கும்படியாக வாட்டங்கொண்ட முகத்தோடுஞ் சிரங்கவிழ்த்து நாணமுற்றிருந்தனன். அதனைக்கணராஜன்கண்டு, இந்திரனே- இனியொன்றற்கும்அஞ்சற்க, யாமுனக்குவிண்ணுலகாட்சியை இத்தனைந்தந்தோம், எமக்குள்ள அரசாக்ஷிகளுள் அளவற்றவளங்கள் மலிந்திருக்கின்றனவாதலால், இவ்விண்ணுலகவளங்களையாம்வேண்டிலம், இனி நமது ஆணைக்கஞ்சி நடந்துகொள்ளக்கடவை, அதினின்று மாறுவையா

யின் உடனே தண்டனைக்குள்ளாகுவையென்றுசொல்லி, மற்றலோகங்களையுஞ் செயங்கொள்ளுமாறு அவ்விடத்தினின்றும் வெளிக்கொண்டனன். அக்காரணத்தை விண்டுபிரமனாதியர்கண்டு, இனி நமக்குயாது சம்பவிக்கவிருக்கின்றதோவென்றுபயந்து, யாவரும் மிகுந்தவணக்கத்துடன் கணராசனைஎதிர்கொண்டு, அளவற்றகையுறைகளைத்தந்து, இனியவார்த்தைகளாடிவணங்கிச்சென்றனர். அதற்குக்கணராசன்மனமகிழ்ந்து, யாவர்க்குந் தனதுகிருபையைவழங்கி, அவ்வவர்களுடைய உலகங்களிற் றனது முத்திரைமோதிரச்சுவடை வழங்கும்படிசெய்து, பூவுலகத்திற்கு வந்து, தனதுதாய்தந்தையர்களைப் பணிந்தெழுந்து, தேவர்களாற்றரப்பெற்ற பலகையுறைகளை அவர்களெதிரில்வைத்து, அவ்வவர்களைச்செயித்துவந்த திறங்களனைத்தையுஞ்சொல்லி, வேதமுறையினின்றும் வழாதபடி நீதியினைச்செலுத்தி, உம்பர்களுங்கண்டு உவப்பெய்தத்தக்கபலதருமாதிகளை இடைவிடாதியற்றி; அழகிற்சிறந்த அனேகமாதர்களை மணஞ்செய்து, நெடுநாள் களிபபென்னுங் கடலுண்மூழ்கி வாழ்ந்திருந்தனன். இவ்வாறிருக்குநாளையில், ஒருநாள் வனத்தின்கணுள்ள சிலவேடர்கள் கணராசன்சமூகத்தில் வந்துபணிந்தெழுந்து, அடியேங்களுடையகூழுங் குடியுங்குலையாதபடிவளர்த்து வருகின்றகுரிசிலே- வனத்தின்கண்பலவகைப்பட்ட மிருகவர்க்கங்கள்மிகுத்து, அவ்விடத்துள்ளபயிர்களையெல்லா நாசஞ்செய்து வருகின்றனவென்று முறையிட்டார்கள். அதனைக் கணராசன்கேட்டு, வேட்டையாடுவான் செல்லயத்தனித்து, மந்திரியரைக்கொண்டு சிலசேனைகளோடு நாய்வேட்டைக்காரர் வலைஞர்முதலியோரைவரவழைத்துத், தான்நீலவத்திரமுடுத்தி, இடையில் நீலக்கச்சினைவீக்கி, நீலநிறத்தாலாகிய முன்கைத்தோற்கட்டுகளையணிந்து, நீலப்போர்வையைப்போர்த்து, நீலந்தோய்த்ததலைச் சுற்றினையுமணிந்து, சுற்றிலும் நீலமணிக்குடைநிழற்றும்படியாகக கரத்தில் நீல்வில்லேந்தி, நீலப்பரிமீதாரோகணித்துப், பூவுலகைநோக்கிச்செல்லும் யமனைப்போலவனத்தை நோக்கிச்செல்லுவதாயினன். இவ்வாறு கணராசன் செல்லுகையில் முன்னதாக நான்குவேவுகாரர்கள் நான்குதிசைகளினுமோடி, மிருகங்களெல்லாங்கூட்டங் கொண்டிருக்கின்ற விடங்களையறிந்துவந்துகூற, மள்ளர்களெல்லாம் அவ்வவ்விடங்களிற்கவண்களையெறிந்து எங்கும்வலையிட்டார்கள். வேடர்களெல்லாம் ஞாளிக்கூட்டங்களையேவிப் பம்பைகொட்டினார்கள். மறவர்களெல்லாம் பற்பலபுதல்டோறுஞ்சென்று குறைத்து வெட்டினார்கள். படைவீரர்களெல்லாம் வில்லைவளைத்து வேட்டையாடினார்கள். சிங்கங்கள் - யாளிகள் - வராகங்கள் - முட்பன்றிகள் - யர்னைகள் - ஒட்டகங்கள் - காட்டானைகள் - மான்கள் - முயல்கள் - மரைகள் - புலிகள் - முதலாயுள்ளயாவுந் தங்கடங்களிடங்களை யகன்று வனமெங்கணும்பாய்ந்துலாவின. அவற்றுட் சிலமிருகங்கள் மள்ளர்களோடெதிர்த்து யுத்தஞ்செய்துமாய்ந்தன. சிலமிருகங்கள் ஒன்றோடொன்று அடர்த்துமடிந்தன. சிலமிருகங்கள்வலையின்சணகப்பட்டிறந்தன. சிலமிருகங்கள் ஞாளிகளின்வாயிலகப்பட்டுமரிந்தன. இவ்வாறுகணராசனானவன் தனதுபடைவீரர் - மறவர் - வலைஞர் - முதலாயினோரைக்கொண்டும் ஞாளிக்கூட்டங்களைக்கொண்டும் பலவகைப்பட்ட நாடுகளினுஞ்சென்றுவே

ட்டையாடி, யாளிமுதலியமிருகவருக்கங்களை யெல்லாங்கொன்று திரும்பிவருங்காலையில், தனக்கு மிகவுந் தாகமேலிட், அதனால் வழிதப்பி, இருவிழிகளும் பஞ்சடையும்படியாக அமைச்சர் முதலியசேனைகளோடு இருண்டகாட்டினுள்ளேபுகுந்து சென்றனன், அப்போதவ்விடத்தில் தெய்வலோகத்தினையொக்கின்ற ஓர்வனமானதுதோற்றக்கண்டு,அதனுள் தனதுசேனைகளோடுநுழைந்து,மல்லிகை முல்லைமுதலியபுட்பச்செடிகளெல்லாம்படர்ந்துதென்றற்காற்றினால் எங்கும்பரிமளத்தைவீசாநின்றஓர்சோலையையடுத்து; அங்கு பெரியோர்களது உள்ளத்தைப்போலத் தெளிந்த தண்ணீரையுடைய ஓர் நதியைக்கண்டு, அந்நதியின்கண்மிகுந்த ஆவலோடும் ஸ்நானஞ்செய்து, சிறிது தளர்வொழிந்து, அவ்விடத்துள்ள கந்தமூலபலாதிகளை உழையர்கள் சேகரித்துக்கொடுக்க வாங்கிப்புசித்து, தாகசாந்தியுஞ்செய்து, பசியையும் இளைப்பையுஞ் சிறிதாற்றித், தன்மீது தென்றற்காற்றுவீசும்படியாக ஓர் மரத்துநிழலில் உட்கார்ந்திருந்தனன். இவ்வாறு கணராசன் இளைப்பாறிக் கொண்டிருக்கின்ற சமயத்தில், அவ்வனத்தில் வாசஞ்செய்கின்ற கபிலமகாமுனிவருடைய சீடர்களிலொருவர் அங்குள்ள நதியில்ஸ்நானஞ்செய்யச்சென்றனர். அப்போது அவர் அந்நதிக்கரையிற்றங்கியிருக்கின்ற அரசனையும் அவன்சேனைகளையுங்கண்டு, அக்காரணத்தைத் தனது குரவராகிய கபிலமுனிவருக்குத் தெரிவித்தனர். உடனே கபிலமுனிவர் அவ்வரசனை இங்ஙனமழைத்து வரக்கடவையென்று கட்டளையிட, அவ்வாறே அச்சீடர்கணராசனிடத்திற்செல்ல, அவனை அவ்வரசன்கண்டு வணங்கித், தாங்களிங்குவந்த காரியத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டனன். அதற்கு அச்சீடர், அரசனே - நீர் இங்ஙனம் வந்திருக்குஞ் செய்தியை எனது ஆசிரியராகிய கபிலமுனிவர்தெரிந்து, உம்மைத் தமிடத்திலழைத்துவருமாறு என்னை ஆக்கியாபித்தனுப்ப வந்தனனென்றனர். அதற்கரசன் மிகுந்தசந்தோஷங்கொண்டு, அம்முனிபுங்கவரது ஆசிரமத்திற்சென்று, இருட்பகையாகிய சூரியனைப்போன்று பிரகாசிக்குஞ் சிந்தாமணியை மார்பின்கண்தரித்திருக்கின்ற கபிலமுனிவருடைய திருவடிகளைப் பேரன்பினோடு பணிந்தெழுந்து நின்றனன். அவனை அம்முனிபுங்கவர் கிருபையோடும் பார்த்தருளி, ஓ ராதனத்திலவனையிருக்கச்செய்து, அரசனே - நீயார், இங்கு யாதுகாரணத்தைப்பற்றி வந்தனையென்றுவினவ, அதற்குக்கணராசன்சொல்லுவான், சுவாமி- எனது நாமங்கணனென்றுசொல்லுவார்கள், யான்வனத்தின்கண் வேட்டையாடித்திரும்புங்காலையில், மிக்கவிளைப்பினால் வழிதப்பி, இவ்விடத்திலணுகி, இவ்வியநதியில் ஸ்நானஞ்செய்து, கந்தமூலபலாதிகளைப்புசித்து இளைப்பாறிப், பூர்வஞ்செய்திருக்கின்ற புண்ணியபலத்தினால் கிருபைக்கடலாகிய தேவரீருடைய திவ்வியசரணாரவிந்தங்களைத் தரிசிக்கப்பெற்றேனென்றுசொல்லினன். அதனை முனிபுங்கவர்கேட்டுசந்தோஷித்து, அரசனே - இவ்வாசிரமத்திற்குவந்தபேர்கள் பசியுடன்சென்றதில்லையாதலால், நீயும் போசனஞ்செய்து, பின்னருனது பட்டணத்தைச் சேரலாமென்றுசொல்லி இசைவித்து, அவன்சேனைகளனைத்தையும் வரவழைத்துத், தமது தவமகிமை யாவருக்குந்தெரியும்படியாக மார்பிலணி

ந்திருந்த சிந்தாமணியைக்கரத்திலெடுத்து, அதனை ஓ ராதனத்தில்வைத்துப்பூசைசெய்து, இங்குவந்திருக்கின்ற யாவருக்கும் விருந்திடவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதன் பேரில் அச்சிந்தாமணியானது அழகுபொருந்திய வோர் நகரமுண்டாக்கி, அதில் அளவற்ற மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் முதலியவைகளை நிருமித்து, அநேகபரிசாரர்களையும் அளவற்றதங்கப்பாத்திரங்களையுஞ் சகலவிதபோசனவர்க்கங்களையுஞ் சிருட்டித்து, அரசனுக்கும் அவன்சேனைகட்கும் விருந்திட்டது. அவ்வற்புதத்தைக்காணுந்தோறும் அரசன் பெருமகிழ்ச்சியடைந்து, போசனாதிகளைமுடித்து, மீட்டும் முனிபுங்கவரைக்கண்டுபணிந்து, சுவாமி - தேவரீர் சிருட்டிமுதலிய தொழில்களை வேண்டினும் இமைக்குமுன் செய்து நிறைவேற்றவல்ல மகாதவமகிமையையுடையவராதலால், ஈகையிற்சிறந்த சிந்தாமணியைத் தேவரீர் வைத்திருப்பது யாதுக்கு, எனது தந்தைக்கொப்பாகிய தேவரீர் அடியேனைத் தமது புத்திரனாகப்பாவித்து அச்சிந்தாமணியை அடியேற்குக்கொடுத்தருளல்வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதனை அம்முனிபுங்கவர்கேட்டு, அரசனே-இச்சிந்தாமணியானது எனது உயிரினுஞ்சிறந்ததாகும், ஆதலால்-ஈதொழியநீயாதுவேண்டினுந்தருவோமென்றுசொல்லினர். அதற்கவ்வரசன்அச்சிந்தாமணியின்மீதுவைத்தஆசையினால்சம்மதியாது,மனத்தில்விரோதங்கொண்டு, முன்னம் பிரமனிடத்தினின்றும் பகற்போதில் வெளிப்பட்ட வீரியமானதுபின்னரப்பகற்போதிற்றானே வயிற்றிற்றங்கிக்கருவாகிப்பிறந்த பழுதினால் அவன்ராசகுலத்திற்பிறந்தும்ராக்ஷசகுணமேலிட்டுத், தனது அற்பபுத்தியினால்அச்சிந்தாமணியை அம்முனிபுங்கவரிடத்தினின்றும் பலாத்காரமாய்ப்பறித்துக்கொண்டனன். அதனால் முனிபுங்கவர்கோபங்கொண்டு, அடாமூடனே - மூவுலகத்தின்கண்ணும் அரசாக்ஷியைச் செலுத்துகின்ற நீ எனதுபொருளைப்பறித்துத் துன்பமுறச்செய்தனையல்லவா, விரைவில் கடவுளானவர் உலகத்தின்கண் அவதரித்து உன்னைநாசப்படுத்தவேண்டும் பதிதனே, இனி என்முன்னர் நிற்பையாயின் உன்னைச்சபித்து நீறாக்கிவிடுவேனாதலால் விரைவில் உனதிருப்பிடஞ் சேரக்கடவையென்றுசொல்லினர். அதற்குக்கணராசன் பயமுற்றானாயினும், அச்சிந்தாமணியைமீட்டுங்கொடுப்பதற்கு மனமில்லாதவனாய், மிக்கஆவலோடுங்கொண்டு தனது நகரைச்சேர்ந்து, தான்வனத்தில் வேட்டைக்குச்சென்றதுமுதல் நடந்தவிசேஷங்களை யெல்லாந் தனது தந்தை யிடத்திற்கூறித், தான்கவர்ந்துவந்த சிந்தாமணியைக்கொண்டு பலவிதவினோதங்களைக்காட்டிப், பற்பலவிடங்களையுந்தீர்த்து, அளவற்றசித்திகளோடு மூவுலகத்தினுந் தனது அரசாக்ஷியைநடாத்திவந்தனன். இப்பால் கபிலமகாமுனிவர் ஜீவரத்தினத்தையிழந்த நாகம்போலத் தமது சிந்தாமணியையிழந்தகாரணத்தை நினைக்குந்தோறும் நெட்டுயிர்ப்பெறிந்து, நீங்காத துயரத்திற்குள்ளாகி, ஆகாரமுதலியவைகளைநீத்து, நமக்குத்துரோகஞ் செய்தமகாபாவியை எவ்வாறழிக்க வல்லோமென்று யோசித்து, விரைவில் அவனுக்குக்கேடுசம்பவிக்க வேண்டுமென்று அகோரதவத்தினைச் செய்தனர். இவ்வாறு அளவற்றநாள் மிகுந்தபத்தியோடுந் தவஞ்செய்துகொண்டிருக்கையில், மகாவிஷ்ணுவினுடைய மாயையானது நாற்

திசைகளினு மேல்கீழாகி, எங்கும் அக்கினிச்சுவாலையாய்மூடி, அவர
து கண்ணுக்குக்காணும்படியாகநின்றது. அதை அம்முனிபுங்கவர் கண்
டு, ஈதென்னவிபரீதமென்று பயந்தனர். அப்போது அஃது அம்மு
னிபுங்கவரைக்கூவி, யானமாயாசத்தி, எனது பெயர் சாருகாசினி, உம
க்குத்துன்பமளித்த கணனென்பவன் சிவபெருமானுடைய வரத்தினால்
திரிமூர்த்திகளாலும் அழிவுறாத மேன்மைபெற்றிருக்கின்றான், மூன்று
தொழிலுக்கு நாயகராகிய விநாயகமூர்த்தி திருவுருக்கொண்டு வருவா
ரெனில் அந்நிமிஷத்தில் அக்கணனுக்கு அழிவுண்டாகுமாதலால், அவ்
விநாயகரைநோக்கித் தவஞ்செய்யக்கடவையென்றுசொல்லியது. அவை
யனைத்தையு முனிவர்கேட்டு, அம்மா - யான் அவரைநோக்கித் தவத்
தைச்செய்யவேண்டிய முறைமையினையுந்தெருட்டவேண்டுமென்று பி
ரார்த்தித்தனர். அதற்குச்சாருகாசினி அம்முனிவரைநோக்கி, ஓ தவசி
ரேஷ்டரே- முன்னர்யான்கூறியதிருப்பெயரே மந்திரமாகக்கொண்டு, அ
தன்முதலிலுங்கடையிலும் ஓங்காரபல்லவத்தையும் நமோந்தத்தையுஞ்
சேர்த்துப்,பதினெட்டுலட்சம்உரு செபம்பண்ணி, ஓமம்வளர்த்தித், தரு
ப்பணம் பிராமணபோசன முதலானவைகளையுஞ்செய்தால், அவ்வோ
மகுண்டத்தினின்று விநாயகமூர்த்தியானவர் மோதகம் - தாமரைமலர்-
மழுவாயுதம் - பூமாலை - யென்னுமிவைகளையேந்திய நான்குதிருக்கரங்
களுடனே, அனந்த ஆபரணங்களையுந் தரித்துக்கொண்டு, பிரகாசமுற்
ற திருமேனியோடு சிங்கவாகன மூர்ந்து, சித்திபுத்திசமேதராய் வந்தரு
ளுவரென்றுசொல்லி மறைந்துபோயினள். அவையனைத்தையுங் கபில
முனிவர்செவிகுளிரக்கேட்டுத், தாமிழந்த சிந்தாமணியை அப்போதே
அடைந்தவர்போல ஆனந்தமுற் றெழுந்து துள்ளி, முன்னிருந்ததுயரங்
களனைத்தையும்போக்கி, விநாயகமூர்த்தியினுடைய திருமந்திரத்தை மு
றைமைப்படிசெபஞ்செய்து, ஓமந்தருப்பணமுதலான வைகளையுநடாத்
திமுடித்தவுடன், அவ்வோமகுண்டத்தினின்று இரத்தினகிரீடம் - கு
ண்டலம் - தோளணி - முத்துவடமுதலிய ஆபரணங்களோடு, தேசா
ர்ந்துவனப்பெய்தியிருக்கின்ற திருவுருவமும், கருணைபொழிகின்ற திரி
நேத்திரங்களும், மோதமுதலியவைகளை யேந்தியிருக்கின்ற நான்குகர
ங்களும், எனது கற்போன்ற மனத்தினைக்கரைக்கவல்ல சேவடிகளும்
விளங்க, சித்திபுத்திகள் சமேதராகச் சிங்கவாகனமூர்ந்து விநாயகக்கடவு
ளெழுந்தருளினர். அவ்வற்புததரிசனத்தைக்கபிலமுனிவர் கண்குளிரப்
பார்த்து, சாருகாசினிசொன்னதனைத்துஞ் சத்தியஞ்சத்தியமென்றுபல
முறைபத்தியுடனே சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, உள்ளமுருகி,
உரோமஞ்சிலிர்த்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி,ஐயனே-அடியே
ன்குலமுதலியயாவுஞ் சுத்த பவித்திரமாயின, இனிசுவாமிகளுடையதிரு
வடிகளில் அடியேற்குமாறாதபத்தியையளித்து, அந்தியகாலத்தில்உயர்ந்
தமுத்தியையு மளித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குவி
நாயகமூர்த்தி கிருபைகூர்ந்து, கபிலமுனியே-எண்ணிறந்தபவங்கடோறு
ஞ்செய்துவந்ததவங்களினாலடையும் பயன்களையெல்லாம்நமதுகிருபையி
னால்இச்சனனத்திற்றானேஓர்நொடிப்போதிலடைந்தனை, யாமிவ்வுலகத்தி
ன் கணுள்ளதேவர்கள் முனிவர்கள்- பெரியோர்கள்- முதலியோருடைய

மலபந்தங்களையொழிக்கவும், வேதாகமங்களிற்கூறிய மகமாதிசற்கருமங்க
ளெல்லாமேன்மேலும்வளர்ந்தோங்கவும்,உனக்குத்துன்பத்தினைவிளைத்த
கணனென்னுமரக்கன்மாளவும், சகலவுயிர்களுக்கு நன்மையைச்செய்ய
வுமாக, உனது மனையின்கண்யாம் அவதாரஞ்செய்தனம். இப்பொழுதே
அக்கணனென்பவனுடலை நாய் நரி கழுகு முதலானவைகட் கிரையாக்கி,
ஒப்பற்றசிந்தாமணியை உனது கரத்திற்றருகின்றேமென்று திருவாய்ம
லர்ந்தனர். அவையனைத்தையுங் கபிலமுனிவர்கேட்டுச் சந்தோஷமாயி
னர். இங்கிவ்வாறாக, அத்தினமிரவில் கணராசன் நித்திரைசெய்கின்ற
போது கனவுகண்டு, கண்விழித்து, அக்கனவினையறிவிக்குமாறு ஒற்றரா
ல்தனது தந்தையையும் அமைச்சரையும் புத்திரர்களையும் வரவழைக்க,
அவ்வாறே அவர்கள் நித்திரைவிட்டெழுந்து கண்துடைத்துக்கொண்டே
வந்துஅரசனதுசமீபத்திற்போயிருந்தனர்.அப்போதுஅரசன் தனது கன
வினாலுண்டான துயரத்தினாற்றலையிறங்கி, வந்தவர்களைப் பாராமலும், அ
வர்களோடு வார்த்தையாடாமலும், முகவொளி மழுங்கியிருந்தனன்.
அக்குறிப்பினை அவர்களறிந்து, தாங்களும் அவனைப்போல மவுனமாயி
ருந்தார்கள். அவருள் அவ்வரசனுடைய தந்தையாகிய அபிசித்து மகா
ராசனானவன் ஈதென்னகாரணமென்று சந்தேகித்துத், தனது புத்திர
னைநோக்கி, மைந்தனே - இவ்வாறு உனது முகாரவிந்தமானதுவாடவும்
எம்மையிங்கழைப்பித்த நீ இப்போது ஒன்றும் பேசாதுமவுனமாயிருக்க
வுஞ்செய்த பெருந்துயரினுக்குக்காரணம்யாதென்றுவினவினன்.அதற்கு
க்கணராசன் ஒன்றும்பேசாதிருந்தனன். பின்னர் விபசித்து முதலிய அ
மைச்சர்கள் அவ்வரசனைப்பார்த்து, ஓ சகலபுவனசக்கிரேசா - தேவரீர்
தந்தைவினவியகேள்விக்கு மறுமொழிகூறாமலிருக்கின்ற காரணம் யாதெ
ன்றுகேட்டார்கள். அதற்கும்வாய்திறந்திலன்.இப்பாலவன்தந்தைமிகவுங்
கிலேசங்கொண்டு, இதற்கென்ன செய்யவல்லோமென்றேங்கிப், புத்திர
னருகிற்சென்று, இனியசொற்களினால்இதனைச்சொல்லுவதாயினன்.மை
ந்தனே -தேவர்கள்முதலிய யாவரையும் நினைக்குமுன்னமேவென்று வெ
ற்றிகொள்ளவல்ல பராக்கிரமசாலியாகியஉனக்குஇத்தனை சிந்தாகுலம்வ
ருவதற்குக்காரணமென்ன, அதனைமறைத்துவைத்திருப்பதினாலாகுங்கா
ரியம்யாது, வரத்தக்க தெல்லாம்வந்தேதீரும், எதுவரினுந் தனையாளும்
வேந்தர்கள் தயிரியம் விடப்போமா, திரிலோகங்களையுந் திறைதரவெ
ன்ற நீயே இவ்வாறு அதைரியங் கொண்டிருப்பையேல் ஏனையர்யாவ
ரும் என்னபாடுபடார், நீ இவ்வாறிருப்பது சத்துருக்களுக்குப் பல
முண்டாக்கும், ஆதலால் உனது மனத்தின் கணுள்ள துயரத்தை வெளி
யிட்டுச்சொல்லுகவென்று கேட்டனன். அதற்குமேல் கணராசன் சி
றிது நிமிர்ந்து, என்னருமைத் தந்தையே - இனி எனக்கு இப்பிரபஞ்
சவாழ்க்கை கூடிவாராதபடிகனவுகண்டேன், அதனால் இவ்விததுயரங்கள்
எனக்குநேர்ந்தன, அதனைவிவரமாகச் சொல்லுவேன்கேட்பீராக, என்
துகனவின்கண் கபிலமுனிவர் அளவிறந்த சேனைகளோடும் வெளிக்கொ
ண்டு வந்ததாகவும், அவரோடுபற்பல ஆயுதங்களையேந்தியநான்குகரத்தி
னையுடைய ஒருவன் ஊழித்தீயினையொப்பவந்து நமதுசேனைகளனைத்தை
யும் விழுங்கினதாகவும், பின்னரவன் ஒரு மழுவாயுதத்தினை என் மீதுவி

ட. அதுவந்து எனதுசிரத்தை யறுத்துத்தள்ளியதாகவுங் கனவுகண்டு விழித்தேன், அக்கனவேஎனது தயிரியத்தையும் பராக்கிரமத்தையும் தேஜஸையும் அழித்தது, அதனைநினைக்குந்தோறும் என்சரீரம்நடுங்குகின்றது, யான்பெற்ற மேலான வரங்களனைத்தையும் இழிவுபெறசெய்தது, இனி என்னசெய்வேன், இக்கனவையறிவிக்கு நிமித்தமே மங்கையர் மனம்போன்று இருண்ட இவ்விரவில் உங்களையெல்லாம்வரச்செய்தேனென்றனன். இவையனைத்தையும் பிரமதனென்னுமமைச்சன்கேட்டு, ஓசார்வபௌமா- தேவரீர் இக்கனவினைககருதி கிலேசப்படுவது மிகநன்று மிகநன்று, சகலலோகங்களுநடுங்கி ஒடுங்கும்படியாக யுத்தஞ்செய்து வெற்றிகொண்ட சக்கிரேஸ்வரராகிய வுமக்கும் ஓரச்சமுண்டாயதென்று சொல்லத்தகுமோ வென்றனன். அதனைக் கிரந்தனென்னு மமைச்சன் கேட்டு, ஓபிரமதரே - நீர் என்னவார்த்தையாடினீர், நிலத்திற்கிடக்கும் வித்தானது சலத்தோடுங்கூடினால் உடனே முளைத்துமரமாகும், அதுபோல ஒருவர்செய்த பாவபுண்ணியங்களும் பயனுங்காலத்து அவைகள் கதித்துப்பெரிதாய்த்தடிக்கும், சரீரத்தைவெறுத்துச், சுகத்தையொழித்துப், பலதவங்களில் முயன்று, வல்வினைகளனைத்தையும் வாட்டவல்ல பெரியோர்கள்ஒன்றைச்சொல்லுவார்களாயின், அச்சொல்லினால்மேல்விளையத்தக்கது விளைந்திடுமேயல்லது வீணிற்போகாது, நமது வேந்தரோ முன்னங்கபிலமுனிவருடைய சிந்தாமணியை ஒருகாரணமுமில்லாமல்பறித்துக்கொண்டனர், அந்நட்த்தையைப்போல எங்குங்கண்டதுமில்லை கேட்டதுமில்லை, அதனால் அந்தமுனிபுங்கவர்க்கு மனக்கொதிப்புண்டாகி உடனே சபித்தனர், அச்சாபந்தான் இதுகாறு முளையைப்போலிருந்து நாளுக்குநாள்விருத்தியாகி இப்போது பலித்து வருவதுபோலிருக்கின்றதென்றனன். இவையனைத்தையும் அவனருகிலிருந்து கேட்டிருந்த விசுவசித்தென்னு மமைச்சன் மிகவுமனக்கொதிப்புற்று,அக்கிரந்தனென்னு மமைச்சனை உருத்துப்பார்த்து, ஐயா-நீர் நமதமைச் சுரிமைக்கேற்ற வார்த்தைகளைப் பேசினீரல்லீர், ஓர் சபையின்கண் அறிந்துபேசாதவர்களும், சாமிகாரியங்களை யறியாதவர்களும், பிறரைப்புகழ்கின்றவர்களும், கோளுரைக்கின்றவர்களும், தமக்குவருங்கேட்டையறியாதவர்களும், தம்மைத்தாம் புகழ்கின்றவர்களுமாகிய இவர்களெல்லாம்வீணாய்ச்சனித்தவர்களேயன்றி ஒருகாலத்திலும் யோக்கியர்களாகாரென்றுசொல்லினன்,இவ்வாறு பிரமதன்கிரந்தன்விசுவசித்து என்னுமமைச்சர் மூவரும்பேசிய வார்த்தைகளனைத்தையும் விதந்துவென்னுமமைச்சன் கேட்டிருந்து,உடனே அரசனைப்பார்த்து,ஓமண்டலேஸ்வரா-யாவர்யாதுசொல்லினுஞ்சொல்லுக, யான்தேவரீர்க்கு இதமேபேசவல்லேன், அதையேகனமாகக்கொள்ளல்வேண்டும், தேவரீர் வலிமையிற்சிறந்தவர், இந்திரன்முதலிய தேவர்களையெல்லாஞ்செயித்தவர், தீரத்திற்சிறந்தசேனைகளை அளவற்றதாகவுடையவர், எத்திக்கினுஞ் சத்துருக்களில்லாதவர், சிவபிரானாற்சாகா வரம்பெற்றவர், இப்படி எல்லாவிதத்தினும் பராக்கிரமத்தினையே யுடைய தேவரீரையழிக்கவல்லோர்கள் திரிலோகங்களினுமிரார்கள், தேவரீர்க்கு முடிவுநேருமென்று எக்காலத்து நினைக்கவேண்டாம், தேவரீர் கொண்டிருக்கின்றசிந்தாகுலத்தைவிடுத்து,இனி கபிலமுனிவனைக் கொல்வதற்கா

ன உபாயம்யாதோ அதனை விரைவிற்றேடவேண்டுமென்றுசொல்லினன் ஊழின்வசத்தாற்கேடுறுங் காலத்துக் கெட்டமதியே நல்லமதியாகத்தோன்றுமென்னு மேலோர்வாக்கியத்தின்படி, கணராசனானவன் விதந்து சொன்ன வார்த்தையினையே மேலாகமதித்து, ஊழின்வசத்தா லழிவுகால நேரிட்டவனாகி, ஓர்நொடிப்போதில் கபிலமுனிவர்மீது படையெடுக்குமாறு தனதுசேனாதிபதிகளுக் காக்கியாபித்தனன். அதையவன்றந்தையாகிய அபிசித்து மகாராசன்கேட்டு, விழிகள்சிவப்பேறத் தனதுபுத்திரனைப்பார்த்து, ஓமைந்தனே- நீயென்னகாரியஞ்செய்கின்றனை, தேவர்கள் முனிவர்கள் முதலியயாவருக்கு மிகுந்தபகையாயினை, அதற்கேற்றபடி பொல்லாத கனவுங்கண்டனை, அஃது ஒருகாலத்தும் பொய்க்காது, நல்லகனவினால் நன்மையேவரும், தீயகனவினால் தீமையேவரும், நீ இப்போது தவத்திற்சிறந்த கபிலமுனிவர்மீது படையெடுத்துச் செல்லுவது யுக்தமன்று, அமைச்சர்சேனாபதியர் முதலியவளங்களோடுஅளவற்றபடைகள் கடல்போலவிருக்கினும்,பெரியோர்களைச்செயிப்பதுமிகவும் அரிதாதலால், இனிநீபிழைக்கும் வகையினைசசொல்லக்கேள், இந்நிமிஷத்தில்முன்னர் அவரிடத்தினின்றும் பறித்துவந்தசிந்தாமணியை மீட்டும் முன்னதாக அவரிடத்திற்குக் கொடுத்தனுப்பிப், பின்னர் நீ அவருக்குக் கோபம்வராதபடிசென்றுபணிந்து தோத்திரஞ்செய்து, உன்மீதிருக்கின்றபிழையினைத்தீர்த்து கொள்ளக்கடவையென்று சொல்லினன்.அவையனைத்தையுங் கல்லையொத்த உள்ளத்தினனாகியகணராசன்கேட்டு, எந்தாய்-தேவரீர் அரசாட்சிக்குள் யானிருக்கினும், தேவரீர்சொல்லும் வார்த்தைகள் உடன்படத்தக்கனவன்று, சிறியோர்களாயினோர் மானங்கெடாதகாரியங்களை யெடுத்துக்கூறினும் மானத்தைக்காக்க வேண்டினோர் அவைகளைத் தழுவிக்கொள்ளுதல் வேண்டும், பெரியோர்களாயினோர் மிகவும் பிரியமாக மானங்கெடும்படியான காரியத்தைச் சொல்லினும் அச்சொல்லுக்கே கேடுவருமென்று சொல்லித், தனது தந்தைசொல்லியவார்த்தைகளை மறுத்துப்படையெடுத்தனன். இவ்வாறு கணராசன்படையெடுத்ததை இந்திரன் முதலியதேவர்களறிந்து, இவன்நமதுலகத்தைநோக்கியோ படையெடுத்து வருவதென்று நடுங்கினார்கள். மற்றதிசைக்காவலர்கள் நாகேந்திரர்முதலிய யாவரும் அவ்வாறேநடுங்கினார்கள். இப்படியாவரு நடுங்கும்படியாகக் கணராசன் பதினொருஅக்குரோணிசேனைகளுடனே வெளிப்பட்டுக், கபிலமகாமுனிவருடைய ஆசிரமத்திற்குவந்தான். அச்சமயத்தில் அம்முனிபுங்கவர் தீர்த்தமாடி, விபூதி உருத்திராக்கமுதலியவைகளை யணிந்து கொண்டு, விநாயகமூர்த்திக்குப் பள்ளியெழுச்சித் திருப்பூசையை நடாத்திக்கொண்டிருந்தனர். அப்போது அவர் சீடர்களுட் சிலர்கணராசன்படையெடுத்து வந்தமையைப்பார்த்து ஓடிவந்து, சுவாமி-முன்னர் தேவரீரிடத்தினின்றுஞ் சிந்தாமணியைப்பறித்துக்கொண்டு சென்றபாதகன் இப்போது தனது படைகளோடும் வந்திருக்கின்றனன். இனி அவனுக்கு நல்லவாழ்க்கையில்லை, சுவாமிகள்-விரைவிலவனைக் கொல்லுமுபாயத்தைத் தேடவேண்டுமென்று சொல்லிக்கொண்டனர். அத்தருணத்தில் கணராசன் முன்செய்திருக்கின்ற தவப்பேற்றினாலே அவ்வாசிரமத்தின்கண் அவதரித்திருக்கின்ற விநாயகமூர்த்

ியைக்கண்டனன். அப்போது அவ்விநாயகமூர்த்தியைக் கபிலமுனிவர்
எதிர்நின்று பூசிப்பதையும், சித்திபுத்திகளிருவருஞ் சுவாமியினுடைய இ
ருபக்கங்களிலிருப்பதையும், தான் கனவின்கண் எவ்வாறுகண்டானோ அ
வ்வாறே சகலரூபங்களுந் தோன்றும்படியாகக்கண்டு, இவனுடையபடை
யினால் நமது மாயவுருவம் மாயாமலிராதென்று மனந்துணிந்தனன். இப்
பால் விநாயகமூர்த்திக்கு சகத்திரநாமங்களால் பரிமளமிகுந்த புட்பங்க
ளைக்கொண்டு அருச்சனைசெய்திருக்கின்ற கபிலமுனிவர் கணராசன்வந்தி
ருக்கின்றமையைப்பார்த்துத், தமதுபூசையினைக்குறைவற நிறைவேற்றிப்
பலமுறைசாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, வேதாகமங்களினாலேதோத்
திரஞ்செய்து, சுவாமி-தேவர்கள்முனிவர்கள்முதலியோர்க்குஇடையறாது
எள்ளளவுமிரக்கமில்லாதபடி தீங்குசெய்துவருகின்ற கணனென்னுமசுர
ன் இங்ஙனம்வந்திருக்கின்றனன். அப்பாதகன் அடியேற்கு யாதொரு தீ
ங்கினையுஞ் செய்யாதபடி காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.
உடனேவிநாயகமூர்த்தியானவர் கொதித்தெழுந்தவிடத்தினுங் கொப்பாகி
ய சத்துருக்களையெல்லா மடங்கவுண்டு ஏப்பமிடும்படியாகத் தமதுசிங்
கவாகனத்தை உளர்ந்தருளக்கருதினர், அம்மாத்திரத்தில் சகலசத்திகளை
யும் படைத்தளித் தழிக்கவல்ல பராக்கிரமத்தோடு அவர்க் கருகிலிருக்கி
ன்ற சித்திதேவியாரறிந்து, மிக்கபத்தியோடும் பணிந்தெழுந்து, சுவாமி-
அடர்த்துவந்த சத்துருக்களுக்கு அடியாளிருக்கத் தேவரீர்சென்றுயுத்த
ஞ்செய்யவேண்டுமா, தேவரீருடையகிருபாநோக்கத்தைமாத்திரஞ் சிறிது
பாலித்தருளினால்நெருங்கிவந்தசேனைகளையெல்லாம் நிமைப்போதில்வெ
ன்று மீட்டுந்தேவரீர் திருவடிநீழற்கண்வந்து சேருவேனென்றுசொல்லி
னர். அதனைவிநாயகமூர்த்தி கேட்டருளி, அவ்வாறேசென்று செயித்து
வருமாறு உத்தரவுசெய்து, அவ்வம்மனுடைய கரதலத்திற் பிரவேசித்த
ருளினர். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே, சுத்தசாட்குண்ணிய
மூர்த்தியாகிய விநாயகப்பெருமானுடைய இளவலென்னுஞ் சுப்பிரமணி
யதேவரது அன்பராயிராநின்ற அகத்தியமுனிவர்கரத்திற்குச் சத்தசாகர
ங்களும் ஆசமனநீராயிருக்குமெனில், அப்பெருமானுடையதேவியார்கர
த்திற்குஊழிக்காலத்திலுண்டாகின்ற வேலையும் உருத்தெழுந்துவந்த சே
னைகளும் அள்ளவும்போதுமோ, இப்பால் விநாயகப்பெருமான் விடை
கொடுத்தவுடன் சித்திதேவிமிக்கமனக்களிப்புற்று யுத்தத்திற்குச்செல்ல,
சேனையென்பதொன்றேனுமின்றித் தனிமையாய் யுத்தத்திற்குவருகின்
ற செயலினைக் கணராசன்பார்த்து, ஓர்பெண்பால் நம்மோடுயுத்தஞ்செ
ய்யவருவது வெகுநேத்திவெகுநேத்தியென்றுகோபித்து, அளவற்றவீர
ர்களோடுங் கரத்தில்வாளினையேந்தி யெழுந்தனன். அதனையவன்புத்திர
ர்களாகிய சுலபனுஞ்சூலபாணியுந்தெரிந்து, உடனே அவனைப்பணிந்
தெழுந்து, எந்தையே - இவ்வுலகின்கண் எங்கட்கொப்பானவீரர்கள் எ
ங்கணுமில்லை, எங்களைஅவளோடுயுத்தஞ்செயயுமாறு கட்டளையிட்டா
ல் ஓர்நொடிப்போதில் அவளையும் அவளைச்சேர்ந்தவர்களையும் அழித்து
த்திரும்புவோமென்று சொன்னார்கள். அப்படிசொல்லிய புத்திரர்களை
யும்மற்றவீரர்களையுங் கணராசன்பார்த்து, யானிதுகாறுந் தேவர்முதலி
யோருங்கண்டஞ்சத்தக்கபராக்கிரமத்தோடிருந்தனன், ஆகலால் அதற்

கொருகுறைவில்லாதபடி இப்போது வந்திருக்கின்ற சத்துருக்களைச்செயித்துவருவதானால் அவ்வாறே போய்வாருங்கள்,செயமற்றுத்தோல்வியுறுவீர்களாயின்மீட்டுமென்னெதிரில்வராதொழியக்கடவீர்களென்றுசொல்லிவிடைகொடுக்கப்,பின்னர் புத்திரர்களும்மற்றவீரர்களுஞ்சகலசேனைகளோடுந்திரண்டெழுந்து ஆர்ப்பரித்துவந்தனர். அதனைசித்திதேவிகண்டு, இமைப்போதிலளவற்ற சேனைகளைச்சிருட்டிக்க, அவர்களுட் சிலர்பத்துகரங்களோடும் சிலர் ஐந்துகரங்களோடும் சிலர் மூன்றுகால்களோடும் சிலர்நான்குகால்களோடும் சிலர்ஆறுகால்களோடும் சிலர்நான்குமுகத்தோடும் சிலர் ஐந்துமுகத்தோடும் சிலர் பன்னிரண்டுமுகத்தோடும் சிலர்மூன்றுகணகளோடும் சிலர் ஏழுகணகளோடும் சிலர்மேருவையொத்தபுஜபலபராக்கிரமத்தோடும் உதித்து,வாள்-வில்-கப்பணம்-வச்சிராயுதம் மழுவாயுதமுதலிய ஆயுதங்களையேந்தித், தங்களைப்படைத்தருளிய சித்திதேவியினதுதிருவடிகளிற்பணிந்து விடைபெற்று, ரதகஜதுரகமுதலியவாகனங்களிலேறிக்கொண்டு, ரணபேரி ஜயபேரி முதலியவைகளைச் சத்தசாகரங்களும் அஞ்சத்தக்கதாகமுழக்கிக், குடை - கொடி - ஆலவட்டமுதலிய சின்னங்கள் பலமருங்கினும் அடர்ந்துவரும்படியாகவார்ப்பரித்துநெருங்கினார்கள். அவர்களைக்கணராசனுடைய சேனைகள்கண்டு முன்னர்நம்மெதிரில் ஒருதுணையுமின்றித்தனியாகவந்தவிவள், ஓர்நொடிப்போதில் ஒவ்வோருலகத்தினை ஒவ்வொருவயிற்று ளடக்கவல்ல அளவற்ற பூதகணங்களைச்சிருட்டித்து, அவைகட்கெல்லா மெண்ணிறந்த படைத்துணைகளையுமுண்டாக்கினள், இவளோடியாம்யுத்தஞ்செய்துசெயமடைந்தாலும் அல்லது யுத்தகளத்திற்றானே விழுந்து வருந்தினாலும் அஃது நமககுககீர்த்தியேயென்று துணிவுற்றுத், தமதுசேனைகளையெல்லாங்கிரமப்படிவகுத்து, விச்சுவசித்தென்பவன் காற்பதனோடும், விதந்துவென்பவன் மேருபுயனோடும், கிரந்தனென்பவன்முக்கணனோடும், பிரமதனென்பவன் அறுபதனோடும், சூலபாணியென்பவன் பன்னிருமுகனோடும், சுலபனென்பவன் சித்திதேவியோடு மெதிர்த்து யுத்தஞ்செய்தார்கள். இவர்களன்றி இருதிறப்படைகளினுமுள்ள ஏனையவீரர்கள்யாரும் ஒருவரையொருவர் இனமறிந்தெதிர்த்துப்போர்செய்தார்கள். இவ்வாறு சகலசேனைகளுங்கைகலந்து போர்விளைககையில் அளவற்ற யானைகளும் புரவிகளும் இறந்துவிழ்ந்தன. எண்ணிறந்தரதங்கள் முறிந்துஒடிந்தன. சிலருயிர்கள் விண்குடியேறின. சிலருடல்கள் வாளிகளாற்றைக்கப்பட்டுச், சோனைமழைபோல அவைகளினின்றும் பெருகியுவுதிரமனது நதியாகச்சென்று கடலிற்பாய்ந்தது. குடல்கள் - ஈரல்கள்- உறுப்புகள்- குருதிகள்- தோல்கள்- மூளைகள்- கொழுப்புகள்-பிணங்கள்- உரோமங்கள் முதலியவைகளெல்லாம் வேறுவேறாக நெருங்கநின்ற அச்செருகளம் எவ்வாறிருந்ததெனில், இவைகளனைத்துங்கூடி ஒன்றுபட்டு நின்ற அற்பவுடலை ஓர்பொருளாக அகமதிக்கின்றோர் யாவர்,அவர்களை இவ்வுடலின்மாட்சி இவ்வகைத்தே யெனககாட்டி அவமதித்தல் போலிருந்தது. இப்பால் சித்திதேவியினுடைய சேனைகளும் கணராசனுடைய சேனைகளும் வலியோடும் வஞ்சினத்தோடும் முறைமைப்படி படைகளனைத்துண்டிப்போர்செயதுவந்ததில், சித்திதேவியினுடையசேனைகட்குச் சிறிது

வலிகுன்றியது. அதனையத்தேவிகண்டு, உடனே யாவரும் அதிசயமுறு
ம்படியாக அதிக உக்கிரத்தோடும் ஓர்வீரனைச்சிருட்டிக்க, அவ்வீரன்இல
க்கம் வாளிகளோடும் இலக்கம் விலலுகளோடும் இலக்கங்கேடகங்களோ
டும் இலக்கங் கரவாள்களோடு முதித்து, ஏனையபடைகளும் ஒவ்வொன்
றுக்கு இலக்கம் இலக்கமாகவேந்தி, இலக்கம்வீரர்களை ஓர்நொடிப்போதி
ல் சங்கரிக்கத்தக்கதிறத்தோடும் இலக்கனென்னும்பெயரினைவகித்துச், க
ணராசனுடைய சேனாசமுத்திரங்களிற் புகுந்து, தானொருவனேசத்துரு
க்களாற்றூண்டுவந்து எந்தெந்தபடைகளோ அந்தந்தபடைகட் கெல்லாம்
அந்தந்தவாறே படைகளைத்தூண்டி, மாற்றலர்கள் வேறுவேறு இலக்கமி
லக்கமாகக்கூடிச்சுற்றினும்வளைந்து போர்செய்ய அவ்வவர்கண்மீது அளவ
ற்றபாணங்களை மேகம்போலச்சொரிந்து, கணராசன்கொண்டிருக்கின்ற
இறுமாப்பழியும்படியாகச் சகலசேனைகளையும் ஓர்கணப்போதில்மடித்து,
அவ்வரசனுடைய அமைச்சர்களெல்லாம் வெருவிட்டோடும்படியாக முடு
க்கி, அவனுடையபுத்திரர் இருவோரையும் அவ்வவர்கள் இரதத்தோடு
கைப்பிடியாகப்பிடித்து, விநாயகமூர்த்தி சந்நிதானத்திற் கொண்டுவந்து
விட்டு, விண்ணுலகமும் மண்ணுலகமும் பணியத்தக்க அவரது பாதப
துமங்களைப் பலமுறைபணிந்தெழுந்து, சுவாமி- இவர்கள் கணராசனு
டைய குமாரர்கள், தேவரீர் சரணாரவிந்தங்களிற் றஞ்சமடைந்தனர், தே
வரீர் திருவருளால் எதிர்த்துவந்தவர்களெல்லாமிறந்தனர், சிலர் பயந்து
ஓடிப்போயினர், கணராசன்மாத்திரம் எம்மோடுவந்து எதிர்த்தவனல்ல
ன், சுவாமிகளுடைய திருக்கரத்தினால் இறக்கின்றோர்களெல்லா முத்தி
பெற்றிருக்கின்றமையால், அவ்வரசனையும் சுவாமிகளேசங்கரித்து முத்தி
கொடுத்தருளல்வேண்டும், சூலபாணியென்றுஞ் சுலபனென்றுஞ் சொல்
லநின்ற இவர்கள் மகாசுத்தவீரர்கள், இவர்கள் என்னோடு நெடுநேரம்
அளவற்றயுத்தங்களைச்செய்து முடிவில் எனது கரத்திலகப்பட்டுக் கொ
ண்டனர், ஓகுணக்குன்றமே-இவர்களியற்கையிற் சீலமுடையோ ராதலா
ல் இவர்கட்கு அக்கணராசனுடைய அரசாக்ஷியைக் கொடுத்துக்காத்தரு
ளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அவ்வாறே விநாயகமூர்த்தி அவர்
களிடத்திற் கிருபையுற்றிருந்தனர். இப்பால் யோர்க்களத்தில்நின்றும் ஓ
டிப்போன மந்திரத்தலைவர்களெல்லாங் கணராசனையடுத்தனர். அவருள்
சூட்சுமபுத்தியினையுடைய கிரந்தனென்பவன் அரசனெதிரிற்சென்று, தே
வரீர்குமாரர்கள்இருவோரும்யுத்தஞ்செய்யச்சென்றார்களே அவர்கள்செ
ய்தகாரியம் யாதேனுந்தெரியுமோவென்று கேட்டுக்கொண்டிருக்கின்ற ச
மையத்தில், ஒருதூதுவனோடிவந்து, உடல்வெயர்க்கவு முகம்வாடவு
மாக அரசனெதிரில்நின்று, இருவிழிகளிலு நீரைசசொரிந்து, அண்ணலே
தேவரீர்குமாரர்கள் சதுரங்கசேனைகளோடுஞ் சென்று கபிலமுனிவரு
டைய சேனைகளையெல்லாஞ் சின்னபின்னமாகவாட்டிவருகின்ற தருண
த்தில், ஒருவீரன் அளவற்றகரங்களோடு முதித்து, அந்தந்த கரங்களோ
டும் அளவற்றஆயுதங்களையேந்தி, யுத்தகளத்திலுள்ள நமதுசேனைகளெ
ல்லா நடுங்கியொடுங்கும்படியாக வந்துநின்றனன், இவ்வாறு அவன் வந்
ததைக்கண்டனனன்றி அவன்யுத்தஞ்செய்யக் கண்டிலன், பின்னர் ஓர்
நொடிப்போதில் எல்லாச்சேனைகளும் பூமியின்கண் பிணம்பிணமாய்விழ

க்கண்டனன், அவன்பராக்கிரமத்தை என்னென்றுபேசவல்லேன், இம் மந்திரத்தலைவர்கள் எதிர்த்துப் படையெடுப்பதற்குமுன்னே அவ்வீரன் இவர்கள்பேரில் ஒவ்வொருபாணங்களை ஏவி இவர்களுடைய சாமர்த்திய ங்களையெல்லா மழித்தனன், உடனே இவர்கள் அவனோடு நீடித்து யுத்த ஞ்செய்வதற்கஞ்சி ஓடிவந்துவிட்டனர், சிறிதுநேரமேனுமிருந்து போர் செய்துநின்ற பெருந்திறத்தினராகிய தேவரீர்குமாரர்களை, அவ்வீரன்தே ரோடும்வளைத்துக் கைப்பிடியாகப்பிடித்துக்கொண்டுபோய்த்தனதுபடை நடுவில் வைத்திருந்தனன், பின்னரவர்கள எவ்வாறாயினரோ அதனையறி ந்திலனென்று சொல்லினன். அசசொல்லானது தனது செவியில் நுழை வதன்முன் மலையோலத்தேரினின்றும் பூமியின்கண்வீழ்ந்து, புரண்டுபுர ண்டு, அழுது அழுது,மதம்பொழிகின்ற யானைகளையெல்லாங் கொல்லத் தக்க சிங்கமானது தனதுகுட்டிகளைச் சரபப்பட்சிகொண்டுபோகவருத்த ப்படுவதுபோல அறிவழிந்து, மூர்ச்சையுற்றுப், பின்னரருகிருந்தவர்கள் தெளிவிக்கத்தெளிந்து, ஓ என்னருமைச்செல்வனாகிய சூலபாணியே, ஓ பராக்கிரமசாலியாகிய சுலபனே, ஓ எனதுபுத்திர சோபத்தினைத்தீர்த்த பெருமான்களே, ஓ என்மனதுக்குத் தெவிட்டாத இன்பத்தைத்தரும் அமுதத்தைப்போன்ற புத்திரசிகாமணிகளே, உங்களைமலைபோலவெண் ணியிருந்த வென்னை இவ்விததுக்கசாகரத்துளழுத்தி நீங்கிவிடலாமோ, விரைவில் ஓடிவந்து எனக்சோர்தைரியத்தினைச் சொல்லீர்களோ, மன்ம தனையொத்த சுந்தரமும்-வீரசிங்கத்தினு மேம்பட்டவல்லபமும்- கல்வித் திறங்களும்-சாத்திரசம்பத்துகளும்பெற்று, வில்வித்தைமுதலிய பராக்கி ரமங்களில் மிகுந்து, சகலலோகங்களையுந் திக்குவிஜயஞ்செய்து, தேவர் தானவர் முதலியோர்களையெல்லாம்வென்று, அளவற்றகீர்த்திகளை எனக் குண்டாகச்செய்த நீங்கள் இன்றுஒருவன் கையினுமகப்பட்டீர்களே, பு ஜபல பராக்கிரமசாலிகளாகிய உங்களையொருவன் பிடித்துச்சென்ற சே தியைக்கேட்டவுடன் இந்தப்பாழ்த்தவுயிர்நீங்காமல் இன்னமும்வருந்தித் தாபித்திருக்கின்றதே, ஆயினும் எனது ஊக்கம்-தேயசு- ஒளி- ஆண்மை வீரம்-குலம்- அரசாட்சி- முதலியயாவும் இன்றுடனிறந்து போனதால் யான்செத்தவனைப்போலவே ஆயினேன், ஓகுமாரர்களே- உங்களுக்குவ ந்தவிபத்தை நினைக்குந்தோறும் எனதுமனஞ்சோர்வுறுகின்றதே,ஒருவா ற்றுனு நிலைபெற்றிருக்கப்படவில்லையே, ஐயையோ- இனி என்செய்ய க்கடவேன், இனி என்னசெய்யக்கடவேன், என்று இவ்வாறு புலம்பிவரு ந்தும் அரசனைமந்திரத்தலைவர்கள் நோக்கி, இராசாதிராசனே- உயிர்போ வதாயினும் விவேகமுளளபேர்மலைபோல அசைவற்றிருப்பார்களே யன் றி ஆயாசமுறார்கள், உனதருமைச்செல்வராகிய மைந்தர்கள் இருவரும் யாவரும் இவ்விருவரோயென்று சொல்லும்படி சமராடி,அளவற்றகவந்த ங்களாடும்படி பகைவருடைய சேனையின்கணுள்ள வீரர்களை யெல்லாங் கொன்று,அவர்களுயிரைப்பானஞ்செய்துவந்தனர்,பின்னர்ஏதோஒருகன் மவசத்தினால் அவ்விலக்கன்கரத்தில் அகப்பட்டுக்கொண்டனர், சுத்தவீ ராயிருக்கின்ற தேவரீரே அக்காரணத்தைநினைந்து கண்பிசைந்து சரீர மெலிவெய்தப்புலம்பினால்,இனி என்னகாரியங்கள் நடக்கும், நாமெல் லோருமொருமுகமாகச்சென்று, அவ்விலக்கனையும் அவன்சார்விற்றிருக்

ருங் கபிலமுனிவனையுங்கொன்றுவிடுவோம், ஒருவேளைதேவரீர் குமாரர்கள்உயிரோடிருப்பாராயின்உடனேஅழைத்துக்கொண்டுவருவோமென்று சொல்லினர். அவையனைத்தையுங் கணராசன்கேட்டுச், சிறிதுமனந்தேறித், தான் இரதத்தின்மீதும் மந்திரத்தலைவர்கள் மதயானைகளின்மீதும் ஆரோகணித்து, முன்னம் போர்க்களத்தினின்றுந் தப்பிப்பிழைத்திருக்கின்றசேனைகளெல்லாந்தம்மைப்புடைசூழ்ந்துவர இலக்கவீரன் எங்ஙனமிருக்கின்றனனென்று தேடிக்கொண்டு,விநாயகமூர்த்தியெழுந்தருளியிருக்கின்றவிடத்திற்சென்று,மலக்குறும்புகளையகன்றயோகீஸ்வரர்களுக்குங்கிடைத்தற்கரிய அவரதுதிருமேனியை முன்செய்ததபோபலத்தினாற்கண்டனராகி, சித்திதேவிஇடப்புறத்தினும்புத்திதேவிவலப்புறத்தினும்வீற்றிருக்கச் சிங்கவாகனத்தினையூர்ந்து, மோதகத்தையேந்தியதிருக்கரத்தோடு மிருக்கின்றகாட்சியைப் பலமுறைதரிசித்து, இதுகாறும் இவ்வித்தகனைப்போல எவரையுங் கண்டதில்லையென்று அதிசயித்தார்கள். அப்போது விநாயகப்பெருமான்முன்னர் துதிசெய்துகொண்டிருந்த கபிலமுனிவரைக் கணராசன்பார்த்துக்,கதிரவன்முன்பிருக்குங் காந்தமானது கனலைக்கக்குமாறுபோலச் சினக்கனலை இடைவிடாது கொட்டுமுகத்தினனாய், ஓ கபிலா- கருடனை நாகங்கள்கூடிக்கொல்லுவதுண்டோ,என்னை வெல்லுவதற்கு நீ இப்புருடனைத்தாபித்தனை, இவனை எனது கிருபைக்குப்பாத்திரனாகும்படிவிடக்கடவை, விடாமற்போவையேல் அழலைக்கக்காநின்ற ஒரேகணையினால் உன்னையும்,உனக்குச்சார்வாக விருக்கின்ற இவனையும் ஓர்கணப்போதிற்கொன்றுவிடுவேன், இவ்வுலகின் கணுள்ள இருடிகளாயினோர் கருணையேவடிவமாகிக், காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் என்னும் அறுவகைக்குற்றங்களையுங் கடிந்து ஆண்டவனுடைய திருவடிகளையடைவார்கள், இக்குணங்கட் கெல்லாமாறாகப்பெரும்பாலும் பொருளினையே இச்சித்திருக்கின்ற நீஎவ்வகையாய் இருடியாயினையோ அறிந்திலன், என்னைஎதிர்த்துவந்த பகைவர்கள் எத்தன்மைத்தான பராக்கிரமசாலிகளேயாயினும் அவர்களுக்கெல்லாம் அரிட்டமே செய்யும்படியாகத்தோன்றியிருக்கின்றனன், இத்தன்மைத்தாகிய எனக்குஓரரிட்டமேனுஞ்செய்யவுங்களாகுமா, உங்களாலே நீங்கள் கெட்டீர்கள், இனியாகிலும் மேற்சொன்னபடி நடந்துகொள்ளக்கடவையென்றுசொல்லினன். இவையனைத்தையுங் கபிலமுனிவர்கேட்டுக், கண்களிலனற்பொறி எழும்படியாகக்கோபித்து, அடா உண்டவீட்டிற் கிரண்டகஞ்செய்யவல்ல துரோகி- கடல்போன்றபாவங்கட்கெல்லா நீயுறைவிடமாயினை, தேவர்கள்முதலாயினோரை யெல்லாந்தாழ்த்திப்பன்றியைப்போல மையலென்னுஞ்சேற்றில் மயங்கிவீழ்ந்துகிடக்கின்றனை, உன்னைக்கொல்லுவதற்கு மனோவாக்குக்காயங்களினாலும் அறிதற்கரியபரம்பொருளே விநாயகமூர்த்தியாகவந்து அவதரித்திருக்கின்றனர், குரைக்கின்றநாய் கடிக்கவறியாதெனச்சொல்லுவார்கள், அதுபோல நீயுஞ்சடைவாய் நுரைக்கும்படி கற்றதெல்லாநொடிக்கின்றனை, இனி உதிரவெள்ளந்திரைகொண்டு மோதும்படியாக உனதுசேனைகளனைத்தும் நாசமாகிக், கடல்போன்ற பேரொலியோடு உனது மனைவியரெல்லாங்கூக்குரலிட்டழும்படி இறக்கப்போகின்றனை, ஆதலால் நீஇப்

டோரது கவிழுஞ்சமயத்துற்ற கப்பலோட்டம்போலவும் அவியுஞ்சமயத்துற்றவிளக்கொளிபோலவுந் துள்ளுகின்றனை, இனியேனும் அடுத்தவரை ஆட்கொள்ளவல்ல விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளிற் சரணாகதியடைந்து உய்யக்கடவையென்றனர். இவையனைத்தையுங்கணராசன்கேட்டு, வடவானலத்தைப்போலக் கொதித்தெழுந்து, பர்வதங்களையும் உருவிப்பாயவல்ல தனது வில்லினையெடுத்து வளைத்து, விழிகளினின்று அனற்பொறியெழும்படியாகச்சீறி, விநாயகப்பெருமானுடைய ஒப்பற்றதிருநுதலில் ஓர்கணையும், இரண்டுபுயங்களில் இரண்டுகணையும் தாமரைமலரையொத்த இரண்டு திருவடிகளில் இரண்டுகணையும் விடுத்தனன். அவைகள் அவன்குறித்துவிட்ட விடத்திற்படாமற்சென்று நீறாயின. பின்னர் விநாயகப்பெருமான் இருந்த ஆதனத்தினின்று பெயராமல், தமது கரத்திலேந்திய மழுவாயுதத்தினைப்பார்த்து, நீ தேவர்கள் முனிவர்கள் முதலாயினோரை வருத்துகின்ற அப்பாதகன் சிரத்தினைக்கடிந்துமீளக்கடவையெனப்பணித்துவிட்டனர். அம்மாத்திரத்தில் மழுவாயுதமானது கோடிசூரியோதயம்போலப் பிரகாசித்துப், பிரசண்டமாருதம்போல வெழுந்து, ஆலகாலவிடத்தினைப்போலச் சீறிவர, அதனாற்பன்னிரண்டுசூரியர்களுங்கரிந்தார்கள். எட்டுத்திசைகளுஞ் சோதிமயமாயின. அட்டகுலாசலங்களும் எரிந்துபோயின. பூமிகளெல்லாம்வெடித்தன. கடல்முழுவதும் வறண்டுபோய்விட்டது. அண்டகடாகங்களெல்லாநொறுங்கின, உலகமுழுவது நீறாய்விட்டன. இவ்வாறுவிநாயகப்பெருமான்விடுத்தருளிய அம்மழுவாயுதமானது சகலலோகங்களினுஞ் சென்றுலாவி, யாவரும்பயப்பிராந்திகொள்ளும்படியாக அளவற்ற உற்பாதங்களைவிளைத்து, மகாபராக்கிரமசாலியாகியகணராசனுடையமுடியையறுத்து நிலத்தில்வீழ்த்தி, மீட்டும் உலகத்தையெல்லாம் பழையபடிபடைத்து, தெய்வகங்கையிற்சென்று ஸ்நானஞ்செய்துவந்து, தீனசரண்யராகிய விநாயகப்பெருமானுடைய திருக்கரத்தில் யதாப்பிரகாரஞ் சேர்ந்திருந்தது. உடனே தேவர்களெல்லாம் புஷ்பவருஷஞ்சொரிந்தார்கள், ஓ சௌனகாதிமுனிவர்களே- முன்னொருகாலத்தில் மகாவிஷ்ணுவின் புத்திரனாகிய மன்மதனானவன் இவ்விநாயகப்பெருமானுடைய தந்தையாகிய சிவபிரான்மீது மலர்வடிவாகிய பஞ்சபாணங்களையேவியிறந்தனன். இப்போது பிரமன்புத்திரனாகியகணராசனானவன் எமது தந்தையாகிய விநாயகப்பெருமான்மீது அழல்வடிவாகியபஞ்சபாணங்களையேவியிறந்தனன். இவர்களெய்தஅப்பஞ்சபாணங்களையும் யோசிக்குமிடத்து, அவைகள்- தங்களைச்சொல்லவந்தஅறப்பகையாகிய பஞ்சமாபாதகங்களைப்போலும். இப்பால்தேவர்களெல்லாம்உலர்ந்துஉறங்கும்படியாகஓங்கியிருந்தகணராசனுடைய ஆக்கினையனைத்தும் ஓர்நொடியளவிற்புலர்ந்து நீங்குமாறுஎழுந்தருளிவந்தபுண்ணியமூர்த்தியாகிய விநாயகப்பெருமானது திருவடிகளைப்பணியவருவான்போலச், சூரியனானவன்தனதுபகையாகியஇருட்கூட்டங்களையெல்லாங்களைந்து கீழ்த்திசைக்கடலினுதயமாயினன். கணராசனும் அவன்சேனைகளும் ஒருமுகூர்த்தவேளையில்மடிந்துநாசமாயினதைக்கேட்டயாவரும்ஆச்சரியமடைந்தார்கள். விநாயகப்பெருமான் ஏவியமழுவாயுதமானது கணராசனது உயிரைவாங்குங்காலத்துப்பயந்தோடிய அமை

ச்சர்முதலியயாவரும் அவன்றந்தையாகிய அபிசித்துமகாராசனிடத்தில்
அடைந்தனர். பின்னரவ்வபிசித்துமகாராசன் தனது குமாரன் படை
யெடுத்துச்சென்றது முதல் அவன் இறந்தவரையில் நடந்த சரித்திரங்க
ளையெல்லாம் அமைச்சர்சொல்லக்கேட்டுத், தனது சுற்றத்தினரோடுஞ்
சூழ்ந்துபிரலாபித்து, ஓவென்றலறி, மதிமருண்டு, புத்திர சோபமென்கி
ன்ற வாயுமோதலிற்பட்டுப்,பெருமூச்செறிந்து, சரீரமுழுவதுங்காந்தி,
விழிகளில்நீர்ப்பசுமையற்று, உதிரம்பெருகவெயர்த்து, நடுநடுங்கி, பிரா
ணன்நிலைபெறாமல்அலைந்து, ஓமதக்களிற்றினையொத்தகுமாரனே, எதிர்
த்துவந்தசத்துருக்களுக்கு யமனைப்போன்றவனே, மதித்துவந்தோர்க
ளை மகாவிஷ்ணுவைப்போலக்காக்குந்திரனே, மகமேருகிரியையொத்து
பிரகாசிக்குங்கீர்த்திப்பிரதாபனே, உனதுசரீரமானது நரிகளாலுங்கழுகு
களாலும் புரட்டியிடப்பட்டதே, ஓஎனதரியதவத்திற்றோன்றிய புதல்வ
னே- நீஎனது குலத்தை ஆலமரத்தின்கீழ்விழுதுபோல் ஆதரிப்பையெ
ன்றிருந்தேனே, ஆ அ என்னகாரியஞ்செய்தனை என்னகாரியஞ்செய்த
னை, ஐயையோ- தவத்திற்சிறந்த தாபதர்களையும் பகைக்கலாகுமோ, நீ
இவ்வுலகில் என்கண்ணெதிரில்வீழ்ந்து எனது நெஞ்சை உருகவைத்த
னையே, முன்னே இதமடுப்பச்சொன்னோர்களுடைய சொற்களைச்சிறிது
க்கேளாது பின்னே அகிதமடுப்பச்சொன்னோர்களுடையவார்த்தைகளை
யேதுணையாகக்கொண்டுசென்று சத்துருக்களெல்லா நகைக்கும்படியாக
ஓர்கணப்போதி லிறந்தனையே, என்று புலம்பியிருக்கின்ற அபிசித்துமகா
ராசனைக்கிரந்தனென்னு மந்திரிநெருங்கி, எமதிறைவனே- யான்கூறும் வச
னங்களைத்தயைசெய்துகேட்டருள்க, தேவரீர் இவ்வாறு விம்மி விம்மி ய
ழுவதுபழுதாகும், இவ்வுலகத்தில் உற்றவர்கள் அழுகின்றகண்ணீரான
து செத்தவர்கள்முகத்தில்வீழ்வதுஉண்மையேயாயினும், அநித்தியமெய்
திய உடலைக்கருதி அவலித்திருப்பதிலென்னபயன், இனி இறந்தோர்க்கு
நடத்தவேண்டிய கருமாதிகளை இனிதுமுடிப்பதே மாண்பென்று அவன
துகண்ணீரைத்துடைத்து, அவனையும் அவன்சுற்றத்தினரையும் அழைத்
துக்கொண்டுசென்று, போர்க்களத்தையடைந்து, அங்கு அவன்புதல்வ
ன்வீழ்ந்து கிடக்கின்றமையைக் காண்பித்தனன். அதைஅபிசித்துமஹா
ராசன்கண்டவுடன் கதறிக் கலங்கிச் சோபித்து,மேல்வீழ்ந்து,சிரம்வேறு
உடல்வேறாகவிருக்கின்ற கோலத்தைக்காணுந்தோறும் பதைபதைத்து,நி
லத்தில்வீழ்ந்துபுரண்டு, சர்ப்பத்தைபயோலப்பெருமூச்செறிந்து, அப்ப
னே-சத்துருக்களிடத்திலிருக்கின்றகோபமானது இன்னமும் உனதுதிரு
முகமண்டலத்தில் மாறவில்லையே, உனதுசிறந்தமானமும் வீரமும் வலி
யும் எங்ஙனஞ்சென்றொளித்தனவோ, உன்னையொத்த சவுரியவான்களை
இனி எங்ஙனங்காணப்போகின்றேன், ஐயையோ- அடங்கியஅரசர்களெ
ல்லாம் அடிகளை வருடவுந் தேவர்களெல்லாம் வீணைவாசிக்கவுமாகப் ப
ஞ்சணையமளியிற் பள்ளிகொண்டவனாகிய வுனக்கு இச்செங்களத்திற் ப
ள்ளிகொள்ளநேரிட்டதே, அரம்பாஸ்திரீகள் எதிருக்கெதிர்நின்று ஆடும்
படியான நினதுசமூகத்தில் இப்போதுபேய்கள்கூடி அவ்வாறு கூத்தாடு
கின்றனவே, குளிர்ந்தசாந்தாற்றிகளால் வீசப்பட்டிருந்த உனதுசரீரமா
னது இப்போது கழுகின்சிறகினால் வீசப்பட்டிருக்கின்றதே, புட்பவிதா

ன நீழலினும் இரத்தினகவிகை நீழலினுந் தங்கியிருந்த நினதுவடிவமானது இப்போது பருந்தின் சிறகாலுண்டான நீழலில்வதிகின்றதே, சிறந்த கவரிமானுடைய வாலினை விரட்ட நின்ற நினது மருங்குல்கள் இப்போது நரி நாய் முதலியவைகளின் வால்களாலிரட்ட நின்றனவே பரிமள மிகுந்த சந்தனாதிகளைத் திமிர்ந்திரா நின்ற நினது மார்பானது இப்போது புலவினை வீசும் உதிரங்கள் பூசவிருக்கின்றதே, காம்புகளைந்த மல்லிகை முல்லை யாதிகளாறசெய்த மெல்லிய அமளியின் மீது பள்ளிகொள்ளும் நினது வடிவமானது இப்போது பாற்குழாங்கள் நெருங்கிய போர்க்களத்தைப் பொறுக்கின்றதே, பேரிகை குடமுழா தண்ணுமை முரசு முதலிய வாச்சியவோசைகளெல்லாம் நாய் நரி பேய் புன் முதலியவைகளின் ஓசைகளாயினவே, என்றிவ்வாறு தனது புத்திரனுடைய பிரதாபத்தையெல்லாஞ் சொல்லிச்சொல்லித்துக்கித்து, பிணக்குவைகளின்மத்தியில்வீழ்ந்திருக்கின்ற புத்திரனையெடுத்துச், சந்தனக்கட்டைகளையும் அகிற்கட்டைகளையும்பரப்பி, அதன்மீது அவனைவளர்த்தி, மங்கையர்களாற்சூடும் மலர்மாலையினையுடையோனுக்குத்தனதுஊழின்வசத்தால் அழன்மாலையைச்சூட்டி, அவ்வழலைநாற்புறங்களினும்மூட்டி, இதுகாறுங் கணராசனுடைய பராக்கிரமத்தினுக் கஞ்சியிருந்ததேவர்கள்முதலாயினோர் நொண்டவயிற்றெரிவையெல்லாமாற்றி, நமதருமைப்புதல்வனசை இன்றேடொழிந்ததேயென்னும் வயிற்றெரிவோடுந்தனது அரண்மனையிற்சென்று, மறுதினம் மந்திரிகளை வரவழைத்து,முன்னர்தனதுபுத்திரன் கவர்ந்துவந்தசிந்தாமணியைக் கைக்கொண்டு, கபிலமுனிவருடைய ஆசிரமத்தினையடைந்து, சித்திபுத்திசமேதரா யெழுந்தருளியிராநின்ற விநாயகப்பெருமானுடைய திருமுன்பு அச்சிந்தாமணியினைவைத்து, அங்கிருப்பவரெல்லா மதிசயமுறப் பலமுறைதீர்க்க தண்டன்செய்து, அக்கடவுளை வழிபட்ட கபிலமுனிவரையுஞ் சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, மீட்டும் விநாயகமூர்த்திசன்னிதியின் முன்னர்வந்து தீனராகிய தொண்டர்களுக்கடுத்த வினைகளைப்போக்கிப் பாதுகாத்தருளும் பக்தவச்சலனே, பாசபந்தங்களைக்களைந்து நன்னெறிகளை யநுட்டித்துவரும் மகத்துக்களுக்கிருப்பிடமாகியஞானநாயகனே,விண்ணுலகளிற் சிறந்திருக்கும்வானவருக்குத்தலைமைபெற்றிருக்கின்றதேவதேவோத்தமனே அஞ்ஞானவிருளைப்போக்கிப்பேரானந்தத்தைப்பெறச்செய்யவல்லபரஞ்சுடரே, வேதாகமங்கள் முதலியவற்றாலெண்ணி யளவிடுதற்கரிய கர்த்தனே, சராசரப்பிரபஞ்சங்களனைத்தையும்படைத்து அவைகட்குரியவினைப்போகங்களையூட்டியாட்டும் பரவஸ்துவே, தேவர்களிற் சிரேஷ்டமாக விளங்குந்திரிமூர்த்திகளில் முதன்மைபெற்றிருக்கின்ற சிவபிரான்பெற்றருளியகடவுளே, சிருட்டிதிதிசங்காரமென்னு முத்தொழில்களை நடாத்திவரு மும்மூர்த்திகளுக்கு முதன்மையாகவிருக்கின்ற விநாயகக்கடவுளே, எல்லாவுயிர்களுந்தேவரீர்வயத்ததென்றறியமாட்டாத அற்பகுணத்தினற்கணனென்பவன் அவமானத்திற்கஞ்சி சத்துருவைப்போலவந்து தேவரீருடையமழுவாயுதத்தாலிறந்து மேலானகதியினை யடைந்தனன், சுவாமி- அளவற்றபுண்ணியங்களினாலடுப்பது உயர்ந்தமானிடப்பிறவி அதனைப்பெற்றபேர்கள் தேவரீர்திருவடிகளில் வணங்காராயின் என்ன

பயனையடையப்போகின்றனர், சிறந்ததேவர்களேயாயினுந் தேவரீரைச் சரணடையாராயின் உடனே அவர்கட்குக் கலதியுண்டாகும், அதனால் அவர்கட்குஇழிந்தயோனிகள்தோறும் பிறந்தழியவரும், இஃது வேதாகமங்களிற்கூறியிருக்கின்ற சத்தியமன்றே. தாரணை தியானம் சமாதியென்னும் இவைகளை மருவியிருக்கின்ற மாதவத்தர்களது உள்ளத்தின்கண்பிரகாசிக்கும் பரம்பொருளே - பிரமனாலும் விண்டுவினாலுங் காண்டற்கரியதெய்வமே- திரிமூர்த்திசொரூபமாயிருக்கின்ற கடவுளே-நான்மறைகட்குமெட்டாத எனதுபேரானந்தசொரூபமாயிருக்கின்றபெருமானே- சரியைகிரியையோகஞானமென்னு நான்கியல் பின்கண்ணு மிருந்து பணிசெய்யுமன்பினர்க்கு அதனதன்பயன்களை விரியவுதவும் பெருங்கருணையினையுடைய விமலனே - தேவரீர் இவ்வாசிரமத்தி லவதரித்து அடியேங்கள் காணுமாறு எதிர்கின்றீராதலால், தேவரீர் பாதபதுமங்களில் அடியேன் சரணடைந்தேன், இஃதன்றிப்பிறவிக டோறுஞ்செய்து ஆற்றிய தபோபலதத்தினால் முன்னமேதேவரீரது திவ்வியசரணாரவிந்தங்களையடுத்து அருளபெற்ற சுலபனையுஞ் சூலபாணியையும் ஒருவாவொழுக்கங்களினின்றும் வழாதவண்ணமருளிக், கணராசனுடைய அரசுரிமையை அவர்கள்பால் ஒப்புவித்து, எண்ணித்துணியுங் காரியங்களில் தனகொருவர் நிகரில்லாதவனாகிய கிரந்தனைமாத்திரம் அவர்கட்கு அமைச்சனாக்கி, அடியேனைஇவ்வுடற்றுச்சிலினின்றுநீக்கி,உயர்ந்தஞானவைராக்கியச் செல்வத்தினை யளித்தருளல்வேண்டும், இதுதான் எனது கருத்தாகும், இப்பால் தேவரீரது கிருபைஎவ்வாறோ வென்று விண்ணப்பஞ்செய்தனன். இவ்வாறு சத்தியசந்தனாகிய அபிசித்துமகாராஜன்கூறியவனைத்தையும் விநாயகப்பெருமான்கேட்டுசந்தோஷித்துத், தம்மைச்சரணடைந்திருந்த கணராசன்புதல்வர்கட்கு அவ்வாறேகிருபைசெய்து விடுத்து, அவ்வரசன்கொணர்ந்துவந்த சிந்தாமணியையெடுத்துக் கபிலமுனிவர்கையிற்கொடுத்தருளினர். பின்னர் கபிலமுனிவரானவர் விநாயகப்பெருமானைத்தொழுதெழுந்து, அச்சிந்தாமணியை அவர்திருவடியின்கண் வைத்து, சுவாமி - தேவரீர் எல்லாவுயிர்களும் உய்யும்படி இங்ஙனமவதரித்து, சிந்தாமணியைக் கவர்ந்த கணராசனைச்சங்கரித்து, அதனைமீட்டும் எனக்களித்தமையால், இத்தினமுதல் யாவருந்தங்கள்வினைகள்பொடிபடும்படியாகத் தேவரீரைச் சிந்தாமணிவிநாயகரென்று துதிதல் வேண்டும், இச்சிந்தாமணியைத் தேவரீரது திருமேனியிற் றரித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அபிசித்துமகாராசனும் பணிந்தெழுந்து, கபிலமுனிவருடைய வுள்ளங்களிகூரும்படியாக சுவாமிகளதனை அவ்வாறேதரித்தருளல்வேண்டு மென்றிரந்தனன். பின்னர் விநாயகப்பெருமான் அதனைவாங்கி, யாவருங்கண்டு தரிசிக்கும்படியாகத் தமது கண்டத்திலணிந்தருளினர். அன்பர்கள்கொடுக்கும் உடல்பொருளாவி யனைத்தையுங்கைக்கொண்டு இன்பமளிக்கவல்ல விநாயகப்பெருமானவர் கபிலமுனிவராற்றற்றந்த சிந்தாமணியைத்தமது கண்டத்திற்றரித்தருளியமாத்திரத்தில், தேவர்கள மலர்மாரிசொரிந்தார்கள். அந்தரதுந்துமியைக்நு முழங்கின. சிந்தாமணியைத்தரித்தகாரணத்தாற் சிந்தாமணிவிநாயகரென்றும், கபிலமுனிவராசிரமத்தி லவதரித்தகாரணத்தாற் கபிலவிநாயகரெ

ன்றும், மலர்ந்தமுகத்தோடெழுந்தருளிய காரணத்தால் சுமுகவிநாயகனென்றுந் திருநாமஞ்சாற்றினர். இப்பால் அபிசித்துமகாராசன் விநாயகப்பெருமானுடைய கிருபையினைப்பெற்றுவிடைகொண்டு, கனதுபட்டணத்திற்சென்று, பவுத்திராகியசூலபாணிக்குஞ் சுலபனுக்குங்கணராசனுடைய ராச்சியங்களைப்பகுத்துக்கொடுத்து, விண்ணுலகருமண்ணுலகரும்போற்றும்படியாக மநுநீதிமுறைப்படி செங்கோல்செலுத்திவித்துத், தான்சதாகாலமும் விநாயகப்பெருமானைத்தியானஞ்செய்து, ஞானவைராக்கியமுதலிய செல்வங்களைப்பெற்று வாழ்ந்திருந்தனன். பின்னர் கபில நிறம் கருமை நிறம் பசும்மை நிறம் வெண்மைநிறம் மஞ்சணிறமென்றுசொல்லுகின்ற ஐவகைநிறங்களோடு, காமதேனுவானது தனதுகன்றினுக்கிரங்குமாறுபோல எல்லாவுயிர்கட்கும் இனிமைபுரிந்து ஆட்கொள்ளவெழுந்தருளிய கபிலவிநாயகமூர்த்தியானவர், குற்றமற்ற மகாதவத்தினையுடைய கபிலமுனிவர்க்கு அளவற்றவரங்களைத்தந்து கரந்தருளினர். அம்முனிவரும் உடனே அக்கடவுளைத்தமது தியானத்திற் பிணித்துக்கொண்டனர். இவ்வாறுகபிலமுனிவர் தமதாசிரமத்தில் வளர்த்திய வேள்விக்குண்டத்தினின்றும் எல்லாவுயிர்கட்கும் இன்பமெய்தும்படியாக விநாயகமூர்த்தி அவதரித்தமையால், அப்போதவர்கருண்டானமூன்றுதிருநாமங்களை யாவரேனும் இடைவிடாது உச்சரித்துவருவார்களாயின், அவர்கள் இடர் பிணி பாவ முதலானவைகளினின்றுநீங்கிச், சகலபோகபாக்கியங்களோடும் வாழ்ந்திருந்து, அந்தியகாலத்திற் றேவர்களாயவதரித்து, பின்னர் மேலான மோக்ஷசாம்பிராச்சியத்தினையும் அடைவார்கள். அத்திருநாமங்களுண்டான தற்குக்காரணமாயிருந்த இச்சரித்திரத்தை அன்போடுகேட்டவர்களும் படித்தவர்களும் அந்தமேலான பயன்களையேயடைவார்கள். என்றுசூதபுராணிகர்சவுனகாதிமுனிவர்கட்குக்கூற, அம்முனிவர்கள் அவரைப்பணிந்தெழுந்து, சுவாமி – வேதங்களாலுமறிதற்கரிய கணேசமூர்த்தியினது திருவருளைப்பெற்றிருக்கின்ற அக்கபிலமுனிவருடைய குணாதிசயங்களையும், அவருக்குத்தெய்வலோகத்திலிருக்கும் அச்சிந்தாமணிவந்தவரலாற்றினையுந் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்டார்கள். அதற்குச்சூதபுராணிகரிசைந்து, ஓசவுனகாதி முனிவர்களே– கபிலமகாமுனிவருடைய குணாதிசயங்களைச் சொல்லுமிடத்து, அவர்ஐம்பொறிகளையுந்தன்வயமாக்கியபுநிதர், தவங்கட்கெல்லாம் உறைவிடமாகவிருக்கின்றசெல்வர், நிதமு முத்தீக்களைநெறிவழாமல் வளர்த்து எல்லாவுயிர்கட்கும் ஓரிடையூறில்லாதபடி கிருபையாகிய கொடையைவழங்கும் வரதர், தமதுயோகத்தினால் அரியபரம்பொருளை வேண்டும்போதெல்லாம் தன்வயமாக்குமியல்பினர், திரிலோகங்களையுந் தமதிச்சைவழி ஆக்கவும் அளிக்கவும் அழிக்கவும் வல்லதிறத்தர், மகாதவசிரேஷ்டர்கட்கெல்லாந் திலதம்போற்சிறந்தமாதவர், அவருடையபெருமையை அளவிட்டுரைக்க யாவராலாகும், அவருக்கு அருமையாகிய அச்சிந்தாமணிவந்த வரலாற்றினையுங் கேட்பீராக. முன்னொருநாளையில் தேவேந்திரனானவன் பூவுலகத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்கவந்து, மீட்டுந்தேவலோகத்தைநோக்கிச் செல்லுகின்றபோது, பசியுந்தாகமும்மேலிட்டவனாகி, அக்கபிலமகாமுனிவர் வசித்திருந்தஆசிரமத்தில் வ

ர, அவ்வாசிரமத்தில் ஓர்பால் வானம்பாடி- அன்னம்- அன்றில்- பெரு நாரை- கருந்தாரா- சக்கரவாகம்- கொக்கு- முதலான நாறுவிதப்புட்க ளெல்லாம் நிறைந்திருக்கின்ற தடாகங்களும், ஓர்பால் சந்தனம்-தேக்கு அகில்- அசோகு- நாகம்- வேங்கை- நாளிகேரம்- பூகதம்- இலவங்கம்- தேவதாரம்- சிற்றேலம்- குங்குமம்- தமரத்தை- வெணணெச்சில் - அர சு- முதலியவிருக்கங்கள்மலிந்திருக்கின்ற சோலைகளும்,ஓர்பால் முல்லை- மல்லிகை- இருவாட்சி- குருக்கத்தி- சிறுசண்பகம்- வில்வம்- நந்தியாவர் த்தம்- பாதிரி- வெட்சி- கோங்கு- துளசி- கூவிளம்- அலரி- கொன்றை- குருந்தம்- சண்பகமுதலிய புட்பச்செடிகள் நிறைந்திருக்கின்ற நந்தவன ங்களும், ஓர்பால் வெள்ளாம்பல்- செவ்வாம்பல்- வெள்ளுற்பலம்-நீலோ ற்பலம்- வெண்டாமரை- செந்தாமரை- நெய்தல்- அநிச்சம் - முதலியபு ட்பங்களைத்தழுவியிருக்கின்ற சிறந்தஓடைகளும், ஓர்பால் மிளகு- கோட் டம்- அகில்- தக்கோலம்- குங்குமம்- இருல்- தேன்- அரக்கு- மயிற்பீலி காவி- முதலிய மலைபடுதிரவியங்களையும் வனம்படு திரவியங்களையும் அ லைத்துவருகின்ற நதிகளும், ஓர்பால் ஒன்றுக்கொன்று பகை வயிரமில்லா மல் மாதவர்கள்செய்யு முழக்கினைப்போலச் சிங்கம் யாளி யானை முதலி ய மிருகவர்க்கங்கள் முழக்கஞ்செய்துகொண்டிருக்கின்ற போதும்பர்களு ம், ஓர்பால் வேதாகமபுராணங்கள் விசாரிப்போர்களுடைய ஓசையும்,ஓர் பால் விச்சாதரர் கின்னரர் முதலியோர்வாசிக்கும் வீணைகானத்தினோ சையும், ஓர்பால் கிளி குயில் நாகணவாய்முதலியவைகள்பாடுங்கீதஓசை யும், இன்னும் இத்தன்மைத்தான பெருமிதங்கள் அளவற்றனவாகவிரு ப்பக்கண்டு, உள்ளங்குளிர்ந்து, தனது குதிரையைவிட்டு நிலத்திலிறங்கி களங்க ரகிதமாயிராநின்ற நதியில் மிகுந்த ஆவலோடும் ஸ்நானஞ்செ ய்து, தன்னோடிருந்த எல்லாத்தேவர்களையும் அவ்வாற்றின்கண்ணே யிரு த்தித், தான்தனியே புறப்பட்டுச், சுறறினு மாணுக்கர்கள்புடைசூழுமா று தவத்தின்கண் வீற்றிருக்கின்ற கபிலமகாமுனிவனையடுத்து, அவரது பாதபதுமங்களிற் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, மிக்க பேருவகை யோடு தனதுகைகளைக்கூப்பி மெய்கோட்டி நின்றனன். அதனைக்கபிலமு னிவர் தமது யோகத்தினலறிந்து விழித்துத், தனியாயிருக்கின்ற இந்திர னைப்பார்த்து, ஓ சுரலோகசக்கிரோஸ்வரனே-நீ உனது பொன்னகரை வி டுத்து இங்ஙனம்வந்தகாரியம் என்னென்று வினவினர். அதற்குத்தேவே ந்திரன் முகமலர்ந்து, சுவாமி- சிவபிரானை- மகாவிஷ்ணுவை- தேவாலய த்தை- பெரியோர்களை- அரசவிருக்கத்தை- அக்கினியை- யாவரோனுங்க ணடபோது தொழாதுசெல்வராயின், அவர்கள் எவ்வாற்றானும் உயர்ந் தவர்களாயினும், உடனே செல்வங்களனைத்துங்குன்றி இழிந்தோர்களா வரென்று வேதாகமங்களிற் கூறியிருக்கின்றமையால், தவத்திற்சிறந்தமு னிவர்களையெல்லாங்கண்டு தரிசிக்க இப்பூதலத்தின்கணிறங்கிய யான், தேவரீருடைய பாதபதுமங்களையுந் தரிசிக்குமாறு வந்தனன், அடியேன் வந்தகாரியங்களு முடிவெய்தின, தேவரீரைத்தரிசித்த மகிமையினால்அ டியேன்கொணடிருந்த பசியுந்தாகமும் ஒருங்கே நீங்கின, இனியான் அ மராபதிக்குச்செல்ல விடைகொடுத்தருளவேண்டுமென்றனன். அதனைக் கபில முனிவர் கிருபையோடுங்கேட்டு, ஓவலாரியே - கதிரவனேஉச்சியி

ல் வந்துவிட்டனன், இதுகாறும் இவ்வாசிரமத்தில் வந்தவர்களை இளைப்
போடு வேறொரிடத்திற்செல்ல விட்டதில்லை, யாகாதிகளைச்செய்கின்றவே
ர்கள் வரவேண்டுமென்று பிரார்த்திக்கத்தக்க நீ இப்போது ஏதோவொரு
புண்ணியபலத்தினால் இக்குவலயில்வந்தனை, இங்ஙனஞ் சிறிதுநேரமிரு
ந்து, யான்தருவதுவெறுஞ்சலமாயினும் அதனைக்கைக்கொள்ளல்வேண்
டுமென்று சொல்லிக், தேவேந்திரனை அங்ஙனேநிறுத்தி, அவனோடு வந்
ததேவர்களையெல்லாமழைத்து வருமாறு தமதுசீடர்களை ஏவினர். உட
னே அவர்களோடி, நதிக்கரையிற்றங்கியிருந்த தேவர்களையெல்லாமழை
க்க, அவர்கள்விரைவிலெழுந்துவந்து, கபிலமுனிவருடைய திருவடிகளை
ப் பணிந்தார்கள். இப்பால் கபிலமுனிவர் சர்ப்பாபரணங்களைத் தரித்த
சிவபிரானைத்தியானிக்க, அவரதுதிருவருளால்ஓர் நொடிப்போதில் பலவ
கைப்பட்ட தேவவுணவுகளெல்லாஞ் சிறக்க உண்டாயின. அவைகளையெ
ல்லாம் இந்திரன் மற்றைத்தேவர்களோடு முண்டு, இதுகாறுந்தனதுசொர்
க்கலோகத்தினுமுண்டறியாத மிகுந்த சுவையுள்ள அவ்வுணவுகளின் குணா
திசயங்களைப் பலமுறைகொண்டாடி, அம்முனிவரது மகத்துவத்தை நி
னைந்து நினைந்து ஆச்சரியங்கொண்டவனாய், தவத்தினுங் குணத்தினுஞ்
சிறந்த இவருக்கு நாமொரு பிரீதிசெய்யவேண்டுமென்று நினைத்து, உட
னே வாயுதேவனைக்கூவி, முன்னர்மகாவிஷ்ணு கொடுத்தருளிய சிந்தாம
ணியானது நமது பொக்கசத்திலிருக்கின்றதால், அதனைநீவிரைவிலெடுத்
துக்கொண்டு வருவையெனக்கட்டளையிட, அதற்கு வாயுதேவனிசைந்து
தனதுவேகத்தோடு மனோவேகமும் ஒன்றுபடச்சென்று, அதனை அப்பொ
க்கசத்தினின்றும் எடுத்துவந்து, தேவேந்திரன்கரத்திற்கொடுத்தனன். அ
தனைத்தேவேந்திரன் கையேற்றுக், கபிலமுனிவருடைய திருவடிகளில
வைத்துப், பலமுறைசாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, அவரதுதிருவரு
ளைக் குறைவறப்பெற்றுவிடைகொண்டு, தனதுசொர்க்கலோகத்தையடை
ந்தனன். பின்னர் அச்சிந்தாமணியைக் கபிலமுனிவர் தமதுகந்தரத்தில
ணிந்துகொண்டனர். தம்மைக்கருதினோர்களை அளத்துற்றதுரும்புபோலா
க்கவல்ல சிவபிரானை உள்ளத்திற்பதிப்பவர்கட்குக் கிடையாத பொருள்
யாதிருக்கின்றது.

கணபதிதுணை.

மூன்றாவது,

கஜானனர்திருவவதாரப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, அரிபிரமேந்திராதியராலு மறிதற்
கரியபரம்பொருளாகியும், பலவுலகங்களையு மங்காமற்றரிப்பிக்கவல்லதா
ரசமாகியும், ஆன்மாக்களுடைய மும்மலங்கட்கு மும்மதங்களைப் பொ
ழியுமூர்த்தியாகியும், துட்டர்களையெல்லாஞ் சங்கரிக்கும்படியான காரக

மாகியும், வேதாகமபுராணங்களோங்குமாறு தாணிபாரந்தவிர்க்கவல்ல சயம்புவாகியும், எல்லாவுயிர்கட்குங்கன்மங்களையூட்டிப்பிழைப்பிக்குங் கருணாநிதியாகியும், பத்தராயினோர்க்கு இம்மையிற்போகமும் மறுமையில் வீட்டையுமளித்தருளுகின்றகர்த்தவ்வியமாகியும்,சாதுக்களாயினோரையடுத்துப் புரந்தருளுகின்றசெல்வமாகியும், பெரிதான விக்கினங்களையெல்லாங்கெடுத்து இரட்சித்தருளுகின்ற பெருவாழ்வாகியுமிரானின்ற விநாயகமூர்த்தியானவர், கபிலமுனிவருடைய சிந்தாமணியைக் கவர்ந்த கணராசனைவெல்லுமாறு அவராசிரமத்திலவதரித்ததும், அதைமீட்டுமவர்க்களித்ததும், அதனால் கபிலவிநாயகர் சிந்தாமணிவிநாயகர் சுமுகவிநாயகரென்னும் இம்மூன்றுதிருநாமங்களைப்பெற்றதும், அக்கபிலமுனிவருடைய குணாதிசயங்களும், அவர்க்கு அச்சிந்தாமணிகிடைத்த வரலாறுஞ்சொன்னோம், இப்பால் அவ்விநாயகமூர்த்தியானவர் உயிர்களது வருத்தமெல்லாம் ஒழியுமாறு தமது பெருங்கருணையோடு சுயேச்சையினாற் கஜானனவவதாரஞ்செய்தருளிய திருவிளையாடலைச்சொல்லுவோங்கேட்பீராக. முன்னொருகற்பத்திற்பிரமதேவனானவன் சத்தியலோகத்தில்வீற்றிருக்கின்றபோது கொட்டாவிவிட்டனன். அதினின்றும் ஒர் புருடனுதித்தனன். உடனேசொர்க்கமத்தியபாதலமென்னுமூவுலகங்களிலும்இரத்தமாரிசொரிந்தது. அப்புருடன்செம்பரத்தம்பூவினைநிகர்த்தநிறத்தினையும், பத்துத்திசைகளினுஞ்சென்றுவீசும்படியான இயற்கைமணம் வாய்ந்தவடிவத்தினையும், விண்ணளவிலோங்கிப் பாரித்திருக்கின்ற மெய்யினையும், பஞ்சபுட்பபாணங்களைக் கரத்திலேந்திய மன்மதனையொத்த அழகினையும், யாவருஞ்சிரம்பனென்றுசொல்லும்படி வாய்ந்தபத்துசிரத்தினையும் உடையவனாகி எதிர்நிற்க, அவனை அப்பிரமதேவனோக்கி நீயாரென்றுவினவினன். அதற்கச்சிரம்பன்தனதுள்ளச்செருக்கினைமீக்கொண்டு, யான்நினதுவாண்முகத்தினின்றும் உதித்தமையால்உனக்குமகனாகும், அறிவிலார்களைப்போலவொன்றும் அறியான் போன்றுகேட்டது அதிசயமாயிருக்கின்றது,இனியான்வசித்தற்கு இடமும்பெயருஞ்சொல்லவேண்டுமென்றுகேட்டனன்.அதற்குப்பிரமன் அன்புமச்சமுங்கொண்டு, மைந்தனே-நீசிந்தூரநிறத்தினனாகியிருத்தலினால்நினக்குச்சிந்தூரனென்னும் பேருண்டாகுக, திரிலோகங்களினுஞ்சென்று நினக்கினியதலத்தினைக்கொள்ளுக, உலகமனைத்துநினதுவசமாகுக, விண்டுமுதலியதேவர்களாலும் உனக்குஎக்காலத்தும்யாதொருஅச்சமும் இன்றாக, நீகோபங்கொண்டு யாவரையேனுநினதுகரத்தாற்றழுவுவையாயின் உடனே அவர்களுடலம் நீறாகுக, தேவர்களால் விடுகின்ற அத்திரசத்திரங்களாலும்உனக்குஇறுதிநேராதாக,இவையனைத்தையும்உனக்குயான்புத்திரவாஞ்சையினாற்கொடுத்தவரமாகக்கொள்ளுக, என்று பிரமதேவன்கூற, அவ்வரமனைத்தையுஞ்சிந்தூரன்கைக்கொண்டு,எந்தையே- தவம்- தானம்-விரதம்-வேள்வி-தருமம்-முதலியவைகளொன்றுமில்லாதவெனக்குஎல்லாவரங்களையுமளித்தனையேயென்று மகிழ்ந்து விடைகொண்டு,பூவுலகத்தினைநோக்கிச் செல்லுகின்றவன், நமதுபிதாவானவர் தவந்தானாதிகளிலொன்றுஞ்செய்யாதநமக்கு அளவற்றவரங்களையளித்தனரே, அவைகளனைத்தும் பொய்யோமெய்யோவென்றையுற்று,அவைகளைச்சோதிக்கவேண்டுமென்று நிச்

சயங்கொண்டு,மீட்டும்பிரமதேவனிடத்தில்வந்து, சத்தசாகரங்கள் துளும்பவும்- அண்டகடாகங்கள்பிளக்கவும்- திரிலோகங்களு நடுங்கவும்-உடுக்களனைத்தும்உதிரவும்- கர்ப்பங்களெல்லாங்கலங்கவும்- பறவைகள்யாவுமாயவும் - விருக்கமுழுவதும் வீழவுமான ஆரவாரத்துடனே அட்டகாசஞ்செய்து, அப்பிரமதேவனைத்தன துகரத்தாற்றழுவிப்பிடிக்கநேர்ந்தனன். அதற்குப்பிரமதேவன் அஞ்சி, அடாமூடனே-நீஇத்தன்மைத்தானதுட்டனென்றறியாது புத்திரவாஞ்சையினால் வீணே அனந்தவரங்களை உனக்குக்கொடுத்துவிட்டேன், அப்படிகொடுத்தஎன்னையேதழுவிக்கொல்லவந்தனையல்லாவா, இனி உன்னைக்கொல்ல விநாயகமூர்த்தி அவதரித்தருளுவரென்றுசபித்தனன். அதைக்கேட்ட சிந்தூரன் மிகுந்த கோபங்கொண்டு, மீளவும் ஒருஅட்டகாசஞ்செய்தான். அதனைப்பிரமதேவன் கண்டு,நடுங்கி, அலறிப், பெருமூச்செறிந்து, அவ்விடத்தினின்றுமோடி வைகுந்தத்தில் ஆதிசேடன்மீது பள்ளிகொண்டிருக்கின்ற விண்டுவினையடைந்து, கண்களில்நீர்சொரியும்படியாக அவரதுபாதபதுமங்களில் விழுந்துபணிந்தனன். உடனே- விண்டுவானவர் அப்பிரமதேவனுக்கு ஓராதனந்தந்திருக்கச்செய்து, ஓ சதுமுகனே- உனக்கு இவ்வாறுநெஞ்சுதுடிக்கவும் நெட்டுயிர்ப்பெறியவும் சரீரநடுங்கவும் முகாரவிந்தம் வாடவுமானதிங்குயாது நேர்ந்ததென்றுகேழ்க்க, ஐயனே- யான் கெட்டாவிவிட்டேன், அதினின்றும் ஓர்புருடனுதித்தனன், அவனை எனது புத்திரனென்றெண்ணி அளவற்றவரங்களைக்கொடுத்தேன், அவனவைகளைக்கைக்கொண்டுசென்று, மீட்டும் என்னையே கொல்லவந்துமிகுந்ததுன்பங்களைச்செய்தனன், என்னசெய்வேன், அப்பாதகனெதிரில்நிற்கவஞ்சி இங்ஙனம்ஓடிவந்தேன், தேவரீர் அவனை எவ்விதத்திலேனுஞ் சங்கரித்து என்னைப்பாதுகாத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அவையனைத்தையுந்திருமால்கேட்டுத் துயரமெய்தி, ஆய்ந்தோய்ந்து செய்யாதான் காரியந் தான்சாகக் கேடுதருமென்று மேலோர்சொல்லும் வாக்கியத்திற்கிலக்கியமாகச் சிறிதேனும் அவன்குணதிசயங்களை ஆராயாதுவரங்களைக்கொடுத்து விட்டனை, இனி உன்னாலு நம்மாலும் அவன் அழிபவனன்று, கன்மவயத்தால் வருங்கலக்கங்களை யாவர் விலக்கவல்லவர்கள், அந்தோ- தேவர்களனைவோர்க்குந் துன்பத்தினை விளைத்துவிட்டனை, வேதாகமநெறிகளனைத்துங் கெடச்செய்தனை, நம்போலிசட்கெல்லா மிகுந்ததாழ்வினையுண்டாக்கினை, சகலதுட்டர்களையு நாசஞ்செய்வதற்குச் சிவபிரானேயன்றி ஏனையோரால் முடிவதன்று, என்றிவ்வாறு இருவரும்வார்த்தையாடிக்கொண்டிருக்கின்ற வமையத்தில், தொலையா வல்வினை தொடர்ந்து வருமாறுபோல அச்சிந்தூரன் அப்பிரமனையே தேடிவந்து, அவன்விண்டுவோடு வசனித்திருக்கின்றமைமையைக்கண்டனன். பின்னர் அவ்விண்டுவை அப்பாதகன் நோக்கி, ஓமாயனே-நீஎன்னோடுயுத்தஞ்செய்யவராமற்போவையெனில் உன்னையும் உன்னையடுத்திருக்கின்றஇவனையும் இங்கிமிடத்திற் சாம்பராக்கிவிடுவேனென்றனன், அதனைக் கேட்டலும் விண்டுவுக்கு மனநடுங்கி, அந்நடுக்கத்தை வெளியிற் றோன்றுதபடிதம்முண் மறைத்துக்கொண்டு, இவனை வணக்கத்தோடு நல்லவார்த்தைகளாடித்தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று நிச்சயித்து, மிகுந்தவினயத்து

டனே அவன்முகத்தைநோக்கி, ஓசுத்தவீரனே- மலையோடு மலையுத்தஞ்செய்தால் மானமும் புகழுமுண்டாகும், அம்மலைப்புனலோடு யுத்தஞ்செய்தால் பராக்கிரமமுண்டோ, யானோ ஓராலிலையில் ஒன்றிக்கொண்டிருக்கின்ற நொய்மையன், இஃதன்றி சாத்விகத் தொழிலினால் காவற்றொலைமைபூண்டிருக்கின்றவன், இப்பிரமனோவென்றால் வண்டேறத்தாங்காதபூவில் வசித்தலைக்கொண்ட எளியன், அதல்லாமல் சாத்திரங்களைக் கூறி உலகங்களையுண்டாக்கும் ஓரேதொழிலினைக்கற்றவன், ஆதலால் யாங்களிருவரும் உன்னோடு யுத்தஞ்செய்ய மாட்டோம், நீயோ எல்லாரையும் வெல்லத்தக்க மகாபராக்கிரமசாலி, உன்னோடுயுத்தஞ்செய்வதற்கு உலகமனைத்தையுஞ்சங்கரிக்குந்தொழிலினையுடைய வொருவனிருக்கின்றான், அவனோ மகாபலத்தையுடையவன், இதுகாறும்அளவற்றபேரை அதஞ்செய்திருக்கின்றான், யாங்களிருவருங் கர்விக்கின்றபோதெல்லாம் அவன்வந்து எங்களாண்மைகளை யடக்கியிருக்கின்றனன். மலைகளுக்கெல்லாமேலானமகமேருவை அவன்கரத்தில் வில்லாகப்பிடித்திருக்கின்றான், பர்வதங்களனைத்தும் ஒன்றாய்த்திரண்டதற்கொப்பான புஜபல பராக்கிரமத்தை யுடையவன். அவனுடையபத்தினியோ மலைகள்யாவுக்கும் அரசனாகிய இமாசலராசன்புதல்வி, அவன் வீற்றிருக்குமிடமோ வெள்ளிமலை, இன்னும் இத்தன்மைததான அளவற்றபெருமிதங்களினால் அவன்யாவருக்குமிறைவனாகி யிருக்கின்றனன், ஆதலால்- அவனோடு நீஎதிர்த்து யுத்தஞ்செய்து உனது பராக்கிரமங்களைச் செலுத்துவையாயின் அதனால் உனக்கு மானமும் புகழுமுண்டாவதன்றி எல்லாவுலகமும் உனது கீர்த்தியைப்பாராட்டும், அவ்வாறின்றிஓராலிலைக்கும்அரவிந்தத்திற்கும் இலக்கானகுறைந்தவலியினையுடைய எங்களோடு நீ எதிர்ப்பதுமிகவும்எளிமையென்றுசொல்லினர். அவையனைத்தையுஞ் சிந்தூரன்கேட்டுச், சிவபிரானையேயுத்தஞ்செய்வதற்குலக்ஷியமாக்கி, விண்டுவின்சொல்லாகிய மதுவினைப்பானஞ்செய்து, வெறிகொண்டவனைப்போலக் குதித்து, ஊழிக்காலத்திலுண்டாகின்ற இடியேற்றினையொப்ப வார்ப்பரித்துக், கைலாயகிரியைநோக்கிப் பாய்ந்தனன். அப்பால் விண்டுவும் பிரமனும் அவன்செய்த கோலாகலத்திற்சஞ்சித், தமதுசெவிகளைப் பொத்திக்கொண்டு, மண்ணிற்செய்த பாவைபோலவு மரத்திற்செய்த பிரதிமைபோலவும் அசைவற்று நின்றார்கள். தேவர்களெல்லாம் அறிவற்று வீழ்ந்தார்கள். மற்றைய சிவராசிகளனைத்தும் எவ்வாறாயினவோ அதனையாவராலுஞ்சொல்லி முடிவதன்று. இவ்வாறு கயிலையைநோக்கிப் பாய்ந்துவந்த சிந்தூரனைச் சிவபிரான் யோகத்திலிருந்தமையால அவன்வந்ததை அறிந்திலர், அவர்க்கருகிருந்த சிவகணங்களிற் சிலர் அவ்வவுணனைக்கண்டமாத்திரத்தில் பயந்து சோர்ந்தார்கள். சிலர்நெடுமூச்செறிந்து ஓடிப்பதுங்கினார்கள். உமாதேவியாரும் அவனைக்காண்டலு மனங்குழைந்து பயந்தனர். சிவபிரானை யுத்தத்திற்குவருமாறு அறைகூவிய சிந்தூரன் பின்னர் உமாதேவியைப் பார்த்து அழகில்இவளின் மிகுந்தவர்களை ஒருவரையுங்காணேமாதலால், எவ்விதத்திலேனும் இவளை கொண்டுபோகவேண்டுமென்று நினைத்து, அம்மனுக்குநேராகவந்தனன். அவன் வரவைக்கண்ட உமாதேவியார் நடுங்கிப், பூனைவரக்கண்ட கிளிபோலப் பயந்து, அருகிலிருந்த தமது நாயகனா

நோக்கி, சுவாமி - முனிவர்கள் தேவர்கள் முதலாயினோர் உருகிய உள்ளத்தோடு வழிபாடுசெய்ய அவர்கட்குத் தருமாதி நாற்பொருள்களையு முதவவல்ல தேவரீர்க்கு, நீண்டதியானத்திலிருக்கும்படியான பொருள் வேறில்லையே, இனி செய்யாமற் செய்கின்ற இத்தியானத்தை விடுத்து, முன்னர் தேவரீர்க்குப் பிழையினைச் செய்தவர்களை யெல்லாங் கண்ணாலும் நகையாலும் உகிராலுங் காலாலுங் கடந்து ஜயங்கொண்ட பராக்கிரமத்தினை, இப்போது என்னைத் துன்பஞ் செய்ய அஞ்சாது வருகின்ற மேலான வலியினையுடைய இப்பாதகனிடத்துங் காட்டியருளல்வேண்டுமென்றுபிரார்த்தித்தனர். அதைக்கேட்டலுஞ் சிவபிரான் விழித்தருளி, உடனே வேங்கையாதனத்தை விட்டெழுந்து, கரத்திற்றுடியுஞ் சூலமுமேந்தி, மகாஉக்கிரத்தோடுஞ்சிந்தூரனெதிரிற்சென்றனர். அவனும் சுவாமியைநீறுக்குவேனென்று தனதுகையாலவனைத்தழுவப்போயினன். அச்சமயத்தில், அவ்விருவர்மத்தியினும் இமைக்குமுன் விநாயகப்பெருமான் பிராமணப்படிவங்கொண்டு,மிகுந்த பிரகாசத்தோடும் வந்துநின்று, சிவபிரானையுஞ் சிந்தூரனையும்பார்த்து, நீங்களிப்போது ஒருவனையொருவர் தழுவிப்பிடித்தலைவிட்டு, உங்கள்பராக்கிரமத்தை அத்திரசத்திரங்களினால் யுத்தஞ்செய்து காட்டுங்கள் பார்ப்போமென்று, அவர்கண்மத்தியில் தமது பரசாயுதத்தினை நாட்டி, ஒருபாரிசத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தனர். அந்தணர் வடிவாய்வந்த விநாயகப்பெருமான்கூறிய வார்த்தைகட்கு இருவருஞ்சம்மதித்து, அத்திரசத்திரங்களால் நெடுநேரம் யுத்தஞ்செய்தார்கள். பின்னர் சிந்தூரன் அதனைவிடுத்து, இவ்வாறு நீடித்துயுத்தஞ்செய்வதில் செயமடைவது அரிதென்று நினைத்து, சிவபிரானைத் தனதுகையினாற் றழுவச்சென்றனன். அக்கணத்தில இருவர்மத்தியினு நாட்டியிருந்தபரசானது எழும்பிச்சிந்தூரன்மீது தாக்கித்தடுத்தது. அத்தடையைத் தடுத்துக்கொண்டு செல்லமாட்டாது மீட்டுந்திரும்பிய சிந்தூரனைப்பிராமணப்படிவமாய்வந்த விநாயகப்பெருமான் பார்த்து,இனி நீ காலகாலராகிய சிவபிரானுடையசூலாயுதத்தினால்நீறுகுவை, அமரர்முதலியோரை ஆலபோசனஞ்செய்து ஆட்கொண்டருளியசிருபாமூர்த்தியையும் பகைக்கலாயோ,திரிலோகங்களினும் அவனைப்பகைத்து வாழ்ந்தவர்கள் யாவரிருக்கின்றனர், இனிதப்பியோடிப்போகும் வகையைத்தேடக் கடவையென்று திருவாய்மலர்ந்தனர் அதற்குமேல் சிந்தூரன்பயந்து, இனியாமிங்கு நீடித்திருந்தால் இறுதிநேருவதற் கையமில்லை யாதலால், இவ்வந்தணன்கூறிய சொல்லேஉறுதியாகுமென்று மனத்தின்கணிச்சயித்து, உடனே- அவ்விடத்தினின்று நீங்கிப் பூவுலகத்திற்சென்றனன். பின்னர் சிவபிரான் யுத்தத்தைநிறுத்திச் சந்தோஷமுற்றிருந்தனர். இப்பால்உமாதேவியார் அந்தணராய்வந்த விநாயகமூர்த்தியைப்பார்த்து, ஐயா- எதிர்த்துவந்த சத்துருவைஎளிதிற்றுலையவிட்ட நீயாரென்றுகேட்டனர். அதற்கவர் வாய்மொழியாலுத்தரங்கூறாது, தாமெடுத்திருந்த பிராமணப்படிவத்தை மாற்றி, இருமருங்கினுஞ் சித்திபுத்திகளோடும் நான்கு திருக்கரங்களோடுஞ் சிங்கவாகனமூர்ந்து, தமதுசுயரூபத்தைக்காட்டியருளி, ஓபுவனகாரணியே- உன்னைப்பிடிக்க அதிவேகத்துடனேவந்து சென்ற சிந்தூரனைச் சங்கரிப்பத

ற்கு யாம் உனது உதரத்தின்கண் அவதரிப்போம், இதனை மறக்கற்க, இனியாவர்க்கும் அஞ்சற்க, என்றுசில இனியவார்த்தைகளையருளிக்காக் கருளினர், அதை உமாதேவியார்கேட்டுச் சந்தோஷமாயிருந்தனர். இப்பால் முன்னம் பூலோகத்தைநோக்கிச்சென்ற சிந்தூரனல் அளவற்ற சோலைகள் கால்கள் ஆறுகள் வனங்கள் நகரங்கள் நாடுகள் முதலானவைகளோடு, அளவிறந்தவீரர்கள் வேதியர்கள் பெரியோர்கள் முதலாயினோரெல்லாந்தழுவப்பட்டு, சர்வசங்காரகாலத்தைப்போல எங்கும் நீறுகிவிட்டது. வேதவொழுக்கங்கள்- தவங்கள்- தானங்கள்- மகங்கள்- தருமங்கள்- முதலியவைகளெல்லாஞ் செய்வாரின்றி, இந்திரன் முதலியதேவர்கட்கு அவிற்பாகமுதலானவைகள்கிடையாமல், மிகுந்தபசினல் வாடித்துயரமுற்றார்கள். பூவுலகமுழுவதும் பாழ்படுத்திய அப்பாதகன் மீட்டும் வானுலகத்தையும் பாழ்செய்யவந்தனன். அதைத்தேவர்களறிந்து பயந்து, யாவரும் பிரமதேவனிடத்திற்சென்றுபணிந்து முறையிட்டார்கள். அதைக்கேட்ட பிரமதேவன் தானுந்துயரத்துளழுந்தி, இனி இதற்கென்னசெய்யக்கடவோமென்று மனங்கலங்கிப், பின்னர்ஒருவாறுதேறி, எல்லாத்தேவர்களோடும் விநாயகமூர்த்தியைத்துதிசெய்வதாயினன்:

யாவனொருவனயனெடுமாலகிலாண்டமும்ஈன்றெடுக்கின்றான்*
யாவனொருவன்குணமாயுமியம்புமுருவருருவாயு.............*
மேவுதுறுதிதனுமாயும்விளங்காநின்றானத்தகைய..........*
தேவன்சமலத்தாளிணைக்குச்சிறியேம்வணக்கஞ்செய்கின்றேம்.

பூதமைந்துமிருசுடரும்புகழ்சேர்துறக்கமுடுதிசைவெற்....*
போதுநதிகுப்பகரியக்கருரகரர்க்கர்மனிதர்கள்கோக் ......*
காதுவிருங்கஞெஞ்செந்துக்களுநானுபூதமுமேவே............*
மூதனிலைதலழிதலெல்வன்றருளர்லவற்குப்பணிகின்றாம்........*

உலகமுழுதுந்தனதுதரத்துறைவித்திருக்கின்றான்யாவ......*
னிலகுமனுதிசித்தாந்தமாகியிருக்கின்றான்யாவ...... ....*
னுலவில்பலவேறுருவமுடையான்யாவன்மலமணுகா......*
வலகிலறிவன்யாவனவனடித்தாமரைக்குப்பணிகின்றாம்......*

யாவனொருவனடியாரையெய்த்தவிட்த்திற்புரக்கின்றான் ... *
யாவனொருவன்றயித்தியராவினைவர்னவரையளிக்கின்றான்...*
யாவனொருவன்வழிபடுவாரிட்ருக்கிட்டைப்புரிகின்றான்......*
யாவனிகரிலாவிறைவனவன்பொற்றாள்கள்பணிகின்றாம்... *

இவ்வாறுபலமுறை தோத்திரங்களைச்செய்து, சகலசீவராசிகட்கும் ஆதாரபூதமாயிருக்கின்ற கர்த்தனே- வேதவொழுக்கம்- தருமம் - தான- முதலானவைகளெல்லாங்கெடுமாறும், சிறியேங்கள்பலவிடர்களுள் வீழுமாறும், இடைவிடாது தீங்குசெய்துவருகின்ற கொடும்பாவியாகிய சிந்தூரனென்பவன் எந்தவிதத்தாற்றேவரீருடைய திருவருளால் கிருமித்திடப்பட்டனனே அறிகின்றிலேம், ஓ தேவேசா- ஓ மாதேவா தேவரீரைத்தீனரக்ஷகரென்று எல்லாவுயிர்களுந்துதிசெய்கின்றதால், பா

தங்களனைத்தும் ஓர்படிவமாகிவருகின்ற சிந்தூரனைச்சங்கரித்து அடியேங்களைத்துன்பமணுகவொட்டாமற் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குவிநாயகமூர்த்தி கிருபைசுரந்து, அவர்களெதிரிற் பிரத்தியக்ஷமாகி, மிக்கதுயரத்தோடும் பணிந்தெழுந்து தமக்கெதிரில் நிற்கின்ற தீனர்கண் மீது தமது கிருபாநோக்கத்தினைப்பரப்பி, தேவர்களே- நீங்கள்செய்ததோத்திரங்கட்கு மனமுவந்தோம்; அத்தோத்திரங்களையாவரோனும் நமதுசதுர்த்தியிற்சொல்லுவார்களாயின், அவர்களது நோய்- வறுமை- இடர்- அல்லல்- முதலியதுன்பங்களனைத்தையுமறுத்து, அவ்வவர்கள்கோறிய இட்டகாமியார்த்தங்களைக் கொடுப்போம், பிரதிதினந்துதிப்போர்கட்கு எக்காலத்துந் துன்பமென்பதணுகாது; யாம்உமாதேவிவயிற்றிற் புத்திரனாக அவதரித்து; உமக்குதுன்பத்தினை விளைத்துவருஞ்சிந்தூரனைசங்கரித்து, மீட்டும் பழையபடிதிரிலோகங்களையுமளித்து ரட்சிப்போமென்று திருவாய்மலர்ந்து; தமது திருவுருவைக்கரந்தருளினர். இவ்வாறு அண்டரண்டபுவனங்களாய், மற்றப்பொருள்களனைத்துமாய், எல்லாவுயிர்கட்கும் உயிராய், காரணபூதமாய், பிறவுள்ளனவுமாகி, அவற்றிற்குக்காட்சியாயளவுபடாமல் விளங்குந்தேவதேவோத்தமராகியவிநாயகக்கடவுள் திருவாய்மலர்ந்துகரந்தவுடன், உமாதேவியுதரத்திற்கருவாயினர். அக்குறிப்பைஅத்தேவியாரறிந்து, சிவபிரானைத்தொழுதெழுந்து; சுவாமி- அடியாள்வயிற்றிற்கருப்பந்தரித்திருக்கின்றமையால்; அவ்வுட்டினந்தணியும்படியாகக் குளிர்ச்சியோடுங்கூடி வாசனைவீசுகின்ற பலவிருக்கங்களையுடைய நீழலும், அனந்தவளங்களை யுடைத்தாயிருக்கின்ற புனிதமுள்ள நதிகளுமெங்ஙனமிருக்கின்றனவோ, அங்ஙனமடியாளைச்சேர்க்கவேண்டுமென்று பிரார்த்திக்க, அதைச் சிவபெருமான்கேட்டு, உடனே ரிஷபவாகனத்தின்மீது தானுந்தேவியுமாக ஆரோகணித்து அளவற்றதேவர்கள் புடைசூழ்ந்து வரும்படியாகப் பூவுலகத்திலிழிந்து, சோதிமரம், அசோகு, கடம்பு, சூதம், நாகம், வாழை, புன்னை, குருந்து, தேக்கு, ஆரம், அகில், குங்குமம், வேங்கை, சண்பகம், சாளம் வன்னி, பலாசு, அரசு, அத்தி, இலவங்கம், நரந்தம், புன்னை, பாடலம், மந்தாரம், முருக்கு, கொன்றை, தாதகி, வஞ்சி, கூதளம், குரவு, கோங்கு, மரா, தெற்று, வெள்ளில், நெல்லி, வருக்கை, இலவு, தான்றி வகுளம், நெய்தல், முன்னம், வில்வம், மாதளை, வெட்பாலை, குறிஞ்சி, வெட்சி, நொச்சி, கற்பூரவாழை, கமுகு, தேங்கு, நிரந்து, மயிலை, மாதவி, மல்லிகை, மௌவல், முல்லை, பித்திகை, ஏலம், முதலாயுள்ளவிருக்கசாதிகளும், கருங்குவளை, ஆம்பல், கமலம், உற்பலம், அனிச்சமுதலியபுட்பங்கள்மலர்ந்து அன்னமுதலியபட்சிகள் நிறைந்து விளங்குகின்ற அளவற்றபொய்கைகளும், ஒப்பற்றவளங்களோடு மலிந்து வெள்ளியதிரைகளைப்பரப்பி நுரைத்துவிளங்குகின்ற அனந்தம்பொய்கைகளும், கொண்டல்களனைத்தும்வந்து மேய்தலைச்செய்யத்தக்க சிறந்தசிகரங்களும், சந்திரகாந்தம்பளிங்குமுதலிய வைகளாற் கட்டப்பட்டிருக்கின்ற அளவற்ற உப்பரிகைகள் நிறைந்தவீடுகளும், குயில்- புறு- கிளி- பூவை மயில்- கின்னரம்- வண்டு- முதலியவைகள் உலாவிப்பலவகைப்பட்டகீதங்களைப்பயில்கின்ற வெண்மணற் குன்றுகளும், சிங்கம்- புலி - கரடி-

ராணி- முதலியவைகள் உல்லாசமாய் உலாவுதல்செய்கின்ற அனந்தம் பொதும்பர்களும், இன்னும் இத்தன்மைத்தான எண்ணற்றவளங்களை வாய்ந்த பரியிலி என்னும் வனத்தினையடைந்து, அரிச்சந்தனம் - கற்பகம்- சந்தானம்- பாரிசாதம்- மந்தாரமென்னும் ஐவகைத்தருக்கள் அளவற்றனவாகநெருங்கவும், பதுமநிதிசங்கநிதியென்னும் இருவகைநிதிகள் ஆயிரமாயிரமாக நிறைந்தபலபொய்கைகள் புடைசூழவுமாக, வச்சிரம்- கோமேதகம்-புட்பராக முதலிய நவரத்னங்களைக்கொண்டு சிந்தாமணியினல் அழகுபொருந்தச் சமைத்திருக்கின்ற மண்டபத்தில் தாமுந் தமது தேவியும் இடபவாகனத்தினின்று மிறங்கி யமர்ந்தருளினர். இவ்வாறு அச்சோலையின்க ணிறைந்த புட்பங்களின் பரிமளங்களோடு கூடிவருகின்ற சிறுதென்றலானது தமதுதிருமேனிகளிற் படும்படியாக அம்மண்டபத்தினடுவில் வீற்றிருக்கின்ற அம்மையப்பருடைய சந்நிதானத்தின் முன்னர், சிலர் ஆனந்தக்கூத்தாடினார்கள். சிலர் சாஷடாங்கநமஸ்காரஞ் செய்தார்கள், சிலர் கைகூப்பி எதிர்நின்றார்கள். சிலர் பாடல்களினாற் றுதித்தார்கள். சிலர்நான்மருங்கினுஞ்சூழ்ந்திருந்தார்கள். சிலர்பணிவிடைகளை நடாத்திவந்தார்கள். இவ்விதவைபவங்களோடு வீற்றிருக்கின்றகாலத்தில் சிலநாள் சிவபெருமான் யோகத்திலிருந்தனர்.உமாதேவியார் தமதுபாங்கியரோடு நடந்துசென்றுவெண்மணற் குன்றுகளிலேறியும், பளிங்குஉப்பரிகைகளிலுலாவியும், மரநீழல்களிலிருந்தும், மலைகளின்மீதிவர்ந்தும், பொய்கைகள் ஓடைகள் நதிகள் முதலான விடங்களையடைந்தும்,மிகுந்தஇன்பத்தோடு தமக்கிஷ்டமானபடிவிளையாடல் செய்திருந்தனர். இப்படியிருக்குநாளையில், ஒருநாள்சந்திரசடாதர மூர்த்திக்கு அன்பனாகிய கயமுகாசுரனென்பவன் அங்குவந்து, சிந்தாமணியாற்சமைத்திருக்கின்ற விசித்திரமானமண்டபத்தினையடுத்து,அதனைத் தனது கொம்பினால் முட்டியெடுத்து நிலத்தில்விழத்தள்ளினான். என்று சூதபுராணிகர் சொல்லலும், சவுனகாதிமுனிவர்கள் கைதொழுது, சுவாமி- சிவபிரானுக்குஅன்பனாயிருக்கின்றவன்கயமுகத்தையுடைய ராக்ஷசனானதற்குக் காரணமென்ன, அன்றியும் அவன் அன்பனாயிருக்கின், கயவனைப்போலச் சிவபிரானைச் சற்றுமதியாமல அவரெழுந்தருளியிருக்கின்ற மண்டபத்தைமுட்டிநிலத்தில்வீழ்த்தவேண்டியதென்ன, அந்தவரலாற்றினையுஞ்சொல்லியருளல்வேண்டுமென்றுகேட்டார்கள்.அதற்குச்சூதபுராணிகரிசைந்து,ஓசவுனகாதிமுனிவர்களே- முன்னொருயுகத்தில் மயேசுரனென்னும் ஓரரசனிருந்தான், அவன் நான்குவேதங்களையுமோதி, வஸ்து நிச்சயந்தெரிந்து, பதினெண்புராணங்களையும் வழுவறக்கேட்டு, தருமசாத்திரங்களையறிந்து நடாத்தி, விபூதி உருத்திராக்கமுதலியவைகளை யணிந்து, திரிகாலங்களினுஞ் சிவபூசையில்வழாது, முப்பத்திரண்டு லக்ஷணங்களையுங் குறைவறவாய்ந்து, மலபாசங்களைத்துறந்து, மெய்ஞ்ஞானச்செல்வத்தினிலோங்கி, அஷடஐசுவரியங்களோடு மநுநீதிமுறைமைப்படி உலகமுழுவதுந் தனதரசாக்ஷியினைச்செலுத்திக் குறைவற வாழ்கின்றநாளையில், ஓர்நாள் பிரகற்பதிதேவர் அவ்வரசனிடத்திற்செல்ல, அவ்வரசன் அவரை எதிர்கொண்டுசென்று அழைத்துவந்து, விசித்திரமான ஓராதனத்தின்கணிருக்கவைத்து,அர்க்கிய பாத்திய ஆசமனாதிகளைக்கொண்டு பூசித்து,சா

ஷடாங்கமாகப்பணிந்தெழுந்து, மிக்கபக்தியோடு பலமுறைதோத்திரஞ் செய்து நின்றனன். பிரகஸ்பதிதேவர் அவன்செய்தவழிபாட்டிற்கு மன மூவந்து, அரசனே- யாம்உனது ஆண்மையையும்- புகழையும்-நீதியையு ம்-ஊக்கத்தையும்- பண்பினையும்- பலவாறுகேள்வியுற்று உன்னைக்கண்டு போமாறு இங்குவந்தனம், ஆனால் இதுகாறுங் கேட்டதைவிட இப்போ து உனது குணாதிசயங்களை நேரிற்காணுமிடத்துஎண்மடங்கு அதிகமா கவிருக்கின்றன. நமதுபாதங்களிலன்போடுவணங்கிய உனதுசிரமானது முனிவர்கள் தேவர்கள பெரியோர்கள் முதலியோரால் வணங்கப்படுக வென்றநுக்கிரகித்தனர். அதை அவ்வரசன்கேட்டவுடன் அளவற்றமகி ழ்ச்சிகொண்டு, சுவாமி- தேவரீர்கொடுத்தருளிய திருவாக்கு எப்போது அடியேற்குப் பலித்திடுமென்று கேட்டனன். அதற்குபிரகஸ்பதி தேவர் சொல்லுவார், அரசனே- நீ எப்போது யானையினிடத்தி லுற்பத்தியாகி ன்றனையோ அப்போது நமதுவாக்கு பழுதிலாதுபலிக்கும், இதுவேயும ன்றி-உடனே நீ சிவாநுக்கிரகத்தினல் முத்தியுமடைவையென்று சொல் லி எழுந்துபோயினர். பின்னர் ஓர்காலத்தில் மயேசுராசன் தனதுநாடு களையெல்லாங் காத்தற்பொருட்டு அளவற்ற சேனைகளோடும் பட்டண த்தினின்றும்வெளிக்கொண்டு வழியிற்செல்லுகின்றபோது,அவனுக்கெதி ரேநாரதமுனிவர்வந்தனர். அப்போது- முன்னர் அவ்வரசனுக்குபிரகற்ப திதேவர் கொடுத்தருளியவாக்கு பலிக்குங்காலஞ்சமீபத்ததினுலோ,அல் லது அவனைப்புடைசூழ்ந்து அளவற்றசேனைகள் நெருங்கிப் போவதினு ல் தனது பார்வையெட்டாமற் போனதினுலோ, நாரதமுனிவருக்கு அ வ்வரசன் வந்தனை முதலிய வழிபாடுகளைச் செய்யாமற் சென்றுன். அதனுல் அம்முனிவருக்கு மிகுந்த கோபமுண்டாகி,ஓ அரசனே- நீ கா ட்டிற்சஞ்சரிக்கின்ற யானைபோல என்னை வணங்காது செல்கின்றனை யாதலால், இந்தச்சனன மொழிந்தபின்பு யானைக்குழாத்தினுள் யானை முகனுகப் பிறந்து, கயாமுகாசுரனென்னு நாமத்தினைக்கொண்டு,சில காலத்தின் பின்னர் சிவபெருமான்கரத்தினுல் உனதுசென்னி அறுப ட்டு, மீட்டுமவருடைய கிருபையினுலே கயிலாயத்தின்கண் மேன்மை பெற்றிருக்குமென்று சொல்லிச்சென்றனர், இவ்வார்த்தைக ளனைத்தும் நீதியிற்சிறந்த மஹேசராசன் செவியிலேறலும், ஆ அ என்ன அற்புதம் என்னஅற்புதமென்று சந்தோஷித்து, முன்னம்பிரகஸ்பதிதேவர்சொல் லியவாறும், இப்போது நாரதமுனிவர்கூறிய செய்தியும் ஒத்துவந்ததல் லவாவென்று ஆச்சரியமுற்றுப்,பின்னும் அளவற்றநாள் அந்தச்சரீரத்து டனே அரசனுகவாழ்ந்திருந்து, தனது ஆயுள் முடிந்த பின்புபரியவிவன த்தில் வாசமாயிருந்த யானையின்பால் யானைமுகனுகப்பிறந்து,கயமுகாசுர னென்னும் பெயரைவகித்து, பூர்வக்கியானமுஞ்சிவபத்தியுமுடையவனு ய் அளவற்றநாளிருந்து, முற்சனனத்தில் தனக்குப்பிரகற்பதி தேவரும் நாரதமுனிவருஞ் சொல்லியதையும், அச்சொல்லின்படி மறுசனனத்தி லடைந்ததையும் யோசித்து, தன்னையாட்கொள்ளவல்ல சாமியையுந்தி யானித்துவந்து, சிவபிரானெழுந்தருளியிருந்தமண்டபத்தைத்தனதுகோ ட்டினுல் முட்டித்தள்ளினன். ஓ சவுனகாதிமுனிவர்களே, இனி அவன் சிரமானது முன்னம் பிரகற்பதி தேவர்கூறியபடி முனிவர்கள் தேவர்கள்

பெரியோர்கள் முதலியோரால்பணியத்தக்க மேன்மையைப்பெற்றிருந்த வரலாற்றினையுஞ் சொல்லுவோம் கேட்பீராக. இவ்வாறு கயமுகாசுரனானவன் அன்பர்க் கெளியராகிய சிவபிரானமர்ந்திருந்த மண்டபத்தை இரக்கமில்லாதவனைப் போலத்தள்ளுதலும், அங்கிருந்ததேவர்கள் முதலியோரெல்லாம் பயந்தார்கள். உல்லாசமாயச்சென்று உலாவல்செய்திருந்தஉமாதேவியார் தமதுபாங்கியாரோடும்வந்து,யோகத்திலிருந்தகர்த்தருக்கு அதனையறிவித்தனர். உடனே சிவபிரானுக்குக் கோபமுண்டாகி, அவ்வசுரன்மீது தமதுசூலாயுதத்தைவிடுத்தனர். அச்சூலமானது அவனுடலமுழுவது நெருங்கிப்பாய, அதனாலவன்சோர்வுற்றுச், சிவாயநமவென்று சொல்லி நிலத்தில்வீழ்ந்தனன். இவ்வாறு கயமுகாசுரனானவன் சோர்ந்துநிலத்தில் வீழ்ந்தபோது சொல்லிய மநுவானது சிவபிரான்செவியிலேறலும், உடனே அவருக்கு அவன்மீது கிருபையுண்டாகி, அசசோ- கயமுகாசுரன் நம்மைத்தியானிக்கு முள்ளத்தையுடையவனென்றறியாமல் மண்டபத்தைத்தள்ளினனெனக்கொண்டோமே யென்று மனமிரங்கி, அவன்முகத்தைஅவலோகம் பார்த்தருளி, அன்பனே-உனக்குவேண்டிய வரங்களைக்கேள் தருவோமென்று திருவாய்மலர்ந்தனர். அதைப் பூர்வஞானத்தினையுடைய கயமுகாசுரன்கேட்டலுஞ் சிவபிரானைப் பணிந்தெழுந்து, ஓகிருபாமூர்த்தியே- தேவரீர்அடியேற்கு அழியாத முத்தியினைக்கொடுத்தருளல்வேண்டும், முற்சனனத்தில் அடியேனுக்குப்பிரகற்பதிதெவரும் நாரதமுனிவருங்கூறிய வாக்கின்படி இச்சனனத்தில்சம்பவித்தன்றி வேறில்லை, அதனால் அடியேற்குத்தேவரீருடைய திருக்கரத்தினாலடிபடவுந் தேவரீருடைய பாதபதுமங்களைச் சேவிக்கவுங் கிடைத்ததென்று சொல்லினன். அதனைச்சிவபிரான்கேட்டு, அவனுக்குச் சாரூபமுத்தியினைக்கொடுத்து, அவனது பசியதோலினையுஞ் சிரத்தினையும் உயிரைப்போலக்கைக்கொண்டு,தோலினைத்தமது அரையிலுடுத்திச்,சிரசைப்பத்தவாஞ்சையினாற் பூசித்துவந்தனர். அக்கயமுகாசுரனுடைய தோலைச்சிவபிரான் தரித்தருளியதாலே, அதுமுதல் அவருக்குக்கிருத்திவாசனென்னுந் திருநாமம்வழங்கிவருகின்றது. அத்திருநாமத்தையாவனேனும் உச்சரித்தால், அஃது வருத்தமுறுத்துகின்ற சமுசார வாஞ்சையெனனும் பெரும்பிணிக்குமருந்தாகி, மெய்ஞ்ஞானமயமாகிய வீட்டைக்கொடுத்தருளும். இப்பால் சத்துருவைப்போலவந்து கயமுகாசுரன்முட்டிவீழத்தள்ளிய மண்டபத்தைக் கணங்கள்யாருங்கூடி எடுத்து முன்போலவே நிறுத்திவைத்தார்கள். சிவபிரானும் உமாதேவியுமனமகிழ்ந்துபழையபடி திருவிளையாடல்செய்துகொண்டிருந்தார்கள். இவ்வாறு சுவாமியும் அம்மனும்வனத்திலிருக்குமளவில், சிந்துரனானவன்எல்லாவுலகங்களினுஞ்சென்றுலாவி, எதிர்த்துவந்தவர்களையெல்லாந்தாழவிநீருக்கி, மீட்டுந்தனது அரண்மனையில்வந்து, கொலுமண்டபத்தில் வீற்றிருந்து, மனத்திலிகுந்தகர்வங்கொண்டு, பிரமன்விண்டு உருத்திரன் என்னுமூவர்களுந் நமக்குப் புறந்தந்து திரணமாயொழிந்தார்கள், இந்திரனாதிய தேவர்கள் அரக்கர்கள் தைத்தியர்கள் முதலியோரெல்லாம் நம்மைக்கண்டவுடனேப்பதுங்கினார்கள், ஏனையவீரர்கள்யாரும் நமதுகரத்தாலழிந்தார்கள், உலகமனைத்தும் பஞ்சுக்கொப்பாகவும் நாம் அழலுக்கொப்பாகவுமிருக்கி

ன்றேமென்று சொல்லிக்கொண்டிருந்தனன். அப்போது தற்செயலாய் அவனுக்குக்கேழ்க்கும்படியாக ஒருஆகாயவாக்குஉண்டாகி (ஓசிந்துரா- தன்னைத்தானே வீணிற்புகழ்ந்து கொள்ளுவோனுக்கு உடனே அழிவுவரும், உனக்கு அழிவுகாலநேர்ந்ததனால் உன்னைநீயே புகழ்ந்துகொள்கின்றனை, நிலையில்லாதவுடலை நிலையாகக்கருதி ஏன்கர்வத்தினாற்பேசுகின்றாய் உன்னைக்கொல்லுவதற்கு உமாதேவிவயிற்றில் ஒன்றுன விநாயகமூர்த்திகருவாகிவளர்கின்றனர், இன்னுஞ்சின்னாளையுள்உனதுபெயருமில்லாமல்முடிந்துபோவாய்)என்றுசொல்லிஅடங்கியது. அவையனைத்தையும்அழிவெய்துமாக்கையில்ஆசைவைத்திருக்கின்றசிந்துரன்கேட்டு,மனங்கலங்கி,சாவுநேர்ந்தால் எப்படியென்று துயரங்கொண்டு,இவ்வார்த்தைகளைப்பேசினவன்யாவன், அவனைஇங்கிமிடத்திறபிடித்து அடிக்கக்கடவீர்களென்று சொல்லிச் சிலதூதுவரையேவினன். அவர்கள் அவ்வாக்கினையைக்கடக்கமாட்டாமல எவ்விடங்களினும் ஓடித்தேடிப்பார்த்து ஒருவரையுங்காணமல் மீண்டுவந்துவிட்டார்கள். இப்பால் சிந்துரனனவன் நம்மைக்கொல்லவளர்கின்ற கருவை இப்போதே அறுத்து ஈஸ்வரியைத் துயரப்படுத்தவேண்டுமென்று நினைத்தவனாய், உடனே தானிருந்தசபையைவிட்டெழுந்து, கயிலாயவரையிற்போய்த் தேடிக்காணுதவனாகி, அவ்விடங்களிலுள்ள மலைகள் திசைகள் முதலிய விடங்களிலெல்லாந்தேடிச்சென்றனன். பின்னர் ஈஸ்வரியை எங்குங்காணமல், மீட்டும் பூலோகத்திற்குவந்து, வனங்கள்தோறுந்தேடிக்கொண்டு செல்லுகையில், தேவர்கள்முனிவர்கள்முதலியோர்வசித்திருக்கும் பரியவிகானகத்துள்நுழைந்து, அதன்மத்தியிலிருக்கும் பூங்காவில் உமாதேவியார் வீற்றிருக்கக்கண்டு, சிவபிரான்யோகத்திலிருக்கவும், உமாதேவியார் அயர்ந்து நித்திரைசெய்திருக்கவுமான காலம்பார்த்து, இதுவே நல்லசமயமென்று நிச்சயித்து, உடனே வாயுருபமெடுத்து, உலகமாதாவாகிய உமாதேவியார் உதரத்திற்பிரவேசித்து, அங்குநின்மலஸ்வரூபமாயிருந்து வளர்கின்ற கருவைச்சேதித்து, சிரசைவெளியிற்கொணர்ந்துவந்து, விந்தவரையினையுடுத்த, அவ்விடத்துள்ளநிருமதைநதியின்பக்கத்திலேவைத்துவிட்டு,மீட்டுந் தனது அரண்மனையிற்போய்ச்சேர்ந்தனன். அண்டர்பிரானாகிய விநாயகப்பெருமானது சிரம்விழுந்தவிடம் பெரியபள்ளமாயிற்று. அப்பள்ளத்தையாவருங் கணேசகுண்டமென்று சொல்லுவார்கள். அச்சிரத்தினின்றும் பெருகியவுதிரமானது ஆறாயோடியபடியால் அஃது சோணமாநதியென்னும்பெயரினால் வழங்கிவருகின்றது. கணேசகுண்டத்திற்குச் சமீபத்திலிருக்கின்ற சிலைகளனைத்தும் அக்குண்டத்திற்சரிந்துவிழுந்து, கணேசமூர்த்தியினுடைய திருவுருவத்தையடைந்து, உலகமுழுவதும் பூசிப்ப அளவற்றபயன்களைக்கொடுத்துக்கொண்டிருக்கின்றன. ஆதலால்- அந்தச்சுயம்புமூர்த்திகளையெடுத்துயாவரேனும் வேதாகமமுறைமைப்படி பூசித்துவருவார்களாயின், அவர்கட்குதருமமுதலிய நான்குபுருஷார்த்தங்களுங்கிடைக்கும். சிந்துரன்வந்துசெய்த இக்கொடியசெயல அச்சிந்துரனுக்குங் கருவாகிவளர்ந்த விநாயகமூர்த்திக்குந் தெரியுமேயன்றி, உமாதேவியாருமறியார், மற்றசிவபிரான்முதலிய யாவருமறியார்கள். இத்தன்மைத்தாகிய கொடுந்தொழிலை நடப்பித்துக்கொண்ட விநாயகமூர்த்தியானவர், சி

சம்மோபுங்கருவனைத்து முற்றும்படியாகவேவளர்ந்தனர். இப்பால் உமாதேவியார்க்கு ஒன்பதுதிங்களுமாகப், பத்தாந்திங்களில் சிவபிரானவளைப்பார்த்து, பெண்ணே- உனதுவயிற்றிற் கருப்பம்நிரம்பியபடியால், இனியாம்கயிலைக்குச்செல்லவேண்டுமெனச்சொல்லி, உடனே அவளை ரிஷபவாகனத்திலேற்றிக்கொண் டெழுந்தருளினர். யோகத்திலிருப்போர்க்கு யோகியாகியும் போகத்திலிருப்போர்க்கு போகியாகியுமிருந்து அநுக்கிரகஞ்செய்யவல்ல சிவபிரான் பறியவிவனத்தைவிடுத்துத் தமது கைலாயவரையையடைந்த பின்னர், உமாதேவியார் உலகத்தாரைப்போல நடத்துமாறுஇச்சையுற்று, ஆதிமத்யாந்தரகிதமாய்- அநுநிவஸ்துவாய்- சகலப்பிராணிகளிடத்துங் காரணபூதமாகப்பொருந்தி- என்னையுமோர்பொருளாகக்கொண்டு நடித்துக்களித்திருக்கு மூலகாரணக்கடவுளாகியவிநாயகமூர்த்தியைப்பிரசவித்தனர். உடனே அவ்விநாயகமூர்த்தியானவர் ஞானசத்தியுத்தராய், அட்டமாசித்திகளையுந் தரித்தவராய், சித்திபுத்திகள் சமேதராய், சிங்கவாகனரூடராய், பத்து திருக்கரங்களோடும் ஆயுதங்களோடும் அவதரித்தருள, அவ்வவதாரக்கோலத்தை உமாதேவியார்கண்டு, முன்னமருளியபடியேவந்து அவதரித்தனரென்று மனமகிழ்ந்தனர். பின்னர் விநாயகமூர்த்தியானவர் தம்மையீன்ற உமாதேவியாரைநோக்கி, அன்னையே - உமக்குயாம் அன்று சொன்னபடியே கொடுமையின்மிகுத்த சிந்தூரனைக்கொல்லவும், பத்தசனங்களாகிய தேவர்கள் முனிவர்கள் முதலியோர்படுந் துன்பத்தினை நீக்கவும், உமக்குப்பணிசெய்து ஆனந்தமாக்கிவைக்கவுமாக, உமது கருப்பத்தினின்று மவதரித்தோமென்று திருவாய்மலர்ந்து கரந்தருளினர். உடனே உமாதேவியார் திகைத்து மயங்கினர். மீட்டும் விநாயகமூர்த்தி சிரமில்லாதகுழந்தையாய் வந்திருந்தனர். அதனைக்கண்ட உமாதேவியார் ஆவிசோர்ந்து, நிலமிசைவீழ்ந்து, அவசமாகி, நெட்டுயிர்த்து, நேத்திரங்களால் இதனைப்பாவியேன் பார்க்கப்படுவதோவென்று பதைபதைத்து, ஐயோ- எனது புத்திரனை யாரோஎடுத்துக்கொண்டுசென்று சிரத்தினைச்சேதித்துவந்து என்முன்னேகொண்டுவந்துவைத்தார்களே, நான்எல்லாவிதத்திலும் பாக்கியவதியாயிருந்தும் புத்திரசம்பத்திலே எளியவளானேனே, இப்போது எனது கண்முன்னமெழுந்தருளியிருந்த விநாயகமூர்த்தி எங்ஙனமேனு மொளித்துச்சென்றனரோ, அல்லவென்று சொப்பனமோ, மாய்கையோ, மோகனமோ, எனது அருமைப்புதல்வனுக்கும் இவ்வாறுசம்பவிக்கலாமோவென்றுபுலம்பி, அன்று எதிர்த்துவந்தசிந்தூரனால் நீறாகிப்போனேமாயின் இன்று இத்தன்மைத்தான சம்பவத்தை யாம்பார்க்கவேண்டுவதில்லையே, சுவாமி - அச்சிந்தூரனை அன்றுஎன் விலக்கினீரென்று சொல்லித், தேம்பித்தேம்பியழுதனர். இவ்வாறு உலகமாதா அந்தப்புறத்திலிருந்து துயரப்படுவதைத் திருவோலக்கத்திலெழுந்தருளியிருந்த சிவபிரானறிந்து, சரேலென்றெழுந்து, உமாதேவியாரிடத்தில்வந்து, நடந்த செய்திகளனைத்தையும் வினவியறிந்து, முழுதுந்தேர்ந்த முதல்வராகிய முக்கண்மூர்த்தியானவர் இப்போது முடிந்ததையும் இனிமுடியப்போகின்றதையும் இன்ன இன்னபடியென்றறிந்திருந்தும் அவைகளைத் தமக்குள்மறைத்துக்கொண்டு, திருமேனியிற்பழுதுகாட்டியருளிய தமதுபுதல்

னரது மகிமையை உலகத்தவரறிந்து கடைத்தேறுமாறு காட்டும்படி நினைத்தவராய், அகத்திலுள்ள மகிழ்ச்சியை அயலாரறியாதவண்ணம் மறைத்து, உலகத்தவரைப்போல மிகுந்த முகவாட்டத்துடனே தமதுபுத்திரனைக்கரத்திலெடுத்துத், துடையின்மீது வைத்துக்கொண்டிருந்தனர். அக்குறிப்பைநந்திதேவரறிந்து, சிவபிரானைப்பணிந்தெழுந்து விடைபெற்றுப், பிரமன் விண்டு தேவேந்திரன் முதலியோர்க்குஇவ்வற்புதத்தையறிவித்து அழைத்துவருமாறு சென்றனர். இந்திரன்முதலாயினோர் நந்திதேவர்வரவையறிந்து, உடனே அவரையெதிர்கொண்டுவந்துபணிந்து ஆசனத்திலிருத்திப்பூசித்து, சுவாமி- தேவரீர் இங்ஙனமெழுந்தருளிய காரணத்தைத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவர்களை நந்திதேவர்பார்த்து, ஓதேவர்களே- கயிலாயத்திலே உமாதேவியார் திருவயிற்றில் ஓர் திவ்வியமானகுழந்தை சிரமில்லாமற்பிறந்தது, அதுகண்டு சிவபிரான் மிகவுந் துன்பமுற்றிருக்கின்றனர், ஆதலால்-நீங்கள் யாவரும் அங்குவரவேண்டுமென்று சொல்லினர். அதனைவிண்டு முதலியோர்கேட்டலும் இரக்கமுற்று, முன்னர் தாங்கள் அனைவருந் தோத்திரஞ்செய்தபோது பிரத்தியக்ஷமாகிவரங்கொடுத்தருளிய விநாயகமூர்த்தியே அவ்வாறு அவதரித்தனரென்று தெரிந்துகொள்ளாமல், அவ்வவர்களுடைய வாகனங்களிலேறிச்சென்று கயிலாயவரையை யடைந்தார்கள். அப்போது நந்திதேவர் முன்னதாகச்சென்று, விண்டுமுதலாயினோர் வரவைச்சிவபிரானுக்கறிவிக்க, அவர் தமதுபுத்திரனை அந்தப்புரத்திலிருத்தி, மீட்டுந்திருவோலக்கமண்டபத்தி லெழுந்தருளினர். உடனே விண்டுவாதி தேவர்கள்முறைமையாகப்பணிந்தெழுந்தார்கள். பின்னர்இந்திரனென்பவன் பிரமன்முகத்தைநோக்கி, உலகமாதாவாகிய பரமேஸ்வரியீன்றருளிய குழந்தையை இங்ஙனம்வருவிக்க வேண்டுமென்றுசொல்ல, அவ்வாறே பிரமன் வரவழைத்தனன். அப்போது அக்குழந்தையைச் சில தேவர்கள்பார்த்து, இப்பங்கமுற்றபிள்ளையைக்கொண்டுபோய்க் கடலிற்போடுங்களென்றுசொல்ல, அவர்களைப்பிரமன் விழிகளிலனற்பொறிபறக்கும்படியாகப்பார்த்துக்கோபித்தனன். அதற்குத்தேவர்களெல்லாம் ஒடுங்கி அச்சங்கொண்டார்கள். பின்னர் பிரமன் தனக்குள் நடுக்கங்கொண்டு, இக்குழந்தை அந்தரியாமியாயிருக்கின்ற சர்வேஸ்வரனேயென்று நிச்சயித்து, ஓநிருபாமூர்த்தியே- அநாதிசித்தராய்- லோகங்களையெல்லாம் உண்டாக்கவல்ல கருத்தாவாய்- அடியேங்களுடைய பாவங்களனைத்தையுமொழித்து, இடர்களைப்பொடிபடுத்தவல்ல இறைவராய் - ஏகாநேக சொரூபராய்- மனோவாக்குகளுக்கு மெட்டாதவத்துவாயிருக்கின்ற தேவரீர், இவ்வாறு சிரமில்லாது இங்ஙனமவதரித்திருக்கின்ற காரணமென்னை, அவ்விரகசியத்தைக்கவலைக்கடலில் மூழ்கிமயக்கமுற்றழிகின்ற அடியேங்கட்கு வெளிப்படுத்தித் தெளிவித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதனைவிண்டுகேட்டு, பிரணவமந்திரசொரூபியாயிராநின்ற விநாயகமூர்த்தியினது மகிமையைச்சிறிதுமறியாதவராகி, ஓ வாணிகேள்வனே-சரீரத்திற்குண்டான உறுப்புக்களில் பிரதானவுறுப்பாயிருப்பது சிரம், அச்சிரமில்லாமற் பிறந்தகுழந்தைகள் எவ்வுலகத்திலேனும் பிழைத்ததுண்டோவென்றனர். அதைப்பிரமன் கேட்டவுடன்கோபித்து,

நீர் எவ்விதத்தாற்றகாதவார்த்தைகளை மற்றைத்தேவர்களைப்போலப் பேசினீரென்று அவர்வாயினையடக்கி, ஓதுழாய்மௌனியே- ஆணவமலத்திலழுந்தித் தீராதமயக்கத்தினையுடைய சிறியோங்களாகிய நம்மைப்போல, உடற்கருவிகள் கூடாதகாலத்தி லறியுந்தன்மையில்லாத அவ்வறிவினையுடையவர் இவரல்லர், இவரெங்கும்பரிபூரணவறிவாய் அனைத்தையுமொருமிக்கவறியும் பெருமானாகும், முன்னருசிவபிரானுடைய வில்லுக்குநீர் நாணாயிருந்தகாலத்தில், இந்திரன்முதலிய தேவர்களெல்லாஞ்சிதலாய்வந்து அந்நாணை அரித்தனர், அப்போது அந்நாணாயிருந்தநீர் உம்முடையசிரம் அறுபட்டிறந்துபோனீரோ அதுபோலவும், உலகத்திற்றலையிழந்தவர்கள் உயிர்தரித்துவாழாரென்பதுபோலவும், சகலலோகங்களையுந்தோற்றுவித்தழிக்கவல்ல இச்சுயம்பிரகாசமூர்த்தியினைச் சொல்லப்போமோ, பரந்தவுலகமனைத்தினையுந் தமது இரண்டுமாயையினைக்கொண்டுசகலதத்துவங்களும் பொருந்தத்தோற்றுவித்து, உயிர்களதுஅஞ்ஞானவிருளைப்போக்குநிமித்தந் தநுவாதிகளைக்கொடுத்து இரக்ஷித்து உள்ளுநக்குள்ளே அந்தரியாமியாயிருந்து அறிவுவிளங்கவைத்துத், தாயினைப்போல வளர்த்துவருந்தயாபரமூர்த்தினுடைய திருவுருவில் ஒருகுறையில்லாவிடில் அவர்க்கென்னகுறை, உருவம்வேண்டுமென்றும் வேண்டாமென்றும் வருகின்ற இரண்டு ஊழும் இவர்க்கில்லை, தம்மையடைந்தோர்க்குச சகலவரிட்டங்களையும் போக்கவல்ல இவரியல்பைத்தேவர்களுமறியார்கள், அத்தேவர்களெல்லாந் தொழத்தலைமைபெற்றிருக்கின்ற நீருமறிந்திலீர், ஆசானுடைய அருமையை அடக்குவார்களறிவார்களோவென்றுசொல்லினன். அவையனைத்தையுஞ் சர்வஞ்ஞமூர்த்தியாகிய விநாயகக்கடவுளானவர் செவியில்லாமலே கேட்டுச்சந்தோஷித்து, வாயில்லாமலே இதனைவிளம்புவதாயினர். ஓ இரணியகருப்பனே- பூருவத்தில் யாம்சிருட்டித்தொழிலை உனக்குத்தந்தபோது ஓர்சலப்பிரவாகத்தில் உன்னால் யாம் எவ்வாறு காணப்பட்டோமோ, அவ்வாறே இப்போது ஈஸ்வரியினிடத்தில் உன்னாற்காணப்பட்டோம், ஆனால் சிரமில்லாமற்காணப்பட்டதற்குக் காரணம்யாதெனில், அதனையுஞ்சொல்லுவோங் கேள்; எப்போதுந்தீமைகளை விளைத்துவருகின்ற சிந்தூரனைக் கொல்லவும், உங்கட்கு அவன்செய்துவருகின்ற அரிட்டங்களைநீக்கவும், வேதாகமநெறிகளை விருத்தியாக்கவும், உமாதேவிக்குப் பணிபுரியவும், என்றுவிநாயகமூர்த்தி திருவாய்மலர்ந்தருளலும், அதனைப்பிரமதேவர்கேட்டு, சுவாமி- தேவரீர் திரிலோகங்களையுங் காத்தருளவேண்டி அவதரித்தான், தேவரீருடைய திவ்வியசொரூபத்தை யாவருந் தரிசிக்கும்படியாகக் காட்டி. அடியேங்கள் மனத்திலிருக்கின்ற மயக்கத்தைத்தீர்த்து மகிழ்ச்சியை விளைத்தருளவேண்டுமென்றனர். அதற்கு விநாயகமூர்த்திசந்தோஷித்து, ஓ தேவகுருவே- முன்பு மயேசுரனென்னுமரசன் உன்னைமிகுந்த பத்தியுடனே பணிந்தபோது நீ அவன்தலைக்குக்கொடுத்தவரத்தினால், பின்பு அவன்கஜமுகாசுரனாய்ப்பிறந்து, சிவபிரானுடைய சூலாயுதத்தினால் அறுபட்டுச், சாரூபபதவியைப்பெற்றிருக்கின்றனன், அவன்சிரமானது அக்கடவுளால் பூசைசெய்யப்பட்டிருக்கின்றது, அன்றியும்- அஃது நீண்ட துதிக்கையினோடு மிக்க அழகாயிருக்கின்றது, நமது திருமேனியைப்பார்

த்து இதுஎன்னவென்று உங்களுங்கள் மனதில்வெவ்வேறேஎண்ணுகின்ற எண்ணமெல்லாநீருவதற்கு, அந்தச்சிரத்தை நமதுசரீரத்திற்கலக்கச்செயவதேகருமம், அதற்குமிக்கது வேறொன்றில்லையென்றனர். அதைப்பிரகற்பதிதேவர்கேட்டு, ஓ திரிகாலங்களையுமறியவல்ல கடவுளே-தெரிந்த அறிவினையுடைய மயேசுராசன் பொருட்டு அடியேன்கூறிய வார்த்தையானது இங்குயாவரு மறியுமாறு தேவரீராற்றிருவாயமலர்ந்தருளுவதாயதே, விஸ்வரூபியாயும்- விஸ்வேசுரராயும் - பத்தர்களுடைய விடர்களை நீக்கவல்ல பரம்பொருளாயுமிருக்கின்ற தேவரீருடைய சுயம்பிரகாச சொரூபத்தைஅடியேன் காணும்படியான அறிவில்லாதவனாயினேன், என்று இவ்வாறு பலமுறைமிகுந்த உருக்கததோடுந் துதிசெய்துகொண்டிருந்தனர். அச்சமயத்தில் நாரதமுனிவர் விநாயகமூர்த்தியைப் பணிந்தெழுந்து, ஓ சிற்பரானந்தமூர்த்தியே- நித்தியானந்த- நிரூபத்திரவ- நின்மல- நிரந்தர- நிராகார- நிஷ்கர்ம- நிர்ச்சங்க- நிர்விகார- நிர்க்குண- நிஷ்கிரிய- நிர்விகற்ப- நிரஞ்சன- நிராலம்ப- நிரதிசயானந்த முதலிய அளவற்றகுணதிசயங்களை வாயந்ததேவரீர், இவ்வுலக மனைத்தினையும் யானைமுகங்கொண்டு காத்தருளும்பொருட்டுத் திருவுளஞ்செய்து மிகுந்தகிருபையோடும் உமாதேவியினிடமாக அவதரித்ததுமெய்யேயாகும், ஆயினுந் தேவரீர்சிரமானது இடையிலொழிந்ததாகக் காணப்பட்டிருக்கின்றமையால், அஃது யாவராலொழிக்கப்பட்டதோ அதனைத்திருவாயமலர்ந்து, அடியேஙகட்குண்டாகிய சந்தேகத்தினைத் தெளிவித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குவிநாயகமூர்த்திகிருபைசுரந்து, ஓதேவமுனியே. நாம்பரமேஸ்வரிவயிற்றிற் சூலாயிருந்த எட்டாந்திங்களில், முன்னம் பிரகற்பதிதேவன் மயேசுராசனுக்குக்கொடுத்த வரமானது முற்றுபெறற்பொருட்டும், அம்மயேசுராசன் வழியிற்சென்றபோது உனக்குவந்தனைசெயயவில்லையென்றுகொடுத்த சாபமானது சுரியாதற்பொருட்டும், நமதுசரீரத்தினைவிட்டுநீங்கிய சிரமானது விழுந்தவிடத்திலிருக்கின்ற சிலைகளனைத்தும் நமதுசொரூபத்தினை யடையும்பொருட்டும், அவைகளையெடுத்துப்பூசித்துவருகின்ற ஆன்மாக்களுக்கு வேண்டிய வரங்களைக்கொடுத்தற்பொருட்டும், மனிதர் நாகர் தேவர் முதலியோரால் அழிவுபெறாதவலியினைவாயந்த சிந்துரனைச் சங்கரித்தற்பொருட்டும், யாம்யானைவதனத்தையடைதற் பொருட்டுந் திருவுளங்கொண்டு, இந்தமகாதிவ்விய சரீரத்திலிருந்த நமதுசிரமானது நீங்குமாறு யாம்கருவாகிவளர்கின்றசேதியைச்சிந்தூரனுக்கு ஆகாயவாக்கினாலறிவித்தனம், அவன்உடனே தனது உருவத்தைமறைத்துவந்து, மாயரூபங்கொணடு, ஈஸ்வரியினுதரத்துட்புகுந்து, கருவாயிருந்தசிரத்தையறுத்துக்கொண்டுசென்றனன். இப்போதுயாம் கசமுகத்தைத்தரித்துக்கொண்டு அச்சிந்தூரனைச்சங்காரஞ்செயதருளுவமென்று திருவாயமலர்ந்தனர். அவையனைத்தையும் நாரதமுனிவர்கேட்டு,மிகுந்த பேருவகையோடு மீட்டும்பணிந்தெழுந்து,சுவாமி- அந்தயானையின் சிரமானது அடியேங்கள் சிரத்தினுற்றுருங்கத்தக்கதன்று,அதைக்கொண்டுவந்து தேவரீர் திருமேனியிற்சேர்க்கத்தக்கவல்லபமும் அடியேங்கட்கில்லை, ஆக்கல் காத்தல் அழித்தல் என்னுமுத்தொழிலுக்கு முதன்மையாயிருக்கின்ற தேவரீரோ அதனை

வரச்செய்து தரித்தருளவேண்டுமென்றுசொல்லினர். அச்சொல் நிறைவேறுவதற்குமுன்னமே விநாயகமூர்த்தியானவர் மயேசுரனென்கின்றயானையின் சிரசையாவருங்கண்டு தரிசிக்கும்படியாகவரச்செய்து, தமது திருமேனியிற்சேர்த்துக்கொண்டு, மகரகுண்டலம்- கிரீடம்- முத்துமாலை- பொற்றொடி- முதலிய ஆபரணங்களோடு, நான்கு புயங்களும், மூன்று விழிகளும் விளங்கும்படி, இடப்பாகத்திற்சித்தியும், வலப்பாகத்தில்புத்தியுமாகத்தரிசனந்தந்தனர். இவ்வாறு தரிசனந்தந்தருளிய விநாயகமூர்த்தியைத் தேவர்கள் முதலிய யாவருங்கண்டு, பிணிமுழுவது மொழிந்து பேரின்பக்கடலிலாழ்ந்தார்கள். மீட்டும் பிரமனாதிய தேவர்களுமுனிவர்களும் விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளில் முறைமையோடு தாழ்ந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்று, பரப்பிரமசொரூபமாகவிளங்குங்கர்த்தனேபோற்றி, திரிமூர்த்திகளே முதலிய சகலருக்கு மூலகாரணக்கடவுளாகவிருக்கின்ற பரம்பொருளேபோற்றி, ஞானசத்தி கிரியாசத்தி சொரூபமாய்விளங்கிய சித்திபுத்திகளை இருமருங்கினும் பொருந்தவைத்து சராசரப்பிரபஞ்சங்கள் விர்த்தியடையச்செய்தருளுங் தயாநிதியேபோற்றி, யானெனதென்னு மதாங்காரச்செருக்கிற்பட்டு உலகத்தைவாட்டிவரு மசுரர்களைச்சங்கரிக்கவல்ல தேவதேவோத்தனே போற்றி, எம்மையொத்தவழித்தொண்டர்கட்கு நாதனாகவிருந்து தடுத்தாண்டிரட்சிக்கும் பத்தவற்சலனேபோற்றி, சோமசூரியாக்கினியைத்திரிநேத்திரங்களாகக்கொண்டிருக்கும் ஆதிதேவனேபோற்றி, பிறப்பிலியாய்ச்சலனமற்றுஎக்காலத்தும்விளங்கும் பெருமையினைவாய்ந்த தாணுவே போற்றி, எல்லாப்பொருள்கட்கு முதன்மையாகிய பொருள்யாதோ அதற்கு மூலமாகவிருக்கும் அதீதப்பொருளேபோற்றி,எறும்புமுதல்யானையீறுகச்சொல்லும் எண்பத்துநான்குலக்ஷஞ்சீவபேதங்களினிடத்தும் அந்தரான்மாவாகப்பொருந்தி ஆட்டியூட்டியுறக்கிவரும் லோகநாயகனே போற்றி, வேதாகமமுதலிய சாத்திரங்களின்முடிவில்நின்று நிருத்தஞ்செய்யுமண்ணலேபோற்றி, உலகங்களில்வாசஞ்செய்யும்பிராணிகள் எத்தகையராயினும் அவ்வவர்கள்வழிபடும் அந்தந்ததெய்வங்களாகவிளங்கி அவர்கள்மனோபீஷ்டங்களைக் கடாட்சித்தருளுங் காரணவத்துவேபோற்றி, மெய்ப்பத்தியினால் தேவரீரை ஆராதித்து தெரிசிக்கப்பெற்ற புண்யவான்களுக்கு இம்மையில் அளவற்ற போகபாக்கியங்களையனுபவிக்கச்செயது மறுமையில் மோக்ஷசாம்பிராச்சியத்தையுந் தயைசெயதருளும் அடிகளேபோற்றி, வேதாசமங்களையுணடுபண்ணி அவற்றினை அன்புடன்பதக்கிரமமாயப்பாராயணஞ்செயதுவரும்மேன்மை பெற்றவர்களுக்கு மேலானபதவிகளைத்தகுதியாக அனுக்கிரகஞ்செயதுவருஞ்சர்வஞ்ஞனே போற்றி, முப்பத்தாறுதத்துவங்களுக்குமேலாகவிளங்கிநடிக்குந்தற்பரமூர்த்தியேபோற்றி, என்றிவ்வாறு அனந்தமுறை ஒருமைப்பட்டமனதோடுதோத்திரஞ்செயது, ஓசகலசீவராசிகளும்பிழைக்கும்படிஎழுந்தருளிய நாதனே- தேவரீர்கயானனனென்னுந் திருநாமத்தினைக்கொள்ளல்வேண்டும்,மனிதர்கள்தேவர்கள் முதலியோரெல்லாம்அவ்வவர்கள்செய்யுஞ்சற்கருமங்கள்தோறுந் தேவரீர்க்குவழிபாடுசெய்ய, அவ்வவ்வழிபாடுகளில் சுவாமிகளெழுந்தருளிக் கிருபைபுரியவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

அப்போது சிவபிரானும் உமாதேவியும் துக்கத்தினின்று நீங்கிச் சந்தோஷமடைந்து, சித்தியைக்கொடுப்பவரும் முத்தியைக்கொடுப்பவரும் இவ்விக்கினநாசர் விக்கினநாயகரென்றுசொல்லி, ஒப்புசொல்லுதற்கரிய தமது குமாரருடைய மேன்மையான குணங்களைப்பார்த்து உவகைபூத்தார்கள். பின்னர் விநாயகமூர்த்தி யானவர் தமதழகினால் உலகமனைத்தும் விகடனென்னுந் திருநாமத்தாற்றுதிக்கப்பட்டனர். உடனே உமாதேவியார் அவருக்குநீராஞ்சன முதலியவைகளைச் சுழற்றிப்பணிசெய்துவரச், சிவபிரான்யாவரும் விழுப்பமெய்தும்படி அளவற்றமகிழ்ச்சியோடுபூசனைசெய்தனர். இந்திரன் பிரமன் விண்டுமுதலிய தேவர்களும் முனிவர்களும் விநாயகமூர்த்தியினிடத்தில் அளவற்ற வரங்களைப்பெற்றுத் தத்தமிடங்களிற்போய்ச்சேர்ந்தார்கள். கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே, இவ்வாறு விநாயகமூர்த்தி திருவவதாரஞ்செய்தருளியதினம் ஆவணிமாதம் பூருவபக்ஷ சதுர்த்தி யாதலால், அந்தச்சதுர்த்தி தினத்தில் விநாயகரைப் பூசனைசெய்வோர்கள் அடையும்பயனை யார் அளவிட்டுச்சொல்ல வல்லவர்கள். மேலும் அந்த ஆவணிமாத சதுர்த்தியானது உலக மனைத்தும் பூசிக்கப்பெற்ற இறைவராகிய சிவபிரானே பூசித்த நாளாதலாலும், விநாயகப்பெருமான் திருவவதாரஞ்செய்த மேன்மையை யுடையதாதலாலும், அஃது வருடந்தோறும் அவரைப் பூசிப்பதற்கு முக்கியமாகவிருக்கின்றது. யாவரும் விகடனென்றுசொல்லத்தக்க பேரழகினைவாய்ந்த கஜானன விநாயகர் இவ்வாறிருக்க, நாரதமுனிவர் பூலோகத்திலிருக்கின்ற சிந்தூரனிடத்திற்சென்று, அவனால் வந்தனமுதலியவழிபாடுகளைச்செய்யப்பெற்று, அவன்தந்த ஆசனத்திலிருந்து, உன்னையொத்தபராக்கிரமசாலிகள் மூவுலகத்தினுமில்லையென்றுசொல்லினர். அதைச் சிந்தூரன்கேட்டுசந்தோஷித்து, நாரதமுனிவரது மலர்ந்தமுகத்தைநோக்கி, சுவாமி- இதுகாறு மில்லாததாயும், அருமையானதாயும், நூதனமுள்ளதாயும், அற்புதமுற்றதாயுமிருக்கின்ற சரிதம்யாதேனும் உண்டாயின், அதனை அடியேற்குச்சொல்லியருளல்வேண்டுமென்றனன், அதற்குநாரதமுனிவர்மகிழ்ந்து, ஓசமஸ்தவுலகினையும்வென்றதீரனே-நாம் எவ்விடங்களினுஞ்சுபாவமாய்த்திரிகின்றோம், அவ்வாறேஉன்னிடத்திற்கும்வந்தனம்,உன்னால்நமக்குவேண்டுவதுயாதொன்றுமில்லை,இதுகாறுமில்லாததிவ்வியமான சரித்திரமொன்றுண்டு, அதனைச்சொல்லுவோஞ் சோர்வுறுமற்கேட்பாயாக,கைலாயத்தில் உமாதேவியாருடையவயிற்றில் சிரமில்லாமல்ஒருதிவ்வியமானகுழந்தைஉற்பவித்தது,அதற்குமுன்சிவபிரான்யானையின்சிரமொன்றைப்பூசைசெய்துகொண்டிருந்தனர், அச்சிரத்தை அக்குழந்தையானது தனதுதாய்துயரநீங்குமாறுதானேவரும்படிசெய்து தனது சரீரத்திற்றரித்துக்கொண்டது, மேலும்- அக்குழந்தையோ மிக்கவலியினையுடையது, உயர்ந்தஅறிவினையுடையது, அக்குழந்தைக்கு நிகர்யாவரையுங்காணோம், அஃது முதலிற் கவந்தமாய்ப்பிறந்தது யாதுகாரணத்தினாலோ அறிகின்றிலம், பின்னர் அதுவே யானைமுகத்தினைத்தரித்துக்கொண்டிருக்கின்றதென்றனர். இவையனைத்தையுஞ் சிந்தூரன்கேட்டவுடன் அயர்ந்து மூர்ச்சையாகிப்,பூமியில்வீழ்ந்து,மீட்டுத்தெளிந்தெழுந்து, உள்ளந்தளர்ந்து வெய்துயிர்த்துக்கித்து,முன்னம் நமக்குஆகாசவாக்கொன்று

உண்டாயிருந்தபடி அவனே நமக்குப்பகைவனென்றுநிச்சயித்து, ஓ மகதிமுனியே- அக்கஜானனமுகத்தையுடைய மைந்தனை எவ்விதத்திலேனும்யான்கொல்லல்வேண்டும், கொல்லாதுவிடுத்தால் அவன் என்னைக்கொல்லுவான், இதுசத்தியம், இத்தினமே அவனிருக்குமிடத்திற்சென்று, அவன்தந்தையாகிய பரமசிவன் அவனை எவ்விதத்திற்பாதுகாத்து வைத்திருந்தாலும்பற்றி இழுத்துக்கொண்டுவந்துகொன்று பத்துத் திசைகளினும் எனது பராக்கிரமத்தை நாட்டிவைப்பேனென்றுசொல்லினன். அதனை நாரதமுனிவர்கேட்டு முகமலர்ச்சிகொள்ளத், தானும் முகமலர்ச்சிகொண்டு, மிகுந்த ஊக்கத்தோடும் யுத்தத்திற்கெழுந்தனன். அப்போது நாரதமுனிவர் அவனைநோக்கி, ஓ புநிதனே- நாம்உனக்கு இதஞ்சொல்ல இங்குவந்தனம், நீயோ பிரமதேவனுடைய முகத்திற்பிறந்து அவனால்அளவற்றமேலான வரங்களைப்பெற்று இதுகாறும் ஓர்வருத்தமின்றி வாழ்ந்திருக்கின்றனை, மேலும் அப்பிரமதேவனையும் உன்னைக்கண்டவுடன் அஞ்சிப் பதுங்கும்படியாகச்செய்தனை, இத்தன்மைத்தானவல்லபத்தையுடைய உனக்குநாமுரைப்பதென்ன விருக்கின்றதென்று நயங்கூறி, அவ்விடத்தினின்று மகன்று, கைலாயவரையையடைந்து, உமாதேவியாரெதிரில் நின்று, ஓசகத்ரக்ஷகியே- தேவரீர்குமாரரைக் கொல்லும்படியாகச்சிந்தூரனென்பவன் இதோவந்து விட்டனனென்று சொல்லிப்போயினர். இவ்வாறு நாரதமுனிவர்சொல்லி அகல்வதன்முன்னர், அழலைத்தானே சொரியும்படியான விழிகளையுடைய சிந்தூரனானவன் கயிலைக்குவந்து, விண்ணுலகமண்ணுலக முழுவதுநடுங்கும்படி ஊழிக்காலத்திலுண்டாகின்றஇடியேற்றினையொப்பக்கர்ச்சித்து, குரூரமானசொற்களைக்கொண்டு, எனக்குப்பகைவனாக இங்கு உதித்திருக்கின்றவன் எவனோ அவன் என்னெதிரில் வரக்கடவன், யானைமுகத்தோடுகூடியிருக்கின்ற அவனைக்கொல்லுவதற்குயான் ராஜகண்டீரவத்தைப்போல வந்திருக்கின்றேன், விண்டுபிரமன் முதலியதேவர்களில் ஒருவரேனும் என்னெதிரில்நின்று எதித்தவர்களில்லை, சராசரங்களையெல்லாம் ஓர்நிமைப்போதில் சாம்பராக்கியிருக்கின்றேனென்று சொல்லி ஆர்ப்பரித்தனன். இவ்வாறு ஆர்ப்பரித்து அறைகூவியிருக்கின்ற சிந்தூரன்முன்னே யானைமுகத்தினையுடையவிநாயகமூர்த்தியெழுந்தருளி, அடாதுட்டனே- உன்னைக்கொல்லத்தக்கமகாபராக்கிரமத்தினையுடைய வீரன்யாமே, நம்மைவிண்டுபிரமனாதியரைப்போல நினையற்க, நம்மையெதிர்த்ததேவர்கள் அவுணர்கள் அரக்கர்கள் முதலாயினோரையெல்லாம் அப்போதைக்கப்போது வந்து சங்கரித்திருக்கின்றனம், வருணநான்கினையுங் காய்ந்தனம், நதிகள்முதலானவைகளையொழித்தனம், மலைகள்முதலானவைகளையழித்தனம், பிரபஞ்சங்களையெல்லாம் ஆக்கலும் அழித்தலும் நமதுசெய்கையேயல்லாமல் வேறாய்நினையற்க, உன்னால்மாய்க்கக்கூடாத சகத்தினையெல்லாம்யாமாய்ப்போம், உன்னால்மாய்த்திருக்கின்ற சகத்தையெல்லாம் உனதுகண்ணெதிரிற்றானே சிருட்டிப்பம், தேவர்கள் முதலாயினோர்க்கு மறலியைப்போன்றநின்னையும் அவ்வாறே அழித்துவிடுவம், அதைஇப்போதே நீகாணக் கடவையென்றனர். அவையனைத்தையும் பராக்கிரமத்திற்சிறந்த சிந்தூரன்கேட்டு இவனே நமக்குப்பகைவனென்று தன்மனதில் நிச்சயித்தும் அவனாக

சிறுகுழந்தையென்றே அவமதித்து, ஓபிள்ளாய்- நீயென்வீணிலென்னைப் பகைத்துமாளவேண்டும், ஐயோ-உன்னைப்பார்த்தால் எனக்குக் கொல்ல சம்மதமில்லை,எங்குமில்லாதபேரழகைப்படைத்திருக்கின்றனை, நீயுன்தாயிடத்திற்சென்று,முலைப்பாலுண்டு,அவள்கண்களிக்கும்படியாகமுன்றிலில்விளையாடிச்செல்லுகவென்று இழிச்சொல்கூறிநகைத்தனன். அதைவிநாயகமூர்த்தி கேட்டு,அடாசுத்தமூடசிரோமணீ-கனத்தஇருட்கூட்டங்களை ஓர்சிறியகிரியினைவாய்ந்ததீயங்கொல்லும்,அண்டமுகட்டையுமிஞ்சும்படியானபெரியபர்வதங்களை ஓர்சிற்றுளிபிளக்கும், மும்மதங்களையும் பொழிகின்றயானைக்குழாங்களை ஓர்சிறிய அங்குசமடக்கும், நம்மைச் சிறுகுழந்தையென்றவமதித்துக்கூறினை, யாம்யமனைப்போலவந்து உன்னைக்கொல்லத்தக்க காளையென்றறிந்திலைபோலும், என்றுசொல்லி, உடனே தமது சிரமானது அண்டகோளகையையெட்டும் படியாகநீண்டு,பெரியபர்வதங்களுக்குச் சமானமான புசங்களோடு- சிரம்- விழி- செவி- முகம் - கரம்- பாதமுதலிய உறுப்புக்களனைத்தும்ஆயிரமாயிரமாகவிளங்க விஸ்வரூபங்கொண்டு,சொர்க்காதிஉலகங்களனைத்தையும் ஓர்நொடிப்போதில் தமக்குள்ளே யொடுக்கினர். அவ்வற்புதத்தைச் சிந்துரன்பார்த்து, சிங்கத்தைக்கண்டயானைபோலவும், சிம்புளைக்கண்ட சிங்கம்போலவும், கருடனைக்கண்ட பாம்புபோலவும் பயந்துநடுங்கினன். அதனைச்சத்துச் சித்தானந்த சொரூபராய் விளங்கிய விநாயகக்கடவுள்நோக்கி, ஓபேதாய்- சகலலோகங்களும் நமக்குள் ஒடுங்கியதைக்கண்டனை,மீட்டும்அவைகளை வெளிப்படுத்துவங் காண்பாயாகவென்று திருவாய்மலர்ந்து, தமது முகத்தில் அந்தணரையும், புசத்தில் அரசரையும், முழந்தாளில் வணிகரையும், பாதத்தில் சூத்திரரையும், விழியிற்சூரியனையும், இதயத்தில் சந்திரனையும், நாசியில் அக்கினியையும், உந்தியில் ஆகாயத்தையும்,முடியில் விண்ணுலகையும், அடியில்மண்ணுலகையும், செவியில்திக்குகளையும், ஏனைய திருவுருவங்களில் கடல்கள் மலைகள் நதிகள் முதலியயாவையுமுண்டாக்கி, இவையனைத்தையுங்கண்டு நடுக்கமுற்றிருக்கின்றசிந்துரனைப்பார்த்து நகைத்து, முன்னர்நம்மிடத்திலொடுங்கிய உலகங்களையெல்லாமீட்டும்நாமேஉண்டாக்கியதைக்கண்டனையல்லவாவென்று திருவாய்மலர்ந்து, ஒரோலென்றுநீண்டதுதிக்கரத்தினால்அச்சிந்துரனைவாரியெடுத்துக்குழைத்துத்,தமதுமத்தகத்தில்மகிழ்வோடுபூசிக்கொண்டனர். திசைகள்தோறுஞ்சென்றுகமழும்படியானபரிமளத்தினைவாய்ந்தசிந்துரனுடையசரீரமானது ஐங்கரக்கடவுளாகிய விநாயகமூர்த்தியினது மத்தகத்திற்குச்சாந்தாகியது. அவனுயிரானது அக்கடவுளுடைய திருவடிகளையடைந்துபேரானந்தமெய்தியது.உடனே ஆகாயத்தில்பஞ்சகருவிகளுமுழங்கின. தேவர்கள்புட்பவருடஞ் சொரிந்தார்கள். கந்தருவர்கானம்பாடினார்கள். முனிவர்கள் வேதமோதினார்கள். ஞானவித்தகராகிய விநாயகக்கடவுள் பழையபடி குழந்தையுருவாயமர்ந்தருளினர். உலகமனைத்தும்பேரானந்தவாரியிற் றிளைத்தன. உருத்திரன் விண்டு பிரமனாதியதேவர்களெல்லாம் அவ்விடத்தில் வந்து, மிகுந்தபத்தியோடு விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளிற்பூசித்தார்கள். கொன்றைப்பூமாலையினையணிந்த சிவபிரான் அத்தேவர்கள் வேண்டுதலின்பேரில் கஜானனமூர்த்தியினையாவரினு மேன்மைபெற்றிரு

க்கும்படி வைத்தனர். பின்னர்பிரமதேவன் தனதுகரத்திலிருக்கின்ற கமண்டலதீர்த்தத்தால் விநாயகமூர்த்திக்குப்பாத்திய முதலியவைகளைச்செய்து பூசித்து, கரத்திற்செந்தாமரைப்பூவினைக்கொடுத்தனன். அவ்வாறே வருணன்பூசித்து மிகுந்தவல்லபத்தையுடைய பாசத்தைக் கொடுத்தனன். தேவேந்திரனானவன் தனதுகற்பகவனத்திற் பூத்தசெந்தாமரை மலரினாலுஞ்செங்குவளைமலரினாலுங் கட்டப்பட்டிருக்கின்ற மாலையைத்தரித்துப்பூசித்து,நிருத்தகீதவாத்தியங்களைச் செயவித்து மகிழ்ந்தனன். சிவபிரான் சூலாயுதத்தைக்கொடுத்தருளினர். மற்றுமுள்ளவர்களனைவரும் வேறுவேறுபூசித்து அவ்வவர்கள் கையிலகப்பட்ட பொருள்களைக் கொடுத்துத் தீர்க்கதண்டன்செய்தார்கள். இவ்வாறுயாவராலும் பூசிக்கப்பெற்றகஜானனமூர்த்தியானவர்பின்னர்அங்கிருந்தபடி மறைந்தருளினர். இச்சரித்திரத்தைக்கருப்பமுற்ற ஸ்திரீகளீனமாட்டாது யாதனைபடுங்காலத்தில் அவர்கட்குச்சொன்னால், உடனேவருத்தமனைத்துநீங்கிப்பிள்ளையைப்பெறுவார்கள். அக்குழந்தையும் நற்குணநற்செய்கைகளோடுதளர்வின்றிவளரும்.யாவரோனும் யாத்திரைசெயயுங் காலத்தில் இதனைச்சொல்லிக்கொண்டுசென்றால், சென்றவிடத்திற் செயம்பெறுவார்கள். அரசர்முதலாயினோரைவெல்லவேண்டி அவர்கள்சபையிற்செல்லுவோன் இதனைப்பத்தியோடுதுதிசெய்து செல்லுவானாயின், அவன்யாவராலும் தோல்வியுறாதுவெற்றிபெற்றுமீளுவன்.

கணபதிதுணை.

நான்காவது,

விக்கினராசர் திருவவதாரப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தி கஜானனர் திருவவதாரங்கொண்டு, பிரமதேவன்கொட்டாவியினின்று முதித்தசிந்தூரனைக்கொன்று, தேவர்கள் முதலாயினோரைக் காத்தருளியதிருவிளையாடலைச் சொன்னோம், இப்பால் விக்கினராசதிருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச்சொல்லுவோங்கேட்பீராக.வெள்ளியங்கிரிக்குத்தலைவராகியசிவபெருமான் தமதுதிருமேனிமுழுவதுந்திருவெண்ணீற்றினையணிந்திருப்பதுபோல, எக்காலத்தினுஞ்சத்தமேகங்கட்குமிருப்பிடமாய், அளவிடற்கரியபனிப்படலங்களால்எங்குமூடப்பட்டிருக்கின்றது இமயமலை. அம்மலையில்-தவத்தர்கட்கெல்லாந்திலோதகம்போலச்,சகலவிரதங்களினுஞ்சீர்த்திபெற்ற வுள்ளத்தோடு, தத்துவமனைத்தினையுமுணர்ந்து, அவத்தைகளினின்று நீங்கியாத்மது மெய்யறிவினால் வேதாகமங்களையபேக்ஷித்து வருகின்றபக்குவர்கட்கு அவைகளைப்போதித்து, அவர்களை அவக்கடலினி

ன்றுமெய்த்துப் பாதுகாக்கவல்லவராய், † அகப்பற்று புறப்பற்றென்னுமிரண்டனையுந் துறந்தவராய், பிரமம்- தெய்வம்- பூதம்- பிதிர் - மானுடம்- ¶ என்கின்றஐவகைவேள்வியினையும் பிரதிதினமியற்றும்இயல்பினராய்ச், சிவபெருமானுடைய திருவடிகளை யன்றி வேறொன்றினைச் சிந்தை செய்யாதவராய், சாபாநுக்கிரக சாமார்த்தியத்தினையுடையவராய் விளங்கிய சவுபரியென்னுமொரு முனிபுங்கவரிருந்தார். அவர்-குற்றமற்றகற்பினும்வனப்பினுந்தனக்கொருவர் நிகரில்லாதபெருமையினைவாய்ந்த மனோமயையென்னுமனைவிபணிசெய்ய வாழ்ந்திருக்குநாளையில், ஓர்நாள் அம்முனிபுங்கவர் நதியில்ஸ்நானஞ்செய்யச்சென்றனர். அவர் மனைவியானவள் ஆசிரமத்திற்பணிசெய்திருந்தனள். அச்சமயத்தில் கருணைநாயகராகிய விநாயகக்கடவுளுடைய திருவடிகட் கிடைவிடாது பூசனைசெய்துவருபவனாய்,ஆகாயமார்க்கத்திற் சஞ்சரித்துக்கொண்டிருந்த கிரவுஞ்சனென்னும் ஓர் கந்தருவராசன் அவ்விருடிபத்தினியைப் பார்த்தனன். உடனே சூத்திரக்கயிறற்று வீழ்ந்தாற்போல ஆகாயத்தினின்று மிறங்கி, அவ்வாசிரமத்தில்வந்து, தன்னைமுடுக்கிய விரகத்தினால் அவ்விருடி பத்தினியை முன்னதாயொன்றுங்கேளாது கரம்பற்றினன். அவ்வாறுபற்றலும், அவ்விருடி பத்தினியானவள் பூனைவாயிற்பட்ட கிளியினைப்போல நடுநடுங்கி, மனநதளர்ந்து, தனதுகற்பின்வலியால் அவனையானைமேலெழுஞ் சிங்கத்தைப்போலச்சீறித், தனதுள்ளத்திற் கொதித்தெழுகின்ற கோபத்தினாலவனைப்பார்த்து, அடாபாவி- எனது பிராணநாயகரில்லாத சமயம்பார்த்து என்னைக்கைப்பற்றிக் கலவிக்கிழுக்கின்றனை, இனி என்கரத்தைவிடாமற்போவையெனில் உன்னை இவ்விடத்தில் நீறாக்கிவிடுவேனென்று சொல்லினள். அத்தருணத்தில் ஸ்நானஞ்செய்யச்சென்றிருந்த சவுபரிமுனிவர் மீட்டும்ஆசிரமத்திற்குவந்து, தமதுபத்தினியினுடைய கரத்தைக்கிரவுஞ்சன் பிடித்திழுப்பதைப்பார்த்துக், கண்களில் அனற்பொறியெழும்பவும், இதழ்கள்துடிக்கவும், புருவங்கள்நெறியவுமாகக் கோபித்து, அடாமூர்க்கனே- ஓரபராதமுஞ்செய்யாத இவளைநீகரம்பற்றி இழுக்கவேண்டுங் காரணமென்ன,இவ்வாறு விரோதுவாய் அவளதுகரத்தைப்பற்றிய குற்றத்தினால் நீ இனி மண்பறித்து வளையிலொளிக்கின்றமூடிகமாகக்கடவதென்று சபித்தனர். உடனே அக்கந்தருவராசன் பயந்து, சுவாமி- அடியே

---

† அவையாவன - உயிர்களுக்கு மாயையினுண்டாகிய தனுகரணபுவனபோகங்கள் நான்கனுள், தனுகரணங்களை யானென்னுமகப்பற்றாகவும் புவனபோகங்களை எனதென்னும் புறப்பற்றாகவுஞ்சொல்லப்படும். இவற்றுள்- தனுவென்றது, தேகத்தை. கரணமென்றது, அந்தக்கரணப்புறக்கரணங்களை. புவனமென்றது, பூபூதராதிபிரபஞ்சத்தை. போகமென்றது, சத்தாதிவிடயங்களை. அன்றியும்- கரணங்கள்தனுவுக்கு அபேதமாயும், புவனங்கள்போகத்திற்கு அபேதமாயு நிற்கையால் தேக. போகமென்றிரண்டாகவுஞ் சொல்லப்படுமெனக்கொள்க.

¶ இவற்றுள் வேதமோதல், பிரமயாகம். ஓமம்வளர்த்தல், தெய்வயாகம். பலியீதல், பூதயாகம். தருப்பணமுடித்தல், பிதிர்யாகம். இரப்போர்க்குஉணவுமுதலியவீதலே, மனுடயாகம்.

ன் கிரவுஞ்சனென்னுமரசன், யான் ஆகாயத்திற் செல்லுகின்றபோது இவர்ழனைக்கண்டு மோகித்துவந்துகரம்பற்றினேன், அதுவன்றியான் ஒரு பாதகமுஞ்செய்தறியேன், அடியேன் இவர்கரம்பற்றிய பிழையினைப்பொறுத்துத், தேவரீர் அடியேற்குக்கொடுத்த சாபத்தினைநீக்கியருளல்வேண்டும், அடியேன் தேவரீரைச்சரணடைந்தேன், இனி அடியேற்குத் தேவரீரையன்றி வேறுதுணையில்லையென்று பிரார்த்தித்தனன். அதற்கு விருப்பும் வெறுப்புமற்ற சவுபரிமுனிவர் மனதிரங்கி, ஓகிரவுஞ்சனே-நெருப்பினுடைய சூடு குளிர்ந்தாலும், நீரினுடைய குளிர்ச்சி வெம்மையானாலும் நமதுவாக்கு ஒருகாலத்தும் பொய்ப்பதில்லை, நீதகாதகாரியத்திற்குடம்பட்டனையாயினும் உடனே நம்மைச் சரணடைந்தனையாதலால், உனக்கு யாம்கிருபையோடு சாபத்தீர்வுசொல்லுகின்றோம்கேள், திருமாலைஇடபமாக ஊர்ந்தருளிய சிவபிரானுடைய குமாரராகிய விநாயகமூர்த்தியானவர் இன்னுஞ்சிலநாளையுள் பராசுவமுனிவருடைய கிரகத்தில் அவதரித்தருளுவர், அப்போது நீ அவருக்கு வாகனமாகி, விண்டுவாதிதேவர்கட்குங் கிடைத்தற்கரிய பாக்கியத்தைப்பெற்று, யாவருமவந்து பணியும்படியான முதன்மையோடு முத்தியையும் பெறுவையோவென்று அநுக்கிரகஞ்செய்தருளினர். அப்பால்மேருகிரியைப்போல மற்றொரு மேருகிரி உண்டானதென்று சொல்லும்படியாக அக்கிரவுஞ்சன் ஒரு மூஷிகமாகி, உலகமெங்குந்திரிந்துகொண்டிருந்தனன். இவன்சரிதமிவ்வாறாக, இந்திரனானவன் தனது சுவர்க்கலோகத்தில் அரசியற்றி வருகின்ற நாளையில், ஓர்நாள் நாரதமுனிவர் அவனிடத்திற்குவருவதாயினர். அவர்வரவை அவ்விந்திரன் தூரத்தேயறிந்து, உடனே தனது சிம்மாதனத்தைவிட்டிறங்கி, அளவற்றதேவர்கள் தன்னைப்புடைசூழ்ந்து வர அவரை எதிர்கொண்டு போயழைத்துவந்து, ஓர் சிறந்தஆதனத்திலிருக்கவைத்து, மிக்கபேரன்பினோடுந் துதித்துப்பூசனைசெய்தனன். அவன்செய்தபூசைக்குந்தோத்திரங்கட்கும் நாரதமுனிவர்மனமகிழ்ந்து, ஓதேவராசனே-பூலோகத்தில் ஓர்புதுமையைக்கண்டு இங்குவந்தனம், அப்புதுமையைச் சொல்லுமிடத்து உனக்குந்தேவர்கட்கு நன்மைபயப்பதாகவேயிருக்கும், அஃதியாதெனில்- இமயகிரிக்கும் விந்தகிரிக்குமத்தியில் ஏமவதியென்று ஒருநகரமிருக்கின்றது, அந்நகரத்திற்கரசன் அபிநந்தனனென்னும் பெயரினையுடையவன், அவன் இப்போது ஓர்பெரிய யாகத்தினைச்செய்யத்தொடங்கினன், அந்தயாகத்திற்கு உன்னைவரிக்காது உனது சொர்க்காதிபோகங்கள் தனக்குக்கிடைக்கவேண்டுமென்று குறித்திருக்கின்றனன், மேலும் அந்தயாகத்திற்கு இருத்துக்கள் வந்திருக்கின்றார்கள், இந்நிமித்தத்தில் அவ்வரசனைச்செயிக்காமற் போவையெனில் அவன்செய்யத்தொடங்கிய யாகத்தின் முதனாளிற்றானே உனதுபதவியை இழந்துபோவை, அதனால் உனக்குச்சகல விடர்களும் உண்டாகுமாதலால், விரைவில் அதற்கேற்றபடி முயலக்கடவையென்று சொல்லி நாரதமுனிவர் எழுந்தருளிப் போயினர். பின்னர் இந்திரன் இதற்கென்ன செய்யவல்லோமென்னுமாலோசனையிற்றலைப்பட்டவனாகி, அவ்வவர்கள் செய்துவரும் பலகருமங்களிலும் முதலில்நமக்குஞ் சந்திரனுக்கும் பிரமதேவனுக்கும் அவிற்பாகங்கொடுக்கவேண்டுமென்று வேதத்திலும் சுருதியிலும் ஸ்மிருதியிலும் ச

வுதத்திலும் ஸ்மார்த்தத்திலும் விதித்திருக்க, இதுகாறும்அவ்வாறே யா
வருங்கொடுத்துவர, இப்போது அம்முறைமையினின்றுந் தப்பி யாகஞ்
செய்துவருகின்ற அபினந்தனராசனைச் சங்கரிக்கத்தக்கவன் உலகமனைத்
தையுங் கலக்கியழிக்கத்தக்க காலரூபியேயல்லாமல் வேறொருவ ரில்லை
யென்று தன்மனதில் நிச்சயஞ்செய்தனன். இவ்வாறு நிச்சயிக்கு முன்
அக்காலரூபியென்போனும் அவ்விந்திரனுக்கெதிரில்வந்து நின்றான். அவ
னை இந்திரன்சிறக்கப்பார்த்து, ஓ காலரூபியே-நீ இங்கிமிடத்தில்அளவற்ற
ரூபங்களோடும்பூலோகத்திற்சென்று, அபினந்தனராசனையழித்து, அவன்
செய்கின்ற யாகத்திற்கும் மற்றுமுள்ளோர்களாற் செய்துவருகின்ற யா
கங்கட்கும்பலவிக்கினங்களை நடாத்தி அழித்துவிட்கடவையென்றுசொ
ல்லியனுப்பினன். உடனே காலரூபியானவன்தனதுபுருவங்களை நெறித்து
க்கோபித்து, அளவற்ற விக்கினரூபங்களைக்கொண்டு,பூவுலகத்திற்சென்று
அபினந்தனராசனுடையயாகசாலையில் மிகுந்தகோரத்தினோடும்பிரவேசி
த்து, அவனையும் அவன்யாகத்திற்கு வந்திருக்கின்ற இருதுக்களையு நாச
ஞ்செய்து, மற்றையோரையெல்லாந் தன்னைத்தெண்டனிட் டோடும்ப
டியாகமுடுக்கி, அவிறபாகத்திற்குச்சேகரித்திருந்த பொருள்களையெல்லா
ம் அள்ளியுண்டு, ஓமகுண்டத்தையிடித்துத்தள்ளி, அதிற்புழுதிகளை நிர
ப்பியவித்து, யாகசாலைமுழுமையுந் தூளாக்கிப், பலபண்டங்களையமைத்
து வைத்திருந்த பாத்திரங்களையெல்லாம் உடைத்தெறிந்து, அவ்விடத்
துநின்று நீங்கித், தீக்கூட்டங்களெழுந்துசெல்லுவதுபோலத் திசைகள்
தோறுஞ்சென்று, ஆங்காங்குசெய்துவருகின்ற யாகங்களையெல்லா மழி
த்து, அந்தயாகத்தலைவர்களையுநாசமாக்கி, எவ்விடங்களினுந் துன்பங்க
ளையேவிளைத்துச், சிலரை அருவமாய்ச்சென்று தாக்கியும்,சிலரைஉருவ
மாய்ச்சென்று ஒழித்தும், ஓர்நொடிப்போதில் திசைமுழுவதுஞ் சுழன்
றும், வெதாகமநெறிகளையெல்லாம் பேதிக்கச்செய்தும், இவ்விதமான
விக்கினங்களை நாடோறுஞ்செய்துவந்தனன். இவ்வாறு காலரூபிசெய்து
வருகின்ற துன்பங்களினாலே அளவற்றமுனிவர்கள் ஓரிடத்தில் ஒன்றாகக்
கூடி, சகலசீவராசிகளையும் ஆக்கவும் அழிக்கவும் வல்ல தயாபரமூர்த்தி
யைத் துதிசெய்வதானார்கள்.

எண்ணிலாருயிர்களினிதயபங்கய... ... ... *
நண்ணுநாயகவுயிர்நவிற்றுகன்மத்தி... ... ...*
னண்ணுசான்றாகியவமலவெங்கள்பாற் ... ... *
றிண்ணியவிக்கினந்தீர்த்தல்வேண்டுமே... ... ...*

பல்வகைப்பூதமும்படைக்கும்பண்ணவ ... ... *
நில்வகையனைத்தையுநிறுத்துநிர்குண ... ...*
கொல்வகைசெய்தருள்கூடுங்கொற்றவ ... ... *
புல்வகைவிக்கினம்புரட்டல்வேண்டுமே... ... ...*

அங்கமேயுபாங்கமென்றவற்றினோடுறுந்... ... ... *
துங்கநான்மறைகளுஞ்சுவசமாகிய ... ... *

வங்சணவடியரோமாவிதுங்கிடப் ... ...*
பொங்கியவிச்கினம்போக்கல்வேண்டுமே ... ... *

இவ்வாறு பலமுறைதுதிசெய்து, எத்தகையோராலும் யாசிக்கப்படுமிறைவனே- சகலலோகங்களுங் கைக்கும்படியாக இடைவிடாதுவிக்கினங்களைச் செய்துவருகின்ற காலரூபியினால் அடியேங்களபயமடைந்திருக்கின்றனம்,இனி அடியேங்களை அவன்செய்துவரும் விச்கினங்களினின்றுமெடுத்துக் காத்தருளல்வேண்டும், அடியேங்கள் சக்தியற்றவர்களாய், ஆதாரமற்றவர்களாய்,நித்தியநைமித்திய கருமங்களில்லாராய், இயல்பானவொழுக்கங்களில் வேறுபட்டவர்களாய், மயக்கங்கொண்ட மனத்தினையுடையவர்களாய்,எல்லாப்போகங்களையுமிழந்துதேவரீருடையசரணாரவிந்தங்களில் அடைக்கலம்புகுந்தோம்,ஓசங்கரா- ஓசயம்புவே - ஓதற்பரா-வென்றுபலமுறை பிரார்த்தித்தார்கள்.அதற்குவிஸ்வரூபியாயும் வியாபகராயுமிருக்கின்ற விநாயகப்பெருமான் கிருபைசுரந்து, அம்முனிவர்கட்கெதிரில் அதிரிசியவடிவமாயெழுந்தருளி, ஓதபோதனர்களே- உங்கள் மனதிலிருக்கும் வேதனைகளையும்பயங்களையும் ஒழிமின்கள்,இனியாவரையுந் துன்பஞ்செய்துவருகின்றவிக்கினனை அடக்கவும்,வேதாகமநெறிகளைத்தப்பாது வளர்க்கவும்,அடியார்களும்சாதுக்களும்வேண்டியவைகளை அருள்செய்பவும், மூவுலகங்களையுங் காத்துரக்ஷிக்கவுமாகயாம் அளவற்றதவங்களைச்செய்திருக்கின்ற வரேணியராசனுடைய கிரகத்தில் அவதரிக்கப்போகின்றன மென்று திருவாய்மலர்ந்தருளினர். அத்திருவாக்கினையெல்லாமுனிவர்களுஞ் செவிக்கமுதாகக்கொண்டு, விநாயகமூர்த்தியினுடைய திருவுருவைக்கண்களாற் காணதவர்களாயினும், இஃது சுவாமிகளுடைய திருவாக்கேயென்று மிகுந்தஆனந்தத்தினையுடையவர்களாகி, அப்போதேசகல விக்கினங்களையு மொழித்தவர்போல விநாயகமூர்த்தியினுடைய திருவருளையே கடைப்பிடித்திருந்தார்கள். இவர்கள் சரிதமிவ்வாறாக,பூர்வத்திற்றானே பெரியதவங்களைச்செயதுநிறைவேற்றினவனாய்,தேவர்களும் வழிபடத்தக்கயோக்கியனாய், திசைகளனைத்திலுஞ்செல்லும்படியான கீர்த்தியையுடையவனாய், வரேணியனென்னும் பெயரினையுடைய ஓரரசனிருந்தான். அவனுக்குப்புட்பகையென்னும் ஓர்மனைவியிருந்தனள்.இவர்கள்நெடுநாள் ஒருபுத்திரப்பேற்றினைவேண்டிஅளவற்றதருமங்களையுந்தானங்களையும் இடைவிடாதுசெய்துகொண்டுவந்தார்கள்.பின்னர் விநாயகப்பெருமானுடையகிருபையினால்புட்பகைவயிற்றிற்கருவுண்டாகிப்,பத்தாந்திங்களில் கருப்பயாதனைகொண்டு ஓர்புதல்வனைப்பெற்றனள். அப்புதல்வனை விநாயகமூர்த்தியானவர் அங்கிருந்தோர்க ளறியாத வண்ண மறைத்துத், தாமே யொருகுழந்தையாகியிருந்தனர். அக்குழந்தை மிகுந்த அழகும், யானைவதனமும், மழுமுதலிய ஆயுதங்களையேந்திய நான்கு திருக்கரங்களும், நீண்டதுதிக்கரமும், பெருத்தவயிறும் விளங்க விருக்கின்றதை, அங்கிருந்தவர்கள் பார்த்துப்பயந்துஓடிப்போனார்கள். புட்பகை மாத்திரம் அவ்வறையினின்றும் அப்பாற் போகக்கூடாதவளாய் மயங்கி, பிரசவித்தவேதனையினும் பதின்மடங்கு அதிகமான வேதனையைப்பொருந்தினவளாய், ஐயோ-புத்திரப்பேறுவேண்டி அளவற்ற பெருந்தவங்க

கத்தான தவங்களினால் வரும்பயன், இதுவேயோகாதிகளால் தியானிக்கப்படுகின்றவத்து, இதுவே எல்லாச்சோதிகளையும் உண்டாக்குவ தற்கு மூலகாரணம், இதுவே வேதாகமபுராணங்களில் கூறப்பட்டிருக்கின்ற பொருள், இதுவேபரப்பிரமமென்று சொல்லப்படுகின்றவொளி, என்றுஅனந்தமுறை துதிசெய்து தனதுகரத்திலேந்திக்கொண்டனள். இவ்வாறு மிகுந்தமனமகிழ்ச்சியோடும் வீரியவற்சலையானவள் அக்குழந்தையைக் கரத்திலேந்திய மாத்திரத்தில் தனதுதனங்களில் அமுதஞ்சுரந்து வழிய, அவ்வமுதத்தைஅக்குழந்தைக்குஊட்டி, அளவற்றஅன்போடும்வளர்த்து வந்தனள். புத்திரப்பேறுவேண்டி அளவற்றநாள் அரியதவங்களைச்செய்து நிறைவேற்றிய புட்பகையானவள் அக்குழந்தையைவிரும்பாது துறந்திருக்கச், சிறிதும்வேண்டாதிருந்தவீரியவற்சலையானவள் அதனையெடுத்து வளர்க்கப்பெற்றுளெனில், அவளது புண்ணியத்திறத்தை யார்அளவிடவல்லவர்கள். இவ்வாறு குணங்குறிகடந்த கொள்கையராகிய விநாயகப்பெருமான் பராசுவமுனிவர் ஆசிரமத்தில் நாளுக்குநாள் வளர்பிறையைப்போலவளர்ந்து வருகின்றநாளையில், முன்னர் சவுபரிமுனிவருடையசாபத்தினைப்பெற்ற கிரவுஞ்சனென்னு மூடிகமானது, ஒருநாள் அம்முனிபுங்கவருடைய ஆசிரமத்தினருகில்வந்து, மலைகளையகழ்த்துசாய்த்தும், சுவர்களைக்கெல்லித்தள்ளியும், மரங்களைக்கிண்டி வீழ்த்தியும், வேதிகைகுண்ட முதலானவைகளைத்தோண்டிப் பறித்தும், அறைகளிலுள்ள வத்திரங்களையும் புத்தகங்களையுங் கடித்தும் பாழாக்கிக்கொண்டுவர, அவ்வுபத்திரவங்களைப் பராசுவமுனிவரால் சகிக்கக்கூடாமல், இதற்கென்னசெயவோமென்று மனதிற்கவலைகொண்டனர். அக்கவலையை விநாயகப்பெருமானறிந்து, நமதுகரத்தினால் அம்மூடிகத்தைப்புடைத்து, அதனதுகொடுஞ்செயகைகளை யடக்குவோமென்றுகூறி, அம்முனிவருடையகவலையையொழித்து, உடனேஅம்மூடிகத்தின்மீது தமதுபாசத்தையேவினர். அப்பாசவரவைஅம்மூடிகங்கண்டலும், பூமியைக்கிழித்துக்கொண்டுபோய், பாதலலோகமேழினையுமழித்து, மீட்டுமேலெழும்பிவந்து, சொர்க்கலோகம்உருத்திரலோகம் அக்கினிலோகமுதலானவைகளையலைத்துக்கொண்டு, சிவலோகபரியந்தஞ்சென்றது. அதுசென்றவிடங்களிலெல்லாம் வினையைப் போல அப்பாசமுங்கூடச்சென்று, அம்மூடிகத்தினுடைய பராக்கிரமங்களெல்லாமொடுங்கும்படியாகப்பிடித்துக்கட்டி, விநாயகமூர்த்திக்கெதிராக்கொண்டுவந்துநிறுத்திவணங்கியது. அப்போதுஅம்மூடிகமானதுவிநாயகமூர்த்தியினுடையதிருமுகத்திற்குநேராகத்தனதுதலையையெடுத்துப்பார்த்து, ஓசர்வஞ்ஞமூர்த்தியே—அடியேனைக்கொடியனென்றெண்ணிவதை செய்யவேண்டாம், தேவரீரைச்சரணடைந்த அடியேன்சரிதத்தினைச்சிறிதுகேட்டருள்க, அடியேன் முன்னங்கந்தருவராசனாகவிருந்தேன், எனது பெயரைக்கிரவுஞ்சனென்றுசொல்லுவார்கள், ஓர்நாள் சவுபரிமுனிவருடையபத்தினியாகியமனோமயையென்பவள்அழகினைக்கண்டுமோகித்தேன், அதற்கு அம்முனிபுங்கவர் அடியேன்மீதுகோபித்து மூடிகமாகச்சபித்தனர், அப்பால் யானவரைச்சரணடைந்தேன், அதனாலவருக்கு அடியேன்மீது கிருபைசுரந்து, இனி நீதவத்தர்பெருமானாகிய பராசுவமுனிவராசிரமத்தில் அவதரிக்கப்போகின்ற விநாயகமூர்த்திக்கு வாகனமாகி

எல்லாமேன்மைகளையும்பெறுவையென்று அநுக்கிரகித்தருளினர். அவ்வ
நுக்கிரகத்தின்படியே இப்போதுதேவரீரைச்சரணடைந்தேன், ஆதலால்
தேவரீரடியேனைமுற்றினுங்காத்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தது. அ
வையனைத்தையும் விநாயகமூர்த்திகேட்டருளி, வலியிற்சிறந்தஆகுவே-
யாம் உனதுசரித்திரத்தை இதற்குமுன்னரே யறிவோமாதலால்-இப்போ
து உன்னைக் கொல்லாமற் பிடித்துக் கட்டிக்கொண்டு வரும்படியாகவே
நமதுபாசத்தைவிடுத்தோம், இனி யாதொன்றற்கும் அஞ்சற்க, இத்தின
முதல் நமக்குமிக்க மேன்மையோடு வாகனமாக இருக்கக் கடவையென்
று திருவாயமலர்ந்து, உடனே அதன்முதுகில் தாமாரோகணித்து, அத
னைத்திக்கனைத்துஞ் செலுத்திவிளையாடி, ஒன்றரைக்கணத்துள் மீட்டுந்தி
ரும்பிவந்தனர். இவ்வாறு பிள்ளைமைப்பருவத்திற்றானே பெரிதான வலி
யினையுடைய மூஷிகத்தையடக்கித் தமக்குவாகனமாகக் கொண்டருளிய
விநாயகமூர்த்தியைப் பராசுவமுனிவர்பணிந்து,பள்ளங்கண்டுபாயகின்ற
புனல்போலத் தமதுபேரன்பினைப்பாய்ச்சி, ஒருபாரிசமாய்நின்று,ஒலோ
கநாதனே- கொடுஞ்செய்கைகளிற்சிறந்த பராக்கிரமசாலியாகிய காலரூ
பியென்னும் ஓர்விக்கினனால் சகலபுவனங்களுங்கலங்கி நடுங்குகின்றமையால்,
அவனைசுவாமிகள்சங்கரித்து, உலகங்களில் வேதாகமநெறிகளை விருத்தி
செய்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தனர். அதற்கவ்வாறேசெய்தருளு
வமென்றுவிநாயகமூர்த்திகிருபைசுரந்தனர். இச்சரிதமிவ்வாறாக- உலகத்
தில் நித்தியநைமித்தியங்கள் காமியங்கள் என்றுசொல்லப்படுகின்ற யாக
முதலானவைகளைநடக்கவொட்டமல், யாவரையுஞ்சதாகாலமும் உபத்தி
ரவப்படுத்திவருகின்ற காலரூபியென்னும்விக்கினனால் வசிட்டராதிமுனி
புங்கவர்கள்யாகாதிகளைச்செய்யாதுவிட, அதனால் இந்திரன்முதலானதே
வர்கள் அவிற்பாகங்கிடையாமல்வறியராகிப், பின்னர் அம்முனிவர்களுந்
தேவர்களும்ஒன்றாகக்கூடி,பிரமதேவனிடத்திற்சென்றுபணிந்து,சுவாமி-
சொல்லவுஞ்சகியாதகொடுமையினைவிளைத்துவருகின்ற விக்கினனைக்கொ
ல்லுமாறு அடியேங்கட்கு ஓருபாயஞ்சொல்லியருளல்வேண்டுமென்று
பிரார்த்தித்தார்கள். அதற்குப்பிரமதேவன்சொல்லுவான், அன்பர்களே-
அநாதியாகிய அமலானந்த அறிவுருவாயிருக்கின்ற சோதிவடிவான விநா
யகமூர்த்தியானவர் சகலலோகங்களையுங் காத்தற்பொருட்டு பராசுவமு
னிவருடையஆசிரமத்தில்அவதரித்திருக்கின்றனர்,அக்கடவுளைநீங்கள்யா
வருஞ்சென்று சரணடைந்துபூசித்து, உங்கள் துன்பங்களை யெல்லாம்
போக்கிக்கொண்டு இன்பமடைவீர்களென்று சொல்லினன். அச்சொல்
லைஇந்திரன்முதலிய தேவர்களும் வசிட்டராதிமுனிபுங்கவர்களுஞ் செவி
குளிரக்கேட்டு, ஆனந்தமாகி மீண்டு, பூவுலகத்தில் பராசுவ முனிவரு
டைய ஆசிரமத்திற்கு வந்தார்கள். உடனே பராசுவமுனிவர் வந்தவர்க
ட்கெல்லாந் தனித்தனி ஆதனந்தந்து இருக்கச்செய்து, பின்னர்மிகுந்த
பேருவகையோடும் அவர்களைப்பார்த்து, ஓ தவசிலர்களே- உங்கள்வரவி
னால் அடியேன்குலம் கல்வி தவம் முதலிய யாவுஞ் சுத்தபவித்திரமடை
ந்தன வென்று முகமன்கூறி உபசரித்தனர். பின்னர் தேவர்களுமுனிவர்
களும் அப்பராசுவமுனிவரைப் பலவாறு புகழ்ந்து துதிசெய்து, அடியே
ங்களையெல்லாம் பாவைபோல இடைவிடாது ஆட்டுவித்தருளா நின்ற

ஒன்றான முக்கண்மூர்த்தியே. தேவரீர்க்குத் திருக்குமாரனாக அவதரித்திருக்கின்றமையால், அம்மூர்த்தியைத் தரிசித்துப் பூசிக்குமாறும், தேவரீருடைய பாதபதுமங்களைத் தரிசிக்குமாறும், யாங்களனைவரும் இங்கு வந்தனம், முன்னதாகத் தேவரீருடைய தரிசனத்தைக் கிடைக்கப்பெற்றோம் இனி எமதுகர்த்தருடைய தரிசனத்திற்கெதிர்பார்த்திருக்கின்றனமென்று சொன்னார்கள். அவ்வாறு சொல்லலும் விநாயகமூர்த்தி திருவுளங்கூர்ந்து, அவர்களெதிரில் மூஷிகவாகனத்தின்மீது எழுந்தருளிவந்தனர். உடனே யாவரும் பயந்தெழுந்து, பத்தியோடு பலமுறை பணிந்து, ஓ சகலபுவனாதாரசொரூபியே- அடியேங்கள் விக்கினன் செய்து வருகின்ற இடையூறுகளால் மெலிந்து பிரமதேவரிடத்திற் சென்றோம், அவர் எங்கள் வரவை யோசித்துத், தேவரீருடைய சன்னிதானத்திற் போகும்படி விடைகொடுத்தனுப்பினர், அவ்வாறே அடியேங்கள் தேவரீருடைய திவ்விய சரணாரவிந்தங்களையடுத்தோம், இனி அடியேங்கள் படுகின்ற துன்பப்பாட்டினை நீக்கியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கு விநாயகமூர்த்தி அருள்கூர்ந்து, இனி நீங்கள் யாதொன்றற்கும் அஞ்சவேண்டாமென்று அபயங்கொடுத்து, அவர்களையெல்லாந் தம்மைப் புடைசூழ்ந்து வருமாறு உத்தரவுசெய்து, தாம் தமது மூஷிகவாகனத்தைச் செலுத்திக்கொண்டு, விக்கினனிருக்குமிடத்திற் சென்று, தம்மோடு வருகின்ற தேவர்களையும் முனிவர்களையும் பார்த்து, ஓ தினர்களே- நமது வீரத்தைப் பார்மினென்று தமது கரத்திலிலங்கியிருக்கின்ற அங்குசத்தையெடுத்து, நீ இவனிடத்திற் சென்று பராக்கிரமத்திற் சிறந்த விக்கினனைப் பிடித்துக்கொண்டு வரக்கடவையென்று கட்டளையிட்டு ஏவினர். உடனே அவ்வங்குசமானது சகலபுவனங்களும் அதிரும்படியாகச் சென்று, விக்கினனைச் சூழ்ந்து வளைத்திழுத்துக்கொண்டுவந்து, விநாயகப்பெருமான் முன்னர் விட்டது. அவ்விக்கினன் ஆகாயத்தையளாவிய சடைமுடியும், கடைவாயிற் பிறைக்கு நிகரான கோரைப்பற்களும், சகலசீவராசிகளும் நடுங்கும்படியான ஏனைய வடிவங்களும் விளங்க, தேவர்கள் முனிவர்களுடைய எண்ணங்களையெல்லா நாசஞ்செய்யவல்ல தனது பராக்கிரமத்தோடு விநாயகமூர்த்திக்கெதிராக நின்றான். இவ்வாறு நிற்பவனை விநாயகமூர்த்தி தமது மூஷிகவாகனத்தின்மீது இருந்தபடியே நெறித்துப்பார்க்க, அப்பார்வையால் விக்கினன் பயந்து, இவன் நம்மை இலேசாய் விடுவானல்லன், இவனுடைய வல்லபமெல்லாம் அடங்கும்படி யுத்தஞ்செய்யவேண்டுமென்று தனதுருவத்தை மறைத்து, யுகமுடிவிலுண்டாகின்ற பிரளயத்தினைப் போலச் சலவடிவங்கொண்டு, அலைகளை வீசி, நாற்றிசைகளினும் பெருகிப்பரந்து, பூலோகமுழுவதும் மூழ்கிப்போம்படியாக நிறைந்து, இந்திரலோகம் பிரமலோகம் விண்டுலோகமுதலிய லோகங்களெல்லாங் கவிழ்ந்துபோம்படியாக மேலோங்கினன். அதைத் தேவர்களெல்லாங் கண்டு பயந்தார்கள். முனிவர்களெல்லாம் இனி நமக்குப் போக்கிடமெங்ஙனமிருக்கின்றதென்று வாடினார்கள். இவ்வாறு விக்கினன் சலப்பிரவாகமாயிருக்குஞ் செயலினை விநாயகமூர்த்தி கண்டு, இவன் சாமர்த்தியம் இதுவாவென்று புன்னகைசெய்து, அச்சலப்பெருக்கையெல்லாம் பானம்பண்ணும்படியாகத் தமது மனத்திலெண்ணி, ஒரு கரத்தை நீட்டினார். அதைவிக்கினன

றிந்து, தப்பித்துக்கொள்ளவேண்டுமென்றுநினைத்தனனாய், உடனே அச்
சலவடிவினின்றுமாறி, ஓர்காகவடிவங்கொண்டு, ஓர்மரத்தின்மீதுநின்று
பர்வதங்களெல்லாம் பொடிபடும்படியாகவும், சத்தசாகரங்களும் வறண்
டுபோம்படியாகவும், தனது சிறகினைவிரித்தடித்துக்கொண்டு, திக்குயா
னைகளின்மத்தகங்களெல்லாம் பிளக்கும்படியாகவும், சூரியன் சந்திரன்
உடுக்கள் சுவர்க்கலோகமுதலியவைகள் உதிரும்படியாகவும் பேரொலிசெ
ய்து, சகலபுவனங்களுஞ் செவிட்டடையச்செய்தனன். அப்போது விநா
யகமூர்த்தி தமது கரத்திலிருந்த தாமரைமலரை யவன்மீது விட்டனர்.
அதையவ்விக்கினன்கண்டவுடன் அக்காகவடிவினின்றுமாறி, ஊழிக்கா
லத்திலுண்டாகின்ற வடவாமுகாக்கினியைப்போல வடிவங்கொண்டு, ம
ண்ணுலகம் விண்ணுலகம் சமுத்திரம் பர்வத முதலான வைகளெல்லா
மெரியும்படி எரித்தான். அப்போது விநாயகமூர்த்தி மழைவடிவாகிப்பொ
ழிந்து, அவ்வக்கினியையணைத்தனர். அப்பால் விக்கினன் பிரளயகாலத்
திலுண்டாகின்ற சண்டமாருதமும் மழையுமாகவடிவெடுத்துச் சுழன்று
சொரிந்தனன். அப்போது விநாயகக்கடவுள் மேகங்களையேவி, அம்மழை
யையுறிஞ்சிவிடச்செய்து, பின்னர் அளவற்ற பர்வதங்களாகத் தாமேயு
ருக்கொண்டு, அச்சண்டமாருதத்தினையும் வீசவொட்டாமல் நிறுத்தின
ர். அதற்குமேல்விக்கினன் அனந்தமான வச்சிராயுதங்களின்வடிவங்கொ
ண்டு, இந்திரனுடைய வச்சிராயுதமும் இடிபட்டதுபோலப் பொடிபட்
டுப்போகும்படிபாய்ந்து,விநாயகமூர்த்திகொண்டிருக்கின்ற மலைவடிவங்க
ளெல்லாஞ்சிறியபராக்கங்களாகும்படியாக வெதிர்த்துயுத்தஞ்செய்தனன்.
அப்போது விநாயகமூர்த்தி அம்மலைவடிவங்களினின்றுமாறி, ஓர்வேலா
யுதத்தை நூதனமாய்ச்சிருட்டித்து, நீசென்றுவிக்கினனுடைய உயிரை
வாங்கிவரக்கடவையென்றுஏவினர். உடனே அவ்வேலாயுதமானது சூரி
யனொளியு மழுங்கும்படியாக அட்டதிசைகளிலும் பிரகாசித்து, வாயு
வேகமுந் தனக்குப்பிற்படச்சென்று, வச்சிராயுதங்களைப்போல வடிவெ
டுத்திருக்கின்ற விக்கினனோடு அளவற்றயுத்தங்களைநடாத்தியது. அதற்கு
மேல் அவ்விக்கினன்வேலாயுதத்தோடு எதிர்க்கநிர்வாகமில்லாமற்பயந்து
வச்சிராயுதவடிவங்களின்றுமாறித், தனதுசுயரூபத்தினைக்கொண்டுவந்து
விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளிற்பணிந்தெழுந்து, மிகுந்தசாந்த
த்தோடு இருகரங்களையுஞ்சிரமேற்கூப்பி, ஓ சர்வவல்லமையுள்ள கடவு
ளே- அடியேன் தேவரீரைச்சரணடைந்தேன், சுவாமிகள்விட்டவேலா
யுதம் அடியேனைச்சங்கரிக்கவொட்டாமற்காப்பாற்றியருளல்வேண்டுமெ
ன்றுமீட்டும்பணிந்தனன். அதற்குவிநாயகமூர்த்தியானவர்தமதுகோபத்தி
னைமாற்றிக்கிருபைகூர்ந்து, வேலாயுதத்தினைமீண்டுசும்மாவரும்படிகட்ட
ளையிட்டனர். அதற்குமேல் விக்கினன்பயமகன்று, விநாயகமூர்த்தியினு
டைய சமீபத்தில்வந்து துதிசெய்து, ஓகிருபாமூர்த்தியே- ஓகுறிகுணங்க
டந்தபூரணா- ஓமுத்தொழிற்குங் காரணமாகியமுதலே- அடியேன் அறி
வில்லாமையினால் தேவரீர்க்குச்செய்த அபராதத்தினைப்பொறுத்தருள
ல்வேண்டும், முன்னர் அடியேனைத் தேவேந்திரன் கூவியேவினான், உட
னே அடியேன் அளவற்றவிக்கினவடிவங்களைக்கொண்டு சகலலோகங்க
ளையுந்துன்பப்படுத்தினேன், அன்றியும் வெறிகொண்டவனைப்போல சு

வாமிகளோடெதிர்த்துயுத்தஞ்செய்வதாயினேன், இனி அடியேனைச் சுவாமிகளுடைய அடியார்களுள் ஒருவனாக்கும்படிகிருபைசெய்து ஆதரித்தருளல்வேண்டுமென்றுபிரார்த்தித்தான். அதற்குஇவ்வுலகத்தில் அளவற்றகொடுமைகளைச் செய்தோர்களாயினும் ஒருக்கால்தம்மையடைந்து சரண்புகுவாராயின் அவர்களைவிடாமற் காத்தருள்வதேவிருதாகக்கொண்டிருக்கின்ற விநாயகமூர்த்திகடைக்கணித்துத்,திரிலோகங்களினும் அளவற்றகொடுமைகளைநடாத்திவந்தும் பின்னர் தம்மையடைக்கலமாகப்புகுந்தவிக்கினனுக்குப்பயமகற்றி,ஓகாலரூபியே-நீஇதுகாறுஞ்செய்துவந்தகொடுமையினால் உன்னைச்சங்கரிப்பதற்கேநினைத்தோம், நீ இப்போதுநம்மைச்சரணடைந்தனையாதலால் உன்னை உயிரோடுவிடுத்தனம், இனிநமக்கு உவகையுண்டாகும்படியாக நடந்துகொள்ளுக, நம்மைத்தியானிக்கின்றவர்களிடத்திலும் பணிகின்றவர்களிடத்திலுந் துதிசெய்கின்ற வர்களிடத்திலும் ஓர்போதும்நெருங்கற்க, நம்மைவணங்காதவர்கள், துதியாதவர்கள், நினையாதவர்கள், நமதுசரித்திரங்களைக்கேளாதவர்கள், நமது அடியார்கட்கு அபசாரஞ்செய்கின்றவர்கள், அவர்களோடுபழகுகின்றவர்கள் அவர்களுடன்கூடுகின்றவர்கள், இன்னும் இத்தன்மைத்தான அயோக்கியங்களையுடையவர்கள் யாவரேயாயினும் அவர்களிடத்தில் நீஎன்றைக்கும் அநேகவடிவங்களாய் நின்றுதுன்பஞ்செய்து, உனது அதிகாரத்தைச் செலுத்துக, இப்போது யாம்கூறிய முறைமைகளிற்றப்பாது நடந்துகொள்வையாயின், நீஉயிருடன்பிழைத்தனை, இல்லையேல் உடனேமாய்ந்தனை, இதையறிந்து புத்தியோடுநடந்துகொள்ளுகவென்று வரங்கொடுத்தனர். அவ்வரமனைத்தையுஞ் சிரமேற்கொண்ட விக்கினன் மீட்டும் பணிந்தெழுந்து, சுவாமி- அடியேன் ஒருகாலத்துந் தேவரீருடைய கட்டளையைக்கடந்துநடவேன், அடியேனுடையநாமத்தையுந் தேவரீருடைய திருநாமத்தோடுதரித்தருளல்வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கு விநாயகமூர்த்திசந்தோஷித்து, இதுமுதல்யாவரும் முன்னேஉனதுபெயர் வரும்படியாகநம்மை விக்கினராசவிநாயகரென்று துதிசெய்யக்கடவர், அவ்வாறு துதிசெய்வோர்களை நீ எக்காலத்தினும் அணுகற்கவென்று திருவாயமலர்ந்தனர். அதன்மீது விக்கினன் பெருமகிழ்ச்சியுற்றவனாகி, விநாயகமூர்த்தியை அன்போடுபூசித்து விடைபெற்று, அவரிட்டருளியகட்டளையின்படி தன்மார்க்கர்களைத்தேடிச்சென்று, அவர்களிடத்தில் வாசமாயினன். தேவர்கள் பூமாரிபெய்தார்கள். தேவமாதர்கள் சுவாமியைப் பூசித்தார்கள். இச்சரித்திரங்களையெல்லாம் வரேணியராசன்கேட்டு, மிகுந்த ஆனந்தத்தோடு தனது மனைவியாகிய புட்பகையுடனேவந்து, சுவாமியைப்பலமுறைபணிந்துபூசித்து, வேண்டியவரங்களைப் பெற்றுச்சென்றனன். முனிவர்கள் தேவர்கள் முதலாயினோரும் சுவாமியைப்பணிந்துபூசித்து, சகலஇஷ்டகாமியார்த்தங்களையும் பெற்றுத் தத்தமிடங்களிற்சேர்ந்தார்கள். இப்பால் விக்கினராசர்மீட்டும் பராசுவமுனிவருடைய ஆசிரமத்திற்குவந்து, அம்முனிவருக்குந் தம்மைத் தாயபோலவளர்த்துவந்த அவர்பத்தினிக்குந் தமதுபெருங்கருணையினால் அளவற்ற வரங்களைத்தந்து, அவர்களிடத்தினின்றும் விடைபெற்றுச், சிவபுரத்திலிருக்கின்ற தமதுலகத்தைச் சேர்ந்துவீற்றருளினர்.

கணபதிதுணை.

ஐந்தாவது,

மயூரேசர் திருவவதாரப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தி விக்கினராசர் திருவவ
தாரங்கொண்டு, கிரவுஞ்சனென்னு மூடிகத்தை வாகனமா யூர்ந்தருளிக்,
காலரூபியென்னும் விக்கினனையழித்து உலகங்களைக்காத்தருளிய திருவி
ளையாடலைச் சொன்னேம். இப்பால் மயூரேசர் திருவவதாரங்கொண்டு
செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோங் கேட்பீராக, முன்னொ
ருகற்பத்தில் பிரமதேவனனவன் சிவபெருமானுடைய அநுக்கிரகத்தினா
ல் விண்டுவினுடைய நாபிக்கமலத்திலுதித்து, வேதாகமபுராணங்களையெ
ல்லாஞ் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளக்கெட்டு, அம்முறைமையி
ன்படி.சகலலோகங்களையுஞ்சிருட்டிசெய்து,அவ்வேதாகமபுராணங்கள்எ
ழுதப்பட்டிருக்கின்ற புத்தகங்களைநாடோறும் பூசைசெய்துவந்தனன்.அ
ப்பிரமனது சிருட்டியிலுண்டான தேவர்களும்அசுரர்களும்ஒருகாலத்தில்
விரோதங்கொண்டு, நெடுநாள் ஒருவரோடொருவர்மலைந்துயுத்தஞ்செய்
தார்கள்.பின்னர்தேவர்களெல்லாம்அசுரர்களோடுநீடித்துயுத்தஞ்செய்ய
ச் சக்தியற்றவர்களாய்த், தங்களுள்ளத்தில் ஓர்துணிவை யாலோசித்து
வேதமநுக்களைப்படைகளாக்கி,அப்படைகளைப்பிரமாஸ்திரத்தோடுங் கூ
ட்டி அவர்கள்மீது பிரயோகித்தார்கள். அதனல் அவ்வசுரர்கள் வலியற்
றவர்களாகி, மானத்தையும் ஆயுதங்களையுமிழந்து, போர்க்களத்தி னின்
றும்ஓடி, அபசயத்தினல் மிகவும்வாட்டமுற்றுத்,தங்கள்சத்துருக்களான
தேவர்களை எக்காலத்திற்செயிக்கும்படி நேருமென்று உள்ளத்தில்வெஞ்
சினங்கொண்டிருந்தார்கள். இவ்வாறு சிலநாள்கழித்தபின்பு,ஓரவுணன்ச
ங்கினைப்போல வடிவுடையவனய், மிகுந்தபராக்கிரமசாலியாய்,அளவற்
றவரங்களைப்பெற்றவனய், சங்காசுரனென்னும் பெயரினல்விளங்கியிரு
ந்தனன். அவனுக்கிளையவனகிய கமலாசுரனென்பவன் தான்பெற்றிருக
கின்ற பராக்கிரமத்திலும் வரத்திலுந் தன்தமையனைவிடப் பதின் மட
ங்கதிகமுள்ளவனகி, எல்லாமாயைகளினுஞ் சாமர்த்தியனகி யிருந்தன
ன். அவனவ்வாறிருந்துந்,தன்தமையனுடையகட்டளையைக்கடந்துஓர்காரி
யமுஞ் செய்வானல்லன். இவர்களிருவரும் உடலும் உயிரும்போல மரு
வியிருந்தார்கள். அவர்களைமுன்னந்தேவர்களால்அவசெயப்பட்டிருந்தஅ
சுரர்களெல்லாமடைக்கலம்புகுந்து, ஓமித்திரர்களே-நீங்களும்யாங்களும்
ஒருகுலத்தினரன்றோ, எங்கட்குண்டானஇழிவுந்துயரமும்உங்கட்கில்லை
யோ,முன்னர்தேவர்கள்எங்களோடுயுத்தஞ்செய்துநலியச்செய்தார்களா
தலால்,அவர்களைநீங்கள்எவ்விதத்திலேனும்வெல்லல்வேண்டும்,அவர்கட்

மனமுருகி, ஆனந்தக்கண்ணீர்சொரிந்து,அடியற்றமரம்போலச் சாஷ்டாங்கமாக விழுந்து, மீட்டுமெழாதபடி பூமியிற்கிடந்தனன். அவ்வாறுகிடப்பவனை விநாயகமூர்த்தி கிருபையோடும்பார்த்து, தமதுதிருக்கரத்தால்அவன்கரத்தைப்பிடித்தெழுப்பி, பிரமனே- வேதாகம புராணங்களென்று சொல்லப்படுகின்ற அம்மூன்றும் நமதுமுகத்தில் மூன்றுகண்களாக விருந்து பிரகாசிக்கின்றன, அவைகளைநீஇறந்து போய்விட்டதாக நினையற்க அவைகளைக்குறித்து இனியாதொருதுயரமுங்கொள்ளற்க, யாம் அவைகளைப்பழையபடி லோகங்களிற்பிரகாசிக்கச்செய்குவம்,தேவர்கள்முனிவர்கள் மனிதர்கள் முதலாயினோருடைய துயரநீங்குமாறு இப்போதெயாம்பூலோகத்திற்சென்று கமலாசுரனைச்சங்கரிப்போம், பின்னர் கேசவன் தனது நித்திரையினின்று மெழுந்தவுடன் நமதுகிருபையினால் அவன் தமையனாகிய சங்காசுரனைக்கொல்லுவன்,ஆதலால்-இனி உனதுகவலைகளையொழித்து சந்தோஷமாயிருக்கக் கடவையென்று திருவாய்மலர்ந்து,உடனே விநாயகமூர்த்தியானவர் பிராமணவடிவங்கொண்டு,வேதாகமபுராணங்களை எழுதியிருக்கின்ற ஓர்புத்தகத்தையுண்டாக்கி, அவைகளைத் தமது தோளின்மீதேற்றிச், சீடர்கள் ஆயிரம்பேர் தம்மைப்புடைசூழ்ந்து வரும்படி அளவற்றசூரியர்கள் ஏககாலத்திலுதயஞ்செய்ததுபோல ஆகாயத்தினின்றும் பூலோகத்திலிறங்கிவந்தனர். அவ்வரவை சுந்தர ஆசிரமத்தில் வசித்திருக்கின்ற முனிவர் சமூகங்களறிந்து,அளவற்ற அந்தணர்களுடைய பிரகாசந்தோற்றக்கண்டு, இப்பிரகாசம் எங்ஙனமுதித்துஇங்ஙனம்வருகின்றதென்று இமையாநாட்டத்தினராயப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். பின்னர் அந்தணராய் எழுந்தருளிய விநாயகமூர்த்தியானவர்தமதுசிருர்கூட்டத்தோடும் அவ்வாசிரமத்தையடைந்தனர்.உடனே- ஸ்நானம்-சந்தி- செபம்-ஹோமம்- வேதாத்தியயனம்- தேவபூசை- அதிதிபூசை- வைசுவதேவம்-என்றுசொல்லப்பட்ட நித்தியகருமங்களெட்டினையுந்துறந்து பலஇடையூறுகளிலுந் துயரத்திலுமூழ்கியிருந்த முனிவர்களெல்லாம் உய்ந்தோம் உய்ந்தோமென்றுகூத்தாடி,வெய்யிலால்வாட்டமுற்றிருந்தபயிர்களெல்லா மழைபொழியக்கண்டதுபோல மனமகிழ்ந்து, சீடர்கூட்டத்தோடு மெழுந்தருளிவந்த அந்தணர் பெருமானுடைய திருவடிகளில் பலமுறை சாஷ்டாங்கமாகவணங்கி, ஆனந்தபரவசங்கொண்டு, கைதட்டிக்கும்பிட்டுஇதனைச்சொல்லுவதாயினார்கள். ஓஅடியேங்கள்தவத்தின்பெருகவெழுந்தருளிய வேதவித்தகரே-நாடோறும் இடையூறுகள்செய்துவருகின்ற கமலாசுரனால் அடியேங்கள் பலசங்கடங்களிலுழன்று, ஆசாரமுதலியவைகளையிழந்து மாசினையடைந்திருந்தோம், இன்று தேவரீரைக்காணத்தக்கபேறு அடியேங்கட்குக் கிடைத்ததினாலே இப்போதே அவ்விடையூறுகளனைத்தையு நீங்கிச் சகலபாக்கியங்களையும் பெற்றோம், பூருவத்திலடியேங்கள் பெரிதானதவங்களைச்செய்திருந்தபடியால் இச்சனனத்தில் தேவரீரைக்காணும்படியான சம்பந்தங்கிடைத்தது, அடியேங்கள் எளிதில்கடைத்தேறுமாறு இங்ஙனமெழுந்தருளிய தேவரீர்பூர்வம் வசித்திருந்த தலம்யாது, இப்போது இங்ஙனங் கிருபையோடு மெழுந்தருளிய காரணமென்ன, அதனை அடியேங்கட்குத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கு அந்தண வடிவங்கொண

டெழுந்தருளிய விநாயகமூர்த்தியானவர் கிருபைசுரந்து, ஓதவத்தர்களே உலகத்தில் அவ்வியகவ்வியங்கள் சிறிதுமில்லாது, நித்தியநைமித்திய முதலிய கருமங்கள் நின்றிருப்பதையாமறிந்து, வேதமுதலான சகலநூல்களும் எழுதப்பட்டிருக்கின்ற புத்தகங்களைக் கொண்டுவந்தோம், இவைகளை நீங்கள்வைத்துக்கொண்டு சகலகிரியைகளையு முன்போலவே செய்துகொள்ளக்கடவீர்கள், நமதுநாமத்தை மல்லாலரென்று சகலசாத்திரங்களுங்கூறும், மூவுலகத்தாரும் அப்பெயரோ இயம்புவார்கள், நமக்கு இவ்விடத்தில் ஓரிருக்கைதந்து, உங்கள் கவலைகளனைத்தையுநீக்கிப் பேரின்பமுற்றிருப்பீர்களென்று திருவாய்மலர்ந்தனர். அதைக்கவுதமர் முதலிய முனிபுங்கவர்கள்கேட்டு மனமகிழ்ந்து, நாம் அளவற்றதவங்களினால் பிரார்த்தித்துப் பெறத்தக்கவரம்யாதோ அதனை இவ்வந்தணர்பெருமானே கொடுத்தருளினரென்று ஆனந்தமுற்று, அவர்வசித்திருப்பதற்கேற்றஓர் விடுதியைத் தெரிந்துகொடுத்து, சகலதுயரங்களினின்றுநீங்கினவர்களாய்ச், சிலர்பூர்வத்தில்வேதாகமபுராணங்களையுண்டாக்கிய பரம்பொருளேயிவரென்றுதுதிசெயதார்கள். சிலர்அவைகளை அடியேங்கட்குத்தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். சிலர்அவரால் நான்குவேதங்களையுங் கிரமமாகச்சொல்லக்கேட்டு ஆனந்தித்தார்கள். சிலர் அவ்வேதங்களினுடைய உண்மைப்பொருள்களைக்கேட்டுச் சந்தேகநிவிர்த்திசெய்து கொண்டார்கள். சிலர் சாத்திர விசாரணையினால் திரிபதார்த்தங்களினுடைய நிச்சயந்தெரிந்துகொண்டார்கள். சிலர் புராணங்களையெல்லாம் ஆதியோடந்தமாக வினவிப்பேரின்பமடைந்தார்கள். சிலர் தாங்கள் கேட்டவாறு மற்றையருக்குப்போதனைசெய்து கொண்டிருந்தார்கள். இவ்வாறு அவ்வாசிரமத்திலிருந்த முனிவர்களெல்லாம் மல்லாலருடைய திருவடிகளைத்தினந்தோறும் பணிந்து, அவரால்வேதமுதலான சகலநூல்களையும் வரன்முறையாகக்கேட்டுத் தெரிந்துகொண்டு, அவைகளைத் தங்கடங்களுடைய சீடர்கட்குத்தாங்களே ஓதுவித்து, அவர்களால் உலகமுழுவதும் அவைகளைப்பரவச்செயது, யாவருஞ் சகலகருமங்களையுநாடோறும் பூர்த்தியாகச்செய்துகொண்டு சந்தோஷமா யிருந்தார்கள் இப்பால் பிரமனானவன் முன்னர்சிவபெருமான் தனக்கருளிச்செய்தவேதநூலைப் பிரதிதினம் பூசித்தற்கு உண்டாகிய இடையூற்றினை இன்னுநீக்கிக்கொள்ளாத சிறியகவலையையுடையானாயினும், அவ்வேதநெறிகள் எங்குஞ் செழித்தோங்கி நடந்துவருவதினால் தான்பேரானந்தமுற்றுச், சதாகாலமும் விநாயகமூர்த்தியைத் தியானஞ்செய்துவந்தனன். இவ்வாறு வேதாகம்புராணங்கள் உலகமனைத்தும் பரவிப்பிரகாசமுற்றிருப்பதை உய்யும்வகையுணராத கமலாசுரனறிந்து, தனதுதமையனாகிய சங்காசுரனையடைந்து, அண்ணலே- யாம் வேதமுதலானவைகளையெல்லாம் அபகரித்தும் வீணாயிற்று, அஃதெவ்வாறெனில்-சுந்தர ஆசிரமத்தில் ஓரந்தணன் அவைகளைக்கொணர்ந்துவந்தான், அதனால் இரவியைக்கண்ட இருளைப்போல அந்தந்தவருணாச்சிரம தருமங்கள் குறைவில்லாமல் நிறைவேறிவருகின்றன, அவ்வவர்கள் யாகாதிவிரதங்களைச்செய்து அவிற்பாகந் தந்து வருவதினால் தேவர்களெல்லாம் அவ்வவிற்பாகங்களை யேற்றுப்பூரித்திருக்கின்றார்கள், இனி அத்தேவர்களும்விரதியரும் நம்மை எண்ணமாய்

கள் யாவு மடியும்போலும், இப்போது அவன்உண்டாக்கியிருக்கின்றசே
னைகள்ஒருவேளை தேவரீர் ஆயுதவல்லபத்தால் இளைக்கினும் உடனேமீ
ட்டும் அளவற்றசேனைகளையுண்டாக்கி யுத்தஞ்செய்யத்தக்க வல்லமை
யுடையவன், ஆதலால்- இவைகளையெல்லாந் தேவரீர் நிர்க்காலோசனை
செய்தருளல்வேண்டுமென்றுசொன்னான். இவ்வாறு உள்ளவிதத்தைதயெ
ல்லாம் உரிமையோடு தூதுவன்சொல்லியும் அவைகளைக்கமலாசுரன் சி
றிதும்யோசியாது, அழிவுகாலத்துக்கேற்ற புத்தியினையே மிக்கொண்டு,த
னதுபராக்கிரமத்தினையே பெரிதாகமதித்து, ஒவித்தகனே- இதுகாறும்
இந்திரன்பிரமன்விண்டு உருத்திரன் முதலியயாவரும் என்னெதிரில்நின்
றவரல்லர்.இப்போது முட்டியெடுக்கும் ஓரநதணனேஎனக்குநிகராவன்,
அவனைஓர்அக்கினிஅத்திரத்தினாற்சங்கரித்துவிடுகின்றேன்பாரென்றுசொ
ல்லிக், கண்கள்சிவந்து, அழலைச்சொரியும்படியானகோபத்தோடுஉலகத்
தையெல்லாமெடுத்து விழுஙகிவிடுவான்போலத்துள்ளித், தனதுகுதிரை
யைவிரைவில்நடாத்தினான்.உடனேஅவன்சேனைத்தலைவர்களெல்லாம்அ
வனைப்பணிந்தெழுந்து,தமதுநால்வகைச்சேனைகளோடுமுன்னே நடந்தா
ர்கள், பின்னர் மல்லாலருடைய சேனைகளும் பாவத்தோடு புண்ணியமெ
திர்த்ததுபோலக் கமலாசுரன்சேனைகளோ டெதிர்த்து, இரதவீரர்களோ
டு இரதவீரர்களும், யானைவீரர்களோடு யானைவீரர்களும், குதிரைவீரர்
களோடு குதிரைவீரர்களும், வாள்வீரர்களோடு வாள்வீரர்களும், கதை
வீரர்களோடு கதைவீரர்களும், வில்வீரர்களோடு வில்வீரர்களும, வேல்
வீரர்களோடு வேல்வீரர்களுமாக நெருங்கிப்போர்செய்தார்கள், அவரு
ள் சிலவீரர்கள் பறவையையொத்த பரிகளைப்பூட்டியிருக்கின்ற தமதிர
தங்களைச் சிறகுற்றெழுந்த மலைகளைப்போலவும் உறவோடுபகைக்குங்கய
வரைப்போலவும் பகைவர்களுடைய ரதங்களோடு பொருதுவித்து மண்
டிலமிட்டார்கள். சிலவீரர்கள் மலைமுழைகளினின்றும் வெளிப்பட்டபற
வைகள் அங்குமிங்குமாகப்பறந்து இரைதேடுதல்போல, ஒருவர்படைக
ள் ஒருவர் இரதத்தில் நுழையுமபடியாகத்தூண்டி ஆர்ப்பரித்தார்கள். சி
லவீரர்கள் மலையின்கணுள்ள விருக்கங்கள்யாவு மழையினாலிற்று விழ்
வதுபோலப், பகைவருடைய ரதங்களின்மீது தமதுபடைகளைப் பொழி
ந்து, கொடிகொடிஞ்சிமுதலிய உறுப்புக்களை நிலத்தில்வீழ்த்தினார்கள்,சி
லவீரர்கள் தம்மோடு போராடவேண்டினோருடைய ரதத்தைக்குறுகும்
போது இடையில் அளவற்ற பிணங்கள் வீழ்ந்து தங்களிரதங்க ளிடரும்
படிச்செய்ய,மனநொந்து,பின்னர்வேறொரு ரதவீரர்களழைப்பமகிழ்ந்து
போர்செய்தார்கள். சிலவீரர்கள் ஒருவனையொருவனெதிர்த்துக் குதிரைக
ளையும் பாகர்களையும் படைகளையுமிழந்து தமதுடலைத்தேரின்மீதும் உயி
ரைவானின்மீதுங் கூட்டினார்கள். சிலவீரர்கள் பன்னிருகோடி சூரியர்க
ளுந் தமக்குள்பகைகொண்டு யுத்தஞ்செய்வதுபோலத், தமதுரதங்களை
ஆகாயமார்க்கத்திற்செலுத்தி ஒருவனோடொருவர்நெடுமொழிகூறிப்போ
ர்செய்தார்கள். சிலவீரர்கள் அந்தரமார்க்கமாகப்பறந்து யுத்தஞ்செய்து
தமதுவலியும் உயிருங் குன்றும்படியாகப் பூமியில்விழுந்தோறும் அங்
குள்ளயானைமுதலியவைகளையுங் கொன்று உயிர்விடுத்தார்கள். சிலவீர
ர்கள் தமதுதேர்கள் முறிந்துபோக உடனே சேமத்தேர்களில் சிங்கவே

தற்றினைப்போலப்பாய்ந்து போராடினார்கள். சிலவீரர்கள் பகைவர்கள்விடு கின்ற படைகளால் உடல்கள்பிளக்கப்பட்டு, உதிரவெள்ளமானது தமது தேர்களின்மீது பெருகியோடும்படியாகக்கிடக்க, அத்தேர்கள் அருவிபாய்கின்ற மலைகளைப்போலப் பிரகாசித்தன. சிலவீரர்கள் யானைவீரர்கள் செய்தபோரினால் தமதுபரிபூட்டிய ரதங்களிற்றானேஉயிரைவிடுத்து, அரம்பைமாதர்களுடைய அல்குலென்னுந் தேரிலிவர்ந்து, அவர்கள்கொங்கையாகிய யானைகளை இரண்டுகரங்களினாலும் வளைததுப்போர்செய்தார்கள் சிலவீரர்கள் இடியையொத்துச் சத்திக்கும் பெருங்குரலினாலும், மழையைப்போன்று பொழியுமதத்தினாலும், மின்னலைப்போலப்பிரகாசிக்கும் படைகளினாலும்; மேகங்களையொத்து விளங்குந்தமது யானைகளின்மீது அம்மேகத்தை வாகனமாகவுடைய இந்திரனைப்போல விளங்கி யுத்தஞ் செய்தார்கள். சிலவீரர்கள் தமதுயானைகளால் பகைவருடையயானைகளைத்தண்டத்தினாலுஞ்சங்கிலிகளினாலும்புடைப்பித்து, நீண்டகோடுகளினால் அவைகளினுடலம் பிளவுபடும்படியாக முட்டிப், பலபடைகளைக்கொண்டு அப்பகைவருடைய உயிரையுமாய்த்தார்கள். சிலவீரர்கள் ஓடுகின்ற ரதங்களோடு தமதுயானைகளையோட்டி, வரைசிறகரிந்தோனாகிய தேவேந்திரனைப்போல அவ்விரதங்களைமுறித்துச்சாடினார்கள். சிலவீரர்கள்பகைவர்களுடையதேரைமுட்டியெடுக்கும்படிதமதுயானைகளையேவ, அவைகளவ்வாறே முட்டியும் எடுக்கவலியின்றி, முன்னொருபோதுகைலாயவரையையெடுத்த அசுரனைப்போல ஓலமிட்டு முழங்கின. சிலவீரர்கள் குதிரைவீரர்கள் செய்தபோரினால் தமதுஉயிரையும் யானையையும் விடுத்து, அரம்பைபரது தனங்களாகிய இருகோட்டு யானைகளை நித்தலும் அணைந்துவாழ்ந்திருந்தார்கள், சிலவீரர்கள்பகைவரைக் கொன்றல்லது மீளக்கூடாதென்னும் வெஞ்சினத்தைமீக்கொண்டு, காற்றோடுசெல்லும் அக்கினியைப்போலத் தமதுகுதிரைகளோடுஞ்சென்று, கடல்போன்றுவிளங்குஞ் செருக்களத்தைத் திரைபோன்று விளங்கித் துழாவினார்கள். சிலவீரர்கள் தமதுகுதிரைகளைப் பகைவர்குதிரைகளின்மீது பாயும்படிவிடுக்க, அவைகளவ்வாறேபாய்ந்துகொன்று, உடனேதமதுதாளினால் நிலத்தினின்று மெழுந்து ஆகாயத்திற்சென்று, சூரியனுடைய குதிரைகளோடுஞ் சமர்செய்தன. சிலவீரர்கள் பகைவருடைய ரதங்களையும் யானைகளையுங் குதிரைகளையு மதஞ்செய்து, அவர்கள்விடுத்த வாளியினால்முடிவில் நிலத்தில்வீழ்ந்து, தேவமாதர்களுடைய நயனமென்னும் வாளியினால்மன்மதன் செய்யுஞ் சமரைவென்றார்கள். இவ்வாறு ரதவீரர்களும் யானைவீரர்களுங் குதிரைவீரர்களும் ஒருவரையொருவரெதிர்த்து யுத்தஞ்செய்திருக்கப், பதாதியராயிருக்கின்றசேனைகளுட்சிலர், இளையோர்- முதியோர்- இடியுண்டோர்- பெண்டன்மையுண்டோர்- என்னுமிவர்களையும், கரிபரி முதலிய வைகளையுமெதிர்ப்பதைவிட்டுத், தம்மையொத்தபடைவீரர்களோடுயுத்தஞ்செய்தார்கள். சிலர்தமதுருவங்களைக் கேடகங்களினால் மறைத்துக், கரத்தில் வாளினையேந்தி, ஒருவரையொருவர் இடசாரி வலசாரியாகச்சுழன்று, முடி தோள் மார்பு இடை துடை முதலிய உறுப்புக்களைக்குறிபார்த்துவெட்டினார்கள். சிலர்தமது வில்லுகளைக்குனியவளைத்து, அளவற்றசரமாரிகளை ஒருவர்மீதொருவர் தூண்டி, மறைந்துபோர்செய்வோருடைய வில்லு

களையுந் தூணிகளையுங் கீழேவிழத்தள்ளி, மலைபோன்றதோள்களையும் முடிகளையும் அறுத்தெறிந்தார்கள். சிலர்பகைவருடைய சிரத்தினும் மார்பினுந் தோளினும் நிணம் மூளை தசை முதலியவைகள் சிதறும்படியாகத்தண்டாயுதங்களைக்கொண்டு தாக்கினார்கள். சிலர் கதை தோமரம் பிண்டிபாலம் முசலம் கப்பணம் எழு மழு சூலம் குந்தம் முதலியபடைகளை ஒருவர்மீதொருவர் மாறிமாறிவிடுத்துப் போர்செயதார்கள். சிலர் வீரசொர்க்கத்தினையே முக்கியமாகக்கோரினவர்களாய்,தமதுபடைகள் முழுவது மிழந்தும் மெய்யிற்றைக்கியிருக்கின்ற படைகளைப்பறித்துப் பகைவர்களையோட்டினார்கள். சிலர் தகரோடுதகர் தாக்குவதுபோல முகங்களோடு முகங்களைத்தாக்கி, ஒருவரையொருவர் இறுகததழுவி நிலத்தில்வீழ்ந்தார்கள். சிலர் கைகளைக் கைகளினாலுங் கால்களைக்கால்களினாலும் பின்னி, ஒருவரையொருவர்உள்ளமுமுடலு நடுங்கும்படியாகஅதட்டினார்கள். சிலர் முட்டிகளில் முறைமுறையாகக்குத்தி, ஜயவுச்சாகத்தோடு ஒருவர்க்கொருவர் உயிர்நிலைகூறிப் புடைத்தார்கள். சிலர்தமது விழிகளி லனற்பொறியெழும்பும்படிஉறுத்துநோக்கித்,தோள்களை மாறிமாறித்தட்டி, ஒருவர்மீதொருவர்பற்களைப் பதியும்படியாகவூன்றி, நுனிநாவைக்கடித்து நிற்போருடைய தாள்களைத்தூக்கி நிலத்திலறைந்தார்கள், சிலர்பகைவருடைய கன்னங்களில் சிவப்பெயதும்படியாகப் புடைத்து, தலைகளைமுறுக்கி யெறிந்து, கால்களிலணிந்திருக்கும் வீரகண்டாமணியைப்பறித்துவாயில்வைத்துக்கடித்தார்கள். அளவற்றவீரர்கள்பகைவர்விடுக்கின்ற வாள்களினாலும் வேல்களினாலுங் கால் கை முதலிய வுறுப்புக்களையிழந்து,மடல்களொழிந்தபனைகள்போலஎங்குநின்றார்கள். அளவற்றவீரர்கள் தமதுசிரங்களையிழந்து கவந்தமாகியும் மானமொழியாதவர்களாய்,யாளிபோலெதிர்த்துவருஞ்சத்துருக்களைவாளினால் வெட்டியெறிந்துநடனமிடுவார்கள். அளவற்ற வீரர்கள், முன்னர்-தழைத்தோங்கியிருக்குமுருக்கையும்பலாசையுமிலவையும்போலச் சமர்க்களத்தினின்று,பின்னர்-அவ்விருக்ஷங்களினின்றும் வீழ்கின்றபூவையுங் கனியையும்போல உதிரமயமானார்கள். இவ்வாறுஇருதிறப்படைகளும் ஒன்றோடொன்றெதிர்த்து அகோரமானயுத்தங்களை விளைக்கும்போது, அளவற்றபிணங்கள் அச்சமர்க்களத்தில் மலைமலையாகக்குவிந்தன. அம்மலைகளினின்றும் பெருகிய வுதிரவெள்ளமானது பல குமிழிகளோடுந் திரைகளைவீசிக்கொண்டு சென்று கடலிற்பாய்ந்தது. அவ்வுதிரவெள்ளத்திலாழ்ந்து மிதக்கின்றரதங்களெல்லாங் கப்பல்களைப் போலவும், யானைகளெல்லாம் மலைகளைப்போலவும், குதிரைகளெல்லாம் நீர் நாய்களைப்போலவும், கைகால்முதலிய உறுப்புக்களெல்லாந்தாமரைமலர்போலவும், வெளுத்தநிணங்களெல்லாம் நுரைகளைப்போலவும், நீண்டகுடல்களெல்லாம் பாசிகளைப்போலவும்விளங்கின.சிலபேய்ச்சிறார்கள் அவ்வுதிரவெள்ளத்தில் மிதக்குங்கேடகங்களைத் தெப்பமாகக்கொண்டேறி, ஈட்டிகளைக்கோல்களாகக்கொண்டு செலுத்திச்,குடல்களைமாலையாகத்தரித்து,யானையின்கோடுகளைக்கொட்டிக்கொண்டுவிளையாடல்செய்தார்கள்.சிலபேய்ச்சிறார்கள் யானைகளினுடைய விலாவென்புகளைவில்லாகவும்,நரம்புகளைநாணாகவும்,வீரர்களுடையமுதுகென்பினை அம்புகளாகவுங்கொண்டு,ஒருவரோடொருவர் விளையாட்டாகச்சமர்செய்தார்கள். சில

பேய்கள்முன்றிலகன்றறியாதமூதுப்பேய்களுக்கு மூளைச்சோற்றினையுந்த சைமுதலியஉபகரணங்களையும்யானையின்செவிகளில்மிதப்பவைத்து, அவைகளின்குடர்களினால்இறுகக்கட்டி, துதிககரங்களில்உதிரங்களை நிரப்பித்தோளிலிட்டுக்கொண்டு சென்று விருந்தூட்டின. சிலபேய்கள்பந்தலிட்டாற்போலப் பறந்திருக்கின்ற பருந்துகளுடையநீழலில் உதிரங்களைத்தெளித்துத் துகளடக்கி,யானைகளின் சரீரங்களால் நாற்றிசைகளினும் வேலிகோலிப், பிணங்களாகிய தவிசுகளில் வீற்றிருக்க, அவைகட்கெதிரில்சில பேய்கள் தோத்திரஞ்செய்தும், சிலபேய்கள் துணங்கையாடியுமிருந்தன இவ்விதமாகப்போர்க்களமானது சிறப்பெய்தியிருக்குஞ் சமயத்தில், மாலுமயனுமறியாத மல்லாலமூர்த்தியினுடைய சேனைகள் கமலாசுரனுடைய சேனைகளையெல்லாம் வெந்நிட்டோடும்படியாகச் செய்ய, அதனைக்கண்ட கமலாசுரன் தனதுசேனைகளைக் கையமர்த்தி, மல்லகதி-மயூரகதி-வியாக்ரகதி- வானரகதி- விடபகதி-என்னும் ஐவகைநடையினையும் வாய்ந்த தனதுகுதிரையின்மீது நின்றும் இடியேற்றினைப்போலச் சத்தித்து, உலகங்களையழிக்கவெழுந்த வடவாமுகாக்கினியின்மீது நெய்ககடல் பெருகுமாறுபோலக் கோபித்துச்சீறினன். அச்சீற்றத்தைக்கண்ட மாத்திரத்தில் சிலர் நடுங்கியும்- சிலர்மெய்மறந்தும்- சிலர் ஓடியும்-சிலர் ஊக்கமிழந்தும் போனார்கள். பின்னர் கமலாசுரன் தன்குதிரையைஇடசாரி வலசாரியாக வோட்டி, மல்லாலமூர்த்தியினுடைய சேனைசமூகங்களிற்புகுந்து, தலைகளுருளவும்- உதிரம்பெருகவும்- குடர்களலையவுமாக அளவற்றவீரர்களைச் சின்னபின்னமாகவாட்டி, மீட்டும் எமதுகர்த்தனெதிரில் வந்து நின்று நாகப்படையையெடுத்துத், தனது குலகுருவாகிய சுக்கிரனுபதேசிக்கப்பெற்ற மனுவைநூற்றெட்டுரு செபித்து, அதிவேகத்தோடு விட்டனன். அப்படைவெளிப்பட்ட மாத்திரத்தில் தேவர்கள்முதலிய சகலரும் விழிகள்கூசி மருண்டு விஷமுண்டவரைப்போலக்களக்கும்படி ஒன்றனந்தமாகச்சொலித்துக்கொண்டு, சர்ப்பாபரணத்தைத்தரித்த மல்லாலமூர்த்தியினுடையபடைகளோடெதிர்தது,தனதுவேகமுள்ளஉயிர்ப்பினாலும் வேப்பமாகிய விடத்தினாலும் வீறியிருக்கின்றபற்களினாலும் அஞ்சவிழிக்கின்ற பார்வையினாலும் பேரொலிசெயகின்ற குரலினாலும் அளவற்ற சேனைகளை அதா அதப்படவாட்டிநின்றது; அதன்செயலை முக்கண்மூர்த்தியாகியமல்லாலர்பார்த்துப் புன்னகைசெய்து,தமதுதிருக்கரத்திலிருக்கின்ற சக்கரப்படையை விடுத்தனர். அஃது ஆயிரமாயிரமாக வுருக்கொண்டு, கமலாசுரனுடைய படைகளையெல்லாந்துகள்படுத்தி.ஓர்நிமைப்போதில் நாகப்படையறுத்தெறிந்து கர்த்தனுடைய திருக்கரத்தில் மீண்டது. பின்னர் கமலாசுரன் தேவர்களுங்கண்டு நடுங்கத்தக்கதாகத் தண்டாயுதத்தை யெடுத்துத்தாக்கினன். அதற்கு எமதுகர்த்தர் இவன் வலியினெல்லையைக் காணுதுமென்று தாமுமொரு தண்டாயுதத்தையெடுத்துத்தாக்கி,நெடுநேரமவனோடு சமராடினர். உடனே அவ்வசுரன் மல்லாலருடைய மார்பின்மீது ஓர்கதாயுதத்தை யேவினன். அதை எமதுகர்த்தர்கண்டு நகைசெயது, அவ்வவுணன் மெய்முழுதும்வெயர்த்து நடுங்கும்படியாக அதனைத் தமதுகதாயுதத்தை விடுத்துத்துகள்படச்செயதனர். பின்னர்கமலாசுரன்மீண்டுவிஞ்சக்கரமும் வாய்புதைத்தேவல்செயயத்தக்க தனது

சக்கராயுதத்தைவிதிப்படி சோடசவுபசாரங்களுடன்பூசித்துக்,கரகரெனச்சுழற்றிச்,சிவகுமாரனைக்கண்டித்துவருவதாகவேண்டிவேகமாயச்செலுத்தினன். அஃது அவ்வாறே நாற்றிசைகளினுஞ் சொலிப்பெயத அளவற்ற தீப்பொறிகளையிறைத்துப்,பற்பலஆயுதவிதங்களைப்படைத்துச்,சொல்லப்படாத வுற்பாதங்களைக்காட்டிப்,பிரசண்டமாருதமும்பயந்தொடர்க்கும்படி வேகங்கொண்டு சீறிவர, அதனை விநாயகமூர்த்தியினுடையதிருக்கரத்தி லிருந்த சக்கரமானது ஒருகவளமாய் விழுங்கிவிட்டது. இப்பால் விண்ணவர்கள் ஆண்மையை யடக்கவல்ல அவுணனானவன் வடவைக்கனலைத்திரட்டிவடித்து வைத்தாற்போல விளங்குந் தனதுசத்திப்படையை விடுத்தனன். அதனைத் தானவராண்மையையடக்கவல்லஎமதையனுனவர் தமது அங்குசப்படையினாற் றுணிசெயதனர். உடனே கமலாசுரனானவன் விழிகளிலனற்பொறிபறக்கக்கோபித்துத்,தனதுமழுப்படையை அதிகவிரைவோடுஞ்செலுத்தினன். அஃது கடலிலெழுந்த கடுவிடத்தைப்போலச்சீறி அடர்ந்துவருதலும், மல்லாலமூர்த்தியானவர்தமது மழுப்படையினைக்கொண்டு அதனைககண்டித்தனர். பின்னர் அவுணபாதகன்பாசத்தை யெடுத்துவிடுத்தனன். அதனையும் எமதுகர்த்தரானவர் பலதுண்டங்களாக வறுத்து எறிந்தனர். இவவாறுதனக்கருமையாகக்கிடைத்திருந்த படைகளெல்லாம் விநாயகப்பெருமானாலழிந்துபோன அபசயத்தைக்கண்ட கமலாசுரன் என்செயவன், செருக்கற்றுப், பெருமூச்செறிந்து,மானமுங்கோபமு மனதைப்பாதிக்கச் சர்ப்பத்தைப்போலச் சீறி, இனிஇவனைத்தெய்வப் படைகளா லதஞ்செய்யவேண்டுமென்று யோசித்தவனாய் வருணாஸ்திரத்தை யெடுத்து,தூபதீபநைவேத்திய முதலிய உபசாரங்களைச்செயது,நீபோய் மல்லாலனையும் அவன்சேனைகளையு நாசஞ்செய்து மீளக்கடவையென்று மந்திரபூர்வகமாகப் பிரயோகித்தனன். அந்தப்பாணமானது வெளிப்பட்டவுடன் சர்வசங்காரகாலததிற பரமசிவகடாக்ஷத்தால் உலகங்களையழிக்க சத்தசாகரங்களையும் உடைத்துக்கொண்டெழும்பெரும்புறக்கடலைப்போலச் சலப்பெருக்கையுண்டாக்கி,அலைகளைப்பெருக்கி,இடிகளையொத்ததிர்ந்து புரண்டு அதிவேகமாய வருவதைத்தேவாதிதேவராகியமல்லாலர்கண்டு,பிரளயவெள்ளத்தைச் சுவற்றுந்தீக்ஷணியமுள்ள அக்கினியாஸ்திரத்தை யெடுத்துவிட்டனர். அதைவிட்டமாத்திரத்தில் வானத்திலெழுந்து,பக்பக்கென்று நகைத்துக்,கொண்டல் கொண்டலாயப்புகையைப்பெருக்கிச்,சுவாலைகளைவீசி, அனற்பொறிகளைக்கக்கி,உலகங்களை மூடியிருந்தசலத்தைநிமைப்போதில் வறள உண்டுவிட்டது. அதைக்கண்ட கமலாசுரனானவன் ரவுத்திராகாரமாகக கோபித்துத், துரிதமாய வாயுவாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தான். அதுவில்லிலிருந்து வெளிப்பட்டவுடன் ஊழிக்காலத்தில் மோதும்பிரசண்ட வாயுவைப்பெருக்கிச்,சுழற்காற்றைப்போலஎங்கும்வீசி, அக்கினிப்படையினுடைய வலியினையடக்கிநிற்ப,அதைமல்லாலமூர்த்திகண்டு,விரைவில் நாகாஸ்திரத்தையெடுத்துப் பிரயோகித்தனர்.உடனே அஃதுதேவர்கள்மயங்க,உலகத்தைவிளக்குஞ்சூரியனுந் தியங்கிவாடமேலிட்டு,விசாலமாகிய படங்களைவிரித்து,விஷங்களைக்கக்கவல்லபலகோடிசர்ப்பங்களையுண்டாக்கி,ஆலகாலவிஷமு மனுசச்சீறி,வாயுவின் பெருக்கனைத்துங் கிரகித்து,விஷச்சுவாலை

பெருகப் பெருமூச்செறிந்து வருவதைக் கமலாசுரன்கண்டு, கருடாஸ்திர
த்தையெடுத்து அபிமந்திரித்து அதிவேகத்தோடும் பிரயோகித்தான். அ
ந்ததிவ்வியபாணமானது வானத்திலெழும்பி சங்கோபசங்கமாய் கருடவு
ருவங்களைக்கொண்டு, விசாலமாகிய சிவந்தசிறகுகளைவிரித்து ஆற்பாடங்
களைச்செய்துபோய்ச் சற்பக்கூட்டங்களை மடக்கிக், கால்களிலிருக்கின்ற
கூரியநகங்களினாற் பிளந்துகொன்றும், மூக்கினாற்கொத்திவாட்டியும்,சிறக
டியினால் மாய்த்தும்,திசையெங்கணுஞ் சாடியுங் கோபமடங்காமல்,பகை
வனைத்தேடி மேலிட்டுவர, அதனை எமதையன்கண்டமாத்திரத்தில் தம
து ரிஷபாஸ்திரத்தினையெடுத்துப்பிரயோகித்தனர்.உடனே அப்பாணமா
னதுவலியகால்களையும் வச்சிரத்தையொத்துக் காட்டுநீண்டகொம்புகளை
யுங்கொண்டு,பெருமூச்சுவிட்டு, அண்டகோளகையு மதிர்ந்து நடுங்கும்ப
டிகர்ச்சித்து,வெண்டையங்கள்கலிர்கலிரென்றுசத்திக்கப்பாதங்களைப்பெ
யர்த்துவைத்து,கருடாஸ்திரத்தின் வலியையுஞ்செய்கைகளையும் நிமைப்
போதிலடக்கிச்,சத்துருவைச்சின்னபின்னப்படக்கண்டிப்பேனென்று உ
ருத்துவருவதைக்கமலாசுரன்கண்டு,விரைவில் ஏமாஸ்திரத்தை யெடுத்து
மந்திரபூர்வகமாக வில்லிற்பூட்டிப் பிரயோகித்தனன். அந்தப்படையான
து அதிகமகிமைகளோடு மார்ப்பரித்து, நந்திப்படையோடுமெதிர்க்கவலி
யற்றுமயங்கி நாசமாகிப்போயது.ரிஷபாஸ்திரம் முன்னினு மதிகமானஉ
ற்பாதங்களைக் காட்டிச் சமீபித்துவரும்போது,கமலாசுரன் அதனுடைய
வலியையும் வேகத்தையுநிதானித்துக்,கறகறெனப்பற்களைக்கடித்து,உதட்
டையதுக்கி,விழிகளில் தீப்பொறி சிதறக்கோபித்துப், பிரமாஸ்திரத்தை
யெடுத்துப் பூசித்து வில்லிலிற் பூட்டி, ஆகாரணாந்தபரியந்த மிழுத்துச்
செலுத்தினன். அப்பாணமானது உடனே வானத்திற்சென்று, வடவை
யைப்போலச் சீறிக்கொக்கரித்துக், கலகலென நகைத்துக், கணக்கிறந்ததி
வ்வியபாணகோடிகளைப்படைத்துப், பிரசண்டமாருதத்தைப்பெருக்கி, உ
லகங்களனைத்துந் திடுக்கிட்டு நடுங்கும்படி ஆற்பாடங்களைச்செய்து, அதி
கவேகததோடுவந்து,சிவபிரானுக்கு வாகனமாகியநந்திப்படையைக் கண்
டவுன் பயந்து,கரங்களைக்கூப்பித்தொழுது,பிழைத்தோம்பிழைத்தோமெ
ன்று கூவிக்கொண்டு திரும்பியது. அதைக்கமலாசுரன்கண்டு, காலாந்தக
னைப்போலக்கோபித்து,உடனே நரசிம்மாஸ்திரத்தையெடுத்துச்,சோடச
வுபசாரங்களோடும்பூசித்துப் பிரயோகஞ்செய்தான். அது வெளிப்பட்
டமாத்திரத்தில் அளவற்றமாய்கைகளை விளைத்து,எங்கும் இருள்மயமாக
மூடி,அதிகவுக்கிரத்துடன் சர்ப்பத்தைப்போலச்சீறி வந்து, நந்திப்படை
யோடெதிர்த்து அளவற்றயுத்தங்களைச்செயதுநிற்க, எமதையனாகியமல்
லாலமூர்த்தி அதுகண்டு,சரபத்தின்வடிவாகியவீரபத்திராஸ்திரத்தையெ
டுத்துப் பிரயோகித்தனர். உடனே அத்திவ்வியாஸ்திரமானது வானத்
தெழுந்துசீறி, வடவைக்கனலும் ஆலகாலமுநடுங்கி அஞ்சத்தக்கதாகக்
கொதித்து,அதிகவேகமாய்வந்து, நந்திப்படையுடன் போராடுகின்ற நரசி
ம்மாஸ்திரத்தைமடக்கிக்கொண்டு,அதன்வீறுப்பைமுற்றினு மடக்கித்துர
த்திவிட்டது. இவ்விதங்களாகத்தான் செலுத்திய தெய்வப் படைகளனை
த்தும் பிரயோசனப்படாமல் பின்னிடுவதையும்,மல்லாலர்படைவீறியிரு
ப்பதையுங் கமலாசுரன்கண்டு திடுக்கிட்டு, நிமைப்போதிற்சராசரப்பிரப

ஞ்சங்களைவாட்டிச்சாம்பாரக்கவல்ல பாசுபதாஸ்திரத்தை யெடுத்து,திருமஞ்சனதூபதீப முதலிய சோடசவுபசாரங்களையுநடாத்திப்,பத்திபூர்வகமாகத்துதித்து,வில்லிற்பூட்டி,வாட்டாகாரமாக வளைத்துத்துப் பிரயோகித்தனன். அதைமல்லாலமூர்த்தி கண்டமாத்திரத்தில் இதற்கு வீரபத்திரப்படை எதிர்நிற்க மாட்டாதென்று நிதானித்தவராய்,துரிதமாய்த்தம்மிடத்திலிருக்கின்ற பாசுபதாஸ்திரத்தை யெடுத்து, மானதபூசையினால் பலவுபசாரங்களையு நிறைவேற்றி,அசசத்துருவிடுத்த பாணத்தினால் உலகங்கட்கு யாதொரு துன்பமும் நேராதபடி பாதுகாப்பதுமன்றி, அவன் விட்டபடையையுமாற்றித் திரும்புவையென்று சொல்லி மந்திரபூர்வகமாகப்பிரயோகித்தனர்.உடனே அப்பாசுபதாஸதிரமானது பலமகிமைகளோடு அதிவேகத்துடன் சென்றெதிர்த்துப், பிரசண்டமாருதத்தை ஒருபுறத்திலெழுப்பியும்,வடமுகாக்கினியை யொருபுறத்திற்காட்டியும்,ஆலகாலவிடத்தை யொருபுறத்திற்பெருக்கியும்,தாபாசகினியையும் புகைப்படலங்களையும் ஒருபுறத்திலுண்டுபண்ணியும்,பூத பசாச டாகினிமுதலியவருக்கங்களை ஒருபுறத்திற்சிருட்டித்தும், தோமரம் பிண்டிபாலம் கப்பணம் முசலம் சக்கரம் எழு மழு தண்டம் ஈட்டி எறிவேல் முசுண்டி கவண் நாஞ்சில் இருப்புலக்கை முத்தலைச்சூலம் வச்சிரம் வேல் வாள் முதலிய ஆயுதங்களை ஒன்றனந்தமாகவீசியும், மேருமுதலிய அட்டாகுலா சலங்கள் பிளக்கவும்-நட்சத்திரராசிகள் நெற்பொறிகளைப்போல வுதிரவும்-சூரியன்ரதமும் சந்திரன்விமானமும் பங்கப்பட்டுச்சிதறவும்-திசையானைகள் தாவரிக்கமாட்டாமையால் வால்களைத்தூக்கி வீறிட்டோடவும்- வடவனலும்வெப்பத்தினையடக்கிப்பதுங்கவும்-கீழுலகவடுக்குகளும்மேலுலகவடுக்குகளுஞ் சலைந்துமாறுபடவும்-சகலசராசரங்களுந்திடுக்கிட்டுமயங்கவும் வானத்தில்வேடிக்கைப்பார்த்திருந்த தேவர்களுமுனிவர்களுந் திகைத்துப்பயந்து திசைதப்பியோடவும்-பூமியைத்தாங்கிநின்றகூர்மமுஞ்சேடனும் நொறுங்கிவாடவும்-சத்தமேகங்களுங் கலங்கிக் காற்றிற்பஞ்சையொப்பப்பறக்கவுமான இவ்வித வுற்பாதங்களைவிளைத்தும், அவுணர்கோன்விட்டபாசுபதத்தை அதாஅதப்படுத்தித்,தானவர்களொழியவனையதேவர் முதலிய சராசரங்களை நூதனமாகப்படைத்துப்பாதுகாத்து,மீட்டுந் தயாபரமூர்த்தியாகிய மல்லாலருடைய திருக்கரத்திலவந்து சேர்ந்தது. ரிஷபாஸ்திரமும் அவ்வாறே மீண்டுகர்த்தனையடைந்தது. இப்பால கமலாசுரனெனவன் தான்செலுத்தியபாணம் வியர்த்தமாகத் திரும்பியவுடன் திகைத்துத், தன்னைச்சமுத்திரம்போலச்சூழ்ந்திருந்த ரதகஜதுரகபதாதிகளைக்காணுதவனுயேங்கி,இதனையோசிப்பதாயினன்.கணப்போதிற் சாரசரப்பிரபஞ்சங்களைத் தகித்துச்சாம்பராக்கவல்ல படைகட்கரசாகிய பாசுபதாஸ்திரத்தைப்பிரயோகித்தனம், அஃது பகைவனைச் சயங்கொள்ளாமல்அபலமாகத்திரும்பிவந்துவிட்டது, இனிச்செலுத்தவதற்கு அதனிலுஞ்சிறந்த பாணமென்னவிருக்கின்றது,பெருத்துவந்த சேனைகளனைத்தையு மாளக்கொடுத்துஏனென்பாருமொருவருமின்றி ஏகாங்கியாயிருக்கின்றனம், பகைவனோசகலசேனைகளோடும் வீறியிருக்கின்றனன், அவன்நம்மைவிட்டு நீங்குந்திறத்தனல்லன், ஆதலால்- அவனுக்குமுன்னமேநாம்ஓடிப்பதுங்குவதுஉத்தமமென்றுநினைத்துத்,தனதுமாயையினால்யாவருங்காணுதபடி அ

போர்க்களத்தினின்றுமறைந்தனன். மல்லாலமூர்த்தியும்அசுரன்மறைந்
துபோனதையறிந்து,இனி அவன்வரும்போது இங்ஙனமெய்துவோமென்
றுதிருவுளங்கொண்டு,சகலமுனிவர்களும்வசித்திருக்கின்றசுந்தரஆசிரமத்
ததை நோக்கிச்சென்றனர். அப்போது அம்மல்லாலருடைய அட்டமூர்த்
தத்தில் ஒருவனாகிய சூரியனென்பவன் கொடிய அவுணர்களாற்செய்யப்பட்
ட போரினாலுண்டான ஆகுசத்தைநீக்கிக் கொள்ளுபவன்போலத் தனது
வானாகிய வீதியைக்கடந்து, சிவபிரானுடையதிருமேனிபோலச் சிவந்து
பிரகாசிக்கின்ற மேற்றிசைக்கடலில் மூழ்கிக்குளித்தனன். உடனே மாலை
க்காலமானது கரியின்பராகம்போன்றுங் கறுத்தபுகையினைப் போன்றும்
இருண்டு புவனமெங்கும்பரவியது.அஃதெப்படியிருந்ததென்னில்-கொ
டியபாதகராகிய அவுணர்களின் வடிவங்களையும், அவர்களுண்டாக்கின்ற
மாயைகளையும், அவர்கள்செய்துவருகின்ற பாவங்களையும் ஒத்திருந்தது.
இப்பால் போர்முகத்தினின்றும் அவசயமடைந்துசென்ற கமலாசுரனெ
னவன் கடலின்மத்தியில் வாழ்கின்ற தன்தமையனை சங்காசுரனிடத்தி
ற்சென்று பணிந்துநிற்க, அவனை அசசங்காசுரன்பார்த்துச் சொல்லுவா
ன்,பிள்ளாய்- இன்றுகாலையில் இங்ஙனமிருந்து சென்றபோதுண்டாயிரு
ந்த முகவிலாசத்தினை இப்போதுகாணவில்லை,ஆலைவாயிற்பட்டகரும்பை
ப்போல உனது சரீரமெல்லா நொறுங்கவந்தனை, வீரத்திற்சிறந்த நமது
சேனைகளையெல்லாம் பின்னிட்டோடச்செய்தனை, பகைவர்க்குப் புறங்
கொடுத்து வந்தால் வீரர்களாயினோர்க்கு ஆண்மையுண்டாகுமோ, யாவ
ராலுஞ்சாகாதிருக்கத்தக்க பலமானசரீரத்தினையும் வரத்தினையு முடைய
நீயே ஓரந்தணன்செயயும்போருக்கு அஞ்சி இளைத்தனையென்றால் உலக
ஞ்சிறியாதா,மகாபராக்கிரமசாலியாகிய உனதுசரீரத்தில் நின்று துவலைர
த்தஞ்சிந்தினால் ஒவ்வொருதிவலைக்கு உன்னையொத்தவீரர்கள் அளவற்ற
பேர் உண்டாகும்படியான மகத்துவத்தை நீபெற்றிருக்க உன்னைக்கொல்
லவல்லவர்கள எந்தவுலகத்திலிருக்கின்றார்கள், உனதுபுத்திமயக்கத்தால்
உன்னுடையபராக்கிரமம் உனக்கேதெரியவில்லை, நீபெற்றிருக்கின்றவரங்
களை யான்பெற்றிருப்பேனாயின்எதிர்த்தசத்துருவை உயிரோடுவிட்டு மீட்
டுந்திரும்பிவருவனோ,இம்மட்டிலேனும் உனதுகவலையை யொழித்து, இ
த்தினமாய்ந்துவிட்டசேனைகள்போக மற்றைச்சேனைகளையும் இங்கிருக்கி
ன்றசேனைகளையும் நாளைவிடியற்காலையி லழைத்துக்கொண்டு யுத்தத்திற்
குப்போகக்கடவையென்று சொல்லினன். அவையனைத்தையுங் கமலாசு
ரன்கேட்டு,மீட்டுந் தன்தமையனைப்பணிந்தெழுந்து, அண்ணலே-தேவரீ
ரிட்டருளிய கட்டளையின்படி உதயகாலையில் யுத்தத்திற்குச் செல்லுகின்
றேனென்று சொல்லிவிடைபெற்று, அன்றிரவுமுழுவது நித்திரைசெய்
யாது,எப்போது அருணோதயமாகுமென்று எதிர்பார்த்திருந்தனன். இப்
பால் சுந்தர ஆசிரமத்திலிருக்கின்ற முனிவர்களெல்லாம் யுத்தத்திற்குச
சென்ற நமதுகிருபாமூர்த்தி எப்போது வந்தருளுவரென்று, மாலைக்கால
த்திற் றங்கள் தங்கள்காதலர் வரவைநோக்கியிருக்கின்ற மங்கையரைப்
போலச செருக்களத்திசையினையே நோக்கியெதிர்பார்த்திருந்தார்கள். உ
டனே விநாயமூர்த்தி அச்செருக்களத்தை விடுத்துவந்தனர், பின்னர் மு
னிவர்களெல்லாம் அவரைப்பேருவகையோடும் பணிந்துநின்றார்கள். அ

ப்போது விநாயகமூர்த்தி கவுதமர் முதலியமுனிவர்களை அன்போடு பார்த்து, ஓர்நொடிப்போதில் எல்லாவுலகங்களையு நீற்றவல்ல தம்து மகத்துவத்தைத் தமக்குள்ளேமறைத்து, அம்முனிவர்களுடைய மனதைச்சோதிக்கவேண்டி, ஓதவத்தர்களே- நம்மைஎதிர்த்துவந்த கமலாசுரனுடைய வல்லபங்களையாவரும் பார்த்தீர்களல்லவா, நாம்செய்துவந்தயுத்தங்களுக்கெல்லாஞ் சிறிதேனும்பின்னிடையாமல் சமயுத்தஞ்செய்து நமதுசேனைகளை யெல்லாமாய்த்தான்,அவனைப்போன்ற சுத்தவீரர்கள் திரிலோகங்களினு மில்லையென்று திருவாய்மலர்ந்தனர்.அதைக்கவுதமமுனிவர் கேட்டுப்பணிந்தெழுந்து, சுவாமி- சேனைகளெல்லாமடிந்து போயினவென்று ஏனையதேவர்களைப்போலத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளுவ தென்றினுக்கு, முன்னநதேவரீருடைய கிருபையினால் யாவருங்கண்டுசந்தோஷமெய்தும்படியாகச்சகலசேனைகளு முண்டாயின. மீட்டும்அவ்வாறே தேவரீரிடத்தில் யாவும் ஐயிக்கியமாயின, சுவாமிகள் திருவுளங்கொண்டால் இன்னும்வேண்டியசேனைகள் ஓர்நொடிப்போதில்உண்டாகாவோ,அப்படியல்லவெனில் தேவரீர் அடியேனிடத்திற் கிருபைவைத்து சட்டையிட்டருளினால் இன்றுமாய்ந்தசேனைகளனைத்தையு மெழுப்பி இன்னு மளவற்றசேனைகளை நூதனமாக உண்டாக்கவல்லேனென்று சொல்லினர். அதை விநாயகமூர்த்திகேட்டருளிப் புன்னகைசெய்து, ஓதவமுனியே- நீயுள்ளதையே கூறினை, நமதுபராக்கிரம முதலியவைகளை இவ்வுலகத்தார் யாவரும் பார்க்கும்படியாக வுண்டாக்கினோம்,அகத்தியன் காசிபன் முதலாயுள்ள சிறந்த இருடியர்கட்கும் உனக்கும் நமது கிருபையினால் ஆக்கமுதலிய தொழில்களைச்செய்யத்தக்கவல்லபங்களுண்டாயிருக்கின்றன. ஆயினும் ஏகனென்று சொல்லப்படுகின்றயாமே முன்னமூர்ச்சித்திருக்கின்ற நமதுசேனைகளையெழுப்பிக்கொண்டு, மூவுலகத்தாருந் துதிசெய்யும்படியாக மீட்டும் யுத்தகளத்திற்சென்று, காகமு நரியுஞ்சூழும்படி அக்கமலாசுரனைச் சங்கரித்திடுவோமென்று, அங்கிருக்கின்ற ஏனைய முனிவர்கட்கெல்லாங் கேழ்க்கும்படி திருவாய்மலர்ந்து, அமிர்த சஞ்சீவியென்னு மந்திரத்தை உச்சரித்து, தமது திருக்கரத்தாற் சலத்தையள்ளி, மாய்ந்துகிடக்கின்ற சேனைகள்மீதுதெளித்து எழுந்திருக் ச்செய்து, பின்னும் அளவற்றசேனைகளை நூதனமாகவுண்டாக்கி, மீட்டும் அம்முனிவர்களை யெல்லாங் கிருபையோடுபார்த்து, அன்பர்களே- இப்போது முன்னினும்அதிகமான சேனைகளையுண்டாக்கி யிருக்கின்றனம், இனி அக்கமலாசுரனைச் சங்கரிப்பதற்கு ஓருபாயஞ்சொன்மின்களென்று கேட்டருளினர். அதற்கம்முனிவர்கள் சகலமுந்தெரியவல்ல சுவாமிகட்குச்சிறியேங்கள்யாதுதெரிந்து சொல்ல வல்லேமென்றார்கள். அவர்களுள் காற்கியனென்னுமுனிபுங்கவர் விநாயகமூர்த்தியைப்பணிந்தெழுந்து, சுவாமி- தேவரீருடையபெருங்கருணையினால் அடியேங்கள் திரிகாலஞானங்களை யறிந்திருக்கின்றமையானும், அடியேங்களைத் தேவரீரே நோக்கி ஓருபாயஞ் சொன்மின்களென்று கேட்டருளியதானும், நாயேன்செய்துகொள்கின்ற விண்ணப்பத்திற்குச்செவிகொடுத் தருளவேண்டும், அஃதுயாதெனில் - கொடியபாதகனான கமலாசுரன்நாளையுத்தத்தில் வருவான்,அவனைச் சங்கரிப்பதற்குச் சுவாமிகள் ஓர் வாகனத்தை யூர்ந்தருளல்வேண்டுமாதலால், இத்தினந்தே

வீர் சாங்க உபாங்கத்துடனே ஒருவேள்விசெய்தால், அவ்வேள்வியினின்று மலைபோல ஒருமயிலுண்டாகும். அம்மயிலின்மீது சுவாமிகள் ஆரோகணித்து, நாளையதினம் யுத்தகளத்திற்சென்று, அவ்வசுரனைச் சங்கரிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தனர். இவ்வாறுசாற்றிய முனிவர் கூறியதை விநாயகப்பெருமான் கிருபையோடுங்கேட்டு, ஓதவசீலனே-உனதுள்ளமும் நமதுள்ளமும் ஒன்றாதலால் உனதுகருத்தின்வண்ணமே யிசைகின்றேம், வேள்விசெய்தற்கு வேண்டியபதார்த்தங்களை யாவருஞ் சேகரித்து,நடத்தற்குரிய திருப்பணிகளைவிரைவில் நடாத்தக் கடவீர்களென்று கட்டளையிட்டருளினர். உடனே சிலர் சாத்திரவிதிப்படிவேள்வி மண்டபத்தைச் சமைத்தார்கள். சிலர்குண்டமண்டலாதிகளைச்செய்தார்கள். சிலர் வேள்விக்குரிய பொருள்களைச்சேகரித்துவைத்தார்கள். சிலர் பற்பல திருப்பணிகளை நிறைவேற்றியிருந்தார்கள். அப்போது அண்டர்பெருமானாகிய விநாயகமூர்த்தியானவர் வேள்வித்தீயைவளர்க்கத் திருவுளங்கொண்டவராய்த், தமது தேவியராகிய சித்திபுத்திகளை நினைக்க, அவர்கள் உடனேவந்து கர்த்தனுடைய இருபார்சுவங்களிலும் அமர்ந்திருந்தார்கள். பின்னர் விநாயகப்பெருமான் அத்தேவியரோடுமெழுந்தருளித்,தீர்த்தமாடி ஞானதீக்ஷைமுதலியவைகளை நிறைவேற்றி, வேள்வியும்-அவ்வேள்விக்குத் தலைமையானகடவுளும்-அவ்வேள்வியால்வரும்பயனும்-அப்பயனையளிக்கவல்ல முதல்வனுந் தாமேயென்று உலகத்தின ரறியுமாறு, வேதாகமமுறைப்படி அவ்வேள்வித் தீயைவளர்த்தி, அவிற்பாகமுதலியவைகளைக் கொடுத்துப், பூரணாகுதியுஞ்செய்துமுடித்தனர். உடனே- அவ்வேள்விக்குண்டத்தினின்று, நீண்டகலாபத்தோடு ஒருபாரித்த மயிலுண்டாகிச், சந்திரனும் உடுக்கூட்டங்களு முதிரும்படியாகவும், திக்கயங்களெட்டு மஞ்சி நடுங்கும்படியாகவும் கேகாவென்றுகூறிச் சத்தித்தது. பாதலலோகத்தில் வாழ்கின்ற நாகராசர்களுஞ்சுவர்க்கலோகத்தில் வாழ்கின்றராகுகேதுக்களும் அக்கூக்குரலைக்கேட்டமாத்திரத்தில் திடுக்குற்று, மீட்டும் இம்மயில் சகலலோகங்கட்கு முண்டாயிருக்கின்ற ஆபத்துகளை விலக்கி ஆட்கொள்ளும்பொருட்டெழுந்தருளியவிநாயகமூர்த்திக்குவாகனமாகப்போகின்றமையால்,நமக்குயாதொருதீங்கினையுஞ் செய்யாதெனத்தெளிந்துசந்தோஷமடைந்தார்கள். பின்னர் வேள்விக்குண்டத்தினின்று முகித்த அம்மயிலானது தனது அடிகளைப்பூமியிலே பெயர்த்து மாறிமாறிவைக்குந்தோறும், அப்பூமியைத்தாங்கிநின்ற ஆதிசேடனுடையபணாமகுடங்களெல்லா நெரியவும், சத்தசாகரங்களுந் தத்தங்கரைகளினின்று புரளவும் அட்டகுலாசலங்கள் அதிரவும்,தனதுகலாபத்தைவிரித்து ஆடிக்கொண்டிருக்கையில், விநாயகமூர்த்தியானவர் யாவருஞ்சயசயவென்று போற்றும்படியாக அம்மயிலைவாகனமாக வூர்ந்தருளினர். உடனே ஆகாயத்திற்பஞ்சகருவிகளு முழங்கின. தேவர்கள்சொரிந்த புட்பவருடத்தினாற் பூமியெங்கணு மிடமில்லாமல் மறைந்தது. முனிவர்களெல்லாம் விநாயகமூர்த்தியை மயூரேசரென்று துதிசெய்தார்கள். சுவாமியும் அம்முனிவர்கள் மீது தமதுபரிபூரணகடாட்சத்தினை வைத்தருளினர். ஓ சவுனகாதி முனிவர்களே- இந்தமயூரேசரென்னுந் திருநாமத்தையாவரேனும் அன்போடு துதிசெய்வார்களாயின், அவர்கள் இம்மையில் சகலவிடையூறுகளினின்

று நீங்கி,மேலானசெல்வத்தைப்பெற்று, கற்பகதருவைப்போலவளையா
துவழங்கி,வேதசாஸ்திரசம்பத்தோடு அளவற்றநாள் வாழ்ந்திருந்து,மறு
மையில் மோட்சசாம்பிராச்சியத்தினை யடையவார்கள். இப்பால்விநாயக
மூர்த்தி மயூரேசராய்த் திருவவதாரங்கொண்டருளிய காட்சியைத்தரிசிக்
கவருவான்போலச்,சூரியனானவன் தனது தேரினைச்செலுத்திக்கொண்டு
கீழ்த்திசைக்கடலிலுதயமாயினன். உடனே முன்னாளைப்போலக் கணித்
தற்கரிய சேனைகளோடு கமலாசுரன் யுத்தகளத்திற்குவந்தனன். அவன்வ
ரவைமயூரேசர்தெரிந்துகொண்டு,தேவர்கள் முனிவர்கள்முதலாயினோர்க்
குசுகத்தைக்கொடுக்குமாறுங், கமலாசுரனுடைய மலத்தைப்போக்கிமுத்
திகொடுக்குமாறுந்திருவுளங்கொண்டு,தாமுந்தமது மயில்வாகனத் தோடு
போர்க்களத்தைநோக்கி யெழுந்தருளினர்.அச்சமயத்தில் புத்திதேவியார்
விநாயகமூர்த்தியைப்பணிந்தெழுந்து,சுவாமி-ஓர்உழுந்தானதுகண்ணடியி
னின்றும்உருளுமுன்னம்அடியேன்சென்றுமாற்றானுடையசேனைகளையெ
ல்லாம்உருட்டி வெற்றிபெற்று வருவேன்,தேவரீர்அடியாள்மீது கிருபை
புரிந்து விடைகொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தனர். அதற்குமயூ
ரேசரிசைந்து, அத்தேவிக்கு நால்வகைப்படைகளுஞ்சகல சத்திகளு மு
ண்டாகத்தக்க சொரூபமுமளித்துத், தமது பூரணகடாட்சத்தையும் பா
லித்து, யுத்தத்திற்குச்செல்லுமாறு விடைகொடுத்துத்,தாம் அச்சுந்தர
ஆசிரமத்திற்றானே யாவரும்பணிந்து போற்றும்படி வீற்றிருந்தனர். இப்
பால் புத்திதேவியார்தமது பாங்கியரோடு விமானத்தின்மீ தாரோகணித்
து, சகலசேனைகளுங் கடல்போலப் புடைசூழ்ந்துவரவும், பேரிகைமுத
லிய வாச்சியங்கள் மேக கர்ச்சனையைப்போல முழங்கவும், கொடி கொ
டைமுதலியசின்னங்கள் நாற்புறங்களினுநெருங்கவுமாக,ஞெரேலென்று
யுத்தகளத்தில்வந்துநின்றனர். அவர்வரவைக் கண்டதூதர்கள்முன்னதா
யோடிச்,கமலாசுரனைப்பணிந்தெழுந்து,ஆண்டவனே-இத்தினம்மல்லால
னுடைய பத்தினியுத்தஞ்செய்ய வந்திருக்கின்றனள், அவளைப் பெண்பி
ள்ளை யென்று தேவரீர்நினைக்கவேண்டாம், அவள் சகலலோகங்களையும்
ஆக்கவும் அழிக்கவும் வல்லவளென்று சொன்னார்கள். அதைக்கேட்டலு
ம் கமலாசுரன் விரைந்துவந்து, புத்திதேவியாருடைய சேனைகளது
மாண்பினையும், அவரது வீரபராக்கிரமத்தினையும், எங்குங் கண்டறியா
த அவரதுவனப்பினையும் பார்த்து, மிக்கமகிழ்ச்சியை யடைந்தவனாகி
த், தனதுசேனைகளையெல்லாம் அணிவகுத்து யுத்தஞ்செய்ய விட்டன
ன். இப்பால் புத்திதேவியார்கமலாசுரனைச்சூழ்ந்திருக்கின்ற வீராதிவீரர்
களுடைய ஆண்மைகளைநோக்கி,அந்நிமிடத்தில் அண்டகோடிகளையுமழி
க்கத்தக்க பராக்கிரமத்தில் மிகுத்தவர்களாயும்,சத்துருக்கள்கண்டுநடுங்கு
ம்படியான கோரரூபத்தையுடையவர்களாயுமிருக்கின்ற அளவற்றவீரர்க
ளையுண்டாக்கி யுத்தத்திற்குவிடுத்தனர்.அவ்வாறே அவ்வீரர்கள்யுத்தத்தி
ற்குச் சென்றபோது,கமலாசுரனுடைய சேனைகளெல்லாஞ் சகலவாயுத
ங்களோடும் வந்திருப்பதைக் கண்டு, நாமும்ஆயுதந்தரிக்கவேண்டு மல்ல
வாவென்று சொல்லித், தங்கடங்கள் சரீரங்களிலுள்ள உறுப்புகளைத்தா
னே ஆயுதங்களாகக்கொண்டு யுத்தஞ்செய்யத் தொடங்கினார்கள். அப்
போது கமலாசுரனுடைய சேனைகளுள் அனேகபர்வதங்கண்மீது அனே

கபர்வதராசர்கள் வருவதுபோல,சில அவுணவீரர்கள் அளவற்றதேர் வரிசைகளினும் யானைவரிசைகளினும் ஏறிவந்தெதிர்த்தார்கள். அனேக சமுத்திரங்களின்மீது அனேகவடவாமுகாக்கினி வருவது போலச்,சில அவுணவீரர்கள் அளவற்றகுதிரைகளின் மீதேறிவந்து எதிர்த்தார்கள். அனேக ஆலகால விடங்கள் அனேகரூபங்கொண்டுவருவதுபோலச்,சில அவுணவீரர்கள் அளவற்றபடைகளோடும் வந்தெதிர்த்தார்கள். இவ்வாறு எதிர்த்துநிற்கின்ற அவுணவீரர்களைப் புத்திதேவிபடைத்தருளிய பூதவீரர்கள் தங்கள்தங்கள் முடிகளினுலும் அனலைச்சொரிகின்றவிழிகளினுலுங் கைப்பிடிகளினுலும் நகங்களினுலும் நீண்டபற்களினுலுங் கால்களினுலுந் துடைகளினுலும் மார்புகளினுலும் புசங்களினுலும் மற்றுமுள்ள அவயவங்களினுலுந் தாக்கிப், பகைவர்கள்விடுகின்ற பாணங்கள் தங்கள் சரீரத்தில்வந்து தைக்குமுன்னமே அவைகளைக்கைகளினுற்பிடித்துச், சிலர் அப்பகைவர்கள் மீதேவிடுத்தும், சிலர் தரையின்கண்ணேயெறிந்தும் சிலர்வாயிலிட்டுமென்றும், சிலர் தங்களுடல்களிலே யேற்றுத்துகளாகச் செய்து ஆனந்தக்கூத்தாடியும், சிலர் யானைகளைப்பிடித்துயானைகள்மீதே தாக்கி அவைகள்மத்தகங்களைப்பிளந்தும், சிலர்தேர்களைத்தூக்கித் தேர்கள்மீதேதாக்கி அவைகளைமுறித்தும், சிலர்குதிரைகளையெடுத்துக்குதிரைகள்மீதேதாக்கி அவைகளைக் கொன்றும், சிலர் பதாதிவீரர்களைவாரிப்பதாதிவீரர்கள் மீதேதாக்கி அவர்களைநசித்தும், சிலர்எதிர்த்துவந்த அவுணர்களைவாரி ஆகாயத்திலெறிந்தும், சிலர் தரையிலேமோதிக்கொன்றும், சிலர் கால்களினுல் மிதித்துத் தேய்த்தும், சிலர் தலைகளைத் திருகிக் கோத்து மாலையாகத்தரித்தும், சிலர் உதிர மொழுகும்படியாகப் பிழிந்தும், சிலர் ஒருகரத்தால் யானைகள் பிளிறிடும்படியாகக்கன்னத்திற்புடைத்து மற்றொருகரத்தாற் கொம்புகளைப் பிடுங்கி எதிர்த்தவர்களைக் குத்தியும் யுத்தஞ்செய்கின்றபோது,கமலாசுரனுடைய சேனைகட்குஞ்சேனைத் தலைவர்கட்குங் கோபமுண்டாகி, கோடையிடிபோலக்கர்ச்சித்து, எழுமழு வாள் கதை சிலை முதலிய ஆயுதங்களை ஒன்றனந்தமாகவீசி, ஓர்நொடிப்போதில் புத்திதேவியினுடைய சேனைகளையெல்லாஞ் சின்னபின்னப்பட வாட்டினுர்கள். இவ்வாறு இருதிறப்படைகளுங் கைகலந்துபோர் செய்யும்போது, அளவற்றபிணங்கள்மலைமலையாகக்குவிந்தன. அவைகளினின்றும்பெருகிய உதிரமானது வெள்ளமாயோடிக் கடலிற் பாய்ந்தது. அசசமயத்தில் பூதசேனைகள் அவுணசேனைகட்கஞ்சி முறிந்து ஓடிப்போக, அதைப்புத்திதேவியார்கண்டு, விழிகள் கொவ்வைக்கனியை யொத்துச் சிவப்பெய்தக்கோபித்தனர். அக்கோபத்தினின்றும் ஓர்வீரன் ஆகாயத்தைமுட்டத்தக்க உயரமும், பர்வதங்கட்கிணையான புசபலபராக்கிரமமும், உலகங்களையெல்லாங் கவளங்கொள்ளவல்ல கோபமுமுடையவனுய், அண்டரண்டங்களையும்பொடிபடுத்தவல்லபலஆயுதங்களோடும்உற்பவித்து, புத்திதேவியினுடைய திருவடிக்கமலங்களைப்பணிந் தெழுந்து,அன்னையே- அடியேனுடைய தந்தை யார், அவர் எங்ஙன மிருக்கின்றனர், அதனை அடியேற்குத் திருவாய்மலர வேண்டுமென்று கேட்டுக்கொண்டனன். அதற்குப்புத்திதேவியார் மனமகிழ்ந்து, மைந்தனே- இதற்குச்சமீபத்தில் அளவற்ற முனிபுங்கவர்கள்வாசஞ்செய்கின்றசுந்தரஆசிரமமே

ன்றொரு ஆசிரமமிருக்கின்றது, அவ்வாசிரமத்தில் உனது தந்தை தேவர்களுமுனிவர்களும் பணிசெய்துவரக் கீழ்த்திசையில் ஓர் பெரியமயிலின்மீது எழுந்தருளி யிருக்கின்றனர், அவர் பத்துகரங்களையும் அக்கரங்கள் தோறும் ஆயுதங்களையுந்தரித்திருக்கின்றனர், அவரது வலப்பக்கத்தில்சகலசத்திகளையும் படைக்கவல்ல சித்திதேவிவீற்றிருக்கின்றனள், என்று திருவாய்மலர்ந்தருள, உடனே அவ்வீரன் சுந்தரஆசிரமத்தையடைந்து, தனது தந்தையினுடைய திருவடிகளில் அடியற்றமரம்போலச் சாஷ்டாங்கமாகவிழுந்து எழாதிருந்தனன். அவன்மீது மயூரேசர்தமது அருட்பார்வையைப்பரப்பித்,தம்மைச்சூழ்ந்திருக்கின்ற முனிபுங்கவர்கட்கு இதனைத்தெரிவிப்பதாயினர். ஓதவசீலர்களே- இவன்நமக்குப் புத்திரனவன், இவனால் உங்கட்கு எல்லாலாபங்களுங் கிடைக்குமாதலால், இவனுக்கு எங்கும் ஏக்காலத்தும் லாபனென்னும்பெயர் வழங்கிவரக்கடவதென்று திருவாய்மலர்ந்தனர். உடனே சகலமுனிவர்களும் அவ்வீரனை லாபனென்று துதித்துப்பணிந்தார்கள். பின்னர் மயூரேசரானவர் தமது திருவடிகளில் வீழ்ந்திருக்கின்றகுமாரனைத் தழுவியெடுத்து, யுத்தத்திற்குப்போகும்படி கடாக்ஷித்தனர். அக்கடாக்ஷத்தை லாபன்சிரமேற்கொண்டு, சமர்க்களத்தை நோக்கிச்சென்றனன். அவன்சென்றவுடனே மயூரேசர்மனமகிழ்ந்து, இவனது பராக்கிரமத்தினைக் காண்போமென்றுதாமும் அவன்பின்னாகவேசென்றனர்.அப்போது ஐம்பத்தாறுயிரம் படைத்தலைவர்கள் புடைசூழ்ந்துவரும்படியாக அளவற்றசேனாசமுத்திரங்களின் மத்தியில்சயவுற்சாகத்துடன் வருகின்ற லாபனைக் கமலாசுரன்கண்டு, ஓபிள்ளாய்-நீயென்வீணிற்பிராணனைக்கொடுக்கஇங்குவந்தனை,உன்னைஇப்போதேவிட்டுவிடுகின்றேன்,நீ கொண்டிருக்கின்ற துற்புத்தியைவிடுத்து வந்தவிடத்திற்போய்ச் சேரக்கடவையென்று சொல்லினன். அவன் அவ்வார்த்தையைச்சொல்லி முடிவதன்முன்னர் லாபனானவன் அவ்வவுணனுடையசேனைகளிற்புகுந்து, புருவநெற்றிலேறக் கோபித்து, அதிவேகமாகவில்லினைவளைத்து,அளவற்றபாணங்களைச் சுழன்று சுழன்றுஒன்றனந்தமாகச்சொரிந்து ஆர்ப்பரித்தனன். அவன்விட்டபாணங்களினால் அநேக ரதங்களுங் கஜங்களுந் துரகங்களும் பதாதிகளும் முறிந்துமடிந்து சிதைந்துமாய்ந்தன. அநேகவீரர்கள் கரம் சிரம் புயம் மார்பு முதலியவைகள் நசிந்து,குடர்களும் பிணங்களும் பிறிடும்படியாக வீழ்ந்தார்கள். அவுணவீரர்கள் விடுகின்றபாணங்களை லாபன்விடுகின்ற பாணங்கள் தடுப்பதினால்சிலதுமுறிந்து பூமியில்வீழ்ந்தும்,சிலது அப்பூமியைப் பிளந்துகொண்டுநாகலோகத்திற்பாய்ந்தும், சிலதுதிக்காலொன்றோடி யொளித்தும்போயின. பின்னுந்தேவர்களெல்லாங் கண்டு சந்தோஷமடையும்படியாக லாபன்விடுகின்ற பாணங்கள் அவுணவீரர்களுடைய தலைகள் புசங்கள் கைகள் கால்கள் முதலானவைகளைத் துண்டந்துண்டமாக அறுத்து,மேருமுதலிய மலைகளிலுஞ் சமுத்திரங்களிலுஞ் சூரியலோகஞ்சந்திரலோகமுதலிய உலகங்களிலும் போய்விழும்படியாக எறிவதன்றி, அவ்வீரர்களுடைய மனைவியருந்தத்தங் கணவர்களோடு அரம்பைமாதர்களாகச்சென்று வசிக்கும்படியாக, அவ்வவர்கள்வீட்டில் அவ்வவர்களுடையபெயர்களை யெழுதியிருக்கின்ற முத்திராமோதிரங்களோடு கரங்களையுந் தலைகளையும் கொ

ண்டுபோய் வீசின. இவ்வாறு விநாயகமூர்த்தி குமாரனால் விடுகின்ற பாணமானது அளவற்றஅவுணர்களைச் சின்னபின்னப்படவாட்டி, திணம் தசை மூளை குடர்முதலானவைகளை இடைவிடாது சொரிகின்றமையினால் மலைகளிலிருக்கின்ற அலகை புலி சிங்கம் ஆளி முதலியவைகளும்,வனங்களிலிருக்கின்ற நாய் நரி கழுகு காக்கை முதலியவைகளும் அச்சமர்க்களத்தைச் சூழ்ந்துவிருந்துண்ணவந்தன. அப்போது அவுணசேனைகளில் அளவற்றபேர்கள் மாய்ந்தும்,அளவற்றபேர்கள் ஓடிப்பதுங்கியும்,ரணக்களத்தில்ஒருவருமில்லாதிருப்பதைக்கமலாசுரன்கண்டு,பிரளயகாலத்திலெழும் வடவாமுகாக்கினியைப்போலக் கொதித்துப், புத்திதேவியாருடையகுமாரனைஎதிர்க்கவந்தான். அவனை அக்குமாரன்பார்த்துக்,குலுங்கக்குலுங்க நகைத்து, எனதுபராக்கிரமமுழுவதும்நீதெரிந்துகொண்டனையில்லை,உன்னைவலியனென்றெண்ணி உன்னோடெதிர்க்காது விட்டிருக்கின்றேனென நினைக்கவேண்டாம்,எனதுதந்தையின்கரத்தால்நீ மாளவேண்டுவதைக்கருதி உன்னைமீதியாய் விட்டுவைத்தேனே யன்றிவேறில்லை, இன்றோநாளையோ அவரது தெய்வப்படையால் நினதுசரீரமாயப் போகின்றது, அதற்குமுன் என்னோடியுத்தஞ்செய்வதற்கு உனக்குவலியுண்டாயின் வந்துயுத்தஞ்செய்யென்று சொல்லினன். அதைக்கமலாசுரன்கேட்டு,இவனை எந்த அஸ்திரசஸ்திரங்களாலும் வெல்லவுங்கொல்லவும் அரிதென்றுநினைத்து, தனதுமோகனாஸ்திரத்தை யெடுத்து வில்லிற்பூட்டி, மந்திரபூர்வகமாகப்பிரயோகித்தான். அதுவெளிப்பட்டவுடன்லாபன் ஒருவனைத்தவிர ஏனையபடைவீரர்களையெல்லாம் புகையைப்போலப் பரவி, அறிவையழித்துச் சோர்வுபெறச்செய்ய, அதனால் ஆலசாலம் வெளிப்பட்ட காலத்தில் சகலபிராணிகளும் மெய்மறந்து வாடினதற்கொப்பாகவும், உகாந்தமுடிவில்ஆன்மகோடிகளெல்லாம்மகாசுழுத்தியிலழுந்திநித்திரைசெய்வதற்கொப்பாகவும், யாவரும் விஷப்பரிசம்பட்டுச்சோர் பவரைப்போல விழிகள் சொருகவிட்டு,மதிமருண்டு, பிரேதங்களையொப்பக்கிடந்தார்கள். அப்போது விநாயகமூர்த்தியானவர் தமதுகுமாரனுடைய அன்பைச்சோதிக்கவேண்டி,கமலாசுரன்விட்டமோகனாஸ்திரத்தினால்தாமுமுணர்ச்சியற்றவரைப்போல ஓர் திருவிளையாடல்கொண்டு நித்திரைசெய்வதாயினர். அக்காரியத்தை லாபன் சிறிது மறியாதவனாய், கமலாசுரனோடி யுத்தமுகத்திற்றனே யிருந்தனன். அச்சமயத்தில் கமலாசுரனானவன் தான்விடுத்த மோகனாஸதிரத்தால் லாபனுடைய பெருஞ்சேனைகளனைத்து மாய்ந்தும், அவ்வொருவன்மாத்திரம்அவ்வஸ்திரத்திற்கழியாதிருப்பதைக்கண்டு ஆச்சரியமாகி, இப்போதுஇவன்தனியேயிருப்பதினால் இவனோடியுத்தஞ்செய்து வெல்வதற்கு இதுதான் தக்கவேளையென்று தனக்குள் நிச்சயித்து, ஏகமுகத்தில் அளவற்றபாணங்களைப் பிரயோகித்தான். அவையனைத்தையும் லாபன்தனது பாணங்களாலறுத்தெறிந்து,அவ்வவுணனுடைய மார்பிலுந் தோளிலுந் துடையிலுங் காலிலும் அநேகபாணங்களைக் குறிபார்த்துப் பிரயோகித்தனன். இவ்வாறு அவ்விரண்டுவீரர்களும் ஒருவருக்கொருவர் பின்கொடாமல்,வேல்- தோமரம்-பிண்டிபாலம் முசலம்- முத்தலைச்சூல முதலாகிய ஆயுதங்களை விடுவதும், அவைகள்தம்மேல் வாராதபடி தடுப்பதுமாகி, அளவற்றசமர்களை ஓயாமற்செய்து,பி

ன்னர் சிலநேரம் ஆகாயமார்க்கமாகச்சென்று சமராடியும், சிலநேரம்பா தலலோகத்திற்சென்று சமராடியும், சிலநேரம் சமுத்திரங்களிற்பாய்ந்து சமராடியும், சிலநேரம் அட்டதிசைகளினுஞ்சென்றுசமராடியும், சிலநே ரங் தங்கள் தங்கள் பராக்கிரமங்களைக்கூறிச் சமராடியும், சிலநேரம் தே வாஸ்திரங்களைவிடுத்துச் சமராடியும், இப்படி அனந்தவிதமாக ஆறுநா ள்வரையில் இரவும்பகலும் ஓயாமல் யுத்தஞ்செய்தனர். அப்போது கம லாசுரன் மாத்திரம் கைகள் நொந்துங்,கால்கள் தடுமாறியுஞ், சரீரமுழுவ துநேர்ந்தும்,இனிஇவ்விடத்தைவிட்டு நீங்கிஇளைப்பாறி மீட்டும்யுத்தத்தி ற்கு வரவேண்டுமென்று யோசித்தவனாய்,உடனே புறங்கொடுத்து ஒளித் துக்கொண்டனன். இப்பால் லாபனனவன் புறங்கொடுத்துஒளித்துப்போ னபுல்லியன்மீட்டும் இச்சமர்க்களத்து வருவானாயின் அவனுடையவீரத் தையும் உயிரையும் வாங்குவோமென்றெண்ணிச், சமர்க்களத்தை வி ட்டுநீங்கி, முன்புமோகனாஸ்திரத்தினாலே உறங்கிவீழ்ந்துகிடக்கின்றதன துசேனைகளோடுங் கூட,மற்றொருபக்கத்தில் தனது தந்தையாகிய விநா யகமூர்த்தியும் பலமுனிவர்களுடனே உறங்கி யிருக்கின்றதைக்கண்டு, ஆஅ இதென்ன ஆச்சரியம்,எல்லாஉயிர்கட்கு மயக்கத்தைநீக்கி மதியை யளிக்கத்தக்க ஒன்றானலோகநாயகரும் மற்றையர்களைப்போலஅவுணபா தகன்விட்ட மோகனாஸ்திரத்தினால் மயங்கிவீழ்ந்துகிடக்கின்றனரேயென் று கிலேசித்து, ஆயினும் இதற்குமருந்து நம்மிடத்திலிருப்பதால் வருந் தவேண்டுவதில்லையென்று மீட்டும் விருந்துகண்டவன்போல மனந்தெளி த், தனதுகரத்திற் சலத்தையள்ளி, விநாயகமூர்த்தியினுடைய திருநாம த்தை நூற்றெட்டுருசெபித்து, உறங்கிக்கிடக்கின்றவர்கள்மீது தெளித்து அம்மகாமந்திரத்தைத்தானே யாவர்செவிகளினும் வீழும்படிச் சொல்லி னன். இவ்விரண்டுபாயத்தினால் விநாயகமூர்த்தி தவிர ஏனைய முனிவர்க ளும் வீரர்களும் உறங்கிவிழித்தவர்போல வெழுந்தார்கள். உடனேபாவ ரையு மயக்குவித்த மோகனாஸ்திரமும் வலிகுன்றி ஓடிப்போயது.இதனை லாயன்காண்டலும் ஆச்சரியங்கொண்டு, அம்முனிவர்களைநோக்கிச்சொ ல்லுவான், ஓதபோதனர்களே - நமது பெருமான் இங்கு உறங்கியிரு ப்பதற்குக் காரணம் மோகனாஸ்திரத்தினாலென் றெண்ணுவோ மெ னில், அந்தஅஸ்திரம் நசிந்து ஓடிப்போயும் இன்னும்சுவாமிகள் எனதும னஞ்சந்தோஷிக்கும்படியாகக் கண்விழிக்கவில்லை, ஆதலால் இம்மோகம் அவுணன்விட்ட அஸ்திரத்தினால் வந்ததன்று, ஏனையோரைப்போலசுபா வத்தில் அவருக்குமோகமுண்டோவெனில் சிறிதுமில்லை, ஏதோஎன்னி டத்தில் குற்றமிருப்பதால் சுவாமிகள் இப்படி யிருக்கின்றனர், மேலும் அம்மோகனாஸ்திரமானது என்னையேநெருங்குதற்கு அஞ்சுமாயின்,என் னையீன்ற தயாநிதியையுஞ் சேரவல்லதோ, தமக்குத்தாமே அவ்வஸ்திர த்தினால் மோகமுற்றவரைப்போல இந்தஆறுநாள்வரையில் ஓரேநிலையா க நித்திரைசெயதுகொண்டிருந்தால், அதனைநாமென்னென்று சொல்லு வோம், அவரதுகடைக்கண்பார்வையிலுண்டான கிருபையைக்கொண்டு யான் அவுணர்கோன்விட்ட மோகனாஸ்திரத்தை அதஞ்செய்தேன், பின் னர் அப்பாதகனையும் பின்னிட்டோடப் பண்ணினேன், இதல்லாமல் சு வாமிகளுடைய திருநாமங்களிலொன்றினால் உங்களையும் நமதுசேனைகளை

யும் பற்றியிருந்தமோகங்களைப் பஞ்சுபஞ்சாகப் பறக்கச்செய்தேன், இப்படிக்கெல்லாம்யான்செய்திருக்கச், சகலலோகங்களையும்ஈன்றளித் தழிக்கவல்ல என்துதந்தைதாமே மயங்கினவனைப்போல விருப்பது ஓர்திருவிளையாட்டேயன்றி வேறல்ல, அதையும் உங்கட்குத் தெரியச்செய்கின்றேன் பாரீன்களென்று ஓருபாயத்தினை நிச்சயித்து, தனது சரீரத்தை மாய்க்கத்துணிந்து, அங்கிருந்தவீரர்கட்கு அக்கினியைவளர்க்கும்படி கட்டளையிட்டான். அவர்களும் அவ்வாறே வளர்த்தினார்கள். பின்னர் லாபனானவன் தனதுதந்தையாகியுந் தயாளுவாகியுமிருக்கின்ற விநாயகமூர்த்தியை மனதிற்தியானித்து, அவரதுதிருநாமத்தை அனந்தமுறை உச்சரித்து, அவ்வக்கினியை மும்முறைவலம்வந்து, அதிற்பாயநெருங்கினன். அப்போது விசித்திரமான உறக்கத்தினைக்கொண்டிருந்த விநாயகமூர்த்தியானவர் அவ்வஞ்சகத்தைவிடுத்துத், தமதுபுத்திரனுடைய பத்திக்கு மனமகிழ்ந்து, அக்கினியில் வீழாதேயென்று கைகாட்டித், தமது மலர்ந்த திருமுகத்தோடும் லாபனைப்பார்த்து, மைந்தனே - உனது மனத்தினைச் சோதிக்கவேண்டி யாமிவ்வாறிருந்தனம், இனி உனக்குவேண்டியவாங்களைக்கேளென்று திருவாய்மலர்ந்தனர். அதைக்கேட்டலும் லாபன் ஆனந்தபரவசனாகி, பலமுறைசுவாமியைப் பணிந்தெழுந்து, அத்தனே- தேவரீரை அடியேன் மனத்தினாலுங் கண்ணினாலுஞ் சதாகாலமும் அங்கைக்கனிபோலத் தரிசித்துக்கொண்டிருக்கத்தக்க வரத்தைக் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவ்வாறே சுவாமிகிருபைசெய்து, மற்றைச்சேனைத்தலைவர்கட்குந் தமதுதிருவருட்பார்வைகாட்டி, அவ்வவர்கட்குப் பலஆதரவுகளைக்கூறியருளினார். உடனே ஆகாயத்தில் பஞ்சவாத்தியங்களு முழங்கின. தேவர்கள் பூமழைபொழிந்தார்கள். எங்கும் மந்தமாருதம்வீசியது, முனிவர்களெல்லாம் சுவாமியைப் பலமுறை கொண்டாடினார்கள். விநாயகப்பெருமானுடைய செயலிவ்வாறாக, முன்னர் லாபனேடுயுத்தஞ்செய்து புறங்காட்டியோடி ஒளித்துக்கொண்ட கமலாசுரனானவன் பின்னர் தனதுவீரர்களோடு நால்வகை யுணவுகளையு முண்டு, தாகசாந்திசெய்து, சரீரவருத்தநீங்கித், தனதுசதுரங்கசேனைகளையும் பூமிநெளியும்படியாகக் கூட்டிக்கொண்டு, மீட்டும் யுத்தகளத்திற்கு வந்தனன். உடனே கரைபுரண்டுவருகின்ற அவ்வவுணசேனைகளாகிய கடலை நீருக்கும்படி, கதித்தெழுந்து வந்த வடவா முகாக்கினியைப்போல விநாயகமூர்த்தியானவர் தும்பமாலைசூடிக்கொண்டு, மரகதமலையிற்பூத்த மாணிக்கக்குன்றுபோலப் பர்வதாகிருதியாய்ப் பாரித்திருக்கின்ற நீலமயிலின்மீதாரோகணித்து, அம்மலையிலுதித்த சந்திரனைப்போலச் சிலர்வெண்டரளக்குடைபிடிக்கவும், அம்மலையினின்றும்பாய்கின்ற அருவியைப்போலச் சிலர் வெண்சாமரைகளை வீசவும், அவ்வருவியினொலியைப்போலச் சிலர் பலவிருதுகளைமுழக்கவுமாக, ரணபேரிசயபேரி வெற்றிச்சங்கமுதலிய வாத்தியங்களோடு, அளவற்றசேனாசமுத்திரங்கள் புடைசூழ்ந்துவர யுத்தகளத்திலெழுந்தருளினர். அக்காட்சியைக் கமலாசுரன்கண்டு வடவாமுகாக்கினியைப்போலவும் ஆலகாலவிஷத்துக்கொப்பாகவுஞ் சீறிக்கோபித்துக், கறகறெனப்பற்களைக்கடித்து, அனலெழநகைத்து, ஓ குருவிமேல்வந்தகாளாய்- அண்டகடாகங்களையும் பிளக்கத்தக்க புசபலபராக்

கிரமத்தினையுடைய என்னோடுபெறவைமேலேறியாயுத்தஞ்செய்து செயிக்கப்போகின்றனை,முன்பு என்னோடு யுத்தஞ்செய்தவர்களையெல்லாம் ஒரு மோகனாஸ்திரத்தைவிட்டு அடக்கிக்கட்டி வீழ்த்தினேன், அளவற்றசேனைச் சின்னபின்னப்படவாட்டினேன், உன்னையும்யானொருவனே எனது கையிலிருக்கின்ற பாணத்தினாற் பிளப்பேன், அல்லது தேவர்களெல்லாங்கண்டு சோரும்படியாக உன்னை என்கையால் நீறாக்கிவிடுவேன், நீ இதுகாறும் எனதுசாமர்த்தியத்தையறிந்தனையில்லைபோற்காணுகின்றது, உனக்கு ஊக்கமுண்டாயின்விரைவில் என்னோடுயுத்தஞ்செய்ய வருவாயென்றனன். இவ்வாறுமதங்கொண்டுபேசுகின்ற கமலாசுரனை விநாயகமூர்த்தி கண்டு, அடாமூடசிரோமணி- நாம்தேவர்களையும் முனிவர்களையுங் காக்குநிமித்தம் ஓர் திருவிளையாடலாக அவதாரஞ்செய்த காரியங்களை நீசிறிதும் அறிந்தாயில்லை, முன்னர் உன்னைப்போலிருந்த அனந்தந் துட்டர்களையாம் சங்கரித்திருக்கின்றனம, மேலும் யுகங்கள்தோறும் வக்கிரதுண்டனென்றும் சுமுகனென்றும் கெஜானனனென்றும் விக்கினராஜனென்றும் இவைமுதலிய அளவற்றநாமங்களோடு அநேகஅவதாரஞ்செய்திருக்கின்றோம், அப்படி அவதாரங்கள்செய்த விநாயகமூர்த்தியாகிய நாமேஇப்போதும் உன்னைச்சங்கரிப்பதற்கு மயூரேசராக அவதாரஞ்செய்தனம், நீ முதல்நாட்செய்த யுத்தத்திலேயே-பின்னிட்டுப்போயினை, இத்தினம் நமது புத்திரனால் அடிபட்டு ஓடிப்போய் மீட்டும்வந்தாய், இப்படிப்பட்ட அற்பனாகியவுனக்குவாயேன்,வீரமேன், இன்னமும் நமது திருவாகத்தைப் பார்க்கக்கடவையென்று சொல்லிச் சீறித், தமதுமயில் வாகனத்தோடும்போய் அவனைத்தண்டாயுதத்தினா லடித்தனர். அவன் தனதுகுதிரையின்மீதிருந்தவண்ணமே இருப்புலக்கையைக்கொண்டு சுவாமியினது மார்பிற்றாக்கினான். உடனே அவ்விருப்புலக்கையானது வருங்காரியஞ்சொல்லுவோரிடத்தி லுற்ற வறுமையைப்போலப் பொடிபொடியாய் நுறுங்கிப்போயது. அதை மந்தரகிரியைப்போன்ற புயத்தினையுடைய கமலாசுரன்கண்டு அதிசயித்தனன். பின்னர் விநாயகமூர்த்தி அவன் மார்பைப் பிளக்கும்படி தோமரத்தை எடுத்துவிட்டனர். அதை அவ்வுணன் தனதுகேடகத்தினாலும் படைகளினாலுந் தடுத்தனன். உடனே விநாயகமூர்த்தி அவன்மீது சூலாயுதத்தைவிட்டனர். அவனும் சுவாமிபேரில் 'சூலாயுதத்தைவிட்டான். இவ்வாறு இருவரும்பற்பல ஆயுதங்களைக் கொண்டு நெடுநேரம் யுத்தஞ்செய்துகொண்டிருக்கையில், விநாயகமூர்த்தியானவர் இமைக்குமுன் எண்ணற்றபாணங்களை யெடுத்து கமலாசுரனுடைய சேனைகளின்மீது சோனைமழைபோற் சொரிந்தனர். அத்திவ்வியபாணங்கள் ஒன்றனந்தமாகப்பெருகி, அக்கினியைக்கக்கிக்கொண்டு,அவன்சேனைகளையெல்லாஞ் சின்னபின்னப்படவாட்டின. அப்போது கமலாசுரன் தனது சேனைகளனைத்து மடிந்துபோய்விட்டதைப் பார்த்து மனம்பொறா தவனாகி, யானைக்கூட்டத்துள் சிங்கவேறுபுகுந்தாற்போல விநாயகமூர்த்தியினுடைய சேனைகளிற்புகுந்து, தனதுவாளாயுதத்தை நாற்புறத்தும் வீர் வீரென்றுவீசியும், கதை- தடி-வளை- மழு- முதலிய படைகளையெறிந்தும், அளவற்ற சரவருஷங்களைப்பொழிந்தும், நீண்ட சூலாயுதத்தைவிடுத்தும் அதாஅதப்படுத்தினன். அப்போது விநாயகமூர்த்தியினுடைய சே

ளைகளிற் சிலர் தலைகள்பிளந்தும், சிலர் கைகள்முறிந்தும், சிலர் தொடைகள்மடிந்தும், சிலர் இடைகளொடிந்தும், சிலர் கால்களறுந்தும், சிலர் குடல்கள் சரிந்தும், சிலர் மூளைகள் சிதறியும், சிலர் பற்களுதிர்ந்தும், சிலகவந்தங்கள் ஆடியும், சிலகவந்தங்கள் ஓடியும், இவ்வாறு ரணக்களமெங்கும் பலகாயங்களால் விழுந்தும் இறந்தும் களைத்தும் வருந்தினர். அப்போது உதிரமானது பெருத்துப் பூரணப்பிரவாகமாயோடுநதியைப்போல இசைச்சலிட்டுப் பெருகியது. அச்சமர்க்களமெங்குங் கழுகுகள்-கூளிகள்-நாய்கள்-நரிகள்- பேய்கள்-முதலியசெந்துக்கள் கூட்டங்கூட்டமாய்வந்து பிணங்களைப்பிடுங்கித்தின்னுவதுங், கூவுவதும்,ஊளையிடுவதுங், கூத்தாடுவதுமாயின. இவ்வாறுகமலாசுரன் அகோரமானயுத்தத்தினை விளைத்துவருவதை லாபன்பார்த்து,மனஞ்சகியாதவனாய்,மற்றொருசிங்கவேறுசீறிப்பாய்வதுபோலவெழுந்து,தனதுஓரோகரத்தால்கமலாசுரனுடையகுதிரையை முகத்திற்குத்தினன். அக்குத்தினால் உடனே அக்குதிரைவிழுந்திறந்தது.இப்பால் கமலாசுரனனவன் தனதுகுதிரைவிழுந்திறத்தலும் எல்லா ஆட்டங்களும் ஒடுங்கினவனாகி, இனிஎன்னசெய்வோமென்றெண்ணமுற்று,மாயவித்தையினாற் றனதுரூபத்தை ஒருவர்கண்ணுக்குந் தோற்றவொட்டாமன்மறைத்து, ஆகாயமார்க்கத்திலெழும்பி, சுக்கிரனுபதேசித்தமந்திரங்களை உச்சரித்து, மிகுந்தவல்லபத்தொடும் அந்தரத்திலிருந்த வண்ணமே விநாயகமூர்த்தியினுடையசேனைகளின்மீது விஷத்தையொத்ததீக்ஷணியமுள்ள பாணங்களைக்கோடிகோடியாகசசொரிந்தனன். அவன்சொரிந்தபாணங்களெல்லாம் ஆகாயமெங்கும்பரவி விழுவதினால்,கார்காலத்திற் சொரிகின்ற சோனைமாரியைப்போலஎங்குமிருள்மூடிக்கொண்டது. அப்போது சுவாமியினுடைய சேனைகளிற் சிலர் பயந்தும், சிலர் இறந்தும், சிலர் உருகியும், சிலர் ஓடியும், இப்படி பற்பலவிதமாக அல்லோல கல்லோலப் பட்டுப்போயினர். அவ்வாறுபோவதை எமதுகர்த்தன்பார்த்து, மிகுந்தகோபங்கொண்டு, அடாபுத்திகெட்டவனே- எதிரில்நின்று யுத்தஞ் செய்வதற்கு நிர்வாகமில்லாவிட்டால் ஆகாயத்தில் மறைந்தா யுத்தஞ் செய்கிறது.இங்கிமிடத்திலுன்னைமூன்றுதுண்டாக்கிவெற்றிமாலைசூடுகின்றேன் பாரென்று தமதுதிருக்கரத்திலிருக்கின்றபாசத்தைவிட்டனர். அப்பாசமானது சூரியனுடைய காந்திக்கு மேலானபிரகாசத்துடனே சென்று, அவ்வவுணனுடைய மந்திரவல்லமையினையும் மாயையினையுமழித்து,ஆகாயத்தில் நின்றவனைக்கட்டி இழுத்துக்கொண்டுவந்து, மயில்வாகன ரூடராய்-எழுந்தருளியிருக்கின்ற விநாயகமூர்த்திக்கெதிரேவிட்டது. அப்போதுவிநாயகமூர்த்தி கமலாசுரனைப்பார்த்து, அடாதுட்டப்பயலே- வீரத்தையுடையோர்க்கு ஒருவேளை வலிகுன்றினாலும் அந்தயுத்தத்திலேயே தங்களுயிரைவிடுவார்கள், நீ அப்படியின்றி பேடியைப்போல வஞ்சனையாய் மறைந்து யுத்தஞ்செய்தனை, இனியேனும் துன்பமில்லாமல் நீபிழைக்கவேண்டுமாயின் நம்மைச்சரணடையக் கடவையென்று திருவாய்மலர்ந்தனர். அச்சொல்அவன்காதில் விழுவதன்முன் வடவானலத்தைப் போலக்கொதித்துத், தனதுதண்டாயுதத்தைச் சுழற்றி மயூரேசருடையதிருமார்பிலெறிந்தனன். அதை சுவாமி தமதுகரத்திலிருந்த தண்டத்தினாற் றாக்கிப்பொடிசெய்து,பின்னர் அதையே அப்பாதகனுடையமார்புபிளக்கும்ப

டிவிசினர். உடனே அவன்மார்புபிளந்து,மலையருவிபோல உதிரம்பெருகி வெளிப்பட்டுத்,தாரைதாரையாய்வழிந்து, பூமியெங்கணும்பாய்ந்து தேங்கியது. அப்போதவ்வுதிரத்திலிருந்து ஒவ்வொருதிவலைக்கு அவனுக்கிணையானவீரர்கள் அளவற்றபேருண்டாகி, மலைகளைப்போலஉயர்ந்தவடிவமும்,மலைகளுக்குச்சரியான புசபல பராக்கிரமமும்,மலைகளையொத்தவயிரத்தினையுடைய நெஞ்சும், மலைகளிற் படருங்கரிய மேகவரிசையினைப் பொருவு மார்பும், மலைகளினின்றும் வீழ்கின்ற வெள்ளருவி கட்குச் சமானமான தும்பைமாலைகளையும் உடையவர்களாய், வனத்தில் வசிக்கின்றசிங்கம் புலி சரபம் சார்த்தூல முதலிய விலங்குகளைப்போலவும்பறவைகளைப்போலவும் அனேகவிதமானபாணங்களையேந்தி, மேகசற்சனையைப்போல வார்ப்பரித்து, யாவருங்கடலைப்போல சுவாமியைவளைத்துக்கொண்டு, வடவாமுகாக்கினிக்கிணையான கோபத்தோடு, அலைகளைப்போல நிரைநிரையாய் அளவற்றபாணங்களைப் பிரயோகித்தார்கள். அவ்வற்புதத்தைத் தேவர்களு முனிவர்களுங்கண்டு பயந்து, இனி என்னசெயவோம்,ஒருகமலாசுரன்செய்யுந் துன்பங்களைச் சகிக்கமாட்டாமல் இருக்கின்றோமே, இப்போது அவனையொத்த அசுரர்கள் அளவற்றபேருண்டா னார்களே, இன்னும் உண்டாவார்கள் போலிருக்கின்றதே, ஐயோ-நாமெவ்விதத்தாம் பிழைக்கப்போகின்றோமென்று நடுநடுங்கினார்கள். பிரமன் விண்டு இந்திரன் முதலாயினோர்ஓடிமகமேருகிரியிலொளித்துக்கொண்டார்கள். சிவபிரான்மாத்திரம் கமலாசுரனுடைய மாயையையழிப்பதோ மயூரேசருக்கு அரிதென்று முகமலர்ச்சிகொண்டிருந்தனர். இப்பால் விநாயமூர்த்தியானவர் தேவர்கள் முதலாயினோர் படுகின்ற கலக்கங்களைக்கண்டு, பாவமே பலவடிவங்களோடு வந்தாற்போலத் தம்மைச்சூழ்ந்துகொண்டு ஆயுதங்களைச்சொரிகின்ற அவுணவீரர்களென்னுங் கடலின்மீது,வாயுவேக மனோவேகத்திலும் விரைவாய்ப்போகும்படி தமதுமயில்வாகனத்தைமுடுக்கியருளினார்.அம்மாத்திரத்தில்அம்மயிலானது சுவாமியைத் தாங்கியவண்ணமே கொள்ளிவட்டம்போலவும், சறங்குமோலைபோலவும், குலாலசக்கரம்போலவும்,சூறைக்காற்றுபோலவும்,சுழல்வண்டுபோலவும், நீர்ச்சுழிபோலவும், அட்டகுல பர்வதங்கள்வரையில் கொடிக்குமுன்னே தெள்ளியோருடைய வுள்ளமேதிரண்டது போலக்கலாவி,அனந்தமுறைவட்ட மிட்டது. அவ்வாறுவட்டமிட்டபோது அம்மயிலின்சிறகிலுண்டானகாற்றினால் சகலலோகங்களுநடுங்கின. திக்குயானைகளனைத்தும் வீறிட்டோடின. மேருமுதலிய பர்வதங்களெல்லா மசைந்தன. சத்தசாகரங்களுங்கலங்கி ஒன்றாய்க்கலந்தன. நாகலோகத்தினரெல்லாம் பயப்பிராந்தி கொண்டார்கள். அவுணவீரர்களெல்லாம்உள்ளமும் ஊக்கமும்உடைந்துவருந்தினார்கள். இவ்வாறுஅம்மயிலானதுவட்டமிட்டுச்செல்லுந்தோறும் அதன்மீதாரோகணித்திருக்கின்றஎமதுகர்த்தரானவர்தமதுஇரண்டு திருக்கரங்களினால்வில்லைவளைத்து அமோகமானபாணவருஷங்களைசசொரிந்தும்,மற்றஇரண்டுதிருக்கரங்களால் சூலமுதலாகியஆயுதங்களைவிடுத்தும், அவுண வீரர்களையெல்லாம் பிளந்துபிளந்து சின்னபின்னப்படவாட்டினர்.அவ்வவுணவீரர்களுடைய சரீரத்தில் சுவாமிவிட்ட பாணங்கள்பாய்ந்து பெருகிய வுதிரங்களினின்று, நல்லோர்கள் நன்னெறியிற் செலுத்தும்ஓர்பொருளா

னது பின்னர் எல்லையற்றுப் பலவாய் வருமென்னும் வாக்கியத்தின்படி நீட்டும் ஒவ்வொரு துளிக்கு அவர்களைப்போல அளவற்ற வீரர்களுண்டானார்கள். அவர்களையும் எமது கர்த்தர் அளவற்ற பாணங்களைவிடுத்து நாசஞ்செய்ய, அவ்வாறு நாசஞ்செய்யுந்தோறும் அவ்வவர்களுடைய வுதிரங்களினின்று பின்னும் எண்ணக்கூடாத வீரர்கள் மேலுமேலும் அநேகராயுண்டாகிக்கொண்டேயிருந்தார்கள். இப்படி உண்டாவதை இலாபன் கண்டு, தனது தாயராகிய சித்திபுத்திகளைத் தியானித்தனன். உடனே அவர்கள் தமது புத்திரனுடைய கருத்தையறிந்து, யுத்தகளத்திற்கு வந்து, தீனரக்ஷகராகிய விநாயகமூர்த்தி மயில்வாகனரூடராய் யுத்தஞ்செய்கின்ற பெருமையையுங், கமலாசுரன் பெற்றிருக்கின்ற வரத்தின் மகிமையையுங் கண்டு அதிசயித்து, அங்கிடத்தில் ஒன்பதுகோடி பூதவீரர்களையுண்டாக்கி அவுணவீரர்கள் மீது விட்டனர். ஒவ்வொரு அண்டங்களை ஒவ்வொருவயிற்றுளடக்கவல்ல அப்பூதவீரர்களெல்லாம் அவுணவீரர்களுடைய கூட்டத்தினுள்ளே புகுந்து, அவர்களை உதிரம் பூமியில் விழாதபடி யெடுத்து, யானையானது விளாங்கனியையுண்ணுமாறுபோல விழுங்கியும், வீழ்ந்திருக்கின்ற உதிரங்களையெல்லாம் நாவினால் நக்கியும், இப்படி எல்லாவீரர்களையும் வயிறுரவுண்டு ஆனந்தமாகிச், சிலபூதர்கள் பாடினார்கள். சில பூதர்கள் ஆடினார்கள். சிலபூதர்கள் ஆர்ப்பரித்தார்கள். சிலபூதர்கள் இன்னும் அசுரர்களுண்டோவெனத் தேடினார்கள். இவ்வாறு உதிரங்களினின்றும் உண்டான அவுணவீரர்களையெல்லாம் பூதவீரர்கள் வயிறுரவுண்டபின்பு, அச்சமர்க்களத்தில் கமலாசுரனொருவன் தனக்குதவினனென்பாருமின்றி ஏகனாயிருந்ததெப்படிக்கிருந்ததெனில், பூர்வஞ்செய்த தபோபலத்தினால் செல்வத்தைப்பெற்றவர்கள் தருமநெறியே நிற்பார்களாயின் அச்செல்வத்தோடு நீடித்துவாழ்வார்கள், அந்நெறியில் நில்லாமல் அதருமநெறியில் நிற்பார்களாயின் உடனே சகலசெல்வங்களுங் குன்றி உள்ளமழிவரென்று சொல்லும்வாக்கியத்திற்குச் சாட்சியாக விருந்தது. இப்பால் ஆணவமுதலிய மும்மலங்களு மொழிந்தவன் மெய்ஞ்ஞானத்தையடையத்தக்க பருவத்தினனைப்போலச், கமலாசுரனொருவன் தனது நால்வகைப்படைகளையு மொழிந்து, தான்பெற்றிருந்த தொல்வரமுஞ் சமீபிக்கும் பருவத்தினனாகி இதனையோசிப்பதாயினன். நாம் இவனைக் குருவிமீதேறிவந்தகாளையென்று அவமதித்தோம், பின்னர் இவன் நம்மோடு அளவற்றயுத்தங்களைச் செய்ததுமல்லாமல், நமது வரத்தையுமழித்தான், நமது வீரத்தையுமழித்தான், நமது பராக்கிரமத்தையுமழித்தான், எங்கும்பரவியிருக்கின்ற நமதுகீர்த்தியையுமழித்தான், அம்மம்ம இவன் மஹாபராக்கிரமசாலியாக யிருக்கவேண்டும். இனி இவனைத்தப்பி ஓடலாமென்றால் எவ்விதத்திலும் நம்மைக்கொல்லாமல் விடான், என்று நினைத்துப், பின்னர் தனக்குத்தானே சிறிதுதேற்றங்கொண்டு, தனது வில்லை, வளைத்து, அளவற்றபாணங்களை ஓரேமுகமாக விநாயகமூர்த்தியின்மீது பிரயோகித்தான். அப்பாணங்களையெல்லாம் எமதையன் ஓர்நொடிப்போதிற் பொடிபடுத்தித், தமது சூலாயுதத்தால் அவன்கழுத்திலொருகுத்தும், வயிற்றிலொருகுத்தும், இடுப்பிலொருகுத்துமாகக் குத்தினார். இம்மூன்று குத்தினால் அக்கமலாசுரன் ஆகாயத்தையளாவிய மலைகளைப்போல மூன்றுதுண்டாகி, வடக்கே இமயவரைச்சாரலுக்குந் தெற்கே கிருஷ்ணநதிதீர

த்திற்குஞ்சரியாகப், பெரும்புறக் கடலோசையைப்போலக் கதறி, காய் நரி கழுகு முதலானவைகட்கோர் பெருவிருந்தாகவிழுந்து இறந்தான். அவனுடைய ரத்நகிரீடந்தரித்த வலிபொருந்திய தலைத்துண்டமானது ராஜசதனந்தநகரத்திலும், பேரழகினைவாய்ந்த அவன் நடுத்துண்டமானது பிரவாளநகரத்திலும், ஆபரணதிகள்சொலிக்கின்ற அவன் அடித்துண்டமானது யுத்தகளத்திலுமாக விழுந்தன. அவனுடைய பெருமை பொருந்திய உயிரானது விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளில் ஐக்கியமாயது. ஓ சவுனகாதிமுனிவர்களே, சர்வசிவதயாபரராகிய விநாயகமூர்த்தியானவர் இவனின்மிக்கபாதகன் ஒருவனுமில்லையென்று சகப்பிரசித்தியாயிருந்த கமலாசுரன் வழங்கியபடைகளை அருச்சனைமலராகவும், அவன் மறத்தினாற்கூறியமொழிகளைமந்திரமாகவும், அவன்செய்த சமர்த்தொழிலைத்திருப்பணியாகவுங்கொண்டு, அவனுக்குமுத்தியுங் கொடுத்தனரென்றால், எம்போலிகள்செய்யுங் குற்றங்களைக்குணமாககொண்டுரக்ஷிப்பதும் அவருக்கரிதோ இப்பால்பூதவீரர்களெல்லாம் விநாயகமூர்த்தியினுடையசந்நிதானத்திற்கெதிரில்நின்றுகுரவைக்கூத்தாடினார்கள். அலகைக்கூட்டங்களெல்லாம் பலகுடர் மாலைகளைச்சூடிக்கொண்டு சுவாமியின் பின்புறமாகநின்று துணங்கைக்கூத்தாடின. ஆகாயத்தில் ஐவகைத் துந்துபிகளுமுழங்கின. முனிவர்களெல்லாம் வேதபாராயணத்தோடுவந்து பணிந்தார்கள். தேவர்கள் கற்பகமலர்களைப்பொழிந்தார்கள். மூவுலகத்தாரும் சகலவாபத்துகளும் இன்றுடனொழிந்தனவென்று சந்தோஷித்தார்கள். விண்டு முதலிய தேவர்கள் மிகுந்தபத்தியோடுவந்து பலமுறைபணிந்தார்கள். பின்னர் பிரமதேவன் தனது கமண்டல தீர்த்தத்தினாலும் பற்பலதிரவியங்களினாலும் பூசித்தனன். அப்போது அவனுடைய கமண்டலஞ்சாய்ந்து, அதிலுள்ளதீர்த்தமெல்லாம் ஒழுகிப்போயது. உடனே பிரமதேவன் அத்தீர்த்தத்தையெடுத்து மீட்டும் கமண்டலத்தில் நிரப்பமுயன்றனன், அதை விநாயகமூர்த்திதடுத்து, தமதுதிருக்கரத்தால் அத்தீர்த்தத்திற் சிறிதள்ளிக் கமண்டலத்தில் விட்டு நிரப்பிக்கொடுத்தனர். அதற்குப்பிரமன் ஆச்சரியங்கொண்டு, மிகுந்த அன்போடு பலமுறைபணிந்து துதிசெய்தனன். கமண்டலத்தில்நின்றும் பூமியில்விழ்ந்த தீர்த்தமானது எங்கும்பெருகிப்பெரிய நதியாகச்சென்று கடலிற்பாய்ந்தது. அந்நதியில் சவுதமர்முதலிய முனிவர்களெல்லாம் ஸ்நானஞ்செய்து, தருப்பண முதலானவைகளை நிறைவேற்றி, மிகுந்தபேரன்பினால விநாயகமூர்த்தியைப்பூசித்தார்கள். பின்னர் விநாயகப்பெருமான் அவ்வவர்கள் வேண்டியவரங்களைக் கொடுத்து, அம்முனிவர்களையுந் தேவர்களையும்பார்த்து, இந்நதிதீரம் நமக்கிஷ்டமாயிருத்தலினாலே நாமெக்காலத்தும இவ்விடத்திற்பிரியாமல் வசித்திருப்போம், எல்லாநதிகளினும் இஃது மேலானமகிமையையுடையது, இதில் ஸ்நானஞ்செய்தபேர் இம்மையில் இராசயோகம்பெற்று, மறுமையில் விண்டுமுதலாயினோருடைய பதவிகளையடைந்து, முடிவில் முத்தியையுமடைவார்கள், மரமாயினுஞ் சொடியாயினும் இந்நதியினதீர்த்தத்தில் நனைந்தால் அதுவுமேலான கதியையடையுமென்று திருவாய்மலர்ந்தனர். அதற்குமேல்பிரமன் அந்நதிதீரத்தில் ஓராலயஞ்சமைத்தனன். அவ்வாலயத்திற்சகலதேவர்களு முனிவர்களும் போற்றும்படியாக எமதுகர்த்தர்மூலட்டா

னமூர்த்தியாயெழுந்தருளினர். அவ்வாலயத்தின்கீழ்த்திசையில்விண்டுஇல க்குமியோடுவீற்றிருந்தனர். அவர்களுக்கெதிரில்ஆசிரியாதேவி வீற்றிருந் தனள். ஈசானியதிசையில் சிவபிரான்உமாதேவியோடுஎழுந்தருளினர். அ வர்களுக்கெதிரில்விரஜாதேவிவீற்றிருந்தனள். மேற்குத்திசையில்மன்மத ன் இரதியோடுவீற்றிருந்தனன். அவர்களுக்கெதிரில்மாற்சாலதாதிகைதே விவீற்றிருந்தனள். வடக்குத்திசையில் வராகரூபி பூமிதேவியோடுவீற்றிரு ந்தனள். அவர்களுக்கெதிரில் முத்திதேவிவீற்றிருந்தனள். ஆதலால்-யாவ ரேனும் முற்கூறிய கமண்டலநதியில் முன்னர் ஒருமுறை ஸ்நானஞ்செய் து, அரிபிரமேந்திராதியர்க்கெல்லாந் தலைமையானமயூரேசரைத் தரிசித் து, மீட்டும் ஒருமுறைஸ்நானஞ்செய்து, கிழக்காதிதிசைகளிலுள்ள துவார தேவர்களை முறைமைப்படிபூசித்துப், பின்னர்விமலரைப்பூசிக்கவேண்டிய து முறைமையாகும். இந்தமுறைமைப்படியாவரேனும்ஒருநாள்முழுவது ம்உபவாசமிருந்துநான்குகாலமும் பூசித்தால், அவர்கள் தரித்திரர்களாயி னும் உடனே ராசயோகத்தையடைவார்கள். வல்லமையில்லாதவர்களாயி னுஞ்சத்துருக்களைச்செயிப்பார்கள். சந்தானமில்லாதவர்களாயின்சிறந்தபு த்திரர்களைப்பெறுவார்கள். பிணியடைந்தோர்களாயின்உடனேஎல்லாப்பி ணிகளும் நீங்கிச்சுகமநுவிப்பார்கள், மூடர்களாயின் பின்னர் கீர்த்தியையுந் தேஜஸையுமடைவார்கள். கடைத்தேறவேண்டினோர்க்குமயூரேசரெழுந்த ருளியிருக்கின்ற அந்தத்தலத்திற்கு மேலாகியதலம் மூவுலகத்தினுமில்லை கமலாசுரனுடையசரீரமானதுமூன்றுபிறிவாய்ப்பூமியில்வீழ்ந்த காரணத் தினல், அந்தத்தலத்தைத் திரிசந்திக்ஷேத்திரமென்றுசொல்லுவார்கள். சக லவான்மகோடிகளும்பூசித்துக்கதியடையும்பொருட்டுஅத்தலத்திற்கிணை யானராஜசதனந்தநகரத்திலும்பிரவாளநகரத்திலும்விநாயகமூர்த்தியெழு ந்தருளியிருந்தனர். இக்கதையையாவரேனும் பத்தியோடுகேட்கினும், எ ழுதினும், படிக்கினும், படிப்போர்க்குப் பொருள்கொடுக்கினும், அவர்கள் இம்மையிற்சாலபாக்கியங்களையுமநுபவித்து, மறுமையிற் தேவர்களாய் அ ளவற்றபோகபாக்கியங்களையடைந்துநெடுநாள்வாழ்ந்திருந்து, அந்திய கா லத்தில் மலபாசங்களினின்றுநீங்கி விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளை யடைவார்கள்.

பிந்தியமயூரேசர்திருவவதாரம்.

ஓ சவுனகாதி முனிவர்களே - விநாயகமூர்த்தியானவர் கமலாசுரனை வெல்லுவதற்கு மயூரேசராய்த் திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலிது, அவ்விநாயகமூர்த்தியே சிந்துவென்னும் ஓரரச னை வெல்லுவதற்கு மற்றொரு யுகத்தில் உமாதேவியினிடமாகவுதித் து, மயூரேசனென்னும் திருநாமத்தினைப் பெற்றுசெய்தருளிய திருவிளை யாடலொன்றுண்டு, அதையும்பாந்தமாகச் சொல்லுவோங்கேட்பீராக. மைதலதேயத்திலே கண்டக நகரமென்னு மோர்பட்டணமுண்டு. அப் பட்டணத்தில் திருமாலுக்கொப்பானவனாகி, ஏகசக்கிராதிபதியாய், நீ திசாத்திரமுறைமைப்படி அரசுசெலுத்திவந்த சக்கிரபாணியென்னும் ஓரரசனிருந்தான். அவன் தனது மனைவியாகிய உக்கிரா வென்பவ

ளோடும், தர்மாபுத்தி - சாம்பன் - என்னும் இரண்டு மந்திரிகளோடும் வாழ்ந்திருக்கின்றகாலையில், நெடுநாள் தனக்கு ஓர்புத்திரப்பேறில்லாமல் மிகுந்தகிலேசத்தையடைந்து, தவம்-தானம்- தருமம்- விரதம்-வேள்வி- முதலானவைகளை அளவற்றனவாகச் செய்துவந்தான். பின்னர் புத்திரர்கள் பிறந்தும் பூமியில்விழுந்த மாத்திரத்தில் இறந்துகொண்டேயிருந்தார்கள். அதனால் அரசன் முன்னினும் அதிககிலேசத்தையடைந்து, தனது நகரத்திலுள்ள பெரியோர்களையழைத்துவைத்து, மந்திரிகளைப்பார்த்துஇதனைச்சொல்லுவதாயினன், அமைச்சர்களே-புத்திரப்பேறில்லாதார்க்குநற்கதிகிடையாதென்று சாத்திரங்களெல்லாமுரைத்தலால், மிகுந்தபத்தியினாற் பலதெய்வங்களை வழிபட்டேன், வேதாகமவிதியோடு பலதானங்களைச்செய்தேன். அளவற்றகருமங்களை அன்போடியற்றினேன், மாசற்ற வேள்விகளை மனங்களராமன் முடித்தேன், இன்னுமித்தன்மையவான பலநல்லொழுக்கங்களை நிறைவேற்றிப் புத்திரர்களைப்பயந்தும், பூர்வபாவத்தொடர்பினால் அப்புத்திரர்களில்லாதவனே யாயினேன், இனிவனத்திற்சென்று தவஞ்செய்தேனும் நற்கதியையடையத்தக்கநெறியைச்சம்பாதித்தல்வேண்டும். ஆதலால்-நீங்கள் மனதிற்கவலைகொள்ளாமல், என்னைப்போல இவ்வரசாட்சியைப் பரிபாலனஞ்செய்து வருவீர்களென்றுசொல்லித், தனதுபொக்கசங்கள்-சேனைகள்-நாடுகள்-நகரங்கள்- முதலானயாவையும் மந்திரிகள் வசமாக்கித், தனதுமனைவியோடும் புறப்படுவதாயினன். அப்போதுதீர்த்தயாத்திரையாகச்சென்ற இச்சவுனகமுனிவர் தம்செயலாய் அவ்வரசனைநோக்கிவர, அவ்வரசன் இவரைக்கண்டவுடன் அதிக மகிழ்ச்சியோடுமெதிர்கொண்டழைத்துவந்து, ஓர் சிம்மாதனத்திலிருத்தி, புட்பஞ்சந்தனமுதலியவைகளைக்கொண்டுபூசித்து, பலமுறைபாதங்களிற் பணிந்தெழுந்து, இருகரங்களையுங் கட்டிக்கொண்டு, மிகுந்தபயபத்தியோடும் எதிர்நின்றனன். அவ்வாறுநிற்பவனை இச்சவுனகமுனிவர்நோக்கி, அரசனே- நீவனத்திற்செல்வதற்கன்றோ இச்சைகொண்டனை, அவ்வாறு செல்லவேண்டுவதில்லை, பழையபடி உனது அரசாட்சியை நடாத்திக்கொண்டிரு, உனக்கு இனி நல்லபுத்திரனுண்டாகுவனென்றுசொல்லினர். அதை அரசன்கேட்டு, மீட்டும்பணிந்தெழுந்து, சுவாமி-இதுகாறும் யாங்கள்அளவற்ற சாந்திகளையுந் தவந்தானமுதலானவைகளையுஞ் செய்து வந்தும் பிறந்தபிள்ளைகள் ஒன்றேனுஞ் சீவித்திராமல் இறந்துபோய்விட்டன, அடியேங்களும் விருத்தாப்பியராயினோம், இனி அடியேங்கள் செய்யத்தக்க கருமம்யாதேனு மிருக்கின் அதனைத்தேவரீர் கிருபையோடுந் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்கிம்முனிவர் அவனைக்கிருபையோடும்பார்த்து, அரசனே- சதாசிவமூர்த்திக்கிடமாயிருக்கின்றசூரியனுடைய விரதத்தையநுட்டித்தால். உங்கட்குடனே சகலதீவினைகளுநீங்கி நல்லபுத்திரர்களுண்டாவார்கள், அவ்விரதமநுட்டிக்கு மார்க்கத்தினையுஞ் சொல்லுவோங்கேள், இரதசத்தமிக்கு முன்னதாக அவ்விரதத்தைத்தொடங்கி, ஓர்சொர்ணகலசநிறுத்தி, அதன்மீது ஓர் சொர்ணத்தகட்டில் சூரியனுடைய சக்கரத்தையெழுதித் தாபிததுவைத்து, சிவந்த சந்தனம்- சிவந்தபுட்பம்- சிவந்தவத்திரம்- சிவந்த அமுது- சிவந்தபாத்திர முதலானயாவும் சிவந்தநிறமாகச் சேகரித்துக்கொண்டு, சதாசிவமூர்த்தி

யைத்தியானித்து, அவருக்கு ப்ரீதியாகப் பூசைசெய்து, பன்னிருமுறை வேறுவேறு அருக்கியபாத்திய ஆசமனாதிகள் கொடுத்துப், பன்னிருமுறை பிரதக்ஷணமும் நமஸ்காரமுஞ்செய்து,பன்னிருமந்திரங்களையுஞ்செபித்து, இவ்வாறு முப்பதுநாள்வரையில் ஐம்புலன்களையடக்கி உபவாசத்துடனேயிருந்து அநுட்டித்து, சித்தசுத்தரானபிராமணர்களைக்கொண்டுலட்சம்நமஸ்காரங்கள் செய்வித்து, லட்சம்பிராமணருக்கு உணவு கொடுப்பது முறைமையாகும்,இவ்வாறுவழுவில்லாமல் முடிக்கக்கடவையென்றுசொல்லி அப்பன்னிரண்டுதிருமந்திரங்களையுமஉபதேசித்தனர். பின்னர் இச்சவுனகமுனிவர் கூறியவனைத்தையும் அரசன்பத்தியோடுகேட்டுஉட்கொண்டு,தனதுமனமகிழ்ச்சியாலுண்டானபேரன்பினால்நவரத்தினங்கள் தனதானியங்கள் வஸ்திராபரணங்கள் முதலானவைகளை சொர்ணபாத்திரங்களில்நிறப்பிக் கொண்டுவந்து,இவரெதிரில்வைத்து,சுவாமீ-இவைகளைத்தேவரீர் அங்கீகரித்தருளல்வேண்டுமென்றுபணிந்துபிரார்த்தித்தான். அவையனைத்தையும்இம்முனிவர்கண்டு, அரசனே-மரவுரியும்விபூதிஉருத்திராக்கங்களுந்தரித்துக்கொண்டுவனத்திற்சஞ்சரிக்கின்றபரிசுத்தராகிய யாம் இவைகளை அங்கீகரியோம்,யாம்தீர்த்தயாத்திரையாகநடக்குமுன்னிலையில்உன்னைக்கண்டுநெடுநாளாயதென்றுநினைத்து இங்ஙனம்வந்தோமேயன்றிவேறில்லை, இனிஅத்தீர்த்தயாத்திரைக்கு யாம்செல்கின்றோமென்றெழுந்து விடைகொண்டனர். இப்பால் அரசனும் அவன்பத்தினியும் மனக்கவலையினின்று நீங்கிப் புதிதராகி, ஐம்புலன்களையு மடக்கி, இம்முனிவர் கூறியமுறைமைப்படியே சூரியனுடைய விரதத்தைஆரம்பித்துச் செய்து வந்தனர். ஆரம்பித்த இருபத்தொன்பதாநாள்சூரியபகவானானவர் அவ்வரசன் மலடனென்பதையறிந்து, அவன்பத்தினியாகிய உக்கிரை யென்பவள் கனவில் அவள்கணவனைப்போல வடிவங்கொண்டுவந்து, அவளோடுபுணர்ந்து கருப்பந்தரிக்கச்செய்து போயினர். அதை அவ்வுக்கிரையறியாமல், தனதுகணவனே வந்துபுணர்ந்து போயினனென்று மனதிலெண்ணி, இரவுநீங்கி விடியற்காலமானபின்பு நித்தியவிதியை நிறைவேற்றிக்கொண்டு, தனதுபுருஷனைப் பணிந்து எதிர்நின்று, சுவாமி-காமமானது கடலைப்போலப் பெருகுமேனும் ஓர்விரதத்தைத்தொடங்கி அநுட்டிக்கின்றோர்கள் பெண்டீர்களுடன் கூடிச்சுகித்தால் உடனே அவ்விரதம்ஆலைவாயிற்பட்ட கரும்பினைப்போல நசிவுறுதோவென்று சிரித்துக் கூறினள். நடந்தகாரியங்களொன்றுமறியாத அரசன் தனதுபத்தினியைப்பார்த்துப்,பெண்ணே- என்னைஇப்படிஎள்ளிச்சொல்லுவதற்குக்காரணமென்ன, நடந்தவுண்மையைச்சொல்லுகவென்றுகேட்டான். அதற்கவ்வுக்கிரை தேவரீர் ராத்திரி என்னோடுகூடினீரோ அதைத்தான்சொல்லுகின்றேனென்று புன்னகையோடுங் கூறினள். அவ்வந்தணத்தை அரசன் தனக்குள்நிதானித்துப், பெண்ணே-நமக்கு நல்ல புதல்வனைக்கொடுக்கும்படியாகப் பகவானே எனது வடிவங்கொண்டுவந்து உன்னுடன் கூடிப்போனதாயிருக்கவேண்டும், அதற்கு எவ்வளவேனும் ஐயமில்லை, உனதுவயிற்றிற் கருவுண்டாயது, இனி உனதுமனக்கவலையை விட்டு, நீவிரும்பிய பதார்த்தங்களை நுகர்ந்துசந்தோஷமுற்றிருக்கக் கடவையென்று சொல்லி, அன்றையதினம் பூசைமுதலானவைகளை முறைமைப்படிசெய்து விரதத்தை

நிறைவேற்றி, மறுநாள் தனது இஷ்டஜனபந்துக்களோடு மிருந்துபோஜனஞ்செய்து பெருமகிழ்ச்சியையடைந்தனள். பின்னர் அவன்பத்தினிவயிற்றிற்றங்கிய கருவானதுமாதந்தோறும் பூரித்துவளர்ந்துவருவதினால்அவள்அழலிற்குதித்தவள்போலாகிச்,சரீரத்திற்றோன்றியவெப்பத்தைச்சகிக்கமாட்டாதவளாய்க், குளிர்ந்துபரிமளிக்கின்றசந்தனம்பனிநீர்முதலானவைகளைப்பூசிக்கொண்டும்,நிலாமுற்றங்களிலும்நதிகள்சூழ்ந்தபூஞ்சோலைகளிலும்உலாவிக்கொண்டும்பொழுதுபோக்கியிருந்தனள். அவ்வாறிருக்கும்போது,பத்தாந்திங்களிற்றனதுபாங்கியர்களோடுஅச்சோலைகளினின்றுநீங்கிச்சிந்துவென்னு நதிக்கரையிலுலாவிக் கொண்டிருந்தனள். அச்சமயத்தில் அவள் கருப்பயாதனைகொண்டு, தேவர்கட்கெல்லாம் இடரைப்பயப்பவள்போல ஒருபுதல்வனைப்பயந்தனள். அப்புதல்வன் பிறந்தபோலே சிவந்தசடைகளும் மூன்றுகண்களுமுடையவனாய், இரண்டு கரங்களிலுஞ் சூலாயுதமுஞ் சக்கரமுந்தரித்துக்கொண்டு, மிகுந்த காந்தியைவீசுகின்ற சரீரத்தோடுங் கடலோசையுங்கண்டு நடுங்கத்தக்க பெருங்குரலோடு மிருந்தனன். அத்தன்மைத்தான புதல்வனை உக்கிரைபார்த்துப்பயந்து மூர்ச்சையாயினள். அவளருகிருந்த பாங்கியரெல்லா நடுங்கிஓடிப்போனார்கள். பின்னர் வருணனானவன் அந்தணனைப்போல வடிவங்கொண்டுவந்து,உக்கிரையினுடையமூர்ச்சையைத்தெளிவித்துக்,குழந்தையைத்தனது கரத்திலேந்தி,அவளையுங்கூட வழைத்துக்கொண்டுசென்று ராசனெதிரில்வைத்து,இப்புதல்வன் சிந்துவென்கிறநதிக்கரையிற்பிறந்தவனாதலால் இவனுக்குச் சிந்துவென்றே நாமகரணஞ்செய்ய வேண்டுமெனச்சொல்லிப்போயினன். அதற்கு அரசன்மனமகிழ்ந்து,தனது புதல்வனுக்குச் சாதககன்மாதிகளை நிறைவேற்றிச், சிந்துவென்று நாமகரணந்தரித்துத், தேவர்கள் முனிவர்கட்கெல்லாம் அளவற்றதானாதிகளைநடாத்தினன் பின்னர் சிந்துவானவன் நாளுக்குநாள் வளர்பிறையைப்போல வளர்ந்து சோலைகளிலு நதிகளிலும் விளையாடிக்கொண்டிருக்கின்ற பருவத்தில், நிலத்தினின்றுந்துள்ளி ஆகாயத்திற்பாய்வான்.அங்குபோகின்றசந்திரனைப்பிடித்துப் பிழிந்து அமுதபானஞ்செய்வான். தேவேந்திரனுடைய அயிராவதத்தைப் பிடித்து முகத்திலறைவான். அதன்மீதேறித் திக்குகள்தோறும் நடாத்துவான்.அதினின்று மிழிந்து மீட்டுந்துரத்தி ஓடச்செய்வான் சமுத்திரங்களிற்பாய்ந்து அவைகளைக்கலக்குவான். அட்ட கஜங்களையும் வாரி அட்டகுலாசலங்கண்மீதுயெறிவான். பர்வதங்களெல்லா நடுங்கும்படி அவைகளினடிவாரங்களில் அசைத்துக்குலுக்குவான். இவ்வாறு அளவற்ற குறும்புகளோடு விளையாடிக்கொண்டிருக்கின்றஅச்சிறுவனுடையசெயலை அசுரர்குருவாகிய சுக்கிரனறிந்து, இனிஇவனால் அவுணர் குலம் விருத்தியடையுமென்று தன்மனதிற்குறித்தவனாய், உடனே அதிக விசுவாசத்துடன் அப்புதல்வனிடத்தில்வந்து, எக்காலத்தும் அழியாத வல்லப முதலானவைகளைத் தரத்தக்கமந்திரங்களை அவனுக்குபதேசித்து, அப்பா- நீ இனிச்சிவபிரானுடைய திருவடிகளைத்தியானஞ்செய்து, மேலானதவங்களைநிறைவேற்றி, அவரிடத்தில் அளவற்றவரங்களைப்பெற்று, அவ்வரங்களின்மகிமையால் தேவர்களையெல்லாம் அடக்கி, அசுரகுலங்கள் தழைத்தோங்கும்படியாகப்பாதுகாத்து, மூவுலகத்தாரும் உனக்குப்பணி

செய்யும்படியான தலைமைபெற்று வாழ்ந்திருக்கக்கடவையென்று ஆசீர்வதித்துத், தனதுலோகத்திற்குச்சென்றனன். இப்பால் ஸ்நானஞ்செய்யுமாறு தேடிச்செல்லத்தக்க ஓர்தீர்த்தம் பிரயத்தனமில்லாமல் தற்செயலாய்த்தன்னிடத்தில்வந்து ஸ்நானஞ்செய்யக்கைகூடினதுபோல, வலுவில் மேலான உபதேசங்களைப்பெற்ற அச்சிறுவனானவன் மிகுந்த அன்போடுஞ் சுக்கிரனிடத்தில் அநுக்கிரகம் பெற்றபின்பு வனத்திற்சென்று, வலக்காற்பெருவிரலை நிலத்திலூன்றி, இடக்காலை அவ்வலக்கால்முழந்தாளின்மீதுமுடக்கிவைத்து, மார்புக்குச்சரியாக இருகரங்களையுங்கூப்பி, ஐம்புலன்களையுமடக்கிச், சிவபிரானைமனதிற்றியானித்துச், சூரியனைப்பார்த்தவண்ணமே இரண்டாயிரம்வருடம் அரியதவத்தினைச்செய்தான். அத்தபாக்கினியானது அண்டங்கள் முழுவதும்போய்த்தகித்தது. அதன்மீதுசூரியமண்டலத்தில் வசிக்கின்றசிவபிரான்கிருபைகூர்ந்து, அவனெதிரில் மான் மழு சதுர்ப்புசங் காளகண்டம் திரிநேத்திரமுதலிய அங்கங்கள்யாவுந்தோன்றும்படி நின்றருளினர். அவரைக்கண்டவுடன் சிந்துபணிந்தெழுந்து, அளவற்றதோத்திரங்களைச்செய்தனன். அதற்குச்சிவபிரான் மனமகிழ்ந்து, உனக்குவேண்டிய வரங்களைக்கேளென்று திருவாய்மலர்ந்தனர். அப்போது சிந்துவானவன் மீட்டும்பணிந்தெழுந்து, ஓ கிருபாமூர்த்தியே- அடியேனுடைய சரீரம் எண்பத்துநான்குநூறாயிரம்யோனிபேதங்களினாலும் நாசமில்லாமல்நெடுநாளிருக்கவும், மூன்றுலோகங்களையும் ஒரேகுடைநீழலிலாண்டுகொள்ளவும், பிரமன் முதலிய தேவர்களும் அசுரர்களும் பூவுலகின்கணுள்ள அரசர்களும் என்னைவணங்கியானிட்ட பணிகளைச்செய்து கொண்டிருக்கவும்,தேவரீரிடத்தில் எக்காலத்துமிடைவிடாதபத்தியையான்புரியவும் வரங்கொடுத்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தான். அவனைச்சிவபிரான்பார்த்தருளி, ஓ சிந்துவே- அகிலகாரணராகியகணேசமூர்த்தி அவதாரஞ்செய்தாலன்றி உன்னைப்பகைத்து யாவருங்கொல்பவரில்லை, மற்றையவரங்களையெல்லாம் நீவேண்டியவண்ணமேயளித்தோமென்றுதிருவாய்மலர்ந்து எழுந்தருளினர். பின்னர் சிந்துவானவன் மீட்டுங்கண்டகநகரத்திற்குவந்துசேர்ந்தான். இத்தன்மைத்தான மேலாகியவரத்தினைப்பெற்றுவந்தசிந்துவை அவன்தந்தையாகிய சக்கிரபாணிராசன்கண்டு, மிகுந்த ஆனந்தத்தோடும் அவனை ஆலிங்கனஞ்செய்து, தனதரசுரிமையை அவனிடத்தி லொப்புவித்தனன். இப்பால சிந்துராசன் மித்திரனென்றுங் கவுந்துவனென்றும் பெயரினையுடைய இருவரைத்தனக்கு மந்திரிகளாக்கிச், சகலலோகங்களையும் வெல்லுமாறு படையெடுத்து, வணங்காத அரசர்களிடத்தில் உயிர்வாங்கி,வணங்கினோரிடத்திற் பகுதிவாங்கிப், பூவுலகமுழுவதுந் தனது ஆக்கியாசக்கரத்தை நிறுத்திக், கதம்பாசுரன்- சம்பாசுரன்- கனலாசுரன்- கோலாசுரன்- என்னுநால்வரையுந் தனது நால்வகைச்சேனைகட்குந்தலைவராக்கி, அவ்வவர்கட்கு நடத்தவேண்டிய சிறப்புக்களையு நடாத்தித், தனக்கு அடங்காது எதிர்த்துவந்தசும்பாசுரன்- நிசும்பாசுரன்- காலாசுரன்- பிரசண்டாசுரன்- விருத்திராசுரன்- முதலானவர்களோடு நெடுநாள்யுத்தஞ்செய்து ஒடுக்கிப், பின்னரவர்கள்வணங்கிவர அவர்களையும்வேண்டியவரிசைகளோடு அழைத்துக்கொண்டுசென்று, சண்டாசுரனுடனே அளவற்றபோர்க

ளைச்செய்து அவனைக்கொன்று, அவன்புத்திரனாகிய பிரஹ்லாசுரனுக்குப் பட்டங்கட்டிப், பின்னுமநேக அதிகாரமுதலானவைகளையும் அவனுக்குத்தந்து, இவ்வாறு அவுணராசர்களையெல்லாம்வென்று, பின்னர் சொர்க்கலோகத்திற்சென்றனன். அவன்வரவைத் தேவதூதுவர்களறிந்தோடி, முப்பத்துமுக்கோடிதேவர்களும் புடைசூழும்படியாகரத்தினசிங்காதனத்திற் கொலுவீற்றிருக்கின்ற தேவேந்திரனைப் பணிந்தெழுந்து, ஆண்டவனே- திரிமூர்த்திகளுடைய பராக்கிரமங்களையுஞ் சிறிதுமதியாத சிந்துராசனனவன் பாவகாரிகளான அவுணசேனைகளோடும் இங்குவந்திருக்கின்றனனென்று அறிவித்தார்கள். அதைக்கேட்டவுடன் தேவேந்திரன் ஆயிரங்கண்களுஞ்சிவந்து, உள்ளே கோபாக்கினி மூளும்படியாகத் தனது வச்சிராயுதத்தையேந்தி, அயிராவதமாகிய வெள்ளையானையின்மீதாரோகணித்து, தேவசேனைகளெல்லாந் தன்னைப்புடைசூழ்ந்துவரும்படியாகச் சிந்துராசனுடைய சேனைகட்கெதிரேசென்றான். அப்போது இருவர்சேனைகளும் வேறுவேறாக அணிவகுத்து, ரதவீரர்களோடு ரதவீரர்களும் யானைவீரர்களோடு யானைவீரர்களும்- குதிரைவீரர்களோடு குதிரைவீரர்களும்- படைவீரர்களோடு படைவீரர்களுங்கலந்துபோர்செய்தார்கள். வாளாயுதத்தோடு குதிரையின்மீதேறியிருக்கின்ற சிந்துராசனோடு இந்திரனெதிர்த்துத், தனதுவச்சிராயுதத்தினால் அவன்சிரத்தின்மீதுதாக்கினான். உடனே சிந்துராசன் அவ்வச்சிராயுதந் துகள்படும்படியாகக்கோபித்து, விழிகளிலனற்பொறியெழும்ப உறுத்துப்பார்த்துத், தனது குதிரையை விரைவின்முடுக்கி, அயிராவதத்தினுடைய மத்தகம்பிளந்து ரத்தமொழுகும்படியாகத் தனதுகையாலதனைக்குத்தி, அதன்மீதிருந்த இந்திரனைக்காலைப்பற்றியிழுத்து நிலத்திலே அறையும்படியாகமேலாகத்தூக்கிச்சுழற்றினான். அச்சமயத்தில் தேவேந்திரனானவன் சூக்குமதேகமெடுத்து, அவ்விடத்தினின்று மோடிவைகுந்தத்திற்சென்று விண்டுவைச்சரணடைந்திருந்தனன். அதற்குமேல் தனக்கு யாவருமெதிரில்லாத சிந்துராசன்தெய்வலோகத்தையுந் தன்வசமாக்கிச்,சிலகாலம்அவ்விடத்திற்றானேயிருந்து அரசுசெலுத்தி, சும்பன்- நிசும்பன்- முதலாயுள்ள அவுணராசர்களைச் சிலசேனைகளோடும் அவ்விடத்தில்நிறுத்திப், பின்னர் அச்சுவர்க்கலோகத்தைவிட்டு நாகலோகத்திற்சென்று, அங்கரசாள்கின்ற நாகராசர்களையும் வணங்குவித்து, மீட்டும்பூலோகத்திற்குவந்து, சகலலோகங்கட்கும் ராஜதானியாயிருக்கின்ற தனதுகண்டகநகரத்தையடைந்து, சொர்ணத்தாற்செயதது நவரத்திநங்கள் பதித்திருக்கின்ற சிம்மாதனத்தில் ஏகசக்ராபதியாய்க் கொலுவீற்றிருந்து, சகலலோகத்தரசர்களும்வந்து வணங்கும்படியாகச்சுத்தவீரர்களுடனே உல்லாசகாலக்ஷேபமாய்அரசுசெலுத்திச், எல்லாப்போகபாக்கியங்களையுங் குறைவறவநுபவித்துக்கொண்டு வாழ்ந்திருந்தனன். இவ்வாறுசிந்துராசன்சகலலோகங்களினுஞ்செய்துவந்த திக்குவிசயத்தோடு பூலோகத்தில் வாழ்ந்திருக்கின்றநாளையில், ஓர்நாள் தம்மைச்சரணடைந்த இந்திரனுக்காக விண்டுவானவர் படையெடுத்து, தமது கருடவாகனத்தின் மீதேறிச்செலுத்தி, சொர்க்கலோகத்தைவந்து வளைத்துக்கொண்டு, சாதலைத்துணிந்துபோராடவல்ல அவுணவீரர்களோடு யுத்தஞ்செய்வதாயினர். அப்போது சும்பாசுரனோடுவிண்டுவும்,

விருத்திராசுரனோடு இந்திரனும், கம்பாசுரனோடு அக்கினியும், காலாசுரனோடுஇயமனும், கனலாசுரனோடுநிருதியும், பிரசண்டாசுரனோடுவருணனும், நிசும்பாசுரனோடு வாயுவும், பிரபலாசுரனோடு குபேரனும், கதம்பாசுரனொடுஈசானனும், முண்டாசுரனொடு சந்திரனும், சம்பாசுரனோடு மன்மதனும், சண்டாசுரனோடுவிஞ்சையர்களும், கோலாசுரனோடு அச்சுவினிகளும், பவுமாசுரனோடு காந்தருவர்களும் வேறுவேறாகநெருங்கி யுத்தஞ்செய்தார்கள். ஏனையஅசுரவீரர்களையெல்லாம் அங்காரகன் முதலிய தேவர்களெதிர்த்துப்போராடினார்கள். இவ்வாறு அவுணவீரர்களுந்தேவவீரர்களும் ஒருவரோடொருவர்கைகலந்து வேலாயுதங்களையெறிந்தும், வாளாயுதங்களாற்றுழாவியும், தண்டாயுதங்களால்தாக்கியும், குந்தங்களினாற்குத்தியும், சக்கரங்களைவிடுத்தும், கணைகளைத்தொடுத்தும், பாசங்களால் இறுக்கக்கட்டியும், அளவற்றபெருங்கோபத்தோடு இருவகுப்பினரும் இடைவிடாமல் வெகுகாலம்வரையில் யுத்தஞ்செய்தார்கள். இக்காரணத்தைச்சிலதூதர்களோடிச் சிந்துராசனுக்கறிவிக்க, அதை அவன்கேட்டமாத்திரத்தில் மனங்கொதித்தெழுந்து, முன்னர்தேவர்களைத் துன்பஞ்செய்யாமல் தயவோடுவிடுத்துவந்த குற்றத்தினாலல்லவா இக்காரணம் உண்டாயது. இனி அவர்களையெல்லாம் பிடித்துக்கொடியசிறையிலிடுவேனென்று தீர்மானஞ்செய்து, பூவுலகத்திலிருந்த தனதுசேனைகளோடும் ஆகாயத்திற்பாய்ந்து, சொர்க்கலோகத்தில் தேவர்களோடுஞ்சமர்செய்து வருந்துகின்ற அவுணவீரர்களையுஞ் சேனைகளையும்பார்த்து, இதுகாறும் நீங்கள்செய்தயுத்தம்போதும், இனிநிறுத்துங்கள் நிறுத்துங்கள் என்று கையமர்த்திக்,கருடவாகனத்தின்மீது வந்துநிற்கின்றவிண்டுவைநோக்கி,ஓ அறிவற்றவனே- நீயுத்தஞ்செய்துவெல்லத்தக்க ஆண்மையையுடையவனாயின் அவ்வாண்மையை என்னோடுசெய்துகாட்டாமல், யானில்லாதவேளையில் இவர்களோடு நீடித்துயுத்தஞ்செய்வதும்வீரந்தானோ, திரிகாலங்களையுமறியத்தக்கஞானமும் யாவரையும்ரக்ஷிக்கும்படியானதொழிலையும் உடையநீ, என்னோடுபகைத்துயுத்தஞ்செய்தால் நீங்காததுன்பத்தை அநுபவிக்கவேண்டியிருக்குமென்பதைத்தெரிந்துகொள்ளாமற்போயினையோ, இப்போதேனும் உனக்குயுத்தஞ்செய்து வெல்லத்தக்கபராக்கிரமமிருந்தால் உனதுசகலசேனைகளோடும் ஏகசூரனாயிருக்கின்ற என்னொருவனுடன்யுத்தஞ்செய்யக்கடவையென்றுசொன்னான். இவ்வாறு சிந்துராசன்சொல்லி முடியுமுன்னர்யெதிர்த்தெழுந்த விண்டுவினோடு எல்லாத் தேவர்களும் ஒன்றாகக்கூடி, அவன்மீது அளவற்ற அஸ்திரங்களைப் பிரயோகித்தார்கள். அதன்மீது சிந்துராசனானவன் தனதுகரத்திலிருந்த தண்டாயுதத்தினால் தேவசேனைகளெல்லாஞ் சின்னபின்னப்பட்மோதி, இந்திரன்முதலிய எண்மரும்மூர்ச்சையாகும்படிக் கொடுமையோடுந்தாக்கி, விண்டு ஏறியிருந்தகருடனுடைய வொருபக்கத்துச்சிறகையறுத்தெறிந்து பூமியில்விழத்தள்ளினான். அப்போதுவிண்டுவானவர் மிகுந்தகோபாவேசத்தோடுமெழுந்து, தமதுகரத்திலிருந்ததண்டாயுதத்தினால் அவன்சிரத்திற்புடைத்தார். உடனே அத்தண்டாயுதமானது முறிந்துநொறுங்கிப்போயது. பின்னர் விண்டுவானவர் தமதுசக்கராயுதத்தைப்பிரயோகித்தார். அதைச்சிந்துராசன்கண்டு, தானுந்தனதுசக்கராயுதத்தைப்பிரயோ

கித்தான். அவ்விரண்டுசக்கராயுதங்களும் ஒன்றையொன்றெதிர்த்துப், பிளயாக்கினிபோலவும் ஆலகாலவிடம்போலவுஞ் சொலித்துக்கொண்டு சொர்க்கலோகமுதலான எல்லாலோகங்களினுஞ்சென்றுதகித்தன. அவ்வற்புதத்தை இருவரும்பார்த்து, உடனே அவ்வவர்களுடைய சக்கராயுதங்களை அவ்வவர்கள் ஆக்கிரஷணம்பண்ணிக்கொண்டார்கள். அப்போது விண்டுவானவர் சிறிதுநிதானித்து, நமது அளவற்ற படைகளுள்ளும் சக்கரப்படைமேலானதாயிருக்க, அதற்குமேலானதாகஅவனிடத்தில் ஒருசக்கரமிருக்கின்றது, அதுவோ சிவபிரானுடைய சூலாயுதத்திற்கிணையாகச்சமர்செய்யவல்லது, அதுவேயுமன்றி அச்சூலாயுதத்திற்கு மிணையாகவேறொருசூலாயுதம் அவன்கையில்வைத்திருக்கின்றான். ஆதலால் இவனையுத்தஞ்செய்துவெல்லுவதுமிகவுமரிது, இவனுக்குநம்போலிகளால்இறுதியில்லை, இவனைஉபாயங்களினலே சாந்தப்படுத்தி நாம்தப்பித்துக்கொண்டுபோவதே காரியமன்றிவேறொன்றைச்சிந்திப்பதுபழுதாகுமென்று தமக்குள்நிச்சயித்து, மிகுந்தகாதலோடும் இதங்காட்டுவார்போல அவனைப்பார்த்து, ஓ வீராதிவீரனே- புருடர்களுடைய ஆண்மைகளெல்லாம் ஓர் நொடிப்போதில் மாய்ந்து சிந்தும்படிசெய்யத்தக்க பராக்கிரமம் உன்னிடத்திலிருப்பதால், உனக்குச்சிந்துவென்கின்றபெயர் மிகவுஞ்சிறப்புற்றிருக்கின்றது, உனக்குஎர்தவுலகங்களினும் எதிரிகளில்லை, உனதுபராக்கிரமத்திற்கு யாமெசசினேம், உனக்குவேண்டியவரங்களைக்கேள் தருகின்றோமென்று சொல்லினர். அதைச் சிந்துராசன்கேட்டு, விண்டுவினுடையக்ருத்து இன்னதென்று தனககுள் தெரிந்துகொண்டு, அவர்கூறியமறுபொருளானவார்த்தைக்குச் சரியாகத்தானுமோர் கபடயுக்திகொண்டு, ஓவிண்டுவே- நீஎனக்குவரந்தருவது மெய்யேயாயின்கொடுஅஃது யாதோவென்று மலைக்கவேண்டுவதில்லை, உன்னையான்எளிதானவரமேகேட்கின்றேன், அஃதுயாதெனில்-நீ எல்லாத்தேவர்களோடும்நமதுகண்டகநகரத்தில்வந்து, நாமிட்டபணிகளையாவரோடும் நீசெய்திருக்கும்படிவரங்கொடுக்கவேண்டும், இவ்வரங்கொடாமற்போவாயேல், இங்கிமிட்த்தில் உன்னையுத்தமுகத்தில் வென்று அவ்வாறே செய்விப்பேனென்றுசொன்னன். சிவபிரானைப்போலத்திரிநேத்திரமும்சடைமுடியும் சூலாயுதமும்பெற்றிருக்கின்ற சிந்துராசன்சொன்னசொற்களைவிண்டுகேட்டவுடன்மாழ்கினவராகிப், பின்னர் ஒருவாறுதேறி,இவன்இனிவலியச்செய்விக்கத்தக்ககாரியத்தைநாமே ஒப்பிச்செய்வது மிகவுமாண்பாகும், அதனல் நாம்கொடுத்தவரத்துக்கும்பெருமையுண்டாகுமென்றுநினைத்து, அந்தோ என்செய்வர், அவ்வாறேதந்தோமென்றுசொல்லினர். அச்சொல்முடியுமுன்னமே சிந்துராசனனவன் அவுணர்கூட்டங்களைஏவி, விண்டு இந்திரன்முதலான சகலதேவர்களையும் வளைத்துக்காவலிட்டுப், பிரமனையும்ஆளவிட்டுப்பிடித்துவந்து, யுத்தமுகத்தில் வந்துநின்ற தேவர்களல்லாமல் அந்தந்தலோகங்களிலிருக்கின்ற ஏனையதேவர்களையும் பிடித்தபிடியிற்கொண்டுவருமாறு சிலஅவுணர்களைஏவி, வைகுந்தமுதலிய தேவலோகங்களிலெல்லாம் சும்பாசுரன்- நிசும்பாசுரன்- விருத்திராசுரன்- சம்பராசுரன்முதலான அவுணர்களையிருத்திப், பின்னர் எல்லாத் தேவர்களோடும் அவ்விடத்தினின்றுமகன்று,இரணபேரிசயபேரி முதலிய வைகள்முழங்கு

ம்படியாகப் பூலோகத்திலிழிந்து, தனதுகண்டகநகரமுழுவதும் அத்தேவர்களைச்சிறையில்வைத்து, அவர்கள் தப்பியோடிப்போகாதவண்ணம் அவுணர்களைநாற்றிசைகளினுங்காவலிருத்தி, அவ்வவர்கள் அன்போடு அநுட்டித்துவருகின்ற மந்திரங்களையெல்லாம் அவ்வவற்றின்வழிவந்நூல்களோடுகளைந்து சிந்துநதியிற்போட்டுவிடச்செய்து, எவ்விடங்களில் யாவரேனும் அவ்வவர்களிஷ்டதேவர்களைப்பூசிப்பார்களாயின் அவர்களையெல்லாம் பிடித்துவதைசெய்யக்கட்டளையிட்டு, எல்லாத்தேவர்களுந் தன்னைப்போல ஓர்படிவஞ்செய்துவைத்துப்பூசித்துவருமாறு அமைச்சர்களைக்கூவி எங்கும்பறையறைவிக்கும்படி ஆக்கியாபித்தனன். அவர்களும் அவ்வாறேசெய்வித்தார்கள். அதனால்சகலலோகங்களினும் வேதநீதிகளிறந்தன. யாவரும்சாத்திரவிசாரணையில்லாமல்மாழ்கினர். பெரியோர்களெல்லாங் கடவுளே துணையென்று நம்பியிருந்தமனக்கவலையோடு மௌனித்திருந்தார்கள். இவ்வாறுதேவர்கள்முதலாயினோரைச்சிறையிலிட்டுத்துன்பஞ்செய்துவருகின்ற சிந்துராசனானவன் பின்னர் தனதுகுலத்திலுதித்த உற்கையென்பவளைவிவாகஞ்செய்து, அவளால் தன்மன் அதன்மனென்னும்இரண்டுபுத்திரர்களைப்பெற்று, அப்புத்திரர்களோடும்பத்தினியோடுந்தாய் தந்தை முதலானவர்களோடும் அளவளாவி, அவுணர்களையெல்லாமேன்மைபெறச்செய்து, தேவர்களையெல்லாந் துக்கசாகரத்தின் மூழ்குவித்துச், சிறிதுமிரக்கமில்லாதபடி நாள்தோறுங் கொடுங்கோலோச்சுசெலுத்தி நெடுநாள்வாழ்ந்திருந்தனன். அவனால் அளவற்ற நாள்சிறையிலகப்பட்டுத் துன்பமநுபவிக்கின்ற தேவர்களெல்லா மிகவுமனநொந்து, ஓர் நாள் காவலாளர்களறியாதவண்ணந் தங்கள் குலகுருவாகிய பிரகற்பதிதேவனையாவரும் பணிந்தெழுந்து, சுவாமி - இச்சிந்துராசன் நமது லோகத்திற்படையெடுத்துவந்தபோது நாமெவ்வாறடங்கியிருந்தோமோ அவ்வாறேயிருப்போமாயின்சுகமுற்றிருப்போம், அச்சுகமில்லாமற்போயினும் இவ்விதஆபத்துகளிலேனும் அகப்படாமலிருப்போம், பின்னர் தேவேந்திரனை நம்பியன்றோ இவ்வருஞ்சிறைக்குள்ளாயினோம், இனியேனும் இச்சிறையினின்றுந்தப்பி எக்காலத்திற் சுகம்பெறுவோமென்று துக்கித்தார்கள். அதற்குப்பிரகற்பதிதேவர் சிறிது ஆலோசித்துத், தம்முள் ஓர்நிச்சயஞ்செய்து, ஓவானவர்களே - நாமனைவருஞ் சுகம்பெற்றுக்கமார்க்கத்தினைத்தேடவேண்டுமாயின், என்றைக்குநமது இடையூறுகளைநீக்கி ரக்ஷித்துவருகின்ற ஒருவிநாயகமூர்த்தியுண்டல்லவா, அவரையிப்போதும் இவ்வவுணபாதகர்களை யொடுக்கும்படியாக மனதிலன்போடுதியானித்துப் பூசிப்பீர்களென்றுசொன்னார். அவ்வாறே அத்தேவர்களும் பிரகற்பதிதேவரும் விண்டுவும் பிரமனும் ஏனையமுனிவர்களும்விநாயகமூர்த்தியினுடைய திருவுருவத்தை நாடோறுமனதிற்றியானித்து, மிகுந்தஅன்போடும் பூசித்துவந்தார்கள். மத்தியில் விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்திவிரத, அப்பொழுதவ்விரதத்தை யாவரும்பத்தியோடு அந்தரியாகமாயநுட்டித்தார்கள். அதற்குவிநாயகமூர்த்தி கிருபைகூர்ந்து, பத்துத்திருக்கரங்களும், அத்திருக்கரங்கள்தோறும் பத்துஆயுதங்களும்விளங்கும்படியாகச, சித்திபுத்திகள் சமேதராய்ச், சிங்கவாகனமூர்ந்து, மற்றைய அவயவங்களோடும் அவ்வவர்கள் மனந்தோறுந் தரிசனந்தந்து, அன்

பர்களே- முன்னருங்கட்குத் தீங்குசெய்துவந்த கணன்முதலாயினோரு டைய உடல்களைப்பிளந்து எவ்வாறு உங்கட்குச் சுகமருவச்செய்தோமோ, அவ்வாறே இனியாம் உமாதேவியினிடத்தில் ஆறுகைகளும் வெள்ளைமேனியுமாக அவதரித்து, ஓர்பெரியமயில்வாகனத்தையூர்ந்து, இச்சிந்துவையுஞ்சங்கரித்து உங்களைச்சிறையினின்றும் விடுத்தருளுவோம், அதுகாறும் நீங்கள் சந்தோஷமுற்றிருங்களென்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். அதற்குமேல் தேவர்கள் முதலியயாவரும் விநாயகமூர்த்தி திருவாய்மலர்ந்தருளியதை மனதில்உறுதியாகவைத்துக்கொண்டு, அத்தியந்தசந்தோஷத்தைப்பெற்று, அத்தினமேசிறையினின்றும் விடுபட்டு மேலானபாக்கியத்தைப் பெற்றவர்களைப்போல ஆனந்தமாகி, நாள்தோறும் விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளைமனதிற் றியானஞ்செய்து கொண்டிருந்தார்கள். ஓசவுனகாதிமுனிவர்களே- தேவதேவோத்தமராகியவிநாயகமூர்த்தியானவர் உமாதேவியிடத்திற் புத்திரராக அவதரிக்கும்படி இடைவிடாது தீங்குகளைச்செய்துவந்தசிந்துராசனுடையதிறத்தினைச்சொன்னோம். இனிஎமதிறைவர் அவதாரஞ்செயதருளிய சிறப்பினைச்சொல்லுவோங்கேட்பீராக. சிந்துராசனுடைய கொடுமைக்கஞ்சித் திரிசந்திக்ஷேத்திரத்தில் வாசஞ்செயதிருக்கின்ற கவுதமர்முதலியமுனிவர்களெல்லாந் தங்களுருவங்களை மறைத்துக்கொண்டு, சிவபிரானைநோக்கித் தவஞ்செயதார்கள். அளவற்றநாள் உபவாசத்தோடும் அவர்கள்செய்துவந்த தவத்திற்குச்சிவபிரான்கிருபைசுரந்து, உமாபரமேஸ்வரிசமேதராய்ரிஷபவாகனத்தின்மீதெழுந்தருளிப், பூதர்முதலாகிய சிவகணங்கள்புடைசூழும்படி அவர்களெதிரிற் பிரத்தியக்ஷமாயினர். அவர்கள் சிவபிரானைக்கண்டவுடனேஎழுந்திருந்து, விழிகளில் ஆனந்தவாரியைப்பெருக்கிப், பலமுறைசாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, இருகரங்களையுஞ்சிரமேற்கூப்பி, வேதாகமங்களினால் அளவற்றதோத்திரங்களைச்செய்தார்கள். அவர்களைச்சிவபெருமான் கிருபையோடும்பார்த்தருளி, உங்கட்குவேண்டியவரங்களைக்கேண்மின்களென்றுதிருவாய்மலர்ந்தனர். உடனே முனிவர்களெல்லாங்கிருதார்த்தர்களாயினோமென்று மிகுந்த அன்போடுமீட்டும்பணிந்தெழுந்து, சுவாமி- கொடியவனாகியசிந்துராசனால் சகலலோகங்களினும் வேதமார்க்கங்கள்மூழ்கிப்போயின, தேவர்கள்முனிவர்களெல்லாம் அவ்வவர்களுடைய வாழ்வுகளழிந்து அப்பாதகனிட்ட சிறைக்குளானார்கள், அடியேங்கள்சிலபேர்மாத்திரம் அவன்கையிலகப்படாமல் வேதமார்க்கத்தையநுட்டித்து இங்ஙனேயிருக்கின்றோம், அக்கொடியவனை எவ்விதத்திலேனுந் தேவரீர்நாசஞ்செய்யல்வேண்டும், அவனுக்குநாசகாலம் இப்போதில்லாவிடின் அக்காலம்வருகின்றவரையில் அடியேங்கட்குத்தீங்குநேரவொட்டாமல் காக்கும்பொருட்டுத் தேவரீர் இங்ஙனமெழுந்தருளியிருத்தல்வேண்டும், தேவரீர் இங்ஙனம் எழுந்தருளியிருந்தால் எளியேங்கள் அச்சமில்லாமல் சுவாமிகளைப்பூசைசெயதுகொண்டு வேதமார்க்கங்களையநுட்டித்துத் தீவினைகளிற்படாமல் இகத்தில்வாழ்ந்திருப்போம், இல்லாவிடில் இனி அடியேங்கள் பலவகைத்துன்பங்கட் காளாகுவோமென்றுபிரார்த்தித்தார்கள். பத்தருக்கெளியரான பரமேஸ்வரர்அம்முனிவர்களுடைய அபீஷ்டத்தை நிறைவேற்றத்திருவுளங்கொண்டு, அவர்கள்

உள்ளத்தைப்போலப் பரிசுத்தமாய்த்தெளிந்துதண்ணென்றிருக்கின்றநீர் வளப்பத்தையும், புட்பங்கள்மலிந்த பலபொழில்களாற்சூழப்பட்டிருக்கின்ற நிலவளப்பத்தையும்பார்த்து, அவர்கட்குமகிழ்வுண்டாகும்படி அதற்கிசைந்து, அன்பர்களே- சிந்துவைச்சங்கரிக்கின்ற வளையில் யாம்உமாதேவியோடும் இப்பூதகணங்களோடும் இங்ஙனே எழுந்தருளியிருப்போமென்றுதிருவாய்மலர்ந்தனர்.அதைக்கேட்டமுனிபுங்கவர்களெல்லாம்மேலானமகிழ்ச்சிபொங்கவிருந்தார்கள். பின்னர் கணத்தலைவர்கள் சிவபிரானும் உமாதேவியும் எழுந்தருளியிருப்பதற்குச் சொர்னத்தினாலும் நவரத்நங்களினாலும் ஓராலயத்தைக்கயிலாயபர்வதத்திற் கிணையாகச்சமைத்தார்கள். அவ்வாலயத்தில் சிவபிரான் உமாதேவியாரோடுமெழுந்தருளி, முனிபுங்கவர்களெல்லாம் பூசிக்கும்படியாக அவர்கள்மீது தமது கிருபாகடாக்ஷத்தைவைத்திருந்தனர். அக்காலத்தில் சகலவான்மாக்களுக்கும் யோகநிட்டையைத்தெரிவிப்பவர்போலச் சிவபிரானயோகத்திலிருந்தனர். அதைஉமாதேவியார்பார்த்துப்பணிந்தெழுந்து, சுவாமி- பிரமன் விண்டு முதலியயாவரும் நாள்தோறுந் தேவரீரைத்தியானஞ்செய்து தேவரீருடையபெருங்கருணையால் நால்வகைப்பொருள்களையும் பெறுகின்றார்கள், இஃதுசத்தியமாயிருக்கத், தேவரீர் அவர்களைப்போல விழிகளை மூடிக்கொண்டு தியானிக்கப்படுங்கடவுள் வேறென்னவிருக்கின்றது, எவர்கள் எதைவிரும்பினுங்கொடுக்கவல்லது சிந்தாமணியேயன்றி அதற்குக் கொடுப்பவர்கள் ஒருவருண்டோ, பிரமன் விண்டு இவ்விருவர்களோடுசகலலோகங்களையுஞ்சங்கரித்து, மீட்டும் அவ்விருவர்களால் சகலலோகங்களையுஞ்சிருட்டித்துக்காக்கச்செய்கின்ற ருத்திரமூர்த்தியாகியும், அம்மூவர்களையும் உண்டாக்கிரட்சிக்கின்ற இறைவராகியுமிருக்குந்தேவரீர்யோகநிட்டையில் யாரைத்தியானிக்கின்றது, அந்தச்சந்தேகத்தை அடியாட்கு நீக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். இவ்வாறு உமாதேவியார்பணிந்துபிரார்த்தித்தற்குச் சிவபிரான்கிருபைசுரந்து, பெண்ணே-பிரமன் விண்டு இந்திரன் முதலானவர்களால் நாம் எவ்வாறு தியானிக்கப்படுகின்றேமோ, அவ்வாறேநம்மாற்தியானிக்கப்படுபொருளும் ஒன்றுண்டு, அதைவிவரமாகச்சொல்லுவோங்கேள், ஏகமாகியும், அநேகமாகியும், மாயையிற்கலந்து சோகமுதலானவைகளிற் சலிக்காதபோதிவாகியும், அம்மாயையினாற்றனுகரணாதிகள் நான்கினையுமுண்டாக்கி அவைகளை ஆன்மாக்களுக்களித்தும் விகாரங்களிற்படாததாகியும், பந்தம்மோக்கமென்னுமிரண்டினைப்பரப்புவதாகியும், அநாதியாகியும், ஆதியந்தமில்லாததாகியும், அநாதியிற்றானேமுத்தியாகியும், அருவமாகியும, உருவமாகியும், அருவுருவமாகியும், இம்மூன்றுமற்றதாகியும், மனம்புத்தி அகங்காரமென்னு மூன்றுமில்லாததாகியும், உள்ளதாகியும், நித்தியமாகியும், நின்மலமாகியும், நிர்க்குணமாகியும், நிராமயமாகியும், அத்துவிதமாகியும் ஆனந்தமாகியும் விளங்காநின்ற மேலான பொருளே நாம்தியானிக்கப்படும்பொருள், அந்தவுத்தமப்பொருளுக்குமேலானபொருள் ஒன்றுமில்லை, அப்பொருள்மனம்வாக்குக் காயங்களினால் அறிதற்கரிதான பொருளாதலால், அஃது நம்மைச்சுதந்தரவடிவாய் எப்பொழுதுங்கொண்டருளி, நம்மைப்பணிகின்றவர்களுடைய பூசனைகளை ஒப்புக்கொண்டு, அவர்

கட்குசகலவரங்களையுங் கொடுத்தருளும், இவ்வார்த்தை தமகாரகசியமா ரும், இதனை யாவர்க்கும் வெளிவிடாமல் உன்மனதிற்சிந்திக்கக் கடவை யென்று திருவாயமலர்ந்தனர். அவையனைத்தையும் உமாதேவியார் செவிக்கமுதாகக்கேட்டு, மீட்டுஞ்சிவபிரானைப்பணிந்தெழுந்து, சுவாமி- அத்தன்மைத்தான மேலாகியபொருளை அடியாட்குத்தெரிசிப்பிக்க வேண்டுமென்றுபிரார்த்தித்தனர். அதற்குச சிவபிரான்கிருபைசுரந்து, பெண்ணே- சீவராசிகள்தோறும் பரிபூரணமாயிருக்கின்ற அந்தமேலாகியபொருள், தேவர்களுடையசிறையை நீக்கும்பொருட்டு இனி உன்னிடத்தில் ஓர்புத்திரனாகஅவதரித்து, அளவற்றதிருவிளையாடல்களைநடாத்திக், கொடியதீவினைகளைசசெயதுவருகின்ற சிந்துராசனைசசங்கரிக்கும், அதைஉன துகண்ணினாற்காணப்போகின்றனை, அப்பொருள்உன்னிடத்தில் புத்திரனையவதரிக்கும்படியாக நீசெயயத்தக்ககருமம்ஒன்றுண்டு, சொல்லுதற்கரியமந்திரமும் ஒன்றுண்டு, அவைகளையாம் கூறக்கேட்டு, அவ்வாறேபன்னிரண்டுவருடமநுட்டியென்றுசொலலி, அநுட்டிக்கத்தக்கமுறைமையையும் மந்திரத்தையும் உபதேசித்தனர். பின்னர் உமாதேவியார் அத்திரிசந்திக்ஷேத்திரத்தில் முன்னரேயெழுந்தருளிய மயூரேசவிநாயகருடையாலயத்திலிருந்து, தமதுகாதலர் உபதேசித்தருளிய ஏகாக்ஷரமந்திரத்தைச் செபஞ்செய்து, பன்னிரண்டுவருடந் தவத்திலிருந்தனர். அப்பால் பராதிதத்துவங்களையெலலாங்கடந்து, எவ்விடத்து நீக்கமற நிற்கும் பேரானந்தப்பொருளே ஓர்திருவுருக்கொண்டு, உருத்திரமுகம் நடுவும்-பிரமமுகம் வலமும்- விண்டுமுகம் இடமுமாக மூனறுமுகங்களைவாய்ந்து, சந்திரனைத் தரித்தசடாமகுடங்களும், ஏழுவிழிகளும், சூலம்-மழு-கமண்டலம்- உருத்திராக்கமாலிகை- சங்கு-சக்கரம்- என்னு மிவைகளைத்தரித் திருக்கின்ற ஆறுகரங்களும். கற்பூரம்போன்ற தவளமேனியுமுடையவிநாயகமூர்த்தியாகி, வெள்ளைரிஷபவாகனத்தையூர்ந்து, உமாதேவியா ரெதிரிற்பிரத்தியக்ஷமாயினர். உடனே உமாதேவியார் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, பலமுறைவேதாகமங்களாற் றுதிசெய்தனள். அதன்மீது உமக்குவேண்டியவரம்யாதென்று விநாயகமூர்த்திகேட்டருள, அதற்கு உமாதேவியார் தொழுதெழுந்து, சுவாமி-தேவரீர் எக்காலத்தும் அடியேற்குத் தரிசனங்கொடுத்து முற்றினுங் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குவிநாயகமூர்த்தி கிருபைசுரந்து, ஓலோகநாயகியே-நாடோறுங்கொடுமைகளையே நடாத்திவருகின்றசிந்துவைச்சங்கரிக்கவும், நம்மை வழிபட்டதேவர்களைச் சிறையினின்று நீக்கி நல்லபதவிகளைக் கொடுக்கவும், யாம் உமக்குப் புத்திரனாக அவதரித்து, உம்மிடத்திலேயேவளர்ந்துவிளையாடிக்கொணடிருப்போமென்று திருவாய்மலர்ந்து, தாம் முன்னர்வசித்திருந்த மயூரேசமூர்த்தியிற்கலந்தருளினர். அதற்குமேல் உமாதேவியார் சிவபிரானிடத்திற்சென்று, தமக்குவிநாயகமூர்த்தி தரிசனங் கொடுத்த திருவுருவத்தினுடைய சிறப்பையும், அவர்கொடுத்தருளிய வரத்தையும் விவரமாகத் திருவாய்மலர்ந்து, மிக்கபேருவகையுடன் அவரோடுவாழ்ந்திருக்கின்றகாலத்தில், விநாயகமூர்த்திக்குவப்பாகிய சதுர்த்திநேரிட, அத்தினத்தில் ஓர்மண்டபத்தை அலங்கரித்து, மிருத்திகையினால்விநாயகமூர்த்தியினுடையதிருவுருவத்தைச்சமைத்து, வேதாகமமுறைமைப்படி பூசித்த

ணர். அப்போது அம்மூர்த்தியினின்று ஆச்சரியமாகும்படி விநாயகக் கடவுள் ஓர்பெருஞ்சோதிரூபமாய்வெளிப்பட, அச்சோதியை உமாதேவியார் பார்க்கமாட்டாது கண்கள்கூசிப்பயந்தனர். அப்பால் சோதியாயெழுந்தருளிய விநாயகமூர்த்தியானவர் அளவற்றகண்களும்- அளவற்றவாய்களும்- அளவற்றசெவிகளும்- அளவற்றமுகங்களும்- அளவற்றகைகளும்- அளவற்றகால்களுமாய், விஸ்வரூபங்கொண்டுநின்றனர். அதனை உமாதேவியார்கண்டுபயந்தெழுந்து, ஓகுணக்குன்றமே- தேவரீர்இவ்வுருவத்தோடுமிருந்தால் எளியேற்கிணங்குமோ, சுவாமிகள் அடியேற்கிணங்கும்படியான பாலகன்வடிவை யெடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். உடனே எனதுள்ளத்திலமர்ந்த விநாயகமூர்த்தியானவர்திங்களொன்பதுஞ்சென்று பிறந்தபாலனாய், ஆறுகரங்களும் மூன்றுவிழிகளும் விளங்கும்படி, முத்துமாலையைத்தரித்தமார்போடு உமாதேவியாரொதில் அமர்ந்தருளினர். பின்னர் குருக்கத்தி நிறத்தினைப்போலக் கோமளவுருவங்கொண்டெழுந்தருளிய பாலவிநாயகமூர்த்தியை உமாதேவியார் ஆனந்தத்தோடுமெடுத்து, மடியில்வைத்துத், தமது திருமுலைப்பாலூட்டியருளினர். உடனே ஆகாயத்தில் பஞ்சகருவிகளுமுழங்கின. தேவர்கள்புட்பவருடஞ்சொரிந்தார்கள். நாற்றிசைகளினும் மந்தமாருதம்வீசியது. தேவர்கட்கெல்லாம் வலதுதோள்களும் வலதுகண்களுந் துடித்தன. சிந்துராசனுடைய கண்டகநகரத்திலே உதிரமழைபெய்தது. அவனரமனையினுங் கோபுரத்தினும் பகற்போதில் ஆந்தைகள் இறங்கிக்கூவின. அவனுடைய இடதுதோளும் இடதுகண்ணுந்துடித்தன. இவ்விதவுற்பனங்களுண்டாகலுந் துன்பத்திலழுந்தியிருந்த தேவர்களெல்லாமனமகிழ்ந்தார்கள். கெட்டவுற்பனங்களைக்கண்ட சிந்துராசன் உடனே சிலதூதர்களையேவி, இவ்வுலகத்தில் ஏதேனும் அதிசயமுண்டாயிருக்கின் அதனைத்தெரிந்துவரக்கடவீர்களென்று கட்டளையிட்டனுப்பினான். அங்கங்கே உலர்ந்தவிருக்ஷங்களெல்லாந்தளிர்த்தன. வறந்தபசுக்களெல்லாஞ்சுரந்துகறந்தன. இவையனைத்தையும் உலகத்திலுள்ளோர்கள்கண்டு, நமக்கெல்லாம்நற்காலம் வந்தாற்போலிருக்கின்றதென்று மனத்துயர்நீங்கி மிக்கஅதிசயத்துடனேமகிழ்ந்திருந்தார்கள். கவுதமர் முதலியமுனிவர்களெல்லாம்வரிசைவரிசையாகவந்து, சிவபிரானுடைய திருவடிகளில்வந்தனைசெய்து, உமாதேவியார்திருக்கரத்தில் அவதரித்திருக்கின்றபாலவிநாயகமூர்த்தியைச் சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, அவருக்குக்கணேசரென்று திருநாமஞ்சாற்றித் துதித்தார்கள். இவ்வாறு விண்ணவர்கட்கெல்லாங் கொழுகுலமாகியும், வேதங்களினுடைய பயனாகியும், கருதுவோர்களுடைய விடர்களைப்பொடிபடுத்துங்களைகணாகியும், எனதுள்ளத்தில் நண்ணி எளியேன் புரியும்பணிகளைக்கைக்கொள்ளு மிறைவனாகியுமிருக்கின்ற விநாயகமூர்த்தியானவர், மனிதர்களுடையமகவைப்போல உமாதேவியாரிடத்திற் குழந்தையாகிவளர்ந்தருளுங்காலத்தில், ஓர்நாள் கிருச்சமதமுனிவர் அத்தலத்தில்வந்து, விநாயகமூர்த்தியைப்பணிந்தெழுந்து, ஓர்பீதாம்பரத்தை அவர்திருமேனியிற்சாத்தித் தமதாசிரமத்திற்குப்போயினர். இவ்வாறே ஆங்காங்குதவஞ்செய்கின்ற முனிபுங்கவர்களெல்லாம் ஓங்காரப்பொருளாயிருக்கின்ற கணேசமூர்த்தியைக்கண்டு பணிந்துபோ

வதும் வருவதுமாயிருந்தார்கள். அப்போது ஓர்நாள்மரீசிமுனிவர்வந்து தொழுதுபோக, அவரை அந்தக்ஷேத்திரத்திலிருந்த முனிபுங்கவர்களெல்லாஞ்சூழ்ந்து, சுவாமி- தேவரீர்அடியேங்கட்குத் துன்பநேராதபடி ஒருபாயத்தினைத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குமரீசிமுனிவர் அவ்விருடியர்களைப்பார்த்து, அன்பர்களே- நீங்கள் ஏன் இவ்வாறு சஞ்சலப்படுகின்றீர்கள், சகலவிக்கினங்களையுந்தீர்க்கத்தக்க விக்கினராசரே இங்கு உமாதேவியாரிடத்தில் புத்திரராகியவதரித்திருக்க, உங்களிடத்தில் துன்பமென்பது நெருங்குமா, நெருங்காதே, ஆயினும்- கிரேதாயுதத்தில் பத்துகைகளும்- சோதியுருவமும்- சிங்கவாகனமும், திரேதாயுகத்தில் ஆறுகைகளும்- வெள்ளைமேனியும் - மயில்வாகனமும், துவாபரயுகத்தில் நாலுகைகளும்- சிவந்தமேனியும்- பெருச்சாளிவாகனமும், கலியுகத்தில் இரண்டுகைகளும்- மேகநிறமும்- குதிரைவாகனமுமாகப் பிரகாசிக்கும் விநாயகமூர்த்திக்கு, ஓர்கவசமந்திரமிருக்கின்றது, அம்மந்திரத்தை விநாயகமூர்த்தியினுடையதிருவுருவங்களை மனதிற்றியானித்தபடி யாவரேனுந்துதிசெய்துவந்தால், அவர்களைப்பற்றியிருக்கின்ற பிணி- வறுமை- பேய்- பூதம்- துயரம்- கவலை- பாவம்- முதலானபலவும் உடனேதீர்ந்து, அளவற்றபெருஞ்செல்வம்- ஆயுள்- பூமி- புத்திரசம்பத்து- முதலானயாவும் அவர்கட்குண்டாகும், அக்கவசமந்திரத்தை முன்னர் காசிபமுனிவர் முக்கலமுனிவருக்குபதேசித்தனர், அவர் மாண்டவியமுனிவருக்குபதேசித்தனர், அவர் எமக்குபதேசித்தார், யாம்வரன்முறைமைப்படி உங்கட்குபதேசிக்கின்றேன் கேளுங்களென்று சொல்லுவதாயினர்.

வளர்சிகையைப்பராபரமாய்வயங்குவிநாயகர்காக்கவாய்ந்தசென்னி ... *
யளவுபடாவதிகசவுந்தரதேகமகோற்கடாதாமமர்ந்துகாக்க ... ... *
விளரறநெற்றியையென்றும்விளங்கியகாசியர்காக்கபுருவந்தம்மைத் ... *
தளர்வின்மகோதரர்காக்கதடவிழிகள்பாலசந்திரனார்காக்க. ... ... *

கவின்வளருமதரங்கசமுகர்காக்கதாலங்கணக்கிரீடர்காக்க... ... ... *
நவில்சிபுகங்கிரீசைசுதன்காக்கநனிவாக்கைவிநாயகர்தாங்காக்க ... *
அவிர்நகைதுன்முகர்க்காக்கவள்ளெழிற்செஞ்செவிபாசபாணிகாக்கத்... *
தவிர்தலுறுதிளங்கொடிபோல்வளர்மணிநாசியைச்சிந்திதார்த்தன்காக்க *

காமருபூமுகந்தன்னைக்கணேசர்காக்ககளங்கணேசர்காக்க ... ... *
வாமமுறுமிருதோளும்வயங்குகந்தபூர்வசர்தாமகிழ்ந்துகாக்க ... *
வேமமுறுமணிமுலைவிக்கினவிநாசன்காக்கவிதயந்தன்னைத் ... ... *
தோமகலுங்கணநாதன்காக்கவகட்டினைத்துலங்கேரம்பன்காக்க.... ... *

பக்கமிரண்டையுந்தராதரன்காக்கபிருட்டத்தைப்பாவநீக்கும் ... *
விக்கினகரன்காக்கவிளங்கிலிங்கமவியாட்பூடணர்தாங்காக்க .. ... *
தக்குய்யந்தன்னைவக்கிரதுண்டர்காக்கசகனத்தேயல்ல... ... ... *
லுக்ககணபன்காக்கவூருமங்கலமூர்த்தியுவந்துகாக்க. ... ... *

தாழ்முழந்தாண்மகாபுத்திகாக்கவிருபதமேகதந்தன்காக்க .... *
வாழ்கரங்கிப்பிரப்பிரசாதனன்காக்கமுன்கையைவணங்குவார்நோ ...*
யாழ்தரச்செய்யாசாபூரகன்காக்கவிரல்பதுமவத்தன்காக்க ... ... *
கேழ்கிளருநகங்கள்விநாயகர்காக்கக்கிழக்கினிற்புத்திசன்காக்க. ... ...*

அக்கினியிற்சித்திசன்காக்கவுமாபுத்திரன்றென்றிசைகாக்க ... ... *
மிக்கநிருதியிற்கணேசுரன்காக்கவிக்கினவர்த்தனன்மேற்கென்னுந் ...*
திக்கதனிற்காக்கவாயுவிற்கசகன்னன்காக்கதிமுநிசி ... ... *
தக்கநிதிபன்காக்கவடகிழக்கிலீசநந்தனனேகாக்க. ... ...*

ஏகதந்தன்பகன்முழுதுங்காக்கவிரவினுஞ்சந்திரண்டன்மாட்டு ... *
மோகையின்விக்கினகிருதுகாக்கவிராக்கதர்பூதமுறுவேதாள ... ...*
மோகினிபேயிவையாதியுயிர்திறத்தால்வருந்துயருமுடிவிலாத ... *
வேகமுறும்பிணிபலவும்விலக்குபாசாங்குசர்தாம்விரைந்துகாக்க. ...*

மதிஞானந்தவந்தானமானமொளிபுகழ்குலம்வண்சரீரமுற்றும் ... *
பதிவானதனதானியங்கிரகமனைவிமைந்தர்பயினட்பாதிக்... ... ...*
கதியாவுங்கலந்துசர்வாயுதர்காக்ககாமர்பவுத்திரர்முன்னை ... ... *
விதியாருஞ்சுற்றமெலாமயூரேசரெஞ்ஞான்றும்விரும்பிக்காக்க... ...*

வென்றிசீவிதங்கபிலர்காக்ககரியாதியெலாம்விகடர்காக்க ... ... *
வென்றிவ்வாறிதுதனைமுக்காலத்துமியம்புமெனைஇடையூறென்று ...*
மொன்றுறுவணஞ்சுபகர்காக்கவிதையாரொருவரோதினலு... ... *
மன்றவரங்கவர்தேகம்பிணியறவச்சிரதேகமாகக்காக்க. ... ...*

இவ்வாறு மரீசிமுனிவர்சொல்லிப் பின்னுங்கூறுவார், ஓ முனிவர்களே- இக்கவசமந்திரத்தை நீங்கள் முக்காலத்தினும் ஓதினல் உங்கட்கு ஒரு இடையூறும்வராது, யாரொருவரிதை ஓதினலும் அவர்கள் தேகம் வச்சிரதேகமாகும். யாத்திரைசெல்கின்றோர்கள தோத்திரஞ்செய்தால் சகலவிக்கினங்களுந்தொலைந்து மேலானபயன்களைப்பெறுவார்கள், சமர்க்களத்திற் றோத்திரஞ்செய்தால் வெற்றிபெறுவார்கள், பிரதிதினம் ஏழுமுறையாக இருபத்தொருநாள்வரையில் தோத்திரஞ்செய்தால் உச்சாடனம்- வித்துவேடணம்- ஆகருடணம்- தம்பனமுதலியவித்தைகளெல்லாநகைகூடும், நித்தம் இருபத்தொருமுறைதோத்திரஞ்செய்தால் கிரகதோஷமுதலானவைகள்நீங்கும், அரசர்களைக்காணும்போதுபத்தியோடு முக்கால தோத்திரஞ்செய்தால் அவ்வரசன் உடனேவசியமாவன், அம்மந்திரத்தைத் தாளிப்பனையேட்டில எழுதிப்படித்தாலும் படிப்பித்துக் கேட்டாலும் அன்போடு பூசித்தாலும் சகலவிடர்களுந்தீரும், அன்பு-உறுதி- ஆசாரம்- இவைகளில்லாதார் என்னகொடுத்தாலும் இம்மந்திரத்தை அவர்கட்குபதேசிக்கத்தகாது, என்றுகூறித் தமது ஆசிரமத்திற்குச் சென்றனர். அதுமுதல் எல்லாமுனிவர்களும் அக்கவசமந்திரத்தைச்செபஞ்செய்துவந்தார்கள். இங்கு இவ்வாறாக, முன்னர் சிந்துராசன்விடுத்த தூதர்கள் வாயுவேகமனோவேகமாய்ச்சென்று, பூலோகம் நாகலோக

ம் தெய்வலோக முதலியவிடங்கள் முழுவதுஞ்சோதித்து, எங்குமோர்புதுமையையுங்காணுதவர்களாகி, மீட்டும்பூலோகத்தைநோக்கிவரும்போது, தண்டகவனத்திலிருக்கின்ற திரிசந்திக்ஷேத்திரத்தையணுகி, அங்குவசித்திருக்கின்ற முனிவர்களுடைய தவப்பெருக்கையும்- வேதகோஷங்களையும்-உமாதேவியாருடனே சிவபிரானெழுந்தருளியிருக்கின்ற சிலாக்கியத்தையும்- வெற்றிவிளங்கும்படியான புத்திரனைப்பெற்ற உமாதேவியாருடையமனவிருப்பையும்-மற்றுமுள்ள செழிப்புகளையுங்கண்டு, உடனே சிந்துராசனிடத்திற்சென்று பணிந்தெழுந்து, ஆண்டவனே- அடியேங்கள் திரிலோகங்களினுஞ்சென்று சோதித்துவந்தோம், எங்கும் வேறே ஒரு அதிசயங்களையுங்காணேம், ஆனால் தண்டகவனத்தில், திரிசந்திக்ஷேத்திரத்தில், சிவபெருமான் உமாதேவியோடு மெழுந்தருளியிருக்கின்றனர். அங்கே அளவற்றமுனிவர்கள் தவஞ்செய்துகொண்டுமிக்கதருக்கோடிருக்கின்றார்கள், அவர்களுக்குள்ளே எண்பத்தெண்ணாயிரமுனிவர்களுமிருக்கின்றார்கள், அவர்களோநினைத்தமாத்திரத்தில் மூவுலகங்களையுமழித்து மீட்டும் உண்டாக்கிரக்ஷிக்கத்தக்கவர்கள், அவர்களுடைய பெருமைகள் ஒருவராற்சொல்லிமுடிவனவன்று, அன்றியும் சிவபெருமானே அவர்களிடத்தில் வந்திருப்பாராயின் அவர்கள் மேன்மையை எம்போலிகளாற்சொல்லிமுடியுமோ, இதையே ஓரதிசயமாகநினைக்கவேண்டாம், அவ்விடத்திற்றானே மற்றொருபுதுமையைக்கண்டனம், அஃது யாதெனில்- உமாதேவியார்செய்ததவத்தினாலே சோமவாரமும் விநாயகசதுர்த்தியும் விசாகநக்ஷத்திரமுங்கூடிய நேற்றையதினத்தில் சிங்கலக்கினத்தில் ஓர்குழந்தைபிறந்திருக்கின்றது, அக்குழந்தைவெள்ளைமேனியும் ஆறுகைகளும் மூன்றுகண்களும் மிகுந்தபராக்கிரமமு முள்ளதாய், முத்துமாலையைத்தரித்தமார்போடுவிளங்கியிருக்கின்றது, முனிவர்களெல்லாமக்குழந்தைக்குக் கணேசனென்று நாமகரணஞ்செய்தார்கள், அதையாவருங்குழந்தையென்று எண்ணாமல் நாள்தோறுந் திரிகாலமும்வந்து பணிகின்றனரென்று அறிவித்தார்கள். அவையனைத்தையுஞ்சிந்துராஜன் கேட்டு, முன்னஞ் சிவபிரான்சொல்லியவாக்கின்படி நம்மைக்கொல்லுவதற்காகக், கணேசமூர்த்தியே இவ்வாறு உமாதேவியிடத்தில் அவதரித்தனர்போலிருக்கின்றதே யென்றுநினைத்து, இதற்கினியென்னசெய்வோமென்று மனதிற்கவலைகொண்டிருக்கின்றசமயத்தில், (உன்னை அவனேகொல்லுவான்) என்று ஒரு அசரீரிஉண்டாயது. அதனைக்கேட்டவுடன் சிந்துராசன்புண்ணில் வேல்பாய்ந்தாலென்னக்கோபித்து, இவ்வாறுசொன்னவனார், அவனை இங்கிடத்திற் பிடிமின்கள்- அடிமின்கள்- அவனைக்கண்டதுண்டமாய்வெட்டிப் பருந்துக்கெறிமோ யெறிமின்கள் என்று ஏவலாளர்கட்காக்கியாபித்தான். அவர்கள் நாற்றிசைகளினும்ஓடிப்பார்த்து, கர்த்தனே- அவ்வாறு சொன்னவனையெங்குங் காண்கிலேமென்றுகூறினார்கள். அதற்குமேல் சிந்துராசன் சிறிதுமாற்றுதவனாய், விழிகளிரண்டும் அனல்கொப்பளிக்கச்சினந்து, எனக்குமாற்றானாய்வந்த குழந்தையை இன்றேபிடித்துவருவேனென்று ஆக்கிரமித்தெழுந்தான். அதைஅமைச்சர்கள்பார்த்து, சிந்துராசனைப்பணிந்தெழுந்து, அவன்மனஞ்சாந்தமாகத்தக்க நெறியினையாலோசித்து, ஆண்டவனே- விண்டுவே

முதலியதேவர்கள் முனிவர்கள் யாவரையும் அகலக்கூடாத சிறையில் வைத்திருக்கின்றதேவரீர், இன்னுந் தொப்புட் கொடிவாடாத குழந்தையைச் சத்துருவாகக்கருதிப்போவதுந் தகுமா, தருமத்தைப்பாராவிடினும் அதனால் தேவரீருடைய பேரும் புகழும் பெருமையும் பிரகாசமும் ஒருங்கேநீங்குமன்றோ, இதனிமித்தம் நமதுபடைத்தலைவர்கள் வெளிப்படுவார்களாயின் அஃதுஇழிவாகுமே, சிவபிரானுடைய புதல்வனை ஒருவராற்கொண்டுவரமுடியுமோ, ஆதலால் யுத்தத்தினும்மாயையினும்வல்ல சிலஅசுரர்களைரகசியமாகஅனுப்பி, அவர்களால அங்கிருப்போர்கள் யாவருமறியாதவண்ணம் அக்குழந்தையை வதைசெய்வதே கருமமென்று சொன்னார்கள். அவையனைத்தையுஞ் சிந்துராசன்கேட்டு, உடனே போரினும் மாயையினும் வல்லவர்களாய்ப், பாதாமனைத்தும் ஓர்படிவமாகக் கொண்டகொள்கையராய்த், திருமான்முதலியதேவர்களுங் கண்டஞ்சத்தக்க நீர்மையினையுடையவர்களாயிருக்கின்ற சிலஅசுரர்களைக்கூவி, நீங்கள் எந்தஉபாயத்தினாலேனும் எனக்குச்சத்துருவாகிய ஈஸ்வரிகுமாரனை வதைசெய்துவரக்கடவீர்களென்றுசொல்லி, அவர்கட்காடையாபரணமுதலிய சிறப்புக்களையும் ரதகஜமுதலிய படைகளையும் உதவிசெய்தனுப்பினன். அவ்வசுரர்களதற்கிசைந்து, பிரதிதினம் வேறுவேறு முறையாகத்தாங்களே நாசமடையும்படி கணேசமூர்த்தியினிடத்திற்போனார்கள். அவர்களுள்கிருத்திராசுரனென்பவன் ஓர்கழுகுருபங்கொண்டு, தனதுசிறகின்காற்றினால் அநேகபர்வதங்களையும் விருக்ஷங்களையு நிலத்தில்வீழத்தள்ளிப், பெரியமேகங்களெல்லாஞ் சின்னபின்னப்படும்படி அலைத்துப், பூமியிலுள்ளவலிமையான வஸ்துக்களையெல்லாம் பொடிபடுத்தி, ஆகாயமார்க்கத்திற்பாய்ந்து, குருவியானது நெருப்பை மின் மினிப்பூச் சென்றுகருதித் தனது கூட்டில் வைக்க எடுத்துக்கொண்டுசெல்வதுபோல, உமாதேவியார் குளிப்பாட்டி முன்றிலில்வைத்திருந்த பாலவிநாயகமூர்த்தியின்மீது சரேலென்றுபாய்ந்து எடுத்துக்கொண்டுபோயினன். அதைமுனிவர்களெல்லாங்கண்டு பயந்துநின்றார்கள். கணநாதர்களெல்லாம் விநாயகமூர்த்தியை மீட்டுக்கொண்டுவருமாறு ஆகாயத்திற்பாய்ந்தார்கள். அதற்குள் அவரேதம்மையெடுத்துச்சென்ற கழுகின்கழுத்தை ஓர்கரத்தாற்பிடித்துநெறித்து, மீட்டும் உமாதேவியார் மடியிலமர்ந்தருளினர். கழுகுருபங்கொண்டுவந்தகிருத்திராசுரன் தனது சுயரூபத்தோடும்பூமியில் உதிரப்பிரவாகமோடும்படியாக வீழ்ந்திறந்தனன். அவன் வீழ்ந்தபோது பத்துயோசனை விசாலத்திற்கிருந்த மரங் கொடி முதலானவைகளெல்லாந்தகர்ந்தன. அவன்சரீரத்தினின்றும் பெருகிய உதிரப்பிரவாகத்தில் கிரண்டசிலைகளு மலைகளு முழுகிப்போயின. இவ்வதிசயத்தைப்பார்த்திருந்த முனிவர்களெல்லாம் மூன்றுநாளையகுழந்தை அதிகமாயையினையுடைய அசுரனைச்சங்கரித்த தல்லவாவென்று ஆச்சரியமானார்கள். ஏனைய அசுரர்களெல்லாம் பயந்து ஓடிப்போனார்கள். அதற்குமேல் இரண்டாந்தினங்களில் கேமாசுரனென்றுங் குசலாசுரனென்றும் பன்னிரண்டு யோசனையுயரமுள்ள இரண்டவுணர்கள் ஆகுவாய் உருவெடுத்துவந்து, ஒருவரோடொருவர் சண்டைசெய்துகொண்டு, விநாயகமூர்த்தியின்மீது வீழ்ந்தார்கள். உடனே எமதையன் பூனையாகத்திருவுருக்கொண்டு, அவ்

விரண்டு ஆகுவையுங்கடித்துக்கொன்றுவிட்டனர். மூன்றாந்திங்களில் அதிகபராக்கிரமமும் பதினைந்துயோசனையுயரமுமுள்ளகுறூராசுரனென்பவன்பூனையுருவங்கொண்டு, சுவாமிக்கெதிரில்வந்தனன். அதனைச்சுவாமியறிந்து, தமதுநான்குவேதங்களையு நினைத்தருளினர். உடனே அவ்வேதங்கள் நாய்வடிவாகவந்து, பூனையாகவிருக்கின்ற அசுரனைமுடுக்கிக் கடித்துப்போயின. நான்காந்திங்களில் பலாசுரனென்பவன் ஓர்முனிவர்குமாரனாகவுருக்கொண்டுவந்து, நாம்விளையாடலாம் வாவென்று விநாயகமூர்த்தியை யழைத்தான். அவனை சுவாமிவிளையாட்டினாலேயே கொன்றுவிட்டனர். அவன் இறந்தபின்பு தனது சுயரூபத்தோடு இருபதுயோசனை விசாலத்திற்குப் பூமியில்வீழ்ந்தான். ஐந்தாந்திங்களில் வியோமாசுரனென்பவன் ஆகாயத்தையளாவிய ஓர்மாமரமாகவுருக்கொண்டுநின்றான். அதிலுள்ள காய்கனிகளைச் சிலமுனிச்சிறார்கள் பறித்துத்தின்று அங்ஙனே மாய்ந்துபோனார்கள். அதனால் அவர்களுடைய தாயர்களெல்லா மிகவுந்துக்கித்துவருந்தினார்கள். அவ்வதிசயத்தை விநாயகமூர்த்தியறிந்து, அங்கிமிடத்தில் அம்மாமரத்தருகில்வந்து, அதில்தேன்கூடுகட்டியிருக்கின்ற ஓர் பொந்தினைக்கண்டு நுழைந்தார். உடனே அப்பொந்தானது சுவாமியை உள்ளேயடக்கி மூடிக்கொண்டது. அதைப்பார்த்த முனிவர்களெல்லாநடுங்கி, இஃது மாமரமல்ல ஏதோ ஓர்மாயையென்றுபயந்து ஓடினார்கள். அப்போது சுவாமி அம்மரத்தினுள்ளிருந்தவண்ணமே அதை அலைத்துப்பிளந்து, முன்னொருபோது தூணினின்றும் உதித்தநாரசிங்கத்தைப்போலவெளிவந்து, அதனடியில் இறந்துகிடக்கின்றமுனிச்சிறார்கட்கு உயிர்கொடுத்தெழுப்பினர். பின்னர்யாவரும் ஆனந்தங்கொண்டு, ஆயிரத்தெட்டண்டங்களையும் ஒரேகுடையிலாண்ட சூரபன்மனாகிய மாமரத்தைச் சுப்பிரமணியதேவர் துணித்தெறிவாராயின், அவர்தமையனாகிய இவருக்கு இம்மாமரத்தைத்துணிப்பது அரிதோவென்று துதிசெய்தார்கள். ஆறாந்திங்களில் அவ்வியோமாசுரனுடைய தங்கைநாளொன்றற்கு நூறு எருமைகளைத்தின்றுவருவதால் சதமயிடபக்கணியென்னும் பெயரினையுடைய ஓரசுரமாதானவள் இந்திராணியைப்போலவுருக்கொண்டு, உமாதேவியாரிடத்தில்வந்து, தாயே- யான்புலோமசை, எனது காதலர் அவுணராசனுடைய சிறையிலகப்பட்டு நெடுநாளாகவருந்துகின்றனர். யான் அவர்களினின்றும் தப்பியோடிவந்து தேவரீரைச்சரணடைந்தேன், இனியெனக்குத்துன்பமணுகாதபடி தேவரீர் பாதுகாத்தருளவேண்டுமென்று இரந்தாள். அதைக்கருணைநாயகியாகிய உமாதேவியார் உண்மையென்றேகருதி, ஓசசியே, சூரியன் இருளையுண்ணுமாறுபோல இன்னுஞ்சில நாளையுள் அவுணரையெல்லாம் இவ்வறுபுயராகிய விநாயகமூர்த்தியுண்டருளித், தேவர்கட்கெல்லாந்திருவைவழங்குவர், அப்போது இந்திரன் சிறையுநீங்கும், அதுகாறு நீமனக்கவலையையொழித்து இங்ஙன மிருவென்று திருவாய்மலர்ந்து, நல்லபோனகமும ஆடையாபரணாதிகளும் அவளுக்குக்கொடுத்தருளினர். அவ்வாறே அப்பாதகி சிலநாளிருந்து,ஓர்நாள் உமாதேவியார்சோர்ந்து நித்திரைசெய்யுஞ்சமயம்பார்த்து, விநாயகமூர்த்தியைக்கைக்கொண்டு ஆகாயமார்க்கத்திற்சென்றனள். சுவாமி அவள் ஒக்கலிலிருந்தவண்ணமே அவளதுசெவியைப்பிடித்திழுத்து,நிலத்திற்சா

ப்பத்துநீறுக்கி, மீட்டும் உமாதேவியாரிடத்தி லெழுந்தருளினர். ஏழாந்தினங்களில் கமடாசுரனென்பவன் சுவாமி திருவிளையாடல் செய்யுமிடத்தில் ஆமையுருக்கொண்டு, மெல்லமெல்லவூர்ந்துவந்தான். அப்போதுவிநாயகமூர்த்தியானவர் முன்னர்திருப்பாற்கடலைக்கலக்கியவிஷ்ணுவாகிய ஆமையினுடலைகுழப்பியடக்குந் தமது தாளினல் அதனது வலியெல்லாங் குன்றும்படி துவைத்தனர். எட்டாந்தினங்களில் உமாதேவியார் கணேசமூர்த்தியையெடுத்துக்கொண்டு சிலபாங்கியரோடுஞ் சோலைகளிற்சென்றுவைத்திருந்தனர். கணேசமூர்த்தி அச்சோலையிற் றனியேவிளையாடல்செய்திருந்தனர். அச்சமயத்தில் வலியில்மகமேருவை நிகர்த்தவனய், வேகத்தில் சூரியனுடையகுதிரைகட்கு ஒப்பானவனயிருக்கின்ற கற்பாசுரனென்பவன் ஓர்குதிரையுருவங்கொண்டு, சுவாமிக்கெதிரில்வந்தனன். உடனே அக்குதிரையின்மீது சுவாமி ஆரோகணித்து, அதனைவாயுவேகத்தினு மனோவேகத்தினும் விரைவாய்த் திரிலோகங்களினுஞ் செலுத்தி, மீட்டும் அச்சோலையின்கண்வந்து இறங்கினர். அப்போதக்குதிரையாகிய அசுரனானவன் குடலறுபட்டுக், கடைவாயில் விலாழிவழியும்படியாக ஓர் பர்வதஞ்சென்று கடலில்வீழ்ந்தாற்போலத் தனது இயல்பான வுருவத்தோடு இருபத்தைந்துயோசனைவிசாலத்திற்கு விழுந்திறந்தான். ஒன்பதாந்தினங்களில் துந்துபிக்குரலுடைமையாற் றுந்துபியென்னும் பெயரினையுடைய ஓரசுரன் விடத்தினல் நாவற்கனிகளைப்போலச்சமைத்து, ஓர்முனிச்சிறுன்போல உருவெடுத்துவந்து, கணேசமூர்த்தியை யழைத்தான். அதனைக்கணேசமூர்த்தியறிந்து, தமக்கு உமாதேவியார் அமிர்தங்கலந்து செய்துகொடுத்தமோதகத்தோடும் அவனருகிற்சென்று, அவன்கொணர்ந்துவந்த நாவற்கனிகளைகளையெல்லாம்வாங்கித் *தலையை அசைத்தசைத்து உண்டருளிப், பின்னர் தமது கரத்திலிருந்த மோதகத்தை அவனுக்குக்கொடுத்தார். தீயோர்க்குநல்லவத்துவுங் கெட்டவத்துவாகும் நல்லோர்க்குக்கெட்டவத்துவும் நல்லவத்துவாக இருக்குமென்று மேலோர்சொல்லும்வாக்கியத்தின்படி, அம்மோதகத்தை அப்பாதகன் புசித்தமாத்திரத்தில் அதிற்கலந்திருந்த அமிர்தமேவிடமாகி அவனைக்கொன்றது. அவன்கொடுத்தவிடமே எமதையனுக்கமிர்தமாயது. பத்தாந்தினங்களில் விண்ணைமுட்டிய சிரத்தினையுடையவனகியும், விண்டுவாதிதேவர்களும் அஞ்சத்தக்கவலிமையையுடையவனகியுமிருந்த அசகராசுரனென்பவன், பூமியைத்தாங்கும் ஆதிசேடனேவென்று மலைக்கும்படியான ஓர் மலைப்பாம்பாகஉருக்கொண்டு, உமாதேவியாரிருக்கின்ற சோலையின்கண்வந்து, சிலமுனிச்சிறுர்களோடுஞ்சென்று தனியேவிளையாடல்செய்திருக்கின்ற கணேசமூர்த்தியையெடுத்து, இராகு சந்திரனைவிழுங்குவதுபோல விழுங்கினன். உடனே இடையிற் சற்பக்கச்சினைவீக்கிய எமது கர்த்தன் உதயகிரியிலெழுந்த இளங்கதிரைப்போல அப்பாம்பினகட்டைப் பிளந்தெழுந்து, திருமேனிமுழுதும் உதிரமயமாக உமாதேவியாரிடத்திற்சென்றனர். அவர் தமதுபாலகனை நீராட்டி எடுத்துக்கொண்டு, மீட்டுந் தமது கோயிலை நோக்கிச்சென்றனர். பின்னர் மலைப்பாம்பாகவந்த அசுரன் தனது சுயருபத்தோடு நூறுயோசனைவிசாலத்திற்கு மலைபோலவிழுந்து இறந்தான். அவனுதரத்தினின்றும் பெருகியஉதிரவெள்ளமா

னது ஓர் பெரிய ஆறாக ஓடிக்கடலிற்பாய்ந்தது. பதினோராந்திங்களில் முன்போல உமாதேவியார் சிலவிருடியர் பத்தினிகளோடு குளிர்ந்தபொழிலிற்சென்று, தமது குழந்தையை விளையாடவிட்டிருந்தனர். அப்போது அப்பாலவிநாயகமூர்த்தி அவ்விருடியர்பத்தினிகளிடத்திற்சென்று,ஒருத்தி மடித்தலத்தினின்று மற்றொருத்திமடித்தலத்திலேறியும், முத்தங்கொடுக்கவேண்டினோர்க்கு முத்தங்கொடுத்தும், சிலர்மார்பிற்சென்று தழுவியும், சிலர்தோளைப்புல்லியேறியும், சிலர்ஆபரணங்களை யறுத்தெறிந்தும், சிலரை அடித்தோடி ஓர்மரத்திலே யொளித்துக்கொண்டும், தம்மை யடித்தோடியபேரை உடனே பிடித்துவந்தும், ஒவ்வொருத்தி விழிகளைமூடிவிட்டும், தமதுவிழிகளை அவர்கள் மூடிவிட்டால் புன்சிரிப்போடுமோடி மற்றொருத்தியைப் பிடித்துவந்தும், இவ்வாறு பற்பலவிதங்களாய் விளையாடல் செய்திருந்தனர். அப்போது சபலாசுரனென்பவன் எட்டுகால்களையும்- இரண்டுதலைகளையும்- அழலைப்போன்ற விழிகளையும்- பிறைபோலவளைந்த கோரைப்பற்களையுமுடைய சரபப்பக்ஷியுருவமாய்க், தனது சிறகைவிரித்தடித்துக்கொண்டு, ஆகாயமார்க்கமாகப்பறந்துவந்தனன். அவனது சிறகின் காற்றினால்மலைகளெல்லாமுடிசாய்ந்தும், பறவைகளனைத்துஞ் சின்னபின்னமாக முறிந்தும், சமுத்திரங்கள்பொங்கி அணைபுரளவும்போயின. அதை இருடியர்பத்தினிகள்கண்டுநடுங்கி ஓடிப்போனார்கள். உமாதேவியார்பயந்து சிவபிரானுக்கறிவிக்குமாறு விரைந்துசென்றனர். ஆயினும் முன்னொருபோது நரசிம்மத்தைத்தாக்கிய எணடோட்சரபத்தினுடைய குமாரராகியகணேசமூர்த்திமாத்திரமஞ்சாமல், நேடுகவளர்ந்து, அவ்வவுணச்சரபத்தினுடைய கால்களைப்பற்றியிழுத்து, ஓர்பெரியபாறையின்மீது மோதிக்கொன்றனர். அதைக்கண்ட முனிவர்களெல்லாமாச்சரியங்கொண்டு,இவர் தந்தை முன்னர், சிங்கத்தைவெல்லுவதற்குச்சிம்புளுருக்கொண்டனர், இப்போதிவர் அச்சிம்புளையே கொன்றமையால் இவரைச்சிம்புட்சிம்புளெனச்சொல்லத்தகுமெனத்துதித்துப்பணிந்தார்கள். பன்னிரண்டாந்திங்களில் வீமாசுரனென்பவன் ஓர்விசுவகன்மாவாகவுருவெடுத்துச்,சலாசுரன்- சிலாசுரன்- என்னுமிருவரைஇரண்டுசிலம்புகளாக்கிக்கொண்டுவந்து, கணேசமூர்த்தியினுடைய திருவடிக்குமுன்னேவைத்துப்பணிந்தான். சர்வஞ்ஞமூர்த்தியாகியஎமதையன் அவ்வஞ்சகத்தையறியாதவர்போலத்தமதுமனத்தில்வேறொன்றைத்தைவகித்து, அவனோடுஇனியவார்த்தைகளாடிமகிழ்வித்து, அச்சிலம்புகளையெடுத்துத் தமதுதிருவடிகளிலணிந்துகொண்டுநிருத்தமாடினர், இவ்வாறு கணேசமூர்த்திநிருத்தமாடலும் பூதங்கள்- புவனங்கள்-மலைகள்- கடல்கள்-உயிர்த்தொகைகள்-வேதாகமபுராணங்கள்-முதலானவைகளோடு, பிரமர்கள்- விண்டுக்கள்- உருத்திரர்கள்- முப்பத்துமுக்கோடிதேவர்கள்- நாற்பத்தெண்ணாயிரமுனிவர்கள்- கருடர்- கின்னரர்- கிம்புருடர் சித்தர்-வித்தியாதரர்-பூதர்- பைசாசர்- ஆகாயவாசிகள்- போகபூமியர்-முதலாயுள்ளசகலரும்ஆடினார்கள். சிலம்புகளாயிருந்தஇரண்டசுரர்களும் அந்நிருத்தத்தைச்சகிக்கமாட்டாது, தங்களாண்மையனைத்துங்குன்றிமிகவும்வருந்தினார்கள், அப்போது கணேசமூர்த்தியானவர் தமதுபாதங்களைவீசிஉதறினர், உடனே அச்சிலம்புகள் சுவாமிபாதங்களினின்றுநீங்கிவீ

மாசுரன்பேரில் விழுந்துபுரட்டிக்கொன்றன. பின்னர் அச்சிலம்புகளாய் வந்த இரண்டசுரர்களுந் தங்கள் சுயரூபத்தோடு மலைபோல விழுந்திறந் தார்கள். இப்படி அம்மூவருமிறந்தமையைமுனிவர்கள்கண்டு சந்தோஷி த்து, வேதச்சிலம்பைத் திருவடிகளிலணிந்து, மேருச்சிலம்பைவில்லாக வளைத்துக்கரத்திலேந்திய சிவகுமாரனுக்கு, இம்மாயச்சிலம்புகளைமாய்ப் பதோ'அரிதென்றுபணிந்து துதிசெய்தார்கள். அப்பனிரண்டாந்திங்களி ல் மற்றொருநாள் சமர்த்திறத்திற்சிறந்த ஆவிசனென்னும் பெயரினையு டையஅவுணனனவன், ஓர்மதயானையைப்போல வுருக்கொண்டு, திசை களைககாவல் கொண்டிருக்கின்ற ஐராவதமுலிய யானைகளுந் கண்டஞ் சும்படி அட்டகுலாசலங்களையும் பிளந்து, சிலமுனிச்சிறுர்களோடு க ணேசமூர்த்தி விளையாடல்செய்திருக்கின்ற வனத்தில்வந்தனன். அந் தயானைபின்வரவைக்கண்டவுடன் முனிச்சிறுர்களெல்லாம் பயந்தோ டத்தலைப்பட்டனர். அவர்கட்கு முன்னொருபோது உமாதேவியுங்கண் டுடுங்கும்படியாக வந்த ஓர் மதயானையைத்தமக்காடையாக உரித்துப் போர்த்தருளியசிவபிரான் குமாரராகிய கணேசமூர்த்தி அஞ்சாதீர்க ளென்றுகையமர்த்தி, அந்தயானையினெதிரிற் சிங்கவேறுபோலப்பாய்ந் து, தமதுகரத்திலேந்திய அங்குசப்படையினல் அதன்கவுளிற்புடை த்து, மும்மதங்களும் அருவிபோலப்பாயும்படியாக இரண்டுமருப்புக ளைக்கரத்தாற்பற்றிப், பிடரியின்மீதேறி, அதனதுகழுத்தடியிற் றமதுகா ற்பெருவிரலினையூன்றி, மேகங்களைப்போலப் பிளிறிட்டோடும்படியாக வலித்து, அதனதுவலியெல்லாங்குன்றும்படி அஷ்டதிசைகளினுங் கடா வி, மீட்டுந் தாமிருந்தவனத்தில் வந்திறங்கினர். உடனே அந்தயானையா னது இடியேற்றினைப்போலக் குரல்காட்டி. நிலத்தில்வீழ்ந்திறந்தது. இ ரண்டாமாண்டில் கூடாசுரனென்பவன் கணேசமூர்த்தி விளையாடல செய்திருக்கின்ற வனத்திலுள்ள ஓர் தடாகத்தில் ஆலகாலமு மஞ்சும் படியான கொடியவிடங்களைக்கலந்து, ஆகாயத்தில் தனதுருவைமறைத் துப்பார்த்திருந்தனன். அப்போது அத்தடாகத்திற் படிந்துவருங்காற்றி னல் அவ்வனத்திலுள்ள விருக்கங்களெல்லாந்தீய்ந்து, விளையாடல் செ ய்திருந்த முனிச்சிறுர்களெல்லா மாய்ந்தனர். அதைக்கணேசமூர்த்தி ய றிந்து, தமதுகிருபா நோக்கத்தால் அத்தடாகத்தைப் பார்த்தருளினர். உடனே அத்தடாகத்திற்கலந்த விடமெல்லாம் அமிர்தமாகி, அதிற்ப டிந்துவந்தகாற்றினல் விருக்கங்களெல்லாந்தளிர்த்து, முனிச்சிறுர்களெ ல்லாந் துயில்விட்டவர்கள்போல வெழுந்திருந்தார்கள். பின்னர் காமத கனராகிய சிவபிரானுடையகுமாரர் தமது நெற்றி விழியினல் ஆகாய த்தைப்பார்த்தனர். உடனே அவ்வாகாயத்தில்மறைந்திருந்தகூடாசுரன் வெந்து நீறுயினன். மூன்ருமாண்டில்அவ்வனத்திற்கு இருபதுயோசனை தூரத்திலிருக்கின்ற மற்றொருவனத்தில் கணேசமூர்த்தியானவர் சிலமு னிச்சிறுர்களோடுஞ்சென்று, அங்கிருந்தவோர்தடாகத்தில் ஸ்நானஞ் செய்து, அதிற்படர்ந்திருக்கின்றபுட்பங்களைக் கொய்துவிளையாடல் செய் திருந்தனர். அப்போது விகிர்தாசுரனென்பவன் மகரமீனுகவுருக்கொண் டு, அத்தடாகத்தில்வந்து அலைத்தனன். அதை முன்னொருபோது கட லிற்கிடந்த விண்டுவாகியமகரத்தைவலைவிட்டுப்பிடித்த சிவபிரான்குமார

ராகிய கணேசமூர்த்தியறிந்து, உடனே அதனை இறுகப்பிடித்துக் கனையிலெறிந்தனர். பின்னர் அவ்வவுணன் தனதுசுயரூபத்தோடு விழுந்துஇறந்தனன். இப்பால் கணேசமூர்த்தியானவர் அவ்வனத்தினின்றுநீங்கித் தமதாசிரமத்தைநோக்கிவருகையில் இடும்பாசுரனென்பவன் வழியில் ஓர்பர்வதவுருவங்கொண்டு, ஆகாயத்தைஊடுருவவளர்ந்து, அட்டதிசைகளையும் விழுங்கிப்பரந்துநின்றனன். அதைக்கணேசமூர்த்திகண்டு நெடுமூச்செறிந்தனர். உடனே அம்மலையானது சண்டமாருதத்திலகப்பட்ட பஞ்சுபோலப்பிளந்து தூள்பொடியாகப்பறந்தது. அவ்வற்புதத்தை முனிச்சிறுர்கள்கண்டு, இவர்தம்பியாகிய சுப்பிரமணியதேவர் முன்னொருபோது சகலமாயையினும் வல்லகிரவுஞ்சகிரியைத் தமது வேலாயுதத்தாற்றுளைத்துப் பொடிபடுத்தினரென்றால், இவர் இம்மலையை வென்றதும் ஓர்வியப்போவென்று சந்தோஷித்தார்கள். நான்காமாண்டில் ஓர்நாள் உமாதேவியார் ஸ்நானஞ்செய்து சிவலிங்கபூசை நடாத்திக்கொண்டிருக்கின்ற சமயத்தில், வீதியில் விளையாடல்செய்திருந்த விநாயகமூர்த்தியானவர் ஓடிவந்து, அம்மனிடத்திற்பாலுண்ணுமாறு அடுத்தனர். அப்போது உமாதேவியார் அவரைச்சிவலிங்கபூசை நிறைவேறுகின்றவரையில் நீ அருகில்வராதேயென்று தடுத்தனர். பின்னர் தடுத்தற்குரியதலைமைபெற்றகாரியத்தைத்தாமே அவருக்கறிவிப்பார்போல, அவர்மனதிற்பாவனைசெய்திருந்தவடிவமேதாமாகி, ஐந்துமுகங்களுங்காளகண்டமும்பத்துகரங்களும் ஏனைய அவயவங்களுந் தோன்றும்படி சதாசிவமூர்த்திவடிவாகநின்றனர், அவ்வடிவத்தை உமாதேவியார் கண்டமாத்திரத்தில் அன்புமச்சமுங்கொண்டு, சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, சுவாமி-அடியேன்செய்தபிழையினைப் பொறுத்தருளல்வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அப்போது தமது தாயினுடைய மனக்குறைவைக்கணேசமூர்த்திபார்த்து, அன்னையே- இன்று முதல் யான்வேண்டும்போதெல்லாந் தடுக்காமல் எனக்குப்பால்கொடுத்துவருகின்றீராவென்று புன்னகையோடுங்கேட்டு, மீட்டும் அவர்மடித்தலத்திற் குழந்தையாகிப் பாலுண்டிருந்தனர். அச்சமயத்தில் கருத்தமாசுரனென்பவன் காருடவித்தையில் வல்லவன்போல உருவெடுத்து, உமாதேவியாரெதிரில்வந்து, அங்கு விளையாடிக்கொண்டிருந்த முனிச்சிறுர்களையெல்லாம் எடுத்துவிழுங்கியும், மீட்டுமவர்கட்கு வருத்தமுண்டாகாதபடிச்சிலரைத் தனது காதுகளினாலும், சிலரைவிழிகளினாலும், சிலரைநாசிகளினாலும், வெளிப்படுத்தி, மீளவும் அக்காது விழி நாசி இவைகளின் வழியாக உள்ளே புகவிட்டும், பின்னரவர்களையெல்லாம் வாயின்வழியாக உமிழ்ந்துகாட்டியும், இவ்வாறு அளவற்ற விஞ்சைகளை நடாத்திவருகின்றவன், இதோ இவனையும் விழுங்கியுமிழ்கின்றேன்பார்மின்களென்றுசொல்லி உமாதேவியார் மடித்தலத்திற்பாலுண்டிருந்த கணேசமூர்த்தியை யெடுத்துவிழுங்கி, மீட்டும் உமிழாமல் சரேலென்றெழுந்தனன். அப்போது எமதையன் உமாதேவியார் திருமுகத்தினின்றுந்தோன்றி, அவ்வசுரனைக்கன்னத்திற்புடைத்துக்கொன்றனர். அவ்வற்புதத்தைக்கண்டமுனிவர்களெல்லாம் ஆனந்தமடைந்து, அண்டகோடிகளையெல்லாந் தமதகட்டினுள்ளடக்கி ஆதரிக்கவல்ல கடவுள் ஓர் தானவனுடைய வகட்டுள்ளடங்கு

மோவென்று துதிசெய்தார்கள். உமாதேவியாரும் தமதுகவலையையொ ழிந்து முகமலர்ந்திருந்தனர். ஐந்தாமாண்டில் கடகாசுரனென்பவன் ஓர் கட்டகமாகவுருக்கொண்டுவந்தனன். அதைக்கணேசமூர்த்தியறிந்து, அவன் ஒருகாவததூரத்தில்வரும்போதே வீட்டினின்றும் வெளிப்பட்டுச் சென்றுகொன்றுவிட்டனர். அவ்வைந்தாமாண்டில் மற்றொருநாள்சாயை பிடிப்பதில்வல்லவனான சாயாசுரனென்பவன், கணேசமூர்த்தியினுடைய சாயையைப்பற்றவந்தனன். அதை எமது கர்த்தன் அறிந்து அவனைஉறு ந்துப்பார்த்தனர். உடனே அழலிற்பட்டபஞ்சுபோலமாய்ந்து சாம்பரா யினன். மற்றொருநாள் சஞ்சலாசுரனென்பவன் முனிச்சிறுர்களோடுந் தானுமோர்முனிச்சிறுனுகி, கணேசமூர்த்தியோடுபந்தாடவந்தனன். அதை எமதையனறிந்து, அவ்வாட்டத்தினுலெயே அவன் வலியனைத்துங் குன்றிதோல்வியுறச்செய்தனர். பின்னரவ்வவுணன்வென்கொடுத்துஆகா யத்திலெழுந்தனன். அவனேடுவிநாயகமூர்த்தியுமெழுந்துபோராடிக்கொ ன்றுவிட்டுமீண்டனர். மற்றொருநாள்கணேசமூர்த்தியானவர் முனிவர்க ளுடைய மாளிகைதோறும்ஏககாலத்திறசென்று பலகுறும்புகளைச்செய் து விளையாடினர். அதற்கு அம்முனிவர் பத்தினிகள்கோபித்துப்பிடித்து க்கொண்டுசென்று, உமாதேவியாரிடத்தில்முறையிட்டு,அவரால் அவரை ச்சிறையிலிட்டுமீண்டனர். அவர்கள் மீண்டு தங்கள் மனைகளில் நுழைவ தன்முன் மீட்டுமுன்போலவே அவ்வவர்கண்மனையின்கணிருந்து, பலகு றும்புகளைநடாத்திவிளையாடல்செய்தனர். அதைஅம்முனிவர்பத்தினிகள் கண்டு அச்சமுற்று, ஈதென்ன அற்புதமென்று அதிசயித்து, சுவாமி-ஏ கமாகியும், அநேகமாகியும், எங்குமாகியும், போகமாகியும், யோகமாகி யுமிருக்கின்ற புண்ணியமூர்த்தியாகிய தேவரீருடைய மகத்துவத்தை மோகத்தில்மூழ்கியிருக்கின்ற அடியேங்கள் இன்றறிந்தனம், இனி அடி யேங்கள்செய்யும் பூசனைகளைக்கைக்கொண்டு காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து, அவ்வவர்கண்மனைகடோறும் அவருக்குப் பூசனைசெய்து, அப்பம்- மோதகம்- முதலாகிய சிற்றுண்டிகளைவைத்துநிவேதித்தார்கள் அதற்கு ஒப்பற்ற கணேசமூர்த்தியானவர் மனமகிழ்ந்து, இச்சிற்றுண் டிகளை உங்கள்சிறுவர்கட்குக்கொடுத்து உண்ணச்செய்மின்கள், அதனு ல் நமக்குத்திருப்தியாகுமென்று திருவாய்மலர்ந்தனர். அன்றுமுதல் க ணேசமூர்த்திக்குநிவேதித்த சிற்றுண்டிகளைத்தங்கடங்கள் சிறுர்களுக்குக் கொடுத்துவந்தார்கள். அதுபோலவேஇக்காலத்தினும் யாவரும் விநாயக மூர்த்திக்கு நிவேதிக்குஞ் சிற்றுண்டிகளைத் தங்கடங்கள் சிறுவர்கட்குக் கொடுத்துவருகின்றுர்கள். ஆறுமாண்டில் ஓர்விஸ்வகன்மனுனவன் பரசு- காமரைமலர்- பாசம்- அங்குசம்- என்னுமிவைகளைச் செய்துகொண்டு வந்து, சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்தெழுந்து,பின்னரவ் வாயுதங்களைக் கணேசமூர்த்தியினுடையதிருவடிக்கு முன்னேவைத்துவ ணங்கினுன். அவனைக்கணேசமூர்த்திநோக்கி, இவ்வாயுதங்கள்யாவென் றுவினவினர். அதற்கவன் மீட்டும்பணிந்தெழுந்து, சுவாமி- அடியேன் புதல்வியாகியசமுஞையென்பவளைச் சூரியனுக்கு விவாகஞ்செய்துகொ டுத்தேன், அவள் அவனது சரீரவெம்மையை யாற்றமாட்டாது, தனது சாயையைத்தன்னைப்போலவடிவாக்கிவைத்து, மீட்டுமென்மனையின்கண்

வந்திருந்தனள், அவள்பின்னேடே சூரியனுந்தேடிவந்தனன், அப்போதவள்பயந்து, ஓர்பெண்குதிரையாகவுருக்கொண்டுவனத்திற்சென்றனன், அதற்குமேல் எனது மனக்கண்வந்திருந்த சூரியனுடையஉருவத்தை ஆயுதத்தினுற்கடைந்தேன், பின்னரவன்சாந்தமாகித், தானுமோராண்குதிரையாகவுருக்கொண்டு, வனத்திற்பெண்குதிரையாகத்திரிகின்ற தனதுபத்நினியைச்சேர்ந்தனன். அப்போது அவர்களிடத்தினின்றும் அச்சுவினிதேவர்கள்பிறந்தார்கள், பின்னரிருவருந் தங்கட்ங்கள் சுயவடிவைக்கொண்டுவாழ்ந்திருந்தார்கள். சூரியனைக்கடைந்தபோ துதிர்ந்தபொடிகளால் ஓர்சூலாயுதத்தையும் இவ்வாயுதங்களையுஞ்செய்தேன், சூலாயுதத்தைச் சிவபிரானுக்குக்கொடுத்தேன், மற்ற இந்தநான்கையும் மூலகாரணமாகிய தேவரீருடைய திருவடிக்கண்வைத்தேன், அடியேன் கிருதார்த்தனுகுமாறு சுவாமிகள்அவைகளைத்தரித்தருளல்வேண்டுமென்றுபிரார்த்தித்தனன். அதன்மீது கணேசமூர்த்திகிருபைசுரந்து, அன்பனே-உலகத்திலுள்ளவர்கட்கு உபகாரஞ்செய்யும்பொருட்டு இவைகளையாம் அங்கீகரித்தனமென்றெடுத்துத் தரித்துக்கொண்டு, அவனுக்கு அளவற்றவரங்களைக்கொடுத்தருளினர். பின்னர் விஸ்வகன்மன் பெருமகிழ்ச்சியோடு சுவாமியிடத்தினின்றும் விடைபெற்றுத், தனது யதாஸ்தானத்தை யடைந்தனன். அத்தினம் விருகாசுரனென்பவன் செந்நாயாகவுருக்கொண்டு, கணேசமூர்த்திக்கெதிரேவந்தான். உடனே தாம் தரித்தருளிய ஆயுதங்களைப்பரீக்ஷிப்பவர்போல அதன்மீது அங்குசத்தையெறிந்து சங்கரித்தருளினர். ஏழாமாண்டில் காசிபமுனிவரும் அவர்பத்தினியாகிய அதிதியும்வந்து கணேசமூர்த்தியைப் பலமுறைபணிந்து சிறந்தவரங்களைப்பெற்றுச்சென்றனர். அத்தினத்தில் கிருதாந்தனென்றுங் காலனென்றுஞ்சொல்லுகின்ற இரண்டசுரர்கள் ஆளியாகவுருக்கொண்டு, கணேசமூர்த்திக்கெதிரேவந்தார்கள். அவர்கள்துதிக்கரத்தைசுவாமிகள்பிடித்து, முன்னும் பின்னுமாகவிழுத்து, ஒன்றோடொன்று முட்டவிட்டு மாய்த்தனர். கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே, இவ்வாறு தம்மைக்கொல்லவந்த துட்டர்களையெல்லாந் தாமேகொன்ற விநாயகமூர்த்தியானவர் எட்டாமாண்டில் மயில்வாகனத்தையூர்ந்தருளிய திருவிளையாடலைச்சொல்லுவோங்கேட்பீராக. கசியபந்தமுனிவருடைய மனைவிகள் பதின்மூவருள், வினதையென்பவள் மணைக்குக் கத்துருவென்பவள்சென்றாள். முன்னொருபோது இக்கத்துருவென்பவள் வினதையை வஞ்சகத்தினால் கொடியசிறையில்வைத்தவளாதலால், அதை அவ்வினதையானவள் தன்மனதிலெண்ணி, அவள்வரவைக்கண்டுங் காணுதவள்போலவிருந்தனள். அவள் புதல்வனுகிய சடாயுவென்பவனுந் தனது தாயினுடைய உட்கோளை முன்னரோயறிந்திருக்கின்றவனுதலால், அவளுக்குமாற்றாளாகிய கத்துருவினுடைய கூந்தலையும் மேல்வத்திரத்தையும்பிடித்திழுத்து வீதியிற்றள்ளி, எனது தாயைநெடுங்காலங்கொடிய சிறைக்கண்வைத்திருந்தமகாபாவி, இன்னும் என்செய்வதற்கு இங்ஙனம் வந்தனைபோபோவென்றுதுரத்திவிட்டான். அதன்மீது கத்துருவென்பவள் மிகுந்த அவமானத்தால் முகம்வாடித், தனது புத்திரர்களாகிய நாகர்கள்வாழ்கின்ற பாதலலோகத்திற்சென்றனள். அவள்வாட்டமுகத்தோடு மிகங்கிலேசத்

தினையடைந்துவருவதை நாகராசனாகிய ஆதிசேடன்பார்த்து, மிகுந்த பயபத்தியுடனே யெதிர்சென்றுபணிந்து, தாயே- தேவர்கள் அசுரர்கள் முதலான ஆன்மகோடிகளைச்சிருட்டிக்கவல்ல காசிபமுனிவருடைய பிரியமுள்ள பத்தினியாகியும், மூவுலகைத்தாங்கும் அடியேனையுள்ளிட்ட நாகராசர்களைப்பெற்றதாயாகியும் இருக்கின்றதேவரீர், இப்போது மிகுந்தமனவருத்தத்துடனே முகம்வாடித்தனியாயிங்குவருவதற்குக்காரணம்யாதென்றுகேட்டனன். அதைக்கேட்டலுங் கத்துருவென்பவள் கலங்கியழுது, மைந்தனே- யான் எனது மாற்றாளாகிய வினதையிடத்திற்சென்றேன், அவள் என்னைக்கண்டுங்காணாதவள்போலவிருந்தனள், அதன்மீது அவள்புத்திரனான சடாயுவென்பவன் என்னைத்துன்பப்படுத்தினன், ஆதலால்- தாயென்று சிறிதுமதியாமல் என்னைத்துன்பப்படுத்திய அச்சடாயுவையாவரும் அவமதிக்கும்படி நீ இங்கேசிறையில் வைப்பையாயின், இனியானுயிரோடும் வாழாநிற்பேன், இல்லையேல் இந்நிமிஷத்தில் என்னுயிரைமாய்க்க வல்லேனென்றுசொல்லினள். அதைக்கேட்டமாத்திரத்தில் ஆதிசேடனானவன் அத்தியந்தகோபங்கொண்டு,இந்நிமிஷத்தில் அச்சடாயுவினுடைய உயிரைவாங்குகின்றேனென்று ஆலகாலத்தைபோலச் சீறியெழுந்தான். அப்போதுவாசுகி- அனந்தன்- தக்கன்- சங்கபாலன்- குளிகன்- பதுமன்- மகாபதுமன்- கார்க்கோடகன்- என்னும் அஷ்டநாகர்களும் ஆதிசேடனைப்பணிந்தெழுந்து, கர்த்தனே- தேவரீர்செல்கின்றவேலைக்கு யாங்கள் செல்லவல்லோமென்றுவிடைபெற்று, அளவற்றநாகசேனைகளுடன் பிலவழியாகப் பூலோகத்தில்வந்து, வினதைவசித்திருக்குமாளிகையையடைந்தனர். அதை அவள்புத்திராகிய சடாயு- சம்பாகி- சேனன்- என்னு மூன்று பட்சிராசர்களுங்கண்டு, நாகராசர்களின்மீதுபாய்ந்து, அவர்களையெல்லாஞ் சிறகுகளினாலேயடித்தும், மூக்கினாலேகுத்தியும், நகங்களினாலேகீறியும், சின்னபின்னப்படுத்தினர். அப்போது சிலநாகர்கள் அஞ்சிப்பிலவழியாகப் பாதலத்தில் ஓடிப்போனார்கள். அதைவாசுகிமுதலிய எண்மருங்கண்டு, அணைகடந்த கோபத்தினராகி, அளவற்றயுத்தங்களைச்செய்து, அம்மூன்றுபக்ஷிராசர்களையுங்கைப்பிடியாகப்பிடித்துத், தமதுபாதலலோகத்திற் கொண்டுசென்று, அவர்களை அகலற்கரிய அருஞ்சிறையில்வைத்துத் துன்பஞ்செய்தார்கள். அதைக்கண்டகத்துருவானந்தமாயினள். இப்பால் வினதையானவள் மிகுந்ததுயரமடைந்து, தனதுகாதலராகிய காசிபமுனிவரிடத்திற்சென்று பணிந்தெழுந்து, நடந்தசெய்திகளனைத்தையும் விவரமாகக்கூறி, சுவாமி- எனதருமைப்புதல்வர்களுடைய சிறையினைவிடுவிப்பதற்கு இன்னும் ஓர் பராக்கிரமமுடையபுத்திரன் அடியாட்குண்டாகும்படி கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதைக்காசிபமுனிவர்கேட்டு, பெண்ணே- நீயொன்றற்கும் அஞ்சலே, சிறைபட்டிருக்கின்ற வுனது புத்திரர்களை மீட்பதற்கு யாம் உன்னுடனேகூடி, உனதுவயிற்றில் ஓர்முட்டையையுண்டாககுகின்றோம். அம்முட்டைகணேசமூர்த்தியாலன்றிமற்றையாவராலும்உடைக்கமுடிவதன்று, அஃது அக்கணேசமூர்த்தியால்உடைபட்டவுடன்அதினின்றும் ஓர்மயிலுண்டாகும். பின்னர்-அம்மயிலின்மீது அக்கணேசமூர்த்திஏறிச்செலுத்தி, உன்து புத்திரர்களுடை

யசிறையைநீக்கியருளுவனென்றுசொல்லி, வினதையோடுங்கூடினர். உடனே அவளகட்டினின்றும் ஓர்முட்டை வெளிப்பட்டது. அம்முட்டையைவினதையானவள் நாள்தோறும் அன்போடு பாதுகாத்துவந்தனள். இவ்வாறுபாதுகாத்துவருகின்றநாளையில், ஓர்நாள்கணேசமூர்த்தியானவர் சிலமுனிச்சிறுர்களோடுங்கூடி வனத்திற்சென்று விளையாடல்செய்திருக்கையில், கறுத்தநிறத்தினையுடைய கிஷ்ணுசுரனென்னும் ஓரவுணனுனவன், ஒருதலையும் இரண்டுசிறகும்- மூன்றுமுகமும்- நான்குசெவியும்- ஐந்துமருப்பும்- ஆறுதோகையும்- ஏழுகண்ணும்- எட்டுக்காலும்- உடைய ஓர்பக்ஷிரூபங்கொண்டு, அவ்வனத்தில்வந்து, சற்றேநடக்கிறதும் சற்றேயிருக்கிறதும் சற்றேபடுக்கிறதும் சற்றேபயந்து ஓடுகிறதுமாக உல்லாஸல்செய்திருந்தனன். அதை அங்குவிளையாடிக்கொண்டிருந்த முனிச்சிறுர்கள்கண்டு, இதோவொரு அதிசயமானபட்சி உலாவிக்கொண்டிருக்கின்றதென்று கணேசமூர்த்திக்கறிவித்தார்கள். அதைக்கணேசமூர்த்திகண்டு, உடனே அதனைப்பிடிக்கப்போயினர். அவரோடு அம்முனிச்சிறுர்களுஞ்சென்ருர்கள். அப்போது அப்பட்சியாகிய அசுரன் அவர்கையில் அகப்படுவதுபோல விருப்பதும், நெருங்கநெருங்கத் தூரத்திலகல்வதும், மீட்டு நிற்பதும்போவதுமாக, அளவற்ற காடுகளையும் மலைகளையுங்கடந்துபோயினன். பின்னர் கணேசமூர்த்தியும் அவனைவிடாமற்றொடர்ந்துபோயினர். இவ்வாறு தொடர்ந்துபோகப்போக அவ்வசுரன் தமதுகையிலகப்படாமற் போகலும், கணேசமூர்த்தி அதிககோபங்கொண்டு பாசத்தை ஏவினர். உடனே அவன் தனது சுயரூபத்தோடும் வீழ்ந்திறந்தனன். முனிச்சிறுர்களெல்லாம் அவனைத் தமதுகைகளினலறைந்துங், கால்களினலுதைத்தும், அவ்வவர்கள்கோபத்தைத்தணித்துக்கொண்டார்கள். இப்பால் அதற்குச்சமீபத்தில் வசித்திருந்தவினதையென்பவள் அச்செய்திகளையறிந்து, கணேசமூர்த்தியே இங்ஙனம் எழுந்தருளினரென்றுதேர்ந்து, தான்பயந்த முட்டையைக்கொண்டுவந்து, சுவாமிக்கெதிரில்வைத்துப்பணிந்துநின்றனள். சுவாமியும் அவளது அபிப்பிராயத்தையறிந்து, தமது நகத்தினல் அம்முட்டையைக்கீறினர். உடனே அதினின்றும் ஓர்மயிலானது ஆகாயத்தையளாவிய ஓர்பர்வதத்தைப்போல வெளிப்பட்டது. அதைக்கணேசமூர்த்திகிருபையோடும் பார்த்தருளி அவுணர்குலங்கள் நாசமடையவுந் தேவர்குலங்கள்செழித்தோங்கவுமாக அதன்முதுகிலாரோகணித்து, அதன்தாயாகிய வினதையின்முகத்தைப்பார்த்து, ஓமாதராய்- உனக்குவேண்டிய வரங்களைக்கேளென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கவள் மீட்டும்பணிந்தெழுந்து, சுவாமி- பாதலலோகத்திற்சிறைபட்டிருக்கின்ற அடியாளுடைய மைந்தர்களைவிடுவித்து, சுவாமிகள் திருவடியிலெக்காலத்தும் மாருதபத்தியினை அடியாட்குக்கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்குக்கணேசமூர்த்தி அவ்வாறே அவள்கேட்டவரங்களைக்கொடுத்தருளி, சகலமுனிவர்களும் புடைசூழ்ந்து துதிக்கும்படியாக அம்மயில்வாகனத்தோடும் ஆசிரமத்திற்குவந்து, சிவபிரானையும் உமாதேவியாரையும்பணிந்து பழையபடிவீற்றிருந்தனர். அன்றுமுதல்யாவரும் கணேசமூர்த்திக்குமயூரேசரென்னுந் திருநாமஞ்சாற்றித்துதித்தனர். ஓசவுனகாதிமுனிவர்களே- இன்னும் அத்தி

ருநாமத்தையாவரேனுந்துதிசெய்வார்களாயின், அவர்கள் சகலவிட்டர்களி னின்று நீங்கி மேலானநன்மைகளைப்பெறுவார்களென்பதற்குச் சந்தேக மில்லை, இதுசத்தியமென்று நம்பக்கட்வீர்கள். இப்பால் ஒன்பதாமாண் டில், ஓர்நாள் முன்போலவே சிலமுனிச்சிறுர்களோடு தமதுமயில்வாகன த்தின்மீதேறி, ஐந்துயோசனைதூரத்திலுள்ள ஓர்வனத்திற்சென்று, அங் குமிகுந்தபரிமளத்தைவீசுகின்ற ஓர்மலர்ப்பொய்கையைக்கண்டு, அதில ஸ்நானஞ்செய்தனர். அப்போது அத்தடாகத்தில் சிலநாககன்னியரோ டும் வாசுகியினுடைய புதல்வியானவள் ஸ்நானஞ்செய்யவந்தனள். அவ ள்கணேசமூர்த்தியினுடைய திருவுருவைக்கண்டுமோகித்து, உடனே அ வரருகில்வந்துபணிந்தெழுந்து, என்னையாளவல்லபெருமானே- தேவரீ ருடையபிரதாபத்தை அடியாட்குணர்த்தவேண்டுமென்று புன்னகை யோடும் பிரார்த்தித்தனள். அதற்குக்கணேசமூர்த்தியிசைந்து, ஓமடந ல்லாய்- நம்மையாவரும் மயூரேசரென்றுதுதித்து வேண்டியவரங்களைப் பெறுவார்கள், நாம்சிவபிரானுக்கும் உமாதேவியாருக்கும் உகந்தபுத்திர ருகுமென்றுதிருவாய்மலர்ந்தனர். அதன்மீது அவளும் அடியாள்வாசுகி னுடைய புதல்வியென்றறிவித்து, மீட்டும் பணிந்தெழுந்து, சுவாமி- தே வரீர் அடியாளுடைய மனையிலெழுந்தருளி, அடியாள்செய்யும் பணிகளை க்கைக்கொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அப்போது முன்னர் வினதைக்குக்கொடுத்திருந்த வரத்தைக்கணேசமூர்த்தி தமது திருவுள்ள த்தில்நினைத்து, அதைவினாவில் முடிப்பதேகருமமென்று தமக்குள் நிச் சயித்து, அவ்வாறே உனது மனைக்குவருகின்றேமென்று திருவாய்மல ர்ந்து, அவளும் அவளோடுவந்த மற்றநாககன்னியரும் புடைசூழும்படி யாகப்பாதலலோகத்திற்சென்றனர். உடனே அவள்கணேசமூர்த்தியை ஓர்பொற்பீடத்தின்மீதெழுந்தருளச்செய்து, பாங்கியரெல்லாமேவல்செ ய்யும்படியாக சுவாமியைப்பத்தியோடும்பூசித்து, உயர்ந்தவஸ்திராபரண ங்களால் அலங்கரித்துத், தேவாமிர்தத்திற்கிணையான போசனதிரவியங் களைக்கொண்டுவந்து சுவாமிக்கெதிரில்வைத்துநிவேதித்தனள். இவ்வாறு அக்கன்னிகைமிகுந்த பத்தியினற்றமக்குச்செய்த உபசாரங்களைக் கணே சமூர்த்தி அங்கீகரித்து, அவ்விடத்தினின்றுநீங்கி, வாசுகியிருக்கின்ற ச பைக்கெழுந்தருளினர். அப்போது வாசுகி சுவாமியின் வரவைக்கண்டு எழுந்திராமலும்பணியாமலும் உபசாரஞ்செய்யாமலும் இறுமாப்புற்றி ருந்தனன். அதைக்கணேசமூர்த்தியறிந்து, மிகுந்தகோபத்தோடும் அவ னருகிற்சென்று, அவனுடைய சிரோரத்நத்தைப் பறித்துக்கொண்ட னர். உடனே வாசுகிமயங்கிப் பூமியில்வீழ்ந்து மூர்ச்சையாயினன். அவ னைப்புடைசூழந்திருந்த நாகர்களெல்லா மனங்கலங்கி நடுங்கினார்கள். பின்னர்கணேசமூர்த்தியானவர் சம்பாதிமுதலியமூன்று பட்சிராசர்களை யுஞ் சிறையினின்றுநீக்கித் தம்மோடழைத்துச்செல்கின்றபோது, வாசு கிமூர்ச்சைதெளிந்தெழுநது, சுவாமியோடெதிர்க்கவந்தான். வந்தவனை எமதையன் விரலினுலெடுத்துக், கங்கணமாகத்தரித்துக்கொண்டு பூலோ கத்திற்குப்போகும்படித்திருவுளங்கொண்டனர். அதற்குள் அங்குநடந்த அவமானங்களனைத்தையும் ஆதிசேடனறிந்து, மிகுந்தகோபத்தோடு நா கசேனைகளைக்கூட்டிக்கொண்டுவந்து, கணேசமூர்த்தியுடனேயெதிர்த்து

யுத்தஞ்செய்தான். உடனே சுவாமி முன்னர் தாம்பொய்கைக்கரையில் நிறுத்திவந்தமயிலைநினைத்தருளினர். அந்நிமிஷத்தில் அந்த மயிலானது தனது சிறகின்காற்றினால் அளவற்றநாகர்கள் மடியும்படியாகப்பாதலலோகத்தில்வந்து, கணேசமூர்த்தி யருகில்நின்றது. அதன்செவியில் கணேசமூர்த்தியானவர் சிலமந்திரங்களையுபதேசஞ்செய்து, ஓகேகயமே-நீ இந்நிமிடத்தில் நாகசேனைகளையெல்லாமாய்த்து, ஆதிசேடனைப்பிடித்தபிடியிற்கொண்டுவரக்கடவையென்றுஆக்கியாபித்தருளினர். உடனே அம்மயிலானது மிகுந்தகோபாக்கினியைவீசிச்சென்று, சிலநாகங்களை மூக்கினாற்கொத்தியும், சிலநாகங்களைச்சிறகினால்மொத்தியும், சிலநாகங்களைக்கால்நகங்களினாலேதத்தியும் சின்னபின்னப்படக்கொன்று, யுத்தஞ்செய்யநேர்ந்த ஆதிசேடன்மீதுபாய்ந்து, அவன்சரீரநடுவில்வடுப்படக்கொத்திக்கவ்விக்கொண்டு கணேசமூர்த்திக்கெதிரே கொண்டுவந்துவிட்டது. உடனே அவ்வாதிசேடனை எமதுகர்த்தனெடுத்து அரையில் நாணாகத்தரித்தருளினர். முன்னர் பயந்து ஓடியநாகர்களெல்லாம் கணேசமூர்த்தியை வந்துபணிந்தனர். பின்னர் கணேசமூர்த்தியானவர் தந்தையார்ச்சித்ததைத் மைந்தருமார்ச்சித்துவருவது தருமமென்பது போல, சிவபிரானார்ச்சித்தசரப்பாபரணங்களைத் தாமுமார்ச்சிக்கத்திருவுளங்கொண்டவராய்த், தம்மைச்சரண்புகுந்த நாகர்களையெல்லாம் அங்கதம் - குழை - ஆரம் - முதலியவாபரணங்களாகத், தோள்- செவி- மார்பு- முதலியவிடங்களிலணிந்தருளி, வாசுகியின்புதல்விக்கும் ஏனைய நாககன்னியர்க்கும் வேண்டியவரங்களைத்தந்து, சம்பாதிமுதலிய மூன்று பட்சிராசர்களுந் தம்மைப்புடைசூழ்ந்துவரும்படியாகமயில்வாகனத்தைச்செலுத்திக்கொண்டு பூலோகத்தையடைந்தனர். முன்னர்கணேசமூர்த்தி பாதலலோகத்திற் கெழுந்தருளியபோது சுவாமியோடுவிளையாடல் செய்திருந்த முனிச்சிறுார்கள் பின்னர் சுவாமியைக்காணாதவர்களாகி, வனமெங்கணுந்தேடித் திரிந்துகொண்டிருந்தார்கள். அச்சமயத்தில்கோராசுரனென்பவன் சொக்காகவுருக்கொண்டுவந்து, அம்முனிச்சிறுார்களையெல்லாங்கணேசமூர்த்தியினுடைய கூட்டாளிகளென்றறிந்து, அத்தனைபேரையுந் தனது வாயினாலெடுத்தெடுத்துவிழுங்கிக், கணேசமூர்த்தியினுடைய வரவுக்கெதிர்பார்த்திருந்தனன். உடனே அப்பாதகன்பாதலலோகத்தினின்று வெளிக்கொண்டுவரும் எமதையன்வரவைநோக்கித், தனதுவாயைத்திறந்துகொண்டு கணேசமூர்த்தியருகிலவந்தனன். உடனே கணேசமூர்த்தியானவர் தமது பரசாயுதத்தினால் அவனை இரண்டுதுண்டங்களாகவெட்டித், தமது கிருபாநோக்கத்தாற்பார்த்தருளினர். அப்பார்வையால் அவ்வவுணன் வயிற்றுளடங்கியிருந்த முனிச்சிறுார்களெல்லாம் உயிர்பெற்றுத், துயில்விட்டெழுந்தவர்போல முகமலர்ச்சியோடும் வெளிக்கொண்டு, கணேசமூர்த்தியினுடைய் திருவடிகளிற்சென்றுபணிந்தெழுந்து, முன்னொருபோது சகலவண்டங்களையுந் துளங்கக்கொத்திய விண்டுவாகியகொக்கினைச்சினந்தசிவபிரான்குமாரராகிய இவருக்குகுக்கொக்கினைமாய்த்ததும் ஓர்வெற்றியோவென்று துதிசெய்தார்கள். இப்பால்கணேசமூர்த்தியானவர் அம்முனிச்சிறுார்களோடும் அவ்வனத்தினின்று நீங்கிச், சிவபிரானும் உமாதேவியாரு மெழுந்தருளியிருக்கின்ற திருக்கோ

விலையடைந்துபணிந்திருந்தனர். அதற்குமேல் சம்பாதிமுதலியமூன்றுப க்ஷிராசர்களும் கணேசமூர்த்தியினிடத்தில் விடைபெற்றுச்சென்று, தம துதந்தையாகிய காசிபமுனிவரையுந் தாயாகியவினதையையும்பணிந்து, கவலையற்றமனத்தோடுசுகமுற்றிருந்தார்கள். பத்தாமாண்டில் காரளனெ ன்றும் விகாரனென்றுஞ் சொல்லப்பட்ட இரண்டசுரர்கள் காட்டுப ன்றியர்கவுங் காட்டெருமையாகவும் உருக்கொண்டு, கணேசமூர்த்திவி ளையாட்டயருமிடத்தில்வந்து ஆர்ப்பரித்தார்கள். ஆயினும் - முன்னொரு போது மூவுலகத்தையுமளந்தவிண்டுவாகிய பன்றியைக்கடிந்த சிவபிரா னுக்கும், அண்டங்களெல்லா நடுங்கும்படிவந்த ஓரவுணனாகிய வெரு மையைவென்ற உமாதேவியார்க்கும் அருமைப்புதல்வராகியகணேசமூர் த்தியானவர், இக்காட்டுப்பன்றியுங் காட்டெருமையுமாகவந்த அவுணர் மாயைக்கஞ்சுவரோ, உடனே அவ்விருவர்மீதுந் தமது பாசத்தைவிடுத் துமாய்த்து, முன்னர் பிரமனுடைய கமண்டலதீர்த்தத்தினாலுண்டான நதியில் ஸ்நானஞ்செய்தருளினர். அச்சமயத்தில் பராசமுனிவர்வந்து, கணேசமூர்த்தியைப்பணிந்தெழுந்து, அளவற்றவரங்களைப்பெற்றுப்போ யினர். அத்தினமேகாற்கியமுனிவரும்வந்துபணிந்து, தமக்குப்பரமஞா னத்தையுபதேசிக்கும்படி கணேசமூர்த்தியைப்பிரார்த்திக்க, அதற்கு க்கர்த்தன்கிருபைசுரந்து, தமதுமந்திரத்துளடங்கிய பதிபசுபாசங்களி னுண்மையை அவருக்குபதேசஞ்செய்துகொண்டிருந்தனர். அச்சமயத் தில்ஊர்த்தகெஜனென்னும்ஓரவுணன்புலியாகவுருக்கொண்டுவந்து, வெ ளியில்விளையாடல்செய்திருந்த முனிச்சிறுர்களையெல்லாம்பிடித்துத்தின் று, சுவாமியினுடைய சந்நிதியைநோக்கிச்சென்றான். அதைமுன்னர் அ கிலமுழுவதுநடுங்கும்படிவந்தபுலியை உகிரினால் வகிர்ந்தருளியசிவபிரா னுடைய குமாரர்கண்டு, அவனுடைய நாசியையுஞ் செவிகளையுமறுத் தெறிந்து, பற்களையுதிர்த்து, இதை உன்னையேவியதலைவனுக்கு அறிவி க்கக்கடவையென்றுவிடுத்துத், தாம்மயில்வாகனத்தின்மீதாரோகணித்து இந்நிமிட்டத்திற்புலியினாலிறந்தவர்களையும் எமனையும் இங்ஙனங்கொண்டு வரக்கடவையென்று தமதுபாசத்திற்காக்கியாபித்தனுப்பினர். அவ்வாக் கினையைச்சிரமேற்கொண்டு அப்பாசமானது அதிகவேகத்துடன்சென்று புலியால்விழுங்கப்பட்ட முனிச்சிறுர்களையெல்லாமழைத்து, யமனை இ றுகக்கட்டிக், கணேசமூர்த்தியினெதிரேகொண்டுவந்துவிட்டது. அப்போ து யமனானவன் கர்த்தனைப்பலமுறைபணிந்தெழுந்து, சுவாமி-அடியே ன் தேவரீர்க்குயாதொரு அபராதமுஞ் செய்ததில்லை, அந்தக்கொடுமை யான அசுரனாற்கொல்லப்பட்ட சிறுவர்கள் எனதுலோகத்திற்குவந்தார் கள், எவ்வகைப்பட்டமேலானதேவர்களாயினும் அவர்களைக்காலமுடிவி ல் சரீரத்தைவிட்டுநீக்கத்தக்கஆதிபத்தியம் அடியேனுக்கிருப்பது தேவ ரீருடையசெயலேயன்றி அடியேற்கோர் சுதந்தரமுண்டோ, ஆதலாற் சுவாமிகள் அடியேனைக்கோபியாது, அடியேன் அறிவின்மையால் தேவ ரீர்க்கு ஏதேனுங்குற்றமிழைத்திருந்தேனாயின் அதனைப்பொறுத்துக்காத் தருளல்வேண்டுமென்று, மீட்டும்வணங்கியிரந்தனன். அதற்குக்கணேச மூர்த்திமனதிரங்கி, அவனைத் தமதுபாசக்கட்டினின்று நீக்கி, ஓகூற்று வே- நீ இன்றுமுதல் நமக்கு அடியாராயுள்ளாரைப்பிடிப்பையேல்உனது

அதிகாரமுஞ் சரீரமும் உடனே அழிவெய்தும், இதனையறிந்து நடந்து கொள்ளக்கடவையென்று திருவாய்மலர்ந்து, அவனுக்கு விடைகொடுத்தனர். உடனே எமனானவன் இன்று உயிர்தப்பிப்பிழைத்தோம்பிழைத்தோமென்று ஓடித்தனது லோகத்தையடைந்தனன். அதற்குமேல்கணேசமூர்த்தியானவர் காற்கியமுனிவருக்கு அத்தத்துவப்பொருள்களைப்பூரணமாகவுபதேசித்து, அளவற்றவரங்களோடும் அவருக்குவிடைகொடுத்துப், பின்னர் தமது அருமைக்குரவர்களையடைந்து வீற்றருளினர். இப்பால் முன்னர் மூக்கையுஞ் செவிகளையும் பற்களையுமிழந்த உளர்த்தகெஜனென்னும் அவுணனானவன் மிக்கமனவருத்தத்துடன் தனதரசனாகிய சிந்துராசனிடத்திற்சென்று, கர்த்தனே- சிவகுமாரனாகிய கணேசனென்பவன் என்னை இவ்வாறு அவமானஞ்செய்தனுப்பினனென்று முறையிட்டான். அச்சமயத்தில் அச்சிந்துராசனுக்குயிர்த்துணையாயிருக்கின்ற சிவதூதர்கள் அவனைப்பணிந்தெழுந்து, ஆண்டவனே- தேவரீர் விடுத்தருளிய அளவற்றபேருந் தினந்தினம் ஒவ்வொருவராய் அனேக மாயைகளைச்செய்துவந்தனர், அவ்வாறுசெய்தும் அக்கணேசனைவெல்லுவதற்குச்சக்தியில்லாமல் அனைவருமாண்டனர், இனிக்காலதாமதஞ்செய்யாமல் நமதுசேனைகளோடுஞ்சென்று அவனைவெல்லுவதே கருமமென்றுசொன்னார்கள். அதற்குமேல் சிந்துராசன் மிகுந்தகோபங்கொண்டு தனதுசிங்காதனத்தைவிட்டிறங்கிச, சகலசேனைகளும்யுத்தத்திற்காயத்தமாயிருக்கும்படி உத்தரவுசெய்தான். அப்போது அமைச்சர்கள் அவனைப்பணிந்தெழுந்து, ஆண்டவனே- இப்போது நமக்குஎன்னதாழ்ச்சிசன் நேர்ந்தனவென்று சிம்மாதனத்தைவிட்டிறங்கினீர், விண்டுவாதிதேவர்கள் தேவரீரிட்டருளிய சிறையிற்கட்டுண்டிருக்கின்றனர், மூன்றுலோகங்களுந்தேவரீருடைய ஆணையிலடங்கியிருக்கின்றன, மேலுங்காட்டில்வசிக்கின்றகணேசனும் நமதுகாவலைக்கடந்துவந்தவனல்லன், ஆயினும் முன்னர் நடந்திருக்கின்றவிசேடங்களால் அவனைச்சத்துருவென்றெண்ணி, இளமைப்பருவத்திற்றானே அவனைக்கொல்லுவதற்கு அளவற்றவீரர்களையனுப்பினோம், அவர்கள் ஒவ்வொருவர் பூமியையும் ஆகாயத்தையும் வெல்லவல்ல பராக்கிரமத்தையும் மகத்துவத்தையுமுடையவர்களாயிருந்தும் அவர்களையெல்லாம் அச்சிறுவன் ஒருவனேதனதுகண்ணினாலும் மூக்கினாலுங் காலினாலுங் கையினாலும் மேலான ஆயுதங்களினாலுமாய்த்துவிட்டனன், அவனோ தானொருவனாகவும் வயதில் அதிகபாலியனாகவுமிருந்தும், பராக்கிரமத்திற் சிறந்தவனாகவிருக்கின்றான், அப்படிப்பட்டவனை வெல்லுவதற்குத்தக்க உபாயத்தையாலோசித்து நடத்தவேண்டுமாதலால், கனலாசுரனென்பவன் சகலமாயையினும்வல்லவன், யுத்தத்தில்யாவராலுஞ் சாகாவரம்பெற்றவன், மேலுந்தேவரீருக்குச்சரியான புசபலபராக்கிரமத்தையுடையவன், அத்தன்மையானவனைச்சகலசேனைகளோடுங்கூட்டி முன்னரனுப்பிவித்து, அவன்செய்யும்யுத்தத்தில் எதிரியால்நடக்குங்காரியங்களைக்கண்டறிந்து, பின்னர் அதற்குமேலானகாரியங்களையாம்யோசித்து நடத்தல்வேண்டுமென்றுசொன்னார்கள். இவ்வாறு அமைச்சர்கள்சொல்லிமுகியுமுன்னஞ் சிந்துராசனானவன் அருகிலிருந்தகனலாசுரனுக்கு ரதகஜதுரகபதாதிகளும் வஸ்திராபரணங்களும்அன

வற்றனவாகக்கொடுத்து, ஓ சுத்தவீரனே- சிவகுமாரனாகியகணேசனென்பவன்வயதிற்சிறியனாயினும் யுத்தத்திற்பெரியவனாய், நம்மவர்களையெல்லாமாய்த்துக்கொண்டு வனத்தில் வசித்திருக்கின்றான், நீஇந்நிமிஷத்தில் அவன்மீது படையெடுத்துச்சென்றுயுத்தஞ்செய்து செயம்பெற்றுவரக்கடவையென்றுசொல்லினன். அதைக்கேட்டகனலாசுரன்இதுகாறும் என்னையனுப்பாதிருந்த காரணமென்ன, இப்பவுமென்ன, அவனைக்கொல்லவோ அல்லதுகைப்பிடியாகப்பிடித்துவரவோவென்றுசொல்லி, மிகுந்த குதுகுலத்துடனே அரமனைக்குவெளியேவந்தனன். உடனே கவனமாய்ப்பாயவல்ல குதிரைகளைப்பூட்டிய அளவற்றரதவீரர்களும், அண்டரண்டபுவனங்களையு நடுங்கச்செய்யவல்ல அநேகங்கஜவீரர்களும்,வாயுவேகத்தினும் விரைவாகச்செல்லவல்ல எண்ணற்றதுரகவீரர்களும்,மிக்கபராக்கிரமத்தோடு நவநவமாய்ப்போர்செய்யவல்ல கணக்கற்றபதாதிவீரர்களு நெருங்கினார்கள். கவிகை கொடி பிச்சமுதலிய சின்னங்கள் ஆகாயவெளியைமறைத்தன. ரணபேரிஜயபேரி வெற்றிச்சங்கமுதலியவாத்தியங்கள் கடலோசையையடக்கின. இவ்விதவாடம்பரங்களோடு பன்னிரண்டக்குரோணிசேனைகள் புடைசூழ்ந்து வரும்படியாகக் கனலாசுரனாலவன் யுத்தசன்னுத்தனாய் நவரத்நரத்தேரிலேறித், திரிசந்திக்ஷேத்திரத்தையடைந்து, நாற்றிசைகளினுந் தனதுசேனைகளால்முத்திக்கையிட்டனன். அதை அங்கிருந்தமுனிவர்கள்கண்டு, சிங்கவேற்றைக்கண்டயானைக்கூட்டம்போலப்பயந்தோடிச், சிவபிரானுடைய திருவடிகளிற்சரணடைந்து, சுவாமி- கமலாசுரனுக்குச்சரியான கனலாசுரனென்பவன் சிந்துராசனுடைய ஏவலாற் படையெடுத்துவந்திருக்கின்றனன், மூவுலகங்களினுந் தீங்குசெய்துவருபவன் இவனேயன்றிவேறில்லை, சுவாமிகள் இப்பாதகனை விரைவிற்சங்கரித்து எளியேங்களைக் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவர்களைச்சிவபெருமான்கிருபையோடும்பார்த்தருளி, ஓ முனிவர்களே- நீங்களவனைக்குறித்து அஞ்சாதீர்களென்றுகையமர்த்தி, மயூரேசரையழைத்துக், கனலாசுரனென்பவன் யுத்தஞ்செய்யவந்தான், அவனைநீசென்று சங்கரித்துவருவாயென்றுசொல்லித், தமது கையிலிருந்த சூலாயுதத்தை அவருக்குக்கொடுத்தருளினார். உடனே மயூரேசர்சிவபிரானையும் உமாதேவியாரையும்பணிந்தெழுந்து, மயில்வாகனத்தின்மீதாரோகணித்து, யுத்தத்திற்குவேண்டிய நால்வகைப்படைகளையுந் தமது மனத்தினால் சிருட்டித்து, அவைகட்குத் தம்மைப்புடைசூழ்ந்துவரக்கட்டளையிட்டு, நாற்றிசைகளினுஞ்சூழ்ந்துமுத்திக்கையிட்டிருக்கின்ற அசுரசேனைகட்குள்ளேபுகுந்தனர். அப்போதுசிவபிரான் உமாதேவியாரோடுந் தமது ரிஷபவாகனத்தின்மீதேறி, பூதகணங்கள் புடைசூழும்படியாக ஆகாயமார்க்கத்தில்வந்து, தமதுபுதல்வர்செய்யும் யுத்தத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இப்பால் பூதசேனைகளும் அவுணசேனைகளுந் கைகலந்துபோர்செய்யும்போது, தேவசேனைகட்கு அதிககோபமுண்டாகி, அவுணசேனைகளையெல்லாம் அதகா அதப்படுத்தினார்கள். அதைக்கனலாசுரன்கண்டுமனந்தாளாமல், தானேமயூரேசருடைய சேனைகளின்மீதுபாய்ந்து, சிலரைவெட்டியுஞ்- சிலரைக்குத்தியும்- சிலரையெறிந்தும்- சிலரைமோதியும்- சிலரைப்பிடித்தும்- சிலரைக்கட்டியு

ம்- சிலனைக்கீழேதள்ளியும்- சிலனைமுறித்தும்- சிலனைக்குட்டியும்-சில னைத்தடிகொண்டடித்தும்- சின்னபின்னப்படுத்தினன். அப்போதுபூதப் படைகளுள் அளவற்றபேர் மாய்ந்துபோனார்கள். அளவற்றகவந்தங்கள் ஆடல்செய்தன. எங்கும் அலகைக்குழாங்கள் நெருங்கிவெற்றிபாடின. இரதவோட்டங்கள்மாறி உதிரவோட்டங்கள்பெருகின.நாய் நரி கழுகு முத லியவைகள் சமர்க்களமெங்குங்கூடி விசயங்கூறின. இவ்வாறு பூதப்ப டைகள் மடிந்துபோனதைமயூரேசர்கண்டு, தமதுவில்லைவளைத்து அள வற்றபாணங்களைத்தொடுத்து, கனலாசுரனுடைய படைக்கலன்களையெ ல்லாம் பொடியாக்கி, அவனுடையதேரையொடித்து, அவன்கவசத்தை யும் அறுத்துத்தள்ளினர். அதற்குமேல் கனலாசுரனென்பவன் ஒருகுதிரை யின்மீதுபாய்ந்தேறி, மிகுந்தவீராவேசத்துடன் நாகாஸ்திரத்தைப் பிர யோகித்தனன். அதைமயூரேசர்கண்டு, தமது வில்லில்கருடாஸ்திரத்தை த்தொடுத்து அதிகவிரைவோடும் பிரயோகித்தனர். அப்பாணம்வெளிப் பட்டவுடனே கனலாசுரன்விடுத்த நாகாஸ்திரத்தைச்சின்னபின்னப்பட வாட்டி, மேலுமேலும் அப்பாதகனெடுத்து விடுகின்றபாணங்களையெல் லாமறுத்து, அவனேறி நடாத்துகின்ற குதிரையைக் கீழேவிழத்தள்ளி, மீட்டுமயூரேசருடைய திருக்கரத்திலமர்ந்திருந்தது. அப்போது கனலா சுரன்திகைத்து, இக்கணேசனை அத்திரசத்திரங்களால் வெல்வது மிகவு மரிதென்றுநினைத்தவனாய், உடனே ஆகாயமார்க்கத்திற்சென்று,திரிலோ கங்களுநடுங்கும்படியாக முறைமுறையாய் அளவற்றமாயைகளைச் செய் திருந்தான். அதைமயூரேசரறிந்து, தமதுகரத்திலேந்தியபாசத்தைவிடு த்தனர். அப்பாசமானது அளவற்ற மாயவடிவங்களைக்கொண்டுசென்று அவன்செய்துவருகின்றமாயைகளையெல்லாமழித்தது.பின்னர்கனலாசுர ன்வாளாயுதத்தோடு ஏகனாய்வந்து சுவாமியையழைத்தான். அப்போது சுவாமியும் ஓர்வாளாயுதத்தையேந்தி, அவன்வீசுதலையெல்லாம்விலக்கி, அவனுடையதோளிலொன்றையறுத்துக்கீழேவீழ்த்தினர். உடனே அறு த்தவழியினின்றும் பெருகியவுதிரத்தில் அவனைப்போல அளவற்றஅவு ணர்களுண்டானார்கள். அதைமயூரேசர்கண்டு, தமதுநெற்றிவிழியைச்சி றிதுவிழித்தருளினர். உடனே உதிரத்தினின்றும் உண்டான அவுணவீர ர்களெல்லாமெரிந்துநீறுனார்கள்.அதைக்கனலாசுரன்பார்த்துக்கோபித்து, மயூரேசர்மீதுருத்திராஸ்திரத்தையெடுத்து மந்திரபூர்வகமாகப்பிரயோகி த்தனன். அந்தருத்திராஸ்த்ர மானது சகலலோகங்களையுமழித்துக்கொ ண்டு ஆகாயமார்க்கத்தில்வர, அதைமயூரேசர்கண்டஞ்சாமல் இங்கேவ ருகவென்றழைத்துத், தமது அம்புபெய்தூணியிலடக்கினர். அப்போது கனலாசுரன் ஆலகாலத்தைப்போலச்சீறித், தண்டாயுதமேந்தி யெதிர்க் கவந்தான். அச்சமயத்தில் மயூரேசர் தமது கரத்திலேந்திய சூலாயுதத் தைநோக்கி, நீ இங்கிமிடத்தில் கனலாசுரனைநீறாக்கி மீளக்கடவையென் றுவிடுத்தனர். அவ்வாறே அச்சூலமானதுசென்று அவனைநீறாக்கி, ஆகா யகங்கையில்ஸ்நானஞ்செய்து, மீட்டு மயூரேசருடைய திருக்கரத்தில மர்ந்தருளியது. உடனே மயூரேசரானவர் வெற்றிமாலைசூடிக்கொண்டு, முன்னர்யுக்தத்தில்மடிந்தபூதசேனைகளையெல்லாமெழுப்பித்தமதிருக்கை யையடைந்தனர். அவரைச்சிவபிரான் மிக்கமகிழ்ச்சியோடு ஆலிங்கன

ஞ்செய்து, அளவற்றவரிசைகளையவருக்களித்தனர். முனிவர்களெல்லா ஞ் சுவாமியைப்பணிந்தெழுந்து, வேண்டியவரங்களைப்பெற்றுத் துயர மற்றிருந்தார்கள். இவ்வாறு மயூரேசர்கனலாசுரனோடு யுத்தஞ்செய்து வெற்றிபெற்றுமுனிவர்களுடைய துன்பங்களைநீக்கி ஆனந்தமுற்றிருக்க இவையிருத்தாந்தங்களையெல்லாஞ் சிலதூதர்கள் வாய்குழற உடல்வெயர்க்கச்சென்று, சிந்துராசனுக்கறிவித்தார்கள். அதைக்கேட்டமாத்திரத்தில் சிந்துராசன் மரம்போலேபிரமித்துநின்று, மனதில்மிகுந்தகிலேசங்கொண்டு, இனிமேல் கனலாசுரனுக்கு நிகரானவீரனைக் காணப்போகின்றோமோவென்றுதுக்கித்து, இனியென்னசெய்யலாமென்றெண்ணி, கணேசனுடைய வல்லமையைப் படையெடுக்காதவண்ணமே அடக்கத்தக்க உபாயம் யாதென்று தனக்குள்ஆராய்ந்து, உலகத்திற்கெல்லாம்உபகாரஞ் செய்துவருகின்ற சகலதேவர்களும் நமதுவசமாயிருத்தலால், இனி அவர்கள் செய்கையைநிறுத்திவிடுவோம், அவ்வாறு நிறுத்துவோமாயின்நமதுசத்துரு எவ்வாறு நிர்வகிக்கவல்லனென்றுநிச்சயித்து, சூரியனைக்கூவி, நீசத்துருவிருக்கின்றவிடத்தில் உனதுகிரணங்களைப் பரப்பவேண்டாமென்றுதிட்டஞ்செய்து, சந்திரனையழைத்து, நீமயில்வாகனத்தையுடையகணேசனிருக்கின்றவனத்திலே உன்னுடையகிரணங்களை வீசாதிருவென்று உத்தரவுபண்ணி, அக்கினியைநோக்கி, நீசிவகுமாரனிருக்கின்றவனத்திலுள்ள உனதுசுவாலைகளையெல்லாம் இங்கேவரவழைக்கக்கடவையென்று ஆக்கியாபித்து, இந்திரனைப்பார்த்து, நீகணேசனிருக்கின்றகாட்டிலே மழைபெய்யவொட்டாமல் மேகங்களைநிறுத்தென்று கட்டளையிட்டு, வருணனைக்கூவி, நீவிநாயகனிருக்கின்ற வனத்திலுள்ள தண்ணீரையெல்லாம் வாங்கிக்கொள்ளென்று உத்தரவுசெய்து, வாயுவையழைத்து, நீஉமாபுத்திரனிருக்கின்றவனத்திலே வீசாமலிருவென்றுஆக்கியாபனைசெய்தனன். பின்னர் இவர்களெல்லாம் அவனுக்குப்பயந்து, அவன்சொன்னவாறெல்லாஞ்செய்துவந்தார்கள். இவ்வாறு சூரியனுஞ் சந்திரனுங்காயாமலும், அக்கினியில்லாமலும், சலமில்லாமலும், வனத்தில் ஒருகாரியமும் நடவாதிருப்பதினால், முனிவர்களெல்லாம் மயூரேசரிடத்தில் வந்துப்பணிந்தெழுந்து, சுவாமி- சூரியன்முதலிய தேவர்களாற்செய்யுந்தொழில்களில் ஒன்றேனு நடவாதிருப்பதினால், அடியேங்கள் யாதொருகருமமுஞ் செய்வதற்கிடமில்லாதிருக்கின்றனவென்று முறையிட்டார்கள். அதைமயூரேசர்கேட்டு, இது சிந்துசெய்தகாரியமல்லவாவென்றெண்ணித், தமது மூன்றுவிழிகளையு நெரித்துப்பார்த்தருளினர். உடனே வலதுவிழியினின்று சூரியனும் வாயுவும் மேகமுந்தோன்றின. இடதுவிழியினின்று சந்திரன்தோன்றிச் சகலமானபயிர்களையும் வளர்த்துவந்தனன். நெற்றிவிழியினின்று அக்கினி முதலானவைகள்தோன்றி எங்கும்பரவியிருந்தன. முனிவர்களெல்லா மானந்தங்கொண்டு நித்தியகன்மாதிகளைக்கிரமப்படி நிறைவேற்றிவந்தார்கள். பின்னர் கணேசமூர்த்தியானவர் சிந்துவோ இவ்வளவு தீங்குகளை நம்மிடத்திற்செய்யவல்லவனென்றுகோபித்துச், சிவபிரானையும் உமாதேவியாரையும்பணிந்து எதிரில்நின்றனர். அக்குறிப்பினைச்சிவபிரானறிந்து, முகமலர்ச்சியோடுங்கணேசமூர்த்தியைப்பார்த்து, மைந்தனே- எல்லாத்தீங்குகளையும் இ

டைவிடாது செய்துவருகின்ற சிந்துவைச்சங்கரித்து, தேவர்களுடைய சிறையினைநீக்கி அவ்வவர்கள்பதவிகளை அவ்வவர்கள் அடையும்படிச் செயயென்றுஉத்தரவுசெய்து, அளவற்றபூதப்படைகளையுங் கணநாதர்களையுந் துணைகூட்டியநுப்பினர். இப்பால்மயூரேசமூர்த்தியானவர் சுப்பிரமணியர்- வீரபத்திரர்-நந்தி- இலம்பகானன்- இரணிசருப்பன்- அரன்- சோமன்- புட்பதந்தன்- பிரமதன்- பிருங்கி- இரக்தலோசனன்- தாவானலன்-பஞ்சானனன்-சங்கன்- விகடன்- சபலன்- சாமளன்- பூதராசன்- முதலானபடைவீரர்களையும், ஏழுகோடிபூதவீரர்களையுந்தந்தை கொடுத்தருளப்பெற்று, மீட்டும் அவர்திருவடிகளில் முறைமைப்படிபணிந்தெழுந்து, கோவிலுக்குவெளியேவந்தனர். உடனேதம்மைச்சுப்பிரமணியர்முதலானவீரர்கள் பூதகணங்களோடும் வந்துபணிந்தார்கள். அவர்கட்கு விநாயகமூர்த்தியானவர்தனித்தனி இரதங்களிலேறிவரக்கட்டளையிட்டு, மயில்வாகனத்தோடும் முனிச்சிறுர்களோடும் மகமேருவைநிகர்த்த மற்றொரு இரதத்தில் தாமாரோகணித்தனா. சில்பூதர்களவெண்சாமரைவீசினார்கள். சிலபூதர்கள் ஆலவட்டமசைத்தார்கள். சிலபூதர்கள் தவளக்கொடைபிடித்தார்கள். சிலபூதர்கள்கட்டியங்கூறினார்கள். பாநுகம்பன தனது ஆயிரம்வாய்களினும் ஆயிரந்தவளச்சங்கினைவைத்து அண்டங்களெல்லா மதிரும்படிமுழக்கினன். இவ்விதவைபவங்களோடு அகிலகாரணராகிய விநாயகப்பெருமான் வழிக்கொண்டு, கொடித்திரள்களினாலும் வாத்தியவோசைகளினாலும் விமானநடைகளினாலும் அளவற்றவனங்களுஞ் சமுத்திரங்களும் மலைகளும் ஒன்றாகக்கூடி வருவதுபோலத்தமது சேனைகளைநடத்திக்கொண்டுசென்றனர். அப்போதுசிந்துராசனுடைய ஏவலினால் இலக்கமசுரர்கள் வழியில்வந்தெதிர்த்தார்கள். அவர்களையெல்லாம் முன்னணியிற்செல்கின்ற சிலபூதர்கள் உதைத்தும், துவைத்தும், நீறாக்கியுஞ்சென்று, கண்டகநகரத்தைச் சமீபித்தனர். உடனே அக்கண்டகநகரத்திற்கு ஒருயோசனைதூரத்தில் மயூரேசமூர்த்தியானவர் சுப்பிரமணியர் முதலானவர்களோடும் மற்றபூதப்படைகளோடுமிறங்கித், தருமசாத்திரவிதிப்படி ஒருதூதனைச்சிந்துராசனிடத்தில் முன்னதாயநுப்பி, இனியேனுந்தேவர்களுடைய சிறையைநீக்கிக்கிரமத்தோடிருக்கும்படிசொல்லுவிப்போம், அதற்கவன் இணங்கானாயின்.உடனே யுத்தமுகத்தில் அவனைச்சங்கரிப்போமென்று தமதுதிருவுளத்தினினைத்தருளி, ஆலோசனைகளிற்சிறந்த புட்பதந்தனைக்கூவி, ஒகிபுணனே-துன்மார்க்கனாகிய சிந்துவினிடத்தில் முன்னதாக ஓர்தூதனையநுப்பிப்பார்ப்போம், அவன் இனியேனும் நன்மார்க்கத்திற்கு வாராவிட்டால் அவனோடியுத்தஞ்செய்துசங்கரிப்போம், ஆதலால் இங்கிருக்கின்ற கணநாதர்கட்குள் தூதுபோகத்தக்கவன் யாவனென்று வினவியருளினர். அதற்கவன்கணேசமூர்த்தியைப்பணிந்தெழுந்து, சுவாமி-தேவரீர்திருவவதாரஞ்செய்தருளிய நாண்முதலாகத்தினந்தோறுந் தேவரீருடைய திருக்கரத்தினாலழிந்த அசுரர்கள் ஆயிரத்தினுமதிகமாகவேயிருப்பார்கள், அவர்களல்லாமல் வீரத்திற்சிறந்தகனலாசுரனும் மேலானயுத்தங்களைச்செய்து மாண்டான், இவையனைத்தையும் அச்சிந்துநாள்தோறுமறிந்திருந்துந் தேவரீருடைய பராக்கிரமத்தை எவ்வளவுந் தெரிந்துகொண்டவனல்லன்,

தேவரீர்கிருபையினால் நீதிமுறைமைப்படி ஓர்தூதுவிட்டு நன்மார்க்கங்களைப்போதிப்பித்தாலும், அக்கொடியவன்வழிக்குவருவானல்லன், அதுவுமன்றிப் பராக்கிரமத்திற்குறைந்தவர்கள் தம்மின்வலியாரிடத்தில்யோக்கியரானதூதர்களையேவி, இனியவார்த்தைகளினாலுங் கிரியைகளினாலுஞ் சிநேகஞ்செய்துகொள்வது முறைமையாகும், பராக்கிரமத்திற்சிறந்தவர்கள் தம்மின்மெலியாரைத்தண்டிப்பதே முறைமையாகும். அவ்வாறிருந்தும்- தேவரீர் மிகுந்தகிருபையினால் அப்பாதகனிடத்து ஓர்தூதுவனை அநுப்பும்பக்ஷத்தில், அத்தூதனானவன் தனதுசொல்லுக்கு ஒருவேளை அப்பாதகன் இணங்கிவரானாயின் உடனே அவனைமேலிட்டொட்டாமற் சிறிவதைசெய்து மீட்டுமிங்ஙனம்வந்து சேரத்தக்கவனாக இருக்கவேண்டும், இப்போது இங்குவந்திருக்கின்ற வீரர்களுள் மிகுந்தபராக்கிரமசாலியாகிய அச்சிந்துவைக்கொன்று வெற்றிபெறவல்லவர் சுப்பிரமணியதேவர் ஒருவரேயாகும், அவர் தேவரீர்க்குத் தம்பியாதலால் அவரைத்தூதனுப்புதல்மரபன்று, வீரபத்திரக்கடவுளையநுப்பினால் அக்கொடியவனிருக்குமிடத்திற்போகுமுன்னமே எதிரிற்கண்டசூரர்களையும் ஊரையுஞ்சுட்டுநீறாக்கித் தமது மனத்தில் நினைத்தவண்ணமெல்லாஞ்செய்துவிடுவர், அப்பால் தேவரீர்நினைத்தருளிய காரியப்படிமுடியாது, அர்த்தலோசநன்- பிரமதன்- பிருங்கி- அடியேன்- பூதராசன்- நந்தி- என்றுசொல்லப்பட்ட இந்த அறுவரும்யுத்தஞ்செய்யவல்லவர்களேயன்றித்தூதுசெல்வதற்கு இசைந்தவரல்லர், ஆனால் சுவாமிகளுடைய கட்டளையைத்தடுக்கமாட்டாது சென்றாலும் இப்போதுகூறிய மிகுந்த பராக்கிரமத்தினையுடைய இந்த அறுவர்களுக்குள் நந்திதேவர்மாத்திரஞ் சொன்னபடிசென்று, நல்லபாங்கோடு பேசிமீண்டுவருவர், பூதராசனோவென்றால் போனவுடன் பட்டணத்தைச் சுட்டெரித்துப்போடுவன், அடியனோவெனில் அப்பாதகனுடைய சுற்றத்தினரெல்லாமலறும்படி அளவற்றதீமைகளை நடாத்திவருவேன், அர்த்தலோசனனாயின் செய்யத்தகாதகாரியங்களாய் ஆண்சிறை பெண்சிறை பிடிப்பான், பிரமதனோவெனில் அசுரர்களைக்காணுமுன்னமே அவர்களையெடுத்தெடுத்துவிழுங்குவன், பிருங்கியும் அவ்வாறே அவ்வசுரர்களுடைய குலத்தையெல்லாம் எரித்துநீறாக்குவன், ஆதலால் நந்திதேவரே அச்சிந்துவினிடத்திற்போகவும் பேசவுந்திராணியுள்ளவர், ஒருவேளைசத்துருக்கள் தீங்குசெய்யநேர்ந்தாலும் அதற்கு இளையாமல், எதிர்த்தவர்களோடுயுத்தஞ்செய்யவும் மாய்க்கவும்வல்லவர் அவரேயாகும், இப்பால் சுவாமிகளுடைய திருவுளக்கருத்து எவ்வாறோவென்று சொல்லினன். இவையனைத்தையும் மயூரேசர் கேட்டருளி, ஓபுட்பதந்தனே- நீசொன்னதெல்லாந்தக்கதேயென்று சந்தோஷித்து, உடனே நந்திதேவரையழைத்து, ஓசிலாதரன்மைந்தனே- நீஅவுணபாதகனாகிய சிந்துவினிடத்திற்சென்று, அடாமூடனே- உனக்குச்சிவபிரானளித்தருளியவரத்தோடுமிருக்கவேண்டுமாயின் இந்நிமிஷத்தில் தேவர்களைச்சிறையினின்றும் விட்டுவிடக்கடவை, அவ்வரத்தையும் உயிரையும் இழக்கவேண்டுமாயின் இப்போதேயுத்தத்திற்கு வரக்கடவையெனச் சொல்லிவாவென்றனுப்பினர். அதனைநந்திதேவர்மிக்கபயபத்தியோடுங்கேட்டு, மயூரேசரைப்பணிந்தெழுந்து, சிவபிரானையும்

உமர்தேவியாரையு மனதிற்றியானஞ்செய்துகொண்டு, அவவிடத்தினின்றுநீங்கிச், சூட்சுமரூபத்தோடுஞ்சென்று, சிந்துராசனுடைய கொலுச்சபையைநெருங்கி, அங்கு அவனிற்றும்தாழாமலிருக்குமாறு அவன்சிம்மாதனத்தினும் மேலான பிரகாசத்தோடு ஓர்சிம்மாதனத்தைத் தமதுமனத்தினாற்சிருட்டித்து, அதில் அவன்வீற்றிருக்கின்ற பராக்கிரமத்தினும் அதிகமானபராக்கிரமத்தோடு தாம்வீற்றிருந்தனர். இவ்வாறு நந்திதேவர்வந்து வீற்றிருப்பதைச்சிந்துராசன்பார்த்து, அளவற்றகாவல்களைக்கடந்து நமக்கு முன்சிங்கவேற்றினைப்போல இவன் இங்குவந்திருப்பது மிகநன்று மிகநன்றென்று அதிசயித்து, அடக்கற்கரியகோபத்தோடு,நீயார், எங்ஙனமிருக்கின்றவன், இங்குயாதுகாரியமாகவந்தனையென்று கேட்டனன். அதற்குநந்திதேவர்சொல்லுவார், அரசனே- யாம் அந்தமுமாதியுமில்லாத மயூரேசருடையதூதன், நம்மைஉலகத்தார்நந்தியென்றுசொல்லுவார்கள், நாம் உன்னிடத்தில் வந்தகாரியத்தையுஞ் சொல்லுகின்றேம் ஞாபகமாய்க்கேள், செல்வமிருக்கின்றவர்களிடத்திற்றெளிவானஅறிவிராதென்றுசொல்லும் வாக்கியத்தின்பொருளை உன்னிடத்திலும் உனதுமந்திரிகளிடத்தினு மிருக்கக்கண்டோம், அஃதெவ்வாறெனில்- நீ அருமையாகிய தவங்களைச்செய்து அழியாதவரங்களையும் அளவிடற்கரியபோகபாக்கியங்களையும்பெற்றனை, அவ்வாறு பெற்றநீ- அந்தோ- அவைகட்குரியவேதமார்க்கங்களில்நின்று அவைகளையழியாமற் பாதுகாத்து என்றைக்கும் வாழ்ந்திருக்க எண்ணுமற்போயினை, நீதானப்படியாயினும், உனதுபாக்கியங்களையெல்லாஞ் சந்தோஷத்துடன் உண்டநுபவிக்கின்ற மந்திரிகளென்று சொல்லப்பட்ட பாவிகளும் கொடுங்கோல்செலுத்துகின்றவுன்னை அக்கோணலினின்றுநீக்கிநெடுங்காலம்வாழும்படியாக உனக்கிதவானவசனங்களைக்கூறித் தெளிவிக்காமற்போனார்கள், இதுகாறும் இவ்வாறேகாலங்கழித்துவந்தனை, இறந்தகாரியமிருக்க, இனிமேலாயினுந் தேவர்களையு முனிவர்களையுஞ்சிறையினின்றுநீக்கி, நீதிதப்பாமல் வேதநெறியையாதரித்துக்கொண்டு, இப்போது கிடைத்திருக்கின்ற பாக்கியத்தில் நீடூழிகாலம் வாழ்ந்திரு, இதைஉனக்கறிவிக்குமாறு எமது பெருமான்நம்மைக்கிருபைசுரந்து அநுப்பினர், இக்கருத்துஉனக்கில்லாமல் தேவர்களெல்லாநகைக்கும்படி மாண்டுபோகக்கருத்திருக்குமாயின் இந்நிமிஷத்தில் நால்வகைப்படைகளோடும் யுத்தத்திற்கு வரக்கடவை, இந்நகரத்திற்கொருயோசனைதூரத்தில் எமதுகர்த்தர் இத்தினம்வந்திறங்கியிருக்கின்றனர், நீயும் அங்குவந்து அவரைக்காணென்றுசொல்லினர். இவையனைத்தையுஞ்சிந்துராசன்கேட்டுக், குலுங்கநகைத்து, அனற்பொறிபறக்கும்படியாகக் கண்களைவிழித்துக்கோபித்து, ஓநந்தியே-சிறுவனாகியஉன்னிறையவன்புத்தியைப்போல இங்குவந்த உனதுபுத்தியும் இனிநடக்கப்போகின்றகதியினையறிந்ததில்லை, அவன்முன்னஞ்சில எளியவர்களைக்கொன்றதையே பெரிதாகமதித்து அவ்வாறே மேலான என்னையுங்கொல்லுவனென்று அஞ்சாமல்வந்துசொல்லினை, யானைமுதலியபலமிருகங்களைக்கொன்றுபுசிக்கவல்லசிங்கமாயினும் ஓர்சிம்புள்முன்னே அதுஎன்னசெய்யமாட்டும், தேளைமுதலானவைகளைச் சமயம்வாய்ந்தபோது கொன்றுதின்னவல்லநாகமாயினும் ஓர்கருடன்முன்னே அதற்கு

என்னசெய்யக்கூடும், கையில்வாளேந்தவறியாதசிறுவனைப்பராக்கிரமத்திற்சிறந்த என்னைக்கொல்லவல்லவனென்றெளிதாகப்பேசினை, இவ்வாறு பேசியவுன்னை யானம்போகும்படிச்செய்வேன், ஆனால் தூதனென்றுன்னைக்கொல்லாமல்விட்டேனென்றுசொன்னான். இப்படி அவுணபாதகனாகிய சிந்துராசன் சொல்லியவார்த்தைகளைக்கேட்டமாத்திரத்தில் நந்திதேவருக்கதிககோபமுண்டாகி, அடாமூடனே- எமதுகர்த்தர் தூதுபோய்ப்பேசிவாவென்றுசொல்லியகட்டளைக்கடங்கி உன்னைக்கொல்லாமல்விட்டேனேயன்றி, அவனிணங்காவிட்டால் உடனேகொன்றுவிட்டு வரக்கடவையென்று ஒருவார்த்தையெனக்குச்சொல்லியிருப்பாராயின்,மாறுபட்டவுன்னையும் இச்சபையிலிருக்கின்றோர்களையும் என்கையிற்றெறிப்பிசைந்து சத்தனச்சேறாக்கி, மார்பிற்பூசிக்கொண்டு, உன்னுடையசேனைகளனைத்தையும் எரித்துச்சாம்பராக்கிவிடுவேன், மயூரேசரைச் சிறுபிள்ளையென்றும் வலியற்றவனென்றும் ஏளனமாகப்பிதற்றினை, அவரிட்டருளிய கட்டளையைக்கடவாமல் உன்னிடத்திற்றுவந்த எனதுவல்லபத்தைப்பார்த்தும், பின்னர் அவருடையவல்லபத்தையு நிதானிக்கக்கடவையென்று சொல்லி, ஒருமூச்சுவிட்டார். அம்மூச்சின்காற்றினால் மண்டபத்தினுடைய வுத்திரமொன்றுபிளந்தது. அருகிலிருந்தவர்களெல்லாம் இடியிடித்ததோவென்றுநடுங்கிச், சிலர்வெயர்த்தார்கள். சிலர்விழுந்தார்கள். சிலர்மயங்கினார்கள். சிலர்மாய்ந்தார்கள். சிந்துராசன்பயந்து ஒருமுகூர்த்தகாலம்வரையில் திகைத்துமூர்ச்சித்திருந்தான். அச்சமயத்தில்சகலவத்துக்களையும் ஆக்கவும் அழிக்கவும்வல்ல நந்திதேவரானவர் தாம்வீற்றிருந்தசிம்மாதனத்தை அங்ஙனே மறைந்துபோகச்செய்து, சரேலென்று ஆகாயமார்க்கமாகச்சென்று, நடந்தசேதிகளையெல்லா மயூரேசருக் கறிவித்தனர். அவையனைத்தையும் மயூரேசர்கேட்டுப் புன்னகைசெய்திருந்தனர் அருகிலிருந்தபூதராஜனும் புட்பதந்தனும்கோடிபூதசேனைகளுடன்சென்று, சிந்துராசனுடையகோட்டையை நாற்புறத்தும்வளைத்து, அந்நாற்புறத்தும் நாற்பதுகோடிவீரர்களுடன் காவல்கொண்டிருக்கின்றசிங்கமுகாசுரன்- யாளிமுகாசுரன்- புலிமுகாசுரன்- கஜமுகாசுரன்- முதலானவர்களுடனேயுத்தஞ்செய்துமாய்த்து, ஓர்நிமைப்போதில் மீட்டுந் திரும்பிவந்தனர். பின்னர் நந்திதேவருடைய சுவாசக்காற்றினால் மனந்திகைத்து மூர்ச்சித்துக்கிடந்தசிந்துராசனானவன் பின்னர் தெளிந்தெழுந்து, தன்னைப்பணிந்திருக்கின்ற மந்திரியர்- சேனாபதியர்- தூதர்- சாரணர்- முதலானவர்கட்கு ஒருதூதன்வந்துபேசி நடத்தியவிதம் இதுவென்றுசொல்லி, இனி அரைக்கணத்தில் நமது சத்துருக்களுடைய வழிநாசமாக்கினாலன்றி யான் அசனஞ்செய்கின்றதில்லையென்றுசபதங்கூறி, இந்நிமிஷத்தில் நமது நால்வகைச்சேனைகளையும் வரவழைக்கக்கடவீர்களென்று ஆக்கியாபித்தான். உடனே வீரர்களோடிவள்ளுவனைக்கொண்டு முரசறைவித்தார்கள். அம்முரசின்றசைகேட்டமாத்திரத்தில் யாவரும் அவ்வவர்கள் 'செய்திருந்தகருமங்களை அந்தந்தவண்ணமேவிடுத்து', நால்வகைப்படைகளோடும் ராசவீதியில்வந்துகூடினார்கள். இப்பால் தனக்குமரணமேயில்லையென்று தீர்மானித்து ஒன்னார்களையெல்லாம் ஒருதிரணமாகமதித்திருக்கின்ற சிந்துராசனானவன், தனதுபாரிச [illegible]

[illegible]

சாலையுள்நுழைந்து, பொன்னுடையையுடுத்து, இடையிற்பட்டுக்கச்சையையிறுக்கி, கூர்மையாய்ச்சொலித்திருக்கும் வச்சிரவாளாயுதத்தைமடியிறசொருகி, மேககர்ச்சனையையொப்பக்கலிக்கும் வீரகண்டாமணியைபபாதத்திற்கட்டி, விசாலமாகியமார்பினிடத்தில் வயிரங்களினுற் சோதித்திருக்கும் அபேதகவசத்தைப்பிகிந்து, கரசாடு விரல்சாடு முதலியவைகளைவரிசைபடத்தரித்து, மின்னலையொப்பப்பிரகாசித்திருக்கும் அலகையுடையசொடியபாணவிதங்கள் நிறைந்திருக்கின்றதூணியை முதுகிலிறுக்கி, தங்கத்தினுற்செய்து பிரகாசித்திருக்கின்றவீரபட்டயத்தைநெற்றியிற்கட்டி, மற்றும்போர்க்கோலத்திற்குரிய சின்னங்களையுந்தரித்து, நவரத்னமயமாகவிளங்குங்கிரீடத்திற்றும்பைமாலையைச்சுற்றி, மந்தரகிரியைப்போலப்பாரித்துப்பொற்கட்டுகள் பிகிந்து இருகுதைகளினுமணிகள்சத்திக்கவிளங்கும் வில்லைவணங்கியெடுத்து, வீரலக்ஷ்மியைத்தொழுதுபோற்றி விடைபெற்றுக்கொண்டு, ஆயுதச்சாலையைக்கடந்து, செயஉச்சாகத்துடன் வெளிவந்தனன். அச்சமயத்திற்சிலதூதர்கள் அவனைப்பணிந்தெழுந்து, ஆண்டவனே- முன்னர் தூதாகவந்துசென்றவனைப்போல இரண்டுவீரர்கள் கோடிபூதசேனைகளோடும்வந்து, நமதுகோட்டைக்கு நாற்புறங்களினுமிருந்த காவலாளர்கள்யாரையுந்தூளாக்கிப்போயினரென்றுசொன்னார்கள். அதைக்கேட்டமாத்திரத்தில் சாய்ந்தபாலானது நெருப்பினுற்சூடேறுந்தோறும் அந்நெருப்பின்மீதே பொங்கிவிழுவதுபோலச்சிந்துராசனுக்குக்கோபமேலிட்டுச், கோட்டைமதிற்புறத்தில் முன்போலக்காவல்கொண்டிருக்கும்படி வேறே சிலவீரர்களையநுப்பித், தனது அரமனையினுஞ்சிலவீரர்களைக்காவல்செய்துவெளியேவந்து, சிலவீரர்களுக்குத்தேர்களும்- சிலவீரர்களுக்குப்படைகளும்- சிலவீரர்களுக்குக்கிராமங்களும்-சிலவீரர்களுக்குவஸ்திராபரணங்களும்- சிலவீரர்களுக்குப்போர்களுங்கொடுத்து, தானுந்தேரிலேறி, ரணபேரி- சயபேரி-வெற்றிச்சங்கம்-திமிலை- கரடிகை காகளம்- சல்லரி- மல்லரி முதலியவாத்தியங்கள் சத்தசாகரங்களைப்போல முழங்கவும், கொடி- குடை- பிச்சம்- சாமரை- ஆலவட்டம்- முதலிய சின்னங்கள் நாற்றிசைகளினு நெருங்கித்துள்ளவும், மங்கலப்பெண்கள் நடனமாடவுமாக வழிக்கொண்டு, தனதுதேரைச்சுற்றிசேமத்தேர்களும், அச்சேமத்தேர்களைச்சுற்றி வீரர்களுடையதேர்களும், அத்தேர்களைச்சுற்றியானைகளும், அந்தயானைகளைச்சுற்றி குதிரைகளும், அக்குதிரைகளைச்சுற்றி பதாதிகளும்புடைசூழ்ந்து நெருங்கிவரும்படியாகத் தனது சேனைகளைநடத்திக்கொண்டுசென்றனன். அப்போது அட்டதிசைகளையும் போர்த்து ஆகாயத்திலெழுந்ததூளிபடலங்கள் எத்தன்மைத்தாயிருந்ததெனில், கொடியபாதகனுகிய சிந்துவானவன் தனதுகுலத்தோடுமயூரேசரால் மடிவெய்துங்காலநேரிட்டதென்று பூலோகமனைத்துந் தன்வினையாகிய தெய்வலோகத்திற்குச்சென்று அறிவிப்பதுபோலவிருந்தது. இவ்வாறு சிந்துராசன்படையெடுத்துத் தனதுபட்டணத்தினின்றும் வெளிச்சென்றிருந்ததை நாரதமுனிவரறிந்துவந்து, விநாயகமூர்த்தியைப் பணிந்தெழுந்து, சுவாமி- வீராதிவீரனுகிய சிந்துராசனென்பவன் சத்தசாகரங்களைப்போலத் தனது சேனைகளைக்கூட்டிக்கொண்டு இதோயுத்தத்திற்குவந்துவிட்டானென்று சொல்லிமீண்டனர். அதைக்கேட்டமாத்திரத்

தில் மயூரேசரும்விரைந்தெழுந்து, தமதுவீரர்களையும் பூதசேனைகளையுநடக்கும்படி ஏவினர். அப்போது நந்திதேவர் மயூரேசரைப்பணிந்தெழுந்து, சுவாமி- வீரபத்திரரும் அடியேனும் மற்றயாவரும் அவனோடுயுத்தஞ்செய்து இளைத்துப்போனால், அதற்குமேல் சுப்பிரமணியதேவரும் தேவரீரும் யுத்தத்திற்குச்செல்லும்படி கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குமயூரேசர் நந்திதேவரைப்பார்த்து, ஓ இரண்டாஞ்சம்புவே- எதிர்த்துவருகின்ற சிந்துவோடுயாம்முன்னின்றுயுத்தஞ்செய்ய மிகுந்தவாஞ்சையுற்றிருக்கின்றேமாதலால், அப்பராக்கிரமசாலியையாமேசங்கரிக்கவேண்டும், சுப்பிரமணியர்முதலிய நீங்களனைவரு மற்றவீரர்களோடெதிர்த்து யுத்தஞ்செய்யக் கடவீர்களென்று தமது மயில்வாகனத்தின்மீதாரோகணித்தனர். உடனே முன்னர் கனலாசுரனைச்சங்கரிப்பதற்குண்டாக்கிய பூதசேனைகளும், குமாரதேவர் முதலியவீரர்களும், ஏனைய கணநாதர்களும், எக்காலத்தும்விட்டுப்பிரியாத முனிச்சிரேஷ்டர்களும், அவ்வவர்களுடைய ரதங்களிலேறிக்கொண்டுவந்து மயூரேசமூர்த்தியைப்புடைசூழ்ந்தார்கள். அப்போது உய்யும்வகையறியாது எக்காலத்துந் தீங்கினையேவிளைத்துவருகின்ற சிந்துராசனுடைய கொடுங்கோலினுடைய வெப்பத்தினால் வெதும்பியவுலோகங்கள் குளிர்ந்துசெழிக்கும்படியாக உதயங்கொண்டு பிரகாசிக்கின்ற பூரணசந்திரனைப்போல, மயூரேசருடைய திருமுடியின்மீது பிரகாசிக்கும்படியாகச் சிலபூதகணங்கள் வெண்பட்டுக்குடைகள் பிடித்தார்கள். அளவற்ற சீர்த்திகளுஞ்சேர்ந்து வாசஞ்செய்கின்றவிடம் இதுதானென்று மேலுங்கீழுங்குறிப்பினாற்காட்டுவதுபோலச், சிலபூதகணங்கள் வெண்சாமரைகள்வீசினார்கள். விநாயகப்பெருமானனவர் கிருபாமூர்த்தியாதலால் சத்துருக்கள் மீதுண்டான கோபாக்கினியானது ஒருவேளைதணியவுங்கூடுமென்று அவ்வக்கினிதணியாதிருக்குமாறு அதற்குத்துணையாகக் காற்றினைக்கூட்டுவிப்பதுபோலச், சிலபூதகணங்கள் ஆலவட்டங்களை அசைத்தார்கள். சத்தியசவசமில்லாதிருப்பதே ஓர்கவசமாகக்கொண்டிருக்கின்ற அவுணர்கோனாகிய சிந்துராசன் இன்னுமிரண்டொருதினத்தில் மாய்ந்து சகலலோகங்களுஞ்சௌக்கியத்தையடையுமென்று ஆனந்தத்தினாலெழுந்து துள்ளுவதுபோலச், சிலபூதகணங்கள் வெற்றிக்கொடிகளைப்பிடித்தார்கள். முன்னர் மயூரேசமூர்த்தியைச் சிறுபிள்ளையென்று இகழ்ச்சிசெய்த சிந்துராசனே இப்போது அவரைப்பராபரவஸ்துவென்று தெளிந்துகொள்ளும்படியாக மும்மூர்த்திகட்கு முதல்வனாகிய விநாயகன்வந்தான், கணன்முதலாயினோருடைய உயிரைவாங்கிய சேவகன்வந்தான், சகலவுயிர்கட்கும் ஆனந்தத்தையுண்டாக்கவல்ல கர்த்தன்வந்தான், சிவபிரானும் உமாதேவியாரும் ஈன்றபாலன்வந்தான், என்றுசிலபூதகணங்கள் கட்டியங்கூறினார்கள். சொர்க்கமத்தியபாதலமென்னு முத்தலங்களிலுள்ள சகலரும் இனி வல்லலைவிட்டுச்சுகமுற்றிருங்கள் நம்மையெல்லாங்காத்தாளவல்ல இஷ்டநாயகன்வந்தானென்று கூவுவதுபோலச், சிலபூதகணங்கள் பேரிகைமுதலான வாத்தியங்களை முழக்கினார்கள். இவ்விதவைபவங்களோடு மயூரேசமூர்த்தி யெழுந்தருளியகாலத்தில், சமது பூதகணங்களுடையபாதங்களாலெழுகின்ற தூளியானது ஆகாயத்திலெழுகின்ற தெவ்வாயிருந்தென்

னில், பூதலத்துருவாயிருக்கின்ற சிந்துராசனனவன் எமதுசத்தருனைப் பூதகணங்களினதுபாதம்பட்டுவல்வினைகளினின்று நீங்கிவான்கதியடையச்செல்லுமாறுபோலவிருந்தது. இப்பால் இரண்டாயிரவெள்ளம்வீரர்களோடுவந்த சிந்துராசனுடைய அமைச்சனாகிய மித்திரனுடனே சுப்பிரமணியக்கடவுளானவர் தமது சகோதரர்களாகிய நவவீரர்களோடு இலக்கவீரர்களுங் கோடிபூதவீரர்களும் புடைசூழச்சென்று யுத்தஞ்செய்தனர். வேறொரு இரண்டாயிரவெள்ளம்வீரர்களோடுவந்த சவுத்திரனென்னும் அமைச்சனுடனே வீரபத்திரக்கடவுளானவர் கோடிபூதவீரர்கள் புடைசூழச்சென்று யுத்தஞ்செய்தனர். மற்றொரு இரண்டாயிரவெள்ளம் வீரர்களோடுவந்தவீரராஜனுடனே நந்திதேவரானவர் கோடிபூதவீரர்கள் புடைசூழச்சென்று யுத்தஞ்செய்தனர். தனித்தனியே கோடி அசுரவீரர்களோடும்வந்த துவசன்- ஆரியன்- தூர்த்தன்- சார்த்தூலன் என்னுமிந்நால்வருடனே புட்பதந்தன்- பூசராசன்- விகடன்- சபலன்- என்னுமிந்நால்வரும் அம்முறைமைப்படியேசென்று யுத்தஞ்செய்தார்கள். இன்னும் இவ்வாறே இருதிறப்படைகளினுமுள்ள அளவற்றவீரர்கள் தத்தம்படைகளோடு வேறுவேறுயுத்தஞ்செய்தார்கள். இரணியகருப்பன்- சாமன்- இரக்தலோசனன்- சோமன்- பிருங்கி- பிரமதன்- பஞ்சாநநன்- இலம்பகர்ன்னன்- அரன்- தாவானலன்- முதலானசேனைத்தலைவர்களுந், தம்மைவிட்டுப்பிரியாத முனிச்சிறுவர்களும், முன்னர் தமது மனத்தாற்சிருட்டித்த பூதவீரர்களும்புடைசூழ்ந்து, செயசெயவென்று போற்றிவரும்படியாகச், சகலலோகநாயகராகிய மயூரேசமூர்த்தியானவர் விண்டுவே முதலியதேவர்களையெல்லாஞ் சிறைப்படுத்த் திரிலோகங்களினுந் தனக்குவேறொருவர் நிகரில்லாத மகாபராக்கிரமசாலியாகிய சிந்துராசனுடனே எதிர்த்துயுத்தஞ்செய்தனர். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே, இவ்வாறு இருதிறப்படைகளுள் இரதவீரர்களோடு இரதவீரர்களுங் கஜவீரர்களோடுகஜவீரர்களும் பரிவீரர்களோடு பரிவீரர்களும் படைவீரர்களோடு படைவீரர்களுங் கைகலந்து அமோகமானயுத்தத்தை விளைத்துவருகையில், பூதசேனைகளினும் அவுணசேனைகளினும் சரீரமற்றுஞ் சல்லடைக்கண்கள்போலத்துளையுண்டும், களைத்தும், இளைத்தும், பதைத்தும், உளைப்புண்டும், சோர்ந்தும், செத்தும், இவ்விதமாகப்படாதபாடுகளைப்பட்டுக்கணக்கிறந்தவீரர்கள்மாண்டனர். அப்போது வேலாயுதமூர்த்தியாகிய சுப்பிரமணியக்கடவுளையெதிர்த்து நின்றமித்திரனனவன் தனது சேனைகளோடு நெடுநேரம் போர்விளைத்திருக்கின்றசமயத்தில், பராக்கிரமசாலிகளாகிய பூதசேனைகட்கும் இலக்கர்கட்கும் நவவீரர்கட்கும் அதிககோபாவேசமுண்டாகி, மித்திரனுடையநால்வகைச்சேனைகளினும்புகுந்து, சிலவையுதைத்துருட்டியும், சிலவைப்பூமியிற்றேய்த்தும், சிலவைக்குடல்சரியமிதித்தும், சிலவைப்பஞ்சைப்போலச்சதைத்தும், சிலவைப்பூமியுளடங்கத்தாக்கியும், சிலவைத்திசாதிசைகளினெற்றியும், சிலவைசமுத்திரங்களில்வீசியும், சிலவைவானவெல்லையிற்கடாவியும், சிலவைமூளைகள்சிந்தவுதைத்தும், சிலவைக் கரங்கள் தோள்கள் முதலியவைகள் நுறுங்கச்சாடியும், சிலவை அம்மனையாடியும், சிலவைப்பந்தையொப்பவெறிந்தும், இவ்விதமாகச் சூறைவளியையொத்து வ

லைந்துவிளைந்து ஒருவரையும் அப்புறம் இப்புறம் அசலவொட்டாமல்குதித்துக்குதித்து கடலைக்கலக்கியமத்துக்கொப்பாக அலைத்துமாய்த்தனர். அதைமித்திரன்கண்டு, வடவானலத்தைப்போலக்கொதித்தெழுந்து, பூதசேனைகளினும் இலக்கவீரர்கூட்டத்தினும்புகுந்து, சிரங்கள் கரங்கள் துடைகள் புஜங்கள் மார்புகள் கபோலங்கள் முதலியவைகளைச் சண்டித்து, இவைகள்மச்சராசிகளைப்போல உதிரவாரியில் மிதந்தும் அழுந்தியும் போகும்படியாகக்கண்டு, அளவற்றயானைகளையுங் குதிரைகளையுங் கால்வேறுதலைவேறாகத்துண்டித்து, குலாலன்சக்கரம்போலவும் பிரசண்டமாருதம்போலவு மாறிமாறிக் கரங்களினாலும் பாதங்களினாலும் அளவிறந்தபூதர்களைமாய்த்து, அரைக்கணப்போதில் இலக்கவீரர்களெல்லாந்திசாதிசைகளிலோடிப் பதுங்கும்படியாகமுடுக்கினன். இவ்வாறு இலக்கர் அபசயப்பட்டுத்திரும்பியதை நவவீரர்களிலொருவனாகிய வீரதீரன்கண்டு, வடவாக்கினியைப்போலமண்டியெரிந்து, தனதுதேரைவிரைவிற்செலுத்திவந்து மித்திரனெதிரில்நிறுத்திச், சகலருந்திடுக்கிட்டுவாடும்படி தனதுவில்லைநாணேத்துக்குணத்தொனிசெய்து, சோனைப்பெய்யலுநாணும்படிக்கு ஆயிரங்கூறாரமாகிய கணைகளைக்கரவேகமாகச்சொரிந்து, அவனதுவில்லைமுறித்து, வேறொருகதாயுதத்தையுங் கரகரவென்றுசுழற்றி அவன்மார்புக்கிலக்காகப்பிரயோகித்தனன். அதைமித்திரன்கண்டு, இவன்வலியும்- வீரமும்- விற்சாதுரியமும்- கரவேகமும்- வித்தையின்பெருக்கமும்- மிகநன்றுமிகநன்றென்றுநகைத்து, மந்திரகிரியைநினைத்து விளங்கும்மற்றொருவில்லைக்கரத்திலெடுத்துத், தேவர்களெல்லாங்கண்டுபிரமிக்கும்படி அளவற்றபாணங்களைப்பிரயோகித்து, எதிரிவிடுத்தபாணங்களையெல்லாம்பொடிபடுத்தி, மற்றொருகதாயுதத்தை அதிவேகமாகச்செலுத்தி, அவன்விட்டகதாயுதத்தையும் அவன்பராக்கிரமத்தையுமழித்து ஆர்ப்பரித்தனன். இவ்விதமாகத்தனது துணைவனுக்குநேர்ந்தகுறைவை வீரதிவாகரன்கண்டு, காட்டுபுலியொப்பசீறித், தேரைத்துரத்திக்கொண்டுவந்து பகைவனெதிரில்நிறுத்தி, ஒப்பற்றதனதுவில்லைவணக்கி, அளவற்றவாளிகளைத்தூண்டி, அவன்தேரைச்சின்னபின்னப்படமுறித்தனன். உடனே மித்திரன் வேறொருரதத்திற்பாய்ந்து, விஷச்சுவாலைகளை வீசும்படியான வேலாயுதமொன்றையெடுத்து, அவன்நெற்றிக்கு நேராகப்பிரயோகித்தனன். அவ்வேலாயுதம் வெளிப்பட்டவுடன் இடிமின்னல் அக்கினிமுதலானவைகளைப்பெருக்கி அதிகவேகமாய்வந்து, வீரதிவாகரன்செலுத்தியபாணங்களையெல்லாம்விழுங்கி, அவன்நெற்றியில்உருவிப்பாய்ந்துமூர்ச்சிக்கும்படிசெய்துமீண்டது. அதைவீரராக்கதன்கண்டு, ஆலகாலம்போலத்தனதுதேரைவிரைவிற்செலுத்திவந்து, விண்ணுலகமண்ணுலகமுதலானவைகள்நடுங்கும்படிக்கு அநேகமானகணைகளைத்தூண்டி, அவனுடைய வில்லைமுறித்துச், சரீரமுழுவதுந்துளைபடச்செய்தனன். உடனேமித்திரன் வடவானலத்தைப்போலக்கொதித்தெழுந்து, மற்றொருவில்லினால் அளவற்றபாணங்களைத்தூண்டி, அவனுடைய வில்லையுமரதத்தையும்பொடிபடும்படியாகக்கண்டித்தெறிந்து, அவன்வேறொருரதத்திற் பாய்வதன்முன் இந்திரனுங்கண்டுநடுங்கத்தக்க ஓர்வச்சிராயுதத்தினைவீசி அவன்பராக்கிரமத்தைப்பறித்தனன். அப்போது வீரபுரந்தரனென்பவன் வாயுவே

கத்தினுமூர்ந்திக்தனதுதேரைத்தூரத்திலூந்து, நெடியவில்லைவட்டாகாரமாகவளைத்து, கணைக்கற்றைமாமாகிய சிலீமுகங்களைத்தொடுத்துப், பகைவனுடையரதத்தையும் புரவிகளையுஞ் சாரதியையுஞ்சின்னபின்னப்படக்கண்டிக்கெறிந்தனன். உடனேமித்திரனென்பவன் வேறொருரதத்தையுஞ்சாரதியையுங்கொண்டுவிரைந்துவந்து, தன்னையெதிர்த்துவருகின்றசிலீமுகங்களையெல்லாமாற்றித், தனதுவில்லில்பத்துபாணங்களைத்தொடுத்துப்பிரயோகித்து, வீரபுரந்தரன்பின்னிட்டோடும்படியாக அவன்மார்பைத்துளைத்தனன். அதைவீராந்தகன்கண்டு, மனநொந்து, மானம்வாதிக்க, அதிவேகமாகத்தனதுதேரைமுடுக்கிக்கொண்டுவந்து, ரவுத்திராகாரமாகக்கோபித்துப், பாரித்திராநின்ற தனதுவில்லைவளைத்து, அண்டகடாகங்களுமதிரக்குணத்தொனிசெய்து, இரண்டாயிரம்பாணங்களை ஏககாலத்திற் பிரயோகித்து, பகைவனுடைய குடைமுதலிய சின்னங்களையறுத்தெறிந்து சத்தசாகரங்களும் ஏங்கிவாடும்படிக்கு சங்காதஞ்செய்தான். உடனே மித்திரனென்பவன் காளகூடத்தைப்போலச்சீறி, நாராசங்களைநிகர்த்தநூறு திவ்வியபாணங்களை அவன்புயங்களுக்கிலக்காகவிடுத்து, அவனதுவச்சிரகவசத்தையுந் தேரையுந் தூள்பொடியாகச்செய்தனன். இந்தச்சம்பவத்தைவீரகேசரிகண்டு, மனம்பதைபதைக்கப்பொங்கிச், சத்துருவை இந்நிமிஷத்தில் அடக்கிவாட்டுவேனெனச்சபதம்பேசி, தேரைக்கொண்டுவந்து எதிரில் நிறுத்திக், தங்கத்தட்டுகள்பிணைந்து வெற்றிமாலையையணிந்திருக்கின்ற தனதுவில்லைவளைத்து, அனந்தமுறை அளவற்றகணைகளைமாறிமாறிப்பிரயோகித்துப், பகைவனுடைய இரதத்தையும் வில்லையுமுறித்தெறிந்தனன். உடனே மித்திரன்வேறொரு ரதத்தையும் வில்லையுங்கொண்டு, சர்ப்பத்தைப்போலச்சீறித், திசையானைகள் பயந்தோடக்கர்ச்சித்துப், படைகளிற்சிரேஷ்டமாகிய பிரம்மாஸ்திரத்தைப்பிரயோகித்தனன் அவ்வத்திரம்வெளிப்பட்டமாத்திரத்தில் வீரகேசரிமறுபாணம்விட்டுத்தடுப்பதன்முன் அவனது புட்பமாலையணிந்த மார்பைப்பிளந்துமீண்டது. இந்த அபாயத்தை வீரமயேந்திரன்கண்டு, கோபநீபிதனாய்த், தனதுதேரைக்குலாலன் சக்கரத்தைப்போலத்திருப்பிக், கோடானகோடிபாணங்களைப்பிரயோகித்து, அவனுடையவிருதுக்கொடியையும் வில்லையுமொடித்தெறிந்து, வேறொருவில்லையெடுக்குமுன்னம் அவனுடையதேரையும்முறியச்செய்தனன். உடனேமித்திரன் ஒருரோலென்று வேறொருரதத்திற்பாய்ந்து, மற்றொருவில்லில்முப்பதுபாணங்களைத்தூண்டி, முகத்திற்கிலக்காகப்பத்துபாணங்களும், மார்புக்கிலக்காகப்பத்துபாணங்களும், புயங்களுக்கிலக்காகப்பத்துபாணங்களும் பிரயோகித்து அவனுண்மையைப்போக்கினன். அக்கொடுமையைவீரமாமகேசுரன்கண்டு, கண்களில்அழற்பொறிபறக்கக்கோபித்து, அதிகவேகமாய்த்தனதுதேரைச்செலுத்திவந்து மகத்துக்களிட்ட சாபத்தினுமதிக விரைவாக ஐந்துபாணங்களையேவிப், பகைவனுடைய அம்புபெய்தூணியையும்வில்லையும் அரைக்கணத்திற்பொடிபடுத்தி, உடனே ஓர்சூலத்தையெடுத்து அவனதுநெஞ்சில் உருவிப்பாயும்படியாகவிடுத்தனன். அப்போது மித்திரனென்பவன் மானம்வாதிக்கச் சர்ப்பத்தைப்போலச்சீறித், தனது நெஞ்சிற்குஇலக்காகவருஞ்சூலத்தைப்பிடித்து, ஓர்கணப்போதில் அவன்மார்புபிளக்கும்படியாகக்குத்தியெறி

ந்தனன். இவ்விதசம்பவங்களையெல்லாஞ் சுப்பிரமணியமூர்த்திக்கு அடியவராகிய வீரவாகுதேவர்கண்டு, காலாந்தகனைப்போலக்கோபித்து, இவ்வொருபாதகனால் நம்மவர்கள்பின்னப்படுவது வெகுநேர்த்திவெகுநேர்த்தியெனப்பொங்கிச், சந்திரனைநோக்கிவரும் ராகுவைப்போலத்தமதுதேரைவிரைவிற்செலுத்திவந்து, மித்திரனெதிரில்நிறுத்தி, அடா அற்பனே- ஏதோசிலவெற்றியைப்பெற்றனமென்றுவீறியிருக்கின்றனை, அதைவிட்டுவிடக்கடவை, உனக்கெமனைப்போலவந்தேன், நிமைப்போதில் உனதுபிராணனைவீரசொர்க்கத்திற்சேர்ப்பேன், பதலமாயிருக்கக்கடவையென்று எச்சரித்து, மேருவையொத்துப்பாரித்திருக்குந் தமதுவில்லையெடுத்து வளைத்து, அண்டாண்டபுவனங்களெல்லாஞ் செவிடுபட்டுத்தியங்கவும், சூரியசந்திரர்கள் ஈதென்னஉற்பாதமென்று தியங்கியோடவும், தேவர்கள் சரீரமுற்றும்வெயர்த்துக்கிடுகிடென்று நடுங்கவுமாகக் குணத்தொனிசெய்து, சங்கோபசங்கமாக அளவற்ற திவ்வியபாணங்களைத்தூண்டிப், பகைவனுடையதேரையும் வில்லையும் மகுடத்தையும் பொடிபடுத்தி, அவன்நெற்றிக்கு இரண்டுபாணங்களும், மார்புக்கு மூன்றுபாணங்களும், புயங்கட்கு நான்குபாணங்களுமாய்ப் பிரயோகித்து ஆர்ப்பரித்தனர். அப்போது மித்திரனானவன் சிறிதுமூர்ச்சித்தெழுந்து, இவனைவில்வன்மையினாலும் மற்றபாணங்களின்முயற்சியினாலும் வெல்வதரிதென்று நிதானித்து, வேறொருரதத்தையும் வில்லையுங்கொண்டு, தானரிதிற்பெற்ற மோகனாஸ்திரத்தையெடுத்து, மானதபூசையினாற் சகலவுபசாரங்களையுஞ் செய்துபூட்டி, வீரவாகுதேவர் மார்புக்கிலக்காகக்காதளவுமிழுத்துப்பிரயோகித்தான். அப்பாணம்வெளிப்பட்டமாத்திரத்தில் அதிசமகிமைகளைக்காட்டிப்புகைந்தெரிந்துவந்து, வேறுபடையெடுத்துவிடுவதன்முன்னர் வீரவாகுதேவர் மீதுபாய்ந்துமூர்ச்சிக்கும்படி செய்துமீண்டது. கேட்டீர்களோசவுனகாதிமுனிவர்களே, இவ்வாறு சிந்துராசனுடைய அமைச்சனாகிய மித்திரனென்பவன் மகாபராக்கிரமசாலிகளாகிய இலக்ஷவீரர்களும் நவவீரர்களும் நிலைகுலைந்து சின்னபின்னப்பட்டுப்பறக்கும்படிவாட்டித், தனக்கொருவர்நிகரில்லாதபடி வீரபராக்கிரமசாலியாய்ரணக்களமெங்குங் காலாந்தகனைப்போல அட்டகாசஞ்செய்து வலவுந்தீரத்தைச் சுப்பிரமணியக்கடவுள்கண்டு, இவன்திறம்வெகுநேர்த்தியாயிருக்கின்றதெனக்கோபங்கைசெய்து, பிரமனும் விண்டுவுந் தேடிக்காண்பரியசுயஞ்சோதிப்படிவத்தைப்பெற்ற மயூரேசமூர்த்தியினுடைய திவ்வியசரணாரவிந்தங்களைப் பத்திவினயத்துடன் சிந்தித்துவாழ்த்திக், கொடியமனத்தையுடைய அம்மித்திரனிருக்குமிடத்திற்றமது தேரைவிரைவிற்றுரத்திவந்து, இந்திரனாகியதேவர்கள்களிக்கவுந், தருமதேவதைகளும் வேதாகமங்களும் வாழ்த்தவும், வீரலட்சுமியும் பத்திரகாளியுங்கொண்டாடவுமாக, இடையிடையிற்றங்கத்தகடுகளைப் பூண்டுமணிகள்கவிக்க ச. சயலட்சுமி தாண்டவஞ்செய்திருக்குந் தமதுமேருவையொத்ததநுவை இருகுதைகளுஞ் சேரவளைத்துப், பிரசண்டமாருதமும்வடவாமுகாக்கினியுந்தியங்கிமயங்கவும், அண்டங்களும் அவற்றிலடங்கிய புவனங்களுந்தத்தளித்துவாடவும், திசையானைகள்துதிக்கரங்களைத்தூக்கி வீரிட்டோடவுமாகடங்காரத்தொனிகாட்டினர். அதைரணரங்கசூரனாகிய மித்திரன்கண்டு, இவனை ஏனையர்களை

ப்போலச் சுலபமாகநினைக்கப்படாதென நிதானித்தவனாய், எப்போதுமெடாமற்சேமத்தில் வைத்திருந்த ஒப்பற்றவில்லைத்தாங்கி, நாணேற்றி, விண்ணவர் மண்ணவர் முதலாயினோர்நடுங்கிஏங்கும்படிக்குணத்தொனிசெய்து ஆர்ப்பரித்தனன். அப்போது முன்னர் சுப்பிரமணியக்கடவுள்செய்தடங்காரவோசையைக்கேட்டுச் சந்தோஷித்திருந்ததேவர்கள் கொடியதுன்மார்க்கனாகிய மித்திரன்செய்தகுணத்தொனியைக்கேட்டமாத்திரத்தில் யாவரும்வருந்தித்திகைத்தவர்களாய், இன்பதுன்பங்களை ஏககாலத்திற்கண்டனமென்று பேசிக்கொண்டிருந்தனர். பின்னர்சுப்பிரமணியக்கடவுள் தமதுவில்லிற்பத்துபாணங்களைத்தொடுத்து, மித்திரன்விடுகும்பாணங்களையும் ரதம் கவசம் வில் கொடி குடை தூணி முதலானவைகளையும் பொடிபடுத்தி, வேறேமூன்றுபாணங்களை அவனெற்றிக்கிலக்காகப்பிரயோகித்தனர். அக்காலத்தில் மித்திரனென்பவன் பஞ்சேந்திரிய நிலைகள்பேதிக்கமதிமயங்கி, மாண்டவனைப்போலத்தேரினின்றும்வீழ்ந்து நெடுநேரம்மூர்ச்சித்துக்கிடந்து, மீட்டுந்தெளிந்தெழுந்து, அதிககோபத்தோடு வேறொருரதத்திலேறி, மற்றொருவில்லில் அளவற்றகூரமாகிய பாணங்களைக்கோடைவருஷத்தைப்போலத் தூண்டிப்பிரயோகித்தான். அதைக்கடம்பமாலையணிந்த வேலாயுதமூர்த்திகண்டு, கோடானகோடி குரூரமாகியபாணங்களை ஏகமுகத்திற்றூண்டி, அப்பாதகன்விட்ட பாணங்களையெல்லாங்கண்டித்து, அவனேறிநடாத்துகின்ற தேரோடு சேமத்தேர்முதலானவைகளையுமழித்து தும்சஞ்செய்தனர். அதற்குமேல்மித்திரனானவன் கருடனைப்போல ஆகாயத்திற்பறந்து, இந்திராஸ்திரம்- அக்கினியாஸ்திரம்- எமாஸ்திரம்- நிருதியாஸ்திரம்- வருணாஸ்திரம்- வாயுவாஸ்திரம்- குபேராஸ்திரம்- பாசுபதாஸ்திர முதலான தெய்வப்படைகளை ஒவ்வொன்றாகத்தூண்டி யார்ப்பரித்தனன். பின்னர் அவைகளெல்லாம் மாலைகளாகஎன்னையாளவல்ல குமாரதேவருடையதிருவடிகளில்வீழ்ந்து சரண்புகுந்தன. இவ்வாறு தான்விட்டதெய்வப்படைகளெல்லாம்அபலமாய்ப்போனதைமித்திரன்கண்டு, இவனை இந்நிமிஷத்தில் யமலோகத்திற்கனுப்புகின்றேனென்று ஆக்கிரமித்துத்தனதுவாளையுருவிக்கொண்டோடிவந்து, தேர்ப்பாகன்மீதுபாய்ந்துவெட்டநேர்ந்தனன். அப்போது சுப்பிரமணியக்கடவுள் புன்னகைகொண்டு, தமதுமகத்துவமுள்ள வச்சிராயுதத்தையெடுத்துக்கரகரவென்றுசுழற்றி அவன்மார்பிற்றாக்கினர். உடனே மித்திரனானவன் கோடையிடியைப்போல இளைந்துகொண்டு நிலத்தில்வீழ்ந்துருண்டு,பிராணன்நீங்கிவீரசொர்க்கத்தைச்சேர்ந்தனன். அதற்குமேல் கந்தாசுரனென்பவன் மிக்க அகங்காரத்தோடு சுப்பிரமணியக்கடவுளுக்கெதிரேவந்து, அவரது சுந்தரவடிவையும் பராக்கிரமத்தையுங்கண்டு, இவன்வலியை அத்திரசத்திரங்களாற்றொலைத்து வெற்றிபெறுவதுமிகவுமரிதென்று நினைத்தவனாய், உடனே ஆகாயத்திற்பறந்து, அங்கிருந்தவண்ணமே அளவற்றமாயைகளைநடாத்திவந்தனன். அவையனைத்தையும்எமதையனாகிய முருகக்கடவுள் பயன்படாதபடிவிலக்கித், தமதுதேரையும் அவ்வானவீதியிற்செலுத்தி, அவன்முடியிற்கைகொண்டடித்து மறைந்தனர். உடனே அக்கந்தாசுரன் மூர்ச்சையாகிப்பூமியில்வீழ்ந்திறந்தனன். அதைச்சேனனென்றுங் குரோதனென்றுஞ் சொல்லப்படுகின்ற இரண்ட

வுணவீரர்கள் கண்டு, நாலாயிரவெள்ளஞ் சேனைகளோடு பூமிநெளியும்ப டியாக வந்து, கிரவுஞ்சகிரியைப்பிளந்த வேலாயுதமூர்த்தியை வளைத்து எங்குமிருள்மூடும் படியாக அளவற்றபாணங்களை மழைபோலச்சொரிந் து ஆர்ப்பரித்தார்கள். அதனால் பூதசேனைகளும் இலக்கர்களும் நவவீரர் களும் மனம்புழுங்கிவருந்தினார்கள். அதைப் பிரமனைச்சிறைபிட்ட சண் முகப்பெருமான்கண்டு குறுநகைசெய்து, உடனே தமதுவில்லில் தீயினு ங் கொடுமைபெற்றிருக்கின்ற அளவற்ற பாணங்களைத் தூண்டி, இமைப் போதில் பகைவர்விடுத்த பாணங்களையெல்லாம் பொடிப்படுத்தி நிலத்தில விழத்தள்ளி, மீட்டும் வேறே பத்துபாணங்களையெடுத்து ஒருதொடையி ற் பூட்டிப் பிரயோகித்தனர். அத்திவ்வியபாணங்கள் வெளிப்பட்டமாத் திரத்தில்சிட்சிட்த்தொனிகளுடன் ஆர்ப்பரித்து, அனற்பெருக்கையிறை த்துத், திருதிகென்றெரிந்து, ஒவ்வொன்று பத்துநூறு ஆயிரம் பதினாயி ரம் நூறாயிரம் கோடியென்னுங் கணக்கினு மேலாசப்பெருகி, வரிசைவ ரிசையாக நாற்றிசைகளினும் பரந்து, ஓர்கணப்போதில் அந்நாலாயிரவெ ள்ளஞ் சேனைகளையு மாயத்தன. இச்சம்பவத்தைச் சேனனுங் குரோத னுங்கண்டு, வடவைக்கனலும் ஆலகாலமு மொன்றுபட்டுச் சீறியெழுந்த தைப்போல ரவுத்திராகாரமாகக் கோபித்து, நாலாயிரவெள்ளஞ்சேனைக ளுஞ் சின்னபின்னப்பட வாட்டிய சத்துருவை இந்நிமிடத்திற் கண்டது ண்டப்படக் கொல்லுவோமென்று ஆக்கிரமித்தெழுந்து, தங்கள் கரங்க ளிற் பற்றியிருக்கின்ற விற்களைவளைத்துப், பலவித பாணகோடிகளையும்-பி ண்டி பாலம் முசலம் தோமரம் சப்பணம் முசுண்டி எறிவேல் சக்கரம் த ண்டாயுதமுதலாகிய படைகளையும்- பர்வதத்தின்மீது மேகங்கள் கவிந்து வருஷித்ததுபோல ஒன்றனந்த கோடிகளாகச் சொரிந்து, சிங்கநாதஞ்செ யதார்கள். இவ்வாறு அப்பாதகர்விட்ட படைகளுக்கெல்லாம் பிரதியாக வேறுவேறு பாணங்களை எமது குமாரதேவர்விடுத்து, அரைக்கணப் போ தில் அத்தனைபாணங்களையும் பொடிபடுத்தி, உடனே தமது பாசத்தை யெடுத்து அதிகவேகமாகப் பிரயோகித்தனர். அம்மாத்திரத்தில் அப்பா சமானது வானத்தெழுந்து, பலகோடி திவ்விய சரங்களைப்படைத்து, அ னலையிறைத்துத், திசைகளதிர வார்ப்பரித்து வந்து, அப்பாதர்க ளுடை ய வுயிரைப் பானஞ்செய்துமீண்டது. பூதவீரர்களும் இலக்கவீரர்களும் அளவற்ற மகிழ்ச்சியையடைந்து சண்முகக்கடவுளைத் துதிசெய்தார்கள். நவவீரர்கள் சத்துருக்களுடைய மனமெல்லாங் கலங்கும்படி வெற்றிச்ச ங்கமுழக்கினார்கள். சுப்பிரமணியக் கடவுள் சிந்துராசனுடைய அமைச் சனாகிய மித்திரனையும்அவனோடுவந்த வீரர்களையுங்கொன்றும், கோபமட ங்காதவராய், இன்னு மெதிர்ப்பவருண்டோ வென்று ரணக்களத்திற்று னே எதிர்பார்த்திருந்தனர். இவரிவ்வாறாக, மற்றொரு அமைச்சனாகிய க வுத்துவ னென்பவனை யெதிர்த்துநின்ற வீரபத்திரக்கடவு ளானவர் ஓர்க ணப்போதில் அவனுடையசேனைகளை யெல்லாங்கொன்று, எங்கும் பிண மலையாகக்குவித்து, உதிரவெள்ள மோடும்படியாகச்செய்துஆர்ப்பரித்த னர். அதைக் கவுத்துவன்கண்டு, பிரசண்டமாருதத்தின் மீது ஊழித்தீ யெழுந்து வருவதுபோலத் தனது தேரை விரைவிற்செலுத்திவந்து,வில் லைவட்டாகாரமாக வளைத்துப்,பூதசேனைகள்மீது அளவற்ற பாணங்களைக்

கோடைமழைபோலப் பிரயோகித்தான். அப்போது வீரபத்திரக் கடவுள் தமதுவில்லில் அநேகபாணங்களைத் தூண்டிப், பகைவன்விட்ட பாணங்களையெல்லாங் கண்டித்தெறிந்து, மற்றொருபாணத்தினா லவனுடைய தேரைமுறித்து நிலத்தில் வீழ்த்தினர். உடனே அவன் மற்றொரு தேரிலேற, அதையும் வேறொருபாணத்தைவிடுத்து சின்னபின்னப்பட்டுருளச்செய்தனர். பின்னர் கவுத்துவன் அதிகவீராவேசத்துடன் விழிகளில னற்பொறி பறக்கும்படியாகச்சீறி, ஓர்தண்டாயுதத்தைக் கரகரவென்றுசுழற்றிவீசி, வேறொரு ரதத்திற்பாய்ந்து ஆர்ப்பரித்தனன். அதை அண்டர் தருக்கினையழித்த வீரபத்திரமூர்த்திகண்டு,மேருகிரியை நிகர்த்ததமது வில்லில் ஆயிரங்கணைகளைத் தூண்டிப், பகைவன்விட்ட தண்டாயுதத்தைப்பொடிபடுத்தி, மீட்டும் நூறுசணைகளைப் பிரயோகித்து, அவனேறிநடாத்துகின்ற தேரோடு சேமத்தேர்களும் அச்சுவேறு மச்சுவேறு கொடிஞ்சிகைவேறு குத்துக்கால் வேறாகப் போகும்படி வெட்டியெறிந்தனர். உடனே அப்பாதகன் வடவானலத்தைப்போலச் சீறிக், கொவ்வைக்கனியையும் அரக்கையும்போலச் சிவந்த விழிகளிலிருந்து தீப்பொறிகளைக்கொட்டி,மீசைதுடிக்கக் கோபித்துச், சரேலென்று உடைவாளையுருவி,இடசாரி வலசாரியாகத் திரிந்து, வீரபத்திரக்கடவுளுடைய தேரின்மீது பாய்ந்தனன். அதை எமதையன்கண்டு, இனி இவனைவைக்கலாகாதென்றெண்ணி விரைவிற் றமதரையிற் சொருகியிருந்த சுரிகையை உறையிலிருந்துருவி, அக்கவுத்துவனுடைய கரத்தை வாளுட னற்று வீழும்படிக்குக்கண்டித்து அவன்கவுளில் அனற்பொறிபறக்கும் படியாகப் புடைத்தனர். உடனே அப்பாதகன் சோர்ந்து மலைபோல மண்ணில்வீழ்ந்துமாய்ந்தனன்.அதையவனுக்குத் துணையாகவந்த தமனென்பவன்கண்டு, அக்கினியைப் போல மனம்வேக வுதட்டைக்கடித்துப்,பலிக்குழன்றுதிரியும் பூதர்களையும்படைவீரராகக் கொண்டவன் நம்மவரோடு பகைக்கவுமெளிதாயிற்றோ, நல்லகாரியம்- இப்போதே இவன்கோபத்தையடக்கி வாட்டுவேனெனக் கோபித்து, மதயானையையொத்த வலிபெற்றவர்களாயிருக்கின்ற மூவாயிர வெள்ளஞ்சேனைகளைக் கூட்டிக்கொண்டு, ரணபேரி சயபேரி முதலிய பொற்பறைகளை அண்டங்களதிரமுழக்கி, வீரபத்திரக்கடவுளை நாற்புறத்தும்வந்து வளைத்துக்கொண்டனன். அப்போது வீரபத்திரக்கடவுள் சர்வசங்கார உருத்திரனைப்போலஆர்ப்பரித்து,மான்கூட்டத்தில் புலிபுகுந்ததுபோலவும்- எலிக்கூட்டத்தில் சர்ப்பம் புகுந்ததுபோலவும்- கொக்குக்கூட்டத்தில் இராசாளி புகுந்ததுபோலவும்- தமனென்பவனுடைய சேனாசமுத்திர மத்தியிற்புகுந்து,தேர்களையெடுத்துத்தேர்கள்மீதுமோதியும் யானைகளையெடுத்து யானைகள்மீது சாடியும்,குதிரைகளையெடுத்துக் குதிரைகள்மீதறைந்தும், ஒவ்வொருதடவையில் ஆயிரம்பதினாயிரம் ராக்ஷதர்களைச் சேர்த்தெடுத்துக் கசக்கி உதிரமோடப்பிழிந்தும்,சிலரைத் திசாதிசைகளிலெறிந்தும், சிலரைக்கடல்களில் வீசியும், சிலரைவானத் தெற்றியும், சிலரைக் கன்னங்கலங்கமோதியும், சிலரை ஒருகாலைமிதித்து மற்றக் காலைக் கரங்களிற்பற்றிப் பனைநாரைப்போலக் கிழித்தெறிந்தும், சிலரைக் கழுத்தை முறித்தும், சிலரைக் கால்களிரண்டையும்சேர்த்துக்குயவன்மண்ணைமிதிப்பதுபோலத்துவைத்தும், மின்னலைப்போலப் பிரகாசிக்கின்ற பட்டா

க்கத்திகளை யுதறிவீசி ஒவ்வொருதாக்கில் அளவற்ற சிரங்களைக் கண்டித்
தும், சிலரைச்சுரிகை ஈட்டிகளினாற் குடல்கள் வெளிப்பட்டிரையக் கு
த்தியும், சிலரை வாள்களைக்கொண்டு சின்னபின்னமாக வெட்டியும், இவ்
வாறு ரணபத்திரகாளிகண்டு களிக்கும்படியாகக் கரியதேகத்தைப் படை
த்திருக்கின்ற அவுணர்களை யெல்லாம்வாட்டிப், பம் பம் மென்றுவெற்றி
ச்சங்கினை முழக்கிநின்றனர். உடனே தமனென்பவன் அதிகவீராவேசத்
துடன் தனதுசேனை வினாவிற்செலுத்திவந்து, காத்திலேந்திய தனுவை
இருகுதைகளுமொன்றுபட வளைத்து, அதில் கணக்கிறந்தபாணங்களை அ
திகவேகமாகப் பூட்டிப் பிரயோகித்தனன். அவையனைத்தையும் ஓர் நொ
டிப்போதில் எமது வீரபத்திரக்கடவுள் தமது தண்டாயுதத்தினால் விலக்
கி, அவனைத் தேரோடுமெடுத்து ஆகாயத்திலெறிந்து, அவனுடையசேம
த்தேர்களையும் உடைத்துத் துகள்படுத்தினர். பின்னரப்பாதகன்ஆகாயத்
தினின்று பாதலலோகத்தில் வீழ்ந்து மூர்ச்சையாகி, மீட்டுந்தெளிந் தெ
ழுந்து, உடனே ஓர் வாளையுருவிக்கொண் டோடிவந்து, நீபராக்கிரம சா
லியேயானால் என்னோடு வாட்போர்செய்யக் கடவையென்று அட்டகா
சஞ்செய்தான். அப்போது வீரபத்திரக்கடவுள் இவன்திறத்தையறிவோ
மென்று தமதிடையிற்சொருகி யிருந்தவாளையுருவிக்கரத்திலெடுத்துச்,சூ
ழுவளிக் காற்றைப்போலவும் திருப்பாற்கடலைக் கடைந்த மந்தரகிரிக்கொ
ப்பாகவுஞ் சுழன்று சுழன்று, தமதுபாதத்திலணிந்த வீரகண்டாமணி க
லீர் கலீரென்று சத்திக்கும்படியாக விளையாடி, அவனுடைய தோள்களை
யுந் தாள்களையுங் கண்டதுண்டமாக வெட்டி, அவன் சென்னியானது க
டலிற்போய் விழும்படி யறுத்தெறிந்து, இன்னும்பகைவனுண்டோ வெ
ன்று நாற்றிசைகளினுந் தமது விழிகளைப்பரப்பி நகைததிருந்தனர். இவ
ரிவ்வாறாக, நந்திதேவரோடு எதிர்த்துநின்ற வீரராசனானவன் தனது நா
ல்வகைச் சேனைகளோடும் பாரித்தவிற்களைவளைத்துப்,பூதசேனைகளமீது
சோனைமாரியைப்போலப் பாணங்களைப்பிரயோகித்து, எழுமழு கப்பண
ம் பிண்டி பாலம் முசலம் சக்கரமுதலாகிய படைகளைவிடுத்து, அகோர
மாகிய உயுத்தத்தை விளைத்தனன். அதை நந்திதேவர்கண்டு, தமது அ
ரையிலிருக்கும் உறையிற்சொருகி யிருந்த வாளாயுதத்தை யுருவிக்கரத்
திற்பற்றிக்கொண்டு, தம்மை வளைத்துப் பொருகிருக்கின்ற அவுண வீரர்
களைச் சங்கரிக்கத் தொடங்கி, ஒவ்வொருவீசலில் அளவற்ற சிரங்களற்
று வீழவும், கணக்கற்றகரங்கள் வெட்டுண்டிறையவும், அமோகமாகிய
தோள்கள் சரியவும், அநேகங்கால்கள் மார்புகள் வயிறுகள் முதலியவுறு
ப்புக்களெல்லாந் தறிபட்டும் பிளந்தும் சரிந்தும்சின்னபின்னமாகிப்போ
கவுஞ்செய்து, சேனாதிபதியாகவந்த வீரராசனுடைய கரத்தை வில்லோ
டுங்கண்டித் தெறிந்தனர். உடனே அவன் மற்றொருகரத்தில் வாளேந்தி
வந்து, நந்திதேவருடைய ரதத்திற்பாய்ந்து அட்டகாசஞ்செய்தனன். அ
வனை இமைப்போதில் நந்திதேவர் தமதுவாளாயுதத்தா லிரண்டு துண்ட
மாகிவிழவெட்டி யெறிந்தனர். இம்முறைபே புட்பதந்தன், தன்னையெ
திர்த்துவந்த துவசனோடு அளவற்ற யுத்தங்களை விளைத்து அவனைமாய்த்
தனன். பூதராசன், ஆகாயனென்பவனை யெதிர்த்துக கொன்றனன். விக
டன், துர்த்தனென்பவனோடு போராடி அவனைவெட்டினன். சபலன் சா

ர்த்தூலனென்பவனை வளைத்து நாசஞ்செய்தனன். மற்ற அவுண வீரர்களையெல்லாம் பூதராசன் சூழ்ந்துமடித்தனன். கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே- இவ்வாறு சுப்பிரமணியக்கடவுள் முதலான வெண்மரும் தம்மை யெதிர்த்துவந்தமித்திரன் முதலாகிய அவுணவீரர்களை மாய்த்துச் செயவுச்சாகத்துட னிருபப, வேதாகமமுதலியவைகளாலுந்தேடிக்காண்பரிய பெருமையினைவாய்ந்த மயூரேசப் பெருமானனவர் தம்மை யெதிர்த்து நின்ற சிந்துரர்சனேடு செய்தபோரின்விதத்தையென்னென்று சொல்லுகேன், இரணியகருப்பன்- சாமளன்- அரன்- சோமன்- அர்த்தலோசனன்- இலம்பகன்னன்-சங்கன்-பிருங்கி-தாவானலன்-பஞ்சானனன்-என்னுஞ் சேனைத்தலைவர்கள் எண்மரும், முனிசசிறுர்களும், முன்னமயூரேசருடையகிருபையாலுண்டான பூதவீரர்களும், தனித்தனியே நால்வகைப் படைகளோடுஞ்சென்று, இரவுத்திரா காரமாகக்கோபித்துப்,பகைவருடைய நால்வகைசசேனைகளையு முறைமைப்படி யெதிர்த்தனர். அப்போது அவுணவீரர்கள்பாரித்தவிற்களைவளைத்துத், தீக்ஷண்ணியமானபாணங்களையும் கதை தோமரம பிண்டி பாலம் முசலம் கப்பண முதலாகிய படைகளையும் பூதவீரர்கண்மீது பிரயோகித்துப் போராடுகையில், பூதவீரர்கள் மனம்பொறுமல் மண்டியெரிந்து, தங்கள் தங்கள் கரங்களில் விளங்கும் விற்களைவளைத்து, நாரிகளைப்பிகிந்து, விஷத்தையொத்த தீக்ஷண்ணியமுள்ள பாணங்களைச் சேனைப்பெய்யலுக்கு மேலாகச் சொரிந்து, எழுவாயுதம் மழுவாயுதம் சூலம் வளை தடி இருப்புலக்கை முதலாகிய படைகளை அமோகமாகப பிரயோகித் தார்ப்பரித்தனர். இவ்விதமாக இருதிறச்சேனைகளும் பின்னிடையாமல், வடவையும் ஆலகாலமும் எதிர்த்துப் போராடுவதற் கொப்பாக வீராவேசங்களுடன் கொடியபோரை விளைத்து வரும்போது, அளவற்றபேர் தலைபிளந்தும், மூளைசிதறியும், கழுத்தொடிந்தும், பற்களுதிர்ந்தும்,மார்புநெக்குவிட்டும்,துடைமுறிந்தும் போயினர். அனேகரதங்கள் சின்னபின்னப்பட்டு நுறுங்கின. அமோகமாகியயானைகள் கண்டதுண்டப்பட்டுக் குவிந்தன. கணக்கற்றகுதிரைகள் அதப்பட்டுருண்டன. அப்போது உதிரமானது பெருத்துப் பூரணப்பிரவாகமாக இரைச்சலிட்டோடியது. சிலவீரர்கள் தமக்கெதிரில்வேல்வரவு மஞ்சாது இமையாநாட்டத்தினரா யிருந்துதம்மைப்பொருதவரும்பகைவரைத் தாம்பொருது மாய்த்தார்கள். சிலவீரர்கள் தங்கள்கையால் விடும்படைவழக்கத்தைக் கருதுவதன்றித் தங்கள்மெய்யேறும்படைகளைச்சிறிது மதியாதவர்களாயப் போர்செய்தார்கள். சிலவீரர்கள் சகல படைகளையுமிழந்து மாளுங்காலத்துந் தங்கள் மெய்புதைந்த படைகளைப் பறித்துச் சமர்செய்தார்கள். சிலவீரர்கள் தாங்கள்கொண்ட வஞ்சினத்தை இனிது முடித்தார்கள். சிலவீரர்கள் அவ்வஞ்சினமுடிந்ததென்றுமகிழ்ந்து உயிர்விடுத்தார்கள். சிலவீரர்கள் தங்கள்சிரங்கள் மண்ணில் வீழ்ந்துஞ் செஞ்சோற்று நிலையிற் பிழைத்திலமென் றுடுவார்போலக் கவந்தங்களாயெழுந்தெழுந் தாடினர்கள். சிலவீரர்கள் பகைவர்விடுத்தகணைகளினுலிறந்துசொர்க்கமடைந்து அரம்பையர்களுடைய தனங்களாகிய யானைகளோடுங் கண்களாகியகணைகளோடும் பொருது சந்தோஷித்தார்கள். சிலவீரர்கள் ஒருவரையொருவர்குந்தத்தினுல்மார்புபிளக்கும்படிகுத்திப்பின்

னாிருவரும் சொர்க்கத்தையடைந்து தெய்வ மங்கையரோடு குலாவினார்கள். சிலவீரர்கள் பகைவரோடு பொருத இளைப்பினால் சோர்ந்துபிணங்களையே அணைகளாகக்கோலிசசார்ந்துகொண்டுமற்றையர்செயயும்போரைப்பார்த்துக்கொண் டிருந்தார்கள். சிலவீரர்கள் தங்கள்காதலியரோடு கலவிசெய்யுங் காலத்தில் அக்காதலியர் கையடிக்குங் காலுதைக்கும் வாய்க்கடிக்கும் எவ்வாறு மகிழ்வார்களோ, அவ்வாறே பகைவர் விடுகின்றபாணங்கள் தங்கள் மேனியிற்பாயும் பொழுதுஞ் சிறிது நோதலையறியாதிருந்தார்கள. இவ்வாறு சமர்க்களத்தில் இருவகைச்சேனைகளும் வீரசொர்ககத்தினையே முக்கியமாகக்கருதிப் போராடிக்கொண் டிருக்கையில், என்னையாட்கொள்ளவல்ல மயூரேசமூர்த்தியினுடைய சேனாதிபதிகளும் சிந்துராசனுடைய சேனாதிபதிகளுங் கைகலந்து, ஒருவரையொருவர் வெல்லவேண்டுமென்னுஞ சபதத்தோடு அகோரமாகிய போரைவிளைத்து, இரணியகருப்பன் காலாசுரனைமாய்த்தனன்.சோமன்பிரசண்டாசுரனையழித்தனன். இரத்தலோசனன் பிரபலாசுரனைக் கொன்றனன். இலம்ப கன்னன் சண்டாசுரனுடைய வுயிரைப்போக்கினன். சங்கன் சங்காசுரனுடைய வாழ்நாளையறுத்தனன். பிருங்கிபவுமாசுரனுடையஆவியையுண்டனன். தாவாலன் முண்டாசுரனைவெட்டி யெறிந்தனன்.பஞ்சானனன்கண்டாசுரனுடைய சிரத்தையறுத்தனன். இவ்வாறு மயூரேசருடைய சேனைத்தலைவர்கள் சிந்துராசனுடைய சேனைத்தலைவர்களைமாய்த்தபின்பு, பூதவீரர்களெல்லாம் செயவுச்சாகத்துடன் சிந்துராசனுடைய சதுரங்க சேனைகளிற்புகுந்து, சிலர் வானத்தையளாவித் திசைகளிற் கிளைகளைப்பரம்பித் தழைத்தோங்கியிருக்கின்ற மராமரமுதலிய பருத்தவிருக்ஷங்களைவேருடன்பிடுங்கிச் சுழற்றிமோதியும், சிலர் மேருகிரிக்குச் சமதையாகப்பாரித்திருக்கின்ற பர்வதங்களைப் பெயர்த்தெடுத்துக் கடாவியும்,சிலர்தீயையிறைக்குங் கழுமுள் சக்கரம் பிண்டி பாலம் வேல் தண்டமுதலிய ஆயுதங்களைச் செலுத்தியும், சிலர்யானை யணிகளிடத்திற் பாயந்து அளவற்ற துதிக்கரங்களை யொன்றாகச்சேர்த்துப் பிடித்துக் கிறுகிறெனச் சுழற்றிக் குதிரைப்பந்திகள் மீதிற் சாடியும், சிலர்சொன்ன மயமாய் ரத்தின காந்திகளை வீசிப் பாரித்திருக்கின்ற ரதபந்திகளிற்பாயந்து, ஆயிர மாயிரமாக விசாலமாகிய கரங்களினால்வாரி அளவற்ற மதயானைகள் சின்னபின்னப்பட்டுருளமோதியும், சிலர் கோபாவேசங்களுடன் குதிரைப்பந்திகளிற்புகுந்து அதிவேகத்தோடும் பாயவல்ல பதினாயிரங் குதிரைகளைச் சேர்த்தெடுத்து ஆயிரங்கோடி சுத்தவீரர்களாகிய அவுணர்கள் பூமியிலறைபட்டிறக்க வீசியும், சிலர்சில அவுணவீரர்களைக் குத்திக் கொன்றும் மண்டைகளையுடைத்தும், கால்களைமுறித்தும், கரங்களையொடித்தும்,மார்புகள் பிளந்துருளத் தாக்கியும், வாய்பிளக்கவறைந்தும், வாளாயுதங்கொண்டு வெட்டியும், சூலாயுதங்களினாற் குத்தியும், பிண்டி பாலங்களினால் மோதியும், தண்டங்களினாற் குத்தியும், சக்கரங்களைச் செலுத்திச் சங்கரித்தும்,இவ்விதமாகப்பூதவீரர்கள் விறி அவுணவீரர்களாகிய சதுரங்கசேனைகளை நாசப்படுத்தி வருவதையும் முன்னர் தனது சேனாதிபதிகள் மாண்டதையும் அவுணர் பெருமானாகிய சிந்துராசன்கண்டமாத்திரத்தில், விஷப்பற்களையுடைய சர்ப்பத்தைப்போலச்சீறி, நல்லகாரிய

ம் நல்லகாரியமென்று கோபநகைசெய்து, அபலராகிய இப்பூதங்கள் சூரமுள்ள நம்மவரை இப்படிக்கும் வாட்டுவரோ, இந்நிமிடத்தில் இவர்கள் வீருப்பையடக்கிக் கொல்லுவோமென்று காலாந்தகனைப்போலக்கொதித்தெழுந்து, தனதுவில்லை மண்டலாகாரமாக வளைத்து, சகலருந் திடுக்கிடத்தக்கதாகக் குணத்தொனிசெய்து, ஒருபுறத்தில் விஷயத்தொவையவிட்டிருக்கின்ற கொடியபாணவருஷங்களைப் பொழிந்தும், ஒருபுறத்தில் கணிச்சி சக்கரம் வேல் சூலம் முசலம் கப்பணம் பிண்டி பாலம் முதலிய படைகளைக்கடாவியும், ஒருபுறத்தில் பிரமாஸ்திரம் வருணாஸ்திரம் குபேராஸ்திரம் அக்கினியாஸ்திரமுதலாகிய தெய்வப்படைகளைப் பிரயோகித்தும், ஒருபுறத்தில் பூதங்கள் வீசுகின்ற விருக்ஷங்களும் பர்வதங்களும் பொடிபடும்படியாகப் பலகணைகளைத் தூண்டியும், இவ்வாறு சூறாவளியைப்போல நாற்றிசைகளினுஞ் சுழன்றுசுழன்று அமோகமாக வீசிய அத்திரசத்திரங்களானவை வலையை வீசியதைப்போலப் பலதிசையிலுஞ் சுற்றிக்கொண்டு, பூதவீரர்களுடைய பாரித்த கால்களைக்கண்டித்தும், பருத்திருக்கின்ற தோள்களைச்சரித்தும், ஆசானுபாகுவாக நீண்டிருக்குங்கரங்களைத் தறித்தும், சிவந்தமயிரையுடைய சிரங்களை வெட்டியெறிந்தும் விசாலமாகிய மார்பைப்பிளந்தும், தும்சஞ்செயதன. அதனால் பூதவீரர்கள் அல்லோலகல்லோலப்பட்டு, மண்டைதிறந்தும், மூளைகள் சிதறியும், விழிகள்தெறித்தும், வஞ்சினம்பேசும் வாயகள்பிளந்தும், பற்களுதிர்ந்தும், அந்திவானத்தையொத்த தலைகள்பறந்தும், வலியகழுத்துகளொடிந்தும், புயமலைகள்சரிந்தும், கரங்கள்முறிந்தும், மார்பு நெக்குவிட்டும், வயிறுகிழிந்தும், குடல்களிளைந்தும், துடைகள்தகர்ந்தும், கால்கள் தரிந்தும், சரீரமெங்கும் பத்தல்பத்தலாய் வெடித்தும், உறுப்புகளனைத்துஞ் சக்கைச்சக்கையாக வெட்டுண்டும், சதைந்தும் சிதைந்தும்நிலத்திற்புதைந்தும் அலைந்தும் உலைந்தும் களைத்தும் இளைத்தும் துடித்தும் பதைத்தும்சோர்ந்தும் மூர்ச்சித்தும் துகள்பட்டும் மாண்டும் மயங்கியும் இவ்விதமாகப் படாதபாடுகள் பட்டுமடிந்தனர். அதை சீவகாருண்ணியம் பத்திமான்மிய முதலிய நல்லொழுக்கங்களை வாய்ந்த கணநாதர்களுக்குள் பஞ்சானனன்கண்டு, பாபமே உருக்கொண்டிருப்பதைப்போலக்கரியதேகங்களைப்படைத்த அவுணர்கட்குத் தலைவனாகிக், கொலைபாதகங்கள் குடிகொண்டிருக்குமனத்தினைப்பெற்றசிந்துராச னெதிரிற்றனதுதேரை அதிகவேகமாய்ச்செலுத்திக்கொண்டுவந்து, வடவாமுகாக்கினியைப்போலச் சீறிப்பாரித்திராநின்ற தனதுவில்லை வளைத்து, அண்டங்களதிரக்குணத்தொனிசெய்து, சத்தசாகரங்களும்ஒடுங்கிவாடும்படிக்கி ஆரப்பரித்துக், குரூரமாகிய ஈராயிரம்பாணங்களைக் கோடைமழைபோலப் பொழிந்து, பூதசேனைகள்மீது பகைவன்விட்ட பாணங்களையெல்லாம் பொடிபடுத்தி, மீட்டுந் தீயையொதத ஆயிரம்பாணங்களை அவன்சரீரமெங்கும்போர்க்கும்படியாகப் பிரயோகித்தனன், உடனே சிந்துராசனானவன் தனதுவில்லில் ஆயிரம்பாணங்களைத் தூண்டி, எதிர்த்துவருகின்ற பாணங்களைச் சின்ன பின்னப்படுத்தி, மீட்டும் பத்துபாணங்களால் கணநாதனுடைய தேரைப்பொடிபடுத்தினன். அப்போது பஞ்சானனன் வேறொரு தேரிற் பாய்ந்து, நூறு பாணங்களைக்கொண்டு சிந்துராசனுடைய சாரதியை வெட்டியெறிய, உட்

னே அவன்வேறொரு சாரதியைத்தனது ரதத்திலிருத்தி.ஒருவச்சிர வா ளியை யெடுத்து நெற்றிக்கிலக்காகப் பிரயோகித்தனன். அது வெளிப் பட்டுக் குறிதப்பாமல் வந்து பாய்தலும், பஞ்சானனன் உதிரப்பிரவாக மோடும்படியாக விழுந்துமடிந்தனன். இச்சம்பவத்தைத் தாவானலன்க ண்டு,காலாந்தகனைப்போலக் கோபித்துத், தனதுவில்லில் நூறுகணைகளை ஒரே தொடையாகத் தொடுத்துப் பிரயோகித்துச் சிந்துராசனுடைய வி ல்லைப்பொடி படுத்தினன். உடனே அவன் வேறொரு வில்லைவளைத்து அ ளவற்ற கணைகளைத்தூண்டித்,தாவானலனுடைய தேரை முறித்தெறிந்து அவன்வேறொரு ரதத்திற்பாய் வதன்முன் தன்னேடுற்பவித்த சூலாயுத த்தை மார்புக்கிலக்காகப் பிரயோகித்தனன். அவ்விலக்கின்படி அச்சூலா யுதமானது அதிவேகமாய்வந்து மார்பிற்பாய்தலுந்,தாவானலன் பதைப தைத்துச் சோர்ந்து பூமியில்வீழ்ந்தனன். அதைப்பிருங்கிகண்டு விழிகளி ல் அனற்பொறிபறக்கக் கோபித்து,ஓர்நொடிப்போதில் ஆயிரங்கணைகளை த்தூண்டிச்,சிந்துராசனுடைய கிரீடத்தையும் வில்லையுந் தேரையுங்கீழே வீழ்த்தி,அவுணர்களெல்லாங் கலங்கும்படியாகச் சங்கநாதஞ் செய்தன ன். உடனே சிந்துராசன் நாணமுற்று,மனதில் மானம்வாதிக்க வெழுந்து வேறேயொரு தேரையும வில்லையுங்கொண்டு எதிர்வந்து, பிருங்கியினு டைய வில்லை ஒடித்தெறிந்து, அவன் மார்புக்கிலக்காகப் பத்து கணைகளை ப் பிரயோகித்தான். அக்கணைகள்வந்து பாய்தலும் பிருங்கி மூர்ச்சையா கி,மீட்டுந் தெளிந்தெழுந்து,மிகவுங்கூர்மையுள்ள நூறுவயிரக் கணைகளை அவன்மார்புக்கு நேராக விடுத்தான்.அவைகளவன் சரீரத்திற்பட்டமாத் திரத்தில் முனைகளொடிந்து துகள்பட்டுப் பறந்துபோக, மீட்டும் ஓர்தண் டாயுதத்தை யெடுத்துக் கரவேகமாகச்சுழற்றி வீசினன். அதற்குச்சிந்து ராசன் சிறிது முறுவலித்துத்,தனதுகையிலிருந்த தண்டாயுதத்தினால் பி ருங்கிவிடுத்த தண்டாயுதத்தினையும் அவன் வலியையுமாயத்து ஆர்ப்பரி த்தனன். அப்போது சங்கன் ஆலகாலவிடம்போலக் கொதித் தெழுந்து தனதுவில்லில் அளவற்றகணைகளைப்பிரயோகித்துச்,சிந்துராசனுடையவி ல்லையும் கவசத்தையும் கொடியையும் பொடிசெய்தனன். உடனே அவு ணராசன் வேறொருவில்லையெடுத்து வளைத்து,எட்டுபாணங்களால் சங்க னுடைய தேரை ஒடித்தெறிந்தனன். பின்னர் சங்கன் வேறொரு ரதத்திற் பாய்ந்து,தனதுவில்லில் பத்துக்கணைகளைத்தூண்டிப், பகைவனுடைய க விகையைக்கீழேவீழ்த்தி,மீட்டும் ஐம்பதுகணைகளைப்போக்கி அவனுடை யரதத்தையும் பொடிபடுத்தினன். சிந்துராசன் உடனே வேறொரு தே ரிலேறி, ஓர்மழுவாயுதத்தை அதிவேகமாகப் பிரயோகித்தனன். அதைச் சங்கன் தனது கதாயுதத்தினுற் பொடிபடுத்தி, மற்றொருவயிரவாளியால் அவ்வவுணராசன்கட்டிய நெற்றிப்பட்டத்தை யறுத்தெறிந்தனன். அத னுல் சிந்துராசன் நாணங்கொண்டு,அள்ளிப்பிசைவான்போல வார்ப்பரி த்து.ஓர்வேலாயுதத்தை அவன்தோளுக்குக் குறிபார்த்துப் பிரயோகித் தான். அதுவெளிப்பட்டுத் தனதுதோளிற்பாய்ந்த மாத்திரத்தில்சங்கனு னவன்தனது உடைவாளினுல் சிந்துராசனைக்கீழே விழத்தள்ளி, மிகுந்த கோபத்தோடுஞ் சோபித்து நிலத்தில்வீழ்ந்தனன். உடனே அவுணராச ன் உய்ந்தோமென்றெழுந்து தனதுதேரிற்பாய, அதை இலம்ப கன்னன்

கண்டு,இவன் வலியைச் சற்றுநேரத்திற் கலக்கிவாட்டுவேனென்று சபத ங்கூறிச், சர்ப்பங்களைப்போல விஷச்சுவாலையை வீசவல்ல சுடுரமாகிய பாணங்களை அமோகமாகப் பிரயோகித்தான். அவை யனைத்தையும் சிந் தூராசன் ஓர்நொடிப்போதிற் றுகள்படுத்தித், தனதுவில்லில் ஐந்துபாண ங்களைத்தூண்டி இலம்பகன்னனுடைய தேரைச் செலுத்தும் சாரதியின் சரீரத்தைச் சல்லடைக்கண்களாகத் துளைத்து மாய்த்தனன். பின்னர்கண நாதன் வேறொரு சாரதியையிருத்தி,நூறுபாணங்களால்சிந்தூராசனுடை ய ரதசாரதியைக் கொல்ல,உடனே சிந்தூராசன் ரவுத்திராகாரமாகக்கோ பித்து,வேறொருசாரதியாற் றனதுதேரைநடாத்தி, நூறுதீக்ஷண்ணிய மு ள்ள பாணங்களால கணநாதனுடைய வில்லையும் ரதத்தையும் ஓடித்தெ றிந்தனன். அதற்கு இலம்பகன்னன் சிறிது மிளையாது வேறொருரதத் தையும் வில்லையுங்கொண்டு,அஷ்டதிசைகளு நடுங்கும்படியாகத் தனது சக்கராயுதத்தை யெடுத்துக் கரகரவென்று சுழற்றி வீசினன். அதுவெ ளிப்பட்டமாத்திரத்தில் அவுணர்களெல்லாம் அல்லோலகல்லோலப்பட் டுத் திகைக்கும்படியாகவாட்டிச் சிந்தூராசனுடைய கவசத்தையறுத்தெ றிய, அதனாலவன் மிகுந்தகோபங்கொண்டு,கணநாதனேறி நடாத்துந்தே ரைமுறித்தனன். உடனே இலம்பகன்னன் வேறொருரதத்திற்பாய,அதை யும் அவ்வாறேமுறித்து அவனெடுத்த வில்லையுங் கண்டித்தெறிந்தனன். உடனே இலம்பகன்னனுக் கதிககோபம் பிரவேசித்துக்,காளகூடத்தைப் போல வெரிந்தோடித்,தனது வாளைச சிந்தூராசனுடைய மார்பில் வீசி னன். அவனுந் தனது வாளைவீசி இலம்பகன்னனுடைய ஆண்மையை யடக்கினன்.கணநாதன் வீசிய வாளானது சிந்தூராசனுடைய மார்பிற்று க்கிய மாத்திரத்தில் கூர்மழுங்கித் துகள்பட்டுப் போயது. அவ்வற்புதத் தை ஆரத்தலோசனன்கண்டு,அவன்பெற்றிருக்கின்ற வரத்தின் முயற்சி யை நினைந்து அதிசயித்து, இன்னும் இவன் பராக்கிரமத்தைக் கண்டிடு வோமென்று தனது வில்லைக்குனியவளைத்து,ஆலகாலத்தைப்பொழியும் படியான ஆயிரம் பாணங்களைத்தொடுத்துப்பிரயோகித்து,ஓர்கணப்போ தில் சிந்தூராசனுடைய தேரையும் வில்லையு நீறுக்கி,அவன்மற்றொருதே ரையும் வில்லையுங் கொள்ளுவதன்முன் மீட்டும் ஆயிரம்பாணங்களைக் க டாவி, அவன்வைத்திருந்த சேமத்தேர்களை யெல்லாம் பொடிபடுத்தி ஆர் ப்பரித்தனன். உடனே சிந்தூராசன் ஆரத்தலோசனனுடைய தேரிற்பா ய்ந்து,அதிககோபத்தோடுநெறநெறென்றுபற்களைக்கடித்துத்,தனதுகாலா ற்பலங்கொண்டமட்டு முகைத்துக்,கையிற்பிடித்த தண்டாயுதத்தினால்அ வன் சிரத்தில் மோதிமாய்த்தனன். கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்க ளே-இவ்வாறு சிந்தூராசனனவன் பஞ்சானனன்முதலியகணநாதர்களோ டு போராடி வெற்றிகொண்டும், தனக்கிருந்த அளவற்றரதங்களும படை களும் மாண்டுபோனமையைக் குறித்து மனநொந்து,மீட்டுந்தேறி, ஓர் கு திரையினமீது ஆரோகணித்து,இன்னும் எதிர்ப்பவருண்டோவென்றுநா ற்றிசைகளிலும் விழிகளைப்பரப்பிஅச்சமர்க்களத்திற்றனேயிருக்கும்போ து,சிலதூதர்கள்கண்டகநகரத்திற்கோடி,அவனிருக்கின்றநிலைமையைஅவ ன்மைந்தர்களுக்கறிவித்தனர் உடனே அவர்கள் விருப்பாக்கனென்னுமொ ர் சேனதிபதியைக் கூவியனுப்ப,அவன் ஈராயிரவெள்ளஞ் சேனைக ளோ

டு ஆயிரம் ரதங்களும் புடைசூழ வாயுவேகத்தினு முந்திவெளிக்கொண்டு வந்து,சமர்க்களத்தில் ஏகாங்கியாய்க் குதிரையின்மீ தாரோகணித்திருக்கின்ற சிந்துராசனைப்பணிந்து நின்றனன். அவனைச் சிந்துராசன் பார்த்து, ஓ விருப்பாக்கனே,இந்த அமரின்குட்டத்தை யாமே அளப்போம்-நீ அருகிற் சும்மாயிருவென்று சொல்லினன். அச்சமயத்தில் கணநாதருளொருவனான சோமனென்பவன் தனது தேரைக்கொண்டு வந்து எதிரில்நிறுத்தி,வில்லை வட்டாகாரமாக வளைத்துச், சோனை மாரியைப்போல அளவற்றபாணங்களைப் பிரயோகித்தான். அதை அவுணர்கோனாகிய சிந்துராசன்கண்டு நகைத்துத்,தனதுவில்லில் ஆயிரங் கணைகளைத்தூண்டிக், கணநாதன்விட்ட பாணங்களையெல்லாம் பொடிபடுத்தி, மீட்டுங் கூர்மையுள்ள ஐந்துகணைகளை அவன் புயங்களுக்கிலக்காக ஏவினன். உடனே சோமன் தனதுவீரமனைத்துங்குன்றி வீழ்ந்தனன். அதை அரனென்பவன்கண்டு,மனம் பதைபதைக்கப் பொங்கி, இபபாதகனை இந்நிமிடத்தில் வாட்டுவேனெனச் சபதங்கூறிவந்து, தனது வில்லில் ஓர்பாணத்தைத் தொடுத்துப் பிரயோகித்துச், சிந்துராசனுடைய பொன்முடியை மண்ணில் வீழ்த்தினன். உடனே அவன்வேறொரு பொன்முடியைத் தரித்து, இரண்டுபாணங்களால் அக்கணநாதனுடைய வில்லையும் ரதசாரதியையும் வெட்டியெறிந்தனன். பின்னர் அரனானவன் வேறொரு சாரதியையும் வில்லையுங்கொண்டு, அதிவேகத்தோடு ஆறுபாணங்களைத் தூண்டிச், சிந்துராசனுடைய கவசத்தையும் வில்லையும் அறுத்தெறிந்தனன். அதனால் அசசிந்துவானவன் வெகுண்டு, விண்டுவினுடையசக்கராயுதத்தையும் வெந்நிட்டோடச் செய்ய வல்ல தனது சக்கராயுதத்தை யேவினன். அதை அரனானவன் தனது வச்சிராயுதத்தினாற் கண்டித்து, ஓர் தண்டாயுதத்தை அவன்மார்புக்கிலக்காகக்கரகரவென்று சுழற்றிவீசினன். உடனேசிந்துராசன் அதனைத்தனது கதாயுதத்தினாற் றூளாக்கித்,தைவீகமுள்ளஓர்வேலாயுதத்தை யெடுத்து அதிகவிசையோடும் பிரயோகித்தனன். அவ்வாயுதம் வெளிப்பட்டமாத்திரத்தில் அனற்சமூகங்களைப் பெருக்கிக்கொண்டுவந்து, அரன்விடுக்கின்ற பாணங்களையெல்லாம் விழுங்கி, அவன்மார்பி லுருவிப் போயது. அச்சம்பவத்தைச் சாமளன்கண்டு, இவன் மனவுறுதியைச் சற்றுநேரத்திற் கலக்கி வாட்டுகின்றேனென்று ஆக்கிரமித்துக், தனது கரத்தில் விளங்கும் வில்லைவளைத்து, ஒரேமுகத்திற்பதினாயிரங்கணைகளைத்தூண்டி ஆர்ப்பரித்தனன். உடனே அவுணர்பெருமானும் பதினாயிரங்கணைகளைத்தூண்டி அவையனைத்தையும் பொடிபடித்தி, மீட்டு நாலுகணைகளைத் தொடுத்து,அக்கணநாதனேறி நடாத்துகின்ற ரதத்தையும்சேமத்தேர்களையு முறித்து வீழ்த்தினன். பின்னர் சாமளன் ஓர் கதாயுதங் கொண்டு நடந்து, சிந்துராசனேறி நடாத்துகின்ற குதிரையின்மீது மோதினன். அதை அச்சிந்துராசன் கண்டவுடன் மிகுந்த வீராவேசங் கொண்டு, தனதுமுத்தலைச் சூலத்தால் அவன்நெற்றியிற் குத்தி மாய்த்தனன் அக்கொடுமையை இரணிய கருப்பன்கண்டு, இப்பாதகனால் நம்மவர்கள் மாய்வது வெகுநேர்த்தி வெகுநேர்த்தியெனப் பொங்கித், தனது வில்லில் ஐந்துபாணங்களைப் பிரயோகித்துச் சிந்துராசனுடையகுதிரையைநிலத்திலுருட்டினன். உடனே அச்சிந்துராசன் இடியேற்றினைப்போலக்கர்ச்

சித்தூஓடி, இரணியகருப்பனைத் தேரோடுமெடுத்து ஆகாயத்திலெறிந்து, வேறொரு குதிரையிற்றானேறி ஆர்ப்பரித்தனன். பின்னர் கணநாதன்தனது ரதம் உடைந்து போகலும் வேறொருரதத்திலேறி, அழலைச் சொரியும்படியான பத்து பாணங்களால் பகைவன்விடுகின்ற பாணங்களை யெல்லாங்கண்டித்து, மற்றொருபாணத்தால் அவன் கையிலேந்திய வில்லையுமொடித்தெறிந்தனன். உடனே சிந்துராசன் வேறொரு வில்லையெடுத்து, கணநாதனுடையரதசாரதியைக்கீழேவீழ்த்தி, யமனுங்கண்டஞ்சத்தக்கஎழுபாணங்களை அவன்நெற்றிக்குக்குறிபார்த்துப் பிரயோகித்தான். அதனால்இரணியகருப்பன்மூர்ச்சித்து,மீட்டுந்தெளிந்தெழுந்து, தனதுமுத்தலைச் சூலத்தையெடுத்தோடி அவுணர் பெருமானுடையமார்பிலழுத்தினன் அஃது அமன் மார்பிற்பட்டமாத்திரத்தில் முனைமழுங்கிப் போனதைக்கணநாதன்கண்டு தான்வேறொருபடையையெடுக்க, அதற்குமுன்னம்சிந்துராசன்ஓர் வச்சிராயுதத்தை யெடுத்து வீசினன். பின்னர் அவ்வச்சிராயுதந்தாக்கிய வேகத்தால்இரணியகருப்பன்சோர்ந்துமடிந்தனன். இவ்வாறுசகலமகிமைகளினுஞ் சிறந்த கணநாதர்களெல்லாம் ஒவ்வொருவராய் அவுணராசனோடு யுத்தஞ்செய்து சின்னபின்னப்பட்டதை என்னையடிமையாக வுடைய மயூரேசமூர்த்திகண்டு, இத்தன்மைத்தான மேலான பராக்கிரமசாலியை நாமேயுத்தஞ்செய்து ஆட்கொள்ளல் வேண்டுமெனத் திருவுளங்கொண்டனர். அக்குறிப்பைச் சாரதியாகிய வாயுதேவனறிந்து, சொர்ணமயமாக விளங்கி நவரத்நங்கள் சொலித்திருக்குந் தெய்வீகத்தேரை மணிகள்சத்திக்க மனோவேகத்தினும் விரைவாகத்துரத்திக்கொண்டு சென்று, ரணகளத்திற் சயசாலியா யுலாவிக்கொண்டிருக்கின்ற சிந்துராசனுக்கு நேராகநிறுத்தினன். அப்போது ஆயிரங்கோடி ஞான சூரியர்களும் ஓர்வடிவம்பெற்று உலகங்களிற் பரந்திருக்கின்ற அந்தகாரப் பெருக்கினையும் ஆன்மகோடிகளிடத்திற் செனித்திருக்கின்ற அஞ்ஞானவிருளையுந் துரத்துமாறு விசாலமாகிய பரவெளியினின்றுஞ் சமர்க்களத்திலெழுந்தருளியதைப்போல விளங்கிய மயூரேசமூர்த்தியின் சோதிமயமானவடிவைச்சிந்துராசன் கண்டு, சிரோ ரத்நங்களினாற் சமைத்துத்தகத்தகாயமாகச் சொலித்திருக்கின்ற வயிரமுடியின் சுந்தரத்தையும், சகத்திர தளத்தோடுங்கூடிய பொற்றாமரை பூத்திருப்பதற் கொப்பாகவிளங்குந் திருமுகமண்டலத்தையும், சூரியகிரணங்களை வீசுகின்ற மகரகுண்டலங்கள் துலங்குஞ் செவிகளின்கோலத்தையும், கிருபைக்கிருப்பிடமாகிய குளிர்ந்தபார்வையைப் பரப்பும் விழிகளின்குணாதிசயங்களையும், வயிரமலையையொப்பாகப் பரந்து முப்புரிநூல் முத்துமாலை மோகனமாலை முதலியவைகள் புரளநின்ற மார்பினது மங்களகரத்தையும், நவரத்நமயமான வாகுவலயங்களைச்சூடிப் பர்வதாகிருதியாகத்திரண்டு காட்டும் புயங்களின் தாஷ்டீகத்தையும், வயிரமோதிரங்களைத் தரித்திருக்கின்ற விரல்களின் சிங்காரத்தையும், ஆசாநுபாகுவாய் நீண்டிருக்குந் திருக்கரங்களின் விளக்கத்தையும், அவைகளிற் பற்றியிருக்கும் அங்குசம் பாசமுதலாகிய படைகளின்பராக்கிரமத்தையும், அடியார்களுடையஇதையவோடையில்மலர்ந்து சிவானந்தத் தேனைச சொரிந்து யாவராலுமெழுதுதற்கரிய வேதச் சிலம்புகள் சத்திக்க விளங்குந் தெய்வத்தாமரையை நிகர்த்த திருவடிகளி

ன் மகத்துவத்தையும், மற்றுமுள்ள சிறப்புக்களையும்நேராகத் தரிசித்தன
ன். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே - தம்மை வந்திக்குந் தொ
ண்டர்களேயல்லாது மற்றையர்கள் கனவிலுங் காண்டற்கரிய நின்மலக்க
டவுளாகிய விநாயகமூர்த்தியினுடைய சுயஞ்சோதிப் படிவத்தை ராசா
திராசனாகிய சிந்துவானவன் நேரிற்கண்டு அதுபரியந்தஞ் செய்திருந்த
கொடியவினைகளனைத்தையும் போக்கப்பெற்ற சிறப்பினால், இனி அவ
ன் சமர்க்களத்தில் கொடியபோரைச் செய்து மடிந்தாலென்ன, அல்லது
கிரமமாகக் காலம் நேர்ந்திறந்தாலென்ன. தவங்களிற் சிறந்த முனிபுங்க
வர்கள் ஞானவான்கள் தேவர்கள் முதலாயினோர் தேடித்தேடி இன்னமு
ங்கண்டிறியவொண்ணாத மங்களகுண சம்பன்னராகிய மயூரேசமூர்த்தி
யை அண்டர்களையெல்லாஞ் சிறைப்படுத்தி எக்காலத்துந் தீங்கினையே
பாராட்டிவருஞ் சிந்துராசனானவன் தனது இருவிழிகளாலுங்கண்டு களி
த்து வாழத் தரிசிக்கப்பெற்றன னென்றால், அவன்முன்னஞ் செய்திருக்
கின்ற தவங்களின் முயற்சியை யாவரால் கணித்துப் பேசக்கூடும்.மேலு
ம் அவனிடத்தில் தமக்கிருக்கின்ற பரிபூரணகடாக்ஷத்தினால் ரணக்கள
த்தில் அவனை யொருபொருளாகமதித்துச் சண்டைகொடுக்க வந்தவன்
போலச் சடிதியிலெழுந்தருளி அவனது இரண்டுவிழிகளினாலுந்தரிசிக்கு
ம்படியாகத் தமது அருமைத் திருமேனியை யெளிதிற்காட்டிக் கிருபா
நோக்கத்தினையும் பாலித்தனரென்றால், தேவதேவோத்தமராகிய விநாய
கப்பெருமானுடைய திருவிளையாடலை யாவராலறிந்து போற்றப்படும்.இ
வ்வாறு சிந்துராசன் மயூரேசமூர்த்தியினுடைய சுயம்பிரகாச சொரூபத்
தை நேரிற்காணப்பெற்றும், பிராரத்த வினையின் சம்பந்தப்பட்டவனாயி
தனைப்பேசுவதாயினன். ஓ சிறுவனே- நான்பலநாள் உள்ளமும் உடலு
ம்வருந்த அரிய தவங்களைச்செய்து வரம்பெற்றிருக்கின்ற முயற்சியினா
ல் எக்காலத்துஞ் சலனமற்று இக்காயத்துட் னிருக்கவல்லேன்,அண்டர்
களையெல்லாஞ் சிறைப்படுத்தினேன், சகலலோகங்களையுஞ் செயித்திரு
க்கின்றேன், எண்பத்து நான்குலக்ஷ சீவராசிகளாலும்மடியாவரம்பெற்றி
ருக்கின்றேன், இப்போது நீ உனக்குதவியாகக் கூட்டிக்கொணடுவந்த பூ
தவெள்ளங்களெல்லாம் அக்கினிமுன்பட்ட பஞ்சுமலையைப்போலச்சமர்
க்களத்திற் கிரையாகப் போனதைக்கண்டனை, உனது சேனாதி பதிகளுங்
கொடியபோரைச்செய்து வாடினார்கள், முதலணியில் வில்லாண்மையிற்
சிறந்திருந்த மற்றவீரர்களும் என்னுடன் யுத்தங்களைச்செய்து ஒவ்வொ
ருவராய் சின்னபின்னப் பட்டுமாண்டனர்,இவையனைத்தையும் உண்மை
யாகப்பார்த் திருக்கின்றனை, இப்படிக்கிருக்கப்- புறவணியிற் றப்பிமீந்திரு
ந்தபாலனாகிய நீயொருவனோ சகலலோகங்களையும் வென்ற செயசாலி
யாகிய என்னை யொத்தவனுடன் சண்டைகொடுத்து வெற்றிபெற விருக்
கின்றனை, உன்கருத்திற் கொண்டிருக்குந் தீர்மானத்தைப் பார்க்குமிடத்தி
ல் வெகுநேர்த்தியா யிருக்கின்றது, தேவர்திதேவனாய் - சர்வசங்காரமூர்
த்தியாய்- சிருட்டிதிதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகமெனச் சொல்
லாநின்ற பஞ்சகிருத்தியங்களையு நடாத்திச்சராசரப் பிரபஞ்சங்களை நடி
ப்பிக்கும் உனதுபிதாவாகிய பரமசிவனும், எனது சிறைக்கணகப்பட் டி
ருக்கின்ற அரிபிரமேந்திராதி தேவர்களும் என்னுடன்போர்செயய நினை

யாமமிருக்கும்போது, நேற்றுதித்தபாலனாகிய நீயோ சகலரையும்வென்ற ஜயசாலியாகிய என்னுடன் சண்டைகொடுக்குந் திறமுடையவன், சகலலோகங்களுங் கொண்டாடிப்போற்றுங் கீர்த்திப்பிரதாபத்தைப் படைத்திருக்கின்ற நமது பெருமிதங்களைச் சிறிதும் யோசித்துப்பார்த்தவனல்லை, குழந்தைப்பருவமாதலால் முன்னரு சிலரை வென்றதைப்போல என்னையுஞ் சொற்பமாகநினைத்துப், பாலியசேட்டையினால் இவ்வரிய போரைச்செய்து முடிக்கலாமெனக்கருதி, ஓர்மயிலின்மீது சிறுபிள்ளைவிளையாட்டாக ஏறிவந்தனைபோற் காணுகின்றது, உன்னையிப்போதே ஓரம்பினாற்கொன்று விடுவேன், ஆயினும் உனக்குத் தப்பிப்பிழைக்கவேண்டுமென்னுங் கருத்திருக்குமாயின் விட்டு விடுகின்றேன், நீ இவ்விடத்திலோடி, உனது தாய்தந்தையருடைய மனங்குளிரும்படியாக வாழ்ந்திருவென்று சொன்னான். அவையனைத்தையும் அருவுருவாக விளங்கும் மயூரேசர் திருச்செவிகளிலேற்றுப், புன்னகைசெய்து, கொடிய செய்கைகளைநடாத்திவருங் கயவனே- நீவியர்த்தமாகிய வார்த்தைகளையாடினை,உனது கருத்தின் வண்ணமுடிவதொன் றேனுமில்லை, வயிரமலைக் கொப்பாகிய உனதுமார்பைத் துளைக்கும்படி யாம் ஏவப் போகின்றபாணங்களே அவ்வார்த்தைகட்கு மறுமொழிகூறும், அண்டரண்ட புவனங்களனைத்தினையும் வென்றோம்-மிகுந்தவலியை யுடையோம்- சகலருங்கொண்டாடுங் கீர்த்தியைப்பெற்றோம்- சிறந்த தேவாஸ்திரங்களைச் சம்பாதித்திருக்கின்றோம்- அழிவற்ற வசிரதேகத்தைப படைத்திருக்கின்றோம் - சணக்கிறந்தவெள்ளஞ் சேனைகளையுடையோம்-அண்டர்களையெல்லாம் நிகரில்லாமல்வென்று சிறைப்படுத்தினோம்,என்கின்ற இம்மமதைகளைக்கொள்ளவேண்டாம், இவையனைத்தையும் யாம் ஓர் நொடிப்போதில் அழித்து விடவல்லேம், தேவதேவோத்தமராகியசிவபெருமான் கொடுத்தருளியவரங்களைப்பாலன் சண்டைகொடுத்து வெல்லவல்லனோவென்று அகங்கொள்ளவேண்டுவதில்லை, அளவற்றநாள் அண்டர்களையெல்லாந் தயைதாக்ஷண்ணிய மில்லாமற் சிறையில்வைத்துக் கொடுங்கோல்செலுத்திவந்த உனது சவுரியத்தினையும் புயவன்மையையும் உனது விழிக்குப் பாலனாகத்தோற்றுகின்ற யாமேயடக்கி நாசஞ்செய்வோ மாதலால், இனி வீண்வார்த்தைகளையாடாது, உனதுபெருமையையும் பராக்கிரமத்தையுங்கைத்திறத்தினாற் காண்பிவிக்கக்கடவையென்றுதிருவாய்மலர்ந்தனர். அதைக் கேட்டலும் அவுணர்பெருமானாகிய சிந்துராசனுக்கு அதிககோபம் பிரவேசித்து,வடவைக்கனல்போலச் சீறி, நல்லகாரியம் உனது வீறுப்பை இவ்விடத்தி லடக்கிப் புத்திபண்ணிவைக்கின்றேனென்றுஉருத்துத்,தங்கத்தகடுகள் பூண்டு மந்தரகிரியைப்போல விளங்கும் பாரித்தவில்லையெடுத்துநிறுத்தி,இருகுனைகளும்ஒன்றுபடவளைத்துநாணேற்றிச், சத்தலோகங்களுநடுங்கும்படியாகக் குணத்தொனிசெய்து, சோனைமாரியைப்போலஅளவற்ற பாணங்களைத்தொடுத்து விட்டனன். அவன்விட்டபாணவருஷங்களினால் மலைகள்பிளந்தும்,வானுலகழிந்தும், சமுத்திரங்கள்கிழிந்தும் திசைக்கரிகள் சோர்ந்தும், காடுகள் முறிந்தும், பூமிகள் பிளந்தும் போயின. இவ்வாறு சகலலோகங்களுஞ் சின்னபின்னப் படும்படியாக, மழைக்காலத்தில் புத்திலிருந்து புறப்படும் ஈசலைப்போலச் சிந்துராசன்விடுத்த

அமோகமாகிய பாணங்களெல்லாம் பிரபஞ்சமெங்கும் பரந்து தகித்த லும், நின்மலமூர்த்தியாகிய விநாயகமூர்த்தியானவர் தமது மேருகிரிக்கு ச் சமதையாக விளங்குந் தனுசை வளைத்து, வாசுகியைப்போல நீண்டிரு க்கும் நாரியைமாட்டிச, சர்வசங்கார காலத்தில் பிரசண்ட வாயுவினல் மோதப்பட்ட ஆயிரங்கோடி அண்டங்களும் ஏககாலத்தில்உடைந்தெழு ம் பேரொலியைப்போலக் குமுறி முழங்கும்படிக்குக் குணத்தொனிசெ ய்தனர். அவ்வதிர்ச்சியினல் உலகங்களுக் கச்சாணியாக விருக்கின்ற இமயகிரிகிடுகிடென்றசைந்து, அஷ்டதிசைகளு நடுக்குற்றுக், குலகிரிகள் நெக்குவிட்டுத், திசை யானைகள் வீறிட்டு மயங்கி, அண்டகோளகைக ளதிர்ந்து, பூமியானதுபாதலவளாயில்பத்தல்பத்தலாகப் பிளந்து, அதைச்சு மந்திருக்கின்றஆதிசேடனுந் தத்தளித்து ஆயிரம்பணமகுடங்களைக் கொ ண்டுதாங்க வருந்தி விடங்களைக் கக்கினன். மற்றுமுள்ள பிராணிகளு நிலை கலங்கி வாடும்படியாகக் குணத்தொனி காட்டிய விநாயகப்பெருமான், பி ன்னர் கோடைகால மேகத்தைப்போலத் தமது வில்லிற் சணக்கிறந்த கு ரூரமாகிய சரங்களைப்பூட்டிச் செலுத்தி, மீறிவருகின்றபகைவன் கணைக ளைகண்டித் தெறிந்து, மீட்டும் பத்து கணைகளைத்தூண்டி, அவனுடையநெ ற்றி மார்பு இரண்டுபுயம் இரண்டுதொடை இரண்டுபாதம் இவைகளைத் துளைத்தருளினர். உடனே சிந்துராசன் தனது குதிரையைவிட்டுத் தேரி ன்மீதுபாய்ந்து மூர்ச்சையாயினன். அப்போது முன்னர்கண்டகநகரத்தி னின்றும் வந்து அருகிலிருக்கின்றவீரபராக்கிரமத்தை யுடைய விரு ப்பாக்கனென்பவன் அதிககோபங்கொண்டு, காளகூடத்தைப்போல ம ண்டியெரிந்து, கொவவைக் கனியையொப்ப விழிகள் சிவந்து, தீப்பொறி கள் குபீல்குபீலெனக் கொட்ட வுருக்துப்பார்த்துப், பற்களைநெறநெறெ ன்றுகடித்து, உதட்டையதுக்கி, இக்கிமிடத்தில் பகைவனை வாட்டி வெற் றிகொள்வேனென்று ஆக்கிரமித்தெழுந்து, விஷச்சுவாலையை வீச வல்ல கடூரமுள்ளபாணங்களை அமோகமாகப் பிரயோகித்தனன். அவைகளின் கொடுமைகளை மயூரேசமூர்த்தியோடு வந்திருக்கின்ற முனிச்சிறுர்கள்பா ர்த்து, உடனே அளவற்றகோடி தீக்ஷண்ணியமான பாணங்களைத் தூண் டிப், பகைவன்விடுத்த பாணங்களையும் அவனைப்புடைசூழ்ந் திருக்கின்ற இரண்டாயிர வெள்ளஞ் சேனைகளையு மத்ஞ்செய்து, பின்னரவனோடுமெ திர்த்து, ஓர்கணப்போதில் உனது மனவுறுதியைக் கலக்கிவாட்டுகின்றே மென்று சபதங்கூறித், தண்டாயுதங்களைக் கிறுகிறெனச் சுழற்றிமோதியு ம், வேலாயுதங்களைக் கடாவியும், சக்கரப்படைகளைச் செலுத்தியும, தோ மரங்களையெறிந்தும், இவ்வாறு யாவருந்தனித்தனி வகைவகையாய் அ கோரயுத்தங்களைச்செயது அவனைமாய்த்தனர். இப்பால் மிகவும் எளிய னைய்த், தனியாய்த், தேரின்மீது மூர்ச்சித்துக்கிடந்த சிந்துராசனுனவன் மீட்டுந் தெளிந்தெழுந்து, தனக்குதவியாக விருந்த விருப்பாக்கனும் அவ ன்சேனைகளும் முனிச்சிறுர்களால் மடிந்தமையைப் பார்த்து மனநொந் து, சிறிதுதேறி, விழிகளில் அக்கினிப்பொறிகள் சிதற வுருத்து, நாசிகளி னும் வாயினும் அழற்சுவாலையெழப் பெருமூச்செறிந்து, தனது பாரித்த வில்லில் சூரியாஸ்திரத்தைத் தொடுத்துப் பிரயோகித்தான். உடனே ம யூரேசமூர்த்திதமது சூலாயுதத்தை விடுத்தனர். அதுவெளிப்பட்ட வு

டன் மிகுந்ததீக்ஷண்ணியத்தைக் காட்டி, எங்கும் அனலையிறைத்து ஆர்ப்பரிந்துவந்து, சிந்துராசன்விட்ட அஸ்திரத்தைக் கண்டதுண்டப் படுத்தி, அவனுடைய கிரீடத்தைக் கீழேவிழத்தள்ளி, அவனதுசெவிகள் சின்னபின்னப்பட அறுத்தெறிந்து, மீட்டும் எமது கர்த்தருடைய திருககரத்தில் வந்துசேர்ந்தது. பின்னர் சிந்துராசன் மிக்க துன்பத்துடனே நாணமுமேலிட்டவனாய், உடனே தனது ரதத்தை விட்டிறங்கி, ஓர் வத்திரத்தால் முக்காடிட்டுக்கொண்டு, யாவருமறியாத வண்ணந் தனதுநகரத்தையடைந்து, அரண்மனையில் ஓர்மூலையிலே கால்களைமுடக்கித் தலைகவிழ்த்திருந்தனன். இவ்வாறு சிந்துராசன் சென்றமையை மயூரேசமூர்த்தியறிந்து, தமதுசேனைகளில் மாய்ந்த பூதர்களையுஞ் சேனைத் தலைவர்களையுமெழுப்பி யழைத்துக்கொண்டு பாசறையிலமர்ந்தருளியிருந்தனர். சுப்பிரமண்ணியதேவர்முதலானமற்றைத்தலைவர்களுமவ்வாறே அவ்வவருடைய பாசறைகளில் அமர்ந்திருந்தார்கள். இப்பால் சூரியனானவன்இச்சமர்க்களத்தில் நமது படையானது சிந்துராசனுக் குதவிசெய்யாது மாண்டுபோனமையால் இனிநாமும் வாழேமென்று அலறி மறைந்தவன்போல, மேற்றிசைக்கடலில் மறைந்தனன். உடனே சமர்க்களத்திற் றோல்வியையடைந்து சென்ற சிந்துராசனுடைய மனத்தைப்போல எங்குங்கறுத்த இருளானது நெருங்கியது. பின்னர் வணங்காரையெல்லாந் தமதுமறக்கருணையினால் வென்று ஆட்கொள்ளவல்ல விநாயகமூர்த்தியினுடைய திருவுளத்தைப்போல ஆகாயத்தில் சந்திரனானவன் [illegible]ட்சகலைகளோடு முதித்தனன். அப்போது பாசறைகளிலிறங்கி யிருந்த கணநாதர்களெல்லாம் மயூரேசமூர்த்தியை மும்முறைவலம்வந்துபணிந்து, வேதாகமங்களினால் அளவற்றதுதிகளைச் செய்துஆனந்தக் கூத்தாடினார்கள். அவர்கட்கெல்லாம் எமதுகர்த்தன் பேரருளை வழங்கியிருந்தனர். பிணங்க ளெல்லாம் மலைமலையாகக் குவிந்திருக்கின்ற சமர்க்கள முழுவதும் பேய்களனைதது பிணங்களை யருந்தித் துணங்கை யாடுவதாலுண்டான வோசையும், சோர்ந்து வீழ்ந்தவர்களுடைய உயிரினைக்காக்கும்படியாக அவ்வவர்கள் சுற்றத்தினர் தூபதீப மணிமுதலிய வைகளைக்கொண்டு இணங்குகின்ற வோசையும் பெருத்திருந்தன. கண்டகநகரத்து வீடுகளினும் மாளிகைகளினுமுள்ள மங்கையரெல்லாம் யுத்தஞ் செய்யச்சென்ற அவ்வவர்கள் காதலருடைய மீட்சியைக்காணாது, அழுகின்ற சத்தமே எங்குமிகுதியாயிருந்தது. இப்பால் அரண்மனையில் மனமடிவினோடு சங்கடப்பட்டிருக்கின்ற சிந்துராசனிடத்தில் அவன்பத்தினியாகிய உற்கையென்பவள்சென்று பணிந்தெழுந்து, எனது பிராணநாயகனே-தேவரீர் அண்டர்களையெல்லாஞ் சிறைக்கண் வைத்தீர், சகலலோகங்களையும் ஓரே குடையில் ஆண்டுவருகின்றீர், அசுரர்களையெல்லாம் அடிமைகொண்டீர், பிரமனாதி மூவராலும் அழியாவரம்பெற் றிருக்கின்றீர், இத்தன்மைத்தான மேலானபராக்கிரமங்களைப் பெற்றிருக்கின்ற தேவரீர் இப்போது மிகுந்த மனமடிவோடுங் கிலேசத்தையடைந்த காரணம் யாது, அதனை யடியாட்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்டனள். அதற்குச்சிந்துராசன் சிறிதுநிமிர்ந்து, தன்கண்ணிலும் அவள் கண்ணிலும் சலமொழுகும்படியாகத் துக்கித்துப், பெருமூச்செறிந்து, என்மனதுக்கினிய காதலியே-

நீகூறிய தனைத்தும் உண்மையேயாயினும்,என்னை முடிக்கச் சிவபிரானிடத்தினின்றும் ஆறுகரங்களோடு ஓர்புதல்வன் இப்பூவுலகத்திற் பிறந்திருக்கின்றான், அவன் பிறந்த நாளிற்றானே அவன் எனக்குச் சத்துருவென்றறிந்து, நாள்தோறும் அளவற்ற வீரர்களை யனுப்பினேன், அவர்களனைவரும் அவன்கரத்தால் மடிந்தார்கள், சகலபராக்கிரமங்களினுஞ் சிறந்த கனலாசுரனைக் கடல்போன்ற சேனைகளைக்கூட்டி யனுப்பினேன், அவன் சென்று அளவற்றயுத்தங்களைச் செய்துஞ் செயம்பெறாமல் அசசேனைகளோடு மாண்டான். சூரியன் சந்திரன் அக்கினி முதலியதேவர்களை அவனிருக்கின்ற வனத்திற் போகாதபடி ஆக்கியாபித்தேன், அவன் அதையறிந்து ஓர்நொடிப்போதில் அவர்களையெல்லாம் வேறேயுண்டாக்கிக்கொண்டு யுத்தத்திற்குவந்து, தேவர்களையெல்லாஞ் சிறையினின்றும் விடச்சொல்லிப் பராக்கிரமமுடைய வோர் தூதனையனுப்பினான், அவன் அவ்வாறே யிங்குவந்து நடத்திச்சென்ற காரியத்தை நீயறிந்திருக்கின்றனை,பின்னரச் சிவகுமாரனைச் சிறுபிள்ளையென்று எனது பேதைமைப் புத்தியினாலெண்ணி,அவனோடு யுத்தஞ்செய்யச் சென்றேன், அந்த யுத்தத்தில் நமது அமைசசர்களும் அளவற்ற வீரர்களும் அமோகமாகிய சேனைகளு மாண்டார்கள், உடனே நானும் அளவற்றயுத்தங்களை நடாத்தி அச்சிறுபிள்ளையின் கரத்தால் இரண்டுசெவிகளையு மானத்தையு மிழந்தேன் சிறையிலிருக்கின்ற தேவர்களெல்லாம் நகைத்து ஏளனஞ் செயயும்படியாக எனதுபெருமைகளனைத்துங் குன்றிவந்தேன், வயதிற் சிறியவனாயினுஞ் சமர்த்திறத்திற் பெரியனாகவிருக்கின்ற அப்பாலனைச்செயிப்பது மிகவுமரிதாக விருக்கின்றது, இனியென்ன செய்யப் போகின்றேனென்று துயருற்றுச் சொன்னான். அவையனைத்தையும் அவன் பத்தினியாகிய உற்கையென்பவள் கேட்டு, என்னுயிர்க்குயிரான நாயகனே-யாகமுதலானவைகளைச்செய்து சகலதேவர்கட்குந் திருப்திசெய்து வாழ்கின்ற அரசகுலத்திலுதித்த ராசாதிராசனாகிய தேவரீர்,இப்போது அத்தேவர்களைப் பூசியாது அவர்கட்குத் தீங்குசெய்கின்ற அசுரர்களை யாதரித்தீர், அன்றியும் அத்தேவர்களைச் சிறைப்படுத்தினீர், அத்தீங்கினால் சகல ஆபத்துகளும் வந்துநேர்ந்தன,இனியேனும் அத்தேவர்களை விட்டுவிட்டால் கடைத்தேறலாம்,இப்பால் தேவரீருடைய சித்தம் எவ்வாறோவென்று சொல்லினள். இவ்வாறு தனது பத்தினியானவள் உரிமையோடும் வணங்கிக் கூறிய மொழிகளைத் திடசித்தத்தை யுடைய சிந்துராசன் கேட்டுப், பெண்ணே- நீ சொல்லுவதனைத்தும் உண்மையே, ஆயினும் யான் சொல்லுவதையுங்கேள், நமதுபடைவீரர்களும் அமைச்சர்களும் அளவற்றசேனைகளும் யுத்தத்தில் மாய்ந்துபோனபின்பு தேவர்களைச் சிறையினின்றும் விட்டு விட்டால்திரிலோகங்களும்நகையாவோ,இத்தனைவிபத்துக்களையடைந்தபின்பு அவர்களைச் சிறையினின்றும் விட்டுயான் உயிரோடு இப்பூவுலகில் வாழ்ந்திருப்பதைப் பார்க்கினும் இன்னும் என்னாற்கூடியவரையிற்பெரிதானயுத்தஞ்செய்து மயூரேசனுடைய ஆயுதத்தினாலிறப்பேனாயின் என்றைக்கும் நிலைமையான புகழும் முத்தியுங் கிடைக்குமாதலால், இப்போது தேவர்களை விடத்தக்கதில்லை, நீ உனதிருப்பிடத்திற்செல்லுகவென்று சொல்லினன். அதன்மீது பிராணநாயகி மனநடுங்கி அந்தப்புறத்தி

ற்சென்றனள். உடனே இராப்பொழுது நீங்கிற்று. பின்னர் சூரியனனவன் என்னோடு நித்தலும் பொருநுகின்ற தானவர்குழாத்தைச சாடியருள வேண்டுமென்று ஞானவித்தகராகியமயூரேசமூர்த்தியைப் பிரார்த்திக்கவருவான்போலக் கிழ்த்திசைக் கடலிலுதயமாயினன். இப்பால்சிந்துராசன் தனது நித்தியவிதிகளைநிறைவேற்றிக்கொண்டு சிங்காதனத்தின்மீதுவீற்றிருந்தனன். அப்போது அவன்மைத்துனராகியகலனென்பவனும்விகலனென்பவனும்வந்து அவனைப்பணிந்துநின்றார்கள். அவர்களைச்சிந்துராசன்பார்த்து, நான்யுத்தத்திற்குச்செல்லுகின்றேன், நீங்களிருவோருமிங்ஙனமிருந்துஇப்பட்டணத்திற் பூதர்கள்வந்து தீங்குசெய்யவொட்டாமற் காத்துக்கொண்டிருங்களென்றுசொல்லினன். அதை அம்மைத்துனரிருவருங்கேட்டு, மீட்டும்பணிந்தெழுந்து, அத்தனே-அப்பகைவர்களையாங்களே சென்றுவென்றுவருகின்றோம், அதற்குத் தேவரீர்உத்தரவுகொடுத்தருளவேண்டுமென்று கேட்டார்கள். அவ்வாறே சிந்துராசன் உத்தரவு கொடுத்தான். பின்னரவர்கள் நாலாயிரவெள்ளஞ் சேனைகளோடுயுத்தகளத்திற்குச்சென்றார்கள். உடனே அவ்வரலாற்றை நாரதமுனிவர் விநாயக மூர்த்தியைப் பணிந்தறிவித்தனர். அப்போது அருகில்நின்ற நந்திதேவரும் புட்பதந்தனும் சுப்பிரமண்ணியமூர்த்தியும் வீரபத்திரக்கடவுளும் விநாயகமூர்த்தியிடத்தில் விடைபெற்று, அளவற்ற பூதகணங்களோடுஞ் சமர்க்களத்திற்சென்றார்கள். பின்னர் இருதிறப்படைகளுங் கைகலந்து நெடுநேரம்போராடுகையில், அளவற்ற சூரியர்கள் அர்த்தராத்திரியிலுதித்து எங்குமிருக்கின்ற இருட்கூட்டங்களை எடுத்தெடுத்து விழுங்குவதுபோலச், செம்மேகத்தையொத்த அளவற்றபூதசேனைகள் கருமேகத்தை நிகர்த்த அவுணசேனைகளிற்பாய்ந்து, அநேகரதங்களையும் யானைகளையுங் குதிரைகளையுஞ் சின்னபின்னப்படுத்திச், செம்பட்டமயிர் படிந்த சிரங்களைக் கண்டித்தும், மண்டைகளைப்பிளந்தும், கற்கம்பத்தை யொப்பத் திரண்டு வலிபெற்றிருக்கின்ற புசங்களையரிந்தும், விசாலமாகிய ரத்நாபரணங்களையணிந்திருந்த மார்புகளைச்சேதித்தும், வீரவண்டையங்களணிந்தகால்களைவெட்டித்தள்ளியும், உரத்துப்பேசும் வாய்களைப்பிளந்தும், உறுத்துப் பார்க்கும் விழிகளைக்கல்லியும், கோபித்துப் பெருமூச்செறியு மூக்குகளைக்கிள்ளியும், வீரங்கள்பேசு நாக்களையறிந்தும், பலகறைகளைபபோலப் பற்களுதிரும்படிக்குத் தாக்கியும், வீராவேசங்களினை றுடித்துக்கொண் டிருக்கு மீசைகளைக்கொளுத்தியும், மோவாய்களைச் சிதைத்தும், வயிரகுண்டலங்கள் தரித்தசெயுஞ்செவிகளையறுத்தும், வீரப்பட்டங்களைத்துகள்படுத்தியும், ரத்நகசிதமாகச் சொலித்திருக்கின்ற கிரீடங்களை நுறுக்கியும், படைகளைச்செலுத்த நீட்டுங்கரங்களை வெட்டியும், பாணங்களை முறித்தும், மற்ற ஆயுதங்களைப் பொடிப்பொடியாக நாசப்படுத்தியும், யானைபுலி கரடி பன்றி மாநுடர் தேவர்கள் முதலாயினோரை வாரி வாரிப் பருத்த வாய்களிற் போட்டு விழுங்கி நிறைத்துவைத்திருக்கின்ற தொந்திவயிறுகளைப்பீறிக் குடல்கள் சர்ப்பங்களைப்போலப் புரளத் தள்ளியும், இவ்வாறு நாலாயிரவெள்ளஞ் சேனைகளையும் அதா அதப்படுத்திமாய்த்தனர். அச்சம்பவத்தைக கலனும் விகலனுங்கண்டு, கோபாக்கினியானது மனதை வாட்ட விழிகளி லனற்பொறிகளைப் பெருக்கிப் பெருமூச்செறிந்து, சயவு

ற்சாகத்தோடு வீறியிருக்கின்ற பூதசேனைகளைவாட்ட நினைந்து, இருவரு ஞ்சூறுவளிக் காற்றைபபோலத் தங்களிரதத்தைச் சுழற்றிக், கூர்மையுள்ள கொடியபாணங்களை அமோகமாகப் பொழிந்தனர். அதனால் சூரியனைச்சூழ்ந்த பனிக்கூட்டத்தைப்போலப் பூதசேனைகள் கலங்கி, சிரமற்றும் மூளையிறைந்தும், தோள்கள்சரிந்தும், மார்புபிளந்தும், கால்கலொடிந்தும், மதிமயங்கிவிழ்ந்தும், மூர்ச்சித்தும், குப்புறவீழ்ந்தும், சின்ன பின்னப்பட்டுப் போயினர். அதை நந்திதேவர் கண்டு, தமது சேனை விரைவிற் செலுத்திக்கொண்டு சென்று, பர்வதா கிருதியாகப் பாரித்திருக்கின்ற வில்லில் அநேகஞ்சிலீமுகங்களைத் தொடுத்து, அவ்விருவர் விடுகின்ற படைகளையெல்லாம் பொடிபடுத்தினர். உடனே யமனுங்கண்டுஅஞ்சத்தக்க அவ்விருவர்களும் அளவற்றசரங்களைத் தூண்டி, நந்திதேவருடைய வில்லையொடித்தெறிந்தனர். அதனால் நந்திதேவருக்கு அதிககோபமுண்டாகித், தமது கோட்டினால் அவ்விருவர்களுடைய வில்லையும ரதத்தையும் பாய்ந்து பொடியாக்கினர்.பின்னரவர்கள் நந்திதேவர்மீது பாசத்தையேவிப் பிணித்துச்சமர்க்களநடுவில் நிறுத்திஆர்ப்பரித்தனர். அதைப்புட்பதந்தன் மார்த்துச் சகியாதவனாய், நந்திதேவரை அப்பாசத்தினின்றும் விடுத்து, அப்பாதகருடைய விற்களையும் பொடிபடுத்தி, அவர்கள் மார்புக்கிலக்காக எழுவேழுபாணங்களைப் பிரயோகித்தான். அதனாலவர்கள் மூர்ச்சையாகி மீட்டுந்தெளிந்தெழுந்து, தங்கள் வச்சிரா யுதத்தினால் புட்பதந்தனுடைய ஆற்றலையடக்கினார்கள். அதை வாட்படையையேந்திய வீரபத்திரக்கடவுள்கண்டு, ரவுத்திராகாரமாகக்கோபித்துத், தமது விரல்களைமுடக்கி, விகலனுடைய சிரத்திற்குட்டினர். உடனே அவன்சோர்ந்து மூர்ச்சையாகிஇறந்தனன். பின்னர் சுப்பிரமணணியமூர்த்தியானவர் கலனென்பவனைப் பிடித்திழுத்து நிலத்திலறைந்தனர். அவனும் அவ்வறையினாற் சரீரமெல்லாஞ் சின்னபின்னப்பட மாண்டனன். அப்போது இரண்டாயிரந்தோளினையுடைய பாநுகம்பன் தனதுஆயிரம்வாய்களினுஞ் சங்கினைவைத்து அண்டங்களதிரமுழக்கினன். இவ்வாறு அவ்விரண்டு வீரர்களுமடிந்துபோகவும்,ரணபூமியிற் பட்டவர்கள்போகமற்ற அவுணர்களெல்லாம் பிராணபீதியினாலிரைந்து பலதிசைகளினும் ஓடிப்பதுங்கினார்கள். இந்த அபசயத்தை உடனே தூதர்களோடிச் சிந்துராசனுக்கறிவித்தார்கள். அதனாலவன் மிகுந்த கிலேசத்தை யடைந்து, இனியென்ன செய்யப்போகின்றோமென்று பரிபவமுற்றிருந்தனன். அதை அவன் குமாரர்களாகிய தன்மனென்பவனும் அதன்ம னென்பவனுந் தெரிந்துவந்து, அவன்பாதத்திற் பணிந்தெழுந்து, தந்தையே -யெதிர்த்துவந்த சத்துருககளுக்கு அடியேங்களிருக்கத் தேவரீர் கிலேசமடைய வேண்டிய தென்றினுக்கு, எங்கள் மாதுலனைக்கொன்ற கந்தனையும் வீரபத்திரனையுங்கொன்று, மயிலின்மீதிருக்கின்ற அவர்கள் தலைவனையும் இந்நிமிடத்திற் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டுவருகின்றோம், அடியேங்கட்குவிரைவில் உத்தரவுகொடுத்தருளவேண்டுமென்றுகேட்டார்கள்.பராக்கிரமத்திற்சிறந்ததனதுபுத்திரர்கள்சொன்னதைச் சிந்துராசன்கேட்டுத், துயரத்தினின்றுநீங்கி,ஒருவாறு மனந்தேறி, இதுகாறு மடிந்ததுபோக மிகுந்திருக்கின்ற சேனைகளைக் கூட்டிக்கொண்டு சென்று சயம்பெற்று வரக்கடவீர்

கவென்று உத்தரவுசெய்தனுப்பினான். அவர்களு மேலான செல்வத்தைப் பெற்றவர்கள்போல மகிழ்ந்து, யுத்தஞ்செய்யத்துணிந்து, எண்ணாயிர வெள்ளஞ் சேனைகளுடனே யுத்தகளத்திற்குச் சென்றார்கள். அப்போது சுப்பிரமண்ணியமூர்த்திக்கு அருகிலிருந்த நவவீரர்கள் சமுத்திரம்போல ஓங்கிவருகின்ற அவுணசேனைகளைப்பார்த்து, ஓர்கணப்போதில் அவர்களை அதஞ்செய்து வருகின்றோமென்று விடைபெற்றுச் சென்று, யானைக்கூட்டங்களிற்புகுந்தசிங்கவேறுபோல அவுணசேனைகளிற்புகுந்து, அவ்வவர்களுடைய பாரித்தவிற்களில் அமோகமாகிய பாணங்களைப் பிரயோகித்து, யாவரையுஞ்சின்னபின்னப்படவாட்டிப்,பின்னர் நிரைநிரையாக விருக்கின்ற தேரணிகளிற்பாய்ந்து, சொர்ன்னமயமாக விருக்கின்ற வண்டில் அச்சு மச்சு குத்துக்கால் முதலியவைகளோடு நவரத்ந மயமாக விளங்குங் கொடிஞ்சை கொடி கொத்துமணிகள் முதலிய வைகளைப் பலதிசைகளினும் பறக்கச்சாடி, அவைகளிற் கட்டியிருந்த புரவிக்கூட்டங்களைக் கண்டதுண்டப்படத் தறித்துச், சாரதிகள் சழுத்துக்களை யறுத்தெறிந்து, யானை யணிகளிற்புகுந்து, இருப்புலக்கைகளைப் பற்றிச் சுலவித்திரியுந் துதிக்கரங்களைப் பனைமறிவதைப்போலக் கண்டித்து, நவரத்ந முகபடாத்தைச் சிதைத்து, மத்தகத்தைப்பிளந்து, மூளைகளை யிறைத்து, நீண்டுதொங்கும் உதட்டைச்சரித்து, சொர்ன்னப் பூண்களைத் தரித்திருக்கின்ற பருத்தகோடுகளைப் பிறைக்கொப்பாகக் கண்டித்தெறிந்து, பாகர்களைக்கீழேவிழத்தள்ளித்,தலைவர்களைச் சின்னபின்னப்படக்கொன்று,உரலையொப்ப விருக்குங்கால்களைத் தறித்துக், கணீல்கணீலென மாறியொலிக்கு மணிகளைப்பொடியாக்கி, நீலகிரியைப்போலக் கதறி வீழும்படிக்கு நடுவது பாதியில் வெட்டித் தள்ளிக், குதிரைப் பந்திகளிற்றாவிப், பொற்குச்சுகளினால் அலங்கரித்திருக்கின்ற பிடரிமயிரினையுடைய கண்டத்தை வெட்டிச், செவிகளையரிந்து, ரத்நமயமாக விளங்குஞ் சீனியைப்பொடியடுத்தி,வெண்டயங்கள்பூண்டு அலைகளையொப்பத் தாவுங்கால்களைக்கண்டித்து, அவைகளின்மீதுநின்று போர்செய்யும் வீரர்களைத் தண்டித்து,மிகுந்த பராக்கிரமசாலிகளாய்ப் படை ஏந்தியிருக்கின்ற பதாதிவீரர்களைச் சூழ்ந்து, கரங்களிற்கொண்ட பாரித்தவிற்களை முறித்து, அம்புக்கூடுகளை அதப்படுத்திப், போர்செய்யவேண்டுமென நினைத்தநெஞ்சைப்பிளந்து,பாணங்களைத்தொட்ட கரங்களைக்கண்டித்துக், கிரீடங்களைக் காற்றிற்பறக்கடித்து, விருதுக்கொடிகளை யறுத்தெறிந்து, நுரைகளைப்போல வெளுத்து அலைகளுக்கொப்பாக அசைந்திருந்த வெண்சாமரைகளைச் சிதைத்துப்,பளபளத்து விளங்கும் வீரபட்டமணிந்த நெற்றியைத்துளைத்து, சித்திரமயமாக விருக்கின்ற அருகுகளையும் ஆலவட்டங்களையுஞ்சிதறடித்துப், பட்படத்தொனிகளுடன் வானத்தையளாவிநிற்கின்றதுசங்களைக்கண்டித்து, முத்துகளினாலும் வெண்பட்டுகளினாலும் நவரத்நங்களினாலும் அலங்கரித்து நிழலைப்பரப்பியிருக்கின்ற சந்திரவட்டக்குடைகளைக்காற்றாடிகளைப்போலப்பறக்கச்சாடி, மகரதோரணங்களைவானத்திற்செல்லமோதி,ரணபேரி சயபேரி வெற்றிச்சங்கம் எக்காளை திருச்சின்னம் குடமுழாமுதலிய போர்ப்பறைகளைப் பிறிப்பிளந்து, இவ்விதமான கோலாகலப்போரைச்செய்து, குயவன்திகிரியைப்போல ரணகளமெங்குஞ் சூறுவளிக் காற்

றினுங் கடுகித்திரிந்து, கொடியபாதகனாகிய சிந்துராசனுடைய புத்திரர்க
ளின் ரதகஜதுரகபதாதிகளோடுங் கூடிய எண்ணாயிர வெள்ளஞ் சேனைக
ளையுஞ் சின்னபின்னப்படுத்தி வெள்ளிடையாக்கினார்கள். இவ்வாறு தங்
கள் சதுரங்கசேனைகளும் உடைந்துபோன எளிமையைத் தன்மனும் அ
தன்மனும்பார்த்து, அதிககோபாவேசங்கொண்டு, ஞரோலென்று தங்கள்
தேர்களை முடுக்கி, மந்தரகிரியைப்போலும் பாரித்திராநின்ற தங்கள்விற்க
ளைவளைத்து நாணேற்றி, அந்நவவீரர்கள் மீது அமோகமாகியகொடியபா
ணங்களைச் சோனைமழையைப்போலப் பொழிந்து ஆர்ப்பரித்தார்கள். அ
ப்போது மேலானபராக்கிரமத்தையுடைய நவவீரர்களுஞ் சங்கடப்பட்
டு, வீரமார்த்தாண்டன் மனவூக்கமற்றுப் பிரமித்துவிட்டனன். வீரராக்க
தன்களைத்து விழுந்தனன். வீரமாகேந்திரன் கரத்திலேந்திய வில்லோடு
மதிமயங்கிநின்றனன். வீரதீரன் சரீரம் பதைபதைக்க வோடினன். வீர
மாகேசுரன் சரீரத்திற்பெருகும் உதிரத்திலழுந்தி அசைவற்றிருந்தனன்.
வீரகேசரிசோபித்து அடியற்ற கற்பகம்போல விழுந்தனன். வீரபுரந்தர
ன் எழுந்திருக்கச் சக்தியற்றுக் கிடந்தனன். வீராந்தகன் கண்பஞ்சடைந்
து தோற்றமற்றுத் துழவியிருந்தனன். வீரவாகு தேவர் சற்றேபின்னிட்
டனர். இவ்வாறு சேனைத்தலைவர்கள் ஒன்பதின்மருஞ்சின்னபின்னப்பட்
டு, வாடி-சருங்கி-களைத்து- மருண்டு- திகைத்து- சோபித்து - ஒளித்துக்
கிலேசித்துச்-சண்டைகொடுக்கவலியுந் தைரியமுமில்லாமல் நடுநடுங்கிப்
போனதைச்சண்முகப்பெருமானாகிய சுப்பிரமண்ணியமூர்த்திகண்டு,மன
ம்பொறுமல்,அதிககோபாவேசத்துடன் அவ்விருவர்களுடைய சிகையை
யும் பிடித்து நிலத்தில்மோதினர். உடனே அவ்விருவர்களு மாண்டார்
கள். பின்னர் சுப்பிரமண்ணியதேவர் நவவீரர்முதலிய சேனைத் தலைவர்க
ளையும் அவுணபாதகரால் மடிந்த பூதவீரர்களையும் எழுப்பி யழைத்துக்
கொண்டுசென்று, மயூரேசமூர்த்திபினிடத்தில் அமர்ந்திருந்தனர். இப்
பால் சிந்துராசனனவன் புஜபலபராக்கிரமத்தினையுடைய தனது புத்திர
ர்களிறந்த சேதியைத்தூதர்களாலறிந்து, மேககர்ச்சனையைக் கேட்ட நாக
த்தைப்போல ஓய்ந்து, வெண்ணெயையொப்ப உருகி, மனமடிந்து, அழ
த்தொடங்கினன். அவன் அழத்தொடங்கலும் அவன்சுற்றத்தினரெல்லா
ம் அழுதார்கள். அப்போது அவனுடைய புரோகிதனனவன் அரசனுக்
குத் தேறுதல்சொல்லத்தொடங்கி, ஓமண்டலேஸ்வரா-தேவர்களையெல்
லாஞ் சிறையில்வைத்தீர், திரிமூர்த்திகளாலு மழியாத மேன்மை பெற்றி
ருக்கின்றீர், இத்தன்மைத்தான பெருமிதங்களை யுடைய வுமக்குயாதோ
ஒருகாரணத்தால் பகைவந்து கூடினல் அதற்குத் துயரங் கொள்ளலாமா
நித்தியமென்னும் பெருமையினைப்படைத்த வியாசர்முதலிய முனிபுங்க
வர்கட்கும்- இந்திரன் முதலியதேவர்கட்கும்- யாவரையும் அழித்தியத
சையறிந்து கொல்லவல்ல யமதருமராசனுக்கும்- பிரமாதி மூவர்கட்கும்
அழிவெய்துங் காலம் ஒன்றுண்டா யிருப்பதைக் கேட்டதில்லையோ, ஒரு
வனுக்கு அனந்தம் பிறப்புண்டாகையால் அவனுக்குத் தாய்தந்தையரும்
அனந்தம்பேருளர், புத்திரர்களும் அநேகருளர், சுற்றத்தினரும் அவ்வா
றே யிருப்பர், ஆதலால்- தந்தையார், தாயார், புத்திரர்களார், சுற்றத்தி
னரார், ஓர்காற்றின்மோதலினல் அளவற்ற துரும்புகள் ஒருபக்கத்திற்சே

ரும், மற்றொருகாற்றினால் அவைகளனைத்தும் பலதிசைகளிற்பிரிந்துபோம், பகற்போதிற் பறவைகளெல்லாம் பல புலங்களிற்சென்று மேயும், இராக்காலம் வந்தால் யாவும் ஓரிடத்திற்சேரும், மீட்டும் மறுநாள் காலையில் திக்கொன்றாய்ப் பறந்துபோம், இதுபோலன்றோ நமதுவாழ்க்கையின்திறம், இவ்வாறு நமது வாழ்க்கை யழிவுறுமென்று மனத்தில் நீங்காத துயரத்தை வைப்பிராகில் உடனே கவலையுண்டாகும், அக்கவலையுண்டாகுந்தோறும் வலியொடுங்கும், உமது வலியொடுங்குந்தோறுஞ் சத்துருக்களுக்கு வலிமேலிடும், அவர்கட்கு வலிமேலிட்ட மாத்திரத்தில் சகலமான கெடுதிகளுஞ் சம்பவிக்கும், அக்கெடுதிகள் சம்பவிப்பதினால் இதுகாறுமடைந்த கீர்த்திகளனைத்தும் பாழாகிப்போம், ஆதலால்- சத்துருக்களுண்டான போதே அவர்களைக்களைய வேண்டியமார்க்கத்தினைத்தேட வேண்டுமென்று சொல்லினன். புத்தியிற்கூர்ந்த புரோகிதன்சொன்ன தனைத்தையுஞ் சிந்துராசன் மிகுந்தபத்தியோடுங் கேட்டுத், துயரத்தினின்முநீங்கித், தனது சுற்றத்தினரோடு போசனாதிகளைமுடித்து, விசாலமாகிய ஆயுதசாலையைச்சேர்ந்து,பாசுபதமுதலிய திவ்வியபாணங்களையும்பல தேவர்கள் வேண்டிக்கொடுத்த அஸ்திரங்களையுஞ் சேகரித்துக் கொண்டு, கூரிய கணைகளடங்கி யிருக்கின்ற அம்புபெய்துணியை முதுகிலிறுக்கி, கரங்களில் திவ்வியமாகிய கோதைகளைமாட்டி, விரல்கடோறும் பொன்மயமாகிய புட்டில்களைத்தரித்துச், சுகந்ததயிலத்தினால் வாரிச்சேர்த்துக் கட்டியிருக்கின்ற சிகை விளங்குஞ் சிரத்தினிடத்தில் கோடிசூரியப் பிரகாசமாகச் சொலித்திருக்கின்ற வயிரமுடியையணிந்து, அதன்மீது தும்பமாலையினைச் சூடி, மற்ற போர்க்கோலத்தையும் பூர்த்தியாக முடித்துக் கொண்டு வெளிவந்து, மகமேருவோமந்தரகிரியோ வெனச்சங்கிக்கும் உன்னதமுள்ளதாய் நவரத்நகாந்திகளைவிசிப் பரந்திருக்கும்ரதத்தில் ஆரோகணித்து, ரணபேரி சயபேரி முதலியவாத்தியங்கள் அண்டங்க ளதிரமுழங்க, நாற்புரத்தும் ரதகஜதுரக பதாதிகளாகியசயினியங்கள்யுகாந்தவெள்ளத்தினை நிகர்த்துப் புடைசூழ்ந்து வரச், சக்கரவாள்கிரியைப்போலப் பாரித்து வளைந்திருக்கு மதில்கள் சூழ்ந்த தனது கோபுர வாயிலைத்தாண்டி, ரணபத்திரகாளியானவள் குதிகொண்டு நடமாடும்படியான சமர்க்களத்தை யடைந்தனன். அவன்வரவை அகிலகாரணராகிய மயூரேசமூர்த்தி தெரிந்து,தாமும்யுத்தத்திற் கெழுந்தருளினர். அப்போது சுப்பிரமண்ணியதேவர் அவரைப்பணிந்தெழுந்து, அண்ணலே - தேவரீர் இங்ஙனேயிருந்து அடியேனை யுத்தத்திற்குச்செல்ல விடைகொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவ்வாறே மயூரேசமூர்த்தி விடைகொடுக்கப் பின்னர் வீரபத்திரக்கடவுள- நந்திதேவர்- புட்பதந்தன்- பிருங்கி - பூதராசன்- இரணியகருப்பன்- முதலிய தலைவர்களோடு அளவற்ற வீரர்களும் பூதசேனைகளும் புடைசூழ்ந்து வரும்படியாகச் சுப்பிரமண்ணியதேவர்தமது ரதத்தைமுடுக்கி யுத்தகளத்திற்சென்றனர். அப்போது அளவற்றரத வீரர்கள் புடைசூழும்படியாகவந்து சிந்துராசன் சுப்பிரமண்ணிய தேவரோடும்எதிர்த்தான்.கஜவீரர்கள் வீரபத்திரக்கடவுளோடும்நந்திதேவரோடும் எதிர்த்தார்கள், துரகவீரர்கள் புட்பதந்தனோடும் பிறுங்கியோடுமெதிர்த்தார்கள். பதாதிவீரர்கள் பூதராசனோடும் இரணியகருப்பனோடும்எ

கிர்த்தார்கள். இவ்வாறு சிந்துராசனுடைய சதுரங்கசேனைகளுந் தனித்த னியே யெதிர்த்துவரலும்,பூதராசனும் இரணியகருப்பனும்பதாதிவீரர்க ட்குள்ளே புகுந்து, தமதுதேர்களைவிட்டிறங்கிக், கதை- சக்கரம்- தோமரம்- பிண்டி பாலம்- முதலிய ஆயுதங்களினாலும் தேவாஸ்திரங் களினாலும் அளவற்றயுத்தங்களைச் செய்து சின்னபின்னப்படுத்தி, யுத்தகளமுழுவதையும் பிணங்களால்மறைத்து, மீட்டுந் தமது தேர்களிலேறிச் சந்தோஷமுற்றிருந்தார்கள். பிருங்கியும் புட்பதந்தனும் தங்கள் ரதங்களை விடுத்துக் குதிரைகளின்மீதேறிச்,சிந்துராசனுடையகுதிரை வீரர்கட்குள்ளே புகுந்து, இடசாரி வலசாரியாகச்சுழன்று, வேலாயுதம் - மழுவாயுதம்- வாளாயுதம்- சூலாயுதமுதலியவைகளைக்கொண்டியாவரையுஞ்சங்கரித்து குதிரைகளையெல்லாந் திசாதிசைகளில் வீழும்படி யெறிந்து, வெற்றிமாலையோடுந் தங்கள் ரதத்திலேறி, இன்னுமெதிர்ப்பவருண்டோவென்றுஎதிர்பார்த்திருந்தார்கள். வீரபத்திரக்கடவுளும் நந்திதேவரும் யானைவீரர்கட்குள்ளேபுகுந்து, சர்வசங்கார ருத்திரனைப்போல விசுவரூபங்கொண்டு, சிலயானைகளைக் காலினாலுதைத்தும், சிலயானைகளைக் கையினாற்குத்தியும், சிலயானைகளைப் பூமியிலேயறைந்தும், சிலயானைகளைக் கடல்மலைதிசை ஆகாயமுதலிய விடங்களில் வாரிவாரியெறிந்தும் சமர்செய்து, அவைகளின் மீதேறியிருந்த வீரர்களையெல்லாஞ் சங்கரித்து, மீட்டுந்தங்கள் இரதத்தின்மீதேறி இளைப்பாறினார்கள். இப்பால் சுப்பிரமண்ணியதேவர் இலக்ஷத்தொன்பது வீரர்களோடும் இரதவீரர்கட்குள்ளே புகுந்து, அவர்களையெல்லாம் இமைப்போதில் விண்குடியேற்றி, அவர்களேறியிருந்த தேர்களினுடைய வண்டில் அச்சு மச்சு குத்துக்கால்கொடுங்கைகொடி கொடை முதலிய உறுப்புக்களை வெவ்வேறாகச் சிதைத்துச், சிந்துராசனுடைய ரதத்தையு முறித்தெறிந்தனர்,அதன்மீது சிந்துராசன் மனங்கொதித்து, இவனை இமைப்போதிற் பூமியிற்பதிதயாயிருக்கும்படி செய்கின்றேனென்று சபதங்கூறி, ஓர்பெரிய தண்டாயுதத்தோடு சண்முகப்பெருமானுடைய ரதத்தின் சிகரத்திற்குச் சரியாக வாக்கிரமித்தெழும்பி அத்தண்டாயுதத்தைக் கரகரவென்று சுழற்றித் தேரின்மீது மோதினன். அப்போது முருகக்கடவுள் தமதுவில்லில் பத்து கணைகளைத் தொடுத்து அத்தண்டாயுதத்தைப் பொடிபடுத்தி, மீட்டுஞ் சிலகணைகளைப் பிரயோகித்து, அவனுடையகவசம் கிரீடம் வில் அம்பு முதலான யாவையுந் தும்சப்படுத்தினர். அதனால் சிந்துராசன் முகம்வாடி, வேனிற் காலத்து ஓதியமரம்போலத் தலைகவிழ்ந்து நின்றனன். அவனை எமதையனாகியசுப்பிரமண்ணியக்கடவுள் நோக்கி, அடா மதியற்றவனே- அளவற்றசேனைத் தலைவர்களும் அமைச்சர்களும் மைத்துனர்களும் புத்திரர்களும்யுத்தகளத்தில் மாண்டார்கள், நீயும் நேற்றையதினம் பின்னிட்டோடிப்போயினை இத்தினம்வந்து நிராயுதனாய்த் தனியாய்நிற்கின்றனை, இனியேனும் எம்மைவணங்கிப் பிழைக்கக்கடவை, இனிநடக்கப்போகின்ற கதியைச்சற்றுமறிந்தாயில்லை, தேவர்களுடைய சிறையையும், முனிவர்களுடையகுறையையும், மூவுலகத்திலும் செய்துவருகின்ற கொடுமையையும், தயைதாக்ஷணியமற்ற உனதுஉயிரையும், இந்நிமிடத்தில் எனதுகையம் பொன்றினாற்சிதைத்து, என்னையுத்தத்திற் கேலிய மயூரேசமூர்த்திக்கு ஆனந்தமு

ண்டாக்குவேன், ஆனால் தருமத்தைநினைந்து அவ்வாறு செய்யாமல் விடு த்தேன், நீ இப்போது சகலசேனைகளும் வாகனங்களுமற்று நிராயுதனுய் ஏனென்பாரொருவருமின்றித் தனியாயிருக்கின்றனை, இன்று உனது நக ரைச்சேர்ந்து இளைப்பாறி, மற்றுமுள்ள அவுணசேனைகளையும் ஆயுதங்க ளையுங்கொண்டு நாளையதினம் வாவென்று கிருபையோடுந் திருவாய்மல ர்ந்தனர். அவையனைத்தையுஞ் சிந்துராசன்கேட்டு, வெட்கமுற்று, அங் கே நிற்கமனதில்லாமல் நகரத்தை நோக்கிச்சென்று, தனதரண்மனையி லிருந்தனன். சுப்பிரமண்ணியதேவரும் மற்றவீரர்களுடனே சென்று விநா யகமூர்த்தியைப்பணிந்து களித்திருந்தனர். அப்போது சூரியனானவன் வேலாயுதமூர்த்தியாகிய சுப்பிரமண்ணியதேவர் முதலாகிய தலைவர்கள் நெடும்போர்விளைத்ததினால்அடைந்தஇளைப்பை யாற்றிக்கொள்ளுமாறும், அவுணர்களுடைய யுத்தத்காலடைந்த தனது வெம்மை நீக்கிக்கொள்ளு மாறு மெண்ணினவன்போல மேற்றிசைக்கடலிற் குளித்துமறைந்தனன் உடனே இருட்கூட்டங்களானவை தமது உபகாரங்கொண்டு சஞ்சரிக்கி ன்ற அவுணர்கள் பேய்க்கூட்டங்கள் நடமாடுஞ் சமர்க்களத்தில் விழுந்தி றந்தமைக்கு மனம்வருந்தி, அவர்களைக்காணும்படியாக ஐங்கரப்பெருமா னுககஞ்சிப் பையப்பையச் செல்லுமாறுபோல எங்கும் பரவின. பின்ன ர் சந்திரனானவன் வெவ்வீரராகிய யோரில் வெற்றிகொண்டு தமது சேனை த்தலைவர்கட்கு விநாயகமூர்த்தி வழங்காநின்ற திருவருளைத்தானும் ஏற்க வருவான்போல இருட்கூட்டங்களையெல்லாஞ் சிதைத்து ஆகாயத்தில்வெளி ப்பட்டனன். அப்போது மயூரேசமூர்த்தியானவர் சமர்செய்து வந்தசே னைத்தலைவர்களுக்கெல்லாஞ் சந்தோஷஞ்செய்வித்துத், தமது பாசறையிற் சென்று அமர்ந்திருந்தனர். அரமனையைச்சேர்ந்த சிந்துராசன்முன்னாள் போலவே சுற்றத்தார் முதலியோரழும்படி தானுமழுது துயரமுற்றிருந் தனன். இப்பால் சூரியனானவன் பராக்கிரமத்திற் சிறந்தசிந்துராசனுக்கு இன்றழிவுகாலம் நேர்ந்ததாதலால் அவனைக்கணேசமூர்த்தி சீறுஞ் சம யத்தில் அவர்விழிகளினின்றுதிக்கும் வெகுளித்தீய்க்கு நாம் சகாயப்படு வோமென்றெண்ணி வருவான்போலக் கீழ்த்திசைக்கடலி லுதயமாயின ன். உடனே யாவரும் நித்தியநியமங்களை முடித்துக்கொண்டு சந்தோஷ முற்றிருந்தனர். அப்போதுநாரதமுனிவர்வந்து,விநாயகமூர்த்தியைப்பே ரன்பினோடும் பணிந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி, இதனை விண்ணப்பஞ் செய்வதாயினர். தீனராகிய தொண்டர்கட்கடுத்த வினைக ளைப்போக்கிப் பாதுகாத்தருளும் பொருட்டு விருதுக்கொடியைநாட்டியி ருக்கும் பக்தவச்சலனே- நொடிக்குமுன்னே சகலலோகங்களையும் நீறா க்கவல்லநுதல்விழியினைப்படைத்தசுவாமிகள் இச்சிந்துராசனோடுநெடுநா ள் தமதருமைத திருக்கரத்தில் ஆயுதங்களைச் சுமந்து யுத்தஞ்செய்யத்தி ருவுளங்கொண்டிருப்பதைப் பார்க்கில் ஈதொரு திருவிளையாட்டே ய ன்றி வேறில்லை, சுவாமிகள் திருமேனியை இடைவிடாது தரிசிப்பதினா லே அவனும் மகாதவத்தினை யுடையவனாயினன், சுவாமிகளவனோடுநீடி த்து யுத்தஞ்செய்ய யாங்கள் சகிக்கிறோம், சுவாமிகள் அடியேங்கள் மீ து கிருபைவைத்து ஓர்கணப்போதி லவனைச்சங்கரித்தருள வேண்டுமெ ன்று பிரார்த்தித்தனர். அதற்கு மயூரேசமூர்த்தி புன்னகைசெய்து, ஓமக

முனியே- நேற்றையதினம் அச்சிந்துவானவன் நமது தம்பிசெய்தபோருக்கிளைத்து நாணமுற்றுத் தனது அரமனையைச்சேர்ந்தனன், இன்று அவன் சமர்க்களத்தைநோக்கி வருவானாயின் அவ்வாறே முடித்தருளுவோமென்று திருவாய்மலர்ந்தனர். அவ்வாக்கியத்தை அருகிலிருந்த பிருங்கியென்னுங் கணநாதன்கேட்டு, விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளிற்பணிந்தெழுந்து, சுவாமி- அடியேற்கு உத்தரவுசெய்தால் அச்சிந்துவானவன் தனது படைகளோடு யுத்தகளத்திற்கு வரும்படி செய்கின்றேனென்றனன். அவ்வாறே கணேசமூர்த்தி விடைகொடுக்க, உடனே பிருங்கியானவன் கண்டகநகரைநோக்கிச்சென்று, மண்ணையும் விண்ணையும் இரண்டடியாக வளந்த விண்டுவைப்போல விஸ்வரூபங்கொண்டு, நகரப்புறத்திற் காவல்கொண்டிருக்கும் அவுணவீரர்களைச் சின்னபின்னப்படவாட்டி, உள்ளேபுகுந்து, புசபலபராக்கிரம சாலிகளாகிய நூறுகோடி மூலப்படைகளையெதிர்த்து, எத்தகையருங் கொண்டாடித் துதிக்கும்படிக்குக் கோலாகலமாகிய போரைச்செய்து, திருப்பாற்கடலைக் கடைந்தமந்தரகிரிக்குச் சமதையாகப் பாரித்திராநின்ற பாதங்களைக்கொண்டு சிலரை யுதைத்துருட்டியும், சிலரைப் பூமியிற்றேய்த்தும், சிலரைக்குடல்சரியமிதித்தும், சிலரைப்பஞ்சைப்போலச் சதைத்தும், சிலரைப்பூமியு ளடங்கத் தாக்கியும், சிலரைத் திசாதிசைகளினெற்றியும், சிலரைச்சமுத்திரங்களில் வீசியும், சிலரை வானவெல்லையிற் சுடாவியும், சிலரைமூளைகள் சிதறவுதைத்தும், சிலரைக்கரங்கள்தோள்கள் முதுகுகள் நுறுங்கச்சாடியும், இவ்வாறு கால்களைச் சக்கிராகாரமாகச் சுழற்றிச் சுழற்றிச் சின்னபின்னப்படமாய்த்துங் கோபந்தணியாமல், தனது கரங்களால் சிலரைப்பற்றிக் கழுத்துகளையொடித்தும், சிலரைப்பற்றி மார்புகளைக் கிழித்தும், சிலரைப் பிளந்தெறிந்தும், சிலரைப் பதைபதைக்கத் தோலையுரித்துவீசியும், சிலரைப்பிசைந்தும், சிலரைக் கசக்கியூதியும், சிலரைவாரிவாரி அண்டகோளகைக்கப் புறத்தில்வீசியும், சிலரைப்பல்லுதிர மோதியும், சிலரைக்காலையுந் தலையையும் வட்டாகாரமாகச் சேர்த்துச்சக்கரங்களைபபோலுருட்டியும், சிலரை அம்மனையாடியும், சிலரைப்பந்தையொப்ப வெறிந்தும், இவ்வாறு சூறாவளியைநிகர்த்து வளைந்து வளைந்து, ஒருவரையும் அப்புற மிப்புறம் போகவொட்டாம லலைத்து, நொடிக்குமுன் நூறுகோடி மூலப்படைகளையுங்கொன்று, சொர்ணமயமாய் நவரத்நகாந்திகளை வீசி மேருவையொப்பப்பாரித்து வானத்தையளாவுகின்ற கோபுரத்தைவேருடன் பறித்தெறிந்து, சிந்துராசன்வீற்றிருந்து அரசுசெலுத்துஞ்சபாமண்டபத்தைத்துகளாக்கி, அவுணராசன் வாசஞ்செய்யு மாண்மனையையும் செல்வப்பெருக்கையும் அதப்படுத்தி, அவுணவீரர்கள் வாசமாயிராநின்ற மாடமாளிகைகள் உப்பரிகைகள் முதலியவைகளை யிடித்தெறிந்து, அளவற்றமிருசங்களும் பறவைகளும் உல்லாசமா யுலாவியிருக்கின்ற சோலைகள் தோப்புகள் உய்யானனங்கள் செய்குன்றுகள் மேடைகள் மாடங்கள் முதலியவைகளைப் பறித்து அஷ்டதிசைகளிலும் வீசி, அளவற்ற சிங்காரங்களைக்கொண்டு சொலித்திராநின்ற சித்திரகூடங்களை வாரியெடுத்து ராசவீதிகளிலெறிந்து. சந்திரகாந்தம் இந்திரநீல முதலியவைகளாற் சமைத்திருக்கின்ற மேனிலைகள் திண்ணைகள் முதலானவைகளைப் பாதங்களினு

லுதைத்துருட்டிப், ஈகடசாலைகள் நாடகசாலைகள் ஆயுதசாலைகள் கல்விச்சாலைகள் முதலியவிடங்களை இடித்து நிரவித், தடாகங்கள் சித்திரக்குளங்கள் ஏரிகள மடுக்கள் முதலானவைகளை உருத்தோன்றாமல் பாதங்களினாற்கலக்கித்,தேர்க்கொட்டாரங்கள் யானைக்கூடங்கள் குதிரைச்சாலைகள் படைவீரர் விடுதிகள் முதலானவைகளைத் தூகள்படுத்தி, அவைகளிலிருக்கின்ற ரதகஜதுரகபதாதிகளை வாரிவாரித் திசாதிசைகளில்வீசி,பாதலவரையிலாழ்ந்து அண்டமுகட்டை யளாவியிருக்கின்ற கொத்தளங்களைப்பெயர்த்துப், பலசூத்திரங்களும் படைகளுங் கருவிகளும் பொருந்திவிளங்கு மதில்களைவீரவெண்டயமணித்தயாதங்களைக்கொண்டுருட்டிப்,பெரும்புறக்கடலைப்போல விசாலமாயாழ்ந்திருக்கும் அகழிகளைத்தூர்த்து, சகலலோகங்கட்கும்அதிபனாய்க்கொடுங்கோல்செலுத்திவரு ஞ்சிந்துராசனுடைய மனைவியை அந்தப்புறத்தினின்று மிழுத்துக்கொண்டுவந்து அவனெதிரில் நிறுத்தி, ஓர்வாளினால் அவளுடைய பரிமளமிகுந்த கூந்தலையறுத்தெறிந்து ஆர்ப்பரித்தனன். அக்கொடுமையைச் சீவகாருண்ணியமென்ப தெவ்வளவுமில்லாமல் உலகங்களுக்கு யமனைப்போல அரசு செலுத்திவருஞ் சிந்துராசன்கண்டு, அதிககோபவெப்பத்தினால் தேகமெங்கும் வெயர்க்தொழுக,விழிகள் கொவ்வைக்கனியைப்போற் சிவந்து அக்கினிப்பொறிகளை யிறைகக, சுவாசம்விடுந்தோறுந் தீயும்புகையும் வெளிப்பட உரப்பிக்கொண்டு, வட்டவையைப்போல மண்டியெறிந்து, தனதுபாரித்தவில்லை வட்டாகாரமாகவளைத்து, நாணேற்றி, நாகாஸ்திரமுதலியதெய்வப்படைகளைப்பூட்டி, ஆயிரணுந்தபரியந்த மிழுத்துப்பிரயோகித்தான் அதைப்பிருங்கியென்னுங் கணநாதன்கண்டு,திரிபுராதிகளையெரித்த சிவபிரானைப்போலப் புன்னகைசெய்து, அவ்வவுணராசன் விட்ட அஸ்திரங்கட்குமாறாகத் தானுங்கருடாஸ்திரமுதலிய தெய்வப்படைகளைப்பிரயோகித்து அவைகளைக்கண்டித் தெறிந்தனன். இவவாறு பிருங்கியென்பவன் சிந்துராசனோடு சிறிதுநேரம் யுத்தஞ்செய்திருக்கின்றபோது அவனுடையகிரீடம் பூமியில்விழும்படியாகத் தனதுகாலால் அவன் சிரத்திலுதைத்து, ஞெரேலென்று ஆகாயமார்க்கமாகச்சென்று, மயூரேசமூர்த்தி யெழுந்தருளி யிருக்கும் யாசறையையடைந்து, அவருடைய திருவடிகளிற் பலமுறை பணிந்து களித்திருந்தனன். இப்பால் சிந்துராசனனவன் பிருங்கி யுதைத்த வுதையினாற் கீழேவிழுந்து மூர்ச்சையாகி,மீட்டுந்தெளிந்தெழுந்து, சுற்றுமுற்றும் பார்த்துத், தனது நகரமழிந்த செயல்களையும் சமுத்திரம்போல விருந்த மூலபலமுதலிய சேனைகள்மாண்ட காரணத்தையுநினைந்து, அதிகதுக்க சாகரத்திலமுந்தித், தனது மனைவிக் குண்டாகிய கேட்டையும், தனக்குநேர்ந்த அவமானத்தையும் எண்ணியெண்ணி இதனைப்பேசிக்கொள்வதாயினன்.செக்கரஞ்சடைமுடியையுடையசிவபிரான் பெற்ற சிறுபிள்ளையா னவனொருவன் சண்டைகொடுக்க அதனைக் காக்க வலியில்லாமல் அவன்விட்டபாணத்தினால்இரண்டுசெவிகளையுமிழந்தோம், மறுநாள் அவனுடைய தம்பியாகிய சுப்பிரமண்ணியனால் நமதுபெருமைபெற்ற பாணங்களையெல்லாந்தொலைத்தோம்,இன்று அவனுடையசேனைத்தலைவர்களிலொருவனால்நமது நகரத்தையும்மனைவியினதுகூந்தலையும் அறுத்தெறியப் பார்த்தோம், அன்றியும் அவனுதைத்த வுதையினால்

நமது மருகனஞ்சிதையப்பெற்றுப் பிரேதத்தைப்போலக் களைத்து வீழ்ந்தோம், இந்தயுத்தம் ஆரம்பித்தநாள்முதல் பெரும்புறக்கடலைப்போல நம்மைச் சூழ்ந்திருந்த ரதகஜதுரகபதாதிகளையும் பராக்கிரம சாலிகளாகிய மூலப்படைகளையும் அதிசூரர்களாகிய சேனைத்தலைவர்களையும் விவேக சாலிகளாகிய அமைச்சர் மைத்துனர் புத்திரர் முதலாயினோரையும் பலிகொடுத்து, இப்போதுதனிமையாக யாதொரு சகாயங்களுமின்றித் தேகவுபாதியால் மிகவும் வருந்திவாடுகின்றோம், வெகுகாலமாகப் பலரையும் வெற்றிகொண்டு அரசுசெலுத்திவந்தநமது ஆண்மைத்திறம் வெகுநேர்த்தியாக விருக்கின்றது, இன்னமும் நமது விற்றிறத்தினால் அரிய பாணங்களைத் தயிரியங்கொண்டு செலுத்துவோமாயினும், பகைவனது பிராணனை வாங்குவதும் அல்லது வெல்லுவதும் மிகவும் அரிது, ஆதலால் வீண் யோசனை செய்வதிற் பிரயோசனமில்லை, இனியாம் பகைவனால் இறத்தலொன்று, அல்லது அவனை வெல்லலொன்று, இவ்விரண்டி லொன்றை இத்தினமே முடித்து வரக்கடவோமென்று சபதங்கூறி, அதிக கோபத்தோடுந் தனியனாய்ச் சமர்க்களத்தை யடுத்து, ஓர்தூதுவனைக்கூவி, இன்றுசெய்யும் யுத்தத்திற்குச் சுப்பிரமண்ணியன் வீரபத்திரன் முதலியதலைவர்களை வேண்டிலேன், மற்றைச் சேனைத்தலைவர்களையும் வேண்டிலேன் மயில்வாகனமூர்த்தி விநாயகனொருவனுடனே யான் தனியா யுத்தஞ்செய்யவேண்டிவந்தனன், இதனை அம்மயூரேசனிடத்திற் சென்று அறிவிக்கக்கடவையென் றேவினன். அவனவ்வாறேசென்று அறிவிக்க,அதற்குவேண்டுவார் வேண்டிப்பட்ட விழுப்பொருளை இமைக்குமுன் எண்ணற்றனவாக வளிக்குங் கிருபாமூர்த்தியாகிய விநாயகப் பெருமானிசைந்து, தமது மயில்வாகனத்தை விரைவிற்றூண்டிச் சமர்க்களத்தை யடுத்தருளினர் பின்னர் சிந்துராசனானவன் தனக்கடுத்த விபத்துக்களையெல்லாம் நினைந்து நினைந்து, அதிககோபங்கொண்டு, தான் பிறந்தபோதே உண்டான சக்கரத்தை யெடுத்து, தூபதீபநைவேத்திய முதலிய உபசாரங்களை மனப்பூர்வகமாக நிறைவேற்றி, சகலலோகங்களுங் கலங்கும்படியாகக் கரகரவென்று சுழற்றிவீசினன். அதுவெளிப்பட்டமாத்திரத்தில் அளவற்றமகிமைகளைக் காட்டித், திரிபுவனங்களு நடுங்கும்படியாக அனலைச்சொரிந்து, ஆவ் ஆவென்று அதிக வேகத்தோடு மேலிட்டுவருவதை எமது கர்த்தனறிந்து, அதனைச்சிறிதுஞ் சட்டைபண்ணாமல் நகைத்திருந்தனர். கேட்டீர்களோசவுனகாதிமுனிவர்களே- தமக்கு எக்காலத்து முடிவில்லாதவரங்களையும், சகலபடைகளுக்கும் ஆகரமாகியும்,நெடியவனாலுமறிவொண்ணாத நிமலராகியு மிருக்கின்ற கணேசமூர்த்தியை அச்சக்கரம் என்செய்யும். உடனே அஃது கணேசமூர்த்தியையடுத்து,மும்முறைவலம்வந்து,அன்பர்கள் செய்யு மருச்சனை மலரைப்போல அவரது திருவடிகளில் வீழ்ந்து அடைக்கலமாயது.அதைத் திரிநேத்திரங்களும், சடைமுடியும், மேலான முதன்மையும் பெற்ற சிந்துராசன்கண்டு, நல்லகாரியமெனக்கோபநகைகொண்டவனாய்,மானமும் வீரமும் மனதைவாட்ட வடவையுங் குளிர்ந்துபோம்படிச் சீறிப்,பிறந்தபோதே உண்டான படையாகிய மற்றொரு சூலாயுதத்தை யெடுத்து,அதற்குந்தூபதீப நைவேத்திய முதலியவுபசாரங்களை மானதபூசையினால் நிறைவேற்றி,இந்நிமிடத்தில் எனது சத்

துருவைவாட்டி என்னைக்காத்து ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துத் தொழுது விடுத்தனன். உடனே எமது கர்த்தரும் தமது பரசாயுதத்தை விடுத்தனர். அவ்விரண்டு தெய்வீகப்படைகளும் ஒன்றோடொன்று பல மகிமைகளுடன் வேகமாய்ச் சென்றெதிர்த்து, ஓர்புறத்தில் பிரசண்டமாருதத்தை யெழுப்பியும், ஓர்புறத்தில் வடவாமுகாக்கினியைக் காட்டியும் ஓர்புறத்தில் ஆலகாலவிடத்தைப் பெருக்கியும், ஓர்புறத்தில் தபாக்கினியையும் புகைப்படலங்களையும் உண்டுபண்ணியும், ஓர்புறத்தில் உருக்கிரர் வயிரவர் வீரபத்திரர் காளி துற்கை முதலாயினோரைத் தோற்றுவித்தும், ஓர்புறத்தில் பூத பசாச டாகினி வருக்கங்களைக்கக்கியும், ஓர்புறத்தில் இடி மின்னல் குமுறல்களைப் பெருக்கியும், ஓர்புறத்தில் அக்கினி சிலைவிட முதலிய மழைகளைப் பொழிந்தும், ஓர்புறத்தில் யானை புலி சிங்கம் கரடி குதிரை முதலிய முகங்கள் ஒன்றனந்தமாகப் பெற்றிருக்கின்ற அசுரர்களைச் சிருட்டித்தும், ஓர்புறத்தில் வருணாஸ்திரம் வாயு வாஸ்திரம் குபேராஸ்திரம் நாராயணாஸ்திரம் சரபாஸ்திர முதலிய தெய்வப்படைகளையுண்டாக்கியும், ஓர்புறத்தில் தோமரம் பிண்டி பாலம் கப்பணம் முசலம் சக்கரம் எழு மழு தண்டம் ஈட்டி வச்சிரம் எறிவேல் புசுண்டி முதலிய ஆயுதங்களைப்படைத்தும், இவ்வாறுகொடுமையென்பனவனைத்தையும்பெருக்கிச், சராசரப்பிரபஞ்சங்க ளனைத்துந் திகைத்து வாடும்படிக்குச் சர்வசங்காரக் கடவுளானவர் இரண்டுருவைக்கொண்டு திருவிளையாடல் செய்கின்றதைப்போல ஒன்றுக்கொன்று பின்னிடையாமல், விண்ணுலக மண்ணுலக முதலியவிடங்களி லுலவி, எழுத்தசலசமிர்த்திபெற்றகடலினிடத்தும்பெருப்புறவெள்ளத்தினிடத்தும் சக்கிரவாளகிரிமீதினும் அண்டப்பித்திகைச்சாரலினும்பாதலத்தினுந் திசைகளினும்பரந்து அதிகவிநோதங்களைச்செய்து, அண்டத்துக்கப் புறங்களினுமோடிக் கொடியபோர்விளைத்து ஆர்ப்பரித்தன. அப்போது மயூரேசர்விட்ட பரசாயுதமானது மீறி, நாம் இச்சூலத்தோடு நீடித்துயுத்தஞ்செய்வது வெகுநேத்தி வெகுநேத்தியென்று கோபித்து, ஓர்நொடிப்போதில் அதனைத்துகளாக்கிச், சிந்துராசனுடைய மார்பைப்பிளந்து கீழேவீழ்த்தித், தன்னிடத்துஞ் சூலத்தினிடத்தும் உண்டாகிய பாணமுதலியவைகளைத் திருப்பிக்கொண்டு, தங்கள் கொடுமையினால் மாறுபட்ட அணடரண்டபுவனங்களனைத்தையும் யதாப்பிரகாரம் நிலைபெறச்செய்து, சத்துருக்களாகிய அவுணபாதகர்களொழிய ஏனைய சீவராசிகளனைத்தையுமெழுப்பிமீண்டு, தன்னைச்செலுத்தியருளிய மயூரேச மூர்த்தியினுடைய திருக்கரத்தில் முன்போலவே சென்று வீற்றிருந்தது. தேவர்கள புட்பவருடஞ் சொரிந்தார்கள். ஆகாயத்தில் பஞ்ச வாத்தியங்களு முழங்கின. முனிவர்களெல்லாம் வேதாகமங்களினற்றுதிசெய்தார்கள். சண்முகப்பெருமாள் முதலிய தலைவர்களெல்லாங் களிசிறந்து தாழ்ந்தார்கள். இப்பால்சிந்துராசன்யுத்தகளத்தில் மடிந்தமையைத் தேவர்களைச்சூழ்ந்துகாவல்கொண்டிருந்த அவுணர்கள்தெரிந்துதிக்காலொருவராயோடிப் பதுங்கினார்கள். தெய்வலோகத்தை யாண்டு கொண்டிருந்த சும்பாசுரன் நிசும்பாசுரன் விருத்திராசுரன் சம்பாசுரன் முதலாயினோர் தனித் தனியே ஓடிமறைந்தார்கள். அப்போது மயூரேச மூர்த்தியானவர் கிருபைகூர்ந்து, அவுணர்காவலினின்றும் விடுபட்டிருக்கின்ற தேவர்க

ளையழைத்து வருமாறு வீரபத்திரக்கடவுளுக் காக்ஞயாபித்தனர். அவ்வா றேயவர் அத்தேவர்களையெல்லாங்கொண்டுவந்து விநாயகப்பெருமானெ திரில்விட, அவர்களெல்லாங்கவலைகளினின்று நீங்கி வேதாகமங்களினால் அளவற்ற துதிகளைச் செய்தார்கள். பின்னர் கணேசமூர்த்தியானவர் அவர்கட்கெல்லாந் தமது கிருபா நோக்கத்தை யருளி, இதுகாறும் அவுணபாதகனிட்ட சிறைக்கணகப்பட்டு வாடியிருந்தீர்களோ வென்று உபசரித்து, இனிநீங்க ளனைவரும்பழையபடி உங்கள்வைப்பிற்சென்று வாழ்வீர்களென்று அவ்வவர்கட்கு வேண்டியவரங்களையு மளித்தருளிவிடைகொடுத்தனர். அப்போது சிவபெருமான் உமாதேவியாரோடு இடபவாகனத்தின்மீ தெழுந்தருளிப், பூதகணங்களனைத்தும் புடைசூழவந்து, மயூரேசமூர்த்தியையும் சண்முகப்பெருமானையும் மிகுந்த காதலோடு ஆலிங்கனஞ்செய்து, ஏனைய தலைவர்கட்கெல்லாந் தமது காட்சியினையளித்தனர். உடனே அனைவரும் அவருடைய பாததாமரையைப்பலமுறைவணங்கி, அவரிடத்தினின்றும் அனந்தவரங்களைப்பெற்று ஆனந்தமுற்றிருந்தனர். பின்னர் சிவபெருமான் உமாதேவியாரோடுந் தமது திருக்கயிலைக்கெழுந்தருளினர், அதற்குமேல் சக்கிரபாணியென்னு மரசன் தனது குமாரன் மடிந்தமையைக்கேட்டு, மிகுந்த துக்கத்தோடு மழுது, சமர்க்களத்தையடுத்து, அங்குவீழ்ந்திருக்கின்ற சிந்துராசன் முதலாயினோரைத் தகனஞ்செய்து, அவ்வவர்கட்குரிய கருமங்களையெல்லாம்கிரமப்படி நிறைவேற்றி, மயூரேசமூர்த்தியை யடைந்து பணிந்தனன். அப்போது வானவர்குழாத்தைக்காத்தற்பொருட்டு வாகைமாலை சூடியிருக்கின்ற உறவுபகையற்ற கணேசமூர்த்தியானவர் அவனைப்பார்த்தருளி, அரசனே - நீ கருதியவரங்களைக் கேள் தருகின்றோமென்று திருவாய்மலர்ந்தனர், அதனைச் சக்கிரபாணிமகாராசன் கேட்டு, சுவாமி-அடியேன் தேவரீருடைய திவ்விய சரணாரவிந்தங்களைத் தொழுதும்-கண்ணாற்றரிசித்தும்- வழுத்தியும்- பிழைத்தேன்-எனதுமைந்தனோ தேவரீரை நிந்தித்தும்-பகைத்தும்-யுத்தஞ்செய்தும்- பேரின்பமான முத்தியையடைந்தனன். ஆதலால்-இதைவிட எனக்கு மேலானவரம் யாதுவேண்டியது. ஆயினும், இத்தேவர் முதலானவர்களோடுந் தேவரீர் எனது மனையின்கணெழுந்தருளி, அடியேன் செய்யும் பூசையினைக் கைக்கொள்ளவேண்டுமென்று மீட்டும் பணிந்திரந்தான், அதற்கு மயூரேசமூர்த்தி யிசைந்து கிருபைவழங்கித், தமதுதிருக்கூட்டத்தோடுமெழுந்தருளினர். உடனே சக்கிரபாணி மகாராசன் இச்செய்தியைத்தனது நகரத்திலுள்ள பிரமுகாளுக்கறிவிக்க, அவர்கள் அந்நகரமுழுவது மலங்கரித்து, அவ்வவர்களுந் தனித்தனியே கையுறைகளேந்தி யெதிர்வந்து, விநாயகமூர்த்தியினுடையதிருவடிகளிற்பணிந்தார்கள். அவர்கட்கெல்லாம்விநாயகமூர்த்தி கிருபைசுரந்து, கண்டகநகரத்தை யடைந்து, ஓர்பால் மங்கலவாததியங்கள் முழங்க, ஓர்பால் பாவையர்நாட்டியஞ்செய்ய, ஓர்பால்முனிபுங்கவர்கள் துதிக்க, ஓர்பால் தேவர்குழாங்கள்வாழ்த்த, இவ்விதவைபவங்களோடு ராசவீதிகளைக்கடந்து, சூரிய சந்திராள் வசிக்குமேனிலைகளைவாய்ந்த அரண்மனையிற் பிரவேசித்து, நவரத்திநமயமாயிராநின்ற சிங்காதனத்திலெழுந்தருளினர். சுப்பிரமண்ணியதேவர் முதலானதலைவர்களெல்லாம் வேறுவேறாதனங்களில் முறைமைப்படி வீற்றிருந்தார்கள். உட

னே சக்கரபாணிமகாராசன் கற்பகாதி மலர்களைக்கொண்டு பரிவாரதேவர்களைப் பூசித்துப், பின்னர் கணேசமூர்த்தியினுடைய திருவடிகளை அன்போடு பணிந்து ஆராதித்தான். அதற்கு மயூரேசமூர்த்தி கிருபைகூர்ந்து பத்துகரங்களும், அக்கரங்கள் தோறும் பத்து படைகளும், தேசார்ந்து வனப்பெய்தியிருக்கின்ற திருவுருவமும் விளங்கச், சித்திபுத்திகள் சமேதராய்ச் சிங்கவாகனமூர்ந்து காட்சிதந்தனர். அக்காட்சியை யாவருங் கண்குளிரத் தரிசித்து, அடக்கற்கரிய மகிழ்வோடு அற்புதங்கொண்டு, சயசயவென்றுபோற்றி ஆனந்தக்கூத்தாடினார்கள். அப்போது விநாயகமூர்த்தியானவர் சக்கிரபாணிமகாராசனைநோக்கி, அரசனே - உனதுகுமாரன் அளவற்றநாள் கொடுங்கோல்செலுத்தி வந்தனன். அதனால் அவனைப் போர்முகத்தினின்றுங் கொன்றனம், இனிஉனது செங்கோலினால் உலகத்தைக்காத்து, அந்தியகாலத்தில் நமது திருவடிகளில் அயிக்கியமாகுகவென்று திருவாய்மலர்ந்து எழுந்தருளி, சொர்க்கலோகத்தினுஞ் சிறந்தகண்டக நகரத்தைத் துறந்து, தம்மோடு தொடர்ந்துவரும் பிரமுகாளையும் சக்கிரபாணிமகாராசனையும் அங்ஙனே நிறுத்தி, அறமுதலிய நாற்பயன்களையுஞ் சிறக்க வளிக்குந் திரிசந்தி க்ஷேத்திரத்தையடைந்து வதிந்தருளினர். உடனே சண்முகப்பெருமான் முதலியவீரர்களும் விண்டுவாதி தேவர்களும் நாரதாதிமுனிவர்களு மனமகிழ்ந்து, பூரணப்பொருளாகியும், புண்ணியமுதலாகியும், தம்மைப்போற்றுவார்க்கு இடர்கெடுத்தருளுந் தேவதேவோத்தமராகியுமிராநின்ற விநாயகமூர்த்தியைப் பூசித்தார்கள். பின்னர் விண்டுவாதிதேவர்கள் எமது கர்த்தனிடத்தில் விடைபெற்று, அவ்வவர்களுடைய பதவிகளைச்சேர்ந்து ஆனந்தமுற்றிருந்தார்கள். இப்பால்நந்தியாதி கணநாதர்களும் முருகப்பெருமான் முதலிய சேனைத்தலைவர்களுங்கைகடவாதுகலந்திருப்பச், சித்திபுத்திகளோடும் அங்கனேசிறிதுநாள் வசித்திருந்து, தமது மயில்வாகனத்தைச் சண்முகப்பெருமானுக்கருளி, இன்றுமுதல் எவ்வுலகமும்உன்னை மயூரத்துவசனென்றுரைக்கவென்று அநுக்கிரகஞ்செய்து, அவரையும் மற்றவீரர்களையும் தத்தமிருக்கையிற் செல்லுமாறு விடைகொடுத்துத், தமது பரிசனங்களோடு முனிச்சிறார்களோடுந் தாமெழுந்தருளி, சகலவான்மாக்களாலும் பூசிக்கப்படுகின்ற தமது லோகத்தை யடைந்தருளினர். அதுமுதல் விநாயகப்பெருமானுடைய திருவருளைக்கொண்டு சென்றசக்கிரபாணிமகாராசன் தருமசாத்ரங்களின் முறைமைப்படி † தனது அரசாக்ஷியைச்செலுத்திவந்தனன். அதனால்சதுர்வேதங்களுந் தழைத்தோங்கின, திரிலோகங்களுந் துன்பமில்லாமல் வாழ்ந்தன. தேவர்கள் அவிற்பாகமுதலிய வைகளைப்பெற்றுக் களித்திருந்தார்கள். தேவாலயங்க ளெலாம் பழயபடி யோங்கிப்பூசைகொண்டன.

---

† தருமசாத்ரம், ௰௮-மநு, அத்திரி, ஹாரிதம், விட்டுணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கிரசம், யமம், ஆபத்தம்பம், சம்வர்த்தம், காத்தியாயனம், பிரகற்பதி, பராசரம், வியாசம், சங்கலிதம், தக்கம், கௌதமம், சாதான்மம், வசிட்டம். இவற்றுள், கிரேதாயுகத்தில், மநுமிருதியும், திரேதாயுகத்திற் கௌதமமிருதியும், துவாபரத்திற் சங்கலிதமிருதியும், கலியுகத்திற் பராசரமிருதியு முக்கியமாயிருக்கும்.

கணபதிதுணை.

ஆறுவது,

பாலசந்திரர் திருவவதாரப்படலம்.

ஓசவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியானவர்மூந்திய் மயூரேச அவதாரத்தில் வேதசாத்ரங்களைத் தேவர்களிடத்தினின்றுங் கவர்ந்த கமலாசுரனைச் சங்கரித்து,மீட்டும் அவ்வேதசாத்ரங்களை அத்தேவர்கட்குத் தந்த திருவிளையாடலும், பிந்தியமயூரேச அவதாரத்தில் தேவர்களைச் சிறையில்வைத்த சிந்தாசுரனைக்கொன்று, மற்ற அவுணர்கள் செய்தமாயையினை யொழித்த திருவிளையாடலுஞ்சொன்னோம், அவரே மற்றொருபோது பாலசந்திரர்திருவவதாரங்கொண்டு, யமனுடைய வீரியத்தினின்றும் உதித்த அனலாசுரனுயிரை வாட்டுமாறு ஓர்பிராமணச்சிறுவனைப்போலத் திருவுருக்கொண்டுசென்று, அவ்வசுரனைவிழுங்கித் தேவர்களைக்காத்துப்,பின்னரவ்வனைவிழுங்கிய வெப்பத்தை எண்பத்தெண்ணாயிரமுனிவர்கள் செய்த தூர்வையருச்சனையை யேற்று விலக்கியருளியதிருவிளையாடலை முன்னமே உபாசனாகாதையிற் சொல்லியிருக்கின்றோம், இப்பால் தூமகேதுதிருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோங் கேட்பீராக.

கணபதிதுணை.

ஏழாவது,

தூமகேதுதிருவவதாரப்படலம்.

ஓசவுனகாதிமுனிவர்களே, விந்தியமென்னுந் தேயத்திலே மகியாதினியென்னு மோர்நகரமுண்டு. அந்நகரத்தில்- தானவர்கட்கெல்லாந்தலைவனாய், வானவர்களஞ்சும்படியான ஆண்மையினையுடையவனாய், மெய்-முடி- கேசம்- தந்தம்- இவைகள்- சாமநிறத்தினனாய், அளவற்றரத்நாபரணங்களைத்தரித்த காட்சியினனாய், பராக்கிரமத்திற்சிறந்த சதுரங்க சேனைகளையுடையவனாய், சிவபிரானுடைய திருவடித்தாமரைகட்கு இடைவிடாத அன்பினனாய், அவரடியார்கள் வேண்டுவனவற்றை யுதவிப் பூசைசெய்கின்ற பத்தியினனாய், இருக்கும்போதும் நிற்கும்போதும் நடக்கும்போதும் நினைக்கும்போதும் எப்போதும் பரமசிவத்தைத் தியானிக்கும்படியான உள்ளத்தினனாய், வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுப்பதில் கற்பகவிருக்கத்தை நிகர்த்த கையினனாய், எல்லாரும் புண்ணியமே இவனாக வுருக்கொண்டுவந்ததென்று சொல்லும்படியான புகழை யுடைய

வனும், தன்னுயிர்போல் மன்னுயிர்களையுங் காத்துரக்ஷிக்குந் தயையையு
டையவனும், மகமேரு வினைநிகர்த்த செல்வத்தினை யுடையவனும், சகல
குணங்களினு மேலானவனும், தூமாசுரனென்னும் பெயரினை யுடைய வ
ரசனிருந்தனன். அவ்வரசனுக்குத் தனது மனம்போல வழிபடத் தக்க
சிந்தாமணி- தருமமூர்த்தி- சம்பாதி- விபுலன்- நிட்காமன் - புத்திமான்-
வித்துருமன்- ஓட்டன்- என்னும் பெயரினையுடைய எட்டமைச்சர்களும்
சுமதி- சுகரி- சுப்புரு- சுமனோகரி- சுநேத்திரி- யென்னும் ஐந்துமனைவிய
ர்களும், மகிபாலன் - நந்தன் - வீரபத்திரன் - தனரதன்- என்னு நான்கு
குமாரர்களு மிருந்தார்கள். இந்தக்குமாரர்கட்கும் அமைச்சர்கட்கும் சே
னைத்தலைவர் முதலியமற்றைப் பரிசனங்கட்கும் அத்தூமராசன் தனது
மாளிகையைப்போல அழகுபொருந்திய மாளிகைமுதலான செல்வங்க
ளைக்கொடுத்து, சகலபோகங்களையுந் தேவேந்திரனைப்போல அநுபவித்து
குபேரனைப்போல அளவற்றபாக்கியங்களைப் பெற்று அரசாக்ஷிசெய்துவ
ருகின்றநாளையில், ஒருநாள் சந்திரகாந்தங்களினுற் சமைத்திருக்கின்ற த
னது கொலுச்சபையில் நவரத்நமயமா யிராநின்ற சிங்காதனத்தின் மீது
வீற்றிருந்து,மங்கையர்கள்செய்யும் ஆடல்பாடல்முதலியவைகளைக்கண்டு
ங் கேட்டுங்களிப்புற்றும், அயற்புலத்துமன்னவர்களெல்லாம் அடிவணங்
கித்திறைதர அவர்கட்குக்கருணைவழங்கியிருக்கின்றசமயத்தில்,நான்கு வே
தங்களையுமோதி, ஆறங்கங்களையுமுணர்ந்து,மற்றைய் நூல்களை யெல்லாந்
தெளிந்து நிறைந்தவுள்ளத்தினராய்,கோடிசூரியர்களைப்போலப்பிரகாசிக்
குங் கீர்த்தியைப்பெற்றவராய், சந்திரசடாதரமூர்த்திக்கு அன்பினராய்,
திரிகாலங்களையு மறியவல்லபுண்ணியசீலரா யிராநின்ற பிருகுமகாமுனி
வர் தமது சிடக்கூட்டங்களோடும்அங்ஙனமெழுந்தருளினர். அவரைத்தூ
மராசன்கண்டு, இத்தபோதனர் யாம்முன்னர் செய்திருக்கின்றபுண்ணிய
பலத்தினுல் வந்தனரென்று மனமகிழ்ந்து, மிகுந்தபத்தியோடெதிர்கொ
ண்டழைத்துவந்து, யோக்கியகரமான ஓராதனத்தி லவரையெழுந்தருள
ச்செய்து, அர்க்கியபாத்திய ஆசமனுதிகளைக்கொண்டு பூசித்து,பரிமளமி
குந்த புட்பவகைகளினலருச்சித்து, அளவற்ற தோத்திரங்களைச்செய்து,
சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து இதனைச்சொல்லுவதாயினன். சுவாமி
தேவரீர் இங்ஙனமெழுந்தருளியதால் அடியேனுடைய கோத்திரமுங் கு
லமுஞ் சுத்தபவித்திரமாயின, அடியேன் சகலவிதத்தினுங் கிருதார்த்தனு
யினேன், நினைத்தவெல்லாம் நொடிக்குமுன் உண்டாக்கத்தக்க வல்லமைத்
தையுடைய தேவரீர்க்கு அற்பனேனிடத்திற் பெறத்தக்கது ஏதுமில்லை
யாயினும், தேவரீரையொத்தவர்கள் ஓர் காரியத்தைக்குறியாமல் ஓரிடத்
திற்செல்லுவதில்லை யாதலால், இங்ஙனந் தேவரீரெழுந்தருளிய காரியத்
தை அடியேற்குத் தெரிவித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அ
தற்குப் பிருகுமகாமுனிவர் அவனைப்பார்த்து, அரசனே- நீதருமரூபியா
ய் எப்போதுஞ் சிவபிரானைத் தியானிக்கின்ற வுள்ளத்தினை யுடையவனு
தலால், உன்னைக்காணவேண்டிப் பரிவோடும் வந்தோமேயன்றி வேறில்
லை,அவ்வாறே உன்னைக்கண்டனம், இனிநமதாசிரமத்திற்குச்செல்லுகின்
றேமென்று சொல்லினர். அதற்குமேல் தூமராசன் அம்முனிபுங்கவரை
மீட்டும்பணிந்தெழுந்து, இருகரங்களையுங் கூப்பிநின்று, சுவாமி- எல்லா

வுலகமுந்தாழ்வாகச்சொல்லுகின்ற அசுரகுலத்தில்அடியேனவதரித்தும், அடியேனுக்கு அளவற்றசெல்வமும்- சிறந்த அரசாக்ஷியும் - கற்பிற்சிறந்த மனைவியர்களும்-பராக்கிரமத்தையுடைய புத்திரர்களும்-மேலானபோகங்களும்- சத்துருக்களுக்கு இடையாதவீரமும்- பெரியோர்கள்மதிக்கத்தக்க யோக்கியமும்- சிவபத்தியும்- சிவனடியார்களிடத்தி லன்பும்- மனிதரிடத்தில் தாயினுஞ்சிறந்த தயையும்- இன்னுமித் தன்மைத்தான நற்குண நற்செய்கைளெல்லாம் ஒருகாலத்தினு மாறுபடாது பொருந்தியிருப்பது எந்தவிதத்தினாலோ, அதனை அடியேற்குத் தெரிவித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குப் பிருகுமகாமுனிவர் சந்தோஷித்து, அரசனே- நீமுற்சனனத்தில் விகுதியென்னும் பெயரினையுடைய ஓரரசனாகப்பிறந்து, வேதாகமபுராணங்களை நன்குறவுணர்ந்து, அதற்குத் தக்கபடி மநுநீதியில் வழாமல் அரசாக்ஷிசெய்து, தேவர்கள் முதலாயினோர்க்கு அன்போடுபூசைசெய்து, சத்ததீபங்களையும் ஒரேகுடை நீழலிலாண்டு, பெரிதானபோகபாக்கியங்களை யநுபவித்து, சிவபிரானையும் அவரடியார்களையும் மிக்கவன்போடும் பூசித்து, எல்லாத்தருமங்களையுந் தாழ்வில்லாமல் மேன்மேலும் நிறைவேற்றித், திரிகால வந்தனங்களையுந் தவறாமற்செய்து, அளவற்றதானங்களை அன்போடியற்றி, இகபர மிரண்டு முன்வசமாகத் தக்கதாய் வாழ்ந்திருக்கின்ற நாளையில், தொண்ணூற்றொன்பது யாகங்களை நிறைவேற்றி, நூறாவதுயாகந் தொடங்கிச் செய்வதாயினை, அதனைத்தேவேந்திரனறிந்து, இந்த நூறுயாகமு சரியாகச் செய்து முடியுமாயின் நீதனது அரசுரிமைக்குவந்துவிடுவாயென்றுபயந்து, அந்தயாகத்தை நிறைவேற்றவொட்டாமற் செய்யத்தக்கது எந்த வுபாயத்தினாலென்று ஆலோசித்துக்கொண்டிருந்தனன், அச்சமயத்தில் நாரதமுனிவர் அவனிடத்திற்சென்றனர், அவரை இந்திரன்காண்டலும் இனியாம் எண்ணிய காரியத்தை இலேசாய் முடித்துக்கொள்ளலாமென்று மகிழ்ந்தவனாய், உடனே அவரையெதிர்கொண் டழைத்துவந்து, ஓராதனத்திலிருக்கச்செய்து, அளவற்றபூசைகளையுந் தோத்திரங்களையுஞ் செய்து, சுவாமி- சகலநற்குண நற்செயகைகளினுஞ் சிறந்தவிகுதியென்னுமரசன்தொண்ணூற்றொன்பது அசுவமேதயாகஞ்செய்து முடித்து, இத்தினமற்றொருயாகத்தையுஞ் செய்யத்தொடங்கினான், அதைத்தடுப்பதற்கு அடியேனலாகாமையால், தேவரீர் கிருபைசெய்து அதனை நடத்தவொட்டாமற்றடுத்து, அடியேற்கு இச்சொர்க்கலோகாதிபத்தியத்தை நிலைபெறச் செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன்,ஓ தூமராசனே-நீஎப்பிறப்பிற் செய்த வினையோ சகலமுந்தெரிந்த அம்முனிவர் அதற்கிசைந்து,ஓர்பிராமணனாகவடிவங்கொண்டு, தண்டூன்றித், தலைநடுங்கித், தோல்திரைந்து, கைநடுங்கிப், பார்க்கின்றோர்களெல்லாம் மனதிரங்கும்படியாகக் கால்துவண்டு, உடல்சரிந்து, சிவநாமகீர்த்தனைகளைச் செய்துக்கொண்டு, சகலமுந்துறந்தவனைப்போல உனது யாகசாலைக்குள்ளே வந்தனர், அவ்வாறு வந்தவரை நீபிராமணரென்றே நினைத்து, அவரை எதிர்கொண்டழைத்து வந்து, ஓராதனத்திலிருக்கச்செய்து, அருக்கிய முதலானவைகளைக் கொடுத்து, பிறவித்தரித்திரனுக்குப் பெரும்பொருள் கிடைத்ததுபோல மனமகிழ்ந்து, சுவாமி- தேவரீர்யார், சுவாமிகள் இங்ஙனமெழுந்தருளியகார

ணம்யாது, அதனைச் சொல்லவேண்டுமென்று கேட்டனை, அதற்குப்பிராமணராகவந்த நாரதமுனிவர் உன்னைப்பார்த்து, அரசனே - நம்மையாவருஞ் சிவசன்மனென்று துதிப்பார்கள், யாம் உன்னிடத்தில் ஓர்காரியமாகவந்தனம், அஃது யாதெனில்- உனது மனைவியின்மீது நமக்கிச்சை யுண்டா யிருக்கின்றமையால், அவளை நமக்குத் தரல்வேண்டுமென்று கேட்டனர், அப்போது நீ மனம்வருந்தி, சுவாமி- சிவபிரான் கிருபையோடுந் திருவாய்மலர்ந்தருளிய வேதாகமங்களில் விதித்த விதியாதோ அவ்வாறுநடந்து வருவார்களாயின் அவர்கட்கு எக்காலத்தும் புண்ணியமும்புகழுமுண்டாகும், அவைகளில் விலக்காகவிருக்கின்றவைகளை யநுசரித்து வந்தால் பொல்லாதபாவமும் பழியுநேரிடும், ஒருவனுக்கு ஒருவன் சந்தோஷத்தோடு கொடுக்கும்பொருள் யாதோ அஃது இம்மைமறுமை இரண்டற்கும் உதவியாகவிருக்கவேண்டும், அவ்வாறின்றிஇருமைக்குமாகாதபடி கொடுத்தால் பின்னர் கொடுப்போனும் ஏற்போனுங் கொடியதுட்டர்களாகி யெல்லாநகரங்களினும் வீழ்வார்களாதலால், எனக்குரிய மனையாளொழிய ஏனையபதார்த்தங்களில் யாதுவேண்டினுந் தருவேனென்று சொல்லினன், அதை வஞ்சவடிவாய் வந்த மறையவர்கேட்டுச் சொல்லுவார், அரசனே- யாம் இதுகாறும் பிரமசரிய நிலையிலிருந்துளம், அப்பிரமசரியம்- கிரஹஸ்தம்- வானப்பிரஸ்தம்- சந்நியாசம் - எனச்சொல்லுகின்ற நான்கு நிலைகளினும் கிரஹஸ்தாசிரம நிலையானது மிகவுஞ் சிறப்புடைய தாதலால், அந்நிலையை நமதுள்ளம் விரும்பியது, அவ்விருப்பத்தை நிறைவேற்றத்தக்கவர்கள் உன்னையன்றிவேறொருவரில்லை, இரப்போரிடத்திலிரக்கமும், அவர்கள் கோரியது எவ்வகைப்பட்ட பதார்த்தங்களே யாயினும் அவைகளை இல்லையென்னாது கொடுக்கத்தக்க ஈகையும் உன்னிடத்திலுண்டா யிருக்கின்றமையால், யாகஞ்செய்கின்றபோது ஒருவன்வந்து இரப்பானெனில் அவ்விரப்பை நிரப்பியதுப்புமாறு வேதாகமங்களிற்கூறி யிருககின்றபடி நீ நிறைவேற்றவல்லையென்று நல்ல குணத்தையும் அழகையும் வாய்ந்த உனது மனைவியை இச்சித்துக் கேட்டனம், அதற்குமிகுந்த ஆவலோடும் வந்திருந்த அதிதியானவன் வறியனாயேகும்படி உன்னிடத்தில் இவ்வுலகத்தாரறிய விருக்கின்ற உனது மனைவியைக் கொடுக்கமாட்டாதவகை கண்டிதமாகச்சொல்லி நம்மைவீணே போகும்படி கைவிட்டனை, இஃதுனக்கழகோவென்று சொல்லினர். அதனை நீதடுத்து, அந்தணரே- எனதுராச்சியமும் எனக்கோர்மனைவியாதலால், அத்தகையமனைவியைக் கொடுக்கின்றேன் வாங்கிக்கொள்ளுக, அதற்குச் சம்மதியில்லாவிடின் அளவற்றகன்னியர்களை வரவழைத்துத் தருகின்றேன், அவருள் தேவரீருக்கிஷ்டமானவளைக்கைக்கொண்டு கிரஹஸ் தாசிரமத்தினையாதரித்துக்கொள்ளுகவென்று பிரார்த்தித்துக்கூறினன்,இவ்வாறுபிரார்த்தித்துக் கூறியும், அதற்கவர் ஒப்புகொள்ளாமல், அரசனே-ஒருவனோர்பொருளை யிச்சித்தால் அப்போதே அவனிச்சைப்படி அப்பொருள் கிடைக்குமாயின் அஃது தாழ்ந்தபொருளாயினும் உடனே அவனுக்கு வாட்டந்தீர்ந்து மேலானமகிழ்ச்சியைக் கொடுக்கும், அவ்வாறின்றிஅப்போதே அவன் இச்சித்ததைப்பார்க்கினுஞ் சிறந்தபொருள் வேறொன்று கிடைத்தாலும் அஃது அவன்வாட்டத்தினைத் தணித்து மகிழ்ச்சியை

க் தரமாட்டாது, இதனை நன்றாயறியக்கடவை, இலக்குமிமுதலிய தேவ மாதர்களினுஞ் சிறந்த அழகினையுங் குணத்தினையும் வாய்ந்த உனது மனையாட்டியை விரும்பிக் குழைகின்ற நமது மனத்திற்கு, உனதுராச்சி யத்தையுஞ்சிங்காரமுள்ள கன்னியரையும் அளவற்ற திரவியங் களையும் ஏனைய மேலானபதார்த்தங்களையுங் கொடுத்தாலும் அவைகளென்ன திருப்தியினைச்செய்யமாட்டும், யாம் இச்சித்தபடிகொடுப்பதுண்டாயின் உனது மனைவியைக்கொடு,இல்லையேல்நீயிச்சித்தது என்னிடத்திற்கிடைக்கமாட்டாதென்று சொல்லி நமக்குவிடைகொடு, நாம்வந்தவழியே எங்கித் திரும்பிச்செல்லுகின்றேமென்றுசொல்லினர். அதற்கு நீ அறநெறியைக் கெடுக்கத்தக்க பொருளையான் கொடேனாயினும், தேவரீர் இங்ஙனமிருந்து போசனஞ்செய்து சிநேகவாற்சல்லியத்தை நடாத்தியெழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனை, அப்போது அந்தணனைப்போல வடிவங்கொண்டு வந்து, இந்திரனுடைய கருத்தின்வழியே யிருக்கின்ற நாரதமுனிவர் நகைசெய்து, கண்கள் கொவ்வைக் கனியையொப்பச் சிவந்து, மனதிற்கபடத்தையேவைத்து, உன்னை மிகுந்தகோபத்தோடும் நெறித்துப்பார்த்து,சிறிதுமிரக்கமில்லாத அரசனே- வருணாச்சிரமத்தினைப் பார்க்கினு முத்தியைத்தரத்தக்கது வேறொன்றுமில்லை, அத்தன்மைத்தான வருணாச்சிரமத்தை உறுதியாகப்பிடித்தோர்களுக்குமற்றொன்றினும் ஆசையிருத்தலாகாது, ஆசையுள்ளவர்களாயின் அவர்கள் அவ்வருணாச்சிரமத்தை உறுதியாகப் பிடியாதவர்களென்றுசொல்லல்வேண்டும், அப்படியிருக்கமுதல் வருணமானபிரமசரிய ஆச்சிரமத்திலிருக்கின்ற நமக்கு இரண்டாம் வருணமான கிரஹஸ்தாச்சிரமத்தினைக் கொடாமற்போயினை, நல்லவருணாச்சிரம நிலைகளில்லாமற் செய்கின்றதொழில்களனைத்துந் துன்பத்தை விளைக்கத்தக்க ராக்ஷசத்தொழிலுக்குச் சமானமாகும், அதுபோல நீ மேலான யாகத்தினைச்செய்தும் ராக்ஷசத்தொழிலை யுடையவனா யிருக்கின்றனை, அதனால் மேல்வரும்பிறவியில் நீராக்ஷசனாகப் பிறக்கக் கடவையென்று சபித்து, மீட்டும் உன்னை உருத்துப்பார்த்து, சிறிதேனுமிரக்க மில்லாமல் யாம் யாசித்ததைத் தராத பிழையினால் நமக்கு அவமானம்உண்டாக்கினையல்லவா வென்று கோபித்து, யாகசாலையிலிருந்த ஓமகுண்டமுதலானவைகளையும் பதார்த்தங்களையு மழித்துச் சின்னபின்னஞ் செய்து போயினர். பின்னர் நீ நடந்த செயல்களையெல்லாம் யோசித்து, நாரதமுனிவரோ தேவேந்திரனுடைய புணர்ப்பினால் இங்ஙனம்வந்து இவ்வாறு நடாத்திச் சென்றன ரென்றுதேறி, யாகசாலையினின்றும் அரண்மனையிற் சென்று, முன்போலவே சிவபூசை முதலானவைகளைச்செய்து கொண்டு அச்சனனத்தில் காலங்கழித்து, இச்சனனத்தில் நாரதர்கூறிய சாபத்தின்படி தீமைசெய்கின்ற ராக்ஷசகுலத்திற் பிறந்தனை, அவ்வாறு பிறந்தும் முன்செய்திருக்கின்ற நல்வினைகளினாலே சகலநற்குணங்களையும்வாய்ந்து யோக்கியாயோக்கியங்களை யறிந்து, சற்கருமங்களையேநடாத்தி வருகின்றனையென்றுசொல்லிப்பிருகுமுனிவர்தமதாச்சிரமத்திற்கெழுந்தருளினர் இவையனைத்தையுந் தூமராசன்கேட்டு, தனது மனத்துள் வைத்துக்கொண்டு, முன்போலவே சகலகருமங்களையும் வழுவின்றி நடாத்திக் கொண்டுவந்தனன். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே, இவ்வாறு தூமாசு

ரன் வழுவின்றி வாழ்கின்றகாலத்தில், சகலபுவன கர்த்தாவாகி, அடியார்களுடைய துன்பங்களையொழிக்க வல்ல விநாயகப்பெருமானானவர் தூமகேது திருவவதாரங்கொண்டருளிய திருவிளையாடலைச் சொல்லுவோங் கேட்பீராக. அஃதெவ்வாறெனில், முற்கூறிய தூமாசுரன் அரசியற்றி வருகின்ற மகிபாதினியென்னு நகரத்தில், அரசகுலத்திற்பிறந்தவனாய்,மேலானசெல்வத்தையுங் கீர்த்தியையும் பெற்றவனாய், வேதாகமநெறிகளிற்றவறாதவனாய், பராக்கிரமத்திற்சிறந்தவனாய், மாதவராசனென்னும் பெயரினையுடையவனாய், ஒருவன்வசித்திருந்தனன். அவனுக்குக் கற்பிற்சிறந்தசுமுதைையென்னும் பெயரினையுடைய வோர்மனைவியிருந்தனள். இவ்விருவரும் அன்றிலைப்போல இணைபிரியாது வாழ்ந்துகொண்டு, தருமமுதலானவைகளைத் தாழ்வில்லாமற்செய்து, தேவர்களைப்போல சகலபோகங்களையு மநுபவித்து, இல்லறநெறியை இனிது நடாத்திவருகின்ற காலத்தில், இவர்கட்கு நெடுநாள் ஓர் புத்திரோற்பத்தி யில்லாமையினாலே மனம்வருந்தி, அந்தணர் பெரியோர் முனிவர்கள் வறியோர்முதலிய பேர்கட்கு அநேகதிரவியங்களையும் ஆடையாபரணாதிகளையுங் கொடுத்து, அளவற்றநாள் தவங்களைச்செய்து வந்தனர். அதனாலும்ஓர்புத்திரனுண்டாகாமையினால், ஓர்நாள் மாதவராசன் தனது மனைவியைப் பார்த்துக் கோபித்து இதனைப்பேசுவதாயினன். பெண்ணே - இளமை- வனப்பு- அணிகலன்- கோலம்- சிருங்காரம்- திரவியம் - முதலானவைகள குறைவறவிருந்தும் நம்மை நற்கதியிற் சேர்ப்பிக்கவல்ல ஓர்புதல்வனில்லாவிடின் அவைகள் என்னபிரயோசனத்திற் காம், நாடோறும் உலகமெல்லாம் உன்னை மலடியென்று சொல்லவும் நாணமில்லையா, இப்பிரபஞ்சத்தில் நீயுமோர் பெண்பிள்ளையாக ஏன்பிறந்தனையோ, சீசீ- உனது முகத்தைக் காணுந்தோறும் எனது மனமானது அழலாய்க் கொதிக்கின்றதே, இவ்வாறிங்கிருப்பதைவிடக் காட்டிலேனுஞ் செல்லலாகாதா, வைராக்கியமான தொழில்களைச் செய்யலாகாதா, அதுவுமில்லாவிடின் உயிரைவிடலாகாதா, இவ்வித பழிப்பினுக் கிலக்காகிய சரீரத்தினை இந்நாட்டினுள் ஏன் வீணிற்சுமந்துகொண்டிருக்கின்றனை, இனி என்கண்முன்னர் வாரா தொழிகவென்று சொல்லிப் பின்னுஞ்சொல்லுவான், ஐயோ - இவ்வுலகத்திலே யாவருந் தெய்வம் ஒன்றுண்டென்று சொல்லுவார்களே, அத்தெய்வம் என்னிடத்திற்பொய்த்ததோ,பூருவம் என்னபாவஞ்செய்திருக்கின்றேனோ இப்போது என்னதவங்களைச்செய்தும்என்னதருமங்களைநடாத்தியும்,ஓர் புத்திரப்பேறில்லாமற் போனேனேயென்றுதனக்குத்தானேசொல்லிவெறுத்துத் துக்கித்தனன். இவைகளையெல்லாம் அவன்மனைவியாகிய சுமுதைகேட்டலுஞ் சோபித்து, பூமியில் மூர்ச்சையாகிவிழ்ந்து, வெகுநேரம்வரையிற் றெளியாமலிருந்து, பின்னர் சிறிது தெளிந்தெழுந்து, தன்னையீன்ற குரவர்களையுந் தெய்வங்களையுநொந்து, அதிகதுயரத்தை யடைந்து, இனி தவஞ்செய்வதே கருமமென்று துணிந்துவனத்திற்சென்றனள் அவ்வனத்தில் அளவற்ற சிங்கங்கள் புலிகள் கரடிகள் முதலானதுட்டமிருகங்கள் எங்கணுஞ் சஞ்சரித்துக்கொண்டிருக்கவுமஞ்சாது,மகாவிஷ்ணுவை மனதில்நினைத்து, ஆகாரநித்திரை முதலானவைகளை நீத்து, வேறொரு சிந்தையுங்கொள்ளாமல், சிலையைப்போல அசைவற்றிருந்து,சரீரமெ

ங்கும் புற்றுகள்வளர்ந்து மூடி கொள்ளும்படியாகப் பன்னிரண்டுவருடங்ஞ் சலியாமல் மிக்கவைராக்கியத்தோடு தவஞ்செய்துகொண்டிருந்தனள் அத்தவத்திற்கு எல்லாமூர்த்தங்களுந் தாமாகவிருக்கின்ற விநாயக மூர்த்தி கிருபைசுரந்து, அவள் தியானித்தவாறே தமது கரங்களில் சங்கு சக்கரங் கோதண்டமுதலானவைகளை யேந்தி, மகாவிஷ்ணுவைப்போலத்திருவுருக்கொண்டு அவளெதிரிற் பிரத்தியக்ஷமாயினர். அவரைக் கற்பிற்சிறந்த சுமுதைகண்டு, நாராயணமூர்த்திவந்து விட்டனரென்றுஞரோலென்றெழுந்து,கண்கள் ஆனந்தபாஷபஞ்சொரிய,உடலெங்கும்உரோமாஞ்சிதம்பூப்ப, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிசாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, தனது மனத்திலுள்ள துக்கங்களையெல்லாம் விண்ணப்பஞ் செய்வதாயினள். அடியேனை யாட்கொள்ளுமாறு கிருபைசெய் தெழுந்தருளிய கர்த்தனே - சமுசாரமென்னும் பெரியசமுத்திரத்தி லிருக்கின்ற அடியேங்களைக் கதியென்னுங் கரையிற்சேர்ப்பிக்கவல்ல ஓர் புத்திரனில்லாமையால் அடியேனைக்காதலர் பலவாறுசீற,அதனால்மிகுந்தமனவருத்தத்தோடு இக்காட்டில்வந்து தேவரீரைத்தியானஞ் செயதுகொண்டு தவத்திலிருந்தேன், இங்கு அளவற்றமிருகங்கள் சஞ்சரித்துகொண் டிருந்தும் இந்நாள்வரையில் அவைகள் என்னைக்கொன்று தின்னுமல் விட்டு விட்டதை யோசிக்குமிடத்து அடியேனைப் பாவியென்று நினைத்தன போலும் கிருபைக்கடலாகவிருக்கின்ற தேவரீர்,மனம் உருகிவாடுகின்ற அடியேனை முற்றினுங்காத்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தனள். அப்போது அரவணைச்செல்வராகவந்த விநாயகமூர்த்தியானவர் அச்சுமுதையைப்பார்த்து ஓமடவாய்- உனக்குவேண்டிய வரங்களைக்கேள் தருகின்றேமென்றுதிருவாய்மலர்ந்தனர். அதற்கவள் மீட்டு மவரைப் பணிந்தெழுந்து, சுவாமி- தேவரீர்க்குச் சமானமான பராக்கிரமத்தினையுடைய ஓர்புதல்வனை அடியேற்குத் தரல்வேண்டும், இதுவே யான்கேட்டுக்கொள்ளக்கருதியவரமாகும், அவ்வரம் அடியேற்குக் கிடைத்தால் மாத்திரம் என்னைக் கோபத்தோடும் விலக்கியகாதலர் முகத்தின் முன்னஞ்சென்று இனிவாழ்ந்திருப்பேன், கிடையாவிடில் இங்ஙனே தேவரீர்க்கெதிரில் அடியேனுடைய வுயிரை மாயத்துக்கொள்ளுவேனென்று விண்ணப்பஞ்செய்துகொண்டனள். இவ்வாறு சுமுதையானவள் மிக்க உறுதியோடுங் கூறிய வசனங்களைச் சுவாமிகேட்டுச் சந்தோஷங்கொண்டு, அளவற்ற பத்தியை யுடையவளே- உனதுகருத்தின்படிநம்மையே நீபுத்திரனாகப்பெறுவையாதலால் இனியொன்றற்கு மஞ்சலேயென்று திருவாய்மலர்ந்து, தமதுகரங்களை அவள் சென்னியின் மீதுவைத்து அநுக்கிரகஞ்செய்து கரந்தருளினர். இப்பால் கிடைத்தற்கரிய வரத்தினைப்பெற்று ஆனந்தமுற்றிருக்கின்றசுமுதையானவள் அவ்வனத்தைவிட்டுத், தனது நகரத்திற்குப்போகும்படியாகத் திரும்பினள். அப்போது வழிதெரியாமல் விம்மித் துயரமடைந்து, சமுசாரமென்னுங்காட்டில், வாதனையென்னு மிருகங்கள்தாக்கச், சுற்றமென்னுங் கொடிகள்நாற்புறத்துமிழுக்குமாறு, சுகமென்னுங்கானலைச் சலமென்று கருதித் தாவுகின்ற,உள்ளமென்னும் ஓர்மானுக்கு, அட்டாங்கயோகமே அதனது தாபாக்கினியைத் தணிக்கவல்ல மேகமாகும், அத்தன்மைத்தான மேகத்தாற்பொழிந்த திவ்வியதீர்த்தமாகிய பரவத்துவை மனமு

தலாகிய முக்கரணங்களாலும் அங்கை நெல்லிக்கனிபோல எளிதிலடை ந்தும், அதனை அக்கருத்துளிருக் தாது கைவிட்ட பயித்தியக் காரியாகிய வெனக்குவழிகாட்டத்தக்கவர்கள்யாவரிருக்கின்றார்கள். ஆயினும்நம்பினோ ரைக்காத்து ரக்ஷிக்கவல்ல மேலானதெய்வமே நமக்குவழிகாட்டுந் துணை யென்று தனதுள்ளத்தில் உறுதியாகநினைத்து, அவ்வனத்தைவிட்டு நடந் துகொண்டேயிருந்தனள். அவ்வாறு நடந்துகொண் டிருக்கையில், அவ ளெண்ணப்படி அந்தமேலானதெய்வமே வழிகாட்டச்சென்றவள் போல அவ்வனத்தையெல்லாங்கடந்து சென்று, தனது நகரமானது எதிரிற்றோ ற்றக்கண்டு அதனைச் சமீபித்தனள். அப்போது அந்நகரத்தார் கண்களுக் குச் சுமுகையினுடையதேஜசானது அவள்செய்ததவமகிமையினாலேயொரு சோதி வருகின்றதாய்த்தோற்றி, இதென்ன அற்புதமென்று திகைத்தவ ராய், பன்னிரண்டுசூரியர்களும் ஒன்றாகக்கூடி வருகின்றார்களோ, அல்ல து சந்திரனுடைய காந்தியோ, அதுவுமல்ல வெனில் பிரளயாக்கினியின் தேயசோ, ஒன்றுந்தெரியவில்லையே, இச்சோதியெவ்வளவு மழுங்காமல் வருகின்றதேயென்று மயங்கிப், பின்னர் அவள் சமீபித்துவருதலும் அவ ர்கள் சந்தேகங்களினின்று நீங்கி, முன்னர் வனத்திற்சென்ற சுமுகையே நல்லவரங்களைப்பெற்று வருகின்றனளென்று தெளிந்து, யாவரும் எதிர் கொண்டுசென்று, சுமுகையைப்பணிந்தெழுந்து, தாயே- தேவரீர் இந்நக ரத்தை நோக்கி மீண்டுவந்தது அடியேங்கள் செய்த பூசாபலத்தினா லன் றோ, இனித்தேவரீர் எக்காலத்துஞ் சுகமுற்று வாழ்கவென்று அநேகவுப சாரவார்த்தைகளைக்கூறி, அவள் காதலனுடைய க்ஷேமத்தினை யறிவித்து ஆனந்தமுற்றிருந்தனர். பின்னர் சுமுகையானவள் அவர்களெல்லாந்தன் னைப்புடைசூழ்ந்து வரும்படியாக அவ்வவர்கட்குத் தக்கபடி மறுமொழி கள் கூறித் தனது நகரத்திற்குச் சமீபமாகவந்தனள். அவள் வரவை மா தவராசனறிந்து, அளவற்றநாள் திகைதப்பிக் காணாமலிருந்த சப்பலைமீட் டுங் கண்டவனைப்போல ஆனந்தமுற்று, தேவர்கட்கும் முனிவர்கட்கும் பூசனைபுரிந்து, ஆடையாபரண முதலானவைகளைத் தானஞ்செய்து, தன து நகரத்தின்கணுள்ள நாகரீகர்களைக்கூவிச், சதுரங்கசேனைகளோடுந் த னது மனைவியை எதிர்கொண்டழைத்து வருமாறு உத்தரவு செய்தனன், அவ்வுத்தரவை அவர்கள் சிரமேற்கொண்டு, அளவற்ற சந்தோஷத்துட னே அவளை எதிர்கொண்டுசென்று, நவரத்நமயமா யிராநின்ற ஆடையா பரணாதிகளைக்கொடுத்து அணிந்துகொள்ளச்செய்து, ஓர் சிவிகையின் மீ தேற்றிச், சகலவைபவங்களோடும் அந்நகரத்துக் கோபுரவாய்தலினுழை ந்து, இராசவீதிகளையெல்லாங் கடந்து, அரசனது அரண்மனையிற்கொண் டுபோய்விடுத்து விடைபெற்று, யாவருந்தத்த மிருக்கையைநோக்கிச்செ ன்றார்கள். பின்னர் சுமுகையானவள் தனது காதலனைச் சாஷ்டாங்கமா கப்பணிந்தெழுந்து, அவனெதிரில் ஆனந்தவெள்ளம்பெருகநின்று, முன் னர் அவன் தன்னிடத்திற்காட்டியகோபத்தினால் நகரைவிட்டுச்சென்றது முதல் நடந்தகாரியங்களையெல்லாம் அவனுக்கு விவரமாகக்கூறினள். அ வையனைத்தையும் மாதவராசன் ஆனந்தத்தோடுங்கேட்டு, தனது பத்தி னியின் மனங்குளிரும்படியாகப் பலவித வுபசாரவார்த்தைகளைக்கூறி, அ வளோடு சரசசல்லாபமாய்க் கலந்து, சகலபோக பாக்கியங்களையுங்கு

றைவின்றி யநுபவித்துவந்தனன். அவ்வாறிருக்குங்காலத்தில், விநாயகமூர்த்தியினுடைய கிருபையினால் சுமுதை கருப்ப முற்றனள். அதுமுதல் அவளது திருவயிற்றெழிற்குப் பகையாகி, நம்மைபோலத்திருமாலைத்தாங்கிற் றில்லையென்று செம்மாப்புற்றிருந்த மெல்லியவிலைகளை யுடைய ஆலமரமானது, தனது வீரமனைத்து மொழிந்து பழுமரமென்னும்பெயரையவகித்தது. புத்திரனுருவங் காணவேண்டி நெடுநாள்சூரியனைநோக்கித் தவஞ்செய்திருந்த அவளது கண்களானவை, இனிமேலும் நமது காதலனுடைய புத்தியைவாட்ட லொத்ததன்றென்று கருதினாற்போலக்குழிந்து காட்டி உள்ளிட்டன. விநாயகமூர்த்தி பிரத்தியக்ஷமான காலத்தில் அவரைப் பலமுறை துதித்துப் புகழையடைந்த அவளது பவளத்துண்டத்தைபபழித்த செவ்வாயினைப்போல, அதை நண்ணிய அதரமும் அப்புகழ்யடைந்ததென்று சொல்லும்படி வெளுத்தது. சந்தனம் புட்பம் ஆடையாபரணமுதலிய வைகளைத் தமக்குத் தமது நாயகி யணியாதிருப்பதைக் கருதிப் பயந்துசுந்தரங்கரிந்ததுபோலவும, அவள் கருப்ப முற்றாளென்று யாவருக்குஞ் சாக்ஷிகாட்டு மாறுபோலவும்,அவளது முலைக்கண்களானது நீலமணிபோலக் கறுத்தன. அற்பசுகங்களை விடுத்து ஆண்டவனுடையதிருவடிகளைநாடினோர்கள்மேலானசுகத்தையடைவரென்றுசான்றோர்கள்சொல்லும்வாக்கியத்திற்கிலக்கியமாக,அன்னபானாதிகளையொழித்து அளவற்றநாள் தவஞ்செய்திருந்த அவளுதரமானது நாளுக்கு நாள் மேன்மேலும்பெருகி வளர்ந்தது. எந்நாளும் பகைவைத்திருந்தவரைப்பார்த்தவரில்லை யென்பதற்குச் சாக்ஷியாக நெடுநாள் தன்னைக் காணவொட்டாமல் நெரித்து வருத்திய தனங்கட்கு இப்போது நம்மையேதாழுங்காலநேர்ந்ததென்று உவகையொடு வெளிப்பட்டதுபோல, அவளது மின்னைவென்ற மெல்லிய இடையானது வீங்கிப்பருத்தது. இலக்குமி மணாளராகிய விண்டுவானவர் உதரத்துளிருந்து செய்கின்ற யோகத்திற்கு ஊறிடையூறும் வரலாகாதென்று நினைத்தனபோல, அவளது பாததாமரைளானவை நூபுர்முதலானவைகள் மெல்லமெல்ல சத்திக்கும்படியாகத்தளர் நடைகொண்டன. இவ்வுலகின்கணுள்ள கருப்பிணிகள் உண்ணத்தகாதவற்றை யுண்ணப் புகுவது உவப்பினாலன்றி வேறொன்றினாலன்றென்று அறிந்திருக்கின்ற அவளெண்ணமானது, மண்ணை யுண்டமாலுக்கு மண்ணையேகொடுத்துமென்று நினைத்ததுபோல, அட்டிலின்கணுள்ள புகையேறுண்டமண்ணை ஆவலோடும் உண்டது. இவ்வாறு சுமுதையினுடைய உதரத்தில் தங்கிய கருவானது வளர்ந்து வருந்தோறு மாதமாதம் அவளுக்குக் கருப்பச்சின்னங்கள் யாவும் விளங்கினவந்தன. அக்காலத்தில் அந்நகரத்தில் அரசாக்ஷிசெய்துகொண்டிருந்த தூமாசுரனனவன்முற்சனனத்தில் நாரதமுனிவரிட்ட சாபத்தினாலோ அசுரகுலத்திற் பிறந்த தன்மையினாலோ செங்கோல்முறைமையினின்றும் பிறழ்ந்து, ஒருநாள்மந்திரிகள் பிரதானிகள் முதலாயினோர் புடைசூழ்ந்துவரும்படி சதுரங்க சேனைகளோடும் வெளிக்கொண்டு, அடுத்தராச்சியங்களில் யுத்தஞ்செய்துவெற்றிகொள்ளுமாறு சென்றனன். அப்போது அவன்சேழ்க்கும் படியாக ஆகாயத்தில் ஓரசரீரியுண்டாகி, (ஓதூமாசுரனே - நீசெங்கோல்முறைமையினின்றுந் தப்பி மறுபுலத்தரசர்மீது படையெடுத்துச் செல்லு

கின்றனை யாதலால், உன்னைச் சங்கரிப்பதற்கு மகாவிஷ்ணுவே வந்து சு
முதை வயிற்றிற்கருவாகி வளர்கின்றனர்) என்று சொல்லிமறைந்தது. அ
தனைத் தூமராசன்கேட்டலு நடுநடுங்கிப், பதைபதைத்து, மூர்ச்சையா
கி, மீட்டுந் தெளிந்தெழுந்து, தனது நகரத்தினைநோக்கி மீண்டு, அமைச்
சர்முதலாயினோருடன் அரண்மனையிற்சேர்ந்து, இனியென்செய்யக் கட
வோமென்று எண்ணமிட்டுக்கொண்டு, நமதுராச்சியமும் உயிரும் ஏனை
யயாவும் இன்றேயழிந்து போய்விட்டனவாக விருக்கின்றதேயென்று ம
னமடிவோடு மயங்கியிருந்தனன். அப்போது அவ்வாறே முடிவதற்குக்
காரணமாகத் தருமமூர்த்தியென்னு மந்திரியானவன் அவ்வசுரனைப் பார்
த்து, மநுநீதிமுறைமைப்படி அரசியற்றிவருகின்ற ராசாதிராசனே- ஒரு
வனுக்கு நாசம்வருகின்ற காலத்தில் அதனைத் தேவேந்திரனாலும் பிரம
தேவனாலுஞ்சிவபிரானாலும் ஏனையதேவர்களாலுந் தடுக்கமுடியாது, அ
துபோலவே ஒருவனுடைய திரவியங்களையும் அசக்கமுடியாது, அளவ
ற்ற தவங்களினால் உமக்குமேலான பாக்கியங்கிடைத்திருக்கின்றது, அத
னையாவரால் அழிக்கக்கூடும், ஆதலால் தேவரீர்க்கு எக்காலத்து மரணமி
ல்லை, சுமுதைவயிற்றில் நாராயணமூர்த்தியே பிறந்தருளுவராயின் அவ
ரை நாமனைவருமடுத்து வணங்குவோம், அதற்காக அஞ்சவேண்டுவ தெ
ன்னை யென்றுசொல்லினன். அதை விபுலனென்னும் அமைச்சன் கேட்
டு, அவனைக்கோபித்துத் தடுத்து, கவலைக்கடலில் மூழ்கியிருக்கின்ற அர
சனைப்பார்த்து, ஆண்டவனே- வெற்றியின்மிகுத்த பராக்கிரமமுடையோ
னைச் சுத்தவீரனென்று சொல்லுவார்கள், அதனாலவனுக்கு எல்லாச் சுப
ங்களும்வந்து பொருந்தும், அத்தன்மைத்தான வீரனுக்கு வனங்களிற்
சென்று வேட்டையாடுவதும் எதிர்த்துவந்த சத்துருக்களைச் சங்கரிப்ப
தும் சுபாவதன்மமாயிருக்கின்றன, ஆதலால் தேவரீர்க்குச் சத்துருவாக
ச் சுமுதைவயிற்றில் வளர்கின்ற கருவையழிப்பதில் ஒருபாவமுமில்லை, மி
குந்த வஞ்சகமேவிண்டுவுக்குச் சுபாவமான குணமாகவிருக்கின்றமையா
ல் அவருடைய மாயையின்திறம் ஒருவராலறியத்தக்கதன்று, அஃது ஒரு
வேளை தேவரீரிடத்தில் கிருபைவைப்பதுபோலிருந்து பின்னர் நாசமாக்
கும், இனித்தேவரீர்க்கு அருள்வழங்கியிருக்கின்ற சிவபிரானைத்தியானி
த்து, சுமுதை வயிற்றில் வளர்கின்ற கருவை விரைவில சேதிப்பதே கரு
மமென்று சொல்லினன். அதைத் தூமராசன்கேட்டு, கொடியகொலைத்
தொழிலுக்குப் பயந்து, விபுலனுடைய யோசனையைத்தனது மனத்திற்
கொள்ளாது விடுத்து, முன்னினும் அதிகமாகக்கவலைகொண்டிருந்தனன்
அக்குறிப்பைச் சம்பாதியென்னும் அமைச்சனறிந்து, புத்திமானென்னு
மற்றோரமைச்சனைப்பார்த்துச் சொல்லுவான். ஐயோ - நமதுவேந்தருக்
கும் இவ்வித விடுக்கண்வந்து நேர்ந்ததேயென்று சொல்ல, அதற்குப் புத்
திமான் அவரறிவைநெருப்பிற்சுடுமென்று சொல்லிக்கொண்டு அரசனரு
கில்வந்து, இவ்வுலகத்தைக் களைசஞ்சியிருந்து காத்தருளும் இறைவனே-
சுமுதைவயிற்றிற் கருவாகி வளர்கின்ற மகாவிஷ்ணு வெளிவருவாராயின்
உடனே அசுரகுலத்தைவேரோடுங்களைகுவர், எவ்விதத்திலுந் துன்பம்வி
ளையுமேயன்றி இன்பம் விளையமாட்டாது, முடிவற்றவாழ்வினை வேண்டு
வையாயின் அம்முண்மரத்தை முளையிற்றானேகளைதல்வேண்டும், மங்கை

யரைக்கொல்லுவது மரபன்று, அதுநியாயத்திற்குந் தருமத்திற்கும் விலக்காகும், இப்போது சுமுதைவயிற்றுள் வளர்கின்றகருவே தேவரீர்க்குச் சத்துருவாகவிருக்கின்றது; அதை நாசஞ்செய்வதும் நலமாகவிருக்கவில்லை, அச்சுமுதையுந் தனக்குத் தீங்கானகாரியஞ்செய்வதைப் பகையாகநினைக்கத்தக்கவலல்லள், ஆதலால் செய்யத்தக்ககாரியத்தைஉடனேசெய்துமுடிக்கவேண்டுமென்று சொல்லினன். அதனைத்தூமராசனுடைய புத்திரர்கள்கேட்டு, நீகூறியதே சரியென்று அவனைக் கொண்டாடினூர்கள். இவையனைத்தையும் அரசன்செவியேற்று, ஒருவகையினுந்தேருமல், மிகுந்தமனமயக்கோடும் அந்தப்புரத்திற் சென்றனன். அப்போது ஆயிரங்கிரணங்களைப் பரப்பி இருளை வாட்டி உலகங்களை விளக்கி ஒற்றை வண்டில் பூண்டு ஏழுபச்சைக்குதிரைகளிழுக்குந் தேரினிடத்திற்றேற்றியசூரியனானவன், தன்னைப்போலப் பிரகாசமாய் எங்கும் வீங்கிய கீர்த்தியினையுடைய தூமராசனானவன் இன்று அறத்தினின்றும் பிறழ்ந்தனனுதலால் அவனை இனிமுற்றக் கெடுப்போமென்று நினைத்து அவனுக்குதவிசெய்வான்போல, மேற்றிசைக்கடலில் மறைந்தனன். உடனே பாவங்களென்பனவெல்லாம் அவன்மனத்தையு நகரத்தையுஞ் சூழ்ந்து கொண்டது போல, எங்கும் இருள் மூடிக்கொண்டது. பின்னர் குறிஞ்சியுரிப் பொருள்களைக் களவியலிற் கைக்கொள்ளும்படியான கூதிரொன்னும் பெரும்பொழுதில், காதலர் காதலிகள் மாட்டுவிழைந்து செல்லுகின்றசிறுபொழுதாகிய யாமம்வர, அப்போது தூமாசுரனானவன் கொலுச்சபைக்குவந்து, தனதுசேனுதிபதியாகிய வித்துருமனைக்கூவி, ஓ வீராதிவீரனே- உன்னின்மிகுத்த பராக்கிரம சாலிகளும் புத்திமான்களும் நம்மிடத்தில் மிகுந்த பத்தியை யுடையவர்களும் எவ்வுலகத்தினு மில்லை யாதலால், நீ இவ்விரவிற்றுனே சென்று, சுமுதை, அவள்கணவன், அவள்வயிற்றுளிருக்கின்றகரு, இம்மூன்றையும் ஒருமிக்கக்கொன்று, இக்கொடியகாரியத்தைஉலகத்தவரறியாதவண்ணம் இப்போதேமீட்டுந்திரும்பிவரக் கடவையென்று ஆக்கியாபித்தனன். தலைவராயினேர் தகாதகாரியங்களில் ஏவினுலும் வினைமாக்கள் அவைகட்கு உடன்படவேண்டுமாதலால அவனுணையைவித்துருமன் தடுப்பதற்கஞ்சி, தன்னரசனுடைய மனத்தைப்போலவிருண்ட அந்நடு விரவில் பராக்கிரமத்திற்சிறந்த ஐந்நூறுவீரர்களை வரவழைத்து, அவர்களைத்தான் செல்லுமிடத்திற் சிற்சிலராகவரும்படி கட்டளையிட்டு, அந்நகரத்திலுள்ளோர் நித்திரைசெய்யுஞ சமயத்தில் வெளிக்கொண்டு, சுமுதையினுடைய அரண்மனையிற்சென்று, அவளும் அவள்கணவனுகிய மாதவராசனும் நித்திரைசெய்திருக்கப் பார்த்து, இதுவேநல்லதருணமென்றுநிச்சயித்து, யாவருக்குந்தெரியாதபடி நான்குவீரரைவிடுத்து, அரவந்தெரியவொட்டாமல் கதவைப்பெயர்த்து, மெல்லமெல்லஅந்தப்புறத்தில்நுழைந்து, அயர்ந்து நித்திரைசெய்திருக்கின்ற சுமுதையையும் அவள்கணவனையு மஞ்சத்தோடே உபாயமா யெடுத்து, அந்நகரை படுத்தவோர்காட்டினுள் அசையாமற்கொண்டுபோய் ஓரிடத்தில்வைத்து, இதனை ஆலோசிப்பதாயினன். ஒழியாதநித்திரையில் மெய்மறந் திருக்கின்றவர்களைக் கொல்லுவது மகாகொடுமை, அதனிலும் பெண்டிர்களைக்கொல்லுவது பெருங்கொடுமை, அப்பெண்டிரைக்கருப்பத்துடனிருக்கும்போ

துகொல்லுவது அதனிலும்பெருங்கொடுமை, அந்தோ-ஏன் இவ்விதக்கொடுமைகளில்யாம்வீணே அகப்பட்டுக்கொண்டனம், இவற்றினின்று ஒருவாறுதப்பித்துக்கொள்ளுவோமென்றெண்ண முறுவோமாயின், அவற்றைவிட அரசனுடைய ஆக்கினையைமிகவும்பெரிதாகஎண்ணவேண்டியிருக்கின்றது, நாமும் அவனாக்கினைக்கஞ்சி வந்து சகலகாரியங்களையுஞ் செய்துவிட்டோம், இனிநீடித்து யோசனைசெய்திருப்பதில் என்ன பயனென்று தனக்குத்தானே மிக்கதுயரத்தோடு எண்ணமிட்டுக்கொண்டிருந்தனன். அச்சமயத்தில் சுமுதையானவள் நித்திரைநீங்கிக், கண்விழித்து, நாற்றிசைகளினுங் காடாகவிருப்பக்கண்டு, ஈதென்னகாரணமென்றுபயந்து, நடுநடுங்கி, அரமனையில் நித்திரைசெய்துகொண்டிருந்த நாம்இப்போது காட்டிலிருந்துகண்விழித்தோமே, இதென்னசொப்பனமோ, அல்லது உண்மைதானோ, இவ்விரண்டுமன்றி ஓர்மாயையோ,யாதோவொன்றுந்தெரியவில்லையே, சத்தியசந்தனராய் சுத்தவீரராய் பஞ்சேந்திரியங்களையும் வென்றவராய் ஒருவர்பொருண்மீதும் இச்சை கொள்ளாதவராய் தருமாதிகளிற்றவறாதவராயிருக்கின்ற நமது நாயகனையும், அளவற்றநாள்வனத்திலிருந்து அரியதவங்களைச்செய்து நாராயணமூர்த்தியினிடத்தில் வரம்பெற்று அவ்வரத்தினால் நிறைந்தகருப்பத்தோடு மிருக்கின்ற நம்மையுங்கொல்லும்படியாக,யாரோதுட்டர்கள் நமதரண்மனையிற்புகுந்து, அயர்ந்து நித்திரைசெய்யுஞ் சமயத்தில் நம்மை இம்மஞ்சத்தோடுமெடுத்துக்கொண்டுவந்து இக்காட்டில்வைத்தார்களே, ஐயையோ- நமதுபொல்லாதவினை இவ்வாறு செய்வித்தால் இதற்கென்னசெய்வோம், தெய்வமே - என்றுபலவாறு எண்ணமிட்டுக்கொண்டு,அடக்கற்கரியதுயரத்துடனே தனதுநாயகனைத் தட்டி, சுவாமி- விரைவி லெழுந்தருள்க, எழுந்தருள்க, நம்மையாரோ இக்காட்டிற்கொண்டுவந்துவைத்தார்களே, இதைத்தேவரீர் அறியாமல் நித்திரைசெய்கின்றீரோ வென்று சொல்லியெழுப்பினள். அதைக்கேட்டலும் மாதவராசன்கண்விழித்து, திடீலென்றெழுந்து, மனத்தில் அச்சங்கொண்டு, நாற்றிசைகளையும் பார்த்தான், அப்போது வித்துருமன் அவனெதிரில் வந்து, அரசனே-யான் தூமாசுரனுடையசேனாபதி, அவன் ஓர்நாள்திக்குவிசயஞ் செய்யச்செல்லுகின்றபோது ஆகாய வாக்கொன்றுண்டாகி,ஓதூமாசுரனே-உன்னைக் கொல்லும்படியாக மாதவராசனிடத்தில்மகாபராக்கிரமசாலியாகியவோர்குமாரன்பிறக்கப்போகின்றானென்றுசொல்லியடங்கியது, அதனை அவ்வரசன்கேட்டு, உடனே உங்களைக்கொல்லும்படியாகத் தீர்மானித்து, அதை நிறைவேற்றும்பொருட்டு என்னை ஏவினன், அதனிமித்தம் யானுங்களை இக்காட்டிற் கொண்டுவந்து வைத்தேன் பின்னர் பழியையும் பாவத்தையுஞ் சிறிதுநேர மாலோசித்து ஆலசியமாயிருந்தே னென்று சொல்லினன்.அவையனைத்தையுஞ் சுமுதை கேட்டுத், திடுக்கிட்டு, மதிமயங்கி, விழிகளில் நீரைப்பெருகி மூர்ச்சித்து வீழ்ந்து, மீட்டுந்தெளிந்தெழுந்து, ஐயனே- திருமறுமார்பனே- நாராயணமூர்த்தியே- சகலசீவராசிகளையுங் காத்தருளுகின்ற தாயே-தேவரீருடைய திவ்வியசரணாரவிந்தங்களையடுத்த எளியேங்கட்கு இவ்விதஆபத்துவரலாகுமோ, என்றிவ்வாறு பலமுறைதுக்கித்துத், தங்களைச்சொல்லுமாறு எதிரேவந்து நிற்கின்ற வித்துருமனைப்பார்த்து, அப்பா உத்தமனே- முற்

காலத்தில் ததீசி மகாமுனிவர் தேவர்கள் நிமித்தம்தமது உயிரைவிடுக்கு மாறிசைந்து தெய்வத்தன்மையையடைந்திருக்கின்றனர், அதுபோலநல்லோர்கள் பிறருக்கு உபகாரஞ்செய்வதையேபெரிதாக நினைப்பார்கள்,நீயு நல்லவனுகையால் எங்களை நித்திரையிற்சொல்ல லாகாதென்று மனதிரங்கி இதுபரியந்தம் ஆலசியஞ்செய்திருந்தனை, இனிமேலும் எங்களைவதை செய்யாமல் முழுவதுங்காப்பாற்றி விடுவையாயின் உனக்குநிகரான நீதிபரான் எவ்வுலகங்களினுமிரார்கள், அய்யோ- ஒருஅபராதமுஞ்செய்யாத எங்களைக்கொல்லும்படியாக மிக்க கீர்த்தியினைவாய்ந்த அரசன் உனக்கு ஆக்கியாபித்ததுஎன்ன அபிப்பிராயம்,புத்திரப்பேற்றினை வேண்டியயெனது காதலர் மனங்குளிரும்படியாக அளவற்றநாள் அரியதவங்களைச் செய்து வயிற்றிற்கருவடைந்திருக்கின்றேன், ஆதலால் எங்களை உயிரோடுவிடுவித்து, உங்களரசன் சந்தேகமுறாது சந்தோஷமாகும்படி ஏதேனுமோர் யுத்தியினை அவனுக்குக்கூறித் திருப்திசெய்திடுக, அல்லாவிடில் ஈகையிலாதார் மாட்டுப்புகழ்போல உன்னை இந்நிமிடத்தில் நாசஞ்செய்து விடுவேனென்று சொல்லினள். அவளை வித்துருமன் பார்த்து, அம்மா- உன்னுடையமேலான கற்பினுல் என்னைக்கொன்ருலும் எனது குலத்திற்குஊர் கெடுதியுண்டாகாது, என்னை ஏவிய அரசனுணையைத்தள்ளிச் செல்லுவேனுயின் உடனேயான்அக்குலமுதலியவைகளோடுநாசமாய்ப்போகும்படி நேரிடும், ஆதலால் அவனுடைய கட்டளையை யொழித்துச் செல்லவென்னுலாகாதென்று சொல்லினன். அத்தீங்கானவார்த்தையைச்சுமுதை கேட்டு, மனநடுங்கித், தன்னிடத்தில் கிருபை வைத்திருக்கின்ற நாராயணமூர்த்தியைத் தியானித்தனள். உடனே அவருடையகிருபையினுல் அவ்விடத்திற்றனே அளவற்றவீரர்கள் ஆயுதபாணியராயுண்டாகி, தூமராசனுடைய சேனைகளோடு அநேகயுத்தங்களைச்செய்து,வித்துருமனெழியவனைய ஐந்நூறுவீரர்களையு நாசஞ்செய்தார்கள். அதை அவவித்துருமன் கண்டு, மோசம்வந்து விட்டதென்றுபயந்து, வாயுவேதத்தினும் விரைவாக வென்கொடுத்தோடித், தூமராசனைப் பணிந்தெழுந்து கைகூப்பிநின்றனன். அவனை அவ்வரசன்பார்த்து, ஓவீரனே- நமது உத்தரவின்படிநடாத்திவந்தனையோ,அல்லவெனில் சும்மாவந்தனையோ வென்றுகேட்டனன் எவ்வகைப்பட்டசத்துருக்களுக்கும் பின்னிடையாமல்தனதுமார்புகொடுத்து மல்லாடி வெறறிகொள்ளவல்ல வீராதிவீரனுகிய வித்துருமன் அதற்குமுகம்வாடி, துக்காக்கிராந்தனுய், ஆண்மையனைத்துங் குன்றித், தூமராசனைப்பார்த்து,ஆண்டவனே-தேவரீரிட்டருளிய கட்டளையின்படி அப்போதேதேவர்களுமறியாதவண்ணஞ்சென்று, மிக்கவுபாயத்தோடும்உள்ளேபுகுந்து,மாதவராசனையும்அவன்பத்தினியையுங்கட்டிலோடேயெடுத்துக்கொண்டுபோயக் காட்டிலேவைத்தோம், உடனேராசபத்தினி கண்விழித்து, நாராயணமூர்த்தியைத் தோத்திரஞ்செய்தாள், அம்மாத் திரத்தில் அநேகவீரர்கள் ஆயுதபாணியராயுண்டாகி, நமதுசேனைகளனைத்தையு நாசமாக்கினர்கள், அடியேனும் யுத்தஞ்செய்து அவ்விடத்திற றனே இறப்பேன், ஆனல் நடந்தசெய்திகளைத தேவரீர்க்குத் தெரிவிப்பதற்கு ஒருவருமில்லாமையினுலே எனது மானத்தைவிடுத்து இங்கு ஓடிவந்தேன், அவர்கட்குத் தெய்வபலம் அதிகமாகவிருக்கின்றதென்று சொல்லின

ன். அதைக்கேட்டவுடனே தூமராசனுக்குக் கோபமுண்டாகி. குற்றமற்ற அவ்வீரனைத்தனது வாளினால் வெட்டித்தள்ளி, யாமுத்தேசித் தனுப்பிய காரியம் நிறைவேறவில்லையென்னுமனவாட்டத்துடனிருந்தனன். அப்போது புத்திமானென்னு மமைச்சன் அவனருகில்வந்து, கர்த்தனே-ராசரீகஞ்செய்கின்றபேர்கள் துயரத்திற்கிடங்கொடுக்கலாகுமோ, துயரமேவிடுந்தோறும் ஆண்மை குன்றிப்போகும், ஆண்மைகுன்றவே சத்துருக்கள் தழைத்து மேலிடுவார்கள், அப்பால் அபலனென்று உலகத்தாரெல்லாஞ் சொல்லுவார்கள், இப்பூவுலகில் தேவரீருடைய செங்கோலினுக்குட்படாத தேயங்கள் எங்குமில்லை, ஆதலால்- காட்டில் விடப்பட்டவர்கள் தேவரீர் கையிலகப்பட்டவர்களேயன்றி வேறில்லை, அப்படிக் கிருக்கத் தேவரீர் ஏன் இவ்விததுயரத்துளழுந்தி மயங்கவேண்டும், இனி நடத்தவேண்டிய மார்க்கத்தினைச்சிறிது கேட்டருள்க, மாதவராசனையுஞ் சுமுதையையுங்கொல்லக்கருதுவது நன்றல்ல, அஃதுபழியையும்பாவத்தையும் உண்டாக்குமாதலாலும், எண்ணியவெண்ணப்படி நிறைவேறுமற்போனபடியினாலும், அவர்களைக்கொல்லுவதைவிட்டுப் பிறக்கப்போகின்ற பிள்ளையைமாத்திரங் கொல்லவேண்டும், அதற்கு மந்திரந் தந்திரம் யுத்தம் மாயை முதலானவைகளில் சிறந்தவீரர்கள் நால்வரையாராய்ந்து, இப்போதே அவர்களை அக்காட்டிற்செலுத்தி, அச்சுமுதையானவள் பிரசவிக்குங்காலத்தை எதிர்பார்த்திருந்து, பிரசவித்தவுடன் அக்குழந்தையைக்கொல்லச்சொல்லி உத்தரவுசெய் தனுப்பவேண்டும, அவ்வாறே அவர்கள்செய்து செயங்கொண்டுவருவார்களாயின் பின்னர் நமக்கு எங்குஞ்சத்துருக்களில்லையென்று சொல்லித், தூமராசனுடைய மனோவியாதியை ஒருவாறாய் நீக்கினன். இவ்வாறு புத்திமான்கூறிய அற்பப்புத்தியினைத் தூமராசன்கேட்டு, அவனையும் மற்றஅமைச்சர்களையும் பார்த்து, எவ்விதத்திலேனும் நீங்களே அதற்குத்தக்கபடி செய்துநிறை வேற்றுங்களென்று உத்தரவுசெய்தான். அவ்வாறே அவ்வமைச்சர்கள் நான்குவீரர்களைநியமித்து அனுப்பினார்கள். அவ்வீரர் நால்வரும் உடனே சுமுதையிருக்கின்ற காட்டினுட்சென்று, யாவரும் அறியாதபடி ஓரிடத்தில்மறைவாகப் பதுங்கி, அவள்பிரசவிக்குங்காலம் வருமளவுங்காத்து எதிர்பார்த் திருந்தார்கள். இவர்கள் சரிதமிவ்வாறாக, முன்னர் சுமுதையினுடைய வாபத்தை நீக்கும்படியாக வுண்டானவீரர்கள் பின்னர் தூமராசனுடைய சேனைகளைச் சின்னபின்னப்பட்வாட்டிச், சரேலென்றுமறைந்து போனார்கள். அதற்குமேல் சுமுதையானவள் தானுந் தன்றலைவனுந் தனியர்களாகியிருத்தலால், இன்னுந்தூமராசன் பலபடைகளை அநுப்புவானென்றெண்ணி மிகுந்தமனக்கவலைகொண்டிருந்தனள். மாதவராசனானவன் இன்னும் இராக்கால நீங்காமையால் ஒருவேளை சிங்கம் புலி கரடி யானை முதலியமிருகங்கள் வருமென்றெண்ணி அவைகளைச்சங்கரிக்கும் பொருட்டு உறையிற்றங்கிய வாளாயுதத்தைக் கரத்திலேந்தி அவ்விரவு முழுவதுமதிக சாக்கிருதையோடு மிருந்தனன். அப்போது மூவுலகையு மீரடியாலளந்த மாதவமூர்த்தியை மைந்தனாகப்பெற்ற மாதவராசனுஞ் சுமுதையு மறுக்கந்தீர்ந்துய்யும்படியாக வெழுந்தவன்போலச், சூரியனானவன் கீழ்த்திசைக்கடலிற் குளித்தெழுந்து உதயகிரியினுச்சியிற் பிரகாசித்தனன். உடனே

அவ்விருவருடைய இடுக்கண்களும் இரிந்தோடியனபோலக் கூதிராலுண் டானகுளிரும் இருளும் எங்குமில்லாதபடிமறைந்தது. பின்னர் சுமுதை யும் மாதவராசனுஞ் சிறிது மனக்கலக்கந்தீர்ந்தவர்களாய், அவ்விடத்தினி ன்றுநீங்கி, அக்காட்டிற்றானே மற்றோரிடத்திற்சென்று, கந்தமூலபலாதி களைச் சேகரித்துண்டு கொண்டிருந்தனர். இவ்வாறேபிரதிதினம்வேறுவே றிடங்களில் முற்றுந்துறந்த முனிவர்களைப்போலச் சஞ்சரித்துக்கொண் டு,எப்போது எமதுஐயனைப் பிரசவிக்கப்போகின்றோமென்றுஎண்ணமு ற்றிருந்தார்கள். பின்னர் சுமுதைக்குப் பிரசவகாலநெருங்க, முன்னர் அவளுக்குவரங்கொடுத்தருளிய விநாயகமூர்த்தியானவர் அவளையும்அவ ள்தலைவனையுங்காத்தருளும்பொருட்டுத்திருவுளங்கொண்டு,ஓர்குழந்தை வடிவாகிச்,சிவந்துபிரகாசிக்குந்திருவுருவமும்,வெளுத்து அழகுற்றிருக்கி ன்றதிருமுகமும்,சந்திரனைத்தரித்ததிருமுடியும்,குண்டலமணிந்திருக்கின் றசெவிகளும்,மழுப்படை-தாமரைமலர்-சபமாலை- மோதகம் - என்னுமி வைகளையேந்தியநான்குதிருக்கரங்களும்,சோமசூரியாக்கினியென்றுசொ ல்லும்படியானமூன்றுவிழிகளும்,கண்டவர்கள்கடைத்தேறும்படியான ஏ னைய அவயவங்களும்பிரகாசிக்கும்படியாக அவர்களெதிரிற் பிரத்தியக்ஷ மாயினர். உடனேசுமுதையும் மாதவராசனும் அக்குழந்தையினுடைய தி ருக்கோலத்தைக் கண்குளிரத்தரிசித்து, அன்புபொங்கிய மனத்தினராகி ஆனந்தமீக்கொண்டு, மனக்கவலைகளினின்று நீங்கி மகிழ்ச்சிபெற்று, மற வர்களையன்றி ஏனையர் சஞ்சரிக்காத அக்காட்டினுள் சிறுகுழந்தையாக வந்தநீயாரென்று வினவினார்கள். அதற்குக்கணேசமூர்த்தி கிருபைசுரந் து, பத்தியிற்சிறந்த அச்சுமுதையைப்பார்த்து, அன்னையே-வளர்பக்கத்தை க்கொண்ட பாலசந்திரனைப்போலப் பத்தசனங்கட்குப் பிரகாசத்தினைப் பெருக்கிக் கவலையென்னு மிருளைககடிவதினால் திரிலோகங்களினும் பால சந்திரனென்று சொல்லத்தக்க விநாயகமூர்த்தியே நாம், முன்னர் நீ புத் திரப்பேறுவேண்டி வனத்தில் அரிய தவங்களைச் செய்தபோது, நாம் நீ தியானித்திருந்தநாராயணனாகிவந்துஉனதுகவலையை யொழித்தனம்,இப் போது தூமனுடையபயத்தினால் இக்காட்டில் அலைந்துகொண் டிருக்கின் ற உங்கள்துயரத்தை நீக்குமாறு சிறுகுழந்தையாக உன்னிடத்திற்கு வந் தோம், எவ்வெவர்கள் எந்தெந்ததெய்வத்தை வழிபட்டார்கள் அவ்வவர் கட்கு அந்தந்தத் தெய்வமாகி வரங்கொடுத்தருளுகின்ற தலைத்தெய்வம் யாதோ அதுவேநாம், உங்களுக்கும் அவ்வாறேவந்தனம்,பாவனையிதுவா யினும் உங்களை நமக்குத் தாய்தந்தையாகக் கைக்கொண்டோம், அஃதே னெனில்- முன்னர் நீவனத்தில் தவஞ்செய்தபோது விண்டுவினுடையரூ பங்கொண்டுவந்த நம்மைப்பார்த்து தேவரீரைப்போல வொரு புத்திரனை யளித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனை, அதற்கு அவ்வாறே வரு வோமென்று வரந்தந்தோம், அவ்வரத்தைக் காத்தற்பொருட்டு யாங்களி ருவரும் உங்கட்குப் புத்திரராகவேண்டிய முறைமையிருப்பதால் உனது கருப்பத்திற் கருவாய்த்தரிக்கும்படி விண்டுவுக்கு உத்தரவு செய்தோம், நாம் சுவேச்சையாக வுங்கட்குப் புத்திரனாகிவந்தோம், இதனை உண்மை யாக நம்பக்கடவை, இனி தூமன்யுத்தத்திற்கு வரவிருக்கின்றனன், அவ னையாமே சங்கரித்து உனது உதரத்துளிருக்கின்ற கருவையும் உங்களை

யும் அபாயம்வரவொட்டாமற் காப்பாற்றுவோம், முன்னொருதினம் நடுஇரவில் உங்களைக்கொல்லும்படியாக அரமனையினின்று மெடுத்துவந்து இக்காட்டிற்கொண்டு வநது வைத்த வித்துருமன்முதலாகிய வீரர்களைக் கொல்லவும், கவலைக்கடலில் மூழ்கியிருந்த வுங்கட்குயாதொரு மோசமும்வாராதபடி காப்பாற்றவும் வந்தவர்கள் எத்தனையரோ அத்தனையருந்நமதுகணங்களாகும், அக்கணங்கள நமது திருவருளினாலே வீரராகவந்து சத்துருக்களை அதஞ்செய்தார்கள். இதையுந் தெரிந் திருக்கக்கடவை, இனி உனது கருப்பத்திலிருககின்ற நாராயணன் வெளியேவந்து வளர்ந்து உனக்கும் உன்புருடனுக்குஞ் சந்தோஷம் வரசசெய்து, தூமன் ஆண்டுவருகின்ற வுலகங்களையெல்லாந் தானாண்டு, சகலதிசைகளினுந்தன்துசெங்கோலைச் செலுத்திவருவான், நீங்களும் அந்தியகாலத்தில் நமதுலகத்தையடைவீர்கள், அன்றியும் நமது பாலசந்திரனென்னுந் திருநாமத்திற்கு உலகத்தார் பாலனும் பருவத்திற் சந்திரனைத் தரித்தவனென்றும், பாலப்பருவத்தினையுடைய சந்திரனைத் தரித்தவ னென்றும், ஆன்மாக்களுடைய மலபந்த விருளைப் பாலசந்திரனைப்போலவிலக்கி யாட்கொள்ளுஞ் சுபாவத்தையுடையவனென்றும்உரைசெய்வார்கள்,இந்தவள்மை மிகுந்த திருநாமம் நமக்குமிகவும் இட்டமானதால், எவ்வகைப்பட்ட இன்னல்கள் நேர்ந்தாலும் இத்திருநாமத்தை யுச்சரிப்பையெனில் அவ்வின்னல்களனைத்தும் பறந்துபோகும், இதனைச்சத்தியமாக நம்பக்கடவையென்று திருவாய்மலர்ந்தனர். இவையனைத்தையுஞ் சுமுதைகேட்டுசசந்தேகங்கொண்டனள். அப்போது ஒருவரு மறிவிக்காமல் சகலத்தையுந் தாமேயறிந்துகொள்ளத்தக்க பாலசந்திரமூர்த்தியானவர் அதனையறிந்து, அக்குழந்தைரூபத்துடனே வாயினைத்திறநது, தமது பெருந்தகைமையைக் காட்டினர். உடனே சுமுதையானவள் திறந்தவாயினிடத்தில் முப்பத்து முக்கோடி தேவர்கள்- நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள்- வசுக்கள் - மநுக்கள்- கருடர்- கின்னரர்- கிம்புருடர்- காந்தருவர் - இயக்கர் - விஞ்சையர்- பூதர்- பைசாசர்- உரகர்- முதலாகிய உயர்திணையும், கீழுலகங்கள்-மேலுலகங்கள்- மலைகள்- நதிகள்- காடுகள்- கடல்கள் - மிருகங்கள் - பறவைகள்- முதலாகிய அஃறிணையுந்தோற்றக்கண்டு, தனது மனத்திற் கொண்ட சந்தேகத்தினைமாற்றி, சுவாமியைப்பலமுறைவாழ்த்தி, ஆனந்த சாகரத்தின்மூழ்கி, திரிமூர்த்திகளுக்கும் ஏனையதேவர்களுக்கும் முதன்மையாகவிருந்து அநுக்கிரகஞ்செய்யவல்ல மூர்த்தி இவரேயென்றுதுதிசெய்தனள் உடனே பாலசந்திரமூர்த்தியினுடைய கிருபையினால் அச்சுமுதையினுடைய தனங்களிற் பாகீரதியைப்போலப் பால்சுரந்து பெருகியது. அப்போது சுமுதையானவள் அப்பால சந்திரமூர்த்தியையெடுத்துத், தனது மடியின்மீது வைதததுக்கொண்டு, பெருகிவருகின்றபாலை எமதுகர்த்தனுக்கு அன்போடும ஊட்டினள். இவையனைத்தையும் முன்னர் மாயையினால்வந்து மறைந்திருக்கின்ற நான்குவீரர்களுங்கண்டு, விநாயகமூர்த்தியினுடைய வல்லபத்தையறிந்து, மனதிலச்சங்கொண்டு, அவ்விடத்தினின்று மோடித் தூமராசனைப்பணிந்தெழுந்து, அவனெதிரிற் கைகூப்பிநின்றுஇதனைச் சொல்லுவதானார்கள். ஓராசாதிராசனே கேட்டருள்க, சுமுதையினுடைய கருப்பத்திலிருக்கின்ற பிள்ளை இன்னும் பிறக்கவில்லை, ஆனால்

அவளெதிரில் மனிதநீர்மையில்லாத ஒருமகன் இப்போதுபிறந்தான்,அவ
ன் அழுதகுரலுக்கே அடியேங்கள் நொந்து நிலத்தில் மூர்ச்சையாகி வி
ழுந்தோம், சிலநேரத்தின் பின்னர் தெளிந்தெழுந்து அச்செய்தியை யறி
விக்குமாறு தேவரீருடைய திருவடிகளை யடைந்தனமென்று சொன்னார்
கள். முன்னமே துக்கசாகரத்துள் மூழ்கியிருந்த தூமராசன் அதைக்கே
ட்டவுடனே பின்னும் துக்கமேலிட்டவனாய்த், தானு மதிமயங்கி மூர்ச்சி
த்து விழுந்தனன். அச்சம்பவத்தை அருகிலிருந்த அமைச்சர்கள் கண்டு,
சிலசைத்தியோபசாரங்களைச் செயது தெளிவித்தார்கள். பின்னர்தூமரா
சனானவன் தெளிந்தெழுந்து, சத்துருநேரிட்டபோது தாமசப்பட்டிருப்
பது அரசர்க்கடுத்த குணமன்றாதலால் இனிவிரைவில் அவனைப்போர்மு
கத்தில் வெல்லவேண்டுமென்று துணிந்து, வடவையைப்போலக் கோபி
த்துக்,கொவ்வைக்கனியினும் விழிகள்சிவக்கச் சீறிச், சபையி லிருக்கின்ற
சகலரையும்பார்த்து, நீங்களனைவரும் சர்வாயுதபாணியராய் உங்கள் வச
த்திலிருக்கின்ற சேனாசமுத்திரங்களையெல்லாங் கூட்டிக்கொண்டு அதிசீ
க்கிரத்தில்வந்து சேரக்கடவீர்களென்று ஆக்கியாபித்தனன். உடனே அ
வ்வாக்கினையை அமைச்சர்கள் சேனாபதியர் புத்திரர் முதலிய யாவருஞ்
சிரமேறகொண்டு, பலதிசைகளினு நெருங்கி யிருக்கின்ற தங்களசேனைக
ட்கு முரசறைவித்தனர். உடனே சர்வசங்காரகாலத்தில் சத்தசாகரங்க
ளும் பெரும்புறக்கடலும் பெருக்கெடுத் தெழுவதைப்போலச் சகல சே
னைகளும் அதிக உச்சாகங்களுடன் பேரொலிசெய்து, அண்டங்களுங் கு
லுங்கத்தக்கதாக வார்ப்பரித்துவந்து, நெடுநாளில்லாத சண்டைஇப்போ
து கிடைத்ததென்னுங் களிப்போடு தங்கள் தங்கள் தலைவனைச் சேர்ந்த
ன. பின்னரத்தலைவர்கள் வயிரகவசங்களையணிந்து, பாரித்த விற்களைத்
தாங்கித், தேவாஸ்திரங்களைச் சேகரித்து, விஷத்துவையலிட்டுக் கூரியஅ
லகையுடையபாணங்கள் நிறைந்திருக்குந் தூணிகளை முதுகிலிறுக்கி,முத்
தலைச சூலம் சக்கரம் வேல் தோமரம் பிண்டிபாலம் எறியீட்டி எழு மழு
முதலியபடைகளையு மெடுத்துக்கொண்டு, தங்கள் தங்கள் சேனைக ளோ
டு தூமராசனுடைய அரண்மனைவாயிலே நெருங்கினார்கள். உடனே தூம
ராசன் போர்க்கோலத்திற்குரிய சின்னங்களையெல்லாந் தரித்துக்கொண்
டு, நவரத்நமயமாகவிளங்குங் கிரீடத்திற் றும்பைமாலையைச்சூடித்,திசை
களினுங் கடல்களினும் வானத்தினுந் தாவும் வேகமுள்ளனவாய்இடியை
யொப்பக் கனைக்குங் குரலோசையைப்பெற்ற புரவிக்கூட்டங்களும்,கன்
னமதம் கபோலமதம் பீஜமதமெனச் சொல்லாநின்ற மும்மதங்களையும்
பெருக்கிப் பர்வதாகிருதியாக வீறிட்டு இருப்புலக்கைகளைத் துதிக்கரங்க
ளிற்பற்றி அண்டங்கள் அதிரச்சுழற்றிவரும் யானையணிகளும், பொன்வ
ண்டில் அச்சு மச்சு குத்துக்கால் கொடுங்கை முதலிய சிங்காரங்களைக்
கொண்டு குதிரைகள் சிங்கங்கள் புலிகள் யானைகள் முதலியவைகளை அ
ளவற்றனவாகப்பூண்டு நவரத்நமயமாய்ப் பிரகாசித்திருக்குந் தேரணிக
ளும், நிமைப்போதில் அண்டங்களனைத்தையும் பிசைந்தூதும் வலிமையு
டையவர்களாய் பகைவரில்லாமையாற் புசங்கள் தினவுண்டு வாடியிருந்
த அளவற்றபதாதியணிகளும் புடைசூழும்படியாகத், தனது கோபுரவா
யிலினின்றும் வெளிக்கொண்டு, பொன்மலையைப் போலப் பாரித்திரு

க்கின்ற தனது தேரில் மணிகள் கலகலவென்றுசத்திக்கும்படியாக விரசி
ங்கத்தைப்போலப் பாய்ந்து, கொடி கொடை சாமரை ஆலவட்ட முதலி
யபோர்ச் சின்னங்கள் இருமருங்கினு நெருங்க,ரணபேரி சயபேரி வெ
ற்றிச்சங்கமுதலிய வாத்தியங்களோடுதனது சேனைத் தலைவர்களையும் ரத
த்தையு முடுக்கிச்சென்று, மாதவராசனிருக்கின்ற காட்டை வளைத்துக்
கொண்டு, வேதாகமங்களா லெண்ணி யளவிடற்கரிய பாலசந்திரமூர்த்தி
யைத் தனது மடித்தலத்தில் வைத்துத் திருமுலைப்பாலூட்டி யிருக்கின்ற
சுமுதையெதிரிற்சென்று, மணிகள் கலித்துப்பொற்கட்டுகள் பிகிந்திருக்
கின்றமந்தரகிரியையொத்த தனது வில்லைஇருகுதைகளும்பொருந்தவளை
த்து,அளவற்றபாணங்களைச் சோனைமாரியைப்போலக் கரவேகமாகப் பி
ரயோகித்தனன்.அப்பாணங்கள் வெளிப்பட்டமாத்திரத்தில் புகைந்து சீ
றிக்கொண்டு வந்து, பாலசந்திரமூர்த்தியினுடைய திரு மேனியிற்கருத்த
மேகங்களைப்போலச்சூழ்ந்து கொண்டன. அதைச் சுமுதையும் மாதவ
ராசனுங்கண்டு திகைத்து, சரீரமுழுவதும் வியர்த்து, மிகவும்பயந்து நடு
ங்கினூர்கள். அப்போது பாலசந்திரமூர்த்தியானவர் புன்னகை கொண்டு,
தமது தாய்தந்தையர் பயந்து நடுங்குவதைப்பார்த்து, நீங்கள் யாதொன்
றற்கும் அஞ்சாதீர்களென்று திடங்கூறித்,தமது திருவாயினின்று கொண்
டல்கொண்டலாயெழும்பிவரும்படிப்புகைப்படலங்களைவிட்டனர். அப்பு
கைப்படலங்கள்வெளிப்பட்டமாத்திரத்தில் ஊழிகாலத்தில் உலகங்களை
யழிக்க வெழுகின்றபிரளயவெள்ளத்தைச்சுவற்றவல்ல மேகங்களைப்போ
ல அட்டதிசைகளையும் இருள்மயமாகமூடிக்கொண்டன. உடனேபராக்கி
ரமசாலியாகியதூமராசனும்,சத்தசாகரங்களைப்போலத்திரிலோகங்களும்
அதிரவந்த அவன்சேனைகளும், ஒருவரையொருவர் காணமாட்டாதுமயங்
கிப்பாதலலோகத்தில்வீழ்ந்துஇறந்துபோனூர்கள்.தேவர்களெல்லாஞ்சய
சயவென்று கொண்டாடிப்பாரிசாதமுதலிய புட்பங்களைவாரிவாரி யிறை
த்தார்கள். முனிவர்களெல்லாம் பலபூசாதிரவியங்களைக்கொண்டு பாலச
ந்திரமூர்த்தியைப் பூசித்தார்கள். மாதவராசனுஞ் சுமுதையும் பயமகன்
று ஆனந்தமடைந்தார்கள். பாலசந்திரமூர்த்தியானவர் தூமராசனுக்குக்
கேடுவருவது காட்டும்படி ஓர் உற்பாதமாய் விளங்கியதினாலும், அவ
னையும் அவன் அமைச்சர் முதலாயினோரையும் அவ்வவர்கள் சேனைக
ளோடு ஓர்நொடிப்போதில் தூமத்தாற்றொலைத்து வெற்றிக்கொடி நாட்டி
யருளியதாலும், அவருக்கு அன்றுமுதல் தூமகேதுவென்று மற்றொரு
திருநாமமும் விளங்கியது. பின்னர் பாலசந்திரமூர்த்தியாகவந்து தூமகே
துவென்னும் பெயரினைவகித்தருளிய விநாயகமூர்த்தியானவர் மாதவரா
சன் முதலியோர் தரிசிக்கும்படியாகத் தமது திருவுருவைக்கரந்து, மல
பாசங்களையொழித்து மேலான ஞானச்செல்வத்தை யடைந் திருக்கின்ற
பெரியோர்களது மனக்கோயிலில்வதிந்தருளினர். இக்கதையை அன்போ
டுநினைக்கின்றவர்களுங்கேழ்க்கின்றவர்களுந் தீவினைகளினின்றுநீங்கிப்பே
ரானந்தசுகத்தையநுவிப்பார்கள். இப்பால்மாதவராசனுஞ்சுமுதையும் ய
தார்ப்பிரகாரந்தமதுபட்டணத்தைச்சேர்ந்து,முடிவில்லாதபெரும்பாக்கிய
த்தினைப்பெற்றுச்,சகலசவுக்கியத்தையும் ஆனந்தத்தையும் அநுபவித்துக்
கொண்டிருந்தார்கள். இவ்வாறுசிலநாளிருந்தபின்பு,சுமுதையானவள்மகி

மைபொருந்திய புத்திரனைமகிழ்வோடும்பயந்தனள், அதை மாதவராசனறிந்து, தனக்குப்புத்திரனாகவந்த மாதவனுக்குச் சகல மங்கலத் தோடும் வேதாகமமுறைப்படி சாதககன் மாதிகளை நிறைவேற்றி, அளவற்ற தருமாதிகளை நாடோறுஞ்செய்து வந்தனன். சுமுதையானவள் தனது தவக்குமாரனைப் பிரதிதினங்குளிப்பாட்டித், தனதுமுலைப்பாலினை அன்போடும் ஊட்டி, நவரத்நமயமாகிய சுட்டியினையும் அரைவடம் பொற்றண்டைமுதலிய ஆபரணங்களையுந்தரித்துச் சீராட்டிப்,பவளக்கால்கள்வயிரச்சட்டங்கள் நீலரத்நப்பலகைமுதலியவைகளாற் சோடித்துத்தங்கச்சங்கிலிகளிற்றொங்கும்அழகிய தொட்டிலில் வளர்த்தித் தாலாட்டி, நாளுக்குநாள் வளர் பிறையைப்போல வளர்த்துப் பாராட்டிவந்தனள். இவவாறு அவ்விருவர்களுந தம்மைப் பாராட்டி வளர்க்குந்தோறும் அவர்களுக்குப் பிள்ளைக்கலிதீர்த் தருளிய நாராயணமூர்த்தியானவர் நாளுக்கு நாள் கற்போருடைய வுள்ளத்தைப்போல வளர்ந்து வந்தனர். இப்பால் மாதவராசனானவன் தனதுகுமாரனுக்குப் பிள்ளைமைப்பருவநீங்கிய பின்னர் பட்டாபிஷேக முதலியவைகளைச் சிறக்கச்செய்து, தூமராசனுடைய அரசாக்ஷியைஅவர்பாலொப்புவித்துத், தானுந் தனது பத்தினியுஞ் சதாகாலமும் விநாயக மூர்த்தியைத்தியானித்து, அந்தியகாலத்தில் மோட்சசாம்பிராச்சியத்தினையடைந்து பேரானந்தத்தை யநுபவித்தார்கள். முன்னர் உலகமனைத்தையுஞ் சிறு சுடரினைவாய்ந்த விளக்கினைப்போல விருந்துகாத்த தூமராசனுடைய அரசாட்சியையெல்லாம், பின்னர் நாராயணமூர்த்தியானவர் பெருஞ்சுடரினைவாய்ந்த பந்தமாகவிளங்கிப் பாதுகாத்து, புத்திரமித்திரகளத்திராதிகளுடனே சகலபோகபாக்கியங்களையு மநுபவித்துவாழ்ந்திருந்தனர்.

கணபதிதுணை.

எட்டாவது,

கணேசர்திருவவதாரப்படலம்.

ஓசவுனகாதிமுனிவர்களே,விநாயகமூர்த்தியானவர் தூமகேது திருவவதாரங்கொண்டு,மாதவராசனுககும் அவன்மனைவியாகிய சுமுதைக்குந் தீங்குசெய்ய நேர்ந்த தூமராசனைக்கொன்று, அவ்விருவரைப் பாதுகாத் தருளிய திருவிளையாடலைச் சொன்னோம். அவரே மற்றொருபோதுகணேசர் திருவவதாரங்கொண்டு,தம்மிடத்தில் அளவற்ற வரங்களைப் பெற்றவெலியென்னும் ஓர் தானவனனவன் தனது திரிபுரங்களோடுஞ் சென்று திரிலோகங்களையுமழிப்ப,அக்கொடுமைக்குத் தேவர்கள் முதலாயினோர் அஞ்ச, அதற்குச்சிவபிரான் மனதிரங்கித் தம்மைத்தியானிக்க, அப்போது அவர்திருமுகத்தில் ஐந்துமுகத்தோடுந்தோன்றி,அவர்க்கு அத்திரிபுரங்களை நீறுக்கவல்ல வரங்களை யுதவி,யாவருங் கணேசரென்றுபோற்றும்படி

யாக விளங்கியருளிய திருவிளையாடலை முன்னமே உபாசனாகாண்டத்திற் சொல்லியிருக்கின்றனம், இப்பால கணபதி திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோம் கேட்பீராக.

கணபதிதுணை.

ஒன்பதாவது,

கணபதிதிருவவதாரப்படலம்.

ஓசவுனகாதிமுனிவர்களே, வெண்டாமரை செந்தாமரை மலர்களை ஆதனமாகக்கொண்ட சரச்சுவதி இலக்குமிகள் மூலமாக எல்லா வுலகங்களையும் படைத்துங் காத்து மிராநின்ற பிரமனும் விண்டுவுந் தத்தநிலைகளிற்பிறழாதவண்ணம் உயர்ந்தவெண்மை நிறத்தினைக்கொண்டதாய், நால்வகைத் தோற்றம் எழுவகைப்பிறப்பு எண்பத்துநான்குநூறாயிரம்யோனி பேதங்களாயுள்ள சீவான்மாக்களெல்லாங் கன்மங்கட் கீடானசரீரங்களையெடுத்துத் தாபத்திரயாக்கினிகளாற் றகிக்கப்படுந் துயரங்களினின்று நீங்கி இளைப்பாறும்படியாக ஆனந்த நிருத்தஞ் செய்தருளுகின்ற எமது சதாசிவமூர்த்தியைத்தாங்கு தகைமையையுடையதாய், கண்டோர்கட்கெல்லாம் புகலிடமாகியிருந்து மீட்டும் பிறவிச்சாகரத்தினைக்காணாதபடி மேலாகிய முத்திவீடளிக்கவல்லதாய், சந்திரன் கங்கை விபூதி விடை ஐராவணம் என்னுமிவைகளை வெள்ளிதாகக்கொண்ட சிவபெருமானனவர் தமது திருமேனியும் வெள்ளிய சாத்விகத்திற் கொண்டருளியதால் அத்தலைவற் கிசையும்படியாகத் தானும் வெள்ளியநிறத்தினைக் கொண்டதாய், எண்ணமுதலிய முக்கரணங்களினாலுந் தன்னை வழிபடுந் திருமாலினைத்தாங்குந் திருப்பாற்கடலோடு ஏனையகடல்களு மேலெழுகின்றயுகாந்தகாலத்தில் அப்பிரளயத்தினுள் யாமடங்குதல் அடாதென்று அதனிலுமேலோங்கியெழுந்து அண்டமுகடுவரையில் அளாவி ஒளிசெய்ய வல்லதாய், தெளிந்தமெய்யடியார்க்குப் பெருமைபொருந்திய யோகத்தையுந் திருவருளையும் வழங்குதலன்றி தம்மையும்வழங்கி அளிசெய்யவல்லஎமது சிவபெருமானுடைய பெருங்கீர்த்தியென்னுந் திருமேனியானது எக்காலத்தும் அவரைத்தணவாது அழிவற்ற ஆவலோடுஞ்சுமந்து அவரைப்போலவே கெடாதபெருமையைப்பெற்றதுபோல ஊழிகள்தோறுமழியாமல் ஓங்கவல்லதாய், சத்தசாகரங்களும் ஒன்றுடனொன்று கலக்கவருகின்றயுகாந்தகாலத்தில் தத்தஞ் சுபாவநிலைகளினின்று மாறித் தடுமாற்றங் கொள்ளுகின்ற திருமால்கண்படுமிடத்தையும் அவனுந்திப் பதுமமாகிய பிரமனிடத்தையுங்கண்டு எமது உருத்திர மூர்த்திக்கு இடையாத்தலமாகி எக்காலத்தும் உடையாவுறுதியோடு நகைப்பதுபோல என்றும் ஒரேயியல்பாய்ப் பிரகாசிக்கவல்லதாய், நம்மைச் சிவபிரான் திருவுருவாகக் கொண்ட செயலாலன்றோ அடுத்தோர்களையும் பெரியரொன்றுசொல்லு

ம்படியாக நன்மைகளைவிளக்கின்றோம், இனி அந்கடவுளுக்கு இடமுமா கிஅவனைத்தாங்கிநிற்போமாயின்எக்காலத்தும் அழியா நிலைமைபெற்றிருப்போமென்று சாத்விகமானது ஓருருக்கொண்டு உவகையோடும் ஆர்த்தல்போல ஆரவாரிக்கும் அருவியையுடையதாய், மேருவும் மந்திரமும் எமது சிவபிரான் வசிக்கப்பெற்றன வாயினும் அவைகள ஓரசன வருத்திய பின்னர் அவன்கருதிவந்த பொருளினைத்தந்தும் அமுதம் வேண்டிய தேவர்கட்குக் கடலைக்கலக்கி நஞ்சினையளித்தும் இருந்தனவேயென்று எள்ளித் தன்னைக்கருதி வரங்களடுத்தோர்க்கு வெள்ளியை நிரப்பவல்லதாய்,அகத்தும் புறத்தும் ஓரேதன்மையையுடைமையினாலும்சிவபெருமானுடைய அருமைத்திருவடிகள் தனது சென்னியின் மருவப்படுகையினாலுந் தெள்ளியவறிஞர்களாலெடுத்து ஏத்தப்படுகின்றசிறப்பினாலும் மலபாசங்களைத் துறந்த மெய்ஞ்ஞானியர்களைப் போன்றதாய்.ஓர்பால் தாமரை முதலியமலர்வருக்கங்களெல்லா மலர்ந்தும்ஓர்பால் வச்சிரமுதலிய மணிவருக்கங்களெல்லாங்குழூஉக்கொண்டும்ஓர்பால்சிவகங்கைமுதலியதீர்த்தங்கள்சிறந்தும்ஓர்பால்பலாககனிமுதலிய பலவருக்கங்கள் பரவியும் இருப்பதாய் விளங்குவது கயிலையங்கிரி.அக்கயிலையங்கிரியில்-இமாசலராசன் புதல்வியோடு எழுந்தருளிய எமது சிவபெருமானுடைய திருவடிகளைத் திருமான்முதலிய தேவர்கள்வழிபட்டு வைகுந்த மாதிபதவிகளைப் பெறுவார்களாயின், அப்பெருமானுக்கே உறையிடமாயிருக்கின்ற அதன்பெருமைகள் உம்பர்களாலுஞ் சொல்லப்படுவனவோ. அக்கிரியின்கணுளவாகிய கொடி மரம் மிருகம் புள்ளின முதலியவைகளை யோசிக்குமிடத்து ஒவ்வொன்றும் கற்பகம் காமதேனு பதுமநிதி சிந்தாமணி முதலிய வைகளா யிருப்பதன்றி அவைதருகின்ற பொருள்களையுந் தருவன. சனனங்கடோறும் பெரியமாதவங்களைச் செய்து எல்லாப் பொருள்களையு மறிந்த யோகியர்க்கல்லது ஏனைய சீவர்கட்கெல்லாம் அக்கயிலாயத்தின்கணுள்ள கொடிமுதலானவைகளா யிருக்கத்தக்க வாழ்வுமரிதாகும். அன்றியும்-இருவகைப்பற்றுக்களையுமொழித்துச்சிவபெருமானுடையதிருவடிகளிற் பற்றுடையபேருக்கே அக்கயிலையிடங் கொடுப்பதல்லாது மற்றையர்க்கெல்லா முற்றவேண்டிய தளித்து அப்பால் முடுக்குவதன்றி எக்காலத்தும் அன்னவர்க்கு இடமாகும் வகையில்லை. இத்தன்மைத்தாகிய கயிலையங்கிரியல் அடியார்க்கருள்செய்யும் பொருட்டு இமாசலராசன் புதல்வியாகிய உமாதேவியாரோடு சிவபிரானெழுந்தருளி யிருக்கின்ற நாளையில் கார்முதலிய விருதுக்களின் காற்றிற்பட்ட இலைபூவாதியவைகள் சிறந்தனவல்ல வென்று கருதினற்போல,முன்னொருபோது சிவபெருமானுடைய தழல்விழியால்பூளைப்பூவினைப்போல மடிந்தும் யாவர்க்குங் காமநோயளிப்பவனாகிய மன்மதனுடையஅணிவிழாச்சிறக்கும்படி-இளவேனிலானது தனது தென்றற்காலினால் இறந்துகிடக்கின்ற கானகமாதிகளை மிதித்துத் தளிர் முதலானவைகளைத் தத்தநிலைமைகளிற் குன்றாதபடி நிரப்பியது. அக்காலத்தில் யாவர்க்கும் இனிமைசெய்வார்க்குற்ற வறுமையானது நீடியாது நசிப்பதுபோல,இறந்துபோகிய விருதுக்களினால் இலைமுதலியவைகளைத் தீர்ந்த கொடிமரமுதலானவைகளெல்லாம் பொருக்கென்றுதளிர்த்துமலர்-கனி முதலியவைகள் தோன்றநின்றன.மிக்கசாந்தமும்சகை

யுமுடையோரிடத்தில் அடையாதார் ஒருவருமில்லையென்று சொல்லு
வதுபோல,அக்கொடிமரமுதலிய கிளைகடோறுந் தும்பி வண்டு சுரும்பு
முதலியவைகளோடு பலவிதப்பறவைகளு நெருங்கியிருந்தன. தன்னைச்
சார்ந்த ஓர் பொருளினாலல்லது சுபாவத்தில் தனது குணத்தைக்காட்டா
த பூமிக்குச்செய்நன்றியை மதித்தல்போல,அங்குள்ளசோலை முதலான
வைகள் மலர்முதலானவைகளைச் சிந்தி வாசனையூட்டுவ.சிறிது நீரில்லாம
ற் சுருங்கித் தம்மைநெருங்கியிருக்கின்ற மடுதடாகம் ஆறுமுதலிய வைக
ளினுடைய நிரப்பைத் தாமேநீக்கவெண்ணினாற்போலத்,தாழ்ந்த பொழி
ல்களெல்லாம் வைகலும்பொழுதும் அவைகளில்தேனைச்சொரிவன.துட்
டர்களாயினோர் தமக்குநன்றி செய்தோரிடத்துங் கட்டமாகிய காரியத்
தைச் செய்வதுபோல,அத்தடாகமுதலிய வைகளிலுள்ள மதுரமான நீரி
னைப் பானஞ்செய்தெழுந்தஎட்டியாதிகள்தம்மிற்கைத்திருக்கின்றகாய்மு
தலியவைகளை அவைகளிற்சொரிவ. தம்மையடைந்தோர்கள்பக்குவர்களா
யினும் அபக்குவர்களாயினும் அவர்களையுயர்த்தவல்லஞானாசாரியனைப்
போல, வண்டினங்களானவை எட்டியாதி வருக்கங்களிற் கவர்ந்துவந்த
தேனையும் ஏனைய நல்லவிருக்கங்களில் முகந்துவந்ததேனையும் ஒன்றாகக்
கூட்டிப் பக்குவப்படுத்துவ.கிடைத்தற்கரியபலநூல்கடோறுமுள்ளபொ
ருள்களை யெல்லா மாராய்ந்தெடுத்து யாவருமினிமையெய்தும்படி தொ
டுக்கவல்ல நாவலர்களைப்போல,தேனீக்களானவை பூக்கடோறு முள்ள
தேன்களையெல்லாஞ் சிறுகச்சிறுக முகந்துபோய் ஓர்பக்கத்தில் சுரந்து
தேங்கும்படி பலகூடுகளைத் தொடுப்பன.இவ்வாறவ்வீக்கூட்டங்கள் மிக்
க பிரயாசையோடு தேன்களையீட்டுவன வாயினும் தேவர்கட்குபயோகி
க்கப் படுவனவாயுள்ள மலர்களையும் அவைகள்சிதைக்கின்றதீங்கினால்அ
வைகளையழிப்பதே புகழென்று சிலர் ஆங்காங்கு தொடுத்திருக்கின்ற கூ
டுகளையழிப்பார்கள்.குற்றஞ்செய்தோரைச் சினந்து பொருள் பறித்தல்
வேலேந்துமரசர்க்கு விதியாதல்போல,சிலர் விடியுமுன்னரே சென்று ம
லர்களை ஊறுசெய்கின்ற ஈக்களையழித்து அவற்றின் கூடுகளி லிருக்கின்ற
தேன்களைக்கைக்கொண்டு செல்லுவார்கள்.அங்குள்ளசோலைக ளனைத்து
மேகங்களையொப்ப வீசுகின்ற தேன்மழையினால் மயிற்கூட்டங்கள் அச்
சோலைகளைவிட்டுநீங்கினாலன்றி அயர்உறா. குயில்களும்அவைகளைவிட்டு
நீங்கினாலன்றிக்கூவா.புறத்தேவரிகளையுடையஅணிலாதிகள் நல்லமாங்
னிமுதலியவைகளையுண்டு தூயஉண்டியருடையகுணத்தைத்தெரியப்படு
த்துவ.மந்திகள் தீயனவும்அவையல்லனவுமான கனிகளைவிழைந்து உயர்
வுந்தாழ்வுமானஉண்டிகளையருந்துவோருடைய தன்மையைவிளக்குவ.அ
ங்குள்ள தடாகங்கடோறுந் தமதுகணவனாகியசூரியனுக்கு ஞாதியாயிருக்
கின்ற சந்திரனாலும் பனியினாலும்அழிந்தவைபோகஏனைய தாமரைகளெ
ல்லாம் வண்டினங்கள்மொய்க்கும்படியாகஅலர்வன.ஆம்பன்முதலியவை
கள் மலர்ந்திருக்கின்ற தடாகங்களெல்லாந் தெளிந்து மிக்கவனப்போடுசி
றப்புற்றன.நீண்டஆறுகளெல்லாம் நுண்ணிய மணல்களைப்பரப்பி அதன்
மேல் கருமணல்களைவார்த்து நடுவேபுனலொழுகிச் செல்லும்படியாகதத
ம்மைவிழைந்தஉயிர்கட்கெல்லாம்வெயிலின்வெப்பத்தை நீக்குவ.வரையா
துகொடுப்போரிடத்தில் வறுமைவந்தடுப்பினும்அவர்களக்காலத்தும்உள்

ளபொருளைக் கரவாதுவேண்டினோர்க்குஉதவுதல்போல,அங்குள்ளமலைக் ளெல்லாம் இழிந்துபோன கார்காலத்திற் பருகிய புனல்களை அவ்விள வேனிற் காலத்தும் இடைவிடாது பொழிகுவ. இத்தன்மைத் தாகிய இளவேனிற் காலம் வந்தபோது சாம்பசிவ மூர்த்தியானவர் குளிர்ச்சி வேண்டித்,தமது தேவியாரோடும் உய்யானனத்தை யடைந்து, அதில் கொன்றை கூவிளம் கோங்கு மந்தாரம் பாடலம் புன்னாகம்சண்பகம் வாழை வகுளம் அசோகமுதலாகிய விருக்கங்கள் மலிந்திருக்கின்றஅலங்காரங்களையெல்லாம் பார்த்துக்கொண்டேவந்து,அங்கிருந்த ஓர்சித்திர மண்டபத்து ளெழுந்தருளினர். அப்போது உமாதேவியார் அம்மண்டபத்தின் சுவர்களிலெழுதி யிருக்கின்ற சித்திரவலங்காரங்களை யெல்லாம்பார்த்துக்கொண்டேவர,அவைகளில் ஓர்பால் சத்தகோடி மகாமந்திர சொரூபங்களும்,அவைகட்கெல்லா முதலில் பிரணவமந்திர சொரூபமும், அதில் ஆணையும் பெண்ணையும் புணர்ச்சி செய்திருக்கும் பாவனை யாக வெழுதி யிருப்பதைக் கண்டு,சுவாமி - இதென்னவென்று சிவபிரானைக்கேட்டனர். அதற் கவர்தமது தேவியாரைப்பார்த்து,பெண்ணே-யாமுன்னோடு சம்பந்தமாகி லோகங்கட் குபகாரமாய் நடப்பிக்கத்தக்க கருணாரசமாகுமென்று திருவாய்மலர்ந்து,புணர்ச்சிசெய்திருக்கின்றஅந்தயானைகளில் ஆணையைத் தாம் பார்த்துக்கொண்டிருந்தனர். உமாதேவியார் பெண்ணையைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.இவ்வாறு லோக காரணர்களாகிய இருவரும் அவைகளை இன்போடுபார்த்துக்கொண் டிருத்தலும் அந்தயானைகளினுடைய புணர்ச்சிமுடிவில் பிரணவஸ்வரூபியாயிருக்கின்ற விநாயகமூர்த்தியானவர் ஊழி காலத்தில் கோடிசூரியர்கள் ஒன்றாய் உதயஞ்செய்ததுபோல அளவற்ற பிரகாசத்தோடும் உதித்தருளி, சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்தனர்.உடனே அவ்விருவரும் ஆனந்தங்கொண்டு,தமக்குப்புத்திரனாகத் திருவவதாரஞ் செய்தருளிய விநாயக மூர்த்தியைப் பரிவோடெடுத்து அணைத்து,உச்சிமோந்து, உள்ளம் பூரித்துத்,தங்கள்மடியின்மீது வைத்துக்கொண்டு,சிவபிரான்இதனைத்திருவாய்மலர்ந்தருளுவதாயினர்,ஓகுமாரனே-என்னில் வேறாகாமல் எனக்குப்பிள்ளையாகி யிருக்கின்ற உன்னை யார்வணங்குகின்றார்களோ அவர்கட்குச் சகலவிடை யூறுகளையுந் தீர்த்து அவர்கள் விழைந்த காரியங்களை விரைவில் கைகூடும் படியாக அநுக்கிரகஞ் செய்திடுக,கணங்கட்கெல்லாந் தலைமைபெற்றிருந்து கிருபையைவழங்குக,அதனால் யாவரும் உன்னைக்கணபதியென்று சொல்லுக,உன்னையாவரும் எக்காரியத்தினு முன்னதாக வணங்குக,அவ்வாறு வணங்காதோர்க்கு நீ இடர்களைப்புரிக, இதுவன்றி அசுரர்கட்கெல்லா மரசனாய்,யாவருமஞ்சத்தக்க கோரனாய், மிக்கக்கொடிய நெஞ்சையுடையவனாய், தேவர்கட்கெல்லாந் துன்பத்தை விளைகின்றவனாய், கெஜமுகனென்னும் பெயரைவகித்தவனாய் ஒரு அசுர னிருக்கின்றான்,அவனை நீவிரைவில் சமர்க்களத்திற் சங்கரித்து, விண்டுவேமுதலியோர் மூழ்கியிருக்கின்ற துக்கசாகரத்தைத் தூர்த்து,அவர்களைக்கிருபையோடுங் காததருள்கவென்று திருவாய்மலர்ந்து,உமாதேவியாரோடு அச்சித்திரமண்டபத்தை விடுத்து, கணபதிப்பெருமானை யழைத்துக் கொண்டுசென்று, அவரைத் தமதுகயிலாயவாய்தலின் முகப்பி லிருக்கவைத்து

அந்தப்புறத்திற் சென்றருளினர். அப்போது நந்திதேவர்முதலிய கணத் தலைவர்களும் விண்டுமுதலிய தேவர்களுங் கருணாநிதியாயெழுந்தருளிய கணபதிமூர்த்தியைப் பணிந்தெழுந்து,வேதாகம முதலியவைகளாற் றுதி செய்து விடைபெற்று,அவரது பெருங்கருணையினால் அவ்வவர்களுடைய பெரிய அதிகாரங்களைச் செலுத்துவதாகப் போனார்கள்.அந்தப்புறத்திற்சென்ற சிவபிரானும் உமாதேவியாரும் சரசசல்லாபத்தோடும் அளவளாவி மகிழ்ச்சியுற்றிருந்தார்கள். இவ்வாறு மகிழ்ச்சிபொங்க சரசசல்லாபத்துடனே அளவளாவியிருக்கின்ற போது,சிவபிரான் உமாதேவியாரைப்பார்த்துப்,பெண்ணே- நாமிருவருஞ் சூதாடுவோம், அச்சூதில் நீதோற்பையாயின் உனது ஆபரணங்களையெல்லாங் கொடுத்துவிடக் கடவையாம்தோற்போமாயின் நமது ஆபரணங்களைக் கொடுத்துவிடக் கடவோமென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கு உமாதேவியார் சம்மதித்து, அப்போது சிவபிரானைத் தரிசனஞ்செய்ய வந்திருந்த தனது சகோதரனாகிய விண்டுவைக்கூவி,ஓ சேட்டனே-இப்போது யாமிருவரும் ஆடப்போகின்ற சூதுக்கு நீ சாக்ஷியிருக்க வேண்டுமென்று கேட்டனர். அதற்கவரும்சம்மதித்து நின்றனர். பின்னர் சுந்தரர் முதலியபரிசனங்களெல்லாம் அக்குறிப்பினையறிந்து,சூதாடு கருவிகளைக்கொணர்ந்துவந்து சிவபிரானெதிரில் நீட்டினார்கள்.அவைகளைச சிவபிரான் கையேற்று விண்டுவினிடத்திற்றந்து,இவைகளைக்கிரமப்படி வைத்திடுகவென்று கட்டளையிட்டனர். அவ்வாறே அவைகளையெல்லாங் கிரமப்படிவைத்து,அவ்விருவர்களுடையஆட்டங்களையும் பார்த்துக்கொண்டிருந்தனர். அவவாட்ட முடிவில் உமாதேவியார் கெலித்தனர். அதைசசிவபிரான்கண்டு,பரியாசத்தினாலோ மற்ற யாதுகாரணத்தினாலோ உமாதேவியாரைப்பார்த்து,பெண்ணே -நீ நமக்குத்தோற்றனை யாதலால் உனது ஆபரணங்களையெல்லாங் கழற்றி நம்முன்வைக்கக் கடவையென்று திருவாய்மலர்ந்தனர். அதனைக்கேட்டலும் உமாதேவியார் சிவபிரானைப்பார்த்து நகைத்து,சுவாமி- அடியாள கெலித்திருக்கத்,தேவரீர் குற்றமற்ற வேதங்களைத் திருவாய் மலர்ந்தருளியவாக்கினால் எற்றினுக்கு இத்தன்மைத்தான பொய்யை நாணமில்லாமற்சொன்னீர்கள்,தேவரீருடைய திருமேனியிலுள்ள ஆபரணங்களைவாங்கி என் முன்னே வைத்தருள்கவென்று கூறினர். அதற்குச்சிவபிரான் புன்னகைகொண்டு,பொய்ச்சாட்சிசொல்லும்படியாக விண்டுவுக்குத் தமதுபுருவத்தை நெரித்துச்சைகைகாட்டி,மீட்டும் உமாதேவியாரை நோக்கி நாமே கெலித்தன மென்று திருவாய்மலர்ந்தனர். அப்போது விண்டு வானவர் என்செய்வர்- மேல்வரும் விளைவைச்சிறிது மறிந்து கொள்ளா தவராய் உமாதேவியாரைப்பார்த்து,அம்மணீ-இப்போது சுவாமிக்கு நீர் தோற்றமையால் உமது ஆபரணங்களை அவருககுக் கொடுக்கவேண்டாமோ வென்று கூறினர். அதைக்கேட்டலும் உமாதேவியாரகோபித்து, அவ்விண்டுவைஉறுத்துப்பார்த்து,அறிவற்றவனே-எங்களுடைய கெலிப்பையுந்தோற்பையுங் கண்ணிற்கண்டிருந்தும் என்னலாபத்தை விழைந்து உண்மையைச் சொல்லாமல் பொய்ச்சாக்ஷிசொல்லினை,நீ இவவாறுசொன்னமையால் இனி கண்கெட்டமலைப் பாம்பாகி துன்பமுறககடவை யென்றுசபித்தனர். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவாகளே-சகலலோகங்களையும் அ

ளிக்கவல்ல விண்டுவானவர் சிவபிரானுடைய சார்பைப்பெற்றிருந்தும் ஒருபொய்ச்சாக்ஷியினால் சகித்தற்கரிய சாபத்தினைப்பெற்றாரெனில்,இவ்வுலகத்தில் பிரதிதினம் பொய்யையே பெரும்பாலுங் கூறி வாழ்கின்றவர்கள் அடையத்தக்க நரகவேதனையை யாவரால் அளவிட்டுரைக்கக்கூடும்.இவ்வாறு உமாதேவியாரிட்ட சாபத்தைக்கேட்டலும் விண்டுவானவர் நடுநடுங்கிச்,சிவபிரானுடைய திருவடிகளில் வீழ்ந்துபணிந்தெழுந்து,சுவாமி தேவரீருடைய திருப்புருவ நெரிப்பிற்சஞ்சி யுரைத்த பிழையினைப் பொறுத்து,உமாதேவியார்கொடுத்தசாபத்திற்கு ஓர் தீர்வுசொல்லியருளல்வேண்டு மென்று பிரார்த்தித்தனர். அதற்கு அளவற்றகாலம் ஆணவமலத்திலழுந்தி மறைபட்டிருந்த ஆன்மாக்களை முத்தியில் விடவேண்டு மென்று நினைத்து கடல்போன்ற தமது பெருங்கருணையினாலே திருமேனிகொண்டு அவர்களை அவ்வாணவ விருளினின்று மெடுத்து அவர்களிச்சித்த தநுகரணாதிகளைக்கொடுத்து அவைகளினிடமாக நல்வினை தீவினைகளை யூட்டி அவ்விருவினையொப்பில் மலபரிபாக மூண்டாக்கி முத்தியிற்சேர்ப்பிக்கவல்ல சர்வஞ்ஞமூர்த்தியாகிய சிவபிரான் கிருபைசுரந்து,ஒ இலக்குமி கேள்வனே-நீ வடதீவிற்சென்று நமது திருவடிகளைத்தியானஞ்செய்துகொண்டிரு,இன்னுஞ் சிலதினத்துள் மூவுலகத்தார்க்குந் துன்பஞ்செய்து வருகின்ற கஜமுகாசுரனைக் கணபதிமூர்த்தி சங்காரஞ்செய்து அவ்வழியே வருவர்,நீ அவரைப்பார்த்தபோது உனக்கு நேர்ந்த சாப நீங்குமென்று அருள்செய்தனர். அதைவிண்டுகேட்டு மனமகிழ்ந்து, உடனே அவ்வடதீவினையடைந்து,ஓராலமரத்தடியில் ஏழுயோசனை விசாலத்திற்கிருக்கின்ற இருண்டபொந்தினுள் குருட்டு மலைப்பாம்பாகித்,தமது பயங்கரமான ரூபத்தைநினைக்குந்தோறும் அருவருப்புற்றவராய்ச், சதாகாலமும் சிவபிரானுடைய திருவடிகளையுங் கணபதிமூர்த்தியினுடைய திருவருளையுந் தியானஞ்செயதுகொண்டு தவத்திலிருந்தனர்.விண்டுவின் செயலிவ்வாறாக-இந்திரன் முதலிய தேவர்கள் அசுரர்கள் செய்யுங்கொடுமைக்குப்பயந்து,சகலதிரவியங்களோடுங்கயிலாயத்தை நோக்கிச்சென்று, முதல்வாய்தலின்முகப்பில்கணத்தலைமைபெற்றுவீற்றிருக்கின்றஎமதுகர்த்தனைப்பணிந்து பூசித்து,இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி, வேதாகமங்களினால் அளவற்ற தோத்திரங்களைச்செய்து நின்றார்கள்.அவர்களைக் கணபதிமூர்த்தி கிருபையோடும்பார்த்து,அன்பர்களே-உங்கட்குவேண்டிய வைகளைக்கேட்பீராகவென்று திருவாயமலர்ந்தனர். அதற்குமேல் தேவர்களெல்லாம் ஆனந்தங்கொண்டு,சுவாமி-அடியேங்களை நாடோறும் வருத்தி வருகின்ற கஜமுகாசுரனைத் தேவரீர சங்காரஞ்செய்து, அடியேங்களுடைய துயரத்தை நீக்கியருளல்வேண்டுமென்று பிரார்த்தித்தாகள். அதற்குக்கணேச மூர்த்தி அவ்வாறே செயதருளுவமென்று கிருபைவழங்கி, தமது சிம்மாதனத்தை விடுத்து, பூதர்கட்கெல்லாந் தலைவனாய்,மலையைப்போன்று பாரித்து விளங்குஞ்சரீரத்தினால் அசலனென்னும் பெயரைவகித்திருக்கின்ற ஒருவனைக்கூவி,அவனது கந்தரத்திலாரோகணித்தனர். உடனே ரணபேரி ஜயபேரி வெற்றிச்சங்கமுதலிய வாத்தியங்கள் முழங்கின. கொடிகொடைசாமரைமுதலியசின்னங்கள் இருமருங்கினு நெருங்கின.இடியேற்றினையொப்பசத்திக்கும் பெருந்தொனியை யுடையவர்களாய், பிரள

யாக்கினியைச் சொரிகின்ற கண்களையுடையவர்களாய, பர்வதங்களையொத்து விளங்கும் புசங்களில் அளவற்ற ஆயுதங்களையேந்தினவர்களாய, அநேகபூதவீரர்கள் புடைசூழ்ந்தார்கள். பின்னர் கணேசமூர்த்தியானவர் இவ்விதவாடம்பரங்களோடு கயிலாயத்தினின்றும் வெளிக்கொண்டு, கஜமுகாசுரன் அரசாக்ஷிசெயது வருகின்ற மதங்க நகரத்தின் சமீபத்திலமர்ந்தருளினர். யோகியர்கள் தங்கள் ஞானவுணர்ச்சியினாலறிந்தாலல்லது வேறேயொராலறியவொண்ணாத கணபதிமூர்த்தியானவர் இவ்வாறு யுத்தசன்னத்தராய வெளிக்கொண்டுவருவதைக் கஜமுகாசுரனறிந்து, ஆயிரம்வாகினி சேனைகள் தன்னைப்புடைசூழும்படியாக வெளிக்கொண்டு, கொடைகொடி முதலியசின்னங்களோடும் அமரர்களுங்கண்டு நடுங்கத்தக்க ஆயுதங்களோடும் வந்து யுத்தஞ்செய்யத்தொடங்கினன். அப்போது பூதவீரர்கள் தாக்கியதாக்கலிலே அளவற்ற அவுணவீரர்கள் துடைக ளறுந்தும் இடைகளொடிந்தும், வாள்கள்முறிந்தும், கால்கள்மடிந்தும், தலைகள்பிளந்தும், சிலைகளிழந்தும், பலதிசைகளினுஞ் சின்னாபின்னப்பட்டு ஓடிமாண்டார்கள். அதைக் கஜமுகாசுரன்கண்டு, வடவையைப்போலக்கொதித்து தனது வில்லில் அளவற்ற *பாணங்களைப் பிரயோகித்து, சமீபத்திலிருந்த பூதவீரர்களையெல்லாங்கொன்று, கணபதிமூர்த்திக்கெதிரேவந்து, விண்ணோர்களாலுங் காணுதற்கரிய அவரது திருமேனியைத்தனது தவமுதிர்ச்சியினாற் கண்டு சிறிதும் அஞ்சாதவனாய, இதனைச்சொல்லுவதாயினன். ஓசிறுபிள்ளாய்- இதுகாறும் என்னோடுபகைத்து யாருயிரோடிருந்தார்கள், தேவர்கள்செய்த தோத்திரத்தி டன்பட்டு நீ என் வீணிலழிவுதேடிக்கொள்ளுகின்றனை, யான்விட்டுவிடுகிறேன் இனியேனுந் தப்பிப்பிழைத்துக் கொள், இல்லையேல் என்னோடு யுத்தஞ்செய்ய உனக்கு ஆசையிருக்குமாயின் நீ கற்றிருக்கின்ற ஆயுதவல்லபங்களை இப்போதே காட்டு, சிறிதும் எனதுபராக்கிரமத்தை யோசியாது எதிர்க்கவந்தவுன்னை முன்னேகொன்று, பின்னர் உன்னைக்கோரியனுப்பிய தேவர்களையெல்லா நாசஞ்செயது வெற்றிமாலைதரிக்கின்றேன், நான் சிவபிரானாலடைந்திருக்கின்ற வரங்களைச்சிறிது மறிந்தாயில்லையென்று சொல்லினன். அதற்குக் கணேசமூர்த்தி புன்னகைசெயது, அடாபேதாய், உனக்கு வரங்கொடுத்தருளிய அச்சிவபிரானுடைய கிருபையினாலேயே உன்னைச்சங்கரித்து, தேவர்களையெல்லாம் யதாப்பிரகாரம் சொர்க்கலோகத்தில் நிலைபெற்றிருக்கச் செயகின்றேன்பார். இதை உண்மையாக நம்பக்கடவை, நீஏன் வீணிற் பேசுகின்றாய், அச்சமின்றி என்னோடு யுத்தஞ்செயய வல்லபமிருந்தால் விரைவில் நடத்துகவென்று திருவாய்மலர்ந்தனர். அதை அவுணர் பெருமான்கேட்டுக் கோபித்துத், தனதுமேருவையொத்தவில்லைவட்டாகாரமாகவளைத்து, அளவற்றகுரூரமாகிய பாணங்களைக் கோடைமழையைப்போலப் பொழிந்தான், அவைகளையெல்லாம் எமதுகர்த்தர் தமதுகதாயுதத்தினால் விலக்கி, அவன்பிடித்திருந்த வில்லைக்கண்டித் தெறிந்தனா. பின்னா கஜமுகாசுரன்மற்றொருவில்லையெடுத்துவளைத்து, அளவற்றசரங்களைமுன்னினும் அதிகமாகத்தொடுத்துவிட்டான். அவைகளையுங்கணபதிமூர்த்திதமதுமுசலத்தினால்விலக்கி வில்லையும்பொடிபடுத்தினர். பின்னர் கஜமுகாசுரனானவன் அதிகஉக்கிரத்தோடுநெருங்கிவந்து, மற்றொருவில்லில் இந்திரா

ஸ்திரம்வருணஸ்திரம்வாயுவாஸ்திரம்பிரம்மாஸ்திரம்நரசிம்மாஸ்திரமுதலி தேவாஸ்திரங்களை மாறிமாறிப்பிரயோகித்தான்.அவையனைத்தும்வெளிப் பட்டமாத்திரத்தில் அனந்த உற்பாதங்களை விளைத்துக்கொண்டுவந்துஎமது கர்த்தருடைய திருவடிகளில் விழ்ந்துவிட்டன.அதைக் கெஜமுகாசுரன்கண்டு ஆச்சரியமுற்று,மீட்டும் ஓர்தண்டாயுதத்தை யேந்தி வந்து யுத்தஞ்செய்தான்.அத்தண்டாயுதத்தைக் கணபதிமூர்த்தியானவர்தமதுகதாயுதத்தினுற் றுகள்படுத்தி அவுணர்பெருமான் மார்பினுந் தாக்கினர்.உடனே அவன் சிறிதுநேரஞ் சோபித்திருந்தனன். அப்போதுசுவாமி தமது மழுவாயுதத்தினல் அவனுடைய சேனைகளையெல்லாஞ் சாம்பராக்கினர் பின்னர் கெஜமுகாசுரன் சோபந்தீர்ந்து,தனது சேனைகளெல்லாம் அழிந்து கிடக்கின்றமையைப்பார்த்து,இவன் மேலான பராக்கிரமசாலியேயன்றி சிறுவனல்லவென்று நிச்சயித்தும் மானமேலிட்டவனாய்,மீட்டும் அளவற்ற ஆயுதங்களைக்கொண்டு யுத்தஞ்செய்தனன்.அவன்பெற்றிருக்கின்ற சிறந்த வரத்தைக் கணபதிமூர்த்தியாலோசித்து,தமது வலப்புறக்கோட்டின் முனையையொடித்து அவன்மீதுவிட்டனர். அதுவெளிப்பட்ட மாத்திரத்தில் சகலலோகங்களுங் கலங்கும்படியாக வார்ப்பரித்துச்சென்று கஜமுகாசுரனுடைய மார்பைப்பிளந்து போய் சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்து,மீட்டும்சுவாமியிடத்தில்வந்து சேர்ந்தது. கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே,பகைவர்வந்தபோது அவர்களைப் பாதத்தினுலும் உகிரினுலும் நகையினுனும் பார்வையினுலும வென்று வெற்றிக்கொள்ளவல்ல சிவகுமாரனுக்குத் தமதுகொம்பினல் அவ்வவுணனுடைய வுயிரைமாய்த்ததும்ஒருபுகழோ.பின்னர் கணபதிமூர்த்தியானவர்சமுத்திரத்தில்ஸ்நானஞ்செய்து வந்த கொம்பினை ஓராயுதமாகத் தமது திருக்கரத்திலேந்தியருளினர்.அப்போது தேவர்கள்புட்பவருடஞ் சொரிந்தார்கள். முனிவர்களெல்லாம் வேதாகமங்களினற்பலமுறைதோத்திரஞ்செய்து பணிந்தார்கள்.முன்னர்எம்பெருமானுடைய கோட்டினுற் பிளக்கப்பட்டு மேருகிரி அடியோடேபெயர்ந்து விழுந்ததுபோல நிலத்தில்வீழ்ந்த கஜமுகாசுரன் பின்னர் அம்மலைக்கு நிகரான ஓர் மூடிகமாகி, வட்டமாய்ச்சிவந்து அழலை யுமிழ்கின்ற விழிகளும்,திசையானைகளை யெல்லாம் வீட்டத்தக்க நீண்டவாலும்,கடைவாய்க்கு வெளிப்பட்டிருக்கின்ற பருத்த பற்களும், நீண்டுநிமிர்ந்து அழுத்தமுற்றிருக்கின்ற முகமும், சரீரமுழுவதுநிறைந்திருக்கின்ற மயிரும்,மலைகளையும் விருக்கங்களையும் உதைத்துச் சாய்க்கவல்ல கால்களும்,ஆகாயத்தை யளாவவுயர்ந்து உம்பருலகத்தையு மழிக்கத்தக்க முதுகும்,பார்த்தவர்கள் அஞ்சிப் பயங்கொளளும்படியானகோரரூபமுங்கொண்டு,சகலலோகங்களையுங் கலக்கி நாசம்பண்ணும்படியாக நடந்தான்.அவ்வுருவத்தைத் தேவர்களு முனிவர்களும் பார்த்துப்பயந்து, பலதிசைகளினும் ஓடிப்பதுங்கினர்கள்.இத்தன்மைத்தான கொடிய ரூபத்தோடு எதிர்த்துவருகின்றஆகுவினுடையபராக்கிரமத்தைஎமதுகர்த்தன் கண்டு,இமைப்போதில்அதனை அசைவறப்பிடித்து முதுகிலாரோகணித்தருளினர்.சுவாமியினுடையதிருமேனி தனது சரீரத்திற்பட்டமாத்திரத்தில் அவனுடைய அஞ்ஞானவிருள்விலகிப்போய்,மெய்ஞ்ஞான வொளிமிகுத்து மேன்மைபெற்றனன்.சித்தர்கள் சாரணர்கள் முனிவர்கள் தேவர்

கள் முதலாயினோர் ஆகுவைவாகனமாக வூர்ந்தருளியிருக்கின்ற கணபதிமூர்த்தியைப் பூசித்தார்கள். முன்னர் கஜமுகாசுரன் மார்புபிளக்கப்பட்டு உதிரம்பெருகவிழுந்த படுகளத்தை உலகத்தார்மாரொத்தமயமென்றுசொல்லுகின்றார்கள். அவ்விடத்தில் கணேசமூர்த்தியானவர் ஓர்சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்து, அத்தலத்திற்குக்கணபதீச்சுரமென்று திருநாமந்தரித்தனர். அளவற்றசேனைகளோடு கஜமுகாசுரன் யுத்தகளத்தில்இறந்தானென்று அசுரராசனறிந்து பயந்து, கர்ணெருபக்ஷிரூபங்கொண்டுமேருமலையிலிருக்கின்ற வோர்குகையிலொளித்துக் கொண்டனன். அசுரர்குருவாகிய சுக்கிரனும் ஆகாயமார்க்கமாய் மறைந்துபோயினன். இந்திரன் முதலியதேவர்களெல்லாங்கணபதிமூர்த்தியினிடத்தில் விடைபெற்றுத்தத்தம்பதிகளையதாப்பிரகாரமடைந்து வாழ்ந்திருந்தார்கள். பின்னர் கணபதிமூர்த்தியானவர் தமது ஆகுவாகனத்தைநடாத்திக்கொண்டு, சகலசேனைகளும் புடைசூழ்ந்துவரும்படியாக வடதிசையைநோக்கி யெழுந்தருளினர் அம்மாத்திரத்தில் நெடுநாள்ஓராலமரப்பொந்தில்குருட்டுமலைப்பாம்பாகியிருந்த விண்டுவானவர் அவ்வடிவத்தினின்று நீங்கிப், பழயபடி தெய்வரூபம் பெற்றுக், கணபதிமூர்த்திக்கெதிரில்வந்துபணிந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்று, ஓ அட்டமூர்த்தமாயிருக்கின்ற அமலனே- தேவரீருடைய தரிசனவிட்சணியத்தால் அடியேற்குஉமாதேவியார்கொடுத்தசாபம்ஒன்றேயன்றி அடியேனுடைய மலபந்தங்களுநீங்குப்படியான பேற்றினையடைந்தேன், இனி இதைவிட யான்பெறத்தக்கபேறு வேறென்னவிருக்கின்றது என்றுமிக்க மனமகிழ்ச்சியோடும் புகழ்ந்து, புடபமுதலிய திரவியங்களாற் பூசனைசெய்து, வேதாகமங்களினாற் றோத்திரம் புரிந்து, கைதட்டி, நிருத்தமாடி, மீடடும் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, சுவாமி-அடியேற்குத்தேவரீர தரிசனங்கொடுத்தருளிச் சகலநன்மைகளையுங் கிடைக்கச்செய்த இத்தினம் மார்கழிமாத சஷ்டியாதலால் வருடந்தோறும் வருகின்ற இத்தினத்தில் யாவரேனுந் தேவரீர்க்குவழிபாடு செய்வாரகளாயின் அவாகள் சகலவரிட்டங்களினின்று நீங்கி இட்டகாமியார்த்தங்களைப்பெற்றுய்யும்படி அநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குக்கணேசமூர்த்தி அவ்வாறேசெய்தருளுவமென்று கிருபைசுரந்து, அவ்விண்டுவையுந் தம்மோடழைத்துக்கொண்டு, சகல சேனைகளோடுங் கயிலாயத்திற்குச்சென்றுசிவபிரானையும், உமாதேவியாரையும் பணிந்து விடைபெற்று, தமது யதாஸ்தானமாகிய முதற் கோபுரவாய்தலின்முகப்பிலெழுந்தருளினர். அப்போதுவிண்டுமுதலாயினோர்கணேசமூர்த்தியைப் பூசனைசெய்து, சுவாமி- அடியேங்கள் இதுகாறும்மிகுந்த கொடுமையான கஜமுகாசுரனுக்குக் குட்டணமுதலாகிய வணக்கங்களைச் செய்து அவனுடைய பணிகளைநடாத்திவந்தனம். அவ்வணக்கத்தைஇன்றுமுதல் அடியேங்கள் தேவரீர்க்கெதிரே செய்கின்றனம். அவைகளைத் தேவரீர் வணக்கமாகக்கொண் டருளல்வேண்டும். அவ்வாறு தேவரீர்க்கு வணக்கஞ்செய்வோர்கள் யாவராயினும் அவர்கட்கு இஷ்ட காமியார்த்தங்களைக் கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து அவ்வாறேதாங்களனைவரும் வணக்கஞ்செய்து சகலவரங்களையும் பெற்று அவ்வவர்களுடைய பதவிகளையடைந்தார்கள். என்று சூதபுராணிகர் சொல்ல, அவரை

ச் சவுனகாதிமுனிவர்கள் பணிந்தெழுந்து, சுவாமி - கஜமுகாசுரன் யார், அவன்பெற்றவரங்கள் யாவை அவைகளையுந் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குச் சூதபுராணிகரிசைந்து,ஓசவுனகாதிமுனிவர்களே, முன்னொருகாலத்தில் தேவேந்திரன் அசுரேந்திரனோடு யுத்தஞ்செய்து, அவனைப் பின்னிட்டோடப் பண்ணித் தான் வெற்றிபெற்றிருந்தனன். பின்னரசுரேந்திரன் வலியுற்று,நமது குலத்தில்தேவேந்திரனைச் செயிக்கத்தக்க வீரர்கள் ஒருவருமில்லையே யென்று மனந்தளர்ந்து, தனது குலகுருவாகிய சுக்கிரனைப் பணிந்தெழுந்து, சுவாமி- இப்போது எங்கள் குலத்தி லிருக்கின்றவர்களுள் தேவேந்திரனைச் செயிக்கவல்ல வீரமுடையவர்கள் ஒருவருமில்லையே, அதனாலவன் வீறி எங்களை வெல்லுகின்றானே,தேவரீருடைய அருட் சூட்சியினால் நிலைபெற்றிருக்கின்ற எங்கள் குலமானது இவ்வாறு துன்பப்பட்டழிய லாகுமா, இனியேனும் அவ்வாறாகாமல் செழித்தோங்கும்படி அடியேன் நடந்துகொளளத்தக்கது யாதேனு முண்டாயின் அதனைத் தேவரீர் கிருபைசுரந்து திருவாய்மலர வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குமேல் சுக்கிரனானவன் மேல் நடக்கப்போகின்ற காரியத்தைத் தனது சூக்ஷ்ம புத்தியினாலறிந்து,ஓஅசுரேந்திரனே-வசிட்டமுனிவருடையமரபிலேமரகதனென்னும ஓர்முனிவர்வனத்திலேமுத்தியைவேண்டிஅரியதவஞ்செய்துகொண்டிருக்கின்றனர். அவரைஎவ்விதத்திலேனும்வசப்படுத்திக்கூடும்படியாசஉனது குலத்தில் ஓர் கன்னிகைக்குத் திட்டஞ்செய் தனுப்பிவை அவள் வயிற்றினின்று யானைமுகத்துடனே ஒருவனுதிப்பான், அவன் தேவேந்திரனை யடக்கி உங்கள் குலத்தைத் தழைத்தோங்கும்படியாகச் செய்வன், ஆகலால் விரைவில் அதனை நடாத்தக்கடவையென்று சொல்லி விடைகொடுத்தனன்.பின்னர் அசுரேந்திரன் இதுகாறு மடைந்திருந்த துயரங்களெல்லாம் இத்தினமே போய்விட்டனவென்றுமனமகிழ்ந்து, சுக்கிரனைப் பலமுறை துதிசெய்து, அவ்விடத்தினின்று நீங்கித், தனதுபட்டணத்தை விரைந்தடைந்து,அசுரகுலத்தினுள் அழகிற்சிறந்தவளாகியிருக்கின்ற விபுதையென்னும் ஓர் கன்னிகையிடத்திற்சென்று, தனது மனக்குறைவையுஞ் சுக்கிரன்சொல்லிய சூட்சியினையும் அறிவித்தான். அதற்கவளிசைந்து. அங்கிமிடத்தில் தவஞ்செய்திருக்கின்ற அமமரகத முனிவரிடத்திற்சென்று,அவர் செயயுந் தவமகிமையைப் பார்த்து, இலக்குமியே எதிர்வந்தாலும் இவர் சபலிப்பவராயிருக்க வில்லையே,வலுவிற்போ யணையலாமென்றால் சபித்து நாசமாக்குவரோ,தவங் கலைந்தபோதுங் கூடத்தக்கவரல்லவே,நமதரசனுடைய இட்டத்தை எவ்விதத்தில் திருப்தி செய்யப்போகின்றேமென்று எண்ணமிட்டு மனங்கலங்கி,மீட்டுந்தெளிந்து,எண்ணிய காரியங்களைக் குறைவில்லாமலடையத் தக்கவர்கள்தவத்தர்களேயாதலால் இத்தவசியை வசமாக்குதற்கு யாம தவஞ்செய்தே வசமாக்கிக்கொள்ள வேண்டுமென்று தனக்குள் நிசசயஞ்செய்து, கவலைகளினின்று நீங்கி,மரகதமுனிவர் தனக்கு மணாளராகவேண்டுமென்று மனதிற்றியானஞ் செய்துகொண்டு,பசிதாகமுதலியவைகளை யடக்கி, ஓர் பாரிசத்திலிருந்து,தனது அழகுற்ற சரீரமெல்லா மழுங்கி வருந்தும்படியாக அளவற்றநாள் தவஞ்செய்துவந்தனன். இவ்வாறு அவள் செய்கின்ற தவமும்

பழயவினையுமொன்றுபட, ஒருநாள்மரகதமுனிவர் தமது தவத்தை விடுத்துக் கண்களைவிழித்தனர். அப்போது அவ்விடத்தில் ஆணையும் பெண்ணையுங் கூடிப் புணர்ச்சிசெய்திருக்க, அதை அம்முனிவர் கண்டு, காமவிகாரந் தலைக்கொண்டு, மன்மதனுடைய கருப்புவில்லுக் கிரையாகி மயங்கினர். அதை விபுதையானவளறிந்து, நமது தவம் ஈடேறியதென்று மனமகிழ்ந்து, தானுந் தனது தவத்தைவிட்டெழுந்து, ஞரேலென்று அம்முனிவர் அருகிற்சென்று, வல்லிசாதகக்கொடிபோல நின்றனள். அவளை அம்முனிவர் காணலும், ஓர் சிறிய காட்டினுள் மூண்டிருக்கின்ற கனலோடு காற்றுங்கூடினால் பின்னவ்வழல் யாவையுந்ததிக்க மேலெழுவது போல அவருக்குள்ளே பற்றியிருந்த காமவிகாரமானது அவரினின்று மீறி மேலோங்கித் துன்பஞ்செய்தது. அதன் பேரில் அம்முனிவர் விபுதையைப் பார்த்து, ஓ பெண்கள்நாயகமே- நீ கன்னிகையா ஒருவனுடைய மனைவியா, நீ என்னிடத்திற்குவந்த காரியம் யாதுசொல்லுகவென்று கேட்டனர். அதற்கு விபுதையானவள அவரைப்பணிந்தெழுந்து, சுவாமி-அடியேன் கன்னிகையே, தேவரீர்க்கு அடியேன் மனையாளாகிப் பணிசெய்யும்படியான நன்மையைக்கோரி அளவற்றநாள் தவஞ் செய்துகொண் டிருந்தேன், இப்போது எனது தவம் நிறைவேறும்படியாகத் தேவரீரும் விழித்தருளியதால் இனி அடியாட்குக் கிருபைபுரிய வேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்கம்முனிவர்சந்தோஷித்து, பெண்ணே-நாம்செய்ததவப் பயனே இவ்வாறு நம்மிருவோரையும் பொருந்தக்கூட்டிவைத்ததாதலால், இனி நீ உனது சங்கடங்களையெல்லாம் விடுத்து, ஓர் பெண்ணானையாகவுருக்கொள்ளுகவென்று சொல்லினர். அவ்வாறே அவள்பெண்ணானையாயினள். பின்னர் மரகதமுனிவர் ஆணையாக வுருக்கொண்டு அதனோடு கூடிபபுணர்ந்தனர். அபபோது இரண்டு கொம்பையுடையவனாய், நீண்ட துதிக்கரத்தை யுடையவனாய், மேககர்ச்சனையைப் போன்ற குரலினையுடையவனாய், கஜமுகாசுரன் பிறந்தான். ஓர் சிங்கக்குட்டியானது தாய் வயிற்றினின்று முதிக்கும்போதே யானையினுடைய மத்தகத்திற்பாயந்துபிளப்பதுபோல, அக்கஜமுகாசுரன் தனதுதாயுதரத்தினின்றும்உதித்தபோதே சகலலோகங்களையும் வாரியுண்ணத்தக்க தொழிலைக்கைக்கொண்டவனாய், ஓர் பட்டாக்கத்தியை வீசிக்கொண்டு, பர்வதங்களையெல்லாங் கால்களினா லுதைத்துத்தள்ளியும், கைகளினால் அண்டகடாகங்களைக் குத்தித் தூள்பொடியாக்கியும், சத்தசாகரங்களினும் பாய்ந்து அவைகளைக் கலக்கியும், பத்துத்திசைகளினு மோடி யார்ப்பரித்தும், எங்குங் காற்றுடிபோலப் பறந்து திரிந்துகொண்டிருந்தான். இவனன்றி இன்னுமளவற்ற அசுரவீரர்கள்விபுதையாகியஅப்பெண்ணானையினுடையமயிர்க்கால்களினின்று சர்வாயுதபாணியர்களாயும்அழலைச் சொரியும்படியானவிழிகளை யுடையவர்களாயும்பிறந்து ஆர்ப்பரித்தார்கள். இத்தன்மைத்தானகோரங்களைப்படைத்த பிள்ளைகளை ஆணையாயிருந்த மரகதமுனிவர்பார்த்துப்பயந்து, யாவரும்நல்லதென்று கூறுந் திருப்பாற்கடலானதுஓர்காலத்தில்யாவரும் அறியும்படியாகவிடத்தைக்கக்கியதுபோல, நாம் யாவராலும் புகழத்தக்க தாபதனாயிருந்தும் சகலலோகங்கட்கும் அழியாததுயரத்தை யுண்டாக்கினோமேயென்று கிலேசித்து, மனம்புழுங்கி வாடி, தமது புத்தியைத்தாமே

தேற்றிக் கொண்டு,தம்மைப்பிடியானையாகிக் கூடியவிபுதையைப்பார்த்து நீ யென்ன குலமென்று கேட்டுத் தெரிந்துகொண்டு, அவளைத் தனதுபதியைநோக்கிச் செல்லுமாறு விடைகொடுத்துத்,தாமுன்போலவே தவத்திலிருந்தனர். அவ்விபுதையுந் தானினைத்துவந்த காரியங்கைகூடியதென்னுஞ் சந்தோஷத்துடன் சென்று தன திருக்கையையடைந்தனள். கஜமுகாசுரனும் மற்றவீரர்களும் தேவர்கள் முதலிய சகலசீவராசிகளையுங்கொன்று தின்றுக்கொண்டு,சர்வ சங்காரகாலத்தி லெழுகின்ற ருத்திரமூர்த்தியினுடைய கைக்கு இளைப்பாற்றினார்கள். அதனால் சகல லோகங்களினுந் தருமம் தானம் ஈகை அருள் சீலம் வேதவொழுக்க முதலான எந்தக்கருமங்களு மழிந்துபோய்,இலக்குமி யானவள் எவ்வுலகங்களினும்வசித்தலின்றித்தாமரைப்பூவொன்றினையே இடமாகக்கொண் டிருந்தனள். இவ்வாறு அப்பாதகர்கள் உலகமனைத்தையுங் கனல் பற்றிய காட்டைப்போல நாசமாக்கிக்கொண்டு,இமயகிரியைசசேர்ந்து, அங்கு தவஞ்செய் திருக்கின்ற பெரியோர்களையெல்லாம் உபத்திரஞ்செய்து,யாவரும் இதுதானோ பிரளய காலமென்று சொல்லும்படியாகத திரிந்துகொண் டிருந்தார்கள். அப்போது சுக்கிரனானவன் அவர்கட்குப் பின்னு மேலான காரியங்களை உபதேசிக்கும்படியாக ஆலோசித்துச் சொல்லுவானாகித்,தானும் நாம் பேசுமுன்னமே யென்ன செய்கின்றானோ வென்று பயந்து,கஜமுகாசுரனுக் கெதிரேசென்று, மைந்தனே-நாம் உனது குலத்திற்கு மந்திரியுங்குருவுமாகும், உனது குலத்தை விருத்தி செய்யவேண்டி இப்போது யாம் உனக்கு மேலானவுறுதியைச சொல்ல வந்தோமென்றனன். அதைக் கஜமுகாசுரன்கேட்டு, அவனைப் பணிந்தெழுந்து, சுவாமி - இனி எனக்குச் சொல்ல வேண்டுவது யாதேனுமுண்டாயின் அதனைச் சொல்லி யருளவேண்டுமென்று கேட்டனன். அதற்குமேல் சுக்கிரன் சந்தோஷங் கொண்டு, அன்பனே-யானைமுகத்தோடுங் கூடிய வுனக்கும் உனதுகுலத்தினருக்குந்தேவேந்திரன்பகைவனாயிருக்கின்றான்,அவன்உனது வரலாற்றினைக்கேட்டுச் சகலசேனைகளோடும் வெளிப்படுவானாயின் அப்போது நீ அவனை என் செய்யமாட்டுவை,நீ யாரிடத்திலும் வரங்கள் முதலானவைகளைப் பெறவில்லை,ஆதலால் வேறொருகாரியத்தில் மனதைச் செலுத்தாமல்,இனியேனுஞ் சிவபிரானைநோக்கித் தவஞ்செய், அவருடைய கிருபை உனக்குண்டாயின் அப்போதே எல்லாத் தேவர்களும் உனனை ஏவல்கேட்பார்கள்,நீ நினைத்த காரியங்களெல்லாம் நினைத்த வண்ணமேகை கூடும் உனது சரீரமானது எக்காலத்தும் வலிபெற்றிருக்கும்,துன்பங்களனைத்து நீங்கும்,இதைச் சத்தியமாக நம்பக்கடவையென்று சொல்லினன். இவவாறு இதமான காரியங்களைக் கூறிய தனது ஆசிரியனைக் கஜமுகாசுரன் மீட்டும் பணிந்தெழுந்து, பலமுறை துதிசெய்து,தவத்தின் மீதுண்டான இச்சையினால் உடனே விடைபெற்றுத்,தனது தம்பியர்கள் புடைசூழும்படியாக மகமேருகிரியின் ஓர் பககத்திலிருந்து, ஆயிரம்வருடஞ் சருகுகளைப் பக்ஷித்துக்கொண்டும்,ஆயிரவருடஞ் சலபானஞ்செய்துகொண்டும்,ஆயிரவருடம் வாயுபக்ஷணஞ் செய்துகொண்டும், ஆயிரவருடம்யோகாமிர்தம் புசித்துக்கொண்டும்,இவ்வாறு நாலாயிரவருடம் அகோரமாகிய தவத்தைச்செய்தனன். அத்தவத்திற்குச் சிவபிரான்கிருபைசுரந்து,அ

வனெதிரிற் பிரத்தியக்ஷமாகி,உனக்கு வேண்டிய வரங்களைக்கேளென்று திருவாய் மலர்ந்தனர். உடனே கஜமுகாசுரன் பணிந்தெழுந்து, ஆனந்த பரவசங்கொண்டு,இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி, சுவாமி-விண்டுமுதலிய உயர்திணைகளினாலும்,பானை முதலிய அஃறிணையினாலும், அத்திர சத்திரங்கள் முதலிய வாயுதங்களினாலும்,அடியேன் எக்காலத்து மழிவில்லாமலிருந்து,தேவர்கள் முதலாயினோர் இரவும்பகலு மடியேனை யேவல் கேட்டு நடந்துகொள்ளும்படியாய் அரசாக்ஷிசெய்யவேண்டும்,ஒருவேளை சுவாமிகளுடைய கிருபையினால் அடியேற்கு முடிவு நேருமாயின், அப்போது அடியேன் மேன்மை பெற்றிருக்கும்படி வரங்கொடுத்தருள் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அவ்வாறே சிவபிரான் அவனுக்கு வரங்களைக்கொடுத்தருளி அந்தர்த்தானமாயினர். அப்பால் கெஜமுகாசுரன் தனது தம்பியர்களோடு அவ்விடத்தினின்று நீங்கித், தனதிருப்பிடத்திற்கு வந்து விட்டனன். அப்போது அசுரேந்திரனும் சுக்கிரனும் அவனிடத்தில் வந்துகலந்தார்கள்.தேவதச்சனானவன் அவ்விடத்தில்சகலவளங்களோடும் ஓர் நகரமுண்டாக்கி,அதற்கு மதங்க நகரமென்று பெயரிட்டுக் கொடுத்தான்.அந்நகரத்தில் கஜமுகாசுரனிருந்து,திரிலோகங் களினுங் கொடுங்கோல்செலுத்தித், தேவர்கள்முதலியயாவருந்தன்னைவணங்கும் படியாக அரசாட்சிசெய்து வந்தனன். கச்சபநிதி- கற்பநிதி- சங்கநிதி - பதுமநிதி-நந்தநிதி-நீலநிதி-மகாநிதி-மகாபதுமநிதி-முகுந்தநிதி-என்கின்றநவநிதிகளும்,அரிச்சந்தனம்-கற்பகம்-சந்தானம்-பாரிசாதம்-மந்தாரம்- என்கின்றபஞ்சதாருக்களும்,காமதேனுசிந்தாமணிமுதலியனவும் அம்மதங்க நகரத்தை யடைந்து பணிசெய்திருந்தன.இந்திரன் முதலிய தேவர்களும் கிரீடாதிபதிகளான ராசர்களும் மிகுந்த பயபத்தியுடனே தினந்தோறும்வந்து அவனைப்பணிந்து ஏவல் செய்துகொண்டு எல்லா இறுமாப்புகளையுமொழிந்திருந்தார்கள். சுக்கிரனும் அசுரேந்திரனும் அவனுக்கு அமைச்சரானார்கள். பின்னர் கஜமுகாசுரனானவன் தனது குலத்திலும் தேவர் குலத்திலும் நாகர்குலத்திலுமுள்ள மிக்க அழகான ஸ்திரீகள் அநேகம் பெயரைக் கலியாணஞ் செயதுகொண்டு,சகலபோக பாக்கியங்களையுங் குறைவறவநுபவித்துத்,திரிலோகங்களினுங்கொடுங்கோல்செலுத்தி வருகின்ற நாளையில்,ஓர்நாள் தன்னைப் பிரதிதினம் பயபத்தியோடும் பணியவருகின்ற தேவர்களை அப்பாதகன்பார்த்து,ஓவிண்ணவர்களே-இன்றுமுதலாக நீங்கள் நம்மைப்பணிய வருகின்ற போதெல்லாம் இருகரங்களையு முட்டிபிடித்து,மூன்றுதரம் சிரசில் குட்டிக்கொண்டு, பின்னர் அக்கரங்களை மாறிச் செவிகளைப்பிடித்துத் தோப்புக் கரணம்போடக்கடவீர்கள். இதுவே நீங்கள் நமக்கு இட்டமாகச் செயயத்தக்க வணக்கமென்று ஆக்கியாபித்தனன். அன்றுமுதல் தேவர்கள் யாவரும் அவ்வாறே செய்து வந்தார்கள்.மனதில் எவ்வளவேனுந் தயையில்லாமல் தேவர்களை ஏவல்செய்வித்து வந்த கஜமுகாசுரனுடைய பிறப்பும் அவனுக்குப் பாக்கியம்வந்த வரலாறும் இதுவாகும்.இத்தன்மைத்தான கொடும்பாவியை ஓர் நிமைப்போதில் வென்ற கணபதிமூர்த்தியினுடைய திருவவதார மகிமையைக் கூறிய இச்சரித்திரத்திரத்தைப் பிரதிதினம் பாராயணஞ் செய்வோர்கள் சகல வரிட்டங்களினின்று நீங்கி மெய்ஞ்ஞானசுகத்தை யடைவார்கள்.

கணபதிதுணை.

பத்தாவது,

மகோற்கடர் திருவவதாரப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே, விநாயகமூர்த்தியானவர் கணபதி திருவதாரங்கொண்டு,தேவர்களை வருத்திய கஜமுகாசுரனைக் கொன்று,விண்டுவினுடைய சாபத்தைத்தீர்த்தருளிய திருவிளையாடலைச் சொன்னோம். இப்பால் மகோற்கடர் திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளை யாடலைச்சொல்லுவோங் கேட்பீராக. தாமரைத்தடாகங்களுங்குடிவளப்பமும் வயற்செழுமையுஞ் சிறந்து விளங்கியிருக்கின்றஅங்கதேயத்தில்,சகலசெலவங்களையும் பெற்றோங்கிய காத்திரமென்னு மோர்பட்டணமுண்டு. அப்பட்டணத்தில் குடிசெய்திருக்கின்ற அந்தணர்கட்குள்,வேதமுதலியசாத்திரங்களை யாரய்ந்துணர்ந்த உள்ளத்தினனாய், போகபாக்கியங்களில் இச்சைவையாது யாகாதிகளைச் செய்கின்றவனாய், இரவுத்திர கேதுவென்னும் பெயரினையுடைய ஓரந்தணனிருந்தனன். அவனுக்குக் கற்பினும்அழகினும் அருந்ததியையும் இரதியையும் நிகர்த்தசாரதையென்னும் பெயரினையுடைய வோர்மனைவியிருந்தனள். இவ்விருவர்களும் உடலுமுயிரும் போல மருவி வாழ்ந்திருக்கின்ற நாளையில்,அவர்கட்குஇரட்டைப்பிள்ளைகள் பிறந்தார்கள். உடனே தந்தையாகிய இரவுத்திர கேதுவானவன் அவர்கட்குச் செய்யவேண்டிய கருமங்களைச்செய்து நிறைவேற்றி,ஓப்பற்ற கணிதர்களைக்கூவி,திதியாதி நிலைகளை யாராய்ந்து,தேவாந்தக னென்றும் நராந்தகனென்றும் நாமகரணஞ் செய்தனன். தாயாகிய சாரதையும்அவர்களை ஆட்டியும் ஊட்டியும் அன்போடு வளர்த்து வந்தனள். இவ்வாறு இருவரும் பாராட்டிவர,அப்பிள்ளைகள் நாளுக்குநாள் வளர் பிறையைப் போலத் தொட்டிலில் வளர்ந்து கொண்டிருக்கும்போது, சின்னாள் விண்ணுலகைப் பகைப்பவர்போலமல்லாந்து ஆகாயத்தைப்பார்த்தும்,சின்னாள்பாதலத்தைக்கொள்வார்போலக்கவிழ்ந்துநிலம்பார்த்தும்,சின்னாள் அறங்களெல்லாந் தழைத் திருக்கும்படியாக வுட்காந்தும், சின்னாள் மறங்களனைத்தும் வளர்த்தோங்கும்படியாக வெழுந்தும்,சின்னாள் நல்லோர்களுடைய செம்மையெல்லாம் புறங்கொண்டு செல்வதாக நடந்தும், சின்னாள் எங்குஞ் செயிர்விளையாடும்படியாகத் தெருக்களில் விளையாடியுமிருந்தார்கள், இவ்வாறு இவர்கள் மல்லாந்துங் கவிழ்ந்தும் இருந்தும் எழுந்தும் நடந்தும் விளையாடியும் இருக்கின்ற காலத்திற்றானே பாரித்த சரீரத்தை யுடையவர்களாகித்,தங்கள்டிகளைப் பெயர்த்து வைக்குந்தோறும் பூமியைத் தாங்கிநின்ற ஆதிசேடன் நெளியவும்,தாங்கள் குதித்து விளையாடுந்தோறுந் தங்கள் முடிபட்டு உடுக்களுதிரவுமாக விருந்தார்கள். அவர்கட்கு ஆறும்வயதில் இரவுத்திர கேதுவானவன் உபநயனஞ் செய்வித்து வேதாசமாதிகளையும் ஓதுவித்தனன். அவர்களும் அவைகளைத் தெளிவுபெறவோதித்,தமது தந்தையினும் பதின்மடங்கு அதிகமானார்கள். அக்கா

லத்தில் ஓர்நாள் நாரதமுனிவர் அவ்விடத்தில்வர,அவரை இரவுத்திர கேதுவும்சாரதையும் எதிர்கொண்டழைத்துவந்து,ஓராதனத்திலிருத்திச்,சாஷடாங்கமாகப் பணிந்தெழுந்து,அளவற்ற தோத்திரங்களைச் செய்து,பற்பல உபசார வார்த்தைகளைப்பேசித்,தமது புத்திரர்களாகிய தேவாந்தகனையும் நராந்தகனையும் அழைத்து, அவர்கள் நாரதமுனிவரைப் பணியச்செய்து, சகலவான்ம கோடிகட்கு நன்மையை விளக்க வெழுந்தருளிய கிருபாநிதியே-இப்புத்திரர் கட்குப் பூரணாயுளுஞ் செல்வமுங் கிடைக்கும்படியாகத் தேவரீருடைய அமிர்தவாக்கினால் ஆசீர்வதிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கு அம்முனிபுங்கவர் கிருபைசுரந்து, தம்மைப் பணிந்திருக்கின்ற பிள்ளைகள் இருவோரையுந் தமது மடித்தலத்தி லெடுத்துவைத்துக் கொண்டு, உச்சிமோந்து, சரீரமுழுவதுந் தடவி மீட்டுங் கீழேவிடுத்து, அவ்விருவர்க்கும் ஸநானஞ்செய்வித்து,விதிப்படி தீட்சைபுரிந்து,பஞ்சாக்கர வுபதேசஞ்செயது, அதைசசெபிக்க வேண்டிய முறைமையினையுங் கூறி மைந்தர்களே-இன்றுமுதல் இம்மகாமந்திரத்தைச் செபஞ்செய்து வருவீர்களாயின். உங்கட்குச் சிவபிரானுடைய கிருபையினால் யாதொரு தீங்குநேராது, சகலசித்திகளுங் கைகூடும்,தேவர்களெல்லாம் உங்களைப்பணிவார்களே யன்றி நீங்களவர்களைப் பணியாதிருக்கத்தக்க யோக்கியம் உங்கட்குண்டாகு மென்று அநுக்கிரகஞ்செய்து போயினர். அதற்குமேல் அப்புத்திரர்கள் சகல செல்வங்களையுந் தவஞ் செய்து பெறவேண்டு மென்று ஆலோசித்து, உடனே தாய் தந்தையரைப் பணிந்து விடைபெற்றுப், பல விருக்கங்கள் மலிந்திருக்கின்ற ஓர்வனத்திற் சென்று,அவ்வனத்தி னடுவில் ஓர் சோலையும்-அச்சோலை மத்தியில் ஓர்தடாகமும்-அத்தடாகத்தி னருகில் ஓர் சிவாலயமுமிருக்கக் கண்டு,அச்சிவலாயத்தி லெழுந்தருளி யிருக்கின்ற சிவலிங்கத்தைப் பூசைசெயது,ஓர் காற்பெருவிரலை நிலத்திலூன்றிப், பஞ்சேந்திரியங்களையுமடக்கி,நான்மருங்கினும் அக்கினியை வளர்த்து, ஆயிரம் வருடம் ஒருபொழுது அன்னமுண்டும், ஆயிரம்வருடம் தண்டுகளைப் புசித்தும், ஆயிரம் வருடம் கிழங்குகளை யருந்தியும், ஆயிரம்வருடம் இலைகளை மேய்ந்தும், ஆயிரம்வருடம் கனிகளைநுகர்ந்தும், ஆயிரம்வருடம் காய்களைக் கறித்தும், ஆயிரம்வருடம் சருகுகளை அயின்றும், ஆயிரம்வருடம் சலபானஞ்செய்தும், ஆயிரம்வருடம் வாயுபக்ஷணஞ்செய்தும், ஆயிரம் வருடம் நிராகாரமாயிருந்தும், இவ்வாறு பதினாயிரம்வருடம் சூரியனைப் பார்த்துக்கொண்டு அருமையான தவஞ்செய்தார்கள். அத்தவத்திற்கு அருட்கடலாகிய சிவபெருமான் கிருபைசுரந்து, அவர்கள் தம்மைஎவ்வாறுதியானித்தார்களோ அவ்வாறே நீலகண்டமும்-ஐந்துமுகமும்- பத்துக் கரங்களும்- பதினைந்துவிழிகளும்- சடைமுடியில் மூன்றாம்பிறைச் சந்திரனும்-விளங்கும்படியாக,உமாதேவி சமேதராய் இடபவாகனத்தை யூர்ந்து, அளவற்ற சிவகணங்களுந் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோரும் புடைசூழ அவர்களெதிரே பிரத்தியக்ஷமாயினர். உடனே அவர்கள் கர்த்தனுடைய திருவுருவங்களைத் தியானித்தவாறே தரிசித்து,அடியற்றபனைபோலச சாஷ்டாங்கமாக விழுந்தெழுந்து,பன்முறைவலஞ்செய்து நின்று,இருவிழிகளினும் ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து,உடல் முழுவதும் உரோமா

ஞ்சிதம் பூத்து,நெக்குவிட்டு,நெஞ்சமுருகிச்,கரங்களைச்சிரமேற்கூப்பி, சாமவேதங்களினால் அளவற்ற தோத்திரங்களைச் செய்தார்கள். இவ்வாறு அவர்கள் வரம்பற்ற அன்போடு செய்த துதிகட்குச் சிவபிரான் சந்தோஷித்துத் தமது கிருபாநோக்கத்தா லவர்களைப்பார்த்து, அன்பர்களே-நீங்கள் கருதியவரங்களைக் கேளுங்களென்று திருவாய்மலர்ந்தனர். அதை அவ்விருவர்களுங்கேட்டு ஆனந்தித்துத்,தங்கள்திடசித்தத்திலும் ஆலோசித்து, சுவாமி- இருவகைப் பொழுதினாலும் இருவகைத்திணையினாலும் இருவகைப்படையினாலும் அடியேங்கள்இறுதியில்லாமலிருக்கவும்,பிரமன் விண்டு முதலிய தேவர்கள் அடியேங்களிட்ட பணிகளைச்செய்யும்படியான செல்வமும் கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச சிவபிரான் கிருபையோடும் அவர்களைப்பார்த்து, ஓ சிறுவர்களே விநாயகமூர்த்தியினுடைய திருக்கரத்தாலன்றி ஏனையோரால் உங்கட்கு நிரியாணமில்லையென்று திருவாய்மலர்ந்து,அவர்கள் கோரியமற்றவரங்களையுந் தெய்வப்படைகளையுங் கொடுத்தருளி அந்தர்த் தானமாயினர். பின்னர் அவ்விருவர்களும் அளவற்ற மகிழ்ச்சியோடு தங்கள் பட்டணத்திற்குச்சென்று, தாய் தந்தையரைப் பணிந்தெழுந்து, தாங்கள்பெற்றுவந்த வரங்களையெல்லாம் அவர்கட்குக் கூறிச,சிலநாள் ஆமோதையுற்றிருந்து, அதற்குமேல் திரிலோகங்களையும் ஆள வேண்டுமென்று இச்சைகொண்டு,திதிவாரநட்சத்திர யோககரண முதலியவைகள்சுபமாயிருக்கின்றவோர்நாளை ஆராய்ந்து, அந்நாளில்நித்தியவிதிகளைமுடித்து, நெய்யுங்கண்ணாடியும்பார்த்து,வேதியர்கட்கு அளவற்றதானங்களைக்கொடுத்து,அவ்விருவர்களில்மூத்தவனான தேவாந்தகனானவன்நராந்தகனையழைத்து, தம்பி- நீஇப்பூவுலகத்தையும் பாதலலோகத்தையும் உன்வயப்படுத்தி அரசாட்சிசெய்துகொண்டிரு,யான் தெய்வலோகமுழுவதும் வயப்படுத்தித்தேவர்களையெல்லாம் பணிகொள்கின்றேனென்று சொல்லி,அவனிடத்திலுந் தனது தாய் தந்தையரிடத்திலும் விடைபெற்றுச், சிவத்தியானஞ் செய்துகொண்டு ஆகாயமார்க்க மாகச் சொர்க்கலோகத்திற்குச் சென்று, அமராவதி பட்டணத்திற்கு வெளியேயிருக்கின்ற கற்பகச்சோலையைக் கையாலுங் காலாலுந் தள்ளிப்புதைத்து அல்லோலகல்லோலப் படுத்தினான். அதை அங்கிருந்தோர்களிற் சிலர் பயந்தோடித் தேவேந்திரனைப்பணிந்தெழுந்து, ஆண்டவனே- இதோ ஓரவுணன்வந்து நமது கற்பகவனத்தை யழிக்கின்றானென்று அறிவித்தார்கள். அதைக் கேட்டதும் இந்திரனுக்கு மிகுந்த கோபமுண்டாகித்,தனது சேனைத்தலைவர்களைக் கூவி, நமதுகற்பகவனத்தை ஓரவுணன்வந்து அழிக்கின்றானாம்,நீங்களிந்நிமிஷத்தில் அங்கு சென்று, அவ்வவுணனைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வந்து யானையின்காலில் இடறுவிக்கக் கடவீர்களென்று ஆக்கியாபித்தான். அவர்களும் அதற்குடன் பட்டுத்,தங்கள் தங்கள் சேனைகளோடு வெளிக்கொண்டு,தேவாந்தகனை வளைத்துச் சமர்செய்தார்கள். அப்போது சிவானுக்கிரகத்தால் மேலான பராக்கிரமத்தினை யடைந்திருக்கின்ற தேவாந்தகன் அதிககோபங்கொண்டு,யானைக்கூட்டத்துள் ஒண்டிச்சிங்கம் புகுந்தது போலத் தேவசேனைகளிற் புகுந்து, விமானங்களைத் தூக்கி விமானங்கள் மீதெறிந்தும்,ரதங்களைத்தூக்கி ரதங்கள்மீது வீசியும், யானைகளைத் தூக்கி

யானைகள்மீது எற்றியும், குதிரைகளைத்தூக்கிக் குதிரைகளின்மீது விடுத்தும்,பதாதிகளைத்தூக்கிப் பதாதிகள்மீது தாக்கியும், இவ்வாறு காலாந்தகருத்திரனைப்போல நிமைப்போதில் நால்வகைச் சேனைகளையும் அதப்படுத்தி, அச்சேனைகட்குத் தலைவராகவந்த வீரர்களை யெல்லாங் காலினுலுதைத்துங்;கையினுலடித்தும், அனலெழும்பக்கண்களைவிழித்தும்,பெருமூச்செறிந்தும், ஆர்ப்பரித்தும்,நகைத்தும்,குனித்தும்,தோள்களைத்தட்டியும் உலாவியும்,நிமிர்ந்தும்,சின்னபின்னப்படுத்திவிட்டனன்.இச்சம்பவத்தை இந்திரன் கேள்வியுற்று,வடவானலத்தைப் போலக் கொதித்தெழுந்து, பின்னும் அளவற்ற சேனைகளோடு தனது அயிராவதத்திலேறித் தேவாந்தகனைநோக்கிச் சென்றனன். அத்தேவாந்தகன் இந்திரனையும் அவன் சேனைகளையும் பார்த்தமாத்திரத்தில்,ஓர் மங்கையானவள் ஓராடவனைக் கண்டு வலிதிற்கூடவந்தால் அவ்வாடவனுக்கு எவ்வாறு காமக்கனல் அதிகரிக்குமோ அவ்வாறு அவனுக்குக் கோபக்கனலதிகரித்து, மந்திரகிரியையொத்துப் பாரித்திருக்கின்ற தனது கொடுமரத்தைஇருகுதைகளும்பொருந்தவளைத்து, ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினுயிரமென்னுங் கணக்கினு மதிகமாக அளவற்ற திவ்வியபாணங்களைக்கோடைமழைபோலப்பொழிந்து, ஓர் கணப்போதில் இந்திரனுடைய சேனைகளையெல்லாங் கொன்றனன். அதை இந்திரன்பார்த்து, ஆலகாலம்போலக் கொதித்து,தனது ஐராவதத்தை விரைவில் முடுக்கிச்சென்று,வச்சிராயுதத்தினுல் தேவாந்தகனுடைய மார்பில் இடிபோலப்புடைத்தான். அப்போதவ் வச்சிராயுதமானது கருங்கற்பாறைமீதறைந்த அல்லிக்கொடியைப்போலப் பொடிப்பொடியாய்ச் சிதறிப்போய்விட்டது.இவ்வாறு வச்சிராயுதஞ் சிதறிப்போகலும்இந்திரனுனவன்தனது அயிராவதத்தைக்குனித்துக்,கொம்பினுல்அவன்மார்மைப் பிளக்கும்படியாகமுடுக்கினுன்.அஃது அவ்வாறேகுனிந்து தனதுமார்புக்குநேராகவருதலுந்,தேவாந்தகன்ஓரறையினுல்அதனுடைய வீறுப்பையடக்கி,மற்றோரறையினுல் இந்திரனுடையபற்களெல்லாம்பலபலவென்றுஉதிரும்படியாகக்கன்னத்திலேபுடைத்தான்.உடனேஇந்திரன் அவ்வடியைத்தாளமாட்டாமல்கீழேவிழுந்துமூர்ச்சையாகிப்,பின்னர் தெளிந்தெழுந்து,இனியாம் இங்கு நீடித்திருந்தால் இப்பாதகன் அரைக்கணத்தில் நம்மைக் கொல்லுவானென்று பயந்து கரந்தோடி,மகமேருகிரியிலிருக்கின்ற ஓர் குகையில் ஒளித்துத் தவஞ்செய்துகொண்டிருந்தான். பின்னர் இச்சம்பவத்தை இந்திராணியும் மற்றத்தேவர்களுங்கேட்டுப்பயந்து, அவர்களும் அவ்வாறேசென்று அம்மலைக்குகைகளி லொளித்துக்கொண்டார்கள். சொர்க்கலோகமனைத்துங் கலங்கின. அதற்குமேல் தேவாந்தகன் செயபேரிகையறைவித்து, இந்திரனுடைய அயிராவதத்திற்முன் ஆரோகணித்து, இராசவீதிகளை வலமாகவந்து, சுதன்மையி லிருக்கின்ற சிங்காதனத்தில் ஒற்றைக்குடையின் கீழிருந்து,இருமருங்கினும் வெண்சாமரைகள்வீசவும்,தேவர்கள் யாரும் பணிந்து தோத்திரஞ்செய்யவும்,அரம்பையர்நடமாடவுமான கோலத்துடனே கொலுவிருந்து,தேவேந்திரனைப் பார்க்கினும் பதின்மடங்கு அதிகமாகயான் உங்களை யெல்லாங் காப்பாற்றுகின்றேன், என்னைச் சத்துருவென்றெண்ணி நீங்கள் நலியவேண்டாம்; யாவரும் பழையபடி அவ்வவர்கள் யதாஸ்தானத்தை யடைந்துகளித்

திருக்கக் கடவீர்களென்றுசொர்க்கலோகமெங்கும் களி தூங்கும்படியா கச்சொல்லி முரசறைவித்தான். அதையாவருந் திண்ணமாகநம்பித் தத்த மிருக்கையை யடைந்தார்கள்.பின்னர் தேவாந்தகனனவன் அவ்வாறடைந்தவர்களிடத்தில்கிருபையும் அடையாதவர்களிடத்தில் கொடுமையும் வழங்கி,முன்னர்யுத்தகளத்தில் உடைந்துசென்றதேவசேனைகளையும்,மிகவும் வருந்தி வாட்டமுற்றிருக்கின்ற அவ்வவர்கள் மரபினரையும், சிலவியவர்களை ஏவி வரவழைத்து, அவர்கட்குப்பல ஆதரவுகளையுஞ் சந்தோஷத்தையுஞ் செய்து, தனதருகிற்சூழ்ந்திருக்கின்ற அவுணர்களையுங்காத்து,அவ்வவர்கட்கேற்ற சில அதிகாரங்களைக் கொடுத்து, சிவபிரான்கொடுத்தருளிய மெய்யானவரத்தை விளக்கினவனாய்ப்,பின்னர் அவ்விடத்தினின்றும் படையெடுத்து, சத்தியலோகத்தையும் வைகுந்தத்தையு நோக்கிச்சென்றனன். அவன் வரவையும் அவன்பெற்றிருக்கின்ற வரங்களையும் பிரமனும் விண்டுவுமறிந்து, நாம் அவனேடு எதிர்த்துயுத்தஞ்செய்வதில் அநுகூலமில்லையென்று நிச்சயித்து,அவ்விடங்களினின்றும் ஓடி மறைந்திருந்தார்கள். பின்னர் படையெடுத்துவந்த தேவாந்தகன் அவ்விரண்டுலோகங்களினும் உடையவர்க ளில்லாமையைக்கண்டு. அவ்விடங்களிலிருந்த பாக்கியங்களை யெல்லாங் கைக்கொண்டு, அவ்வுலகங்களை அவுணர்களாற் பாதுகாத்துவரக்கட்டளையிட்டு,மீட்டும்சுவர்க்கலோகத்திற்குவந்து,அதையேதனக்கு உறைவிடமாகக்கொண்டு,சகலசந்தோஷத்துடன் அரசாக்ஷியினை நடாத்திவந்தனன். அவன் தம்பியாகிய நராந்தகனும் பூவுலகத்திலிருக்கின்ற அரசர்களில் எதிர்த்து வந்தவர்களை எமலோகத்திற் சேர்த்துப்,பணிந்து வந்தவர்களிடத்திற் பகுதிவாங்கி ஆதரித்து, எல்லராச்சியங்களையுந்தன்வயப்படுத்தித்,தன்னேடுசெயவுசசாகத்துடன் குலாவி யிருக்கின்ற அவுணர்கட்கெல்லாஞ் சந்தோஷஞ் செய்வித்து, அவர்களை யழைத்துக் கொண்டு நாகலோகத்திற்குச் சென்றான். அப்போ தவ்வவுணர்கள் தங்கள் மாயையினுற் கருடரூபங்கொண்டு, அவ்வுலகத்தி லிருக்கின்ற நாகர்களையெல்லாம் பிடித்துப் பிடித்து விழுங்கினார்கள். அதை நாகராசனாகிய ஆதிசேடனறிந்து,நாம் இவர்களோடு எதிர்த்து யுத்தஞ்செய்வது சரியல்லவென்று தீர்மானித்துத்,தனது நகரத்திலுள்ள நாகரத்தினமுதலிய திரவியங்களை யெடுத்துக் கொண்டுவந்து, நராந்தகனெதிரில் வைத்து வணங்கினன். அத்திரவியங்களை அப்பாதகன்கைக்கொண்டு, தன்னைவணங்கிய ஆதிசேடன்மீதுசிறிதுங்கிருபைசெய்யாமல் அவனைசசிறையில்வைத்து, அவனுடையஅரண்மனையினும்மற்றவிடங்களினுமுள்ளபொருள்களையெல்லாங் கொள்ளையிட்டு,ஓரவுணனுக்கு அவ்வுலகத்தை யாளும்படியாக அதிகாரங்கொடுத்து,மீட்டும் பூலோகத்திற்குவந்து, முனிவர்கள் முதலாயினோரைத் தேவர்கட்கு அவிற்பாகந் தரவொட்டாமல் சிறைப்படுத்தி அரசாக்ஷிசெய்துவந்தான். இவ்விருவர்களுடைய பராக்கிரமத்திற்குஇவர்கள் பிதாவாகிய ரவுத்திரகேது சந்தோஷித்து, தனது குலத்தில் அழகிற்சிறந்திருக்கின்ற பெண்களை விவாகஞ்செய்வித்தனன். பின்னர் அப்பெண்களை அவ்விருவர்களுங் கூடிப், பலகொடுமையான புதல்வர்களைப்பெற்றுச் சகலபோகபாக்கியங்களையுங் குறைவற வநுபவித்துக்கொண்டு வந்தார்கள். இவ்வாறுராக்ஷசகுலமேமேலிட்டுத்,தேவர்குலங்கீழிட்டுப்போகலுந், திரியா

னவள் நாளுக்குநாள் மேலான மகிழ்ச்சிபெற்றுவாழ்ந்திருந்தனள். அதிதி யானவள் நாளுக்கு நாள் குழைந்து மிகவுந் துயரமடைந்து, தனது நாயகராகிய காசிபரைப்பணிந்தெழுந்து, இதனைமுறையிடுவ தாயினள். சுவாமி-தேவரீருடைய கிருபையினால் அடியாளீன்றுவைத்த சொர்க்காதிபதியாகிய இந்திரன் முதலிய தேவர்களையெல்லாம் தேவாந்தகனென்று நராந்தகனென்றுஞ் சொல்லாநின்ற இரண்டவுணர்கள் அளவற்ற துன்பங்களைச்செய்து வருத்துகின்றார்கள், அவ்வருத்தத்தை அவ்விந்திரன் முதலிய தேவர்கள் சகிக்கமாட்டாது பலதிசைகளினு மோடிப்பதுங்கியிருக்கின்றார்கள், அவர்கட்கு அவிர்ப்பாகமுதலிய வைகளையுங் கொடுக்காதபடி முனிவர்கள் முதலாயினோரைச் சிறைப்படுத்தியிருக்கின்றார்கள். சுவாமிகள் திருவுளத்திற்கு யாவுந்தெரிந்திருக்கலாம், ஆதலால் தேவரீர் அடியாள்மீது கிருபைகூர்ந்து அபபாதகர்களை யழிக்கத்தக்க ஓர்பராக்கிரமமுள்ள புத்திரனை இத்தினமே அடியாட்குத் தரல்வேண்டுமென்று பிரார்த்தித்தனள். இவ்வாறு பிரார்த்தித்த அதிதியைக் காசிபர்பார்த்துத்,தமக்கு முன்னொருபோது விநாயகமூர்த்தி கொடுத்தருளியிருக்கின்ற வரத்தையும் யோசித்துப், பெண்ணே- மிக்கபராக்கிரமசாலிகளாகிய தேவாந்தகனும் நராந்தகனுஞ் சிவபிரானைநோக்கித் தவஞ்செய்து, ஒருவராலும் அழியாத மேலானவரங்களைப் பெற்றிருக்கின்றார்கள், ஆதலால்-மலவிருளோடுங்கூடிய ஆன்மாக்களைப் புனிதமாக்கும்படி பஞ்சகிருத்தியங்களை நடாத்துகின்றகடவுளாய்ப்,பரப்பிரமமென்று சொல்லுகின்றவோர்பொருளாய்,எக்காலத்துந் தனிமுதலாய்,மேலான தத்துவ மூர்த்தியாய, அடுத்தோர் கட்கெல்லாம் ஆனந்தபதவியைக் கொடுக்கத்தக்க பசுபதியாயிருக்கின்றகர்த்தர்யாரோ,அவரே அல்லல்மிகுந்த துக்கசாகரத்துள் அழுந்திக்கிடக்கின்ற நம்போலிகட்கு அவற்றினின்று நீக்கி மேலான சுகக்கரையிலேற்றி வேண்டியவரங்களைக் கொடுத்தருளும்படியாகத்,தமதுவரம்பற்ற பெருங்கருணையினால் விநாயகரென்று சொல்லப்படுகின்ற ஓர் பெரியதிருநாமத்தைத் தரித்துக்கொண்டு, அற்பவுயிர்களெல்லாம் ஆனந்தத்தை யடையும்படியாய்க் கசானனமூர்த்தியா யெழுந்தருளியிருக்கின்றார். அத்தன்மைத்தான மேலானமூர்த்தியே நமக்குப்புத்திரனாக வடுத்தாலல்லாமல்,உனது சிந்தையுளுண்டாயிருக்கின்ற துயரத்தைநீக்கிச் சந்தோஷத்தைக்கொடுக்கத்தக்கவர்கள் எந்தவுலகங்களினுமில்லை,வேதாகமமுதலியவைகளாலளவிடுதற்கரிய அம்மூர்த்திநமக்குப்புத்திரனாக வரத்தக்க மார்க்கத்தினையுஞ் சொல்லுவோங் கேள், அம்மூர்த்தியானவர் தம்மைத்தியானிக்கப்படுவார் தியானிக்குமுன்னம் அவர்கள் உள்ளத்தையே கோயிலாகக்கொண்டு வீற்றருளுகின்ற பெருங்கருணையையுடையவ ராதலாலே, அவருடைய திருவடிகளை மனதிற்றியானஞ்செய்து, அவரது திருமந்திரத்தையுஞ் செபித்துப் பூசித்தால், உடனே அவர் புத்திரனாகவந்தருளுவர்,ஆதலால் இன்றுமுதல் நீஅவ்வாறே செய்துவரக்கடவையென்றுசொல்லிப், பிரணவபல்லவத்தோடு நமோநந்தத்தோடும் பஞ்சாக்ஷரத்தை யுபதேசஞ்செய்து, அதை யநுட்டிக்கத்தக்க முறைமையினையுங் கூறினர். அவையனைத்தையும் அதிதியானவள் மிகுந்தபத்தியோடுங் கேட்டு, மிக்கபசி யடைந்தோர்க்குத் தேவாமிர்தங்கிட்டத்ததுபோல மனமகிழ்ந்து, அதற்குமுன்னி

ருந்த துயரங்களைநீக்கித், தனது நாயகரிடத்தில் விடைபெற்று அவ்விடத்தினின்று நீங்கி, ஓர்வனத்திற்சென்று,ஐம்பொறிகளையுமடக்கி,ஆகாரமுதலியவைகளை நீத்து,விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளை மனதிற்றியானித்து, அவரது பஞ்சாக்கரமந்திரத்தை அநுட்டிப்போடு செபஞ்செய்து கொண்டு, நூறுவருடந் தவத்திலிருந்தனள். இவ்வாறு சரீரமுழுவதும் வாட நெடுநாள் தவஞ்செய்திருக்கின்ற அதிதியின்மீது விநாயகமூர்த்தி கிருபைசுரந்து, கோடிசூரியர்களுங்குருட்டடையும்படியானதேஜஜோடு செபமாலிகையும் பத்துத்திருக்கரங்களுங்கொண்டு, நுதலிற்கத்தூரிப்பொட்டும் சடையில் மூன்றாம்பிறைச்சந்திரனும் விளங்கச் சிங்கவாகனத்தின்மீதுபிரத்தியக்ஷமாயினர். உடனே அதிதியானவள்விழித்தெழுந்து, தன் பெண்மையினால் சுவாமியினுடைய பிரகாசத்தைப் பார்க்கப்பயந்து விழித்தவிழிகளை மீட்டு மூடிக்கொண்டு,கர்த்தனே- தேவரீருடையபிரகாசத்தைப்பார்க்க அடியேனுடைய விழிகள் கூசுகின்றமையால், இனிசாந்தவுருவோடு காக்ஷிகொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதை விநாயகமூர்த்திகேட்டு,உடனே மிகுந்த மனமகிழ்ச்சியோடு சாந்தரூபமாயினர். பின்னர் அத்திருவுருவினுடைய வனப்புக்களை அதிதியானவள் தனது கண்குளிரக்கண்டு,மிக்கசந்தோஷத்துடன்பணிந்தெழுந்து,பலமுறை வலம்வந்து,அளவற்ற தோத்திரங்கள் செய்து,இருகரங்களையுங்கூப்பி எதிர்நின்று.ஓதயாநிதியே- முனிவர்களையுந் தேவர்களையும் ஒடுக்கி எக்காலத்தும் இழுக்கினைச்செய்துவருகின்ற அரக்கர்களையுந் தைத்தியர்களையுந்துணைக்கொண்டு,தேவாந்தகனென்றும்நராந்தகனென்றும் இரண்டவுணர்கள் அரசியற்றிவருகின்றார்கள்,அவர்களைச் சங்கரித்துத்திரிலோகங்களினுமுள்ள துன்பங்களை நீக்கும்படியாகத் தேவரீர் ஒருபுத்திரராக அவதரித்தருள வேண்டுமென்றுபிரார்த்தித்தனள். அதற்குமுன்னமே அவள் கணவனாகிய காசிபருக்கு அருள் சுரந்திருக்கின்ற விநாயகப்பெருமான் அவ்வாறே வருவோமென்று திருவாய்மலர்ந்து, தமதுதிருவுருவைக் கரந்தருளினர். பின்னர் அதிதியானவள் அவ்வனத்தினின்று நீங்கித்,தனது கணவனையடைந்து பணிந்தெழுந்து, தனக்கு விநாயகமூர்த்தி கொடுத்தருளிய வரத்தைத் தெரிவித்துப்,பிரதிதினம் அளவற்றமகிழ்ச்சியோடு விநாயகமூர்த்தியைப்பூசைசெய்து வந்தனள். இங்கிவ்வாறுநடந்துவருகின்ற நாளையில்,உலகங்களில் தருமநெறிகள் தவறிப்போனமையால் பூமிதேவியானவள் துட்டர்களைச் சுமக்கமாட்டாது துன்பப்பட்டு மகமேருகிரியையடைந்து,அங்கேபலகுகைகளினும் ஒளித்து வாசஞ்செய்கின்ற தேவர்கூட்டத்துள் பிரமதேவனைக்கண்டு பணிந்தெழுந்து, சுவாமி- உலகங்களில் துர்ச்சனர்கள் மிகுத்து தருமநெறிகள் வழுக்கிப் போனமையால் இனி அடியேன் அத்துர்ச்சனர்களைச் சுமக்கமாட்டேன், தேவரீர் சர்ச்சனர்களையும் அடியேனையுங் காப்பாற்றாவிட்டால் எட்டுணைப் போதும் வாழ்ந்திரேன்,வீணே துயரப்பட்டுப் பாதலத்தில்வீழ்ந்துபோவேனென்று முறையிட்டனள். அதைப் பிரமன்கேட்டு, அவட்கு நீ அஞ்சவேண்டாமென்று திடங்கூறிப், பின்னர்எல்லாத்தேவர்களோடும்விநாயகமூர்த்தியைப் பூசித்துத் தோத்திரஞ்செய்தனன்.அப்போது ஆகாயத்தில்(விநாயகமூர்த்தியானவர் துஷ்டஜனநிக்கிரக சிஷ்டஜனபரிபாலனஞ்செய்யும்

பொருட்டு காசிபருக்குப் புத்திரராக அவதரிக்கப்போகின்றனர்.) என்று ஒருவாக்கு உண்டாயது. அதைப்பிரமன்கேட்டு,மீட்டும் பூமிதேவியைப் பார்த்து,அம்மணீ- இப்போதுண்டாகிய ஆகாயவாக்கை நீயுங்கேட்டனையன்றோ,ஆதலால் இன்னுஞ் சிறிதுகாலம் அத்துட்டர்களைச் சுமந்துகொண்டிரு,பின்னர் இவ்வளவு துன்பமும் ஒருமிக்க நீங்கும், இனிமேல்யாவருக்கு மின்பமுண்டாகுமென்று சொல்லி அவளுக்கு விடைகொடுத்தனுப்பி,முன்போலவே சகலதேவர்களோடும் விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளை மனதிற்றியானஞ் செய்துகொண்டு தவத்தி லிருந்தனன். இங்கிவ்வாறாக-முன்னர் வரம்பெற்றநாள்முதல் பிரதிதினம் விநாயகமூர்த்தியைப் பூசைசெய்யு நேமத்தினைப்பெற்றிருக்கின்ற அதிதியானவள்,ஒருநாள் சுவாமியை மிக்க வுருக்கத்தோடுந் தியானித்துத் தோத்திரஞ் செய்தனள். அப்போது விநாயகக்கடவுள் கிருபைசுரந்து,அவ்வதிதிக்கெதிரில் ஆயிரமுடிகளும், ஆயிரநெத்திகளும், ஆயிரமுகங்களும், ஆயிரஞ்செவிகளும், ஆயிரம்வாய்களும், ஆயிரநாசிகளும், ஆயிரந்தோள்களும், ஆயிரங்கைகளும், ஆயிரந்தொடைகளும், ஆயிரம் அடிகளுங்கொண்டு, கைகள்தோறும் ஆயுதங்களும், நெற்றிகள்தோறுங் கத்தூரிப் பொட்டுகளும்,மார்பிற்சிந்தாமணி மாலை முதலிய அளவற்றஆபரணங்களையுந்தரித்து,அளவற்ற சோதிகள் ஒருமிக்க வுதித்தாற்போலச் சிங்கவாகனத்தின்மீது பிரத்தியக்ஷமாயினர். உடனே அதிதியானவள் பணிந்தெழுந்து, பலமுறைவலம்வந்து,இருகைகளையுங் கூப்பி எதிர்நின்று, உள்ள முருகும்படியாக அளவற்றதோத்திரங்களைச்செய்து,அவ்வவர்கள் கோரியபயன்களை அங்கைநெல்லிக்கனிபோல அருள்செய்யவல்ல வள்ளலே-முன்னர் அடியேன் துயர் நீங்குமாறு சுவாமிகள் வரங்கொடுத்தபடி இப்போது முடித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதை விநாயகமூர்த்திகேட்டு, யாம் உனக்கு முன்னர் கொடுத்தவரத்தை முடிக்கும்படியாகவே இப்போதித்திருக்கோலத்தோடுவந்தன மென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கு அதிதியானவள் மீட்டு மவரைப்பணிந்தெழுந்து, சுவாமி- இத்தன்மைத்தான பெருவடிவத்தோடு அடியேற்குப் புத்திரனாகவந்தால்,அடியேன் தேவரீரை எவ்வாறு கரத்திலேந்தி எவ்வாறுவளர்க்க வல்லேன், இவ்வடிவம் உலகத்தார்க்கும் இசைவாயிராதாதலால்,எல்லாரைப்போலத் தேவரீரை அடியேன் கைகளிலேந்திக் குளிப்பாட்டி முலைப்பாலூட்டி வளர்க்கும்படியாகமிருதுவானகுழந்தைவடிவாகிவந்து,துட்டசிந்தையுடைய அசுரர்கள்குலம்நாசமாகும்படி வளர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்கு விநாயகமூர்த்தியானவர் அவ்வாறே அதிதியினுடையஆசையை நிறைவேற்றும்படியாகத் திருவுளங்கொண்டு,உடனே அன்றுபிறந்த குழந்தையைப்போல வடிவங்கொண்டு,தமது பவளம்போன்ற திருவாயினைத்திறந்து அழுதனர்.அவ்வழுகை யோசை வெளிப்பட்டமாத்திரத்தில் உலர்ந்திருந்த விருக்ஷங்களெல்லாந் தளிர்த்தன. மலடிகளெல்லாங் கருப்பமடைந்தார்கள். எங்கு மந்தமாருதம் வீசியது. ஆகாயமெல்லா மறுவின்றி விளங்கியது. வேள்வித்தழல்களனைத்தும் வலஞ்சுழித்தெழுந்தன. சகல தீர்த்தங்களுந் தெளிவடைந்தன. தேவர்கட்கெல்லாம் வலதுதோளும் வலதுகண்ணுந் துடித்தன. அசுரர்கட்கெல்லாம் இடதுதோளும் இ

டதுகண்ணுந் துடித்தன, இத்தியாதி உற்பாதங்கள் எங்கணு முண்டாகு ம்படி தனக்கெதிரில் வாய்விட்டழு திருக்கின்ற குழந்தையை, எல்லாத் தேவர்கட்கு நற்றுயென்று சொல்லும்படியான அதிதியானவள், ஒன்ப துமாதமுஞ் சுமந்து பெற்றவளைப்போல அதிக ஆசையோடு மகிழ்ச் சியோடுங் கைகளிலேந்தித், தனது தனங்களிலேவிம்மி நின்று சுரந்தபா லை ஊட்டினள். அவ்வற்புதத்தை மேலாணதவங்களை யுடைய காசிபரா னவர் அதிகமகிழ்ச்சியோடுங் கண்டு,தமது புத்திரர்க்குச் சாதக கன்மாதி களை வேதாகமவிதிப்படி நிறைவேற்றி, மகோற்கடரென்று நாமகரணஞ் செய்தனர். சுவாமியும் நாளுக்குநாள் பாலசந்திரனைப்போல வளர்ந்துவ ந்தனர். இவ்வாறு அரிபிரமேந்திராதியரும் அறிதற்கரிய விநாயகமூர்த்தி யானவர் மகோற்கடரென்னுந்திருநாமங்கொண்டு வளர்ந்து வருகின்ற இ ரண்டாமாதத்தில்,இவ்வற்புதசேதியை வசிட்டர் வாமதேவர் முதலியமு னிபுங்கவர்கள் நாரதமுனிவர் சொல்லக்கேட்டு,அப்போதே பரத்தை ய டைந்தவர்போல மேலான மகிழ்ச்சி கொண்டு, சுவாமியைத் தரிசி க்கவந்தார்கள். அவர்களைக் காசிபர் எதிர்கொண்டழைத்துவந்து, சந்தோ ஷமாய்க்கலந்து, ஒருவர்க்கொருவர் க்ஷேமாதிசயங்களை விசாரித்துக்கொ ண்டு,பின்னர் யாவரும் வந்து மகோற்கடமூர்த்தியைக் கண்குளிரத் தரிசி த்துப் பணிந்திருந்தார்கள். அப்போது வசிட்டமுனிவர் காசிபரைப்பா ர்த்துத்,திரிமூர்த்திகளாலும் பெறுதற்கரிய பேற்றினைஎளிதிலடைந்த தவ சிலரோ-இக்குழந்தையினுடைய அவயவமானது முப்பத்திரண்டு இலக்க ணங்களையும் வாய்ந்திருக்கின்றது. ஆதலால்-இஃது மலரகிதமானமேலா னமூர்த்தியேயன்றி மலசகிதமா யிருக்கின்ற நம்மி லொன்றன்று,இத்தன் மைத்தான மேலானமூர்த்தியானது அசுரர்குலங்களை வேரோடுங்களைய வும், தேவர்குலங்களையு முனிவர்கூட்டங்களையு மாதரித்து உலகங்களில் வேதாகமநெறிகளை நிலைநிறுத்தவும்,தேவரீரும் தேவரீருடைய பத்தினி யாருஞ் செய்ததபோபலத்தினுல் உங்கட்குப்புத்திரராகத்திருவவதாரஞ் செய்திருக்கின்றது,இப்போது திரிலோகங்களிலுங் கொடுங்கோலைச் செ லுத்திவருகின்றதேவாந்தனும் நராந்தகனும்இப்புதல்வரைச் சத்துருவெ ன்றறிந்து இவருக்குப் பலவிடர்களைப்புரிவார்கள், ஆனல் இவர் வுலகங்க ளிலுள்ள சகலவிடர்களையுந்தீர்த்து ஆதரிக்கவல்ல மூர்த்தியாதலால் ஓர் இடரும்இவரையணுகாது,ஆயினும்-லோகசவரக்ஷணை நிமித்தம் நீங்களி ருக்க வேண்டிய சாக்கிருதையிற் பிழையாமலிருக்கவேண்டுமென்றுசொ ல்லினர். அதற்குமேல் காசிபரானவர் வந்த முனிவர்கட் கெல்லாம் விரு ந்தூட்டிச் சந்தோஷமடைந்தனர். பின்னர் அம்முனிவர்களெல்லாம் காசி பரிடத்தில் மிக்க அன்போடு விடைபெற்று,அவ்வவர்களுடைய ஆசிரமத் தை யடைந்தார்கள். இப்பால் மகோற்கட மூர்த்திக்கு வயதொன்றுகுமு ன்னமே,நராந்தகனிருந்து அரசாக்ஷிசெயதுவருகின்றபட்டணத்திலேஇர த்தமழை பொழிந்து,ஆகாயமுழுவதுங்கறுத்து,வால்நட்சத்திர முதலியவி கற்பங்கள்தோன்றினின்றன.அதன்மீது நாரந்தகன் கணிதர்களைக்கூவி,இப் போது கண்டிருக்கின்ற வுற்பாதங்களுக்கு இனிநடக்கப் போகின்ற ஏது யாதென்று வினவினன். அதற்கவர்கள் கணித சாத்திரங்களிற் சோதித்த றிந்து, நாராந்தகனைப்பார்த்து.ஓ மண்டலேஸ்வரா-தேவரீர் கேட்ட வாறே

சோதித்தறிந்தனம், ஆயினும் உள்ள காரியத்தை விளம்புவோ மென்றால் தேவரீர்க்குக்கோபமுண்டாகுமே யென்று அடியேங்கள் மனம் பயமடைகின்றதென்றுசொன்னார்கள். அதைநராந்தகன்கேட்டு, கணிதர்களே-நீங்கள் பயப்படவேண்டியதில்லை, நடந்திருக்கின்ற உற்பாதங்கட்கு ஏது நீங்கள் பாத்திரங்களில் யாதுகண்டீர்களோ அதனை யொளிக்காமற் சொல்லுங்களென்று பரிவாய்ச்சொல்லினன். அதற்குமேல் அச்சோதியர்கள் பயநீங்கி, ஓராசாதிராசனே-உள்ளவிதத்தையே யாங்கள்சொல்லக்கேட்டருளுக, அஃது யாதெனில், காசிபமுனிவரும் அதிதியுந்தவஞ்செய்ய, அவர்களிடத்தில் நம்மையெல்லாம் பிணிசெய்யும்படி ஓர் பிள்ளைபிறந்து வளர்ந்துவருகின்றது, இந்தஏதுதப்பாமல் அழிவுகாட்டு மென்பதற்கு அந்தவுற்பாதங்களெல்லாம் இவ்விடத்தில் உண்டாயின வென்று சொன்னார்கள். அதை நராந்தகன் கேட்டு, மிகுந்த ஆலோசனை களிற் றலைப்பட்டவனாகி, ஐயோ-இவ்வேதுவுக்கினியென்னசெய்வோம், சிறுகுழந்தையைச் சென்று கொல்வதுநமதுபராக்கிரமத்திற்குச் சரியல்லவே, அவ்வாறு செயவோமாயின் நமது பாக்கியங்களெல்லாம் பாழாகுமே யென்று பலவாறு சிந்தித்து, மீட்டும் ஓர்உபாயத்தை யெண்ணி, விரசையென்னும்பெயரினையுடைய ஓரவுண மாதைக்கூவி, நீ இன்னிமிடத்திற்சென்று, நமக்குத் துன்பஞ்செயய உதித்திருக்கின்ற குழந்தையைக் கொன்று வரக்கடவை யென்று அனுப்பினன். உடனே அவ்விரசையானவள் கறுத்த நிறமும், நெருப்பையொத்த கண்களும், சிவந்தமயிரும், பத்துயோசனை விசாலம்உயர்ந்திருக்கின்ற சரீரமும், யானைத்தந்தங்களைப்போல நீண்ட கோரைப் பற்களும் விளங்கியிருக்கின்ற தனது வடிவத்தை மறைத்து, ஓர் பிராமணஸ்திரீயைப்போல வடிவங்கொண்டு, காசிபருடைய ஆச்சிரமத்திற் சென்றனள் அப்போது காசிபர் ஸ்நானஞ்செய்யச் சென்றிருந்தனர். அதிதி யானவள் விநாயகபூசைசெய்துகொண் டிருந்தனள். ஏனைய சீடர் முதலாயினோர் வேறுவேறு பணிகளில் பிரவேசித்திருந்தார்கள். அச்சமயத்தில் அப்பாதகி உள்ளே நுழைந்து, மகோற்கடமூர்த்தி தனியாயிருக்கக்கண்டு, அவரை யெடுத்து வாயிலிட்டு விழுங்கித் திரும்பினள். அப்போது அவள் வயிற்றுளடங்கிய மகோற்கடமூர்த்தியானவர் அங்கிருந்த படியே தமது நுதல்விழியைச் சிறிது திறந்தனர். உடனே அவ்விரசைவயிற்றில் வடவாமுகாக்கினியைப்போல அழலுண்டாகி, அதிகதாகங்கொண்டு, அங்கிருக்கின்ற தடாகமுதலிய வைகளிலுள்ள சலங்களையெல்லாம் வறண்டு போகும்படியாகப பானஞ்செய்தனள். அவ்வாறு பானஞ்செய்தும் அத்தாகந்தணியாமையால், பின்னரவள் ஆகாயகங்கையைப் பானஞ்செய்ய நினைத்து மேலெழும்பினள். அப்போது கருணாநிதியாகிய மகோற்கடமூர்த்தியானவர் இனி யெங்குபோகின்றனை யென்று தமது சிறிய காற்பெருவிரலினாலூன்றினர். அம்மாத்திரத்தில் திரிலோகங்களையும் வாய்மடுக்க வல்ல அப்பாதகியானவள், முன்னொருபோது இராவணனா லெடுக்கப்பட்ட கைலாயவரையானதுசிவபிரானுடையதிருவடிகளாலூன்றப்பதைப்பறவிருந்தாற்போல அசைவற்றுப்பூமியிலேவீழ்ந்தாள். உடனேஇடையிற்சர்ப்பக்கச் சினைவீக்கியஎம்பெருமானானவர் அவளைநிலத்தில் விழவமுக்கிய தமது காற்பெருவிரல் நகத்தினாலேயே அவள்வயிற்றை உதிரப்பிரவாக மு

ண்டாகும்படியாய்ப் பிளந்து,தம்மைவிழுங்கியமதயானையினைக்கிழிவெளிப்பட்த்தோன்றிய தமது பிதாவைப்போலவெளிக்கொண்டனர். அப்போது முன்னர் பூசைசெய்துகொண்டிருந்த அதிதியானவள் அப்பூசையினைநிறைவேற்றித்,தனதுபுதல்வனை எடுக்கவந்து காணாதவளாகித், தானுந்தனது தலைவரு மிகுந்ததுயரமடைந்து, அளவற்றகாடுகளிலும்வெளிகளிலுந் தேடிச்சென்று,பின்னர் அப்பாதகியினுடைய மார்பில்தமதுகுமாரர் வதிந்திருப்பக்கண்டு பயந்து, முனனும் பின்னும் பார்த்து,மிகுந்த அதிசயத்துடனே மனதில் ஆனந்தங்கொண்டு,உடனே நின்மலமூர்த்தியாகியகுழந்தையை யெடுத்துச்சென்று,திருமேனி முழுவதுந் தோய்ந்திருக்கின்ற உதிரங்களையெல்லாங் கழிவிகதுளிப்பாட்டி,நீராஞ்சனமுதலிய சாந்திகளைச்செய்து பாலூட்டினள். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே, விரசையென்னும் அந்த ராக்ஷசியானவள் மிகவுங் கொடுமையை யுடையவளாயினும்,சுவாமியைக் கொல்லுமாறு வாய்மடுத்தாளாயினும், அவள் அவருடைய திருவுருவைக் கண்ணாரக்காணவுந்தீண்டவுங் கிடைக்கப்பெற்றதினாலே,அப்போதே அவள் மலபாசங்களினின்றுநீங்கிமோக்ஷசாம்பிராச்சியத்தை யடைந்தனள். இவள் இறந்துபோனமையை நராந்தகன் கேள்விப்பட்டு,மிகவும் ஆச்சரியங்கொண்டு,மீட்டும் மகோற்கட மூர்த்திக்கு இரண்டாவது வயதாகுங்காலத்து உதத்தனென்றுந் துந்துபி யென்றும் பெயரினையுடைய இரண்டவுணர்களைக் கூவியனுப்பினன். அவ்விருவர்களுங்கிளிப்பிள்ளைவடிவங்கொண்டு,காசிபருடையஆசிரமத்திலவந்து, மரங்களின்மீதிருக்கின்றதும், முற்றங்களி லிறங்குகிறதும்,வெய்யிலிற்காயவைத்திருக்கின்றதானியங்களைக்கொறிக்கின்றதுமாகச்சஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள். அதை அதிதிமடியின்மீதிருந்து முலைப்பாலுண் டருளுகின்ற மகோற் கடமூர்த்தி கண்டு, இக்கபடர்களைக் கொல்ல வேண்டுமென்று திருவுளங்கொண்டு,தமது தாயினுடையமுகத்தைப்பார்த்து, அம்மா-இக்கிளிப்பிள்ளைகளை எனக்குப் பிடித்துக்கொடு வென்று கேட்டனர். அதற்கு அதிதியானவள் என்செல்வமே - பறக்கின்றகுருவி என் கையில் அகப்படுமோவென்று மறுத்தனள். உடனே மகோற்கடமூர்த்தியானவர் அதிதியினுடைய மடியினினறுங் குதித்தெழுந்து, ஆகாயத்திலேபருந்து வடிவங்கொண்டு பறந்து,தம்மைக்கண்டோடுகின்ற அக்கிள்ளைகளிரண்டையுந் துரத்திப் பிடித்து,சிறகுகளையெல்லாம் பறித்தெறிந்து, மூக்கினுலும் நகங்களினுலும் உடல்களைப்பிளந்து, பூமியில்விழ உதறித், தாம் முன்போலவே குழந்தைவடிவாகித் தாய்மடியில்வந்து பாலுண்டருளினர். அதை அதிதிகண்டு,இவர் தந்தையாகிய சிவபிரான் முன்னொருபோது கிளிப்பரிபூட்டிய இரதத்தினையுடைய மன்மதனை இமைப்போதில் நீறுக்கினனொனில்,இப்போதிவர் இக்கிளிப்பிள்ளைகளைக் கொன்றதோ வொருபுகழென்று துதிசெய்தனள். காசிபர் அவருக்குப்பூதசாந்திசெய்து சந்தோஷமுற்றிருந்தனர். கிளிப்பிள்ளை வடிவங்கொண்டு வந்த அவ்விரண்டவுணர்களும் மிகவுங்கொடியராய் மறைநெறிகளிற் பிறழ்ந்தவர்களாயிருக்கினும், அவர்கள் எம்பெருமானாற் றுக்கப்பட்டு இறந்தமையால் பழயபந்தங்களையெல்லாம் விடுத்து, ஆனந்தசாகரத்திற் படிந்தார்கள். இப்பால் மகோற்கடமூர்த்திக்கு மூன்றுவது வயதாகலும்,தந்தையாகிய காசிபர்

அவருக்குச்சவுளச்சடங்கினைவேதாகமமுறைமைப்படி நிறைவேற்றினர்.
பின்னர் ஒருநாள் விதிபாதம்வர,அத்தினத்தில்அதிதியானவள் தனதுபுத்
திரனை யெடுத்துக்கொண்டு, அடுத்தாற்போலிருக்கின்ற வோர் பொழிலு
ள்,தாமரைமுதலியவைகள் மலிந்திருக்கின்ற சோமவதியென்னுந் தடாக
த்தைநோக்கிச் சென்று,அத்தடாகக்கரையில் லோகநாயகராகிய மகோற்
கடர்மூர்த்தியை விடுத்து,அத்தீர்த்தத்துளிறங்கிஸ்நானஞ்செய்துகொண்
டிருந்தனள். அப்போது சுவாமியும் அதிதி காணுதபடி அத்தீர்த்தத்திலி
றங்கினர். மழலைமொழியுங்குறுநடையுமுள்ள அவரைப்பத்துயோசனைப்
பிரமாணமானவடிவோடு அத்தடாகத்திலிருக்கின்றஓர்முதலையானது எடு
த்துக்கொண்டு போய்விட்டது. அதை அத்தடாகக் கரையிலிருந் தோர்க
ள்கண்டுபதைபதைத்து,ஐயையோவென்று இரங்கிவாடினார்கள். அப்போ
து அதிதியானவள் அச்சம்பவத்தைக்கேட்டுத் திடுக்குற்று,வாயளவு தீர்
த்தத்திலிறங்கிப்பார்த்து,அப்பாலிறங்கக்கூடாமல் மயங்கித் துயர முற்ற
னள். அந்தவேளையில் சிலமாணுக்கர்கள் தற்செயலாய்வந்து,அச்சம்பவ
த்தினைக்கேட்டு,மிக்கதுணிவோடு அத்தீர்த்தத்திலிறங்கி நீந்திச்சென்றார்
கள். அவர்களை அம்முதலையானது நெருங்கவொட்டாமற்சீறிச்சுவாமியை
வாயிற்கவ்வியபடி மேலெழும்பி,விழிகளில் அனற்பொறிகளேயிறைத்து,இ
டம் வலமாகச்சுழன்றுதிரிந்து,மீட்டும் அடியிற்சென் றொளித்தது. அப்
பால்அச்சிடர்கள்மேலேவந்து,அதற்குமுன்னமேஅத்தீர்த்தத்தில்ஸ்நான
ஞ்செய்து சென்று,கமதாசிரமத்தில்செபஞ்செய்துகொண் டிருக்கின்றகா
சிபருக்கு அறிவிக்குமாறு விரைந்தோடினர். அச்சமயத்தில் மகோற்கட
மூர்த்தியானவர் அம்முதலையின் முதுகிலாரோணித்து, அத்தடாகத்தை
அதிலிறங்கியிருக்கின்ற பறவைகளெல்லாம் பறந்தோடவுந் தாமரைமுத
லிய புட்பவினங்கள் துவளவும் நாற்கரைகளிலும் அலைகள் புரண்டோ
டவுமாக அல்லோலகல்லோலப்படுத்தி மேலெழும்பி, மரக்கலத்தையோ
ட்டி விளையாடுவதுபோலச சிறிதுநேரம் குறும்பாய் விளையாடல் செய்
திருந்தனர். அப்போது அதிதியானவள் தனது குமாரனை முன்னர்துன்
பத்தோடு பார்த்தகண்ணினுல் பின்னர் இன்பத்தோடுபார்த்து, இருகரங்
களையு மேந்திநின்று,அப்பா- என்சாமி- என்கண்மணியே- இத்திருவிளை
யாட்டல் போதும்-இனிவிரைவில் அம்முதலையைச் சங்கரித்து வந்தருள்க
வென்று வேண்டினள். அவ்வேண்டுகோளுக்கு மகோற்கடமூர்த்தி கிரு
பைசுரந்து, தாமேறி நடாத்துகின்ற அம்முதலையைக் கரைமீதேற்றினர்.
அஃது கரைமீதேறிய மாத்திரத்தில் உயிர்விட்டிறந்தது. உடனே அதனு
டலினின்று ஓர் திவ்வியபுருடன் வெளிப்பட்டுவந்து, மகோற்கடமூர்த்தி
யைப் பலமுறைபணிந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்று
இதனைப்பேசுவதாயினன். கர்த்தனே- அடியேன் முன்னர் கந்தருவர்கட்
கெல்லாம் அரசன்,அடியேன்பெயரைச் சித்திரனென்று சொல்லுவார்க
ள், ஒருதினம் அடியேன் ஓர்விவாகத்தை முடிக்கத் தொடங்கினேன், அ
வ்விவாகத்திற்குப் பிருகுமுனிவர் வந்தனர், அவர்வந்த வேளையில்-தேவ
ர்கள்முதலாயினோர்வந்து கூடியிருந்த கலியாண மண்டபத்தில் அச்கலி
யாண விவகாரங்களிலே அடியேன் ஞாபகம்வைத்திருந் தமையால், அம்
முனிவரை எதிர்கொண்டழைத்துவந்து வந்தனை முதலிய வழிபாடுகளை

ச் செய்யாமலிருந்தேன், அதற்கு அம்முனிபுங்கவர் கோபங்கொண்டு நீ விவாகசம்பிரமத்தில் மூழ்கி, வந்தபெரியோர்களுக்கு வணக்கஞ் செய்யாமலிருந்தனே, ஆதலால் இனி நீதடாகத்திலே முதலையாக முழுகிக் கொண்டிருக்கக் கடவையென்று சபித்தனர், பின்னரடியேன் பயந்து அவர் திருவடித்தாமரைகளையேபணிந்தெழுந்து, சுவாமி- அடியேன் அறிவின்மையாற்செய்த குற்றத்தைப் பொறுத்துத் தேவரீரிட்டசாபத்தை நிவிர்த்தி செய்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தேன், அதற்கப் புண்ணிய மூர்த்தி கிருபைசுரந்து, ஓ கந்தருவராசனே- இனி விநாயகக்கடவுள் துஷ்டசுண நிக்கிரகஞ் செய்யும்பொருட்டு காசிபருக்குப் புத்திரராக அவதரிக்கப்போகின்றனர். அம்மேலான கடவுளுடைய திருக்கரம்பட்ட மாத்திரத்தில் உன்னை இச்சாபம்விட்டு நீங்குமென்று திருவாய்மலர்ந்து எழுந்தருளினர். அவ்வாறே பாவியான அடியேற்கு இத்தினந்தேவரீருடைய கிருபாகடாக்ஷங்கிடைத்தது, இதுகாறும் இத்தடாகத்தில் அடியேன்முதலையாகவிருந்து, மலர்பறிக்கவும் ஸ்நானஞ்செய்யவும் வருகின்றபேர்களுக்கெல்லாந துன்பத்தை விளைத்துக்கொண் டிருந்தேன், இத்தன்மைத்தான கொடியவனை இப்போதுகரையேற்றிஇன்பத்தைக்கொடுத்ததற்கு என்ன கைம்மாறுசெய்யவல்லேனென்று துதிசெய்தனன். அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தியினுடைய கிருபையினால் ஆகாயமார்க்கத்திலிருந்து ஓர் தெய்வவிமான மிறங்கியது. அதை அச்சித்திரன்பார்த்து, மீட்டு மகோற்கடமூர்த்தியைப் பணிந்தெழுந்து, ஓ சகலலோகநாயகனே- ஓதத்துவப்பொருளே- ஓமூலகாரணக்கடவுளே- அடியேனை யெல்லாவிதத்திலுங் கடைத்தேறுமாறு கடாக்ஷம்வைத்தருளிய ஓகிருபாமூர்த்தியே யென்று- அளவற்றதோத்திரங்களைச்செய்து, சுவாமியினிடத்தில் விடைபெற்றுவிமானத்தின்மீதேறி ஆகாயமார்க்கமாகச்சென்றனன். அதற்குமேல்மகோற்கடமூர்த்திக்கு நாலாவது வயதுவந்தது. அப்போது கயிலாயத்திலே சிவபிரானைத் தரிசித்து யாழ்வாசிக்கச் செல்லுகின்ற ஆகா- ஊகூ - தும்புரு- என்னுமூன்று கந்தருவர்கள் காசிபருடைய ஆசிரமத்திற்கு வந்தார்கள். அவர்களைக் காசிபர் எதிர்கொண்டழைத்துவந்து, பல உபசாரங்களைச்செய்து, ஒருவர்க்கொருவர் க்ஷேமலாபங்களை விசாரித்துப், பின்னர் நீங்கள் விருந்துண்டு போகவேண்டுமென்று வேண்டினர். அதற்கம்மூவருமிசைந்து, தடாகத்திற்சென்று ஸ்நானஞ்செய்துவந்து, புட்பஞ் சந்தன்முதலிய திரவியங்களைங்களைச் சேகரித்து, தாங்கள் பிரதிதினம் பூசித்துவருகின்ற விநாயகர் சிவபெருமான் உமாதேவி விண்டு சூரியன் என்று சொல்லப்படுகின்ற ஐந்துவிக்கிரகங்களையும் ஓர் பொற்பலகையின் மீதிருத்திப் பூசித்துத்தியானஞ் செய்துகொண்டிருந்தார்கள். அவ்வேளையில் சிலமுனிச்சிறுர்களோடும் விளையாடல்செய்திருந்த பராபரப்பொருளாகிய மகோற்கடமூர்த்தியானவர் அவ்விளையாட்டினின்றும் வந்து, அவர்கள்வைத்துப் பூசித்திருந்த ஐந்துமூர்த்திகளையும் பார்த்து, அவைகள் மறைந்துபோகும்படியாக ஓர் திருவிளையாடல்செய்தனர். பின்னரவர்கள் தங்கள் தியானங்களினின்று நீங்கி, மறறப்பூசனைகளையு நிறைவேற்றத்தொடங்கும்போது, தங்களெதிரில் வைததிருந்த விக்கிரகங்களைக் காணுதவர்களாகிமதிமயங்கிக், காசிபனையழைத்து, சுவாமி- அடியேங்கள் ஆன்மார்த்தமாக

பூசிக்கின்றஐந்துவிக்கிரகங்களையும், தியானஞ்செய்கின்றபோதுஇப்பொற் பீடத்தினின்றும் யாரோதிருடிக்கொண்டு போய்விட்டார்கள். இனிஅடியேங்களுயிரை மாய்க்கின்றோமென்று சொன்னார்கள். அதைக் காசிபர் கேட்டவுடன் மிக்கதுயரமடைந்து, விருந்தாகவந்தவர்கள் பூசித்துப் போசனஞ்செய்து போவதற்குமுன், அவர்கட்கு இவ்விததுன்ப முண்டானது நமது தீவினையேயென்று மாழ்கி, தம்மிடத்தில் பணிசெய் திருக்கின்ற சீடர்களையெல்லாம் கூவி, இவர்கள் பூசித்திருந்த விக்கிரகங்களை யாரோனு மெடுத்திருந்தால் விரைவிற்கொண்டுவந்து கொடுத்துவிடக்கடவீர்கள் கொடாதுவைத் திருப்பீராயின் இந்நிமிடத்தில் உங்களை நீறாக்கிவிடுகின்றேனென்று கோபித்துச்சொல்லினர். அதற்கு அச்சீடர்கள் பயந்து காசியபரைப்பணிந்தெழுந்து, சுவாமி- தேவரீருடைய பெருங்கருணையினால் நன்மையேசெய்து கடைத்தேறவேண்டுமென்று அடுத்திருக்கின்ற அடியேங்கள் அயலாருடைய பொருள்களைத் திருடுவோமோ, ஆனால் தேவரீர் அடியேங்கள்மீது கிருபைசெய்து சுவாமிகளுடையகுமாரரைக்கேட்டருள வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குக் காசிபரிசைந்து, அவரை நீங்களேவிரைவில் அழைத்துவாருங்க ளென்று கட்டளை யிட்டனர். உடனே அவர்கள் மகோற்கடமூர்த்தியைத் தேடிசசென்று எங்குங்காணுமல், அவபாசனஞ்செய்கின்ற அறைவீட்டிலே திருமேனி முழுவதுந் திருவெண்ணீறணிந்த கோலத்தோடு விளையாடல் செய்திருக்கக் கண்டு, பெரியவேதங்களாலு மறியப்படாத மகோற்கடமூர்த்தியைப் பேரிட்டழைத்துவந்து பிதாவின் முனனே விட்டார்கள், அப்பிதாவாகியகாசிபரும் உலகமுறைமைப்படி கையிலோர் பிரம்பினையேந்திக், கோபங்கொண்டவரைப்போல வெதிர்நோக்கிப், பிள்ளாய்-இங்குவந்த இம்மூவரும்பூசனை செய்திருந்தசிவலிங்கமுதலானமூர்த்திகளை நீயேகவர்ந்துகொண்டுபோயினை, ஆயினும் அவைகளை எங்கேயொளித்துவைத்தனை சொல்லுக வென்று கேட்டனர். அதற்கு மகோற்கடப்பிள்ளையார் திருநகைசெய்து, தமது வாயினை நன்றாகத்திறந்துகாட்டி, அவைகளை இங்கேதான் ஒளித்துவைத்திருக்கின்றேனென்று திருவாய்மலர்ந்தனர். இவ்வாறு திறந்து காட்டிய வாயினின்று உமாபரமேஸ்வரருடனே கயிலாயமும், விண்டுவுடனேவைகுந்தமும், பிரமனுடனே சத்தியலோகமும், இந்திரனுடனே அமராபதியும், அவுணர் நாகர் இயக்கர் மனிதர் என்னுமிவர்களுடனே அவ்வவர்கள் வசிக்கின்ற எண்ணிறந்தபதிகளும், அளவற்றவனங்களும், அளவற்ற மலைகளும், அளவற்றநதிகளும், அளவற்றசமுத்திரங்களும், புட்பங்கள்மலிந்த அளவற்ற நந்தவனங்களும், பறவைகளுலாவுகின்ற அளவற்ற நிலங்களும், பதினலுலோகங்களும், அஷ்டதிக்குப்பாலகர்களும், இன்னும் அளவற்றயதார்த்தங்களும் வெளிப்படக் காசிபமுனிவர் கண்டனர். மனநொந்திருந்த ஆகா-ஊகூ- தும்புருவென்னு மூவரும் அவ்வற்புதத்தைக் கண்டு, அளவில்லாத ஆச்சரியமாகி, மகோற்கடமூர்த்தியினுடைய திருவடிகளிலேவிழுந்து நமஸ்கரித்து, பரிமளமிகுந்தபுட்பமுதலானவைகளைக்கொண்டு பூசித்துநின்றனர். அதற்குக் கருணாகரமூர்த்தியாகிய மகோற்கடர் மனமகிழ்ந்து, அக்கந்தருவர் சநதோஷிக்கும்படியாக அவர்கள் ஐந்து மூர்த்திகளைத் தமது திருமேனியினின்றும் எடுத்து அவர்கள் கையிற்கொடு

த்தருளினர். அதற்குமேல் அம்மூவரும்சுவாமியைநோக்கிக்,கர்த்தனே-சகலலோகங்களையுந் திருவாயினின்றுங் காட்டியருளிய தேவரீரை அடியேங்கள் அறிவின்மைமிகுத்த புத்தியினாலே குழந்தையென்று நினைத்தோம் அக்குற்றத்தைத்தேவரீர்பொருத்தருளவேண்டுமென்று 'அளவற்றதோத்திரங்கள்செய்து,தத்தம் பூசனைகளைக் குறைவறநிறைவேற்றிப்,'பழநழுவிப்பாலில் வீழ்ந்தாலொத்தபான்மையராய்க் காசிபனையடைந்து,மிகுந்தபேருவகையோடும் விருந்துண்டு, சிலநேரங்கேண்மை பாராட்டிப், பின்னர் விடைபெற்றுக் கயிலாயகிரிக்குப் போய்விட்டனர்.அதற்குமேல் மகோற்கடமூர்த்திக்கு ஐந்தாவதுவயதாக,அப்போது காசிபர்தமதுபுத்திரர்களாகிய தேவர் இராக்கதர்முதலான யாவரையும் வரவழைத்து வைத்துப்,பிள்ளையாருக்கு வேதாகமவிதிப்படி உபநயன கலியாணத்தை முடிப்பதாயினர். அங்குவந்திருந்த முனிவர்கள்யாவரும் பிள்ளையார்மீது மந்திராக்ஷதையைத் தூவினார்கள்.அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தியைக் கொல்லும்படி நராந்தகனால் அநுப்பிய இராக்கதர்களில் பெரிதானசரீரமும் விண்ணுவோதியோருமநடுங்கத்தக்கவன்ஞெழிலும்மேலானபராக்கிரமமும்உள்ள பிங்களன்- விகிர்தன்- சபலன்- விசாலன்- பிங்காக்ஷன் - என்னும்பெயர்களைப்படைத்த ஐந்துபேர் தங்கள்ரூபத்தை மறைத்து,முனிவர்கள் போலே விபூதி உருத்திராக்கந்தரித்துக்,கைகளிற் றண்டுகமண்டலங்களைத்தாங்கிக்கொண்டுவந்து,அக்ஷதைகளில் அஸ்திரங்களை ஆவாகனஞ் செய்து தாங்களு முனிவர்களைப்போலவே சுவாமியின்மீது அக்ஷதை தூவினார்கள். அவ்வக்ஷதைகளில் ஆவாகனஞ்செய்திருந்த தேவாஸ்திரங்களெல்லாம் உடனே தத்தமரூபங்களோடு வெளிப்பட்டு,சுவாமியின்மீது விழுவதற்கஞ்சி,யாவருங்காணும்படியாக அவருடைய திருவடிகளில் வீழ்ந்து பணிந்தன. அப்போது கைதவர்க்குக் கைதவராகிய மகோற்கடமூர்த்தியானவர் அவைகளைத் தமது திருக்கரத்திலேந்திப்,பொய்வேடங் கொண்டுவந்த அந்த ஐந்து இராக்கதர்கண்மீது வேறேஐந்தரிசிகளையெடுத்துத்தூவினர். உடனே அவ்வைந்தும் அஸ்திரங்களாகப்பாய்ந்து, அதிகபராக்கிரமத்தோடு மலைபோலப் பாரித்திருக்கின்ற அவ்வைந்திராக்கதர்களையும் சங்கரித்தன. அவ்வற்புதத்தைக்கண்ட யாவரும் சுவாமியை வேதாகமங்களினாலே அளவற்றதோத்திரஞ் செய்தார்கள். அதற்குமேல் உபநயனத்திற்குரிய சடங்குகளெல்லாங் குறைவறச் செய்து, நிறைவேறின.பின்னர் தேவர்களெல்லாம் ஓரிடத்திறகூடி,சகலபுவனகர்த்தாவாகிய மகோற்கடபிள்ளையாருக்குக் கிடையாதபொருள் எவ்வுலகங்களினுமில்லை ஆயினும்,யாமெல்லாங் கடைத்தேறும்படியாகச் சில வுபசாரங்களைச் செய்வோமென்று ஆலோசித்து, யாவரும் சிவபெருமானைப்பணிந்து நின்றார்கள்.அக்குறிப்பைச் சிவபிரானறிந்து, பினாகம்; திரிசூலம், உடுக்கை, மழு சடை, வெண்மதி, என்னுமிவைகளை மகோற்கடப் பிள்ளையாருக்குக்கொடுத்து,சடையில் கங்கையைத் தரித்து, விருப்பாக்கன்- பரசுபாணி- பாலசந்திரன்- என்னும் பெயர்களையுங் கொடுத்தனர். அதற்குமேல் உமாதேவியார் சிங்கவாகனங்கொடுத்து,சிங்கவாகனனென்னும்பெயரிட்டுத்,துட்டர்களையெல்லாஞ் சங்கரிக்கக்கடவையென்று ஆசீர்வாதஞ்செய்து,மீட்டுமொருவாளாயுதத்தைக் கொடுத்து, கட்கதரனென்னு மற்றொருபெய

ணையுங்கொடுத்தனர். இப்பால் பிரமன் தனது அடையாளமாக நவரத்ந மயமாயிருக்கின்ற ஒருகமண்டலமும் திவ்விய பரிமளத்தோடுங் கூடிய தாமரைப்பூவும்மகோற்கடமூர்த்தியினுடையதிருக்கரத்திற்கொடுத்துப்,பிரமபதியென்னும் பெயரிட்டுப் பணிந்தனன். விண்டுவானவர் திவ்வியமான வோர் பீதாம்பரமும் சக்கராயுதமும் வைத்து, விஷ்ணுபதியென்னும் பெயரிட்டுப்பணிந்தனர். பிரகற்பதிதேவர் ஓர் இரத்திந பாலிகையை வைத்துப், பரதனென்னும்பெயரிட்டுப்பணிந்து, காசிபருக்கும்பரானந்தனென்னும் ஓர்பெயருமிட்டனர்.வருணதேவன் ஓர்பாசத்தைவைத்து,சற்வப்பிரியத்தேவனென்று பெயரிட்டுப் பணிந்தனன்.சமுத்திரராசன் பிராமணவடிவங்கொண்டு வந்து,ஓர்முத்துமாலையைத் திருவடிக் கீழ்வைத்து, மாலாதரனென்னும் பெயரிட்டுப்பணிந்தனன். ஆதிசேடனென்பவன் தானே ஒருபடுக்கை மெத்தையாகி மகோற்கடமூர்த்தியைத் தாங்கிப்,பணிராசவாசனென்னு மோர்பெயரிட்டுப் பணிந்தனன். யமதருமராசன் ஓர் தண்டாயுதத்தை வைத்து, தண்டாதரனென்னும் பெயரிட்டுப் பணிந்தனன். அக்கினிதேவனென்பவன் நுதற் கண்ணைமறைத்துவந்த மகோற்கடப்பிள்ளையாருக்கு யாவையு நீற்றவல்ல ஓர் சத்தியைக் கொடுத்து, தனஞ்சயனென்னும் பெயரிட்டுப்பணிந்தனன். வாயுதேவன் மிகுந்தவலுமையைக்கொடுத்துப்,பிரபஞ்சனனென்னு மோர்பெயரிட்டுப்பணிந்தனன்.இவ்வாறு அண்டக்கலம்புகுந்த தேவர்களெல்லாம் மனம்வாக்குக் காயமென்னு மூன்றினோடு படைக்கலமுதலியவைகளைப் பத்திபூர்வமாகக் கொடுத்துப் பணிந்து நிற்க,மகோற்கடப்பிள்ளையார் யாவருமானந்த மெய்தும்படி அப்படைமுதலியவைகளை மிக்கமகிழ்வோடு மேற்றுக்கொண்டு, அவ்வவர்கட்குச்செய்யத்தக்க அநுக்கிரகங்களையுஞ் செய்தருளினர். இப்பால் இந்திரனென்பவன் மகோற்கடமூர்த்தியினுடையதிருவிளையாட்டினலோ மற்றெதினலோ தான்மாத்திர மதிமயக்குற்றவனாய், எல்லாத்தேவர்கட்கும் அரசனாகவிருக்கின்ற என்னையாவரும் வணங்கவேண்டுவதேயல்லாமல்,யானே ஒருவனைவணங்குவேன்,சகலவெள்ளங்களுந் தாழும்படியான சமுத்திரமானது ஓர்சிறிய குட்டைநீரையு மிச்சிப்பதோ, எல்லாமிருகங்களும்பணிந்துபோகத்தக்கராசகண்டீரவமானது அற்பமானபுல்லையும் இச்சிக்குமா,என்றிவ்வாறு மூடத்தனமாகப்பேசி அதிககெற்வத்தோடுநின்றனன். அப்படிநிற்பவனைக் காசிபமுனிவர் புததிரவாஞ்சையினற் பார்த்து, ஓ சுவர்க்கலோகவரசனே- முன்னா உனது அரசைநடக்கவொட்டாமற் செய்த சத்துருக்களுடைய யுத்தத்திலே நீதோற்று இப்போது யாவுமிழந்திருக்கின்றனை,இனியேனும் உனது போகபாக்கியங்களைப் பெற்று உனது அரசையும் வீரத்தையுங் கையேற்றுக்கொள்ள நினைத்தாயில்லை,தறுகண்ணராகிய தேவாந்தகனையு நராந்தகனையுஞ் சங்காரித்து, மூவுலகங்களையும் பாதுகாத்து,எங்கும் வேதாகமநெறிகளை நிலைநாட்டி,உன்னையுங் காத்தருளும்பொருட்டு சர்வவல்லமையுள்ள ஈச்சுரனே இங்குசிறுபிள்ளையாகத் திருவவதாரஞ் செய்திருக்கின்றதை அரிந்திலேயே, அவர் இதுகாறுஞ் செய்தருளிய திருவிளையாடல்களைச் சிறிதும் அறிந்திலேபோலும்,ஐயோ- எனதையன் திருவவதாரஞ்செய்தருளி ஓ ராண்டாவதற்கு முன் விரசையென்னும் அரக்கியைச்சங்கரித்தனர். இரண்டாவதாண்டில்

உதத்தனென்றும் துந்துபியென்றும்வந்த இரண்டசுரர்களைசங்கரித்தனர் மூன்ருவதாண்டில் சித்திரனென்னுங்கந்தருவனுக்குச்சாபந்தீர்த்தருளினர், நான்காமண்டில் ஆகா முதலிய மூன்று கந்தருவர்கட்கு அர்கள்பூசித்துவந்த பஞ்சமூர்த்தங்களை மறைத்து மீட்டுந்தமது திருமேனியினின்றுங் கொடுத்தருளினர். இப்போது நடந்துவருகிற ஐந்தாமாண்டில் வஞ்சவடிவாய்வந்த ஐந்தசுரர்களை யாவருங்கண்டதிசயிக்கும்படி சங்கரித்தனர், அவ்வற்புதத்தை நீயும்பார்த்தனை,தற்காலத்தில் சிறுபிள்ளையா யிருக்கிறவருடைய சிறியவிளையாட்டுகள் இவ்வாருனுல், பிற்காலத்தில் இவர் பெரியவரானபின்பு செய்யப்போகின்ற பெரிய விளையாட்டுகளை யாவராலறியக்கூடும், மைந்தனே- நீ இனியேனும் சுகத்தினைப்பெறக்கோரி, நீயுமவரைப் பத்தியோடு பூசனைசெய்யென்று சொல்லினர். தனதுதந்தையாகிய காசிபர் இவ்வளவுகூறியும், இந்திரன் அவைகளை ஒப்புக்கொள்ளாமல், சுவாமியைச் சோதிப்பான்போல வாயுதேவனைக் கூவி, நீ உனதுபராக்கிரமத்தோடுஞ்சென்று மகோற்கடமூர்த்தியை அசைத்துவருவாயென்றேவினன். உடனே வாயுதேவன் சுவாமியினுடைய பெருமையினை யறிந்தானுயினும், அதனை இந்திரனுக்கு மறிவிப்பான்போலமிண்டிமேலெழும்பிச், சண்டமாருதமாய்ச்சுழன்று தாக்கி, யுகாந்தகாலமோவென்று அஷ்டதிசைகளிலுள்ளோரெல்லா நடுங்கும்படி தனதுபராக்கிரம மெல்லாந்தோன்றவீசினன். அவவீசலினுல் அண்டப்பித்திகளிடிந்தன. சமுத்திரங்களுடைந்துபோயின. பர்வதங்கள்யாவும் பொடியாயின. மரங்கள்யாவு முறிபட்டுவிழ்ந்தன. தேவலோகமுழுவதும் பூவுலகம்போலப் புழுதிமூடிக்கொண்டது. அனந்த சீவகோடிகள் இறந்துபோயின. இவ்வாறு மகோற்கடப்பிள்ளையார் மீது வீசியகாற்றினுலே சகலலோகங்களும் இவ்வண்ணமா யலையும்போது, தேவாந்தகனு நராந்தகனுங் கோபங்கொண்டு நமக்குப்பயந்து ஒடுங்கிக்கிடந்த வாயுதேவனுக்கு இவ்வளவு அதிகாரங்கொடுத்தவர்கள் யாரென்று ஒற்றர்களைக்கூவி விசாரித்துவரக் கட்டளையிட்டனர். அவர்கள் அக்கட்டளையின்படி சென்று விசாரித்து வருமுன்னம்,அக்காரியங்களை முன்னமே அறிந்திருக்கின்ற சில வொற்றர்கள் அவ்வவுணராசர்களெதிரில் ஓடிவந்து, ஆண்டவனே - நமது பகைவனுகிய காசிபனை வெல்லும்படியாக இந்திரனுடைய உத்தரவின்பேரில் வாயுதேவன் தனது வலியெல்லாங்கொண்டு வீசுகினறனன், இனி அக்காசிபன்முதலாயினோர் எவ்வாருவர்களோ அறிந்திலேம்,அவன் வீசுகின்ற சண்டவேகத்தினுல் தேவர்களெல்லாந் திகைத்து நடுங்குகின்ருர்களென்றனர். அதைத் தேவாந்தகனு நராந்தகனுங்கேட்டுச் சந்தோஷமடைந்தனர். இவ்வாறு வாயுதேவன் தனது வலியனைத்தையுங்கொண்டு சகலவிருட்சங்களும் ஆகாயத்திற் பஞ்சுபோற் பறந்தலைய வீசியும், மகோற்கடமூர்த்தியினுடைய திருமேனியில் ஒருரோமமேனும் அசையவில்லை. அதன்மீது இந்திரன் அக்கினிதேவனைக்கூவி, நீயும் வாயுவோடுசென்று உனது வலுமையைக் காட்டக்கடவையென்று கட்டளையிட்டனன். உடனே வாயுதேவனேடு அக்கினிதேவனும் சண்டமாருதமும் வடவாக்கினியுமாகக் கலந்து,சர்வசங்கார காலத்திற் பஞ்சபூத பௌதிகாத்மகமாயுள்ள சகத்துக்களையெல்லாம் பஸ்மஞ்செயவதுபோலத் தகித்து வருவதினுல்

சத்தசமுத்திரங்களுஞ் சலமின்றி வற்றிப்போயின. சகலலோகங்களும் அக்கினிச் சுவாலையால் வாடிப்போயின. இவ்வதிசயத்தை மகோற்கடப் பிள்ளையார்கண்டு, சிறிது புன்னகைசெய்தனர். அப்புன்னகையை அக்கினிதேவன் தாளமாட்டாது மூர்ச்சையாயினன். அதற்குமேல் மகோற்கடமூர்த்தியானவர் இந்திரன்கொண்டிருக்கின்ற அறிவின்மையை நீக்கத்திருவுளங்கொண்டு,ஓர் விசுவரூபமெடுத்து,அனந்தமுடிகளும்- அனந்தசிரங்களும்- அனந்தமுகங்களும்- அனந்தவிழிகளும்- அனந்தசெவிகளும்- அனந்தவாய்களும்- அனந்தபுயங்களும்- அனந்தகரங்களும்- அனந்தவிரல்களும்- அனந்தமார்புகளும்- அனந்தவயிறுகளுமாகி, ஏனைய அவயவங்களும் அனந்தவனந்தமாய் விளங்கச் சகலமுந்தாமாகி நின்றனர். அப்படிநின்றபோது அவருடையதிருவடிகளெல்லாங் கீழேழு லோகங்கட்கும அப்பாற் போயிரங்கின.அவருடையமுடிகளெல்லா மேலேழுலோகங்கட்க அப்பாற் போய்ப்பாய்ந்தன. அவருடைய செவிகளெல்லாம அஷ்டகுலாசலங்கட்கு மப்பாற்போய்விளங்கின.அவருடைய மயிர்க்கால்கடோறும் அளவற்ற அண்டங்கள் தொங்கின. அனேகஞ்சூரியர்கள் ஏககாலத்திலுதயமானாற்போல அவருடைய திருமேனிகளில்ஓர்சோதி உண்டாயது.அச்சோதியில் அனந்தவிஷ்ணுக்கள்- அனந்தபிரமாக்கள்- அனந்தஇந்திரர்கள்- அனந்ததேவர்கள்- அனந்தமுனிவர்கள்- அனந்தவிஞ்சையர்கள்-மற்றுமுண்டான் பேர்களும் அனந்தவனந்தமாகத் தனித்தனியே விளங்கிச் சேவித்திருந்தனர். இவ்வாறு சகலபுவனகர்த்தராகிய மகோற்கடமூர்த்தி யெடுத்திருக்கின்ற விசுவரூபத்தைக கர்வங்கொண்டிருந்தஇந்திரன்பார்த்து, மிகவுந்திப்பிரமைகொண்டு,சுவாமியினுடையமயிர்க்கால்களிற்றொங்குகின்ற அளவற்ற அண்டங்களில் ஓரண்டத்துள்நுழைந்து, அதற்குள்ளே ஈரேழுபதினாலுலோகங்களும் விண்டு பிரமனஇந்திரன்முதலானதேவர்களும் ஏனைய சீவராசிகளும் ஆலம்வித்துகள்போலவும் பனங்கொட்டைகள்போலவும் அனேகவனேகமாக விருக்கக்கண்டு,தனக்குநேர்ந்திருந்த மதிமயக்கத்தையுங கர்வத்தையுமொழித்து,நல்லறிவுதித்து, அஙகிருந்து வெளிவருதற்கு யத்தனங்கொணடான். அவ்வாறு வெளிவருவதற்குச் சக்தியில்லாமற் றிகைத்து, அஙகிருந்தவண்ணமே மகோற்கடமூர்த்தியினுடைய திருவடிகளை மனதிற்றியானித்து மிகுந்தபத்தியோடு துதிசெய்வதாயினன்.

தினந்தினம்வையகமிறைஞ்சத்திகழ்தேவதேவமாதேவநின்னை ... *
யனந்தசத்திமானென்றும்விசுவாத்துமானொன்றுமனந்தானந்த. *
மனந்துயவடியார்க்குமாறுதுவழஙகுமொருவள்ளலென்று... ... *
மினந்தூய்மையில்லாதசிறியேனுமிப்பொழுதிங் கறித்தேனெந்தாய்.

விச்சுவவந்தியனொன்றுங கணேசனொன்றும்விச்சுவமாமீசனொன்றும், *
விச்சுவாதிகனொன்றும்பரேசனொன்றும்விச்சுவாதீதனொன்றும் ... ...*
நிச்சலுநித்தியனொன்றுநிகழ் சச்சிதானந்தசொரூபனொன்று...... ...*
முச்சகநாயகனொன்றுமீசனொன்றுமுனையடியேன்முழுப்புக்கண்டேன்

சறுவவியாபகவொன்றுஞ்சுகதுக்கஞ்சருவருக்குந்தருவாரொன்றுஞ் *
சறுவவித்தைகளுக்குமாகரமென்றுஞ்சருவான்மசொரூபவொன்றுஞ்
சறுவபொருள்களுக்குமிருப்பிடமென்றுந்தகுசற்வேசானவொன்றுஞ்
சறுவான்மஞானத்திலாபாசவொன்றுமுனைச்சரணஞ்சார்ந்தேன்... *

ஐந்தொழிற்காரணரென்றுங்காரணாதீதவொன்றுமரன்மால்வேதன் *
றந்தலைவவொன்றுந்தாவரசங்கமத்தினிச்சைதன்னைநாடி...... ... *
நந்தலுறவழங்குமொருநாதவொன்றும்விஞ்ஞான சொரூபவொன்றும் *
புந்தியுணாகடந்தபூரணவொன்றுமறிந்துன்னைப்புகழாநின்றேன் ... *

இவ்வாறு தோத்திரஞ்செய்து,ஓபரர்பரவஸ்துவே-முன்னர் அடியே னுடைய பேதைமைப்புத்தியினாற் றேவரீரைச் சிறுபிள்ளை யென்று நினைத்த பெருங்குற்றத்தைப் பொறுத்தருளி,அடியேனிடத்தில் தேவரீருடைய திருவருட்பார்வை வழங்கி, அடியேனை வெளியில்விடுத்து முன்போலத் தேவரீருடைய சாந்தரூப தரிசனந் தந்தருள வேண்டுமென்று பணிந்து பிரார்த்தித்தனன். அதற்கு மகோற்கடப்பிள்ளையார் மகிழ்சுரந்து,அவனையும் வெளியிலேவிடுத்துத்,தாம்முன்போலவே பிள்ளைமைப்பருவத்தினராகி யிருந்தனர். அதற்குமேல் தேவர்கள் புட்பவருடஞ் சொரிய-ஆகாயத்தில் பஞ்சவாத்தியங்களுமுழங்க-தெய்வஸதிரீகள்நாட்டியஞ் செய்ய-கந்தருவர்கள்கானம்பாட- முனிவர்கள்வேதமோத-இவ்விதவைபவங்களோடு இந்திரனனவன்மகோற்கடமூர்த்தியை அளவற்றசிறப்பினோடும் பூசனைசெய்து, சுவாமிக்கு எக்காலத்தும் திருவடிப்பணிசெய் திருப்பதற்கு இரண்டுதெய்வஸ்திரீகளைவைத்து,கற்பகவிருக்ஷமும் அங்குசமும் வச்சிராயுதமும்பிள்ளையாருடைய திருவடிகளில்வைத்து,விநாயகனென்னுந் திருநாமமிட்டுத் தோத்திரஞ்செய்தனன். மகோற்கடப்பிள்ளையார்மீட்டுந் தேவேந்திரனிடத்தில் கிருபையுற்று,சத்துருக்களுடைய யுத்தத்திற்கு இடையாத பராக்கிரமத்தை அவனுக் கநுக்கிரகஞ் செய்து, அவன் சொன்னதோத்திரங்களை யாவர்துதிசெய்தாலும் அவர்கட்குச் சகலசம்பத்துக்களும் அளிப்போமென்று வரமுங்கொடுத்துவிடைகொடுத்தனர். பின்னர் தேவேந்திரன் அவ்விடையை முடிமேற்கொண்டு, மீட்டும் பலமுறை பணிந்தெழுந்து, மகமேருகிரியை நோக்கிச்சென்றனன். மற்றைத்தேவர் முதலியயாவரும் சுவாமியைப்பணிந்து விடைபெற்றுத் தத்தமிருக்கையையடைந்தார்கள். அதற்குமேல் மகோற்கடமூர்த்திக்கு ஆறுவது வயதாகுங்காலத்தில்,தாமே தமது சுயேச்சையினால் சகலலோகங்களினும் விளையாடும்படித் திருவுளங்கொண்டு, அங்குசம் பாசு பாசம் கமண்டலம் தண்டாயுதம் தாமரைப்பூ மான்றோல் பீதாம்பரம் முத்துமாலை மூன்றாம்பிறைச் சந்திரன் கத்தூரிப்பொட்டு தருப்பை என்னுமிவைகளையெல்லாம் பிரகாசிக்கும்படி தரித்துக்கொண்டு,சிங்கவாகன மூர்ந்து, ஒருநாள் விண்டுலோகத்திற்கும், ஒரு நாள் பிரமலோகத்திற்கும், ஒருநாள் சொர்க்கலோகத்திற்கும், ஒருநாள் நாகலோகத்திற்கும், ஒருநாள் அஷ்டதிசைகளுக்கும், ஒருநாள் மூவுலகங்களுக்கும், ஒருநாள் வனங்களுக்கும்

ஒருநாள் மலைகளுக்கும், ஒருநாள் சமுத்திரங்களுக்கும், ஒருநாள்தீவுகளுக்குமாகசசென்று விளையாடல்செய்திருக்கின்ற நாட்களில்,ஒருநாள் காசிபமுனிவருக்குச் சீடனாய், நராந்தகனுக்குப்பிரியவசனங்களைக்கூறிக்கொண்டு காசியிலே அரசாட்சிசெய்பவனாய், ஓரரசனிருந்தான். அவன் தனது புத்திரனுக்கு விவாகஞ்செய்ய நினைத்துப், புரோகிதத் தொழிலுக்குக் காசிபரையழைத்துக் கொண்டு போகும்படி தானேசுதாவாய் அவராசிரமத்திற்குவந்து, அவரைத்திரக்க தண்டன்செய்தனன். அவ்வரசனைக்காசிபமுனிவர் புத்திரவாஞ்சையோடும் பரிந்தெடுத்து,ஓராதனந்தந்திருக்கச் செய்து, அன்பனே- நீவந்தகாரியம் யாதென்று வினவினர். அதற்குக்காசிராசன் அஞ்சலியஸ்தனாய், சுவாமி- அடியேன்குமாரனுக்கு விவாகஞ் செய்யுமாறு யத்தனித்திருக்கின்றேன், அவ்விவாகம் சுவாமிகளெழுந் தருளாது நிறைவேறுவதன்று,அடியேன் சுவாமிகளைஅழைத்துச் செல்லத்தக்க புனிதனல்லேனாயினும். அக்காரியத்தை வந்து நிறைவேற்றிவைப்பது சுவாமிகளுடைய பெருங்கடமையென்றான். அதற்குக்காசிபர்கிருபையுற்று,அரசனே-யாம்சாதுன்மாசியவிரதமாரம்பித் தோமாதலால்யாம்வருதற்கொவ்வாது,நமதுகுமாரனாகியமகோற்கடன் அக்காரியத்தைச்சிறபெய்த நட்டத்தவல்லவனென்றுசொல்லி,உடனேமகோற்கடமூர்த்தியையழைத்து, அப்பனே-இவன் காசிதேசத்தரசன்,இவன்உன்னைப்பணியும்படிவந்தனன், இவனே உனக்குச்சீடனாகும், ஆதலால் இவன் மனதிற்கு மகிழ்ச்சியுண்டாகும்படி உனது காட்சியைக்கொடுத்து,இவனோடுகூட நகரத்திற்குச்சென்று, இவனுடையபுத்திரனுக்கு விவாகஞ்செய்து முடித்து,மீட்டும் இவ்விடத்திற்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அதற்கு மகோற்கடமூர்த்தியானவர் இனிவருங் காரியங்களை யாலோசித்து அதற்கிசைந்தனர். பின்னர் காசிராசன் தனது ஆசிரியரிடத்தில் விருந்துண்டு,மிக்க மனமகிழ்ச்சியோடு விடைகொண்டு, அவரதுபத்தினியாகிய அதிதியிருக்குமிடத்திற்சென்று பணிந்தனன். அவ்வதிதி அவனைப்பார்த்து,அரசனே- இம்மகோற்கடனே சிறுவன், இவன் ஒன்றையுந் தேறாமல் துடுக்காய்ச்செய்யத்துணிவன்,சிறிதும் பயமறியாதவன், இவனால்அனந்த இடையூறுகளும் உற்பாதங்களும் உண்டாகும், ஆதலால் அவைகட்கெல்லாம் நீகாப்பாற்றி, இப்போது நீ எவ்விதவாஞ்சையினா லழைத்துக்கொண்டு போகின்றனையோ அவ்வாஞ்சையோடு மீட்டு மிவ்விடத்திற் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று கட்டளையிட்டு, சுவாமியைத் தனது கரத்தினாற்பிடித்து வந்து அவ்வரசன்கையி லொப்புவித்தனள். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே, அரிபிர மேந்திராதியராலும் அரிய வேதங்களாலு மறிதற்கரிய பராபரவஸ்துவாயிருக்கின்ற மகோற்கட மூர்த்தியை அதிதியானவள் தனது அருமைத்திருக்கரத்தினாற் பிடித்துக் காசிராசனிடத்தி, லொப்புவிக்க இனிமுத்திவீட்டைத் தனக்குக் காணியாட்சியாகக் கொள்ளவல்லோனாகிய அவ்வரசன் மிகுந்தபெருவகையோடும் எமதுநாக்கனைப்பணிந்து கைப்பற்றினனென்றால், இவர்கள் பூர்வத்திற்செய்திருக்கின்ற தவத்தின் பெருமையினை யார் அளவிட்டுரைக்க வல்லவர்கள். இப்பால் காசிராசன் மகோற்கடமூர்த்தியைப் பணிந்தெழுந்து,அவரை அளவற்ற தேர்த்திரங்களோடும் வரிசைகளோடும் ரதத்தி

லேற்றிப்,பின்னர் தானுமேறித் தனது காசி நகரைநோக்கிச் செலுத்தினன். அவ்வாறு செலுத்தப்பட்ட ரதமானது கண்டகபர்வதத்திற்குச் சமீபத்தில் வர,அப்பர்வதச்சாரலில் பதினாயிரம் வருடமாய்ப் புகையையே ஆகாரமாகப் புசித்துக்கொண்டு, இரௌத்திரகேதுவுக்குஇளையவனும்தேவாந்தகனுக்கும் நராந்தகனுக்குந் தகப்பனுமான தூமாக்ஷனென்னும் பெயரையுடைய ஓரவுணன்,மகாவல்லமையுள்ள ஓராயுதம்பெறவேண்டி சூரியனைநோக்கித் தவஞ்செய்திருந்தனன். அவன் தவத்தின் முடிவு நாளுங்காசிராசன் அவ்விடத்தைச் சமீபித்தநாளும் ஒன்றாய்நேர்ந்ததால்,அத்தினம் அவ்வேளையில் சூரியனானவன் தனது லோகத்திலிருந்த வண்ணம அவன் தவத்தினுக்கிரங்கி ஓராயுதமனுப்பினன். அவ்வாயுதமானது ஆகாயமெல்லாம் அளவற்றசோதியை வீசிக்கொண்டுபூமியைநோக்கி வர, அதைமகோற்கடமூர்த்திபார்த்து, அதன்வல்லபத்தை யாமறிவோமென்றுநினைத்துச்,சரேலென்றுரதத்தினின்றும் ஆகாயத்திற்பாய்ந்து,சர்ப்பத்தைக்கருடன் பிடிப்பதுபோலஅவ்வாயுதத்தைத் தமதுகரத்தாற் பற்றி,மீட்டும் ரதத்தில் வந்திருந்து, சூரியனை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருக்கின்ற அந்ததூமாக்ஷன்மீது ஏவினர். அது அவர்திருக்கரத்தி னின்றும் வெளிப்பட்ட மாத்திரத்தில் அதிகவல்லபத்தோடுஞ் சென்று, தீயராயினோர் செய்யுந்தவமானது உடனே அவர்க்குத் தீமையைவிளைக்குமென்று சொல்லு மேலோர் வாக்கியம்போல, அப்பாதகனுடைய தலையையறுத்துக் கீழேதள்ளியது. அவனுடைய சரீரமானதுஐந்நூறுபனைவிசாலத்திற்கு விழுந்தது. இவ்வற்புதத்தைக் காசிராசன் பார்த்து மனதில் அதிசயமும் பயமும் உண்டாகி, ஐயோ- நமக்குவல்லமையில்லாத்தினாலன்றோ நராந்தகனுடைய ஏவற்பணிகளை நடாத்திக்கொண்டு யாவரும்புகழும்படியாக இதுகாறும் ஒருசங்கட மில்லாமல் அரசாட்சி செய்து வருகின்றோம்,நமதுகுமாரனுக்கு ஒருவிவாகம் நடப்பிக்கவேணுமென்று இத்தினம்இவரை இங்ஙனமழைத்துவந்தோம்,அதனால்நமது சம்பத்துங் குடியுங்குலமும் ஒருங்கே நாசமாகும்படியாயநேர்ந்ததே,இவரோபுரோகிதருடைய குமாரர்,அவனோ தனது வெற்றியினால் திரிலோகங்களையுமடக்கி ஆண்மைகொண்டிருக்கின்ற அரசன்-இந்தச் சிறியவருடைய சார்பால் நமக்கு யாதுகூடிவரப்போகின்றது,அந்தப் பெரியவனுடைய சார்பை இத்தினம் சுத்தமாயிழந்து போனோமே, ஆஅ ஆஅ, என்ன செய்தோம்,இனி யென்னசெய்யப்போகின்றோம், என்றிவ்வாறு நினையாததெல்லாம் நினைந்து நினைந்து துயரமுற்றிருந்தனன். அக்குறிப்பினை மகோற்கடமூர்த்தி அறிந்தும்அறியாதவர்போல விருந்தனர். அச்சமயத்தில் இறந்துபோன தூமாக்ஷனுக்குப் பணிசெய்திருந்த மகாபராக்கிரம சாலிகளாகிய செகனனென்றும் மனுவென்றுஞ்சொல்லநின்ற அவன் புத்திரர்களிருவர் வந்து,மகோற்கடமூர்த்தியைப்பார்த்து,ஓ பிள்ளாய்-உனக்கு ஒருபிழையுஞ்செய்யாமல் அளவற்றநாளாய் அரியதவஞ் செய்துகொண்டிருக்கின்ற எங்கள்பிதாவை வீணேகொன்றனையே, அறிவற்றவனே-உனதுநிருவாகம் அவ்வளவுபெரிதோ, அதை இப்போதே அழிக்கின்றோம் கர்வங்கொள்ளாதே யென்றுசொல்லிப்,பயந்திருக்கின்ற காசிராசனைப் பார்த்து, அடாபேதாய்- நீ அன்றே ஆடிக்காற்றிலலையும் இலவம்பஞ்சுபோ

ல எங்கும் நிலைப்படாமல் துன்பப்பட்டுக்கொண்டிருந்தனை, அப்படி யி
ருந்த வுன்னைச்சகலபாக்கியங்களையு மநுபவிக்கவைத்து,உனக்கு வேண்டி
ய வியாபாரங்களையுஞ் செய்த எங்கள்பிதாவுக்குப் பிரதியுபகாரம்,இச்சி
றுவனைக்கொண்டு அவர் உயிரைவாங்கும்படிச் செய்வித்தனை யல்லவா,
நன்மைசெய்தோர்க்குத் தீமைசெய்வோர்களுடைய சம்பத்தும் ஆயுளு
ம் நிலைபெறாதென்று பெரியோர்கள் சொல்லும்வாக்கியத்தை உலகத்தா
ரறியும் வண்ணம் இப்போதே உன்னிடத்திற்செய்துகாட்டுகின்றோம்பா
ரென்றுசொல்லிஆக்கிரமித்து,அவ்வரசன்மேல்விழவந்தார்கள். அப்போ
தவ்வரசன் பின்னும் பயந்து நடுக்கமுற்று,ஒருவர்க்கொருவர் குறைவற்ற
பராக்கிரமத்தினையுடைய வீரர்களே-உங்களுக்கு இடையூறு செய்யும்ப
டி இச்சிறுபிள்ளையையானழைத்துவந்தவனல்லன்,யானடத்தப்போகின்
ற விவாக நிமித்தமழைத்து வந்தேன், எவ்வளவும் அச்சமும் பயமுந்
தெரியாத மிகவுமிளமையான இச்சிறுவன்செய்த பெரும்பிழையை நீங்
கள் பொறுக்கவேண்டும்,திரிலோகங்களினுங் கீர்த்திபெற்றிருக்கின்ற நீங்
களே எங்கள்மீது கோபித்து உபத்திரவஞ்செய்யத் தொடங்கினால் யா
ங்கள் என்னசெய்யப்போகின்றோம்,என்றிவ்வாறு மனங்கலங்கி நடுங்கி
ப் பலமுறைதாழ்ந்தவசனங்களாற் பிரார்த்தித்தான். அதைமகோற்கடமூ
ர்த்திகேட்டு,தாமும் பயந்தவர்போல ஒருதிருவிளையாட்டாகக்காசிராசனை
ப்பார்த்து, அரசனே-என்னை எனது தாய்தந்தையரிடத்திலிருக்கவொட்
டாமற் கொண்டுவந்தனை, வந்தவிடத்தில் சத்துருக்களாயினோர் உபத்தி
ரவஞ்செய்யவந்தால் நீ அவர்களோடெதிர்த்து யுத்தஞ்செய்து கொன்று
என்னைக்காப்பாற்றுகிற வகையைத்தேடாமல் அவர்களோடு இதவான
வார்த்தைகளைப் பேசுகின்றாய்,அவ்வாறுபேசினும் அவர்கள்மூர்க்கர்களா
கையால் உன்னையுமென்னையு மோதாமல்விடார்கள், உன்னிலும் பராக்
கிரமமுடைய அரசன் உன்னைக் கோபித்தால் உனது வுயிரும் சம்பத்து
மேபோய்விடும்,எனதுதந்தையினுடைய மனதுசிறிதுகோணுமாயின் இ
ப்பிறப்பில் தவம் தானம் சம்பத்து உயிர்முதலானயாவும் நாசப் படுவத
ன்றி வருபிறப்பிலும் வாழ்வைக்கெடுத்து எழுபிறவிகள்தோறும்பலதுன்
பங்களைவிளைக்குமென்று நீயறிந்தாயில்லை,ஒருவனுக்குத் தவசீலராகிய எ
னதுதந்தையினுடையகிருபைசிறிதுண்டாயின் மேலானபராக்கிரமசாலி
களாகிய அரசர்களா லுண்டாகுமிடர்கள் அவனுக்குச்சிறிதுமில்லை,சந்தி
ரனிடத்துற்ற முயலைப் பிடிப்பதற்குச் சிங்கம் வல்லதோ,என் றிவ்வாறு
திருபாநிதியாகிய மகோற்கடமூர்த்தி திருவாய்மலர்ந்தனர். முன்னர் அவ்
வவுணர்கள்கூறிய வன்மொழிகளையும் பின்னர் மகோற்கடமூர்த்தி திரு
வாய்மலர்ந்தருளிய இன்மொழிகளையுங்காசிராசன்கேட்டு,இருதலைக்கொ
ள்ளியிலகப்பட்ட எறும்புபோல அவனது மனம் ஒருநிலைபடாமல் அங்
குமிங்குமாகச் சுழல,அக்காட்சியை மகோற்கடமூர்த்தியறிந்து,எதிர்த்து
வந்த இரண்டவுணர்கள் மீதுஒருபெருமூச்சுவிட்டனர். அப்பெருமூச்சா
னது முன்னொருபோது நந்திதேவருடைய உயிரப்பு கருடனை அந்தரத்
திலெவ்வாறலைத்ததோ அவ்வாறு அவர்களைக்கொன்று வாரிக்கொண்டு
போய் நராந்தகனுடைய கொலுச்சபையிலே இரண்டுபர்வதங்களைப்போ
லப்போட்டது. அப்போது அளவற்றஉத்திரங்களுடைந்து பொடியாயின.

வச்சிரத்தூண்களனைத்தும்பிளந்துபோயின. அழகுறச் சமைத்திருந்தமேடைகளெல்லாம் இடிபட்டன. எங்கும்புழுதியெழும்பி அவனுடையசபையையெல்லாம் மூடிக்கொண்டன. இவ்வித உற்பாதங்களை நராந்தகன் கண்டு பயந்து, ஒருகோலென்று சிம்மாதனத்தினின்று இழிந்து, அந்தப்புரத்திற்சென்று ஒளித்துக்கொண்டு, மனங்கலங்கித், தூதர்களை விரைவிற்கூவி, இவ்வுற்பாதம்யாது காரணத்தால்வந்ததோ அதனை அறிந்துவரக் கடவீர்களென்று துரத்தினன். உடனே அவர்களும் அவ்வாறேசென்று தெரிந்துகொண்டு, பதைத்தும் வெயர்த்தும் ஓடிவந்து, நராந்தகனைப்பணிந்து நின்று, ஆண்டவனே! காசிராசனென்பவன் தனதுபுத்திரனுக்கு விவாகஞ்செய்யநிமித்தந்தன்னுடையபுரோகிதனாகியகாசிபமுனிவனிடத்திற்சென்று அவனிடத்தில்பாலசந்திரனைப்போலவளர்ந்துகொண்டிருந்த மகோற்கடனை அழைத்துக்கொண்டு, மீட்டுங் காசிப்பட்டணத்தை நோக்கிச் செல்ல, அம்மார்க்கத்தில் தேவரீருடைய சிறியதந்தையாகிய தூமாக்ஷர் தவஞ்செய்துகொண்டிருக்க, அப்புதுமையை அச்சிறுவன்பார்த்து, ஓர்விளையாட்டாக அவரைக்கொன்றனன். அதை அவருக்குப் பணிசெய்திருந்த அவர்புத்திரர்கள்கண்டு, உடனே அச்சிறுவனிடத்தி லோடித், தங்களுக்குண்டாகிய மனவருத்தத்தினால் அவனைப்பலமுறை வைது எதிர்த்து நின்றனர், அதற்கச்சிறுவன் கோபங்கொண்டானில்லை, அத்திர சத்திரங்களையுந்தொடவில்லை, தனது பெருமூச்சினாலேயே அப்புத்திரர்க ளிறக்கும்படி செய்து, அவர்சரீரங்கள் இச்சபையில் வீழவுந்தள்ளினன், அவர்கள் இங்கேவிழுந்ததினாலே சபைமுழுவது மழிந்துபோனதன்றி, சபையிலிருந்தவர்களிற் சிலர் துவையலானார்கள், சிலர் தோள்முதலிய அவையவங்களை யிழந்தார்கள், சிலர் தப்பி ஓடிப்போனார்கள், இப்போது அக்காசிராசன் அச்சிறுவனோடு தனதுதேரைச்செலுத்திக்கொண்டு அம்மார்க்கமாகத்தான் போகின்றானென்றார்கள். அவையனைத்தையு நராந்தகன் கேட்டுக், கோபநகைகொண்டு, பெருமூச்செறிந்து, இங்கிருந்து வெளிப்படுமுன்னமே, தண்ணீரினின்று நீங்கிய முதலையைப்போலக் காசிபனிடத்தினின்று நீங்கிச் செல்லுகின்ற அம்முனிச்சிறுவனைக் கொல்லுகின்றே னென்று வைராக்கியஞ்செய்துகொண்டு, கொடுமையிற்சிறந்த இராக்கதர்களில் ஐஞ்ஞூறுபேரையழைத்து, நீங்கள் இந்நிமிடத்திற்சென்றுகாசிபன்மகனையுங் காசிராசனையுங் கைப்பிடியாகப்பிடித்து நமக்குமுன் கொண்டுவந்துவிடக்கடவீர்கள், ஒருவேளை அவர்கள்மறங்கொண்டு போர்செய்வார்களாயின், உடனே அவர்களைக் காக்கைக்குங் கழுகுக்கு மிரையாக்கிவாருங்களென்று ஆக்கியாபித்தனன். அம்மாத்திரத்தில் அவர்கள் இதோ முடித்தோமென்று பணிந்தெழுந்து, ஓர்நொடிப்போதில் சூரியனைமேகங்கள் சூழ்ந்துகொண்டாற்போலக் காசிராசனுடைய தேரைச்சுற்றினுஞ் சூழ்ந்துஆர்ப்பரித்துக்கொண்டு, மகோற்கடமூர்த்தியைப்பிடிக்கநெருங்கினார்கள். அப்போது எமதையன் ஓராயுதமேனுங் கைப்பற்றாது, மேககர்ச்சனையைப்போல ஒருபேரொலிகாட்டினர். அப்பேரொலிக்கு அவ்வீரர்கள் தாளமாட்டாது, பேரிடியோசையினைக்கேட்ட அசுணமா எவ்வாறு நடுங்கி இறக்குமோ, அவ்வாறு யாவரும் பூமியிலேவிழுந்து பதைபதைத்து இறந்துபோனார்கள். காசிராசன் தனதுதேரைச்செலுத்திக்கொண்டு போயினன்.

அவ்வதிசயத்தைக்கண்ட சில தூதர்கள் விரைந்தோடி, நராந்தகனைப்பணிந்தெழுந்து, ஆண்டவனே- முன்னர் தேவரீருடைய கட்டளையின் படிச்சென்ற வீரர்களெல்லாங் காசிராசனுடைய தேரைச்சூழ்ந்துகொண்டார்கள், அப்போது அவ்விராசனோடு மிருக்கின்ற அப்பிராமணச் சிறுவன் கோடைகாலத்து இடியைப்போல ஓர்தொனிவிட்டு ஆர்ப்பரித்தான், அத்தொனிக்கு நமதுவீரர்கள் தாளமாட்டாமல் சர்ப்பங்களைப்போல பூமியில்விழுந்து இறந்துபோனார்கள், ஆண்டவனே- உருவிலேசிறுவனென்று நினைத்து அந்தத் தெய்வச்சிரேஷ்டனைப்பகைத்தால் சகலதுன்பங்களும் வரும், அவனுடைய வலியைக்குறித்து யோசனைசெய்து அவனைப் பூசித்தால் பெருமைபெறலாமென்று சொன்னார்கள். அதைக்கேட்ட மாத்திரத்தில் காய்ந்த செப்பூசியைக் காதிலேற்றினாற்போலநராந்தகனுக்குக்கோபமேலிட்டு, சரீரமெல்லா மழல்போலச்சிவந்து, தனக்கு அழிவுகாலநேரிட்டபடியால் துர்ப்புத்திமேலிட்டவனாகி, மிகக ஆவேசத்தோடும் அத்தூதர்களைப்பார்த்து, அறிவீனர்களே-யுத்தத்தில்எதிர்த்து வாராதவனைத்தெய்வசிரேஷ்டனென்று சொன்னீர்கள், உங்களுடைய பேதைமைப்புத்தியினால் உங்களுக்கு நீங்களே பேடியென்று காட்டிக் கொண்டீர்கள், யாங்களோசிவபிரானைநோக்கி அளவற்றநாள் தவஞ்செய்து அரிய வரங்களைப்பெற்று பிரமன்முதலியதேவர்களை யெல்லாம் ஒடுக்கி நமக்கு ஏவலாக்கிவைத்திருக்கின்றோம், எங்களுடைய பராக்கிரமத்தை எவ்வளவும் யோசியாமறபோனீர்கள், அம்முனிப்பயலோ நேற்றையதினத்திலுதித்தவன், ஒருகல்வியுங் கல்லாதவன், ஆயுதபரீக்ஷை ஒன்றுந்தெரியாதவன், அரியதவங்களைச்செய்து பெரியவரங்களைப் பெறாதவன், ஓர்சேனையேனுமில்லாதவன், யாதுமற்று ஒருவனாயிருக்கின்ற பையலை நீங்கள் மேலானவீரனென்று சொன்னீர்கள், ஓரெலிபூமியைத்தோண்டி மலையைச்சாய்க்குமோ, ஓர் விட்டிற்பூச்சி வடவாமுகாக்கினியையவிக்குமோ, அதுபோல ஓர்சிறுபையல் என்னுடனேயுத்தஞ்செய்துகொல்லுவானென்றுநீங்கள் அவனை என்னிலுமேலாகச்சொன்னீர்களல்லவா, ஆஅ-ஆஅ-நன்றாயிருக்கின்றது நன்றாயிருக்கின்றது, என்றிவ்வாறு அத்தூதர்கள் மீதுதன்னுயிரைப்பாதுகாத்துக்கொள்ளும்வகை யின்னதென்று தெரிந்துகொள்ளாத நராந்தகன் கோபாவேசங்கொண்டு, அவர்களை அந்தக்ஷணமேகொன்றுவிட்டு, வேறே சிலதூதர்களைத் தனது மனதிற்கேற்றபடி ஆராய்ந்துவைத்து, மாயையிலும் யுத்தத்திலும் வல்ல சிலஅவுணர்களை அந்நிமிட்டத்தில் வரவழைத்து, அவர்கட்கு அளவற்றவெகுமதிகளைக்கொடுத்து, ஓ நண்பர்களே - நீங்கள் யாவரும் விரைவிற்சென்று காசிராசனையும் காசிபனுடையமகனையும்பிடித்துக் கொண்டு வாருங்கள் என்று ஆக்கியாபித் தனுப்பினன். அவ்வாறே செய்து வருகின்றோமென்று அவ்வீரர்கள் பணிந்து விடைகொண்டார்கள். இப்பால் விடைகொண்டு காசிராசனை நோக்கிச் செல்லுகின்ற அவ்வீரர்கள் ஓரிடத்தில்யாவரும் ஒருமிக்கக்கூடி, மேலான வல்லமையையுடைய மகோற்கடனுக்கெதிரே நாம்போய்வென்று வருவது மிகவுமரிதாதலால், நாமனைவருந்தனித்தனி வெவ்வேறுமாய வடிவங்களைக்கொண்டுசென்று அவ்விருவரையுங் கொல்ல வேண்டும், அல்லது மற்றெந்த விதத்தாலாவது அவர்களைக்கைப்பிடியாகப்பிடித்து நமது அரசு

னெதிரிற்கொண்டுவந்து விடல்வேண்டும்,இந்தஇரண்டிலொன்றுசெய்து நமது ஆண்டவனைக்குச் சந்தோஷமுண்டாக்கிவைப்பதே நமக்குரிய பெருங்கட்மையென்றிவவாறு யாவருந் தீர்மானஞ்செய்து கொண்டு,அதிக வேகத்தோடும் வழிநடந்தார்கள். அதற்குள்ளே காசிராசன் மகோற்கடமூர்த்தியினுடனே அனேகங்காடுகளையு மலைகளையுங்கடந்து சென்று தனது நகரவெல்லையையடைந்தனன். அப்போது அரசன் வருகிறசெய்தியை அமைச்சர்களும் அந்நகரவாசிகளும் அறிந்து,காசிப்பட்டணமுழுவதும்அலங்காரஞ்செய்வித்து,வீதிகளையெல்லாம்தேவேந்திரலோகம்போலச் சந்தனம்பனிநீர் தமனியப்பொடி மலர்கள் இரத்தினங்கள் முதலியவைகளால்அழகுறச்செய்து, அளவற்றவரிசைகளோடு மெதிர்சென்று பணிந்தார்கள். இவ்விதவைபவங்களோடுதேவதேவோத்தமராகியமகோகடற்மூர்த்தியானவர் நகரத்தினுள்ளே பிரவேசிக்க, அப்போது அவ்விபவங்களைக் காணவந்த ஸதிரீகளெல்லா மகோற்கடமூர்த்தியினது அற்புதமாகிய ரூபலாவண்ணியங்களை நேத்திரோற்சவமாகக் கண்டு, அளவற்ற ஆசைப்பெருக்கென்னுங் கடலின் மூழ்கினார்கள். அவருட் சிலர் பர்வதங்கள் மீதிருக்கும் அரம்பாஸ்திரீகளைப்போல ஆகாயவளவி லோங்கிய உப்பரிகையின் மீதிருந்து,தமக்குள்ள புத்திர வாஞ்சையோடு மகோற்கடமூர்த்தியைக் கண்டு தரிசிக்க,உடனே அவர்கள் மனமானது கரையுமாறு இரண்டு குசங்களிலும் பால் சுரந்து பாயும்படி நின்றார்கள். சிலர் மலை முழையிற் றவஞ்செய்கின்ற சந்திரனைப்போலத் தங்கடங்கள் முகங்களைச் சாளரங்களின் வழியாகநிறுத்திச்,கொலைத் தொழிலை வல்ல தமது கண்கள் குளிரும்படித் தரிசித்தார்கள். சிலர் நாணமிகுதியால் தங்கள் பாதியுருவைக் கதவின்கண்ணும் பாங்கியருடைய வுடலின்கண்ணு மறைத்துத் தொழுதார்கள். சிலர் வட்டிலின்கணுள்ள பாலைக் கிள்ளைக்கூட்டுங் தொழிலோடு விரைந்துசென்று,மகோற்கடமூர்த்தியினுடைய பேரழகைக்கண்டு,அக்கிள்ளையினையே அவர்பால் தூதாகவிடுத்தார்கள். சிலர்தாங்கள் எழுதிக்கொண்டிருந்த சித்திரத்தைவிடுத்து மகோற்கடமூர்த்தியைத் தரிசிக்கச்சென்று,மீட்டும்வந்து முன்னெழுதிய வுருவத்தை முடிக்கவெண்ணினவர், அவ்வுருவோடு மகோற்கடமூர்த்தியினுடைய வுருவையெழுதிமுடித்து ஆச்சரியப்படுவார்கள். சிலா ஒரு கண்ணுக்கு அஞ்சனந்தீட்டி யோடிவந்து கிருபாநிதியாகிய மகோற்கடமூர்த்தியைத் தரிசித்துச்சென்று மற்றொருகண்ணுக்கு மஞ்சனந்தீட்ட, அப்படித்தீட்டியும் சுவாமியைத்தரிசித்ததனாலுண்டான ஆனந்தபாஷ்பத்தால் முன் தீட்டிய அஞ்சனமழிந்து யோக ஒரு கண்மையினர்களே யானார்கள். சிலா அண்ணலாராகியமகோற்கடமூர்த்தியைக் கண்டவுடன்தமது ஆசைப்பெருக்கத்தால் அணிகளெல்லாங் கழன்று விழ, அவைகளை மீட்டு மெடுத்தணிபவர் தமது மதிமயக்கத்தால் நுதலிலணியும் படியான இரத்தினமாலைகளைமுலைகளுக்கும்,முலையிலணியும்படியான முத்துமாலைகளை நுதல்களுக்குங்,கால்களிலணியும்படியான கிண்கிணிகளைக் கரங்களுக்குங்,கரங்களிலணியும்படியான வளைகளைக் கால்களுக்கு மணிவார்கள் இவ்வாறு பேதைமுதல்பெதும்பைபிறருயுள்ள எழுவகைப்பருவங்களையுடைய ஸ்திரீகளெல்லாங் கண்கள் கிழிந்தும், வளைகளிழந்துங், குழல்கள்

சோர்ந்தும், வார்கள்நெகிழ்ந்தும், மேகலையொழிந்து நின்றார்கள். அங்கு வந்திருந்த ஆடவர்களும் இம்மணித்தேரின்மீது வருகின்ற புண்ணியமூர்த்தி முன்னர் திரிபுராதிகளை யெரித்தருளிய சிவபிரானோ விண்டுவோ பிரமனோ மற்றையாவனோ வறிகிலேமென்று பேசிக்கொள்ளுவார்கள். இவ்வண்ணமாடவரும் ஸ்திரீகளும் ஆசைக்கடலில் மூழ்கி ஆனந்தமெய்து ம்படி எமதையனுகிய மகோற்கடமூர்த்தியொருவரோ புத்திரனாக நினைத்தவர்கட்குப் புத்திரனுகவும், பிதாவாக நினைத்தவர்கட்குப் பிதாவாகவும், தமையனாகநினைத்தவர்கட்குத் தமையனாகவும், தம்பியாக நினைத்தவர்கட்குத் தம்பியாகவும், மருமகனாகநினைத்தவர்கட்கு மருமகனாகவும், மைத்துனனாகநினைத்தவர்கட்கு மைத்துனனாகவும், மாமனாக நினைத்தவர்கட்கு மாமனாகவுந் தரிசனங் கொடுத்ததல்லாமல், மாலாக நினைத்தவர்கட்கு மாலாகவும், பிரமனாகநினைத்தவர்கட்குப் பிரமனாகவும், இந்திரனாகநினைத்தவர்கட்கு இந்திரனாகவும், சிவபிரானாகநினைத்தவர்கட்குச் சிவபிரானாகவுமிருந்து, எவ்வெவர் எந்தெந்த தெய்வமாகநினைக்கின்றார்களோ அவ்வவர்கட்கு அந்தந்தத்தெய்வமாகத் தரிசனந்தந்து, யாவருக்கும் பேரானந்தத்தை யளித்துக்கொண்டு சென்றனர். அச்சமயத்தில் நராந்தகனேலேவிய அவுணவீரர்களில் கந்தரனென்றும் விகண்டனென்றுஞ்சொல்லுகின்ற இரண்டுவீரர்கள் அக்காசிநகர்த்துப்புரோகிதனுடைய குமாரர்களைப்போல மாயரூபங்கொண்டு, மகோற்கடமூர்த்திக்கெதிரேமிக்க அன்புடன்வருகின்றவர்போல ஆசிகவேகமாய்வந்தார்கள். அவர்களைசுவாமியும்ஆவலோடெதிர்கொள்பவர்போல உடனே தேரைவிட்டுக்குதித்து அவர்களருகிற்சென்றனர். அப்போது அப்பாதகர்சுவாமியைத்தழுவநேர்ந்தனர். சுவாமியுமதற்கிசைந்து, தாமுமவர்களைத் தழுவுவார்போல இருவரையும் ஒன்றாக இறுகத்தழுவி, அவர்களுடைய பராக்கிரமத்தையும் வலியையும் வஞ்சனையையும் மாயையினையும் சரீரத்தினையுமொருமிக்கவழித்து, அனிச்சப்பூவைக்கசக்கி யெறிவதுபோலத்தமதுகரத்தினால்அவர்களைக்கசக்கியெறிந்து, மீட்டுந் தேரின்மீதாரோகணித்தனர். அவ்வற்புதத்தையாவருங்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். உடனே பதங்கனென்றும் விதுலனென்றுஞ் சொல்லுகின்ற இரண்டவுணர்கள் சண்டமாருதம்போல வுருக்கொண்டு, மேகங்களனைத்துங் கீழ்மேலுங்கிரும்படியாக மிகுந்த ஆரவாரங்களைக் காட்டிக், காசிப்பட்டணத்திலுள்ள மாடமாளிகை கூடகோபுர முதலானவைகளையெல்லாம் பெயர்த்திடித்து, வீதிகளிலே குப்பல் குப்பலாகத்தள்ளி, சுவாமி ஆரோகணித்திருக்கின்ற ரதத்தையும்பெயர்க்கும்படி முயித்தார்கள். இவ்வாறாகவே அந்நகரத்திலுள்ளவர் என் செய்யவல்லர், யாவரும் அல்லோல கல்லோலப்பட்டு வருந்தினார்கள். அவ்வஞ்சகத்தை மகோற்கடப்பெருமானறிந்து, தமதுதாளக்கணணிந்திருக்கின்ற ஆதிசேடனையெடுத்துவிடுத்தனர். அவ்வாதிசேடன் வெளிப்பட்டமாத்திரத்தில் தனது ஆயிரம்வாய்களையுந்திறந்து, சண்டமாருதத்தையெல்லாஞ்சீறிவிழுங்கிவிட்டனன். அதனால் அப்பாதகர்வலியிழந்து, தங்கள்சுயரூபத்தோடுசுவாமிக்கெதிரில்நின்றார்கள். உடனேமகோற்கடமூர்த்திரதத்தினின்றுங் குதித்து ஒருகரத்தால்அவர்கள் இரண்டுபேரையும்பிடித்துச், சிறுகிறென்று சுழற்றி, செற்கல்லைமோதுவதுபோலப்பூமியிலெறிந்து, அப்பட்டணத்திற்கப்பா

ற்போய்விழும்படியாக எறிந்து,வீதிகளில் அழிந்துகிடக்கின்றமாடமாளிகைகளையெல்லாம் பார்த்தருளினார்.அவைகளனைத்தும் வீதிகளை விட்டெழும்பி,பதாப்பிறகாரந் தத்தம்வடிவங்களைப் பெற்று, முன்னிலு மதிகமான அழகினையடைந்திருந்தன.இவையனைத்தையுங்காசிராசன்பார்த்து,அச்சோ-நமது அறிவின்மையினாலே முன்னர் இவரைச்சிறுபிள்ளையென்று நினைத்தோமே,ஆ, ஆ- என்னகாரியஞ் செய்தோம், இதுகாறும் இவர்நடத்திவந்த காரியங்களைப்பார்த்தால் அற்புதங்களாகவேயிருக்கின்றன, இவர் சகலலோகசரண்ணியராகியகர்த்தாவேயன்றி வேறல்லவென்று தனக்குள் திடங்கொண்டு,மிகுந்தபத்தியோடும் ஆவலோடும் அனந்தமுறைவலம்வந்து,அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்காரஞ்செய்து,தனது தேரை விரைவிற் செலுத்திக்கொண்டு,தோரணமுதலிய அலங்காரங்களால்நிறைந்த தனது அரண்மனைவாய்தலின் முன்னதாகவந்தனன். அப்போது கூடனென்னும் ஓரவுணன் சுவாமியை உள்ளேநுழைய வொட்டாமல் தடுக்கவேண்டுமென்றெண்ணி,அவ்வாய்தலில் ஓரடைக்கல்லாகவடி வங்கொண்டிருந்தனன்.அக்காரியத்தை மகோற்கடமூர்த்தியறிந்து, சமீபத்திலிருக்கின்ற காசிராசனைநோக்கி, அரசனே-இவ்விடையூறு நீங்குவதற்குப் பிள்ளையாருக்கு ஆயிரந்தெங்கின்கனியுடைக்க வேண்டுமென்று திருவாய் மலர்ந்தனர். அதை அருகிருந்தவர்கள் கேட்டு,உடனே ஆயிரந் தெங்கின்கனிகளைப் பொதிகளிலேபோட்டுக்கொண்டு வந்து வைத்தார்கள். அவைகளின்மீது மகோற்கடமூர்த்திமந்திரநீர்தெளித்து,அங்கிருந்த குழுஉக்களைப்பார்த்து,நீங்களனைவரும் ஒவ்வொருகனியையெடுத்து இவ்வடைக் கல்லின்பேரில் தூளாகும்படி அறையுங்களென்று கட்டளையிட்டனர். அக்கட்டளையைஅங்கிருந்தோர்யாவருஞ்சிரமேற்கொண்டு,ஒவ்வொருவர்ஒவ்வொருகனியையெடுத்துஅப்பாறைமீதறைந்தார்கள். பின்னர் அவ்வளவும்அத்திரங்களாகி,அப்பாறையைப் பொடிப்பொடியாகச்சிதைத்துவிட்டன.அதற்குமேல்பாறைவடிவங்கொண்டிருந்த அப்பாதகன் தனது சுயரூபத்துடனே ஆக்கிரமித்து நின்று, அரசன்முதலியயாவரும் பயந்தோடும்படி அட்டகாசஞ்செய்து,ஏககாலத்தில் எல்லாரையு மெடுத்து விழுங்கும்படியத்தனித்தான்.அதனை மகோற்கடமூர்த்தியறிந்து, தமது பாசாயுதத்தை அவன்மீது விடுத்து அவனுயிரைமாய்த்தனர்.உடனே அவ்வவுணன் ஓர்பர்வதம்போலப்பூமியிலேவிழ,அதையாவருங்கண்டு நடுக்கமுற்றார்கள். அப்போது மகோற்கடமூர்த்தியானவர் தமது புருவங்களைநெளித்துப் பூமியைப்பார்த்தனர்.உடனேபூமியானது பிளந்து அவன்சரீரம்பாதலத்திற்போய விழும்படிவிழுங்கிவிட்டது.அவ்வற்புதத்தை யாவருங்கண்டு ஆனந்தமடைந்தார்கள். அதற்குமேல மகோற்கடமூர்த்தியானவர் ரதத்தினின்றுமிறங்கிப்பூமியிலேநின்றனர்.அப்போதுசுமங்கலியஸ்திரீகள்வந்து சுவாமிக்கு அரக்குநீர்சுற்றிப்போயினர்.அரசனும் சிலையினைச் சுற்றியெறிந்துகண்ணூறுகழித்து,கூட்டங்கூட்டமாயிருக்கின்ற சனங்களை விலக்கித் தனது முன்னங்கையை நீட்டினன். அக்கையின்மீது மகோற்கடமூர்த்தியானவர் தமதுதிருக்கரத்தினைவைத்துக்கொண்டு, திருவடிகளிற் பாதுகைசூடி,மெல்லமெல்லஅரமனைக்குள்ளாகச்சென்று, சொர்ணத்தாற்சமைத்து நவரத்தினங்களாற் பதித்திருக்கின்ற சபாமண்டபத்தை யடைந்து

தமது அன்பர்களுள்ளம்போன்று சிங்கங்களாற சுமக்கப்பட்டிருக்கின்ற
ஆசனத்தின்மீதெழுந் தருளினர். அப்போது அங்கிருந்தயாவருமிகுந்த
பத்தியோடுபணிந்தார்கள்.ஸ்திரீகள்நாட்டியஞ் செய்தார்கள். சுவாமி தம்
மைப்பணிந்தெழுந்தவாகட்கெல்லாம் அருள்வழங்கினர். பின்னர் அரச
ன் அங்கிருந்தவர்களையெல்லாம் விலக்கித்,தனதுமனைவியர் மக்கள முத
லான யாவரையுமழைத்துச், சுவாமியைப் பணியும்படிச்செய்து,பின்னர்
தானும் சுவாமியுமாகப் போசனஞ்செய்து முடித்து, அந்திக்காலம் வந்த
வுடன் சுவாமிக்குப்பள்ளியறைசோடித்து வைத்தனன். அதில் மகோற்
கடமூர்த்தி யெழுந்தருளினர். அரசன்- சில காவலரைக்கூவி அப்பள்ளி
யறைவாய்தலைக்காத்திருக்கும்படிச் செயது, தானுநித்திரை செயதனன்.
முன்னர் தேவேந்திரனால் விடுத்த இரண்டு தோழியர்களும் சுவாமிக்கு
இராமுழுதுந் திருவடிப்பணிசெய் திருந்தார்கள். அறுதியிற்றானேஆ
ணவவிருளில் மறைபட்டிருந்த ஆன்ம கோடிகளெல்லாங் கன்மங்கட்
கீடான சரீரங்களை யெடுத்து தாபத்திர யாக்கினிகளாற் றகிக்கப்படுந்து
யரங்களினின்றுஞ் சிறிதிளைப் பாறும்படி சர்வசங்கார காலத்தில் அவை
களைத் தமதுசரத்தி லொடுக்கிவைத்து, மகாசுழுத்தி லிருக்கும்படி அக்
காலமுடிவுவரையில் தாமும் பிரமானந்த நித்திரைகொண்டு மீட்டு ம
வைகட்குத் தனுகரணபுவனபோகங்களாற் கன்மங்களைப் புசிப்பித்து,அ
க்கன்ம வொப்பில பாசபந்தங்களைப் போக்கி முத்தியிற்சோக்கு நிமித்
தந் திரிமூர்த்திகள் சொரூபமாகச் சகளங்கொண்டருளிய விநாயக மூா
த்தியானவர்,அவ்வான்மாக்கள் நித்தநித்தமனுபவிக்கின்ற அல்லல்களினி
ன்று நீங்கிச் சிறிது சுகத்தையனுபவிக்கும்படியாக நித்திய சுழுத்தியையு
ந் தரவெண்ணிக்,தாமத்திருப பள்ளியறையில் அமைத்திருக்கின்ற மலர
மளியின்மீது சிவானந்த நித்திரைசெய்தருளினர். கேட்டீர்களோசவுன
காதிமுனிவர்களே, காசிராசன் தனது அரமனையைச சேருகின்றவரையி
ல் மகோற்கடமூர்த்தி செய்தருளிய திருவிளையாட்ல்களிது,பின்னர் செ
ய்தருளிய திருவிளையாட்ல்களையும் பாந்தமாகச் சொல்லுவோங் கேட்பீ
ராக.சர்வான்மாக்களும்நித்தியசுழுத்தியிலிருந்துசிறிதுசுகத்தையனுபவிக்
கும்படி சிவானந்த நித்திரைசெய்தருளிய மகோற்கட மூா்த்தியானவர்,பி
ன்னரவ்வான்மாக்க ளெழுந்து வினைப்போகங்களைப் புசிக்குமாறுவைக
றைப்போதில் தமது திருவிழியைமலாத்தி,உலகமனைத்தும் உய்யும்வகை
யை நாடி நித்தியநியதிகளை நிறைவேற்றும்படி,ஒபபாருமிக்காருமில்லாத
தாமும் நித்தியநியதிகளை நிறைவேற்றித், தம்மைத்தரிசித்தோ ரெலலாஞ்
சனனவாதனையினின்று மொழியும்படியாகப்,பின்னர் வீதியிலே விளையா
ட்ல் செய்கின்ற பிளளைகளோடு தாமும் விளையாட்ல் செய்வாராயினா
இவ்வாறு சகலபுவனகர்த்தாவாகிய விநாயகமூாத்தியானவர் காசிராசன்
கடைத்தேறும்படி அவன் அரமனையிலெழுந்தருளி யிருக்கின்ற ரென்று
அவ்வரசன் புரோகிதராயிருக்கின்ற தருமத்தர் கேழ்வியுற்று,மிகவும்ஆ
னந்தபரவசத்தராய் அவ்வரமனைக்குவந்தனர். அவ்வரவைக்காசிராசனறி
ந்து, அவரை எதிர்கொண்டழைத்துவந்து,ஓாதனத்திலிருத்திப் பூசைசெ
ய்து,இருகரங்களையுங்கூப்பி, சுவாமி-தேவரீர் இங்ஙன மெழுந்தருளுவதா
ன பெரும்பாக்கிய மடியேற்குக் கிடைத்தது யாதுகாரணத்தினாலோ அ

தனைத் திருவாயமலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்கப்புரோகிதர் சொல்லுவார், அரசனே-சகலலோகங்களு முய்யும்படித்திருவவதாரஞ்செய்தருளியகர்த்தாவைஇந்நகரத்திலுள்ளோர்யாவருஞ் சீவன்முத்தியடையும்படியாக நீயழைத்துவந்தனையன்றே, தருமமுதலிய நான்கு புருஷார்த்தங்களையு மேலானகீர்த்தியோடு பெற்ற நின்னை யொத்த புனிதர்கள் இவ்வுலகின்கண்யாவரிருக்கின்றார்கள், இத்தன்மைத்தான மேலான பாக்கியத்தை நீயடைந்திருக்கின்றனை யாதலால் நமது மனத்தின்கண் ஓரிச்சையுண்டாயது, அஃது யாதெனில்-நமக்கு இரண்டு புத்திரிகள் உற்பவித்திருக்கின்றனர், அவர்களை உனதுபாக்கியமாய்வந்த மகோற்கடமூர்த்திக்குக் கன்னிகாதானமாகவிவாகஞ்செய்விப்பதற்குஓரிச்சைகொண்டிருக்கின்றோம், அவ்விச்சையை நீயேநிறைவேற்றிவைக்கவேண்டுமென்று சொல்லினர். அதை அரசன்செவிகுளிரக்கேட்டு, நமது ஆசிரியருடைய குமாரர்க்குச் சரியானசம்பந்தத்திலே விவாகஞ்செய்து முடிக்கவேண்டுவது முறைமையேயாதலால் நேரிட்ட காரியத்தைக்கூட்டி முடித்துவைப்பதே கருமமென்று துணிந்து, சுவாமி- அவ்வாறேசெய்து முடிப்போமென்று சொல்லினன். அதைத் தருமதத்தர் கேட்டவுடன் அவ்விடத்தினின்றும் நீங்கி, வீதியில் சிறுபிள்ளைகளோடு விளையாடல் செய்திருக்கின்ற மகோற்கடமூர்த்தியினிடத்தில் வந்து, அவரது கரங்களைப்பிடித்துக்கொண்டு, கட்டழகினையுடையகாளாய்-உமதுதந்தையாகிய காசிபர் எனக்கு மிகவும் அருமைச்சினேகர், யாங்களிருவரும் உடலில் இரண்டாகவிருப்போமன்றி உயிரில் ஒன்றாகவேயிருப்போம், அப்படிப்பட்டவருடைய தவத்தினாலே அவரிடத்தில் அவதாரஞ்செய்த வும்மை முக்கியமாய்க் காணவேண்டி மிகுந்த ஆவலோடும்வந்தேன், இனி எனதுகிரகம் பவித்திரமாகும்படி இத்தினமே நீர்அவ்விடத்திற்கு வந்து, எனது புத்திரிகளிருவோரையும் விவாகஞ்செய்து கொடுக்கப்பெற்று, எனது குலங்களைக்காத்தருளவேண்டுமென்று சொல்லி, மகோற்கடமூர்த்தியை ஓர்பல்லக்கின்மீதேற்றிச், சகலவைபவங்களோடுந் தமதுஆசிரமத்திற்கு அழைத்துக் கொண்டு போயினர். அப்போது காமனென்றுங் குரோதனென்றுஞ் சொல்லுகின்ற இரண்டசுர்கள் கழுதைவடிவமெடுத்துக்கொண்டு, ஒன்றோடொன்று சண்டைபோடுவதுபோல நான்குதிசைகளிலும் புழுதியெழக்கொள்ளும்படி சுவாமிக்கருகேவந்தார்கள். அதைமகோற்கடமூர்த்தியறிந்து, ஓர் திரணமெடுத்து இரண்டாகக்கிள்ளி, அந்தஇரண்டு கழுதைகளின்மீதும்வீசினர். உடனே அத்துரும்புகள்இரண்டுவேங்கையாகி, அவ்விரண்டுராக்ஷசக்கழுதைகளையும்பிடித்துஇழுத்துக்கொண்டுவனத்திற்குப் போய்விட்டன இவ்வாறு மாயாகாரியங்களிலேவல்ல அவுணவீரர்களில் அளவற்றபேர் மகோற்கடமூர்த்தியினுடைய வல்லபத்தை அறிந்துகொள்ளாமல், விட்டிற்பூச்சிகள் தாமேவிளக்கில்வீழ்ந்துஇறக்கின்றாற்போலநாடோறும்இறந்துவருகின்றதை கேள்வியுற்றிருந்ததருமதத்தர்நேரிலுங்கண்டவராகி, மகோற்கடமூர்த்தியைச் சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, இருகரங்களையுஞ்சிரமேற்கூப்பி, சுவாமி-இதுகாறுந் தேவரீர்செய்தருளிய திருவிளையாடல்களையெல்லாம் எனது இரண்டுசெவிகளுங் குளிரும்படிகேட்டு அளவற்றமகிட்சியையடைந்திருந்தேன், இப்போது நேரிற்செய்தருளிய திருவி

ளையாட்டையெனது இரண்டுகண்களுங் குளிரக்கண்டு பேரானந்தக்கட
லின் மூழ்கினேன்,ஓபராபரப்பொருளாகிய கர்த்தனே - மானைக்காட்டி
மானைப்பிடிப்பதுபோல வேதங்களாலு மறியக்கூடாத தேவரீர் அடியே
ங்களையெல்லா நற்கதியிலே சேர்ப்பிக்குநிமித்தம் அடியேங்களைப்போல
ரூபங்கொண்டு - உண்ணல் - உடுத்தல் - உறங்கல் முதலானவைகளையு
ஞ் செய்து விளையாடுகின்றீர், தேவரீருடைய பெருமையை யாவரால‌றி
யக்கூடும், என்றிவ்வாறு அளவற்ற தோத்திரங்களைச்சொல்லி, அவ்வி
டத்தினின்று நீங்கிச் சுவாமியை யழைத்துக்கொண்டு சிறிதுதூரஞ்செ
ன்றனர். மீட்டுங் குண்டனென்னு மோரவுணன் யானைரூபங்கொண்டு,
மும்மதங்களும் ஒழுகிப்பாயும்படி அதிக வேகத்துடனே சகலரும் நடு
ங்கி ஓடத்தக்கதாகச சீறிக்கொண்டு, தடுக்கவந்த வீரர்களையெல்லாம் அ
தா அதப்படுத்தி, அடுக்கடுக்கா யிராகின்ற மாடமாளிகைகளை யெல்லா
மிடித்தெறிந்து, தனதுபார்வைக்கெதிரே கொண்டுவந்த பிடியானைகளை
யெல்லாமுடுக்கி, எங்கும் அல்லோல கல்லோலப்படுத்திக்கொண்டு, ம
கோற்கடமூர்த்திக் கருகில் திருப்பாற்கடலைக்கலக்கியமந்திரகிரியைப்போ
ல வார்ப்பரித்துக்கொண்டு வந்தான்.அப்போது தருமதத்தர்பயந்து மெ
ய்மறந்து,தமக்குச்சுவாமியின் மீதிருக்கின்றவிழைவினாலே அவரைத்தோ
ளினமீதேற்றி அப்பாலோடிப்போகவேண்டுமென்றுகருதி, மகோற்கடமூ
ர்த்தியை யெடுக்கநேர்ந்தனர். உடனேமகோற்கடமூர்த்தியானவர் தம்மை
எடுக்க நேர்ந்த தருமதத்தருடைய கரங்களை இம்மென்றுதள்ளிப்,பயந்து
ஓடிவருகின்றவர்களையெல்லாம் அஞ்சாதீர்களென்று கையமர்த்தி,ஞேரே
லென்று பல்லக்கினின்று மிரங்கி,அச்சமற்றுவருகின்ற அந்த யானையின்
சமீபத்திற்சென்று,அதன் மத்தகத்தின்பேரில் தமதுகரங்கொண்டமட்டு
மறைந்து,வாலைத்பிடித்துக்கிறுகிறென்று வட்டமாகச்சுழற்றித், துதிக்கை
யைப்பிடித்துப் பறபறவென்று முன்னும்பின்னுமாக விழுத்துப்,பாதங்க
ளினால் என்புகள்முறியும்படியாகவுதைத்துச்,சிறிதுதூரப்போய் அங்கிரு
ந்துவந்து பிடிகொடாத வகைபாய்ந்து,குப்புறக்கீழேயிழத்தள்ளி, அதன்
மத்தகத்தை மிகித்தவண்ணம் பிடரியின்மீதேறி யுட்கார்ந்து, யாவருங்க
ண்டு சந்தோஷமாகும்படியாக அதனை நான்குவீதிகளினு மோடவிட்டு
உபத்திரவப்படுத்தினர். அவ்வுபத்திரவத்தை அவ்வவுணனாகிய யானை ச
கிக்கமாட்டாமல் பூமியிலே வீழ்ந்திறந்தது.அதற்குமேல் மகோற்கடமூர்த்
தியானவர் மீட்டும் பல்லக்கின்மீதாரோகணிதது, தருமதத்தருடையஆச்
சிரமத்தை யடைந்தனர். உடனே தருமதத்தா சுவாமியை ஓராதனத்திலி
ருத்தி,சந்தனம் புட்பமுதலிய திரவியங்களைக்கொண்டுபூசைசெய்துகொ
ண்டிருந்தனர். அப்போது முன்னர் இறந்துபோன தூமாக்ஷனுடைய ம
னைவியாகிய சிரம்பையென்பவள் தனது கணவனுக்கு நேர்ந்த சம்பவத்
தைக்கேட்டுமனம்வருந்தி,ஒருதீங்குஞ்செய்யாதநமது பராக்கிரமசாலியா
கிய கணவனைக்கொன்ற காதகன் எவனோ அவனை எவ்விதவுபாயத்தி லே
னும் யாம்கொல்லவேண்டுமென்று வஞ்சினங்கொண்டு,தருமதத்தருடை
ய பந்துவிலுள்ள ஓர் ஸதிரீயைப்போல ரூபங்கொண்டு,விடங்கலந்திருக்
கின்ற தயிலத்தைக கையிலேந்தி வந்து, மகோற்கடமூர்த்தியை மிகுந்தப
த்தியோடு பணிந்து தோத்திரஞ்செய்து,சுவாமி-இத்தயிலம்பரிமளமுடை

ப்பட்டிருக்கின்றது,ஸ்நானஞ்செய்வதற்கு மகாயோக்கியமுள்ளது,இதைத்தேவரீர்க்கென்றே யானருமையாயச் செய்துகொண்டுவந்தேன்,ஆதலாலிதை சுவாமிகளுடைய திருமேனியிற் பூசும்படி உத்தரவாகவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அவ்வஞ்சகத்தை மகோற்கடமூர்த்தி யறிந்து ஒப்புக்கொண்டனர். உடனே அப்பாதகி சுவாமியை வேறோராதனத்திலிருக்கவைத்து,அவருடையமுடியிற்றயிலத்தைவிட்டுத்தேய்த்துத்,திருமேனிமுழுவதும் அத்தயிலத்தையே தடவினள். கேட்டீர்களோ சகவுனகாதிமுனிவர்களே, முன்னொருபோதுதேவர்கள் முதலியயாவரும் பயந்தோடும்படியாகத் திருப்பாற்கடலின்கணுதித்த ஆலகாலவிடத்தைச் சிவபிரான் அமுதாகபபுசித்தனரென்றால், அவர் குமாரராகிய மகோற்கடமூர்த்திக்கு இவ்விடத்தயில மென்செயயவல்லது;ஒருத்தர்பாற்கேடு செய்யநினைத்தவர்கட்கு அக்கேடு அவர்களைத்தானேபற்றுமென்று பெரியோர்கள் சொல்லும்வாக்கியத்தைப்போல, அத்தயிலத்திற்கலந்த விடமெல்லாம் அச்சிரம்பைக்கே தலைக்கொண்டு இறந்துபோயினள். இவ்வற்புதத்தை அங்கிருந்தயாவருங்கண்டு ஆனந்தமடைந்தார்கள். இப்பால் மகோற்கடமூர்த்தியானவர் ஸ்நானஞ்செய்தனர்.உடனேதருமதத்தர் வீடுமுழுவது மலங்காரஞ்செய்தனர். காசிராசன்தனது சேனு சமுத்திரங்களோடும் வந்துசேர்ந்தனன். மகோற்கடமூர்த்தி வேறோரிடத்திற்சென்று, சகலவாபரணங்களையுந் தமதுதிருமேனியி லணிந்துகொண்டனர். தருமதத்தருடைய புத்திரிகளாகிய சித்திபுத்திகளு நீராடித் திருமணக் கோலங்கொண்டனர். பின்னர் தருமதத்தரானவர் மகோற்கட மூர்த்தியையுஞ் சித்திபுத்திகளையுங் கலியாணப்பந்தலி லெழுந்தருளச்செயது,முத்திக்களையும் ஓமகுண்டத்திலெழுப்பி, அத்தீயின்முன்பாக மந்திரநீரினால் தமது புத்திரர்களை மகோற்கடமூர்த்திக்குத் தத்தஞ்செய்தனர்.முன்னரேதமக்குத்தேவியர்களாயிருந்த அச்சித்திபுத்திகளை மகோற்கடமூர்த்தியானவர்மீட்டும் உலகமெல்லாம் கடைத்தேறுமாறுதருமதத்தரினின்று மேற்றுக்கொண்டவராய், ஏனையசடங்குகளையுங்கிரமப்படிசெய்து முடித்திருந்தனர்.என்று சூதமுனிவர் சொல்லிவரும்போது,சவுனகாதிமுனிவர்கள் அவனைப்பணிந்தெழுந்து, சுவாமி- அச்சித்திபுத்திகள் யார், தருமதத்தர்என்பவர் யார், அதனையுந் தேவரீர் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குச்சூதபுராணிகரிசைந்து, ஓசவுனகாதிமுனிவர்களே - சதுர்வேதங்களாலும் இன்னுமறிதற்கரிய வக்கிரதுண்ட மூர்த்தியானவர் காசிபமுனிவருக்குப் புத்திரராக வரப்போகின்ற செயலினை முன்னரே பிரமதேவனறிந்து, அக்காலத்தினு மவரைத் தரிசிக்க வேண்டுமென்னும் விழைவினால் தருமதத்தராகவந்து பிறந்திருந்தனர். பின்னர் அவ்வக்கிரதுண்டமூர்த்திக்கு ஞானசத்தியுங் கிரியாசத்தியுமாகி எக்காலத்தும் பிரிதலில்லாதசித்திபுத்திகளும் முன்போலவே தங்களை சுவாமி விவாகஞ்செய்துகொள்ளு நிமித்தம் பிரமதேவனாகிய அத்தருமதத்தரிடத்தில் புத்திரிகளாகி, முன்வகித்திருந்த திருநாமத்தினையேவகித்து வளர்ந்துகொண்டிருந்தனர். அதனால் மகோற்கடமூர்த்தி அவர்களை யாவருமுய்யும்படியாக விவாகஞ்செயது கொண்டனர். இப்பால் விவாக காரியங்களையெல்லா நிறைவேற்றியருளிய மகோற்கடமூர்த்தியைக் காசிராசன் பணிந்தெழுந்து,

சுவாமி- தேவரீர் அடியேனுடைய அரமனைக்கெழுந்தருள வேண்டுமெ
ன்று பிரார்த்தித்தான். அதற்குப்பராபரவஸ்துவாகிய மகோற்கட மூர்த்தி
யிசைந்து, தமதுதேவிமார்களோடுசிங்கவாகனத்திலாரோகணித்தனர். கா
சிராசன் தனது பட்டபக்குதிரைமீதேறினன். அந்நகரத்திலுள்ளோர் யா
வரும் பற்பலவரிசைகளோடு நான்குமருங்கினுஞ் சூழ்ந்தனர். மங்கலபே
ரி முதலியவாத்தியங்கள் தாம் தாமென்று முழங்கின. முனிபுங்கவர்கள்
யாவரும் வேதாகமங்களாற் றுதிசெயதார்கள். இவ்வித வைபவங்களோடு
எமதையனுகிய மகோற்கடமூர்த்தி தருமதத்தருடைய மனையினின்றும்
வெளிக்கொண்டு, காசிராசனுடைய அரமனையைச்சேர்ந்து, சித்திபுத்திக
ளை அந்தப்புறத்திலிருத்தித, தாம் அடியவருள்ளம்போலப்பிரகாசித்திருக்
கின்றசபையில் இரத்தினமயமா யோங்கிய சிம்மாதனத்தின்மீது யாவ
ருந்தரிசிக்கும்படியாக வெழுந்தருளியிருந்தனர். அப்போதுகாசிராசன்ஒ
ருபக்கத்திலிருந்து, அங்குவந்திருந்த அமைச்சர்முதலியதனது துணைவர்க
ளைப்பார்த்து, அன்பர்களே-நமதுகுமாரனுக்கு விவாகஞ்செய்விக்கவேண்
டுமென்னுங்கருத்தை ஆசிரியராகியகாசிபமுனிவருக்குயானறிவிக்க, அவர்
இப்புண்ணியமூர்த்தியையனுப்பினர். யான்செய்ததவத்தின்பெருமையை
என்னென்று சொல்லுவேன், அரிபிரமேந்திராதியராலுங் காண்டற்கரிய
கருணாநிதி இக்காசியிலுள்ளோர் யாவருந்தரிசித்துப்பரிசுத்த ராகும்படி
வந்திருக்கின்றனரென்று சொல்லினன். அதனைக் கல்வியினுங் கேள்வியி
னுஞ்சிறந்து ஆலோசனையினும் புத்தியினும் மிகுத்திருக்கின்றவோர் மந்
திரி அவ்வரசனைப்பார்த்து, ஆண்டவனே-துன்மார்க்கத்திற்சிறந்த தேவா
ந்தகனுக்கும் நராந்தகனுக்கும் நமது தீவினைகளைப் போக்கத்தக்க இக்கர்
த்தாவினுற் பகையாயினேம், அவர்கள் எவ்விதத்தினும் படையெடுத்து
இங்கேவருவார்கள், அப்படி அவர்கள்வந்து நமது சுவாமிகளுடைய திரு
க்கரத்தினுல் முத்தியடைந்தபின்பு நமது விவாகத்தை யத்தனித்தால் ஓரி
டையூறில்லாமல் நிறைவேறும், அதற்குமுன் யத்தனஞ்செய்தோமாயின்
இடையிடையில் அப்பாதகர்களுடைய சல்லியங்கள் நேரிட்டுக்கொண்
டேயிருக்கும், ஆதலால் ஒருபக்ஷம அல்லதுஒருமாதவளவும்யாதொன்று
ஞ்செய்யாமல் சும்மாயிருக்க வேண்டுமென்று சொன்னுன். அதற்குஅர
சன் ஒப்புக்கொண்டனன். சுவாமியும் புன்னகைசெய்து, அவ்விரண்டவு
ணர்களும் இங்ஙனம் விரைந்துவந்து எமதுகையினுல் மடிவரல்லாமல்எ
ங்ஙனம் போகவல்லவர்களென்று திருவாய்மலர்ந்தனர். அவ்வாக்கியத்
தை அமைச்சர் முதலியயாவரும் செவிகுளிரக்கேட்டு ஆனந்த பரவசத்
தராகி, ஒவ்வொருவராய் சுவாமியைப்பணிந்து விடைபெற்றுத்தத்தமிரு
க்கையை யடைந்தார்கள். பின்னர் அஸ்தமன காலம்வந்துவிட்டது. உட
னே மகோற்கடமூர்த்தியானவர் உலோகத்தாரைப்போலத் தாமும் சந்தி
யாவந்தனமுதலியவைகளை நிறைவேற்றிப் போசனஞ்செய்து, தமது தே
வியரோடு சப்பிரகூடமஞ்சத்தின்மீது பள்ளிகொண்டு நித்திரைசெய்தரு
ளினர். அவ்விரவில் விதாரணன் சுவாலாமுகன் வியாக்கிரமுகன் என்று
சொல்லுகின்ற மூன்றசுரர்கள் அப்பட்டணத்தையழிக்கும்படி வந்து, விதா
ரணன் பெருங்காற்றாகவும்சுவாலாமுகன் நெருப்பாகவுங்கலந்து, அப்பட்ட
ணத்துக் கோபுரவாய்தலைப்பிளந்து உள்ளே நுழைந்தார்கள். வியாக்கிரமுக

ன், அவ்வாய்தலில் ஓடிவருகின்றவர்களையெல்லாங் கொல்லும்படியாகத் தனது மேலுதடு ஆகாயத்தையுங் கீழுதடு பூமியையும்பொருந்தும்படிவாயை அங்காந்துகொண்டிருந்தனன். இவ்வாறு இம்மூவருங்கூடி செய்துவந்த கொடுமையினாலே மாடமாளிகைகளெல்லா மெரிந்தன. பஞ்சலோகங்களெல்லா மொடிந்து உருகிப்போயின. இரத்தினங்களெல்லாம் பொரிந்தன. கற்களனைத்தும் பொடிப்பொடியாயின. ஆகாயமுழுவதும் புகைப்படலங்கள் மூடிக்கொண்டன. விருக்ஷங்களனைத்துங் கரிந்தன. அந்நகரத்திலுள்ளோர்யாவரும் நித்திரையினின்றுந் திடுக்கிட்டெழுந்து மனங்கலங்கிப் பலதிசைகளினும் ஓடியொளிக்க இடந்தேடினார்கள். சிலர் எவ்விடங்களினுந் தீப்பட்டெரிவதினாலே தங்கஇடமில்லாமல் தத்தளித்தார்கள். சிலர் யானைகளைத் தளையவிழ்த்துவிட்டார்கள். சிலர் குதிரைகளை யவிழ்த்துவிட்டார்கள். சிலர் பசுக்களை யவிழ்த்துவிட்டார்கள். சிலர்கன்றுகளை யவிழ்த்துத்துரத்தினார்கள். சிலர்விருத்தர்களையும்சிறுபிள்ளைகளையுங் குழந்தைகளையும் ஏந்திக்கொண்டு இவர்களை எங்கேவைத்துக் காப்பாற்றுவோமென்று ஏங்கினார்கள். சிலர் தங்கஇடமில்லாமல் நெருப்புக்கிரையானார்கள். ஒருவாறு தப்பியோடிப்போகின்றவர்களும் வியாக்கிர முகனுடைய வயிற்றினுக்கிரையாவார்கள். இவ்வாறு அம்மூன்று பாதகர்களால் காசிநகரமுழுவதும் அல்லோலகல்லோலப்பட்டதன்றி, நெருப்புச்சுவாலையினாலுண்டாகின்றசத்தமும் பெருங்காற்றினாலுண்டாகின்றசத்தமும் யானைகுதிரைமுதலானவைகளாலுண்டாகின்ற சத்தமும் சனங்களுடைய கூக்குரல்களினாலுண்டாகின்றசத்தமும் ஒன்றாகக்கலத்தலினால், வெகுதூரத்திலிருக்கின்றோர்களுங்கேட்டவுடன்நடுங்கிப்பயந்துபோயினர். இச்சம்பவத்தையறிந்தசிலதூதர்கள்விரைந்தோடி அரசனையெழுப்பியறிவித்தார்கள். அவ்வரசன் அதைக்கேட்டஉடன்பயந்து, மகோற்கடமூர்த்தியிடத்திற்சென்றெழுப்பி யறிவித்தனன். கனவிற்சுழுத்தியோடு மிருக்கின்றமகோற்கடமூர்த்தியானவர் ஒன்றுமறியாதவர்போல விரைந்தெழுந்து வெளிக்கொண்டு, பயந்திருக்கின்ற அரசனைத் தேற்றிக், கமண்டலத்திலிருந்தசலத்தைத் தமது திருககரத்திற்கொண்டுவீசி, வடவாமுகாக்கினியையுஞ்சண்டமாருதத்தையுந்துலைத்து, அந்தந்தரூபத்தைக்கொண்டுவந்த இரண்டவுணர்களையுங் கொன்று, அப்பட்டணத்தினுடைய வாய்தலின் வழியையடைத்து வாயைத்திறந்துகொண்டிருக்கின்ற வியாக்கிரமுகனிடத்திற் சென்று, தாமும் ஓர் பேருருவைக்கொண்டு, அப்பாதகன் பூமியில் வைத்திருக்கின்ற கீழுதட்டினமீது தமது இரண்டு திருவடிகளைவைத்து மெரித்து, ஆகாயத்தையளாவிய மேலுதட்டைத்தமது திருக்கரங்களினால் பற்றிக்கிழித்து ஓர்பர்வதம்போலப் பூமியிலே விழும்படிக்கொன்று, இறந்துபோனவுயிர்களையும் அந்நகரத்தையுந் தமது கிருபாநோக்கத்தாற் பார்த்து, முன்னிருந்தபடியே யாவையுமுண்டாக்கி அரமனையைச்சேர்ந்தனர். அவ்வற்புதத் திருவிளையாட்டினை அரசன்பார்த்து, இருவிழிகளினும் ஆனந்தபாஷ்பஞ்சொரியும்படியாக சுவாமியெதிரில்வந்து, பலமுறை பணிந்தெழுந்தெழுந்து, வேதாகமங்களினாலே அளவற்றதோத்திரங்களைச் செய்து, சுவாமி-இத்தினம் தேவரீரிடத்தில் சிருட்டி திதி சங்காரமென்கின்றமுத்தொழில்களையுங் கண்டேன், அடியேனுடைய தீவினைகளை யெல்லாம் விட்டே

ன்,பிரமவிண்டுக்களாலும்அனுபவித்தற்கரியசுகத்தையானனுபவித்தேன், என்றுபலமுறைதுதிசெய்து ஆனந்தபரவசனாகியிருந்தனன். இப்பால் அவ்வவுணபாதகர்களுடையஉள்ளக்கறுப்பும் உடற்கறுப்பும் ஒழிந்ததுபோனமையை மகோற்கடமூர்த்தியை யஞ்சுவிக்ககறுத்தவான்கறுப்பானது கண்டொழிந்ததுபோலஇருளொழிந்தது.உடனே அக்காசிப்பட்டணத்தினுடையநூதனவலங்காரத்தைத்தரிசிக்கவருவான்போலச் சூரியனானவன்கீழ்த்திசைக்கடலினுதயமாயினன். அதற்குமேல்காசிராசன் காலைக்கடன்களைநிறைவேற்றி,அந்தப்புறத்திலிருக்கின்ற தனதுபட்டபதேவியையடைந்து,பெண்ணே-நாமெல்லாமுய்யும்படி மகோற்கடனென்னுந்திருநாமத்தோடு அவதரித்தருளியசுவாமிகள்என்னோடுகாசிபமுனிவருடைய ஆச்சிரமத்தைவிட்டுவருகின்றமார்க்கத்திலே தூமாக்ஷனென்பவனைச்சங்கரித்தருளினர்,பின்னர் தம்மையெதிர்த்துவந்த அவன்புத்திரர்க ளிருவோரையுந்தமது சுவாசத்தினால் ஓர்நிமைப்போதில் சங்கரித்தருளினர், அதற்குமேல்நராந்தகனுடைய ஏவலினால் வந்த ஐந்நூறு அவுணவீரர்களைத் தமது ஒரேகர்ச்சனையினால் நாசமாக்கினர்,இப்பட்டணத்திற்குவந்த பின்பு மாயையினால் வஞ்சவடிவங்கொண்டுவந்த அளவற்ற அவுணவீரர்களை மாய்த்தனர்,இவைகளையெல்லாம் யாவருஞ்சொல்ல நீகேட்டிருக்கின்றனை யல்லவா இன்னுமித்தன்மைத்தான உபத்திரவங்கள் எத்தனைவரினும் ஓர் நிமைப்போதில்அவரோநீக்கவல்லவர்,நாம்முற்பிறப்பில்யாதுதவஞ்செயதிருக்கின்றோமோ அறியோம்,வேதங்களாலுங்காணற்கரியகர்த்தாவை நம்மிடத்தில் வந்திருக்கும்படியான பாக்கியத்தைப்பெற்றிருக்கின்றோம்,ஆதலால்இந்த மேலானமூர்த்திக்கு யாம் சதாகாலம்பணிசெயது கொண்டிருப்போமாயின் தருமமுதலிய நான்குபொருள்களையும்எளிதிற்பெறலாமென்றுசொல்லினன். அவையனைத்தையும் ராசபத்தினிகேட்டு,ஆனந்தபரவசத்தளாகி,சுவாமிக்குத்தனதுகையினால் அன்பே முழுவதும்பரிமளிக்கும்படியாக விருந்துசமைத்தனள். அதை அரசன் கண்டு,தனதுகையினால் சுவாமிக்குத்தயிலமாட்டி,வாசனையூட்டியிருக்கின்ற திவ்வியதீர்த்தங்களினால்ஸ்நானஞ்செய்வித்து,திருவொற்றாடைசாத்தி, நூதனமாகச்செய்யப்பட்டிருந்த குழை அங்கதம் பொன்முடி கடகமுதலிய இரத்தின பரணங்களையும் பீதாம்பரமுதலிய வஸ்திரங்களையும் அன்போடுதரித்துத் துதிசெய்தனன். அதற்குமேல் ராசபத்தினிவந்துதீர்க்கதெண்டன்செய்து,சுவாமி-தேவரீர் அமுதுசெய்யத்திருவுளங்கொண்டருள வேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்குமகோற்கடமூர்த்திஇசைந்து, அரசனுந் தாமும்போசனஞ்செய்கின்ற விடத்திற்சென்று வெவ்வேறாதனங்களி லிருந்தனர். உடனே ராசபத்தினியானவள் இருவருக்கும் பரிகலமமைத்து, அதில் நாலுவகையுண்டிகளையும் பரிமாறினள். பின்னர் அவ்விருவரும் சந்தோஷத்தோடு அமுதுசெய்துகொண்டிருக்கையில்,அரசன்சுவாமியையும் அவர் பரிகலத்தையும் பார்த்தனன். அப்போதவர்மீது தானணிந்த ஆபரணங்க ளன்றிப் பின்னுஞ் சிலமேலான ஆபரணங்கள் பிரகாசிக்கவும்,பரிகலத்தில் தனது பத்தினியிட்ட பதார்த்தங்களன்றி இன்னுஞ்சில இனிமையான பதார்த்தங்கள் விளங்கியிருக்கவுங்கண்டு,ஈதென்ன ஆச்சரியமென்று திகைத்து, ஞெரேலென்று சுவாமியைத்தொழுது,கர்த்தனே-நானணிந்த ஆபர

ணங்களும், எனது மனைவிபடைத்த பதார்த்தங்களுந்தவிர, இன்னுஞ்சில பதார்த்தங்களும் ஆபரணங்களும் விளங்கிப்பிரகாசிக்கின்றனவே, ஈதென்ன அற்புதம், இக்காரியத்தை அடியேற்கு இன்னதெனத்தெரிவித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கு மகோற்கடமூர்த்தி புன்னகைசெய்து அரசனே-நமது திருமேனியில் திவ்வியமான ஆபரணங்கள் பிரகாசிப்பதும் நமது பரிசலத்தில் வேறுவேறான பதார்த்தங்கள் விளங்கியிருப்பதும் உனக்குவிவரமாகச்சொல்லுகின்றோம் கேள், நமதன்பர்களிலொருவன் தண்டகவனத்திலே வசித்திருக்கின்றனன், அவன் பெயர் புருசுண்டி யென்பார்கள், அவனே தேவர்களும் வழிபடத்தக்க யோக்கியத்தை யுடையவன், அப்படிப்பட்ட அவனே இத்தினம் தனக்கிணையான விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்திவிரதமாதலாலே நம்மைமிகுந்த பத்தியோடு பூசனைசெய்து, இவ்வாபரணங்களையும் உணவுகளையும் நமக்கு அற்பிதஞ்செய்தனன், அவன் பத்திபூர்வமாக அற்பிதஞ்செய்தயாவும் இங்கே நமக்கு இஷ்டமாயின. அவனுடைய பெருமைகள் யாவராலுஞ்சொல்லிமுடிவனவன்று, நீ கண்ட அதிசயத்திற்கு இதுதான் காரணமென்று திருவாய்மலர்ந்தனர். அவையனைத்தையும் அரசன் செவிகுளிரக்கேட்டு, ஆனந்தபரவசனாகி, உடனே வாய்பூசிவந்து, கர்த்தனே-அத்தன்மைத்தான மேலானமுனிவரை அடியேன் அவசியம்பணியவேண்டும், அவரை இங்ஙனமழைத்து அவருடைய திருவடிகட்குச் செய்யத்தக்கபணிகளை அடியேன் செய்தல்வேண்டும், ஆதலால் சுவாமிகள் அடியேற்குண்டாகிய இச்சையை நிறைவேற்றிவைப்பது பெருங்கடமையென்று பணிந்து விண்ணப்பஞ்செய்தனன். அதற்கு மகோற்கடமூர்த்தி கிருபையுற்று - அரசனே - அவ்வன்பன் இங்கே வரவேண்டுவையெனில் யாம் சொல்வதைக்கேள், நீ இப்போதே தண்டகவனத்திற்சென்று, தவசிரோஷ்டனை அவனுடைய மேலான பாதங்களைப்பணிந்து துதிசெய்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி நின்று, உனது அபீஷ்டங்களை அவனிடத்தில் விண்ணப்பஞ்செய்து, யாம் விவாகநிமித்தம் உனது கிரகத்தில் வந்திருப்பதையும், உன்னைவிட்டு யாம் அழைத்துவரச்சொன்னதையும் விவரமாகச்சொல்லி அழைத்துவரக்கடவையென்று திருவாய்மலர்ந்தருளினர். அதைக்கேட்டவுடன் அரசன் அளவற்றமகிழ்ச்சியையடைந்து, சுவாமி கட்டளையிட்டவண்ணம் அப்போதே பணிந்து விடைபெற்று, ரதத்தின்மீதேறி, வாயுவேகத்தினுமுந்தி அதனைச்செலுத்தி, அளவற்றமலைகளையுங் காடுகளையுங்கடந்து, தண்டகவனத்தைச்சேர்ந்து, திரிமூர்த்திகளுடையவுலகங்கட்கிணையாகவிருக்கின்ற ஆச்சிரமத்தையடைந்து, தவசிரோஷ்டராகிய புருசுண்டிமுனிவரைக்கண்டு, அவருடைய பாதபதுமங்களைப் பலமுறைபணிந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி நின்று, வேதாகமங்களினால் அளவற்றதோத்திரங்கள் செய்து நின்றனன் அவனை அம்முனிபுங்கவர் பார்த்து-அரசனே-நீயார், இங்குவந்தகாரியமென்ன சொல்லென்றுகேட்டனர். அதற்கரசன் ஆனந்தமாகி, சுவாமி-அடியேன் காசிதேசத்தரசன், அடியேனுடைய கிரகத்தில் விநாயகமூர்த்தியெழுந்தருளியிருக்கின்றனர், நேற்றையதினம் சுவாமியும்யானும் போசனஞ்செய்துகொண்டிருக்கும்போது தேவரீருடைய பூசாமகத்துவம் சுவாமியினிடத்தில்விளங்கியது, அதன்மீது சுவாமிகள் தேவரீருடைய மகிமைகளை

த்திருவாய்மலர்ந்து, தேவரீரைத் தம்மிடத்திற்கு அழைத்துவரும்படி அடியேற்குக்கட்டளையிட்டனுப்பினர், அதுகாரணமாக அடியேனிவ்விடத்திற்குவந்தேன், ஆதலால் தேவரீர் அடியேன்மீது கிருபைசெய்து எழுந்தருளுமென்று பிரார்த்தித்தனன். அவைகளனைத்தையும் புருசுண்டிமுனிவர்கேட்டு, அரசனே-விநாயகமூர்த்தியென்பவர் யார், அதனை விவரமாகச் சொல்லுகவென்றுகேட்டனர். அதற்கரசன்சொல்லுவான், சுவாமி-விநாயகமூர்த்தி காசிபமுனிவருக்குப்புத்திரராக அவதரித்திருக்கின்றனர், அவர் அடியேனுடையபுத்திரன் விவாகநிமித்தம் இப்போதுஎன்துகிரகத்திலெழுந்தருளியிருக்கின்றனரென்றனன். அதற்குமேல் புருசுண்டிமுனிவ ரவனைப்பார்த்து - அரசனே, விநாயகமூர்த்தி தேவர்கள் முதலியோராலுந் தொழத்தக்க காசிபமுனிவருக்குப் புத்திரராக அவதரித்திருப்பது மெய்யேயானால், அவருடையமரபு எவ்வகைப்பட்டதென்றுகேட்டனர். அதற்கரசன் அவரைப்பணிந்தெழுந்து, சுவாமி-வேதங்களாலும்விண்டு பிரமாதிகளாலும் மனம் வாக்குக் காயங்களினாலும் ஏனைய அளவைகளினாலும் அவ்விநாயகமூர்த்தியினுடைய இயற்கையைக்காண்பதரிது, எங்குநிறைபொருளாயிருக்கின்ற அவருடைய இயற்கை அவ்வாறிருக்கினும், அவருடையகிருபையினால்அடியேன் அறிந்தமட்டிஞ்சொல்லுகின்றேன், பிராந்திரகிதராயும் பரிபூரணராயும், ஞானம் பத்தி வைராக்கியசம்பன்னராயும் நிரந்தர சந்தோஷத்தையடைந்தவராயும், நித்தியதிருத்தி யடைந்தவராயும், சச்சிதானந்த பிரமசொரூபராயும், தேசகாலவஸ்து பரிச்சேதரகிதராயும், சுசாதி விசாதி சுகதபேத ரகிதராயும், சட்பாவவிகாரரகிதராயும், சுத்த புத்த முத்த நித்திய பரமானந்தசொரூபராயும், சர்வபரிபூரண கருணாசாகரராயும், நிர்வியாச்சிய நிர்லேப நிர்ச்சங்க நிர்வாண நிஷ்காம நிரூப நிரந்தர நிர்வயவ நிர்விசேஷானந்த நிருபத்திரவ நிபத்த நிர்வேத்திய நிர்க்குண நிரஞ்சன நிச்சல நிஷப்ரபஞ்சசொரூபராயும், அச்சேதிய அக்கிலேத்திய அசோஷிய அதாகிய அசல அவாச்சிய அநாமய அக்ஷர அப்பிரமேய அசிந்திய அந்நியபாகிய அக்குரோத அவிதர்க்கிய அந்திரிய அநாசிரய அநாதார ஆனந்த அகண்டாகார ஸ்வரூபராயும், விசுவதைதச பிராஞ்ஞைக்கதீதமான பிரத்தியக்கு சைதன்னியராயும், விராட்டிரணிய கர்ப்பவவ்வியாகிருதங்களையறிகின்ற சர்வசாட்சியராயும், மூலப்ரகிருதி யகண்டாகார விருத்தியானந்த விருத்தியதீதராயும், கிருதகிருத்தியராயுமிராநின்ற விநாயகமூர்த்தியானவர் தமது சுவேச்சையினால் துஷ்டசன்நிக்கிரகம் சிஷ்டசனபரிபாலனஞ்செய்யும்பொருட்டு அதிதியினுடைய புத்திரராகஅவதரித்திருக்கின்றனரென்று மகத்துக்கள்யாவருஞ் சொல்லக்கேட்டிருக்கின்றேன், அஃதன்றி அடியேனுடைய கண்களினால் அவர் அளவற்ற அவுணவீரர்களைச்சங்கரித்து, அவர்கள்செய்த இடையூறுகளையெல்லாமொழித்து, சகலஆன்மாக்களையும் பாதுகாக்கக் கண்டிருக்கின்றேன், அந்நிட்களமூர்த்தியினுடையபெருமையை யான்கண்டவளவிற் சொன்னேனன்றி சரியானபடி யாவராற்சொல்லக்கூடுமென்றனன். இவையனைத்தையும்புருசுண்டிமுனிவர் ஆனந்தபரவசராய்க்கேட்டு, அரசனே-நீசொன்னதனைத்தும் உண்மையே, உனதுகண்களைச் சிறிதுநேர மூடிக்கொண்டிருந்து பின்னர் விழித்திடுகவென்றுகூறினர். அவ்வாறே அரசன் கண

ணைமுடிக்கொண்டனன். அப்போது புருசுண்டிமுனிவர் அவ்வரசன் முடியின்மீது தமதுகரத்தைவைத்துவாங்கினர். பின்பு அரசன் கண்களைத்திறந்தனன். திறந்தபோது அவ்வனத்தையும் புருசுண்டிமுனிவரையுங் காணுதவனாகித், தனதுகாசிப்பட்டணத்தையும் அரண்மனையையுங் கண்டு அதில்மகோற்கடமூர்த்தி எழுந்தருளியிருக்கப்பார்த்து, அளவற்ற ஆச்சரியமும்ஆனந்தபரவசமுங்கொண்டு, மகோற்கடமூர்த்தியினுடைய திருவடிகளைப்பணிந்தெழுந்து, தான் தண்டகவனத்திற்குப்போனதுமுதல் நடந்தசங்கதிகளையெல்லாம் விவரமாகச்சொல்லினன். அவையனைத்தையும் மகோற்கடமூர்த்திகேட்டுப்புன்னகைசெய்து, அரசனே-நீமீளவும் அவனிடத்திற்சென்று, கஜானனமூர்த்தி உன்னை யழைத்துவரச்சொன்னாரென்று சொல்லுவையாயின் உடனேவருகுவனென்றுதிருவாய்மலர்ந்தனர். கருணைக்கடலாகிய மகோற்கடமூர்த்தி இவ்வாறு திருவாய்மலர்ந்தருளலும் அரசனதற்கிசைந்து மீட்டும்பணிந்தெழ, அவ்வாறெழுந்தவன் சுவாமியையுங் காசிநகரத்தையுங் காணாது, முன்போலத் தண்டகவனத்தையும் புருசுண்டிமுனிவரையுங் கண்டு ஆச்சரியமாகி, அவருடையதிருவடிகளிற் பணிந்தெழுந்தனன். அப்போது புருசுண்டிமுனிவர் சந்தோஷமுற்று அரசனே-நீ மீட்டும்வந்தகாரியம் யாதென்றுவினவினர். அதற்கு அரசன்சொல்லுவான்-சுவாமி, பத்தியிற்சிறந்த தேவரீரைக் கஜானனர் அழைத்துவரச்சொன்னாரென்று சொல்லினன். அவ்வசனத்தைக்கேட்டமாத்திரத்தில் புருசுண்டிமுனிவர் பரவசராகி, உடல்முழுவதும் ரோமாஞ்சிதம்பூத்து, விழிகளில் ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து, பூமியிலே வீழ்ந்துபுரண்டு மெய்மறந்து, நெஞ்சமுருகிப், பலமுறைவிம்மிவிம்மி, ஓவென்றலறிப், பத்தியென்னுங்கடலில்மூழ்கிக் கரைகாண மாட்டாதவராகி, அரசனையுந்தம்மோட்டழைத்துக்கொண்டு, மத்தியிலொருபாதமும் அவிமுத்தத்திலொருபாதமுமாகவைத்துச்சென்று, அவ்வரசனுடைய அரண்மனையையடைந்தனர். பின்னர்பலஅதிசயங்களை உடனிருந்தறிந்தஅரசனானவன் அம்முனிவரைக் கொலுச்சபையிலழைத்துவந்து, நவரத்திநமயமாகிய சிம்மாதனத்திலிருக்கவைத்து, முறைமைப்படி பாதபூசைமுதலியவைகளைச் செய்து அநேகரத்திநங்களையும் விசித்திரமானபட்டுக்களையும் அளவற்றஆபரணங்களையும் அழகெரிக்கும்படியான பல விம்மிதப்பொருள்களையும் அவர் திருவடிகளில்வைத்துப் பணிந்தனன். அதற்குப் புருசுண்டிமுனிவர் சந்தோஷங்கொண்டு, அரசனே-கஜானனமூர்த்தி யெங்ஙனமிருக்கின்றனரென்றுகேட்டனர். உடனே வீதியில் சிறுபிள்ளைகளோடும் ஆடல்செய்திருந்த மகோற்கடமூர்த்தியானவர் கன்றைத்தேடிவருகின்ற பசுவைப்போல எதிரேவந்தனர். வேதங்களாலும் இவ்வுருவன் இவ்வண்ணத்தன் இவ்விறைவன் என்று காட்டுதற்கரிய மகோற்கடமூர்த்தியை அரசன் தனது கையினாற்சுட்டி, இவர்தான் கஜானனமூர்த்தியென்றுகாட்டினன். அவ்வாறுகாட்டலும் புருசுண்டிமுனிவர் சுவாமியைப்பார்த்து, முன்னர் தாம்தரிசித்திருக்கின்ற திருமேனியைக்காணாது, இரண்டுகரங்களும் மனிதமுகமும்படைத்து, ஏனைய அவயவங்களும் வேறாகியிருத்தலைக்கண்டு, இவர்தானோ கஜானனமூர்த்தியென்று மனதிற்சந்தேகங்கொண்டனர். அச்சந்தே

கத்தை மகோற்கடமூர்த்தியறிந்து, உடனே முன்னர் அவருக்கு எவ்வாறு
தரிசனந்தந்தருளியதோ அவ்வாறே தரிசனந்தந்தருளினர். பின்னர் புரு
சுண்டிமுனிவர் திகைத்து, தமது அகத்தில் எவ்வாறு எக்காலுந்தரிசித்துக்
கொண்டிருக்கின்றாரோ, அவ்வாறே புறத்திலும் பத்துக்கரங்கள், அக்கரங்
கள்தோறும் ஆயுதங்கள், சந்திரனைத்தரித்த சடாமகுடம், யானைவதனம்,
ஒற்றைக்கோடு, சிலம்பணிந்த திருவடிகள், இருமருங்கினுஞ் சித்தி-புத்திக
ள் சிங்கவாகனமுதலியனவுங்கண்டு, அதிசயமாகி, முன்போலவே ஆனந்த
பரவசமுற்று, மெய்மறந்து, பூமியிலேவிழுந்து புரண்டெழுந்து, ஆனந்தக்
கூத்தாடி, பலமுறைவலம்வந்து, வேதாகமங்களினாற்றுதிசெய்து, கண்க
ளிலே இடைவிடாமல் ஆனந்தவெள்ளத்தைப்பெருக்கி, மனமானது அ
ழலிற்பட்டமெழுகுபோல வுருகும்படிநின்று, ஓவென்றலறிக், கர்த்தனே
ஓ ஆண்டவனே-ஓ கிருபாநிதியே-ஓ பிரமானந்தசொரூபனே-தேவரீரை
யாரோவென்றுநினைத்த அடியேனுடையகுற்றத்தைப் பொறுத்தருளல்
வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குக்கஜானனமூர்த்திகிருபையுற்
று, அன்பனே - எவரெவர் எந்தெந்தவடிவமாக நம்மைத்தியானிக்கின்
றார்களோ, அவரவர்களுக்கு அந்தந்தவடிவமாகத் தரிசனந்தந்தருளுகின்
ற பெருங்கருணையினையுடைய யாம், துட்டரைச் சங்கரித்தற்பொருட்டு
ம், சிட்டரைப் பாதுகாத்தற்பொருட்டும், இப்போது அதிதிக்குப் புத்திர
ராகஅவதரித்து, மகோற்கடரென்னுந் திருநாமத்தை வகித்து இங்ஙனமி
ருக்கின்றோம், நீ நம்மைச் சந்தேகங்கொண்டதினாலே மூவுலகத்தாருங்
காணுதற்கரிய திருவுருவத்தை முன்போல உன்னெதிரிற்காட்டினோம், ஓ
பத்தியிற்சிறந்தவனே, உனக்குவேண்டிய வரங்களைக்கேள் தருகின்றோ
மென்று திருவாய்மலர்ந்தனர். உடனே புருசுண்டிமுனிவர் பணிந்தெழு
ந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி, பரம்பொருளே-தேவரீரை யான்
எக்காலத்தில் எந்தவுருவாய்த்தியானிக்கின்றேனோ அக்காலத்தில் அந்த
வுருவாய் அடியேற்குத் தரிசனங்கொடுத்தருளி, எப்போதும் தேவரீரு
டைய திருவடிகளிற் சலியாதபத்தியுங்கொடுத்து, அடியேன்தெரியாமை
யினாற் பிழைசெய்தேனாயினும், அதனைப் பொறுத்தருளல்வேண்டும், அ
ன்றியும், அடியார்கள்விரும்பிய காரியங்களையெல்லாம்விக்கினமில்லாமல்
நிரப்புகின்றபடியால், தேவரீர் ஆசாபூரகரென்னு மோர்திருநாமத்தையு
ந்தரித்தருளல்வேண்டும், இவையே யான் தேவரீரிடத்தில் பெற்றுக்கொ
ள்ளவிரும்பியவரங்களென்று பிரார்த்தித்தனர். அதற்குக் கஜானனமூர்த்
தி மனமகிழ்ந்து, அவர்விழைந்தபடி வரங்கொடுத்தருளி, அறுவகைச்சு
வையோடுங்கூடிய நால்விதவுண்டிகளையும் அம்முனிவருடன் கூடவிருந்
து போசனஞ்செய்து, தாமு மவருமாகப் பழையபடி சபாமண்டபத்தில்
வந்து வீற்றிருந்தனர். பின்னர் அரசன் ஆனந்தக்கடலில் மூழ்கினவனாகி
இத்தினம் திரிமூர்த்திகளாலுங் காணுதற்கரிய திவ்வியதரிசனத்தை எளி
திற்கிடைக்கப்பெற்றோம், இதைவிட மேலானபாக்கியம் நமக்கென்ன வி
ருக்கின்றதென்று சுவாமியையும் அம்முனிவரையும் பலமுறைபணிந்தெ
ழுந்து, அஞ்சலியஸ்தனாய் நின்றனன். அச்சபையின்கண் வந்திருந்த அந்
நகரத்தினரும் அவ்வாறேபணிந்தெழுந்து, வேண்டியவரங்களைப் பெற்றுக்
கொண்டு, தத்தமிருக்கையையடைந்தார்கள். அதற்குமேல் புருசுண்டிமு

னிவர் மகோற்கடமூர்த்தியினிடத்தில் விடைபெற்றுச்சென்று, தண்டகவனத்திலிருக்கின்ற தமது ஆசிரமத்தையடைந்து,நித்தியானந்தசுகத்துடனேகூடி வாழ்ந்திருந்தனர். அத்தினம்போய் மறுதினங்காலையில்,அரசனவன் சகலபரிசனங்களும் புடைசூழும்படியாகத் தனது சபாமண்டபத்திற்கொலுவிருந்தனன். அப்போது எல்லாமாயைகளினும்வல்லமேகனென்னும்பெயரினையுடைய ஓரவுணன், சோசியனாக வடிவங்கொண்டு வலதுகையிற் செபமாலிகையும், இடதுகையிற் புத்தகமுமேந்திவந்து,அரசனெதிரிற்போய்நின்றனன். அவனுக்கு உடனே அரசன்வணக்கஞ்செய்து, ஓராதனத்திலிருத்தி, ஐயா-நீர் யார், இங்குவந்தகாரியம்யாது, உமதுகையிலிருக்கின்றது என்னபுத்தகமென்று அன்போடுவினாவினன். அதற்கு வஞ்சவடிவங்கொண்டுவந்த சோசியன் தான்கருதிவந்தகாரியஞ் சித்தியாகுமென்று நினைத்தவனாய், அண்ணலே-நாம் கந்தருவலோகத்திலிருக்கின்ற சோசியன்,நமதுகையிலிருக்கின்றது சோதிடசாத்திரம்,நாம் ஒரு பயனைக்குறித்தன்று இங்ஙனம்வந்தது, லோகோபகாரமாகவே இங்ஙனம் வந்தோம், யாவரொருவர் தமக்கு ஈட்டும்பொருளாக இதத்தைத்தேடுவார்களோ,அவர்களே உலகங்கட்கெல்லா மிதஞ்செய்வார்கள்,அதுபோலப் புவியாளு மன்னர்கட்கு இதமின்மையாயின் அவராளுகையில் அடங்கிய வுலகங்கட்கு மிதமின்மையா மாதலால்,உமக்கு இதமானகாரியங்களைச் சிலசொல்லுகின்றோம், அதைநீர் ஊக்கத்தோடும் ஞாபகத்தோடுங் கேட்கவேண்டும், நமக்கு எப்போதுந் திரிகாலக்கியானமுந்தெரிந்துகொண்டேயிருக்கும், அதை நீ யறியவேண்டில் முன்னடந்ததும் இப்போதுநடக்கின்றதும் இனி நடக்கப்போகின்றதும் யாம் சொல்லுகின்றோங்கேள், ஓதோன்றலே-நெருப்பை மின்மினிப்பூச்சென்றுகருதி அதனைத் தனதுகூண்டினுள்ளே வைத்துக்கொண்டு நாசமடைகின்ற குருவியைப்போல நீர் ஓர் பிராமணப்பிள்ளையைக்கொண்டுவந்து இப்பட்டணத்தில் வைத்திருக்கின்றீர், அதனா லளவற்ற இடையூறுகள் நேர்ந்ததைப் பார்த்திருக்கின்றீர், அப்பிராமணச்சிறுவன் விக்கினராசனாதலாலே அநேகவிக்கினங்கள் அடிக்கடிநேர்ந்துக்கொண்டேயிருக்கும், ஓர்விக்கினமு மில்லாத வுமக்கு அவன் இங்கிருக்கின்றவரையில் வியோமத்தைவிட்டொழியாத காற்றுபோல விக்கினம் ஒழிகிறதில்லை, நீர் பூர்வத்திற்செய்த நல்வினைப்பயனால் இதுவரையில்வந்த விக்கினங்களனைத்து மொழிந்துபோயின, இனி விளையப்போகின்றவிக்கினங்கள் வெகுவிபரீதங்களை விளைக்குமேயன்றி வீணிற்போவதில்லை, ஆதலால்-அப்பிராமணச்சிறுவனை விரைவில் இப்பட்டணத்தினின்றுங் கொண்டுபோய்க் காட்டிற்சேர்த்திடுவீராயின்,உம்மிடத்திலே தீராதகோபத்தைவைத்திருக்கின்ற நராந்தகனும் முன்போல அன்புவைத்திருப்பன், அப்பால் யாதொன்றற்கும் பயமில்லை இஃதன்றி இன்னமும் ஒன்றுசொல்லக்கேள், அசுத்தன்-ஆருசன்- கபடன்-அதிசூரன்-தனக்குமிக்கவன் - என்னும் இவ்வைவருக்குள் ஒருவனுடைய சிநேகமிருந்தாலும், சத்துருக்களில்லாமலே கேடுவிளையும், இவ்வைவருள் அப்பிராமணச்சிறுவன் உமக்கு மிக்கவன், அன்றியும் அதிசூரன், இவ்விரண்டுமாயிருத்தலினால் நீர் உயிர்தப்பிப்பிழைத்தலரிது,பிழைக்கவேண்டுவையாயின் இந்நிமிஷத்தி லவனுறவையொழித்தல்வேண்டும்

இதுகாறும் உமக்குயாம் உண்மையானகாரியங்களைச் சொன்னோமேயன்றி வீணானகாரியங்களைச்சொல்லவில்லை, அறிந்தவர்கள் அறியாதவர்களுக்கு அறிவிக்கவேண்டுவது நீதியாதலால், சகலமும்அறிந்த யாம் நீர் மனதறிந்து மாயாதவண்ணம் லோகோபகாரமாகச் சொன்னோம் என்றனன். அவையனைத்தையும் அரசன்கேட்டு, அவன் சொன்னதெல்லாம் வஞ்சமாகுமென்று தனக்குள் நிச்சயித்து,மேலுக்கு ஒப்புக்கொண்டவன்போல அப்பாதகனைப்பார்த்து,ஓ சோதிடபண்டிதரோ-நீர் கூறியதனைத்தும் உண்மையே, அக்காளையை நீரே பிடித்துக்கொண்டுபோய்க் காட்டில்விடுமென்றுசொல்லி, அருகிருந்த உழையர்களைக்கூவி, இவருக்குநீங்கள் வீதியில் விளையாடிக்கொண்டிருக்கின்ற மகோற்கடரைக்காண்பித்து அவரை இவர் அழைத்துக்கொண்டுபோம்பொழுது யாவரேனுந்தடுத்தால் அவர்களைவிலக்கித் தடையில்லாமல் இவர் அழைத்துக்கொண்டுபோம்படி செய்துவரக்கடவீர்களென்று கட்டளையிட்டனன். அக்கட்டளையை உழையர் வாய்புதைத்துக்கேட்டு, சோதிடரை அழைத்துக்கொண்டு சென்று, குகையிலிருக்கின்ற சிங்கத்தையானைக்குக்காட்டுமாறுபோலத், திருமேனிமுழுவதும் புழுதிபடும்படியாக வீதியிலே விளையாட்ல்செய்திருந்த மகோற்கடமூர்த்தியைக் காண்பித்தாகள். உடனே மகோற்கடமூர்த்தி அச்சோசியாருகில்வந்து, அவனுடையவஞ்சகத்தைத் தாமறிந்துகொண்டு, ஐயா- அரண்மனையில் ஓர்சோசியர் அரசனிடத்தில் வார்த்தையாடிக்கொண்டிருக்கின்றனரென்று சிலர்சொன்னார்கள், அவர் நீர்தானோவென்றுசொல்லித், தமதுதிருமேனிமுழுவதுங் குலுங்கநகைத்துக் கேட்டனர். அவ்வளவில் அவ்வஞ்சனுடைய மனமானதுகலங்கி, நான்தானென்றுசொல்லினன். அதற்குமேல் மகோற்கடமூர்த்தியானவர் இப்பட்டணத்திற்கு என்னஇடுக்கண் சம்பவிக்கவிருக்கின்றது, எனக்கென்ன அபாயநேரிடும், அவைகளை உமது கூர்த்தபுத்தியினாலே ஆராய்ந்து சொல்லவேண்டுமென்று கேட்டனர். அக்கேள்விக்கு அப்பாதகன்பயந்து,மனமும் உடலும் நடுக்குற்றவனாகி, அந்நடுக்கம் அக்கிழப்பருவத்தாலும் வாதரோகத்தாலும் உண்டானதுபோல வேறுகாட்டிச் சமாளித்துக்கொண்டு சுவாமிகேள்விக்கு உத்தரஞ்சொல்லத்துணிந்து, மைந்தனே- இப்பட்டணத்திற்கு யானையினாலும் இருட்டினாலும் சலத்தினாலும் தப்பாது இடுக்கண்வரும், இஃதுண்மை-ஒருவேளை இம்மூன்றினுந்தப்பினால் அளவற்ற அபாயங்கள் ஒருவருக்குந்தெரியாமல்வரும், உனக்கு வரவிருக்கின்ற அபாயத்தினையுஞ் சொல்லுகின்றேங்கேள், முதல் கிணற்றில்வீழ்ந்திறந்துபோவாய், அதுதப்பினால் விட்டங்கின்றுசாவாய், அதற்குந்தப்பினால் பின்னர் அநேக அபாயங்கள்நேரிடும், இவையனைத்தும் நான்குதினத்திற்குள் உண்டாகும், அந்தநான்குதினமும் என்பின்னாகக் காட்டிற்குவந்திருப்பையெனில், இவ்வபாயங்கட்கெல்லாம் உன்னைப் பாதுகாத்து மீட்டும் இப்பட்டணத்திற்கழைத்துவந்து யதாப்பிரகாரம் சுகமாயிருக்கவைப்பேன் என்றுசொல்லினன்.அவையனைத்தையும் மகோற்கடமூர்த்திகேட்டு, ஐயா-நீர் சொன்னதனைத்தும் உண்மையே, நானும் இப்போதே உம்மோடு காட்டிற்குவருகின்றேனென்றுசொல்லி, அவனுக்கு வெகுமானஞ்செய்பவர்போலத் தமதுமார்பிலணிந்திருந்த முத்துமாலையை வாங்கி

அவ்வஞ்சகனுடையகழுத்திலேபோட்டனர். அம்மாத்திரத்தில் அம்முத்
துமாலையினின்றும் அழற்சுவாலையுண்டாகி அப்பாதகனைச்சுட்டு நீறாக்கி
யது. அவ்வற்புதத்தை யாவருங்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அதற்கு
மேல், கூபனென்றுங் கந்தனென்றுஞ்சொல்லுகின்ற இரண்டவுணர்கள்
ஓர்பழங்கிணறாகவுந் தவளையாகவும், உருவமெடுத்துக்கொண் டிருந்தார்க
ள். அதை மகோற்கடமூர்த்தியறிந்து, அப்பட்டணத்திற்குவெளியில்எங்
குந் தேன்கூடுகள் கட்டப்பட்டிருக்கின்ற தோப்புகளில் விளையாடச்செ
ல்லுகின்றவரைப்போலத் தம்மோடிருக்கின்ற சிறாகளையெல்லா மழை
த்துக்கொண்டுசென்று,அக்கிணற்றினுக்கருகேபோய்விளையாடிக்கொண்டி
ருந்துபின்பு அதனை எட்டிப்பார்த்தனர். மற்றப்பிள்ளைகளும் எட்டிப்பார்த்
துஇதனாழத்தையறிவோமென்று ஒருவரோடொருவர்பேசிக்கொண்டு, ஒ
வ்வொருவராய் அக்கிணற்றிலேயிறங்கிச் சோதித்து,ஒருவராலும்ஆழத்தி
னளவுகாணமாட்டாமல் மீட்டும் வெளியில்வந்து, தனியேநின்றிருக்கின்
ற மகோற்கடமூர்த்தியைப்பார்த்து, நீ யேதோசில சாமர்த்தியங்களையெ
ல்லாஞ் செய்கின்றனையே, இக்கிணற்றில்மாத்திரமிறங்கி அதனடிப்பரப்
பின்மணலை நின்கையிலெடுத்துக்கொண்டு வருவையாயின் நீ எல்லாவித
த்திலுஞ் சமர்த்தன்தானென்று சொன்னார்கள். அதற்கு மகோற்கடமூர்
த்தி புன்னகைகொண்டு, தமது இளமைப் பருவத்திற்குத் தக்கபடியே
அதற்கிசைந்து, ஆ-அ-இதோமணலை அள்ளிக்கொண்டுவந்தேன் பாருங்
களென்றுசொல்லி, ஞெரேலென்று கிணற்றுக்குள்ளேகுதித்துப்பாய்ந்த
னர். அந்நிமிஷத்தில் கிணறாயிருந்த அவுணன் விரிந்து பெரியகடல்போ
லே யமர்ந்திருந்தனன். அதற்குள்ளே, தவளையாக அடங்கியிருந்தவன்
அவ்வுருவிற்றானே பெரியபர்வதம்போல உலாவியிருந்தனன். உள்ளே
குதித்துப்பாய்ந்த மகோற்கடமூர்த்தியானவர், விரைவில் அதனாழத்தின
ளவையறிந்து, தண்ணீர்நுரைத்துக் குமிழியெழும்பும்படியாக அடிப்பர
ப்பினது மணலைப்பள்ளியசுரத்தோடு வெளியேவந்து, அதனைத்தமது கூ
ட்டாளிப்பிள்ளைகளுக் கெதிரிலெறிந்து, எங்கும்பரந்து ஆரவாரித்திருக்கி
ன்றசலத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது மலைபோலப்பா
ரித்திருந்த மண்டூகமானது, மகோற்கட மூர்த்தியினுடைய பாதத்தைப்
பிடித்து அழுத்திக்கடித்தது. உடனே சுவாமி அம்மண்டூகத்தினுடைய
கால்களி லொன்றைப்பிடித்திழுத்துக் கரையிலேயெறிந்தனர். அம்மாத்தி
ரத்தில் கிணறாகவிருந்த அவுணனும் தவளையாகவிருந்த அவுணனும் அ
வ்வுருவங்களினின்றுமாறிக், தங்கள்சுயரூபங்களைக்கொண்டு பூமியிலே ம
லைபோலவிழ்ந்து இறந்துபோனார்கள். இவ்வற்புதத் திருவிளையாடலை அ
ரசன்முதலாயினோர் கேட்டு ஆனந்தமடைந்தார்கள். இவ்வாறு நராந்தக
னேவிய அவுணவீரர்களெல்லாம், தனியாகவுங் கூட்டமாகவுஞ்சென்
று மகோற்கடமூர்த்தியால் அழிந்துபோக, அதை நராந்தகன் கேள்வியு
ற்று, மிகுந்தகோபமுங் கவலையுங்கொண்டவனாகி, மீட்டுஞ்சிறிதுதேறித்
தனது தந்தைக்குஇளையவனாகிய பதங்காசுரனென்பவனுக்குப் புத்திரர்
களாகி, அம்பாசுரன்-அந்தகாசுரன்-துங்காசுரன்-என்னும்பெயர்களை வகி
த்திருந்த தனது தம்பிமார்மூவரையும் வரவழைத்து, அவர்கட்கு அள
வற்றவெகுமதிகளைச்செய்து, அகத்திற்கொண்டிருக்கின்ற கவலையானது

முகத்திலுக்கிரந்தோன்றும்படியாக அவர்களைப்பார்த்து, அன்பிற்சிறந்தவிளை யோரே, நீங்கள் குழந்தைப்பருவத்துள்ளபோதே தேவர்களெல்லாங்கண்டு நடுங்கும்படியாகத் திசைபாலகர்களையெல்லாஞ் சென்று கலக்கினீர்கள், இரண்டுபல்லுமுளைப்பதற்குமுன்பே பாதாளலோகமுழுவதுங்கொள்ளையிட்டு அங்குள்ளவர்களையெல்லாஞ் சிறைபிடித்தீர்கள், மங்கையர்மையல்செய்யற்கிடமில்லாத பிள்ளைப்பருவத்திற்றானே திரிலோகங்களையெல்லாம் வென்று வலம்வந்தீர்கள், இப்போது சகலகலைகளையுங்கற்றிருப்பதன்றி எல்லாவிதத்திலும் பராக்கிரமசாலிகளாயிருக்கின்றீர்கள், உங்களுக்குச்சமமாகாதகாரியம் எந்தவுலகங்களிலிருக்கின்றது, தருப்பையும் மானையும் உலர்ந்தசமிதைகளையுங் காட்டிற்பொறுக்கிவந்து அவுபாசனஞ்செய்துகொண் டிருக்கின்ற காசிபனுக்கு ஒருமகன்பிறந்திருப்பது உங்களுக்குத்தெரியுமல்லவா, அவனே நம்மவர்களையெல்லாந் துரும்பாகமதித்து அளவற்றபேரைமாய்த்தனன். அவன் இப்போது காசிப்பட்டணத்திலிருக்கின்றான், நீங்கள் விரைவில் அப்பட்டணஞ்சென்று, அப்பையலை எவ்விதத்திலேனுங்கொன்று வரக்கடவீர்களென்று கட்டளையிட்டான். அவ்வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் அம்மூவரும் அவனைப்பணிந்தெழுந்து, அண்ணா-தேவரீர் அடியேங்கட்குத் தமையனாகவிருப்பதினாலும், எங்களை முற்றிலுங்காப்பாற்றுவதினாலும்,கண்ணை இமைகள்காப்பதுபோல எங்களைப்பேணிக்காத்து எங்களுக்கேற்றகாரியத்தையே கட்டளையிட்டீர்கள், அன்றியுந் தேவரீர்க்குச்சிறியதந்தையாகிய எங்கள்பிதாவானவர் நேற்றையதினம் அப்பையலைச் சுழற்காற்றாகச்சென்றிறந்தனர், அதற்கப்பையல் அவரை வீணேகொன்றான், அக்கொடுமையை நினைக்குந்தோறும் உள்ளம்பகீலென்றுபதைக்கின்றது, ஆகலால்அப்பையலை யாங்களேபோய் முடித்துவருகின்றோம், இத்தினஞ்சென்றால் வேறேநாளில்லையென்றுசொல்லி ஆக்கிரமித்தெழுந்தார்கள். இவ்வாறு ஆக்கிரமித்தெழுந்த அம்மூவரும் உடனேகாசிப்பட்டணத்தையடைந்து, அவருள் அந்தகாசுரனென்பவன் சூரியனுக்கஞ்சி ஒளிக்கும்படியாக ஓர்நொடிப்போதில் எல்லாவுலகங்களிலும்பொற்போதைமறைத்து இருள்மூடச்செய்தனன். உடுக்களுஞ் சந்திரனுங்காணப்படாத அம்மாயவிருளானது இரவைப்போலிருண்டுபோனதால் கூகைகட்குக் கண்கள்தெரியாமற்போயின. அப்போது பற்பலவிடங்களிலிருந்த யாவரும் திடீரென்றுவந்த அவ்விருளுக்குப்பயந்து, சூரியனுக்குஞ் சந்திரனுக்கும் இறுதிநாள்நேர்ந்ததோ, உமாதேவியார் சிவபிரானுடையவிழிகளை மீட்டுக் கமலகரத்தினால் மறைத்தாரோ, அல்லவெனில் விந்தபர்வதமானது முன்போல வளர்ந்ததோ, மற்றைப்பாதாசாரணையோ நடுப்பகலிலே கல்வியற்றவர்களுடையமனத்தினு மிகுத்தவிருளானது எங்கும்மூடிக்கொண்டதேயென்று நடுங்கித் துயருற்றார்கள். அந்தணர்-அரசர்-வைசியர்-சூத்திரரென்னு நால்வகைவருணத்தார்களுந் தத்தந்தொழில்கள் நடந்தேறாமைக்கு வருந்தலுற்றார்கள். மந்தர்-சோம்பர்-ஏவலாளரென்னு மிவர்கள் மனக்குழப்பமில்லாமல் அவ்விரவைமெச்சி ஆனந்தநித்திரைசெய்தார்கள். காமுகராயினோர் மிகுந்தசந்தோஷத்தோடுமங்கையரிடத்திற் பற்பல கலவிகளைச்செய்துகொண்டு இன்பவெள்ளத்திலழுந்தினார்கள். அவ்விரு

ளுக்குப்பயந்து கலக்கினைக்காதசிலஸ்திரீகள் திருதலியயினைக்கழைத் தங்கடங்கள் மனைகளில்வைத்து வருத்தமுற்றிருந்தார்கள். தொழில்மூலமாகச்சென்றயாவருந் தத்தம்பதிகளைவிட்டுவந்து சேரமாட்டாமல் எவ்வெவர் எங்கெங்கிருந்தார்களோ அவ்வவர் அங்கங்கேயிருந்து கவலையுற்றார்கள். இரைதேடிச்சென்ற பறவைகள்முதலியனவும் இராக்காலத்தில் வந்து ஒடுங்குகின்ற தத்தம்பொழில்களையுங் குகைகளையுங்காணுமல் வருந்தின. இவ்வாறு சகலசிவான்மாக்களுந் துன்பமடையும்படியாக அந்தகாசுரன் எங்குமிருளாகமூடிக்கொண்டிருக்கத், துங்காசுரனென்பவன் தனது மாயையினால் அக்காசிப்பட்டணத்தைச்சுற்றிப் பத்துயோசனைப்பரப்பில் எங்கும்போகவும் வரவும் வழியில்லாமல் மலையாகச்சுற்றி வளைத்துக்கொண்டனன். அம்மலையின்மீது சோதிமரம்- சோதிக்கொடி - சோதிப்புல்- சோதிமணி-என்னு மிவைகள் அளவற்றனவாய்ச்சோதியே உருக்கொண்டதுபோலப்பிரகாசிப்ப, அதனை யாவருங்கண்டுசெந்தன்னை அதிசயமோதெரியவில்லையே, இப்பட்டணத்திற்குச் சமீபத்தில் ககோத்திருமுதலானவைகளாலுண்டான பிரகாசத்துடனே யானை-சிங்கம்-புலி-முதலியவைகளால் உலாவப்பட்டிருக்கின்ற ஓர்மலை ஆகாயத்தையளாவவுயர்ந்து எங்கும் வளர்ந்திருக்கின்றதே, இதற்குமுன் யாங்கண்டதில்லையேயென்று மனங் கலங்கினார்கள். இப்பால் அம்பாசுரனென்பவன் அப்பர்வதத்தின்மீது தவழ்கின்ற மேகவுருவாகி, நெருப்பைப்போல மின்னல்களைவீசி, ஆகாயமெங்கும்பரந்து மூடிக்கொண்டு, விபரீதமான இடிகளையுண்டாக்கி, சமுத்திரமே ஆகாயத்திலெழும்பி, நதிகளையே தாரையாகவிடுவதுபோல அளவற்றவருஷங்களைச்சொரிந்தான். அவ்வருஷதாரைகளினுலே, பாறைகளெல்லாங்கிழிந்தும், மாடமாளிகை-கூடகோபுரங்களிடிந்து மிடிந்தும், அந்நகாமுழுவதும் அழிந்தும்போயின. உடனே பிரளயகாலத்தில் சத்தசாகரங்களும் ஒன்றாக ஆகாயத்தையளாவப்பொங்கி சக்கரவாளகிரியைச்சேர்ந்து காரஞ்செய்வதுபோல, துங்காசுரனுல் வளைத்துக்கொள்ளப்பட்ட காசிப்பட்டணத்தின்மீது அம்பாசுரனுல் பொழியப்பட்ட வருஷங்கள் அப்பட்டணமுழுதும் பெரும்புறக்கடல்போல நிரம்பியிருந்தன. அதனொடுமையைமகோற்கடமூர்த்தியறிந்து,பத்துயோசனை உயரத்தில் எண்டிசைகளையும் பரந்தோமெம்படியான சிறகளோடுகூடி,எண்ணற்றவிருதுகள் கிலக்கிழித்துப்பாய்ந்திருக்கின்ற ஓராலயத்தையுண்டாக்கித், தாமதற்கேற்றபடி ஓர் பெரியபறவையுருக்கொண்டு, அம்மாத்தின்மேற்புட்டாரந்து இரண்டுசிறகுகளையும் புதைத்தார். உடனே அவ்விரண்டுசிறகுகளின்றும் உண்டான காற்றினுல்மேகங்களெல்லாம்பஞ்சுநெருடுந் தறிகளைப்போலக்கலைந்து சுற்றியிருக்கின்ற மலைகளிலேயேபோதுங்கின.பின்னர் அம்மலையும் இடிந்து பொடிப்பட்டுப்போயிற்று.அப்போது மகோற்கடமூர்த்தியானவர் தமது நுதல்விழியினைத்திறந்தருளினார். அந்நுதல்விழியினின்றும் உண்டான தீயினுல் இருளெல்லாமொதுங்கிப், பிரவாகமாய்நிறைந்திருக்கின்ற சலமுழுவதும் வறண்டுபோய்விட்டது. இவ்வாறு இருளாகவும் மலையாகவும் மழையாகவும்வந்து பலகொடுமைகளைச்செய்த அசுரபாதகர்களுடையமாயையெல்லாம் மகோற்கடமூர்த்திகொண்டருளிய பறவையின்காற்றினுலழிந்தும், அப்பாதகர் அப்பறவையின்வலிமை அறிவோ

மென்றுநினைத்து, அம்மூவருள்ஒருவன் மற்றோராலமரமாயினன். ஒருவன்கண்ணியாயினன். ஒருவன்வேடுவனாகி முன்னருண்டானஆலமரத்தின்கணுள்ளபறவையை ஓட்டினன். உடனே பறவைவேடங் கொண்டிருக்கின்ற மகோற்கடமூர்த்தியானவர் அவ்வேடனைத் தமதுமூக்கினாற் கவ்விக்கொண்டுசென்று, வேறேயுண்டாயிருக்கின்ற ஆலமரத்திற்பாய்ந்து, அதிலிருக்கின்றகண்ணியோடு அவ்வாலமரத்தைக் கால்களினாற் றூக்கிச்கொண்டு, ஆகாயமார்க்கமாய்த் தவலோகம்வரையிற்சென்று, அங்கிருந்தபடி அவ்வாலமரத்தையுங் கண்ணியையும் வேடனையும் பூமியிலேவிழும்படிவிடுத்தனர். அம்மாத்திரத்தில் அம்மூவரும் உயிர்நீங்கி,அவர்களுடைய சரீரமூன்றும் அவர்கள்தாயாகிய பிரமனையென்பவளுடையவீட்டு வாய்தலில்விழ்ந்து நுறுங்கின. இவ்வாறு பிரேதமாய்நுறுங்கிவீழ்ந்த மூவரையும் அங்கிருந்தசிலசேடியர்கண்டு திடுக்குற்று, உல்லாசமாய் உலாவிக்கொண்டிருக்கின்ற பிரமனையிடத்திலோடி,அம்மா உமதுகுமாரர்கள் மூவரும் பிரேதமாகி நமதுவீட்டுமுன்றிலில் வீழ்ந்திருக்கின்றனரென்று சொன்னார்கள். அதைக்கேட்டமாத்திரத்தில் பிரமனையென்பவள் நடுக்குற்று, நாமிதுவரையில் ஒரு துற்சகுனங்களையுங்காணாதிருக்க நமதுபுத்திரர்கள் எவ்வாறிறப்பார்களென்று கைகளைநெரித்துக்கொண்டோடி, முற்றத்திலே நுறுங்கிவீழ்ந்திருக்கின்ற மூன்றுபிரேதங்களையும் பார்த்து, நமதுபிள்ளைகளேயென்று நிச்சயித்து, நெடுநேரம் மூர்ச்சித்துக்கிடந்து,மீட்டுந்தெளிந்தெழுந்து, தனதுகையினால் மக்களா மக்களாவென்றுமார்பிலறைந்துகொண்டு, கூந்தலானது நாற்றிசைகளினும் விரிந்து பூமியைவருடும்படியாகப்புரண்டு புரண்டுஅழுதனள். அப்போது அருகிருந்தசேடிகள் அவளைத்தேற்ற ஒருவாறுதேறியெழுந்து, அதிக கோபாவேசத்தினைக்கொண்டு, என்பிள்ளைகளை எவன்கொன்றானோ அவனையான்கொல்லாவிட்டால் அக்கினிசாட்சியாக விவாகஞ்செய்துகொண்டகணவனுக்குத் துரோகஞ்செய்தவள்போகின்றபாதகம் யாதோ அப்பாதகத்தில்யான்போகக்கடவேனென்று சபதஞ்செய்துகொண்டு, இனிகொல்லப்பட்ட என்மைந்தரோடு கொன்றவனையும் ஒன்றாகவைத்துத் தகனஞ்செய்வேனேயன்றி இவர்களைமாத்திரந் தகனஞ்செய்யேனென்றுசொல்லி,அந்நாள்வருகிறவரையில் தனதுமக்களாகிய மூன்றுபிரேதங்களையும் தயிலத்திலிட்டுக் காப்பாற்றும்படி சேடியர்கட்குத்தரவுசெய்து,உடனேசில தூதர்களைக்கூவி,எனதுபிள்ளைகளைக்கொன்றவன் எவனோ அவனை விரைவில் அறிந்துவரக்கடவீர்களென்று பலவெகுமதிகளை அவர்கட்குக் கொடுத்தனுப்பிப்,பின்னுஞ்சிலதூதர்களையழைத்து அவ்விபத்தைத் தனதுநாயகனாகிய பதங்காசுரனுக்கு அறிவித்துவருமாறு கட்டளையிட்டனள். அவ்வாறே அவ்விருவகுப்பினரும தத்தமேவலைநோக்கிச்சென்றார்கள். இவரிவ்வாறாக-பறவைவுருபங்கொண்டிருந்த மகோற்கடமூர்த்தியானவர் மீட்டும்பழையவடிவத்தினைக்கொண்டு, அந்தகாசுரன்முதலிய மூவராலழியப்பட்டிருக்கின்றநகரத்தைத் தமது அருட்கண்ணாற்பார்த்தருளினர். உடனே அந்நகரமானது முன்னிலும் மேலான விம்மிதங்களைவாய்ந்து பிரகாசித்தது. இறந்துகிடந்த உயிர்களனைத்தும் மீட்டும் உயிர்பெற்றெழுந்து தத்தமிருக்கையையடைந்தன. பின்னர் மகோற்கடமூர்த்தியானவர் அரசன்முதலி

யபாவரும் தம்மைப்புடைசூழ்ந்து துதிசெய்யும்படியாக அரண்மனையின் கண்ணெழுந்தருளியிருந்தனர். முன்னர் பிரமனையென்பவள் ஏவலால் இரண்டுபிரிவாகச்சென்ற தூதர்களில் ஒருபிரிவார் நராந்தகனுடையதூதர்களால் பதங்காசுரனிறந்துபோனமையைக்கேட்டு, அச்செய்தியை அவளிடத்திற்சொன்னார்கள். அதைக்கேட்டமாத்திரத்தில் அவள்மீட்டும் மூர்ச்சையாகி வீழ்ந்து, பின்னர் தெளிந்தெழுந்து, அளவற்ற துக்கசாகரத்தில் மூழ்கினவளாகி, ஐயையோ - மிக்கபராக்கிரம சாலிகளாகிய எனதுபிள்ளைகள் இறந்துபோனதல்லாமல் என்பிராணநாயகரும் இறந்து எனதுயிரைவாட்டினரோவென்று புலம்பி அழுதுகொண்டிருந்தனள். அச்சமயத்தில் மற்றொருபிரிவார் விரைந்துவந்து, அம்மா- உமதுகுமாரர்கள் காசிராசனிடத்திலிருக்கின்ற ஓர் பிராமணப்பிள்ளையா லிறந்துபோனார்கள், உமதுகணவரும் இன்னுமளவற்றபேரும் அவனாற்றான் இறந்துபோயினரென்றுசொன்னார்கள். உடனே பிரமனையானவள் அவிந்தகனியிற்பட்ட கடுங்காற்றைப்போல மனந்தளர்ந்து, ஆ அ-ஆ அ - நன்றாயிருக்கின்றது நன்றாயிருக்கின்றது, அவுணவீரர்களுடைய பராக்கிரமங்களெல்லாமிவ்வாறு நசிக்குமா, ஓர் பிராமணச்சிறுவனால் நமதுகணவரும் பிள்ளைகளும் ஏனையவீரர்களும் அழிந்தார்களென்றால் இதைவிட அவமானம் நமதுகுலத்திற்கென்னவிருக்கின்றது, இத்தினம் யானேபோய் அப்பிராமணச்சிறுவனுடைய வுயிரை வாய்மடுக்கின்றேனென்றெழுந்து, மேலானகீர்த்தியைப்பெற்ற அதிதியைப்போல வடிவெடுத்து, சிலஅவுணவீரர்கள் சிட்டராகவும் சிலஅவுணமாதர்கள் சேடியராகவும் உருக்கொண்டுதான்கொண்டகோலத்திற்கேற்றபடி புடைசூழ்ந்துவரச்செய்து, கொடியவிடத்தினைக் கலக்கப்பட்டிருக்கின்ற தேவாமிர்தத்திற்கிணையான சிலபண்டங்களைக்கையில்வைத்து, பெரியோர்களுங்கண்டவுடன் வணக்கங்கொள்ளத்தக்க வேடத்தோடு காசிப்பட்டணத்திற்குச்சென்றனள். அப்பட்டணத்திலுள்ள ஆடவரும் ஸ்ரீகளும் அவளைக்கண்டவுடன் அதிதிவந்தனளென்றுநினைத்து ஆனந்தமாகி, சிலர் புட்பங்களைக்கொண்டுவந்து தூவினார்கள். சிலர் பாதத்திற்சலத்தினைவிட்டுப் பூசைசெய்தார்கள். சிலர் பரிமளப்பொடி வீசினார்கள். சிலர் மாலைகள்கொண்டுவந்து தரித்தார்கள். சிலர் தாம்பூலங்கொண்டுவந்துகொடுத்தார்கள். சிலர் கனிவர்க்கங்களைக்கொண்டுவந்துஉபசரித்தார்கள். சிலர்ஆபரணங்களையும்வஸ்திரங்களையுந் தந்தார்கள். சிலர்பொன்னையும் இரத்தினங்களையும் பொழிந்தார்கள். சிலர் என்னகாட்சிகிடைத்ததென்று வியந்தார்கள். சிலர் எமது துன்பமனைத்தும் போயினவென்று நயந்தார்கள். சிலர் ஜனங்களைவிலக்கிக்கொண்டுசென்று அருகிற்கூடினார்கள். சிலர் அவ்வரவை அரசனுக்கறிவிக்குமாறு ஓடினார்கள். சிலர் பண்ணோடுங்கூடிப்பாடினார்கள். சிலர்பரதசாஸ்திரப்படி ஆடினார்கள். இவ்வாறு சகலரும்ஆனந்தங்கொண்டுஉபசரிக்கும்படியாக வஞ்சவடிவங்கொண்டுவந்தஅப்பாதகி ஒரோவென்று அரண்மனையிற்புகுந்து, ராஜஸ்ரீகள் வசிக்கின்ற அந்தப்புரத்திற்சென்றனள். உடனே அவ்வந்தப்புறவாயில் காப்பாளர் அரசன்றேவிக்கறிவிக்க, அவ்வரசன்றேவி எதிர்கொண்டுசென்று, தாயினுஞ்சிறந்தீர் வந்தீரோ வாருமென்றழைத்துவந்து, ஓர்

தங்கச்சிங்காதனத்தின்மீதிருக்கவைத்து, பாதபூசைமுதலிய வுபசாரங்களைச்செய்து; அம்மா- முனிவருடையதுணையில்லாமல் தேவரீர்மாத்திரந் தனியேவருவதற்கானகாரணம் யாதென்று பணிந்துகேட்டனள்.அதற்கு அக்கொடியவள் அவ்வரசன்றேவியைப்பார்த்து,மகளே – அன்பிற்சிறந்த அரிவையர் ஒருகாலத்துப் புருடனைப்பிரிந்திருக்கினு மிருப்பர், தமதுபுத்திரர்களை ஒருகணமேனும் பிரிந்திருக்கமாட்டார்கள்,யானும் எனதுமகோற்கடமூர்த்தியைக்காணாதிருக்கமாட்டாமல் முனிபுங்கவனைத் தனியே வனத்தின்கண்விடுத்துவந்தேனென்று சொல்லினள். அதைக்கேட்டவுடன் அரசன்றேவி ஓர்சேடியைக்கூவி,வீதியில் விளையாடல்செய்கின்ற மகோற்கடமூர்த்தியை யழைத்துவாருங்களென்று கட்டளையிட்டனள். மற்றொருசேடிக்கு அரசனையழைத்துவரும்படி ஆக்கியாபித்தனள். அவ்வாறே அவர்கள் அவ்விருவரிடத்தினுஞ்சென் றறிவித்தார்கள். உடனே அரசன் மனமகிழ்ந்து, அப்பாதகியிடத்தில் விரைந்துவந்து, அவளுடைய பாதங்களிற்பூக்களைச்சொரிந்து பூசைசெய்து, இரத்திநங்கள்- வஸ்திராபரணங்கள்-கனிவர்க்கங்கள், முதலிய கையுறைகளைத்தந்து,அன்னையே – அடியேனையு மோர்பொருளாகநினைத்துத் தேவரீர் இங்ஙன மெழுந்தருளினீரோவென்று பல சாந்தமொழிகளினாற்றுதிசெய்து,அனந்தமுறை சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, தேவரீர் அடியேன்மீது கிருபைவைத்து சிலநாள் இங்கிரும், எனதுகுமாரனுடைய விவாகம் நிறைவேறியமறுநாளைக்கே உம்மையும் மகோற்கடமூர்த்தியையும் அடியே னழைத்துக்கொண்டுசென்று, எனது குருசுவாமிகளிடத்தில் வசிக்கும்படிவிடுத்து, மீட்டும் இந்நகரத்திற்குத் திரும்புகின்றேன்,அதுகாறுந் தேவரீர் தயைவைத்திருத்தல்வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதனை அப்பாதகிகேட்டு, அரசனே-யானொருநிமிடமேனும்மகோற்கடமூர்த்தியைப் பிரிந்திருக்கவல்லேனல்லன், என்னை எவ்வாறோமயக்கி அவனை அழைத்துக்கொண்டுவந்துவிட்டனை, அதுமுதல் கன்றைப்பிரிந்த தலையீற்றுப்பசுவைப்போலத் தயங்கினேன், இனி அரைக்கணமேனுங் குழந்தையைப்பிரிந்து எனதுமுனிபுங்கவருக்குப் பணிசெய்யும்வலியிலேன்,அம்முனிபுங்கவரும் அரைநிமிடம் என்னைப்பிரிந்திரார், ஆதலால் இப்போதே மகோற்கடமூர்த்தியை என்னோடு கூட்டி அனுப்பிவிடவேண்டுமென்று கேட்டனள். அச்சமயத்தில் மகோற்கடமூர்த்திவந்தனர்.வந்தவரை அப்பாதகி எனதருமைக்குழந்தாய் வாருமென்றுதழுவி,விரைவிலெடுத்துத் தனதுமடியின்மீதுவைத்துக்கொண்டனள். அவள் வஞ்சகத்தை சுவாமியறிந்து,அம்மா-எனக்கு என்னகொண்டுவந்தனையென்று கேட்டனர். உடனே அவ்வஞ்சகி தனதுசேடியர்களிடத்திற் கொடுத்துவைத்திருந்த சிற்றுண்டிகளைவாங்கி மகோற்கடமூர்த்தியினுடைய திருக்கரத்திற் கொடுத்தனள். அவையனைத்தையும் எமதையன்விரைந்து வாங்கி வாங்கி வாய்மடுத்தனர். விடங்கலந்திருக்கின்ற அச்சிற்றுண்டிகளை சுவாமிவாங்கிப் புசிக்கப்புசிக்க அவைகளைக்கொடுத்த ராக்ஷசிக்கும் அவளுக்குச்சேடராகவும் சேடியராகவும் வந்த அவுணருக்கும் அவுணஸ்திரீகளுக்கும் விடவேகந் தலைக்கேறி இறந்துபோனார்கள். அவ்வற்புதத்தை யாவரும்பார்த்து ஆச்சரியங்கொண்டு, பின்னர் அப்பாதகி இன்னாளென்று அறிந்துகொண்டு, மகோற்கடமூர்த்தி

ளை அளவற்றவேதாகமங்களாற் றுதிசெய்தார்கள். கேட்டீர்களோசவுனகாதிமுனிவர்களே, இவ்விதமாக அவுணபாதகர்கள்வந்து செய்த அளவற்றவஞ்சனைகளையெல்லாம் எமது மகோற்கடப் பெருமானறிந்து, அவைகளை யவர்களுயிரோடு நாசமாக்கிய திருவிளையாடல்கள் இன்னுமனந்தமுள, அவைகளை விரிக்கிற் பெருகுமாதலால் இதுகாறுஞ் சொல்லியவளவில்நிறுத்தி, மற்றொருபோது அக்காசிப்பட்டணத்திலுள்ள வீடுகடோறும் தானொருவரே ஏககாலத்தில் அநேகராகி விருந்துபுசித்தருளிய திருவிளையாடலைச்சொல்லுவோம் கேட்பீராக. ஓர்நாள் அக்காசிநகரத்துள்ளயாவரும் அரசனுடைய கொலுச்சபையில்வந்து, மிக்க மனவுருக்கத்தோடுமவனைப்பணிந்தெழுந்து, ஆண்டவனே சகலலோகங்களுஞ் சுகமடைதற்பொருட்டுத் திருவவதாரஞ்செய்தருளிய மகோற்கடமூர்த்தியைத் தேவரீர் இந்நகரத்துள்ளோர் யாவருங் கிருதார்த்தர்களாகும்படி அழைத்துவந்து வைத்திருக்கின்றீர், அதற்கு யாங்கள்செய்யுங்கைம்மாறு ஒன்றையுங்காணோம், பூபாலகராயினோர் தம்மையடுத்தசனங்கட்குத் துன்பங்களைப்போக்கி இன்பங்களை யூட்டுவிப்பது அவர்களுடைய கடமையென்று சொல்லு நீதிசாஸ்திரப்படி தேவரீரும் அக்கடமையை அடியேங்கட்கு எக்காலத்தும் பாராட்டிவருகின்றீர், இவ்வாறு தேவரீர் அளவற்றசுகங்களை அடியேங்கட்கு உண்டாக்கிப் பாதுகாத்துவருகின்றீராயினும் அடியேங்கள் தேவரீரிடத்தில் விண்ணப்பஞ் செய்துகொள்வதற்கான ஒருகுறைவிருக்கின்றது, அவ்விண்ணப்பத்திற்குத் தேவரீர் செவிகொடுத்தருளல்வேண்டும், அதாவது- அடியேங்களுடையவீடும் பாக்கியமும்பயனடையும்படியாக மகோற்கடமூர்த்திக்கு அமுதுசெய்விக்க விருப்பங்கொண்டிருக்கின்றோம், அவ்விருப்பத்தைத் தேவரீர்தயைசெய்து அங்கீகரித்துசுவாமியை அடியேங்களோடு அனுப்பல்வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கரசனவர்களைப்பார்த்து,ஓ பத்தியிற்சிறந்தவர்களே-கிருபைக்கடலாகிய மகோற்கடப்பெருமான் இப்பட்டணத்தில்வசிக்கின்றநாளெல்லாம் யாமவர் சமீபத்திலிருந்து அமுதூட்டித் திருத்தியடைவதல்லாமல் ஒருநாளாயினும் அந்தமேலானமூர்த்தியை யாம் பிரிந்திருக்க மனமொவ்வோம், அன்றியும் அவருடைய இச்சையின்படி யாம்அன்புசெய்து நடந்துகொள்ளுவதேயன்றி, நமதிச்சையின்படி அவரைவரச்செய்வது தகுதியன்று, அவருடையகுறிப்பு உங்கள்மீதிருந்தாலும், அவர் ஒருவர், நீங்கள்பலர், ஆதலால்-அக்கிருபாமூர்த்தி ஒவ்வொருமனைக்கு ஒவ்வொருநாள்வரினும் அநேகவருடஞ்செல்லும், இதனைத் தீர்க்காலோசனைசெய்யக்கடவீர்களென்றுசொல்லினன். அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தியும் அங்ஙனம்வந்து, அளவற்றபேர்களால் சபைநிறைந்திருப்பதைக்கண்டு, நீங்கள் யாவரும் இங்கேகூடியிருக்கின்றகாரணம் யாதென்று வினவியருளினர் அக்கிருபாவசனத்தை அந்நகரத்தார்கேட்டமாத்திரத்தில் உடன்முழுதுமுரோமாஞ்சிதம்பூத்து, அளவற்றகளிப்பின்மூழ்கினவர்களாகி, யாவரும் பணிந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்று, ஓபரம கருணாநிதியே- ஓ பத்தவச்சலனே-ஓ தீனசரண்யமூர்த்தியே-அடியேங்களெல்லாந் தேவரீருக்குத் திருவமுதுசெய்விக்கவேண்டி எமதாண்டகையாகிய ராசாதிராசரிடத்தில் விண்ணப்பஞ்செய்துகொண்டோம், அதற்கவர் சம்மு

தமாகவில்லையென்று யாவரும் ஒரேவிதமாகச் சொன்னார்கள். அவர்கள் சொல்லியதை சுவாமிகேட்டு, யாவருஞ்சந்தோஷிக்கும்படி சற்றேநிதானித்து, அன்பர்களே-இராசா எப்போதும்போலவே நமக்குபோசனஞ்செய்விக்கட்டும்,நீங்கள்யாவரும்போய் உங்களுங்கள்வீடுகள்தோறும் விருந்துசெய்யுங்கள் என்று திருவாய்மலர்ந்தனர். அத்திருவருளையாவருஞ் சிரமேற்கொண்டுசென்று, அவ்வவர்களுடைய வீடுகளையும் முற்றங்களையும் வீதிகளையும் அலங்காரஞ்செய்து, அவ்வவர்கட்குண்டான செல்வத்திற்கேற்றபடி விருந்துசமைத்தார்கள். இவ்வாறு யாவரும் தங்கள்தங்களுடைய வீடுகளில் தனித்தனியாய்அத்தியந்தசந்தோஷத்தோடுவிருந்துசெய்துகொண்டிருக்கின்றநாளில்,அந்நகரத்தில் சுக்கிலனென்னு மோரேழைப்பிராமணர் நித்தியதரித்திரராகவிருந்தும்,அவரும் அவருடையகற்பிற்சிறந்த வித்துருமையென்கின்றபத்தினியும்மனமொத்து,தினந்தினம்பிச்சையில்தங்களுக்குக்கிடைத்தமட்டும் ஒவ்வோரதிதிக்கு அமுது செய்வித்துக்கொண்டுகாலந்தள்ளிவருவார்கள். அத்தினமும்பழையபடி சுக்கிலரானவர் தமது கையில் ஓர்தண்டமும் உபாதானப்பாத்திரமுமேந்திக்கொண்டு,வீடுகள்தோறும் பிச்சைக்குச்சென்றனர். சென்றவர் அத்தினத்தில் ஒருவீட்டிலேனும் ஓர்பிடியரிசியும் போடப்பெறாதவராகி, வீணே பலவீடுகள்தோறும் அலைந்துதிரிந்து,மீட்டுந்தமது மனைக்கண்வந்து, தமதுபத்தினியாகியவித்துருமையைக்கூவிப்,பெண்ணே-இதுவரையில் கொஞ்சமாயேனுங்கிடைத்துவந்த உபாதானம் இத்தினம் கிஞ்சித்தாயினும் இல்லாமற்போயது,ஆதலால் இதுவரையில்கிடைத்துவந்ததில் எஞ்சியிருப்பதுபுல்லரிசித்தவிடாயினும் அதனைப் பாகமாய்ச்சமைத்துவைக்கக்கடவை,இத்தினம் இந்நகரத்தாரெல்லாம மகோற்கடமூர்த்திக்கு விருந்துசெய்கிறார்கள்,யாமும் அவருக்குவிருந்துசெய்து பிறவித்துன்பத்தை யொழித்துக்கொள்ளுவோமென்றனர். அவையனைத்தையும் வித்துருமைகேட்டு,சுவாமி-இந்நகரத்திலுள்ளவர்களெல்லாம்செல்வத்தின்மிகுத்தவர்கள்,மகோற்கடமூர்த்தியானவர் இத்தினம்அவர்கள்வீடுகள்தோறுஞ்செய்தஅறுசுவையோடுங்கூடியவுண்டியையுண்ணவிருப்பதுநிச்சயமே,அவர் நமதுஏழைக்குடிலுக்கும் எழுந்தருளுவரோவென்றனள். அதற்குச்சுக்கிலர் அவளைப்பார்த்துப், பெண்ணே-நம்மிடத்திலும் அவரதுபெருங்கருணை யிருக்குமாயின் வருவரென்றுசொல்லித், தாமவ்விடத்தினின்று நந்தவனத்திற்குச்சென்று, வன்னிப்பத்திரமும் அறுகுமெடுத்துவந்து,அவற்றில்பழுதில்லாதபடி ஆய்ந்துவைத்து, கங்கையிற்சென்று ஸ்நானம்பண்ணிப் பூசைசெய்துகொண்டிருந்தனர். அவருடையபத்தினியும் எஞ்சியிருந்தபுல்லரிசியையெல்லாமெடுத்து ஆராய்ந்து, மிக்கபாகத்தோடு சமைத்துவைத்தனள். இவ்வாறு அந்நகரத்தினரெல்லாம் மகோற்கடமூர்த்திக்கு விருந்துசெய்கிற சம்பிரமத்திலிருக்க,அதை நாரதமுனிவரறிந்து, சனகர்முதலிய முனிபுங்கவர்கட்கு அறிவித்தனர். உடனே அவர்கள் காசிராசனுடைய அரண்மனையைநோக்கிவந்தார்கள். அம்மாத்திரத்தில் அரசன்விரைந்து எதிர்கொண்டுசென்று,அவர்களைப்பத்தியோடழைத்துவந்து, தனித்தனி ரத்நசிங்காதனங்களிலிருக்கவைத்து,பாதபூசைமுதலிய வுபசாரங்களைச்செய்து, கற்பகம்-காமதேனு-சிந்தாமணி-நவநிதிமுதலியவைகளையெ

ல்லாம் அடுத்தபேருக்குக் கடைக்கண்பார்வையில் கொடுத்தருளத்தக்கவல்லபமும் மகத்துவமுமுடைய சுவாமிகளெல்லாம் அற்பனாகிய அடியேனிடத்தில்வந்தகாரணம் யாதோ அதனை யான் கடைத்தேறுமாறு திருவாய்மலர்ந்தருளல்வேண்டுமென் று பிரார்த்தித்தனன். அதற்கம் முனிபுங்கவர்கள் அவனைப்பார்த்து,ஓ லோகபாலனே-தியானசமாதிகளாலேபெறத்தக்கபேறாகியவோர் நிட்களப்பொருளே உனதுமனைக்கண் உலகமெல்லாம் உச்சீவித்தற்பொருட்டு சகளமாயெழுந்தருளியிருப்பதாகக்கேள்வியுற்றயாங்கள் அதனைத் தரிசிக்கவும் அதற்குத்தொண்டுசெய்யும் பேற்றினைப்பெற்ற நின்னைக்காணவும் வந்தோமென்றுசொன்னார்கள். அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தி அங்ஙனமெழுந்தருளினர். உடனே சனகர்முதலாயினோர் சுவாமியைப் பலமுறை பணிந்தெழுந்து,வேதாகமங்களினால் அளவற்றதோத்திரங்களைச்செய்து, அவருடையகிருபையைப் பெற்றவர்களாகித்,தத்தம்பதிகளைச்சேருவதற்கு விண்ணப்பஞ்செய்தார்கள். அதற்கு மகோற்கடமூர்த்தி அம்முனிவர்களைப்பார்த்து, அன்பர்களே- இராசனுடையவீட்டிலே நம்முடனிருந்து விருந்துசாப்பிட்டுப் பின்னருங்கள் பதவிகளைச்சேரலாமென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கம் முனிவர்கள் மகாபாக்கியமென்று ஆனந்தித்து, கங்கையில் ஸ்நானஞ்செய்யச்சென்றார்கள். அந்நகரத்தினரெல்லாந் தங்கடங்கள்மனைகளில் எல்லாப்போனகங்களையுஞ் சமைத்துவைத்தார்கள். அப்போது சுக்கிலனென்கிற ஏழைப்பிராமணருடைய பத்தியை உலகத்திலுள்ளோர்கட்கு அறிவித்தற்பொருட்டு முன்னதாய் அவருடைய புற்கூரைவீட்டினுடைய முன்றிலின்கண் எழுந்தருளிநின்றனர். அதைச்சுக்கிலர்கண்டு,எனதுசெல்வம்வந்ததென்று ஆனந்தக்கடலாடி, ஓர்கமண்டலத்திற் சலங்கொண்டுவந்து, அவரது திருவடிகளில் அபிஷேகித்து, அவ்வபிஷேகித்தசலத்தைத் தமதுசிரத்தின்மீது புரோட்சித்துக்கொண்டு புறவிருளையெல்லாந்தொலைத்து,அகவிருளுந்தொலைவெய்தும்படி உள்ளினுங்கொண்டு, சிதலையாற் றின்னப்பட்டிருக்கின்ற வோர்மணையின்மீது எமதுசர்த்தனை யெழுந்தருளச்செய்து, வன்னிப்பத்திரத்தினாலும் அறுகினாலும் திருவடிகள் குளிரும்படியாசமிகுந்த பத்தியோடு அருச்சித்து, வேதாகமங்களினாற் பலமுறை துதிசெய்து, வெகுநாள் பிரிந்ததைமூடாமல் அங்கங்கே சூரியகிரணத்தாற் பாயப்பட்டிருக்கின்ற ஓரறைவீட்டில் சுவாமியை யழைத்துக்கொண்டுபோயிருக்கவைத்தனர். உடனே அவர்பத்தினியாகிய வித்துருமைவந்து சுவாமியைப்பணிந்தெழுந்து,தான்சமைத்துவைத்த புல்லரிசிச்சோற்றையுங் குழம்பையும் மோதகம் அப்பமுதலிய சிற்றுண்டிகளையும் ஓர்பரிகலத்தில்வைத்து, ஓ கிருபாமூர்த்தியே - ஏழை அடியேங்களாற் சமைத்துவைத்தஇவ்வுணவையும்தேவரீர் அங்கீகரித்துக்கிருபையோடும் புசித்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தனள்.அவளன்புக்குச் சுவாமி மனமகிழ்ந்து, பத்தியோடு பரிமாறியவுணவுகளையெல்லாங்கிருபையோடு புசித்துக் கைபூசி, மற்றோரிடத்தில் ஓர் தருப்பைச்சயனத்தின்மீது எழுந்தருளினர். பின்னர் சுக்கிலன் சுவாமியருகில்வந்து,இளைப்பாறுகிறவரையில் தமதுகையில் விசிறியேந்திப் பணிசெய்திருந்தனர். இவ்வாறு மிகுந்த அன்போடு பணிசெய்திருக்கின்ற சுக்கிலனை சுவாமிபார்த்து, அன்பனே-அதி

திபூசைசெய்வாருள் உன்னையொப்பவர் இவ்வுலகின்கண் எவ்விடத்திலுமில்லை, நீ போய் போசனஞ்செய்து உனதுமனைவியோடு மிங்ஙனம்வருகவென்று திருவாய்மலர்ந்தனர். அவ்வாறு சுக்கிலர்சென்று, சுவாமிபுசித்தருளிய பரிகலச்சேடத்தைத் தமதுமனைவியோடுண்டு, பின்னர் அவளுடன் மிக்கமனமகிழ்ச்சியோடு சுவாமியிடத்தில்வந்து பணிந்தனர். பணிந்தவர்கள் மீட்டுமெழுவதற்குமுன் சதுர்வேதங்களாலுங் காணுதற்கரிய கர்த்தர் தமதுசுயரூபத்தை அவர்கட்குக்கடாக்ஷிக்கத் திருவுளங்கொண்டு யானைவதனமும் பத்துக்கரங்களும் விளங்கும்படியாய், ஏனைய அவயவங்களெல்லாம் பிரகாசிக்க, இருமருங்கினுஞ் சித்தி புத்திகள் சமேதமாய்ச் சிங்கவாகனமூர்ந்து தரிசனந்தந்தனர். அத்தரிசனத்தைக்கண்ட சுக்கிலரும் விருத்துருமையும் அளவற்றகளிப்பிலாழ்ந்தவராகி, விழிகளில் ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து, மீட்டும் பலமுறைபணிந்தெழுந்து, இருகரங்களையுஞ்சிரமேற்கூப்பி அளவற்றதுதிகளைச்செய்தார்கள். அவர்களை எமதையன் கிருபையோடுபார்த்தருளி, அன்பர்களே - உங்களுக்குவேண்டியவரங்களைக்கேளுங்களென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கத்தவசீலர்கள் சுவாமியைத்தொழுதெழுந்து, ஓ கிருபாமூர்த்தியே - அடியேங்கட்குத் தேவரீருடைய திவ்வியசரணாரவிந்தங்களில் இடைவிடாதபத்தியும்முத்தியுங் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவ்வாறே அவர்கட்குசுவாமி வரங்கொடுத்தருளி, இந்திரன்-குபேரன்முதலாயினோரும்பொறாமைகொள்ளத்தக்க போகபாக்கியங்களை அவர்கட்குத்தந்து, மீட்டும் மகோற்கடப்பிள்ளையாராகத் திருவுருக்கொண்டு, அரசனுடையமனையின்கணெழுந்தருளினர். அப்போது முன்னரே ஸ்நானஞ்செய்யச்சென்ற சனகாதிமுனிபுங்கவர்கள் தங்கடங்கள் நியமங்களை முடித்துக்கொண்டுவந்தனர். உடனே அரசன் தனது சுற்றத்தினரையெல்லாம் வருவித்து சுவாமியை அமுதுசெய்வதற்கழைத்தனன். அந்நகரத்தினரும் ஒருமிக்க வந்து சுவாமியையழைத்தார்கள். அவர்களைசுவாமிபார்த்து, இலை இடுங்கள் இதோவந்தனமென்று திருவாய்மலர்ந்தனர். அதைக்கேட்டமாத்திரத்தில் யாவரு மனமகிழ்ந்து தத்தம்வீடுகளைநோக்கிச் சென்றார்கள். அவர்கள்செல்லுமுன்னம் மகோற்கடப்பிள்ளையார் அவ்வவர்கள் வீடுகள்தோறு மெழுந்தருளியிருந்தனர். அதை அவ்வவர்களுங்கண்டு, அந்தோபிழைத்தனம் பிழைத்தனமென்று திடுக்குற்றெழுந்து பணிந்து, மிக்கவுள்ளன்போடு சுவாமிக்கு அமுதுபரிமாற ஆரம்பித்தார்கள். அரசனுடையமனையிலும் எப்போதும்போலத் தாம் சனகாதிமுனிவர்களும் அரசனும் அவனுடையபந்துக்களும் தமதுபந்தியிலிருந்துண்ணும்படியாகத் திருவமுதுசெய்தனர். ஏனையர் மனைகளினும் அந்த ஏககாலத்திற்றானே ஓர் வீட்டில் தயிலமிட்டுக்கொண்டு ஸ்நானஞ்செய்கின்றவராகியும், ஓர்வீட்டில் சந்தியாவந்தனஞ்செய்கின்றவராயும், ஓர்வீட்டில் தியானஞ்செய்கின்றவராயும், ஓர்வீட்டில் போசனஞ்செய்கின்றவராயும், ஓர்வீட்டில் சங்கீதங் கேட்கின்றவராயும், ஓர்வீட்டில் நாட்டியம்பார்க்கின்றவராயும், இருந்தனர். இவ்வாறு வீடுகள்தோறும் வேறுவேறாக வேண்டியபடி விளையாடல்செய்து, அந்நகரத்தின்கணுள்ளபேர்க்கெல்லாந் தமது திருவருளை வழங்கி, அளவற்றபாக்கியங்களையும் அவர்கட்குக்கொடுத்தருளினர். இவ்

வற்புதத் திருவிளையாடல்களையெல்லாம் சனகராதிய முனிபுங்கவர்கள் பார்த்துப் பேரானந்தக்கடலிற் றிளைத்தவர்களாகி, அத்தினமுழுவது மங்ஙனேயிருந்து,மறுநாள்முதல் அந்நகரத்தின்கண் சிற்பசாத்திரவிதிப்படி ஓராலயஞ்சமைத்து, அவ்வாலயத்தில் மகோற்கடமூர்த்தியினுடைய திருவுருவத்தைப் பிரதிட்டைசெய்து, அம்மூர்த்திக்குத்தமது அபிதானத்தால் சனகாதிகணேசனென்று திருநாமந்தரித்து, அவ்வாலயத்தருகில் ஓர் தடாகந்தொடுவித்து, அத்தடாகத்திற்குக் கணேசகுண்டமென்று பெயரிட்டு,அதில் தாங்கள்ஸ்நானஞ்செய்து, கணேசமூர்த்திக்கும் அத்தீர்த்தத்தால் அபிடேகமாட்டி, வேதாகமவிதிப்படி பலநாள் பூசித்துவந்தார்கள். அவர்களிடத்தில் மகோற்கடமூர்த்திக்குக் கிருபையுண்டாகி, சித்தி புத்திகள் சமேதராய் சிங்கவாகனமூர்ந்து,யானைமுகமும்பத்துக்கரங்களும்விளங்கும்படியாக அவர்கட்குக் காட்சிகொடுத்தருளினர். அக்காட்சியைக்கண்டவுடன் அம்முனிபுங்கவர்கள் ஆனந்தக்கடலாடி, அளவற்ற துதிகளை அன்போடுசெய்துபணிந்தார்கள். அவர்கட்கு என்னையுமோரடிமையாகவுடைய கணேசமூர்த்தியானவர் தவத்திலும் யோகத்திலும் ஞானத்திலும் நற்குணத்திலும் மேன்மையாகக்கடவீரென்று வரங்கொடுத்தருளி, மீட்டு முன்போலவே மகோற்கடமூர்த்தியாகத் திருவுருக்கொண்டு விளையாடல்செய்திருந்தனர். பின்னர் சனகராதியமுனிவர்கள் மிகுந்த அன்பினால் சுவாமியைவிட்டுப் பிரியமாட்டாதவர்களாகி, அந்நகரிற்றானே சிலகாலமிருந்து, தாங்கள்பிரதிட்டைசெய்த கணேசமூர்த்தியை முற்றினும் பூசித்துத் தங்கடங்கள்பதவிகளைநோக்கிச் சென்றார்கள். சனகர்முதலிய நால்வராலும் பூசித்த அம்மூர்த்தியைப் பின்னர் தேவர்கள் முனிவர்கள் முதல் அந்நகரத்திலுள்ளோர்யாவரும்பூசித்து, சகலதுன்பங்களினின்று நீங்கி, மகோற்கடமூர்த்தியினுடைய கிருபையையும் அளவற்றவரங்களையும்பெற்றுவாழ்ந்திருந்தார்கள். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே இதுகாறும் தமது அறக்கருணையால் அடியார்களுக்குப் பற்பலதிருமேனிகளைக்கொண்டுசெய்தருளிய திருவிளையாடல்களைச்சொன்னோம், இப்பால் தமதுமறக்கருணையால் கொடியவனாகிய நராந்தகனோடு யுத்தஞ்செய்த திருவிளையாடலைச்சொல்லுவோங் கேட்பீர்களாக. பிரமன் விண்டு உருத்திரனென்னு நாமங்களைப்பெற்ற திரிமூர்த்திசொரூபமாகவிளங்கிச் சராசரப்பிரபஞ்சங்களையெல்லாம் படைத்துங் காத்துஞ்சங்கரித்துமிரா நின்ற வேதாகமங்களாலுந்தேடிக் காண்பரிய மூலகாரணக்கடவுளென்னும் மகோற்கடமூர்த்தியானவர் நராந்தகனாலேவப்பட்ட அவுணவீரர்களையெல்லாம் மீட்டுந்திரும்பச்செல்லவிடாமல் சங்கரித்துவந்தபடியால் அப்பாதகன் கோபந்தலைக்கொண்டு, நாமனுப்பியவீரர்கள் மகோற்கடனைக்கொன்றார்களோ அல்லவெனில்மாண்டார்களோ,இதுகாறும் ஒருவரையேனுந் திரும்பிவரக்காணேமே, இதைவினாவிலறிந்துகொள்ள வேண்டுமென்று தனக்குள்உத்தேசித்து, சூலனென்றுஞ் சகலனென்றுஞ்சொல்லுகின்ற இரண்டுதூதர்களைக்கூவி, நாம் மகோற்கடனைக் கொன்றுவரும்படிஏவிய தூதர்களில் ஒருவரையேனும் மீண்டுவரக்காணேம், அவர்கள் அங்கு எவ்வாறாயினரோ அதனை வினாவி லறிந்துவரக்கடவீர்களென்று ஏவினன். உடனே அத்தூதர்கள் மானிடவடிவோடு காசிநகரத்துள்வந்

து, நராந்தகனுடையவீரர்களையெல்லாம் மகோற்கடமூர்த்தியானவர் ஒவ்வொருவிளையாட்டினால் நாசஞ்செய்தமையைக்கேட்டுத் திடுக்குற்று,வீதியிலே சிறுவர்களோடும் விளையாடல்செய்கின்றமகோற்கடமூர்த்தியையுந் தமதுமலவிருளொழியும்படியாகத் தரிசித்துப்,பார்வைக்கெளியனாய்ப் பல சிறுவர்களோடும் விளையாடு மிவன் நமதுசுத்தவீரர்களையெல்லாங் கொன்றனென்பது என்னஆச்சரியம், இவனை நாமேபிடித்துக்கொன்று,நம்மையனுப்பிய நராந்தகற்குப் பெருமகிழ்ச்சியை யுண்டாக்குவோமென்று நினைத்து, தங்கள்சுயரூபத்தோடுமெழுந்து மகோற்கடமூர்த்தியினுடையதிருக்கரங்களைப்பிடித்தார்கள். அப்போது சுவாமி அக்கைகளையுதறி,மீட்டுமவர்கள்கைகளைத் தமது திருக்கரத்தாற்பிடித்துக்கொண்டு, தாமுமவர்களைப்போலப்பெரியரூபமெடுத்து, அவ்விருவரையும் பூமியின்கண் அறையப்போயினர். அதற்கப்பாதகர்கள் பயந்து துதிசெய்து,சுவாமி-அடியேங்கள் நராந்தகனாலேவப்பட்ட தூதர்கள், அடியேங்களைத்தேவரீர்கொல்லாது காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதைக் கிருபைக்கடலாகியகர்த்தன்கேட்டு,அவர்களை நிலத்தில்விடுத்து, இதுகாறும் பற்பலவஞ்சவடிவங்களோடு நம்மிடத்துவந்த உங்கள்வீரர்களையெல்லாங்கழுகுகட்கும் பருந்துகட்கும் இரையாக்கினோம்,இன்னும்வரத்தக்கவர்கள் யாவரேனும்இருக்கின் அவர்களையுங்கொல்லக்காத்திருக்கின்றோம், அறிவென்பதுஎள்ளளத்தனையுமில்லாதநராந்தகனிடத்தும்தேவாந்தகனிடத்தும்நீங்கள்சென்று இதுகாறு முடிந்ததையும்இனிமுடியப்போகின்றதையுஞ் சொல்லவேண்டுவீரேல்,இதுகாறு முடிந்தமையைஉலகமுழுவதுஞ்சொல்லும் இனிமுடியப்போகின்றமையையாமேசொல்லக்கேண்மின்கள்,அவர்களிப்போதுஅனுபவிக்கும்பெருஞ்செல்வத்தினையும் வலியபிராணனையும் இன்னுஞ்சிலநாளனுபவிக்கவேண்டுவார்களாயின், தாங்கள்செலுத்திவருகின்றகொடுங்கோலைக்கடந்து,உண்மையாகியவேதநெறிகளைவளர்த்து, தேவர்கட்கெல்லாம்அவ்வவர்களுடையபதவிகளை முன்போ லநுபவிக்கக்கொடுத்து, தீவினையிரு ளின்றோடுமுடிந்ததென்று உலகமெல்லாஞ்சொல்லிச் சுகத்தோடுமடையும்படியாகச் செங்கோலைநடாத்திவரச்சொன்மின்கள். அச்செல்வத்தினையும் பிராணனையும் போக்கடித்துக்கொள்ள வேண்டுவார்களாயின், இத்தினமே தங்கள்சேனைகளோடு யுத்தகளத்திற்குவரச்சொல்லுங்கள், இதைசொல்லுநிமித்தமே உங்களைக்கொல்லாது கிருபையோடுவிடுத்தனம், நீங்கள் விரைவிற்சென்று அவர்கட்கு அறிவியுங்களென்று விடைகொடுத்தனர். உடனே அத்தூதர்களிருவரும் உய்ந்தோமுய்ந்தோமென்று ஓடி, நராந்தகனிடத்திற்சென்று பணிந்தெழுந்து, ஆண்டவனே- தேவரீருடைய கட்டளையின்படிசென்ற நமது வீரர்களெல்லாம் அம்மகோற்கடனை முன்னின்றுவெல்லுவது மிகவும் அரிதென்றுநினைத்து,தனித்தனி வெவ்வேறுமாயாரூபங்களைக்கொண்டுசென்று, சகலரும் அங்காசிப்பட்டணத்தில் அச்சிறுவனொருவனாலிறந்தார்கள். அவர்களுட்சிலர்இறந்தவிவரங்களைக்கேள்வியுற்றவண்ணஞ் சொல்லுகின்றோம், நந்தூரனென்பவனும்விகண்டனென்பவனும் அப்பட்டணத்துப்புரோகிதர்புத்திரர்களாகிப்போயிறந்தார்கள், பதங்கனும்-விதுலனும் காற்றாகச்சென்றிறந்தார்கள், கூடன் சிலையாகியிறந்தனன், காமனும்-குரோதனும்-கழுதையாகிச்சென்றிறந்தார்கள், குண்டன் யானைவடிவங்கொண்டு இறந்தனன்,

சிரம்பை அச்சிறுவனுக்குத் தனதுகையினால் விஷத்தயிலமிட் டிறந்தனள், சுவாலாமுகன் நெருப்பாகியிறந்தனன், விதாரணன் வாயுவாகியிறந்தனன், வியாக்கிரமுகன் ஓடினவர்களையெல்லாம்விழுங்கி யிறந்தனன், மேகன் சோதிடனாகியிறந்தனன், கூபனுங் கந்தர்னுங் கிணறாகியுந் தவளையாகியுமிறந்தார்கள், அந்தகன் துங்கன் அம்பன் என்னும் இவர்கள் இருளாகியும் மலையாகியும் மழையாகியுமிறந்தார்கள், பிரமதா அதிதியாகி யிறந்தாள், இவ்வாறு இங்கிருந்துசென்ற மேலான பராக்கிரமத்தினையுடைய நம்துவீரர்களெல்லாமிறந்தார்கள், யாங்களும் அச்சிறுவனைப்பிடிக்கநேர்ந்தோம், அப்போதசசிறுவன் எங்கட்குச்செய்யநேர்ந்த கோலாகலத்திற்கஞ்சி உடனே கீழ்ப்பணிந்தோம், அதற்கவன் எங்களைமாத்திரம் விடுத்து, உங்களரசர்கட்குச் செல்வமும் உயிரும்வேண்டுமானால் அவர்கள் இதுமுதலேனுஞ்செங்கோல்செலுத்துக,இல்லையெனில் இத்தினமே சகலசேனைகளோடும் போர்க்களத்திற்கு வருகவென்றுசொல்லி யெங்களைவிடுத்தனன், அச்சிறுவனோவெனில் ஓராயுதமேனுமில்லாதவன், அருகிற் றனக்கொருதுணையில்லாதவன், சிறிதுஞ்சேனையில்லாதவன்,பலசிறுர்களோடு நினைத்தவிடத்திற்சென்று விளையாடுந்தகுதியையுடையவன் இத்தன்மைத்தானவன் தன்னையெதிர்க்கின்ற சத்துருக்களை இமைப்போதில் அழிக்கின்றான், அவ்வாறழிப்பதினுந் தனக்கோரிளைப்புமில்லாதவனாயிருக்கின்றனன். ஓ சகலபுவனேஸ்வரா-அச்சிறுவனுடையபராக்கிரமத்தையும் அவன் இதுகாறு நம்மவரைச்செய்த கொடுமைகளையும் யாமறிந்தவளவினுங் கேட்டவளவினுஞ்சொன்னோம், இனித் தேவரீர்சித்தமடியேங்கள்பாக்கியமென்று சொன்னார்கள். அவையனைத்தையு நராந்தகன்கேட்டுத்,தனக்கு அருந்துணையாகவிருந்த சுற்றத்தினரும் அதிசூரர்களும்போய் ஒரு சிறுபையலுக்குப் பின்னிட் டிறந்துபோனார்களே என்று மனவருத்தமானது ஒருபக்கத்திலிருக்க, மற்றொருபக்கத்தில் மானமுங் கோபமு மேற்பட்டவனாகி, உடனே தனக்கு உரிமைபாராட்டவல்ல மந்திரிகளையழைத்து, இனி நாமே காசிப்பட்டணத்திற்சென்று அச்சிறுவனை யழிக்கவேண்டுமாதலால் இந்நிமிஷத்தில் நமதுசேனைகட்கெல்லாம் யுத்தத்திற் காயத்தமாயிருக்கும்படி கட்டளைசெய்வீர்களென்று ஆக்கியாபித்தனன். அம்மாத்திரத்தில் அவ்வமைச்சர்களும்புத்தியென்று தொழுது வெளிவந்து, சிலகாரியக்காரர்களையழைத்து,நமதுநால்வகைச்சேனைகளும் நிமைப்போதில் யுத்தத்தோடு இங்ஙனம் வந்துசேர்வதாக வள்ளுவனைக்கொண்டு எங்கு முரசறைவிக்கக் கடவீர்களென்று கட்டளையிட்டனர். அக்கட்டளையை யவர்கள் வள்ளுவனுக்கறிவிக்க, அவனும் பேரிகையோடு ஓரானைமீதேறி, நராந்தகனுடையசேனைகள் எவ்வெவ்விடங்களி லிருக்கின்றனவோ அவ்வவ்விடங்களிற்சென்று முரசறைந்தனன். அம்முரசினோசையைக்கேட்ட சகலசேனைகளும் உடனே சர்வாயுதபாணியராக நராந்தகனுடைய அரண்மனைவாய்தலில்வந்து நெருங்கினார்கள். இப்பால் நராந்தகனானவன் தனதுகொலுச்சபையைக்கடந்து, ஆயுதசாலையிற்புகுந்து, வயிரகவசத்தையெடுத்து விசாலமாகிய மார்பிலணிந்து, திவ்வியபாணங்கள் நிறைந்திருக்கின்ற அம்புபெய்தூணியைமுதுகிலிறுக்கி, விரல்கடோறுங் கோதைகளைமாட்டிப்,பார்வதாகிருதியாகவிளங்

குந்தநுசைக் கரத்திற்கொண்டு, தும்பைமாலையைக் கிரீடத்திற்சுற்றித், தண்டாயுதம்-வேல்-சக்கர முதலிய ஆயுதங்களையெடுத்துக்கொண்டு வெளிவந்து, அளவற்ற திவ்விய அசுவங்களைப் பூட்டப்பட்டு நவரத்நமயமாய்ச் சொலித்திருக்கின்ற தனது சொர்ன்னரதத்தின்மீது சிங்காசனைப்போலத்தாவியேறி, யாவரும் இந்திரனேஇவனென்று சந்தேகங்கொள்ளும்படிக்குக்கெம்பீரமாய்வீற்றிருந்தனன். அத்தருணத்தில்தனக்குத்தோழராய் பிராணபதமாகவிருக்கின்ற புசபல பராக்கிரமசாலிகளாகிய அரசகுமாரர்களெல்லாம் சர்வாயுதபாணியராய்த் தங்கடங்கள் வாகனங்களின்மீது ஏறினர். வீராதிவீரராகவிருக்கின்ற அளவற்றசேனைத்தலைவர்கள் பலபூரவிகளைப்பூண்டிருக்கின்ற தேர்களிலேறி, வில்-வாள்-வேல்-சக்கரம் - பிண்டிபாலம்-முசலம்-சப்பணமாதியாகிய ஆயுதங்களையுங் கொடியபாணவிதங்களையுந் தாங்கினவர்களாய்த், தமது காவலிலிருக்கின்ற சகலசேனைகளையுங்கூட்டிக்கொண்டு, சத்தசாகரங்களும் பெருக்கெடுத்ததைப்போல ஆரவாரித்து, அத்திர சத்திரங்களை ஏராளமாகத்தாங்கி, நமக்குப்போர்கிடைத்ததென்கின்ற சயவுச்சாகத்துடன்வந்து, மகாபாதகனாகிய நராந்தகனுடையரதத்தைப் புடைசூழ்ந்துநெருங்கினர். இப்பால் தங்களரசன்குறிப்பினையறிந்த சகலசேனாதிபதிகளுந் தங்கடங்கள் படைகளைத்தூண்ட அம்மாத்திரத்தில் பல வெள்ளக்கணக்கில் கடலையொப்பவிளங்குஞ் சகலசேனைகளும் அரண்மனைவாய்தலினின்றும் வெளிக்கொண்டு, ரணபேரி ஜயபேரி-வெற்றிச்சங்கம்-சின்னம்-கோடு-ஆகுளி-காளம்-பறை- குடமுழா-சல்லரி-மல்லரி-முதலிய பொற்பறைகள் கணகணவென்று முழங்கவும், துசபடங்கள் வானத்தைமூடிப் பட்படவென்றசையவும், பூரணசந்திரனைப்போல முத்துக்களினாற்சோடித்த கணக்கிறந்த தவளக்குடைகள் நான்மருங்குங்கவிக்கவும், மந்திரகிரியைப்போலவிளங்குந் தேர்கள் கெற்கரத்தொனிகளைச்செய்தோடவும், மதயானைகள் வீறிட்டுப் பகைவரைச்சீறிப் பிரசண்டமாருதத்தைப்போல வேகமாய்நடக்கவும், புரவிக்கூட்டங்களானவை நான்குபாதங்களினும் பூண்டிருக்கின்ற பொன்வெண்டையங்கள்கலிக்க அலைகளுக்குச்சமதையாகத்தாவி வானவெல்லையினுந் திசைகளினுஞ் சமுத்திரங்களினும்பாய்ந்து இடிமுழக்கினைப்போலக்கனைத்தோடவும், பிறையையொத்த கோரதந்தங்கள்விளங்க அரக்கினுஞ்சிவந்து உருண்டகண்களையுறுத்தித் தீப்பொறிகள்சிதறப்பார்த்துப் பூமிநடுங்கும்படியாகக் கால்களைப்பெயர்த்துவைத்துநடக்கும் ஆலகாலத்தையொத்த அவுணப்படைகள் வீராவேசங்களுடன் சிங்கநாதம் அட்டகாசங்களைச்செய்து ஆர்ப்பரிக்கவும், சத்தசாகரங்களும் ஏககாலத்தில் ஒன்றாய்க்கூடி முத்தியடையவருவதுபோல அளவற்ற காடுகளையு மலைகளையுங்கடந்து, காசிப்பட்டணத்தைவந்து வளைத்துக்கொண்டு, அப்பட்டணத்தி நாற்புறத்துஞ்சூழ்ந்த ஊர்களையெல்லா நெருப்பிட்டுக் கொளுத்தியும், கொள்ளையிட்டும், சகலவுயிர்களையுங்கொன்றும், தங்கள்தங்கள் வயிறுநிரம்பத்தின்று திரிந்துகொண்டிருந்தன. அச்சம்பவத்தையறிந்தசிலதூதர்கள் காசிராசனிடத்திலோடி அறிவித்தார்கள். அதைக்கேட்டமாத்திரத்தில் அரசனுக்கு அதிககோபமுண்டாகி, உடனே அமைச்சர்களை வரவழைத்து, நமது பட்டணத்தின்மீது நராந்தகன் படையெடுத்துவந்தான்

ன், நீங்கள் விரைவில் நமது நால்வகைச்சேனைகளையும் போர்க்கோலத்தோடுவெளிப்படும்படி உத்தரவுசெய்யக்கடவீர்களென்று ஆக்கியாபித்தனன். அதற்கவ்வமைச்சர்கள் அரசனைப்பணிந்தெழுந்து, ஆண்டவனே-பிரகற்பதிதேவருடையபுத்திக்கு மேலானபுத்தியையுடைய தேவரீர்க்கு மற்றையர் ஆலோசனையைச்சொல்லப் புகுவது அறிவின்மையாயினும் ஒவ்வோரமையங்களில் அடியேங்களால் சொல்லப்படுவனவற்றைத் தக்கபடி ஆராய்ந்துசொல்லவேண்டுமென்று நீதிநூல்களி லுள்ளபடியால் அவ்வாறே அடியேங்கள்மனத்தின்கணுண்டாகிய யோசனைகள் சிலவுள அவைகட்குத்தேவரீர்செவிகொடுத்தருளல்வேண்டும்,படையெடுத்துவந்தவேற்றரசர் மெலியர்களாயின் அவர்களையெதிர்த்து யுத்தஞ்செய்தழிக்கவேண்டும், ஒத்தவலியினராயின் அவர்களைக்கூட்டிவந்ததுணைகளைப்பேதித்துத் தன்வயப்படுத்திக்கொண்டு, பின்னர் வெல்லுமாற்றலினா லவர்களைவெல்லல்வேண்டும், இவ்விரண்டுமின்றி வலியர்களாயின் அவர்கட்குக்கன்னி-வத்திரம்-பொன்முதலியவைகளைக் குறைவறக்கொடுத்தும் உவகைபெற விருந்தூட்டியும் மனமிரங்கும்படி துதிசெய்தும் சிநேகஞ்செய்துகொள்ளல்வேண்டும், இவையனைத்தும் அரசர்க்குணர்த்தியிருக்கின்ற நீதிநூல்களின்துணிபு, நாமோ எளியர்கள்,நமக்குப் பகையாகிவந்த நராந்தகனோ மிகவும்வலியன், அவனுடையசேனைகளெல்லாங் கடல்போலப்பிரகாசிக்கின்றன, நமதுசேனைகள் ஓர்சாலிற்றங்கிய நீர்போலுமிருக்கின்றன, அவனுடையபராக்கிரமம் சூரியகிரணம்போலச் சகலபுவனங்களினுஞ்சொலிக்கின்றது, நமதுபராக்கிரமமோ மின்மினிப்பூச்சியொளியைப்போல மின்னுகின்றது, அடியேங்கள்சொல்லிய இவ்வாலோசனைகளெல்லாம் அடிகளுடையதிருவுள்ளத்தினுமுண்டு, ஆதலால் மேலானசேனைகளோடும் பராக்கிரமத்தோடும்வந்த அக்கொடியவனாகிய நராந்தகன் நம்மைத் துன்பப்படுத்தாதவிதமாக நாமவனுடையபாதத்தைச்சரணடைவதேமுடிவு, இம்முடிவைத் தீர்க்காலோசனைசெய்து விரைவில் நடந்துகொள்ளவேண்டுவதே நம்போலியர்க்கேற்றதருமமென்று சொன்னார்கள். இவையனைத்தையும் அருகிருந்துகேட்டுக்கொண்டிருந்த புரோகிதர்முதலாயினோரும் இப்போது அமைச்சர்களாற்கூறப்பட்ட கருமமே தற்காலத்தில் முடித்துக்கொள்ளவேண்டிய கருமமென்று சொல்லினர். பின்னர் சகலபுவனகர்த்தாவாகிய மகோற்கடமூர்த்தியினுடையதிருவடித்தாமரைகளில் மடைதிறந்தாலொத்த பத்தியைவைத்திருக்கின்ற காசிமகாராசன் புன்னகைசெய்து, நிகரற்றசூழ்ச்சிகளையுணர்த்தவல்ல மனுநீதிகளில் குறைவற்றகேள்விகளையுடைய அமைச்சர்களே, நாம்கொடிய பாதகனாகிய நராந்தகனுக்கு எளியராமென்பது திண்ணமே,ஆயினும்-அனாதிவத்துவாய்ஆதிமத்தியாந்தரகிதராய் சகலபிராணிகளிடத்துங்காரணபூதமாகப்பொருந்தி நடிப்பித்துக் களித்திருக்கு மேலவராகிய ஒப்பாருமிக்காருமில்லாத மகோற்கடமூர்த்தியே நம்மையெல்லாம் பாதுகாத்து ரக்ஷிக்கும்பொருட்டு இங்ஙனம் எழுந்தருளியிருக்கின்றனர். அத்தேவனும் அப்பாதகனுக்குளியரோ, இப்போது படையெடுத்துவந்த இவ்வந்தகனையும் இவன்சகோதரனாகிய மற்றோரந்தகனையும் இமைப்போதில் சங்கரித்து எல்லாவெற்றிகளும் நம்மைச்சேரும்படியாக ஒன்றானபரமே

ஸ்வரனே நம்மிடத்திலெழுந்தருளியிருக்க நமக்கினி யென்னகுறைநேர விருக்கின்றது, அன்பர்களே-இனி நீங்கள் யாதொன்றற்குமஞ்சாது நமது பராக்கிரமமெல்லாம் பாழாகாதபடி விரைவில் சகலசேனைகளோடும் யுத்தத்திற் காயத்தமாகக்கடவீர்களென்று ஆக்கியாபித்தனன். அதன்மீது அமைச்சர்களும் மற்றப்பரிசனங்களும் அரசனைப் பணிந்தெழுந்து, ஆண்டவனே-மேலானகடவுள் இங்ஙனமெழுந்தருளி யிருப்பதைச் சிறிதும்யோசியாது, அடியேங்களுடையபுத்திமயக்கத்தால் பற்பலகூறினம் அக்குற்றத்தினைத்தேவரீர்பொறுத்தருளல்வேண்டும்,இதோ நமதுநால்வகைச்சேனைகளையும் ஆயுத்தப்படுத்துகின்றோ மென்றுசொல்லி, அந்தச் சேனைகளிருக்குமிடங்கடோறும் வள்ளுவனைக்கொண்டு முரசறைவித்தார்கள். அம்முரசினோசையைக்கேட்ட சேனைகளெல்லாம் போர்க்கோலத்தோடும் வெளிக்கொண்டுவந்து, அரசனுடைய அரண்மனைவாய்தலைநெருங்கினார்கள். அதற்குமேல் அரசன் மூலகாரணக்கடவுளாகிய கணேசபூசைசெய்து, போசனாதிகளை முடித்துக்கொண்டு, ஆயுதசாலையுள்நுழைந்து, பொன்மலையாகிய மகமேருவின்மீது சந்திரனதுசோட்சகலைகள்பரவிக்காட்டுவதுபோல வயிரக்கவசத்தைச் சொன்னவடிவைப்பெற்ற மார்பினிடத்திறுக்கித், திவ்வியபாணங்கள்நிறைந்திருக்கின்ற அம்புபெய்தூணியை முதுகிற்கட்டி, இரத்திநமயமாகியபுட்டில்களை விரல்கடோறுமணிந்து, பகைவருயிரையுண்ணும் யமனையொத்த பாரித்தவில்லைத்தொழுதெடுத்து இடக்கரத்திற்பற்றிப், பற்பலதேவாஸ்திரங்களைவலக்கரத்திற்றாங்கி, சிரோரத்தினமயமாகச் சோதித்திருக்கின்ற கிரீடத்தின்மீதுதாமமாமாலையைச்சூடி, தண்டாயுதம்-வேல்-சக்கரம்-முசலம் - பாசமுதலிய ஆயுதங்களையெடுத்துக்;குகையிலிருந்துபுறப்பட்ட ராசகண்டீரவத்தைப் போல வெளிவந்து, சத்தசாகரங்களும் பெருக்கெடுத்ததுபோல அதிகவுற்சாகங்களுடன் ஆர்ப்பரித்திருக்கின்ற நால்வகைச்சேனைகளையு மழைத்துக்கொண்டு, அரமனைவாய்தலில்வந்திருக்கின்ற சேனாதிபதிகளையெல்லாங்கண்டு, அவ்வவர்கட்கு அளவற்றகிராமங்கள்-யானைகள்-குதிரைகள் ஆயுதங்கள்-ஆபரணங்கள் முதலியவெகுமதிகளைச்செய்து, பொன்வண்டில்-அச்சு-மச்சு-குத்துக்கால்-கொடுங்கை-இடக்கியம்-கொடை முதலிய சிங்காரங்களைக்கொண்டு நவரத்திநமயமாகப் பிரகாசித்திருக்கும் தேரின்மீதாரோகணித்து, விருதுக்கொடிகள்-மகரதோரணங்கள- துசபட்ங்கள வெண்சாமரைகள்-வெண்பட்டுக்குடைகள்-ஆலவட்டங்கள்- மயிற்பிஞ்சங்கள் முதலிய சின்னங்களானவை நாற்புறத்தும்விளங்க, தோற்கருவி-துளைக்கருவி-மிடற்றுக்கருவி-கஞ்சக்கருவி- நரப்புக்கருவியென்னும் ஐவகைக்கருவிகளில்விளங்கிய பதினெண்வாத்தியங்கள் அண்டங்களதிரமுழங்க,அளவற்றபெரியோர்களும் முனிவர்களும் மங்கலவாழ்த்து சொல்லும்படியாக அரமனைவாயிலைக்கடந்து,தனதுபகைவர் வட்டவைனயப்போலச்சிறி யெதிர்பார்த்திருக்கும் ரணக்களவெல்லையைச்சேர்ந்து, தனது இட்டதெய்வத்தினைமனதிற்றியானித்து, மதம்பொழிகின்ற யானைகட்குச் சிங்கமானது தனதுவரவைக்காட்டுமாறு கற்சனையிடுவதுபோலசத்துருக்கள்க ளடங்கும்படியாக வெற்றிச்சங்கினைமுழக்கினன். அம்முழக்கினைக்கேட்ட நராந்தகனுந் தனதுஇட்டதெய்வத்தினைத் தியானித்து வே

ற்றிச்சங்கினைமுழக்கினன். பின்னர் அரசர்தம்பிரான்சேனைகளும் அவுணர்தம்பிரான்சேனைகளும் அதிகவேகத்தோடுவந்து, ஒன்றோடொன்று நெருங்கி, ரதவீரர்களோடுரதவீரர்களும் யானைவீரர்களோடு யானைவீரர்களுங் குதிரைவீரர்களோடு குதிரைவீரர்களும் பதாதிவீரர்களோடு பதாதிவீரர்களுங் கைகலந்தெதிர்த்து, ஈது தங்களினம் ஈது பிறரினமென்றுதெரிந்துகொள்வதற்கருமையாக ஆகாயமெங்குந்தூளிபடலங்கள்போர்ப்ப, அத்தூளிபடலங்களை உதிரவெள்ளங்கள் மாய்ப்ப,இவ்விதஆடம்பரங்களோடு இரண்டினங்களுஞ் சமர்புரியுங்காலத்தில், இரதமற்றவர்கள் யானைமீதேறியும்,யானையற்றவர்கள் குதிரைமீதேறியும், குதிரையற்றவர்கள் நிலத்தின்மீதிருந்தும், நிலத்திருந்தவர்கள் வேறுகதியின்றிமாய்ந்தும் வாளற்றவர்கள வாளிகளைத்தொடுத்தும், வாளியற்றவர்கள் வேல்களைவிடுத்தும், வேலற்றவர்கள்சூலத்தினைச்செலுத்தியும், சூலமற்றவர்கள்சக்கரத்தைத்தூண்டியும், சக்கரமற்றவர்கள் மழுவையெறிந்தும், மழுவற்றவர்கள் எழுவைக்கடாவியும், எழுவற்றவர்கள் கதையையேந்தியும், கதையற்றவர்கள் முசலத்தினையெடுத்தும், முசலமற்றவர்கள் விசனங்களிலிறந்தும்,இவ்வாறு யாவரும் அளவற்றபடைகளை மாறிமாறியெடுத்து யுத்தஞ்செய்தபோது, இருவகைச்சேனைகளினுங் கணக்கற்றபேர் மண்டைதிறந்தும், மூளைகள்சிதறியும், விழிகள்தெறித்தும், வாய்கள்பிளந்தும்,பற்களுதிர்ந்தும்,கழுத்துகளொடிந்தும், புயங்கள்சரிந்துங்,கரங்கள்முறிந்தும் வயிறுகிழிந்தும், குடல்களிளைந்தும், துடைகள்தகர்ந்தும்,கால்களொடிந்தும்போயினர். அப்போதவ்வெல்லையெங்கும் பற்பலகோடிகவந்தங்கள் கூத்தாடின. பூதபசாசங்கள் காளிக்கூட்டங்கள் அங்கிருக்கின்ற நிணமாமிசங்களையெல்லாந் தெவிட்டவுண்டு அரசர்பெருமானுடைய வீரத்தினையும் அவுணர்பெருமானுடையவீரத்தினையும் புகழ்ந்து பாடிக்கொண்டுதிரிந்தன. கழுகு-பருந்து-காக்கை-முதலியவைகள் நிணங்களையெல்லாந் திருத்தியாகப்புசித்து வானவெல்லையிற் பந்தலிட்டுலாவின. நாய்-நரி-முதலியவைகள்-பிணங்களைப்பிடுங்கித்தின்று ஊளமிட்டுத்திரிந்தன. அளவற்றவீரர்கள் தங்கள்முடிசிதறிக் கவந்தங்களாகியும் பற்பலவாட்போர்களைவிளையாடிச் சொர்க்கம்புகுந்து அங்கு அரம்பையருடைய நடனங்களைப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இவ்விதமாக இருவகைச்சேனைகளினுமுள்ள ரதகசதுரகபதாதிகள் அளவற்றனமாண்டுங் காசிராசனுடைய அமைச்சர்களும் சேனைத்தலைவர்களும் எவ்வளவேனு மனத்தின்கணச்சமில்லாமல், மிக்க பராக்கிரமத்தோடு அவுணவீரர்களையெல்லாம் இடைவிடாது அதஞ்செய்துகொண்டிருந்தனர். அதனால் அவுணசேனைகள் மிகுதியும் வலியுள்ளனவாயிருந்துந் தயிரியமும் பராக்கிரமமுங் குறைபட்டவர்களாகிக், காசிராசனுடையசேனைகட் கெதிர்நிற்கமாட்டாது பின்னிட்டோடத்தலைப்பட்டார்கள். அதனை நராந்தகன்கண்டு, ஆ அ-நமதுசேனைகளுடைய பராக்கிரம மிகநன்று மிகநன்றுஎனக் கோபநகைகொண்டு, ஓ அறிவற்றவர்களே-அற்பசேனைகள்செய்யும்போரினுக்கஞ்சி ஏனோடுகின்றீர்கள், நின்மின்கள்நின்மின்களென்றுசையமர்த்திப்,பிரளயத்திற்குநிகரான அளவற்றஆயுதங்களை நாற்புறத்தும்விசிக்கொண்டு, அதிகவீராவேசத்துடன் ஓடிவந்து தானேயுத்தஞ்செய்யநேர்ந்தனன். அத

னைப்பின்னணியிலிருந்த காசிராசனும் அமைச்சர்களும்பார்த்து,ஹோஹோலென்று தங்கள்ரதங்களை முன்னணியிலேகொண்டுவந்து நிறுத்தி,அவுணராசன்விடுகின்றபடைகட்கெல்லாம் பிரதியாக வேறுவேறுபடைகளை விடுத்து யுத்தஞ்செய்தார்கள். இவ்வாறு காசிராசனும் நராந்தகனுங் காலாந்தகனைப்போலச்சீறி, ஒருவரையொருவர் வெல்லவேண்டுமென்னுங் கருத்தினால் தமதுவிற்களில் அளவற்றதிவ்வியபாணங்களை ஒருமுனையிற் பூட்டிக், காட்டினிடத்தில் கல்மழைபொழிவதற்கொப்பாக ரதகசதுரக பதாதிகளின்பெருக்கின்மீது பிரயோகித்தனர். அம்மாத்திரத்தில் இருவருடையபாணங்களும் ஒன்றோடொன்றுராய்ந்து, நாற்புறங்களிலுந் தீக்களையிறைத்து, அதிவேகத்துடன்ஆலகாலவிடத்தினைப்போலச்சீறிச், செழித்தோங்கித் தழைத்திருக்கின்ற தோப்புகளில் சூறைக்காற்றுபுகுந்தாற்போல இருவகைச்சேனைகளையும் வாட்டிவருகின்றபோது,மேருகிரியைப்போலப்பாரித்திருக்கின்ற தேரணிகளெல்லாஞ்சிதைந்து, அச்சு மச்சுகுத்துக்கால் கொடிஞ்சைமுதலிய உறுப்புக்கள் பின்னப்பட்டிறைந்தும்,தமது கர்ச்சனையினால் திசையானைகளையுங் கலங்கச்செய்யவல்லயானைப்பந்திகள் முழுவதுங்கலங்கி, மத்தகம் துதிக்கை கோடுமுதலிய அவயவங்கள்முறிந்தும், அலைகளைப்போலத்தாவிப் பாயவல்லபுரவிக்கூட்டங்களெல்லாமயங்கி, வெண்டையங்கள்கலிக்குங் கால்களுமுகவணிகளுஞ்சிதைந்தும், சயவுற்சாகத்தோடும் வீரபராக்கிரமத்தோடும் போராடவல்ல பதாதிகளனைத்துநடுங்கி, சிரம்-கரம்-உரம்-கால்-தொடைமுதலிய அங்கங்கள் கண்டதுண்டப்பட்டு மாண்டும்போயின. இவ்விதமாக அவ்விருதிறத்தினருடைய சதுரங்கசேனைகளுஞ் சின்னபின்னப்பட்டழிகின்றபோது மனிதர்கட்கெல்லாம் யமனென்றுசொல்லத்தக்க பெயரினைப்படைத்த அவுணராசனானவன் காசிராசனுடையசேனைகளினடுவே நாழிலாட்டோடுந் துண்ணென்றுபிரவேசித்து, அவ்வரசனை அவன்புத்திரர்களோடும் அமைச்சர்களோடுங் கைப்பிடியாகப்பிடித்துச்சிறையிலிட்டனன். உடனே அவுணபாதகர்கள் ஜயபேரியறைந்தனர். அவ்வோசையை வேறுவேறாய்நின்று யுத்தஞ்செய்கின்ற அவுணராசனுடைய சேனைத்தலைவர்களெல்லாங்கேட்டு, ஹோலென்று அவனிடத்தில்வந்து பணிந்தெழுந்தனர். அவர்களை நராந்தகன்பார்த்து, ஓ சுத்தவீரர்களே-நாம்வந்தகாரியம்பலித்தது, காசிராசனைச்சயித்தனம்,அவன் எமக்குத்தோல்வியடைந்தபோதே அவன்கொண்டுவந்திருக்கின்ற பிராமணச்சிறுவனுந்தோல்வியடைந்தவனேயாம், எக்காலத்தினும் அழிவுறாதகாசிநகரமும் நமதுவயமாயிற்றென்று சந்தோஷவார்த்தைகளைப்பேசித்,தான்சிறையிட்டஅரசன்முதலியோரை அழைத்துக்கொண்டு காசிநகரிற் பிரவேசிப்பதாயினன். இச்சம்பவங்களையெல்லாமறிந்த சிலதூதர்கள் அவ்வரசன்பத்தினியாகிய அம்பையிடத்தில் விரைந்தோடி அறிவித்தார்கள். அதையவள்கேட்டவுடன் வேடன்செலுத்திய பாணம்பட்டுவாடு மானைப்போலக்கதறிக்,கூந்தலவிழ்ந்து நிலத்திற்புரளச் சரீரநடுநடுங்கித், துக்கவெப்பத்தினால் விழிகளிலுதிரமானது ஊற்றெடுத்தோடக் கோகோவெனப் புலம்பித், தாமரையிலையிற்பட்ட சலத்தையொப்ப மனம்நிலைபெறாமற் கலங்கினவளாகி, வலையிற்பட்ட மஞ்ஞையைநிகர்த்துவாடிப்,பரதவித்துத், திகி

த்பட்டு, ஐயையோ-நமதுகாவலருடைய பராக்கிரமமும்புத்திரர்களுடை யஆண்மையும் அமைச்சருடைய சாமர்த்தியமும் சேனைத்தலைவர்களுடைய வீரமும் ஒன்றுமில்லாமற்போய் இவ்விதவாபத்தும் என்னைநேர்ந்ததோ, என்னுடைய கணவனையுங் குமாரர்களையும் உரிமையிற்சிறந்த ஏனையதுணைவர்களையும் எப்போது இங்குவரக்காணப்போகின்றேன் தெய்வமே யென்றுபுலம்பி, தீயிற்பட்டபுகையைப்போலப் பதைபதைத் துவளுவள், நாற்றிசைகளினும் விழிகளைச்சுற்றிப்பார்ப்பள், கரங்களைப்பிசைந்துகொண்டு இனியென்னசெய்வதென்று தியங்குவள், நேர்ந்தவாபத்தைப் பலகாலெண்ணுவள், பின்னர் சிறிதுநேரம் அசைவற்றுச் சோர்ந்துகிடப்பள், கரங்களைவிரித்து இவ்வனியாய மெங்கேனு முண்டோவென்று தன்னைத்தானுசாவுவள், எனதுவாழ்வுக் கழிவுநேர்ந்ததோவென்று பலமுறை வாயிலறைந்துகொள்ளுவள், சரீரம்புழுங்கி வெயர்க்கவருந்துவள், சமுத்திரத்தினலைகளின்பெருக் கடங்கும்படிக்குப் பெருமூச்செறிவள், நிலத்தைக்கரங்களினாற்றுழாவி மோதுவள், இவ்விதங்களாக அரசன் பத்தினியாகிய அம்பையென்பவள் துக்கசாகரத்துண்மூழ்கி, முன்னர்சகலருநடுங்கும்படியாகவந்த பற்பல இடையூறுகளையெல்லா நீக்கியருளிய நமதுகர்த்தர் இங்கிருக்கின்றாரன்றே, அவர் இப்போதும் எழுந்தருளிப்போர்க்குச்செல்லுவாரெனில் அவ்வவுணராசனைச்சங்கரித்து நமதுயிரைக்காப்பாற்றுவரென்று சிறிதுமனந்தேறி, உடனே தன்னிருக்கையைநீங்கிச்சென்று மகோற்கடமூர்த்தியைப் பணிந்தெழுந்தனள். அப்போதவள்வந்துபணிந்தெழுந்தகுறிப்பினைத்தாமறிந்துகொண்டு, அம்மணீ நீ அஞ்சவேண்டாம், சத்துருவினுடையசேனைகளையும் அவனால்நேர்ந்த இடையூறுகளையும் இந்நிமிஷத்தில் நாசஞ்செய்கின்றோம், நீ பயப்படாமல் அந்தப்புரத்திற்குச்செல்லுகவென்று விடைகொடுத்து, அதிககோபத்துடனே யுத்தத்திற்குவெளிக்கொண்டனர். அப்போது சுவாமியினுடையமுகத்தினின்றுஞ் சிலவீரர்கள் ஐந்துமுகத்தோடும் சிலவீரர்கள் பத்துமுகத்தோடும் சிலவீரர்கள் ஆறுமுகத்தோடும் சிலவீரர்கள் ஆயிரமுகத்தோடும் உண்டாகி, அம்முகங்களுக்கிரட்டிப்பானகைகளையும், அக்கைகள்தோறும்படைகளையும், ஆயிரம்யோசனையுயர்வையும், அவ்வுயர்வுக்கேற்ற மற்றவுறுப்புக்களையும் பெற்றவர்களாகி எதிரில்நின்றார்கள். அவர்களுள் சுருண்டுநீண்டிருக்கின்ற முகமயிரும், சிவந்தஅழற்பிழம்பை வீசவல்ல மூன்றுகண்களும், நாற்புறத்தும் நிமிர்ந்தாடும்படியானசடைகளும், அடிவரையில்வீழ்ந்து தொங்குகின்ற நீண்டதாடியும், சகலபராக்கிரமங்களினுஞ்சிறந்த குரூரனென்னும்பெயரினையும்படைத்த ஓர் வீராதிவீரன் மகோர்க்கடமூர்த்திக்கெதிர்நின்று பணிந்து, சுவாமி-அடியேனைப் பசியானது மிகவும் வாட்டுகின்றது, விரைவிலெனக்கு ஆகாரங்கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கு சுவாமி நராந்தகனுடைய சேனைகளைச்சுட்டி, வீரனே-இதோ எதிரிலிருக்கின்ற சேனைகளையெல்லாம் வாய்மடுத்து, அச்சேனைகட்குநடுவேயிருக்கின்ற காசிராசனையும் அவன்புத்திரர் அமைச்சர்களையுங் கொண்டுவந்துவிடுவாயாக, அப்பாலும் பசியடங்காதாயின் இன்னு மளவற்றஆகாரங்களைக் கொடுக்கின்றோமென்று விடைகொடுத்தனுப்பினர். உடனே அக்குரூரன் புத்தி புத்தியென்று

சந்தோஷித்து, வனத்தினைநோக்கிச்செல்லும் வடவைக்கனல்போல நராந்தகனுடைய சேனைக்கெதிரே சென்றான். ஏனையவீரர்களும் அவனைப்புடைசூழ்ந்து நடந்தனர். இப்பால் குரூரனானவன் சகலரையும் பின்னேநிறுத்தித், தானொருவன்மாத்திரம் நராந்தகனுடையசேனைக்குள்புகுந்து,சிலரை ஆரவாரத்தினாற்கொன்றும், சிலரைஉருத்தபார்வையினாற் கொன்றும், சிலரைக்கைகளால்இழுத்துக்கொன்றும்,சிலரைக்கால்களினால் இடறிக்கொன்றும், சிலரைப் பூமியிலறைந்துகொன்றும், சிலரைத்தேரின்மீதெறிந்துகொன்றும், சிலரை யானைமீதுகடாவிக்கொன்றும்,சிலரைக் குதிரைமீதறைந்துகொன்றும், கோபமடங்காதவனாய்த்-தேர்களையெடுத்துத் தேர்கண்மீதறைந்தும், யானைகளையெடுத்து யானைகள்மீதெறிந்தும்;குதிரைகளையெடுத்துக் குதிரைகள்மீதுசாடியும், பதாதிகளையெடுத்துப் பதாதிகண்மீதுமோதியும், இவ்வாறு நால்வகைச்சேனைகளையுஞ் சின்னபின்னப்படக்கொன்று, அளவற்றவீரர்களை வாய்மடுத்தும் போதாது,இன்னுஞ்சேனைகளுண்டோவென்று நாற்றிசைகளினும் விழிகளைப்பரப்பி அட்டகாசஞ்செய்திருந்தனன். அச்சம்பவத்தை நராந்தகன்கண்டமாத்திரத்தில் அதிகஉக்கிரம்பிரவேசித்து, விழிகளில் அனற்பொறிகள்சிதறி, ஆலகாலத்தைப்போலச்சீறி, அதிவேகத்துடன் அசுராந்தகனாகியகுரூரனெதிரில்தனது தேரைநடத்திவந்து; இதோ உன்னுண்மையையடக்கியமலோகங்குடியேற்றுகின்றேனென்றுசபதம்பேசி, வில்லையெடுத்துவளைத்து, ஊழிக்காலத்துமழைபோல அளவற்றபாணங்களை ஒரேதொடையிற்பூட்டிப் பிரயோகித்தான். அவன்விட்டபாணங்களெல்லாம் வச்சிரப்பாறைமீது விழுந்த மழைத்துளியைப்போலக் குரூரன்மீதுபட்டு உடைந்துங் குறைந்துஞ்சிதைந்தும் பொடிந்தும் மடிந்தும் முறிந்தும்போயின. இவ்வாறு புகழற்றவர்களைப் பொன்னுலகு எவ்வாறுநீக்கிவிடுமோ ,அவ்வாறுதான்விட்டபாணங்களெல்லாம் குரூரனிடத்திற்சென்று பயன்படாதுபோனதை நராந்தகன்கண்டு, மனங்கலங்கி வருந்தினவனாய், உடனே தயிரியத்தைவிடாதுகாட்டழலைப்போலச்சீறி, நிமிஷத்தில் இவன்பிராணனையமலோகங் குடியேற்றுகின்றேனென்று கோபித்து ஓர் வேலாயுதத்தை யெடுத்துப் பிரயோகித்தனன். அவ்வேலாயுதமானது திரிலோகங்களையும் ஏககாலத்தில் விழுங்குவதுபோல ஆக்கிரமித்துவர, அதனைக்குரூரன் தடுக்காது அருகேவரப்பார்த்து ஒருபெருமூச்சு விட்டனன். அம்மூச்சினால் அவ்வேலாயுதமானதுசண்டமாருதத்திற்பட்ட இலவம்பஞ்சினைப்போல சின்னாபின்னமாய்ப் பொடிந்து பறந்துபோயது. அதற்குமேல் நராந்தகன் மந்தரகிரியைப்போலப் பாரித்திருக்கின்ற ஓர்கதாயுதத்தையெடுத்து அதிவேகமாகப் பிரயோகித்தான். உடனே அக்கதாயுதமானது வெளிப்பட்டு பிரசண்டமாருதத்தினைப்போல ரணக்களமெங்கும் உலாவிக்கொண்டு குரூரனுடையமார்புக்குநேராகவர, அதை அவன்கண்டமாத்திரத்தில் சர்வசங்காரமூர்த்தியைப்போலப்பொங்கி, விழிகளிற் றீப்பொறிகள் குபீல் குபீலென்றுகொட்ட உருத்துத் தனதுமார்பைக்காட்டினன். அப்போதக்கதாயுதமானது அவன்மார்பிற்பட்டு கல்லின்மீதறைந்தகளானைப்போல நுறுங்கிப்போயது. அப்பால் நராந்தகன் ஆலகாலம்போலப் பொங்கி, ஓர்முசலாயுதத்தையெடுத்து இடம்வலமாகச்சுற்றிக் குரூரனு

டைய தோளுக்கிலக்காக ஏவினன். அப்போது குரூரனுக்கு அதிககோபம்பிரவேசித்துத், தனதுபுயங்களைநோக்கிவருகின்ற முசலத்தினைத் தனதுகரத்தினாற்பற்றி, மீட்டு நராந்தகனுடைய ரதத்தின்மீ தெறிந்தனன். அம்மாத்திரத்தில் நராந்தகனுடையரதமானது காதலனைச்சேர்ந்தபாவையர்க்குப் பசலையெவ்வாறுபறக்குமோ அவ்வாறு உடைந்து பொடிபட்டு நுறுங்கிப்போயது. அப்போது நராந்தகன் வேறொருதேரிலேறிச்சூலாயுதத்தையெடுத்துவிட்டனன். அதைக்குரூரன் தனதுவிரலினாற் றெறிக்க அது பூமியைக்கிழித்துக்கொண்டு பாதலலோகத்திற்சென்றது. அதற்குமேல் நராந்தகன் ஓர் சக்கராயுதத்தையெடுத்துப் பிரயோகித்தான். அதைக் குரூரனவன் பூமியில்விழாதபடி தனதுகரத்தை நீட்டி ஓர்தொடியைப்போலத்தரித்துக்கொண்டனன். அப்பால் அவுணராசன் சிங்கத்துக்கொப்பாகச்சீறி, இனி இதனிலுஞ்சிறந்தவாயுத மொன்றுமில்லையென்று ஓர் மழுவாயுதத்தையெடுத்துவிடுத்தனன். அதைப் பூதராசன் ஓர் நிமைப்போதில் தனதுகரத்தாற்பற்றி, அனிச்சம்பூவினைப்போலக் குழைத்தனன். இவ்வாறு தான்விடுகின்ற ஆயுதங்களெல்லாங் குரூரனாற்சின்னபின்னப்பட்டு நாசமடைந்ததைக் கொலைகளாதிய வஞ்சகங்கள் குடிகொண்டிருக்கு மனத்தினையுடைய நராந்தகன்கண்டு, ரவுத்திராகாரமாகக்கோபித்து, வடவாமுகாக்கினி சீறியெழுந்ததுபோலத் தனதுதேனாச்சூறுவளிக்காற்றினுங் கடுகிச்செலுத்திவந்து, உறையிற்சொருகியிருந்தவாளாயுதத்தினாலவனை வெட்டினன். அவ்வாள் அக்குரூரனுடையமொய்ம்பிற்பட்ட மாத்திரத்தில் இரண்டுதுண்டங்களாகி நிலத்தில்வீழ, உடனே நராந்தகனனவன் மற்றோராயுதத்தினையெடுக்க நேர்ந்தனன். அதற்குமுன் குரூரனனவன் அப்பாதகனுடையதேரைத் தனதுகாலினாலெட்டியுதைக்க, அவ்வுதைபட்டமாத்திரத்தில் அத்தேரானது நராந்தகனோடு நூறுகாவதந்தூரம் உருண்டுகொண்டுசென்று, அச்சுவேறு - மச்சுவேறு-கொடிஞ்சிவேறு-குத்துககால்வேறாகப்போயது. உடனே-நராந்தகன் பூமியிற்குதித்து, ஓர் சிறியசகட்டின்மீது வாயுவேகத்தினூர்ந்துவந்து, இனி இவனை தேவாஸ்திரங்களினால் வெல்லுவதேகாரியமென்று தீர்மானித்து, மகமேருவுக் கொப்பாகப் பாரித்திராநின்ற தனதுவில்லையெடுத்துநாட்டி, வட்டாகாரமாகவளைத்து நாணேற்றித், திசைகளதிரக்குணத்தொனிசெய்து, அதில் வருணாஸ்திரத்தை அபிமந்திரித்துத் தொடுத்து ஆகரணாந்தபரியந்தமிழுத்துப் பிரயோகித்தனன். அது வெளிப்பட்டமாத்திரத்தில் அதிகவினாமேகமும் வானத்தெழுந்து, அளவற்றஇடிகளையு மின்னல்களையுங்காட்டி, அகோரமாகிய நீரைப்பெருக்கி, எங்குஞ் சலப்பிரவாகத்தினையுண்டாக்கி ஆவ் ஆ வென்று சீறிக்கொண்டுவர, அதைக் குரூரன் தனதுகரத்தைநீட்டிப் பிடிதநுக் கண்ணீரைப்போலத் தனது வாயிலிட்டுவிழுங்கினன். பின்னர் பகைவன் வாயுவாஸ்திரத்தைப் பிரயோகித்தனன். அவ்வஸ்திரமானதுபிரசண்டமாருதத்தைப்பெருக்கிப், பர்வதங்கள்-விருக்ஷங்கள் முதலானவைகளைப்புரட்டிக்கொண்டுவர, அதை வீராதிவீரனாகிய குரூரன் கரத்திலேந்தி சர்ப்பத்தைப்போலப் புசித்துவிட்டனன். பின்னர் நராந்தகன் அக்கினியாஸ்திரத்தையெடுத்துப் பிரயோகித்தனன். அவ்வஸ்திரமானது உடனே அட்டதிசைகளினும் பரவிக்

கொடியவனலையிறைத்துக், கோடையிடிகளைப்போல இரைந்து, வடவைக் குச்சமதையாகச்சீறி மேலிட்டுவர, அதன் உக்கிரத்தையு மகத்துவத்தையுங் குரூரன்கண்டு, விழிகளிற் சுவாலைவீசும்படியாகப்பிடித்து வாயிலிட்டுவிழுங்கினன். பின்னர் நராந்தகனானவன் பிரமாஸ்திரத்தையெடுத்துப் பிரயோகித்தனன். அவ்வத்திரம் வெளிப்பட்டமாத்திரத்தில் அளவற்ற கொடிய பாணவிதங்களைப்பெருக்கிக், கலகலவென்றுநகைத்து, விஷங்களைக்கக்கி, இடியேற்றினைப்போலமுழங்கிக்கொண்டுவந்துதன்னைச்சமீபிக்க அதனை ஓர்நொடிப்போதில் தனதுவாயை ஆவென்றுதிறந்துவிழுங்கினன். பின்பு ராக்ஷதப்பாதகன் மனம்பொறாமல், தான் முன்னம் அரியதவங்களைச்செய்துமகாவிஷ்ணுவிடத்திற் பெற்றுவைத்திருந்தநாராயணாஸ்திரத்தையெடுத்து, மனப்பூர்வமாகத் தூபதீபநைவேத்தியமுதலியபூசைகளைநிரப்பி வணங்கிப்போற்றி, ஓ-படைகளுக்கரசே, அதோநிற்கின்ற பூதகணத்தலைவனுடைய சிரத்தைக்கண்டித்து அவன்பிராணனையுண்டுவரக்கடவையென்று வேண்டி, அதிகவேகத்தோடும் பிரயோகித்துக் களித்துப்பார்த்திருந்தனன். அவ்வத்திரமானது வெளிப்பட்டவுடன் தகத்தகாயமாய்ப் பிரகாசித்து, அனலையிறைத்துப், பலகோடி அத்திரங்களைப்படைத்துக், கோடையிடிபோலக்குமுறி, எரிந்து புகைந்துகொண்டு, எங்குந்தன்மயமாய்அதிகமகிமைகளைக்காட்டிச், சீறிஇரைந்து, பகைவனெங்கேயென்றுதேடிச்சமீபத்தில்வந்தமாத்திரத்தில் அதையுங்குரூரனானவன் விநாயகமூர்த்தியினுடையகடாக்ஷத்தினால் ஓர் கவளமாகவிழுங்கினன். அவ்வதிசயத்தை நராந்தகன்கண்டு பிரமித்து, முன்னம் அளவற்றமகிமைகளையுடைய பலபல வாயுதங்களைவிடுத்தோம், அவைகளெல்லாம் அவன்மீது குறிதப்பாது சென்றும் பயன்பெறாமல் நுறுங்கிப்போயின. பின்னர் மகா தபோபலங்களினால் கிடைக்கப்பெற்றிருந்த ஒப்பற்றதேவாஸ்திரங்களை விடுத்தோம் அவைகளையெல்லாம் பதிலுக்கு ஒன்றும்விடாமலே கனிந்தவாழைக்கனியைப்போல உட்கொண்டனன். இனியாம்செய்யவேண்டியமுயற்சிகளென்னவிருக்கின்றது, இவன்செய்கைகளைப்பார்க்குமிடத்தில் மகா அற்புதமாகவிருக்கின்றன, ஆயினும் இவனுடையதிறத்தை இன்னுமறிவோமென்று ஆக்கிரமித்துக், கோடையிடியைப்போலக்குமுறி, அடா-பூதப்பயலே நீயோ என்னைவெல்லவல்லவன், இதோ உனதுபிராணனைவாங்கி யமலோகங் குடியேற்றுகின்றேன்பாரென்று வசைமொழிகளைப்பேசித், தனக்குப்பிராணபதமாய் வைத்திருந்த யாவராலுந்தடைசெய்தற்கரிய பாசுபதாஸ்திரத்தையெடுத்துப் பிரயோகிக்கநேர்ந்தனன். அவ்வாறெடுத்துப் பிரயோகிப்பதன்முன்னங், குரூரனானவன் அவ்வவுணபாதகனைச் சகட்டிடினோடுமெடுத்துச், செண்டைப்போல அதிவேகமாய்ச்சுழற்றிஆகாயத்திலெறிந்து, அவன் மீட்டும் பூமியில்விழுவதன்முன் அங்குசிறைக்கணகப் பட்டிருந்த காசிராசனையும் அவன் புத்திரனையும் அமைச்சர்களையும் அழைத்துக்கொண்டுசென்று, அவர்களை மகோற்கட மூர்த்தியினுடைய சன்னிதானத்தின்முன்னர்விடுத்துப்பணிந்தனன். உடனே அரசன்முதலாயினோரும் பணிந்தார்கள். அப்போது மகோற்கடமூர்த்தியானவர் குரூரன்முதலாயினோர்க்கு அநுக்கிரகஞ்செய்து, இனிநாமேஅவுணராசனைச் சங்கரிக்கவேண்டுமெனத் திருவுளங்கொண்டனர். முன்னர் ஆகாயத்தி

ல் எறியப்பட்ட சகடமானது நராந்தகனோடு சத்தலோகங்கள்வரையிற் சென்று, அவ்விடத்தினின்றும் பூமியில்வீழ்ந்து நுறுங்கித் துகளாயது பின்னர் நராந்தகன் சிறிதுநேரம் மூர்ச்சையாகிக்கிடந்து,மீட்டுந்தெளிந்தெழுந்து-ஆஅ - ஆஅ-என்னகாரியஞ்செய்தோம்,இதுபரியந்தம் மகோற்கடனை உருவத்தினாலும் வயதினாலும் சிறுவனென்று நினைத்து அவனுடையபெருமைகளைமதிக்காமல் மிகவும் இகழ்ச்சியல்லவோ செய்தனம் அவன்-நம்முன்னர் ஒருவனாய்வந்துநின்றான்,பின்னர் அவன் தன்னுடையமுகத்தினின்று அளவற்றவீரர்களையுண்டாக்கினான், அவ்வீரர்களுள்ளும் ஒருவனேநம்முடன்வந்தெதிர்த்தான், எதிர்த்த அவ்வொருவனும்ஓராயுதமேனும் கையினாற்றொட்டவனல்லன், தனது ஆரவாரிப்புமுதலிய வேதுக்களினாலேயே நமதுகடல்போன்றசேனைகளையெல்லாங்கலக்கி வாட்டினான், பர்வதங்களையெல்லாம் பொடிபடுத்தவல்ல நமது ஆயுதங்களையெல்லாந்துகள்படுத்தினான், அளவற்றதவங்களினாற் கிடைக்கப்பெற்றிருந்த தேவாஸ்திரங்களையெல்லாம் வெல்லக்கட்டியைப்போலப்பிடித்துவிழுங்கிவிட்டனன், அவனுண்மை யென்னென்றுபேசப்படும்,இதுபரியந்தம் அரிபிரமேந்திராதியர்களைவென்று சயமடைந்தநமதுபராக்கிரமங்களை ஓர்நிமைப்போதில்அழித்துவிட்டனன்,மகோற்கடனுடையமுகத்திலுதித்த அளவற்றவீரர்களில் ஒருவனேஇவ்வகைத்தானவனானால் ஏனையவீரர்களுடையதிறங்களையாவராற்கணிக்கக்கூடும், இனி மகோற்கடனேசுதாவில்வந்து யுத்தஞ்செய்யநேர்ந்தால் யாம் என்னபாடுபடோம்,இனித்தேவர்களுங்கண்டஞ்சத்தக்க மாயவித்தைகளினால் யுத்தஞ்செய்து அச்சிறுவனை அதஞ்செய்யவேண்டுவதேயல்லது, மற்றொருவிதத்தினாலவன்மாளத்தக்கவனன்றென்று தீர்மானித்து, உடனே அளவற்றமேகரூபங்களாய் உருக்கொண்டு,மின்னல் இடிகளைப்பெருக்கி, அண்டங்களதிரக்குமுறி யாவரும் பிரளயகால நேர்ந்ததென்று பிரமிக்கும்படியாக யானைத்துதிக்கைபோல அமோகமாகிய வருஷதாரைகளைப்பொழிந்து நின்றனன். அதை மகோற்கடமூர்த்திகண்டு, இவ்வஞ்சகன்செயல் நன்றாயிருப்பதென்று உருத்துத்,தமதுவில்லில் அதிகமகிமைகளைப்பெற்றிருக்கின்ற தீக்ஷண்ணியமுள்ளசரங்களைத்தொடுத்து, ஓபடைகளே - நீங்கள் பிரசண்டமாருதப் படிவத்தினைத்தாங்கி, வேகமாய்ப்பாய்ந்து, நராந்தகன்கொண்டிருக்கின்ற மேகவுருவங்களை இமைப்போதில் மாற்றிவரக்கடவீர்களென்று ஆக்கியாபித்துப் பிரயோகித்தனர். அத்திவ்வியபாணங்கள் வெளிப்பட்டமாத்திரத்தில் அதிகவேகங்கொண்டு, கடையுக்காற்றினுமேலிட்டு, அண்டகடாகமதிர்ந்து குலகிரிகளுநண்டு மற்றப்புவனகோடிகள் அல்லோலகல்லோலப்பட்டுத் தயங்கும்படி ஆர்ப்பரித்துத்தாவி, விண்-மண் திசாதிசைகள்முதலியவிடங்களில் நிறைந்து, உலகமெல்லாமிருளடையும்படி ஆகாயவெளிமுழுவது மூடிக்கொண்டிருக்கின்ற மேகங்களையெல்லா நிமைப்போதில் நாசஞ்செய்து, பழையபடி உலகங்கள்களித்திருக்கநிறுத்தி, உருநாமக்கிரியைகளற்றுப் பராபரவஸ்துவாக விளங்கு மகோற்கடப்பெருமானுடைய சன்னிதானத்தையடைந்தன. அதற்குமேல் நராந்தகன் ஊழித்தீயினுருக்கொண்டு, பூமிமுதல் அண்டகோளபரியந்தங் கொழுந்துவிட்டெரியச் சுவாலையைவீசிச்,சராசரப்பிரபஞ்சங்களை

யெல்லாங் கொளுத்தியுஞ் சுட்டுஞ் சாம்பராக்கியுங் கரித்தும் எரித்தும் இவ்விதப்பாடுகளைப்படுத்தி யிருந்தனன். அதை மகோற்கடமூர்த்திகண்டு கோபித்து, தமது திருக்கரத்திற்பற்றியிருக்கின்றவில்லையிறுக்கித், தெய்வீகமுள்ள சிலபாணங்களைப்பூட்டி, ஓ-படைகளே, சாங்கால நேர்ந்தகாரணத்தினால் அவியுஞ்சமயத்துற்ற விளக்கினைப்போல அவுணபாதகன் அதிகவல்லமையைப் பெற்றவனாய், பூமண்டலமும் ஆகாயமுமுற்று நிறைந்த அழலுருவாகியிருக்கின்றனன். நீங்கள் சத்தசாகரப் படிவத்தினைத்தாங்கிப்பெருகி, அலைகளின்வலியினால் நிமைப்போதில் அதனைக்கனைத்து உருத்தோற்றுமலழித்துத் திரும்பக்கடவீர்களென்று பிரயோகித்தனர். அச்சிறந்தபாணங்கள் வெளிப்பட்டவுடன் பிரளயவெள்ளத்தினும் பதின்மடங்கதிகரித்துப்பாய்ந்து, வானத்தையளாவத் திரைகளைமோதி, அண்டங்களதிரமுழங்கி, அதிவேகங்கொண்டுபாய்ந்து, மண்விண்ணெங்கும் அழன்றுநின்ற தீக்களையெல்லாம் அதப்படுத்திக், தமது சாகரவுருவங்களினின்று மாறிப் பழையபடி செருக்களத்திற் றிருவிளையாடல்செய்திருக்கின்ற எமதிறைவனை சேர்ந்தன. உடனே நராந்தகன் சராசரப்பிரபஞ்சங்களைவாட்டவல்ல ப்ரசண்டமாருதப்படிவத்தினைத்தாங்கி, ஓவென்னு மிரைச்சலைக்காட்டி, வீறி மேலிட்டு, அண்டபுவனங்களினடுக்குகள் குலைகுலைந்து தத்தளிக்கமோதியும், திகைத்துநிற்கின்ற பூதவீரர்கள் பதைபதைத்துக் கைகாலொடிந் தலையத்தக்கதாகமாறியும், திசைகளனைத்துஞ் செவிடுபடக்கலக்கியும், குலகிரிகள் சிறுதேர்களைப்போலுருளத்தள்ளியும், கடல்களைக்கலக்கியும், இவ்வித உற்பாதங்களைக்காட்டிப் பேரொலிசெய்துநின்றனன். அப்பாதகன்செய்துவருகின்ற அனர்த்தங்களை லோகநாயகன்கண்டு, கோபநகைகொண்டு, மன்னுயிர்கள்படுந் துக்கவருத்தத்தினையொழிப்பதாகத் திருவுளங்கொண்டவராய், அந்தக்ஷணத்தில் குரூரமாகிய திவ்வியபாணங்களை யாராய்ந்தெடுத்து, தமது ஒப்பற்ற தனுசிற்பூட்டி ஓ-கணைகளே, நீங்கள் விசாலமாகிய படங்களைவாய்ந்த பல்லாயிரங்கோடி நாகவினங்களினுருவங்களைக்கொண்டு தாவி, அவுணபாதகன் செய்யுமாயவல்லபங்களனைத்தையு நிமைப்போதி லழித்து மீளக்கடவீர்களென்றேவினர். அம்மாத்திரத்தில் அப்பாணங்கள்வீறி வானத்தெழுந்து, பற்பலசிரங்களைக்கொண்டிருக்கும் படங்களைவிரித்து, விஷச்சுவாலைபெருகப் புஸ் புஸ் என்றுசீறி மேலிட்டு, எங்கணும்பரந்து, நரர்கட்கெல்லாம் யமனைப்போலச் சகலபிராணிகளையும் அலைத்துத்திரிகின்ற அவுணபாதகனுடைய வாயுவின்பெருக்கனைத்தையும் உண்டு, வெற்றியுடன் பழையபடிக்கு மகோற்கடமூர்த்தியினுடைய சன்னிதானத்தை யடைந்தன. இவ்விதங்களாகத் தான்கொள்ளுகின்ற வடிவங்களனைத்தையும் வீறவொட்டாம லடக்கிவருவதை நராந்தகன் நினைந்து நினைந்து, மானமும் வயிரமு மனதைச் சுட்டலைக்கமண்டி எரிந்து, ரவுத்திராகாரமாகக் கோபித்துத் தீயும் புகைப்படலமும் வீசத்தக்கதாகப் பெருமூச்செறிந்து, நல்லசாரியம், இச்சிறுவன் சாமர்த்தியங்களையறிகிற்போமென்று உறுத்து, நூதனமாகிய கோரரூபங்களைக்கொண்டு மகோற்கடமூர்த்தியை வெல்லக்கருதி ஒருபுறத்தில் பலகோடியிராக்கதர் உருவங்களைப்பெற்றுப், பிரளயவெள்ளத்தைப்போலவளைந்துகொண்டு, எம்மவரை அதா அதப்படுத்திய வுன்

னைச் சொற்பமாகவிடமாட்டோம்,பாலனாகவிருந்தபோதினும் இரங்கோம், எத்தலங்களிலோடியொளிப்பினுந் தொடர்ந்துவாட்டுவோம்,சிறைச்சாலையிலடைத்து வருத்துவோமெனப் பலவசைமொழிகளைப்பேசிச், சத்தி-சூலம்-பிண்டிபாலம்- கப்பணம்-கணிச்சி-சக்கரம்-தண்டாயுதம்-குந்தம்-வளைதடி-முதலிய-ஆயுதங்களை அமோகமாகச்செலுத்தியும், ஒருபுறத்தில் பூதங்களாகவந்து பர்வதங்களைவீசிச் சர்ச்சித்தும், ஒருபுறத்தில் யமனைப்போல அளவற்ற வுருவங்கொண்டுநின்று ஆவ் ஆவென வாயைத்திறந்து மேலிட்டும், ஒருபுறத்தில் பேய்க்கூட்டங்களாக நின்று விழிகளானவை அனலையொப்பக் காந்தி வாய்களிற்றீப்பொறிகளையிறைத்துச் சீறியும், ஒருபுறத்தில் புகைப்படலமேலிடப் பிரளயத்தீயுருக்கொண்டு அதிகவோசையெழமண்டியெரிந்து வாட்டியும், ஒருபுறத்தில் பிரசண்டமாருதமாக ஓவென்னுமிரைச்சலைக்காட்டிச் சகலருந்திடுக்கிட்டுவீட மோதியும், ஒருபுறத்தில் சர்வசங்காரகாலத்து சராசரப் பிரபஞ்சங்களை யழிக்கவெழும் பெருவெள்ளத்தைபபோலத்தாவி அலைகளைமோதிப் பூதப்படைகளைவாரியலைத்தும், ஒருபுறத்தில் ஆலகாலவிஷத்தையொப்பக் கனன்று எதிர்ப்பட்டவனைதனையுங்கொளுத்தித் திரிந்தும்,ஒருபுறத்தில் காளமாநாகங்களினுருக்கொண்டு விஷச்சுவாலைகளைக்கக்கி மேலிட்டுக்கடிந்துவருத்தியும், ஒருபுறத்தில் மேகசாலங்களாய் மின்னல் இடிகளைப்பெருக்கி அக்கினிகள்முதலிய மழைகளைப்பொழிந்து சாடியும், ஒருபுறத்தில் காடாந்தகாரமாகிய இருள்வடிவுகொண்டு பூதராதியர்திகைக்கும்படிக்கு மூடியும், ஒருபுறத்தில் இடியேற்றினைப்போல அண்டங்களதிரக்குமுறிக்கலக்கியும், ஒருபுறத்தில் வரைகளாய்விழுந்துகொன்றும், ஒருபுறத்தில் சதுரங்கசேனைகளினுருக்கொண்டு எதிர்த்து நம்மவரைக்கொன்றபழியைவாங்குவோம்-குத்துவோம்-வெட்டுவோம்-கொல்லுவோம் - உதிரத்தைக்குடிப்போமென்று பலகொடுமைகளைப்பேசித் திரிந்தும், ஒருபுறத்தில்அளவற்றயானைகளாய் மதங்களைப்பெருக்கி வீறிட்டுத் துதிக்கரங்களில் இருப்புலக்கைகளைக்கொண்டுசுழற்றிச் சாடியும், ஒருபுறத்தில் அநேக சிங்கராசர்களைப்போலக் கர்ச்சித்தலைத்தும், ஒருபுறத்தில் பல சக்கிரவாகப்புள்ளினுருப்பெற்றுப்,பெருங்காற்றெழச் சிறகுகளைவீசிப்,பூதவீரரைச் சருகினைப்போலப்பறக்கடித்து மிருந்தனன். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே- ஜயசாலியாகிய நராந்தகன்முடித்த மாயவித்தைகளின் பெருக்கத்தையுங் கொடுமைகளையும் இன்னவிதமென்று விரித்துச்சொல்லவும்போதுமோ, அம்மம்ம அவன்சாமர்த்தியங்களுக்கு இவ்வுலகங்களில் ஒருவரையும் ஒப்புசொல்லக்கூடாது, இவ்விதமாக அப்பாதகன் பற்பல உருவங்களைத்தாங்கி, சொல்லப்படாதகொடுமைகளையும் அனர்த்தங்களையும் விளைத்துவருவதை எமதையன்கண்டு, அவனெடுக்கின்ற உருவங்களுக்கெல்லாம் பதிலாகத் தாமும் வேறுவேறுருக்கொண்டு அழித்துவந்தனர். அப்பால் நராந்தகன் இனி என்னசெய்யவல்லோமென்றெண்ணமுற்று, இச்சிறுவனை நாம் வெல்லுவதரிது,பராக்கிரமத்தினும் வயதினு நம்மினும்பெரியவன் ஒருவனிருக்கின்றான், அவன் வந்தாலன்றியாமாத்திர மிவனை வாட்டுதல்கூடாது என்றுதீர்மானித்து,உடனே சில்ஒற்றர்களைக்கூவி, நடந்தகாரியங்களனைத்தையுந் தனது தமயனுக்கறி

வித்துவருமாறு விடைகொடுத்தனுப்பி, அவன்வருகிறவரையில் நாம் சும்மாவிருக்ககூடாதென்றெண்ணி, மேருகிரிக்கிணையான ஓர்வில்லையெடுத்துவளைத்து, அதிற்கொடூரமான அம்புகளை அளவற்றகோடிகளாகத்தொடுத்துப் பிரயோகித்தனன். அதை மகோற்கடமூர்த்திகண்டு, தாமும் ஓர் மந்தரகிரிக்குநிகரான வில்லையெடுத்துக் குனித்து, அதில் அவனிலு மேலாக அளவற்ற சிலீமுகங்களைத்தொடுத்துப் பிரயோகித்தனர். பின்னரவ்விருதிறப்படைகளும் வெளிப்பட்டமாத்திரத்தில் ஒன்றுடனொன்றுஉராய்ந்து,நாற்றிசைகளினுந் திக்களையிறைத்து, நாகங்களையொப்பசீறி, நெடுநேரம் அளவற்றபோர்களைச்செய்துநிற்கையில், மகோற்கடருடையபாணங்கள் அவுணராசனுடைய கணைகளையெல்லாஞ் சின்னபின்னப்படுத்தி, அவனுடையசரீரத்தைச் சல்லடைக்கண்களாகத்துளைத்து, அவனுடையதேர்கள்-சாரதிகள்-பதாகைகள்-குதிரைகள்-விற்கள்-அம்புகள்-கிரீடங்கள்-ஆபரணங்கள் முதலானவைகளை நாசஞ்செய்து, அவன்புயங்களிரண்டினையுமறுத்து, ஒருபுயத்தை அவன்தந்தைக்குமுன்னும் மற்றொருபுயத்தை அவன்தமயன்முன்னுங்கொண்டுபோய்வீசி, எம்மையடிமையாகவுடைய மகோற்கடமூர்த்தியினுடைய சந்நிதானத்தையடைந்தன. இவ்விதமாக இரண்டுபுயங்களுமற்று நிற்கின்ற நராந்தகனுடையகோலத்தை அந்தரவாசிகளாயிருந்ததேவர்கள்கண்டு, ஆனந்தக்களிப்பின்மூழ்கிக், களிமிகுதியினாற் கர்த்தனைப்புகழ்ந்து, கற்பகமலர்களையிறைத்துக் கொண்டாடினர். உடனே அப்பாதகனுக்கு விரதபலத்தினாற் குறைந்தபுயங்கள் எதாப்ரகாரங்கிளைக்க, அதனால் நராந்தகன் முன்னினும் அதிகஉக்கிரத்துடன் உளங்காரித்துநிற்ப, அதைக் களிப்புற்றிருந்ததேவராதியர்கண்டு,மனந்திடுக்கிட்டுத், தேகம்வெயர்த்து,நடுநடுங்கி,இவ்விடத்தில் நிற்போமாயின் இன்னுமிப்பாதகனென்செய்வனோவென்னு மேக்கத்தினாற் பலதிசைகளினும் ஓடத்தலைப்பட்டனர். இக்காரணங்களைத் தேவதேவோத்தமனாய் சுயஞ்சோதிவடிவாகவிளங்கு மகோற்கடப்பெருமான்கண்டு, நீங்கியபுயங்கள் மீளத்தோற்றநின்ற அவன்தவவன்மையும், அத்தவத்தைநாசமாக்கவல்ல காரியத்தையு நிதானித்துயோசிக்கின்றபோது, அசுரேந்திரனவன்நாகசர்ப்பத்தினைப்போலச்சீறி, மகோற்கடமூர்த்தியைப்பார்த்து இதனைப்பேசுவதாயினன். ஓ பாலனே -இவ்விதமாக நீ அளவற்றகாலம் உனது சுடுசரங்களைக்கொண்டு எனது உறுப்புக்களைக்கண்டிப்பையாயினும், மீள மீளக்கிடைத்து யதாப்பிரகாரம் சண்டைகொடுக்குந்திறத்தைப் படைத்திருக்கின்ற அதிசூரனுதம் என்னுடன்போராடி, இரண்டுகரங்களைப்பெற்றிருக்கின்றநீ பற்பலபாணங்களைச் செலுத்திச்செலுத்திக் கைகால்களோய்ந்து இளைப்பதன்றி யாதொருபிரயோசனங்களையும் பெறவறியாய், அத்தகைய அபலனாகியபிள்ளாய்-நீயோ எதிர்த்துச்சண்டைகொடுக்கவல்லையான் பூருவத்தில் சிவபிரானைக்குறித்து அளவற்றதவங்களைச்செய்து பெற்றிருக்கின்ற சிறந்தபேறுகளைக் கேட்டதில்லையோ, உனதப்பனையொத்தவன் எனது மனவுறுதிக்குமெச்சிப் புகழ்ந்திருக்குங்காரியங்களை எவ்வளவும் எண்ணிப்பார்த்தவனல்லை, சற்றுங் காரணகாரியங்களைப்பகுத்தறியும் விவேகம் இன்னமும்விளங்காதபாலனாதலால் போராடி அழித்துப் போகலாமெனநினைத்துச்சிலபூதகளைக்கூட்டிக்கொண்டுதுரிதமாக வந்துவி

ட்டனே, பிள்ளைமைப்பருவத்தினால்நீகொண்ட துணிவு உனதுபிராணபரியந்தம்வந்து நேர்ந்துவிட்டது, நீ இன்னும் அளவற்றயுகங்கள் வருந்தித் தலைகீழாய்நின்று பொருதபோதினும் யான் பின்னிடையப்பட்டவனன்று, ஆதலால்-நீ உத்தேசித்திருக்கிறபடிக்கு என்னைமுடிக்க உன்னாலொருபோதுமுடியாது, உன்னைப்பெற்றவனாலு மாவதில்லை, இந்நிமிஷத்திலுன்னைப்பற்றிக்கசக்கி வாயிற்போட்டுக்கொள்ளவல்லேனாயினும், குழந்தைப்பருவத்தினால் முன் பின் யோசியாமல் வந்துவிட்டனையென்றும், உன்பிதாவானவர் நம்மிடத்திற் பரிபூரண கடாக்ஷம் வைத்திருப்பதினாலு மனம்பொறுத்தேன், இதைக்கருதி இந்நிமிஷத்திற் பிராணனைத் தப்பித்துக்கொண்டோடுவையாயின், அரிதிற்பெற்ற வுனதுதாய்தந்தையர்க்குப் பிள்ளையாய் இன்னுஞ்சிலபோது பிழைத்திருப்பை, தெரியாமையினால் நீசெய்திருக்கின்ற குற்றங்களைமன்னித்துவிட்டுவிடுகின்றேன் என்றுசொல்லினன். இவ்வார்த்தைகளைத்தினையுங் கர்ந்தன் திருச்செவிகளிலேற்றுக் குறுநகைசெய்து, அவுணராசனே - நீ என்னசெய்யப் போகின்றனை நீ சனித்தபோதுவிதித்தகாலங் கழிந்து உன் னரியபிராணனைக்கொண்டு போகப் பின்புறத்தில் இயமனுங் காத்துத்திரிகின்றனன், விவேகமற்றவனே-வீண்வார்த்தைகளையாடுவதிற் பயனென்னை, இனி ஓர்கணப்போதினுள் உனது உயிரை வாங்கவிருக்கின்றேன், அதை- நீயேகாணவிருக்கின்றனை, உனக்குச் சிவபிரான்கொடுத்த மேலானவரங்களெல்லா முடியுங் காலம்வந்துநேர்ந்ததென்று திருவாய்மலர்ந்து, சிவபிரான்கொடுத்தருளிய பிநாகமென்னு மேருவில்லினை இருகுதைகளும் பொருந்தவளைத்து அண்டங்களதிரக்குணத்தொனிசெய்து, சிவபிரான் திரிபுரனுடையவுயிரைவாட்டியபாணத்தை அதிற்றொடுத்து, ஓ படைகளுக்கரசே-மாயவித்தைகளைச்செய்து புவனங்களைவாட்டுகின்ற இக்கொடியபாதகனுடைய சிரத்தை விடாமற்கண்டித்து நிமைப்போதில் மீளக்கடவையெனப்பணித்து, அளவற்ற வீரர்களையெல்லாம் வென்ற சயப்பிரதாபத்தினையுடைய நராந்தகன் சிரத்தினுக்கிலக்காசப் பிரயோகித்தனர். அத்திவ்வியபாணம் வெளிப்பட்டமாத்திரத்தில்கோடிசூரியப்பிரகாசத்தினைப்பரப்பிப், பிரசண்டமாருதமுமஞ்சப்பாய்ந்து, தாபாக்கினியைவீசி, விஷங்களைப்பெருக்கிப், பலதேவாஸ்திரங்கள்முதலிய வுற்பாதங்களைப்படைத்து, விடநாகத்தினையொப்பச்சீறிச்சென்று, அவுணராசனுடையசிரத்தைக்கண்டித்து, அதனை அவன்தந்தையினுடைய முகத்தின்முன்கொண்டுபோயெறிந்து, மீட்டும் எமதுகர்த்தன் திருக்கரத்திலமர்ந்தது. அந்நிமிஷத்தில் அவனுடையதபோபலத்தினால் மீட்டும் பழையபடிசிரமுண்டாகப்பெற்று, இரண்டுபுயாசலங்களையுந்தட்டித், தேவர்கள்சூரியாதியர்கள்குலைகுலைந்துநடுங்கிவாட்டத்தக்கதாக ஆர்ப்பரித்தனன். அவ்வற்புதத்தைமகோற்கடமூர்த்திக்கருகிருந்து பார்த்துக்கொண்டிருக்கின்ற வீரர்களுங் காசிராசன் முதலானவர்களுங்கண்டு, ஐயையோ-இப்பாதகனுடைய சிரமானது இவ்வளவு அரிதிற்றுணிபட்டுஞ் சிவபெருமானுடையவரத்தினால்மீட்டு முளைத்துநிற்குமானால், இவன்எவ்விதத்திலநாசப்படுவதென்றுகலங்கிவாடினார்கள். பின்னர் ஆக்கவும்-காக்கவும்- அழிக்கவுமவல்ல எமது மகோற்கடமூர்த்தியானவர் அவன்பெற்றிருக்கின்றவரத்தின்மகிமையைத் திரிலோகங்களினும்பிரகா

சிக்கச்செய்யவேண்டுமென்று திருவுளங்கொண்டவராய், மீட்டும் தமது பிநாகத்திற் பாணத்தைத்தொடுத்துப் பிரயோகித்து, அவனுடையசிரமானது சொர்க்கலோகத்தில் அரசியற்றிவருகின்ற அவன்தமயனாகிய தேவாந்தகன்முன்னர் விழும்படிசெய்தனர். உடனே அவனுக்கு வேறொரு தலையுண்டாக; அதனையும் அவ்வாறேகண்டித்து அவன் மனைவியர்முன்புவீழும்படி செய்தனர். இவ்வாறு அப்பாதகனுக்கு சிரங்கள் முளைக்குந்தோறுந் தாமும் அச்சிரங்களையெல்லாம் இடைவிடாது கண்டித்து, பூலோகம்-புவலோகம்-சுவலோகம்-சனலோகம்-தபோலோகம்-மகாலோகம்-சத்தியலோகம் என்னு மேலேழுலகங்களினும், அதலம்-விதலம்- சுதலம்-தராதலம்-இரசாதலம்-மகாதலம்-பாதாளம்- என்னுங் கீழேழுலகங்களினும், அளவற்ற மலைகளினும், வனங்களினும், நதிகளினும் சமுத்திரங்களினும், ஏனையராசசியங்களினும் பார்த்து உருளும்படியாக வெறிந்து தமது திருக்கரங்களின்பராக்கிரமத்தை யாவருந் தரிசிக்கும்படியாகக்காட்டிப், பின்னர் அவ்வவுணராசன் எவ்விதவுயிர்களினாலும் எத்தன்மைத்தான ஆயுதங்களினாலு மாள்வதரிதென்று தேர்ந்து, சகலலோகங்களுந் தம்மிற்காணும்படி சத்தசாகரங்கள்-பெரும்புறக்கடல்சூழ்ந்த பூமண்டலங்கள்-அதிலுட்பட்ட திசைகள்-தீவுகள் -விண்ணுடுகள்-எறும்பு முதல் யானையீறாகச்சொல்லாநின்ற எண்பத்துநான்குலக்ஷ சீவபேதங்கள் -முப்பத்துமுக்கோடிதேவர்கள்-நாற்பத்தெண்ணாயிரம்இருடிகள்- கெருட்காந்தருவர்-சித்தவித்தியாதரர்-பன்னகர்-அவுணர்-கின்னரர்-கிம்புருடர் - ஏகாதசருத்திரர்-துவாதசாதித்தர் - சூரியசந்திரர் முதலிய நவக்கிரகங்கள்-இருதுக்கள்-காலங்கள்முதலான சமஸ்தமும் ஆதிதேவனாகிய மகோற்கடமூர்த்தியினுடைய திருமேனியிலமைந்ததல்லது வேறொன்றில்லையெனச் சகலருந் திருட்டாந்திரமாகத் தரிசித்துக்கிருதார்த்தராதற்பொருட்டு விசுவரூபத்தைக்கொண்டருளினர். அவ்வற்புதத்தை நராந்தகன் பார்த்து, அளவற்ற வேதாகமங்களினாலுந்தேடிக் காண்டரியசுயஞ்சோதிப்படிவத்தினை நேரிற்கண்டும்பிராரத்தவினையின்சம்பந்தப்பட்டவனாய், முன்னம் பாலனாகவிருந்த விவன் நம்மையெதிர்த்து யுத்தஞ்செய்து வெல்ல நிர்வாகமற்று இப்போது ஓர்மாயத்தினால் ஓர்பெரியரூபங்கொண்டு நிற்கின்றனன், இனி நாமும் இவனைப்போலப் பேருருக்கொண்டு வெல்லல்வேண்டுமென்று யோசித்தவனாய், தானும் உருவத்தில்மாத்திரம் சரியானவனாகி சுவாமியெதிரில் அட்டகாசஞ்செய்து நின்றனன். அக்குறிப்பினை எமதையனறிந்து, அவனுடையமார்பைத் தமதுதிருவடியின் பெருவிரலினதுநிகத்தினாற்கீறிப் பிளந்து உயிரை விண்ணுலகேற்றி உடலைப்பூமியின்மீதுதள்ளி அனிச்சம்பூவினைப்போலத் தேய்த்தருளினர். இச்சுபாகரத்தைக்கண்டதேவர்கள் ஆனந்தக்களிப்பின்மூழ்கிப், பஞ்சகற்பகமலர்களை வாரிவாரிசொரிந்து வாழ்த்திச் செயங்களைக் கொண்டாடினார்கள். குரூரன் முதலியவீரர்களுங் காசிராசன் முதலியோரு மிக்கமகிழ்ச்சியடைந்தவர்களாகி, விசுவரூபங்கொண்டிருக்கின்றசுவாமியைப் பலமுறை பணிந்தெழுந்து, கர்த்தனே- இப்பெரிதானதிருமேனியை அடியேங்கள் தெரிசிக்கும் வல்லபத்தினை உடையேமல்லோம், சுவாமிகள் சுயரூபத்தினைக்காட்டி ஆட்கொண்டருளல்வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். உ

டனே அவர்கள்பய நீங்கும்படியாக அவ்விசுவரூபத்தினின்றுமாறிப், பழையபடி மகோற்கடமூர்த்திப்படிவத்தினைத்தாங்கி, சகலசேனைகளும் புடைசூழ்ந்துவரும்படியாக சமர்க்களத்தினின்றுநீங்கிக் காசிப்பட்டணத்தையடைந்து, யதாப்பிரகாரம் அரசனுடைய அரண்மனையின்கணெழுந்தருளியிருந்தனர். அப்போது நரர்கட்கெல்லாம் அந்தகனென்னும் பெயரினைப்படைத்து சகலஉயிர்களையும் வாட்டிவந்த கொடும்பாதகனாகிய அவுணராசன் மாண்டமையை ஏனையதீபங்களுக்கும் அறிவிக்கச்செல்லுவான்போலச் சூரியனானவன் மேற்றிசைக்கடலில் அத்தமானமாயினன் கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே-இதுபரியந்த மகோற்கடமூர்த்தியானவர் நராந்தகனைச்சங்கரித்து முத்திகொடுத்தருளிய திருவிளையாட்டினைச்சொன்னோம், இனி அவன்தமையனாகிய தேவாந்தகனையுஞ் சங்கரித்து முத்திக்கனுப்பிய திருவிளையாடலைப் பாந்தமாகச்சொல்லுவோங் கேட்பீர்களாக. சொர்க்கலோகத்திலே விண்டுவாதிதேவர்களெல்லாந் தனதாக்கினையின்படி நடக்கும்படியாக அரசியற்றிவந்த தேவாந்தகனானவன், தன்னெதிரில் திடீலென்றுவிழ்ந்த தலையினைக்கண்டு, இது நமதுதம்பியினுடைய தலையேயென்று தீர்மானித்து, தனதுள்ளத்திற் பலவாறான எண்ணங்களையெல்லா மெண்ணிப் பரிதாபித்திருக்கின்ற சமயத்தில் அங்கிருந்த சிலர் அத்தேவாந்தகனை வணங்கிநின்று, ஆண்டவனே-இத்தன்மைத்தான தலைகள் அளவற்றனவாய் உதிரத்தோடு சகலலோகங்களினும் விழுந்துகொண்டிருக்கின்றனவென்றுசொன்னார்கள். அதைக்கேட்டலுந் தேவாந்தகன் சிறிதுமனந்தேறி, இவ்வொன்றேயன்றி அனேகந்தலைகளைக்கண்டதாகச் சொல்லுகிறமையால் அவன் மாண்டவனல்லன், இவ்வளவிலேனும் அவனோடு யுத்தஞ்செய்யத்தக்கவன் காசிபனுடையபுத்திரனேயன்றி வேறொருவனல்லன், நாமும் இனித் தாமதஞ்செய்யாமல் பூவுலகத்திற்குச் செல்லவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கையில் முன்னர் நராந்தகனேவியதூதர்கள் அப்போதுவந்து, தேவாந்தகனைப் பணிந்தெழுந்து, ஆண்டவனே - காசிராசனானவன் தனதுபுத்திரனுக்கு விவாகஞ்செய்யுநிமித்தங் காசிபமுனிவனுடையபுத்திரனைப் புரோகிதனாக வழைத்துக்கொண்டுபோனான், போகிறமார்க்கத்திலே தவஞ்செய்துகொண்டிருந்த தேவரீருடைய சிறியதந்தையைக் கொன்றான், அச்சம்பவத்தை அவருடையபிள்ளைகள் இருவோருங்கண்டு எதிர்த்தார்கள், அவர்களையும்அப்போதேகொன்றனன், அதைத் தேவரீருடையதம்பியார்கேட்டு, அவ்வரசனழைத்துவந்தசிறுவனைக்கொன்றுவரும்படியாக அளவற்றவீரர்களையனுப்பினர், அவர்கள் தனித்தனியாகவுந் துணையாகவும் அளவற்ற மாயவுருவங்களைக்கொண்டுசென்று அச்சிறுவனுடையகரத்தினால் மாண்டார்கள், அதன்மீது தேவரீருடையதம்பியார் சகலசேனைகளோடுஞ்சென்று யுத்தஞ்செய்துகொண்டிருக்கின்றனர், இப்போதவர் அளவற்றயுத்தங்களினால் இளைப்புற்றுத் தேவரீரையல்லாமல் சத்துருவைக்கொல்லுவது மிகவுமரிதென்று நிதானித்து இவ்விடத்திற்கெம்மையனுப்பினரென்றுசொன்னார்கள். அவையனைத்தையுந் தேவாந்தகன்கேட்டு, மட்டில ற்றுத்திரியும் பிராமணச்சிறுவனுடைய பராக்கிரமம் மிகநன்றுமிகநன்று எனக்கோபங்கைகொண்டு, உடனே அமைச்சர்களைக்கூவி, நமதுசேனைகளை

யெல்லாம் யுத்தத்திற்காயத்தமாகும்படி கட்டளையிடக்கடவீர்களென்று ஆக்கியாபித்தனன். அவ்வேளையில் அவர்கள்தந்தையாகியஇளைத்திரகேதுவென்பவன் தன்னெதிரில்விழ்ந்த தலையைச் சிவிகையின்மீதேற்றிவந்து, தேவாந்தகன்முன்னேவைத்து, மைந்தனே-உனதுதம்பி காசிராசனுடன் யுத்தஞ்செய்யச்சென்றனன், அவன் அவ்விடத்தில் இறந்தாற்போற் றோணுகின்றது, அவனுடையதலை நமதுமுன்னேவந்து விழ்ந்தது, அதையும் இதோகொண்டுவந்திருக்கின்றேன் பாரென்றுகாட்டினன். அதைத்தேவாந்தகன்பார்த்துத், தந்தையே-தம்பியினுடையதலை இவ்வொன்றுதானோ, அளவற்றவிடங்களில் அளவற்றதலைகள் விழுந்துகிடக்கின்றன அதேனெனில் அவனுக்குச் சிவபிரான்கொடுத்தருளிய வரத்தினால் தலைகள் அமோகமாக வளர்ந்துகொண்டுவருகின்றன, அவன்இறப்பானென்று தேவரீர் நினைக்கவேண்டுவதில்லை,நானும் அவ்விடத்திற்கு யுத்தஞ்செய்யப்போகவிருக்கின்றேன்,தேவரீர் யாதொன்றற்குங் கிலேசமுறாமல் இருக்கையைச்சேர்ந்திருக்கலாமென்று விடைகொடுத்தனுப்பி, இனி நடக்கப்போகின்றகாரியத்திற் கேற்றபடி அளவற்றசேனைகளைக் கூட்டிக்கொண்டு, அவர்கட்கெல்லாம் அனேகவெகுமதிகளைச்செய்து, அரண்மனையினின்றும்வெளிக்கொண்டு, பூலோகத்தைநோக்கிச் செல்லுவதாயினன், அப்போது நராந்தகனுடைய இறந்தலையறிந்த சில அவுணதூதர்கள் வாயினும் வயற்றினுமறைந்துகொண்டு, கண்களில் நீரைப்பெருக்கிக்,கோடுகோடெனப்புலம்பி,வாயுவேகத்தினுமேலிட்டு, யுத்தசன்னத்தனாய்வருகின்ற தேவாந்தகனெதிரிற்சென்று, அடியற்ற பனையைப்போல அவன்பாதத்தில்விழுந்து, வாயெழாமற் சற்றுநேரங்குழறி,கடையில் இதனைவிண்ணப்பஞ்செய்வதாயினர். ஆண்டவனே-என்னசொல்லப் போகின்றோம் காசிபமுனிவன் புத்திரனை அழைத்துவந்திருக்கின்ற காசிராசனோடு தேவரீருடைய தம்பி அளவற்றசேனைகளுடனசென்று போராடினர், அதனால் காசிராசன்முதலியோர்பட்டபாட்டை யாவராலுஞ்சொல்லி முடிவதன்று, பின்னர் அவனழைத்துவந்த அப்பிராமணச்சிறுவன் போருக்குவந்து இமைப்போதில் தனதுமுகத்தினின்றும் அளவற்றவீரர்களை யுண்டாக்கிக் கொடியசமரைவிளைத்தனன், அதற்கும் அவரஞ்சாது பற்பலமாயவித்தைகளைக்கொண்டு போராடினர், முடிவில் அச்சிறுவன் ஒரேபாணத்தினால் வெட்டியெறியுந்தோறும் வளர்ந்துவந்தசிரங்களையெல்லாம் பலபுவனங்களினுஞ் செல்லவீசித், தனதுவிசுவரூபத்தினால்அவரைத்தரையிற் குழையும்படிதேய்த்துக்கொன்றுவிட்டுத்,தனதுபடைத்தலைவர்களெல்லாம் புடைசூழும்படியாகச் சயப்பிரதாபத்துடன் காசிநகரைச்சேர்ந்து களித்திருக்கின்றனன்,என்றுசொல்லினர். அச்சொல்தனதுசெவிகளில்விஷத்தைப்போலநுழைந்தமாத்திரத்தில் மனந்திடுக்கிட்டுத், துயரவெப்புமானதுதேகத்தைக்கொளுத்த, மயிர்க்கால்கடோறும்அழற்சுவாலைவீசித்தகிக்க, விழிகளில் நீர்ப்பெருக்கற்று உதிரம்பாய, வாய்புலர்ந்து சுவாசமெழுந்தோறும் புகைப்படலமும் வெப்பமுந்தோற்றச்சோர்ந்து, பதைபதைத்து வருந்தி, அக்கினியையுண்டவன்போலக் களைத்துவிழுந்து, கடகடெனப்புரண்டு, நிலைதெரியாமல் வழுவிச், குண்டாங்கரணம்போட்டுருண்டு, சத்தமேகங்களும் ஒருமித்துக் கர்ச்சிப்பதுபோலக்கதறிக்,கரங்களை

த்தட்டி நிலத்திலறைந்து, திகைத்து,மதிமயங்கித், தனக்குக்கிடைத்திருந்தவலியும் வீரமும் மானமும் மற்றுமுள்ள சிறப்புக்களையுமிழந்து, விசனமென்னு நீர்ச்சுழியிற்பட்டுத் தியங்கி, ஓ என்னையனே-ஓ என்னப்பனே-ஓ என்னாசைத்துணைவனே-தானவர்குலத்தினை விளக்கவந்த தலைவனே உன்னையொத்த வீராதிவீரனைத் தூதரோடிவந்து மாண்டனனென்றுசொல்லுவார்களோ, ஆகியில் இந்திரனாகிய தேவர்க்களையும் பூமண்டலத்தினரையும் புறந்தந்தோடப் போர்முனையில்வென்று தமியேனுக்கு வெற்றியைத்தந்தனையே, அத்தகைய ஜயசாலியாகிய உன்னை இத்தினம் சமர்க்களத்தில் ஓர்பாலன் கொல்லவுமாயிற்றே, நமக்கஞ்சிப்பணிகின்ற யமனும் உன்னரியபிராணனைப் பயமற்றுக்கொண்டுபோகத்துணிந்தனனே, சண்டைகிடைத்ததென்று கேட்டவுடன் மகிழ்ந்து புயாசலங்கள்வானத்தளாவப்பூரித்து மேல்நடந்துவாட்டும் வீரபராக்கிரம சம்பன்னனே- சத்திராதிகளென்னு மதயானைக்கூட்டங்கட்கு வலிய சிங்கராசனையொத்த கண்ணியனே - உன்னைப்பறிகொடுத்து யாதொருதுணையுமின்றிப் பரதவிக்கின்ற எனது துன்பத்தினை நீக்கித் தயிரியங்களைச்சொல்லித் தேற்ற மனமிரங்காயோ, உன்னைப் பிதாவைப்போலவும் பிள்ளையைப்போலவுமெக்காலத்துநம்பியிருக்கின்ற என்னைச் சுத்தமாய் மறந்துவிடலாகுமோ உன்னையே பிராணபதமாக நம்பியிருந்த என்னைச்சற்றுநினையாமல் இப்பூவுலகத்திலுள்ள சம்பத்துக்களை விடுத்து சொற்கலோகபோகத்திலிச்சை வைத்து அவ்வாழ்வை நீமாத்திரந்தனித்துப்போய் அனுபவிக்கவுங்கற்றனையோ, ஓ துணைவனே-உனதுதிருமுகப்பொலிவை இனி எக்காலத்திற் காணப்பெறுவேன், நம்மையரிதிற்பெற்ற தாய்தந்தையர் இக்காரியத்தையறிவார்களாயின் என்னபாடுபடுவார்களோ, உனது சிரத்தினைக்கொண்டு மதிமயங்கிவந்த தந்தைக்குத் தம்பி யாவராலுமிறக்கானென்று பலவுறுதிகளைச் சொல்லியனுப்பினேனே, ஐஐயோ-இனி இதைக்கேள்வியுற்றாராயின் தமியேனை யெவ்விதங்களில் நிந்திப்பரோ, யாதுந்தோற்றவில்லையேயென்று இவ்விதங்களாகச்சொல்லிப் புலம்புகின்ற தேவாந்தகனை அருகிருந்த அமைச்சர்முதலாயினோர் தேற்ற, ஒருவாறுதேர்ந்து, மானமுங் கோபமும் மனதைவாட்ட நல்லகாரியம் நல்லகாரியமென்று சிரகம்பிதஞ்செய்து, எனதுபிராணனையொத்த அருந்துணைவனைக்கொன்ற வீரன் எவனோ-அவனைக்கொன்று வெற்றிமாலைசூடாமல் ஏனையமாலைகள்முதலாகிய அலங்காரங்களை மறந்தும்வேண்டேன்,அதுபரியந்தம் எவ்வகைப்பட்ட பசிவரினும் உணவுங்கொள்ளேன், என்று சபதங்கூறி,மதயானையையொத்த வலிபெற்றவர்களாய்,அளவற்றசிரங்களையுங் கரங்களையு முடையவர்களாய்,சிங்கம் கரடி புலி யாளி யானை இத்தகைய மிருகங்களின்முகங்களைப்படைத்தவர்களாய், வீரபராக்கிரமசாலிகளாய், இருட்கூட்டத்தினைச் சிய்க்கவல்ல வில்-வாள்-தோமரம்-பிண்டிபாலம்-கப்பணம்-முசுண்டி முதலிய ஆயுத சவரட்சணைகளைப் பெற்றவர்களாய், தன்னைப் புடைசூழ்ந்திருந்த நால்வகைச் சேனா சமுத்திரங்களையுங் கூட்டிக்கொண்டு, ரணபேரி-சயபேரி-வெற்றிச்சங்கம்-தவுண்டி-மல்லரி - சல்லரித்தக்கைமுதலிய பொற்பறைகள் அண்டங்களதிரமுழங்க, துசபடாங்கள் வானத்தையளாவிப் படபடென்றசைய, வெண்சாமரை ஆலவட்டமுதலி

ம ராசசின்னங்களைப் பலகோடி அவுணவீரர்கள்தாங்கிவர, அவுணமுதியோர்கள் பலர் திரண்டு ராசாதிராசனே சயப்பிரதாபத்தைப்பெற்றுவரக்கடவையென்று பலவாழ்த்துகளைப்பேசிப் புஷ்பங்களையிறைக்க,சுமங்கலமங்கையர்கள் பற்பலஆலங்களைச் சுழற்றிநிற்க, பட்டுவர் புகழ,வித்துவசனங்கள் பாமாலைசாற்ற, இவ்விதசம்பிரமங்களோடு பூலோகத்திலிறங்கி, அளவற்ற மகிமைகளோடுஞ் சிறப்புற்றிருக்கின்ற காசிநகரத்தையடைந்து, நராந்தகனும் மகோற்கடனும் யுத்தஞ்செய்த சமர்க்களம் எங்ஙனமென்றுவிசாரித்துத் தெரிந்துகொண்டு, அங்ஙனந் தனதுசேனைகளையெல்லாநிறுத்தித் தானுமிருந்தனன். அப்போது முன்னர்நராந்தகன்செய்த சமர்ச்சுவையினையறிந்து மேற்றிசைக்கடலில்மறைந்துசென்ற சூரியனானவன் மீட்டுந் தேவாந்தகன்செய்யுஞ் சமர்ச்சுவையினையுமறிவோமென்று வந்தவன்போலக் கீழ்த்திசைக்கடலிலுதயமாயினன். இப்பால் தேவாந்தகனுடைய வரலாற்றினையறிந்த அவ்விடத்தியதூதர்கள் காசிராசனிடத்திலோடிப் பணிந்தெழுந்து, ஆண்டவனே-தேவாந்தகனானவன் அளவற்றசேனைகளோடு இப்பட்டணத்திற்குவெளியில் இறங்கியிருக்கின்றானென்றுசொல்லினர். அதை அரசன்கேட்டமாத்திரத்திற் றடுமாறி, மகோற்கடமூர்த்தியிடத்திற்சென்று பணிந்தெழுந்து, அளவற்ற தோத்திரங்களைச்செய்து, ஓ சகலபுவனாதார கர்த்தனே-நராந்தகனுடைய தமையனாகிய தேவாந்தகன் யுத்தசன்னத்தனாய் சொர்க்கலோகத்தி னின்றும் வெளிக்கொண்டு இங்ஙனம் வந்திருக்கின்றனன், அவனையுந் தேவரீர் சங்கரித்து அடியேனை முற்றினுங் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவனை மகோற்கடமூர்த்தி கிருபையோடும்பார்த்து, அரசனே-அஞ்சவேண்டாமென்று திடஞ்சொல்லி, அந்தேவாந்தகன்கண்டு நடுங்கத்தக்க ஓர் பெரியவடிவத்தினைக்கொண்டு, நான்குகரங்களும் அக்கரங்களில் வில்-வாள்-பரசு-பாசம்-என்னு நால்வகை ஆயுதங்கள் விளங்க-சித்தி-புத்திகளுடனேசிங்கவாகனமூர்ந்து,கொடி-கொடை-முதலிய சின்னங்களோடு பற்பலபூதவீரர்கள் புடைசூழும்படி ஆகாயமார்க்கமாக அப்பட்டணத்தினின்றும் வெளிக்கொண்டு, சமர்க்களத்திலிறங்கி, அங்கு சயவுற்சாகத்தோடு ஆர்ப்பரித்திருக்கின்ற தேவாந்தகனுடைய சேனாசமுத்திரங்களைக்கண்டு, தமதுஇடப்பாகத்திலிருக்கின்ற சித்திதேவியைநோக்கிப்,பெண்ணே-இதோ நமக்கெதிரில்நிற்கின்ற பெரிதானசேனைகளை யழிக்கத்தக்க வேறே சிலசேனைகளைநீசிருட்டிக்கக்கடவையென்றுதிருவாய்மலர்ந்தனர். உடனேசித்திதேவியார் அவ்வாக்கினையைச்சிரமேற்கொண்டு,சுவாமியை வலம்வந்து பணிந்து, அணிமா-மகிமா-கரிமா-இலகிமா-பிராத்தி -பிராகாமியம்-ஈசத்துவம்-வசித்துவம்-எனச்சொல்லாநின்ற அட்டமாசித்திகளை எண்விதசத்திகளாக்கி, அவ்வவர்கட்கேற்ற நால்வகைச்சேனைகளையும் ஆயுதங்கள்முதலிய சிறப்புக்களோடு உண்டுபண்ணினர். அவ்வதிசயத்தைத் தேவாந்தகன்கண்டு, தனது சேனைத்தலைவர்களைக் கூவி, ஓவீரர்களே-நாமிங்குவந்தபின்பு பகைவனுடையசேனை மிகவும் அற்பமாகவந்தது இப்போது அவ்வற்பமும் சத்தசாகரங்களைப்போல அளவற்றசேனைகளாய்விளங்குகின்றன, இத்தன்மைத்தானமகத்துவத்தினைப்படைத்த சேனைகளோடு நாமெதிர்த்து வென்றோமாயின் நமக்கு அழியாதகீர்த்தி எங்கு

ம்பரவியிற்கும்,ஒருவேளை அழிந்தோமாயினும் அக்கீர்த்தி நமக்குக்கிடை ப்பதற்கு யாதொருசந்தேகமுமில்லை, ஆகலால் நமதுசேனைகளை அணிவ குத்துப் பகைவனுடையசேனைகளைச் சின்னபின்னப் படுத்தக்கடவீர்க ளென்றுசொல்லி அளவற்றவெகுமதிகளைச்செய்தனன். அவ்வாறே அப் படைத்தலைவர்கள் சகலசேனைகளையும் அணிவகுத்து யுத்தஞ்செய்வதா யினர். அவ்வுயுத்தத்தினுடைய திறத்தினைத் திருமான்முதலியதேவர்கள் ஆகாயமார்க்கத்திற்கூடிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இப்பால் இருவ கைச்சேனைகளினுமுள்ள வீரர்கள் வெற்றிச்சங்கமுதலியவைகளை முழ க்கித், தமதுமுடிகளிற் றும்பைமாலைகளைச்சூடி, அணிமாசத்தியுடனே கத்தமனும், மகிமாவுடனே எக்குமனும், லகிமாவுடனே தாலசங்கனும் கரிமாவுடனே தீர்க்கதந்தனும், பிராப்தியுடனே கண்டனும், பிராகாமி யையுடனே காலாந்தகனும், ஈசத்துவத்துடனே துற்சயனும், வசித்துவ த்துடனே இரத்தகேசியும், ஏனையசேனைகளுடனே ஏனையசேனைகளுமா கவெதிர்த்துக், காடாந்தகாரமாகிய இருட்கூட்டமும் அதை நாசப்படுத்த வல்ல சூரியனுடைய கிரணசமூகங்களும், ஒன்றுக்கொன்று போருக்கெ ழுந்ததுபோல ஒருவரையொருவர் விற்களைவளைத்துக் கொடியதீக்ஷணிய முள்ள பாணவருஷங்களைப் பொழிந்தும், தோமரம்-பரசு-சூலம்-குந்தம் குறுந்தடிமுதலிய ஆயுதங்களைவீசியும், இந்திராஸ்திரம்- வருணாஸ்திரம்- வாயுவாஸ்திரம்-அக்கினியாஸ்திரமுதலிய தெய்வப்படைகளைப் பிரயோ கித்தும், வானையளாவநிற்கின்ற பர்வதங்களைப் பிடுங்கிக் கிறுகிறெனச் சுழற்றிப் பந்தைப்போலக்கடாவியும், திசைகளைமூடிக் கிளைகளைவிரித்தி ருக்கின்ற பாரித்தமரங்களை வேருடன்பிடுங்கிச்சுழற்றி மோதியும், ஒவ் வொருகரத்தில் ஆயிரம் பதினாயிரம் யானைகளைவாரித் தோரணிகள்நுறுங் கிவிழ வீசியும், மலரதங்களைத்தூக்கி அளவற்றகுதிரைப்பந்திகள் நிலத்தி லறைபட்டுருளச் சாடியும்,கணக்கிறந்தகுதிரைகளைத்தூக்கி அளவற்றசே னைகள் சின்னபின்னப்பட்டுமாளத் தாக்கியும்,கழுத்துக்களைமுறித்தும், க ரங்களையொடித்தும், விலாக்களொடியக்குத்தியும், மார்புபிளக்கவறைந்து ம்,கால்களைத்தட்டியும், விழுந்துருள உதைத்தும்,நிலத்தைக் கவ்விக்கொ ண்டிறக்கமோதியும்,வானத்திற்பறக்க எற்றியும்,திசைகளில்வீசியும், சமு த்திரத்திற்குமிளமிடவெறிந்தும், சுள்ளிகளைப்போலவொடித்தும், கோப த்தினால் மேல்விழுந்து ஊட்டியைக்கடித்து உதிரத்தைக்குடித்தும், இடி த்தும், குத்தியும்,மோதியும், தட்டியும்,முட்டியும்,மொத்தியும், பிசைந்து ம், கசக்கியும்,கிட்டியும், மந்தரம்போன்றபுஜங்களைஒடித்தும்,தலைகளைநெ ரித்தும்,மூளைகளைவாய்வழியிற்கக்க நருக்கியும்,கண்மணிகளைப்பிடுங்கி நட் சத்திரவீதிகளிலெறிந்தும், வயிற்றைப்பீறிக் குடர்களைப்பிடுங்கி மாலையா கப்போட்டும், வாரி நிலத்திலறைந்தும்,வலியகால்களினாற்றுகைத்தும், சு தைத்தும், இவ்விதங்களாக ஒருவர்க்கொருவர் அமோகமாகிய உயுத்தத் தைவிளைத்தனர். அக்காலத்தில் இருதிறச்சேனைகளினும் அளவற்றபேர் மாண்டு, ரணக்களமானது பலகவந்தங்கள் கூத்தாடவும், உதிரவெள்ள மானது அலைகளைச்சுருட்டி மோதிக்கொண்டோடவும், மூளைகள் சந்திர காந்தப்பாறைகளைப்போல இணைந்துகாட்டவும். பிணமலைகள்பெருத்தோ ங்கவும், பூதபசாசங்கள் காளிக்கூட்டங்கள் உதிரமாமிசங்களைத் தெவிட்

டவுண்டவெறியினல் ரணபத்திரகாளியைப்புகழ்ந்து தித்தோமென்றுகுடித்துத் துணங்கைக்கூத்தாடவும்,நாய்நரிகள் இங்கு மங்கும் ஊளமிட்டோடவும்,கழுகு-பருந்து-காக்கைகள் பசியற்று வானவெல்லையிற் கூச்சலிட்டுலாவவுமாகியிருந்தது. கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே -அக்காலத்தில் ரணக்களமிருந்தவேடிக்கையை இவ்வகைத்தெனப் பேசப்படுவதோ, இவ்விதமாகசித்திதேவியினுடையசேனைகளும் தேவாந்தகனுடையசேனைகளும் வஞ்சினமும் நெடுமொழியுங்கூறித் தத்தமிறைவர்களுடையகண்களில் நீர்பெருகும்படியாகச் சமர்செய்துமாண்டு வீரசொர்க்கத்தினையே முக்கியமாகக்கருதிப் போராடுமுன்னிலையில் சித்திதேவியினுடைய சேனைகள் மேலிட்டு, வடவாமுகாக்கினியைப்போலமண்டிஎரிந்து சத்துருக்களேறிவந்த கோடானுகோடிரதங்களையெடுத்து ஒன்றுடனொன்றுதாக்கிப் பொடியாக்கியெறிந்தும், மதயானைகளின் துதிக்கரங்களைப்பற்றி இறுக்கி நெறநெறெனச்சுழற்றி யானையணிகளின்மீதுமோதிச் சின்னபின்னப்பட்டச்சாய்த்தும், குதிரைப்பந்திகளைவாரிக்குதிரைப்பந்திகளின்மீதெறிந்து தும்சப்பட்க்கொன்றும், சிலதேவசேனைகள் பிரசண்டமாருதத்தைப்போலச்சுழன்று அளவற்ற அவுணவீரர்களைவாரி அவுணசேனைகளின்மீதேமோதிக் கண்டதுண்டப்படச்சாடியும், மலைகளையொத்த புயங்களைக்கொண்டுதாக்கிப் பலஅவுணர்களை உருட்டியும், வலியகரங்களினால் கோடையிடிகளையொப்பக் குத்திக்கொன்றும், பாதங்களைச்சுலவி ஒவ்வோருதையிற் கணக்கிறந்தராக்ஷதரைத் தரையிற்கிடத்தியும், ஒவ்வோரறையினற் கோடானுகோடி அவுணவீரர்களைமடித்தும், பலஅவுணவீரர்களுடைய சிரங்கள் பெருங்காற்றிற்பட்டுதிராகின்ற தெங்கின்குலைகளைப்போல ரணக்களமெங்கும் புரளும்படிக்குமோதியும், இவ்வாறுஅமோகமாகவிருக்கின்ற மான்கூட்டங்களிற் சிங்காரசர்கள்பாய்ந் தலைப்படைப்போல எதிர்த்துவந்த அவுணசேனைகளையெல்லாம் அதப்படுத்தி வீறியிருக்கின்றசமயத்தில், அவுணசேனைகள் மனவூக்கமற்று,நிலைகலங்கித்தத்தளித்து, இறந்தவர்கள்போக மற்றையர் பயபீதியினல் தளர்ந்து பின்னிடைவதை வலியும் வீரமும்பெற்று அணிமாசத்தியோடு யெதிர்த்துநின்ற கத்தமனென்னுஞ் சேனைத்தலைவன் கண்டமாத்திரத்தில் மண்டியெரிந்து, மானமுங் கோபமும்மனதைவாதிக்கத்தனதுதேரைஅதிகவிரைவோடுதுரத்திக்கொண்டுவந்து, அவுணசேனைகளையெல்லாம் பயப்படாதீர்களென்று ஆதரித்து நிறுத்திக், தனது பாரித்தவில்லையெடுத்து நாட்டி நாணேற்றி, மணிகள் சத்திக்கத்தக்கதாக வளைத்து, விஷத்துவையலிட்டிருக்கின்ற அளவற்றபாணங்களை ஒன்றனந்தமாகப் பிரயோகித்து ஆர்ப்பரித்தனன். அப்பாணங்கள் வெளிப்பட்டவுடன் வானத்தெழுந்து பற்பல அனற்பொறிகளை யுண்டுபண்ணிக்கொண்டு, அதிகவேகத்தோடு சென்று, புத்தினிடத்திற்சர்ப்பங்கள்நுழைவதைப்போலப் புசபலபராக்கிரமசாலிகளாகிய சேனைகளிற்பாய்ந்து உருவிச்செல்ல, அக்கொடுமைக்கு அத்தேவசேனைகள் ஆற்றப்படாதவர்களாய்க் கலங்கிவாடிப் பின்னிட, அதை அணிமாசத்திகண்டு, தனதுதேரை அப்பாதகனருகிற் றுரத்திவந்து, அடா ராக்ஷசப்பயலே-ஏன் தலைகீழாக விழுகின்றனை,மிஞ்சவேண்டாம், இனி உன் சிலம்பமொன்றும் இங்கன நடவாது, உன்பிரா

ணனைக்கொண்டுபோக யமனைப்போலவந்திருக்கின்றேன், இனி நீ பிழைத்து ஊரைப்போவோமென்னும் எண்ணத்தை விட்டுவிடக்கடவையென்று பல வசைமொழிகளைக்கூறி, வெற்றிமாலையணிந்திருக்குந் தனது தண்டாயுதமொன்றையெடுத்துக், கிறுகிறெனச்சுழற்றி அவனுடைய தேரின்மீது கோடையிடியைப்போல மோதினள். அப்போது ரதமானது அச்சுவேறு மச்சுவேறுகச்சிதைந்து குதிரைகள் சின்னபின்னப்பட்டு சாரதிதலையுடைந்து மாண்டதை அவுணவீரன்கண்டு, ரவுத்திராகாரமாகக்கோபித்து, தனதுவில்லிற் கணக்கிறந்தபாணங்களைத்தொடுத்து, அடி பேயே இச்சிறந்தபாணங்களினால் உனது சிரத்தைவெட்டிப் பூமியிற்றள்ளிச் சயம்பெறுமற்போவேனாயின் இனி யென்பிராணபரியந்தம் இவ்வில்லைக்கரத்திற் றொடுவதில்லையெனப் பிரதிக்கினைசெய்து பிரயோகித்தனன். அப்படைகள் வெளிப்பட்டமாத்திரத்தில் அதிகமகிமைகளைக்காட்டி, அட்டதிசைகளினும் எரிந்து புகைந்துகொண்டுவருவதை அணிமாசத்திகண்டு, அதிககோபாவேசத்தோடு அப்பாதகனுடையதேரிற்பாய்ந்து, அவன்கரத்திற்கொண்டிருந்த வில்லையொடித்தெறிந்து, அவன்சிகையைப்பிடித்து மேல்தூக்கிச், சுழற்காற்றினைப்போல வட்டாகாரமாகக் கிறுகிறெனச்சுழற்றி வீசினள். உடனே அக்கத்தமன் விருப்பனைத்துமடங்கிப் பித்தனைப்போல மதிமயங்கிச் சோர்ந்து பெருங்கூச்சலிட்டுப் பதைபதைத்துத் துடிதுடித்து மாண்டனன். இவ்வாறே மகிமாசத்தியானவள் தனதுவேலாயுதத்தினால் எக்குமனென்பவனைக்கொன்றாள். லகிமாசத்தி தாலசங்கனென்பவனை ஓர்வாளாயுதத்தினால் வதைத்தனள். கிரிமாசத்தி தீர்க்கதந்தனைச் சூலத்தினால்மாய்த்தனள். பிராத்திசத்தி கண்டனென்பவனைத் தனதுகையினாற்குத்தி நாசஞ்செய்தனள். இசத்துவசத்தி துற்சயனென்பவனை ஓரம்பினாற்சாய்த்தனள். வசித்துவசத்தி இரத்தகேசனை ஓர் வச்சிராயுதத்தைவிட்டு வதைத்தனள். இவர்கள்செய லிவ்வாறாகப் பிராகாமியசத்தியோடுமெதிர்த்துநின்ற காலாந்தகனென்பவன் மகா பராக்கிரமசாலியாய் நெடுநேரம்சிறிதுமிளையாது போர்செய்துவர, அவன்வீரத்தினை அச்சத்திகண்டு, இவ்வற்பன் நமதுபடைகளோடுநீடித்து யுத்தஞ்செய்வது வெகுநேர்த்தி வெகுநேர்த்தியெனக் கோபநகைசெய்து, தனதுசேனைகட்குத் தயிரியங்களைச்சொல்லிக் கூட்டிக்கொண்டு, ரதத்தைத் துரத்திக்கொண்டுபோய் அவுணன்சேனைகளைநாற்புறத்தும்வளைத்துத், தங்கத் தகடுகள்பூண்டு இருகுதைகளினு மணிகள்சத்திக்கும்பாரித்தவில்லை வட்டாகாரமாகவளைத்துத், திசைகளதிரக் குணத்தொனிசெய்து, விஷத்துவையவிட்டிருக்கின்ற திவ்வியபாணங்களை அமோகமாகப்பூட்டிப் பிரயோகித்தனள். அப்பாணங்கள் அனலையிறைத்துப் புகைகளைப்பெருக்கி அதிகஉற்பாதங்களை விளைத்துக்கொண்டு தடைக்கஞ்சாமல்மீறி வேகமாய்ப்பாய்ந்து அவுணவீரர்களுடைய சரீரங்களிற் சுறுக்குச் சுறுக்கென்று தைத்து சல்லடைக்கண்களாகத்துளைத்து வாட்ட, அவ்வுபத்திரவங்களை யவ்வீரர்கள் சகிக்கமாட்டாமல் தயிரியத்தைவிடுத்துத் தலையொருகோலமாய்த்திசையெங்கணும் பறந்தோளிக்கத் தொடங்கினர். அதைக் காலாந்தகன்கண்டு மனம்புழுங்கி, நம்மவர்களிப்பாடுபடுவதோவெனச்சீறிக், கண்களில் அனற்பொறிகள் சிதறத்தக்கதாகத் தனதுதேரை விரைவிற்றுரத்திவந்து

பிராகாமியசத்தியெதிரில் நிறுத்தி, மேருவையொத்துப் பாரித்திரானின்ற வில்லைவளைத்துத், திசைகளதிர டங்காரத்தொனிசெய்து, அரியதவங்களினாற்பெற்று யாவராலுந்தடைசெயவதற்கரிய கொடியபாணங்களைத்தேடியெடுத்துப் பூட்டி, இவைகளினால் உன்னரியபிராணனை வாங்குகின்றேனென்றுபேசிப் பிரயோகித்தனன். அப்பாணங்கள் வில்லிலிருந்துவெளிப்பட்டமாத்திரத்தில் குறுகுறென்னுஞ்சத்தத்துடன் அதிகமகிமைகளைக்காட்டிக்கொண்டுவந்து பிராகாமியசத்தியினுடைய தேரையும் வில்லையும்பொடிப்படுத்தின. அக்கொடுமையினால் அச்சத்தியானவள் திடுக்கிட்டுப் பஞ்சேந்திரியங்களு நிலைதப்பக்கலங்கி, வாய்புலர்ந்து, மனங்குடுங்கிச்சோபித்து, வில்லையும் பாணங்களையுந் தேரில்நழுகவிட்டுத், தேகமெங்கணும்வியர்க்கக் கிலேசித்து, யாதொருசெய்கையு மற்றிருந்தனள். அச்சம்பவத்தை வசித்துவசத்தியறிந்து, இந்தஅபலனோ நம்மவட்கு இவ்விதஇடையூறினைச்செய்யவல்லனென்று ஆக்கிரமித்துத், தனதுதேரை மனோவேகத்தினுமுந்தித் தூரத்திக்கொண்டுவந்து, சண்டமாருதத்தினைப்போல அவனுடையதேரிற்பாய்ந்து, இமைப்போதில் அவனுடையகழுத்தைமுறித்துத் தலையானது கடலிற்போய்விழும்படி எறிந்தனள். உடனேமூர்ச்சையாகித் தேரில்விழுந்துகிடந்த பிராகாமியசத்தியானவள் மூர்ச்சைதெளிந்தெழுந்து, பகைவனெங்கேயென்றுதேடினள். அதைமுசலன்பல்லனெனச் சொல்லநின்ற இரண்டு அவுணசேனாதிபதிகள்கண்டு, அளவற்றசேனைகளோடுந் தமதுதேரை வாயுவேகத்தினும் விரைவாகத்தூரத்திக்கொண்டுவந்து, விழிகளிற்றீயெழ உறுத்துப்பார்த்து, அடிபேய்களே-சற்றும் எண்ணிக்கையில்லாமல் எம்மவர்களைஇப்படிக்குக்கொல்லத்துணிவீரோ, உங்கள்பிராணனைக்கொண்டுபோகும் யமனைப்போல இங்குவந்திருக்கின்றோம், சற்றுநேரத்தில் உங்களைத் தென்னாட்டிற் குடியேற்றுவோம், இதுவரையில் நீங்களெதிர்த்துப் போராடினவர்களைப்போல எங்களைநினைக்கவேண்டாம், என்று இவ்விதவீரங்களைப்பேசி, வாயுவேகத்தினுமேவிட்டுத் தங்கள்மீது உருத்துவருவதை வசித்துவசத்திகண்டு, இந்திரதனுசையொத்த வில்லைக்கொண்டு, இடியைநிகர்த்த குணத்தொனியைக்காட்டி, மின்னலைப்போன்ற அலகையுடைய சரங்களை சோனைப்பெய்யலுக்குச் சமதையாகச்சொரிந்து ஆர்ப்பரித்தனள். அப்பாணங்கள் வெளிப்பட்டமாத்திரத்தில் நாற்றிசைகளினும் வடவாமுகாக்கினிகளைப் பெருக்கிக்கொண்டுசென்று, அவ்வவுணர்களுடைய சேனைகளிற்பாய்ந்து புகைந்தெரிந்துகொண்டு, ஒருவரையும் அப்புறம் இப்புறம்போகவொட்டாமல் வளைத்துச், சரீரமுற்றுந் துளைத்தும், பிளந்தும், கண்டதுண்டமாக வெட்டியும், கால்களைத் தறித்தும், புசங்களைச் சரித்தும், மார்பைப் பிளந்தும், சிரங்களைக்கண்டித்தும், வயிற்றைப்பீறிக் குடர்களையிறைத்தும், மேருவைப்போலப் பாரித்திருக்கின்ற தேர்களெல்லாம் அச்சொடிந்து, வண்டில்களுருண்டு, மச்சுகள்நுறுங்கிக், கொடுங்கைகள் துகள்பட்டுக், கொடைகொடி முதலியவைகள் பறந்துபோகும்படிநாசப்படுத்தியும், நீலகிரியைப்போலக் கறுத்ததேகத்தைப் பெற்றிருக்கின்ற மதயானைகளெல்லாம் வீறிட்டுக்கலைந்து, ரத்தினமுகபடமணிந்த மத்தகங்கள்பிளந்து, பனையையொத்த துதிக்கரங்கள் வெட்டுண்டு, பிறையையொப்பவிளங்குந் தந்தங்

கள் இறைந்து, பாரித்தகால்களற்று வீழும்படிக்குத் தும்சப்படுத்தியும், அலைகளைப்போலத்தாவிச் சமர்செய்யவல்ல பஞ்சலக்ஷணங்களாகிய குதிரைகளெல்லாம் அல்லோலகல்லோலப்பட்டுப், பின்னிவிட்டிருக்கும் பிடரிமயிரையுடைய சிரங்களறுந்து, சொர்ணவெண்டயங்கள்கலிக்குங் கால்கள்தறிந்து, சாமரங்களையொத்தவால்கள்பரந்து மாளும்படிக்குச் சாடியும், இவ்விதமாக ரதகசதுரகபதாதிகளாகிய சேனைகளையெல்லாம் அதாஅதப்படுத்தின. அக்காலத்திற்பெருகிய உதிரமானது கடலைப்போல இரைந்து, அலைகளைவீசிச் சமுத்திரத்திற்பாய்ந்தது. சமர்க்களமுழுவதும் பிணமலைகள்பெருத்து வானத்தையளாவக்குவிந்தன. பலகோடி கவந்தங்கங்கள் கூத்தாடின. அவ்வரியபோரிற்பிழைத்திருந்த சிலஅவுணர்கள் அதிககாயங்களினால் மனம்வருந்தி, நிலைபெற்று நிற்கப்படாமையால் திகைத்துத், தங்கள்பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு மானத்தையும் வீரத்தையும் பறிகொடுத்தோடித், திசாதிசைகளிலும், பூவட்டங்களிலும், பர்வதச்சாரல்களிலும், வனாந்தரங்களிலுந், தீவாந்தரங்களிலும் பதுங்கினர். இவ்விதமாக அவுணசேனைகள்வலியிழந்து பின்னிடுவதையும், தேவசேனைகள் அகோர உயித்தியங்களைச்செய்து சயசாலிகளாய் வீறித்திரிவதையும், அதிசூரர்களாகிய முசலனும் பல்லனுங்கண்டு, மனம்புழுங்கி, நம்மவர்கள் இப்பாடுபடுவதோவெனச்சீறி, மந்திரகிரியையொத்துப் பாரித்திருக்கின்ற தங்கள்விற்களைவளைத்துச், குரூரமாகிய அளவற்றபாணவிதங்களைத்தொடுத்து, தமதுசேனைகளைச் சின்னபின்னப்படுத்திய வசித்துவசத்தியின்மீது கரவேகமாகப் பிரயோகித்தனர். அம்மாத்திரத்தில் அப்பாணங்கள் திகுதிகென்றெரிந்துவந்து பலகொடுமைகளைவிளைக்க, அதனை வசித்துவசத்தி சகிக்கமாட்டாது சிறிதுதளர்ந்தனள். அத்தளர்ச்சியை அணிமாசத்தியறிந்துவந்து, தனதுவில்லில் அளவற்றபாணங்களையும், சக்கரம்-பிண்டிபாலம்-தோமரம்-கப்பணம்-முசலம்-சூலம்- தண்டமுதலிய படைகளையுஞ்செலுத்தி ஆர்ப்பரித்தனள். அதற்கு அவ்விரண் டவுணசேனாதிபதிகளும் இளையாது, தாங்களும் பலபாணங்களையும் படைகளையும் பதிலுக்குப்பதில் பிரயோகித்து, அணிமாசத்தியானவள் தனதுதேரோடு பின்னிட்டோடும்படிசெய்து, ரணக்களமெங்குஞ் சக்கிராகாரமா யுலாவிக்கொண்டிருந்தனர். அப்போது பிராத்திசத்தியும், ஈசத்துவசத்தியும், ஈதென்னவிபரீதமென்று திகைத்து, தமதுரதங்களைத்துரத்தி ஓடிவந்து, அடா அவுணப்பயல்களே-எம்மை நீங்களோ வெல்லவல்லவர்கள், இதோ உங்களுயிரைவாங்கி, யமலோகங் குடியேற்றுகின்றோம் பாருங்களென்று வசைமொழிகளைப்பேசிக்கொண்டு, தங்கள் வில்லுகளில் தேவாஸ்திரங்களைப்பூட்டி, ஓ படைக்கட்கரசே- அதோநிற்கின்ற அவுணவீரர்களுடைய சிரங்களைக்கண்டித்து, அவர்கள்பிராணனையுண்டு மீண்டுவரக்கடவீர்களென்றுசொல்லிப் பிரயோகித்தார்கள். அவர்கள்விடுத்த அவ்விரண்டு அஸ்திரங்களும் வெளிப்பட்டவுடன் தகத்தகாயமாய்ப்பிரகாசித்து, அனலையிறைத்துப், பலகோடி பிரம்மாஸ்திரம்-வருணாஸ்திரம்-வாயுவாஸ்திரம்- குபேராஸ்திரமுதலியவைகளைப்படைத்துக், குமுறியெரிந்து புகைந்துகொண்டு, எங்குந் தமதுமயமாய் அதிகமகிமைகளைக் காட்டிச் சீறியிரைந்து, காடாந்தகாரமாகிய இருட்பெருக்கைப் பிரகாசம்

பொருந்திய கிரணங்களையுடைய சூரியனானவன் எங்குமில்லாதபடி மா
ய்ப்பதுபோல அவுணசேனைகளையெல்லா நாசப்படுத்தி, ரணக்களமத்தி
யில் மகாபராக்கிரமத்தோடு வீற்றிருக்கின்ற அவ்வவுணசேனாதிபதிகளி
னுடைய மாயங்களையுஞ் சிரங்களையுங் கண்டித்தெறிந்து, வானகங்கையி
ல்முழுகி, மீட்டுந் தம்மைச்செலுத்திய சத்திகளிடத்திற்சென்று சேர்ந்த
ன. கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே - எத்தகையராலுஞ் சயிக்க
வொண்ணாத அவுணசேனைகள் இவ்விதமாக இரைந்து பரந்துபோனதை
யும், அவர்களைப்போற்றியிருந்த வீரபராக்கிரமசாலிகளாகிய கணக்கிறந்
த படைத்தலைவர்கள் சின்னபின்னப்பட்டு மாண்டதையும், தேவசேனை
களும் பூதவீரர்களும் சயவுற்சாகங்களுடன் களித்து ரணக்களமெங்கும்
எதிரின்றித்திரிவதையும், சகலதேவர்களையும்வென்றவீராதிவீரனாகியதே
வாந்தகன் கண்டமாத்திரத்தில் வடவாமுகாக்கினியைப்போலக் கொதித்
துத், தீயும் புகையுமெழ நகைத்துக், கற்பகமலர்களையணிந்த புயாச
லங்களையுடைய இந்திரன்முதலியதேவர்கள் தங்கள்பதங்களையிழந்து சி
ன்னபின்னப்பட்டு வாடியோடக் கொடியபோரைச்செய்த செயசாலிக
ளாகிய நமதுசேனைவீரர்கள் இத்தினம் அபலராகிப் பூதங்களினாலும் ப
டைவீரர்களினாலும் இப்பாடுபடுவதோ,சகலதேவர்களையும்வென்று கீர்த்
திப்பிரதாபத்தினைப்பெற்ற எனதுகண்காண சத்துருக்கள் வலியுள்ளவ
ர்களாய்ப்புசபலபராக்கிரமசாலிகளாகியராக்ஷதவீரர்களைவாட்டிச் சயம்
பெறுவது வெகுநேர்த்தியாகவிருக்கின்றது, நடந்துபோன காரியங்களை
நினைந்துநினைந்து மனம்வருந்துவதினாற் பிரயோசனமொன்றுமில்லை,இனி
காலதாமதஞ்செய்யாமல் நானே போர்முனையில் நடந்து, சத்துருக்களை
வளைந்துகொண்டு கொடியபோரைச்செய்து, ஓர்நாழிகைப்போதிற் சின்
னபின்னப்படவாட்டிக் கொல்லுகின்றேனென்று சபதம்பேசித், தனது
குலகுருவாகிய சுக்கிரனை மனதிற்றியானித்தான், உடனே அச்சுக்கிரன்
அவனிடத்தில்வந்து, அவன்கருத்தின்வண்ணம் ரணக்களத்தில் இறந்துகி
டக்கின்ற அவுணசேனைகளையெல்லாம் எழுப்பினன். இவ்வாறு சுக்கிரன்
வந்ததையும்,இறந்துகிடக்கின்ற அவுணசேனைகளையெல்லாம் அவன்எழு
ப்பியதையும்,ஈசத்துவசத்திகண்டு, விழிகளில் வடவாமுகாக்கினி தோன்
றும்படியாக ஆலகாலவிடத்தைப்போலக்கோபித்துத்,தனதுபுருவத்தை
நெரித்தனள். அவளுடையகோபத்தினின்று அதிகரவுத்திராகாரத்தோடு
மற்றொருசத்திஉற்பவித்து, சுக்கிரனிடத்திலோடி, அவனையெடுத்துவிழு
ங்கித் தனதுவயிற்றில்வைத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் சென்றன
ள். அவனாற் பிழைத்தெழுந்த சேனைகளெல்லாம்ஈசத்துவசத்தியினுடை
ய கோபாக்கினியினால் மீட்டுமிறந்துபோனார்கள். அச்சம்பவத்தைத் தே
வாந்தகன்கண்டு, கோபமிகுதியினாற் புருவம்நெற்றியிலேற மண்டியெரிந்
து, வாயுவேகமும் மனோவேகமும் பிற்படத்தக்கதாகத் தனதுதேரைவி
ரைவில் முடுக்கிக்கொண்டுசென்று, மகமேருவுக்குச் சமதையாகப்பாரித்
துத் தங்கத்தகடுகள்பூண்டிருக்கும் வில்லினையெடுத்து நாணேற்றிச், சர்
வசங்காரகாலத்தில் தேவாதிதேவனாகிய சிவபிரான் அண்டரண்டபுவன
சராசரங்களையொடுக்க நினைந்தபோது ஊழிமேகங்க ளொன்றுபட்டு வ
ருஷிப்பதைப்போலக்கெலிப்புடன் வீற்றிருக்கின்றஅணிமாமுதலிய எட்

டுசத்திகள்மீதும், அவர்களுடையசேனைகண்மீதும் அடுக்கடுக்காய் அள வற்றசரவருஷங்களைப் பொழிந்தனன். அப்பாணங்கள் வெளிப்பட்டமா த்திரத்தில் கோடையிடிகளைப்பெருக்கி,விழிகள்கூசமின்னித்,தீயைவீசிப் புகைந்து, பற்பலகொடுமைகளைக்காட்டி, அதிகமகிமையுடன் பிரசண்ட மாருதத்தைப்போல வேகங்கொண்டு குறுகுறெனச்சீறிவர, அதை சய சாலிகளாகிய பூதசேனைகள் கண்டமாத்திரத்தில் வட்டவையைப்போலச் சீறித், குழிபட்டிருக்கின்றவிழிகளில் தீப்பொறிகள்சிதறத்தாவி, அஷ்டகு லாசலங்களுக்குச் சமதையாக ஓங்கிநிற்கின்ற பர்வதங்களைப் பெயர்த்துக் கொண்டுவந்து, தேவாந்தகனுடைய மார்புக்கிலக்காகக் கிறுகிறெனச்சுழ ற்றி, விவ்விவ்வெனவீசி, ஊழிக்காலத்திற்பெருகும் இடிகளைப்போல ஆ ர்ப்பரித்தனர். அப்பர்வதங்கள் அதிவேகத்தோடுந் திசைகள்தோன்றாத படி நிறைந்து, குமுறி மேலிட்டுச்சென்று, தேவாந்தகனுடைய மார்பிற் போய்த் தாக்கியமாத்திரத்தில் மலையின்மீதெறிந்த வெள்ளரிக்கனியைப் போலத் தூள்பொடியாகிப் பிரயோசனப்படாமற்போயின.பின்னர் பூத சேனைகள்-கதை-முத்தலைசூலம்-சக்கரம்-வேல்-தோமரம்-பிண்டிபாலம் எறியீட்டி-எழு-மழு-காலபாசமுதலிய ஆயுதங்களை ஒன்றனந்தமாகவீசி யுத்தஞ்செய்தார்கள். அவைகளையெல்லாந் தேவாந்தகனனவன் அளவ ற்றபாணங்களைத்தூண்டிப் பொடிபடுத்தி, மீட்டுங் குரூரமாகிய கோடா னுகோடிபாணங்களைக்கரவேகங்கொண்டுசெலுத்திப்,பூதசேனைகளுடைய சரீரங்களையெல்லாஞ் சல்லடைக்கண்கள்போலாகும்படி துளைத்தனன். அக்கொடுமைக்கு அப்பூதசேனைகள் ஆற்றமாட்டாது மதிமருண்டு வாடி யும், சோர்ந்தும், மரணமூர்ச்சையடைந்தும்,பங்கப்பட்டும், மானமிழந் தோடியும், இவ்விதமாகத் தாபரித்துஎதிரில்நின்றுபோராட்வகையில்லா மற் பின்னிட்டனர். அச்சம்பவத்தை அணிமாதி அட்டமாசத்திகளு ங்கண்டு மனம்பொறுமல், தயிரியசாலிகளாய்த் தங்களிரதங்களை வாயு வேகத்தினூர்ந்தித் துரத்திக்கொண்டுவந்து, வானையளாவிநிற்கின்ற பர்வ தங்களையும், திசைகள்முட்டத் தழைத்திருக்கின்ற மரங்களையும், தண்டம்- பிண்டிபாலம்-எழு-மழு முதலிய ஆயுதங்களையும் சோனைமாரியைப்போ ல அமோகமாய்த் தேவாந்தகன்மீது சொரிந்து அட்டகாசஞ்செய்தார் கள். அச்செய்கைக்கு ராசாதிராசன்நகைத்துப்,பினுகத்தையொத்த தன துவில்லில் அதிகதீக்ஷணியமுள்ள பாணங்களை அபாரமாகப்பூட்டிப் பிர யோகித்துத்,தன்மீது விறிவருகின்ற பர்வதங்கள்முதலானவைகளைத் து கள்படநந்தோடக் கண்டித்தும், துண்டித்தும், தண்டித்தும், சின்னபின்ன ப்படவெட்டியும், தட்டியும், இடித்தும், பொடித்தும், இவ்விதமாக இ மைப்போதில் சூரியன்முன் பனிபோல விலக்கி ஆர்ப்பரித்து, மீட்டும் ஆயிரங்கோடி நாராசங்களைச்செலுத்தி, அவர்களேறியிருந்த பாரித்ததே ர்களை வண்டில்-அச்சு-மச்சு-குத்துக்கால்-கொடிஞ்சை-கொடி-கொட்டமு தலிய உறுப்புக்கள் வெவ்வேறுகச் சிதைந்துருளும்படிக்குச்சாடி, வேக முள்ள குதிரைகளைக் கண்டதுண்டப்படுத்திச், சாரதிகளைக்கொன்று, அ வர்களைச் சூழ்ந்திருக்கின்ற பூதசேனைகண்மீது பின்னும் அளவற்ற கரே ாமாகியபாணங்களைப் பிரயோகித்தனன். அவ்வாளிகள் வெளிப்பட்டவுட ன் புகைந்து தீயையிறைத்துக், குறுகுறென்றும்ஆவ் ஆவென்றும் உரப்

பிக்கொண்டு, அதிவேகமாகவந்துபாய்ந்து, பூதசேனைகளுடைய மார்பை யுங் கண்டத்தையும் முகத்தையும் புயங்களையும் சல்லடைக் கண்களா கத்துளைத்தும், கண்டித்தும், பிளந்தும், வெட்டியும், ரணக்களமெங்கும் உதிரப்பிரவாகம் பெருக்கெடுத் தோடச்செய்தன. இவ்வாறு தங்கள் இ ரதங்களும் பூதசேனைகளும் சின்னபின்னப்பட்டுச் சிதறி மங்கிப்போன தை அட்டமாசத்திகளுள் அணிமாசத்திகண்டு மனநொந்து, மானமுங் கோபமும் மனதைவாட்ட வடவாமுகாக்கினியைப்போலக் கொதித்து அதிவேகத்தோடு தேவாந்தகனுடைய ரதத்திற்பாய்ந்து,தனது வாளாயு தத்தைக் கிறுகிறெனச்சுழற்றி அவன் புயத்தின்மீதுவீசினள். அப்போ தவ் வாளாயுதமானது அவன்புயத்தின்மீதுபட்டுத் துணிபட்டுப்போய து. உடனே தேவாந்தகனனவன் ஊழியனலையொப்பக்கொதித்து உருத் தெழுந்து, தானுமோர்வாளாயுதத்தையெடுத்து அணிமாசத்தியின்மீது வீசினன். அதனை அவள் தனதுகையினற்பரித்து,நாற்றிசைகளினும் வீர் வீரென்று வீசி, அவனுடைய சொர்ண்னமகுடத்தினிலுள்ள இரத்திநங் களெல்லாஞ் சிதறிச், சரீரமுழுவதும்வெட்டுண்டு, நெற்றியிற்கட்டப்பட் டிருக்கின்ற பட்டமுஞ் சின்னபின்னப்பட்டு நிலத்தில் உதிரும்படியாக ச்செய்தனள். உடனே தேவாந்தகனனவன் மண்டியெரிந்து,சர்ப்பத்தை ப்போலச்சீறி, வேறொருவாளாயுதத்தைக் கரத்திற்கொண்டு, அணிமாச த்தியினுடைய நாசியையறுக்கும்படி நேர்ந்தனன். அதனை யச்சத்தியா னவள் தனதுகையிலிருந்த வாளாயுதத்தினல் துணித்து மீண்டனள்.அ ப்போது தேவாந்தகனனவன் ரவுத்திராகாரமாகக்கோபித்து,அடிபேயே எங்கே ஓடுகின்றனை நில்லுநில்லு, யான்வைத்திருக்கின்ற படைகளிலெ ல்லாம் அற்பமாகிய வோர்வாளாயுதத்தை ஒடித்துவிட்டோமென்று கெ ர்வமடையாதே, முன்பு தேவர்களையெல்லாஞ் சின்னபின்னப்பட வாட் டிச் சயம்பெற்றிருக்கின்ற நான் இப்போதுனக்கும் உன்னுடன்வந்திருக் கின்ற இப்பெண்பிள்ளைகட்கும் அஞ்சுவேனென் றெண்ணவேண்டாம் இதோ உங்களனைவரையுமிமைப்போதில்வாட்டிவிண்குடியேற்றுகின்றே னென்று ஆக்கிரமித்து, மந்திரகிரியைப்போலவிளங்குந் தனதுவில்லையெ டுத்து நாட்டி, இருகுதைகளும் ஒன்றுபடவளைத்து நாணேற்றிக் குணத் தொனிசெய்தனன். அத்தொனியைக்கேட்ட மகிமாசத்தியானவள் மண் டியெரிந்து, அனலையொப்பச் சொலித்திருக்கு முண்டைக்கண்களையுடை ய அவுணனே-என் இதற்குள் பொரியைப்போலத் துள்ளுகின்றனை, சற் றும்பயமில்லாமல் எங்கண்முன்னம் இவ்விதவார்த்தைகளைப் பேசியபடி யால்உனக்கு முடிவுகாலஞ்சமீபித்தது,இனிப்பதலமாய்த்தப்பித்துக்கொ ள்ளக்கடவையெனச்சொல்லித், தனதுகரத்திலேந்தியிருந்த சக்கராயுதத் தைவிடுத்து, அவ்வவுணராசனுடைய கொடையினை நிலத்தில்வீழ்த்தின ள். உடனே அப்பாதகன் மானமேலிட்டவனுகித், தனதுதேரினின்று நி லத்திற்குதித்து, அதிககோபாவேசத்துடன் தண்டாயுதத்தைக் கரவேக மாகச்சுழற்றிக்கொண்டு,இடசாரி வலசாரியாகச்சுழன்று,தன்னையெதிர்த் துநிற்கின்ற எட்டுசெத்திகளையும் அப்புறமிப்புறம்போகவொட்டாமல்வளை த்துக்கொண்டு ஒவ்வொரு குறிவைத்துமோதியும்,அவர்கள் மோதுவதை ...டுத்தும், ஆட்டுக்கடாவினைப்போலச்சிறிது பின்னிடைந்தும், மீட்மெ

வர்களருகிற்சென்று, மார்பு-புயம்-துடை-முதலிய விடங்களில் கோடைப்பிடியைப்போலத் தாக்கியும், இவ்விதமாக ரணகளமெங்குஞ் சுழற்காற்றினைப்போல வட்டணைவந்து, எமனுங்கண்டுநடுங்கும்படிக்குத் தண்டாயுதப்போரினை வரிசைக்கிரமப்படி நடத்தி, அகோரயுத்தத்தினைச் செய்தனன். அவ்வியுத்தத்திற்கு அவ்வெண்வகைச்சத்திகளும் ஆற்றமாட்டாதவர்களாய்த் திகைத்து, அணிமாசத்தி பலஹீனப்பட்டு மயங்கிநின்றனள். மகிமாசத்தி காயங்களின் உபத்திரவத்தினால் வருந்தித்துக்கித்திருந்தனள். கரிமாசத்தி மனவூக்கமற்றுப் பிரமித்துநின்றனள். லகிமாசத்தி மிகவும்வருந்தி ஏங்கினள். பிராத்திசத்தி சரீரம் பதைபதைக்க நின்றனள். பிராகாமியசத்தி எழுந்திருக்கச்சத்தியற்றுக் கிடந்தனள். ஈசத்துவசத்தி துக்கசாகரத்திலழுந்தினள். வசித்துவசத்தி பலவிதமாகவைது பெருமூச்செறிந்தனள். இவ்வாறு சித்திதேவி படைத்தருளிய அட்டமாசத்திகள் மயங்கியும், துக்கித்தும், பிரமித்தும், ஏங்கியும், பதைபதைத்தும், சத்தியற்றும், சோபித்தும், பெருமூச்செறிந்தும், படாதபாடுகளைப்பட்டுப் பின்னிட்டதை விநாயகமூர்த்தியினுடைய வலதுபாகத்தி லிருக்கின்ற புத்திதேவியார்கண்டு, தீயெழ நகைத்து, ஒருபாதகன் நம்மவரையெல்லாம் இப்பாடுபடுத்துவதோவென்று மானம்வாதிக்கத் திருமேனிமுழுவதும் புழுங்கி, மயிர்க்கால்கடோறும் அனல்வீசக்கொதித்து, விநாயகமூர்த்தியினுடையதிருவடிகளிற் பணிந்தெழுந்தனர். உடனே அவளெதிரில் இரண்டுபர்வதங்களைப்போன்ற முலைகளும், மேகமண்டலத்தையளாவிய முகமும், ஆகாயத்தையளாவியமுடியும், அட்டதிசைகளினும் பரந்து சிவந்திருக்கின்ற சடைகளும், அழலெழச் சிவந்துகாட்டுகின்ற விழிகளும், பற்பல ஆயுதங்களையேந்திய நீண்டகரங்களும், அடியெடுத்துவைக்குந்தோறும் ஆதிசேடனை நெளியச்செய்யவல்ல பருத்தகால்களுமுடைய ஓர்சத்தியானவள் பவுத்தேவியென்னும்பெயரோடுண்டாகித், தன்னைப்படைத்தருளிய புத்திதேவியாரைப் பணிந்தெழுந்தனள். உடனே புத்திதேவியார் அச்சத்தியைப்பார்த்து, மகளே - இதோ நம்மெதிரில் வீரபராக்கிரமத்தோடுநிற்கின்ற தேவாந்தகனையும், அவனைக்கடல்போலப் புடைசூழ்ந்திருக்கின்ற சேனைகளையுஞ் சின்னபின்னமாக நாசஞ்செய்து, பின்னர் இங்ஙன மீளக்கடவையென்று ஆக்கியாபித்து விடைகொடுத்தனர். அச்சத்தியும் அதற்கிசைந்துசென்று, தேவாந்தகனுடைய சேனாசமுத்திரங்களில் சகலபிராணிகளையும் வாட்டவெழுந்த ஆலகாலவிடத்தினைப்போலப் பாய்ந்து, சிலரைச் சின்னபின்னப்படவாரிப் பூமியிலறைந்தும், சிலரை ஆகாயவெளியிற்சுழற்றிக்காற்றிற் சருகையொப்பவீசியும், சிலரை விண்டுபிரமனுலகங்களில் அலறிவிழச்செலுத்தியும், சிலரைச் சத்தசாகரங்களினும் பெரும்புறக்கடலினுந் தவளைகளைப்போல மிதக்கும்படிக்குக் கடாவியும், சிலரைத் தூக்கித் தெங்கின்கனியையொப்பச் சூரியனுடைய ரதத்தில் மோதியும், சிலரைத் திசைகடோறும் இறைத்தும், சிலரை அம்மானையையொப்பச் சுலவியெற்றியும், சிலரைச் சரீரநொறுங்கும்படியாக அண்டச்சுவரிற்றுரக்கியும், சிலரைப் பந்தைப்போலெறிந்தும், சிலரை யமலோகஞ்சேர்த்தும், சிலரைப் பொன்னாட்டிற்போக்கியும், சிலரை வடவைக்கனலுக் கிரையாக்கியும், சிலரை வாயுமண்டலத்திற் சக்கிராகார

மாகச்சுழலவீசியும், சிலரைத் தீவாந்தரங்களிலெறிந்தும், சிலரை உலக
மெங்கணும் பரப்பியும், சிலரை வலியபாதங்களால்தேய்த்துக்கொன்று
ம், சிலரை விரல்களினாலெற்றிமாய்த்தும், சிலரை மண்ணுடன் கலந்து
போக மிதித்தும், சிலரை உதைத்துருட்டிவதைத்தும், சிலரைப்பருத்த
கரங்களினாற் பிசைந்தூதியும், சிலரைப் பனைநாரினைப்போலக் கிழித்தெ
றிந்தும், சிலரைக் கற்கம்பத்தையொத்த புயங்களினாற் றாக்கி வாட்டியும்
சிலரைப் பாயும்வேகத்தினால் மாய்த்தும், சிலரை அதட்டிக்கொன்றும்
சிலரை வார்த்தையுரப்பிற் சிதைத்தும், சிலரை வெறித்த பார்வையால்
மடித்தும், சிலரை எழுவாயுதத்தினால் வதைத்தும், சிலரை மழுப்படை
யைக்கொண்டுமாய்த்தும், சிலரைக் கொழுவினாலடக்கியும், சிலரை முத்த
லைச்சூலத்தினாற் குத்திக் களத்திற்படுத்தியும், சிலரைத் தண்டாயுதத்தினா
ல் மோதிக்கொன்றும், சிலரை வில்லினாலடித்துத் துகள்படுத்தியும், இவ்
விதங்களாக ரணக்களமுழுவதுஞ் சூறைமாருதம்போலச் சுழன்றுசுழன்
று, தேவாந்தசனுடைய சேனைகளில் ஒருவரையுந் தப்பவிடாமல் நாசஞ்
செய்து, பின்னர் அவனையுமெடுத்துத், தனது பிலத்தையொத்த வாயிற்
போட்டு, மெல்ல மெல்ல உமிநீரைப்போல விழுங்கிக்கொண்டு, அவ்வி
டத்துநின்றுநீங்கிப் புத்திதேவியைநோக்கிச்சென்றனள். அப்போது யா
வராலும் அழியாவரம்பெற்றிருக்கின்ற தேவாந்தகனானவன் சூக்குமவடி
வோடு அவள்வயிற்றினின்றும் வாயின்வழியாக வெளிப்பட்டு, உய்ந்தோ
ம் உய்ந்தோமென்று ஓடித், தனதுதந்தையிருக்கின்ற காத்திரமென்னும்
பட்டணத்தையடைந்து இளைப்பாறினன். அச்சத்தியுந் தன்னையீன்ற புத்
திதேவியாரிடத்தில்வந்து பணிந்தெழுந்து, கரங்களைச் சிரமேற் கூப்பிநி
ன்று, அளவற்றதுதிகளைச்செய்து, அன்னையே-தேவரீரிட்டருளிய கட்ட
ளையின்படியே தேவாந்தகனைப் புடைசூழ்ந்திருந்தசேனைகளையெல்லாமா
ய்த்தேன், அவனையும் எனதுவாயிலிட்டு விழுங்கி வயிற்றில் வைத்திருந்
தேன், பின்னர் அவன் சூட்சுமவடிவங்கொண்டு வெளிப்பட்டு ஓடிப்போ
யினன், இனிமேலும் அவன்யுத்தஞ்செய்யவருவானாயின்தப்பாதுகொல்
லுகின்றேனென்றுசொல்லி, அங்ஙனேயிருந்தனள். முன்னர் காத்திரந
கரைநோக்கிச்சென்ற தேவாந்தகனானவன் அங்குவசித்திருக்கின்ற தனது
தந்தையையடைந்து பணிந்தெழுந்து, தனக்குநேர்ந்த அபசயங்களைக்கூ
றி, இனி யெனதுசத்துருவை இமைப்போதில் வெல்லத்தக்க வுபாயத்தி
னை எனக்கருளல்வேண்டுமென்று கேட்டுக்கொண்டனன். சகலமந்திரங்
களினும்வல்ல இரவுத்திரகேதுவானவன் தனதுகுமாரன்சொல்லியவனை
த்தையுங்கேட்டு, அவனுக்கு வெற்றியைத்தரவல்ல ஓர்மந்திரத்தைத் தன
க்குள் ஆராய்ந்து, அதனைச் சாஸ்திரவிதிப்படி அதனது பீசத்தோடும்
அனுட்டிக்கத்தக்கமுறைமையோடும்அவனுக்குபதேசித்து, மைந்தனே-ஒ
ருவேள்விமுன்னிலையில் இம்மகாமந்திரத்தைச் செபஞ்செய்து வருவை
யாயின் அவ்வேள்விக்குண்டத்தினின்று சகலமானபேரு நடுங்கும்படி
யாக வோர்குதிரையுண்டாகும், அக்குதிரையின்மீது நீயேறிக்கொண்டு
யுத்தஞ்செய்வையாயின் உடனே சயமடைவையென்றுசொல்லினன். அ
க்காரணத்தைச சூரியனானவன்கண்டு பயந்து மறைந்தவன்போலத் தன
துகிரணங்களனைத்தையும் ஒடுக்கிக்கொண்டுசென்று மேற்றிசைக்கடலி

ற் குளித்தனன். உடனே அவுணாதகர்களுடைய மனம்போல எங்கு
மிருள்மூடிக்கொண்டது. அன்றிரவிற்றானே தேவாந்தகனானவன் ஆறு
கோணமாக ஓர்ஓமகுண்டஞ்சமைத்து, அதில் சாத்திரமுறைமைப்படி தீ
யினைவளர்த்தி, அவ்வோமத்திற்கு வேண்டியபொருள்க ளனைத்தையும்
தனித்தனியே கிரமப்படி அதிற்சொரிந்து, தனதுதந்தையா லுபதேசிக்
கப்பெற்ற மந்திரத்தை அனந்தமுறை சணித்திருந்தனன். அப்போது அ
வ்வோமகுண்டத்தினின்று மைநாகபர்வதம்போலமகாபராக்கிரமத்தோ
டு ஓர்கறுத்தகுதிரையானது உலகமெல்லாநடுங்கும்படியாக உண்டாயது
அதனோடு அண்டங்களையெல்லாங் கைகளினாற்றட்டிப்பெயர்க்கவல்ல வ
லியும் வீரமுமுள்ள அளவற்றசூரர்கள் ஆயுதபாணியரா யுண்டானார்கள்
அவ்வற்புதத்தைத் தேவாந்தகன்பார்த்து, நாமுய்யத்தக்கமார்க்கம் இதை
விட வேறென்னவிருக்கின்றதென்று சந்தோஷித்து, அவ்வேள்வியைப்
பூரணாகுதிசெய்து நிறைவேற்றினன். உடனே தனது ஒற்றைவண்டிலைப்
பூண்டதேரில் ஏழு பச்சைக்குதிரைகளைப்பூட்டி நடத்துகின்ற சூரியனான
வன் அவ்வேள்விக்குண்டத்தினின்றும் உதித்த குதிரையைக் காணவரு
வான்போலக் கீழ்த்திசைக்கடலி லுதயமாயினன்.இப்பால் தேவாந்தகனா
னவன் நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு,அறுவகைச்சுவையோடு பிரா
மணபோசனஞ்செய்வித்து,சொர்க்கம்-மத்தியம்-பாதலம்-திசைகள்-தீபா
ந்தரங்கள்முதலியவிடங்களில் தான்வைத்திருந்த அளவற்ற மூலப்படை
களைஏககாலத்தில் வரவழைத்து,அவர்கட்கெல்லாம்-கரி-பரி-தேர்-படைக்
கலமுதலிய சிறப்புக்களைக்கொடுத்து,ஓமகுண்டத்தினின்றும்உதித்த குதி
ரையின்மீது தான் ஆரோகணித்து, அக்குதிரையோடுமுதித்த வீரர்களு
ம், மூலப்படைகளும், தன்னைப் புடைசூழ்ந்துவரும்படியாக அந்நகரத்தி
னின்றும் வெளிக்கொண்டு, முன்போலவே யுத்தகளத்தையடைந்தனன்
மகோற்கடமூர்த்தியும் முன்னையநாள்அத்தமனகாலத்தில் யுத்தகளத்தை
விட்டு, அரசனுடைய அரமனையிற் கண்படுத்திருந்து, அத்தினங்காலையில்
நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு யுத்தகளத்தை யடுத்தனர். ஓர்பால்
முன்னர் நராந்தகனுடைய யுத்தத்திலுண்டான குரூரனும்,ஓர்பால அணி
மாதி அட்டமாசத்திகளும், ஓர்பால் புத்திதேவியாலுண்டான பௌத்
தேவியும், ஓர்பால் சித்திதேவியா லுண்டான சேனைகளும், ஓர்பால் ம
கோற்கடமூர்த்தியா லுண்டான பூதவீரர்களும், தனித்தனியே அணி
வகுத்துநின்றார்கள். தேவாந்தகனுந் தனதுசேனைகளையெல்லாம் அணிவ
குத்துநின்றனன். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே-இவ்வாறு ரண
பேரி-சயபேரி-வெற்றிச்சங்கம்-தவுண்டை-மல்லரி-சல்லரி-ஆகுளி- சின்
னம்-எக்காளை-தம்பட்டைமுதலிய போர்ப்பறைகள் கோடைகால இடிக
ளுக்கொப்பாகக் கணகணென்றதிரத்தக்கதாகப்புறப்பட்டுவந்த இருவகை
ச்சேனைகளினும்உள்ள ரதகசதுரகபதாதிகளின்பெருக்கை என்னென்று
சொல்லுவேன், பொன்மயமாகிய வண்டில் அச்சு மச்சு முதலிய சிறப்பு
க்களைப்பெற்ற தேரணிகள் இவ்வளவெனக் கணிக்கப்படுவனவோ, சித்தி
ரமுகபடாம் பிரகாசிக்கப் பிறையைநிகர்த்துக்காட்டுங்கோடுகளில்வயிர
ப்பூண்களைத்தரித்து, இருப்புலக்கைகளைத் துதிக்கரங்களிலேந்தி, நீலகிரி
யையொத்த பாரித்ததிரோகங்களுடன் மேகங்களுமஞ்சியோட வீறிட்டுச்

செல்லும் யானைக்கூட்டங்களை ஒருவராலுங் கணிக்கப்படாது, இரத்தின வெண்டயங்கள் கால்களிற்சத்திக்க அலைகளைப்போலப்பாயும் வேகமுள்ள புரவிப்பந்திகள் அளவிடப்படுவனவோ, வில்-வாள்-வேல்- தண்டம்-சூலம்-சக்கரம்-தோமரம்-பிண்டிபாலம்-முசலம்-கப்பண்முதலிய பற்பல படைகளைத்தாங்கி, வீராவேசங்களுடன் வடவையும் ஆலகாலமும் பலவுருக்கொண்டெழுவதைப்போலக் கொக்கரித்துச் சீறிவரும் படைவீரர்களின் பெருக்கைப் பிரமனாலும் நிதானிக்கப்படாது, இத்தகைய சதுரங்கசேனைகளினும் பெருத்து உண்டாகின்ற பலவாத்தியங்களி னதிர்ச்சியும், ரதங்களோடுங் கெற்கரத்தொனியும், மதயானைகள் வீறிடுமொலியும் புரவிப்பந்திகளின் கனைப்பினோசையும், படைவீரர்களுடைய ஆரவாரங்களும் ஏகமாயோங்கிப், பிரளயகாலத்தைப்போல மண் விண் திசைகளெங்கணுஞ் செவிடுபடமுழங்கின. ஆகாயத்தையளாவிச்செல்லும் ரதபந்திகளின்மீதுநாட்டிய கொடிகளும், யானைகளின்மீது விளங்குஞ் சண்டாக்களும், படைவீரர்கள் தாங்கியிருக்கின்ற வெற்றித்துவசங்களும், வானவெல்லையைமூடிப் படபடென்றசைந்தன. இவ்வித ஆடம்பரங்களுடன் சமர்க்களமுழுவதும் ஊசிநாட்டவிடமில்லாமல் நிறைந்திருக்கின்ற இருதிறச்சேனைகளு மனவெழுச்சியுடன் போராக்குறித்து மேலிட்டு, இரதவீரர்களோடு இரதவீரர்கள் கைகலந்து, கெற்கரத்தொனிகளைச்செய்தோடும்பொன்வண்டில்களையுருட்டி, அச்சுக்களைமுறித்து, மச்சுகளைத்துகள்படுத்திக், குத்துக்கால்களை நுறுக்கிப், பல கொத்துமணிகள் கலகலவென்றசையக் கொடுங்கைகளைச்சிதைத்துச், சொர்ணகலசங்களை நிலத்திலுருட்டிச், சாரதிகளை மாய்த்துப், பூட்டியிருக்கின்ற புரவிப்பந்திகள் சிங்கநிரைகள்-புலிக்கூட்டங்கள்முதலியவைகளைக்களத்திற்கிடத்திச், சிறகற்றபர்வதங்களுக்கொப்பாக அளவற்ற இரதங்களை ரணக்களமுழுவதுங்குவித்தும், யானைவீரர்களோடு யானைவீரர்கள் மேலிட்டு, இருபுறங்களினுமாறியொலிக்கும் பருத்தமணிகளைக் கலகலவென்றசைத்தோடத் தாக்கி நவரத்தினமயமாகிய சித்திரமுகபடாம் போர்த்திருக்கு மத்தகத்தைச் சதைத்து, இருப்புலக்கைகளைப்பற்றிப் பனையையொத்தசையும் பருத்த துதிக்கரங்களைச் சர்ப்பங்களைப்போலச் சமர்பூமியெங்கணும்புரளத் தறித்து, நட்சத்திரராசிகளுக்கொப்பாகமுத்துக்கள் திசைதோறுமிறையும்படிக்குத் தவளநிறம்பெற்ற வலியதந்தங்களைப் பிளந்து, சிறியவிழிகளைக்கல்லியெறிந்து, மேகங்களுமஞ்ச வீறிடுந்தொனியைப்பெற்ற பருத்தகழுத்துக்களைவெட்டி, உரலைப்போன்ற பாரித்தகால்களைத் தகர்த்து, அசைவுபெற்றிருக்கும் வால்களைத்துண்டித்து, நீலகிரிக்கொப்பாகவிளங்குங் கரியவுடல்களை இருகூறுக்கிக், காளமேகங்கள் வழுவியதுக்கொப்பாக அளவற்றயானைகளை யுத்தகளமுழுவதும் வீறிட்டுவிழத்தள்ளியும், குதிரைவீரர்களோடு குதிரைவீரர்கள் மலைந்து, சத்துருக்கள் திடுக்கிடும்படிக்குப் பிடரிமயிர்க ளலையக் கனைக்குங் குரலோசையினைவாய்ந்த கழுத்துக்களைத்தறித்துக், கடிவாளங்களை நுறுக்கி, நவரத்தின கசிதமாகவிருக்கின்ற சீனிகளைச்சிதைத்துச், சாமரையையொத்த நீண்டவால்களைக் காற்றிற்பறக்கவெட்டியெறிந்து, வெண்டயங்கள் கல்லுகல்லுமெனக்கலிக்கப்பாயுங் கால்களைமுறித்துக், கடலினிடத்தெழும் அலைகள்மறிவதைப்போலப்போ

ர்க்களமெங்கணும் அளவற்றகுதிரைகளைமாய்த்தும், படைவீரர்களோடு படைவீரர்கள்முனைந்து, சிரங்களிற்கவித்திருக்கின்ற வயிரமுடிகளைச்சிதைத்து, வீரப்பட்டங்களைத் துகள்செய்து, முத்தாரங்களைத்தாங்கிக்கலகலென்னுமோசையெழவசனிக்குங் கழுத்துக்களை யரிந்து, கொடுமைகளைப்பேசும் வாய்களைப்பிளந்து, பற்களையுதிர்த்துத், தீயெழ உறுத்துப்பார்க்குங்கண்களைக்கல்லி, மணிகளிட் டிழைத்திருக்கும் வாகுவலயங்களைப்பொடிபடுத்திப்,பர்வதாகிருதியாக ஓங்கித் திரண்டுருண்டிருக்கும் புயங்களைச்சரித்து, வயிரகவசங்களைத் துகள்செய்து, விசாலமாகியமார்பைப்பிளந்து, விற்களையும் பாணங்களையுங்கொண்டிருக்குங் கரங்களைக் கண்டித்து, வீரவெண்டயங்களை நுறுக்கி,ரிஷபத்தினைப்போலக் கெம்பீரமாகநடக்குங்கால்களைத்துண்டித்து, முதுகுகளில் இறுக்கியிருக்கும் அம்புபெய்குதைகளை அறுத்தெறிந்து, அவைகளிலடங்கியிருந்த பலபடைகளைத்துகள்படுத்திச், சண்டமாருதத்தின்மோதலிற்பட்ட மரங்களைப்போலயுத்தகளமுழுவது மளவற்றபதாதிவீரர்களைச் சின்னபின்னப்பட வாட்டியும் இவ்வாறு வீராதிவீரர்களாய் புசபலபராக்கிரமசாலிகளா யிராநின்ற இருதிறப்படைகளினுமுள்ள நால்வகைச்சேனைகளுங் கலந்து போராடுகையில், அவுணசேனைகள் மனவெழுச்சியுடன் மேலிட்டிருப்பதைத் தேவசேனைகள்கண்டு, வடவாமுகாக்கினியைப்போலச் சீறி, இப்பாதகர்களுடையவலியை அடக்கவேண்டுமென்று கெக்கலிகொட்டி, மரங்கள்-பர்வதங்கள் ஏனையபடைகள் முதலானவைகளைக்கொண்டு தாக்கியபோது அவுணசேனைகளுந் தீரமாகிக்கொதித்து, மின்னலைப்போலப் பளபளத்து விளங்கும் வாளாயுதங்களைவீசி வெட்டியும், கூரியவேல்களினாற்குத்தியும், பருத்ததண்டாயுதங்களைக் கரகரெனச்சுழற்றி மோதியும், தங்கத்தகடுகள் பதிந்திருக்கின்ற நீண்டவிற்களைவளைத்து நாணேற்றிக் குணத்தொனிகொண்டு விடுத்துவைபலிட்டிருக்கின்ற கொடிய பாணவருஷங்களைப்பொழிந்தும், கப்பணம்-கழுமுள்- பிண்டிபாலம்-சக்கரம்-சூலமுதலிய படைகளை ஒன்றனந்தமாகக்கடாவியும், வாட்டுவதாயினர். அக்கொடுமைக்குத் தேவப்படைகள் சிறிதுமஞ்சாது திடசித்தராய்வடவையைப்போற்பொங்கி, வானத்தையளாவித் திசைகளைமூடித்தழைத்திருக்கின்ற மராமரங்களைச் சக்கிராகாரமாகச்சுழற்றிக் கைகொண்டமட்டு மோதியும், பருத்தமலைகளைச் செண்டையொப்பக்கடாவியும், இருப்புலக்கைகளினாற் சாடியும், தண்டாயுதங்களைக்கொண்டு மோதியும், வளைதடிகளை வீசியும்,அளவற்றயுத்தங்களைச்செய்தனர். இவ்விதமாக சயசாலிகளாகிய தேவசேனைகளும் அவுணசேனைகளும் பின்னிடையாமல் ஒருவரையொருவர்வெல்லவேண்டுமென்கின்ற ஆவேசத்தினால் கைகலந்துபோராடுமுன்னிலையில், இருதிறச்சேனைகளினும் அளவற்றபேர் சின்னபின்னப்பட்டுரணக்களமெங்கணு மலைகளைப்போலவிழுந்து குவிந்தார்கள். அப்போது அச்சமர்க்களத்திலுண்டானஉதிரவெள்ளமானது ததும்பிக்கொண்டோடிக் கடலிற்பாய்ந்து, அக்கடலினுடைய கருநீரையெல்லாஞ் செந்நீராக்கியது. அப்பிரவாகத்தில் காக்கை-கழுகு-பருந்து - முதலியவைகள்முழுகிக் களித்துவானத்தெழுந்து சிறகுகளையுலர்த்தி வட்டமிட்டன. நாய்-நரி-முதலியமிருகங்கள் மாமிசங்களையும் மூளைகளையும்பிடுங்கி வாரிவாரித்தின்று ஊன

மிட்டன. பலகோடிகவந்தங்கள் நாடகளைப்போல நடித்தன. பூதபைசாசங்கள் காளிக்கூட்டங்கள் பசிதணிந்து கரங்களைக்கோர்த்துக்கொண்டு பம்பைசுற்றியும், வெறியாடலைச்செய்தும், தித்தோமெனநடித்தும், படைவீரர்களுடையபுகழைப்பாடிக் கொண்டாடின. இவ்வாறு யுத்தகளமானது பொலிவுறும்படி, இருதிறச்சேனைகளும் பின்னிடையாமல் அமோகமாகியபோராவிளைத்துவரும்போது, முன்னர் மகோற்கடமூர்த்தியாலுண்டான குரூரனனவன் தனதுசேனைகளில் அளவற்றபேர்மாண்டிருப்பதைக்கண்டு, தனதுதேரை மனோவேகத்தினும் விரைவாகத் துரத்திக்கொண்டுவந்து, தேவாந்தகனெதிரில்நிறுத்தி, அடா ராக்ஷசப்பயலே-நேற்றையதினம் ஓர்பெண்பூதஞ்செய்தபோரினுக்கஞ்சிப் பின்னிட்டோடிப்போனாய் இத்தினம் மகா பராக்கிரமசாலியா யுத்தகளத்தில்வந்து சண்டைகொடுக்கநேர்ந்தனை, இத்தினம் நீ எவ்விதத்திலும் ஊரைப்போய்ச்சேருவோமென்னும் எண்ணத்தை விட்டுவிடக்கடவை, இதோ சற்றுநேரத்தில் உனதுயிரை யமலோகத்திற்குடியேற்றுவன், பயந்தோடினும் விடமாட்டேனென்று அதிககோபங்கொண்டவனாய்த், தன்கரத்தில் மேருகிரியைப்போல விளங்கும் வில்லைநிறுத்தி, நாரியைப்பிகிந்து, ஒருதரம் டங்காரவோசையைக்காட்டினன். அவ்வோசை யதிர்ச்சியினால் அண்டங்களனைத்தும் அல்லோலகல்லோலப்பட்டு, அவற்றுட்பட்டபிராணிகள் பொறிகலங்கித் திப்பிரமைகொண்டு நின்றநின்றவிடங்களிற் சோர்ந்துகிடந்தன. இவ்விதமாகக் குரூரனனவன் பலவசைகளைக்கூறி நாணொலியைக்காட்டியமாத்திரத்தில், தேவாந்தகனானவன் கோபமிகுதியினால் வடவையைப்போலச்சீறி, அடா பூதப்பயலே-சற்றும்பயமில்லாமல் இவ்வார்த்தைகளை என்முன்னம்பேசினை, உனக்கும் உன்னைச்சேர்ந்தவர்கட்கும் முடிவுகாலஞ் சமீபித்தது, பதலமாயத் தப்பித்துக்கொள்ளக்கடவையெனச் சொல்லித், தனதுகரத்தில் மந்தரகிரியைப்போலவிளங்கும் பாரித்தவில்லைநாட்டி, நாணேறிட்டுக் குணத்தொனிகாட்டினன். அத்தொனியினால் அந்தரவாசிகளும் மற்றையருங் கிகிற்பட்டு மிகவும்வாடிமயங்கினர். இப்பால் குரூரனனவன் தேவாந்தகனுடைய செய்கைக்குமெச்சிச் சிரகம்பிதஞ்செய்தவனாய்த், தனதுகரத்திற்பிடித்த வில்லென்னு மேகமானது கணைகளென்னு மழைத்தாவலைப்பெய்ததுபோல அதிக குரூரங்களையும் கொடுமைகளையும் பெற்றிருக்கின்ற வயிரவாளிகளை அமோகமாகச்செலுத்தி ஆர்ப்பரித்தனன். அவைகள் வெளிப்பட்டவுடன் புகைந்தெரிந்து, அனலைவீசி எங்கும்பரந்து அதிவேகமாகவரும்போது, தேவாந்தகன் தன்வில்லில் அளவற்றபாணங்களைப்பூட்டிப், பெரும்புறக்கடல்மீது சோனைமாரிபெய்ததற்கொப்பாகப் பிரயோகித்துச சிங்கநாதஞ்செய்தனன். அப்பாணங்கள் வெளிப்பட்டமாத்திரத்தில் ஒன்றனந்தமாகப்பெருகித், தீயையும் புகைப்படலங்களையும்வீசிச், சிடசிடென்றுங் குறுகுறென்றும், இரைச்சலிட்டுக்கொண்டு மேலிட்டுச், சர்ப்பங்களைப்போலச்சீறி உறுத்துப்பாய்ந்து, பூமண்டலம்-வானவெல்லை-அஷ்டதிசைகள் - மற்றைப் புவனங்களெங்கணுநெருங்கி ஆரவாரித்திருக்கின்றகணக்கிறந்த பூதவெள்ளங்களையும், தேரணிகளையும், யானைக்கூட்டங்களையும், புரவிப்பெருக்கையும் வளைந்துகொண்டு தாக்குகின்றபோது, தேவசேனைகளினுடைய தோரணிகளினது

உருளை-அச்சு-மச்சு-குத்துக்கால்-கொடுங்கைமுதலானவைகள் வெவ்வேறாகப்பின்னப்பட்டுக் குவிந்தும், மதயானைக்கூட்டங்கள் பனையைப்போன்றசையுந் துதிக்கைவேறு-பிறையையொத்த தந்தங்கள்வேறு-மத்தளத்தைநிகர்த்த மத்தகம்வேறு - உரலினைப்பொருவுங் கால்வேறாகக் கண்டிக்கப்பட்டு மலைகளாகச்சேர்ந்தும், குதிரைப்பந்திகள் சவரியினைப்போன்றசையும் பிடரிமயிரினைவாய்ந்த கழுத்துகள் துணிபட்டுக், கடிவாளம் பொடிபட்டு, அலைகளைப்போற்றாவுங்கால்க ளறுபட்டு,சாமரையைப்போன்றசையும் வால்கள்தெறிபட்டு, ரணக்களமெங்கு நிறைந்தும், மகாபராக்கிரமசாலிகளாய்ப் பலபடைகளையேந்திச்சண்டைசெய்கின்றபதாதிவீரர்கள், நவரத்நகிரீடங்களைத்தாங்கியசிரங்கள் வெட்டுண்டு,வரைகளையொத்ததோள்கள்சரிந்து, மார்புபிளந்து, வயிறுபீறுண்டு, குடல்களிறைந்து கால்களற்று, ரணக்களமுழுவதுங் குன்றுகளைப்போலக்குவிந்தும்,இவ்விதமாகச் சூறாவளிக்காற்றினிடத் தகப்பட்ட மேகங்களைப்போலக் குரூரனுடைய நால்வகைசசேனைகளும் சுராந்தகனேவியசரங்களினாற் சின்னபின்னப்பட்டுமாளும்போது,சித்திதேவியாலுண்டான அணிமாதிஅட்டமாசத்திகளும் இளைத்தவர்களாகி, புத்திதேவிபடைத்த பவுத்ததேவியும் அக்கொடுமைக்கஞ்சி வருந்தினள். மகோற்கடமூர்த்தியாலுண்டானபூதகணங்களெல்லாம் பயந்து திக்கொலொருவரா யோட்டத்தலைப்பட்டனர் இவ்வாறு தேவசேனைகளையெல்லாம் அதப்படுத்திய தேவாந்தகன் அதிகவுற்சாகத்துடன் ரணக்களமெங்கும் உலவிவருவதையும், தனதுசேனைகள பின்னிடுவதையுங் குரூரன்கண்டு, நீங்கள் ஒன்றற்குமஞ்சவேண்டுவதில்லையெனக் கையமர்த்திநிறுத்தித், தனதுதேரை அவுணராசனெதிரிற்றூரத்திவந்து, காளகூடத்தைப்போல மண்டியெரிந்து, கொவ்வைக்கனியையொப்ப விழிகள்சிவந்து, தீப்பொறிகள் குபீல்குபீலெனக் கொட்டு உறுத்துப்பார்த்து, பற்களை நெறநெறெனக்கடித்து, உதட்டையதுக்கி, மயிர்க்கால்கடோறும் அனலெழும்படியாகச் சர்ப்பத்தைப்போலச்சீறி,நல்லகாரியம் சற்றுமெண்ணிக்கையில்லாமல் நம்மவரைவருத்திய உன்னுணவத்தை இமைப்போதிலடக்கி வாட்டுகின்றேனெனக்கோபித்துச்,சொர்க்கம் மத்தியம் பாதலம் கடல்கள் மலைகள் திசைகள் தீவாந்தரங்கள் முதலானவைகளெல்லாங்கலக்கித் திப்பிரமைகொள்ளும்படியாகத்தனதுவில்லில் ஊழியிற்பெய்யு மேகத்தைப்போல அளவற்றபாணங்களை ஒருதொடையிற்பூட்டிப் பிரயோகித்துச், சத்தசாகரவெல்லையினும் அவைகளிடையிற்பட்டதீவுகளெங்கணு நிறைந்திருக்கின்ற கணக்கிறந்தஅவுணவெள்ளங்களையும், புரவிப்பெருக்கையும், யானைக்கூட்டங்களையும், தோணிகளையுந் தும்சப்படுத்தினன். அக்காலத்தில் அவுணராசன் வடவையைப்போற்சீறித், தனதுவில்லில் அளவற்றகொடியபாணங்களைப் பிரயோகித்துச் சிங்கநாதஞ்செய்தனன். அவைகள் வெளிப்பட்டவுடன் புகைந்தெரிந்து, அனற்பொறிகளையிறைத்து, அதிவேகங்கொண்டுவரக், குரூரனானவன் தனதுவில்லில் அளவற்றதீக்ஷணியமுள்ள சரங்களைப்பூட்டிப் பிரயோகித்துச்,சுராந்தகனேவியபாணங்களின் வீறுப்பையடக்கி,மற்றொருசரத்தினால் அவன்கையிலிருந்தவில்லைப் பொடிபடுத்தினன். உடனே தேவாந்தகன் மற்றொருவில்லையெடுத்து அதில் கணக்கிறந்தபாணங்களைக்கு

ரூரனுடைய உடல்முழுவதுந் தைக்கும்படியாகப் பிரயோகித்தான். அம்மாத்திரத்தில் குரூரனானவன் கோபநகைசெய்து, நல்லது உனதுவீரும்பை இதோ அழிக்கின்றேனென்றுசொல்லித், தீயினுங் கொடுமைபெற்றிருக்கின்ற பல பாணங்களினால் தன்மேல்வருகின்றகணைகளைத் துகள்படுத்தி, வடவைத்தீயும் ஆலகாலமுமஞ்சும்படியான வேறே மூன்றுபாணங்களினால் அப்பாதகனுடைய கழுத்தணிகளையும் இரத்தின கிரீடத்தையும் செவிகளிலணிந்த குண்டலங்களையும் பொடிபடுத்தினன். இப்பால்தேவாந்தகனானவன் அளவற்றதவங்களினாற் பலதேவர்களிடத்தினின்றும் பெற்றிருந்த மணிமுடிமுதலானவைகள் சின்னபின்னப்பட்டுப் போகலும், சீவரத்நத்தையிழந்த நாகம்போல மதிமயங்கி, மானமுங் கோபமுந் மனதைவாட்ட, ஞெரேலென்று தனதுவில்லை இருகுதைகளும் ஒன்றுபடவளைத்து, இனி இவனைத் தெய்வப்படைகளினால் வெல்லுவேனென்னத்திர்மானித்துத், திரிலோகங்களுந் திகைத்துவாடும்படிக்கு வியாக்கிராஸ்திரத்தையெடுத்துப்பூட்டித், தனதுமனத்தினால் சோடசவுபசாரங்களையுஞ்செய்து பிரயோகித்தனன். அவ்வத்திரம் வெளிப்பட்ட மாத்திரத்தில் வலியகால்களையும் வச்சிரத்தை யொத்துக்காட்டும் நீண்டபற்களையும் பெற்றிருக்கின்ற பல்லாயிரங்கோடி வியாக்கிரங்களி னுருக்கொண்டு, உலகங்களெங்குநிறைந்து, பெருமூச்சுக்களைவிட்டு, அண்டகோளகையு மதிர்ந்துகிடுகிடாய்க்கும்படிக்குக் கர்ச்சித்துப், பிறையைப்போல வளைந்திருக்குங் கூரியகரங்களினால் அளவற்றபூதர்களை வாரிவாரி வயிற்றைப்பீறி அதாஅதப்படுத்துவதைக் குரூரன்கண்டு, விரைவில் தனதுவில்லில் கஜாஸ்திரத்தைப்பூட்டிப் பிரயோகித்தனன். அவ்வஸ்திரம் ஒன்று அளவற்ற கஜங்களாய் மதங்களைப்பெருக்கி வீறிட்டுத், துதிக்கரங்களில் இருப்புலக்கைகளைக்கொண்டு சுழற்றிப், பிலத்துவாரங்களைநிகர்த்த வாய்களைத்திறந்து, கருமானுலையில் விளக்குந் துருத்திக்கொப்பாக விஷச்சுவாலை பெருகப் புஸ் புஸ் என்றுபெருமூச்சுக்களைவிட்டு, மைநாகபர்வதங்கள் அளவற்ற உருவினைக்கொண்டுவந்ததைப்போல மேலிட்டு, ஆலகாலவிஷமுமஞ்சச் சீறி, அஷ்டதிசைகளைத்தாங்கும் அயிராவதமுதலிய யானைகளைப் பிடித்துத்தள்ளிப், பூமிக்கச்சாணியாகப் பாதலவுளையிற்போய் வான்வரையிலுயர்ந்திராநின்ற மகமேருவைக் குலுங்கத்தாக்கிக் கால்களினாற்பெயர்த்து, விழிகளில் வடவாமுகாக்கினியைவீசிச், செவிகளினசைவினால் சண்டமாருதத்தைப்பெருக்கிப், பிலத்திலிருக்கின்ற சேடனாதி நாகராசர்கள் திகைத்தேங்கும்படிக்குப் பூமியைக்கால்களினாற்றுக்கி, அண்டகோளகை நெக்குவிட் டதிரும்படியாகப் பிறையையொத்த கோடுகளினால்முட்டி, சொர்க்க மத்திய பாதலமெங்கு நடுநடுங்கக்கூந்தலிட்டு, அவுணபாதகனேவிய அத்திரத்தின்வலியையொடுக்கிப், பின்னர் அவனையுங்கொல்லுவதாக ஆக்கிரமித்துச்சென்றது. அப்போது தேவாந்தகனானவன் காலாந்தகனைப்போலக்கொதித்துத், தான் அரிதிற்பெற்றிருந்த சிம்மாஸ்திரத்தைச் சோடசவுபசாரங்களுடன் வழிபட்டுப் பிரயோகித்தனன். அவ்வஸ்திரமானது வெளிப்பட்டவுடன் அளவற்ற நாரசிங்க வடிவங்களைக்கொண்டு நெருங்கி நீண்டிருக்குஞ் சிவந்தமயிர்களைச்சிலிர்த்து, வடவையைப்போலச்சீறிக் கொக்கரித்து, விழிகளில் அனற்சமூகங்களைவீசி, நாசிகளிற்பிர

சண்டமாருதத்தைப்பெருக்கி, உலகங்களனைத்துந் திடுக்கிட்டுநடுங்கும்படிக்கு ஆற்பாட்டங்களைச் செய்துகொண்டுசென்று, குரூரன்விட்ட கஜாஸ்திரத்தைத் துகள்படுத்திப், பின்னர் அவனையும் பாய்ந்துகொல்லுமாறு சீறிச்சென்றது. அப்போது குரூரனானவன் நல்லகாரியம் நல்லகாரியமென்றுநகைத்துச், சரபாஸ்திரத்தை விதிப்படி பூசித்துப் பிரயோகித்தனன். அத்திவ்வியாஸ்திரம் வானத்தெழுந்துசீறிக், கணக்கிறந்த சரபசார்த்தூல்வுருக்களைக்காட்டி,வடவைக்கனலும் ஆலகாலமுநடுங்கி அஞ்சக்கொதித்து, அதிவேகத்துடன்சென்று, அவுணராசன் சிம்மாஸ்திரத்தை நாசமாக்கி,அங்குள்ள அவுணசேனைகளையெல்லாம் அதப்படுத்திக்கொண் டிருந்தது. அக்கொடுமையைத் தேவாந்தகன்கண்டு, தான்செலுத்திய தெய்வப்படைகளனைத்தும்பிரயோசனப்படாமற்பின்னிட்டதையும், பகைவன்படை விறியிருப்பதையும் நிதானித்து, இப்படை முற்காலத்தில் விண்டுவானவன் நாரசிங்கவடிவைக்கொண்டு உலகங்கள்தத்தளிக்கச் சீறிய கொடுமையையடக்கப் பரமசிவ கடாக்ஷத்தினால் வீரபத்திரக்கடவுள் திருவவதாரத்தினைக்கொண்ட தெய்வப்படையாதலால் இதனை வேறொன்றினால்வெல்லுவதரிது,நாமும் அந்தச்சிறந்தபடையைக்கொண்டே தடைசெய்யவேண்டுமெனயோசித்துத், தானும் சரபாஸ்திரத்தை யெடுத்து சாத்திரவிதிப்படி பூசித்துப் பிரயோகித்தனன். அப்படையும் முன்னர் குரூரன்விட்டபடையைப்போல அளவற்ற மகிமைகளைக்காட்டி யெழுந்து, அவுணசேனைகளெல்லாஞ் சின்னபின்னப்பட வாட்டிக்கொண்டிருக்கின்ற சரபாஸ்திரத்துட னெதிர்த்துச், சராசரப்பிரபஞ்சங்க ளனைத்தும் அல்லோலகல்லோலப்பட்டு வாடியொடுங்கும்படிக்கு ஒன்றுக்கொன்று பின்னிடையாமல் அகோரயுத்தங்களைச் செய்துகொண்டிருக்கும்போது பிரமன்முதலியதேவர்கள்-மாநுடர்-பாதலவாசிகள் முதலாயினோர் கரங்களைக்கூப்பிப், பத்திவிசுவாசங்களுடன் துதித்து, ஓ படைகளுக்கரசாகவிருக்கின்ற சரபாஸ்திரங்களே-எறும்புமுதல் யானையீறாகச்சொல்லாநின்ற சகலபிராணிகளும்வாடிப் பின்னப்படவொட்டாமல் இரட்சிக்கவேண்டும், உங்களால் நேர்ந்திருக்கின்ற வருத்தங்களுக்குத் தாபரிக்கமாட்டாமல் சகலபிராணிகளும் சோருகின்றன, இதனைத்திருவுளத்திற்கொண்டு கிருபையுற்றுப் பாதுகாக்கவேண்டுமென்று பலவிதங்களிற் போற்றுவதை அவ்வஸ்திரங்களறிந்து, மன்னுயிர்களுக்கிரங்கி,உடனே தங்கள்செய்கைகளை யுள்ளடக்கிக்கொண்டு கோபந்தணிந்து, தங்களை விடுத்தவர்களிடத்திற்போய்ச்சேர்ந்தன. பின்னர் குரூரனானவன் அவற்றின் செய்கைகளைக் கண்டு அதிசயித்து, அரையிலிருக்கும் உறையிற் சொருகியிருந்த வாளாயுதத்தைக் கரத்திலேந்தி, ஞெரேலென்று தேரைவிட்டு நிலத்திற்பாய்ந்தனன். அம்மாத்திரத்தில் தேவாந்தகனானவன் மனந்தளர்ந்து, ஏதோஇவன் திடீலென்று ஓரெண்ணங்கொண்டு நம்மோடு வாட்போர்செய்யவருகிறான், இனி இவனை வாட்போரினும் வெல்லுவதரிது, இனியென்ன செய்வோமென்று யோசித்துத்,தனதுமனத்தில் ஓர்துணிவைக்கொண்டு ஆகாயத்தில் உருத்தோற்றாதபடி மறைந்து, பூர்வத்தில் தனதுதவமுயற்சியினாற் பெற்றுவைத்திருந்த மோகனாஸ்திரத்தைக் கரத்திலெடுத்துத், தூப தீப நைவேத்தியவிதிகளை மானதபூசையில்நிரப்பி, மந்திரத்தை யுச்ச

னீத்து, ஓ தேவாஸ்திரமே-நீ இந்நிமிஷத்திற் றுரிதமாகச்சென்று, நமக்குச்சென்மவயிரிகளாகத்தோன்றி வருத்துகின்ற தேவசேனைகள் பூதவீரர்கள் முதலாயினோருடைய அறிவைப் போக்கிவாட்டித் திரும்பக்கடவையென்று போற்றிச்செலுத்திச், குரூரன்முன்னேஓர் கந்தருவாஸ்திரத்தையெடுத்துவிட்டனன். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே- அப்பாதகன் முதலியேவிய மோகனப்படையோ-எத்தகைய வீரபராக்கிரமசாலிகளின்மீதிற் செலுத்தப்படுமாயினும் நெருங்கியவுடன் அவர்கள் பஞ்சேந்திரியங்களைப்பேதித்து, அறிவையழித்துப், பிரேதத்தைப்போலச்சோபித்துக்கிடக்கச் செய்யவல்லது, அத்தகைய சிறப்புள்ள வெற்றிப்படையானது வெளிப்பட்டமாத்திரத்தில்உக்கிராகாரமாகக்கோபித்துக், கிரணங்களைப்பரப்பி, உலகங்களை மகிழச்செய்துலவுஞ் சூரியனொளியையடக்கிக்காடாந்தகாரமாகிய இருளைப்பெருக்கிப், பூமியிலிருக்கின்றபல்லுயிர்களுங்நடுங்கித் தெளிவில்லாமல் அந்தகனைப்போல மயங்கி வாடித் தத்தளிக்கத்தக்கதாகச் சிறி நகைத்துக்கொண்டுவர, அதன்மகிமைகளையும் வலியையும் தேவசேனைகளும் பூதப்படைகளுங் கண்டவுடன் துக்கசாகரத்திலமுழ்ந்திப், பயப்பிராந்திகொண்டு, மனந்திடுக்கிட்டுவாடி மூர்ச்சித்தனர். அவர்களுக்குத் தலைவராகவிருந்தவீரர்களும் பித்தனைப்போல மதிமயங்கித், தேனைவிட்டு நிலத்தில்வீழ்ந்துசோர்ந்தனர். அணிமாதி அட்டமாசத்திகளுந் தங்கள்மீது வீறிவருகின்ற பகைவன்பாணத்தைத் தடுக்க வகையற்றவர்களாய்க் கரத்திற்பற்றியிருந்த விற்களையும் பாணங்களையுஞ் சோரவிட்டுக் களைத்துவிழுந்தனர். குரூரனனவன் இந்தப்படையை எந்தவுபாயத்தினல் வெல்லலாகுமென்று யோசித்து, யாதுந்தோன்றமலிருந்தனன். அதற்குள் தேவாந்தகன் இரண்டாவதேவிய கந்தருவாஸ்திரமானது, அளவற்ற கந்தருவர்களுடைய வடிவங்களைக்கொண்டு, சிலது பேரியாழ்-சகோடயாழ்-மகரயாழ்-செங்கோட்டியாழென்னும் பலயாழ்களைவாசித்துக்கொண்டும், சிலது-தோற்கருவி-துளைக்கருவி- நரப்புக்கருவி-கஞ்சக்கருவி-மிடற்றுக்கருவியென்னும் பலவாத்தியங்களைச் செய்துகொண்டும், சிலது-பயிரவி- தேவக்கிரியை-மேகவிரஞ்சி-குறிஞ்சி-பூபாளமுதலிய பலசங்கீதங்களைப்பாடிக்கொண்டும், சிலது-பாவம்-அராகம்-தாளம் என்னு மூன்றுமடங்கியபரதசாத்திரவிதிப்படி-அங்கம்-உபாங்கம்- பிரத்தியாங்கம்-அலர்முகராகம்-கரப்பிரசாரம்-சிரகரகருமம்-கரகேத்திரம்-கரகரணம்-தானகம்-சுத்தசாரி-தேசிசாரி-நியாயம்-விருத்தி..பிரவிசாரம்-பூமண்டலம்-ஆகாயமண்டலம்-சுத்தக்கரணம்-உற்புலிதகரணம்-அங்காரம்-இரேசிதம் ஆகிய இருபதுபேதமும், இவற்றுள் எண்வகை நிருத்தமும் இரோகாதி அங்கம் பதினாறும், நால்வகைக் கரணமும், இருவகைக் கரமும், காலவகை- புரிகை முதலாகிய பதினாறும், மடிப்புவகை இருபத்தெட்டும், பூசாரிகள் பதினாறும், முப்பத்திரண்டு தேசிசாரிகளும், முப்பத்தைந்து ககனசாரிகளும், பதினாறு பாடபேதங்களும், பத்தொன்பது பட்கபேதங்களும், இருபத்தெட்டு பாடவகைகளும், பஞ்சதாளமும், சத்ததாளமும், நவதாளமும், தசதாளப்பிரமாணமும், சீதக்கட்டளை இருபத்தெட்டும், சரளைமுதலியகட்டளை முப்பத்தைந்தும், பிறவும் நன்றாகவறிந்து நடனமாடிக்கொண்டும், இவ்வாறு ஒவ்வொன்று ஓ

வ்வொரு விநோதங்களைக்கொண்டு, குரூரனெதிரிற்சென்று ஆரவாரித்திருந்தன. அப்போது குரூரனானவன் வாடபோருக்கஞ்சி மறைந்துபோன தேவாந்தகன் மீட்டும்வருவானாயின் அவன்வலியையடக்கி வாட்டுவோமென்றுஎண்ணிக், கந்தருவர்கள்செய்யும் ஆடல்களைக் கண்களிக்கப்பார்த்தும், பாடுகின்றசங்கீதங்களைச் செவிகுளிரக்கேட்டும், வேடிக்கையாய்ஆனந்தமுற்றிருந்தனன். அக்காரணத்தை ஆகாயத்தில் மறைந்திருக்கின்ற தேவாந்தகன்கண்டு, நமக்குச் சயகாலம் உண்டாயிற்றென்று களித்து, விரைவில் யாவருமறியாதபடி யுத்தகளத்திற்குவந்து, வேதாகமவிதிப்படி ஓர் திரிகோணகுண்டத்தை யமைத்து, அதில்ஓமாக்கினியை மந்திரபூர்வகமாகவுண்டாக்கி, ஆயிரம் அவுணர்களைப்பெலியிட்டு, அவர்கள்மாமிசங்களையும் உதிரங்களையும் ஆயிரமாயிரங்குடங்களில் நிரப்பி ஆகுதிகொடுத்துப், பஞ்சமுத்திரையென்னு மாதனத்திலிருந்து, அதிக வுக்கிரமாகவோர்யாகஞ்செய்து முடித்தனன். அப்போதந்த யாககுண்டத்தினின்றும் ஓர் பெரிய பெண்பூதமானது உலகமெல்லாநடுங்கும்படி ஆகாயத்தையளாவிய பெரியவுருவத்தோடு, வட்டமாய்ப்பருத்திருக்கின்ற கண்களும் கோரைப்பற்களும், மலைகளுக்குநிகரான ஸ்தன்னியங்களும், நீண்டமயிர்களும், பிலத்துவாரங்களையொத்த பெரியவாயும், வடவாமுகாக்கினியை வீசவல்ல நெட்டுயிர்ப்பும்,ஆலகாலமு நடுங்கும்படியான கோபமுங்கொண்டு உற்பத்தியாகித், தன்னைவருவித்ததேவாந்தகனைப்பார்த்து,ஓ ராசாதி ராசனே-என்னைப் பசியானது ஊழிக்காலத்தெழும்வடவையைப்போல வாட்டுகின்றது, அப்பசி என்னைவிட்டு நீங்கத்தக்கமார்க்கத்தைவிரைவில்யோசித்து முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. அதற்குத் தேவாந்தகன் சந்தோஷித்து, மகோற்கடமூர்த்தியினுடைய சேனையைக் காட்டி, ஓ பாரிடமே-இதோநிற்கின்ற சேனைகளையெல்லாம் உனதுபசிதீரத் தின்னக்கடவையென்று சொல்லினன். அப்பாதகன் அச்சொல்லைமுடிக்குமுன்னம் அப்பூதமானது மோகனாஸ்திரத்தினால் மயங்கி,மூர்ச்சையாகிக்கிடக்கின்ற சேனைகளையெல்லாம் எடுத்து வாயிலிட்டுக்கொள்ளும்படியாக விரைந்து ஆக்கிரமித்துவர, அக்கொடுமையையும் முன்னர் யுத்தகளத்தில்நடந்த செயல்களையுமறிந்திருக்கின்ற மகோற்கட மூர்த்தியானவர் அவுணபாதகனுடைய மோகனாஸ்திரத்தின் வலியை யடக்கவேண்டுமெனத் திருவுளங்கொண்டு, உடனே ஞானப்படையையெடுத்து வில்லிற்பூட்டிப் பிரயோகித்தனர். அப்படை வெளிப்பட்டமாத்திரத்தில் இருளைவாட்டுஞ் சூரியனைப்போலச்சொலித்துச் சீறிப்பாய்ந்து, தேவாந்தகன் செலுத்தியிருக்கின்ற மோகனப்படையை அதப்படுத்தியது.தேவசேனைகளும் பூதவெள்ளங்களு மடைந்திருக்கின்ற மயக்கங்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிப்படலத்தைப்போலப் பறந்துபோயின. குரூரனெதிரில் ஆடல்பாடல்செய்திருந்த கந்தருவப்படையானது விலகிப்போய்விட்டது. இப்பால் குரூரனானவன் தேவாந்தகன்செய்த வஞ்சங்களையெல்லாந்தெரிந்துகொண்டு, இப்பாதகன் நம்மவரை மோகனப்படையினால் வாட்டியதல்லாமல் நம்மையுங் கந்தருவப்படையினால் மயக்கினனேயென்று கோபநகைசெய்து, முன்னங் கரத்திலேந்தியிருந்த வாளினால் அப்பாதகனைவெட்ட வோங்கிசென்றனன். அதற்குள் புத்திதேவியாலுண்டா

ன் பவுத்தேவியானவள் அவனைநிறுத்தி, தேவாந்தகனேவிய்பூதத்தை வாவென்றழைத்து யுத்தஞ்செய்வதாயினள். பின்னர் இரண்டுசெண்டமாருதங்கள் ஒன்றோடொன்றெதிர்ப்பதுபோல அவ்விரண்டுபூதங்களு மொன்றோடொன்றெதிர்த்து, விழிகளில் வடவைக்கனலெழக்கோபித்துக்,கரங்களைப்பிசைந்துகொண்டு, பூமிபெயர்க்கும்படிக்குப் பாதங்களைப் பெயர்த்து முன்னடிவைத்தும், பின்னடிவாங்கிப்பாய்ந்தும், புசங்களைத்தட்டியும் ஒருவரையொருவர் உறுத்துப்பார்த்தும், வீரங்களைப்பேசியும், கரங்களைப் பிடித்தமாக்கிக்கொண்டு முகத்தினும் புயத்தினும் மார்பினும் மற்றவுறுப்புக்களினுங் குயிகொண்டு குத்தியும், அதைத்தடுத்து மீளத்தாக்கியும், கற்கம்பத்தையொப்ப வலியபுயங்களினுலிடித்தும், கால்களைப்பின்னித் தட்டியும், உதிரம்பீறிட்டோட நெற்றியினுந் தலையினுங்குட்டியும், கன்னம்பிளக்க வறைந்தும், இடசாரி வலசாரியாகத் திரிந்தும், இவ்விதங்களில் இருவரும் அண்டங்களையெல்லாஞ் சுற்றியும், அலைகடலெல்லாஞ் சுழன்றும, பூவட்டமெங்கணுஞ் சுலாவியும், உரகர்வாழ்கின்ற பாதலங்களிற்சென்று குலாவியும்,ஒருவர்க்கொருவர் பின்னிடையாமல் மற்போரைச்செய்துகொண்டு வரும்போது, பவுத்தேவி யானவள் அதிகதீரத்தோடு மேலிட்டுக், கோடையிடிகளைப்போலக் கரங்களினாலும் புசங்களினாலும் இடைவிடாது தாக்க, அத்தாக்கலைத் தேவாந்தகனுடைய பூதமானது தாளமாட்டாது, வலிகுன்றிக் கைகால்சோர்ந்து, இரத்தவெள்ளம் பெருக்கெடுத் தோடும்படியாகச் சோர்ந்து நிலத்தில்வீழ்ந்தது. உடனே பவுத்தேவியானவள் அவளுடைய வொருகாலைத் தன்னொருகாலினால் மிதித்துப், பனைநாரைப்போலக்கிழித்து, ஒருகீற்றினைக்கீழ்த்திசைக்கடலினும், மற்றொருகீற்றினை மேற்றிசைக்கடலினுமெறிந்து, யுத்தகளத்தி னின்றுநீங்கித், தன்னையீன்ற புத்திதேவியினிடத்திற்சென்றுசேர்ந்தனள்.இப்பால் தனதுபூதம் நாசப்பட்டதைத் தேவாந்தகன்கண்டு, ரவுத்திராகாரமாகக்கோபித்துத்,தனதுதேரை ரணக்களமெங்கணுஞ்சக்கிராகாரமாகச் சுழற்றித், தேவசேனைகள்மீதும் பூதகணங்கள்மீதும் அளவற்றபாணங்களைச் சோனைமாரியைப்போலப் பிரயோகித்தனன்.அதைக் கணேசகுமாரனாகிய குரூரன்கண்டு,அடாகள்வனே-முன்னம்வாட்போருக்கஞ்சியொளித்த நீ மீட்டும் வெட்கமில்லாமல் சண்டை.செய்யவந்தனை, இனிஎவ்விதத்தாற் றப்பிப்போக விருக்கின்றனை, இதோ உன்னரியபிராணனைவாங்கி வீரசொர்க்கத்திற் குடியேற்றுகின்றேனென்று சீறித், தனதுவில்லில் சங்கோபசங்கமாகச் சரவருஷங்களைச் சொரிந்தனன். அக்காலத்தில் தேவாந்தகனானவன் கணக்கிறந்த கொடியபாணவகைகளைக் கோடைகாலத்து மழைத்திவலைகளைப்போல ஒன்றன்பின்னொன்றாகச்செலுத்திக்,குரூரன்விட்ட கணைகளையெல்லாய்ப்பொடியாக்கி, அவனுடைய தேரையும் நுறுங்கிவிழச்செய்தனன். அதனால் குரூரனுக்கு அதிககோபம்பிரவேசித்து, உடனே மற்றொருதேரிலேறி,அவுணராசன்செலுத்தியபாணங்களுக்கொப்பாகத் தானும் அளவற்றபாணங்களைச்செலுத்தினன். இவ்விருவீரருஞ்செலுத்திய பாணகோடிகளின்கொடுமைகளைத் தேவர்கள்முதலாயினோர் ஆற்றமாட்டாது திகைத்து,மிகவும்வாடிப்பதுங்கினர். பூதப்படைகளும் அவுணப்படைகளுங் கைகாலாட்டப்படாமல்கண்டதுண்டமாகவெ

ட்டுண்டும் மாண்டும் சோர்ந்தும் பலதிசைகளினு மிறைந்தும், இவ்வித மாகரணக்களத்தில் ஒருவருந்தோற்றப்படாமல் மறைந்தனர். அணிமாதி அட்டமாதிசத்திகளும், ஏனைய சேனைத்தலைவர்களும், பலகாயங்களைப்பட்டு வருந்தித் திகைத்துப், படாதபாடுகளைப்பட்டுநின்றனர். இவ்வாறுவட வையும் ஆலகாலமும் பகைத்துப்பொருவதைப்போல இருதிறவரும்போராடித் தங்கள்தேர்களை நொடிப்போதில் அனந்தமுறைச்சக்கிராகாரமாகவும் வட்டணையாகவும் இடசாரிவலசாரி வலசாரி இடசாரியாகச்சுழற்றித்து ரத்தியும், சூரியசந்திரர்கள் தங்கள்கதிகள் தப்பிச்செல்ல அளவற்றசரவருஷங்களைத்தூண்டியும், ரணக்களத்தில் ஒதுங்கிப்பதுங்கியிருந்த சேரணிகளைப் பொடிபடவாட்டியும், யானைப்பந்திகளைக் கண்டதுண்டப்பட வெட்டிக்குவித்தும், குதிரைப்பெருக்கைச் சிதைத்துக் கிடத்தியும், அவுணவீரரை மடக்கிக்கொண்டு சின்னபின்னப்படக் கண்டித்தும், பூதவெள்ளத்தையலைத்துச் சிரம்-கரம்-உரம்-பதமுதலிய உறுப்புக்களை வெவ்வேறுகவெட்டியெறிந்தும், தங்களிரதங்களை மேலுலகமேழினுஞ் செலுத்தி வானவெல்லையெங்கணும் பவனிவந்தும், பூலோகமுழுவதும் உலாவியும் சத்தசாகரங்களிற்சென்று சுழன்றும், சக்கிரவாளகிரிக்கு அப்புறத்திற் பாய்ந்தும், பாதலலோகங்களைக் கலக்கியும், சத்தியலோகம் வைகுந்தமுதலியனவப்புக்களிற்சென்றுஉலாவியும், மீட்டுஞ் சமர்க்களத்தையடைந்து பல வீரங்களைப்பேசியும், இரதமோடும் வேகத்தினால் ஒருவரையொருவர் முட்டியும், கெற்கரதகொலிகளைச்செய்தோடும்வண்டில்களை இடிகளையொப்பத் தாக்கியும், விண்ணவர்கள் திகைத்து மயங்கும்படிக்கு க்ஷணப்போதில் அஷ்டதிசைகளிற்பாய்ந்தும், மீண்டும், இடையிடையில் சக்கரம்-பாசம்-தண்டம்-சூலமுதலியபடைகளை எறிந்தும், ஒருவரையொருவர் சீறிப்பார்த்து நீயெவ்வளவு உன்சாமர்த்தியமெவ்வளவு உன்னை நொடிப்போதில்வாட்டி நிலத்திற்றள்ளுகின்றேனென்று வீரங்களைப்பேசியும், கொடிய சபதங்களைப் பாடியும், தங்கள்விற்சாதுரியங்களையும் கரவேக சரவேகங்களையும் சாகசங்களையும் நிதானித்துப் புகழ்ந்து விடநாகங்களைப்போலச்சீறியும்; அண்டங்களதிர நகைத்தும், பாதலவாசிகள்நடுங்கக் கற்சித்தும், சிங்கநாதங்களைச்செய்தும், பர்வதாகிருதியாகப் பருத்திருக்கும் புயங்களைத்தட்டியும், மீசைகளை முறுக்கியும், இவ்யுத்தம் வெகுநேர்த்தியாக விருக்கின்றதென்று களித்தும், அடிக்கடிசயத்தைக்குறித்து வெற்றிச்சங்கங்களைப் பொம் பொம்மென் றூதியும்; இப்படிக்கு வீராதிவீரராகிய அவ்விருவருங் கொடிய சித்திரப்போரைச்செய்துவரும்போது, பூமண்டலவெல்லையில் வாசஞ்செய்பவரும் விண்ணகத்திற்சஞ்சரிப்பவரும் அவர்கள்செய்கைகளைப்பார்த்து அற்புதங் கொண்டவர்களாய், இந்தச்சூரனைப்போலச் சண்டைகொடுத்தவனை இதற்குமுன்னம் யாவனையுங்கண்டிலம், கேட்டதுமிராது, இக்காலத்தினுந் தெரிந்ததில்லை பிறகாலத்தினும் கிடைக்கமாட்டாது, புசபலபராக்கிரமசாலிகளாகிய இவர்கள்சவுரியத்திற் கிணையெடுத்துக்காட்ட யாவருமில்லையெனக் கொண்டாடினர். அப்போது குரூரனவன் மேலிட்டுத், தேவாந்தகனுடையதேரிற்பாய்ந்து, வச்சிராயுதத்தினைக் கிறுகிறெனச்சுழற்றி, விசாலமாய் வயிரத்தினைப்போல் உறுதிபெற்றிருக்கின்ற மார்பு நெக்குவிட்டு உதிரம்பெரு

கும்படிக்குக் கோடையிடியைப்போலத் தாக்கி மீண்டனன். அத்தாக்கலி ஞல் தேவாந்தகன் சோர்ந்து மூர்ச்சித்து, மீட்டுந்தெளிந்தெழுந்து, ஓர்த ண்டாயுதத்தை எடுத்துக்கொண்டுவந்து, வயிரக்குன்றினைப்போலப் பாரி த்திரானின்ற குரூரனுடையதோளின்மீது எமனுங்கண்டு அஞ்சும்படிக் கு மோதினன்: அம்மோதலைக் குரூரன் சகிக்கமாட்டாது பெருமூச்செ றிந்து மூர்ச்சித்துத் தேரிற்சாய்ந்தனன். பின்னர் தேவாந்தகன் அவன்தெ ளிந்து எழுந்திருப்பதற்குமுன் மற்றத்தேவசேனைகள் பூதவெள்ளங்க ள்மத்தியிற் றனதுதேரை மூடுக்கிவந்து, தனதுவில்லில் கணைக்கிறந்த திவ் வியாஸ்திரங்களைப் பிரயோகித்துச் சிங்கநாதஞ்செய்தனன். அவ் வஸ்தி ரங்கள் ஒன்றனந்தமாகப்பெருகிச், சிலது அனற்படிவமாய்த்தீயையிறை த்தோடியும், சிலது ஆலகாலவிடத்தையொப்ப மண்டி எரிந்து தகித்தும் சிலது காடாந்தகாரமாகமூடிப் பூதர்களைத்திசைதெரியாமலலைத்தும், சில து காலாந்தகனைநிகர்த்துச் சீறிப்பாய்ந்தும், சிலது அனலைக்கக்கிக் கொ டியசர்ப்பத்தைப்போல வீறிக்கொண்டுதாவியும், சிலது சூரியகிரணங்க ளுக்குச் சமதையாகச் சொலித்து மேலிட்டும், சிலது மின்னலைப்பரப்பி க்கொண்டோடியும், சிலது கோடையிடிகளைப்பெருக்கி யுலாவியும், சிலது சக்கரத்துக்குச் சமதையாகச் சுழன்றும், சிலது வச்சிராயுதங்களைப்போ லத்தாக்கியும், சிலது இந்திரதனுசுக்கொப்பாகப் பற்பலபாண சமோகங் களைப்பெருக்கி அதாஅதஞ்செய்தும், சிலது சூலங்களுக்கொப்பாகப்பா ய்ந்தும், சிலது பிரசண்டவாயுவைப்போல வேகங்கொண்டுலாவியும், சில து சூறுவளிக்காற்றினுக்கொப்பாக எதிர்த்தவர்களைப் புரட்டியும், சிலது வாளாயுதங்களைப்போலச் சங்கரித்துத்திரிந்தும், சிலது பாரித்ததண்டா யுதங்களாய் வாட்டியும், சிலது வேலைநிகர்த்துத் துமசஞ்செய்தும், சில து சிங்கம் புலியாதிய கொடியமிருகங்களுக்கொப்பாகச் சற்சித்துக்கொ ன்றும், இவ்வாறு அவுணபாதகன்விட்ட பாணங்களெல்லாம் மகோற்கட மூர்த்தியினுடைய சேனசமூகத்திற்புகுந்து, ஒருவரையும் அப்புறமிப்பு றம் போகவிடாமல் அல்லோலகல்லோலப்படுத்தும்போது, அந்தரவாசி களாய்ச் சமர்க்களத்தில்நடக்கும் விநோதங்களைப் பார்த்துக்கொண்டிருந் தவிண்டுவாதிதேவர்கள் திப்பிரமைகொண்டு,இன்னுமிப்பாதகன்என்செ ய்யவிருக்கின்றனனோவென்று வருந்தி, காலாதிகளிற் பிராணனைக்கொண் டுபோகுங் கூற்றுவனைக்கண்ட மன்னுயிரைப்போல நடுநடுங்கிக், குலைகு லைந்து, மதிமயங்கி, எங்கணுநிற்கவும்பயந்து, தலைதலைசிதறியோடி,ஞா னநாயகராகிய மகோற்கடமூர்த்தியைக்குறித்துப்புலம்பி முறையிடுவதா யினர். தீனராகிய தொண்டர்களுக்குற்ற வினைகளைப்போக்கிப் பாதுகாத் தருளும்பொருட்டு விருதுக்கொடியை நாட்டியிருக்கும் பக்தவச்சலனே ஓலம்,தமது வழியடிமைகளாக விருக்கின்ற அடியேங்களை வாட்டியலைக் குஞ் சத்துருக்களை இடியேற்றினையொப்ப வலைக்குந் தீனசரண்ணியனே ஓலம், அடுத்தோர்களுக்கு அஞ்ஞானவிருளைப் போக்கிப் பேரானந்தத் தைப்பெறச்செய்யவல்ல பரஞ்சுடரின்மூலமே-ஓலம், வேதாகமங்கள்மு தலியவற்றினுல் எண்ணி யளவிடுதற்கரியசருத்தனே-ஓலம், திரிமூர்த்திக ளில் முதன்மைபெற்றிருக்கின்ற சிவபிரான்பெற்றருளியகடவுளே-ஓலம் பாமாலைகளினுற் புகழவல்லதொண்டருக்கெளிமையானஞானநாயகனே

ஓலம்-என்றிவ்வாறு அனந்தமுறை துதிசெய்து,ஓ-ஓ-சகலபுவனாதார கர்த்தனே-ஓ-ஓ-சச்சிதானந்தப்பொருளே-ஓ-ஓ-பரப்பிரமசொரூபியே- அடியேங்கள் முறையிடுந் துக்கவருத்தங்களைத் திருச்செவிகளிலேற்றுப் பாதுகாத்து ரட்சிக்கவேண்டும், சுவாமிகள்காலதாமதஞ்செய்தால சர்வசங்காரகாலத்தைப்போல நாசமடைவோம்,ஓ தீனதயாளுவே-கொடியரிற்கொடியவனாகிய இத்தேவாந்தகன்செய்யுஞ் செய்கைகள் தேவரீர் திருவிழிகளிற் காணப்படவில்லையோ-இன்னமுஞ் சற்றுநேரந் தேவரீர்பராமுகமாயிருந்தால் அக்கள்வன் பிரபஞ்சங்களனைத்தையு நிமைப்போதிற் கபளீகரஞ்செய்துபோடுவதற் கையமில்லை, மேலும் என்னென்ன அனர்த்தங்களைச் செய்வனோ தோற்றவில்லை, ஓ எமது குலதெய்வமே- விரைவில் கிருபையுற்றுத் தேவகாதகனாகிய இப்பாதகனைக்கொன்று மன்னுயிர்கள்படும்வருத்தங்களை நீக்கியாளவேண்டுமென்று பலவாகத்துதித்து வேண்டினர். அவ்வேண்டுகோளை எமதுகர்த்தன் திருச்செவிகளினேற்றுத், தேவாந்தகனலாகிய உலகஉபத்திரவங்களைத் தவிர்த்து நிலைபெறச்செய்யத் திருவுளங்கொண்டவராய்ச், சாரதியாகியவாயுதேவனைப்பார்த்து, நமது தேரை விரைவில் தேவாந்தகனெதிரிற் கொண்டுபோகக் கடவையென்று திருவாய் மலர்ந்தனர். அவ்வாக்கியம் இந்திரன்முதலாகியதேவர்களுடைய செவிகளில் அமுதத்தினைப்போல நுழைந்தமாத்திரத்தில் சந்தோஷசாகரத்தில்மூழ்கித்,நிரோகபரவசத்தராய் ஆனந்தக்கூத்தாடி, செயமுண்டாகக்கடவதென்று வாழ்த்தினார்கள். அப்போது வாயுதேவன் புரவிகளையதட்டி,நவரத்தினமயமாகியதேரை மணிகள் சத்திக்க வாயுவேகத்தினுங்கடுகித் துரத்திக்கொண்டுபோய், ரணக்களத்திற் சயசாலியா யுலாவிக்கொண்டிருக்கின்ற தேவாந்தகனுடைய தேருக்குநேராகநிறுத்தினன். அப்போது அண்டரண்ட புவனங்களையெல்லாம்வென்று சகலலோகங்களினுந் தனது அரசாட்சியினைச்செலுத்தி நீடித்திருக்கும் ஆயுளையும் வயிரதேகத்தினையும் பெற்றிருக்கின்ற அமரர்கட்கெல்லாம் எமனென்றுசொல்லும்படியான ராசாதிராசனாகிய தேவாந்தகனானவன் தனக்கெதிரில்வந்த நவரத்தினமயமாகிய தேரினிடத்தில்பரிசுத்தமனத்தினையுடையஞானவான்கள்கருத்தினுக்குமெட்டாத நின்மலக்கடவுளாகிய மகோற்கடமூர்த்தியினது சூரியனொளியினு மேலிட்டுக்காட்டுஞ் சுயஞ்சோதிப் படிவத்தினை நேரிற்கண்டு, அதுபரியந்தஞ்செய்திருந்த கொடியவினைகளனைத்தினையும் போக்கப்பெற்றவனாய்ச் சிறிது நிதானித்து, சர்வசங்காரமூர்த்தியாகிய சிவபிரானளித்தகுமாரன் இவனேயாகுமென்று நிச்சயித்து, சுத்தவீரனாதலாற் கோபாக்கினி மனதைவாட்ட எமதுகர்த்தனைப்பார்த்து, ஓபாலனே-மேலான தவங்களைப்பெற்றிருந்த எனது தம்பியைக் கொன்றனை அதனால் யாவராலும்வெல்லுவதற்கரியவெனக்கு நீ மாறுபட்டனை, பிரமன்-விண்டு-உருத்திரன்-முதலிய தேவர்களெல்லாம் ஒன்றாகக்கூடி என்னுடன் அளவற்றநாள் யுத்தஞ்செய்தாலும் அதிவீரனாகிய என்னை ஒருகாலத்தினும் வெல்லமாட்டார்கள். உனக்குதவியாகக கூட்டிக்கொண்டுவந்த வீரர்களெல்லாம் அக்கினிமுன்பட்ட பஞ்சுமலையைப்போலச் சமர்க்களத்துக் கிரையாகப்போனதைக் கண்டனை, அந்த வீணரைப்போல நீயுமுடிந்துபோவையேயன்றி வெற்றிபெறப்போகின்றதில்லை, இனியே.

னுஞ்சாகாமற் பிழைத்திருக்க மனமுண்டாயின் நான்சொல்லுவதைக்கேள், உன்னை இப்போதே உயிருடன்விடுகின்றேன்,நீ வீணே ஆயுதங்களையெடுத்து எனக்குத் தொந்தரைகொடுக்காமல் என்னையடுத்து வாழ்ந்துகொண்டிருவென்று தனது பிரதாபங்களையும் வீரத்தன்மையையும் செயப்பெருக்குகளையும், அவுணபாதகன் விரித்துவிரித்துச்சொல்ல, அவையனைத்தையும் அருவுருவாகவிளங்கு மகோற்கடப்பெருமான்கேட்டுப்புன்னகைசெய்து, ஓ அவுணராசனே -விண்ணுலகமுழுவதுந் துன்பத்தை விளைத்துக்கொண்டிருந்த அற்பபுத்தியினையுடைய நீயும்,மண்ணுலகமுழுவதுங் கொடுங்கோலைச்செலுத்தி ஆண்டுவந்த உனதுதம்பியும், தாய்வயிற்றில்கருப்பமானநாள்முதற்கொண்டு நேற்றையவரையில் சகோதரமென்று சொல்லும்படியாகவாழ்ந்தீர்கள், அத்தன்மைத்தான உங்களிருவரில்ஒருவனைச்சொர்க்கலோகத்தில் தேவனாகியிருக்கவைத்தோம், அவனைச்சூழ்ந்திருந்தசேனைகளை அவனுடனேகூட யிருக்கவைத்தோம், ஆயினும் அவனுக்குச் சகோதரனைப் பிரிந்தோமென்கின்ற துக்கமிருக்குமல்லவா ஆதலால் அவனுக்கு அவ்விடத்திலும் நீயே சகோதரனாயிருக்கும்படியாகவும் யுத்தகளத்தில்மாண்டு அங்குசென்றிருக்கின்ற உனது சேனைகளும் உன்னையே அரசாக்கிக்கொள்ளும்படியாகவும் இப்போதே உன்னையுந் தேவனாக்கி அங்ஙனமனுப்புகின்றோம்அஞ்சவேண்டாமென்று திருவாய்மலர்ந்தனர். அவையனைத்தையும் தேவாந்தகன்கேட்டு, அதிககோபங்கொண்டு,கொவ்வைக்கனியையொப்ப விழிகள்சிவந்து, அழற்சுவாலையெழப் பெருமூச்செறிந்து, வடவையைப்போலச் சீறி, மந்திரகிரிக்குச் சமதையாகப் பாரித்து நீண்டிருக்கும்வில்லைக் கரத்திலேந்தி, இருகுதைகளும் ஒன்றுபடவளைத்து நாணேற்றி, அதில் விஷங்களைக்கக்கவல்ல தீக்ஷண்யமுள்ள பாணவருஷங்களை அபரிமிதமாகப் பூட்டி, மகோற்கடமூர்த்தியின்மீதும் அவர் ஆரோகணித்திருக்கின்றரதத்தின்மீதும் உதயகிரியைப்பனிப்படல மூடியதைப்போலச்சொரிந்து, சிங்கத்தையொப்பக் கர்ச்சித்தனன். அதனை மகோற்கடமூர்த்திகண்டு, இவன்வில்வித்தை வெகுநேர்த்தி வெகுநேர்த்தியென்றுநகைத்து, மகமேருவாகிய பினாகமென்னும்வில்லைத் தமதுகரத்திலெடுத்து வளைத்து, அதிலே கணக்கிறந்த பாணங்களைத்தொடுத்துவிட்டுத்,தீயையிறைத்துக் குமுறிக்கொண்டுமேலிட்டுவருகின்ற அவுணன்படைகளையெல்லாஞ் சின்னபின்னப்படவாட்டிப்,பின்னர் இரண்டுகணையினால் அவனுடைய தூணியையும் வில்லையும் பொடிபடுத்தினர் உடனே தேவாந்தகன் வேறொருவில்லையேந்திவந்து, சுவாமியினுடைய தேரின்மீது மிகவுந்தீக்ஷண்யமுள்ள ஆயிரம்பாணங்களைப்பிரயோகித்தான். அப்போது எமதையனும் அத்தொகைப்பாணங்களினால் அவையனைத்தையுந் துகள்படுத்தி, வேறேமூன்றுபாணத்தினால் அப்பாதகனுடைய தேரையுந் தேர்ப்பாகனையுங் குதிரைகளையுந்துளைத்து நாசமாக்கினர். அதற்குச்சற்றுமிளையாது, உடனே மற்றொருதேரிலேறிவந்து,தனதுவில்லில் பதினாயிரங்கணைகளை ஓரேதொடையிற்பூட்டிப் பிரயோகித்தனன். அக்கணைகளுக்குமாறாக மகோற்கடமூர்த்தியானவர் பற்பல வாளிகளைத் தூண்டி அதஞ்செய்து, பின்னுஞ்சிலகணைகளினால் அவனுடைய கிரீடத்தையும் வில்லையும் தேரையும் சேமத்தேர்களையும் நுறுக்கிப்பொடித்து

த்தினர். பின்னர் தேவாந்தகனானவன் முன்னர் தனது தந்தையுபதேசித்த மந்திரத்தின்படி ஓமகுண்டத்தினின்றும் உதித்த குதிரையின்பேரில் ஏறிக்கொண்டுவந்து, ஓர்வாளாயுதத்தைக் கரகரவென்று சுழற்றி, மகோற்கடமூர்த்தியினுடைய மார்பின்மீது வீசினன். உடனே எமதையனானவர் தமது மழுவாயுதத்தினால் அவன்வாளையும் அவனேறியிருந்த குதிரையையுஞ் சின்னபின்னமாக நிலத்தில் வீழ்த்தினர். இப்பால் தேவாந்தகன் பூமியிற் பாதசாரியாய்நின்று, மானமானது மனதைவாதிக்க ரவுத்திராகாரமாகக்கோபித்து, இப்பாலன் எந்தபாணங்களினாலுஞ் சளையப்பட்டவனன்று, ஆதலால் தேவாஸ்திரங்களைச்செலுத்தி வாட்டிச் செயப்பிரதாபத்தைப் பெறக்கடவேனெனத் துணிவுகொண்டவனாய், அம்புபெய்தூணியிலிருந்த வருணாஸ்திரம்-வாயுவாஸ்திரம்-கருடாஸ்திரம்-எமாஸ்திரம்-நாராயணாஸ்திரம் என்னும் ஐவிதப்படைகளையுமெடுத்துத், தூபதீப நைவேத்தியமுதலிய உபசாரங்களை மானதபூசையினால் நிறைவேற்றி வில்லிற்பூட்டி, நீங்கள்போய்ச் சத்தசாகரங்களைப்போல ஆரவாரித்திருக்கின்ற தேவசேனைகளையும் பூதவெள்ளங்களையும் அதப்படுத்துவதன்றியில், அவைகட்குத் தலைவராகவிருக்கின்ற வீரர்களையுஞ் சிவகுமாரனையும் நாசப்படுத்தி மீளக்கடவீர்களென்று மந்திரபூர்வகமாகப் பிரயோகித்தனன். அதை எமதையன்கண்டு, அவைகட்குமாறாக அக்கினியாஸ்திரம்-நாகாஸ்திரம்-ரிஷபாஸ்திரம்-பிரம்மாஸ்திரம்-சரபாஸ்திரம் - என்னும் ஐவகைப்படைகளைப் போக்கினர். பின்னர் அவுணர்பெருமான்விட்ட அத்திரங்களுந் தேவர்பெருமான்விட்ட அத்திரங்களும் வெளிப்பட்டமாத்திரத்தில் ஒவ்வொன்று அளவற்றவடிவங்களைக்கொண்டு, வருணாஸ்திரம் சர்வசங்காரகாலத்தில் உலகங்களையழிக்கச் சத்தசாகரங்களையும் உடைத்துக்கொண்டெழும்பெரும்புறக்கடலைப்போலச்சலப்பெருக்கை யுண்டுபண்ணி அலைகளைப்பெருக்கி அதிவேகமாய்ப்புரண்டுவர, அக்கினியாஸ்திரமானது ஊழிகாலத்தெழும் வடவாமுகாக்கினியைப்போல அனற்சுவாலைகளைவீசி உலகங்களைமூடியிருந்த சலப்பெருக்கை நிமைப்போதில் வரளவுண்டது. வாயுவாஸ்திரம் யுகாந்தகாலத்தெழும் பிரசண்டமாருதத்தைப்பெருக்கிச் சூறாவளியைப்போல எங்கும்வேகங்கொண்டுவீச, நாகாஸ்திரமானது விசாலமாகியபடங்களை விரித்துக்கொண்டுவந்து சூரியனுந்தியங்கிவாடத்தக்கதாக மேலிட்டு வாயுவின்பெருக்கனைத்தும் கிரகித்தது. கருடாஸ்திரம் விசாலமாகிய சிவந்தசிறகுகளை விரித்துக்கொண்டு நாகாஸ்திரத்தினாலுண்டான சர்ப்பக்கூட்டங்களை மடக்கிக் கூரியநிகங்களினாற்பிளந்தும் மூக்கினாற்கொத்தியும் சிறகடியினால் மாய்த்தும் அதப்படுத்திக்கொண்டுவர, ரிஷபாஸ்திரமானது அண்டகோளகையுமதிர்ந்துகிடுகிடாய்க்கும்படிக்குச் செற்சித்துவந்து கருடாஸ்திரத்தினுடைய வலியையும் செய்கைகளையும் நிமைப்போதிலழித்தது. எமாஸ்திரம் அதிசமகிமைகளைக்காட்டி ஆற்பாடங்களைசசெய்துகொண்டு நந்திப்படையுடனெதிர்க்க பிரமாஸ்திரமானது வடவையைப்போலச் சீறிக்கொக்கரித்துக் கணக்கிறந்த திவ்வியபாணகோடிகளைப் படைத்து நந்திப்படையோடு எதிர்த்துநின்ற எமாஸ்திரத்தை நாசப்படுத்தியது. நாரசிங்கவடிவைக்கொண்டிருக்கின்ற நாராயணாஸ்திரமானது அளவற்றமாயைகளைவிரித்து எங்கும் இ

ருஷியின்பெருக்கைவிரப்பி அதிஉச்சாகத்துடன் சற்பத்தைப்போலச் சீறி வந்து நந்திப்படையுட னெதிர்த்து யுத்தஞ்செய்ய, வீரபத்திரவடிவங்கொண்டிருக்கின்ற சரபாஸ்திரமானது வடவைக்கனலும் ஆலகாலமும் நடுங்கி யஞ்சக் கொதித்து அதிகவேகமாய்வந்து நந்திப்படையுடனே போராடுகின்ற நாராயணாஸ்திரத்தை மடக்கிக்கொண்டு அதன்விருப்பையெல்லாமடக்கித் துரத்திவிட்டது. இவ்வாறுதெய்வப்படைகள் பத்தும் ஒன்றையொன்றெதிர்த்துப் போராடுகின்ற சிங்காரங்களைத் தேவாதிதேவன் கண்டு, அப்போரில்தனதுபடைகள்பின்னிட்டதையும் மகோற்கடமூர்த்தியினுடைய படைகள் வீறியிருப்பதையு நினைந்துநினைந்து, மனம் வருந்தி, மீட்டுந்தைரியங்கொண்டு, எந்தப்படையழியினும் பரமசிவகடாக்ஷத்தினாற் பெற்றிருக்கின்ற இப்படையு மழியுமோவென்று யோசித்து, நிமைப்போதில் சராசரப்பிரபஞ்சங்களை வாட்டிச் சாம்பராக்கவல்ல உருத்திரமூர்த்திவடிவாகிய பாசுபதாஸ்திரத்தையெடுத்துத், திருமஞ்சன தூபதீபமுதலிய சோடச உபசாரங்களையு மானதபூசையினால் முடித்து பக்திபூர்வமாகத் துதித்துவாழ்த்தி, வில்லிற்பூட்டி, வட்டாகாரமாகவளைய வளைத்துப் பிரயோகித்தனன். இவ்வாறு தமதுபிதாவினால் அனுக்கிரகித்திருந்த படையினைப்பகைவன் செலுத்தக்கண்ட மகோற்கடமூர்த்தியானவர் உடனே தாமும் தம்மிடத்திருந்த பாசுபதாஸ்திரத்தினை யெடுத்துப் பிரயோகித்தனர். பின்னர் அவ்விரண்டு தெய்விகப்படைகளும்வீறி வானத்தெழுந்து, லோகநாயகனாகிய உருத்திரவடிவங்களைக்காட்டி, ஒருபுறத்தில் பிரசண்டமாருதத்தை யெழுப்பியும், ஒருபுறத்தில் வடவாமுகாக்கினியைக்காட்டியும், ஒருபுறத்தில் ஆலகாலவிடத்தைப்பெருக்கியும், ஒருபுறத்தில் வயிரவர்களைச்சிருட்டித்தும், ஒருபுறத்தில் பத்திரகாளிகளையுண்டுபண்ணியும், ஒருபுறத்தில் வீரபத்திரர்களை வெளியிட்டும், ஒருபுறத்தில் துர்க்காதேவிகளை வரவழைத்தும், ஒருபுறத்தில் சண்டிகளைத் தோற்றக்காட்டியும், ஒருபுறத்தில் பூதபசாச டாகினிவருக்கங்களைக் கக்கியும், ஒருபுறத்தில் எமன்-காலன்-கிங்கிலியரைச்சிருட்டித்தும், ஒருபுறத்தில் காடாந்தகாரமாகிய இருளைப்பெருக்கியும், ஒருபுறத்தில் அக்கினிமழையைப் பொழிந்தும், ஒருபுறத்தில் இடி-மின்னல்-குமுறல்களை யுண்டாக்கியும், ஒருபுறத்தில் அவுணர்களைப்படைத்தும், ஒருபுறத்தில் பூதங்களைச்சிருட்டித்தும், ஒருபுறத்தில் சடாமுனிக்கூட்டங்களை யுண்டாக்கியும், ஒருபுறத்தில் சக்கரம்-தண்டம்-முசுண்டிமுதலிய படைகளைப்படைத்தும், ஒருபுறத்தில் அக்கினியாஸ்திரம்-நாகாஸ்திரம்-பிரமாஸ்திரமுதலியதெய்வப்படைகளைக்கக்கியும், ஒருபுறத்தில் எமதண்டம்-காலபாசமுதலியவைகளை யுண்டாக்கியும், இவ்வாறு அவ்விரண்டுபாசுபதங்களும் பற்பலகாட்சிகளைக்காட்டி, மண்விண் ணெவ்விடங்களினுமுலவி அல்லோலகல்லோலப்படுத்தும்போது, பூதவெள்ளங்களுந்தேவசேனைகளும்பஞ்சேந்திரியங்களு நிலைபிறழ்ந்து, கைகால்கள்நடுங்க இளைத்துச்சோர்ந்தனர். அணிமாதி அட்டமாசத்திகள்மதிமருண்டோடினர். குருநாதியவீரர்கள்பயப்பிராந்தியினால் திகைத்து, மகோற்கடமூர்த்தியருகிற்சென்று சூழ்ந்தனர். அவுணபாதகர்களனைவருங் குலைகுலைந்து நடுநடுங்கிச் சின்னபின்னப்பட்டுச் சோர்ந்திருந்தனர். வானத்தையளாவுகின்ற தோரணிகள் பொடிப்

பொடியாய்க்குவிந்தன. மதயானைக்கூட்டங்கள் வெறியடங்கிவீழ்ந்திட்டுமாண்டன. புரவிப்பந்திகள் வாயுவைப்போலத் திசைகெட்டோடின, பதினுலுலகங்களில் வாசஞ்செய்கின்ற பிராணிகளனைத்தும் பயப்பிராந்திகொண்டு இதுதானோபிரளயகாலமெனத்துக்கசாகரத்திற்பட்டுச் சோர்ந்தனர். இவ்விதமாய் சராசரப்பிரபஞ்சங்களனைத்துந் திகைத்து வாடும்படிக்குச் சர்வசங்காரக்கடவுளானவர் இரண்டுருவைக்கொண்டு விளையாடுவதைப்போல இரண்டு பாசுபதாஸ்திரங்களுஞ் சீறி ஒன்றுக்கொன்று பின்னிடையாமல் சிலநேரம்விநோதப்போரைக்காட்டிக், தங்களிடத்துண்டாகிய பாணகோடிகள் முதலியவற்றைத் திருப்பிக்கொண்டு, தங்கள்கொடுமையினால் மாறுபட்ட- அண்டங்கள்-புவனங்கள்-விண்-மண் - பாதலமுதலியவிடங்களை யதாப்பிரகாரம் நிலைபெறச்செய்து, தங்களைச்செலுத்திய தலைவர்கள் கரத்தில்வந்து சேர்ந்தன. அதனைக்கண்ட தேவர்களெல்லாஞ் சந்தோஷப்பெருக்கினாற் கரங்களைக்கொட்டி நகைத்து, பாசுபதாஸ்திரத்தினாற் பாதகன் சயம்பெறாதகாரணத்தினால் அவனுக்கு நாசகாலம்வந்துவிட்டதென்பதற் கையமில்லையெனக் களித்தனர். அப்போது தேவாந்தகன் தனதுமாணம்வியர்த்தமாகத் திரும்பியதையும், சமுத்திரம்போலத் தன்னைச்சூழ்ந்திருந்த சதுரங்கசேனைகள் மாய்ந்ததையுங்கண்டு திகைத்துக், கணப்போதில் சராசரப்பிரபஞ்சங்களைத்தகித்துச்சாம்பராக்கவல்ல பாசுபதாஸ்திரத்தை விடுத்தனம், அஃது பகைவனைவென்று வெற்றிபெறாமல் அபலமாகத்திரும்பிவிட்டது, இனி செலுத்துவதற்கு அதனிலுஞ் சிறந்தபாண மென்னவிருக்கின்றது, இனி மாய்கைப்பெருக்கினாலல்லது இப்பாலனைச் செயிக்கவொண்ணாதென்று நிதானித்து, விரைவில் சுக்கிரன் தனக்கு உபதேசித்திருந்த மோகனமந்திரத்தினைச் செபித்து, அதன் முயற்சியினால் அளவற்றமாயப்போர்களை விளைத்து ஆரவாரித்தனன். அம்மாயங்களையெல்லாம் நிமைப்போதில் எமதாண்டவன் ஞானப்படையினைச்செலுத்தி மாய்த்தனர். இவ்வாறு தேவாந்தகனுடைய பராக்கிரமத்தை விண்டுவாதி சகலருங்கண்டு பிரமிக்கும்படி நொடிப்போதில் சகலலோகங்களையு நீறாக்கவல்ல எமதையன் அவனோடு ஒருநாள்முழுவதும் யுத்தஞ்செய்து,மறுநாள் விடியற்காலையில் அவன் முன்னந் தவமுயர்ச்சியினாற் சிவபிரானிடத்திற் பெற்றிருக்கின்ற வரங்களையோசித்து, உடனே சகலராலும் போற்றப்படுகின்ற யானைமுகத்தினைக்கொண்டு, தமதுதந்தங்களிலொன்றை யொடித்தனர். அச்செயலைத் தேவாந்தகன்கண்டு,தனக்குச் சிவபிரான் திருவாய்மலர்ந் திருக்கின்ற முடிவினைக் கருத்திலெண்ணி கணேசமூர்த்தியொடித்துக் கையில்வைத்திருக்கின்ற கொம்பினைப்பறித்து முறித்தெறியும்படிக்கு மேலிட்டுஓடிவந்து தேரின்மீது பாய்ந்தனன் அப்போது சுவாமி அக்கொம்பினால்; அவன்சிரத்திற்குத்தினர். உடனே அவன் சிரமானது ஆயிரம்பத்தலாகப்பிளந்து அவனுயிரானது சோதிரூபமாக யாவருங்காண வெளிக்கொண்டுவந்து விநாயகப்பெருமானுடைய திருவடிகளில் ஐக்கியமாயது. கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே இவ்விதமாகத் தேவாந்தகன் மாண்டுபோனதைத்தெரிந்த பூதசேனாதிபதியாகிய பானுகம்பன் அதிகமனஉற்சாகத்துடனே வானத்தையளாவப்புயங்கள்பூரித்துச், கர்த்தன் குணநிசயங்களையும் வெற்றிப்பாட்டினையு

ம் ஆனந்தபரவசத்தனய்க் கொண்டாடிப்போற்றித், தேவர்கள் கரங்களை க்கொட்டி வாழ்த்தெடுப்பத் தனதுசுந்தரமுள்ள ஆயிரம்வாய்கள்தோறுந் தவளநிறம்பெற்றிருக்கின்ற உன்னதமுள்ள சுரிமுகச்சங்கங்களைச சேர்த்து, உலகங்களனைத்துஞ் செவிடுபட்டுத் திகைத்து மதிமருண்டு வாடிச் சோரும்படிக்குப் பேரொலியெழப் பொம்பொம்மென்றூதினன். மகாவிஷ்ணுவானவர் மனமகிழ்ந்தவராய்ப், பவழத்தைப்பழித்துவிளங்கும் தமது சிவந்த அதரத்தில் பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கினைவைத்து முழக்கினர். இந்திரனுக்குண்டாகிய சந்தோடத்தின்பெருக்கை இப்படித்தென்று என்போலியர்களாற் சொல்லப்படுவதோ. ஏனைய பிரமன்முதலிய தேவர்கள் நகைமுகராய் ஆனந்தக்கூத்தாடி, எமது ஐயன் பெருமைகளைப் பலமுறைகொண்டாடிப் போற்றி, மகரந்தங்களை இறைத்துத் தேனைப் பெருக்கித் திசாதிசைகளிற் பரிமளித்திருக்கும் பஞ்சகற்பகமலர்களை வாரிவாரிச் சோனைப்பெய்யலையொப்பக்கர்த்தனெழுந்தருளியிருக்கின்றதிருத்தேரின்மீது சொரிந்தனர். கருடகாந்தருவர் ஆச்சரியத்தில் - தோற்கருவி துளைக்கருவி-முதலிய வாத்தியங்களை அளவற்ற களியாடல்களோடு முழக்கி ஆனந்தித்தனர். மூன்றுலோகங்களினுமுள்ள பிராணிகள் முன்னரவஞ்சலுண்டான துன்பங்களையெல்லாம் போக்கிச் சந்தோஷ சாகரத்தில் வாழ்ந்திருந்தனர். சகலலோகங்களினுந் தருமதேவதையானவள் குதிகொண்டு விளையாடினள். இப்பால் என்னையடிமையாகவுடைய விநாயகப்பெருமானனவர் அப்போதுகொண்டிருக்கின்ற யானைவதனத்தினை மாற்றி, முன்போலவே மகோற்கடவடிவங்கொண்டருளினர். உடனே காசிராசனுந் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோரும் புதிஅமுதத்தைத்தெவிட்டவுண்டவர்களைப்போல மனமகிழ்ச்சிபெற்றவர்களாய்த்,திரோகபரவசப்பட்டு, சத்தசாகரங்களு மொலித்தெழுமாறுபோல ஆனந்தக்கூத்தாடி, விழிகளிற போதநீரைப்பெருக்கி, உடன்முழுவதும் உரோமாஞ்சிதம் பூத்து, வேதவாக்கியங்களினுற் பலமுறைதுதித்து, சந்தனம்-புட்பந்-தூபதீபமுதலிய உபசாரங்களை ஆகமவிதிப்படி நிறைவேற்றித், தமதிடத்திற் கடாக்ஷித்திருக்கின்ற திருவருளின்பெருக்கை நினைந்து நினைந்து, களிமிகுதியினுற் செயசெயவெனப்போற்றிக் கொண்டாடினர்.இப்பால்மகோற்கடமூர்த்தியானவர் செயபேரி-வெற்றிச்சங்கமுதலியவைகள் அண்டங்களதிரமுழங்க, பூதவீரர்கள் யாவரும் ஐயன் கிருபைப்பெருக்கின் காரணங்களையும் வீரபராக்கிரம செயப்பிரதாபத்தையும் மங்களகரமாகிய குணசம்பத்துககளையுங்கொண்டாடிப் புடைசூழ்ந்துவர, சித்திபுத்திகள் சமேதராய்ச் சிங்கவாகனமூர்ந்து எழுந்தருளி, அணிமாதி அட்டமாசத்திகளும் பவுகதேவியென்கின்ற பெண்பூதமும் குரூரன்முதலிய வீரர்களும் அதிக மனவெழுச்சியுடன் ஆரவாரித்து இருமருங்கினு நெருங்கிவரும்படியாகக்காசிப்பட்டணத்தில்வந்து, அரசனுடைய அரமனைக்குளளேநுழைந்து, கொலுச்சபையில் நவரத்தினகசிதமாய் விளங்காநின்ற சிங்காதனத்தில் வீற்றருளினர். கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே மகோற்கடமூர்த்தியானவர் தேவாந்தகனைச்சங்காரஞ்செய்தருளியவிதம் இது,இனிக்காசிராசனுடையகுமாரனுக்கு விவாகஞ்செய்துமுடித்து,மீட்டுங் காசிபமுனிவரிடத்திற்சென்று, அவ்விடத்திலின்றுந் தமதுலோகத்

திற்செழுந்தருளி, காசிராசனுக்கு முத்தியைக்கொடுத்தருளிய விதத்தையுந் தொகுத்துச்சொல்லுகின்றேங் கேட்பீராக. இப்பால் கொலுச்சபையிலெழுந்தருளியிருக்கின்ற மகோற்கடமூர்த்தியைக் காசிராசன் பணிந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்று, ஓ பக்தவச்சலனே ஓ பரஞ்சுடரே-ஓ தீனதயாளுதேவே-தேவரீர்செய்தருளிய யுத்தவலங்காரங்களைத் தரிசிக்கவந்த தேவர்கள்முதலியயாவரும் இனித்தேவரீருடைய கிருபையினால் நடத்தப்போகின்ற விவாகமகோற்சவத்திற்கு இங்ஙனே இருந்துபோகும்படியாக சுவாமிகள் அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனன். சுவாமியு மதற்கிசைந்து, யாவரும் விவாகத்திற்கிருந்துபோகும்படி கட்டளையிட்டருளினர். அதற்குமேல் காசிராசன் சுவாமியிடத்தில் விடைபெற்றுச்சென்று, சகலதேயங்கட்குங்கலியாணப்பத்திரிகையனுப்பவும் விவாகத்திற்குவேண்டிய பதார்த்தங்களைச் சேகரிக்கவு மந்திரிகட்கு உத்தரவுபண்ணி, அங்கிருக்கின்ற தேவர்கள் முதலாயினோர்க்குத்தக்கபடி உபசாரங்களைச்செய்து, அவ்வவர்கட்குவேண்டுங்காரியங்களில்ஒருதாழ்வுமில்லாதபடி நடாத்திவந்தனன். விவாகப்பத்திரிகையைப்பார்த்தமறுதேயத்தரசர்களும்பந்துசனங்களும்மற்றுமுள்ளநாகரீகர்களுந் தங்கடங்கள் பரிவாரங்களோடுஞ் சுற்றத்தினரோடும்வந்து, காசிராசனுடைய அரண்மனையைச் சேர்ந்தனர். விவாகத்திற்குவேண்டிய காரியங்களையெல்லாம் அமைச்சர்கள் கிரமப்படிசெய்து நிறைவேற்றிவைத்தார்கள். இப்பால் சகலலோகநாயகராகிய மகோற்கடமூர்த்தியானவர் புரோகிதராகி, நல்லமுகூர்த்தவேளைபார்த்து, அங்கு தர்ப்பணமுதலிய கிரியைகளைச்செய்துவைத்து, ராசபுத்திரனையும் மகததேசத்துராசன் புத்திரியையும் விவாகமண்டபத்தி லிருக்கவைத்து, ஐந்துநாள்வரையில் நவக்கிரக ஓமமுதலியவைகளை வேதாகமமுறைமைப்படி நிறைவேற்றி, அதற்குமேல் அங்குவந்திருந்த பிரமனாதியதேவர்கள் முனிவர்கள் முதலாயினோரை அவ்வவர்கள் யதாஸ்தானத்திற்குப்போகும்படிவிடைகொடுத்து, யுத்தகளத்தில் ஈசத்துவசத்தியாலுண்டான மற்றொருசத்தியை வரவழைத்து, அவள் முன்னமொடுத்துவிழுங்கியிருந்தசுக்கிரனை உமியச்செய்து, அச்சுக்கிரனைப் பழையபடி ஆகாயத்திற்சஞ்சரிக்கும்படி விடுத்தருளினர். பின்னர் சுவாமியிடத்தினின்றும் விடைபெற்றுச் செல்லுகின்ற தேவர்கள் முதலாயினோரைக்காசிராசன் பணிந்துநிற்க, அவர்கள் அக்காசிராசனைப்பார்த்து, ஓ தவசீலனாகிய ராசாதிராசனே-கனாகாலாத துக்கசாகரத்துள்மூழ்கி ஓராதரவுமில்லாமல் மங்கியிருந்த எங்களுக்குத்தக்கபடி பேரின்பங்கிடைக்கும்படியாக ஞானவான்களாலுங் கண்டறியவொண்ணாத பரப்பிரமவஸ்துவை இங்ஙனமழைத்துவந்து, அவுணர்களையெல்லாங்கொலைத்து, எங்களுடைய சத்துருக்களையுந் துன்பங்களையும்போக்கின சற்குணநிதியாகிய உனக்கு யாங்கள் என்னகைம்மாறு செய்யப்போகின்றனம், நீ திரிகரணத்தாலும் ஒன்றானகர்த்தாவை வழிபட்டகாரணத்தினால்உன்னைத்தரிசித்தபேர்கள் தர்மார்த்தகாமமோக்ஷமென்கின்ற நால்வகைப் புருஷார்த்தங்களையு மெளிதிலடைவார்களென்றால், நீஇவ்வுலகத்தில் விரும்பத்தக்ககாரியம் ஒன்றுமில்லை, ஆயினும் உன்மீதுஎங்கட்கு

ண்டாயிருக்கின்ற பிரீதியினாலே யாங்கள்கொடுக்கின்றவரங்களையும் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றுசொல்லி, அவ்வவர்க ளாற்றலுக்கேற்றவரங்களைத்தனிதனி கொடுத்துத் தத்தம்பதிகளைநோக்கிச்சென்றார்கள். பின்னர்மகோற்கடமூர்த்தியானவர் காசிராசனைநோக்கி, அரசனே-இத்தினம் அஸ்தமயனத்திற்குமுன்னே நாமும் நமது தாய்தந்தையரிடத்திற் செல்லவேண்டுமாதலால், விரைவில் ரதத்தைத்தருவிக்கக்கடவையென்றுசொல்லினர். அச்சொல்லைக்கேட்டமாத்திரத்தில் அரசன் ஆவைப்பிரிந்த கன்றுபோல விம்மிவிம்மியழுது, அறிவழிந்து, மூர்ச்சையாகிவீழ்ந்து, மீட்டுந்தெளிந்தெழுந்து, சுவாமியை யழைத்துக்கொண்டுவந்தபோது மீட்டும் விரைவிற்கொண்டுவந்துவிடும்படி அதிதியாகிய தாயினால் சொல்லப்பட்டதைநினைந்து, சிறிதுதுயரத்தினின்றுநீங்கிச், சித்தி புத்திகள் முதலான சத்திகட்குங் குரூரன்முதலிய வீரர்கட்கும் மகோற்கடமூர்த்திக்குந் தக்கபடி வெவ்வேறுரதங்களைச் சோடித்துக்கொண்டுவரும்படி அமைச்சருக் காக்கியாபித்தனன். அவர்க ளவ்வாறே ரதங்களை அரண்மனைவாய்தலிற்கொண்டுவந்துநிறுத்த, மகோற்கடமூர்த்தியானவர் சிரோரத்தினங்களினாற் சோடித்திருக்கின்ற சிங்காதனத்தைவிட்டிறங்கி, அரசன்-அமைச்சர்-சேனைத்தலைவர் முதலாயினோர் புடைசூழ்ந்து போற்றிவர, வெண்சாமரைகள்-ஆலவட்டங்கள்-குடைகள்-கொடிச்சீலைகள் முதலிய சின்னங்களைப் பலரசைத்துச்செல்ல, திருச்சின்னம்-பிள்ளாங்குழல்- முதலியவைகளைப் பலர்வாசிக்க, அருகில் தீவட்டிகளைப் பலரேந்திநடக்க, பட்டுவர் புகழ, வித்துவசனங்கள் கொண்டாட, கட்டியக்காரர் எச்சரிக்கை சொல்ல, தேவமங்கையர் நடிக்க, சுமங்கலிகள் ஆலங்களைச் சுழற்றிவர இவ்விதவைபவங்களோடு சித்திதேவி-புத்திதேவி - முதலாயினோருடன் கொலுச்சபையினின்றும் வெளிக்கொண்டு, அவ்வவர்களை வேறு வேறு ரதங்களிலேற்றிவரக் கட்டளையிட்டு, நவரத்தினமயமாயிராநின்ற மற்றொருதேரில் அரசன் சாரதியாகவிருக்கும்படி தாமாரோகணித்து, சயபேரி வெற்றிச்சங்கம்-குடமுழா முதலியவாத்தியங்கள் அண்டங்கள்திரமுழங்கும்படிக்கு உட்கோட்டையைக்கடந்து வெளிக்கோட்டையில்வரும்போது, அங்குவசிக்கின்றவர்களெல்லோரும் மெலிந்தவுள்ளத்தோடு மெய்யன்புகள்ள ஓடிவந்து, மகோற்கடமூர்த்தியினுடையதேரைப் புடைசூழ்ந்து, சுவாமியினுடையபிறிவை யாற்றமாட்டாதவர்களாய், விழிகளில் நீரருவிபாயும்படியாகத் துக்கித்துநின்றார்கள். அவர்களை மகோற்கடமூர்த்தி தேற்றி, ஓ பத்திமையிற்சிறந்தவர்களே - நம்மைக் கணபதிமூர்த்தமாகப் பொன்முதலியவைகளினாலே சமைத்து, உங்கள் மனைகடோறும்வைத்துப்பூசித்து, எல்லாக்கிலேசங்களையு நீக்கிக்கொள்ளக்கடவீர்களென்று அனுக்கிரகஞ்செய்தருளினர். அவ்வனுக்கிரகத்தை யாவருஞ் சிரமேற்கொண்டு மீட்டுந் திரும்பிவிட்டார்கள். உடனே முன்னர் சுவாமியோடு பிரதினம் விளையாடல்செய்திருந்த சிறுவர்கள்யாவரும் ஓடிவந்து, கர்த்தனைப் பலமுறைபணிந்தெழுந்து, நடுநடுங்கிக் கிலேசித்து,விழிகளில்நீரருவியைப்பெருக்கி, ஓ கருணைக்கடலே-ஓ எங்கள்கண்மணியே-ஓ பெருஞ்செல்வமே-ஆன்மகோடிகட்கு மலவிருளைநீக்கிமுத்தியைத்தரவல்ல பராபரமாயிருக்கின்ற தேவரீர் அப்பெருமைக்கேற்றபடியிராமல், அடியேங்

கள் சிறுமைக்கேற்றபடி இப்பூவுலகத்தில் ஓர்பாலனாக அவதரித்து, விளையாடுகின்றவனைப்போன்றும், விளையாடல் காட்டுகின்றவனைப்போன்றும், தோழனைப்போன்றும், தோழனல்லாதவனைப்போன்றும், கொடுப்பவன்போன்றும், கொடுப்பதையேற்பவன்போன்றும், அடிப்பவன்போன்றும் அடிபடுகின்றவன்போன்றுமிருக்கின்ற அடியேங்களிலொருவராகிப், போசனாதிகளையுண்டும், ஆடையாதிகளையுடுத்தும், ஆபரணாதிகளையணிந்தும் எல்லாவிளையாடல்களையும் இதுகாறு மெங்களோடுங்கூடவிருந்து விளையாடிக்கொண்டிருந்த தேவரீர், இத்தினம் அடியேங்களைவிட்டுப் பிரிந்து போகும்படி நினைத்தபடியால், நீர்வற்றியகுளத்தில் மீன்குட்டிகள் பதைத்து இறக்குமாறுபோல இனி யடியேங்களிறந்துபோவதுசித்தம், அல்லாவிடில் தேவரீரோடுகூடவந்துவிடுகின்றோம், சுவாமிகளைப்பிரிந்து ஓர்நிமைப்போதும் வுயிர்வைத்திரோம், என்று இவ்வாறுபலமுறை விம்மி விம்மி அழுது குறையுற்றார்கள். அவர்களை மகோற்கடமூர்த்தி கிருபையோடும்பார்த்தருளி, ஓ அன்பிற்சிறந்தவர்களே - யாம் உங்களைவிட்டுப் பிரியோம், எக்காலத்தும் உங்களுடையசூக்ஷமபுத்தியில்வசித்திருப்போம், உங்கட்கு யாதேனுந் துன்பநேருமாயின் அப்போதுநம்மைநினைமின்கள், அத்துன்பங்களை யாமேநிவர்த்திசெய்தருளுவோம், என்றிவ்வாறு பலதேறுதல்கள்சொல்லி அவர்களையனுப்பிவிட்டனர். இப்பால் காசிராசன் சேனை விரைவிற்றாண்டி, அங்கரமுழுவதுந்தாண்டி, அளவற்றநாடுகளையுங்காடுகளையுங்கடந்து, காசிபமுனிவருடைய ஆச்சிரமத்திற்குச் சமீபமாகச் செலுத்திக்கொண்டுவந்தனன். அவ்வரவைக்காசிபமுனிவரும் அவர்பத்தினியாகிய அதிதியுமறிந்து எதிர்கொண்டனர். உடனே மகோற்கடமூர்த்தியானவர் நமது தாய்தந்தையர்வந்தார்களென்று ஆனந்தமுற்று ஞேரோலென்றுசேனைவிட்டிறங்கி அவர்கள் எதிரிற்சென்றனர். அப்போது தந்தையாகிய காசிபமுனிவர் அத்தியந்தசந்தோஷத்தோடு சுவாமியை அணைத்துக்கொண்டனர். அதிதியாகிய தாயும் சுவாமியைத் தழுவி ஆனந்தமுற்றனள். அருகிலிருந்த மற்றமுனிவர்கள் முதலாயினோர் சுவாமியைப்பலமுறைவந்தித்து உபசரித்தார்கள். அவ்வவர்கட்குத்தக்கபடி சுவாமியும் பற்பலஉபசாரங்களைச் சொல்லியருளினர். பின்னர் காசிராசனானவன் காசிபமுனிவரையும் அவர்பத்தினியையும் பணிந்தெழுந்து கைகூப்பிநின்று, என்னையாளுடையவர்களே- உங்களுடைய கிருபாகடாக்ஷத்தினால் பூமிபாரநீங்கி விவாகமுநிறைவேறியது, முன்னர் நீங்கள் உத்தரவுசெய்தபடி சுவாமியைவிரைவில் அழைத்துவராமலிருந்ததற்குக்காரணம் யாதெனில், இவ்விடத்தினின்றும் வெளிக்கொண்டஅத்தினமேதமக்கெதிரில் ஆயுதபாணியராய்வந்த அளவற்றஅவுணர்களைக்கொன்றனர், அதற்கடுத்தமூன்றாநாள் யாவருமானந்தமெய்தும்படி சித்திபுத்திகளை விவாகஞ்செய்தருளினர், ஐந்தாநாள் மூன்றுஅவுணர்களைச் சங்கரித்தனர், ஆறாநாள் சோதிடனாகவந்த ஓரவுணனைமாய்த்தனர், ஏழாநாள் கிணராகவுந் தவளையாகவும்வந்த இரண்டவுணரைநாசஞ்செய்தனர். எட்டாநாள் அம்பாசுரன்முதலாயினோரை அகஞ்செய்தனர், ஒன்பதாநாள் அம்பாசுரனுடைய தாயைக்கொன்றனர், பத்தாநாள் நமதுபட்டணத்திலுள்ளோராற்செய்யப்பட்ட விருந்தைநுகர்ந்தருளினர், பதினோராநாள்

நராந்தகனைச் சொர்க்கலோகத்திற் கனுப்பினர், அப்பால் இரண்டுநாள் அவன்தமயனான தேவாந்தகனுடனே அளவற்ற யுத்தங்களைசெய்து, பதினாலாநாள் உதயத்தில் அவனையுஞ் சொர்க்கலோகத்திற் சேர்த்தனர் அதற்குமேல் ஐந்துநாள்வரையில் எனதுகுமாரனுக்கு விவாகஞ்செய்வித்தருளினர், இருபதாநாளாகிய இத்தினம் உங்களிடத்தில் யதாப்பிரகாரம் வந்துசேர்ந்தனர், என்று அவ்விடத்தினின்றும் புறப்பட்டநாள்முதல் பிரதிதினம் மகோற்கடசுவாமிகள் நடாத்திய திருவிளையாடல்களையெல்லாம் பாந்தமாகச்சொல்லினன். அவ்வற்புதத் திருவிளையாடல்களையெல்லாங் காசிபமுனிவரும் அதிதியும் செவிக்கமுதாகக்கேட்டு சந்தோஷித்து, காசிராசனையும் மகோற்கடமூர்த்திமுதலாயினோரையும் ஆச்சிரமத்திற்கழைத்துக்கொண்டுசென்று விருந்திட்டனர். அத்தினமெல்லாம் யாவரும் ஒருவரோடொருவர் அளவளாவியிருந்து, மறுதினங்காலையில் காசிராசனானவன் மகோற்கடப்பெருமான் முதலாயினோரை அணைகடந்தபத்தியோடும் பணிந்து துதிசெய்து, அளவற்ற வரங்களைப்பெற்று, சுவாமியினுடைய திருவடிகளில் மனதைநிறுத்தி, அரிதில் அவ்விடத்திலின்று நீங்கிக் காசிநகரைச்சென்று சேர்ந்தனன். அப்பால் சிலநாள்களுக்குப்பின் மகோற்கடமூர்த்தியானவர் காசிபமுனிவரையும் அதிதியையுங் கிருபையோடுபார்த்து, குரவர்களே-நீங்கள் அளவற்றநாள் அரியதவங்களைச் செய்து நம்மைத்தெரிசித்துப்பிரார்த்தித்தபடி யாம் உங்களிடத்தில்புத்திரனாக அவதரித்துத், துட்டர்களையெல்லாஞ் சங்கரித்துச்,சிட்டர்களையெல்லாம் பாதுகாத்துத், தேவர்கட்குச் சொர்க்கலோக முதலானவைகளைக் கொடுத்து,எங்கும் வேதாகமநெறிகளைப்பரவச்செய்தோம், இனி நமதுலகத்திற்குச் செல்லவேண்டுமென்று திருவாய்மலர்ந்தனர். அதைக்கேட்டமாத்திரத்தில் முனிவரும் அதிதியும் ஓர்முகூர்த்தகாலம்வரையில் பொறிகலங்கிநின்று, பின்னர் விழிகளில் அருவிபாய எமதுகர்த்தனைப்பார்த்து ஓ எங்கள்குலதெய்வமே- இனி எக்காலத்தில் தேவரீருடைய திருவுருவைக்கண்டு தரிசிக்கப்போகின்றேமென்று புலம்பினார்கள். அவர்களை மகோற்கடமூர்த்திபார்த்து, அன்பர்களே-நாம் உமாதேவியிடத்தில் குழந்தையாக அவதரிககப்போகின்றனம், அப்போதுநீங்கள்நம்மைக்காணலாம் கிலேசப்படவேண்டாமென்று தேற்றி, சித்திபுத்திகள்முதலான தமது பரிசனங்களோடு மறைந்து, ஆனந்தபவனமென்கின்ற தமதுலோகத்தையடைந்தருளினர். அதற்குமேல் காசிபமுனிவரும் அவர்பத்தினியும் ஓராலயஞ்சமைத்து, மகோற்கடமூர்த்தியைப்போல சொர்ணத்தினாலே ஒருருவஞ்செய்துவைத்துப், பிரதிதினம் வேதாகமமுறைமைப்படி பூசைசெய்துவந்தார்கள். அவ்வாறே உலகின்கணுள்ள மற்றையருந் தங்கடங்கள் வீடுகள்தோறும் விநாயகமூர்த்தியைப்பேர்ல ஒருருவஞ் சமைத்துவைத்துப் பூசித்து, நாளதுவரையில் சகலபாக்கியங்களையுமனுபவித்துவருகின்றார்கள். காசிராசன் தனதுநகரஞ்சேர்ந்தபின்னர் சகலலோகநாயகராகிய கர்த்தாவே தனது ஆசிரிருடைய புத்திரராகித், தனதுபுத்திரனுடையவிவாகத்திநிமித்தம் ஆரமனையில்வந்திருந்து,உண்ணல்-உடுத்தல்முதலானவைகளைச்செய்து, அளவற்ற அற்புதத்திருவிளையாடல்களை நடாத்தியிருந்த செயல்களையெல்லாநினைந்து நினைந்து, மற்றொருகாரியத்திலு மன

தைச்செலுத்தாமல், தவத்திற்சிறந்த அரியபெரியோர்களுடைய சொப்பனத்துங்காண்டற் கருமையாயிருக்கின்ற வஸ்துவை நனவில்நேரேகக்கண்டு தரிசிக்கும்படி எளிதிற்கிடைத்திருந்தும், பாவியேன் கைநழுகவிட்டேனே, சூரியனாகிய விண்மணியையிழந்தவுலகமும், கண்மணியையிழந்த விழிகளும், தண்மணியையிழந்தநாகமும், உண்மணியையிழந்துவாடுகின்ற என்னோடு ஒப்பாகா, என்றிவ்வாறு பலமுறை தனக்குத்தானே நொந்துகொண்டு, கற்போன்ற நெஞ்சையுடையவர்களுங் கண்டவுடன் கரையும்படியாக உள்ளுக்குள்ளே அனலிற்பட்ட மெழுகுபோல உருகி, விழிகளில் நீர்ப்பசுமையற்று, நெடுக வேங்கியேங்கி, மகோற்கடமூர்த்தியினுடைய ஆலயத்தில் அடிக்கடி அன்பாய்ச்செல்லுவதும், அங்கு செய்யத்தக்ககருமங்கள் இன்னவையென்றுதெரியாமல்மதிமயங்கி வாடுவதுமாக இருந்தனன். அவ்வாறிருக்குநாளையில் ஒருநாள் முற்கலமுனிவர் தற்செயலாய் அங்கெழுந்தருளினர். அப்போது எல்லாவடிவங்களையு மகோற்கடமூர்த்தியினுடைய வடிவமாக நினைந்து நினைந்து தாபரித்திருக்கின்ற காசிராசன் அம்முனிவரையும் மகோற்கடமூர்த்தியாகவேநினைத்து, மிக்கபத்தியோடு மெதிர்கொண்டு பணிந்து, பலமுறைதுதிசெய்து, சுவாமி-அடியேனுடையநாதராகிய மகோற்கடமூர்த்தியினுடைய திருவடிகளை எக்காலத்திற் காணப்பெறுவேனென்று கேட்டனன். அதற்கு முனிவர் சந்தோடங்கொண்டு, அரசனே - ஐயாயிரவருடஞ்சென்றபின் அக்கருத்தாவினுடைய திருவடிகளைக் காணப்பெறுவை, அதுபரியந்தம் இங்கே உனதரசாக்ஷியினைச் செலுத்திக்கொண்டிரு, முடிவில் அவ்விநாயகக்கடவுள் உன்னிடத்திற்கு ஓர்விமானமனுப்புவர், இஃது உண்மையென்றுசொல்லிப்போயினர். பின்னர் அரசனானவன் மனந்தேறி, மழைத்துளிக்கு எதிர்பார்த்திருக்கின்ற சாதகப்பட்சியைப்போல விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளையே தியானஞ்செய்து, சுவாமியினுடைய திருவுருவத்தைப் பூசித்துக்கொண்டுவந்தனன். இவ்வாறு ஐயாயிரவருடஞ்சென்றபின்னர் சிறையினின்றும் விடுபட்டவன்போல அரசன்மேலானமகிழ்ச்சிகொண்டு, தனது அரசுரிமையைப் புத்திரனிடத்தில் ஒப்புவித்து விநாயகமூர்த்தியினுடைய திருவருளுக் கெதிர்பார்த்திருந்தனன். அப்போது தம்மைவிழைந்தோர்கள் ஆண்பாலராயினும், பெண்பாலராயினும் அவர்கள் இதயகமலத்தில சதாகாலமும் வாசஞ்செய்தருளுகின்ற விநாயகக்கடவுள் ஓர் தெய்வவிமானமனுப்பினர். அவ்வற்புதத்தைக் காசிராசன்கண்டு ஆனந்தபரவசனாகி, ஆடிப்பாடி, கரையற்றகளிப்பினால் கரங்களைக்கொட்டி, அனந்தமுறை வலம்வந்து, பூமியில் அடியற்றமரம்போல வீழ்ந்து பணிந்தெழுந்து, சுவாமியினுடைய பேரருளை வியந்து வியந்து துதிசெய்து, மிக்க மனமகிழ்ச்சியோடும் அவ்விமானத்திலாரோகணித்தனன். அம்மாத்திரத்தில் அவ்விமானமானது மேலெழுந்து, குய்யகர் உலகமுதலிய சகலலோகங்களையுந்தாண்டி, அண்டப்பித்தியில்பிரகாசிக்கின்ற கந்தருவலோகங் கவுரிலோகமுதலியவைகளைக்கடந்துசிவலோகம்போய்ச்சேர்ந்தது. உடனே அரசனானவன் விமானத்தினின்றுமிறங்கி, அங்கே நவரத்னமயமாயிராநின்ற ஆலயத்தில் அளவற்ற சிவகணங்கள் புடைசூழும்படியாகச் சிம்மாதனத்தி லெழுந்தருளியிருக்கின்ற விநாயகமூ

ர்த்தியினுடைய திருமுன்னர்சென்று, அனந்தமுறைபணிந்தெழுந்து, நாத்தழும்பேறும்படி வாழ்த்தி, அடியேனைப் புன்மையினின்றுநீக்கிப் புரந்தருளவேண்டும் இறைவனேஎன்று பிரார்த்தித்தனன். அப்போது அணுவை மேருவாக்குவதுபோல அடித்தவர்களுடைய மலபாசங்களைநீக்கித் தன்மயமாக்கவல்ல விநாயகக்கடவுளானவர் உடனே அவ்வாசனுக்குமேலான அறிவைக்கொடுத்துத், தமதுசமீபத்தி லிருக்கும்படியான காட்சியையுமளித்தருளினர். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே - இவ்வாறு காசிராசனானவன் விநாயகமூர்த்தியினுடைய பெருங்கருணையினால் அகண்டாகார பரிபூரண சோதிமயமாகிய பேரின்பமுத்தியை யடைந்து பிரமானந்தசாகரத்தின் மூழ்கியிருந்தனனென்றால், அவன்செய்திருக்கின்ற தவத்தின்பெருமையை யாவர் உரைசெய்யவல்லவர்கள் என்று சூதபுராணிகர்கூற, சவுனகாதிமுனிவர்கள் அவரைப்பணிந்தெழுந்து, சுவாமி முன்னர் விநாயகக்கடவுள் தமது ஆனந்தபவனமென்கின்ற லோகத்திற்கெழுந்தருளினரென்று திருவாய்மலர்ந்த தேவரீர், மீட்டும் அக்கடவுளுடைய வனுக்கிரகத்தினால் காசிராசன் சிவலோகமடைந்து விநாயகமூர்த்தியினுடைய சாமீபமுத்தியை யடைந்தானென்றது அடியேங்களுடைய மனத்திற் சந்தேகத்தினையுண்டாக்கியது, ஆகலால் சுவாமிகள் அச்சந்தேகத்தை நிவர்த்திசெய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சூதபுராணிகர் நல்லகேள்வியையே வினவினீர்களென்று சந்தோஷித்து, ஓ அருந்தவர்களே-சிவலோகத்தி லெழுந்தருளியிருக்கின்ற சிவபிரானொருவரே சிருட்டியாதி முத்தொழில்கட்கும் பிரமன்முதலிய மூன்று மூர்த்திகளானதுபோலத், தம்மைவிழைந்தோர்க்குச் சகலவிக்கினங்களையுநீக்கி வேண்டியவரங்களையளித்துத்தேவர்மக்கள்முதலிய யாவரும்வழிபடத்தக்கதெய்வமாகி எல்லாக்கடவுளர்க்குமுன்னதாகப் பூசனைகொண்டு தம்மோடொப்பாரு மிக்காருமில்லாத பெருமைதோன்றும்படியாக விநாயகமூர்த்தியென்னுந் திருநாமத்தினைத்தரித்தருளி சகலவான்மகோடிகட்கும் இம்மையிலே போகபாக்கியங்களையும் மறுமையில் மோக்ஷசாம்பிராச்சியத்தினையும் எளிதில் அருள்செய்யும்படி வேறொரு திருவுருவங்கொண்டருளினர். ஆதலால் சிவபிரானென்னுந் திருமேனிக்கும் விநாயகமூர்த்தியென்னுந் திருமேனிக்குஞ் சிறிதேபேதமாகும், ஆயினும் அவ்விரண்டு திருவுருவங்களினுமுள்ள வஸ்துவொன்றாகவேயிருக்கும், அவ்வுருவங்களிலும்-ஐந்துமுகங்களும் பத்துகரங்களும் பதினைந்துவிழிகளும் சந்திரனைத்தரித்த சடைமுடியும் சற்பாபரணமும் ஆக்கல்முதலிய முத்தொழில்களும் பூதகணங்களும் கொன்றை-வன்னி- அறுகுமுதலியவைகளை யணிந்திருக்கின்ற சிறப்பும் பேதமில்லாமலொத்திருக்கின்றதைக் கண்டிருக்கின்றீர்கள். அத்திருவுருவங்களினுள்ள வத்துவும் ஒன்றாதலாலே அம்மூர்த்தங்கள் வசிக்கின்றஉலகமும் ஒன்றாகவேயிருக்கின்றது அவ்வுலகமே ஆனந்தபவனமென்றும், நிஜலோகமென்றும், சிவலோகமென்றும் வயங்கப்பட்டிருக்கின்றது. அதனால் முத்திவளத்தை யளிக்கத்தக்க கணேசமூர்த்திவாழ்கின்ற உலகமும் அதுவேயாகும், அக்கணேசமூர்த்தியினுடைய திருவடிகளில் அன்புவைத்த மெய்யடியார்கள் மிக்க மனமகிழ்வோடு வாசஞ்செய்கின்ற உலகமும் அதுவேயாம் ஆதலால் சிவபி

ரான் விநாயகக்கடவுளென்னு மிரண்டு திருமேனிகட்கும் அத்திருமே னியிலிருக்கின்ற இரண்டுவஸ்துக்களுக்கும் அவர்கள்வசிக்கின்றஉலகங்க ட்குஞ் சற்றும்பேதமில்லையென் றறியக்கடவீர்கள்.

உ

கணபதிதுணை.

பதிஞேராவது

உடுண்டிவிநாயகர் திருவவதாரப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே-விநாயகமூர்த்தி மகோற்கடர்திருவவதா ரங்கொண்டு, நராந்தகனையுந் தேவாந்தகனையு நாசஞ்செய்து, காசிராசனு க்கு முத்தியளித்த திருவிளையாடலைச்சொன்னோம், இப்பால் உடுண்டிவி நாயகர் திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொல் லுவோங்கேட்பீராக, இப்பூவுலகத்திற் சகலராலும் புகழத்தக்க கைவர்த் தமென்னுந் தேயத்திலே, துசபடங்கண்முதலிய சிறப்புக்களைவாய்ந்த பன்மசிமென்னு மோர்பட்டணமுண்டு. அப்பட்டணத்தில் பிரமசுரனெ ன்னு மோர்அசுரன் சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளைக்கருதி அளவற்றநாள் தவஞ்செய்தனன். அத்தவத்திற்குச் சிவபெருமான் கிரு பைகூர்ந்து பிரத்தியக்ஷமாக, உடனே அவ்வசுரன் கொம்மென்றெழுந்தி ருந்து, வேதாகமங்களினால் பலமுறை துதிசெய்துநின்றனன். அப்போ து சிவபிரான் நீகருதியவரம் யாதென்றுகேட்டருள, அதற்கவ்வசுரன் மீட்டுந்தொழுதெழுந்து, ஓ தீனதயாளுவே- எனதுகையை யாவர்முடியி ல்வைத்தாலும் அவர்கள் உடனேவெந்து சாம்பராகும்படியான வரத்தி னைக் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குக் கர்த்தன் புன்னகைசெய்து, அவனிச்சையின்படி கொடுத்தருளினர். அப்பொழு தே அப்பாதகன் அவ்வரத்தைச் சோதிப்பவனாகித், தனதுகையை சுவா மியினுடைய திருமுடியின்மீதுவைக்க யத்தனித்தனன். அதை சுவாமிய றிந்து, தாம்கொடுத்தருளியவரத்தைத் தாமேயழிப்பது தகுதியல்லவெ ன்று கருதி, அப்பாதகன்கண்ணுக்குத் தோற்றாதபடி வியாபகராயினர் அப்போதவ்வசுரன் எதிர்நின்ற திருவுருவைக்காணாதவனாகி, சொர்க்காதி புவனங்களினுந் திசைகள் தீபங்கள் வரைகள வனாந்தரங்கள் முதலியஇ டங்களினுந் தேடித்திரிந்தனன். அச்செய்தியை விண்டுவறிந்து, விசுவ ரூபியாயிருக்கின்ற சிவபிரானை இக்கொடியவன் காணவல்லனோ, இவன் பெற்றிருக்கின்றவரத்தினால் இனித் திரிலோகங்களையு நீறாக்கத்துணிகு வன், இவனை நாம் ஓருபாயத்தினா லழித்துவிடவேண்டுமென்று தீர்மானி த்து, கோடிசூரியப்பிரகாசமாய் இலக்கணத்திற்கு மேற்பட்டவடிவுடன் மோகினிரூபமெடுத்து, மாய்கைக்கரசியான பார்வதிகண்டாலு மயங்கத் தக்க நடை நொடி பாவனைகளைப்பெற்று, எண்ணிறந்தமன்மதர்கள்ஏககா லத்தில் பஞ்சபுட்பபாணங்களைக் கரவேகமாகப் பிரயோகிப்பதுபோலத்

தெளிந்தநீலமணிபோலக் கறுத்து வெண்மையொளிகொண்டு கடைபிற்
செவ்வரிபரந்து நெருங்கிய கருமைவாய்ந்த மெல்லிய ரோமங்களைப்பொ
ருந்தி நீண்டுவிளங்குகின்றவிழிமலர்களை நாற்றிசைகளினுஞ் சுழற்றிப்பா
ர்த்து, மேகசாலங்களைப்போன்று கண்டவர்வியப்பெய்த நீண்டுபரிமளி
த்துசெய்த்து இருண்டு தாழ்ந்து பூங்கொத்துகளைப்பொருந்தி விளங்குகி
ன்ற கூந்தலை இருமருங்கினுந் துவளும்படியாக அலைத்துப், புடைபரந்து
மேலெழுந்து நீலமணிகோர்த்ததற்கொப்பான சிலீமுகம்வாய்ந்து இடை
தோன்றுமல்நெருங்கி மார்பினிடமுழுவது நிறைந்து தடையின்றிப்ப
ருத்துப் பூரித்துத் தம்முளிரண்டுமொத்து இடையினைவருத்தி நிமிர்ந்தி
ருக்கின்ற தனங்களில் ஒன்றை வெளிப்படுத்தி, செம்பஞ்சூட்டிய பாதங்
களிலணிந்த சிலம்புகளுங் கரங்களிலமைந்த வளையல்களுங் கலிக்க அன்
னத்தைப்போல மெல்லெனநடந்து, அரும்புகின்ற புன்முறுவலைவிளைத்
துக்,கிளியைநிகர்த்துக்கொஞ்சிவசனித்துப், பிரமசுரனெதிரிற்சென்றனர்
அம்மாத்திரத்தில் அவ்வசுரன் அனலிற்பட்ட மெழுகைப்போல மனங்க
ரைந்து, விரகாக்கினிமேலிட்டு, உள்ளத்தையும் உடலையும்வாட்டச் சோ
ர்ந்து வெம்பி, காமவெள்ளம்பெருக வருந்தி, யானையுண்ட விளாங்கனி
யைப்போல வுள்ளுடைந்து, சிவகடாக்ஷத்தினால்வந்த மோகினியின்இல
க்கணவடிவைப் பாதாதிகேசபரியந்த நோக்கிநோக்கித் தாபரித்திருக்கப்
படாமல்,மெல்லமெல்ல நெருங்கிக்,கூரியவேலைப்போலவிளங்கிக் காதள
வுமோடிச் செவ்வரிபரந்து மைநிமிர்ந்து பாலையொப்பவெளுத்து விடத்
தினுங்கறுத்து மான்பார்வையினைப்பழித்த நேத்திரங்களைப் படைத்திரு
க்கும் பெண்கள்சிகாமணியே-உமதுதிருநாமம் யாது, நீர் இருக்குமிடம்
பூவுலகமோ-பொன்னகரோ-பிரமனுலகோ-மன்மதன்பதியோ-வைகுந்த
நாடோ-சற்றேதிருவாய்மலர்ந்தோதும், பெண்ணே-கண்ணே-எனதுதவ
ப்பேற்றினால் இங்ஙனமெழுந்தருளினீர், உமது சுந்தரவடிவையும் நிலை
யையுங்கண்ட மாத்திரத்தில் மனந்தாளவில்லை,செல்வப்பெருக்கினையுடை
ய பொன்னகரத்தினும், சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டலப்பரப்பினும்,ஆதி
சேடனையொத்தவன்வாழும்பாதலத்தினும், அதிகசுந்தரவதிகளாகிய பெ
ண்களனைவருக்கு நாயகமாகப்புகழவல்ல சர்வமங்கள ரூபலாவண்ணிய
முள்ள உமதுபெருமைகளை யாவராற்புகழப்படும்,கறுத்துநீண்டிருக்குங்
கூந்தலைவாய்ந்த பாவாய்-உமது மங்களகரமாகிய தோற்றத்தை எதிர்ப்
பட்டமாத்திரத்தில் இத்தலத்தைக்கடந் தப்புறம்போகச் சம்மதப்படாம
ல் மதிமயங்கிவருந்துகின்ற எனதுமனங்களிக்கத்தக்கதாகப் பவழத்தை
யொத்துங் கேசயத்தைப்பழித்துவிளங்குந் திருவாயை விண்டு ஓர்வார்த்
தையாடீரோ, அல்லது தமது அருள்நோக்கத்தைச்செலுத்தி எனதுவிண்
ணப்பத்தினைச் செவிகொடுத்துவினவி மறுமொழியாட மனமிரங்கீரா
யின் யானென்னசெய்வேன், எனதுமனமுந் தேகமும் பூரித்துக்களிக்
கும்படிக்கு நகைமுகத்தையாயினுங் காட்டவொண்ணாதோ, அஃதில்லா
மற்போயினும் சேற்கெண்டையைப்போலப் பிறழுந் திருநோக்கத்தினை
க் குளிர்ச்சியாகச்செலுத்த நினையீரோ, உமது தரிசனையைக் கிடைத்த
மாத்திரத்தில் மனநிலைகலங்கிப் பொறிகள்மயங்கிக் காமக்கவலையிற்பட்டு
ழலும் தமியேன் இனி களித்துப்பிழைக்குமார்க்க மொன்றைக்காட்டாம

துஞ் சற்றுமென்னிடத்தன்மைச் செலுத்தாமலும்,இரக்கமற்று இவ்வாறேஇருப்பீராயின், சத்தியமாகச்சொல்லுவேன் எக்காலத்தினுந்தீராதபழிபாதகம் உம்மைச்சேருவதற்கையமில்லை,பராமுகமாயிராமற் றுரிதமாயடியேன்பேரிற் கிருபைசெய்து உமதிணக்கத்தைக்கடாக்ஷிக்கவேண்டும் நீரிட்டபணிகளைச்செய்யக் காத்திருக்கின்றேன், நீர்விரும்பிய வனைத்தையும் இன்னிமிடத்திற்றரவல்லேன், காமநோயினாற் பிராணனையிழப்பதற்குமுன்னந் தயைசெய்து அதற்குரியவின்பரசத்தைக் கடாக்ஷித்துப் பாதுகாப்பதன்றி, இனியான் மன்மதசரங் கட்கிரையாகாமல் உமதுகடககங்கணங்களணிந்த திருக்கரத்தினாற் பிடித்தணைத்து ஆதரிக்கவேண்டுமென்று வெளுத்தபற்களைத்திறந்து, கரங்களைநீட்டிப், பற்பலவிதங்களாகக் கெஞ்சிக்கெஞ்சி இரந்து, அக்கினியிற்பட்டகாந்தணமலரையொத்து மெய்கருகி,விரகாக்கினியினால் இறந்தவனைப்போல அறிவழிந்து, பின்பற்றித்தொடர்ந்தும், நின்றும்,விழுந்தும்,இவ்விதங்களாக அலைந்துழன்றனன். இவையனைத்தையும் விண்டுவாகியமோகினிகேட்டுப்,புன்னகையோடு சிலதூரம் வீணைவாசித்தும், சிலதூரம் சங்கீதங்களைப்பாராட்டியும், சிலதூரம் சாஹித்தியங்களைவிரித்தும், சிலதூரம்பரதவிதிப்படிநடித்தும், அன்னத்தைப்போல மெல்லமெல்ல நடந்தனள். இவ்வாறு புன்னகைமாத்திரமரும்பி மறுமொழியாடாமற்செல்லுகின்ற மோகினியினுடைய குறிப்பைப் பிரமாசுரன்கண்டு, கோங்கரும்பையொப்பக்குருத்துப் பொற்குடத்தைப்பழித்து விம்மித் ததும்பித் தேமல்பரந்திருக்குந் தனபாரங்களைப்படைத்த பெண்ணமுதே-உமது மங்களகரமாகிய வடிவின்பொலிவையுங் குணதிசயங்களையுங் கண்டபோதே மன்மதசரங்கட் கிரையாகி விரகாக்கினியைத் தாபரிக்கமாட்டாமல் மிகவும்வருந்தி தலைதூரத்தி லிருந்து உம்மையேநாடிவருகின்றேன், இனித் தேவரீர் செந்தாமரைமலரையொத்ததிருவடிகளல்லது வேறுகதியல்லை, எக்காலத்தினும் உம்மைப்பிரியவறியேன், சற்றும் இடைவிடாமற்கலந்து குலவியிருக்க விரும்பினேன், மாவடுவைப்போலப் பரந்தோடியிருக்கும் விழிகளையுடைய வனிதாரத்தினமே-தீனனாகியயான் தம்மைவிட்டுப்போகவுந் துணிவனோ, அப்படிக்குச்செய்ய வெத்தனப்படினும் மனமொருமித்துநிற்குமோ, உடலைப்பிரிந்து உயிர் தாபரித்திருக்கவல்லதோ, இக்காரணங்களை விரித்து விரித்துப்பேசவும்வேண்டுமோ, மின்னலையொப்பக்காட்டி மறையும்மெல்லிய இடையையுடைய பேதாய்-மைதிமிர்ந்து வேலைப்போலக்காட்டுந்தேவரீர் கூரியகண்களின் சுழல்வலையிற்பட்டு வாடிவருந்தித் திகைக்கின்ற அடியேனுக்குத் தமது கிருபாநோக்கக் கடையையாவது காட்டலாகுமோ, இதையன்றி இனி யான் பிழைக்குமார்க்கம்வேறுண்டோ,இவ்வபா காலத்திற் சிறிதுதயைசெய்து தேவரீருடைய திருக்கரத்தினால் அடியேனையணைத்து ஊசலாடி இவ்வுயிரைக்காக்கக்கடவீர், கண்ணாடியொன்றேயன்றி மற்றவைகட் கொப்பாகாது வட்டமாய்விளங்கும் அழகியகபோலங்களையுடைய நங்காய்-அடியேன்பிறந்தபோதே தேவரீர் களித்து ரீடுவதற்கு யோக்கியமான சுனையாகவாவது, கொங்கைகளினிடத்திற் சும் பரிமளமிகுந்த சாந்தமாகவாவது, கறுத்துநீண்டிருக்குங் கூந்தலிற் செருகவல்ல சுகந்தகந்தங்களைவீசும் புதியமலராகவாவது உருப்பெற்

றுத்,தம்மைச்சேர்ந்து மகிழ்ச்சிபெற்றிருக்கும்பாக்கியத்தைப் பெறுமற் போயினேன்,இப்போது விரகாக்கினிமேலிட்டுத் திரேகத்தையு மனதை யுஞ்சுட்டுக் கொளுத்துவதினால் மிகவும்வாடுகின்றனன், தமது கிருபைக் குப்பாத்திரனாதற்பொருட்டு இனி யான்செய்துகொள்ளவேண்டுங் கட மையாதோ ஒன்றுந்தோற்றவில்லை, அதைத் தயைசெய்து காட்டுவீராயி ன் தேவரீருடைய மனோபீஷ்டப்படிக்குநடத்தக் காத்திருக்கின்றனன். ஓ என்னாசைக்கண்மணியே - எனதுமனங் களிப்பெய்தவிளங்கி அடியேன் பின்பற்றிவருவீராயின் இன்னிமிடத்தில் பொன்னுலகவாழ்வைப்பெற்றி ருக்கும் அரம்பாஸ்திரீகளனைவரும் வணங்கி வேண்டிய தொண்டுகளைச் செய்து போற்றிவரும்படியாக வைப்பதன்றித், தெய்வலோக முற்றினும் நீரேயனுபவித்துக் களித்திருக்கவைப்பேன், தேவரீர்மனதில் விரும்புற் றவைகளைத் திருவாய்விண்டுசொல்லுவீராயின் அவைகள் எத்தகையவா யினும் ஓர்நொடிப்போதிற் றேடித்தரவல்லேன், என்று இவ்விதங்களில் பற்பல இன்சொற்களைப்பேசிக்,காமலாகிரியினா லுண்டாகும் வருத்தங்க ளைக்காட்டிக் கெஞ்சித்தொடர்கின்றபோது, மோகினியானவள் சிறிதும னமிரங்கினவள்போலநின்று, ஓ அரசனே - யான் நாட்டியஞ்செய்கின்ற பெண், நீரோ சகலரையுஞ்சயிக்கவல்லவீரர், யான் ஒன்றினு நாட்ட மில்லாமல்என்னிச்சையாற்செல்கின்றபோது என்னிடத்தில் நீர்காமலா கிரியினால் உளமயங்கிக் கருத்தழிந்து பித்தனையொப்பப்பேசிக் சலவி யையிச்சித்து வழக்காடுவதுஞ்ஞாயமோ, ஆயினும்பரதசாத்திரத்திற்கூறிய முறைமைப்படி எனக்கெதிர்நின்று, யான்செய்யுமவிநயத்தைப்போலநா ட்டியஞ்செய்யவல்லவர் யாரோ-அவர்களை யான்சேர்வதல்லது எனதும னம்வாடியகாலத்தும் மற்றொருவரையான்சேரேன், இதுவே எனதுபிர திக்கினையென்று சொல்லினள். இவ்வாறுவிண்டுவாகிய மோகினிசொன் னவஞ்சகத்தைப் பிரமசுரன்கேட்டுச்,சிறிதும் அதனை அறிந்துகொள்ளா தவனாகி, மேகத்தைநிகர்த்த கரியகூந்தலையுடைய மின்னே-என்னுயிரே- நீர் எவ்வண்ணம் அவிநயம்பிடிக்கின்றீரோ-அவ்வண்ணமே யானுந் தமக் கெதிர்நின்று பிடிக்கின்றேன், அதன்பின்னேனுஞ் சிறந்த பவளத்துண்டு போற் றிரண்டுவிளங்குகின்ற தமது செவ்விதழூறலைக் கிருபைசெய்ய வெண்ணுவீரோவென்றுகேட்டனன். அதற்கு மோகினியானவள் அவ் வாறேஆகுகவென்றுசொல்லித், தனதுகரங்களைக் கூப்பிக்கொண்டு அவ் வசுரனுக்கெதிரில்நின்றனள். அவனுந் தனதுகரங்களைக் கூப்பிக்கொண்டு அம்மோகினிக்கெதிரில் நின்றனன். பின்னர் மோகினியானவள்தனதுகர ங்களிலொன்றைப்பிடித்துத் தன்தலைமீதுவைத்தனள். அப்போது அவ் வசுரன் தான்பெற்றிருக்கின்றவரத்தினை மறந்தவனாகித் தானும் அவ்வா றே தனதுகையைப்பிடித்துத் தன்தலைமீதுவைத்துக்கொண்டனன். அன் னிமிடத்தில் முன்னர் சிவபெருமானுடையநகையால் திரிபுரத்தார் எவ் வாறழிந்தார்களோ-அவ்வாறு பிரமசுரன்வெந்து சாம்பராயினன். மோகி னிவடிவங்கொண்டுவந்த விண்டுவானவர் சந்தோஷசாகரத்தில்மூழ்கினர். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே- கிடைத்தற்கரிய மேலானவரத் தைத் துட்டர்களாயினோர் தேவர்களிடத்திற்பெற்றவர்களாயினும், அவ் வரத்தினாற் றாமேயழிவென்று மேலோர்சொல்லுவார்கள். அதுபோல

வே உலகத்தையெல்லா நீறுக்கவல்ல வரத்தினைப்பெற்ற இவ்வசுரபாத கன்தானே அவ்வரத்தின்பயனை யடைந்தவனாயினன். பின்னர் விண்டுவானவர் அம்மோகினிவடிவோடு பற்மகமென்கின்ற அவ்விடத்திற்றானே வதிந்திருந்தனர். அதுமுதல் அத்தலத்தை யாவரு முகுந்தையென்றுவழங்குவார்கள். இவ்வாறு பிரமசுரனுக்குநேர்ந்த சம்பவத்தினை அவன்குமாரனான துராசதனென்பவனறிந்து, தங்கள்குலகுருவாகிய சுக்கிரனிடத்திற்சென்று பணிந்தெழுந்து,கண்களில் நீரைச்சொரிந்து,தனதுதந்தைக்குநேர்ந்த கொடுமைகளைச்சொல்லிதுக்கித்து, சுவாமீ-எனதுதந்தையை நீறுக்கிய விஷ்ணுமுதலிய எல்லாத்தேவர்களையும் அடக்கி, அவர்கட்கெல்லாம் யானேதலைவனாகி, திரிலோகங்களையுஞ் சயப்பிரதாபத்துடனே யாளும்படியாகத் தேவரீர் கிருபைசெய்யவேண்டுமென்றுபிரார்த்தித்தான். அதற்குச் சுக்கிரன் மனதிரங்கி,நீ பயப்படவேண்டாமென்று பல தேறுதல்களைச்சொல்லி, தீக்ஷைசெய்து, சிவபெருமானுடைய பஞ்சாக்கரத்தையுபதேசித்து, நீ இம்மந்திரத்தினால் பெரியதவங்களைச் செய்து அரியவரங்களைப்பெறுதியென்று விடைகொடுத்தனன். அம்மாத்திரத்தில் துராசதன் அமுதுண்டவனையொப்பக் களிப்பெய்தி, மிக்க இறுமாப்புடனே வனஞ்சென்று, தனது ஒற்றைக்கா லங்குட்டவிரலை நிலத்திலூன்றி, வெய்யல்-பனி-மழை-குளிர் முதலானவைகட் கஞ்சாது,சரீரமுழுவதும் புற்றுக்கள் மூடிக்கொள்ளவும், அப்புற்றுக்களினின்று செடிகள் முளைக்கவுமாக மெய்ம்மறந்து, இடைவிடாமல் பஞ்சாக்கரத்தைச் செபஞ்செய்துகொண்டு, ஆயிரம்வருடம்வரையில் நிராகாரமாயிருந்து அரிய தவத்தினைச்செய்தனன். அத்தவத்திற்குச் சிவபெருமான் மனதிரங்கி, உமாதேவியாரோடு இடபவாகனத்தின்மீதெழுந்தருளி, அவனெதிரில்வந்து, அத்துராசதன்மீது மூடிக்கொண்டிருக்கின்ற புற்றுக்களையுஞ் செடிகளையுஞ் சிய்க்கும்படி தமதுபூதகணங்கட் காக்ஞாபிக்க, அவ்வாறே அவர்கள்சிய்த்துச், சுருதிகளாலு மறிதற்கரியசுவாமி வந்தாரென்று தெரிவிக்க, உடனே துராசதன் பதறியெழுந்து, பலமுறை சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி, விழிகளில் ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து, உடன்முழுவதும் உரோமாஞ்சிதம்பூத்து, மொழி தடுமாறி, மனமுருகி, வேதாகமங்களினால் அளவற்றதுதிகளைசெய்து நின்றனன். அத்துதியனைத்தையுஞ் சிவபிரான்கேட்டு சந்தோஷித்து, உனக்கு வேண்டியவரங்களைக்கேளென்று திருவாய்மலர்ந்தனர். துராசதன் மீட்டும்பணிந்தெழுந்து. ஓ நித்தியப்பொருளாயிருக்கின்றகர்த்தனே-தேவரீராக, தேவரீரது சத்தியேயாக, நும்மிருவராற்றரப்பட்ட தனையராக, அரவணையிற்றுயில்கின்ற விண்டுவாக, பதுமபீடத்தனாகிய பிரமனாக, பின்னும் வெவ்வேறாயிருக்கின்ற பலவகைப்பட்ட தேவர்களாக, உரகர்களாக, தானவராக, நரகர்களாக, மனிதர்களாக, நாற்கான்மிருகமுதலிய பலஉயிர்களாக, இந்த எண்பத்துநான்குநூறாயிரமென்னுந் தோற்றங்களெல்லாமற் இனி வேறேதோற்றம் யாதேனுமுண்டாகுமெனில் அதனாலாக, இவ்வகைப்பட்ட நீங்கள்யாவரும் பலமுறை என்னைக்கொல்லும்படி முயன்றீர்களாயினும் யான் இறக்காமலிருக்கவும்,தேவர்கள் முதலிய சகலரும் எனதேவலுக்கிசையும்படி திரிலோகங்களையும் யானரசாண் டிருக்கவும்

அவ்வாறு அரசாளுங்காலத்திலுஞ் செல்வச்செருக்கிலழுந்தாமல் தேவ
ரீருடைய திருவடிகளில் குறையாதபத்திவைத்திருக்கவுங் கிருபைசெய்
யவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவையனைத்தையுஞ் சிவபிரான்
கேட்டருளி, சர்வதேஜோன்மயமாய் எங்கும் போக்குவரத்தில்லாமல்
நிறைந்திருக்கின்ற நமதுசத்தியே உமையினிடத்தில் விநாயகராகவந்து
உனதுசிரத்திற்றாளைவைத்து அடக்குவதுதவிர, ஏனையவரங்களனைத்தை
யுந்தந்தோமென்று திருவாய்மலர்ந்து அந்தர்த்தானமாயினர். இப்பால்
துராசதனெனவன் விண்டுவாதிய தேவர்கள் கவலைகொள்ளும்படியாக சிவ
பெருமானிடத்தில் சகலவரங்களையும் பெற்று, கர்த்தனெழுந்தருளிய
திசையைநோக்கிப் பலமுறைபணிந்தெழுந்து,மிகுந்த இறுமாப்புடனே
முகுந்தையென்னும் பட்டணத்திற்போய்ச் சேர்ந்தனன். இவன்இவ்வா
று பலவரங்கள்பெற்றுவந்தமையை இராக்கதர்களறிந்து, உடனே அவ
னை யாவரும்பணிந்து கூடினார்கள். பின்னர் துராசதனெனவன் அவ்விராக்
கதர்களும் நால்வகைச்சேனைகளும் புடைசூழும்படி யுத்தசன்னத்த
னாய் சகலவாயுதங்களையுந்தரித்து வெளிக்கொண்டு, பூவுலகத்தைநோக்கி
ச்சென்றனன். அதுகண்ட அரசர்கள்யாரும் உடனே வெளிக்கொண்டுவ
ந்து, சிலர் பலபோர்களைப்புரிந்து மானத்தினாலிறந்தார்கள். சிலர் அப்
போரிற்றோற்றுத் திசாதிசைகளில் மறைந்தார்கள். சிலர் அவனைப்பணி
ந்து பகுதிசெலுத்துவதானார்கள். சிலர் அவனுக்கு ஏவல்களைச்செய்யவ
ல்ல சேவகர்களானார்கள். இவ்வாறு அத்துராசதன் பூவுலகத்தரசர்களை
யெல்லாம் வென்றபின்பு பொன்னுலகைநோக்கிச் சென்றனன். அச்சம்
பவத்தைத் தேவேந்திரனறிந்து, உடனே தனதுசுற்றத்தினரோடு வெளி
ப்பட்டுக் காசிநகரைச்சேர்ந்தனன். அதையறிந்த துராசதன் அவ்வுலகத்
தை ஓரரக்கனால் ஆளும்படிசெய்து சத்தியலோகத்திற்குப் போயினன்
அங்கரசாள்கின்ற பிரமனெனவன் பயந்து,தானும் அவ்வாறே காசிநகரை
ச்சேர்ந்தனன். அதுகண்ட துராசதன் அவ்விடத்திலும் ஓரிராக்கதனை
அரசாளவைத்து வைகுந்தலோகத்தையடைந்தனன். அவ்வைகுந்தவா
சியாகிய விண்டுவும் அவ்வாறே காசிதேயத்தைசசேர்ந்தனர். பின்னர் து
ராசதன் அவ்விடத்தினும் ஓரரக்கனையாளவைத்து,இவ்வாறே மற்றலோ
கங்களையுங்கைக்கொண்டு, ஆங்காங்கு ஒவ்வோரரக்கனை அரசாளவைத்
து, தான் பூவுலகத்துள்ள முகுந்தையென்னும்பட்டணத்தில்வந்து, திரி
லோகங்களுந் தனது ஆக்கினையின்படி நடந்துகொள்ளக் கொடுங்கோலை
ச்செலுத்தித்,தன்னின்மிக்கார் எவ்வுலகங்களினுமில்லையென்னு மிறுமா
ப்புடனே அரசாட்சிசெய்துவந்தனன். இவ்வாறிருக்குநாளையில் ஒருநாள்
அத்துராசதனெனவன் சகலபரிசனங்களுந் தன்னைப் புடைசூழும்படியாக
க் கொலுவீற்றிருக்கின்றபோது, மூவுலகங்களு நமதாக்கினைக் குள்ளாயி
ன, ஆகவே இனி நமக்கடங்காத தொன்றுமிலலையென்று சொல்லினன்
அதை அருகிருந்த அமைச்சர்கள்கேட்டு, ஆண்டவனே-பிரமன் -விண்டு
உருத்திரன்-முதலாயுள்ள தேவர்களும் முனிவர்களும் சித்தர்களுந் தத்
தமிருக்கையைக்கடந்து இப்போது காசிநகரையடைந் திருக்கின்றார்கள்
அக்காசியைவென்றாலன்றோ திரிலோகங்களுந் தேவரீருடையகுடைக்கு
ளடங்கியதாகுமென்றனர். அதைத்துராசதன்கேட்டமாத்திரத்தில் இது

வோநமக்கரிதென்று புன்னகைசெய்து, இன்னிமிடத்தில் சகலசேனைகளோடும் வெளிப்படக்கடவீர்களென்றுஆக்கியாபித்தான். அவ்வாக்கினையைக்கேட்ட யாவரும் ஞேரேலென்று யுத்தசன்னுத்தராய் சமுத்திரம்போலவந்து நெருங்கினார்கள். உடனே துராசதனுனவன் அச்சேனைகளனைத்தையு நடத்திக்கொண்டுசென்று காசிநகரைச்சேர்ந்தனன். அக்கொடியவன்வரவைத் தேவர்கள்முதலாயினோரறிந்து, காசிநகரை யாள்கின்ற விசுவநாதமூர்த்தியையடைந்து சரண்புகுந்தார்கள். அப்போது விசுவநாதர் அவனுக்குத் தாம்கொடுத்தருளிய வரங்களைநினைத்து, அவனையடக்கத்தக்கநாள் இன்னும்வரவில்லையென்று நிதானித்து, மிக்கசோர்வோடுஞ் சரண்புகுந்திருக்கின்ற தேவர்கள்முதலாயினோர்க்குத் தக்கபடி தயைவார்த்தைகளைக்கூறி, அவர்களோடு தாமும் அக்காசிநகரத்தினின்றும் வெளிக்கொண்டு ஸ்ரீகேதாரமென்னுந்தலத்தையடைந்தனர். பின்னர் துராசதனுனவன் காசிநகரத்துள்நுழைந்து, தேவர்கள்முதலாயினோர் மாயமாய்மறைந்துபோன செய்தியையறிந்து நகைத்து, மிகுந்த சந்தோஷத்துடன் அளவற்றநாள் அக்காசிநகரிற்றானே இருந்து, திரிலோகங்களினுந் தனது ஆஞ்ஞாசக்கரத்தைச் செலுத்திவந்தனன். இவ்வாறு எண்ணிறந்தநாள் அத்துராசதன் சகலலோகங்களினுங் கொடுங்கோலைச் செலுத்திவருவதினால் தேவர்கட்கு அவிற்பாகமும் ஸ்கிரீபோகமுங்கிடையாமல் மனநொந்து, யாவரும் பிரமனிடத்திற்சென்று பணிந்து இதனைச்சொல்லுவதானார்கள். ஓ வாணிகேள்வரோ-நம்மையெல்லாம் எங்குநிலைபெறவொட்டாமல் துற்கீர்த்தியஞ்செய்துவருகின்ற துராசதன் எப்போது நாசமடைவன், இவனையடக்கி நாசஞ்செய்யவல்லவர் யாவர், இவனுக்கு இத்தன்மைத்தான சிறந்தவரங்கள்கிடைத்தது யாவரால், இவையனைத்தையு மடியேங்கட்குத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குப் பிரமன்சொல்லுவான், ஓ மித்திரரோ-இராசதம்-தாமதம்-சாத்மீகமென்னு மூக்குணங்கட்கும் பிரமன்-விண்டு-உருத்திரன் என்னு மூன்றுமூர்த்திகளாக விருப்பதன்றி, அம்மூக்குணங்களையுந் தாமேஆண்டருளுவதாற் குணேசரென்றும், அக்குணவிகாரங்களிற் பொருந்தமில்லாதிருப்பதினாற் குணரகிதரென்றும், அக்குணங்களைக் கடந்திருப்பதினாற் குணாதீதரென்றும், சகலலோகங்களினும் பரிபூரணமாயிருத்தலினால் விசுவவியாபியென்றும், அவ்விசுவத்தையாண்டு அழியாநலந்தோன்றுதலினால் விசுவகருத்தரென்றும், அவ்விசுவத்தைப் பிரளயகாலத்தில் சங்கரிப்பதினால் விசுவசங்காரியென்றும், மேலானதென்றுசொல்லத்தக்க யாவற்றுள்ளும் மேலாகியிருத்தலினால் பராபரனென்றுஞ் சொல்லுகின்ற சிவபிரான் ஒருவருண்டு, அச்சிவபிரானுடைய தேசோன்மயமாகிய ஓர்சத்தியே உமாதேவியாருடைய திருமுகமண்டலத்தில் விநாயகமூர்த்தியென்னுந் திருநாமத்துடனே அவதரிக்கும், அக்காலமே அத்துராசதன் நாசமாகுங்காலம், அவனுக்கு மேலானவரங்களைக்கொடுத்தவர் இவ்விசுவநாதரேயாம், இனி அப்பாதகனுடைய நிலைகளனைத்தையுங் கலக்கி இறுதிசெய்யவல்லவர் முன்சொன்ன விநாயகமூர்த்தியேயாதலால், அம்மூர்த்தி திருவவதாரஞ்செய்தருளும்படி விரைவில் உமாதேவியாரை மிக்க மனவுறுதியோடு துதிசெய்வீர்களாகவென்றனன். அவையனைத்தையுங்

தேவர்கள் செவிகுளிரக்கேட்டு, கவலைக்கடலினின்றுங் கரையேறினவர்களாய் யாவரும் உமாதேவியாருடைய சன்னிதானத்திற்சென்று துதிசெய்வதானார்கள்.

ஒருத்தியாகியுலகனைத்துமோம்புமருளேயுலகத்தில்........................*
வருத்தமகற்றப்பலவுருவாய்வயங்காநின்றசத்தியே... ....*
கருத்தையகன்றவுருவாளேகடவுண்முனிவர்முதலோர்செய்...... ......*
பெருந்தவழிபாட்டினுக்கிரங்கும்பேரானந்தப்பெண்ணமுதே...... ....*

குணமேசொரூபமானவளே நணத்தையாளுங்கோமளமே...... ... ...*
குணகாரணமேகுணாதீதக்கோமபேவேதந்துதிப்பவளே... ... ...*
தண்வாதவனிதரிப்பவளேதருதாபரசங்கமந்தனக்கு........ ....*
கிணராதாரமானவளேநீநெந்தேவசொரூபியே............. ....*

அடியார்பிழையறுத்தவர்கட்கடக்கில்பொருளுங்கொடுப்பவளே... ...*
கொடியார்சுகத்தைக்குமைத்தவர்க்குங்கோதில்கருணைசுரப்பவளே ... *
மிடியால்வருந்துமெமைப்புரப்பவேண்டும்வேண்டுமெக்காலு... ......*
முடியாமுதல்வீஅடியேமைமுழுத்தவருள்செய்தளித்தருளே..........*

இவ்வாறு துதிசெய்துநிற்கின்ற தேவர்களெதிரில் உமாதேவியார் தமது சோடசகலைகளால் நிறைந்த நிஷ்களங்க பூர்ணசந்திர பிம்பம்போன்ற முகாரவிந்தமும், நீலரத்தினம்போலும் வண்டுகளுக்குநிகராகிய அழகிய அஞ்சனங்களால்நிறைந்த திருவிழிகளும், பிரவாளரத்தினங்களுக்குநிகர்த்த அதரோஷ்டங்களும், கஜராசதுதிக்கையைப்போன்ற நீண்டபாருக்களும், செங்காந்தளுக்கொப்பாகிய அஸ்தங்களும், நூதனமாகத்தளிர்த்துச் சோபித்துக்கொண்டிராநின்ற பல்லவங்களையொத்த பதங்களும் மகித்த மத்தேபத்தின் மஸ்தகத்தைநிகர்த்த குசகும்பங்களும், மிருகராசஇடைக்குச் சமானமாகிய சிற்றிடையும் விளங்கும்படியாகத்தெரிசனந்தந்து, ஓ விபுதர்களே—உங்களுக்குவேண்டியவரம் யாதென்று திருவாய்மலர்ந்தனர். அப்போது தேவர்கள் உய்ந்தோம் உய்ந்தோமென்று ஆனந்தபரவசத்தாலாடி, மீட்டும் வேதாகமங்களால் பலமுறைநுதிசெய்து ஆராசதன்செய்துவருகின்ற கொடுமைகளையும் அவனால் தாங்களனுபவித்துவருகின்ற துன்பங்களையும்விபரமாகச்சொல்லி, ஓ சகலபுவனேஸ்வரீ—இனித் தேவரீர் தீனராகிய அடியேங்கண்மீது கிருபைசெய்து எல்லாத்துன்பங்களையு நீக்கிச் சுகத்தைக்கொடுத்தருளவேண்டும், இதுவே யாங்கள்கருகியவரமென்று பிரார்த்தித்தார்கள். இவ்வாறு அவுணபாதகனுடைய கொடுமைகளையும் அவனால் தாங்களடைந்திருக்கின்ற இடுக்கண்களையும் உமாதேவியார் கேட்டமாத்திரத்தில் மனங்கொதித்து, விழிகள் செந்தாமரைக்காடுபோற் சிவப்பக் கோபங்கொண்டனர். அம்மாத்திரத்தில் தேவியாருடைய முகத்திலிருந்து கோடிசூரியர்கள் ஏககாலத்திலுதயஞ்செய்ததுபோல அளவற்ற பிரகாசங்களையுடைய திருமேனியும், சந்திரனைத்தரித்த சடாமகுடமும், துதிக்கரங்களோடுங்கூடிய ஐந்துமுகங்க

ளும், பத்துக்கைகளும், அக்கைகள்தோறும் படைகளும், கஸ்தூரிப்பொட்டிட்ட நெற்றியும், பூண்நூலணிந்தமார்பும், அளவறறநாகாபரணங்களும், பற்பல இரத்தினுபரணங்களும், துஷ்டசனர்களைச் சங்கரிக்கும்படியான ரவுத்திரமும், சிஷ்டசனர்களைப் பரிபாலிக்கத்தக்க கருணையும் விளங்கும்படியாக, எண்குணமாயும் ஏகவஸ்துவாயு மிராநின்ற விநாயகமூர்த்தி திருவவதாரஞ்செய்தனர். அப்போது உமாதேவியார் கோபமாறி ஆனந்தங்கொண்டு, விநாயகமூர்த்திக்கு வக்கிரதுண்டரென்று திருநாமந்தரித்து, யாவரும் வியப்பெய்தும்படியாகப் பூசனைபுரிந்து, வேதாகமங்களால் பலமுறைதுதிசெய்து, சிங்கவாகனங்கொடுத்து, சுவாமி-இராக்கதர்களால் சுகமிழந்து வருந்துகின்ற தேவர்களைக் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்தித்தனர். விண்டுமுதலிய எல்லாத்தேவர்களும் வக்கிரதுண்டமூர்த்தியைப்பணிந்து துதிசெய்து, ஓ விக்கினராசனே-பத்தர்கட்குரியவராயிருக்கின்ற வித்தகரோ-மனுதிகள்கடந்தவரோ-புண்ணியமுதல்வரோ-பூரணரோ-எமதுகர்த்தாவாகிய தேவரீர் பாதபதுமங்களைத் தரிசித்துத் துதிசெய்ய அடியேங்கட்குக்கிடைத்தபோதே பெரிதான பேறுகள்பெற்றோம், சுத்தபவித்திரர்களாயினேம், எம்மையடைந்திருந்த துன்பங்களனைத்து நீங்கின, யாங்கள்வசித்திருந்தபதவிகளை மீட்டுங்கிடைக்கப்பெற்றனம் என்று சொன்னார்கள். இப்பால் வக்கிரதுண்டமூர்த்தி தேவர்களுடைய குறிப்பைத்தெரிந்துகொண்டு, உமாதேவியாருடைய திருவடிகட்கு வந்தனைபுரிந்து, யாவருஞ் சயசயவென்று துதிசெய்யும்படியாகச் சிங்கவாகனத்தில் ஆரோகணித்து, அளவற்ற பூதசேனைகளோடுங் காசிநகரைநோக்கி எழுந்தருளினர். அவர்பின்னர் விசுவநாதரும் உமாதேவியாரும் விண்டு பிரமனாதியதேவர்களும் முனிவர்கள் முதலிய சகலருங் காசிப்பட்டணத்திற் சென்றார்கள். முன்னர் துராசதனுடையகொடுமைக்கு ஆற்றாதோடியவிசுவநாதர்முதலிய சகலரும் விநாயகமூர்த்தியை முன்னிட்டுக்கொண்டுவந்ததை அவுணராசன்கேட்டுக் கோபங்கொண்டு, தனதுசேனைகளனைத்தும் வெளிப்படும்படி முரசறைவித்தான். அம்மாத்திரத்தில் மழையொலியைக்கேட்ட பயிர்களைப்போல அவனதுநால்வகைச்சேனைகளும் உவகைகொண்டு, பூமிதேவி பொறுப்ப தரிதெனவந்து பணியும்படி சக்கிரவாளகிரியைச்சூழ்ந்த பெரும்புறக்கடல்போலத் தன்னைப்புடைசூழ, உடனே தான் சகலவாயுதங்களையுஞ் சேகரித்துக்கொண்டு இரதத்திலேறி, அச்சேனைப்பெருக்கோடுங் காசிநகரத்திற்குவெளியே வந்தனன். இப்பால் துராசதனேடுவந்த அவுணசேனைகளுடனே பூதசேனைகள எதிர்த்து, விசையலட்சுமி குதிகொள்ளும்படியாக அளவற்றயுத்தங்களைச்செய்தார்கள். அப்போது யுத்தகளமுழுவதும் பிணங்கள் மலைமலையாகக்குவிந்தன. ஆகாயமுழுவதுங் கழுகுகளும் பருந்துகளும் பந்தலிட்டுலாவின, எங்கும் உதிரவெள்ளம்பெருத்து இறைச்சலிட்டது. அவ்வுயுத்தத்திலே பூதசேனைகள்மீறி அவுணசேனைகட்கு வலிகுன்றியது. அதைத் துராசதன்பார்த்து கோபோத்தீபிதனாய் பூதசேனைகண்மீதுபாய்ந்து, வில்லைவளைத்து, ஒவ்வொருதொடையில் ஆயிரமாயிரமாக அளவற்றபாணங்களைப் பிரயோகித்தான். அதனால் வீறியிருந்தபூதசேனைகட்கு வலிகுன்றியது. குடைகொடி முதலிய சின்னங்கள் அறுப்பட்டன. ரதகஜதுரகமுதலிய வாகனங்கள்

சின்னபின்னமாயின. இவ்வாறு பூதசேனைகள் தமதுபண்டைகளு நண்டைக ளுமற்றுப் பூமியில்விழலும், துராசதனெனவன் சயமடைந்தவனுகக்கரு தி, மீட்டும் அதிவேகத்தோடு தன்துரதத்தைச் செலுத்திக்கொண்டுசெ ன்று, வக்கிரதுண்டமூர்த்தியை எதிர்க்கவந்தனன், அப்போது சுவாமி அத்துராசதனைப்பார்த்து, ஓ அவுணராசனே-அரியதவங்களினுல் சிவபி ரானிடத்தில் மேலானவரங்களைப் பெற்றிருக்கின்றனை, அவைகளைப் பின் னர் காப்பாற்றிக்கொள்ளும்வகையை நாடாமல்வீணேஒழிக்கும்வகைதே டினை, இனியேனும் அவ்வரங்களை யொழித்துக்கொள்ளாமல் சுகமடைய வேண்டியமார்க்கத்தைச் சொல்லுகின்ரும் நினைவாய்க் சேழ்ப்பையாக சொர்க்கலோகத்தை முன்போலத்தேவர்கள்ஆளும்படிவிடுத்து,நீநம்மை ச்சரணடைந்து நன்மார்க்கத்திலிருக்கக்கடவை, அவ்வா றிருப்பையாகில் இன்னுமளவற்றகாலம எல்லாப்போகபாக்கியங்களையுமனுபவித்துக்கொ ண்டு அதனுல்விளைகின்ற ஆனந்தக்கடலில் விளையாடிக்கொண்டிருக்கலா ம், இல்லையேல்-இப்போது தேவர்களெல்லாம் உன்னுல் எவ்வளவு துன் ப மனுபவிக்கின்ருர்களோ அவ்வளவுதுன்பமும் இனி நம்மால் உன்னை வந்துசூழ்ந்துகொள்ளும் என்று திருவாய்மலர்ந்தனர். இவையனைத்துங் காய்ந்தஊசி காதில்நுழைந்ததுபோல அவன்செவியிற்பட்டமாத்திரத்தி ல் அதிககோபங்கொண்டு, ஆஅ-ஆஅ-பிள்ளாய் நீசொன்னவார்த்தை கள் மிகவழகாயிருந்தன, பராக்கிரமத்திற்சிறந்த விண்டுவேமுதலியோர் என்கண்ணுக்குமுன்னர் நிற்கப்பயந்து ஓடிப்போயினர், பெரியோர்களி டத்திற்பழக்கமில்லாத யாலனுதலினுல் இளங்கன்றுபோல சிறிதுமச்சமி ல்லாமல் என்னிடத்தில் இவ்விதவார்த்தைகளைக்கூறினை, அளவற்றதவங் களைச்செய்து சிவபிரானிடத்தில் மேலானவரங்களைப் பெற்றிருக்கின்ற என்னைவெல்லுவது உன்னுலேலாது, இனி தப்பிப்பிழைக்கவேண்டுவை யேல் உன்னைவிடுகின்றேன் இப்போதே பின்பாராமற்சென்று உனது தாய்தந்தையரிடத்திற் சேரக்கடவையென்று சொல்லினன்.அதை சகல லோகநாயகராகிய கர்த்தன் கேட்டமாத்திரத்தில் கோபநகைசெய்து, மீ ட்டுமவனைப்பார்த்து, அடபேதாய்-சிவபிரானிடத்தில் அரியவரங்களைப் பெற்றிருக்கின்ருமென்று கெர்வப்படவேண்டாம், அவர்கொடுக்கின்ற வரத்தினுலேயே கெட்டுப்போனவர்க ளனேகருண்டு, அவர்களுள் நீயு மொருவனுயினை என்றுசொல்லித்,தமது சிங்கவாகனத்தை அவனுடை யதேருக்குநேராகச் செலுத்திச்,கரத்திலிருந்த மழுவாயுதத்தினுல் அவ ன்மார்பிற்ருக்கினர். அத்தாக்கலினுல் அவன்சரீரத்திற் கோரூறுமில்லா மற்போனதினுல் துராசதன் இடியேற்றினைப்போலக் கர்ச்சித்துச் சீறிச் சுவாமியின்மீது தனதுவாளாயுதத்தைச் சுழற்றிவீசினன், அவ்வாளை சு வாமி தமது மழுவாயுதத்தினுல் விலக்கி, அவன் நெற்றியில் தமதுகரத்தி னுற்குத்தித் திரும்பினர். அக்குத்தினுல் அவனதுநெற்றிபிளந்து உதிர வெள்ளம்பெருகியது.அப்போது துராசதனெனவன் மூர்ச்சையாகிச் சற் றுநேரம் உயிர்நீங்கினவனைப்போ லிருந்து, மீட்டுந்தெளிந்தெழுந்து,யுத் தஞ்செய்ய வலியற்று நாணித், தனதிருக்கையைநோக்கிச்சென்றுஆயா சந்தீர்த்துக்கொண்டிருந்தனன். யுத்தகளத்திலிறந்துகிடக்கின்ற பூதர்களை யெல்லாம் சுவாமியெழுப்பிக்கொண்டுதமதுபாசறையிற் சேர்ந்தருளினர்

அப்போது இருளைநீக்கி உலகத்தைவிளக்கவல்ல சூரியனானவன் மேற்றிசைக்கடலிற்குளித்தனன். உடனே விண்ணவரைக்காக்கவந்த விநாயகமூர்த்தியினுடைய கிருபையைப்போல சோடசகலைகளோடு நிறைந்த சந்திரனானவன் உதயமாயினன். உலகத்துள்ள சராசரங்களெல்லாம் அவ்வெண்ணிலவில்மூழ்கித் திருமேனிமுழுவதுந் திருவெண்ணீற்றினையணிந்த தொண்டர்கட்கொப்பாயின. இப்பால் துராசதனானவன் தனதுமந்திரிகளை யருகிலழைத்துவைத்து, யானைமுகத்தோடு யுத்தஞ்செய்யவந்த ஓர் சிறந்தபுருடனைச் சிறுவனென்றெண்ணினேன், பின்ன ரவனைக்கலந்துபார்க்குமளவில் அவனுக்குநிகராயினோர் ஒருவருமில்லை, வலியிற்பெரியவனாயினுஞ் சேனையிற் சிறிதேயுடையவனாயிருக்கின்றனன், யாமோ வலியினுஞ் சேனையினும் அவனிலுமிகுந்தே யிருக்கின்றோம்,ஒருவேளை யவனுக்கு யாம் தோல்வியடையவுங்கூடும், ஆதலால் இனி நமக்குள்ள எல்லாச்சேனைகளையுங் கூட்டிக்கொண்டு நாளையதினம் யுத்தத்திற்குப் போகவேண்டுமென்று சொல்லினன். உடனே அமைச்சர்கள் அவ்வாறேசெய்யக்கடவமென் றெழுந்து, திரிலோகங்களினும் அட்டதிசைகளினுமுள்ள சகலசேனைகளும்வந்து சேரும்படி எங்குந்தூதர்களையனுப்பினார்கள். அத்தூதர்களால் எங்குமுள்ள எல்லாச்சேனைகளும்வந்து துராசதனுடைய அரண்மனைவாய்தலை நெருங்கின. அப்போது யுத்தவலங்காரத்தைக்காணவருவான்போலச் சூரியனானவன் கீழ்த்திசைக்கடலினுதயமாயினன். இப்பால் துராசதனானவன் நித்தியவிதிகளை நிறைவேற்றிக்கொண்டு, கூலிப்படை-நாட்டுப்படை-காட்டுப்படை-துணைப்படை-கைப்படை-மூலப்படை என்னு மறுவகைப்படைகளும், மந்திரியர்-கருமாதிகாரர்-சுற்றத்தார்-கடைகாப்பாளர்-நகரமாக்கள்-படைத்தலைவர்- இவுளிமறவர்-யானைவீரர் என்னு மெண்வகைத் துணைவர்களுந் தக்கமுறைமைப்படி தன்னைப் புடைசூழ்ந்துவரச்சென்றுயுத்தகளத்தையடுத்தனன்.விநாயகமூர்த்தியும் பூதவீரர்களுடனேவந்து சேர்ந்தனர். இப்பால் துராசதனோடுவந்த பெருஞ்சேனைகளைச் சுவாமிபார்த்து,இவையனைத்தையுமோர் கணப்போதில் யாமேவெல்லுதுமென்றுகருகி, தம்மைச்சூழ்ந்துவந்ததேவர்களும் பூதர்களு மருட்கையடையும்படி, சிலவடிவம் சிங்கவாகனத்துடனே பத்துகைகளும், சிலவடிவம் மயில்வாகனத்துடனே ஆறுகைகளும், சிலவடிவம் பெருச்சாளிவாகனத்துடனே நாலுகைகளும், சிலவடிவம் மான்வாகனத்துடனேஇரண்டுகைகளும்,இவ்வாறுபற்பலவாகனங்களிற் பற்பலவடிவங்களாக ஐம்பத்தாறுபேதமாகத்திருவுருக்கொண்டு, துராசதனுடைய சேனாசமுத்திரத்திற்புகுந்து சமர்விளையாட்டினைச்செய்தனர். அப்போது அச்சேனைவீரர்களில் அளவற்றபேர் வீரசொர்க்கத்தையடைந்தார்கள். அளவற்றபேர் சோர்ந்துவிழுந்தார்கள். அளவற்றபேர் பாதலலோகத்தில் மறைந்தார்கள். அளவற்றபேர் திசாதிசைகளிலோடிப்பதுங்கினார்கள். இவ்விதமாகத் தனதுசேனைகளனைத்துமழிகின்றதைத் துராசதன்பார்த்து, நம்மவரும் இப்பாடுபடுவதோவென்று கோபித்து,அக்கினியாஸ்திரத்தையெடுத்துப் பிரயோகித்தனன். அவ்வத்திரமானது எங்கு மனற்சுவாலைகளை வீசிக்கொண்டு, பூதசேனைகளெல்லா நடுங்கும்ப

டி ஆக்கிரமித்துவர, அதை சுவாமிபார்த்து நகைத்து பற்சனியஸ்திரத்தையெடுத்து விடுத்தனர். அம்மாத்திரத்தில் அவ்வத்திரமானது அளவற்றமின்னல்களையும் இடிகளையும்பெருக்கி, சத்தமேகங்களுங்கலந்து வருஷிப்பதுபோல மழைகளைச்சொரிந்து. அக்கினியாஸ்திரத்தினுடையவலியையடக்கியது. அதைக்கண்ட துராசதன் வாயுவாஸ்திரத்தை எடுத்துவிடுத்தனன். அவ்வஸ்திரமானது பற்சனியஸ்திரத்தாலுண்டான மேகங்களையெல்லாஞ் சின்னபின்னப்படுத்தி எங்கும்பிரசண்டமாருதத்தைப்பெருக்கிக்கொண்டுலவ, அதை சுவாமிகண்டு பர்வதாஸ்திரத்தையெடுத்துப் பிரயோகம்பண்ணினர். அப்பர்வதாஸ்திரம் வெளிப்பட்டமாத்திரத்தில் மந்தரம்-இமைய முதலிய அளவற்றபர்வதங்களையுண்டாக்கி பூமிதொட்டு ஆகாயவரையில்மூட்டி வாயுவாஸ்திரத்தினுடைய வலியினைத்தொலைத்தது. பின்னர் அவுணராசனானவன் இனி இவனை ருத்திரப்படையினால் வெல்லுவோமென்றுகருதி, அதனைச் சோடசவுபசாரங்களோடு பூசித்துப் பிரயோகித்தனன். அப்படை வெளிவந்தமாத்திரத்தில் விழி வானத்தெழுந்து, பர்வதாஸ்திரத்தினுடையவீறுப்பினையடக்கிப் பூதவீரர்களுடைய சமூகத்திற்புகுந்து சின்னபின்னமாக்கியது. உடனே சுவாமியும் தம்மிடத்திருந்த ருத்திரப்படையினைவிடுத்தனர். பின்னர் இரண்டு ருத்திரப்படைகளுங்கூடி அளவற்றபோர்களைவிளைத்தன. அதனால் அண்டவடுக்குகளெல்லாங் குலைந்தன. சத்தசாகரங்களும் வற்றிப்போயின. பூதலத்திலுள்ள சராசரங்களெல்லா நீறாயின. இப்பால் அவ்வத்திரங்களிரண்டுமொன்றோடொன்று நெடுநேரம் யுத்தஞ்செய்து சமாக்களத்திலிறந்துகிடக்கின்ற சேனைகளையெல்லாம் விரைவிலெழுப்பித்தம்மையேவிய தலைவர்களிடஞ்சென்று சேர்ந்தன. பின்னர் அவுணராசனானவன் அரியதவத்தினாற்கிடைத்திருந்த ருத்திரப்படையும் வெற்றிபெறாமற் றிரும்பியதை எண்ணி எண்ணி ஏக்கமுற்று, மானமுங்கோபமு மேலிட்டவனாகித், தன்னுருவத்தைமறைத்துப் பற்பலமாயைகளைவிளைத்தனன். அவன்மாயைகளையெல்லாம் ஞானசொரூபியாகிய எமதுகர்த்தன் ஓர்நொடிப்போதிலழித்தருளினர். இவ்வாறு துராசதனானவன் அநேக அஸ்திரங்களை மாறிமாறி விடுத்தும் அளவற்றமாயைகளைச்செய்தும் பயன்பெறாமற்போனதினால் மனநொந்து, இப்பாலனாகிய வக்கிரதுண்டனைவெல்ல வொன்றினுங்கூடாது, ஆதலால் இனி யாம் தப்பி மறைந்துபோவதே உத்தமமென்று தீர்மானித்தான். அதை சுவாமியறிந்து, அவனுக்கு சிவபிரான்கொடுத்தருளியவரத்தையும் யோசித்து, அண்டமுகட்டையளாவத்தக்கதாக ஓர் பேருருவோடு மவனெதிரில்வந்து, அவனுச்சியில் ஒருபாதத்தையூன்றி, மற்றொருபாதத்தைக் காசித்தலத்தில்வைத்து, ஓ அவுணராசனே நீ சிவபிரானிடத்தில் அழியாவரம்பெற்றிருப்பதினால் இக்காசிப்பட்டணத்து மேற்றிசைவாய்தலில் எக்காலத்து நமதுபாதத்தின்கீழிருந்து, இவ்விடத்திற் பழிபாதகங்களைச்செய்துவருகின்ற துட்டர்களை யடக்கிக்கொண்டிருக்கக்கடவையென்று அனுக்கிரகஞ்செய்தனர். மேலான தவங்களைச்செய்து அரியவரங்களைப்பெற்றிருக்கின்ற துராசதனானவன் தனதுசிரத்தில் விநாயகமூர்த்தியினுடைய திருவடியைவைக்கப்பெற்றதினால் உடனே சகலமாயாபாசங்களினின்று நீங்கி, மெய்ஞ்ஞானச் செல்வத்தைப்

பெற்று, நித்தியானந்தசொரூபனாகி, அவ்வவர்கள்செய்துவருகின்ற தீமை
களையெல்லா நிவர்த்திசெய்துகொண்டிருந்தனன். தேவர்கள் கற்பகமலர்
களைச்சொரிந்தார்கள். ஆகாயத்தில் பஞ்சவாத்தியங்களு முழங்கின. முனி
வர்கள் வேதாகமங்களினாற்றுதிசெய்தார்கள், மற்றுமுள்ள மெய்யடியார்
களெல்லாம் விநாயகமூர்த்தியை அளவற்றதுதிகளினாற் கொண்டாடி ஆ
னந்தமெய்தினர். சிவபிரான் முன்போலவே உமாதேவியாரோடு காசிநக
ரத்துவிராஜனின்ற திருக்கோயிலில் எழுந்தருளி பிரமனாதியதேவர்கள் பு
டைசூழ்ந்து வணங்கும்படி வீற்றருளினர். திரிலோகங்களினுமுண்டாயி
ருந்த எல்லாத்தீங்குகளுமொழிந்தன. எங்கும் வேதாகமவிதிகள் தழைத்
தோங்கின. ஆங்காங்கு யாகாதிகிரியைகள் நிறைவேறின. இந்திரன்முதலி
யதேவர்கட்கு இடைவிடாது அவிர்ப்பாகங்கிடைத்துவந்தன. வன்னி-
மந்தாரை-அறுகு இவைகளினால் தேவர்கள் முனிவர்கள் முதலியயாவரு
ம் விநாயகமூர்த்தியை வழிபட்டு, அவரதுபெருங்கருணையினாற் றங்கட்ங்
கள் பகிகளை யதாப்பிரகாரமடைந்து ஆனந்தமெய்தினார்கள். தருமமுத
லிய நான்குபொருளையு மெளிதிற்றரவல்ல எமதுகர்த்தனுக்கு சகலரும்
உடுண்டிவிநாயகனென்னுந் திருநாமத்தினைச் சாற்றித் துதிசெய்தார்கள்
அதுமுதல் அக்காசிநகரமும் உடுண்டிநகரமென்னு மற்றொருபெயரையு
ம்வகித்திருக்கின்றது. இஃதன்றி விசுவநாதமூர்த்தி சன்னிதிக்கெதிரே
ஐந்துமுகத்தோடுங்கூடிய வக்கிரதுண்டமூர்த்தி யமர்ந்தருளினர். கோயி
லுக்குச்சத்தாவரணமாக வூர்ச்சுற்றிலு மற்ற ஐம்பத்தைந்துமூர்த்திகளும்
வதிந்தருளினர். ஆக ஐம்பத்தாறுமூர்த்திகளையும் நாளதுவரையில் தேவர்
கள்முதலிய சகலவான்மாக்களும் பூசித்துப் பெறத்தக்க பேற்றினையடை
ந்துவருகின்றார்கள். இந்த ஐம்பத்தாறுமூர்த்திகளில் ஒருமூர்த்தியைவிதி
விலக்கொன்றுக்கேற்றபெண்கள் பூசித்தாலும், அவர்கள் சகலதுன்பங்க
ளினின்றும் எளிதில்நீங்கி எல்லாப்போகபாக்கியங்களையுங் குறைவறப்
பெற்றுவாழ்ந்திருப்பார்கள். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே-அ
ராசதனுடையஆண்மையை யடக்கும்படி உடுண்டிவிநாயகர் திருவவதா
ரங்கொண்டருளிய அவரே, மற்றொருபோது திவோதாதனெனுமோரர
சனிடத்திற்சென்ற ஓர்திருவிளையாடலுண்டு, அதனையும்பாந்தமாகச்சொ
ல்லுகின்றேங் கேட்பீராக-பூர்வத்திலேபாற்மமெனச்சொல்லுகின்ற ஓர்
கற்பமிருந்தது. அக்கற்பத்தில் சுவாயம்புமனுவென்னும் ஓர் சக்கிரவர்த்
திபிருந்தனன். அவன் இறந்துபோயினபின் அறுபதினாயிரவருடம் மழை
பொழியாமல் சகலதேசங்களுங் காடாகியழிந்தன. இவ்வாறு அழிந்து
போகலும் பிரமனானவன் மனமிரங்கி, இனி இவ்வுலகங்களைப் பாது
காக்க ஓ ராசனையியமிப்பானாகிப், பூவுலகமுழுவதுந்தேடிச் சென்றனன்
அவ்வாறுசெல்லுகையில் காசிநகரத்தில் அரசகுலத்தினனான திரிபுஞ்ச
யனென்னுமொருவன் அரியதவத்தினைச்செய்துகொண் டிருக்கக்கண்டு,
அவனருகிற்சென்று, அவன்செய்ததவத்தைப் புகழ்ந்து, அரசனே-பூமி
யில் அரசாக்ஷிசெய்வாரின்றிச் சகலதேசங்களுங் காடாயின, எல்லாப்
பொருள்களுமழிந்துபோயின, ஆதலால் நீ உனதுசெங்கோலைக்கொண்டு
அரசாக்ஷிசெய்யவேண்டும், உனக்கு ஆதிசேடன் தனது புத்திரியாகிய
அநங்கமோகினியை விவாகஞ்செய்துகொடுப்பன், தேவர்கள் கற்பகவிரு

க்ஷத்திலிருந்து அனேக ஆடையாபரணாதிகளைக்கொடுப்பார்கள், அப்போது நீ சகலபோகபாக்கியங்களையுங் குறைவின்றி யனுபவித்திருக்கக்கடவும் உன்னை யாவருந் திவோதாசனென்று அருமைப்பெயரிட் டழைப்பார்கள், என்று பற்பல சந்தோஷவார்த்தைகளைக்கூறி, அப்போதே அவனுக்கு அரசாக்ஷிக்குரிய கிரீடத்தினையுந்தரித்தனன். அதற்கு இரிபுஞ்சயன் பிரமனைப்பணிந்தெழுந்து, சுவாமீ-தேவர்கள்காசிநகரத்தைவிடுத்து அப்பாற்போனாலன்றி யான்உலகஅரசாக்ஷியினுக் குடன்படேனென்றுசொல்லினன். அதற்குப்பிரமன் அவ்வாறேசெய்யுதுமென்று ஒப்புக்கொண்டு வழக்கப்படி விசுவநாதமூர்த்தியைத் தரிசிப்பதற்கு அவரதுசன்னிதானத்திற்குச்சென்றனன். அப்போது சிவபிரான் அளவற்றநாளாய்த் தவஞ்செய்துகொண்டிருக்கின்ற மந்திரகிரிக்கு அனுக்கிரகஞ்செய்யும்படி உமாதேவியாரோடு இடபவாகனத்தின்மீ தெழுந்தருளி, விநாயகர் - சுப்பிரமணியர்-நந்திகேஸ்வரர் முதலிய தலைவர்கள், பிரமன்-விண்டுமுதலியதேவர்கள், பிருங்கிமுதலிய கணநாதர்கள், இந்திரன்முதலிய திக்குப்பாலகர்கள், மாதேவர்முதலிய பதினொருருத்திரர்கள், அமரர்முதலிய பதினெண்கணத்தார்கள், முப்பத்துமுக்கோடிதேவர்கள், எண்பத்தெண்ணாயிரம்இருடிகள் புடைசூழ்ந்துவரவும், இடக்கை-உடுக்கை-உறுமி- தம்பட்டமுதலிய வாத்தியங்களையும், கொடி-கொடை-சாமரை ஆலவட்டமுதலிய சின்னங்களையும் பூதகணங்களேந்தி இருமருங்கினு மாரவாரித்து நீக்கவும் இவ்வித வைபவத்தோடு அம்மந்திரகிரிக்கு நேராகச்சென்றனர். அப்போது அம்மந்திரகிரியும் அதனருகிற் றவஞ்செய்துகொண்டிருந்த மரீசிமுனியும் சுவாமியை எதிர்கொண்டு பணிந்து துதிசெய்தார்கள். அவ்விருவரில் சிவபிரான் மரீசிமுனிவரைப்பார்த்து, உனக்குவேண்டிய வரத்தினைக்கேளென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கம்முனிவர் சுவாமி-அடியேற்குத் தேவரீருடைய திருவடிகளில் இடைவிடாத பத்தியும் சிவலோகவாசமுந்தரவேண்டுமென்று பிரார்த்தித்தனர். உடனே பரமசிவகடாக்ஷத்தால் அவரெண்ணத்தின்படி ஓர்விமானம்வர, அதில் அம்முனிவர் ஆரோகணித்துச் சிவலோகம்போய்ச்சேர்ந்து வாழ்ந்திருந்தனர். இப்பால் சிவபிரான் மந்திரகிரியைப்பார்த்து, உனக்குவேண்டியவரம் யாதென்று கேட்டனர். அதற்கு மந்திரகிரியானது மீட்டும்பணிந்தெழுந்து, சுவாமீ எல்லாத்தலங்களினுஞ் சிறந்த காசித்தலத்திலே சுவாமிகள் எவ்வாறு வாசஞ்செய்கின்றதோ அவ்வாறே, குசத்தீவிலிருக்கின்ற அடியேனிடத்திலு மெழுந்தருளி, சகலருக்கும் வேண்டியவரங்களை யனுக்கிரகஞ்செய்துகொண்டு, அடியேற்குப் பெருமையையும் மகிமையையுங் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தது. அத்தருணத்தில் பிரமனும் சுவாமியைப்பணிந்தெழுந்து, கர்த்தனே-உலகத்தில் அரசாக்ஷிசெய்பவரில்லாமல் அறுபதினாயிரவருடம் மழையில்லாமல் சகலதேசங்களுங் காடாயின அதனால் எவ்விதத்திலேனும் உலகத்திற்கு ஓரரசனை நியமிக்கவேண்டுமென்று கருதிச்செல்கின்ற அடியேன் காசித்தலத்தில் அரியதவத்தினைச்செய்துகொண்டிருந்த இரிபுஞ்சயனென்னுமோரரசனைக்கண்டு அரசாட்சிசெய்யவைத்தேன், அவனோ காசித்தலத்தில் தேவர்களுடைய சஞ்சாரமில்லையாகில் இவ்வரசாட்சிக் குடன்படுவேனென்றனன், அதற்கடி

யேன் அவ்வாறேசெய்யுதுமென்று சொல்லி சுவாமிகளிடத்தில் விண்ணப்பஞ்செய்துகொள்ளவந்தவன், இவ்வுலகம் விர்த்தியடையுமாறும் காசித்தலத்தில் தேவர்களுடைய சஞ்சாரமொழியுமாறும், சுவாமிகள் மந்திரகிரிக்கு அவ்வரத்தினைக் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குமேல் சிவபிரான் மந்திரகிரிசெய்த அரியதவத்தினையும் பிரமதேவனுடைய விண்ணப்பத்தையு நிதானித்து, அவ்வாறே மந்திரகிரிக்கு வரங்கொடுத்தருளி, தம்மோடுவந்த தேவர்களுடன் அக்கிரியிற்றுனே எழுந்தருளியிருந்தனர். அன்றுமுதல் காசித்தலத்தில் தேவர்களுடைய சஞ்சாரமில்லாதிருந்தது. திவோதாசனும் அக்காசித்தலத்திற்றுனேயிருந்து, ஆதிசேடன்புத்திரியாகிய அனங்கமோகினியென்பவளை விவாகஞ்செய்து, தேவர்கள்தந்த கற்பகவிருக்ஷத்தினுடைய ஆபரணங்களைத்தரித்துக்கொண்டு, தனதுகீர்த்தியானது எண்டிசைகளினும் பரவும்படியாக நீதிவழுவாமல் செங்கோல்செலுத்தித், தவந் தானமுதலிய எல்லாத்தன்மங்களையும் அன்போடுநடாத்தி அரசாட்சிசெய்துவந்தனன். அவன்செய்துவந்த அரசாட்சியினால் திங்கடோறு மும்மாரிபெய்தன. எங்கும் பயிர்வர்க்கங்கள் செழித்தன. ஊர்கடோறுங் குடிகள் தழைத்தோங்கின. யாகாதிகிரியைகள் குறைவின்றிநடந்துவந்தன. தேவர்கட்குச் சதாகாலமும் அவிற்பாகங்கிடைத்துவந்தது.எல்லாவான்மாக்களும்ஆனந்தமயமாகியிருந்தார்கள். மிகுமழை-மழையின்மை-மிகுகாற்று-தன்னரசு-வேற்றரசு - துன்மரணம்-பாவவினை-கள்வர்-தரித்திரர்-பிணியாளர்- விதவையர்-மலடர் முதலிய குற்றங்களனைத்தும்பெயரில்லாமலொழிந்தன.நாளுக்குநாள் தகுதியானகாரியங்களே தழைத்தோங்கின.இதல்லாமல்திவோதாசனானவன் கங்கையில்வந்து ஸ்நானஞ்செய்யாதபேர்களை யழைத்து உடனே ஸ்நானஞ்செய்வித்தல், கோவிலிலிருக்கின்ற விசுவநாதர் உடுண்டிவிநாயகர்-சுப்பிரமணியர்-திருமால்-வயிரவர்-தண்டபாணி முதலியமூர்த்திகளைத் தொழாதிருக்கின்றோரையழைத்துப் பத்தியாய்த் தொழச்செய்வித்தல் முதலிய நன்மார்க்கங்களையுங் கடைப்பிடித்தனன். இவ்வாறு திவோதாசனானவன் அளவற்றநாள் தனது செங்கோன் முறைமையில் வழுவாதபடி அரசாட்சிசெய்துவந்தும், தேவர்கள் காசியிற் சஞ்சாரமில்லாதிருப்பதைக்குறித்து மனந்தளர்ந்து, யாவருக்குங் குலகுருவாகியபிரகஸ்பதிதேவரிடத்திற்சென்று பணிந்தெழுந்து, சுவாமி-இனி யடியேங்கள் காசித்தலத்தில் எவ்வாறு சஞ்சரித்திருக்கக்கூடுமென்று கேட்டார்கள் அதற்குப் பிரகஸ்பதிதேவர் ஆலோசித்து, அன்பர்களே- அவ்விடத்தில் நடந்துவருகின்ற நன்மார்க்கங்கள் பிழைக்குமாயின் உடனே எல்லாமாறுபாடுகளுநடக்கும், அப்பால் தடையின்றி போகக்கூடுமென்று சொல்லினர். அதைத்தேவேந்திரன்கேட்டு, உடனே அக்கினிதேவனைக்கூவி,நீயின்றுமுதல் காசியில் அக்கினியில்லாதபடி செய்யவேண்டுமென்றுசொல்லினன். அவ்வாறே யவன்செய்ய, அதனால் வேள்வியாதிய கிரியைகள் நடத்துவதற்கு அழலில்லாமல் முனிவர்களெல்லாந் திரண்டோடித் திவோதாசனிடத்தில் முறையிட்டார்கள்.செங்கோன்முறைமையிற் றவறாத திவோதாசன் அதைக்கேட்டமாத்திரத்தில் மனந்தளர்ந்து,இது தேவர்களெல்லாங்கூடிச்செய்த சூழ்ச்சியாகுமென்று நிர்மானித்து, ஓ-அருந்

தவர்களே-இவ்வக்கினியொன்றேயல்லாமல் மழையையுங்-காற்றையும்-சூரிய சந்திரரையும் அவ்வாறே வசிக்கவொட்டாமற்செய்யினும் செய்யட்டும், நானே யாவுமாகவிருந்து தருமநெறிகெடாதவகை செய்விக்கின்றேன், நீங்கள் இருக்கையிற்சேருங்களென்றனன். அதுகேட்டமுனிவர்களெல்லாங் களிகொண்டிருந்தார்கள். பின்னர் திவோதாசனென்பவன் தானே அக்கினியாகியும் மேகமாகியும் காற்றாகியும் சூரிய சந்திரராகியுமிருந்து, அவைகளினின்று தானும்வேறாகி அரசாட்சி செய்துவந்தனன். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே- செங்கோன்முறைமையிற் றவறாத ஓரரசனிருப்பானாயின் இப்பூமிதேவிக்குக் கிடைத்தற்கரியபொருள் என்னவிருக்கின்றது. இப்பால் திவோதாசனென்பவன் உலகமுழுவதுமளிக்கவல்ல அரசனும், அவ்வுலகத்திற்கு வேண்டும்பொருள்களை விளைப்பவனுந் தானேயாகியிருத்தலும், தேவர்களெல்லாம்வெழுக்கித் தலைகவிழ்ந்தார்கள். காசித்தலத்திலுள்ள எல்லாஉயிர்களுங் களிப்படைந்தன. இவ்வாறு எண்பதினாயிரவருடங் கடந்தபின்னர், விசுவநாதமூர்த்தி மந்திரகிரியைவெறுத்தவராய்க் காசித்தலத்தைநினைந்து,தேவர்களைக்கூவி, இனியாம் காசித்தலத்தில் வசிக்கும்படி யெண்ணினோம், ஆதலால்நீங்களவ்விடஞ்சென்று, திவோதாசன் செங்கோல்முறைமையிற் றவறும்படிசெய்யுங்களென்று கட்டளையிட்டனர். அக்கட்டளையைத் தேவர்கள் சிரமேற்கொண்டு,யாவருந்தனித்தனிவேறுவேறுருவங்களையடைந்துசென்று,தம்மாற்கூடியமுயற்சிகளைச்செய்தார்கள். அவ்வாறுசெய்தும்திவோதாசன் தருமநெறியிற்கோடாதிருப்பக்கண்டுமனந்தளர்ந்து,சிவபிரான்பணித்தருளியகட்டளையைமுடித்திலோமே, அந்தோஇதென்னபாவமென்றுதுக்கித்து, அப்பிழைநீங்குமாறுயாவருந் தங்க ளபிமானத்தால்சிவலிங்கப்பிரதிட்டைசெய்துபூசித்தார்கள். அக்காரணத்தைச்சிவபிரானறிந்துயோகினிகளைவிடுத்தனர். அவர்களும்அத்தேவர்கள்போலாயினர். பின்னர்சூரியனையேவினர் அவனும்அவ்வாறேயாயினன். அதன்பின்பிரமனைவிடுத்தனர். அவனும் அவ்வாறேயாயினன். அப்பால் கணநாதர்களையெல்லாம் விடுத்தனர். அவர்களும் அவ்வாறே தம்மாற்கூடிய உபாயங்களைச்செய்துங் காரிய நிறைவேறாமற் கவலைகொண்டு, முன்சென்றவர்களைப்போலவே தாமுந்தவத்திற்றங்கினார்கள். இவ்வாறு தம்மாலேவப்பட்டவர்களெல்லா மீட்டுந்திரும்பாமற் றவஞ்செய்திருப்பதைச்சிவபிரானறிந்து,இக்காரியத்தைமுடிக்கவல்லவர் விநாயகமூர்த்தியேயென்று தமக்குள் நிச்சயித்து, உடனே டுண்டிவிநாயகரிடத்தில் தமதெண்ணத்தை யறிவித்தனர். அதற்கு எமதுகர்த்தனிசைந்து, இலக்கணவடிவின்மேற்பட்ட பேரழகினைவாய்ந்தஓர் பாலசோதிடராய்த்திருவுருக்கொண்டு, கரகமலத்தில் ஓர் புத்தகத்தினைத்தாங்கி, திரிகாலவர்த்தமானங்களையு மறிந்து சொல்லவல்லவராய்க் காசிநகரத்துட்சென்று, அவ்வவர்களுடைய நித்திரையில் சில பயங்கரமான சொப்பனங்களையுண்டாக்கியும்,அக்கனவைப் பகலில் அவர்களிடந்தோறுஞ்சென்று தாம் சோதிடத்தினு லறிந்துசொல்பவர்போல ஒன்றினும் பிழையாமற்சொல்லியும், இக்கனவினால்இன்னபயன்கூடுமென்று உரைத்து அவ்வாறேபலிக்கும்படி செய்வித்தும்,அந்நகரத்திற் சிலஉற்பாதங்களையுண்டாக்கி இன்னஉற்பாதத்தால் இன்னகெடுதிநேருமென்று போதித்

னும், ஆகாயத்திலிருக்கின்ற கோள்களை மாறுபடுத்தி அதையாவருக்குங் காட்டி இன்னமாறுபாட்டினால் இன்னதாழ்வுகள் நேருமென்று சாற்றியும், இக்கனவுகளினாலும் உற்பாதங்களினாலும் கோள்களினுடைய மாறுபாடுகளினாலும் இந்நகரம் உண்மையாய் அழிந்துவிடும் ஆதலால், நீங்களனைவரும் தப்பிப்பிழைக்கவேண்டுவீரேல் இப்போதே வேறுதேசங்களிற்சென்று வாழக்கடவீர்களென்று அஞ்சுவித்து அந்நிமிடத்தில் அவர்களை அந்நகரத்தினின்றுமோட்டச்செய்தும், அஞ்சி ஓடிப்போனவர்கள்போக நின்றவர்கள் இனி நமக்கு என்னதீங்குவிளையவிருக்கின்றதோவென்று பயந்து செய்யத்தக்க நற்கருமங்களில் மனதைச்செலுத்தாமல் மாறுபடும்படி நடாத்தியும், இவ்வாறு நகரத்தினரையெல்லாம் பயந்தோடவும் முறைமைதப்பவுஞ் செய்தபின்னர் திவோதாசனுடைய அரமனையின் அந்தப்புரத்தில்நுழைந்து, அங்குவசித்திருக்கின்ற ராசஸ்திரீகளிடத்திற்றனித்தனிசென்று, அவர்கட்கு முன்னடந்ததையும் இப்போது நடக்கின்றதையும், இனி நடக்கப்போகின்றதையும் உள்ளதுள்ளபடியே சொல்லியருளினர். அவர்களுள் லீலாவதியென்பவள்சோதிடராகவந்த விநாயகமூர்த்தியைச் சோடசஉபசாரங்களோடும் பூசித்து நிறுத்திக்கொண்டு அப்போதே ஓர்தூதுவனைக்கூவி, வேதவாக்கியம்போலே யாவையும் உள்ளபடியறிந்துசொல்லவல்ல ஓர்சோதிடர் இங்ஙனம் வந்திருக்கின்றாரென்று அரசனுக்கறிவிப்பாயென வாக்கியாபித்தனள். அவனவ்வாறேசென்று அறிவிக்க, அரசன் அவனைப்பார்த்து அச்சோதிடரை இங்ஙனமழைக்துவாருங்களென்று கட்டளையிட்டனன். அக்கட்டளையைக்கேட்டமாத்திரத்தில் எமதுகர்த்தராகிய சோதிடரானவர் அரசன்கொலுச்சபையிற்சென்று, கண்டவுடன் அவன்மனமுழுவதுங் குழையும்படி பிரபஞ்சமாயையினை நீத்த துறவினரைப்போலக் குளிர்ந்தமுகத்துடனே அவனெதிரில் நின்றனர். திவோதாசன் சுவாமியின் வரவைக்கண்டமாத்திரத்தில் எதிர்கொண்டழைத்துவந்து, ஓராதனத்திலிருத்தி, மிககபெருவகையோடு பணிந்து துதிசெய்து, சுவாமீ-இதுகாறும் இவ்வுலகத்தைப் பஞ்சேந்திரியம்போலப் பாதுகாத்து அரசாட்சிசெய்துவந்தேன், அவ்வரசாட்சியில் அடியேற்கிப்போது வெறுப்புண்டாயிற்று, ஆதலால் இவ்வாட்சி என்னைவிட்டொழியுமோ, அல்லது முன்போலவே யிருக்குமோவென்று மனதிற்சிறிதுங்கபடமில்லாமற் கேட்டனன். அதற்கு வேதநெறியிற்பிழையாத மெய்யடியார்கட்கு நற்கருமங்களையே சாற்றவல்ல பெருங்கருணையினைவாய்ந்த விநாயகமூர்த்தியானவர் தாமேஉத்தரங்கூறுவர். அரசனே-இத்தினத்திற்குப் பதினேழாநாள் ஓர் அந்தணர்வருவர், அவரோ நீ கேட்டகேள்விக்கு மறுமொழிகூறுவர். அவர்சொல்வதை நீ யன்போடு கேட்டு நடந்துகொள்ளுகவென்று சொல்லினர். அவ்வாக்கியத்தை அரசன் செவிக்கினிமையாகக்கொண்டு, சுவாமிக்கு விடைகொடுத்தனுப்பி அந்தப்புரத்திற்குச் சென்றனன். இப்பால் உடுண்டிவிநாயகர் காசிநகரத்திற்சென்று நடாத்திய திருவிளையாட்டினையும் திவோதாசனுக்கு ஓரந்தணன்வருவானென்று உணர்த்திவந்த காரியத்தையும் சிவபெருமானுணர்ந்து, விண்டுவை அந்தணராகப் போகும்படி உத்தரவு செய்தருளினர். உடனே விண்டுவானவர் பவுத்தனாகவும் இலக்குமி சவுத்தியாகவும் உரு

க்கொண்டு, இருவருங் காசிநகரத்திற்சென்று, பவுத்தனாகிய விண்டுவான வர் ஆடவர்கூட்டத் துட்புகுந்து,நம்மைப்போலஉயிர்வைத்திருக்கின்றபசுக்களையும் ஆடுகளையுங் கொலைசெய்துவேள்வி நடத்துகின்றீர்களன்றோ அவ்வேள்விகளினால்வரும் புண்ணியமானது அக்கொலையினால்நேரும்பாவத்திற் கெதிர்நிற்கவல்லதோ,கொலையானது இம்மையிற் சகலபுண்ணியங்களையுங்கெடுப்பதன்றி, மறுமையில் நரகத்தினையும் விளைக்குமென்று அறியீர்களோ,பாவகருமங்களைப் புண்ணியகருமங்களென்றெண்ணி நடத்துவோர்க்கு அருள் எங்ஙனங்கிடைக்கும், அந்தோ - கொலையே சகல பாவங்கட்குந் தாய் தந்தையாக சகலசாத்திரங்களுமுறையிடுகின்றனவே என இவ்வாறு பசுத்தம்பமுதலியவைகளைச்செய்து யாகாதி கிரியைகளை நடத்திவருகின்றவர்களுடைய மனமெல்லா மாறுபடும்படியாகப் போதித்து, அவர்கள்செய்துவருகின்ற மற்றெல்லாக்கருமங்களினும் பலகுற்றங்களைக்காட்டிவந்தனர். சவுந்திியாகிய இலக்குமியானவள் மங்கையர்கூட்டத்துட்புகுந்து, பிரமன்புத்திரர்களாகிய காசிபர் மரீசிதக்கன்முதலாயினோர் ஒருவர்க்கொருவர் சகோதரர்களாகியிருந்தும், தக்கனுடையபுத்திரிகளை மற்றையர் விவாகஞ்செய்து, தேவர்கள்முதலிய சகலரையும்பெற்று மேன்மையடைந்தார்கள், அவர்களே அவ்வாறாக,நீங்கள் வெவ்வேறுமுறைகளைவைத்துக்கொண்டு இன்பமனுபவிக்கின்றீர்கள், முறைமை பாராட்டி யனுபவிப்பதினாலுண்டாகுமின்பமும் ஓரின்பமோ, உயர்மக்களாயினோர் ஒருகாலத்து ஒருபொருளால் ஐம்புலனுநுகர்தற்சிறப்புடைத்தாய இன்பத்தைக் காத்தற்பொருட்டு முறைநீப்பரோயன்றி, பலகாலத்து பலபொருளால் பலதுன்பங்களையும் விளைப்பதாகியமுறை காத்தற்பொருட்டு இன்பத்தைநீக்குவரோ-ஐயோ இதென்னபாவம், நினைத்தவர்களுடனேகூடி யனுபவிக்கிற இன்பமேயின்பம், நினையாதவர்களிடத்தில் முறைமைபாராட்டிக்கூடுவதினால் பலதுன்பமே,என இவ்வாறு அக்கினிசாட்சியாய் விவாகஞ்செய்த கணவர்களையேயன்றி ஏனையோரை எள்ளத்தனையு நினையாதமங்கையரெல்லாங் கற்புநிலைமையினின்று கலையும்படியாகப்போதித்தனள். இவ்விருவர்களுடைய போதனையினாற் காசிநகரத்திலுள்ள ஆடவர்களும் ஸ்திரீகளுந் தத்தநெறிகளிற் பிறழ்ந்து பிரஷ்டத்துவமடைந்தார்கள். இவ்வாறுபதினாறுநாள்சென்றபின்னர் பதினேழாநாள்காலையில் திவோதாசனெழுந்து, இத்தினம் ஓரந்தணர்வருவாரென்று சோதிடர் சொல்லிப்போயினரோவெனத் தனதுமனதில் நினைத்தனன் அப்போதே அவ்வந்தணராகிய விண்டுவானவர் அரசனெதிரிற்போய்நின்றனர்.அவரைக்கண்டவுடன் அரசனானவன் ஆசனங் கொடுத்திருக்கச்செய்து,சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, இருகரங்களையுங்கூப்பி எதிர்நின்று, சுவாமீ-தேவரீர் விண்டுவென்று யானறிந்துகொண்டேன்,தேவரீருடைய வஞ்சகத்தொழிலினால்இம்மேலான காசிநகரத்தினுள்ளோர் மாறுபட்டு நெறிபிறழ்ந்தார்களென்று மறிந்தேன்,இவையனைத்தும் தேவர்களாற்செய்தசூட்சியென்று தெரிந்துகொண்டேன், எனது அஞ்ஞானமனைத்துந்தொலையும்படி கிருபையோடு முன்னமெழுந்தருளிய உடுண்டி விநாயகருடைய வல்லபத்தையுங் கண்டறிந்தேன்,முற்காலத்தில் அளவற்றபேர் தேவர்கட்கெல்லாம் பலதுன்பங்களைவிளைத்துநாசமாயினர், அது

போல யானும் என்று அறிவின்மையினால் தேவர்களையெல்லாம் புறப்ப டுத்தினேன், இனியேனு மத்தேவர்களைப் புறப்படுத்திய பாவங்களெல் லாமொழிந்து சிறந்த பேரின்பத்தை யானடையுமார்க்கம் தேவரீர் கிரு பைசெய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவை யனைத்தையும் விண்டுகேட்டு, இவன் எண்பதினாயிரம்வருடம் நீதியிற்றவறாதபடி அர சாக்ஷிசெய்துவந்தவனாதலால் இவனிடத்தில் உண்மையையே பேசவே ண்டுமென்று நினைத்தது, தமது கிசரூபத்தை அவனுக்குக்காட்டி, அரச னே-இக்காசித்தலத்தை விசுவநாதமூர்த்திக்குக் கொடுத்திடுவையாயின் அளவற்றபுண்ணியங்களைச் செய்தோர்கட்கு என்னபேறுகிடைக்குமோ அப்பேறு உனக்குக் கிடைத்திடுமென்று சொல்லித், தமதிருப்பிடஞ்செ ன்று, தமதூர்தியாகிய கருடனையழைத்து, தாம் காசிநகரத்திற்சென்று ந டத்தியகாரியங்களையெல்லாம் மந்தரகிரியிலிருக்கின்ற விசுவநாதமூர்த்தி க்கு அறிவித்துவரும்படி ஏவினர். பின்னர் திவோதாசன் விண்டுசொல் லிப்போன வார்த்தையினை நினைந்து மனமகிழ்ந்து, காசிநகரத்தை விசுவ நாதமூர்த்திக்கேவிடுத்துத், தன தரசுரிமையைத் தனது புத்திரனிடத்தி ல் ஒப்புவித்துத், தனது பொக்கசத்திலுள்ள பொருள்களிற் பாதியெடுத் து விசுவநாதமூர்த்திக்கு யாவரும்வியக்கத்தக்க ஓர்கோயிலினைச்சமைத் து, அதில் ஓர் சிவலிங்கத்தினைப் பிரதிட்டைசெய்து பூசித்துவந்தனன். இவ்வாறு சிலகாலம் ஆயினபின்பு, சிவபிரான் அவ்வரசனை அச்சிவலிங் கத்திற்றனே அயிக்கியஞ்செய்தருளினர். முன்னர் விண்டுவால்விடப்ப ட்ட கருடனானவன் மனோவேகத்தினும் விரைவாக மந்திரகிரியிற்சென்று விசுவநாதமூர்த்தியைப் பலமுறைபணிந்தெழுந்து, தாமனுப்பிய உடுண் டிவிநாயகராலும் மகாவிஷ்ணுவினாலும் நடந்தேறிய காரியங்களையெல்லா ம் விவரமாகச்சொன்னான். அவையனைத்தையும் விசுவநாதமூர்த்திகேட் டு சந்தோஷமாகிச், சகலபரிசனங்களோடும் வெளிக்கொண்டு காசித்த லத்தையடுத்தனர். உடனே காசியிலிருந்த துண்டிராசர் முதலாயினோர் சிவபிரானை எதிர்கொண்டுசென்று வணங்கினார்கள். அவர்களையெல்லாஞ் சிவபிரான் தம்மோடழைத்துக்கொண்டுசென்று, காசித்தலத்துள்நுழை ந்து, சகலருஞ் சயசயவென்று போற்றும்படியாகத் திருக்கோயிலின்கண் சென்று வீற்றிருந்தனர். உடனே அந்நகரத்தினரெல்லாஞ்சென்று பணி ந்தார்கள். விசுவநாதமூர்த்தியும் விசாலாட்சியம்மனு முகமலர்ந்து, இம் மேன்மையான காசிநகரவாழ்க்கையை உம்மாலன்றோ கிடைக்கப்பெற் றேமென்றுசொல்லித் துண்டிராசரை மிக்கபேருவகையோடு மணைத்து உச்சிமோந்து, தமக்கெதிர்நிற்கின்ற விண்டுவின்மீதுங் கிருபாநோக்கத் தைக் கடாட்சித்தருளினர். அப்பால் மாசிமாத அமரபக்ஷத்து அங்காரக சதுர்த்திவர, அந்நாளில் சந்திரோதயகாலத்தில் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோரோடு சிவபிரான் துண்டிவிநாயகரைப் பூசித்து, அக்காசி த்தலத்தில் எக்காலமும் பிரியாதிருக்கத்தக்க வாழ்க்கையைப் பெற்றனர்.

உ

கணபதிதுணை.

பன்னிரண்டாவது

வல்லபைகணேசர் திருவவதாரப்படலம்.

ஓ சவுனகாதிமுனிவர்களே - கணேசமூர்த்தி உடுண்டிவிநாயகர்திருவவதாரங்கொண்டு துராசதனைவென்று திவோதாசன் மனதைத்திரித்து விசுவநாதமூர்த்திக்குக் காசிநகரையளித்தருளிய திருவிளையாடலைசசொன்னோம், இப்பால் வல்லபைகணேசர் திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச்சொல்லுவோம்கேட்பீராக,முன்னொருகாலத்தில் பிரமதேவரானவர் தமது சத்தியலோகத்தில் மரீசிமுதலிய சிறுவிதிகளுந் தேவர்கள்-முனிவர்கள் முதலாயினோரும் பரிசுத்தமனத்தினராய்த் தம்மைப் புடைசூழ்ந்திருக்கும்படி சிங்காதனத்தில் வீற்றிருக்கின்றபோது, ஒருநாள் தமதுபுத்திரருட்சிறந்த மரீசியென்பவர் அவரைப்பணிந்தெழுந்து, சிருட்டி-திதி-சங்காரமென்னு முத்தொழில்களை நடாத்திவரு மும்மூர்த்திகளுள் தலைவராய், அம் மும்மூர்த்திகட்கு முத்தொழில்களைச் செய்வித்தவராய், ஞானமே வடிவாக உடையவராய், சத்தியமான வேதப்பொருள்களில் வல்லவராய், சகலலோகங்கட்கும் ஈசராய் எல்லாப்பொருளுக்குங் கர்த்தாவாய், சறுவவியாபியாய், சீவசாக்ஷியாய் இன்னு மிவ்வகைப்பட்ட குணாதிசயங்களையுடைய முதல்வர்யாரோ அவரை யடியேற்குத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குப் பிரமதேவன் தம்மோ டொப்பாருமிக்காருமில்லாத விநாயகமூர்த்தியைத் தியானஞ்செய்து, தமக்குள் வஸ்துநிச்சயந்தெரிந்துகொண்டு, ஆனந்தபரவசத்தராய விழிகளில் போதநீரைப்பெருக்கி, நாத்தழும்பேறும்படி வேதாகமங்களினாற் றுதிசெய்து, மிக்க மனஉருக்கத்தோடு மரீசிமுனிவரைப்பார்த்து, மைந்தனே-முன்னொருகாலத்தில் மூலவாணவத்தின்செருக்கினால் யானும் விண்டுவும் தனித்தனிப் பிரமம் யானென்று தருக்கி யுத்தஞ்செய்தனம், அப்போது பூவுலகத்தில் எங்களிருவரின்மத்தியில் கொழுந்துவிட்டெரிகின்ற அக்கினிரூபமாய் அண்டகோடிகண்முழுவது நீண்ட ஓர்சோதிதோன்றியது, அவ்வாறுநின்ற சோதி யெவரோ அவரோ-ஆகாயமத்தியகர், அவரோ-சறுவேசர், அவரோ கணேசர், அவரோ-மூவருள்ளுமுதன்மையாய் நீ வினவிய குணங்களனைத்தும் பொருந்திநிற்கின்றவர் என்றுசொல்லினன். அதற்கு மரீசிமுனிவர் மீட்டுந்தொழுதெழுந்து, சுவாமி-சகல உயிர்களையும் ஆக்கல்- அழித்தல் என்னுந் தொழில்களைப்பெற்று வாழ்கின்ற உங்களைப்போல அந்த அரனும் அழித்தற்றொழிலைப்பெற்று இருப்பதால் அவர்உம்முளொருவராயிருக்கவேண்டுமேயன்றி, உம்மிருவருக்கு மேலானவராய் முதன்மைபெற்றிருப்பது எந்தகாரணத்தாலென்று வினாவினன். அதற்குப் பிரமன் புன்னகைகொண்டு, மைந்தனே- ஆதியில் என்னையும் விண்டுவையுஞ் சி

ருட்டித்து, எங்கட்கு ஆக்ஞாமளிக்கவுமான வல்லபமுங்கொடுத்து, எங்களிதையத்தின்கண்ணு மிருந்து, எங்கள்முன்னிலையில் அவ்விரண்டுதொழில்களையு நடாத்துகின்றார். மேலும் மோகிதராகிய எங்களை இவ்வாறு சிருட்டித்துக் காத்தபின்பு எங்களைச் சங்காரமுஞ்செய்கின்றனர். அன்றியும் ஆதியில் வேதாகமகலைகள் யாவையும் உண்டாக்கி, எங்கட்கோதிவித்தவரும் அவரே, பூவிலே மணமும் அழலில் வெப்பமும் எள்ளில் நெய்யும் மணியிற் பிரகாசமும் விறகில் நெருப்பும்போல ஆன்மாக்கள்தோறு நிறைந்திருக்கின்றவரும் அவர் ஒருவரே, அவருடைய சங்காரத்திலழியப்பட்ட எங்களை மீட்டுந் தமதுபெருங்கருணையினால் சிருட்டித்துங் காத்தும் எல்லாச்சுகங்களையுங் கொடுத்தருளுகின்றனர். ஆதலால் சங்காரகர்த்தரான அவ்வொருவரே எங்கட்குமுதல்வரொன்றறியக்கடவை என்றனன். அப்பால் மரீசிமுனிவர் மீட்டும் பிரமதேவனைப்பார்த்து, அத்தனே-தேவரீர்கூறியவனைத்து முண்மையே - எல்லாம் பிரமமயமென்று தம்மையொத்த மேலோர்கள் சொல்லியிருக்க, சங்காரகர்த்தராகிய உருத்திரமூர்த்தியால் சகலவேதாகமபுராணங்க ளுண்டானதன்றி, அவைகளையெங்கட் குபதேசித்ததும் அவரேயென்று தேவரீர் எவ்வாறுசொல்லக்கூடும், அச்சந்தேகத்தினை அடியேற்கு நிவர்த்திசெய்தருளவேண்டுமென்றுகேட்டனர். அதற்குப்பிரமதேவன் சந்தோடங்கொண்டு, முன்னர் தாம் மகேச்சுரரால் உபதேசிக்கப்பெற்ற ஞானுபூதியை அம்மரீசிமுனிக்குச் சொல்லுவதாயினன்.

மாயையைத்தொழிற்செய்தியக்கிடவந்த மாயையிற்கலந்துநிற்றலினான் *
மாயையைக்கடந்தவர்தமைமாயா சுரூபியென்றுரைவழங்குதல்போ *
லாயவெப்பொருளும்விரவிநிற்றலினா லத்தகுமொற்றுமைநோக்கி...... *
மேயநல்லுபசாரத்தினாலெவையு மேதகுபிரமமென்றதுவே........... *

தங்குமொற்றுமையாற்சொன்னதேயன்றிச் சகலமும்பிரமமோவாகா... *
மங்குதலின்றிச்சகலமும்பிரம மயமெனுஞ்சுருதியினருத்த... ... . *
மெங்கணுமெந்தப்பொருளினுமின்றவ ரியைந்துடன்மன்னுகின்றாரொன் *
றங்கவர்தன்மையுணர்த்ததேயாகு மதுவன்றியொன்றன்றதன்றே... ... *

அன்னதாகையினாற்பிறப்பிறப்பின்றி யகிலவ்யாதிக்கமாய்விபுவா... ...... *
யன்னியமின்றிச்சகலவான்மாவி னந்தரியாமியாயிருக்கு .... *
முன்னருமீசர்யார்வரோவவரே முழுதருள்கணேசரன்னவரோ........... *
மன்னியசகத்துக்கொருபெருங்கத்தர் மற்றுவேறொருவருமலரோ... ... *

அவன்பரஞ்சோதிதத்துவாதீத னருவினனென்கநற்குணத்தோன் ... ... *
சிவன்பரத்தினுக்கும்பரன்வெகுரூபி திகழ்பாதத்துவனீசன்........... *
றவறிலிற்குணத்தன்சர்வகல்யாணன் தமக்குமோர்காரணனென்ன...... *
னெவர்களுந்துதிக்கப்படுவாக்கணேச னெங்களைத்தினம்புரக்கின்றார் ... *

வெளியெனவவர்தாமனைத்தையும்பொதிந்து விளங்குகின்றாரவருள்ளே *
வெளியிடையடைத்துவிட்டபம்போல விரவினவாருயிரனைத்தும் ... ... *

மொளியுறுஞானத்தரவுரிவுரித்தாங் குறுசமூசாரத்தினீங்கிக்... ... ...*
களிபெறுமிந்தவியல்பறிந்தவரோ கவியுடைக்கழலிணையடைவார் ... ...*

இத்தகுகவியின்மகத்துவமென்று வியம்பிடமுடியுமோமுடியா.........*
வுத்தமவேதமானதியாதோ ரிடத்துபசாரமாவெனையும்... ... .*
வைத்தநேமியையுஞ்சொல்வதோவந்த வைப்பினுமிதார்த்தமேயாகத் *
தத்துவாதிதனைதேவேசன் றன்னையேசொல்வதுகண்டாய்...........*

அன்னியமானபாவனைதன்று லிமுதற்றேவரைக்குறித்து ... .*
மன்னியமுனிதர்தங்களைக்குறித்தும் வகுத்திடுங்கருமங்களெல்லாம் .. *
மன்னருமேகபாவனையதனற் பரவுதேவேசர்தம்பாங்காத்...............*
துன்னுவதலதுவேறொருயாலுந் துன்னுறுதெனச்சொலுஞ்சுருதி......*

எங்கள்பாலிருந்துதனுகரணங்க ளியக்கிவொற்றித்துநிற்கையினு ... ...*
லெங்களையாளுஞ்சம்புவினுடைய வெழிற்படைப்பாதிகட்மையு ... ...*
மிங்குவேட்டவர்கட்கருள்வரமாதி யியல்புறுமருளையுஞ்சுருதி ....*
யெங்களுக்கியல்பாயுள்ளனவாக வியம்பிடுமுசமனுயொருசார்... ......*

மயக்கினுற்சிவனேடொப்பவெங்களையும் வைத்தெவனுரைக்கின்று னவ
சயக்கொடும்பாவியாய்நரகத்திற் ருழ்குவன்யாவனெங்களையு... ... [னே
மியக்குமீச்சுரனேடொப்பமேலாக வியம்புகின்றுனந்தப்பாவி... ......*
மயக்குமெத்துயர்க்குமாகரமான பகையெனப்பாவியாகின்றேம் ... .. *

அதிகபுண்ணியங்களியற்றினேர்க்கின்ப மருள்சிவனுங்கணேச்சுரரே ...*
பதியவரருள்சேர்நாங்களேபசுக்கள் மன்னியவிதற்கொருசான்று... ...*
முதிர்கடலுலகில்விதியினுலெம்மான் முற்றியபூசனைகொண்டு... ... ...*
கதிகொடுத்தனேகங்கணேசமூர்த்திகடாங் கவின்றிருக்கின்றனகாணுய் *

அந்தமூர்த்திகளைபுத்திமுத்திகளை யாதரித்திரந்தவர்க்கெல்லாஞ் ... ...*
சிந்துமாமழையோல்வழங்குகின்றனவச் செய்கையான்மரீசியேநீயும்...*
வந்தம்விடிரண்டுந்தமக்குறுக்கணேசர் பதங்களேசரணமாவடைதி......*
யிந்தவாறெனக்குமயேச்சுரர்தம்மா வியம்பிடப்பட்டதுகண்டாய்... ...*

இவ்வாறு பிரமநிச்சயத்தையும் வேதாகமபுராணங்களுண்டான காரணத்தையும் அப்பிரமமே-துஷ்டசன நிக்கிரகஞ் சிஷ்டசன பரிபாலனஞ்செய்யும்பொருட்டு கணேசமூர்த்தியாகத் திருவுருக்கொண் டெழுந்தருளியதையும் விவரமாக உபதேசித்து, மைந்தனே-அளவளாவிய மோகவுள்ளத்தினுல் கணேசருக்கு மேலானமூர்த்தி உண்டென்று சிறிதுநினையற்கவென்று சொல்லினன். இவையனைத்தையு மரீசிமுனிவர்கேட்டு, சந்தேகங்களினின்று நீங்கித் தெளிவெய்தி, முன்னெருபோது அப்பிரமனுடைய சிருட்டியாலுண்டான (மானதசரசு) என்னுந் தடாகக்கரையிற் சென்று, மேலானசெல்வத்தைப் பெறவேண்டுமென்று, கணேசமூர்த்தியை மனதிற்றியானித்து, மழை-பனி-வெய்யலாதிகட் கிளையாது, இருபத்தோராயிரவருடம் நிராகாரமாயிருந்து, அரியதவத்தினைச் செய்தன

ன். அத்தவத்திற்குக் கணேசமூர்த்தி மனமிரங்கி, நவரத்தின ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற மூடிகவாகனத்தின்மீது மழுவாயுதத்தினைத்தாங்கிய திருக்கரத்தோடு தரிசனந்தந்தனர். உடனே மரீசிமுனிவர் திகைத்தெழுந்து, அனந்தமுறை சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து வேதாகமங்களினுற் றுதிசெய்துநின்றனர். அதற்கு விநாயகமூர்த்தி கிருபைசெய்து, அன்பனே-உனக்குவேண்டியவரங்களைக் கேளென்று திருவாய்மலர்ந்தனர். அதைக்கேட்டமாத்திரத்தில் மரீசிமுனிவர் ஆனந்தபரவசத்தராகி, ஆடிப்பாடி அனந்தமுறை வலம்வந்து, தமதுள்ளத்தில் விழைந்தவரங்களில் ஒன்றையும்விடாமற் கேட்பதாயினர்.

தேவதேவமாதேவ தேவரரிச்சித்திடும்பாத.........................*
யாவராகச்சரணடையி னவர்க்கேகருணைசெய்குந்தலைவ... ....*
பூவனரியாகியர்துறக்கம் பூவந்தரம்பாதலந்தமக்கும்......... ....*
காவல்புரியுமதிகாரங் கடையேன்றனக்குத்தரல்வேண்டும் ....*

யாங்குள்ளவருமெனதாணை யிகவாதியற்றிவரல்வேண்டும் ... .*
யாங்குமடியேற்குனதருளா லிரும்பூசனையுமுறல்வேண்டும்..... ......*
யாங்குமெனையேயிமையவர்க ளெண்ணியெனைச்சார்ந்திடல்வேண்டும் *
யாங்குமடியேற்கோரிடரு மெய்தாதிருத்தல்வேண்டுமே...... ....*

வேதபாராயணராகி மிகுசற்குணராயறிவினரா............... ... .*
யேதமேதும்புரியாரா யிலகாநிற்குமைந்தர்பலர்............., ...*
நாதநாயேற்குறல்வேண்டு நம்பாவடியேனினையன்றிக்... ....*
காதலால்வேறொருதெய்வங் கருதாதிருத்தல்வேண்டுமே......... ......*

வள்ளலெனுமெம்பெருமானின் வாமபாகத்திருக்கின்ற...... ... .*
தெள்ளுமருளீச்சுரியான சிவையேயெனக்குப்புத்திரியாய்... ... .*
நள்ளவேண்டுமவடன்னை நாயேன்வதுவைசெய்தளிப்பக்...............*
கொள்ளவேண்டுநீயென்னைக் குழையாதளிக்கவேண்டுமே... ... .*

இவ்வாறு மரீசிமுனிவர் கேட்டவரங்களையெல்லாம் விநாயகமூர்த்திகொடுத்தருளி அந்தர்த்தானமாயினர். இப்பால் அம்முனிவர் அமுதுண்டவரையொப்பக்களித்து, தமதுதந்தையாகிய பிரமதேவனை நினைத்தனர். அக்குறிப்பினைப் பிரமதேவனறிந்து, அப்புத்திரன் கொண்டிருக்கின்ற கோட்பாட்டினையு நிதானித்து, ஐயையோ-வேதங்களாலும் அளவிடற்கரிய மேலானமூர்த்தியை அரியதவத்தினுல் தரிசிக்கப்பெற்றும், சற்றேனு முத்தியின்கண் விருப்பம்வையாது, மோகத்தை விருத்தியாக்கவல்லபோகத்தை வீணேவிழைந்தனன். அவனுடைய கன்மானுபவத்தை யறிந்தே விநாயகமூர்த்தியும் அவன்விரும்பியவரங்களைக் கொடுத்தருளினர். இனியவன் அவையனைத்தையும் அனுபவித்தே தீரவேண்டும், முத்தியும் அக்கடவுளனுக்கிரகத்தாலல்லது அவனுக்குக் கைகூடாது, என்று பலவாறு தமக்குள்கிலேசித்து, அம்மரீசிமுனிவரிடத்திற் சென்றனன். உடனே அம்முனிவர் பிரமதேவனைப் பணிந்தெழுந்து, அண்ணலே-யான்வாசஞ்செய்வதற்கு ஓர் திவ்வியநகரத்தினைச் சிருட்டித்துக் கொடுக்கவேண்டு

மென்றுகேட்டனன். அதற்குப் பணிந்தகுமாரனை ஆசிர்வதித்து, திரிலோகத்திலுமில்லாத ஓர்நகரத்தினைச் சிருட்டித்து, அதற்குப் பிரமநகரமென்று பெயரிட்டுக்கொடுத்தனன். அந்நகரத்தில் மரீசிமுனிவர் பிரவேசித்து, நவரத்தினமயமாய் கோடிசூரியோதயம்போல விளங்குஞ் சபாமண்டபத்தில் கொலுவிருந்து,பிரகற்பதிபகவானைச்சேர்ந்த அளவற்றதேவர்களும் சுக்கிரபகவானைச்சேர்ந்த எண்ணற்ற இராக்கதர்களும் சூரியன் முதலிய கோள்களும் இந்திரன் முதலிய திசைக்காவலர்களும் மற்றுமுள்ள சகலரும்வந்து பணிந்து புடைசூழும்படியாக அரசாட்சிசெய்து வந்தனர். அப்போது பிரமதேவன் தேவவல்லியென்னும் ஓர்கன்னிகையைச் சிருட்டித்துக்கொடுக்க, அவளை மரீசிமுனிவர் வேதாகமவிதிப்படி விவாகஞ்செய்து, மேலான ஆயிரம்பிள்ளைகளையும் பெண்களையும் பின்று, சகலயோகபாக்கியங்களையுங் குறைவறப்பெற்று வாழ்ந்திருந்தனன். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே-இனி மரீசிமுனிக்கு விநாயகமூர்த்திகொடுத்தருளியவரத்தினால் உமாதேவியார் வல்லபையாகத் திருவுருக்கொண்டதும், அவ்வல்லபையை எமதுகர்த்தன் கணேசமூர்த்தியாகத்திருவுருக்கொண்டுவந்து விவாகஞ்செய்தருளியதுஞ் சொல்லுவோங் கேட்பீராக, இவ்வாறு மரீசிமுனிவர் அரசாட்சிசெய்துவருகின்ற காலத்தில், ஒருநாள் கைலாயத்தில் விண்டுவாதியதேவர்கள் புடைசூழ்ந்து வணங்கும்படியாகச் சிவபிரான் திருவோலக்கமண்டபத்தில் வீற்றிருக்கின்றபோது, உமாதேவியார் சிவபிரானைப்பணிந்தெழுந்து, ஓ சகலதேவர்கட்கு மேலானகடவுளே-ஓ அடியார்கட் கருள்செய்யவல்ல வள்ளலே - ஓ எங்கும் வியாபியாயிருக்கின்ற சோதியே-ஓ சுரூபானந்தமே-இவ்வுலகங்களிலுள்ள சராசரங்களினிலைமையை அடியாட்குத் தெரிவித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்குச சிவபிரான் கிருபைசுரந்து,பெண்ணே - நிமித்தம்-துணை-உபாதானமெனச் சொல்லுகின்ற மூன்றுகாரணத்தினால்உலகங் காரியப்படுகின்றது, அக்காரண மூன்றுமின்றிக் காரியமான உலகமில்லை, இவற்றுள் நிமித்தகாரணம் யாம், துணைக்காரணம் நமதுசத்தி, உபாதான காரணம் மாயை, இம்மூன்றினுள் துணைக்காரணமாகிறசத்தி நீயேயென்றறியக்கடவை யென்றனர். அதைக்கேட்ட உமாதேவியார் தருக்கிநின்று, சுவாமீ-சத்தி யானேயாகில் எவ்விதத்தில் யோசிக்கினுந் தேவரீ க்கு உடலும் உருவமும் யானன்றி வேறில்லை, எனதசைவினாலன்றோ சகலலோகங்களு மசைகின்றதென்றனள். இவ்வாறு உமாதேவியார் தருக்கிக்கூறிய வார்த்தையினைச் சிவபிரான்கேட்டுக் கோபங்கொண்டு, பெண்ணே-நமதுபெருமையை எவ்வளவும் ஒருவரால்காணுதற் கருமையாயிருக்க, நீ சிறிது நாணமில்லாமல் நமக்குமுன்னே உன்னை நீயேபுகழ்ந்துகொண்டனை, சிருட்டிமுதலிய முத்தொழில்களும் சூரியனுக்குமுன் கமலம்போலப் பூக்குகின்றொழிதல் நம்மாலன்றி மற்றொருவரா லாவதில்லையென்பதை இப்போதே தெரியச் செய்கின்றோம் பாரென்று உலகங்களிலுள்ள சத்திகளையெல்லாம் ஒடுக்கிக்கொண்டனர். அம்மாத்திரத்தில் சூரியன்-சந்திரன்-அக்கினி யென்னு முச்சுடர்களும் இல்லாமற்போயின. அதனால் இரவும் பகலுமில்லாமல் எல்லாத்தொழில்களுமற்று, சர்வசங்காரகாலம்போ லாயது. அச்செயலை உமா

தேவியாரறிந்து, இனி யாம் யாதுசெய்யக்கடவோமென்று பயந்து, நடுங்கி, தாம்கொண்டிருந்த கருத்தினையெல்லா மொழித்து, சிவபிரானுடைய வல்லபமின்றி ஒன்று நிலவுதலில்லையெனத் தமக்குள் நிச்சயித்து, அவரது திருவடிகளில் அனந்தமுறைதொழு தெழுந்து, இருகரங்களையுங் கூப்பிநின்று துதிசெய்வதாயினர்.

சயதேவதேவசயபத்தர்நேச சயவெங்குநின்றதலைவ ... ... *
சயவாரணங்கண்முறையிட்டுமின்னு மறியாமைநின்றசரண .. ...*
சயநாரணற்குமறையோற்கும்யார்க்குந் தனுவாதிநல்குமிறைவ ... *
சயநாதவின்றுனியல்புள்ளவாறு தமியேனுணர்ந்துதொழுதேன் ... *

வித்தின்றிநாறுவளரப்பணித்து விமலத்தடைந்தவுயிரின் ... *
கொத்தன்றியேனைவினைபிற்படார்ந்து குழையாவியாவுமலமார் .. *
பித்தின்றியைந்துதொழிலானுமுத்தி பெறவாடுகின்றபெரும ... ...*
தத்தின்றியின்றுனியல்புள்ளவாறு தமியேனுணர்ந்துதொழுதேன் ... *

அனியாயமானவினையின்சுகங்க ளடைதோறுமாரதுகர்வுற... ... ...*
நினியேதுவேறுகதியென்றுதம்மு ளிறுமாந்திருக்குமவரைத் ... ...*
துனியாதுமும்மையுருவாயிருந்து துரிசிற்பிரித்துமருவுந் ... *
தனியீசவின்றுனியல்புள்ளவாறு தமியேனுணர்ந்துதொழுதேன் ... *

இவ்வாறு உமாதேவியார் துதிசெய்து, ஓ கர்த்தனே-தேவரீரையன்றி ஓரணுவும் அசையாதென்பதை யறிந்தனன், அடியாள் அறிவின்மையினாற்செய்த அபராதத்தினைப் பொறுத்துக்காப்பதன்றி, பழையபடி உலகத்தையெல்லாம் உண்டாக்கி யருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர் அதற்குச் சிவபிரான் மனதிரங்கி, முன்னர் பதினொருகோடி ருத்திரர்களுண்டாகும்படி நினைத்தருளினர். அம்மாத்திரத்தில் அவர்களெல்லாம் நித்திரையினின்று நீங்கினவர்களைப்போலப் பொள்ளென்றெழுந்தார்கள் எழுந்த பதினொருகோடி உருத்திரர்களும் ஏகசித்தர்களாய்ச்சிவபெருமானுடைய திருவடிகளை மனதிற்தியானித்து, நடந்தகாரியங்களனைத்துங் கர்த்தனது திருவிளையாட்டென்றறிந்து, உறங்கியிருக்கின்ற லோகமகோடிகட்கெல்லா மழிவையுண்டாக்கும்பொருட்டுத் திருவிடை மருதூரென்னுந் தலத்தினைச்சார்ந்து, சிவராத்திரியாகிய அவ்விரவில் நாலுகாலமும்வேதாகமவிதிப்படி பூசைசெய்தார்கள். அப்பூசனைக்குச் சிவபிரான் கிருபைகூர்ந்து, அவர்களெதிரிற் பிரத்தியட்சமாயினர். உடனே அவ்வுருத்திரர்களெல்லாந் திகைத்தெழுந்து, அனந்தமுறை தீர்க்கதண்டன்செய்து, கரங்களைச்சிரமேற்கூப்பிநின்று துதிசெய்வதானார்கள்.

போற்றிவிச்சுவரூபனு யிருந்தபூரணனே... ... ...*
போற்றியாவையும்படைத்தளித் தழிக்கும்புண்ணியனே .. *
போற்றியெவ்வகைப்பொருளுக்குஞ் சுதந்தரப்பொருளே ...*
போற்றியெற்றைக்கும் பொன்றுறாத்தனுவுடைமுதலே ...*

வீரபோற்றிமும் மலத்தையும்வேரொடுகளையுந் ... ... *
சூரபோற்றிதுட்டரையடுஞ் சூலங்கையேந்துஞ்... ... ... *

தீரபோற்றிநற்றிருவிடை மருதெனச்சிறந்த ... *
வூரபோற்றியெம் முளத்தமரொருவனேபோற்றி ... *

இவ்வாறு யாவருந்துதிசெய்து ஓ சர்வேசனே- சகலலோகங்களையும் பழையபடி உண்டாக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபிரான் மனமகிழ்ந்து, அவ்வாறே சகலலோகங்களுமுண்டாகுகவென்று அநுக்கிரகஞ்செய்து, அன்பர்களே - உங்கட்குவேண்டிய வரங்களைக் கேண்மின்களென்று திருவாய்மலர்ந்தனர். உடனே-அப்பதினொருகோடி உருத்திரர்களு மறுபடியும்பணிந்தெழுந்து, ஓ பக்தவச்சலனே யாமெல்லோரும் இவ்விரவில் தேவரீரை வேதாகமவிதிப்படி எவ்வாறு நாற்காலமும் பூசித்தோமோ, அவ்வாறே இனி யாவரும் பூசிக்கவேண்டும், இச்சிவராத்திரியால் அடியேங்கட்குண்டாகிய புண்ணிய மெவ்வளவோ அவ்வளவும் அவ்வன்பினர்க்கு உண்டாகவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதுவும் சிவபிரான்கொடுத்தருளி அந்தர்த்தானமாயினர் இவ்வாறு அவர்கள்கேட்டவரங்களைச் சிவபிரான்கொடுத்து மறையுமுன்னமே, அவரதுபெருங்கருணையினால் விண்டுமுதலாயினோர் அறிவுடையவர்களா யெழுந்தார்கள். சூரியனாதி முச்சுடர்களும் உலகத்தில்பிரகாசித்தன. இப்பால் அறிவுடையவர்களா யெழுந்த தேவர்கள் - முனிவர்கள் முதலாயினோர் இவையனைத்தும் சிவபெருமானுடைய திருவிளையாட்டென்றறிந்து, யாவரும் அத்திருவிடைமருதூரிற்றானேசென்று, எமதுகர்த்தனை வேதாகமமுறைமைப்படி வழிபட்டு, பின்னர்யாவருங் கயிலாயவரைக்குச்சென்று, சிவபிரானை அனந்தமுறை பணிந்து துதிசெய்து, ஓ தீனசரண்யராகிய கிருபாலுவே-யாங்களனைவரும் அளவற்றநாள் இருளிற்கிடந்து நித்திரைசெய்திருந்ததும், பின்னர் சுவாமிகளுடைய கிருபையினால் அந்நித்திரையினீங்கி அறிவுற்றெழுந்ததும் சுவாமிகளுடைய திருவிளையாட்டாயினும், நித்திரையிலிருந்த அத்தனைநாளும் யாங்கள் நித்தியகன்மாதிகளினின்று நீங்கியகுற்ற நீங்குமாறு ஓர்பிராயச்சித்தந் தயைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குப் பக்கபாதமென்ப தோர்சிறிதுமில்லாத எமதுகர்த்தனவர் சந்தோஷித்து, ஓ தவத்தர்களே - இக்குற்றம் பார்ப்பதியினுடைய தருக்கினாலுண்டானதால் நீங்கள்செய்துகொள்ளவேண்டிய பிராயச்சித்தம் ஒன்றுமில்லை இன்றுமுதல் நீங்கள்யாரும் விசனமில்லாமல் சகலகருமங்களையும் வேதாகம முறைமைப்படி செய்துகொள்ளலாமென்று விடைகொடுத்தனர். அதை அவர்களனைவருங்கேட்டு மனமகிழ்ந்து, தத்தம்பதிகளைநோக்கிச் சென்று, எல்லாக்கருமங்களையும் வழுவின்றிநடத்திச் சுகமுற்றார்கள். இப்பால் உமாதேவியார் பரமேஸ்வரருடைய திருவுளக்கருத்தினையுணர்ந்து, மிக்க பயபத்தியுடனே கர்த்தனைப்பணிந்தெழுந்து, சுவாமீ- அடியாள்பொருட்டுத்தேவரீர் சகலலோகங்களையும் இருளில் ஒடுக்கிவைத்தபடியால் அப்பாவ மென்னைவிட்டொழியுமாறு யான்செய்துகொள்ள வேண்டிய பிராயச்சித்தம் யாதோ-அதனைத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குச் சிவபிரான் புன்னகைசெய்து, மிக்கமனமகிழ்ச்சியோடு உமாதேவியாரைப்பார்த்து, பெண்ணே

நீ நமக்குமுன்னிருந்து. உன்னை நீயேஉயர்த்திப்பேசினை - அப்பெரும்பி ழையினால் உலகத்தில் இருள்மூடிக்கொண்டது, அதனால் சகலவான்மா க்களுந் தத்தங் கருமங்களினின்று நீங்கும்படியானகுற்றம் விளைந்தது, நீ சகலவான்மாக்களுக்குந் தாயாதலால், இவ்வுலகில் குழந்தைக்கு வியா திநேர்ந்தால் அவ்வியாதி நீங்கும்படி அக்குழந்தையையீன்ற தாய் மருந் தருந்துவதுபோல நீயே பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேண்டுமென் று திருவாய்மலர்ந்தருளினர். அதற்கு உமாதேவியார் மனமிசைந்து, மீ ட்டுந்தொழுதெழுந்து, சுவாமி-அடியாளே பிராயச்சித்தஞ் செய்துகொ ள்ளவேண்டுமென்று திருவாய்மலர்ந்தருளியதால் அப்பிராயச்சித்தம் யாது, அதனை யியற்றுந்தலமெது, அவைகளையும் அடியாட்குக்கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குக் கர்த்தன்.உமாதேவி யாரைப்பார்த்து, பெண்ணே-பூவுலகத்தில் மிகவுஞ் சிறப்புற்றதாய், தரு மஸ்வரூபமாய், யமனோடும் உற்பவித்தநலத்தினால் யமுனையென்னும்பெ யரைவகித்ததாய், அடுத்தோர்கட்கு நற்கதியைத்தரவல்லதாய் ஓர்நதியுண் டு, அந்நதியில் ஓர்தாமரைப்பூவிலே நீ சங்குவடிவங்கொண்டு, சிலநாள்வ ரையில் நமதுதிருவடிகளைச் சந்தோஷமாய்த் தியானஞ்செய்துகொண்டி ரு, அதற்குமேல் மரீசிமுனிவன் அந்நதிக்குவரநேரும், அப்போதவன் நீ சங்குவடிவோடுமிருக்கின்ற கமலத்தைக்கண்டு ஆச்சரியமாகி அருகி ல் வருவான், அச்சமயத்தில் நீயோர்கன்னிகையாகுக, பின்னரவன் உன் னை மகளாகக்கொண்டுபோய் வளர்ப்பான், அக்காலத்தில் நீ நமதுருவை த்தியானித்து ஏகாக்கரமந்திரத்தைஇடைவிடாது செபஞ்செய்துகொண் டிரு, உனக்குப் பன்னிரண்டாவது வயதாகுங்காலத்தில் நாமங்ஙனமெ ழுந்தருளி உன்னை விவாகஞ்செய்துகொண்டு, உனதுகுறையை முடிப் போம், என்று திருவாய்மலர்ந்தனர். அம்மாத்திரத்தில் உமாதேவியார் சிவபிரானிடத்தினின்றும் விடைபெற்றுச்சென்று, யமுனாதீரத்தையடை ந்து, அந்நதியிற் பூத்திருக்கின்ற அளவற்றகமலங்களுள் ஒருகமலத்தினு டையமத்தியில் சங்கவடிவாகித், தமது இருதயகமலத்தில் சிவபெருமா னுடைய திருவடிகளைத் தியானஞ்செய்துகொண்டிருந்தனர். உமாதேவி யார் வாசஞ்செய்யத்தக்க மேன்மையையடைந்த அக்கமலமானது ஏனை யகமலங்களினுஞ் சிறந்ததாய், தேவர்களுங்கண்டு வியப்பெய்து நிலைமை யிலிருந்தது. கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே - தம்மையடைந்த சகலவான்மாக்களையும் ஆணவவிருளினின்று நீக்கிப் பரிபாகஞ்செய்யவ ல்ல சங்கரியே இவ்வாறு சங்கவுருவாகி இருந்தமையாலல்லவா அச்ச ங்கும் தன்னையடுத்தது எவ்வகைப்பட்ட நீராயினும் அதனைப் பரிசுத்த மான தீர்த்தமாக்குகின்றது. மேலும் அவ்வெமுனைநதியையடுத்த பலகா ல்களிற்பூத்த கமலங்களெல்லாம் குவிந்தும் மலர்ந்துமிருப்பதினால் பாவ ஞ்செய்தோர்களுடைய செல்வத்தைப்போன்றன. அவ்வெமுனையிற்பூ த்த கமலங்களெல்லாம் அவ்வாறின்றி எக்காலத்தும் ஓரேதன்மையவா ய் மலர்ந்திருப்பதினால் புண்ணியஞ்செய்தோர்களுடைய செல்வத்தைப் போன்றன. அக்கமலங்கள் தமக்குப்பகையாகிய பனியினால் கருகுதலி ல்லாமல் மிக்க மேன்மையையடைந்திருக்கின்ற காட்சி என்போலுமிரு ந்ததெனில் எம்மைப்போல உமாதேவியாரைச்சார்ந்தார்க்கெல்லாம் மல

ப்பகையினாலுண்டாகுந் துன்பஞ் சாராதென்னும்உண்மைப்பயனைத்தெரிவித்தல்போலவிருந்தது. உமாதேவியாரை வழிபட்ட மெய்யன்பனே ஞானசுகத்தைப்பெறுவதன்றி, அவனைப்புடைசூழ்ந்தோர்களும் அப்பேற்றினைப்பெறுவரென்பதற்கு அவரைத்தாங்கிய மலரேயன்றி ஏனையமலர்களும் வாட்டநீங்கியிருப்பதே சாட்சியாகும். அன்றியும் உமாதேவியாரை உள்ளத்தோம்பிய ஞானவான்களே-உறங்குதலும் விழித்தலுமற்று மேலானபயனைப் பெறுவார்களாயின் அவரைத்தாங்கப்பெற்ற அக்கஞ்சம் கூம்புதலு மலர்தலுமில்லாது மிக்கமேன்மையடைந்திருப்பது ஓர்வியப்போ. மேலும் எமதன்னையின் சார்பையடைந்த தூயவர்கள் பஞ்சேந்திரியங்களினால் அலைப்புறார்களென்பதுபோல அக்கஞ்சமும் பொறிவண்டு தேன்வண்டு பொன்வண்டு கரிவண்டுமுதலியவை யவைகளால் ஊறுபாடில்லாத உயர்வினையடைந்தது. இவ்வாறு அளவற்றமகிமைகள் விளங்கும்படி, லோகநாயகியாகிய உமாதேவியார் அக்கமலத்தில் சங்கவுருவாய்த் தங்கியிருக்கின்றகாலத்தில், தைமாதத்திலே மகாநட்சத்திரம்வர, அப்புண்ணியகாலத்தில் அளவற்றபேர் அவ்வெழுனையில் ஸ்நானஞ்செய்யச்சென்றார்கள். அவர்களோடு மரீசிமுனியும் தமதுமனைவியாகிய தேவவல்லியோடு அந்நதிதீரத்தில்வந்து, சாஷ்டாங்கமாக வணங்கித் துதிசெய்து, சங்கற்பஞ்சொல்லித் தீர்த்தமாடி, திருவெண்ணீறு-உருத்திராக்ஷமுதலிய சிவசின்னங்களையணிந்து, விதிப்படி தருப்பணமாதிகளை நடாத்திச செபஞ்செய்யுங்காலத்தில், தமது நல்லஊழின்வசத்தால் அந்நதியினுடைய அலங்காரங்களைப்பார்த்தனர். அப்போது அதிலுள்ள கமலங்கள் பனிக்குச் சற்றும்வாடாம லிருப்பதையும், ஓர்கமலமாத்திரம் ஏனையகமலங்களினுஞ் சிறந்து விளங்கியிருப்பதையும், அக்கமல மத்தியில் ஓர் தைவீகமுள்ள சங்கம் வசித்திருப்பதையுங் கண்டு ஆச்சரியமாகி, அச்சங்கினையெடுக்கும்படி அதனருகிற்சென்றனர். அவ்வேளையில் சங்கவடிவாயிருந்த உமாதேவியார், தாமொரு திருமேனிகொள்வதும் அத்திருமேனியோடு சிலகாற்பயில்வதும் பின்னர் விடுப்பதும் தமதுஇச்சையின் வழியேயல்லது வேறில்லையென்னுங்கருத்தை யாவரும் உணரஅறிவிப்பார்போல மறைந்தனர். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே- தாம் விழைந்தவழியல்லது தம்மைப்பெற முயன்றோர்கள் விழைந்தவழி தம்மைக்கொடாத ஓர்தலைமையைத் தெரிவிப்பார்போல லோகநாயகி மறைதலும் மரீசிமுனி மதிமருண்டனர். அப்போது மூர்த்தி-தலம்-தீர்த்தமென்னு மிம்மூன்றினியல்பையுமறியாது அவைகளையடுத்தோர்களும் உடனே பார்த்தும் வாழ்ந்துந் தோய்ந்தும் பயன்பெறுவதுபோல அச்சங்கினுடைய இயல்பையறியா தடுத்த மரீசிமுனிவர் பின்னரச்சங்கம் பெண்குழந்தைவடிவாகியிருக்கக் கண்டனர். இவ்வாறு விண்டுவேமுதலாய் சகலவான்மாக்களையும் பெற்றெடுத்து வளர்க்கவல்ல தாயாகிய உமாதேவியார் அளவற்ற சுந்தரத்தோடு ஓர்பெண்குழந்தை வடிவாதலும், அதை மரீசிமுனிவர்கண்டு, தமக்கு முன சிவபிரான்கொடுத்தருளிய வரத்தினை நினைந்து, எல்லாத்தீவினைத்தொடர்புகளையுநீக்கி, மேலானகதியினைக்கொடுத்தற்பொருட்டு அரிபிரமேந்திராதியராலு மறிதற்கரிய மகேஸ்வரியே நமதுநிமித்தம் இவ்வாறு குழந்தையாக அவதரித்தனளென் றுணர்ந்து,

மிக்க மனமகிழ்ச்சியோடும் அக்குழந்தையைக் கரத்திலேந்திக்,கரையேறி வந்து, தமது பத்தினியாகிய தேவவல்லியைப்பார்த்து, பெண்ணே-இக்குழந்தையை இருவினைத்தொடர்பினால் ஆணவவிருளிற் கட்டுண்டுவருகின்ற ஏனையகுழவிகளைப்போல நினையற்க, இஃது சகலலோகங்களையுந் தனது பஞ்சகிருத்தியங்களினாலாட்டி மேலானபேற்றினைக் கொடுக்கத்தக்க குழவியாகும், இதனை இன்றுமுதல் அன்பாய்ப்பாராட்டிப்பால்கொடுத்து வளர்த்துக்கொள்ளுகவென்றுசொல்லி,அவள்கையிற் கொடுத்தனர். இவ்வாறு கர்த்தனை யொருக்காலும் விட்டுப்பிரியாத தேவியை தேவவல்லி கரத்திலேந்தியமாத்திரத்தில் தனதுகுசங்களில் மிகுதியானபால் சுரக்க, அதனை லோகநாயகிக்கு உண்ணக்கொடுத்தனர்.லோகநாயகியும் தமதன்பர்கொடுக்கும் உடல் பொருளாவியைப்போல எல்லா உலகங்களுங்குளிரும்படி அத்திருமுலைப்பாலை உண்டருளினர். இப்பால் அகளவடிவாயிருக்கின்ற மகேஸ்வரியைச் சகளவடிவாக்கிக்கொடுத்த அவ்வெமுனையை மரீசிமுனியும் அவர்பத்தினியும் பணிந்தெழுந்து, சகலபரிசனங்களுந் தம்மைப்புடைசூழ்ந்துவரும்படி அந்திக்கரையினின்று நீங்கித், தமது பிரமநகரத்தினைச்சேர்ந்தனர். அந்நகரமும் அக்குழந்தையினுடைய ஒளிவையும் தனுதிசயங்களையுங்கண்டு ஆச்சரியமாகி, இக்குழந்தை நமக்கு சகலபுருஷார்த்தங்களையுங் கொடுத்து, பிர்மாதி சர்வலோகேசர்களும் அடைதற்கரிய விலக்ஷண க்ஞானபத்திகளை யுண்டாக்கி, அநாதி பிரகிருதி சம்பந்தமான இவ்வுலக சம்சார பந்த துக்க நிவாரணங்களைச்செய்து, மஹோத்தம பரமகதியையும் அருளும்படி அவதரித்ததென்று துதிசெய்து, முடிவற்ற பிரமானந்தக்கடலில் மூழ்கியது. இப்பால் நாமரூபக் கிரியாசொரூபமாயிருக்கின்ற உலகங்கட்கு அவைகளையொழிக்கும்படி நாமரூபக்கிரியாசொரூபமா யெழுந்தருளிய எமதன்னைக்கு வல்லபையென்று ஓர்திருநாமஞ்சாற்றித் துதித்தனர். அதுமுதல் லோகமாதாவாகிய உமாதேவியார் சகலலோகங்களையுஞ் சூத்திரதாரியைப்போல ஆட்டுவித்தாலல்லது தாமே ஆடாதென்னுங்கருத்தினால் அவ்விளமைப்பருவத்திற் குரிய எல்லாத் திருவிளையாடல்களையும் யாவருங் களிகொள்ளும்படி விளையாடியருளினர். இவ்வாறு விளையாடிவருங்காலத்தில் வல்லபைதேவியார்க்கு ஐந்தாவதுபருவம்ஆக,அப்பருவத்தில் தாம் ஒருகாலத்தும் பிரிதலில்லாத சிவபிரானுடைய வாமபாகத்தினை யடையக்கருதித் தமதுகுரவரிடத்திற்சென்று,யான்இதுமுதல்சிவபிரானைக் கருதித் தவஞ்செய்யவேண்டுமாதலால் விரைவில் ஓர்தவச்சாலையை யுண்டாக்கித்தர வேண்டுமென்று கேட்டருளினர். அவர்களவ்வாறே ஓர்தவச்சாலையினை யுண்டாக்கிக்கொடுத்துப், பணிசெய்வதற்குப் பாங்கியரை நியமித்து, விருத்தரையும் பேடிகளையுஞ் சுற்றினுங்காவலிருக்கவைத்து, எல்லாக்காரியங்களையுங் குறைவறநடாத்தினார்கள். பின்னர் வல்லபைதேவியார் அத்தவச்சாலையையடைந்து, சுற்றினும் அளவற்றமுனிவர்கள் தவஞ்செய்யும்படியாகத் தமதுமனதில் சிவபெருமானுடைய திருவடிகளைத்தியானித்து,இரவும்பகலும்ஏகாக்ஷரமனுவைச்செபஞ்செய்துகொண்டு, ஆகாரநித்திரையில்லாமல் அரியதவத்தினைச் செய்துவந்தனர். அவரது தவவலிமையைத் தாயாகிய தேவவல்லிகண்டு ஆச்சரியமாகித், தனது கணவராகிய

மரீசிமுனிவரைப் பணிந்தெழுந்து, சுவாமீ-நமது அருமைத்திருமகளான
வல்லபை இவ்விளமைப்பருவத்தில் ஆகாரமுதலியவைகளை நீத்துத் தவ
ஞ்செய்யவேண்டியவாசை எவ்விதத்தா லுண்டாயதென்று கேட்டனர்.
அதற்கு மரீசிமுனிவர் புன்னகைசெய்து, பெண்ணே - நமதுகுழந்தை
யாகிய வல்லபையினுடைய பெருமையை யாவராலும் அறிந்துசொ
ல்லுவதற் கரிதாகும், ஆயினும் ஒருவாறு அறிந்தவரையிற் சொல்லுகின்
றேன்கேள். சகலலோகேஸ்வரனாகிய சதாசிவமூர்த்தியினுடைய வாமபா
கத்தில் மலரில் மணம்போலவும், சூரியனிடத்தில் ஒளிபோலவும், உட
லில் உயிர்போலவும், எக்காலத்தும் பிரிதலில்லாமல் வசித்திருந்து, அவ
ரால் சிருட்டி-திதி-சங்காரம்-திரோபவம்-அனுக்கிரகமென்னு மைந்தொ
ழிலையும் ஆன்மாக்களுடைய இச்சையின்படி நடப்பித்து, இருவினையொ
ப்புமலபரிபாக முண்டானபேர்களை முத்தியிற்சேர்க்கவல்ல உமாதேவி
யாரே வல்லபையென்றறியக்கடவை,இத்தன்மைத்தான பெருமையினை
யுடைய உமாதேவியார் முன்னர் யான்செய்த அரியதவத்திற்கிரங்கி,சிவா
னுக்கிரகத்தினால் இப்பூவுலகத்தில் நமக்கோர்குழந்தையாகிவந்து, மீட்டு
ந் தமதுநாயகருடைய வாமபாகத்தினையடையக்கருதித்தவஞ்செய்கின்ற
னர். இனி அவரை ஏனையமக்களைப்போல நினையற்கவென்றுசொல்லினர்
இவையனைத்தையுந் தேவவல்லி கேட்டமாத்திரத்தில் புளகாங்கிதமுற்று
ப் பிரம்மானந்தக்கடலின் மூழ்கினள். கேட்டீர்களோ சவுனகாதிமுனிவ
ர்களே-இவ்வாறு தாய்தந்தையர் தமது அருமைபெருமைகளைப் பாராட்
டித் துதிசெய்துவரும்படி வல்லபைத்தேவியார் பன்னிரண்டுவயதாகும்
வரையில் தவஞ்செய்துவரலும், எமதுகர்த்தர் மனந்தரித்திருப்பரோ-உட
டனே பகீரதியைத்தரித்த சடைமுடிமுதலியகோலங்களை மறைத்து,விபூ
தி-உருத்திராக்கமணிந்து, ஓர்பிராமணவடிவங்கொண்டு, அத்தவசாலைய
ருகி லெழுந்தருளினர். அதை வாயில்காப்பாளர்களறிந்து.வல்லபைத்தே
வியாரிடத்திற்சென்று, ஓர்சிவபத்தர் வாய்தலில் வந்திருக்கின்றனரொன்று
அறிவித்தார்கள். உடனே வல்லபைத்தேவியார் அவரை எதிர்கொண்டுப
ணிந்து, தமது தவச்சாலையுள் அழைத்துக்கொண்டுசென்று, ஓராதனத்
திலிருக்கச்செய்து, அருக்கியபாத்தியாதிகளைக்கொடுத்து பூசித்து,குளிர்
ந்த இன்முகத்தோடு அஞ்சலியஸ்தராய் எதிர்நின்று, சுவாமீ - தேவரீர்
இங்ஙனமெழுந்தருளிவந்த காரணத்தைத் திருவாய்மலர்ந்தருளவேண்டு
மென்று பிரார்த்தித்தனர். அதற்கு மாறுவேடங்கொண்டுவந்த எமதுகர்
த்தர் புன்னகைசெய்து, ஓ பெண்கள்நாயகமே - உம்மை விவாகஞ்செய்
யுமிச்சையினால் இங்ஙனம்வந்தேன், அக்காரியத்தை அன்புகூர்ந்து நிறை
வேற்றுவீராயின் எல்லாப்பயன்களையும் பெற்றவனாகுவேனென்றனர். ஓ
ப்பற்றவர்கூறிய இவ்வாக்கியமானது வல்லபையாருடைய திருச்செவிக
ளிலேறியமாத்திரத்தில் காய்ந்தஊசி காதிற்பாய்ந்தாலொத்து, சிவசிவா
வென்று இருசெவிகளையும் பொத்திக்கொண்டு, ஆஅ-இவ்வந்தணன் எ
ன்னவார்த்தையைச் சொல்லினனென்று கிலேசித்து, புருவங்களைநெரித்
து, இருவிழிகளுஞ் சிவந்து,உதடுகள்துடிக்கும்படி அவரைப்பார்த்து, அ
றிவற்றவனே - சகலலோகங்களையும் படைத்தளித் தழிக்கின்ற கருத்தனு
ய், எவ்வெவ ரெவ்வெவ்வரங்களைவேண்டித் தவஞ்செய்யினும் அவ்வவர்

க்கு அவ்வவ்வரங்களை வரையாதளிக்கின்ற வள்ளலாயிருக்கின்ற ஈசனுக்
கு மெய்யன்பையுடையவளென்னு நிச்சயத்தையறியாமல் இவ்விதவார்
த்தையினைப் பேசினையன்றோ- அப்பராபரப்பொருளாகிய பகவானையல்
லது கனவின்கண்ணு மற்றொருவனைக் குறியேனென்றுசொல்லினர். அ
தற்கு எமதுகர்த்தருங் கோபங்கொண்டவரைப்போலப்பார்த்து, மின்ன
லையொப்பக்காட்டிமறையு மெல்லியயிடையினையுடையமங்காய், யெண்க
ளாயினோர்எல்லாக்கலைஞானங்களையுங் குறைவறக்கற்றோர்களாயினும்அவ
ர்களறிவுபேதமைப்பாலதேஎனப் பெரியோர்கூறுவர்,நீகூறியவார்த்தையு
ம்அதுபோலவே யிருக்கின்றது, உனதுஎண்ணம் நிலைபெறுமென்றுநினை
யற்க, உனக்கு அத்தலைவர் நேருவதொன்னுங்கருத்தைவிட்டுவிடக்கடவை
யென்றுசொலலினர். இவ்வார்த்தைகளைக்கேட்டமாத்திரத்தில் வல்லபை
யார்க்குமுன்னினும் அதிககோபமுண்டாகி, ஓ-போதமற்றவனே - நெரு
ப்பையுங் குளிர்விக்கத்தக்க உக்கிரமாகியதவங்கள் அளவற்றனவாகச்செ
ய்வேன், அதற்கும் எமதுகர்த்தன் மனமிரங்கிவாராராயின் உண்மையா
ய் எனதுசரீரத்தை ஒழித்துவிடத்துணிவேன், நீ யெனக்கு புத்திசொல்
லவந்ததுயோதும் போவென்றுசொல்லினர். அதற்கும் அவ்வந்தணர் அ
ப்பாற்செல்லாது பித்தனைப்போல அங்ஙனே இருந்தனர்.அதனுல் வல்ல
பையார் தாமே அப்பாற்செல்லுவதற்கு அடியெடுத்தனர். உடனே அந்
தணராகவந்த எமதுகர்த்தன் அவ்வுருவத்தினின்றுமாறித், தமதுநிசரூப
த்துடனே அனந்தங்கோடி சூரியர்கள் உதையஞ்செய்தாலொத்த பிரகா
சத்தினேடு பத்துகைகளும் அளவற்ற ஆபரணங்களும் விளங்கும்படி ம
யில்வாகனத்தின்மீது மூலகாரணக்கடவுளாகிய கணேசமூர்த்திப்படிவங்
கொண்டு தரிசனந்தந்தனர். அத்தரிசனங்கண்டமாத்திரத்தில் வல்லபை
யார் கோபத்தினின்றுமாறி,அன்பும் நாணமும் அச்சமுங்கொண்டு,சுவா
மியைப் பலமுறைபணிந்தெழுந்து, இருகரங்களையுங் கூப்பி வலம்வந்து
மிக்கபேருவகையோடு மெதிர்நின்று, ஆண்டவனே-அடியேன் அறிவின்
மையினற்செய்த பிழைகளைப்பொறுத்துத் தேவரீருடைய் திருவடிகளில்
நீங்காதபத்தியைக் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அத
ற்குக் கணேசமூர்த்தி மனதிரங்கி,ஓவல்லபையே- நீசெய்த மேலானதவ
த்திற்கு யாமனமுவந்துவந்தனம், உனக்குவேண்டிய வரங்களைக் கேளெ
ன்று திருவாய்மலர்ந்தனர். அப்போது வல்லபையார் மீட்டும் பணிந்தெ
ழுந்து, சுவாமீ-தேவரீருடைய வாமபாகத்தில் எக்காலத்தும் பிரியாமலி
ருக்க வரந்தரவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்கு எமதுகர்த்தன்
அவ்வாறே தந்தனமென்று திருவாய்மலர்ந்தனர். இவர்களிவ்வாறாக-இத
ற்குமுன்னமே சிலதூதர்கள் மரீசிமுனிவரிடஞ்சென்று, சுவாமீ - வல்ல
பையாருடைய தவச்சாலையிலே ஓரந்தணர்வந்து வார்த்தையாடுகின்றன
ரென்று அறிவித்தார்கள்.அதை மரீசிமுனிவர் கேட்டமாத்திரத்தில் அவ்
வந்தணர் கணேசமூர்த்தியேயென்று தமக்குள்நிச்சயித்து, அவ்விருவரு
க்கும் விவாகஞ்செய்துமுடிக்கத் தமதுமனத்திலெண்ணி, அவ்விவாகத்
திற்குவேண்டுங் காரியங்களை விரைவில்முடிக்கும்படி காரியக்காரர்களுக்
காக்கியாபித்து, தேவர்கள் முனிவர்கள் முதலிய சகலரையும் திருமணப்
பத்திரிகையனுப்பி வரவழைத்து,அவ்வவர்கட்குத்தக்கபடி விசாரணைசெ

ய்து, எங்கெங்கும் பூரணகும்பந் தூபதீப முதலிய மங்கலப்பொருள்க
ளை நிரப்பி, ஆகாயமுகட்டையளாவிய பந்தர்கடோறும் பற்பலகொடிக
ளை நீட்டி, பெருத்தகுலை வாழைமரங்களை ஆங்காங்குநாட்டி, நவரத்தின
மயமாகிய தோரணங்களை நிரைநிரையாகக்கட்டி, அந்நகரமெங்குங் கோ
டணை புரியும்படியாக எல்லாக்காரியங்களையுங் குறைவறநடப்பித்து, தே
வர்களும் இதற்குமுன் கண்டறியோமென்று அற்புதங்கொள்ளும்படி கலி
யாணமண்டபத்தினைச் சோடித்து, அக்கலியாணத்திற்கு வேண்டிய பொ
ருள்களையெல்லாம் ஆங்காங்கு விதிப்படி யமைத்துவைத்து, முனிவர்கள்
முதலாயினோர் தம்மைப் புடைசூழ்ந்துவரும்படி வல்லபையாருடைய
தவச்சாலையையடைந்து, வேதங்களாலு மறிதற்கரிய கணேசமூர்த்தியை
க்கண்டு பணிந்தெழுந்து, தமதுபுத்திரியையும் சுவாமியையும் அரண்ம
னைக்கு அழைத்துவந்து, அரம்பையரால் நாட்டியஞ்செய்யப்பட்டிருக்கி
ன்ற விவாகமண்டபத்தில் சுவாமியையிருத்தித், தமதுபுத்திரியை மணக்
கோலஞ்செய்விக்கும்படி அந்தப்புரத்திற் கனுப்பினர். உடனே தெய்வ
மங்கையரெல்லாம் வல்லபையாரைப் பணிந்தெழுந்து, அவர் தரித்திருந்
த மரவுரிமுதலியதவவேடத்தினைமாற்றிச், சுகந்தபரிமளமிகுந்த தயிலாதி
களைச் சடைபற்றியிருக்கின்ற கூந்தலிற் றிமிர்ந்து, சுத்தோதகங்களினால்
முழுக்காட்டி, அகில்-சந்தனத்-தூபங்களினால்ஈரத்தினைப்புலர்த்தி, விலையு
யர்ந்த பட்டாடையினைத் தரித்து, கூந்தலினிடத்தில் பரிமளமிகுந்த பு
ட்பங்களைச்சூட்டி, முத்துமாலை-சரப்பளி முதலிய ஆபரணங்களைத்தரித்
து, பூரணச்சந்திரனைப்பழிக்கு முகாரவிந்தத்தில்திலதப்பொட்டிட்டு, மற்
றுமுள்ள வெல்லாக்கோலங்களையுங் குறைவறநடாத்தி, பல மங்கலவாத்
தியங்களோடு விவாகமண்டபத்தி லெழுந்தருளி யிருக்கின்ற கணேசமூ
ர்த்தியினுடைய பக்கலில் எழுந்தருளச்செய்தார்கள். விண்டுமுதலியதே
வர்களெல்லாம் கற்பகவிருக்ஷத்தினுடைய மலர்களால் கணேசமூர்த்தியி
னுடைய திருவடிகளை யருச்சித்து, மிக்கமனமகிழ்ச்சியோடு இருமருங்
கினுங் கைகட்டிநின்று துதிசெய்தார்கள். இலக்குமிமுதலிய தெய்வமங்
கையரெல்லாம் வல்லபைத்தேவியாருடைய திருவடிகளிற்றாழ்ந்து, பரிம
ளமிகுந்த புட்பங்களைத் திருவடிகளிற்சொரிந்து, அளவற்றமகிழ்ச்சியோ
டும் இருமருங்கினு நெருங்கினார்கள். கின்னரர் சங்கீத சாஹித்தியங்களை
வீணைமுதலியவைகளையேந்தி வாசித்தார்கள். அரம்பையர் பரதசாத்திரவி
திப்படி நிருத்தஞ்செய்தார்கள். சிலதேவர்கள் தோற்கருவிமுதலிய பஞ்
சவாத்தியங்களையும் ஊழிகாலத்து மேகத்தினையொப்ப முழக்கினார்கள்.
இவ்வாறு அக்கலியாண மண்டபமானது சகலவைபவங்களோடும் பொ
லிவுற்றிருக்கின்றபோது நேமித்திருந்த சுபமுகூர்த்தம்வாய்ப்ப, அவ்வே
ளையில் தேவவல்லியானவள் நறுமணமூட்டப்பட்டிருக்கின்ற பூரணகும்
போதகத்தினைக் கரத்திலேந்திவந்து வார்க்க, மரீசிமுனிவர் கணேசமூர்த்
தியினுடையதிருவடிகளை அபிஷேகஞ்செய்து, வல்லபையினுடைய திரு
க்கரங்களைப்பிடித்துங் கணேசமூர்த்தியினுடைய திருக்கரத்தில் வைத்து
தாராதத்தஞ்செய்து வணங்கினன். யாவராலுங் கணித்தற்கரியகணேச
மூர்த்தியானவர் மனமகிழ்ந்து ஏற்றுக்கொண்டனர். அக்கலியாண மஹோ
ச்சவத்தைத் தரிசிக்கவந்த யாவரும் கிருதார்த்தரானார்கள். பிரமனானவன்

ஓமகுண்டத்தைச்சேர்ந்து மூத்திகளையு மந்திரபூர்வகமாகவமைத்தனன் விண்டுமுதலிய ஏனையதேவர்கள் வேதபாராயணஞ்செய்தார்கள். அவ்வவர்கட்கும் எமதுகர்த்தரானவர் தமது கிருபாநோக்கத்தினை வழங்கியிருந்தனர். அச்சமயத்தில் விண்டுவும் இலக்குமியும் தமதுபுத்திரிகளாகிய மோதை-பிரமோதை-சுமகை-சுந்தரி-மனோரமை-மங்கலை-கேசினி - காந்தை-சாருகாசை-சுமத்திமை-நந்தினி-காமதை என்னும்பெயரினையுடைய தமதுபுத்திரிகள் பன்னிருவரையும் கணேசமூர்த்திக்கெதிரில் அழைத்துவந்து, சுவாமீ-அடியேங்கள் அருமையாக வளர்த்தெடுத்த இம்மங்கையரைத் தேவரீர் அங்கீகரித்து எம்மை யாட்கொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குக் கணேசமூர்த்தி அருள்வழங்கி, அப்பன்னிருவரையும் ஏற்றுக்கொண்டு, அவ்விண்டுவைக் கிருபையோடும்பார்த்து, ஓ சர்ப்பசயனனே-நீ பல அவதாரங்களைக்கொண்டு திரிலோகங்களையு மிரட்சித்துவரக்கடவையென்று அருள்செய்து, இன்னு முனக்குவேண்டியவரங்களைக்கேள் தருவோமென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கு விண்டுவானவர் மீட்டும்பணிந்தெழுந்து, சுவாமீ-மலபாசங்களிற்சிக்கித் தேவரீருடையதிருவடிகளைக் காணமல் இளைத்த அடியேனுக்குத் தேவரீருடைய நின்மலஞானத்தைக் காட்டி, வேதங்களாலு மறியக்கூடாத விசுவரூபத்தினையும் அநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவ்வாறே செய்வோமென்று கணேசமூர்த்தியானவர் விண்டுவுக்குத் தீக்கைசெய்து தமது உண்மைஞானத்தினை உபதேசித்து, அண்டரண்டபுவனங்களையெல்லாம் விளக்கவல்ல தமதுவிசுவரூபத்தினைக் கடாட்சித்தருளினர். தவத்திற்சிறந்த மரீசிமுனிவர்முதலிய சகலரும் வெவ்வேறுவரங்களைப் பெற்று ஆனந்தமடைந்தார்கள். இப்பால் கணேசமூர்த்தியானவர் வல்லபைத்தேவியாரையும் விண்டுவினுடைய புத்திரிகள் பன்னிருவரையும் தமதுமருங்கிலிருக்கவைத்துக்கொண்டு, பல மங்கலவரிசைகளோடு தமதுலோகமாகிய மணித்தீபத்தினையடைந்து வதிந்தருளினர். ஏனையதேவர்கள் முனிவர்கள் முதலாயினோர் வல்லபேசுரரைப்பணிந்து துதிசெய்து விடைபெற்று, அவ்வவர்களுடைய பதிகளைச்சேர்ந்துவாழ்ந்திருந்தார்கள். அவ்விவாகமகோற்சவத்தினைத் தெரிசித்தபேர்களெல்லாம் சகலபோகபாக்கியங்களையுங் குறைவறப்பெற்று வாழ்ந்திருந்து, அந்தியகாலத்தில் தீவினைகளினின்று நீங்கிப் பரிபூரணசுகத்தையடைந்தார்கள். வேதசாத்திரங்களினாலும் மற்றெவ்வகைப்பட்ட பிரமாணங்களினாலும் அறிதற்கரிய கருத்தராகி, துஷ்டசனநிக்கிரகஞ் சிட்டசனபரிபாலனஞ் செய்யும்பொருட்டு பற்பல அவதாரங்களைக்கொண்டு திருவிளையாடல்செய்தருளிய விநாயகமூர்த்தியினுடையசரித்திரமானது தேவர்களாலும் முனிவர்களாலும் பாராயணம் பண்ணத்தக்கதாயும், எக்காலத்தும் வேதமுடியி லிருக்கத்தக்கதாயும், பாவபந்தங்களை விலக்கத்தக்கதாயு மிருக்கின்றது. கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே-சிவபிரான் சுப்பிரமணியக்கடவுளுக்கு உபதேசித்தருளிய பன்னிரண்டவதாரத்தினுடைய சரித்திரங்களிவையாகும் இவைகளை யாவரேனும் இட்டசித்திபெறக்கோருகின்றவர்கள் பாராயணம்பண்ணக்கடவர்களென்று சூதபுராணிகர்சொல்ல, அவரைச் சவுனகாதிமுனிவர்கள் தொழுதெழுந்து, சுவாமீ-விண்டுவுக்கு வல்லபைகணேசர்

உபதேசித்தருளிய யோகஞான தத்துவத்தையும், அவர்க்குத் தரிசனங் கொடுத்தருளிய விசுவரூபத்தினையும், அடியேங்கட்கு விபரமாகத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்குச் சூதபுராணிகரிசைந்து, ஓ அருந்தவர்களே—அம்மேலான யோகஞானத்தினை விண்டுவினிடத்தினின்றுங் கேட்ட பிரமனானவன் வேதவியாசமுனிவருக்குப் பாந்தமாக உபதேசித்திருக்கின்றனன், அதனை யவ்வாறே உங்களுக்குஞ் சொல்லிவருகின்றேங் கேட்பீர்களாக.

காண்டல்கருதலுரைகளினாற் கதுவுமேனையளவையினான் ... *
மாண்டமனமாதிகண்மூன்றான் மறையோன்றிருமாலாதியரால் ... *
வேண்டுமளவுமுயன்றாலு மெய்ம்மைசிறிதுமறியவுறாப் ... *
பூண்டகருணைவிநாயகர்தம் பொருவில்ஞானம்புகலக்கேள் ... (௧)

உருவமருவமுபயமென வுரைக்கப்படுமூவர்கட்மக்கும் ... *
கருவிகரணமுதற்பலவுங் கண்டுபுரந்துதுடைத்துமறைத் ... *
தருளுமுதலாயவருளமு மறியாப்பொருளாய்த்தனதருளான் ... *
மருவுமொளியாயெங்குநிறை வாய்மையெதுவோவதுபிரமம் ... (௨)

அந்தப்பிரமமெரியிரும்பை யடுத்தாங்கறிவைத்தொடர்ந்துருக்கொண் *
டிந்தவுலகில்விநாயகனென் றிணையில்பெயர்தனுண்மையினைப் ... *
பந்தமகன்றோர்தெரிந்துகொளப் பரித்துவிளையாட்டயர்ந்திருந்து ... *
முந்துமலத்தாலொருவருமம் முதல்வரியற்கையுணர்ந்திலரால் ... (௩)

இருளுமொளிரவிருண்டமல மென்றும்மியர்மையைக்கொடுத்து ... *
மருவியிருத்தலாற்சனன மரணமானபிரபாக ... *
மொருவர்தமக்குமொழியாதவ் வொருவரானவிநாயகனு ... *
ரருளின்வழியேயுயர்யோக மடையினலதுமுனிவரனே ... (௪)

ஒன்றேயானபொருளின்கண் யோகமென்னுங்கருத்தில்லை ... *
யொன்றேடொன்றுசேர்ந்துழியே யோகமென்னுங்கருத்துளதா ... *
மொன்றேடொன்றுசேர்ந்தவற்றி னொழிந்துநில்லாதவையாகா ... *
தொன்றுநின்றசம்பந்தம் யோகமென்பருணர்ந்தோரே ... (௫)

அந்தயோகநான்காகு மவைதாமகமேய்கப்புறமே ... *
வந்தபுறமேபுறப்புறமே வகுத்தவிவையாமிவையெட்டாம் ... *
பந்தமொடுமுத்தியினுறழப் பகர்துமிவற்றைமுறையானே ... *
சிந்தைமயக்கமறத்தவங்கள் செய்துமுடித்தமாதவனே ... (௬)

உயிர்தான்மூலமலத்தினொடு முற்றபந்தமகமாகுஞ் ... *
செயிர்சேர்மாயைகன்மமொடு சேர்தலந்தமகப்புறமாம் ... *
பயிலாநின்றதனுகரணப் பந்தம்புறமாம்புறப்புறமா ... *
மயர்சேர்புவனயோகத்தின் மருவாநின்றபந்தமே ... (௭)

அதனாற்கணேசர்திருவருளா லடையும்யோகமாவதுதான்... ... ...*
மதமார்மூலமலத்தினொடு மருவுபந்தமன்றுபல ... ... *
விதமார்மாயைகன்மமொடு மேவுபந்தமன்றேனை ... ...*
யிதமாரிரண்டுபெந்தமுமன் றின்னுமிவற்றுள்விதந்துரைப்பாம்... ...(அ)

வேறு.

இருமுதுகுரவர்பாங்க ரீட்டியவினைகட்டமாற் ... ... *
கருவெனவுறுஞ்சம்பந்தங் காணுறும்யோகமன்று ... ...*
மருமலர்க்குழலினார்கண் மன்றலும்யோகமன்று... .. *
வொருமையின்மாதராசை யோகமும்யோகமன்று ... (௯)

எண்வகைச்செல்வம்வெவ்வே றெய்தலும்யோகமன்று ... *
நண்ணுறுமவையோராங்கு நணுகலும்யோகமன்று ... *
திண்ணியபிணிகளாதிச் செயிர்களும்யோகமன்று... ...*
மண்முதலுலகமாளும் வாழ்க்கையும்யோகமன்று ... (௰)

பொறிகளைம்புலனிற்சென்று புல்லலும்யோகமன்று ... *
வெறிமனமொன்றிற்சென்று பற்றலும்யோகமன்று ... ...*
குறியொடுமொருவனட்புக் கொள்வதும்யோகமன்று ... *
செறிகருசித்தியெட்டுஞ் சிவணலும்யோகமன்று ... (௰௧)

பிறவியான்முறைமையெய்தும் பெற்றியும்யோகமன்று......*
மறுவறுவருணச்செய்கை மருவலும்யோகமன்று............*
நெறியினாச்சிரமநான்கு நிற்றலும்யோகமன்று ... *
பெறுமதக்கடவுளார்வம் பேணலும்யோகமன்று ... (௰௨)

வேறு.

மாணுபிராணாயாமப் பிரதிவாத மந்திரமாகியசத்த லோகயோகம் பேணலுறுமுயர்யோகமன்றுவிண்ணிற் பிறங்குபலவுலகத்தும் பெட்ட போகங்,காணுறுபந்தமும்யோகமன்றுதிங்கட் கவுளகன்றகடவுண்முதற்க டவுளாகிப், பூணலுறுதெய்வதமும்யோகமன்று புகரில்பதமுத்திகளும் யோகமன்று ... ... (௰௩)

ஆக்கன்முதலைந்தொழிலும்புரியாநின்ற வதிகாரபந்தமுநல்யோகம ன்று, போக்கறவிவ்வாறுலகிற்பலவேறுகப் புணர்தருசம் பந்தமெலாம் யோகமன்று, பாக்கியமாகியதவஞ்செய் முனிவரோடே பந்தமுறுசம்பந்த நான்குஞ்சொற்ற, மேக்குயர்விண்ணவரானுமறியவொண்ணு வீடுறுசம் பந்தமொரு நான்கும்விள்வாம் ... ... (௰௪)

பக்குவம்புண்ணியமூலபாகஞ்சத்தி பதிதலிருவினையொப்புப்பயின்றசாலைத், தொக்கமலபந்தமெலாங்கழித்தவான்மாச் சுத்தமாய்ச்சுத்தவவத்தையினிற்சொன்ன, பத்துவிதப்புண்ணியமும் புரிந்துமேலாம் பரத்தினொடுமொன்றாகாதிரண்டுமாகா, ‘த்துவிதமாயேகமாகியின்பாயபாவமாநிலையகச்சம்பந்தமாகும் ... ... (௰௫)

அருணிலையேமுத்தியெனவழுந்திநிற்றலகப்புறச்சம்பந்தமருளுபசாரத்தை, மருளறக்கண் டிடல்புறச்சம்பந்தமந்த வாய்மையருட்டொழிலினைத்தான்செய்யவெண்ணல், பொருவில்பரானென்றேமருளாற்காண்டல் புறப்புறச்சம்பந்தமிவைநான்கினுள்ளு, மிருளறுமாதவவகச்சம் பந்தமொன்றே யிணையிலுயிர்யோகமென வியம்புநூலே ... (௰௬)

வேறு.

சிறந்தயோகநான்குள்ளுஞ் சிறந்தயோகந்தனைப்பெற்றோர் ... *
பிறந்துபிறந்தும்வருகின்ற பெரியசமுசாரத்தடையார் ... ...*
மறந்துநினைந்தும்வினையீட்டி மாயாபோகந்தனைநுகரா ... ... *
ரிறந்தவெனதியானென்னு மிருளிற்படார்களொருகாலும் ... (௰௭)

உலகிலுறங்கியுலகிறந்த வொருவான்பொருளில்விழித்தந்த ... *
வலகில்பரமானந்தமய மானவமுதப்பெருங்கடலிற் ... ...*
கலவிமுழுகித்திளைப்பார்கள் கருணைநிறைந்தவுளத்தினராய் ... *
நிலவுமுலகமொருமூன்று நெடிதுபரிபாலனஞ்செய்வார் ... (௰௮)

பிழைதீர்தாங்கள்பெறும்பேறு பிறருக்குபதேசித்திடுவார் ... *
விழையார்விழையப்படும்பொருளை வெறார்கள்வெறுக்கப்படும்பொருளைத்
தழைகாமியமூன்றையுமில்லார் தனுவினடுக்குமபிரார்த்தம் ... ...*
யழையோன்மணியம்புதுமணியம் பாற்றியாங்குத்தாநுகரார் ... (௰௯)

வேறு.

சகலமுஞ்சொரூபமாகையாற்சகல பூதமுஞ்சொரூபமேயாக ... ...*
விகலறக்காண்பார்சீவன்முத்தர்களா யிருப்பர்களுலகினுள்ளவர்க்குப்...*
புகலனுக்கிரகப்பொருட்டுலகத்திற் புரையறச்சரிப்பர்காமாதி ..., *
திகழுமிந்திரியம்வென்றவரோடுஞ்செம்பொனுமொப்பவேகாண்பார்(௨௰)

தக்கயோகத்தால்வசிகரமாயத் தன்னிடத்தமர்சொரூபத்தை ... ...*
மிக்கபாவனைகள்கடந்தபாவனையால் வேறறக்கண்டுகொண்டிருக்கும் ...*
பொக்கமிலுளத்தையுடையரொன்றினும்புரைபடார்வேறுதான்படார்கள்
பக்குறுபகையாலடிபடாரிழுக்கப் படார்பரிசுத்தமிக்குடையார் ...(௨௧)

உள்ளஊழ்வினைகளொழிதருங்காறு முழிதருமுடலிடைவந்து .. ...*
நள்ளிருவினையின்பயங்களைத்தமக்கு நல்லனதீயனபுரிவோர் ... ... *
கொள்ளவேதாங்கள்பிரமமொன்றனையே குறிப்பறக்குறித்திருப்பார்க *
டெள்ளியவிவராயித்தகுயோகச் செய்தியரேயறிவ ரோ ... ...(௨௨)

அறிவித்தாலறியுமாருயிர்க்கனாதி யாகியவாணவமருளாற்... ... ...*
பிறிவித்தானந்தம்பெருக்கியோன்றாமிப் பிரமமாகியவிநாயகனே ... *
நிறுவித்தாரணியீறானாதாதி நிலைபெறுதத்துவமவற்றாற் .. ..*
செறிவித்தாருயிர்க்குத்தனுகரணாதி செயிரிலைந்தொழில்புரிகின்றான்(௨௩

கரிசிலைந்தொழில்செய்காரணர்தமக்குங் காரணன்மாயையிற்பலவாய்...*
விரிதருமுலகில்வியாபியாய்நின்றும் விசாரமாதிகடனக்கில்லான் ... ...*
றெரிசதாசிவனேதிகழ்பராசத்தி சிந்துரமுகவன்மால்கதிரோன் ... ...*
றுரியவைவர்களாய்ப்பூசைகொள்கின்றா னுயிர்க்கெலாநாயகனவனே(௨௪

பேறிழவின்பம்பிணிவளர்மூப்புப் பேதுறச்சாதலென்றுரைக்கு ... *
மாறினுமோவாதுயிர்களையெல்லா மமைவுறச்செலுத்தியுந்தனக்குக் ...*
கூறியவிருப்புவெறுப்பினையில்லான் கூடியெவ்வுயிரையுமயக்கும்... ...*
வீறியமாயைமயக்கமுமில்லான் விளங்கியவனாதியேயமலன் ... (௨௫)

படைகளாற்பிளக்கப்படானழலழற்றப் படான்சலநனைத்திடப்படான்மிக்
கடைவளியுணக்கப்படான்வெளிபோல வகிலமுமிறப்பினுமிறவான் ...*
றடையறவொன்றாலின்னதென்றறியாத் தத்துவன்றகுபிரமாண ... *
மிடையினாலறியாவப்பிரமேயன் விளங்குமெஞ்ஞானியர்க்கறிவோன் ()

இத்தகுபெருமானிணையடிநிழலி னிரண்டறக்கலந்துநானறலே ... *
யுத்தமயோகமென்றுமுன்னுரைத்த யோகமேயோகமவ்வியோகச் .. *
சித்தயோகியரேயோகியரவர்க டெளிந்தவேதாந்தமேமுதலா ... *
மெத்துசாத்திரத்தினிரதமேநுகர்வார் விளங்கியகேட்டலாதிகளால்(௨௭)

பிறங்குமெஞ்ஞானயோகியராமிப் பெற்றியரொன்றுமெவ்விடத்து......*
முறங்கியமகன்கைப்பொருளெனத்தத்த முறுவருணத்துயர்நிலையி ... *
னறங்கிளர்தன்மந்தாங்களேயொழியி னல்லதையகற்றுதல்செய்யார் ...*
மறங்கிளர்மலங்கள்பிறர்க்கறச்செய்வார் வறிதும்யாதொனைதெனப்புரியார்

இதுதெரியாதமூடர்கண்முனியே யிறப்பொடுபிறப்பினைவிளைத்து......*
முதுதுயர்ப்படுக்குங்கன்மமேவிழைந்து முற்றுறப்புரிந்துவிண்ணாதிக் ..*
கதுவுபுன்போகஞ்சத்தியமென்று களித்தினிதார்ந்துணர்வழிந்து .. ...*
பதியெனும்பிரமத்தியல்பறியாது பவந்தொறும்பன்முறைசுழல்வார்(௨௯)

ஆதலிற்பிரமத்தியல்பினையறிய வாதரித்தவர்கட்கமது ... *
மேதகுமொழுக்கம்புரிந்திறைவனுக்கு வியத்தகக்கொடுத்திடினதுதா...*
ஞேதருஞ்சுத்தசுத்தியைச்செய்தே யுயர்ந்தஞானத்தினுக்குரிய... ...*
வேதுவைத்தோற்றப்பிறப்பிறப்பினைப்பின்னெய்துறாவர்கண்மாதவனே

 வல்லபகணேசர்திருவவதாரப்படலம்.

அந்தணீகருமமாற்றுகமுனியே யறைவருணுச்சிரமத்தி ... ...*
னந்தமிமானந்தனையொருகாலு நண்ணுதலின்றிவையகத்தோர் ... *
மந்தமாகியபுல்லறிவினைவிடுத்து வழிநடந்துய்ந்திடும்பொருட்டே ...*
யிந்தயோகத்தையெய்தவல்லரதா ரியற்றிடும்யோகமுமிசைப்பாம் (௬௧)

வேறு.

அட்டமூர்த்தமா யடங்கியவகிலத்துமொன்று ... *
யொட்டிநின்றருள் பிரமத்தையுள்ளவாறுணர்ந்து .. *
முட்டில்வையகத் துறுதொழின்மொழிபிரமத்திற் ... *
பட்டமெய்த்தொழி லெனவதைப்பார்த்தலும்யோகம் (௬௨)

இந்தயோகத்தையுடையவ னின்னலிற்சுகத்தில் ... *
வந்தவோகையின் வெகுளியின்வறுமையின்வாழ்வி ... *
னந்துவான்பொருளிழவினி னலிபிணியடைவி ... *
னந்தமேவரும்போகத்தி னடைவினிலிறப்பில் ... (௬௩)

சாரிலாபத்திலலாபத்திற் சயத்தபசயத்திற் ... ...*
சேருமானத்திலமானத்திற் றெருளின்வன்மருளிற் ... *
கூரும்யோகத்தின்வியோகத்திற் கோதினிற்குணத்தி ... *
லாருமின்னனபோல்வன வனையவற்றுள்ளும் .. (௬௪)

பில்குபுத்திரர்சத்துரு மித்திரர்பந்து ... ... *
புல்குரத்திரும் பசுமனைமுதற்பொருளிடத்தும் ... *
பில்குசெங்கதிர்ச் சூரியன்சந்திரன்பெருநீர் ... ... *
மல்குசெங்கனல் சிவஞ்சத்திமாயவன்பிரமன் ... (௬௫)

இந்திரன்முதற்றேவர்க ளியக்கர்கந்திருவர் ... ... *
சிந்துமாநதி தீர்த்தங்கேத்திரஞ்செறிமனுட... ... *
ரிந்தநல்லிடத் தினுஞ்சமபுத்திவைத்தென்று ... ...*
மந்தவத்துவைக்காண்குவ ரகத்தினும்புறத்தும் ... (௬௬)

வருணமாச்சிரமத்தினை வழுவறப்புரிந்து ... ...*
கருணைநாயகனுகிய கணேசர்பாலந்தப் ... ... *
பொருணிலாவுகன்மங்களைப் புகன்றினிதளித்தே ... *
மருணிலாவுமஞ்ஞானத்தின் வந்துறாவரோ ... (௬௭)

பாவபுண்ணியப்பயத்தினைப் பரமனுக்களித்தத் ... *
தேவனற்பதங்கருதிய செல்வரோபொறியின் ... ...*
மேவலற்றுறு பந்தமாகியவினைநீங்கித் ... ... *
தாவிலின்பமாகிய தனிப்பரத்தினைச்சார்வார் ... (௬௮)

உள்ளமைம்பொறி வழிவிடையத்திடைப்புறுங்காற் ... ...*
றெள்ளுகின்றநற் றெய்வவாக்கியமெனுஞானத் ... ... *
தெள்ளலின்றியின் றிடவயிராக்கியமீண்டு ... ... *
நள்ளவன்னதுபிரமத்திற் றிரபுத்திநன்றாம் ... ...(௫௯)

இட்டமானவைபொற்றனக் கயிதமேயிட்டி ... *
நட்டமேயுறுமுலகத்துப் பொருள்களினசையை ... *
விட்டுமேதகுபிரமத்தின் விரவியொன்றாகப் ... *
பட்டதாகியபுத்தியே திரபுத்திபார்க்கில் ... ... (௬௰)

அனையதாகலின் வீட்டினையாதரித்தவர்கள் ... .. *
வினையெலாந்தரும் விடையத்தின்மேவியபொறியை ... *
யெனைவுறாவகைமீட்டிரும் பிரமமெஞ்ஞான்று ... *
நினைதல்வேண்டுமெய்த் தவத்திடைநின்றமாமுனியே...(௬௧)

மீட்டிடாதுதன்மனத்தினை விழைபொறிவழியே ... *
யீட்டமாகியவிடையத்தி னெய்துறவிடுப்பி ... *
னாட்டமாயதிலழுந்திடு நாடியங்கழுந்திற் ... ...*
கோட்டமேபுரி காமமாய்க்குரோதமுமாமே... ... (௬௨)

அதுவுண்டாகவஞ் ஞானமுண்டாமதனாலே ... *
மதியதாகியபிரமத்திற் பற்றினைவிறக்கு ... ... *
மிதுவுண்டாகவே பிரமமெஞ்ஞானமின்றாகி ... ...*
வதியஞ்ஞானியாய் முன்புபொற்பிறப்பிடைவருவான் (௬௩)

அன்னதாகையான் மனம்பொறிவழிவிடாதடக்கி ... *
யென்னையாளுடைக் கணேசனிருபதத்தென்றுங் ... *
தன்னதார்வமெலாந்தரிப் பித்தலேவேண்டு ... *
மின்னதாய்வழிபாட்டின விருஞ்சுகமாமே ... (௬௪)

நதியெலாங்கட லடைவதுபோலநாடோறும் ... *
பதியின்மாட்டுறுகாமங்க ளனைத்தையும்பாய்த்து ... *
மதியதேதிரபுத்தியா னெனதெனுமயக்க ... ... *
விதியிலாதமெஞ்ஞானியே வீட்டினையடைவான் ... (௬௫)

பொருவின்மாதவ னேயிதுவேபுணர்பிரம ... *
சொருபமாகியபுத்தியச் சொருபமாய்நின்றோன் ... *
கருமம்யாதுமில்லாமலே யிருப்பன்மன்கரும ... *
மருவிநின்றிடுஞ் சுதந்தரன்பிரமத்தைமருவான் ... (௬௬)

மருவுமிந்தியவகுப்பினென் மாதவமுனியே ... ...*
கருமயோகத்தைக் கரிசறச்செய்ததன்பயனே ... *
யொருவுமார்வத்தை யுடையவனேபரன்கமலத் ... *
திருவமெல்லிலை நீரினொட்டான்வினையவனே ... ...(௪௭)

அறிவதாய்நமதறிவுறு பிரமத்தையுவாவி... ... ...*
னெறியினூற்பலகருமமூ நிகழ்பலன்குறியா... ... *
துறுதியாற்செயல் கருமயோகங்களிவ்வியோகம் ... ...*
பிறிவில்சாங்கிய யோகத்தைக்காட்டுபெயரும் ... ...(௪௮)

வேறு.

நுழைதருவேதாயோகஞ் சாங்கியயோகமென்ன ... ...*
விழைவனவிரண்டினுள்ளும் விளங்கியவேதாவென்னும் ... *
பிழையறுகருமயோகம் பிறங்குசாங்கியயோகத்துக் ... *
குழைவளரோதுவற்ற சாங்கியயோகமெல்லாம் ... ... (௪௯)

சாங்கியயோகந்தன்னாற் றனைமறந்திறக்குங்காறு ... ...*
நீங்குறான்கருமயோக நெறியினையுணர்ந்தோன்கன்மம் ... ... *
வீங்கியபயனைநாடி விளைப்பவன்றிருடனந்தத் ... ... *
தூங்கலேகொடியபாவி தொன்மைதோரதநீரால் ... ... (௫௰)

மல்கியவுயிர்கட்கெல்லா மகிழ்ச்சிவானவராலாய ... ...*
நல்கியதேவர்க்கின்ப மாயதெச்சங்கடம்மா ... ...*
லொல்கியவெச்சம்வேதத் துதித்தஃதுயர்ந்தவேத ... *
நல்கிடப்பட்டதென்று நசித்திடாப்பிரமத்தானே ... ... (௫௧)

ஆகையாலனையதாகி யகம்புறமாஞ்சொரூபத் ... ... *
தேகமாய்விரவித்துய்க்கு மின்பமேயின்பமாகும் ... ... *
போகமானவைகளெல்லாம் புல்லுறுத்துன்பமாகு ... ... *
மோகையான்மகார்களாட் லுயர்ந்தவர்க்கிழிந்தவாபோல் ... (௫௨)

வேறு.

உலகர்போகத்தை யொழிக்கியானெனதெனுஞ்செருக்கும் ... *
விலகிமேதகுபிரமத்தின் விரவியொன்றாகிக் ... ... *
குலவுமானந்தக்கடலிடைக் குளித்தவர்தம்மை ... ... *
யலகுகாண்பரிதாங்கட லயிரலகிடினும் ... ... (௫௩)

மடமையாற்றனைப் பிரமமென்றெண்ணியமதியோ ... *
னுட்னவிராவிய பிரமத்தினுண்மையையுணரான் ... ...*
கடவுளாம்பிரமத்தினுட் டனதியல்கண்டோ ... ... *
னட்லையாகிய வெனதுயானென்பதுநவிற்றுன் ... ... (௫௪)

கன்மயோகமும்வியோகமுங் களைத்தனவவற்று ... ... *
ணன்மையாவதுவியோகமே நவிற்றியயோகம் ... ... *
வன்மையாகியபந்தமேவளர்ப்பது வியோகந் ... ...*
தன்மையானவிஞ்ஞானமேதருவது முனியே ... (௫௫)

மதியின்யாதனின்யாதனின் வழுவினனதனி ... ... *
னதனினேதலையடைதரா னருஞ்சுகமுறுவான் ... ...*
மதியின்யாதனின்யாதனின் மருவினனதனி ... ... *
னதனினேதலைமருவுவ னடைகுவன்றுன்பம் ... ... (௫௬)

சுருதிகன்மங்கடொகுத்திடு மிருதிகன்மங்க ... ... *
ளொருவுறுச்சமதமங்களி லூன்றியப்பயனை... ... ... *
மருவுறுதல்வியோகத்தின் வளரும்விஞ்ஞானங் ... ... *
குருவின்சீரருளால்வருங் கோதறுமுனியே ... ... (௫௭)

குருவினன்மலந்துமித்துவிஞ்ஞானங்கூடாது ... ... *
கருமம்யாவையும் பயன்றனைக்கருதியேபுரிவார் ... ...*
பொருவிலாதவிண்ணவர்களாய்ப் போகங்களுகர்ந்து ... *
மருவுபூமியின்மறுவலும் வருவர்நற்சார்பின் ... ... (௫௮)

கன்மநன்றுசெய்ததன்பயன் கருதுவதொழிந்து ... ...*
கன்மநிட்டையையுடையராய்க் கரிசெலாமறுக்குந் ... ... *
தன்மைமல்கியதவநிட்டை யுடையராய்த்தவறு ... ...*
நன்மைமல்கியஞானநிட்டையை நணுகுவரால் ... ...(௫௯)

ஞானநிட்டையையுடையவர் ஞானமேவடிவ ... ...*
மானமெய்ப்பெரும் பிரமமேயாவர்பின்பிறவார் ... ... *
வானமுட்டியதவத்தினோய்வழங்கும்யோகத்தை ... ... *
யீனம்விட்டுயர்பிரமமாயிருந்தனை கேண்மோ ... ...(௬௰)

அறியுநீரதொன்றேயது பிரமமேயதனை ... ... *
யறியுஞானமேஞானமா மருந்தவமுனியே ... ...*
செறிசராசரமாகிய திரளெலாமதுவே ... ... *
பிறிதராவுயிர்ப்பேதமும் பேசியவதுவே ... ... (௬௧)

மண்ணிற்கந்தமு நீரினிற்சுவையும்வைதழலி ... ... *
னண்ணுருவமும்வளியினிற் பரிசமுநவைதீர் ... ... *
விண்ணிற்சத்தமும் வேறுமவ்வவற்றினீங்காத... ... ...*
வுண்மையாங்குணமனைத்துமப்பிரமமேயுரவோய் ... ... (௬௨)

இனையதாகியபிரமத்தை யிறந்துயிர்போகா ... ... *
னினையின்வேறுரு நிலையதுவாகவேநிற்பர் ... ... *
வினையின்மீட்டுறா விண்டுவைவேதனையாதி ... ... *
தனைவிராவினோர் தாங்களுமீள்குவர்சரதம் ... ... (௬௩)

தெய்வம்யாதனைச் சேர்ந்தெவர்போற்றினுமந்தத் ... ...*
தெய்வமாயிருந்தவர்க்கருள் வரங்களைச்செறிக்குந் ... ... *
தெய்வந்தேர்வரும்பிரமமாகியவிநாயகனே ... ...*
தெய்வம்யாவையும் வழிபடுதேவனுமவனே ... ... (௬௪)

வேறு.

காலம்பிரமபாவனையே கருதல்கருசிலுபாசனையென்... ... *
றாலுமிவற்றினெடுங்கரும மாக்கல்வேண்டுமறிவுடையோர் ... *
காலமிரண்டக்கினிசோதி மயமாங்கதிரோன்கதியொன்று ... ...*
சாலவமிழ்தச்சோதிமயந் தானாந்திங்கட்கதியொன்று ... (௬௫)

வெண்மைகருமைப்பக்கமென விளங்குமிவற்றுளடங்கிடும் ... *
வண்மைவளர்க்கும்பலகால வகுப்பும்பிரமபாவனைதான் *
றிண்மையுலகில்வேறின்றிச் செறிந்தோன்றனபிரமத்தி ... ... *
னுண்மையுணர்தல்கருதல்சதசத்தை யுள்ளபடிமரித்தல் ... (௬௬)

இருவேறுருமுபாசனைதா னெழிலார்புறப்பூசனைசாலக் ... ... *
கருகாமிற்குமகப்பூசை யெனவேகளாந்தபுறப்பூசை ... ... *
மருவார்மலர்மஞ்சனந்தூப மணித்தீபாதித்திரவியங்கொண் ... *
டுருகாநின்றவன்பினெடு மொருகோட்டிறையையருச்சித்தல் ...(௬௭)

துசக்ரகப்பூசனைபூத சுத்திபிராணாகருடணஞ்செய் ... ...*
திகலார்புத்தியியாபார மிறுக்குத்திரபத்தியிற்குருவின் ... *
முகனுல்வருமந்திரங்கணித்து முதல்வனுருவந்தியானித்து ... *
மிகமாமறையின்றேத்திரங்கள் விளம்பிவணங்கிவழிபடலாம் ...(௬௮)

புறப்பூசனையத்திரப்பூசை பொருவிலகப்பூசனைதிரமாஞ் ... ...*
சிறப்பார்முனியேயாதலினுற் சிறந்ததாகுமகப்பூசை ... ... *
மறப்பேபினைப்பேயிவையொழிந்து வாழவேண்டிற்காலமுத ... *
லுறப்பூதலத்திற்கருமங்க ளுனுற்றும்பயனைக்கருதாதே ... (௬௯)

எச்சமழலோட்டிமனுநெய் யீண்டுமெவுசுதியானமுட்ற் ... ...*
றுச்சிலறுந்தோத்திரநீதி துடங்கும்பத்தியுபாசனைக ... ... *
ணச்சுஞ்சகலதிரவியங்க ணவில்காரணங்கள்சதசத்து ... ...*
வெச்சென்மரணமமிர்தமிவை யெல்லாவிளைவும்விநாயகனே ... (௭௰)

அந்தவிறைவன்றிருவுருவி லாற்றுஞ்சரப்பூசனையாக ... ... *
வெந்தைவடிவுள்ளகத்திருத்தி யியற்றட்சரப்பூசனையாகச் ... ... *
சிந்தைவிழைவிற்புரிகின்றோன் றிசழ்சண்டாளவிழிகுலத்தில் ... *
வந்தபிற்புள்ளவனேனு மறையோர்குலத்திலுயர்ந்தவனும்... ...(எக)

பிறப்பினுயர்ந்தபிராமணனாய்ப் பெரிதுமறைகள்பயின்றுணர்ந்து ...*
சிறப்பவிருந்தானாயிடினுந் தேவதேவன்றிருவடியி ... ... *
லிறப்பவழிபாடியற்றாதா னிழிசண்டாளகுலத்தோரு ... ... *
ளறப்புத்தியையில்லாவிழிஞ னவனவனிதுமெய்யே ... (எ௨)

வேறு.

சேத்திரசேத்திரக்கினென்றிவற்றையாய்ந்த செம்மையனே விநாயகனுக்குரியனாவன், சேத்திரமாவதுபூதமைந்துதன்மாத் திரையைந்துகன்மவிந்திரியமைந்து, வாய்த்திடுஞானேந்திரியமைந்தாங்கார மனம்புத்தி சேதனமென்றிவையெண்மூன்று, மேத்தியசேத்திரக்கினன்று னிவற்றை யாய்ந்த வியல்பினனமென்றறிகமுனிவரோறே ... ... (எ௩)

தத்துவகாரணமானபிரகிருதிமாயைத் தான்மூன்றுமவைதைவியாசுரிராட்சசியே, முத்திறமாகியவினைவதாஞ்சகலவுயிர்மாட்டு முயங்குவனவிவற்றி னுடைப்பலஞ்சின்னமிரண்டும், பத்திபுரிவியாதமுனியேயினக்குத்தொகுத்துப் பகருதுங்கேட்டியெனப்பகர்குணந்தான்பரமா, முத்தியினுக்கேதுவெனவிருக்குமொழிந்தவைதா மூடம்வளர்பந்தத்துக் கேதுவாயிருக்கும் ... ... (எச)

பலனுரைத்தாமினித்தைவிசின்னமுரைத்திடக்கேள் பரன்மனையை விழையாமைகோளுரையாடாமை,குலவுமுயிர்கொல்லாமைவெகுளாமை நன்றி கொல்லாமைகருணையுட்னிருத்தனெறியொழுக,விலகுமுட்காந்தியபையம்பொறுமைசில மினியமொழிகொடைதவந்தா னங்களூறுவாய்மை, மலர்தலைவையகம்பெறினுநடுவுநிலைபிழையா மனவன்மையெவர்களுக்கும்வணக்கமுறன்முதலாம் ... ... (எரு)

ஆசுரியின்சின்னங்களரவமிகுவார்த்தை யறைதல்பிடித்ததுதீயதாயினுஞ்சாதித்து. மாசுபடுமேபிமானமஞ்ஞானங்கெறுவம் வளர்கோபமாதிகளாமிராட்சசிக்குச்சின்ன, நேசமொடுமனஞ்சென்ற வழிச்சேறன்மோக மெட்டேரமகங்காரந்தனைமதித்துத்தருக்க, றேசிகணந்தணர்தேவர் வேதசாத்திரங்க டெளிந்தபெரியோர்நிந்தை யெவர்க்கும்பகையாதல்...(எசு)

தன்குருவைவிடுத்தேனையோனாவழிபடுதல் சாதுக்கள்வாக்கியத்தின்விசுவாசமின்மை,நன்குதருமாசாரமின்மைபாசண்டர் நவிற்றுநவைவாக்கியத்தின்விசுவாசமுண்மை, கன்மமியற்றாமைவழிபடற்குரியபெரியோர் கழல்கள்வணங்காமையுயிர்க்கொலையாவிசாரம், வன்மையொடும்புரிகத்தனுகுதலாதிகளா மாதவனேயினித்தவங்கண்மூன்றுகும்வகுக்கின்(எஎ

அன்னவைதாங்காயிகமே வாசகமானதமே யாமென்பரவற்றினுங் காயிகதவந்தானித்த, மன்னியிடுஞ்சுதன்மபரிபாலனஞ்செய்திடுதல் வாசகமாத்தவம்பிரியவசனமேயுரைத்து, நன்மைதரும்வேதசாத் திரத்தைவிணாயாது நவையறப்பாராயணஞ்செய்திடுவதுமானதந்தான், றுன்னியவந்தக்கரணச்சுத்தியதாய்ப்புலனிற் றுன்னுமற்பொறியைந்துமடக்குவதாமுனியே ... ... (௭௮)

அவைமூன்றாந்தைவிமுதன்மூன்றானுமும்மூன் றாமவற்றுட்சாத்துவிதமாந்தவநற்கன்ம,நவையில்பயன்கருதாதுசெய்வதிராசதமாய் நண்ணுதவம்புகழொன்றேநாடியிருங்கன்மம், தவறறவேபிறரறியப்பிரகாசமாகத் தான்புரிதல்தாமதமாந்தவம்பிறரைவருத்திச், சவலையுறுத்திடுந்தவமாமாகவினாற்பின்னர் களைந்தவிரண்டினுஞ்சனனமரணங்கதுவுறுமே ... (௭௯)

கிளர்தானமூன்றாகுங்கெடினமறைவிதிவாக் கியப்பிரமாணங்களினாற்பாத்திரத்திற்றேசம், வளர்காலமறிந்துசிரத் தையிற்பிறர்க்குத்தோன்றாமாபினிரும்பொருள்கொடுத்தெவ் வளவுகொடுத்தோமென், றுளநெகிழக்குறையுறுதல்சாத்துவிதத்தான மூபகாரம்புரிந்தவர்கட் குபகாரம்புரிதல், தளராதுவரும்பயனைக்குறித்தொருவர்க்களித்தல் தகவருத்தத்தொடும்புரிதலிராசதமாந்தானம் ... ... (௮௰)

காலமொடுதேசங்களின்றியபாத்திரத்திற் காமர்பொருள்பிறரறியக் கொடுத்தளித்தேனென்று, சாலவெடுத்துரைத்துரைத்துத்தன்னைமேம்படுத்தற் றாமதமாந்தானமினிஞானமூன்றாகுஞ்,சிலமுனியேயழிதன்மாலையவாய்ச்சித்தாய்ச் செறிபலபூதங்களினும்பிரமத்தையொன்றாய்க், கோலமுறுநித்தியமாய்க் காணலுறுஞானங் கோதற்றசாத்துவித ஞானமெனக்கூறும் ... ... (௮௧)

பற்பலபூதங்களினும்பிரமத்தைவேறாய்ப்பார்த்தலிராசதஞானம்மாப்பிரமந்தன்னை, யுற்பவமாதிகளுடையவுலககாரணமா யுன்னுமல்சத்தியமாய்சத்தாகமன்ற,வற்பவிடையங்களினுளொன்றாகவெண்ணு மஞ்ஞானந்தாமதஞானங்கன்மமூன்று, பொற்புறுநித்தியகன்மமாதிமயனாதி புந்திசெயாதியற்றுவதுசாத்துவிதக்கன்மம் ... ... (௮௨)

மிக்ககிலேசத்தினாற்பயன்விழைவுதன்னால் வெம்பகையாலாரவாரத்தினாற்பிறவாற்,றக்ககருமம்புரிதலிராசதகன்மங்கள் சார்பயனைப்பெறவிழைந்தஞ்ஞானத்தாற்றனக்கே, பொக்கமுறச்செய்துகொளுங்கன்மங்களனைத்தும் புரைபடுதாமதகன்மமிவ்வாறாகுலத்தா,லொக்கவனந்தம்பலனைக்குறித்திடைவிடாம லூக்கமொடுபுரிகின்றவிராக்கதகன்மத்தோர் (௮௩)

இருபத்தெண்கோடிநரகத்தினும்வீழ்ந்தின்ன லெய்தியபினகன்புவி
யிற்பிறவியில்வந்திடுங்காற், குருடுமுதலியவங்கவீனராய்ச்சாதி குலவீன
ராய்க்குறளராய்ப்பிறந்துகணேசர்,மருமலர்ச்சேவடிப்பத்தியீனராய்மோ
க வலையினராய்மூடராய்வழுவினராய்மீட்டுங், கருதரியபாவங்கள்பலபுரி
ந்துநாளுங் கடும்பிணொடுமுண்டுடுத்துக்களித்துமிகத்தருக்கி ... (அச)

நானேகத்தாநானேபோத்தாவீச்சுரனா நானேநானேசாத்தனுமிந்த
வனானேயென்,றன்றுமொழிந்துபெருநரகத்தின்மீட்டு மழுந்துவர்களினி
ப்பத்திமூன்றிராக்கதமே, தானாகுங்கன்மமாசுரிகன்மமொழிந்து தைவி
யெனுங்கன்மத்தையாசிரித்துக்கணேசர், வானேய்ப்பத்திமைபுரிதல்சாத்து
விதப்பத்தி மற்றையதேவரைப்பணியும்வந்தனையுமதுவே...... ...(அரு)

இபக்காரக்கனைகுறித்துப்பத்தியினால்வழிபாடியற்றலிராசதபத்தியி
துபவத்தைக்கொடுக்கு, நயக்குமறைவிலக்கியகன் மங்களெலாம்புரிந்து
நன்றாகத்தனதுடலேபுரந்துயிருக் தயிராம், வியக்குமருட்கணேசனையெ
ண்ணாதலகைபூதம் வேதாளமிவைகுறித்துக்கொலையாதிபுரிந்து, மயக்க
முறும்[illegible]ந்திதாமதபத்தியிதுவே மூட்டுவதாமிருபத்தெண் கோடிநரகமு
மே... ... ... (அசு)

மொழிந்ததவமாதிகளைப் புரிந்திடுங்கத்தர்களா மூவாகங்காரத்தைவி
ட்டவன்சாத்துவிதத், திழைந்தபெருங்கத்தன்சுகதுக்கத்தையுளனா யிரும்
பலத்தினாசையைவைத்தவனிராசதனே, கழிந்தவழிவினனாகிப்பிறர்செல்
வஞ்சாலக் கண்டழுக்காறுடையவன்றாமதகத்தன்முனியே, யழிந்துவிடு
ஞ்சுகமூன்றுதுக்கமூன்றாகு மவற்றினையுமொருங்குதொகுத் தறைகுதுந
ன்றறிமோ ... ... (அஎ)

சாத்துவிதசுகதுக்கமாவனதாந்தொடக்கந் தனில்விடமாய்த்துக்கத்
தைத்தணப்பித்தந்தத்தி, லேத்தலுறுமமுதமாமிவைவிரதமாதியியற்றலு
றுஞ்சன்மார்க்கத்தாமிராசதத்தின், பூத்தலுறுஞ்சுகதுக்கந்துடக்கத்திலமி
ழ்தாய்ப் பொல்லாததுன்பத்தைவளர்க்கேயந்தத்தி, னீத்தலருங்கொடு
ங்காலகோடிவிடமாகு நிகழ்விடையபோகங்களாலாகுமிவையே...(அஅ)

கடையானதாமதத்தாஞ்சுகதுக்கந்தொடங்குங் காலமுதலந்தமுறு
ங்காறுஞ்சுகம்போன்று, துடையாதபெருந்துக்கமாய்விளையுமிவைதாந் து
ன்மார்க்கத்தாற்பிறனில்விழைதன்முதற்றொழிலா, லடைவாகுமாதலினா
ற்சாத்துவிதமுடைய வன்பினனேவினாயகனார்சொரூபத்தையடைவான்,
விடையாதசாத்துவிதமேவாதாரெல்லா மிக்கபவநரகினிடைமேவுவர்மாத
வனே ... ... (அகூ)

வேறு.

இங்ஙனந்திருமாற்கந்நா ளெம்பிரானுரைத்தலோடுங் ... ... *
கன்னியந்துளவமாயோன் காதலினெழுந்துதாழ்ந்து ... ... *
பொன்னவிர்கொன்றைவேணிப் புண்ணியாவடியேனின்பா ... ... *
லின்னுமொன்றிரக்கலுற்றே னிரங்கெனவிளம்பிவிள்வான் ... ...(௯௰)

மறைமுதலளவைதம்மால் வகுத்திதுவென்றுகாணு ... ... *
நிறையுநின்னுண்மைஞான நிரம்பியகருணைதன்னாற் ... ... *
குறைவறவுணர்த்தநாயேன் குடங்கையாமலகமென்னக் ... *
கறையறமுழுதுந்தேர்ந்தேன்காதரமுழுதுந்தீர்ந்தேன் ... (௯௧)

இனியொருகுறையுமில்லே னாயினுமெம்பிரானே ... ... *
முனிவருட்சீர்த்திவாய்ந்த முதன்மைசேர்வீணையங்கைப் ... *
புனிதன்முன்னொருநாளென்பாற் பொற்புறவந்துளானின் ... ... *
றனிவரும்விசுவரூபஞ் சொற்றனன்சிறிதுகேட்டேன் ... (௯௨)

அதுதனைக்கண்ணாற்காண வடியனேற்கினிதுகாட்டா ... ... *
இதுபொழுதருளாயாயி னெளியனேனுய்யேனென்று *
கதுமெனமீட்டுந்தாழ்ந்தான் கணேசனார்கருணைகூர்ந்து ... ...*
மதுமழைபொழிந்தாலென்ன வாய்மலர்ந்தருளிச்செய்வார் ... (௯௩)

கற்பனைகடந்தநந்தங் காமருவிசுவரூப ... ... *
மற்புதமாகுமந்த வற்புதந்தன்னைச்செந்தீ ... ...*
விற்பொலியூனக்கண்ணால் விண்டுவேகாணொணாது ... *
சிற்பரஞானக்கண்ணாற் றெளிந்தவர்காணினல்லால் ... (௯௪)

ஞானவாள்விழியைநின்பா னல்குதுங்காண்டியென்று ... ...*
ஞானவாள்விழியைச்சால நல்கினர்நவைதீரந்த... ... ... *
ஞானவாள்விழியைக்கொண்டே நாரணனினிதுபார்த்தான் ... *
ஞானநாயகனார்கொண்ட நயத்தகுவிசுவரூபம் ... ... (௯௫)

முடித்தலையெங்குஞ்சீர்த்த முகமலரெங்குமின்ன... ... ... *
விடித்தருள்விழிகளெங்கு மிருஞ்செவியெங்குமாய்தம் ... ...*
பிடித்தகைத்தலங்களெங்கும் பிறங்கியகவான்களெங்கு ... *
மடித்தலமெங்குமேனை யவையவமனைத்துமெங்கும் ... (௯௬)

கொண்டருளுருவிற்சாலக் குழுமியவுரோமந்தோறு ... ... *
மண்டமுமண்டந்தோறு மமரர்களாதியாக ... ... *
விண்டிடுஞ்சருக்கமூவேழ் விதங்களுநேரோகாணக் ... ... *
கண்டுபேரின்பவெள்ளக் கடலிடைமடிந்தான்மாயன்... ... (௯௭)

விம்மிதம்விளையாநிற்கும் விழுமியவுருவஞ்சாலச் ... ... *
செம்மலாரருளப்பெற்றேன் சிறியனேனந்தோவென்று ... ... *
கைம்மலர்முடியிலேறக் கட்புனலிழியவுள்ளம் ... ... *
கொம்மெனவுருகிநைந்து குழையநின்றிதனைச்சொன்னான் ... (௪௮)

கனைத்துவண்டுளருங்கொன்றைக் கண்ணியாநினதுவாக்கா ... ... *
லனைத்துநம்முருவமென்றே யறைந்தனையதற்கோர்சான்றா ... ... *
வெனைத்துநின்னுருவமான வியற்கையென்விழியிற்காட்டி ... ... *
வினைத்தொடக்கறுத்தாய்நாயே னென்னெனவிளம்புகேனே ... ...(௪௯)

அத்தனேயிந்தக்காட்சி யறிந்தவருளரோவென்று ... ... *
நத்தினன்வினவிநின்றா னதனைரருளிச்செய்வார் ... ... *
பத்தியையுடையராகிப் பயின்றமெய்யோகஞ்சான்ற ... ... *
உத்தமச்சனகராதி யுறுதவரனேகர்மாயோய் ... ... (௫௰)

நம்முடைஞானக்கண்ணா னமதருளுருவங்கண்டு ... ... *
மும்மலமிரியல்போக முத்தராயின்பம்பெற்றா ... ... *
ரம்மையாருகத்தினம்மை யருமகவாகப்பெற்ற ... ... *
மம்மர்தீர்தவத்தானல்ல வரேணியனென்னுமன்னன் ... ... (௫௧)

நமதருட்கீதைகேட்டு நமதுருக்காட்டக்கண்டு ... ... *
விமலதையடைந்தானந்த வெள்ளத்துட்டிளைந்துவாழ்ந்தான் ... ... *
சமதமமுடையார்க்கிந்தச் சாத்திரஞ்சாற்றுகென்ன ... ... *
வமலனாருளிச்செய்தா ராழியான்றெளியமாதோ ... ... (௫௨)

அத்தருகணேசர்கீதை யாழியானுணர்ந்துநன்மை ... *
மெத்தரியம்மணன்பால் விழைவொடுங்கொடுத்தானந்த ... ... *
வுத்தமன்மனுவுக்கீந்தா னுவனிடைமுனிவர்பல்லோர் ... ... *
பத்தியிற்கேட்டுப்பாரம் பரையினால்விளக்கினாரே ... ... (௫௩)

இயம்பியகணேசர்கீதை யிழுதையர்கேட்டாராயின் ... *
பயந்தருபாவமுற்றும் பாற்றிவான்கதியைச்சார்வர் ... *
நயந்தருசன்மார்க்கத்தார் நன்றுறக்கேட்டாராயிற் ... *
சயம்புவாகியகணேசர் தாளிணைநீழல்சார்வார் ... (௫௪)

ஓ சவுனகாதிமுனிவர்களே-விண்டுவுக்கு வல்லபைக்கணேசர் உபதேசித்தருளியயோகஞானமும், அக்கடவுள் அவருக்குக்கடாக்ஷித்தருளிய விசுவரூபத்தின் விபரமும், அவற்றைப் பிரமன்-வேதவியாசமுனிவருக்கு உபதேசித்ததும் இதுவாகும். இம்மேலான ஞானத்தினை நீங்கள்யாவரும் வழிபட்டு பிரம்மானந்தசுகத்தை யடையக்கடவீர்களென்று சூத

புராணிகர்சொல்லியருளினர். அவரை நைமிசமுனிவர்களெல்லாம் அத்தியந்தசந்தோஷத்தோடு வணங்கி வாழ்த்தினவர்களாய்,சுவாமீ- தேவரீர் அடியேங்கள்செய்த தவமுதிர்ச்சியினால் இங்ஙனமெழுந்தருளி, பதினெண்புராணங்களினு முதன்மையாகவிளங்கும் விநாயகமகத்துவத்தை அடியேங்கட்கு எளிதில் போதையாகும்படி தெருட்டினீர். அவைகளை யடியேங்கள்கேட்டுக் களிப்படைந்ததன்றி,முத்திவீட்டிற்கும் பாத்திரராயினேம். மேலும் இவ்வரிய மானிடதேகமெடுத்ததற்குப் பெறவேண்டும் பலன்களையெல்லாம் ஒருங்கெய்தினேம். இத்தகைய மேம்பாட்டைக்கிடைக்கச்செய்த தேவரீர்க்கு நாயினேங்களால் முடிக்குங்கைம்மா றேதேனுமுண்டோவென்று பலபலவிதங்களிற் போற்றி,அன்றுமுதல் அவ்விதிகாசத்தைப் பிரதிதினம் பாராயணஞ்செய்து வாழ்ந்திருந்தார்கள்.

திங்களையணிந்தவைங்கைச் செம்மல்பொற்சரணம்போற்றி *
பங்கின்வீற்றிருந்தசித்தி புத்திதம்பதங்கள்போற்றி ... *
யங்கவர்க்கன்புசெய்யு மடியவரடிகள்போற்றி... ...*
நங்குருநமச்சிவாய னளினபாதங்கள்போற்றி ... *

அருள்பொழிகணேசன்செய்ய வடிமலர்வாழ்கவன்னான் *
பொருவிலிப்புராணமோங்கிப் பொலிகவீ துணர்ந்தெல்லோரு
மருவுகபயன்களன்கு மன்னுகவுலகமெல்லாந் ... ...*
திருவொடுசிறக்கவெங்குஞ் செயிரிலாச்சைவமென்றும் ... *

இலீலாகாண்டம்

முற்றிற்று.

பிரசித்தபத்திரிகை.

இதனால் யாவர்க்கும் அறிவிக்கப்படுவது யாதெனில், இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் பெத்துநாயக்கன் பேட்டையில் எழுகிணற்றினுக்கடுத்த பெரியணமுதலி வீதியில் - இருபத்தேழாவது கதவிலக்கமுள்ளவீட்டிலிருக்கும் - தி- வயித்தியலிங்கமுதலியாரிடத்தில் விலைக்குவாங்கிக்கொள்ளலாம்.

மேலும் பிரதேசங்களிலிருக்கின்றவர்கள் மேற்படி பட்டணத்திலிருக்கும் தங்கள் காரியக்காரர்களுக்காவது அல்லது நேராய் மேற்சொல்லப்பட்ட-தி-வயித்தியலிங்கமுதலியாருக்காவது தபால்மூலமாக உண்டியனுப்பிவைத்து புத்தகங்களை வாங்கிக்கொள்ளலாம்,அப்படிப்பட்டவர்களுக்கு பங்கி தபாற்செலவு ஒத்துக்கொடுக்கப்படும்.

அட்டவணை.

எண்.	பிரிவு.	பக்கம்.
க	வக்கிரதுண்டர்திருவவதாரப்படலம்	க
உ	சிந்தாமணிவிநாயகர்திருவவதாரப்படலம்	உ
ங	கஜாநனர்திருவவதாரப்படலம்	உகூ
ச	விக்கினராசர்திருவவதாரப்படலம்	சரு
ரு	மயூரேசர்திருவவதாரப்படலம்	ருஎ
,,	பிந்தியமயூரேசர்திருவவதாரப்படலம்	அரு
சா	பாலசந்திரர்திருவவதாரப்படலம்	௱ருஎ
எ	தூமகேதுதிருவவதாரப்படலம்	,,
அ	கணேசர்திருவவதாரப்படலம்	௱எரு
கூ	கணபதிதிருவவதாரப்படலம்	௱எகூ
௰	மகோற்கடர்திருவவதாரப்படலம்	௱அகூ
௰க	உடுண்டிவிநாயகர்திருவவதாரப்படலம்	உகூரு
௰உ	வல்லபைகணேசர்திருவவதாரப்படலம்	ங௱ச

பிழைதிருத்தல்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
க	ங	அவைகட்கு	அவைகளை
உ	௰அ	கடவதென்று	கடவனென்று
ரு	ங௰	யாயினதில்லை	யாயினவில்லை
சா	௰உ	னின்று	னின்றும்
அ	ஙஉ	புதல்டோறுஞ்	புதல்கடோறுஞ்
உச	கூ	பசும்மை	பசுமை
உரு	௰எ	போதும்பர்	பொதும்பர்
உசா	௰ச	வுணகளின்	வுணவுகளின்
உஎ	ஙசா	என்றுபிரமதேவன்கூற	என்றுகூற
சங	உ	கஜானனமுகத்தை	கஜானனத்தை
சா௰	உச	வைசுசுவதேவம்	வைசுவதேவம்
சாஎ	உஎ	உயிர்ப்பியினும்	உயிர்ப்பினும்
சாகூ	உஉ	வில்லிலிற்	வில்லிற்
எச	௰ரு	பிரார்த்தனர்	பிரார்த்தித்தனர்
எஎ	௰ங	நினைகவேண்	நினைக்கவேண்
,,	௰ரு	போகின்றது	போகும்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௮௮	௰௨	போலே	போதே
௯௧	௰௨	இறுக்கக்	இறுகக்
௯௮	௨௪	கடா	கடீர்
”	௨௯	மூகர்க்காக்க	மூகர்காக்க
௱௬	௫	ஆகாயத்தை	ஆகாயத்தில்
௱௰௨	௩௯	குக்கொக்கினை	இக்கொக்கினை
௱௰௫	௭	அல்லு	அல்லது
௱௰௭	௩௧	கின்றனவென்று	கின்றதென்று
௱௰௯	௩௪	தக்கதே	தக்கவே
௱௪௰	௩௧	காண்பிவிக்க	காண்பிக்க
௱௬௰	௰௪	நகரங்க	நரகங்க
௱௬௭	௫	தக்கவலல்லள்	தக்கவளல்லள்
௱௭௧	௨	மறைந்தது	மறைந்தன்
௱௭௬	௰௫	தாங்குதகை	தாங்குந்தகை
௱௮௩	௭	தாங்கினர்	தாக்கினர்
௱௯௮	௪	சயப்பட	பயப்பட
”	௫	பாத்தி	சாத்தி
௨௱௬	௩௫	கறித்தே	கறிந்தே
௨௱௭	௰௫	அவனையும்	அவனை
௨௱௮	௰௭	சிறவெய்த	சிறப்வெய்த
௨௱௩	௪௩	பெதும்பையீ	பேரிளம்பெண்ணீ
௨௱௬	௨௬	யாடல்களிறு	யாடல்களிவை
௨௱௯	௨௪	புத்திரர்களே	புத்திரிகளே
௨௨௨	௩	ஒழிந்தது	ஒழிந்து
௨௪௭	௬	புகையை	புழுவை
௨௪௯	௰௬	கொலைகளாதிய	கொலையாதிய
௨௫௰	௨௭	கின்றது	கின்றன
௨௭௨	௧	கூட்டங்களை	கூட்டம்
”	௭	பெருக்கை	பெருக்கு
௨௮௩	௨௧	வாயுவேக	தனதுவேக
௩௰௫	௰௫	தன்றி	வன்றி
௩௨௯	௨௧	பிராணு	பிராணு
௩௩௧	௬	விசார	விகார
௩௩௨	௰௭	பில்கு	பல்கு
௩௩௪	௫	தறிவுறு	தறிவுரு
”	௰௩	மெல்லாம்	மேலாம்
௩௩௬	௰௯	கருகா	கருதா